திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ வாதபுரீச குருப்யோ நம:

பெரியபுராணம்.

(முதற்காண்டம்)




திருமலைச் சருக்கம்

மூலமும்

W. 33146
1983

T. 6103



காஞ்சிபுரம்

ஸ்ரீமத் - ஏகாம்பர சிவயோகிகள்

பாத சேகரர்

ஸ்ரீமான் - ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள்

இயற்றிய

சித்தாந்த போத ரத்நாகர மாகிய

பொழிப்புரை - விசேடவுரையும்

தேவிகோட்டை

ஸ்ரீமான் - அரு. அரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள்

உதவிய பொருளைக் கொண்டு,

சென்னை

ஸ்ரீ கணேச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப் பட்டன.

ரிஜிஸ்டர்டு காபிரைட்] 1924 [விலை 2-4-0.

கா. ஏகாம்பரம் பிள்ளை,

19, ரண்டால்ஸ் ரோட்,

வேப்பேரி, சென்னை.

திருச்சிற்றம்பலம்.
ஸ்ரீ சுந்தரேச குருப்யோ நமஃ

முகவுரை.

சித்தாந்த சைவ சமயத்தில் அநாதிமல முத்தனாகிய இறைவன் தன் திருவடியைக் கூடுவதற்குச் சன்மார்க்கம், தவமார்க்கம் என இருமார்க்கங்களை விதித்திருக்கின்றனன்.

1. சன்மார்க்கமாவது - சிவஞானபோத முதலிய சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள சன்மார்க்கமேயாம்.

2. தவமார்க்கமாவது - ஆசிரியர் சேக்கிழார் பெருமானால் அருளிச்செய்யப்பட்ட இப்பெரியபுராணத்தில் விரித்துரைக்கப்பட்ட நாயன்மார்களது சரித்திரங்களில் அறியக்கிடக்கின்ற நற்றவமார்க்கமேயாம்.

இந்நூல் யாரை நோக்கி எழுந்தது எனின், குருவருளால் சிவஞானத்தினை யுணர்ந்து, ஆன்ம சுத்தியை யடைந்து, அதனால் பாசக்ஷயம் உண்டாய், பரமேஸ்வரரது ஸ்ரீ பாதங்களை அணையுமாறுணர்ந்து, அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுதற்கு மெய்ஞ்ஞானிகளாகிய சிவஞானிகளை நோக்கி எழுந்ததென்க.

இப்புராணம் அவர்களுக்கு உணர்த்தும் விஷயம் யாதெனின், விரும்பப்படுவனவாகிய அன்பின் இலக்கணங்களும், அந்த அன்புக்கு நிலைக்களமாயுள்ள சரியையாதிகளின் இலக்கணங்களும், அவ்விலக்கணப்படியே அச்சரியையாதிகளை இயற்றவல்ல திறங்களும், அத்திறம் உணர்ந்து இயற்றுங்கால் தமது இச்சாஞானக் கிரியைகள் தளர்ச்சியடையாது நிற்கவேண்டிய நிலைமைகளுமே என்க.

இப்புராணத்துள் கூறப்பட்ட பெரியாரெல்லாம் மும்மலங் கழுவிய சீவன் முத்தர்களே என்றும், அவர்கள் இயற்றிய சரியையாதிகள் சாதனமுறையிற் சேர்ந்

---

1. இம்மார்க்கத்தில் செல்கின்றவர் வைநயிகர் என்று சொல்லப்படுவோராகும். இவர் மும்மலச் சார்பாயுள்ள பற்றுடைப் பொருள்களில் இச்சா ஞானக்கிரியைகளைச் செலுத்தாது அவைகளில் வைராக்கிய முடையராய் மேலே சொல்லிய சிவஞானநூல்களிடத்தும் அந் நூல்களை உபதேசிக்கவல்ல ஞானாசிரியரிடத்தும் தமது இச்சையையும், ஆசிரியர் உபதேசிக்கும் அப்பொருள்களைக் கேட்கும் முறையில் ஞானத்தையும், பின் சிந்தித்துத் தெளியும் முறையில் கிரியையையும் செலுத்தும் சீலமுடையவராய் நிட்டை கூடும் அந்நிலையில் அவ்விச்சா ஞானக் கிரியைகளைத் தவமார்க்கத்தில் கூறப்பட்டுள்ள நெறியிற் செலுத்தி அந்நெறியில் மாறாது திருவருள் வசத்தராய் அரனடியைக் கூடுவோர்.

2. இம்மார்க்கத்திற் செல்கின்றவர் - சாமுசித்தரென்று சொல்லப்படுவோராகும். இவர் பண்டை நற்றவத்தால் தோன்றி வருபவராகலின் மும்மலச் சார்பாயுள்ள தனு கரண புவன போகங்களையும் உடற் சார்பாயுள்ள மனைவி மக்கள் முதலிய பாசக் கூட்டங்களையும் உடையவரா யிருப்பினும் அவைகளை யெல்லாம் தமது உயிர்ச் சார்பாயுள்ள தவச்சார்புகளுக்கு உரியனவாகக் கொண்டு அத்தவத்தில் வன்மையுடையவராய் அவ்வன்மைக்கேற்ற செயல்களைச் செய்வதில் தமது இச்சாஞானக் கிரியைகளை ஒரு நெறிப்படுத்தி அயரா அன்புடையராய் இறைவன் விரும்புந் தொண்டுகளைச் செய்து அவ்வழியானே மங்கசிந்துருகுவதே முத்தியின்பமெனக் கருதி இன்பநிலையைப் பெற்றிருப்போர். அங்ஙனம் நிற்கும் அவரை இறைவன் தானேவந்து தன்னருளை அவர்கள் செயலுக்கு ஏற்றவாறு வெளிப்படுத்தி அவர்கள்பால் தனது பேரன்பினைச் செலுத்தி அவர்களது உடலுயிராய் நானா போகங்களையுந் தானாகச் செய்து, பேதமற நின்று அவரைத் தானாக்கித் தனது சிவபோகத்தைத்தந்து தன்னடியைத் தந்தருளுவன்.

தன அன்றென்றும், அவரது அறிவு இச்சை செய்கைகள் வேறோரிடத்திற் செல்லாது அயரா அன்பினல் அச்சரியையாதிகளினிடத்தே நிற்கப்பெற்ற ஞான நிலையென்றும் கொள்ளற்பாற்று. அச்சிறப்பும் அவ்வுண்மையும் தோன்றவே பெரிய புராணத்தைத் திருத்தொண்டர் புராணம் என்றுங் கூறினர்.

எனவே, பெரியர் என்றதனுல் மும்மலங் கழுவிய மூத்தர் என்றும், தொண்டர் என்றதனுல், அயரா அன்பினுல் செயற்கரிய செயலை எளிமையாக இயற்றினவர் என்றுங்கொள்க.

விஞ்ஞானகலரிடத்து ஏனைய இருமலங்களும் பிரளயாகலரிடத்து ஒருமலமுஞ் செல்ல வழக்கின்மைபோல் ஆண்டுக்கூறிய மும்மலச்சார்புகளும் வைநயிகரிடத்தும் பிராகிருதரிடத்தும் வாதித்துப் பேதிக்கின்றமைபோல் சாமுசித்தரிடத்து வாதித்துப் பேதியா. இதனுல் அறுபான்மும்மை நாயன்மார்களில் திருஞான சம்பந்தர் முதலிய மூன்றாசிரியன்மார்கள் நீங்கலாக ஏனைய நாயன்மார்க ளெல்லாரும் நலத்திற் சிறந்த சாமுசித்தர்களென்று தெள்ளிதின் உணரக்கிடக்கின்றது.

இவ்வரிய நூலுக்குச் சித்தாந்தக் கருத்துகளைக் காட்டி பெரிய உரையெழுத வேண்டுமென எண்ணிய எமது தந்தையார் 1916ஆம் (நளஆ விஜயதசமி தினம்) உரையெழுதவும் அச்சிடவும் தொடங்கினர். தொடங்கிய போது திருமலைச் சருக்கத்தைச் சிறுபான்மையாகவும் தில்லைவாழந்தணர் சருக்க முதலியவைகளைப் பெரும்பான்மையாகவும் எழுதி அச்சிட்டு வருங்காலத்தில் காகித விலையும் பின்பு அச்சுக் கூலியும் வேகமாக ஏறியும் தேகவலிவும் பொருள் வருவாயும் மெல்லமெல்ல குறைந்தும் வந்தன. அவ்வாறாயினும் இப்புராணத்துக்குரை எழுதியாவது முடிக்கவேண்டு மென்னும் ஆசையானது இவரது அறிவைப்பற்றி யெழுந்து வயோதிகத்தையும் மற்றெவற்றையும் நோக்கச் செய்யாது தம் உடையவரைப் பூஜைசெய்யுங் காலந்தவிர இரவுபகல் ஓய்வின்றி எழுதவும் பலவிடங்களில் பிரசங்கிக்கவுமே செய்தது. அதனைக் கண்ட இவரது வயோதிகமானது பொறாது தேகத்தைப்பற்றி அச்சிடவேண்டிய முயற்சியையும் தேகவலிவாதிகளையும் குறைக்கத் தலைப்பட்டது. இதனைக்கண்ட அறிவைப்பற்றிய ஆசையானதுஇறுதிநாள்வரை அயராவன்பினுல் விரைவாக உரையெழுதச்செய்து தனக்குப் பற்றுக்கோடாயிருந்த அறிவுக்கிடமாகவுள்ள உயிரைப்பார்த்து இவ்வயோதிகத்துக் கிடந்தந்த இவ்வுடலை விட்டுவிடு; உனக்குயிரா யிருக்கின்ற இறைவனைத் துணையாகக் கொள்வோமென்று கூறித் தன் வசப்படுத்திக்கொள்ள, அவ்வண்ணமே திருவருள் உடலைத் தடுத்து உயிரையும் உயிரறிவையும் அதைப்பற்றியுள்ள ஆசையையும் ஆண்டுத் தன்மயமாக்கித் திருவேகம்பன் திருவடியிற் சேர்த்துக்கொண்டது.

அன்று கிடைத்தன தடுத்தாட்கொண்ட புராணத்தில் "இறைவன்தங்குமுன் தாங்கிச்சென்றான்" என்ற ஈற்றையுடைய சக-வது பாடலுரையும் "செல்லு நான் மறையோன் தன்பின் திரிமுகக்காந்தஞ் சேர்ந்த வல்லிரும் பணையுமாபோல் வள்ளலுங் கடிதுசென்றான்" என்ற ருo-வது பாடலுமுள்ள சோதனை பத்திரமும் குங்கிலியக் கலயர்புராணம் கங-வது பாடலின் விசேடத்தில் "ஆனந்தம் பொங்கி மேலிடவே உணவினையும் + * என்னும் எண்ணமற்று * * * சிவமயமாயிருந்தனர்." முதலாக உள்ள சோதனைபத்திர (Proof)முமே. பின்னர் அவைமுதலாக எழுதியதைஅச்சிட்டு முடித்துத் தாம்பற்பலவாகப் பல சமயங்களில் குறிப்பாக வரைந்துள்ளவற்றில் சிலவற்றை ஒன்று சேர்த்து, பெரிய புராணத் திருநாமச் சிறப்பு முதலியவைகளாக முன்னர் அமைத்து மூன்று சருக்கங்களையும் தனியாகவும் ஒன்றாகவும் கட்டடம் செய்துள்ளேன். இவற்றிலுள்ள குற்றங்களை நீக்கிக் குணங்களைக் கற்றோர் கொள்வார்களெனத் திருவருளை வழுத்துகின்றேம்.

தொண்டர்சீர்பரவுவார் திருவடி வாழ்க.

இங்ஙனம்

கா. ஏ.

அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திருமதி A. சியாமளா அருணாசலம்
(1962) சீர்காழி.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ வாகீச குருப்யோ நம꞉.

பெரிய புராணம்.

திருநாமத்தின் சிறப்பு.

திருவாசகத்தில் அருளிய 'சிவபுராணம்' என்பதற்கு, சிவனது அநாதிமுறைமையான பழமையெனப் பொருள் கொண்டிருப்பதுபோல், பெரிய புராணம் என்பது பெரியோரது அநாதிமுறைமையான பழமை எனப் பொருள்படும்.

பெரியார் எனப்படுவோர் - சரியை கிரியையாகிய நல்ல சிவதன்மத்தால் நல்ல சிவயோகத்தால் நல்ல சிவஞானத்தால் நானென்னும் அகங்காரத்தை யழித்து, அழிந்த அவ்வன்மையினால் எத்தகைய ஞானமுடையாராலும் காணப்பெறாத இறைவனைத் தாம் காணத்தலைப்பட்டு, தாம் தலைப்பட்டதுபோல், அவ்விறைவனைத் தலைப்படுத்த வல்ல அன்பானது தலைப்படவேண்டுமாதலின் அது தலைப்படுமாறு அவ்வன்பு நெறியினைக் கைக்கொள்பவரேயாவர். புராணம் எனப்படுவது - அவ்வன்புநெறி, ஞானத்தினால் இறைவனுண்மையை உணர எண்ணுமவர்கட்கு உணர்தற்கில்லாமலும், அவனைப் புணர எண்ணுமவர்கட்குப் புணர்தற்கில்லாப் பொருளாகியுமுள்ள அவ்விறைவனை உணரவும் புணரவும் உள்ளமுதலியனைத்தும் ஒன்றவுருக்கி, உருகவர்த அவ்வுள்ளத்தின் வழியான் இறைவன் தம் உடனாம் சூழ்நிலைத் தரவல்லது ஆகலின் அந்நெறி இத்தன்மைத்தெனவும் அதன்கண் நடைப்படுவோர் முன்னைமுறைமை இம்முறையெனவும் அது அநாதிமுறைமையெனவும் இதனைக் கைப்பற்றிக் காட்டினோரும் அநாதியாக உள்ளவரேயாவரெனவும் ஆகிய இவைகளை விரித்தெடுத்துத் தெள்ளிதினுணர்த்தும் பழையநூல்.

"பெரிது பெரிது புவனம் பெரிது" என்றற் றொடக்கத்தனவாய்க் கூறியுள்ள தனிப்பாடலின்படியே, சகலாண்ட புவன சராசரங்களை யெல்லாம் தனக்குள் அடக்கியுள்ளவளாய் பஞ்சகிருத்திய காரணியாய் விளங்கும் மகாசத்தியைத் தனது சத்தியாக வாமபாகத்தில் அடக்கியாளவல்ல சத்தனாகிய இறைவனைத் தங்களுடைய இருதய குகையில் அடக்கியாண்ட வல்லாளராகிய அறுபான்மும்மை நாயன்மார்களுடைய செய்தற்கரிய செயல்களை, சிறிய கண்ணாடி பெரிய பொருள்களை யெல்லாம் தன்னுள்ளடக்கிக் காட்டுவதுபோலக் காட்டும் சிறப்புடைத்தாகலின், இப்புராணம் பெரியோரால் பெரிய புராணம் எனப்பெயரிடப்பட்டு வழங்கி வருகின்றது.

1. * "அரவகல் அல்குலார்பால் ஆசை நீத்தவர்க்கே வீடு தருவ மென்றளவில் வேதஞ் சாற்றிய தலைவன்றன்னை - இரவினிற் றூதுகொண்டோன்" என்றும், † "மோகமறுத்திடில் நாமுத்தி கொடுப்பதெனை, ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையர்பால் தூதாகப் போகவிடும் வன்றொண்டன் தொண்டுகளை ஏதாகச் சொல்வேனி யான்" என்றும் போற்றப்பட்ட பெரியோராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்திகளது சரித்திரமாகலின் பெரியபுராணம்.

---

* திருவிளையாடற்புராணம். † திருக்களிற்றுப்படியார்.

2. ஸ்ரீ சுந்தரமூர்த்திகளது அநாதிமுறைமையான பழமையும், அம்மூர்த்திகளால் ஓதப்பட்ட திருத்தொண்டத்தொகையுள் வந்துள்ள பெரியாரது அநாதிமுறைமையான பழமையும் வெளிப்படலால் - பெரிய புராணம்.

3. அநாதிமல முத்தனும், அநாதிமல பெத்தராகிய ஆன்மாக்களுக் கெல்லாம் அநாதி பரமாப்தனும் உள்ள இறைவனால் அநாதியே விதிக்கப்பட்டுள்ள வேத நெறி சைவநெறி பத்திநெறி என்னும் மூன்று நெறிகளினும் வழுவாது வாய் மெய் சிந்தை என்னும் முக்கரணங்களும் சென்று அரனடி கூடுமாறு செய்யவல்ல செயற்கரிய செயல்களாகிய சரியையாதிகளுடைய தொண்டின் திறத்தை விரிவாக வெளிப்படுத்தலால் - பெரிய புராணம்.

4. வேத சிவாகமங்களெல்லாம் பந்த நீங்கி முத்தியை அடைவதற்குச் சரியையாதிகளாற் செய்யப்படும் பத்திநெறியே நன்னெறியாகக் கூறியிருக்க, அதனை யுணராது கேட்டலாதி நெறியே முத்தியடைவதற்கு நன்னெறியாமென்று கூறுவோர் கூறும் கூற்றை, "வித்தினைத்தேடி முளையைக் கைவிட்டவர்" என்றும், "பித்தேறினார்கள்" என்றும், (அவர்) "பெறுவது அங்கு என்?" என்றும், "வித்தும் அதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம், வித்தும் அதன் அங்குரமும் மெய்யுணரில், — வித்ததனில், காணமையால் அதனைக் கைவிடுவர் கண்டோர், பேணுமையால் அற்றார் பேறு" என்றும் கூறியுள்ள சித்தாந்த வாக்கியமாகிய வாளைக்கொண்டு வீசி, பித்தாந்தப் பெரும் பிதற்றைப் போக்கி, பாவப் பெருங் குழியில் வீழ்வதாகிய அந்தகத் தன்மையை மாற்றி, சிவன்றன் திருக்கடைக்கண் சேர்ந்திருப்பதாகிய சித்தாந்தத் திற் கூறப்படும் முத்தாந்தப் பாத மலர்க்கீழ்ச் சென்று அங்கு ஞானவாரி மடுத்து ஆனந்த முற்றிருப்பதாகிய சிவானந்த முத்தினிலே பன்முறையாகக் கூறப்பட்டிருந்தலால் - பெரிய புராணம்.

5. ஞான நூற்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிதலாகிய அம்முறையான் உண்டாகும் செயற்கை யறிவால் பாசத்தினின்றும் நீங்கிச் சீவன் முத்தர்களாய் உடற்சார்பு உயிர்ச் சார்புகளையொழித்து, முத்திக்கு விலக்காகவும் தம்முடையனவாகவும் எண்ணியிருக்கும் சரீர சம்பந்தத்தால் வரும் பிராரத்தானுபவங்களை (புண்ணிய பாவப் பயனாய் வரும் இன்ப துன்பங்களை) அநுபவித்து வந்து சரீரம் நீங்கியபின் பரமுத்தியை யடைந்தார்களென்று நூல்வழியான் அறியக்கிடக்கின்றமையே யன்றி, இயற்கை யறிவானே பாசத்தினின்றும் நீங்கிச் சீவன் முத்தினிலையைப் பெற்று இன்ப துன்பமாய் மாறிமாறி இடைவிடாதுவரும் பிராரத்தானுபவங்களை யொழித்துப் பரமுத்தியில் அனுபவிக்கவரும் பிரமானந்தத்தை அனுபவித்து பிரமாகாரமாகவே இருந்து விதேகமுத்தர்களானார்க ளென்று அறியக்கிடக்கின்றது மில்லை. இப்புராணத்துள் ஓதப்பட்ட நாயன்மார்க ளெல்லாரும் கேட்டலாதிகளானன்றி இயற்கை யறிவானே பாச அறிவினின்றும் நீங்கிச் சீவன் முத்தர்களாய் உடற்சார்பு உயிர்ச்சார்புகளாயுள்ள எல்லாச் சார்புகளோடும் கூடிநின்று சரீரசம்பந்தத்தால் வரும் இன்ப துன்பங்களை ஒரு சிறிதும் அனுபவியாது பரமுத்தியில் அனுபவிக்கப்படும் சிவானந்தத்தையே அனுபவித்தவா, சரீராந்தத்தில் சிவானந்தத்தை யளிப்போனாகிய சிவனே முத்திக்கெல்லையாயுள்ள குஞ்சித பாதம் வருந்த வந்து தன்னைப் பற்றுதற்குத் தந்த உடற்சார்பு உயிர்ச்சார்பாயுள்ள எல்லாப் பொருளையும் தன் வசமாக்கிக்கொண்டு தம்மையும் உடன் கொண்டு தான் வாழும் பரலோகத்தில் வாழச் செய்து அங்கு நிரதிசயானந்த வாழ்வாகிய அத்வைதானந்த வாழ்வைப் பெறச்செய்த அரிய நிலை கூறப்பட்டிருத்தலால்— பெரிய புராணம்.

6. அனாதியே ஆணவாதி பாசத்தோடு அத்துவிதமாய்க் கலந்து தமது ஞானக் கிரியைகள் வெளிப்படுமாறின்றி பசுவெனப்பட்டிருந்த தம்மை இறைவன் அதனி

னின்றும் வெளிப்படுத்தி அப்பாசங்களைத் தனுகரண புவன போகங்களாகவும், இருவினைகளாகவும், புண்ணிய பாவங்களாகவும், சுகதுக்க ரூபமாய் வரும் பயன்களாகவும், இவ்விருவகையினும் முறுகி முனைத்து நின்று அனுபவித்தற்கான அகங்கார மமகாரங்களாகவும் காரியப்படுத்தி, அக்காரியப்பாடுகளில் தம்மைப் புகுவித்து, ஞானக்கிரியைகளைத் தொழிற்படுத்தி, அவ்வழியானே இரு வினைகளைப் பெருக்கிப், பின் அவ்வினைகளை ஒப்பாக்கி, அவ்வினைகளில் இளைக்காது முனைத்து நிற்கச்செய்து வந்ததாகிய மலத்தை அங்ஙனம் முனைத்து நிற்பதில் தளர்ச்சிவரச் செய்வதாகிய பரிபாகப்படுத்தி அங்ஙனமான மல பரிபாகத்தளவாய்ச் சத்தி பதிவித்துச் சீவன்முத்திநிலையை வருவித்துத் தன்னுடன் ஏகமாய்க் கலந்து அனுபவித்தலாகிய அத்துவிதானந்தத்திற்கு ஆளாக்கிய செய்ந்நன்றியை நினைந்து அடிமையாதலாகிய உய்யுந் திறத்தை யொழித்தாரது பிரபாவத்தைக் கூறுது. மேலே சொல்லிய முறைப்படி இறைவன் செய்துவந்த நன்றிகளை யெல்லாம் நினைந்து நினைந்து கரைந்து கரைந்து மீளா அடிமைத் திறத்தைக் கைப்பிடித்து அவ்வழியான் அவ்விறைவனோடு ஏகமாய்க் கலந்து அத்துவிதானந்தத்தில் திளைத்திருக்கும் பெரியாரது பிரபாவத்தைக் கூறுதலால் - பெரிய புராணம்.

7. திருத்தொண்டத் தொகையுள் கூறப்பட்ட மெய்ஞ்ஞானிகள் உய்வுண்டாம் நெறியைக் கூட்டுவதாகிய செய்ந்நன்றி மறவாமையைக் கடைப்பிடித்து, இறைவனுக்கு மீளா வடிமையை அறிவிக்கவல்ல ஞான யோகக் கிரியா சரியை என்னும் தொண்டுகளைச் செய்தவர்களே யன்றி, இருவினை யொப்பு வருதற்கும் மலபரிபாகம் உண்டாதற்கும் சத்தி பதிதற்கும் செய்வதாகிய சரியை கிரியா யோக ஞானங்களைச் செய்தவர்கள் அன்றென்பதைக் கண்கூடாயறியக் கூறப்பட்டிருத்தலால் - பெரிய புராணம்.

8. செய்ந்நன்றி மறவாத மெய்ஞ்ஞானிகளாகிய நாயன்மார்களால் செய்யப்பட்ட மெய்த்தொண்டுகள் சரியையிற் பதினாறு, கிரியையிற் பதினாறு, யோகத்திற் பதினாறு, ஞானத்திற் பதினாறு. ஆக அறுபத்து நான்கு வகையாக விரிந்துள்ளன என்பதை உய்த்துணர அறுபத்து மூன்று தனியடியார்களிடமாகவும், தொகையடியார்களிடமாகவும் விளக்கிக் கூறியிருப்பதால் - பெரிய புராணம்.

9. சிவாகம நூற்றுணிபாயுள்ள சிவஞான போதத்தில் பயனியலில் கூறப்பட்டுள்ள பாசக்ஷயம் பண்ணுமாறும், பரமேசுவரனது சீ பாதத்தை யணையுமாறும், அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறும் ஆகிய மூவகைப் பயனும் கைம்மாறு கருதாத நாயன்மார்கள்பால் எளிதாக முற்றுப்பெற்ற திறத்தைக் கூறுதலால் - பெரிய புராணம்.

10. மூவகைப் பயனையும் அன்பின் திறத்தால் எளிதாகப் பெற்றநாயன்மார்கள் பால் இறைவன் அவர்கள் பாசத்தைக் குன்றச் செய்யாது அதிகரிக்கச் செய்ததும், தனது சீ பாதத்தை அவர்கள் வந்தணையச் செய்யாது தானே சென்று அணைவித்ததும், ஏனையோர்பால் அசிந்திதனாய் நின்றதுபோல் மறைந்து நில்லாமல் அவர் சிந்திக்கும் எவ்விடங்களிலும் சிந்திதனாக எளிவந்து அவர் சிந்திக்கும் சிந்தையின் வண்ணமாகவே இருந்து அவர்கள் சித்தங் களிகூறுமாற்றைக் கண்டு களித்ததுமாகிய அற்புதத்தை விரித்திருத்தலால் - பெரிய புராணம்.

11. சித்தாந்த போதமாகிய சிவஞான போதத்தில் பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் "செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ மாலற நேய மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்று கூறியுள்ளபடி - செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங்களை ஞான நீரால் கழுவிய அன்பரும், மாலறநேய மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனவே தொழுதவரும் இதில் கூறப்பட்ட நாயன்மார்களே என்று, முத்திநெறிக் குரியாரெல்லாரும் தெள்ளிதின் உணர்ந்து அவர்களை வழிபட்டு அப்பெரியார் பெற்ற பயனைப் பெறுமாறு, விரித்துக் கூறுதலால் - பெரிய புராணம்.

12. மெய்கண்ட சாத்திரத்திற் கூறப்படும் * மெய்ப்பொருளெதுவோ அப்பொரு ளையும், அப்பொருளால் அனுபவிக்கப்படும் † அனுபவம் எதுவோ அவ்வனுபவ விசே டத்தையும், அவ்வனுபவ விசேடத்தால் அடையப்படும் ‡ பிரயோசனம் எதுவோ அந்தப் பிரயோசனத்தின் சிறப்பையுமே எடுத்துக் கூறுதலால் - பெரிய புராணம்.

13. புராணம் - பஞ்ச லக்ஷணமுடையது என்றபடி புராணத்தில் சொல்லப்பட்ட பெரியோரெல்லாம் அவதாரஞ் செய்த ஊரும், அவர்களது நாமமும், அவர் கள் இயற்றிய தொண்டும், அத்தொண்டில் அவர்கள் அயராது நின்ற வன்றிறமும், அவர்களை முத்திநிலையில் இறைவன் நிலைபெறுவிக்கும் அருள்நிலையும் ஆகிய இவ் வைந் தினையும் விரித்துக் கூறுதலால் - பெரிய புராணம்.

14. மனத்துக்கண் மாசில்லாமற் செய்யப்படும் அறத்தையும், அவ்வறத்தில் நிலைநிற்கவேண்டிய அறிவின் திண்மையும் அத்திண்மையோடு அவ்வறத்தைச் செய்த பெரியாரது ஆற்றலையும், அவ்வாற்றலால் யாவர்க்கும் மிக அரியனுயுள்ள இறைவன் மிக எளியனாய் அவர்கள் வசப்பட்டு நின்ற அருளின் பெருக்கையும், அவ்வருட்பெருக் கு குன்றுவண்ணம் தங்குவித்ததாகிய அன்பின் எல்லையையும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் பிரகாசிக்கச் செய்தலால் - பெரிய புராணம்.

15. ஆணவாதி அசுத்தத்தைப் போக்குதற்கு நன்னீராயும் அந்த நீரால் சுத்தப் பட்ட ¶ சைவர்கள் அரனாணை கடவாது அவ்வாணைவழி நிற்றற்குரிய § சட்டமாயும் இருத்தலால் - பெரிய புராணம்.

16. உடலினுள் இருப்பது உயிரும், அவ்வுயிரினுளிருப்பது சிவமுமாம். உடம் பிலக்கணத்தை வேதமும் உயிரிலக்கணத்தை வேதாந்தமும், உயிருக்குயிரா யிருக்கும் சிவனிலக்கணத்தைச் சித்தாந்தமும் உரைக்கும். இம்மூன்று நூலால் முப்பொருளை யும் உணர்ந்து உயிர் உயிர்க்குயிராகிய சிவனைக் கூடி இன்புறுதற்கான வழிபாட்டினை யுணர்த்தலால் - பெரிய புராணம்.

* மெய்ப்பொருளாவது - பிரமாண வியலானும் இலக்கண வியலானும் சாதிக்கப் படுவது. † அநுபவ விசேடமாவது - சாதன வியலால் சாதிக்கப்படுவது. ‡ பிரயோ சனமாவது - பயனியலால் முடித்துக் கூறப்படுவது.

¶ சைவம் என்பது சுத்தம். சுத்தமாவது - அசுத்தத்தைப் போக்குவது. அசுத்தமா வது ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்கள். இம்மலங்கள் உயிராகிய ஆன் மாவை அநாதியாக நெல்லினிடத்தில் உமி தவிடு போலும், செம்பில் களிம்பு போலும் பொருந்தியிருப்பன. இம் மலச்சார்புகளால் யான் எனதென்னும் அகங்கார மமகாரங்கள் தோன்றி உடற்சார்பு உயிர் சார்புகளாயுள்ள பொன் மண் பெண் என் னும் இவைகளில் மன வாக்குக் காயங்களைப் பற்றச்செய்து நல்வினை தீவினைகளைப் பெருக்கி ஆன்மாவைப் பிறவிக்குள்ளாக்கி அசுத்தப்படுத்தும். இவ் வசுத்தத்தை யொழிப்பதே சைவம் எனப்படும். இவ் வசுத்தத்தை ஒழிக்கத்தலைப்படுகின்றவரே சைவ ரெனப்படுவார். இதுதான் சைவத்திற் கூறப்படும் அறம் இதனைச் செய்யா தொழிந்தால், “மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் ஆகுல நீரபிற” என்ற படி ஆரவாரச் செயல்களாக எண்ணப்படும்.

§ சீவன்முத்தராதற்குச் சரியையாதிகளை அனுட்டிக்க வல்ல சாதகருக்கு விதித்த சட்ட நூலன்று. மும்மல வழுக்கை ஞான நீராற் கழுவி அயரா அன்பின் அரன் கழலணைந்த சீவன்முத்தர்களுக்கு விதியாகக் கூறிய சட்ட நூலாகும்.

நுதலிய பொருளின் சிறப்பு.

பல கலைகளிலுஞ் சாரமா யுள்ளது ... ... வேதம்.
அவ்வேதங்களின் சாரமாயுள்ளது ... ... ஆகமம்.
அவ்வாகமங்களின் சாரமாயுள்ளது ... ... சித்தாந்தம்.
அச் சித்தாந்தத்தின் சாரமாயுள்ளது ... ... பெரியபுராணம்.

கேட்கும் நிலையினையுடையது ... . வேதம்.
சிந்திக்கும் நிலையினையுடையது ... ... ஆகமம்.
தெளியும் நிலையினையுடையது ... ... சித்தாந்தம்.
நிட்டை கூடும் நிலையினையுடையது ... ... பெரியபுராணம்.

அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாயிருக்கும் நிலையைக் கூறுவது ... ... வேதம்.
வேறுங் குறியது உடைத்தா யிருக்கும் நிலையைக் கூறுவது ... ஆகமம்.
வேதாகமங்களின் குறியிறந்து அங்கு அறிவினில் அருளான் மன்னியிருக்கும் நிலையைக் கூறுவது ... ... சித்தாந்தம்.
அம்மையோ டப்பனுகிச் செறிவொழியாது நின்ற சிவனடிசென்னிவைக்கும் நிலையைக் கூறுவது ... ... பெரியபுராணம்.

பிரமாண ரூபமாயுள்ள சுருதிரூபமாயிருப்பது ... ... வேதம்.
ஆசிரிய வசனரூபமாயுள்ள யுக்திரூபமாயிருப்பது ... ... ஆகமம்.
அனுபவ ரூபமாயிருப்பது ... ... சித்தாந்தம்.
அனுபவத்தில் விளையும் ஆனந்த ரூபமாயிருப்பது ... ... பெரியபுராணம்.

வேதத்துக் கதிகாரிகள் ... ... உலகினர்.
ஆகமத்துக் கதிகாரிகள் ... ...சத்தினிபாதர்கள்.
சித்தாந்தத்துக் கதிகாரிகள் ... வேதச் சிரப்பொருளைத் தெளிந்த ஞானிகள்.
பெரிய புராணத்துக் கதிகாரிகள்—சரியை கிரியா யோகஞ்செலுத்திய பின் ஞானத் தாற் சிவனருளைச் சேரத்தக்க மெய்யன்பினை யுடையவர்கள்.

உலக நிலையைக் கூறுவது ... ... வேதம்.
உயிர் நிலையைக் கூறுவது .. .. ஆகமம்.
சிவ நிலையைக் கூறுவது ... ... சித்தாந்தம்.
சிவ ஞானத்தில் விளையும் அன்பினிலையைக் கூறுவது ... ... பெரியபுராணம்.

சிவன் — வேதத்துக்கு ... ... எட்டாதவனு யுள்ளவன்.
,, — ஆகமத்துக்கு ... ... அறியவுள்ளவன்.
,, — சித்தாந்தத்துக்கு .. ... அநுபவமாயுள்ளவன்.
,, — பெரிய புராணத்துக்கு ... ... அத்வைதமா யுள்ளவன்.

வேதமார்க்கத்தால் வருவது ... ... போகம்.
ஆகமமார்க்கத்தால் வருவது ... ... யோகம்.
சித்தாந்தத்தால் வருவது ... ... ஞானம்.
பெரியபுராணத்தால் வருவது ... ... அன்பு அல்லது முத்தி.

பாசநீக்கமுற்றுப் பதித்தன்மை யடைநிலாகிய சீவன் முத்திநிலையைக் கூறுவது ... . வேதவேதாந்தம்.
பாசத்தைத் தமக்கு உபகாரப்பொருளாக விளக்கி அதனைப் பதி வசமாக்கி அவற்றாலேயே ஜீவன் முத்தி நிலையைப் பெற்று விளங்குவதைக் கூறுவது ... ... சித்தாந்தம்.

பார்த்தால் இன்பத்தை ஆன்மா அனுபவித்தலைக் கூறுவது	பெரியபுராணம்.
அறம் வளரவும் பாவந்தேயவும் அறியாமை நீங்கவுமான ஒழுக்க முறைமைகளை வருணமுறைமைக் கேற்பவும், பிரமசரிய முதலிய நிலைமைக்கேற்பவும் விளங்கக் கூறுவது	வேதம்.
நித்தவநித்தங்களது வேறுபாட்டுணர்வும், இம்மை மறுமை யின்பங்களில் உவர்ப்பும், பிறவித் துன்பங்களும் தோன்று வதற்கான முறைமைகளைவிளக்கமாகக் கூறுவது ...	ஆகமம்.
பிறவித்துன்பந் தோன்றவந்த சத்தினி பாதர்க்கு - சத்தினி பாதம் கூடியமுறைமைக் கேற்ப முத்தி சாதனங்களையும் முத்தி கூடுவதற்கான ஞான நிலைகளையும், முத்தி நிலைகளை யும், அந் நிலைகளால் விளையும் இன்பப் பகுதிகளையும் விள க்கமாகக் கூறுவது	சித்தாந்தம்.

"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம். பேரறிவாளன் திரு" என்றும், "பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம், நயனுடையான் கண்படின்" என்றும், "மருந்தாகித் தப்பாமரத்தற்றால் செல்வம், பெருந் தகையான்கண் படின்" என்றும், "ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன், விற்றுக்கோட்டக்க துடைத்து" என்றும், உத்தரவேதங் கூறிய மொழிப்படி உலக நடையினைத் தாமே அறிந்து செய்தலாகிய ஒப்புரவினைச் செய்து, மேலே சொல்லிய வேதாகம சித்தாந்த நெறிக ளாலும் கொள்ளற்கரிய பரசிவத்தைக் கொள்ளுதற்குரிய ஒப்புர வென் னும் அறச் செயலை விளக்கமாகக் கூறுவது ... ... பெரியபுராணம்

இங்ஙனம் கூறிவந்த முறையான் - பெரியபுராணம் - மிகச் சிறப்புடைய தென் றும், வேத முதலியவை அத்துணைச் சிறப்பினை உடையனவன்றென்றும் கூறியதாக ஆராய்ச்சி யில்லாத சிலர் கூறுவார்; அங்ஙனமன்று.

பெரியோர்களால் செய்யப்பட்ட அரிய நூல்களுக்குப் பதவுரை - பொழிப்புரை - விசேடவுரை - கருத்துரை - என்று வகுக்கப்பட்டிருப்பின் அவைகளை நோக்குவோர் இவையெல்லாம் அந் நூலிலுள்ள செய்யுட்களில் உள்ளனவென்று கொள்ளு முறை போல் இங்ஙனங் கூறிய முறை என்று கொள்ளவேண்டும்.

இந் நால்வகையுரையான் பயன் என்னை யெனின்,— பதவுரை - இன்ன பதத் திற்கு இன்ன பொருள் என்று உணரவரும் உணர்ச்சியையும், பொழிப்புரை—அப் பொருளைத் திரட்டிக் கூறுவதாகிய ஆற்றலையும், விசேடவுரை—அங்ஙனந் திரட்டிக் கூறிய பொருளில் எஞ்சி (மறைந்து) நிற்கும் விசேடப் பொருள்களை நுண்ணுணர்வால் உணரவருவதாகிய அறிவின் விளக்கத்தையும், கருத்துரை—அந்த நுண்ணுணர்வான் உணரத்தக்க இவ்விசேடத்தின் பயன் இதுவாகும் என்று தெளிவதாகிய நிச்சய அறி வினையும் தருதலால் நிச்சய அறிவைப் பெறுவதே பயனு மென்க.

அஃதேபோல், வேதம் - மூலம், ஆகமம் - அம்மூலத்தின் பதவுரையும் பொழிப் புரையும், சித்தாந்தம் - விசேடவுரை, பெரியபுராணம் - கருத்துரை என்றுகொள்வதே மேலோரது துணிபா மென்க.

இங்ஙனம் கூறிவந்த முறையான் வேதாகம சித்தாந்தங்களின் கருத்துரையாயும், சாரமாயும் உள்ள இப்பெரிய புராண நூலைப் பக்தி நூலென்றும், பக்தி செய்தோரது சரித்திர மென்றும், ஞான நூல் அன்றென்றும், மெஞ்ஞானச் செயலுடையோரைக் கூறும் நூல் அன்றென்றும் கூறி மெய்ஞ்ஞானத்தினையும்; முத்திப் பயனையும் இழந்து சிவாபராதிக ளாகின்றனர்.

* இப்புராணச் சிறப்பை வேதாகமசித்தாந்தங்களைக் கசடறத் தெளிந்தவரே அறியும் ஆற்றலுடையவராவ ரென்க.

1. இல்லறமே நல்லறமெனக் காட்டு நூல்.
2. அன்பையும் அருளையும் விளக்கு நூல்.
3. அன்பே சிவம் சிவமே அன்பு என்னும் நூல்.
4. அன்பே உயிர் உயிரே அன்பு என்னும் நூல்.
5. பக்தியே ஞானம் ஞானமே பக்தி என்னும் நூல்.
6. பக்தியே முத்தி முத்தியே பக்தி என்னும் நூல்.
7. சிற்றின்பத்தையே பேரின்பமாக்கும் நிலைமையைக் கூறும் நூல்.
8. கருவி கரணங்களோடும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களோடும் ஆக்கப்பட்டிருக்கின்ற ஆக்கையே பிறவிக்கடலைக் கடத்தற்கு நல்ல தோணி என உணர்த்தும் நூல்.
9. தேடும் செல்வத்தையும் கல்வியையும் அருளையும் அவமாக்காது தவமாக்கிப் பயன் பெறும் முறைமையைக் கூறும் நூல்.
10. ஆணவ மலத்தைப் போக்கி அருளைத் தரும் நூல்.
11. கன்மமலத்தைப் போக்கி அன்பைத் தரும் நூல்.
12. மாயா மலத்தைப் போக்கிச் சிவத்தைத் தரும் நூல்.
13. செயற்கரிய செயலைச் செய்த பெரியார் இவரெனக் காட்டும் நூல்.
14. செயற்கரிய செய்கை எல்லா வருணத்தாரும் செய்தற்குரிய செயலென அறிவிக்கும் நூல்.
15. செயற்கரிய செய்கை இதுவென உணர்த்தும் நூல்.
16. உலக நடையினை அறிந்து செய்யும் செயலைக் கூறும் நூல்.
17. இம்மையிலேயே பேரின்பானுபவ சுகத்தை அனுபவிக்கச் செய்யும் நூல்.
18. சித்தாந்த முத்திசாதனத்தைக் கூறும் நூல்.
19. சித்தாந்த முத்தி நிலையைக் காட்டும் நூல்.
20. * சித்தாந்த முத்தி இன்பத்தைக் காட்டும் நூல்.
21. † சித்தாந்த முத்தி இன்பத்தை அநுபவமாகக் காட்டும் நூல்.
22. ‡ பெத்த நிலையில் அவா ரூபமாகவுள்ள ஆன்மசக்தியே முத்திநிலையில் அன்பு ரூபமாக விருக்கும் என்பதை விளக்கும் நூல்.

---

* "எங்ஙனிருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுகேன் அங்ஙனிருந்த தென்று" கூறுவதாகிய சிவானந்தப் பெருக்கை இங்ஙனிருந்தது என்று பல வண்ணத்தானும் விளக்குவது.

† ஊமைகண்ட கனவைப்போல் வாக்கு மனாதீதமாய்க் கண்டவர்விண்டிலர் என்று சொல்லப்படும் சிவானுபவத்தை அநுபவமாய்க் காட்டுவது.

‡ சிவசத்தி என்னுங்கால் சத்தி என்பது சிவத்துக்கு வேறன்மைபோல் ஆன்மசக்தி என்னுங்கால் அவ்வான்மாவுக்கு அன்பு வேறன்மை யென்றறிக. சிவசக்தியானது ஆன்மாக்களுக்குப் பெத்த நிலைக்கண் திரோதான சத்தி யென நின்று அவ்வனுபவத்தை அனுபவிக்கச்செய்து சிற்றின்பத்தை யூட்டியும் முத்தி நிலைக்கண் அத்திரோதான சக்தியே அருட் சக்தியென நின்று சிவானுபவத்தை அனுபவிக்கச் செய்து பேரின்பத்தை யூட்டியும் வருதல் உண்மையாகலின் அங்ஙனம் சிவசத்தியானது பெத்த முத்தி என்னும் இரண்டு நிலையில் சிற்றின்பம் பேரின்பம் என்னும் இருவகை யின்பங்களை ஆன்மாக்களுக்கு நுகர்விக்குங் காலத்து ஆன்ம சத்தியானது அவாவுருவாய் நின்று சிற்றின்பத்தையும் அன்புருவாய் நின்று பேரின்பத்தையும் நுகர்விக்கும். அஃதாவது ஆன்ம சத்தி அவா வுருவாய்ச் சிற்றின்பத்தை நுகருங்காலத்து மலமய மாய்த் துன்புறும் வாழ்க்கையையே விரும்பி அதில் சலிப்பற்றும் அன்புருவாய்ப் பேரின்பத்தை நுகருங் காலத்துச் சிவமயமாய் அவ்வன்பையே விரும்பி அதில் சலிப்பற்றும் வாழும் என்க.

23. *"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்றதனை விளக்கும் நூல்.

24. சமயங்கட் கெல்லாம் அதீதசமயமாகிய சைவ சமயத்தைச் சார்ந்தவர்களுக்கும் வேறு † சட்ட புத்தகமா யுள்ளது.

25. ‡ குருலிங்க சங்கம பக்தியே உடலின் சுத்தி உயிரின் சுத்தி அறிவின் சுத்தி உண்டாக்கும் என்பதை விளக்கும் நூல்.

* சிவ தருமத்தை நோக்கி உலகதருமமான நன்றியை மறந்தவர்க்கு உய்வுண்டாம் என்பதையும், இறைவனது காணும் உபகாரத்தையும் காட்டும் உபகாரத்தையும் மறந்தவர்க்கு உய்வில்லை என்பதையும் விளக்குவது.

† க-வது தில்லைவா ழந்தணர் புராணம்:— சிவன் முத்தர்கள் சிவன் தன்னோடு ஏகமாய்க் கொள்ளினும் அது கொண்டு தாம் சிவமென் றிறுமாக்காது அடிமை குலையாது வழிபாட்டில் தவறாது இருக்க வேண்டுமெனல்.

திருநீலகண்டர் புராணம்:—தாண்டற் கரிய சிற்றின்பக் கடலைத் தாண்டவேண்டுமாயின் இறைவன் ஆணை வழியில் நிற்கும் அன்பிருக்கவேண்டும். அன்பிருந்தால் அவ்வன்பு ஆணைவழிகடவாதிருக்கும் வைராக்கியத்தை நிலைபெறுவிக்குமெனல்.

இயற்பகையார் புராணம்:—தம்மால் ஆளப்படும் பொருளெல்லாம் இறையவனடியவர் உடைமையாகலான் அவ்வுடைமைக்குத் தாங்கள் சுதந்திரரல்லர். ஆகவே அடியவர் யாது வேண்டினும் இல்லை யென்னாது கொடுக்க வேண்டுமெனல்.

இளையான் குடிமாறர் புராணம்:— சிவதன்மத்திற்குத் தம் அறிவே துணையே யன்றி யாவறுமை வந்துழிச் செல்லும்வழியை நோக்கும் செல்வம் அன்றாகலான் அச் செல்வ வறுமைகளுட்பட்டுச் சிவதருமத்திற் சோர்வுபடாது அறிவைத்துணையாகக் கொண்டு என்றும் ஒரு நிலையராய்ச் சிவ தருமத்தில் நிற்கவேண்டு மெனல்.

மெய்ப்பொருளார் புராணம்:—மெய்ப்பொருளாகிய திருவேடத்திற்கு எதனை எண்ணியாவது எச்செயலைச் செய்யவாவது தம்முடம்பாகிய மெய்யை ஆளாக்குவாராயின், அவரைக் கருதாது அவரை உட்படுத்திய திருவேடத்தினது ஆற்றலைக் கருதித் தமதுடம்பாகிய மெய்யைக் கொடுக்க வேண்டுமெனல்.

விறன்மிண்டர் புராணம்:— அரனிடத்து அன்புடையாரை அடியவரிடத்து அன்புடைமையைக் கண்டு மதிக்க வேண்டுமெனல்.

அமர்நீதியார் புராணம்:— தன் பொருளெல்லாம் சிவனுடைய உடைமைப் பொருளென்றும், தான் அவனடிமைப் பொருளென்றும் பஞ்சாக்கரத்தால் உணர்ந்து அருள் வெளிப்படுங் காலத்துத் தன் பொருளையும் தன்னையும் எடையிட்டுக் கொடுக்க வேண்டுமெனல்.

இவ்வாறு ஏனைய சட்டங்களை ஏனையோர்புராணங்களில் உய்த்துணர்ந்து கொள்க.

‡ உடற்சுத்தி - மூர்த்திதலம் தீர்த்தத்தாலும், உயிர்ச்சுத்தி - குருலிங்க சங்கமத்தாலும், அறிவுச்சுத்தி - கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையாலும் உண்டாகும்.

உடற் சுத்தியால் சிவலிங்கமூர்த்தியிடம் அன்பும், உயிர்ச் சுத்தியால் ஆசாரிய மூர்த்தியிடம் அன்பும், அறிவுச் சுத்தியால் சங்கமரிடம் அன்பும் உண்டாகும்.

சிவலிங்கமூர்த்தியிடம் தடத்ததெரிசனமும், ஆசாரிய மூர்த்தியிடம் சொரூப தெரிசனமும், சங்கம மூர்த்தியிடம் அருட்டெரிசனமும் உண்டாகும்.

இவற்றின் உண்மைகளைச் சிவஞானபோத முதலிய நூல்களைக் குருமுகமாய் அறிந்து, உடற்சுத்தியாதிகளை சரியையாதிகளை அனுட்டித்தலால் பெறவேண்டும். இச் சரியையாதிகளைக் கொண்டு சுத்தி யடைந்தவர் யாவரென்று அறிய வேண்டுமாயின் பெரிய புராணத்தை உணரவேண்டும்.

தொகைப் பொருளின் சிறப்பு.

'முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

என்ற திருவாசகத்திற்போந்த பொருளே இப் புராணத்திற்போந்த தொகைப்பொருளாம். எனவே, ஞானயோகக் கிரியாசரியையாதிகளைக் குறிக்கும் இப்புராணம் முத்திநெறிக்குத்தலைப்பட்டவர்களுக்கு முத்திநெறி யறியாத மூர்க்கரது மயக்கமொழித்துப் பத்திநெறியாகிய தொண்டின்திறத்தை அறிவித்து, அத்திறத்தான் கன்மமலங் காரணமாய்த்தொன்றுதொட்டுவரும் பழைய வினைகளாகிய நல்வினை தீவினைகளாக நிகழுஞ் செயல்களைத் தொண்டின் வசமாக்கிப், பிறவிக்கிடஞ்செய்யும் ஆகாமிய சஞ்சித பிராரத்தங்களாகிய பழவினைகளைப் பரமனைப்பத்தியினால் பணிதலாலும் பரமனையே பாடுதலினாலும் பாறும்வண்ணஞ் செய்து, பரமனாகிய சிவன்பாலே சித்தத்தை வைப்பதாகிய அத்திறத்தால் சித்தத்தைப்பற்றி நிகழும ஆணவமலத்தை அறுவித்து அவர்களைச் சிவமாக்கி அச்சிவத்தால் ஆளப்படுவதாகிய உண்மை நிலையை விளக்குவதேயாம்.

இவ்வுண்மை தோன்றவே-"மாக்கள் சிந்தையுட்சார்ந்துநின்ற பொங்கிய இருளை, எனைப் புறவிருள் போக்குகின்ற செங்கதிரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்" என்றார்

இனி 'முத்திநெறி யறியாத மூர்க்கர்' எனப்படுவோர், நூலுணர்வால் உணரப்படாத நுண்ணியனாகிய சிவபெருமான் பொற்பணிபோல் அபேத நிலையினனாயிருப்பவனென்றும், இருள்வெளிபோல் பேதநிலையினனா யிருப்பவனென்றும், சொற்பொருள்போல் பேதாபேத நிலையினனா யிருப்பவனென்றும் நூலுணர்வானுணர்ந்து அவ்வுணர்ச்சி விசேடத்தான் பிரக்ஞையே பிரமம் என்றும், அகமே பிரமமென்றும், தத்வமசி வாக்கியத்தால் - நானே பிரமம் ஆயினேன் என்றும் கூறுவதாகிய அந்நிலையில் நின்று பிரமத்தைக் காணாது தன்னையே பிரமமாகப் பிரமித்துக் கண்டு பிரபஞ்சமயமா யிருப்பவர் என்க. எனவே பிரக்ஞை என்றது-ஆன்மாவினது பிரக்ஞை என்றும், அஹம் என்றது - பிரக்ஞையையுடைய சீவன் என்றும் உணர்ந்து, பின்னர் தத்துவமசி என்றது - அது என்ற பிரமம் வேறாகாது அதுவாயிருத்தலால் பிரக்ஞையை பிரமம் என்றும் அகத்தைப் பிரமம் என்றும் அறிந்த யானே பிரமமாயினேன் என்று தெளிந்து, எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்ணாதிகளில் உழன்ற பிரக்ஞையை (அறிவை) பிரமம் என்றும், கண்ணாதிகளில் உழன்ற அறிவினையுடைய இவனைச் சிவன் குருவாய் வந்து அவைகளின்றும் வேறுபிரித்து ஆண்டருளும் அருளை மருளினால்மறந்து கண்ணாதிகளில் நான் என்று நின்ற அகத்தைப் பிரமம் என்றும் எண்ணி, உடலாதிகளோடு மயங்கிக்கிடந்த தன்னிலைமையையும் மறந்து, அங்ஙனமான தன்னை ஆண்டருளுவதையும் மறந்து தன்னையே பிரமமென மருளினால் மயங்கி, இறைவனது கருணையையே நோக்கிக் கசிந்து உள்ளம் உருகிக்கலந்து வாழும் அத்வைத வாழ்வினை யறியாதவர்களே மேலே சொல்லிய அபேதம் பேதம் பேதாபேதம் என்ற மூன்றனுள் ஒரோஒன்றேமேற்றிப் பேசுபவராவர் என்க.

பத்திநெறி—என்றது - முருகா கடம்பா வேலா என் உடம்பிற்கு இட்ட பெயரான் ஒருவனைப் பிறர் அழைத்தவழித் தான் என்னை என வந்து நிற்றல் காணின்றோமல்லவா; இருவர் கைகோத்துநின்ற வழியும் அவருள் ஒருவனை அழைத்தால் அழைக்கப்பட்ட அவன் வருவனேயன்றி: மற்றையோன் ஏனென்று வருதல் உலகில்

இல்லாமையுரல் உடம்பின் பெயரான் அழைத்தவழி உயிர் என்னென்றல் இயல்பாம். இதனால்அவ்வுயிரானது உடம்பெனத் தானென வேற்றுமையின்றி நிற்குந்தன்மைபெறப்பட்டது. அதுபோல இறைவன் உயிர்களினிடத்து அபேதமாய் ஒட்டிநிற்பவனும் என்னும் உண்மை வெளிப்பட்டது. இவ்வுண்மையான் சிவனது கலப்பு ஆன்மாவாகிய நம்மிடத்து உள்ளதென்றுணர்ந்து. பின்னர் நம்மிடத்து இறைவன் கலந்திருப்பினும் அவன்நாமாகமாட்டான்; நாம் அவனாகமாட்டோம்; எங்ஙனமெனின்-உயிரானது உடம்போடு ஒட்டிய வழியும் - உயிர் உயிரே. உடம்பு உடம்பே. உயிர் உடம்பாய் ஒழியாது. உடம்பு உயிராகமாட்டாது. அவ்வாறாயினும் உயிர் உடம்பாயும் அதனின் வேறாயும் நிற்கும். உடம்பு அங்ஙனம் நில்லாது. அதுபோல, சிவன் சிவனே. ஆன்மா ஆன்மாவே. சிவன் ஆன்மாவாய் ஒழியான். ஆன்மா சிவனாகமாட்டாது. அவ்வாறாயினும், சிவன் ஆன்மாவாயும். ஆன்மாவின் வேறாயும் நிற்பன். ஆன்மா அங்ஙனம் நில்லான். என்றுணரவரும் இவ்வியல்பான் தன்னிலையும் சிவநிலையும் வேறுவேறு என்று தெள்ளிதின் உணர்ந்தும், அதன்பின்னர் சிவன் உயிராயும் உயிரின் வேறாயும் நிற்பன் என்றும், ஆன்மா சிவனாயும் சிவனின் வேறாயும் நிற்பவன் அல்லன் என்றும் பொருட்டன்மைபால் வெவ்வேறு இயல்புடையனென் றுணர்ந்தும், அதன்பின்னர் பொருட்டன்மையான் சிவன் வேறுபட்டிருப்பினும் கண்ணிற்குச் சூரியன் வேறாயிருப்பினும் வேறாயிருந்தே கண்ணிற் கலந்திருத்தல்போல் அச்சிவன் ஆன்மாவினிடத்து வேறாயிருப்பவனென்றும், 'அகரவுயிர் இன்றேல் அக்கரங்கள் இன்றாம்' என்னுமுறைபோல் சிவனையன்றி ஆன்மா இல்லை என்றும் உண்மை யறியவந்தும். அதன்பின்னர் முன் உடல் உயிர்போல ஆன்மாவினிடத்துச் சிவனது கலப்பு என்றும், கண் வேறாயிருப்பினும் சூரியன் வேறாயிருப்பினும் கண்ணொளியோடு சூரியனொளி கலந்து அக்கண்ணொளி நிகழச்செய்வதுபோல் ஆன்மவறிவோடு சிவன் கலந்துநின்று ஆன்மவறிவைப் பிரகாசிக்கச் செய்வதாகிய கலப்பு என்றும், கலப்பின் வேற்றுமை யறியவந்தும், அதன்பின்னர் சூரியன் கண்ணொளியிற் கலந்து ஒளியைப் பிரகாசிக்கச் செய்யினும் அக்கண்ணொளியானது பிரகாசமாத்திரமாய் நிற்குமேயன்றி அந்தப் பிரகாசத்தைக் கொண்டு தானே ஒரு பொருளை அறியுந்தன்மை யுடைத்தானதன்று. அக்கண்ணொளியில் ஆன்ம அறிவு உடனாய்நின்று அறியச்செய்ய அறியுந்தன்மையுடைத்து; அதுபோல ஆன்மவறிவைச் சிவன் பிரகாசிக்கச் செய்யினும் அவ்வான்மா ஒன்றைத் தானே அறியும் ஆற்றல் உடையதன்று. ஆகவே ஆன்மபோதத்தில் நின்மல போத சொரூபனாகிய சிவன் உடனாய் ஏற்றித்துநின்று எப்பொருளையும் அறிவித்துச் செய்வான் என்று சிவனது அத்துவிதநிலை அநுபவநிலையாகக் காணவந்தது.

இவ்வத்துவித நிலைதான் பத்திநெறியான் வருவதாகிய முத்திநெறி.

எனவே திட்டாந்தத்துக்கும் தாட்டாந்தத்துக்கும் பொருந்தாததாயும் இவ்விரண்டினும் தெளியவேண்டிய அநுபவத்திற்கு விரோதமாயும் கூறவந்த அபேதவாதத்தையும் பேத வாதத்தையும் பேதாபேத வாதத்தையும், உடலில் உயிர்போலும் கண்ணில் அருக்கன்போலும் கண்ணொளியில் ஆன்மபோதம்போலும் என்னும் உவமானத்தால் நிராகரித்து, உவமேயப்பொருள்களாகிய சிவன் சீவன் என்னும் இருபொருளும் பண்ணையும் அதினின் வேறாய் எண்ணப்படும் இசையும்போலவும் பழமும் அதனின் வேறா யெண்ணப்படும் சுவையும்போலவும் யாங்ஙனும் வியாபகமாய்ச் சிவனது திருவருள் உயிர்களில் வேற்றுமையின்றி நிற்பதாகிய அத்துவிதவுண்மையே உண்மையாமென்று அறியச்செய்வதுவே 'பத்திநெறியான் உணர்வதாகிய முத்திநெறியா' மென்க.

இங்ஙனம் கூறிவந்ததனான் அத்துவிதவுண்மையாகிய முத்திநெறி வெளிப்பட்டதேயன்றி, இம் முத்திநெறி பத்திநெறியால் வருவது என்றது வெளிப்படவில்லையெனின், அதனை யுணர்த்துதும்:— சிவபெருமான் உடலுயிர் என்றற் றொடக்கத்தனவாகக் கூறிய உவமானப்படி ஆன்மாவினிடம் கலந்திருத்தல் அவனருளானன்றி வே

றில்லை. ஆகவே அவனருளை வியந்து அவனருளையே நாடி ஞானயோகக் கிரியை சரியைகளான் செய்யப்படுவதாகிய தொண்டின் திறத்தைத் தங்கள் அன்பின் திறத்தால் எவ்வெவ்வகையான் எவ்வப் பொருளால் செய்யக் கூடுமோ அவ்வவ்வழியில் வைராக்கிய சீலராய் அயராதுசெய்வதே பக்திநெறியெனப்படும். (1) அங்ஙனம்செய்யவல்லராயின் அவர்களைச் சிவபெருமான் தானிடமாகக் கொண்டிருக்கும் க்ஷேத்திரங்களில் பிறக்கச் செய்வன். (2) யாவர்க்கும் பரமாயிருக்கும் தன்னையே பணியச் செய்வன். (3) பாடச் செய்வன் (4) சித்தத்தைத் தன்பாலே வைக்கச்செய்வன் (5) உடல் முழுதும் முழு நீறு பூசச் செய்வன் (6) முப்போதுந் திருமேனி தீண்டுவதாகிய அருச்சனையில் வைப்பன். (7) இச்சைவச் செல்வமானது இப்பிறப்பொழிந்து எப்பிறப்பெடுக்கினும் அப்பிறவிகளிலெல்லாம் நீங்காது தொடர்ந்து வரும்படி வேண்டச் செய்வன். (8) இங்ஙனங் கூறிவந்த எழுவகை நிலையும் பண்டை நற்றவமுடையார்க்கு எளிதிற் கூடப்பெறுமே யன்றி ஏனையோர்க்குக் கூடாதாகலான் அவர்களுக்கு அது கூடுமாறு கல்விப் புலமையை நிரப்பிப் பொய்யடிமை யில்லாதவராகச் செய்வன். (9) இங்ஙனங் கூறிவந்த எண்வகையும் செய்தபின்னர் தாண்டவேசன், தனது குஞ்சிதபாதத்துக் காளாக்கித் தன்னடித்தொண்டில் நீங்காதிருத்தி அவர்களிடத்தில் தான் அந்நியமாய்க் கலந்துநிற்றலாகிய அத்துவிதநிலையான் ஆண்டருளுவன்.

இவ்வத்துவித நிலையே முத்திநெறி யெனப்படும். இந்நெறியானது - இறைவனிடத்துண்டாகும் பத்திநெறியான் வருவதாக வெளிப்படலான், இந்நெறியைக் கடைப்பிடித்து, முத்திநெறியறியாத மூர்க்கரொடு கூடி பிரமமாகிய அநாதி முத்த சித்துருவாய் விளங்கும் பரசிவத்தை யிழந்து அநாதிபெத்த சித்துருவாய் மயங்குந் தன்னையே பிரமமென்று பெற்ற பழவினைகள் ஒழிந்துபோவதற்கின்றி மேன்மேல் முதிர்ந்து சித்தமலம் பெருக்கெடுத்து அவமாகிய பவக்கடலிலும் பழவினைகளிலும் அதற்குக் காரணமாகிய மலத்திலும் அநந்நியமாய்க் கலந்திருப்பதாகிய பெத்தநெறியைச் சீ என்று ஒழித்து, அப்பத்திநெறியில்நின்று மேலே சொல்லிய அம்முத்திநிலையைப் பெறுவிக்கவல்லது இப்புராணம் என்க.

திருமலைச் சருக்கச் சிறப்பு.

சிவஞான இலக்கணத்திற்குப் பெரிய இலக்கிய நூலாயும் அநுபவித்தாரோடு போகாது இனி அநுபவிக்க வேண்டுவோர்க்கும் அவ்வநுபவத்தை விளக்கும் சிவாநுபவ நூலாயும், அத்துவித நிலையைப் பத்திநெறியான் வருவிக்கு நூலாயும் உள்ள இப் புராணம் * இரண்டு காண்டங்களாகவும் பதின் மூன்று சருக்கங்களாகவும் அவற்றுள் திருமலைச் சருக்கத்தை முதலாகவும் கொண்டு விளங்குவது. திருமலைச் சருக்கம் எனவே திருமலைச் சிறப்பை முதலாக வுடையது என்பதாம். இவ்வாறே ஏனைய சருக்கங்களும் அமையும். இப் புராணத்திற்கு முதனூலாகவுள்ள திருத்தொண்டத் தொகை உலகில் நிலவச் சங்கற்பித்த இறைவன் வீற்றிருக்கும் இடமும் அதற்கு ஏதுவாக்கி அவரால் அனுப்பப்பட்ட ஆலாலசுந்தர மூர்த்திகளது இடமும் அம்மூர்த்திகளது வரலாற்றையும் அடியவர் பெருமையையும் உபமன்யுமுனிவர் கூறிய இடமும் ஆகலான் அதன் சிறப்பு முன்னரும், அத்திருத்தொண்டத் தொகைதிருவாய்மலர்ந்தருளப்பெற்ற நாடும் நகரமும்இடமும் பொன்னிநாடும் திருவாரூரும் தேவாசிரிய மண்டபமுமாகலான் அவைகளின் சிறப்பு அதன்பின்னரும், அத்திருத்தொண்டத் தொகையை இறைவன் வெளியிட எண்ணி யனுப்பிய மூர்த்திகள் பூவுலகிற் றோன்றியபின் இறைவன் வந்து தனக் கடிமையெனத் தடுத்துத் தோழனென ஆண்டபின் தன்னடியர்களுக்கு அடிமையெனக்கொண்ட அநாதிமுறைமையான சிறப்பு ஈற்றிலும் கொண்டு திருத்தொண்டத் தொகையிற் கூறப்பட்டுள்ள அடியார்கள் சிறப்பைக் கூறுவதற்குத் தோற்றுவாயாக உள்ளது இச்சருக்கம் என்க.

* அன்பில் ஞானமும் ஞானத்தில் அன்புமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அன்றியும் ஆசிரியர் இப்புராணம் இயற்றிய இடம் சிதம்பர க்ஷேத்திரமாகவிருக்க, அதன் சிறப்பைக் கூறுது திருமலை முதலியவைகளின் சிறப்பைக் கூறியது நமது விரிநூலுக்கு முதனூல் வெளிப்பட்ட சிறப்பானேயன்றி, அம்பலத்தாடுவோனுடைய ஓர் கலையினது அம்சமே திருமலையில் தினமும் தங்கி அர்த்தயாமத்தில் மீளுகின்ற தென்னும் புராணவசனத்தானும், "தில்லை மணிதிகழும் அம்பலத்தே மன்னிக்கூத்தை ஆடுவோன் புகுவதற்கு முன்னோ பின்னோ அணியாரூர் கோயிலாக்கொண்ட நாளே" என்னுந் திருத்தாண்டகத்தானும், சுந்தரமூர்த்திகள் சிதம்பரத்திற்கு வந்தபோது திருவாரூருக்குப்போ என்னாது "ஆரூரில் நம்பால் வருக" என்ற இப்புராணத்தானும், "தோற்றியதிதியே யொடுங்கி" என்ற சித்தாந்த வசனத்திற்கிணங்க இலயமடைவதும் புனருற்பவமாவதும் ஓரிடமாகக் கொள்ளக் கிடத்தலின், ஒடுங்குதற்கிடமாகிய ஆகாயத் தலமாயுள்ள சிதம்பரமும் தோன்றுதற்கிடமாகிய பிருதுவித் தலமாயுள்ள திருவாரூரும் ஒன்றே யாகலானும், இப்புராணத்திற்கு முதனூல் மூலாதாரத் தலமாகிய திருவாரூரில் தொகையாகத் தோன்றி இருதய புண்டரீகத் தலமாகிய சிதம்பரத்தில் விரிந்து முடிந்ததினானும் இவ்விரண்டுதலங்களும் ஒன்றேயெனப் பெறப்படலானும் திருமலைக்கும்சிதம்பரத்திற்கும் திருவாரூருக்கும் கூறிய சிறப்பெல்லாம் ஒன்றேயாகலான் என்க.

தடுத்தாட்கொண்ட புராணச் சிறப்பு.

தடுத்தாட்கொண்ட புராணம் என்பது இறைவன் சுந்தரமூர்த்திகளைத் தடுத்து ஆட்கொண்ட முறையைக் கூறுவது என்பதாம். அம்மூர்த்திகள்தான் இப்புராணத்திற்குத் தலைவராய் உள்ளவர். இவர் வசித்த இடம் ஸ்ரீ கயிலாயம் என்று திருமலைச்சிறப்பிலும், இவரது திருவுருவம் சிவபெருமானுடைய பிரதிபிம்பம் என்று சிவரகஸ்யத்திலும், ஸ்காந்த புராணத்திலும் சொல்லப்பட்டு இவரது திருநாமம் திருமால் முதலிய தேவர்களுடைய உருவங்களெல்லாம் ஒளிகுன்றி மாறுபடவும் உடல் நடுங்கவும்எங்கும் பரந்தெழுந்த விடத்தைத்திரட்டித்தமது திருக்கரத்தில் ஏந்திக் கொண்டுவந்து சிவபெருமான் திருக்கரத்தில் கொடுத்த காலத்தில், திருவுருவம் அவ்வாலத்தால் அழகுகெடாமல் ஒளிபெற்று சுடச்சுடப் பொன்போல் பிரகாசிக்க ஆலால சுந்தர! என்று இறைவன் அழைத்த காரணத்தால் ஆலாலசுந்தரர் என வழங்கப்பட்டுள்ளது.

இங்ஙனங்கூறிவந்த காரணத்தை நோக்குங்கால் இவரை இறைவன் தடுத்து ஆட்கொள்ளவேண்டிய காரணமேயில்லை. ஏனெனில், இவர் ஏனைய தேவராதியரைப் போலாவது மானுடரைப்போலாவது இருப்பாராயின் அஞ்ஞான வசப்பட்டு அறிவறியாமையோடும் காமக்குரோத முதலிய தீக்குணங்களோடும் அவற்றிற்குரிய செயல்களோடும் கூடியிருப்பவரேயாவர். அதனால் இறைவன் இவரைத் தடுத்து ஆட்கொள்ள முயலவேண்டும்.

அதுவேயுமன்றி அவர் வசிக்கும் இடம் ஸ்ரீ கயிலாயம். அது இந்திரன் பிரமன் திருமால் முதலிய தேவர்கள் வசிக்கும் இடம்போலன்று. அவ்விடங்களெல்லாம் அராகம் துவேஷம் காமம் குரோதம் உலோபம் முதலாகச் சொல்லப்பட்ட தீக்குணங்களுக்கு இடமாயும், அக்குணம் உடையவர்களே வாழும் இடமாயும், அரக்கர்களால் பன்முறையும் கொள்ளைகொண்டு அழித்து ஆளப்பட்டதாயும், உலகம் அழிவுறுங்காலத்து அழிந்து பின் தோன்றுங்காலத்துத் தோன்றுவதாயும், பிறப்பிறப்பில் மாறிமாறிச் சுழலப்பண்ணுவதாகிய பசுபுண்ணியங்களைச் செய்பவரால் அடையப்படுவதாயும், அவர்களுக்குவேண்டிய அழியும் இயல்பினையுடைய செல்வப்பொருளை உடையதாயும், மாயாமலசம்பந்தமாகிய உடலுக்கு நரைதிரைமூப்பற்றிருப்பதாகிய ஓர் சுகத்தையும் பசிப்பிணியினால் வருந்துதற்கு இடஞ்செய்யாத அமிர்தமாகிய ஓர் வாயுணவினையும்

உடலால் அனுபவிக்கப்படுவதாகிய ஓர் சிற்றின்பப் பெருக்கையும் ஆடையணி முதலிய வற்றால் அலங்கரிக்கப்பட்டு வாழ்தலாகிய ஓர் வாழ்வினையும் உடையதாயும் உள்ளவை.

ஆனால், கயிலாயமோ அவைபோலன்று. மற்றென்னெனின் பசித்து உண்டு பின்னும் பசிப்பானை யொப்பதாகிய அழிவுடைய தவத்தைச் செய்யாது, என்றும் அழிவினை யறியாது மேன்மேல் முறுகி வளர்வதாகிய தவங்களை (சரியை கிரியை யோகங்களை)ச் செய்து சிவலோகத்தில் வாழவும் சிவசமீபத்தில் இருக்கவும் சிவரூபத்தைப் பெறவுமான மெய்யறிவுடையவர்கள் வாழும் இடமாயும், பல * நற் குணங்கள் விளைகின்ற இடமாயும் அவைகளை உடையவர்களே வாழும்இடமாயும், ஏனைய உலகங்களைப் போல் தோற்ற நாசங்கள் அடைதலை அறியாத இடமாயும், பதி புண்ணியம் உடையவரால் அடையப்படும் இடமாயும், அவர்களுக்கு வேண்டிய அழிவிலா அருட்செல்வங்களையும் ஆணவாதி மலக் குற்றங்கணீங்கிய உயிர்களுக்கு அமிர்தமென்னும் உணவையும் வேண்டாத நித்தியமாயுள்ள திவ்யசரீரத்தையும் அச்சரீரத்தால் அனுபவிக்கப் படுவதாகிய பேரின்பப் பெருக்கையும் சிவமாந்தன்மைப் பெருவாழ்வையும் கொடுக்கும் இடமாயும் உள்ளது.

இடத்தின் இலக்கணம் இங்ஙனம் இருக்க, இவரது திருவுருவமோ சிவனது பிரதிபிம்பம். சிவனது திருமேனியோ அனாதிமலமுத்தமாய் நித்த சுத்த புத்தமாய் சச்சிதானந்தமாய்ப் பிரகாசிக்கும் இயல்பினை யுடையது. ஆகவே, இவரை இறைவன் தடுத்தாளவேண்டிய காரணம் இல்லை என்பதே நிச்சய மென்க.

ஆனால் இவரைத் தடுத்தாண்டதென்பது மெய்யோ பொய்யோ எனின்! மெய்யே. ஏங்ஙனமெனின், ஆணவமலமென்னும் பரவையுட் படிந்து, கன்ம மலம் என்னும் சங்கிலியாற் பிணிப்புண்டு, மாயாமலத்தில் மயங்கிக் கிடக்கும் ஆன்மாக்களை அம்மயக்கினையொழித்து கன்மமலப் பிணி அவிழ்த்து ஆணவம் என்னுங் கடலைக் கடப்பித்து, அவ்வான்மாக்களுக்கு வாக்குமனாதீதமாய் நிற்கும் முதற்கடவுளாகியபரசிவன் கோசரமாம்படிச் செய்யவல்ல பதிஞானத்தினை உணருமுறையான் உணர்த்தி, அம்முறையானே ஆன்ம சுத்தியைச்செய்யவல்ல ஸ்ரீ பஞ்சாக்கரத்தை அனுக்கிரகித்து, "அஞ்செழுத்துமே அம்மையப்பர்தமைக் காட்டுதலால். அஞ்செழுத்தை ஆருசப் பெற்றறிந்து" என்று திருக்களிற்றுப்படியார் கூறியபடி அப்பரமேஸ்வரனோடு ஏகமாகி யான் எனதென்னும் செருக்கற்று, தன் செய்திக்கு முதல்வன் செய்தி இன்றியமையாத அவ்வுண்மையை உணர்ந்து, அவன் அருள்வழி வழுவாது நிற்பதாகிய இறைபணியில் நின்று, பாசக்ஷயம் பண்ணுவித்து அது உண்டான பின்னர்,—விளக்கொளி கண்ணொளியோடு கலந்து அக் கண்ணொளி பொருளின் உருவத்தினுங் கலந்தாலன்றிக் கண்ணானது அவ் வுருவத்தைக் காண்டல் இல்லாத தன்மையைப் போல, அறிவிக்க அறியும் இயல்பினவாய இவ்வான்மாக்களும், முதல்வன் உணர்வு தம்மோடு கலந்து (நின்று தம்மோடு கூடச் சென்று) விஷயத்தினுங் கலந்து நின்றால் அறிவு விளங்கி அவ்விடயத்தினை அறியும் இயல்பினை உடையன வன்றித் தாமே தம்மறிவினால் தனித்து அறியமாட்டாது; ஆகலான், உயிர்களுக்கு அறிவு விளங்குதலுக்கு மாத்திரமே யல்லாமல் காணப்படும் விடயத்தைப் பற்றுதற்கண்ணும் முதல்வன் உடனின்று அறிதல் ஒரு தலைபான் வேண்டப்படுதலான் என்னும் அவ்வத்துவித நிலையை மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பானே, அம் முதல்வன் திருவருளாகிய சிவானந்தானுபூதியில் தலைப்படுத்தி, அவர்கள் அவ் வனுபூதி நீங்கா திருத்தற் பொருட்டும் அவ்வனுபூதியில் சிவானந்தம் மேன் மேல் வளர்தற் பொருட்டும் தமது இச்சா ஞானக் கிரியைகளை அரன் ஆலயத்தினிடத்தும், அரன் அடியாரிடத்தும், அரன்

---

* திருக்குறளில் இல்லற வியலில் 'அன்புடைமை முதலாகவுள்ள கசு-ம் துறவற வியலில் அருளுடைமை முதலாகவுள்ள கஅ-ம் ஆகிய நற்குணங்கள் முதலியன.

வேடத்தினிடத்தும் வழிபட்டு வாழும் வாழ்வில் வாழுமாறு, தடுக்கும் அருளும் ஆட் கொள்ளும் அருளும் அருள் செய்யும் அருளும் இறைவன் செய்வதற்கு, மனத்தானும் வாக்கானும் செயலானும் அருளைத் தடுப்பனவான செயல்கள் சுந்தரமூர்த்திகள்பால் நிகழ்ந்தாலன்றித் தடுப்பதைத் தடுக்கும் அருளும் ஆட்படாமையை விலக்கி ஆட் கொள்ளும் அருளும், அருள்பெறாவகையைப் போக்கி அருள் பெறும் வகையைச் செய்வதுமான அருட்டிறம் வெளிப்படாதாகலான் மூக்கரணங்களாலும் தடுப்பன வற்றை மூர்த்திகள் செய்ய, மூர்த்திநாதன் மூக்கரணங்களானும் தடுப்பனவற்றைத் தடுத்துத் தடுக்கக் கூடாத அருளையே செய்தனன் என்க.

அவ்வாறு செய்யவே, இறைவன் மூர்த்திகள்பால் ஆன்மாக்களிடத்து நிகழும் குணங்களைக் காட்டித் தான் அக்குணங்களைப் போக்கி ஆன்மாக்களுக்கு, வலிந்து அருள் செய்யுந்திறத்தைக் காட்டினர் என்க. இதனை இவர்சரிதம் முற்றினுங்கொள்க.

இதனால் சுந்தர மூர்த்திகள் - நீ அடிமை என்று இறைவன் சொன்னதைத் தடுக் கும் தன்மையுடைய மானுடரல்லர் எனவும், இறைவனுக் காட்படா திருந்தவர் அன் றெனவும், அவருக்கு இறைவன் அருள் செயாது இருந்தவரன்று எனவும், அறிதல் வேண்டும். ஏனெனின், முன்னமே இறைவனுக்கு ஆட்பட்டிருந்தவரும் அவனது அருள் பெற்றுடையவரும் ஆகலான்.

இனி * இச்சைவசமயாசாரிய மூர்த்திகளைத் தடுத்தது யாதுகாரணம் பற்றி யெனின், ஆன்மாக்கள் தடுக்குந் தன்மையினின்று நீங்கி ஆட்படுந் தன்மையைப் பெற்று அருள் பெறுந் தன்மையை யடையவேயாம்.

1. நூல்வழக்கால் பாசச்செயலைத் தடுத்து, அருள்வழக்கால் ஆன்மாக்களை ஆட் கொண்டு, அன்புடை வழக்கால் அடியருடன் கூட்டி வாழச்செய்தலாகிய சன்மார்க்க நெறியை யாவரும் உணர்ந்துய்யுமாறு, பரமகருணாநிதியாகிய இறைவன் தனது திவ்ய தேஜோரூப சுந்தரமூர்த்தியைக் கைலாயத்திலிருந்து பூலோகத்துக்குப் போகவிடுத்து உலவச்செய்ய, அம்மூர்த்தி அங்ஙனமே இறைவனால் தடுத்தாளப்பெற்று, திருவாரூரில் தம்பிரான் தோழராய் என்றும் மணவாளராய் இருக்க அருள்பெற்று, பின்னர்த் திருத் தொண்டத் தொகையையோதி தேவாசிரிய மண்டபத்தில் அடியருடன்கூடி பெரு மணச்சீருடன் விளங்கப் பெற்ற வைபவத்தைக் கூறுதலின்— தடுத்தாட்கொண்ட புராணம்.

2. ஆன்மாவைப் பாசம்வந்து தாக்கவொட்டாமலும் ஆன்மா பாசத்துடன் விரவவொட்டாமலும் இறைவன் தடுக்க, தடுத்த பாசமெல்லாம் தமது கிரியை வெளிப்படுதற்குரிய பொருள்களாகவும், ஆன்மாக்களெல்லாம் ஞானம் வெளிப்படு தற்குரிய பொருள்களாகவும் ஆட்கொள்ளு முறைமையைக் கூறுதலின்—தடுத்தாட் கொண்ட புராணம்.

3. பாசம் கிரியாரூபமாகவும், பசு ஞானசொரூபமாகவும் இருத்தலினால் இறை வன் ஆன்மாவின்கிரியையில் தனதுகிரியையையும், ஞானத்தில் தனதுஞானத்தையும்,

* பதி பசு பாசம் என்னு முப்பொருளையு முணரவருஞ் சமயம் சைவசமய மென வும் தானும் ஆச்ரயித்துப்பிறரையும் ஆச்ரயிக்கச்செய்பவர் ஆசாரியர் எனவுங்கொள்க. இவர் (1) பாசத்தைத் தடுத்து (2) ஆன்மாவை ஆட்கொண்டு (3) அவ்வான்மாவைச் சிவமாக்குகின்ற முறைமையும் (4) சிவமாக்கிய பின்னர் தடுத்த பாசத்தைச் சிவகர ணமாக்கு (சிவனுக்குரிய வழிபாட்டில் வழிபடச்செய்) கின்ற முறைமையும், (5) அங் ஙனம் பசுகரணங்கள் சிவகரணங்களாகி வழிபாட்டில் முயலத்தலைப்படுங்காலத்தில் ஆன்மாவை அருள்வசப்படுத்தி அடிமை குலையாமல் நிற்கச்செய்யும் முறைமையும் அங்ஙனம் (6) அடிமையான ஆன்மாக்களுக்குத் தற்சொரூபத்தை விளக்கி விளங் கிய அச்சிவத்தால் அருள்தோன்றுமாறு செய்யு முறைமையும் உணர்த்துகின்றவர்.

வெளிப்படுத்துகின்றான். எனவே தடுத்தற்குரிய பாசத்திற்கும் ஆள்வதற்குரிய ஆன்மாவுக்கும் அருள் செய்யும் முறைமையைக் கூறுதலின், பாசம் அருள்வசப்படுதற்குமாட்டாமையைச் செய்யுமுறைமையையும், பசு-ஆட்படுவதற்கு மாட்டாமைச் செய்யும்முறைமையையும், இறைவன் அவ்விரண்டுமொட்டாமையை எவ்வளவு செய்யினும் அவ்விரண்டையும் விடாதுகொள்ளும் முறைமையையும், தடுத்துக்கொண்ட பாசத்திற்கு அன்பை விளைவித்தும், அடிமைகொண்ட ஆன்மாவுக்கு அருளைவிளைவித்தும் அவ்விரண்டையும் ஆளும்முறைமையையும், பின்னர் பாசஞானத்தில் திருவருளும் பசுஞானத்தில் இறைவனுங்கலந்து நிற்கின்ற முறைமையையும், அதன்பின் இறைவனை நினைப்பிப்பதை மறைப்பித்த பாசத்தை மறைத்தலைச் செய்யவொட்டாது நினைப்பித்தும் ஆட்படுதலைமறந்த ஆன்மாவை ஆட்படுத்தி அருளில் வாழவும் செய்யு முறைமையையும் உணர்த்தலின்—தடுத்தாட்கொண்ட புராணம்.

இவற்றை (1) "பாதம் பணிவார்கள் பெறுபண்டம் மதுபணியா யாதன் பொருளானே னறிவில்லேன்—" (2) "ஊனா யுயிரானா யுடலானா யுலகானாய்—" (3) "தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன கடனே—" (4) "—எத்தான் மறவாதே நினைக்கின்றேன்—" (5) "செடித்தவஞ் செய்வார் சென்றுழிச் செல்லேன் தீவினைசெற்றிடுமென்று அடித்தவமல்லாலாரையு மறியே னவது மறிவர்." (6) "மறிசேர்கையினனே * * * குறியே என்னுடைய குருவேயுன் குற்றேவல் செய்வேன் நெறியே நின்னடியார் நினைக்கும் திருக்காளத்தியுள் அறிவே" "வழித்தலைப் படுவான் முயல்கின்றேன் உன்னைப் போலென்னைப் பாவிக்க மாட்டேன் * * * அருளாயின செய்யாய்—" என வரும் இம்மூர்த்திகளது தேவாரங்களா னறிக.

அன்றியும், பாசம் இறைவனது கிரியைக்கிடமாதலால் அதன்கண் கிரியையைச் செலுத்தி அக்கிரியையால் ஆன்மஞானத்தை விளக்கி அது விளங்கிய பின்னர் அந்த ஆன்மஞானத்தில் சிவஞானத்தை விளக்கிப் பதியை நேயப் பொருளாக விளக்குவர். அதன் பின்னர் அதனால் வரும் பயன் இதுவென வுணர்த்துவர். அஃதாவது பதியை நினைக்கவும வாழ்த்தவும் அவனது ஒழுக்கநெறியில் நிற்கவும் செய்வர்.

அங்ஙனம் செய்வித்தலால் மும்மல வழுக்கும் ஒழியச் சிவமாக்குவர். எனவே ஐம்புலவழியிற் செல்லும் அவாவைத்தடுத்து ஒருவழிப்படுத்தித் தன்வயத்தனாதல் முதலிய எண்குணங்களையும் எண்ணியெண்ணி வாழ்த்தச் செய்து அதனால் வரம்பிலின்பமுடையவனாக்கி இருதயமலரில் இறைவனை நினைத்து நிற்கச்செய்வர்.

இவற்றால் மும்மலம் ஒழியுமாறு எங்ஙனமெனின்,—அவாவைத் தடுத்தலால், மாயாமலமும். வாழ்த்தலால்-கன்மமலமும், நினைத்தலால் - ஆணவமலமும் நிவர்த்தியாம்.

எண்குணங்களால் வாழ்த்துதலாவது:— (1) நீ தன்வயத்த னெனும் குணமுடையவனாய் - என்னை மாயாவசம் ஆக்கினாய், (2) நீ தூயவுடம்பினனாயிருந்து - என்னை மல வுடம்பினனாக்கினாய, (3) நீ இயற்கை யுணர்வினனா யிருந்து - என்னைச் செயற்கை யுணர்வினனாக்கினாய். (4) நீ முற்றுணர்வினனாயிருந்து - என்னைச் சுட்டுணர்வினனாக்கினாய், (5) நீ இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினவனாயிருந்து - இயல்பாகவே பாசங்களில் நின்றிருந்த என்னை வேறாக நீங்கி யிருக்கச்செய்தாய், (6) நீ பேரருளுடையவனாகவே யிருந்து - என்னை அருளுடையவனாகச், செய்தாய், (7) நீ முடிவிலாற்றலுடையவனாயிருந்து - எனக்கு அருளுடைமையில் நிற்கும் ஆற்றலைத்தந்தாய் (8) நீ வரம்பிலின்பமுடையவனாயிருந்து - என்னை வரம்பில்லாத துன்பத்தினின்றும் நீக்கினாய் என்று வாழ்த்தும் வகையினைத் தந்தாயென (இறைவன் படிப்படியாய் செய்யும் உபகாரத்தை நினைந்து) வாழ்த்தல்.

சிவமயம்.

திருமலைச் சருக்கம்.

அட்டவணை.



அறிவிப்பு.

திருமலைச் சருக்கம்...	2—4—0
தில்லைவாழந்தணர் சருக்கம்	2—0—0
இலைமலிந்த சருக்கம்	2—8—0
ஷை மூன்று சருக்கம் ஒன்று சேர்ந்தது	6—8—0
ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் சரித்திர உண்மையை விளக்கும் ஆசார்ய பிரபாவம்	2—0—0
திருவுந்தியாருக்குத் திருக்களிற்றுப் பாடியாரைப்பொருத்திக் காட்டியுள்ள விசேடவுரை ...	2—0—0

இப் பெரிய புராண வுரைக்கு ஈற்றிற் கண்ட இவ்விருநூலும் அவசியம் வேண்டும்.

திருமலைச் சருக்கத்தில் ஆங்காங்கு விசேடங்களைப் பார்க்கக் குறிப்பிட்டிருக்கின்ற ஆசார்ய பிரபாவம் இந்நூலே. பெரிய புராண உரையுடன் வாங்குகின்றவர்களுக்கு இவ்விருநூலின் விலை. ... ... 3—0—0

கா. ஏகாம்பரம் பிள்ளை,
19, ரண்டால்ஸ் ரோட்,
வேப்பேரி, சென்னை.

௧

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஜ்ஞானசம்பந்த குருப்யோ நம:

திருத்தொண்டர் புராணம்

என்னும்

பெரியபுராணம்.

(முதற்காண்டம்.)

பாயிரம்.

நடராஜமூர்த்தி வணக்கம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

(என்பது)—பொன்னம்பலமாகிய திருவம்பலத்தின்கண் நடனமூர்த்தியாய் நின்றருளும் இறைவன் அலகில் சோதியன். அதனால், உலகெல்லாம் உணர்ந்தோதற் கரியவன். அரியவனாயினும், அவ்விறைவன் நிலவுலாவிய நீர்மலிவேணியனாய்க் காண்டலின் அவனது சிலம்பணிந்த மலரடியை நாம் வாழ்த்தி வணங்குவாம் என்பதாம்.

திருவம்பலம் என்பது - பரமாகாசம் என்க. எனவே, ஆகாசம், ஏனைய நான்கு பூதங்களுக்கும் அவற்றின் காரியங்களுக்கும் தாரகமாய், வியாபகப்பொருளாய், வெளியிடமாயிருப்பதுபோல், அம்பலம் - பரசிவத்துக்கும் பரசிவபேதங்களுக்கும் ஆதாரமாய் வியாபகப்பொருளாய், வெளியிடமாயிருப்பதாலும், பூதசம்பந்தமாயுள்ள ஆகாசம் சடரூபமாய்ச் சடரூபங்களுக்குத் தாரகமாய், அவை தத்தம்தொழில் புரிய இடங்கொடுத்திருப்பதுபோல், அம்பலம் - சித்பரவியோமமாய், சிவசொரூபத்துக்குத் தாரகமாய், அச்சொரூபம் பஞ்சகிருத்தியங்களைச்செய்ய இடங்கொடுத்திருப்பதாலும், முத்தான்மாக்கள் புகுந்தொடுங்குதற்கு இடமாயுள்ள பலப்பிரயோஜன ரூபமாயிருப்பதாலும் அம்பலம் என்றமைதென்க.

அலகில்சோதியன் என்பது - ஞானரூபன். எனவே, இருளை அப்பிரகாசப்படுத்தும் சூரியப்பிரகாசம்போல், ஞானம் அஞ்ஞானவிருளை அப்பிரகாசப்படுத்தும் ஆற்றலையுடைய சோதியாயும், சூரியப்பிரகாசமானது உதிப்பதும் இருப்பதும் போவதுமாகிய அளவினையுடையதாகலின் அதுபோ லல்லாமல், ஞானம் ஆதிமத்தியாந்த மற்றதாயும், அஃதாவது இடையேவந்து கலப்பதென்பதின்றி அநாதியே யுள்ளதும், முத்தி என்னும் எல்லையையடைந்தகாலத்து நீங்கியுள்ளதுமான நிகளமாம் ஆணவமூலமலத்தை

அகல்விக்கவல்ல அளவிறந்த பிரகாசத்தை யுடையதுமாகிய அந்த மெய்ஞ்ஞானசொரூபத்தையே தனது திருமேனியாகக்கொண்டிருத்தலால் அலகில்சோதியன் என்றதென்க.

உலகேலாமுணர்ந் தோதற்கரியவன் என்பது-அறிவதற்கும் சொல்வதற்கும் கூடாதவன் என்க. எனவே, ஆன்மாக்களுட்சிலர் சுத்தமாயையால் ஆக்கப்பட்ட தநுகரணபுவனபோகங்களையுடைய ஆன்மவர்க்கங்களாயும், அசுத்தமாயையால்ஆக்கப்பட்ட தநுகரணபுவனபோகங்களையுடைய ஆன்மவர்க்கங்களாயும், பிரகிருதிமாயையால் ஆக்கப்பட்ட தநுகரணபுவன போகங்களையுடைய ஆன்மவர்க்கங்களாயும் உள்ளவர். இவ்வான்மாக்களுடைய ஞானமும் கிரியையும் ஒருமலத்தானும் இருமலத்தானும் மும்மலத்தானும் கவரப்பட்டுள்ளனவாயிருத்தலால், (அஃதாவது, அறியுந்தன்மையுடைய ஞானமும், சொல்லுஞ் செயலுடைய கிரியையும் மலசம்பந்தப்பட்டுள்ளனவாயிருத்தலால்) உணர்ந்தோதற்கரியவன் என்றதென்க.

நிலவுலாவிய நீர்மலிவேணியன் என்பது - அலகில்சோதியாயும், உலகெலாமுணர்ந்தோதற்கரியதாயும் உள்ள நிஷ்களத்திருமேனியோடு சகளத்திருமேனியையும் உடையவன் என்க. எனவே, நிஷ்களத்திருமேனியால் ஆக்கப்படும் அருட்பந்தத்தில் ஆன்மாக்களைப் பரவச்செய்தலாகிய சிவானந்தப்பெருக்கு மருட்பந்தமாகிய மலபந்தம் நீங்கினாலன்றி அவ்வானந்தப்பெருக்குப் பரவாதாகலான், அதுபரவுமாறு அப்பந்தத்தைநீக்குவது சகளத்திருமேனியா யிருத்தலால், நிலவுலாவிய நீர்மலிவேணியனாயினன் என்றதென்க.

மலர்சிலம்படி என்பது - வேதச்சிலம்பொலிக்கும் அருளுருவாகிய மலரடி என்க. எனவே, மருட்பந்தமாகிய மலபந்தத்தை நீக்குவதும், அருட்பந்தத்தில் பரவச்செய்வதும், அது கூட்டுஞ்சிவானந்தமும் அருள் அடியா (முதலா)யிருத்தலாலும், அவ்வுண்மைதோன்றவே வேதவொலி சிலம்பொலிபோல் அவ்வடியில் நீங்காதிருந்து ஒலித்துக்கொண்டிருத்தலாலும், மலர்சிலம்படி என்றதென்க.

வாழ்த்திவணங்துவாம் என்பது-அடியுருவாயிருக்கின்ற அருளைவாழ்த்துவதும், அருளுருவாயிருக்கின்ற அடியை வணங்குவதுமே சிவனருள்கூடுவதற்குவாயிலாயிருத்தலால் வாழ்த்திவணங்துவாம் என்றதென்க.

இதனால் அம்பலம் என்றது - சிதாகாசமெனப்படும் சித்பரவியோமத்தையும், அலகில்சோதியன் என்றது - மெய்ஞ்ஞானசொரூபத்தையும், உலகெலாம் என்றது - மூவகை ஆன்மாக்களையும், உணர்ந்தோதற்கரியவன் என்றது - அவ்வான்மாக்களுடைய ஞானக்கிரியைகளைச் சுட்டிக்காட்டும் மொழிகளையும், நிலவு என்றது - மலமாகியகளங்கம் மெல்லமெல்லவொழிந்து முத்திநிலைகூடிய ஆன்மாக்களுடைய நிலையைக்காட்டும் ஓர் அடையாளப்பொருளையும், நீர்மலி (கங்கை) என்றது - முத்திநிலைவரப்பெற்ற ஆன்மாக்களுள்ளத்தில் பரவிக்கிடக்கும் சிவானந்தப்பெருக்கு நிற்குநிலையைக்காட்டும் ஓர் அடையாளப்பொருளையும், வேணி என்றது - சராசரமாய் விரிந்துகிடக்கும் சர்வான்மாக்களுக்கும் தான் இடமாய்நின்று அடக்கியாளும் தன்மையைக்காட்டும் ஓர் அடையாளப்பொருளையும், சிலம்பு என்றது - இவ்வுண்மைகளைமுறையே ஓசையெலாமற்ற சிவயோகநிலையில் வேதமானது வேதாந்தமாகிய சிற்றொலி (சிலம்பொலி)யாய் உணர்த்துந்தன்மையைக்காட்டும் ஓர் அடையாளப்பொருளையும், மலரடி என்றது நிஷ்களசொரூபத்தியானத்தில் விளையும் அருளையும்,தடத்தசொரூப வழிபாட்டில் விளையும் அன்பையும் விளைவிக்கும் ஓர் அடையாளப்பொருளையும், வாழ்த்திவணங்துவாம் என்றது-மேற்கூறிய இருவகைப்பொருள்களில் சுட்டுமொழியுட்பட்ட பொருள்களை உள்ளுந்தோறும் வாழ்த்த இச்சையுண்டாமாகலான், அது முற்றுப்பெறச் சொரூபத்திருமேனியையும், அடையாளப்பொருள்களை உள்ளுந்தோறும் வணங்க இச்சையுண்டாமாகலான், அது முற்றுப்பெறத் தடத்தத்திருமேனியையும் ஆடுவான்உடையான் என்னும்உண்மையையுணர்த்தியவாறுமென்க. அன்றியும்ஆடுவான் என்றதன் சிறப்பொன்றையே கூறியதுமாம்.

அம்பலத்தாடும் இறைவனை - உலகெலாம் உணர்ந்தோதற்கரிய நிஷ்களத்திரு மேனியும், நிலவுலாவிய நீர்மலி வேணியையுடைய சகளத்திருமேனியும் உடைய பரசிவம் என்று குறித்தது மாமென்க.

இங்ஙனங் குறித்தவையெல்லாம் யாதுநோக்கியெனின்:—கேட்டலாகிய சிரவண காலத்து-உணர்ந்தோதற்கரிய நிஷ்களசொரூப தரிசனமும், சிந்தித்தலாகிய மனனகால த்து நீர்மலி வேணியோடுகூடிய சகளசொரூப தரிசனமும், தெளிதலாகிய நிதித்யா சனகாலத்து அலகில் சோதியாகிய ஞானசொரூப தரிசனமும், நிட்டையாகிய சமாதி காலத்துச் சிற்பரவியோமத்தில் நடிக்கும் கிரியாசொரூபதரிசனமுந்தந்து, அந்நால்வகைத் தரிசனத்தினால் தம்மைத் தரிசனஞ்செய்யும் ஆன்மாக்களாகிய காண்போர்களையும், தரி சனத்தைக் காட்டுவான் எனப்படும் நடராஜமூர்த்தியாகிய தம்மையும், தம்மால் காணப் படுவதாகிய ஞேயப்பொருளையும், * இழந்துபோதலொழிந்து † சிவமேசிவமாகச், சிவ மாகியே யிருப்பதாகிய ஆனந்தவெல்லையில் இருத்தித், தமது தனிப்பெருங்கூத்தில் பெருகிவரும் பேரின்பவெள்ளத்துள், காண்பவர்களாகிய ஆன்மாக்களைக் காட்டுவானுகிய் தாம், திளைத்திருக்கச்செய்ய, அத்திளைப்பில் அவ்வான்மாக்களால் காணப்படும் சிவமாகிய ‡ ஞேயப்பொருளில், மாறாதமகிழ்ச்சியுள் மலர்ந்திருக்கச் செய்வனென்னும் உண்மையும் உணர்த்தற்காமென்க. அல்லதூஉம், உலகெலாம் உணர்ந்தோதற்கரியவ னென்றதனால்- நிஷ்களத்திருமேனியின் இலக்கணத்தையும், நிலவுலாவிய நீர்மலிவேணியன் என்றத னால்-சகளத்திருமேனியின் இலக்கணத்தையும், அலகில்சோதியன் அம்பலத்தாடுவான் என்றதனால்-நிஷ்களசகளத் திருமேனியின் இலக்கணத்தையும் உணர்த்தியவாறுமாம்.

எங்ஙனமெனின், நடராஜனுகிய இறைவன் இயல்பாகவே பாசங்களினின்று நீங் கிய தூயவுடம்பினனுகலானும், இயற்கையுணர்வும் முற்றுமுணர்வும் உடையவனுகலா னும், அவ்விறைவனை இயல்பாகவே பாசங்களினின்று நீங்காதவர்களும், அருளுடம்பாகிய தூயவுடம்பற்ற மாயாவுருவங்களுடையவர்களும், செயற்கையுணர்வும் சிற்றுணர்வும் ஆகிய உணர்வினையுடையவர்களுமே ஆன்மாக்களாதலால் அவ்வான்மாக்கள் எங்ஙனம் உணர்ந்தோதற்குரியவராவர். ஆகவே உலகெலாமுணர்ந்தோதற்கரியவனுயினன். இது நிஷ்களத்திருமேனியி னிலக்கணத்தைக் குறித்தது.

§ "அநாதி சிவனுடைமையால் எவையும் ஆங்கே, அநாதியெனப் பெற்ற அணுவை,- அநாதியே, ஆர்த்ததுயர்அகல அம்பிகையோடு எவ்விடத்தும், காத்தல் அவன் கடனே காண்." என்ற திருவாக்கின்படி ஆன்மாக்கள் தம்மை யுணர்ந்தோதற்கரியவராயினும் அவ்வான்மாக்களை இறைவன் உடைமையாகப் பெற்றுள்ளானுகலான் அவர்கள் தம்மை யுணர்ந்தோதும்வண்ணம் பேரருளுடைமையால் நிலவுலாவிய நீர்மலிவேணியனுயினன். இது சகளத்திருமேனியி னிலக்கணத்தைக்குறித்தது.

பேரருளுடைமையால் அருளுருக்கொண்டது:—ஆன்மாக்கள் தம்மையுணர்தற்கும் ஓதற்குமேயாகலின், அவர்களுக்கு அவ்விரண்டுங் கூடுமாறு தமது முடிவிலாற்ற லுடை மையால் பந்தமாகிய அஞ்ஞானம் ஊனமாம்வண்ணம் ஊனநடனமும், ஞானம் வளரும் வண்ணம் ஞானநடனமும் செய்தருளுகின்றனுகையால், அம்பலத்தாடுவானுயினன். அந்நடனத்தால் ஊனம் ஒழிந்து, ஞானம் வளர்ந்தபின்னர், வரம்பிலின்பமுடைய சிவா

---

* 'இழந்துபோதல் ஒழிந்து' என்றதை, வினவெண்பா. "காண்பானுங் காட்டுவதும் காண்பதுவும் நீத்தண்மை காண்பார்கள் நன்முத்தி காணுர்கள்" என்றதனுற்காண்க. † 'சிவமேசிவமாக' என்றதைத் திருக்களிற்றுப்படியார் "சிவமே சிவமாக யான்நினைந்தாற் போலச்சிவமாகியே யிருப்பது" என்றதனுற்காண்க. ‡ ஞேயம்-சிவம். § திருக்களிற்றுப் படியார்.

னந்தத்துக்கு எல்லையாகிய குஞ்சிதபாதத்தி லிருத்தி, எல்லையில்லாத அகண்டாகார சொரூபத்தில் மாறாது மகிழ்ந்து, தன்வயத்தராகவே யிருக்கச்செய்கின்றானாகையால் அலகில்சோதியன் ஆயினனென்க.

ஓர் திருமேனியே கொண்டு, ஓர்திருவடியால் ஊனநடனமும், ஓர் திருவடியால் ஞானநடனமும், செய்தருளுகின்றபடியால் இது-சகளநிஷ்களத்திருமேனியின் இலக்கணத்தைக் குறித்தது.

எனவே, நடனஞ்செய்தல்-சகளமும், அந்நடனத்தால் பந்தமொழித்து அகண்டாகார சொரூபத்தில் மாறாதுமகிழ்ந்து தன்வயத்தராகச் செய்தல் நிஷ்களமும் ஆகலின், அலகில்சோதியன் அம்பலத்தாடுவா னென்ன ஒருமுடிபாக்கி சகளநிஷ்களத் திருமேனியாகக் கூறியதென்க.

இனிச் சேக்கிழார்பெருமான் நடராஜப்பெருமானை வணங்கி வாழ்த்தி, எம்பெருமானே! அன்று திருவாரூரின்கண் தொண்டர்சீர்பரவத் திருவுளங்கொண்ட உமதுந்தோழராகிய வன்றொண்டப் பெருமானார்க்குத், 'தில்லைவாழந்தணர்' என ஓரடி யெடுத்துக் கொடுத்தருளினீர். அப்பெருமானார் அறிவிற்பெரியராதலின் அவ்வடியாகிய அருளமுதலாகக்கொண்டு திருத்தொண்டத்தொகையை முடித்தருளினார். இன்று அப்பரவை மணாளரைப் பரவி அவரருளிய திருத்தொண்டத் தொகையை விரிவாகக்கூற எண்ணியுள்ளேன்! யானோ அறிவிற் சிறியேன்! இதனைக் கூறவல்லேனல்லேனாகலின், எமது பெருமானே! இவ்விரிநூல் முற்றுப்பெறுமாறு அருளால் ஒரு பெருமொழியை எடுத்துக்கொடுத்து முற்றுப்பெறச் செய்யவேண்டும் என்று வேண்ட வேண்டியாங்கே அருளும் நடராஜவள்ளல் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தருளினர்.

அருளவும், ஆசிரியர் சேக்கிழார் அத்திரு அடியைத் திருவருளுணர்ச்சியான் ஆராய்வாராயினார். அவ்வாராய்ச்சியால் தெளிந்தனர், நாயன்மார்களில் ஒருவராக எண்ணப்படும் அந்தணர்களைத் தில்லைவாழந்தணர் என்ற ஒரு தொகைமொழியை நம்பெருமான் நமது சுந்தரமூர்த்திகட்கு முதலடியாக எடுத்துக்கொடுத்தனர். அவர் சங்கிலிகாதலராகலின் அத்தொகைமொழியை முதலாகக்கொண்டு ஏனைய தொகையடியார்களையும், தனியடியார்களையுங் காட்டும் தொகைமொழிகளையும், தனிமொழிகளையும் புணர்த்தி, திருத்தொண்டத் தொகையைப் பாடிமுடித்தருளினார். அங்ஙனமாயினும் ஒருநாயன்மாருடைய சரித்திரத்தை விரித்துக்கூறவல்ல விரிமொழியை அடியோமாகிய நமக்கு ஆரம்பமாகத் திருவாய் மலர்ந்தருளாது, நாயன்மார் அனைவரையும் குறிக்கும் உலகெலாம் என்னும் ஓர்பெரிய விரிமொழியைத் திருவாய்மலர்ந்தருளினர். நாம் சங்கிலிதோள் நயந்தோரது திருவடியின்கண் நமது நெஞ்சத்தைப் பூட்டியுள்ளோமாகலின், தில்லைவாழந்தணர் என்னுந் தொகைமொழியைக்கொண்டு அவர் நாயன்மார்களைத் தொகுத்தோதியதுபோல் நாமும் உலகெலாம் என்னும் ஒருமொழியாகிய இவ்விரிமொழியால் நாயன்மாரது சீர்த்திமுற்றும் விரித்துக் கூறவல்லோமாவம் என்னுங் குறிப்பையும், சங்கிலித்தோள் நயந்தோரது திருவடித் தியானவிசேடத்தையும் நமக்கறிவுறுத்தியதுபோலுமாம். என்றிவ்வாறு சேக்கிழார் உணர்ந்து, பின்னர் உள்ளங்களிகூர்ந்து "உலகெலா முணர்ந்தோதற்கரியவன்" என்னும் திருப்பாசுரத்தையோதியருளினார்.

உலகெலாம் என்று அடி யெடுத்துக்கொடுத்த பெருமானை, அவனது அரியபெருமையும் அவனது சொரூபத்தையும் கூறி வாழ்த்தி வணங்கவேண்டுவது முறைமையாகலின், அம்முறைமைக்கேற்ப உணர்ந்தோதற்கரியவனென்று அவனது அரியபெருமையையும், அலகில்சோதியன் அம்பலத்தாடுவான் என்று அவனது சொரூபத்தையும், வாழ்த்துவதற்கான முடியை நிலவுலாவிய நீர்மலிவேணியன் என்று அவ்விரண்டையுடையாளங்களோடு வாழ்த்தினாரெனவும், "உலகெலாம்" என் றடியெடுத்துக் கொடுத்ததனால் தம்

மாட்டுப் பேரருளுடைமையும், அவ்வடியைக்கொண்டு புராணத்தை முடிக்கும் முடிவிலாற்றலையும் தமதுள்ளத்து உடனுயிருந்து காட்டுதலால், அவ்விருகுணங்களைக்காட்டும் அவ்விரண்டடையாளங்களைச் சிறப்பித்துக் கூறினாரெனவுங்கொள்க.

வாழ்த்துதற்குப் பேரருளுடைமையும், முடிவிலாற்றலுடைமையும் மிகச்சிறப்புடைத்தாகலின், அதுநோக்கியும் முடிக்கண்விளங்கும் அவ்விரண்டையும் சிறப்பித்து வாழ்த்தியதூஉமாம்.

பேரருளுடைமையில் தன்வயத்தனாதலும், தூயவுடம்பினனாதலும், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதலுமாகிய மூன்றுகுணங்களும், முடிவிலாற்றலுடைமையில் இயற்கையுணர்வினனாதலும், முற்றுமுணர்தலுமாகிய இரண்டுகுணங்களும் அடங்குதலின் அச்சிறப்புநோக்கி வாழ்த்தியதூஉமாம்

உலகெலாம் என்ற அடியைக்கொண்டு நடக்கும் இப்பெரியபுராணமுற்றும் அம்மலர்சிலம்படியின்கண் உள்ள வரம்பிலின்பம் அமைந்திருக்கவேண்டுமென்று வாழ்த்தியதூஉமாம்.

இனி வணங்குதற்கெடுத்துக்கொண்ட திருவடியின்கண் வரம்பிலின்பமுடைத்தாகலின் அதனை வேதமாகிய சிலம்பு ஓயாது எடுத்துக்கூறுவதுபோல ஒலித்துக்கொண்டு இருத்தலின் அச்சிறப்புநோக்கி மலர்சிலம்பென்று அவ்வடையாளத்தைச் சிறப்பித்து வணங்கியதூஉமாம்.

அயனும் அரியும் காண்டற்கரியனவாய்க் காணாதொழிந்த அடிமுடிகளை அன்பரெல்லாம் ஆனந்தத்துடன் காணச் சிற்றம்பலம் இடங்கொடுத்ததாகலின் அச்சிறப்புநோக்கி அலகில்சோதியன் அம்பலத்தாடுவான் என்றதூஉமாம்.

ஒருலகோ ஒருபதியோ என்றற்றொடக்கத்தனவாகிய பெருமைவாய்ந்த பெரியோரது புராணத்தை இங்கு யான் முடித்து அதனை அன்பரெல்லாங்காண இவ்வம்பலம் இடங்கொடுத்ததாகலின் அச்சிறப்புநோக்கி ஆடுவான் அம்பலம் என்று கூறியதூஉமாம்.

இதுகாறுங் கூறிப்போந்தனவேயன்றி உணர்ந்தோதற் கரியவனும், நிலவுலாவிய நீர்மலிவேணியனும், அலகில்சோதியனும், அம்பலத்தாடுவானும் ஆகிய நடராஜமூர்த்தி, உலகெலாம் என்று அசரீரியாய் ஓசைபடத் திருவாய்மலர்ந்த அவ்வடியை நாம் வாழ்த்தி வணங்குவாம் என்றதூஉமாம்.

உலகெலாம் என்னும் அடியைக்கொண்டு நடக்கும் இப்பெரியோர்புராணம் உலகெலாம் நிலவியுலாவவும், அலகில்சோதியாய்ப் பிரகாசிக்கவும், மலரடியின்கண் வேதம் சிலம்பா யொலித்துக்கொண்டிருப்பதுபோல் உலகெலாமென்னும் இவ்வேதமொழியும் அவனடியில் ஒலித்துக்கொண்டிருக்கவும் வாழ்த்திவணங்குவாம் என்றதூஉமாம். அன்றியும் பூஜாகாலங்களில் மந்திரபுஷ்பம் ஓதுங்கால் வேதங்கள் ஓதப்பட்டுவருதல்போல் உலகெலாம் என்பதை முதலாகக்கொண்ட இப்புராணமும் ஓதப்பட்டு வரவேண்டும் என்பதூஉமாம்.

உலகெலாம் என்னும் ஒருமொழியை ஆங்காங்கு புணர்த்திக்கூறும் இப்பெரியபுராணம் அன்பற்ற புறச்சமயிகள், உணர்ந்தோதற்கரியதாய், அன்புள்ள அகச்சமயிகள் கண்டு களிக்கத்தக்க கங்கையாகிய நீர்போல் பரந்தெழுந்து ஆழ்ந்த பொருளுள்ளதாய், சித்தாந்த சைவர்கள், அம்பலத் தாடலைக்கண்டு களிப்பதுபோல் ஆனந்திக்கத் தக்க பேரன்பை விளைவிப்பதா யிருத்தல்வேண்டுமென்று வாழ்த்திவணங்குவாம் என்றதூஉமாம்.

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்,
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான் மலர்சிலம்படி.
மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவாம். வாழ்த்திவணங்குவாம்.

இவ்வாறு முதனிலை கடைநிலைகளாகப்பிரித்து முதனிலையைச் சத்திப்பிரணவ வணக்கமாகவும், கடைநிலையைச் சிவப்பிரணவ வணக்கமாகவும் கொள்க. உகரம் - சத்தி - அகரம் - சிவம்.

உலகெலா முணர்ந்தோதற் கரியவன் என்றதனல் - அருவத்திருமேனியனையும் நிலவுலாவிய நீர்மலிவேணியன் என்றதனல் - உருவத்திருமேனியனையும், அலகில் சோதியன் அம்பலத்தாடுவான் என்றதனல் - அருவுருவத்திருமேனியனையும் விளங்குகின்றனென்பதை விளக்கி, அங்ஙனமான எமது நடராஜ வள்ளலது மலர்சிலம்படியை வாழ்த்தி வணங்குவாம் என்றதாஉமாம்.

ஒன்றினுந் தோய்வின்றித் தானேசுயம்பிரகாசமாய் நிற்கும் தன்னுண்மையிற், சிவமென நிற்பனென்னும் பொருள்போதர, உலகெலா முணர்ந்தோதற்கரியவ னெனவும், உலகெலாமாகி வேறா யுடனுமாகி, இவ்வாறு உயிர்களின்வழி நிற்குந் தன்மையிற், சத்தி எனநிற்பன் என்னும் பொருள்போதர அலகில்சோதியன் எனவும், தாதான்மியத் தான் இருதிறப்பட்டுப் பின் ஐந்தொழில்செய்யும் தன்மையிற் பதியெனப் பெயர் பெற்றுநிற்பன் என்னும் பொருள் போதர நிலவுலாவிய நீர்மலிவேணியன் எனவும் அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனே சிவமெனவும், சத்தியெனவும்,பதியெனவும் நிற்பனென்னும் பொருள்போதர, அம்பலத்தாடுவான் எனவும், இங்ஙனம் மூவகையாய்ப் போதரும் பொருள்விளங்க நடனஞ்செய்யும் எமது நடராஜப்பெருமானது மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவாம் என்றதாஉமாம்.

அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் தாதான்மியத்தான் சிவம் சத்தி என இருதிறப்பட்டுப் பின் பதி யென நிற்பன் என்றதனை, இப்பாட்டின் அடிகள் நிற்கும் நிலையானுங்காண்க.

உலகெலா முணர்ந்தோதற் கரியவன் என்னும் அடி - சிவத்தன்மையை விளக்குதலான் அதுமுன்னரும், அலகில்சோதியன் என்னும் முற்பாதி - சத்தித்தன்மையை விளக்குதலான் அதுமூன்றும் அடியின் முன்னரும், நிலவுலாவிய நீர்மலிவேணியன் என்னும் அடி-பதியை விளக்குதலான் இது இவ்விரண்டடியின் இடையினும், மூன்றும் அடியின் பிற்பாதியாகிய அம்பலத்தாடுவான் என்னும் அடி-அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனேசிவம் சத்தி என இருதிறப்பட்டுப், பின் ஒன்றாய்ப் பஞ்சகிருத்தியமியற்றி நிற்கும் பதித்தன்மையை விளக்குதலான் அலகில்சோதியன் என்னும் அடியினிறுதியினும் நின்றமைகாண்க.

விஞ்ஞான கலர்க்குத் தன்மையில்—அலகில் சோதியனையும், பிரளயாகலர்க்கு முன்னிலையில்—நிலாவுலாவிய நீர்மலிவேணியனையும், சகலர்க்குப் படர்க்கையில்—அம்பலத்தாடுவானையும், நின்றருளும் முறைமையுங் கூறியதுமாம்.

அம்பலத்தாடுவான் - முப்புறச் சமயிகளால் காண்டற்கரியானென்பது தோன்ற உலகெலாமுணர்ந்தோதற்கரியவன் எனவும், அகச்சமயிகளால் காண்டற்கெளியவன்என்பது தோன்ற நிலவுலாவிய நீர்மலிவேணியன் எனவும், சித்தாந்தசைவர்க்கு வேதாகமங்களின் குறியிறந்து நிற்பவனென்பதுதோன்ற அலகில்சோதியன் எனவும் விளக்கியவாறுமாம்.

முப்புறச் சமயிகளுக்கரியனாய், அகச்சமயிகளுக் கெளியனாய், சித்தாந்தசைவர்க்குக் குறியிறந்தவனாய் ,நின்றருளும் இறைவன் இவ்வம்பலத்தாடுவானே என்று வேதம் சிலம்

புருவாய் அவனடியிற்பொருந்தி வாய்மலர்ந்தரற்றுவதனால் அவ்வேதவாணையின்படி யாண்டு அவனை வாழ்த்தி அவனடியை வணங்குவாமென்றதுமாம்.

* "பூமன்னு நான்முகத்தோன் புத்தேளிர் ஆங்கவர்கோன் மாமன்னுசோதிமணி மார்பன் நாமன்னும் வேதம் வேதாந்தம் விளக்கஞ்செய் விந்துவுடன், நாதம் நாதாந்தம் நடுவே தம்போதத்தால், ஆமளவுந்தேட அளவிறந்த அப்பாலாய்"ப் போவனென்பது தோன்ற உலகெலாமுணர்ந்தோதற்கரியவ னெனவும், சுடர் மேலோங்கிப்போதல்போல் அளவிறந் தப்பாலாய்போகும் இறைவன் குன்றாதசேமவொளியன் என்பதுதோன்ற அலகில்சோதியனெனவும், அளவில் சோதியனாய்ப் போகும்அவன் சித்தாந்த சைவரறி வின் மன்னி அவர்வேண்டும் உருவுகொண்டு கட்புலனுக்குத் தோன்றுவனென்பது தோன்ற நிலவுலாவிய நீர்மலிவேணியன் அம்பலத்தாடுவான் எனவும், அறிவின்கண் ணும் கட்புலனின் கண்ணும் காணப்பெறும் திறமுடைய சித்தாந்தசைவர் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வதற்கு அன்பான் சரியை கிரியா யோகங்களைவிரும்புகின்றாராகலின் நமக்கும் அச்சரியையாதிகள் முற்றுப்பெற்று ஞானத்தால் நாமும் அவனடி சேருவோ மென்பதுதோன்ற மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் என்றதுமாம்.

யாவரானுங் காண்டற்கரியவனாய் அலகில் சோதியனாய் அம்பலத்தாடுவானாய் நிற்கும் இறைவனே சாந்தியாதீத கலைபரியந்தமுள்ள எல்லாவுலகங்களையும் சங்கரிக்கும மகாசங்காரக் கடவுளாவான், என்பது தோன்ற உலகெலாமுணர்ந் தோதற்கரியவ னெனவும், முடியிலுள்ளபிறையும் கங்கையும் எல்லாவுலகமும் ஒடுங்குவதற்கும் மீளத் தோன்றுவதற்கும் நிலைக்களமாயுள்ள முதற்கடவுள் என்பதைக்காட்டுதலால் அதனை யுணர்த்த நிலவுலாவிய நீர்மலிவேணியனெனவும், வேதமும் இவ்வாறே சிலம்புருவாய் அவனடியிற் பொருந்தி அரற்றுகின்றதென்பதுணர்த்த மலர் சிலம்படி எனவும், "இப் பொருள்சேர் இறைவன்புகழ் புரிந்தார்மாட்டு இருள்சேர் இருவினையுஞ்சேரா" என்ப துணர்த்த வாழ்த்தியெனவும், இவ்விறைவனது தாளை வணங்கப்பெறாததலை 'கோளில் பொறியிற்குணமிலவே' என்பதுணர்த்த வணங்குவாம் என்பதுமாம்.

கங்கை-இவன் எல்லாவற்றையும் ஒடுக்கிக்கொள்ளும் இறைவனென்ப துணர்ந்தே தனதுவிரிந்த ஆற்றலைக் காட்டாது சடையில் ஒருபாலடங்கியதானும், பிறை - மீளவும் நமதுகலை தோன்றுவதற்கு கங்காதரனாகிய இவ்விறைவன் தோற்றுவித்தாலன்றித் தோன்றிலாகாதென்பதுணர்ந்தே சரண்புகுந்ததானும் அங்ஙனம் கூறியதென்க.

உலகெலாம் என்றதன் காரணம்.

1. † "உலகெலா மாகி வேறா யுடனுமா யொளியா யோங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனா யிவற்றின் தன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீர் அமலனாகி நின்றனன் நீங்கான்றெங்கும்."—என்றபடி

எங்கு நீங்காதிருக்குந்தன்மையுடையவன் தாமென்பதுதோன்ற உலகெலாமென்றார்.

2. உலகெலாம் என்றதனால் அறியப்படும் அத்துவிதப்பொருளை யுணரப்பெறாத போலிவேதாந்திகள் இலதெனக்கூறும் சேதனா சேதனப்பிரபஞ்சமாகிய உலகமெல் லாம் உள்பொருளாகிய தம்மைக்காட்டும் உள்பொருளென்பது தோன்ற உலகெலா மென்றார்.

3. வேதாந்தத் தெளிவே சைவசித்தாந்தமாகலின் வேதாந்தத்தில் இல்லையென்று கொண்ட அச்சொற் பொருளைக்கொண்டே சித்தாந்தத்தால் உள்ளதென்று நாட்டும் தெளிவுடைத்தென்பதுதோன்ற உலகெலாமென்றார்.

* போற்றிப் பஃறொடை. † சிவஞானசித்தியார் 2-ஆம்-சூ-ம்.

4. ஒரும்வேதாந்தத் துச்சியிற்பழுத்த ஆராவின்ப அருங்கனிபிழிந்து சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனைத் தெய்வமாயிருக்கும் தம்மாற்கூறப்பட்ட வேதாகமங்களில் வகுக்கப்பட்ட இருவினைகளையும், புண்ணியபாவங்களையும், இன்பத்துன்பங்களையும், சொர்க்க நரகங்களையும், உளவெனக்காட்டுவது உலகென்பது தோன்ற உலகெலா மென்றார்.

5. தம்மை அநாதிஎன்பதையும் தமக்கநாதியாயுள்ள பஞ்சகிருத்தியத்தால் காணப் படும் பசுபாசங்கள் அநாதிஎன்பதையும் கண்கூடாகக் காட்டுவது உலகமே என்பது தோன்ற உலகெலாமென்றார்.

6. வேதங்களாலும் காணக்கூடாத தம்மை "ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிடவந் திடும் காலமே" என்ற சுருதிப்படி காணும்படிச்செய்வது உலகமென்பது தோன்ற உலகெலாமென்றார்.

7. தமதுஸ்வரூபமாகிய அருள்வெளிக்குள்ள அகிலாண்டகோடியெல்லாந் தங்கும் படிக்கு இச்சைவிளைவித்த நன்மையுடைத்து உலகென்பதுதோன்ற உலகெலாமென்றார்.

8. நாது, சத்து சித்து ஆனந்தம் என்னும் இலக்கணங்களை இவ்வுலகு தனக்குள்ள அநித்தியம் சடம் துக்கம் என்னும் மூவகைத்தன்மையால் காட்டும் அருமையுடைத்து என்பதுதோன்ற உலகெலாமென்றார்.

9. எமதுருவமாகிய நிஷ்களமும் சகளமும் சகளநிஷ்களமும் எமதுகுணமாகிய எண் குணங்களும் காணப்பெறுதற்கும் அவற்றான் அடையப்படும் பயனை அடைதற்கும் உலகே யிடமென்பது தோன்ற உலகெலாமென்றார்.

10. ஆன்மாக்கள் அடையவேண்டிய பெத்தமுத்திப் பயன்களாயுள்ள புருஷார்த்தம் பரமபுருஷார்த்தமாகிய பிரயோஜனங்களை யடைதற்கு இடம் உலகம் என்பதுதோன்ற உலகெலாமென்றார்.

11. சச்சிதானந்தமாகிய உயர்ந்த தன்மையுடைய தம்மோடு திருத்தொண்டத்தொகை யுள் குறிக்கப்பட்டாரும் உயர்ந்தோரே யாவரென்பது தோன்ற உலகெலாமென்றார்.

12. நீ அரசனிடம் கூறியபடி இப்புராணம், நெல்லிற்காணப்படும் அரிசியைப் போலும், கறவையிற் காணப்படும் பாலைப்போலும், கரும்பினிடத்திற் காணப்படும் சர்க் கரையைப்போலும், விறகினிடத்திற்காணப்படும் தீயைப்போலும், மார்க்கத்தினிடத்திற் காணப்படும் பூஞ்சோலையைப்போலும், அம்மையிலும் இம்மையிலும் உறுதிபயக்கத் தக்க சிவகதையாயும் புராதனமாயும் தவகதையாயும் தவம் பண்ணிப் பேறுபெற்ற தனிக் கதையாயும் விளங்குதற்கிடம் எல்லாஉலகமுமென்பதுதோன்ற உலகெலாமென்றார்.

13. ஆதிநடுவந்த மென்னும் காலங்களிலும் தான் தில்லையின்கண் நிற்பவனாகலானும் தன்னை வழிபடற்குரிய அந்தணர்களும் வழிவழியாயுள்ளாராகலானும் இத்திருத்தொண் டத்தொகையும் ஆதிநடுவந்தமென்னும் காலங்களில் நிலைபெற்று வழிவழியாய் வாழ்ந்து வரவேண்டுமென்று திருவுளத்திற்கொண்டே அன்று தியாகராஜப்பெருமான் தில்லை வாழந்தணரென அடியெடுத்துக்கொடுத்ததுபோல் அத்திருத்தொண்டத்தொகை பின் வகையாகவும் வந்து அதன்பின் இப்போது விரியாகவும் வர,வந்திருக்கின்றபடியால் விரி வைக்காட்டும் அடியை நடராஜப்பெருமான் எடுத்துக்கொடுக்க அருண்மொழித்தேவர் வேண்டினாராகலின் உலகெலா மென்றார்.

பிராகிருதராகிய அஞ்ஞானிகளுணர்வு சுட்டி யுணரும் உணர்வாகலின் உணர்ந் தோதற்கரியவன் என்றார்.

ஞானிகளுணர்வு இறைவன் உள்நின்று உணர்த்தும் உணர்வுமயமாய் நிற்பதாகலின் உணர்ந்தோதற்கரியவன் என்றார்.

பாசவுணர்மையுணரப்பெருத புறப்புறச் சமயிகளும், பசுவினுண்மையுணரப்பெருத புறச்சமயிகளும், பதியுண்மையுணரப்பெருத அகப்புறச்சமயிகளும் திருவருளுணர்வை யறியாராகலின் உணர்ந்து ஓதற்கு அரியவன் என்ருர்.

சித்தசித்தாகிய உலகத்தோடு நடராஜன் ஒன்ருய் வேருய் உடனுய் நிற்கும் நிலையை யுணராது உலகிற்கு வேருகவுணரும் உணர்வுடையோர் அவனை உணர்ந்தோதுந் தன்மை யைப் பெருராகலின் உணர்ந்தோதற்கரியவன் என்ருர்.

"திருமேனி ஒன்றல்லன்" எனவும் "வேதமுதல் விண்ணோரு மண்ணோருந் துதித் தாலும் ஓதவுலவா வொருதோழன்" "ஏதவன்ஊர் ஏதவன்பேர் யார்உற்ருர் யார்அயலார் ஏதவனைப்பாடும் பரிசு" எனவும் கூறும் அருமையுடையவன் ஆகலின் உணர்ந்தோதற் கரியவன் என்ருர்.

நூலுணர்ச்சி அற்ற அஞ்ஞானிகளாகிய பிராகிருதர்களாலும், நூலுணர்ச்சியுடைய ராய் இறப்பில் தவமாகிய சரியையாதிகளில் முயற்சியற்ற ஞானிகளாகிய வைணவிகர் களாலும், பண்டை நற்றவத்தால் இடையருது பத்தியிற்றலைப்பட்டு உணர்ந்தோதும் செயலற்ற சாமுசித்தர்களாலும், உணர்ந்தோதற்கரியவன் ஆகலின் உணர்ந்தோதற்கரிய வன் என்ருர்.

இறைவன், இவ்வருட்புராணத்தைப் போற்றியோதாது இறுமாப்போர் எத்தகைய பெரியோராயினும் அவரை அடக்குவானென்னும் உண்மையும், போற்றியோதிப் பணி வோர் எத்தகைய சிறியாராயினும் அவரை ஆக்கத்தோ டோங்கிவளரச் செய்வானென்னு முண்மையும் போதரச் சீரையும் நிலைவையுங் கூறியதாகும்.

உலகெலாமென்றது இறைவனது ஏகமாந்தன்மையையும், உணர்ந்தோதற்கரியவன் என்றது வேருந்தன்மையையும், அலகில்சோதியன் அம்பலத்தாடுவான் என்றது இறை வன் தனது ஆணையென்னும் பரியாயப்பெயருடைய அலகில்சோதியாய்விளங்கும் சிற் சத்தியோடு கலந்திருக்குந் தன்மையும், பஞ்சகிருத்தியங்களை நிகழ்த்தற்பொருட்டு அச்சத் தியின் கூருகிய பராசத்தி முதலாகக்கூறப்படும் பஞ்சசத்திகளோடு கலந்திருக்குந்தன்மை யும் உணர்த்தலால் உடனுந்தன்மையும், நிலவுலாவிய நீர்மலிவேணியனென்றது, இவ் விறைவனே ஒன்ருய் வேருய் உடனுய் நிற்பவனென்பதையும் அறியக்கூறியதென்க.

"உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்" என்றது—சிவநிலை.
"அலகில்சோதியன்" என்றது—சத்திநிலை.
"நிலவுலாவிய நீர்மலிவேணியன்" என்றது—பதிநிலை.

அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் தாதான்மியத்தால் சிவம் சத்தி என இரு திறப்பட்டுப் பின் பதியென நிற்கும் அப்பொருள் நிலை இம்மூவடி நிலையில் விளங்கக் கூறி சிவநிலையில் தனது இச்சையும், சத்திநிலையில் தனது ஞானமும், பதிநிலையில் தனது கிரியையும், நீங்காதுவாழ நடராஜப்பெருமானது மலர்சிலம்படி வாழ்த்திவணங்கு வாம் என்று கூறியதாமென்க.

"உ"கரத்தை முதலாக எடுத்தகாரணம்.

1. நெல்லிற்காணப்படும் அரிசியைப்போல் ஆன்மாவும், கறவையிற் காணப்படும் பால்போல் சிவஞானமும், கரும்பிற்காணப்படும் சுவைரசம்போல் சிவசொரூபமும், விளக்கிற்காணப்படும் தீயைப்போல் மலகர்சமும், பூஞ்சோலையிற்காணப்படும் நன்மார்க் கத்தைப்போல் சிவசன்மார்க்கமும், முன்னுள்ள வேதசிவாகமங்களில் ஓங்கிவிளங்கிப்

பொலிவதனை கண்டுணர்ந்துவாழ, இப்புராணம் அருளுருவாய் நிற்றலின், முத்தொழி லைக்குறிக்கும் பிரணவாக்ஷரங்களில் ஸ்திதி எழுத்தாகிய உகரத்தை முதலெழுத்தாகக் கூறினர்.

2. முன்னுள்ள பதினொரு திருமுறைகளையும் ஓங்கச்செய்வது இப்புராணமே யாக லின் உகரத்தை முதலாகக்கூறினர்.

3. அகரம் சித்துப்பொருளையும், மகரம் அசித்துப்பொருளையும், உகரம் அவ்விரு பொருளையும் காட்டுவதாகலான், இப்புராணத்துள் அவ்விருபொருளும் காண உகரத்தை முதலாகக் கூறினர்.

4. அகரவெழுத்தை ஓகாரமாக ஓங்கி வொலிக்கச்செய்வது உகரமாதலின் இப் புராணம் ஓங்கவேண்டுமென்னுங் கருத்தால் ஓங்கச்செய்வதாகிய உகரத்தை முதலாகக் கூறினர்.

5. அகரவெழுத்தின்பொருள் தாமேயாகலின் தம்மைமாத்திரங்குறிக்கும் அகரத்தை யெடுக்காது தம்மையும், தமதருளையும், அவ்வருள் பெற்றாரையும், இப்புராணத்துட் குறிக்க உகரத்தை முதலாகக்கூறினர்.

6. அகரம் அறிவாகிய சிவத்தையும், உகரம் அருளாகிய சக்தியையும், மகரம் ஆனந்தநிலையாகிய ஆனந்தத்தையும், உணர்த்தும் அக்கரங்களாகலின் இப்புராணத்தை அருட்புராணமாகக்காண அருளைக்குறிக்கும் உகரத்தை முதலாகக்கூறினர்.

7. மேனின்றோரையும் பின்வருபவரையும் நிகழ்காலத்துள்ளாரையும் திருத்தொண் டத்தொகையுட் கூறிய பெருமான் ஸ்ரீ சுந்தரமூர்த்திகளாதலால் அவரது புராணத்தை முதலிடைகடைகளில் வைக்கற்பாற்று, என்றுணர்த்த முதல் இடை கடைகளைச் சுட்டுவ தாகிய உகரத்தை முதலாகவெடுத்தார்.

8. இப்புராணம் தோன்றிய பொருள்போலுமன்று, தோன்றிநிற்கும் பொருள்போலு மன்று, தோன்றி நின்றழியும் பொருள்போலுமன்று, புராதனமா (அநாதியா) யுள்ளது என்பது குறித்தற்கு உகரத்தை முதலாக எடுத்தார்.

9. இம்மையினும் அம்மையினும் உறுதி பயக்கத்தக்கது இப்புராணம் என்பது குறித் தற்கு உகரத்தை முதலாகவெடுத்தார்.

10. உண்மை ஞானத்தையும், உண்மைச்சிவானுபவத்தையும், அறிவித்து யாவரையும் உய்விப்பது இப்புராண மென்றுணர்த்த உகரத்தை முதலாக எடுத்தார்.

11. இப்புராணத்துக்கு மேலானபுராணம் முன்னுண்டானது மில்லை, சமானமாகப் பின்னுண்டாகப் போவதுமில்லை, ஆகலான் இது ஒன்றே தனிக்கதையென்றுணர்த்த உகரத்தை முதலாகவெடுத்தார்.

12. அழியாத தவமாகிய சரியையாதி நான்கினையும், முன்செய்துப் பின்பெற்ற தாகிய அழியாப்பேற்றை யெடுத்துக்காட்டவல்லது இப்புராணமேயாகலான், உகரத்தை முதலாக வெடுத்தார்.

13. தவம்பண்ணிப் பேறுபெற்ற தனிக்கதை-முன்னுள்ள வேத சிவாகமங்களினும், அவற்றின்சார்பாகப் பின்வந்தனவாகிய சார்புநூல்களினும், நெல்லைக்குத்தி யாராய்ந் தெடுக்கும் அரிசியைப்போலும், ஆன்மாவையாராய்ந்தெடுத்தற்கும், அந்த அரிசியைப் பாகப்படுத்தி இன்சுவைப்பாலோடு கலந்து, பாலன்னமாக்குவதுபோலும், ஆன்மாவை ஆராய்ந்துணர்ந்த பின்னர் சிவஞானப் பாலோடுகலத்தற்கும், கரும்பினிடத்துக்காணப் படும் இன்சுவைபோலும் பாலினிடத்துக் காணப்படும் சுவைபோலும் சிவஞானத்தில் சிவஸ்வரூபத்தைக் காண்பதற்கும் இப்புராணம் விளக்கைப்போல் பிரகாசிக்க வேண்டு மாகலான், உகரத்தை முதலாகவெடுத்தார்.

14. குளிர்பூஞ்சோலை வழிநடப்போர்க்கு நன்மார்க்கமாயிருப்பதுபோல், உண்மை வழியில் நடப்போர்க்கு, இப்புராணம் அச்சோலைபோலிருப்பதால் உகாரத்தை முதலாக வெடுத்தார்.

15. இப்புராணந்தான் சத்தானது, ஏனையவெல்லாம் சத்தற்ற உமியைப்போன்றது, என்று குறிக்க உகாரத்தை முதலாகவெடுத்தார்.

16. முக்காலத்துமுள்ள தில்லைவாழந்தணரை முதலாகவுடைய திருத்தொண்டத் தொகையை, முதலாகவுடையது இப்புராணமென்பார் முக்காலத்தைக்குறிக்கும் உகாரத்தை முதலாகவெடுத்தார்.

உகரச்சுட்டு பின் வந்தவரைக்காட்டுவதாகலான் யாவர்க்கும் பின்வந்தவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய புராணத்தை ஆரம்பிப்பதற்கு உகரத்தை முதலாகக்கூறியதேயன்றி, உலகெலா முணர்ந்தோதற்கரிய நாம் நிலவுலாவிய நீர்மலிவேணியனாகாலத்துத் தோன்றிய நமது பிரதிபிம்பமே சுந்தரமூர்த்திகளாமென்றும், அவரது திருமேனி அலகில் சோதியனாகிய நம்மைப்போலும் ஆயிரஞாயிறு போன்றதென்றும், நாம் சித்ஸ்வரூபமாகிய அம்பலத்தின்கணிருந்து ஆடுவதைப்போலும், அவர் அருளுருவாகிய பரவையாரிடத்திருந்து அருள்விளையாடலைச்செய்வாரென்றும், நமதாட்டமானது * ஆன்மாக்களிடத்துள்ள மலசத்தியை ஓர்பாதத்தாற்றடுத்து, ஓர்பாதத்தால் ஆட்கொண்டு வாழ்த்திவணங்கச் செய்யு முறைமையைபோல் அவரதுபுராணமும் மலசத்தியைத் தடுத்து ஆட்கொள்ளுமுறைமையை யுடைத்து ஆகலான் அவரது புராணத்துக்கும் தடுத்தாட்கொண்ட புராணமெனப் பெயரிடுவாமென்று உகரத்தை முதலாக எடுத்துக் கூறியதுமாமென்க.

மந்திரம்.

உ-ல-கெ-லா-ம் என்னும் இவ்வைந்தெழுத்தும் சிவமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்கரப் பொருளையுணர்த்தும் அக்கரங்களாகலான் அதனையே உபதேசிக்கும் மந்திரமாகக்கொண்டு சிற்பரவியோமமாகிய பரமாகாசசரீரியாய்ச் சோதியாய் அழிவதின்றி நீக்கமில் அறிவானந்த முதன்மை நித்தியமுடைத்தாகிய சூக்குமைவாக்கான் ஓசைபட எடுத்தோதினரென்க.

உலகெலாம் என்னும் இவ்வைந்தெழுத்தும் ஸ்ரீ பஞ்சாக்கரப்பொருளை உணர்த்துமாறெங்ஙனமெனின் - மகாரமாகிய அசுத்தமாயா சம்பந்தப்பட்ட உலகபேதங்களையும், நகாரசம்பந்தப்பட்ட சுத்தாசுத்த மாயாசம்பந்தப்பட்ட உலகபேதங்களையும், யகாரமாகிய ஆன்ம சம்பந்தப்பட்ட உலகபேதங்களையும், வகாரமாகிய அருள் சம்பந்தமுடைய சுத்த மாயாசம்பந்தப்பட்ட உலகபேதங்களையும் இங்ஙனங் கூறிய சுத்தம் சுத்தாசுத்தம் அசுத்தம் என்னும் மூவகைத்தான அசரமாகிய பிரபஞ்சங்கட்கும் மூவகை உயிர்வர்க்கங்களெனப்படும் சரமாகிய பிரபஞ்சங்கட்கும் வேறாய் சுயம்பிரகாசமாய் சிவமென நிற்கும் ஓர் பொருளையும், உவன் என வேறுபிரிக்கப்பட்ட சிவன் அங்ஙனம் வேறாகவேயிராமல் வகார நகாரங்களாகிய அருளோடும் திரோதத்தோடும் ஒன்றாய் யகார மகாரங்களாகிய ஆன்மாவோடும் மலத்தோடும் உடனாயுங்கலந்து உகாரமாகிய சத்தியெனநிற்கும் ஓர் பொருளையும், ஓர்வகையான் வேறெனக்காட்டும் பொருளால் சிவமாயும், ஓர்வகையான் ஒன்று கூடன் எனக்காட்டும் பொருளால் சத்தியாயும் நிற்பதாகிய பதித்தன்மையைக்காட்டும் ஐந்தொழிலையும், அவ்வைந்தொழிலையும் செய்வோர் தம்மையன்றி ஒருவரும் இல்லை என்பதையும் காட்டும் பிரபஞ்சமாகிய உலகமே என்னும் ஓர் பொருளையும் உணர்த்துவதே பஞ்சாக்கரப்பொருளாமென்க.

---

* ஊன்றியபாதம் மலசத்தியைத் தடுப்பதாகலான் தடுத்தவகையை வாழ்த்தியும், தூக்கியபாதம் ஆட்கொள்வதாகலான் அதனை வணங்கியும் என்றார்.

சேக்கிழார் பெருமானது வேண்டுகோளுக்கு அருளினவன் பஞ்சாக்கர மூர்த்தி யாகலான் அவன் அடியெடுத்துக்கொடுத்ததும் அஞ்சக்கரமே யாமென்க.

பஞ்சாக்கரத்தில் பதி பசு பாசங்களைக் காண்டல் போல் உலகெலாம் என்னும் பதத்தில் உயர்ந்தோனுய்ப் பரமாத்மாவாயுள்ளபதியையும், அவன்வசப்பட்ட உயர்ந்தோராகிய முத்தான்மாக்களையும், அவர்கள் அவதரித்த இடமாகிய பாசத்தையும் காணக்கிடக்கின்றமையுங்காண்க.

அஃதேபோல் பஞ்சாக்கரத்தில் ஆன்மபரமான்ம ஐக்கியம் காணக்கிடத்தல்போல் உலகெலாம் என்னும் பதத்தை முதலாகவுடைய இப்புராணத்திலும் பரசிவம் நாயன்மார்களோடும், நாயன்மார்கள் பரசிவத்தோடும் ஐக்கியமுற்றிருக்கும் நிலைமையும், ஐக்கியத்தில் திருவருட்பேறும் சிவதெரிசனமுமே யாகலான் அவைகளையும் காணக்கிடக்கின்றமைகாண்க.

இனி இச்செய்யுளில் உள்ள (1) உலகு (2) எல்லாம் (3) அரியவன் (4) நிலவு (5) நீர் (6) வேணியன் (7) அலகு (8) சோதியன் (9) அம்பலம் (10) ஆடுவோன் (11) சிலம்பு (12) அடி என்னும் பன்னிரண்டுபெயர்ச்சொற்கள் சருக்கத்தைச் சுட்டிநின்றன.

"அரியவன் நிலவு" எனப் பிரித்துப் பாடங்கொள்க. ஏனெனில் னகரத்திரிவு விகாரமாகலின். "வேணியனலகில்" எனவே கொள்க. ஏனெனில் உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பாகலின். இவ்வாறு கொள்வோமாயின் முதலடியில் 16 - எழுத்தும் இரண்டாவதில் 13 - ம், மூன்ருவதில் 16 - ம், நான்காவதில் 18 - ம் ஆக அறுபத்து மூன்றெழுத்துக்களும் நின்று தனி அடியாரைச் சுட்டக் காணலாம். மற்று இச்செய்யுளில் (1) உலகு (2) உணர்ந்து (3) ஓதற்கு (4) நிலவு (5) உலாவு (6) அலகு (7) அம்பலத்து (8) சிலம்பு என்னும் எட்டு முற்றுகரக் குற்றுகர மொழிகள் கெடுதல் விகாரம் பெற்றுள்ளன. இவற்ரேடு தொகுத்தல்விகாரம் அடைந்த எலாம் என்றதையும் கூட்ட விகாரமொழிகள் ஒன்பதாம். இவை தொகையடியார் ஒன்பதின்மருக்கும் அறிகுறியாக நிற்பன. இங்ஙனந் தொடுத்துக் காட்டுதல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணமென வுணர்க. இன்னமும் இத்திருப்பாட்டின் இலைமறை காய்போல் எஞ்சியுள்ள சிறந்தபொருள்களை இந்நூலாசிரியராகிய சேக்கிழார் பெருமானுடைய வரலாறு கூறுமிடத்துக்காண்க.

மானுடப்பிறப்பின் சிறப்பு.

ஊன் அடைந்த உடம்பின் பிறவியே
தான் அடைந்த உறுதியைச் சாருமால்
தேன் அடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொற் ருள்தொழ.

(எ - து.) மாமிசம் அடையப்பெற்றுள்ள உடம்பாலாகிய பிறப்பு, தேனிறைந்துள்ள மலர்களையுடைய சோலைகளாற் சூழப்பட்டுள்ள தில்லைஎன்னும் க்ஷேத்திரத்தின்கண், பேரானந்தங்கொண்டு நடனஞ்செய்தருளும் நடராஜவரதரது,பொன்போலும் அரிய திருவடியைத் தரிசிக்கப்பெறுமானல்; அந்தப்பிறப்பே, இந்த நிலவுலகில் வந்ததனுல் அடையவேண்டிய பயனை அடையும் என்பதாம்.

ஊனடைந்த உடம்பின்பிறவி, வரதர்பொற்ருள் தொழ, தானடைந்த வுறுதியைச் சாரும் எனக் கூட்டுக.

பூதசாரவுடம்பு யாதனவுடம்பு பூதபரிணமவுடம்பு என உடம்பு மூவகையாகலின், ஈண்டெடுத்துக்கொண்டவுடம்பு பூதபரிணமவுடம்பென்பார்.- ஊனடைந்த உடம்பின்பிறவியே என்ருர். பூதசாரவுடம்பு - நரை திரை மூப்பற்று என்றும் ஒருபடித்தாய் தேவலோக போகசுகத்தையே அனுபவித்தற்கு வன்மைபெற்றிருப்பது, எனவே, யுத்தமுகத்

தில் எவ்வகைத்தான துன்பம்வரினும் அவற்றால் உயிர் இறவாது வாழுந் தன்மை யுடைத்து. யாதனுவுடம்பு அஃதேபோல் நரகயாதனையில் எவ்வகைத்தான துன்பம் அனுபவிக்கவரினும் உயிர் இறவாது நைந்துநைந்து வருந்தி அதிற்றானே ஆழ்ந்து கிடக்கும் தன்மையுடைத்து. பூதபரிணமவுடம்பு - நரைதிரையாதி துன்பமற்று சுகத்தையனுபவித்தற்குரிய வன்மையையும், ஊழ்வலியான்வருந் துன்பத்தைப் பொறுத்து அனுபவித்தற்குரிய வன்மையையும் உடையதன்று. அஃதேயுமன்றி மாமிசாதிகள் ஒழியப்பெறின் உயிரும் ஒழியும் மென்மைத்தன்மையுடையது. பூதசாரசரீரம் போகசாதனத்துக்கும் யாதனுசரீரம் துன்பசாதனத்துக்கும் வன்மைபெற்றிருப்பதுபோல், மென்மைத் தன்மையுடைய பூதபரிணமசரீரம் மோக்ஷசாதனத்துக்கு வன்மையையுடைத்தென்பார். ஊனடைந்த உடம்பின்பிறவி தில்லையுள் மாநடஞ்செய வரதர் பொற்றாள்தொழ, தானடைந்த வுறுதியைச்சாரும் என்றார்.

எனவே, பூதசாரவுடம்பை - உயிரடைந்தகாலத்து நரகதுன்பத்துக் கேதுவாயுமன்று பாபத்தையொழிக்கும் உறுதியைப் பெற்றதின்று. யாதனுவுடம்பை யடைந்தகாலத்து சுவர்க்கபோகத்துக் கேதுவாயுள்ள புண்ணியத்தைத் தேடும் உறுதியைப் பெற்றதின்று. பூதபரிணமவுடம்பை யடைந்த காலத்து அது பாவத்தை யொழிக்கும் வன்மையைப் பெற்ற புண்ணியத்தையும், வருந்திச்செய்யும் புண்ணியத்தையொழிக்கும் வன்மையைப் பெற்றுள்ள பாவத்தையும் ஒழித்து, இனிப் பிறவாநெறிக்கு ஏதுவாயுள்ள சிவபுண்ணியத்தைத் தேடும் உறுதியைத் தந்து, அவ்வுறுதியான் ஞானநடனமாகிய மாநடஞ்செய்தருளும் குஞ்சிதபாதத்தை யடைதலாகிய முத்தியிற்கூட்டிப் பேரின்பத்தையும் சாரச் செய்யுமென்றார். ஊனடைந்த பிறவி என்றது - யானைமுதல் எறும்பீறாய உடம்புகளெல்லாமெனக். இவ்வுடம்புகளெல்லாம் முத்திபெற்றுய்ந்தமை புராணங்களானும் அப் புராணக்கூற்றுக்களுக்கு ஏற்ப ஆலயங்களில் அமைந்துவிளங்கும் குறிகளானும் அடையாளங்களானும் காண்க.

புண்ணியானுபவத்துக்குப் பூதசாரசரீரத்தையும், பாபானுபவத்துக்கு யாதனுசரீரத்தையும், சிவானுபவத்துக்குப் பூதபரிணமசரீரத்தையும் உபகரித்தற்கு மாநடஞ்செய்தருளும் வள்ளல் நடராஜனன்றி வேறொருவ ரன்மையான் மாநடஞ்செயவாதர் என்றார். செம்புகாளிதம்போகப்பெறின் பொன்னுந்தன்மையைப் பெறுதல்போல், சீவன்திருவடியடையப்பெறின் பாசம்போய்ச் சிவமாகலின் பொற்றாள் என்றார். குஞ்சிதபாதத்தாற் செய்யும்நடனம் ஞானநடனமாகலின் அந்நடனத்தையே ஈண்டு மாநடம் என்றார். இது மாநடனமாகவே ஊன்றியபாதநடனம். நடனமெனப்படும். எனவே பெத்தநிலையைக் குறித்தது நடனமெனவும், முத்திநிலையைக்குறித்தது மாநடனமெனவும் நடனத்தின் வேற்றுமையைக் குறித்ததென்க.

இதனால் எந்தப்பிறப்பு மாநடஞ்செய் வரதர்பொற்றாள் தொழப் பெறுகின்றதோ அந்தப்பிறப்பே, பிறந்ததனாற்பெறும் பேற்றைப்பெற்ற பிறப்பாமென்று அப்பிறப்பின் அருமையைக் கூறினாரென்க. (2)

விநாயகர் வணக்கம்.

எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

(ள - து.) (எம்மால் இப்பொழுது) எடுத்துச் சொல்லப்புகும் இக்கதை, (தம்பிரான்தோழரென்று அன்பர்களெல்லாம் புகழ்ந்தெடுத்துரைக்கும் சுந்தரமூர்த்திகளுடைய) பெரியசரித்திரம், (இப்பெரியகதையை, யாம் தமிழ்ச்செய்யுளால் செய்யக் கருதி

யுள்ளேமாகலின் அது இப்புராணத்திற்குத் தலைவராகிய சுந்தரமூர்த்திகள் ஓதியருளிய தமிழ்-சிவபிரானுக்கு இனித்ததுபோல் அன்பர்க்கு இனிக்குமாறு) இனிய தமிழ்ச்செய்யுளாய் நடக்கும்மேன்மையை அடியேனுக்கு அருள்செய்யும்படி, ஐந்து பெரியதிருக்கரங்களையும், தாழ்ந் தசைதலையுடைய இரண்டுசெவிகளையும், நீண்ட ஒருபெரிய முடியையும், மதத்தையும் உடைய யானைமுகக்கடவுளை, எமதுகருத்தினின்றும் நீங்காவண்ணம் தியானிப்பாமென்பதாம்.

சுந்தரமூர்த்திகளது அருள்நிறைந்த சரித்திரப்பொருளெல்லாம் தமதுள்ளத்தில் அமர்ந்திருத்தல் வேண்டுமென்பார் கூடத்தையும், அவகதையைக்கொண் டெழுந்த இலக்கியங்களையெல்லாம் தன்னடிக்கட்படுத்தி முடிமன்னரைப்போல் இப்புராணம் பொலிவுபெற்றிருத்தல் வேண்டுமென்பார் நீண்முடியையும், இத்தவகதை அன்பர்செவிகளிற் புகும்போது வேறொரு அவகதைகளைக் கேட்பதற்கு அவரது செவிப்புலன் பரவாவண்ணம் தடுத்து இதிற்றானேபரந்து ஆழ்ந்திருக்கச் செய்தல்வேண்டு மென்பார். அசைதலோடுகூடிய பரந்தசெவிகளையும், அம்மையும் இம்மையும் உறுதிபயக்கத்தக்க இக்கதையின்கண் செவிசாய்த்திருப்போரது உள்ளத்தின்கண் அரன்திருநாமமாகிய ஸ்ரீபஞ்சாக்கரம் பதிந்திருக்கச் செய்யவேண்டுமென்பார் தடக்கையைந்தையும் எடுத்துக் கூறியவாறும்.

சுந்தரமூர்த்திகளுடைய சரித்திரமாகிய இப்புராணம் அதுகாறும் தெரிவதற் கின்றியிருந்த பெரியோராகிய தொண்டர்களுடையகதையை முறையானே எடுத்து வெளியாக்கவந்ததாகலினானும், ஆன்மாக்களிடத்துக் கலந்திருக்கும் மலங்களை அவர்களினின்றும் எடுக்கவல்லதாகலினானும், அம் மலபந்தத்தால் பிறவிக்கடலில் ஆழ்ந்திருக்கும் ஆன்மாக்களை முத்திக்கரையாய்விளங்கும் குஞ்சிதபாதத்திற்சேர்க்க ஆன்மபோதத்தை எடுக்குந் திறமுடையதாகலினானும், சிற்பரச்செல்வர்களுடைய ஞானச்சரிதை இதனுள் அடங்கியிருத்தலால் அதுகொண்டு பெரியோரெல்லாம் பெரிதுபெரிதென் றெடுத்துப் போற்றுவராதலினானும், இதனையோதுவாரை மேன்மே லோங்க எடுக்குமாதலினானும் எடுக்குமாக்கதை என்றார்.

தனக்கென வேண்டும்பொருளும் வேண்டாப்பொருளும் இல்லானாகிய இறைவன் தமிழ்வேதமாகிய தேவாராதி பதினொரு திருமுறைகளில் இனித்தனனாகலின் இன்தமிழ் என்றார். தமிழில் இனிக்கானாயின்-பரவையார்பால் தூதுசெல்வனா! முதலையுண்டபாலனை யழைப்பனா! என்பு பெண்ணுருவாய் வரச்செய்வனா! மறைக்கதவைத் திறப்பிப்பனா! ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பாலை உண்பிப்பனா! நாவுக்கரசுகளுக்குச் சூலைநோயைக்கொடுத்து ஆட்கொண்டு கொல்லவந்தயானையை வணங்கச்செய்வனா! நீற்றறையைத் தாமரைத்தடாகம் ஆக்குவனா! விடத்தைஅமுதாக்கி உண்ணச்செய்வனா! கல்லைத் தோணியாக ஆக்குவனா! பரியின்மேல் சேவகனாய் வருவனா! மண்சுமக்க வருவனா! வந்து பிரம்படி படுவனா! சங்கவித்வான்களில் தலைவனாய் இறையனாரென வருவனா! சேரமானருளிய ஆதியுலாவிற்கு மகிழ்ந்து தலையை யசைப்பனா! சங்கப் புலவருக்குத் தமிழைத்தாங்கப் பலகையளிப்பனா, திருமுறைகளைத் தமது பொன்னம்பலத்தில் பண்டாரமாகச் சேமித்து வைப்பனா! திருவாசகத்தையும் திருக்கோவையையும் கைவருந்த எட்டிலெழுதி அடியார்க்கெளியன் சிற்றம்பலவன் கைநாட்டென்று எழுதி யாவரும் அறியச்செய்வனா! காரைக்காலம்மைக்கு மாங்கனி யளித்து அம்மையென்றழைப்பனா! இடைக்காடனார் பிணக்குத்தீர்ப்பனா! இவைபோலும் பலதிருவிளையாடலைச் செய்வனா! செய்யானென்க.

இங்ஙனம் இறைவன் இனித்தசெய்யுட்களைப்போலும் எம்மால் சொல்லப்படும் செய்யுட்களும் அப்பெரியோர்களது அருட்செயல்களைக்கொண்டு இனித்திருத்தலின் இன்தமிழ்ச்செய்யுளாயென்றார். அருட்செயல்களில் கலந்து இனிக்கும் இம்மாக்கதை

இன்றமிழ்ச்செய்யுளாய் நடக்குமேன்மை நமக்குச்செய்திடவே "உலகேலாம்" என்ற சத்திப்பிரணவார்த்த அக்ஷரசகிதமாகிய அடியை இறைவன் அருளினனாகலின் இனி அம்மொழியையேகொண்டு இப்பெரியோர் புராணத்தை முடிக்கத் தடங்கையைந் துடைத் தாழ்செவி நீண்முடிக் கடக்களிறாகிய பிரணவசொரூபரைக் கருத்துளிருத்துவா மென்றார்.

பிரணவசொரூபியாகிய கடவுள், இடையூற்றைச்செய்பவரும் இடையூற்றையகற்று பவரும் ஆகலான், குன்றக்கூறல் முதலிய பத்துக்குற்றங்களையும் போக்கிச் சுருங்கச் சொல்லல் முதலிய பத்தழகினையும் பொருத்துமாறு கரம் ஐந்து, செவியிரண்டு, நீண் முடியொன்று, மதமொன்று ஆனைமுகமொன்று ஆகப் பத்துறுப்புடன் விளங்கும் விநாய கப்பெருமானைக் கருத்துளிருத்துவா மென்றலுமாம்.

இதனால், விநாயகர் வணக்கங் கூறியதேயன்றி, எடுத்துமாக்கதை என்றதனால் புராணத்தின்சிறப்பும், இன்றமிழ்ச்செய்யுள் என்றதனால் செய்யுட்சிறப்பும் எடுத்து காட்டியவாறுமாமென்க. (௩)

திருக்கூட்டப்புகழ்ச்சி.

வேறு.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்
பொதிதல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே.

(எ - து.) வளரும் பருவத்தினையுடைய பிறை அணிந்த சடைமுடியுடைய சிற்சபா நாதரை, ஆதிகாலந்தொட்டுப் போற்றிவரும் நாயன்மார்களுடைய பரிசுத்தமாகிய திரு நாமமென்னும் மலர்களிடத்து நிறைந்துகிடக்கும் இன்சுவைத்தேனை, உண்டுகளிக்கும் சுத்தான்மாக்களுடைய பெரியசபையானது, இறைவனால் விதிக்கப்பட்டிருக்கும் முறைப் படி இவ்வுலகின்கண் பிரகாசித்து வெற்றிகொண்டிருக்கக் கடவது என்பதாம்.

இறைவன் ஆன்மாக்களுக்குத் தான் எப்பொழுதும் உபகரிக்குஞ்செயலை மேற் கொண்டிருப்பவன் என்னும் உண்மைதோன்ற பஞ்சகிருத்தியங்களை அனவரதமும் இயற்றுதற்குரிய தாண்டவம்புரியவல்ல பதி-சிற்சபேசனேயாகலின் மன்றுளார் எனவும், அவ்வுபகாரச் செயலால் ஆணவச்சார்பால் தேய்ந்திருக்குந்தன்மையை யுடைய ஆன்மாக்க ளுடைய அறிவை வளர்விக்குந் தன்மையுடையோன் தானே என்பது தோன்றப் பிறை யை அடையாளமாலையாகச் சடையில் தரித்திருக்கின்றவ னாகலின் மதிவளர் சடைமுடி எனவும், திருத்தொண்டத்தொகையுள் கூறப்பட்டிருக்கும் நாயன்மார்கள் ஆதிசிருட்டிகால ந்தொட்டு வந்த பெரியோரென்பது தோன்ற காலத்தைக்குறித்தற்கிடங்கொடாத தில்லை வாழந்தணர்களை முதலாக எடுத்து ஓதினராகலின் காலத்தைக்குறிக்காது பொதுமை யான் முன் எனவும், பஞ்சகிருத்தியாதிபதியாயும், அஷ்டமூர்த்தியாயும், எங்கும் வியாபி யாயும், விளங்கும் ஒப்பற்றபரம்பொருள் மதிவளர்சடைமுடி மன்றுளானன்றி * வேறு எத்தேவரும் அவ்விறைமைக் குணங்கள் உடையராகாரென்று அவரை யெல்லாம்போற் றாது இறைமைக்குணங்கள் முற்றவுமுடைய அந்த நடராஜனைது மெய்ம்மைசேர்ந்த

* "இருள்சேர் இருவினையும் சேராஇறைவன்" என்னும் குறட்கு - இறைமைக் குணங்கள் இலராயினாரை உடையரெனக்கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின் அவை முற்றவுமுடைய இறைவன்புகழே பொருள் சேர் புகழெனப்பட்டது, என்ற பரிமேலழகர் உரையால் காண்க.

புகழினையே விரும்பிப்போற்றுவதில் நாயகத்தன்மை யுடையோர் அறுபான்மும்மைக் குட்பட்டாரே என்பதுதோன்ற ஒருவர் திருநாமத்தைக் குறிக்காது பொதுமையான் மன்றுளாரைத் துதிசெய் நாயன்மார் எனவும், அத்தகைய நாயன்மார்களது திருநாமங் களைத் தொகுத்தோதிய திருத்தொண்டத்தொகையைப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவா மிக்குடையார் மந்திரமாகக்கொண்டு மயிர்சிலிர்த்து நைந்துருகி மெய்யன்பால் என்றும் விளம்பப் பெறுவார்களாயின் அவர்களைக்கைதவத்தினும், புல்லறிவினும், கற்பனையினும், மையலினும் பொருந்தாவண்ணம்செய்து அத்துவிதானந்த அகண்டபரிபூரணத்தில் நித்தி யமாய் வாழச்செய்வது நிஜமென்பதும், பஞ்சாக்கரம் சிவம்முதலாகிய ஐந்துபொருளைக் குறிக்கும் ஐந்தெழுத்துடையதேனும் சிவமென்னும் ஒருபொருளையே குறிக்கும் ஒரு சொல்லெனப்படும் சிவமந்திரமாய் நிற்பதுபோல் திருத்தொண்டத் தொகையுட்பட்ட நாமங்கள் பலவாயினும் அவையெல்லாம் சிவானந்தானுபூதியைத் தருதற்கு ஒருமந்திர மேயாக விருப்பதென்பதும்தோன்ற ஒருமையால் தூயசொல் எனவும், இறைவனருள் வேண்டி இறைவனடியை யர்ச்சித்தற்கு சிவமந்திரம் மலராயிருப்பதுபோல், அன்பு வேண்டியர்ச்சிப்போர்க்கு நாயன்மார் திருநாமக்கோவையாகிய மந்திரமே மலரென்பது தோன்ற சொன்மலரெனவும், ஸ்ரீ பஞ்சாக்கரத்தில் ஆகமப்பொருள், ஆரணப்பொருள், புராணப்பொருள், ஆனந்தத்தாண்டவப்பொருள், மோனந்தமாகியமுத்திப்பொருள் ஆகிய ஐம்பொருளும் நிறைந்திருப்பதுபோல், சிவஞானசாதனம், சிவப்பேறு, சிவானுபவம், சிவானந்தம் அன்புஎனவே - சிவஞானசாதனத்தாற்சிவப்பேறும், சிவப்பேற்றால் சிவானு பவமும், சிவானுபவத்தாற் சிவானந்தமும், அச்சிவானந்தம் நீங்காதிருக்கச்செய்யவல்ல அன்பும் ஆகிய ஐவகைத்தேனும், பூக்களில் தேன் நிறைந்திருப்பதுபோலும் அந் நாயன் மார்களது திருநாமத்தைக்குறித்த ஒவ்வொருபுராணங்களில் பொதிந்துகிடக்கும் அவ் வருமைதோன்ற உவமைவாயிலாக மலர்போதி நலன் எனவும், மலரின்கண்ணுள்ள தேனை அறுகால்வண்டுகள் கிண்டி யுண்பதுபோல், இறைவன்பால் வரத்தகும் அன்பு ஈதென வுணரவிரும்பும் அவாவுடை அறிவுடையார் அவர்புராணங்களில் ஆராய்ந்துணர வல்லராய் அதிற்காணப்படும் அன்பினையுணர்ந்து தேன்போல் தித்திக்கும் அவ்வன்பின் வயத்தராவா ரென்பது நிச்சயமென்னும் உண்மைதோன்ற நுகர்தநுபுனிதர் எனவும் சிவஞானசாதனம் கைவரப்பெற்றவர் கைவரப்பெறாது அவாவுவதும், சிவப்பேற்றை எய்தப்பெற்றவர் எய்தப்பெறாது வருந்துவதும், சிவானுபூதி அடையப்பெற்றவர் அடையப்பெறாது வாடுவதும், சிவானந்தத்தில் நிற்கப்பெற்றவர் நிற்கப்பெறாது வேண்டு வதும் அன்பைநோக்கியே யாகலான் அவ்வரியஅன்பின் வயத்தராய் அவ்வழியொழுகப் பெற்ற அன்பாளராகிய புனிதரது சபையே பஞ்சசபேசனாகிய இறைவனுக்கு யாவர்க் கும் காட்சிகொடுக்கும் இராஜசபைஎன்பது தோன்ற அவையுட்சிறந்த பேரவையென் றும், "மன்னருள் எவ்வண்ணம் மானுடரின் மாணவக, அன்னவகையே யரனருளும் - என்னில், அடியவரே யெல்லாமும் ஆங்கவர்தாம் ஒப்பில், அடியவரே யெல்லாம் அறி" என்று * சித்தாந்தத்தில் விதித்திருத்தலின், அரனருளை முறையாகவிதிக்கும் அதி காரம்பெற்றுள்ள அடியார்களாகிய அரசர்கள் விதிக்கும் விதிகள் எவையோ அவையே இவ்வுலகின்கண் நிலவப்பெற்று வெற்றியுடன் இருக்கக்கடவனவன்றி ஏனையவையல்ல என்பது தோன்ற விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே எனவுங் கூறினர்.

பத்தராய்ப்பணிவார்கள், பரமனையேபாடுவார், சித்தத்தைச் சிவன்பாலேவைத்தார், திருவாரூர்ப்பிறந்தார், முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசியமுனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் என் றெண்ணப்பட்ட தொகையடியார்கள் பலரும் தனியடி யார்களாகிய அப்பெருமக்களோடு ஒன்றுயெண்ணப்பட்டவரே யாவர் என்னும், அவர்க ளுடைய பெருமையுந்தோன்ற நாயன்மார் எனப் பொதுப்படக் கூறினரென்க.

திருக்களிற்றுப்படியார்.

தூய்மொழிசொன்மலர் என்பதற்கு - திருத்தொண்டர்களது சரிதமென்று கூறுவாரு முளர் சடைமுடியின் கண்ணுள்ள மதி - தேயுந்தன்மையை யுடைய வளர்மதியன்று, வளருந் தன்மையையுடைய பிறையென்று மதித்தற்கு மதிவளர் என்றார்.

இதனால், திருத்தொண்டத்தொகை சிவமந்திரம்போன்ற மந்திரமெனவும், அதனை யோதும் அடியவரது சபை உலகில் வெற்றியுடன் பிரகாசிக்கக் கடவதென்றும் கூறிய வாறுமென்க. (௭)

அவையடக்கம்.

வேறு.

அளவிலாத பெருமைய ராகிய
அளவிலா அடியார்புகழ் கூறுகேன்
அளவுகூட உரைப்பரி தாயினும்
அளவிலாசை துரப்ப அறைகுவேன்.

(இ - ள்.) இதுபோலும் இவர்களதுபெருமையென் றொப்பிடப்படாத பெருமை யுடையவராகிய, அளவில்லாத அடியார்களுடைய கீர்த்தியை யான் எங்ஙனம் சொல்ல வல்லனாவேன், அங்ஙனம் அவர்களது புகழ் எனது சொல்லுட்படுத்திச் சொல்லுவது முடியாதசெயலேயாயினும், (எனது) அளவில்லாத ஆசை (என்னைச்சொல்லுவாயென்று துரத்துவதனால், (யான் சொல்லும்வன்மையை யுடையவனாய்ச்) சொல்லுகின்றேன் என்பதாம்.

சிவஞானிகளாகிய மெய்யன்பர்கள் இறைவனது உபகாரத்தைக் கருதிநைந்து தமது அறிவிச்சைசெயல்கள் யாவும் அவ்விறைவனுக்கே யாக்க, அவ்விறைவன் "தீர்ந்த அன் பாய அன்பர்க்கு அவரினும் அன்பனாகலின்" தனது அறிவிச்சைசெயல்கள் யாவும் அவ் வன்பர்க்கே யாக்குவன், அத்தகைய அளவில்லாத பெருமையோடு வாழும் மேம்பாடுடை யவ ரென்பார் அளவிலாதபெருமையர் எனவும், அங்ஙனம் அன்பர்களோடு ஏகனாகிய இறைவன் அநேகனாய்த் தனது புகழ்களை அவர்களது ஞானச்செயலால் வெளிப்படுத்து கின்றானாகலின் அப்பெரும்புகழ் உடையவரென்பார் அளவிலா அடியார்புகழ் எனவும், அருளாலும் அன்பாலும் இறைவனோடு தாதான்மியமாகிய (கலந்த) அவ்வடியார்களது புகழை, அருளோடும் அன்போடும் கலக்கப்பெறாத எனது அறிவிச்சைசெயல்களைக் கொண்டு யான் எங்ஙனம் எடுத்துக்கூறும் ஆற்றலுடைய னாவேனென்பார் அளவு கூடவுரைப்பரிது எனவும், அளவுகூட வுரைப்பரிது என்று அந்நிலையில் நான் நிற்க, என் ஆசையெழுந்து என்னுட்புகுந்து இடைவிடாது என்னைச்சொல்லுவாயென்று துர த்துவதனால் யான் அதனைத் தடுக்கவறியாது 'ஆசைவெட்கமறியாது'என்பதுபோல், அவ் வாசையின்வழித்தாய் நாணமிழந்து சொல்லத்துணிந்தேனென்பார் அளவிலாசைதுரப்ப அறைகுவேன் எனவுங் கூறினார்.

இதனால் அளவில்லாத பெருமையுடையவர்களாகிய அடியார்புகழை யானே கூற வந்தவன் அன்று, என் ஆசை என்னைத்துரத்த அந்த ஆசையுட்பட்டுச் சொல்லுகிறே னென்று கூறியதாமென்க. (௮)

தெரிவரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொருவருஞ்சீர் புகலலுற் றேன்முற்றா
பெருகுதண்கடல் ஊற்றும் பெருநசை
ஒருசு ணங்கனை ஒக்குந் தகைமையேன்.

(இ - ள்.) யாவராலும் அறிதற்கரிய சிறப்பினையுடைய நாயன்மார்களது ஒப்பற்ற பெருமையை, (யான்) சொல்லத் தொடங்கினேன். (இதனால் யான் எத்தகையனென்று உணருங்கால்,) நீர்ப்பெருக்க மிக்க கடல்முழுவதையும் ஊர்வழியாய்க் கவிழ்க்கும் பேரா சையைக் கொண்ட ஒருநாய்க்குச் சமானமாகும் தன்மையுடையவனயினேன் என்பதாம்.

திருத்தொண்டத்தொகையுட் பட்டாரது செயலெல்லாம், வேண்டுவார்க்கு வேண்டும்பொருளைத் தந்த இறைவனுக்கு, வேண்டும்பொருளைத் தந்த செயற்கரும் செய்கைகளாகலின் தெரிவரும் பெருமையும்,பொருவரும் சீரு மாயிற்றென்க. அத்தகையசிறப்புடை எனதாசைபாற் சொல்லப்புகுந்ததனல் யான் கடலைச்சிறிதாக வெண்ணிக் கவிழ்க்கத் துணிந்த சிற்றறிவுடைய சிறியநாயினுக்குச் சமானமாயினேன் என்க.

இதனல் யான் தொண்டர் சரித்திரத்தைச் சொல்லி முடிக்கவந்தவனன்று. ஏனெனின், அது கடல்போன்றது. யானே நீரைநாவினல் நக்கும் நாய்போன்றவன். ஆகவே அது என்சொல்லான் முற்றுப்பெறுவதின்று. மற்றென்னெனின் எனக்கு வசப்படாதிருந்த என்னைசை தொண்டர்சீரில் முற்றுப்பெற்றிருக்கச் செய்தனனென்று கூறியதாமென்க.

சுணங்களை யொத்த யான் உலகெலாம் என்னும் அருண்மொழியை யுட்கொண்டு பெருகுந் தன்மையினையுடைய தண்கடல் நீர் முழுவதும் நாம்முகந்து உலகினர்க்கு ஊற்றி உபகரிக்கவேண்டும் என எண்ணுகின்ற சுண்ணம் (வெள்ளிய)களை (ஒலிக்கும் மேகத்தை) யொத்துள்ளேனதலின் தெரிவரும் பெருமைத்திருத்தொண்டர்தம் பொருவருஞ் சீர்ப்புகலலுற்றேன் என்று புறச்சமயத்தாரை அடக்கியதுமாம்.

நாலுண்பேனென்று நாவாலுண்ணவந்த நாய்க்குக் கடல் அடங்காததுபோல் இத் தொண்டர்புராணம் என்னுவில் அடங்காததன்று. ஏனெனின், உலகெலாமென்று அருளாற்கூறிய அவ்வருண் மொழியையேகொண்டு இப்புராணக்கடலை அடியேன் நாவாற் கூறவந்தனதலின் யானுண்ணப் பெறுவானயினேன். அன்றி இறைவன் உலகெலாம் என்னும் ஓர் மொழியிலடக்கி எடுத்துக்கொடுத்தானகலினனும் அது, என்னுவிலடங்கி நிற்றலானும் அம்மொழியிலடங்கியுள்ள தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர்தம் பொருவருஞ்சீர் ஏன்புகல வல்லேனகேன்; அத்துணிபான் புகலலுற்றேனென்றார்.

அல்லதூஉம், வேதமாகிய கடலிலுள்ள பொருளெல்லாம் ஐந்தெழுத்தில் அடங்கியுள்ளதுபோலும் உ-ல-கெ-லா-ம் என்னும் ஐந்தெழுத்தில் பெரியோர்புராணம் அடங்கியுள்ளதாகலின் பஞ்சாக்கரத்தை ஓதப்பெற்ற அடியேனதுநாவால் உலகெலாமென்னும் ஐந்தெழுத்திலடங்கியுள்ள பெரியபுராணத்தையுஞ் சொல்லவல்லனவேன் என்பதுமாம்.

அல்லதூஉம், மலமாகும் உடலூண் உண்ணுதற்கு உதரம் இடந்தாராது. சிவமாக்கும் உயிரூண் உண்ணுதற்கு உள்ளம் இடந்தரும்.

ஆகலான் உலகெலாமென்னும் சிவமாக்கும் அருண்மொழி என்னுள்புகுந்து என்னைச்சிவமாக்கியபடியால் யான் சொல்லவல்லே னென்பதுமாம். (க)

செப்ப லுற்ற பொருளின் சிறப்பினல்
அப்பொருட்குரை யாவருங் கொள்வரால்
இப்பொருட் கென்னுரை சிறிதாயினும்
மெய்ப்பொருட்குரி யார்கொள்வர் மேன்மையால்.

(எ - து.) (ஒருவன்) சொல்லத்தொடங்கிய பொருள் சிறப்புடைப்பொருளாய் சொல் சிறப்புடையன அல்லவாயிருப்பின் அச்சொல்லைக் கருதாது அச்சிறப்புடைப் பொருளைநோக்கி, அப்பொருளுக்குரிய சொல்லைச் சிறப்புடைச்சொல்லாக யாவரும் சேர்த்துக்கொள்வார்கள். (அஃதேபோல், இத்திருத்தொண்டத்தொகையுட்படும்) அரிய பொருளுக்கு எனதுசொல் சிறுமையுடைத்தாயினும், மெய்ம்மைப்பொருளுக்கு உரிமையாயுள்ளவர், (சொல்லின்சிறுமையை நோக்காது, அச்சொல்லில் அமைந்திருக்கும்) பொருளின் மேன்மை ஒன்றையேகருதி அச்சொல்லையும் மேன்மையாகவே கொள்வார் என்பதாம்.

இதனால் பொருளின் சிறப்பு சொல்லான் விளங்கப்பெறுமாயின் அச்சொல் சிறப்புடைச்சொல்லே யாமெனவும், சிறப்பை விளக்காதாயின் அச்சொல் சிறப்புடைத் தன்றாமெனவும், சொல் சிறப்புடைத்தாயும் பொருள் அஃதின்றாயிருப்பின் அச்சிறப்புச் சொல்லால் அப்பொருள் சிறப்புடைத் தன்றாமெனவும், பொருட்சுவை நோக்குவோர் சொற்சுவை நோக்கார் எனவும், சொற்சுவை நோக்குவோர் பொருட்சுவை நோக்காரென வும், சொற்சுவை நோக்கிப் பொருட்சுவை நோக்காதோர் அறிவிற் சிறியாரெனவும், பொருட்சுவை நோக்கிச் சொற்சுவை நோக்காதோர் அறிவிற் பெரியாரெனவுங் கூறுவர் நல்விநோக்குடையார் எனவும், அருள் நோக்குடையார் சொற்சுவையால் பொருளுக்குச் சுவையும், பொருட்சுவையால் சொல்லுக்குச் சுவையும் உளவாம், ஆகலின், அவ்விரு சுவையும் சுவையாகக்கருதாது, அச்சொல்லிலும் பொருளிலும் அருட்சுவை யொன்றையே காண்பர் எனவும், அங்ஙனங் காணப்பெறின் இது சுவையுடையசொல் என்று சொல்லை வேறுபிரித்தும், இது சுவையுடைய பொருள் என்று பொருளை வேறுபிரித்தும் பார்க்கஅறியாது, அருளுடைச் சொல்லில் அருளுடைப்பொருளைச் சுவைத்தும், அருளுடைப் பொருளில் அருளுடைச்சொல்லைச் சுவைத்தும் இன்புறுவரெனவும், விதந்து சுவை இத்தன்மைத்தெனவும், சுவைப்போர் இத்தன்மையரெனவும் விளக்கியவாறுமாம்.

அல்லதூஉம், சுவையுடைச் சொற்குச் சுவையுடைப் பொருளும், சுவையுடைப் பொருட்குச் சுவையுடைச் சொல்லும் ஆய்ந்துணர்ந்து களிக்கவல்ல அறிவுடையோரினும், மெய்ப்பொருட்குரியார் மேன்மையால் இந்நூலைக்கொள்வரென்றார். எனவே அன்பைவேண்டி மெய்ப்பொருளைநோக்கும் உரிமையுடையோர்க்கு இப்புராணத்துள் அவர் வேண்டும்அன்பும், அவர்நோக்கும் மெய்ப்பொருளாகிய அருளும், உலகெலாம் என்னும் அருண்மொழிப்பொருளோடு இந்நூலிற் பொதிந்துகிடத்தலின் அம்மேன்மை நீடக் கருதிக் கொள்வரென்றார்.

இதனால் கற்பவை-கசடறக் கல்லாதாரும், கற்றபின் - அதற்குத்தக நில்லாதாரும், ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான் அடங்காப் பேதையாரும், கற்றதனாலாய பயனாகிய வாலறிவன் நற்றாளைத் தொழப் பெறாதாரும் இந்நூலைக் கொள்ளாரென்றும், கற்பவை கசடறக்கற்றாரும், கற்றபின் அதற்குத்தக நின்றாரும், ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான் அடங்கும் அறிவிற்பெரியோரும், கற்றதனாலாய பயனாகிய வாலறிவன் நற்றாளைத் தொழப்பெற்றாருமே இந்நூலை மேன்மையாகக் கொள்வாரென்றும், எனவே-கற்பவைக் கசடறக் கல்லாதார் முதலாயினார் சிவனருள் விரவப்பெறாதவராகலான் அவரெல்லாம் இந்நூலைச் சிறப்பாகக் கொள்ளாரென்றும், கற்பவை கசடறக்கற்றார் முதலாயினார் சிவனருள் விரவப்பெற்றவராகலான் அவரெல்லாம் இந்நூலைச் சிறப்பாகக் கொள்வரென்றுங் கூறியவாறாம். (௭)

மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேயவன் திருப் பேரம்பலம் செய்ய
தூய பொன்னணி சோழ னீடுழிபார்
ஆயசீர் அனபாயன் அரசவை.

(பொ - ரை.) பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனிப் பொலிந் திலங்குவோனாகிய நடேசபெருமானது பேரம்பலமாகிய சபையை, மாற்றுயர்ந்த பசும்பொன்னாற் பொலிவுபெறச்செய்த திருநீற்றுச்சோழனென்னும் தீக்ஷாநாமமுடையனாய், எந்த ஊழிக்காலத்தும் பரவிக் கிடக்கவல்லதாகிய கீர்த்திவாய்க்கப்பெற்ற அநபாயச் சக்கிரவர்த்தியினது சபையானது, 'உலகெலாம்' என்னும் பொன்மொழியை முன்னாகப் பொருந்தப்பெற்ற இப்புராணத்தைத் தலைமையாகக்கொண்டு போற்றாநிற்கும் என்பதாம்.

சேயவன் திருப்பேரம்பலம் எனத்தொடுத்து அரசவை மேய இவ்வுரைகொண்டு விரும்பும் எனக்கூட்டுக.

அநபாயச்சோழரென்னும் அரசர்பெருமானார், அன்னம்பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலமாகிய பேரம்பலம் பொன்னம்பலமாய்ப் பொலிவுபெற்றோங்கச் செய்ததுபோல் "குனித்தபுருவமும் கொவ்வைச்செவ்வாயும் குமிண்சிரிப்பும், பனித்தசடையும் பவளம் போல் மேனியும் பால்வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால், மனித்தப்பிறவியும் வேண்டுவதே யிந்தமாநிலத்தே" எனவும் "வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்" எனவும், மதித்து வேண்டிய பிறவியை இப்பூமிசையிற் பெற்ற அறிவுடையார்க்கு அன்புண்டாய், அவ்வன்பால் அவர்கள் களித்தோங்குமாறு இப்புராணத்தைச் செய்தருள, சேக்கிழார் பெருமானாரை வேண்டினாராகலின் அநபாய னரசவை இவ்வுரைகொண்டு விரும்பும் எனவும், பேரம்பலம் பொன்னால் மேய்ந்தமைபோல் இப் பெரியபுராணமும் 'உலகெலாம்' என்னும் அருண்மொழியான் மேவப்பெற்றமையான் மேய இவ்வுரைகொண்டு எனவுங்கூறினார்.

இதனால் பேரம்பலத்தைப் பொன்னாக்கியதால் பொருட்செல்வத்தால் அடைப்படும்புகழையும், இப்புராணம் வெளிவரச்செய்த காரணத்தால் வரப்படும் புண்ணியத்தோடு ஞானத்தையும் பெற்றுப் பிரகாசிப்பது அரசனது சபையென்று வியந்து மகிழ்ந்து கூறப்பட்டது.

அநபாயன் எனவே - தானும் அபாயமற்றவன், பிறருக்கும் அபாயத்தைப்போக்கு கின்றவன் என்க. (அ)

அருளினீர்மைத் திருத்தொண் டறிவரும்
தெருளினீரிது செப்புதற் காமெனின்
வெருளின் மெய்ம்மொழி வானிழல்கூறிய
பொருளினாகும் எனப்புகல் வாம் அன்றே.

(எ - து.) (சொல்லப்புகுந்த) திருத்தொண்டினியல்பு, (சிற்றுணர்வால்) அறிதற்கரிய அருட்டன்மையைப் பெற்றுள்ளது, (ஆகலின் இத்திருத்தொண்டினியல்பை) உம்முடைய அறிவினால் சொல்லுவதற்குக் கூடுமோ, என்றால், (எவ்வாற்றானும்) மயங்குவதற் கிடனில்லாத மெய்ம்மொழியைக் கூறவானாகிய இறைவன்கூறிய பொருளினால் என்னறிவைக்கொண்டு சொல்லக்கூடுமென்று சொல்லுவோமாக என்பதாம்.

திருத்தொண்டு அறிவரும் அருளினீர்மைத்து எனக்கூட்டுக.

அருள்வேண்டுவோரால் செய்யப்பட்ட திருத்தொண்டாயிருப்பின் சொல்லக்கூடும் அருளுடையாரால் செய்யப்பட்ட தொண்டாயிருத்தலின் அது சொல்லப்படும் தன்மையுடைத்தன்று என்னுஞ் சிறப்புத்தோன்ற திருத்தொண்டு அறிவரு அருளின் நீர்மைத்து என்றார். அருளினீர்மைத் திருத்தொண்டை, அருளினீர்மையுடைய அருள்மொழிபெற்றாரால் சொல்லக்கூடுமேயன்றி, அஃதில்லாதார் சொல்லக்கூடுந்தரத்ததன்று என்னும் சிறப்புத்தோன்ற தெருளினீர் இது செப்புதற்கு ஆம்! எனின் என்றார். எனவே, ஆகா எனத் தம்மைத்தாமே பிறர்வினாவும் வினாவாகக் கூறினார். யான் அருளிலனாகலின் தெருளிலன் என்பது திண்ணம். திண்ணமாயினும் திருப்பேரம்பலம் செய்ய தூய பொன்னணி யாக்கிய சோழனாகிய அநபாயன் அரசவை இவ்வுரைகொள்ள விருப்புற்றிருத்தலின், அவ்விருப்பினைச் செம்பொன் அம்பலத்தில் வீற்றிருக்கும் செம்மேனியனாகிய இறைவன் தான்முன்னின்று முடித்தல் கடனாகவெண்ணி அவ்வவையை வேண்டியபடியே அருள்செய்யப் பரமாகாசசரீரியாய் 'உலகெலாம்' என்னும் அருண்மொழியை யானுணர்ந்தோத அருளினான் என்னும் அவ்வருட்சிறப்புத்தோன்ற மெய்ம்மொழி வான் நிழல்கூறிய என்றார். அம்மெய்ம்மொழி என்னளவேயன்றி உயர்ந்தோரெல்லாம் யாதொரு மயக்கமுமின்றிச் செவிப்புலனாற் கேட்டுணர்ந்த அச்சொல்லின் பொருளே யாம் என்னுரையென்று மகிழ்ந்து கூறச்செய்த அச்சிறப்புத்தோன்ற வெருளின் பொருளினாகும் எனப்புகல்வாம் என்றார்.

தொண்டாற்பெறும் அருள், அருளாற்பெறுந்தொண்டு என இரண்டு. அவ்விரண்டனுள் சரியை கிரியா யோகங்களைச்செய்து அவ்வழியாற்கூடும் அருளால் ஞானத்தைப் பெறுதல் தொண்டாற்பெறும் அருள். ஞானம் வரப்பெற்ற பின்னர் அவனது பெருங் கருணைத்திறத்தைநாடி அன்புவேண்டிச் சரியைகிரியைகளைச்செய்து மனமுருகி அவ்வன் பினையே பெறும்பேருகப் பெற்று மகிழ்தல் அருளாற் பெருந்தொண்டு. ஆகவே. தொண்டரென்னும் பெரியதிருநாமம் வாய்க்கப்பெற்ற நாயன்மார்களாகிய ஞானசீலராற் செய்யப்பட்ட தொண்டு அருளாற்பெற்ற தொண்டென்று குறித்தற்கு அருளினீர்மைத் திருத்தொண்டென்றும், இத்தொண்டைச் சொல்லப்புகுந்த யானும் அருளாற்பெறுந் தொண்டையேவேண்டும் அறிவுடையனுயுள்ளேன் ஆகலின் என்பாலும் அவ்வன்பு நின்று அத்தொண்டைச் சொல்லுந்திறத்தை யுண்டாக்கி முற்றுப்பெறச்செய்யும் என்பதில் ஐயமின்று என்னும் அத்திண்மையைக் குறித்தற்குத் தெருளின் இது செப்புதற் காமென்றார், † "எண்ணிய வெண்ணியாங் கெய்துப எண்ணியார், திண்ணிய ராகப் பெறின்" என்ற உறுதிமொழிப்படி யான் அங்ஙனமே நிற்கும் அருளைப்பெற்றேனுகலின் அவ்வருளாளனுகிய எமதிறைவனும் வேதசிவாகமங்களாகிய மெய்ம்மொழிகளைக் கூறிய திருவாக்கான் நீ யாவும்சொல்லி முடிப்பாயென்று உலகெலாமென் றருளினனென்று குறித்தற்கு வெருளின் மெய்ம்மொழி வான் நிழல்கூறிய பொருளினுகும் என்றும் கூறினர்.

இதனுல் - சொல்லப்புகுந்த திருத்தொண்டும் அருளினீர்மைத்து, யானும் அவ்வருளினீர்மைத் திருத்தொண்டையே வேண்டிய அருள்தொண்டன், எனக்கு அருளியமொழியும் அருளினீர்மைத்து, ஆகலின் அம்மொழியையே முதலாகக்கொண் டெழுந்த இப் பெரியபுராணமும் அருளினீர்மைத்தென்று வலியுறுத்தியவாறு காண்க. (க)

நூற்பெயர்.

வேறு.

இங்கிதன் நாமங் கூறின் இவ்வுல கத்து முன்னாள்
தங்கிருள் இரண்டின் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை வௌிப் புறவிருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்.

(எ - து.) (சிறப்புபெசனது சந்நிதானமாகிய) இவ்விடத்தில் இப்புராணத்தினது திருநாமத்தைச் சொல்லப்புகின், ஆதிகாலந்தொட்டு இவ்வுலகத்துள் தங்கிவருகின்ற புறவிருள் அகவிருள் என்னும் இரண்டனுள், ஆன்மாக்களுடைய சித்தத்தினுள்ளே சார்ந்து அதிகரித்து நிற்றலையுடைய அஞ்ஞானவிருளை, மற்றொன்றாகிய புறம்பே காணப்படும் இருளை யோட்டுகின்ற செவந்தகிரணங்களையுடைய சூரியனைப்போலப் போக்குகின்ற திருத்தொண்டர் புராணமென்று சொல்லுவோமாக என்பதாம்.

மாக்கள் சிந்தையுட் சார்ந்துநின்ற பொங்கிய இருளை நீக்குந்திருத்தொண்டர்புராணமென்பாம் எனக்கூட்டுக.

ஏனையபுராணங்களெல்லாம் இருவினையுட்பட்டு உழல்வோரது மருட்செயலையும், அச்செயலால் சுவர்க்க நரகங்களிற்பட்டு நிலைபெறுது மேலும் கீழும் அலைவதாகிய செயலையும், அவ்வலைவுக்கே இருள்சேர் இருவினையுஞ் சேராதுகிய இறைவனை நோக்கித் தவவிரதாதிகளாகிய அவச்செயல்களைப் பன்முறையும் செய்துசெய்து அவ்விறைவன்பால் அவபோகங்களையும், அவயோகங்களையும், பெற்றுவாழ்தலாகிய நிலையில் செயல்களையும், கூறுவனவேயாமென்னும் அச்சிறுமைதோன்ற இப்புராணத்தைத் திருத்தொண்டர் புராணம் என்பாம் என்றார். எனவே அவமாகும் பதங்களைத்தரும் அவச்செயல்களைச்

† திருக்குறள், அதி - ம், வினைத்திட்பம்.

செய்யாது தவமாகும் சரியையாதி அருட்செயல்களை எல்லை இல்லாமற்செய்து அவற்றுன் சிவபோகங்களையும், சிவயோகங்களையும் பெற்றுவாழ்தலாகிய அழிவில் வாழ்க்கையையும், *"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால், வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது, வேண்டினது, வேண்டாமை வேண்டவரும் என்றமையால், வேண்டிடுக வேண்டாமை வேண்டும் அவன்பால்" என்ற சித்தாந்தவாக்கியத்தின்படி இறைவன்பால் தாம் ஒன்றையும் வேண்டாது பிறவிக் கிடஞ்செய்யும் தம்மாட்டுள்ள வெல்லாப்பொருள்களையும் அவ்விறைவன் வேண்ட அவ்விறைவன் வேண்டியவாறே யானென தென்பதற்று அப்பொருள்களைக் கொடுத்து அவனைமகிழ்வித்து அம்மகிழ்ச்சியைக்கண்டு மகிழ்ந்திருந்த அன்பின்செயலையும் விளக்குதலான் இங்கித நாமங்கூறின் திருத்தொண்டபுராணம் என்பாம் என்றார். அரங்கேற்றியவிடம் நடராஜப்பெருமானது சபையென்பது தோன்ற இங்ஙனவும், இப்புராணம் திருத்தொண்டத்தொகையை முதலாகக்கொண்டு பாடியதாகிய அக்குறிப்புத்தோன்ற இதனையும் திருத்தொண்டபுராணம் எனவும், இப்புராணத்தாற் பெறப்படும்பயன் இது என்னும் குறிப்புத்தோன்ற சிந்தையுட் சார்ந்துநின்ற பொங்கியஇருளை நீக்கும் எனவும், அவ்விருள் சூரியனைக்கண்டு நாடோறும் ஓடுகின்ற புறவிருள்போல் ஓடுதலின்றி அநாதிதொட்டு இன்றளவும் நீங்காது அகத்தேபொங்கியிருந்த இருளை இப்புராணமானது எங்கும் நிறைந்திருந்த புறவிருளை எப்புறத்தும்தோன்றுவண்ணம் சூரியன் உதித்தவுடன் போதல்போல் இப்புராணத்துட்பிரகாசிக்கும் சிவஞானமும் அருளும் அன்பும் ஆன்மாக்கள் சிந்தையுள் தோன்றியவுடன்முறையே, பொறி புலன் வழியாய்ப் பரவிக்கிடந்த கன்மமலவிருளும், ஆன்ம அறிவிற்பரவிக்கிடந்த ஆணவமல விருளும், பறந்தோடுமென்னும் குறிப்புத்தோன்ற எனைப்புறவிருள் போக்குகின்ற செங்கதிரவன்போல் எனவும் கூறினர்.

இதனன் இறைவன் பணியாகிய தொண்டன்றி வேறொருபணியும் செய்யவறியாதவன்றொண்டர்களது புராணமாகலின் தொண்டர்புராணமெனவும், இது எவ்வொளியானும் எவ்வாற்றானும் போக்குதற்கரிய அநாதியான ஆணவாதி இருளைப் போக்குதலின் ஞானசூரியனெனவும், ஞானசூரியனாய் விளங்கும் இப்புராணம் இறைவன் உருவத்திருமேனிகொண்டு வேதசிவாகமங்களைக் கூறியருளியதுபோற் கூறாமல் அசரீரியெனப்படும் சொரூபத்திருமேனியனாய் உலகெலாமென் றருளினனாகலின் பதினூல்களிற்சிறந்த அருணூலெனப்படும் பெரியபுராணமெனவும் அறிவுறுத்தியவாறுமென்க.

நூற்பெயர் கூறியதேயன்றி சிந்தையுட்சார்ந்துநின்ற பொங்கியஇருளைப் போக்கும் எனப்பயனும் உடன்தோன்றக் கூறியதனுல் இறைவன், தனது ஆணையெனப்படும் சத்தியினுல் இயக்கப்படும் இருவினைகளையும், அவற்றின்பயன்களையும், அவையொழியும் வகையும், வேதமொழியாற் கூறினனெனவும், அவையிற்றை அந்நூலால் உணர்ந்த பின்னர் இருவினைகளை யியற்றுவோனும், அவற்றின்பயன்களை நுகர்வோனும், நுகர்ந்த பின்னர் அவைகளினின்றும் வேறுபடுவோனும், ஆன்மாவேயாமென ஆன்மப்பிரகாசத்தை வேதாந்தத்தாற் கூறினனெனவும், வேதாந்தத்தால் ஆன்மாவைப்பிரகாசமாயறிய வந்தபின்னர் அவ்வான்மாவுக்கு மலபரிபாகமும், சத்திநிபாதமும் உண்டாதற் கேதுவான சாதனங்களையும், அச்சாதன விசேடத்தாற் பிரகாசப்படும் சிவப்பிரகாசத்தையும், ஆகமத்தாற்கூறினனெனவும், அச்சிவப்பிரகாசத்தால் அருட்பெருக்கமும், அவ்வருட்பெருக்கால் அன்பின் நிறைவும் உண்டாமென்பதை இந்நூலாற் கூறினனெனவும் அறியக் கிடக்கின்றமைகாண்க.

பாயிரச்சிறப்பு.

1, "உலகெலாம்" என்னும் முதற்செய்யுளால் இப்புராணத்துக்கு இறைவனும் இறைவனருளும் அவனருள்மொழியும் முன்னிற்குஞ்சிறப்பைக்கூறினர்.

திருக்களிற்றுப்படியார்.

"ஊனடைந்த" என்னும் இரண்டாஞ் செய்யுளால் உயிர்க்கு உறுதியெனப்படும் மாநடனத்தை யான் தொழுவதற்குக் காரணமாயது யானடையப்பெற்றுள்ள ஊனடைந்த பிறவியன்றே எனப் பிறவியின் சிறப்பைக் கூறுவர்போன்று நடனச்சிறப்பைக்கூறினர்.

"எடுக்குமாக்கதை" என்னும் மூன்றாஞ்செய்யுளால் இறைவனையும், அவனருளையும், அவன்வாய்மொழியையும், இந்நூல்பெறப்பெற்றதனால் இனிஅந்நூலை முடிக்குங் கடமைப்பாடு என்னுடையதன்று, அவன்மகனாகிய மூத்தபிள்ளையாருக்கே என்று அக்கடவுளை வழுத்துவார்போன்று அவர் தாமாகவே கடமைப்பாடுள்ளா ரென்னும் அச்சிறப்பைக்கூறினர்.

"மதிவளர்" என்னும் நான்காஞ்செய்யுளால் இப்புராணம் நிர்விக்கினத்தை மேற்கொண்டதாகலானும், அனைத்துயிர்க்கும் உறுதியாகிய இகத்தையும் பரத்தையுங் கொடுக்கும் இறைவன் ஆன்மாக்களுக்கு முத்திநெறியாகிய பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி ஆண்டருளத் திருவுளத்தெண்ணிக் கொண்ட சங்கமகோலமுடையாரது திருநாமத்தை யுச்சரித்து அவர்காட்டிய நன்னெறியின் சுவையினைக் காணப்பெற்றாரது கூட்டப்புகழ்ச்சியேயாகலானும், அருகூட்டத்தவர்களது சபை* "தாமடங்க இந்தத் தலமடங்கும் தாபதர்கள் தாமுணரில் இந்தத் தலமுணரும், தாமுனியில் - பூமடந்தை நில்லாள் புகழ்மடந்தை போயகலும், நாமடந்தை நங்காள் நயந்து" என்றபடி வெற்றியுடன் பிரகாசிக்கும் என்னும், அச்சிறப்பையும் கூறினர்.

"அளவிலாத" என்னும் ஐந்தாம் செய்யுளால் எவ்வகைத்தான தேவரிடத்தும், எவ்வகைத்தான ஏனைச்சிறப்புடையாரிடத்தும், தான் ஒருபொருளையும் வேண்டாது, அவரவர்வேண்டும் பொருளை வேண்டியாங்கருளும் பெரும் வள்ளலாகிய இறைவன் உண்ணும் உணவாதிகளை விரும்பும் வேட்கையைக்கொண்டு வேண்ட, அவர் வேண்டியவாறே வேண்டிவேண்டி யளித்த பெரும்புகழுடையாராகிய எம்பெருமக்களையும், அவர்களதுபுகழையும், அளவுபடுத்திக் கூறும் வன்மையுடையார் இவ்வுலகின்கண் எவரிருக்கின்றனர் இல்லை! முக்காலத்தினுமில்லை!! ஆகவே, அப்பெரியார்களது புகழை யான் சொல்லவல்லேனென்று கூறுவேனாயின் அச்சொல் அவையடக்கம் வேண்டுவோர்க்கு அது அவையடக்கத்தைக் காட்டுமோ காட்டா. ஆகலான். என்றுரையால் சொல்லவல்லேன் என்றேன் என்றார். எனவே அறிவிற்சிறந்த அவையார் ஆசையை யடக்க எண்ணார்; எண்ணுவாராயினும் அவ்வாசை அடங்குந்தன்மை யுடைத்தான தன்று. அதனை யானே அடக்கத் துணியினும் பிறர் அடக்கத்துணியினும், பின் யான் சொல்லவேண்டிய புராணத்துக்குத் துணையாய்நின்று முற்றுப்பெறச்செய்வதற்குத் துணை யாது? ஆகலான், அவையாரெல்லாம் எனது ஆசையையடக்குதற்கு எண்ணாது ஆசையை அதிகரிக்கச்செய்வதற்கே விருப்புடையவரா யிருத்தல்வேண்டுமென்று அவையடக்கங் கூறுவார்போன்று அடக்கம் வேண்டாமையாகிய சிறப்பைக்கூறினர்.

"தெரிவரு" என்னும் ஆறாஞ்செய்யுளால் என்னாசை எனக்குத் துணையாய நிற்கப்பெற்றதனால் இந்நூலைச் சொல்லிமுடிப்பே னென்னும் ஆசையை யுடையவனா யிருக்கின்றேன். எல்லாப்பொருளையும் தன்னுள் அடக்கும் ஆற்றலையுடைத்தானது ஆசை; அவ்வாசையையடக்க வல்லமையுள்ளபொருள் உலகில் ஒன்றேனுங்கிடையா, அங்ஙனமிருக்க அவ்வாசை அடியார்புகழைக் கூறத்தொடங்கிய இக்காலத்து அப்புகழ் அவ்வாசையை நாய்போலாக்கி அடக்கிற்று. எனவே அப்புகழ் கடல்போலாயிற்று. ஆசை நாய்போலாயிற்று என்க. அஃதாவது, திருத்தொண்டரது புகழ் தெரிவரும்பெருமையாய்க் காணப்பட்டதனாலென்க. என்னையெனின், ஆன்மாக்கள் மூவகையின ரென்றும், மலங்கள் மூவகையென்றும், அம்மலங்கள் அம்மூவகை யான்மாக்களிடத்து முறையே ஒன்று,

* திருக்களிற்றுப்படியார்.

இரண்டு, மூன்ருகப் பற்றியிருக்குமென்றும், அவற்றை இறைவன் கருணையால் தனது அறிவானும், தனது அருளுருவானும், அவர்போன்ற உருவானும் போக்கிச் சிவப்பே றெனும் தனதுபேற்றை அளிப்பாரென்றும் சிவாகமங்களிற் கூறப்பட்டுள்ளன. அங்ஙனங்கூறியபடி அத் திருத்தொண்டர்களிடத்து நிகழ்ந்த செய்திகள் காணப்பட்டனவோ இல்லை. அஃதாவது அவர்கள் பாசவசப்பட்டுத் தம்மையும் காணுது இறைவனையுங் காணப்பெருது இருந்தனர் என்பதுமில்லை. இறைவன் மேலே சொல்லியவாறு மூவகையுருவான் அவர்களுக்கு அப்பாசத்தைப் போக்கினனென்பது மில்லை. போக்கியபின்னர் தமது சிவப்பேற்றை யளித்தாரென்பதுமில்லை. அவர்கள் அப்பேற்றைப் பெற்று மகிழ்ந்தாரென்பதுமில்லை. மற்றென்னெனின், இவர்கள் வசமாய்ப் பாசப்பொருள்களெல்லாம் கிடந்தனவென்றும், அப்பொருள்களையெல்லாம் இறைவன் தான்பெறும் அரியபொருளாகப் பெற்றுக்கொண்டன ரென்றும், அவர்கள் செய்யும் அருட்செயலைக் கல்லையும், கமரையும், வாளையும், சாணையையும், சூதாட்டுக்கருவியையும், போரிற் றூங்கும் கேடகத்தையும், இவைபோன்ற பலவுறுப்புகளையும் இறைவன் தம்முருவாகக் கொண்டு முற்றுப்பெறச்செய்தனரென்றும், செய்தபின்னர் செயற்கருஞ் செய்கையைச்செய்பவனுக இறைவன் தம்மையெண்ணுது அவர்களைநோக்கி "செயற்கருஞ்செயலைச் செய்த தீரர்களே" என்று அவர்களைப்போற்றி நீங்கள் எம்மைவிட்டு நீங்காது எம்முடன் வாழவேண்டும், எம்முடன் நிற்கவேண்டும், என்று, வேண்டினரென்றும், அவர்களும் வேண்டியவாறேவாழ்ந்து நிற்கின்றனரென்றும், அறியவருகின்றபடியால் அவர்களது திருத்தொண்டு நேர்வருப் பெருமையையே வுடைத்தாயிற்றென்க.

இதனுல் மூவகை யான்மாக்களுள் இவர்களை ஒன்றுகச் சேர்த்தற் கின்மையால் இவர்கள் எவ்வகையினரென்றும், இவர்களால் ஆளப்பட்ட பொருள்களெல்லாம் பாசப்பொருள்களாகவே யிருக்க அவைகளையெல்லாம் பாசநீங்கிய விமலன் தாம் வேண்டும் பொருள்களாகவேண்டிப பெற்றுக்கொண்டதனுல் அப்பொருள்கள் எவ்வகைத்தான பொருள்களென்றும், இவர்களிடத்திருந்த பொருளெல்லாம் இறைவன் வேண்டும் பொருளாகவே யிருந்தனவன்றி வேண்டாப்பொருள் ஒன்றுமின்றுக அவ்விறைவன் திருவுருக்கொண்டு இவர்களிடத்துவந்து போக்கியது எதுவென்றும், அங்ஙனந்திருவுருக் கொண்டுவந்தவுருவம் அறிவுருவத்தும், அருளுருவத்தும் ஆட்கொள்ளவந்த அவர்போன்ற வுருவத்தும் சேராமல் கல்முதலாகச் சொல்லப்பட்ட உருவமாய் வெளிப்பட்டமையால் இவ்வுருவங்கள் எவற்றேடு எண்ணப்பட்ட வுருவங்களென்றும், இவ்வகைத்தான உருவங்களால் ஆளவந்தாரென்பதை எண்ணிப்பார்க்குங்கால் அவ்விறைவன் அவர்கள்பால் வந்து தாம்வேண்டும் பொருள்களைக் குறித்துக் கேட்டுப்பெற்று அவர்களைப்புகழ்ந்து அவர்களை உலகறியச் செய்தபுகழ் வெளிப்பட்டதேயன்றித் தாம் அவர்களுக்கு ஏதேனும் வேண்டிய பொருள்களைக் கொடுத்துத் தம்புகழை உலகறியச் செய்ததின்மையால் இவர்களது செயல் எதனோடு எண்ணப்பட்ட செயலென்றும், இவர்கள்பால் இறைவன் பெற்றது இது இதுவெனத் தெரியவந்ததேயன்றி அவ்விறைவன்பால் இவர்கள்பெற்றது இது இதுவென்று எண்ணவும் சொல்லவும் தெரிவரிதாய்ப் போனபடியால் என்னுசை நாய்போலாயிற்று என்று தன்னைக் குறைப்பார்போன்று தொண்டர்சிறப்பையும் அவர்களது தொண்டின் சிறப்பையும், அவ்விருவகைச் சிறப்பேயன்றி, கடல்நீரை ஊரிலுள்ளார்க்கு ஊற்றி உபகரிக்க எண்ணிய நாய் அது முடியப்பெருமை கண்டபோதினும் அக்கடல்நீரை உண்ணவெண்ணிய ஆசைநீங்கப்பெருது அந்நீரை நாவினுல் நக்கத்துணிவதுபோலும் தொண்டர்சீர் தெரிவரும் பெருமைத்தாயினும் எனது ஆசை எனது நாவினுல் சொல்லத்துணிந்தது என்னும் தனது ஆசையின் சிறப்பைக்கூறினுர்.

"செப்பலுற்ற பொருளின் சிறப்பினுல்" என்னும் ஏழாஞ்செய்யுளால், எனது நாவினுல் சொல்லப்பட்ட சொல் சிறப்பிலதாயினும், அச்சொல்லின்கண் காணப்படும் பொருளில் எனது ஆசை பெரிதாய் அச்சொல்லையும் பெரிதாகவெண்ணி மேலும் என்னை

சொல்லச்செய்வந்த நானறிகின்றமைபோல் திருத்தொண்டிலிருக்கும் மெய்ப்பொருளுக்குரிய பொய்யடிமையில்லாத புலவர்கள் திருத்தொண்டிலிருக்கும் மெய்ப்பொருளை எமக்குக்காட்டுகின்ற இச்சொல்லைச் சிறிதென்றெண்ணப்படுமோ! படா! பெரியதினும் பெரிதே என்றுமதித்து எனதாசைபோல் தமது ஆசையைப்பெருக்கி என்சொல்லோடு அதன்கண் ணமைந்துள்ள பொருளையுங் கொள்வார்கள் என்று மெய்ப்பொருட் குரியாரைத் தமதுசொல்லைக் கொள்ளுமாறு சொல்லுவதுபோன்று நீவிர் மெய்ப்பொருளமைந்த எனதுசொல்லாகிய இப்புராணத்தைக் கொள்ளாதொழிவீராயின் நீவிர் மெய்ப்பொருட் குரியீர் என்பதுபோலியேயாகும் என்று அவரது ஆசை, சிறப்புடைத்தன்றென்பதையும், தமது ஆசையே சிறப்புடைத் தென்பதையுங் கூறினர்.

"மேய் இவ்வுரை" என்னும் எட்டாஞ்செய்யுளால், மீண்டும் மெய்ப்பொருட்குரியாரைநோக்கிப் புலவீர்காள்! என்னுசையாற் சொல்லப்பட்ட இவ்வுரை - பேரம்பலஞ் செய்ய தூயபொன்னணியாக்கிய அனபாயச்சோழ மகாராஜாவினால் விரும்பிக்கொள்ளப் பட்டவுரை, பேரம்பலமாகிய பொன்னம்பலத்தின்கண் நடனஞ்செய்தருளும் நடராஜரினால் அருளிய உலகெலாம் என்னும் அருண்மொழியால் விரும்பி ஆளப்பட்ட வுரை என்று உரையின்சிறப்பை விளக்குவதோடு அரசன்சிறப்பையும் அரசன் அவையின் சிறப்பையும் அவர்களுக் கெடுத்துக்கூறி, நீவிர் இவ்வுரைகொண்டு விரும்புமென்று கூறினர்.

"அருளின்நீர்மை" என்னும் ஒன்பதாஞ்செய்யுளால் உரையின் சிறப்பை முன்னே கூறியதுபோல் இவ்வுரை வேறொருபொருளை உடையதுமன்று ஆளுவதுமன்று, நிழல் (அசரீரியாகக்) கூறிய சொல்லின்பொருளையே பொருளாகக்கொண்டு ஆளும் சிறப்பினை யுடைத்தாகலான் அறிவரும் அருளினீர்மைத்தாய்த் திருத்தொண்டிருத்தல்போல் என்னுரையென்று சொல்லப்படும் இதுவும் அருளினீர்மைத்தேயாம். அவ்வுரையுட்பட்ட என்னறிவாகிய தெருளும் அருளினீர்மைத்தேயாம். ஆகலின், புலவீர்காள்! செப்புதற்காமோ என்னும் ஐயமொழிந்து ஆம் என்னும் துணிவுகொண்டு நடராசன் திருவருளை நாடுவீராக என்று தமக்கு வாய்க்கப்பெற்ற திருவருளின் சிறப்பைக்கூறினர்.

"இங்கிதநாமம்" என்னும் பத்தாம்செய்யுளால் "திருத்தொண்டர்புராணமென்னும் பெயருடைத்து" நடராஜவள்ளலது சொல்லையும் பொருளையும் கொண்டுமுடிந்த இப் பெருநூல் என்று நூற்பெயரைக்கூறியதோடு மாக்கள் சிந்தையுட்சார்ந்துநின்ற பொங்கிய இருளைப் புறவிருள் போக்குகின்ற செங்கதிரவன்போல் போக்கும் என்று நூற் பெயரின்கண் விளங்கும் பொருளின்சிறப்பையும் விதந்து கூறினர்.

பெரியபுராண திருநாமச்சிறப்பு.

"இங்கிதன் நாமம் திருத்தொண்டர் புராணம் என்ப" என்று கூறியிருக்க, அஃதே போல் திருத்தொண்டர்புராணம் என வழங்காது, பெரியபுராணம் என வழங்கிவரும் காரணம் என்னையோவெனின், தில்லைவாழந்தணர் முதல் இசைஞானியார் ஈறாக உள்ளாரைமாத்திரங் கூறியிருப்பின் திருத்தொண்டர்புராணமெனவே வழங்கிவரும். இவரெல்லாம், திருத்தொண்டத்தொகை யென்னும் பதிகத்தில் தொகுத் தோதப்பட்டவராகலினானும், அத்திருத்தொண்டத்தொகை, தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்திகளுடைய பெரியசரித்திரத்தில் அடங்கியிருப்ப தாகலினானும், அக்காரணங்களைக்கருதி பெரியபுராணம் என வழங்கிவரலாயிற்று.

இவ்வுண்மையை ஆராய்ந்துணரவே, ஆசிரியர் சேக்கிழார் அறுபான் மும்மை நாயன்மார்களுடைய கதைகளை அரசனிடத்திற் சொல்லிவந்ததுபோல் சொல்ல வந்தவராயினும், அவை சுந்தரமூர்த்திகள் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டத்தொகையன்றி யில்லையாகலின் அம்மூர்த்திகளுடைய பெரியகதையை முதலாகச்சொல்லத்தொடங்கி

னேன் என்னும் அச்சிறப்புத்தோன்ற, நிர்விக்கினங்கருதி விக்கினகர்த்தாவைத் துதிக்கத் தொடங்கிய அச்செய்யுளில் "எடுக்குமாக்கதை" என்றும், அப்பெரியோருடைய மாக்கதையில், யான் சொல்லத்தொடங்கிய தொண்டர்புராணம் வருவது என்னும் அவ்வுண்மைதோன்ற இங் கிதுவேனச்சுட்டி இதனைத் திருத்தொண்டர்புராணம் என்ப என்றார்.

அல்லதூஉம், பிரமன்முதலாயினரைத் தொண்டராகவுடைய நடராஜன், தன்னைத் தொண்டனென்று தனதுஅன்பர்கள்அழைப்பதில் ஆசையுடையவனாய்த்தில்லைவாழ் அந்தணர் என்னும் நாமத்தைக்கொண்டு தொண்டர்களுக்கெல்லாம் முதல்வனாய் நிற்றலால் அவனெண்ணிய அவ்வருமைநோக்கித் தொண்டர்புராணமெனவும், திருத்தொண்டத்தொகையுள் கூறப்பட்ட பெரியோர்க்குப் பெரியோன், பெரியதெய்வமாகிய அவனன்றி வேறொருதெய்வம் இன்றாகலான் அப்பெருமைநோக்கிப் பெரியபுராணமெனவும், பெரியோர்களால் வழங்கப்பட்டு வருகின்றன எனவுங் கொள்க.

இனிப் பெரியபுராணம் என்னும் திருநாமத்தின் சிறப்பைச் சிறிது எடுத்துக் கூறுவாம்.

ஆசிரியர் சேக்கிழார், தமது அரசனிடத்திற் சொல்லிவந்தபடி அமணர்கள் உண்டாக்கிய சீவகசிந்தாமணியினும், இவர்போன்ற ஏனைச்சமயிகள் உண்டாக்கிய நூல்களினும் காணப்படும் பொருள்கள், உமியைப்போலும், மட்டுப்பகுவைப்போலும், இருளைப்போலும், மின்மினியைப்போலும், அழுந்நிறைந்தகுழியைப்போலும், உள்ளனவெனவும், அரன் உண்டாக்கிய வேதசிவாகமங்களிற் காணப்படும் பொருள்கள், அரிசியைப்போலும், சுறக்கும் இயல்பினையுடைய பசுவைப்போலும், குளிர்பூஞ்சோலைவழியைப்போலும், சுருளைப்போலும், விளக்கொளியைப்போலும் உள்ளனவெனவும், மிகவெளிமையாய்க் காட்டுவது இப்புராணமாகலின் பெரியபுராணம்.

உலகிலுள்ள நூலெனப்பட்டன வெல்லாம், சிவமாகும் நெறியினையும், அந்நெறியின் இலக்கணங்களையும், அவ்விலக்கணங்களுணர்ந்து அந்நெறி எய்தப்பெற்றாரையுங் கூறி, சிவமாய் அமர்ந்திருக்கச் செய்வதாகிய அன்பினையும், அவ்வன்பின் இலக்கணமாகிய திருத்தொண்டின் திறத்தையும், அத்தொண்டின்வழி யுணர்ந்து அன்புடையவராய்ச் சிவமாய் அமர்ந்திருக்கப்பெற்றாரையும் கூறாதொழிய, இந்நூல் அவைமுற்றுங் கூறுவதாகலின் பெரியபுராணம்.

"சிவனுரு வருவுமல்லன் சித்தினோடு அசித்துமல்லன், பவமுதற் றொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானுமல்லன், தவமுதல் யோகபோகந்தரிப்பவனல்லன் தானே, இவை பெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினனே" என்ற சித்தாந்த வாக்கியப்படி ஒன்றிலும் இயைந்திடாத சிவபெருமானை "அன்பேசிவமாவது" என்று திருமந்திரங் கூறிய உண்மையை எப்புராணங்களும் விளக்காதொழிய, இப்புராணம் ஒன்றே "அன்பே சிவமாவது" என்ற ஏற்றேகாரத்தாற்கூறிய உண்மையை அறிவாளிகள் நன்குணர இப்புராணம் விளக்கியிருத்தலின் பெரியபுராணம்.

பெருநூல்களென வழங்கும் ஞானநூல்களிலெல்லாம் சிவபெருமானது தடத்த இலக்கணங்களையும், சொரூபஇலக்கணங்களையும், பலமுகமாகவும், பலபிரகாரமாகவும், கூறியுள்ளனவேனும், அந்நூல்களை ஆராயப்பெற்றோரும் ஆராய்ந்தவழியே அனுபவம் வரப்பெற்றாரும், சிவனுடன் சிவமாயமர்ந்திருக்க எங்குங்காணப்பெற்றோமில்லை. இப்புராணத்துள் அறுதியிட்டுக் கூறியுள்ளார் சிவபெருமான் வீற்றிருக்கும் கோயில்களில் சிவத்தோடு இனிதமர்ந்திருக்கக் காண்கின்றோ மாகலின் அவர்களது புராணம் பெரியபுராணம்.

"தாவரசங்கமங்கள் என் றிரண்டுருவினின்று, மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க்கருளைவைப்பன்" என்ற சித்தாந்தவாக்கியப்படி, தாவரவுருவத்தினின்று இம்மைப் போகங்களையும், புரந்தராதியர்களுடைய போகங்களையும் வேண்டுவோர்க்கு அவைகளை

அனுக்கிரகஞ்செய்வதுபோல், அவைகளை வேண்டாது "ஆகம்விண்டு கம்பம்வந்து கண்கள் தாரைதாரையாகச் செய்விக்கவல்ல பேரன்புவேண்டும் அன்பர்களுக்கு அவ்வன்பை சங்கமரூபமாய் அனுக்கிரகஞ்செய்யும் சிறப்பை அநுபவமாய் இப்புராணங் கூறுவதாகலின் **பெரியபுராணம்.**

வல்வினை மெல்வினையாகக்கூறப்படும் சரியை கிரியைகளினும், ஆதார நிராதார முறையாற் கூறப்படும் யோகமார்க்கங்களினும், தடத்தவழியானும் சொரூபவழியானும் சிவசொரூபத்தை வழிபடும் வழிபாடுகளைக்கூறும் சன்மார்க்கத்துறையினும், செல்வோர்க்குத் தலைப்படுவோராகிய சிவனைத் தலைப்படவொட்டாது தடுக்க, மேலே சொல்லிய சரியைகிரியைகளினும், யோகமுறைகளினும், ஞானத்துறையினும், முனைத்துவரும் நான் என்பதனைத்தடுத்து, அருளைக் கூடச்செய்து, அவ்வழியே சிவனைத்தலைப்படச் செய்யவல்ல அன்பில், சத்திநிபாதத்து உத்தமரெல்லாம் தலைப்படுமாறு நாயன்மார்களது சரித்திரவைபவ வுண்மைகளை இதில் கூறுவதனால் **பெரியபுராணம்.**

"உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்த அத்திருவடியையே முதலாகக்கொண்டு நடந்து வரப்பெற்றதுமன்றி, அவ்வடிபுடையானாகிய அம்முதல்வனையும், முதலடியாகக் கொண்டிருத்தலின் **பெரியபுராணம்.**

ஞானத்தின் மேம்பட்ட அன்பினையும், அவ்வன்பின் வழிநின்று இயற்றுவதாகிய ஞானச்சரியாதி நான்கும் அறுபான்மும்மையாய்விளங்கும் உண்மையினையும், அங்ஙனம் விளங்கிய அவ்வழியானே அரியதோர் நிலையை எய்தப்பெற்ற அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார்களையும் அளவுபடுத்திக் கூறுவது இந்நூலாகலின் **பெரியபுராணம்.**

திருக்களிற்றுப்படியாரின்கண் எம்பிரான் சம்பந்தரது அருட்செயலையும், திருநாவுக்கரசுகளது அருட்செயலையும் கூறிச், சுந்தரமூர்த்திகளது அருட்செயலைக் கூறுங்கால் "வன்றொண்டன்றொண்டுதனை, எதாகச்சொல்லுவேன்யான்" என்று சொல்லுந் திறமற்று நின்ற வன்றொண்டப்பெருமானாரது சரித்திரத்தை முதல் இடை கடைகளிற் கொண்டிருத்தலின் **பெரியபுராணம்.**

முதலிடைகடைகளிற் கொண்டவற்றுள்ளும் ஆன்மாக்களுக்கு இருவினையொப்பு, மலபரிபாகம் வந்தபோது தடுத்தலும், சத்திநிபாதம் வந்தபோது ஆட்கொள்ளலும், சிவஞானம் வந்தபின்னர் அருளலுமாகிய முறையினையுடைய இறைவன் தானே வலிந்து வந்து தடுக்கத்தலைப்பட்டபொழுது அவ்விறைவனைத் தாம் தடுத்தும், தம்மை அடிமையென ஆண்டவரைத் தாம்தோழரென ஆண்டும், பரவைசங்கிலிகளை அருள்செய்த அவருக்குத் தாம் பலதிருப்பதிகங்களை யருளியும் உள்ள ஆரூரரது தடுத்தாட்கொண்ட புராணத்தை முதலாகக்கொண்டிருத்தலின் **பெரியபுராணம்.**

ஓடம் சிவிகை உலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல் - ஏடெதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்தல் ஈங்கிவைதான் ஓங்குபுகழ்
தென்புகலி வேந்தன் செயல்.

கொல்கரியில் நீற்றறையில் நஞ்சிற் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாய்க் கடல்நீந்தல் - நல்ல
மருவார் மறைக்காட்டில் வாசல்திறப் பித்தல்
திருவாமூ ராளி செயல்.

மோக மறுத்திடினு முத்தி யளிப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்றொண்டன் றொண்டுகளை
ஏதாகச் சொல்வேன் இயான்.

ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், இவ்வைந்துங்கூடிய வித்யாதேகமும், அதன்பின்னர் அத்தேகத்திற்கு நேத்திரமும், நேத்திரம் உண்டானபின்னர், இருதயம், சிரசு, சிகைகளும் ஆகிய இவ்வனைத்தையுங்காக்கும் கவசமுமாயுள்ளன பதினொருதிருமுறைகளாம். அஸ்திரமந்திரம்போல் தனக்குள் அடக்கிப் புறச்சமயக் கோள்களையெல்லாம் கரகோஷத்தால் ஓட்டி, அகச்சமயிகளை உள்ளடக்கித் திக்பந்தனம் செய்வது இப்புராணம்: ஆகலின், பெரியபுராணம்.


இங்ஙனங்கூறிவந்த அங்கந்யாசமுறைபோல் திருமுறைகள் நிற்குநிலை எங்ஙனமெனின்,—ஈசானம், தத்புருஷம், அகோரம் என்னும் இம்மூன்று மந்திரஸ்வரூபமாக வுள்ளது ஞானசைப்பந்தப்பெருமா னருளிய மூன்று திருமுறை. வாமதேவம், சத்யோஜாதம், இவ்வைந்துங்கூடிய வித்யாதேஹம் என்னும் இம்மூன்று மந்திரஸ்வரூபமாகவுள்ளது, வாகீசப்பெருமா னருளிய மூன்று திருமுறை, இவ்வித்தியாதேகியாகிய இறைவனுக்கு, நேத்திரமாய் நேத்திரமந்திர ஸ்வரூபமா யுள்ளது வன்றொண்டப்பெருமா னருளிய திருமுறை. இந்த நேத்திரத்தைக்கொண்டு அன்பர்கள் எண்ணும் எண்ணங்களை எண்ணும் இருதயமாயுள்ளது மணிவாசகப்பெருமா னருளிய திருவாசகம். அவ்விருதயத்தான் அன்பர்கள் எண்ணியபடி பெத்தான்மாக்களாகிய கீழ்மக்களாகாது முத்தான்மாக்களாகிய மேன்மக்களாகச் செய்யும் சிரோமந்திர ரூபமாயுள்ளது திருப்பல்லாண்டோடு கூடிய திருவிசைப்பா, அம்முத்தான்மாக்களைத் தான்பற்றற்குரிய சிகாமந்திர ரூபமா யுள்ளது, திருமந்திரம், அம்மந்திரசித்தியால் அவர்களைப் பற்றியபின்னர் அவர்கள்பால் அருளுடையனாய் எப்புறத்துங் காக்கும் கவசமந்திரரூபமா யுள்ளது திருவாலவாயானருளிய திருமுகப்பாசுரமுதல் திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை ஈறாகவுள்ள பதினோராந்திருமுறை. அங்ஙனங் காத்தபின்னர் உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன் என்னும் சத்திப்பிரணவ ஹுங்காரத்தால் புறச்சமயக்கோள்களையெல்லாம் ஓட்டி, "வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்கதண்புனல் வேந்தனும் ஓங்குக, ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே, சூழ்கவையக முந் துயர்தீர்கவே" என்று உலகமுற்றுந் திக்பந்தனம்செய்வது பன்னிரண்டாந் திருமுறையாகிய இப்புராணம்.

தீயதெல்லாம் ஆழ்ந்துபோகச் செய்து, அரனாமமே சூழும்படிச் செய்யவல்ல இப்புராணம், பதினொரு திருமுறைகளையும் தனக்கு அவயவங்களாகவும், அவற்றின் பொருள்கோள் உயிராகவும், அப்பொருள்களினுள்ளே வரும் சிவனே உயிர் அறிவாகவும் இப்புராணத் திருவிருத்தங்களே உடம்பாகவும் வாய்க்கப்பெற்று, வேதநெறி தழைத்தோங்க, மிகுசைவத் துறைவிளங்க, வேத நெறியையும், சைவ நெறியையும் இரண்டு பாதமாகக்கொண்டு மாதவஞ்செய்த தென்றிசைவாழ்ந்திடவந்தது இப்பெரியபுராணம்.

இன்னமும் பலவுள அவையெல்லாம் இடம்வந்துழி எடுத்துக்கூறுவாம்.

இப்பாயிரத்தால் ஆக்கியோர் அளவிலாசைதுரப்ப அறைகுவேன் என்ற சேக்கிழார் பெருமானா ரென்பதையும், வெகுளின் மெய்ம்மொழி வான் நிழல்கூறிய அருள்வாக்கே வழியென்பதையும், அநபாயன் அரசன் சவை மேய இவ்வுரைகொண்டு விரும்பும் என்றதனால் - இந்நூலுக்கு அரசனவையே களமென்பதையும், தெரிவருஞ்சீர் பெருமைத் திருத்தொண்டர்தம் பொருவருஞ்சீர் என்றதனால் நூற்பொருள் என்பதையும், சீர்செப்பலுற்றேன் என்றதனால் யாப்பென்பதையும், நுதலியபொருள் அளவிலாத அடியார்புகழ் என்றதனால் - பொருள் இதுவென்பதையும், மெய்ப்பொருட்குரியார் என்றதனால் கேட்போர் இவரென்பதையும், மாக்கள் சிந்தையுட் சார்ந்துநின்ற பொங்கிய இருளைப்போக்கும் என்றதனால் பயன் இதுவென்பதையும் விளக்கிப் பாயிரத்தினிலக்கணங்களை வகுத்துக் கூறியவாறுமாம்.

பாயிரம் முற்றிற்று.



திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாயச்சிறப்பு.

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னு நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யானென்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை.

(எ - து.) யாதொன்றின் தன்மையினையும் அறியுந்தன்மையினையுடைய எவ்வகை மேம்பட்டோர்க்கும் தன்தன்மை யிதுவாமென்று அறிதற்கரிய இறைவன் எக்காலத்தும் நீங்காது வாழப்பெற்றுள்ள பெருமையிற்சிறந்த ஸ்ரீகயிலாய பர்வதமானது, பொன்னின் மேல் வெள்ளிய திருநீற்றை, முற்றவும் பூசப்பட்டுள்ளதென்று சொல்லும்படி வெண்ணிறமாய்ப் பிரகாசிக்கும் பெரிய இமயமலையின் பக்கத்திலுள்ளது என்பதாம்.

தன்னை யார்க்கும் அறிவரியான் மன்னிவாழ்கயிலைத் திருமாமலை, பொன்னின் வெண்திருநீறு புனைந்தெனப் பன்னும் நீள் பனி மால்வரைப் பாலது, எனக்கூட்டுக.

* "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர்பொருளாய் வேறுங், குறியது வுடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்து" என்ற சித்தாந்தவாக்கியப்படி, புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னும் நான்கனுள், அகச்சமயம் ஒழித்து, ஒழிந்த முக்கூற்றுப்புறச் சமயங்களில் தனித்தனி அறுவகைப்பட்ட சமயங்களில் நின்று அவரவர்கொண்ட முதற் பொருளாய், அவரின் வேறாகிய பாடாணவாதமுதலிய அகச்சமயத்தார்க்கு இலயம், போகம், அதிகாரம் என்னு மூன்றவத்தையின் முறையே சத்தியும், உத்தியோகமும், பிரவிர்த்தியும் என்னும் தொழில்வேறுபாடுபற்றிச் சிவன், சதாசிவன், மகேசனென்னும் பெயருடைய அருவம், அருவுருவம், உருவம் என்னுந் தடத்தக்குறியே குறியாகவுடைத்தாய், சித்தாந்தசைவர்க்கு அத்தடத்தக்குறியேயன்றி வேதாகமங்களின் கருத்திற்கு அதீதமாய்ப் பிரகாசிக்குந் தன்மையனென்பார் தன்னையார்க்கும் அறிவரியானென்றும், அவ்வரியான் தேவர்கோ அறியாத தேவதேவனாய், செழும்பொழில்கள் பயந்து காத்து அழிக்கும் மூவர்கோனாய்நின்ற முதல்வ (துரிய)னாய், மூர்த்தியாய், மூதாதையாய், எந்தையாய், மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்தமேனியனாய், மாதாளும் பாகத்தனாய், எக்காலத்தும் வீற்றிருக்கப்பெற்றது ஸ்ரீகயிலாயம் என்பார், என்றும் மன்னிவாழ் கயிலைத் திருமாமலை என்றும், அந்த ஸ்ரீகயிலாயம் பனியினால் மூடப்பட்டு விபூதியினது வெண்ணிறத்தைக்காட்டித் தன்னைப்போல் பிரகாசிக்கின்ற இமயமலையின் பக்கத்திலுள்ளது என்பார் பொன்னின்வெண்டிருநீறு புனைந்தெனப்பன்னுநீள்பனி மால்வரைப்பாலது என்றும், கூறினார்.

ஏனைச்சமயத்தார்களது குறிகளெல்லாம் சாபமென்கிற களங்கமுடைத்தாகலின் அக்களங்கமில்லாதது இந்த நீறு என்று குறித்தற்கு வெண்ணீறு என்றும், அந்நீறு ஐசுவர்யம் என்றுகுறித்தற்குத் திருஎன்றும், ஏனைச் சமயத்தெய்வமாயுள்ளாரெல்லாம் வாக்கு மனங்களால் யாவரும் அறிதற்கு எளியதன்மை யுடையரென்றும், இவன் வாக்குமனாதீதன் என்றும் குறித்தற்கு தன்னையறிவரியானென்றும், ஊழிதோறும் அழிந்து அழிவின்றி ஊழிதோறோங்கும் பெருஞ்சிறப்பினை யுடையது கயிலைஎன்று குறித்தற்கு மன்னிவாழ்கயிலைத் திருமாமலை என்றும், இமயமலை - பனியின்மிகுதியினால் மூடப்பட்

* சிவஞானசித்தியார் • மங்கலவாழ்த்து.

டிருத்தலால் இமயமலையென்று பெயர்பெற்றதேயன்றி அதுபொன்னே என்றும், அவ் விமயத்திற்குச் சார்பில் உள்ள வெள்ளிமலையாகிய ஸ்ரீகயிலாயம் அதன்மேல் வெள் ளொளிபரப்பித் திரு நீற்றொளியைக்காட்ட அச்சிறப்புடைத்தென்றும் குறித்தற்கு பொன்னின்வெண்டிருநீறுபுனைந்தென்றும் கூறினார்.

இதனால், ஸ்ரீகயிலாயம் இமயமலையின் பக்கத்திலுள்ளது என்று கூறியதேயன்றி, தன்னையார்க்கும் அறிவறியானை அறிவிப்பது ஸ்ரீகயிலாயமென்றும், இமயமலை அவனது திருநீற்றை அறிவிப்பதென்றும், எடுத்துக்காட்டினார். எனவே - கடவுளையும், திருநீற்றை யும் மலைபோற்காட்டி சைவசமயமும் அச்சமயத்தெய்வமாகிய சிவமும் என்றும் மலை போல் அழியாதோங்கி நிலைபெற்றுள்ளன என்று புறச்சமயத்தார்நாண அறிவுறுத்தப் பட்டது. (௯)

அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணு மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது.

(எ - து.) அக்கயிலையங்கிரி, யாவர்க்குந் தலைவனாகிய இறைவன் வீற்றிருக்கப் பெற்ற சிறப்பினையுடைத்தாதலால், மூன்றுலகில் உள்ளவர்களும், நான்குவேதங்களும், அளவில்லனவாகிய பெரியதவங்களைச் செய்ய, அவைகாரணமாய் வந்துகூடிய புண்ணி யங்களெல்லாம், ஒன்றாகத் திரண்டிருப்பதுபோலும் தோற்றமுடையது என்பதாம்.

பிரமன் முதலியோர் - தமக்கு அசுரராலும் மற்றைப் பலவகையாலும் இடுக்கண் வருந்தோறும், அவைகளைப் போக்கிக் கொள்வதற்குப் பலதவங்களைச்செய்ய, அவற்றால் வந்தபுண்ணியங்களுக்கும், வேதங்கள் - இறைவன் பொருள்சேர்புகழை எடுத்துப் போற்றுதற்குப் பலவகைப்பட்ட தியானங்களைச்செய்ய அவற்றால் வந்தபுண்ணியங்களுக் கும் அனுக்கிரகஞ்செய்யச் சிவபுண்ணியங்களெல்லாம் ஒன்றாகத்திரண்டெழுந்தோங்கிய காட்சியே போல்வதென்பார் மூன்றுலகும் நான்மறைகளும் எண்ணில்மாதவம் செய்ய வந்தெய்திய புண்ணியந் திரண்டுள்ளது போல்வது என்றார்.

பாவத்திற்குக் கருநிறமும், புண்ணியத்திற்கு வெண்ணிறமும் உவமையாகக் கூறுவ ராகலின் வெண்ணிறமுடைய கயிலையைப் புண்ணியமென்றார். அளவில்லாத பெரிய தவங்களைச் செய்தார்க்கே புண்ணியந் திரண்டுருக்கொள்ளுமன்றி, சிறுநாள்களில் சிறிய தவங்களைச் செய்வார்க்குப் புண்ணியந்திரளாது என்று அப்புண்ணியத்தின் அருமை தோன்ற எண்ணில்மாதவஞ் செய்யவந்தெய்திய புண்ணியந் திரண்டுள்ளது என்றார். அப்புண்ணியம் பசுபுண்ணியமன்று, பதிபுண்ணியமாகிய சிவபுண்ணியமென்பார் - அண் ணல் வீற்றிருக்கப் பெற்றது என்றார். சுவர்க்கம் மத்தியம் பாதலம் என்னும் மூன்றுலக வாசிகளும் எவ்வகைத்தான பசுபுண்ணியங்களைச் செய்யினும், ஓர் சிவபுண்ணியங் கூடினா லன்றி அப் பசுபுண்ணியங்களுக்குரிய பலன்கள் சித்திக்கா என்பது பிரமாணமாகலின்; எண்ணில்மாதவஞ் செய்யவந்தெய்திய என்றார். பலதவங்களாகிய பசுபுண்ணியங்களுக் குப் பலதெய்வங்களிருப்பதுபோல் சிவபுண்ணியங்களுக்குச் சிவனே தெய்வமாக இருப் பவனென்னும் சிறப்பும், எவரெவர் எவ்வகைத்தான தவங்களைச் செய்யினும் அத்தவங் களும், அவ்வத்தவங்களுக்குரிய தெய்வங்களும், அவ்வவற்றிற்குரிய பலன்களைத்தரும் சுதந்தரமுடையனவன்று என்னுஞ் சிறப்பும், அச்சுதந்தரமுடையோன் எல்லாத்தேவர்க் கும் மஹாதேவனாகிய இறைவனே என்னுஞ் சிறப்புந்தோன்ற அண்ணலென்றார். வேதங் கள் தம்மாற்சொல்லப்படும் தெய்வங்கள் தம்மாற் காணப்பட்டவராயிருக்கின்றனர். இம் மஹாதேவனோ எந்நாளும் காணப்படாதவனாகவே இருக்கின்றனனாகலின் அவனைக்

காணும் அவாமேற்கொண்டு மறைகளும் மாதவஞ்செய்ய என்றார். மறைகளும் கண்டதில்லை என்பதை - மறையினால் கூறொணாதாகின்ற இறைவன் எனவும், வேதாகமங்களின் குறியிறந்தெனவும், அல்லையீதல்லையீதெனுமறைகளும் அன்பைச்சொல்லினால் துதித்திளைக்குமெனவும் கூறியவாற்றானறிக.

இதனால், எல்லாத்தேவர்க்கும் சிவனே மஹாதேவனாகலின் அண்ணலெனவும், அவ்வண்ணல் வீற்றிருக்கப்பெற்ற புண்ணியமே சிவபுண்ணியமெனவும், அப்புண்ணியம் மூன்றுலகமும் மறைகளும் மாதவத்தைச்செய்ய அதனால் வந்ததெனவும், அச் சிவபுண்ணிய சொரூபந்தான் வெள்ளிமலையாகிய கயிலாயமெனவும், வேதங்களே யாயினும் புண்ணியமில்லை யாயின் இறைவனைக் காண்டல்கூடாதெனவும் பிரகாசப்படுத்தப் பட்டது. (உ)

பூவுலகிலுள்ள தலங்களுக்கும், கயிலைக்குமுள்ள ஒற்றுமைச்சிறப்பு.

நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்தளிர் ஆகவெ ழுந்ததோர்
உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேன்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை.

(எ - து) சிவமயமாய் ஓங்கிப்பிரகாசிக்கும் ஊழியினும் அழிவெய்தாத எண்ணில்லாத க்ஷேத்திரங்களையும், பசிய தளிர்போலும் படர்ந்திருக்கப்பெற்ற, உலகமென்று சொல்லப்படும் ஓரழகிய கொடியின்மேல், மலர்ந்திருக்கும் வெண்டாமரை மலர்போல் பிரகாசிப்பது ஸ்ரீகயிலாயம் என்பதாம்.

நீடொளிர் இலகு நிலவும் எண்ணில் தலங்களும் எனக்கூட்டுக.

உலகமெங்கும் உள்ள சிவக்ஷேத்திரங்கள் தோறும் சரியை, கிரியை யோகங்களால் இறைவனை வழிபடும் ஆன்மாக்களுக்குச் சாலோக சாமீப சாரூப மென்னும் பதங்களைக் கொடுத்து அவர்களது உள்ளங்களை மலரச்செய்வது ஸ்ரீகயிலாயமே யாகலான், உலகினை ஓர்கொடியாகவும், தலங்களைத் தளிராகவும், கயிலையை மலராகவும் கூறினார்.

தலங்கள் எங்கும் நிறைந்திருத்தல் - இறைவனது நித்தவியாபகத்தையும், அந்த அந்தக்ஷேத்திரங்கள் பொலிவுபெற் றிருத்தல் - எங்கும் வியாபகமாயிருந்து எல்லாவுயிர்களையும் பிரகாசிப்பிக்கச்செய்யும் அவனது சித்பிரகாசத்தையும், க்ஷேத்திரங்களுக் கிடங்கொடுத்திருக்கும் பூமி கொடிபோன்றிருத்தல் - எல்லாவுயிர்களுக்கும் தாரகமாய் நிற்கும் அவனது ஆதாரத்தன்மையையும், விளக்கியவாறாம். இதனால் வியாபகத்தன்மையும், சித்பிரகாசத்தன்மையும், ஆதாரத்தன்மையும் உடையவன் சிவனொருவனே என்றதை யாவரும் பிரத்தியக்ஷமாய்க் காண்டற்கே இவ்வுவமைகள் கூறப்பட்டன. அல்லதூஉம் † குறிகளும் அடையாளமுங் கோயிலும், நெறிகளும் அவர்நின்றதோர்நேர்மையும், அறிய ஆரணம் ஆயிரம் ஓதினும், பொறியிலீர் மனம் என்கொல்புகாததே. என்று வேதமொழி வலியுறுத்தியவாறுங் காண்க.

குறிகள் - சிவலிங்கமூர்த்தங்கள், அடையாளம் - தம்மைவழிபட்ட அவர்களது பெருமையும், அவர்கள்மாட்டு தமக்குள்ள மாறா அன்பும், யாவரும் அறியுமாறு அவர்கள் குறிகளைத் தமது திருமேனியிற் கொண்டிருத்தல். கோயில் - தம்மை வழிபட்டவரது அருமையும், அவர்பால் தமக்குள்ள அன்பும் யாவரும்உணர்ந்து அவ்வழியே தமது அடி

† திருநாவுக்கரசுகள் தேவாரம் - குறுந்தொகை. க்ஷேத்திரம்.

கூடுமாறு இடங்கொண்டிருக்கும் தலங்கள், நெறிகள் - சரியையாதிமார்க்கங்கள். அவர் நின்றதோர் நேர்மை - அம்மார்க்கங்களில் சிறிதும் தவருது அவர்கள் நின்றதாகிய உறுதித்தன்மை.

இதனல், உலகினைப்படைத்தது - உயிர்கள்வாழஎன்றும், க்ஷேத்திரங்களை எங்கும் காணச்செய்தது - சன்மார்க்கமாகிய சரியையாதிகளால் அவ்வுயிர்கள் வழிபட என்றும், ஸ்ரீகயிலாயத்தை ஊழிதோறோங்கவைத்தது - அவ்வழிபாடுடையார் வேண்டும் பொருளை வேண்டியவாறே அளிக்கத் தாம் திருவுருக்கொண்டிருத்தற்கென்றுங் கூறிய வேதவாய்மையை வெளிப்படுத்தப்பட்டது. (௯)

வாத்தியங்களின் சிறப்பு.

மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்
கான வீணையின் ஓசையும் காரெதிர்
தான மாக்கள் முழக்கமும் தாவில்சீர்
வான துந்துபி யார்ப்பு மருங்கெலாம்.

(எ - து.) நாற்பக்கங்களிலும் யாவராலும் போற்றப்படும் நான்குவேதங்களுடைய பெரிய நாதப்பெருக்கமும், வித்தியாதரர்கள் கானஞ்செய்கின்ற வீணையின் இன்னிசைப் பெருக்கமும், மேகங்களோடு மாறுபட்டு அவைகளுக்கு எதிராக மதநீரைப் பொழிந்து யானைகள் முழங்குகின்ற முழக்கமும், தேவதுந்துபிமுதலிய தேவவாத்தியங்களின் ஆரவாரமும் பெற்றுள்ளது அக்கயிலாயம் என்பதாம்.

நான்மறைநாதமும், வீணையிேைசயும், துந்துபியார்ப்பும், பிரமன்முதலியோர் வாழும் இடங்களில் உள்ளிடத்திலிருந்து நீங்காது ஒலிக்கும் சிறப்புடையனவாயினும் கயிலையின்கண் உள்ளிடமெல்லாம் அன்பர்கள் கோஷிக்கும் ஹர ஹர என்கின்ற கோஷங்களும், பிரமனுதியர் குறையிரக்கும் இரக்கவோசைகளும் நிறைந்திருத்தலால் நான்மறை, நாதமுதலிய அவ்வோசைகள் வெளிப்பக்கங்களிலேயே நின்று யானை முழக்கங்களோடு இவையும் ஓர்முழக்கங்களாக முழங்கிக்கொண் டிருப்பனவாயின என்றார். அல்லதூஉம் - இறைவன் தமதுநாமத்தைக் கூறிப்போற்றி அன்பர்கள்மகிழ, அவர்கள் மகிழ்ச்சியைக்கண்டு இன்புறும் இன்பத்தையும், தம்மாட்டுக்குறையிரப்போர்க்கு அவர் வேண்டும்பொருளைக்கொடுத்து அவர் இன்புறும் இன்பத்தையும் இன்பமாகக்கண்டு களிப்பவனேயன்றி இந்திரியாதிகளால் அனுபவிக்கப்படும் இன்பங்களை இன்பமாகக்கொள்ளான். அதனல் அவைகளைப் புறம்பாபொதுக்கினனென்று வெளியாக்கியவாறுமாம்.

துவாரச்சிறப்பு.

பனிவி சும்பில் அமரர் பணிந்துசூழ்
அனித கோடி அணிமுடி மாலையும்
புனித கற்பகப் பொன்னரி மாலையும்
முனிவ ரஞ்சலி மாலையு முன்னெலாம்.

(எ . து.) முன்பக்கங்களிளெல்லாம், வணங்கிச் சூழ்ந்துநிற்கின்ற பலதேவர்களுடைய கிரீடங்களில் வரிசையும், கற்பகமலர்களால் தொடுக்கப்பட்ட பொன்மாலைகளின் வரிசையும், முனிவர்களெல்லாம் கைகளைக்குவித்திருக்கும் அஞ்சலிகளின் வரிசையும், அணிஅணியாய் இருக்கப்பெற்றுள்ளது ஸ்ரீகயிலாயம் என்பதாம்.

விண்ணுலகத்துள்ள அமரரும், மண்ணுலகத்துள்ள முனிவரும் அனுபவித்தவரும் போக மோக்ஷானுபவங்களாகிய செல்வங்களெல்லாம் இக்கயிலையின்கண்ணே நின்று

பெற்றனவைதான், என்றும், போகமோக்ஷங்களை முற்பக்கங்களில் நந்தியெம்பெருமான் நின்றுவழங்க அப்பொழுது பெற்ற செல்வங்களென்று தானச்சிறப்பும் கூறியவாறும். இதனால் கயிலையில் வறுமையாளரா யேற்போர் அமரர்களும் முனிவர்களுமேயா மென்பதாம். (௫)

சிவபூதங்களின்சிறப்பு.

நீடு தேவர் நிலைகளும் வேண்டிடின்
நாடும் ஐம்பெரும் பூதமு நாட்டுவ
கோடி கோடி குறட்சிறு பூதங்கள்
பாடி யாடும் பரப்பது பாங்கெலாம்.

(எ - து.) எனைய விசாலமாகிய பக்க இடங்களிளெல்லாம், பெருமையில் மிக்க தேவர்களுடைய பதங்களைவேண்டினால் அவைகளையும், பிருதிவிமுதலிய பஞ்சபூதங்களாலாகிய இவ்வுலகம் போதாதென்று வேறு உலகம் படைக்கவெண்ணி வேறுபஞ்ச பூதங்களை விரும்பினால் அப்பூதங்களையும், படைத்துக் கொடுப்பதற்கு ஆற்றலுடைய குறள்வடிவினையுடைய அனேகங்கோடி சிறியபூதங்கள் பாடுவனவும் ஆடுவனவுமா யிருக்கப்பெற்றுள்ளது ஸ்ரீகயிலாயம் என்பதாம்.

இதனால் தேவர்நிலைகளும், ஐம்பெருமபூதங்களைக் கொண்டுசெய்யும் செயல்களும் பிரமனாதிதேவர்களுக்கு அருமை யுடைத்தானவையேயன்றி, கயிலையில் வாழ்வார்க்கு அவை மிகச்சிறுமையுடைத்தான செயல்களாமென்று சிறுவிளையாடல்களைச் செய்யும் சிறுபூதங்களின் மேலேற்றிக் கூறப்பட்டது.

எனவே - எனையோர்க்கு ஐம்பெரும்பூதங்கள் பெரும்பூதங்களேயன்றி கயிலையில் வாழும் சிறுபூதங்கட்கு அவை மிகச்சிறியனவேயாம் என்று அப்பூதங்களின் பெருமிதத்தைக் கூறியவாறும். (௬)

கயிலாயத்தின் ஒளிச்சிறப்பு.

நாய கன்கழல் சேவிக்க நான்முகன்
மேய காலம் அலாமையின் மீண்டவன்
தூய மால்வரைச் சோதியின் மூழ்கியோன்
ஏய அன்னமும் காணு தயருமால்.

(எ - து.) பிரமதேவன் இறைவனுடைய திருவடிகளைத் தரிசனஞ்செய்யும்பொருட்டுக் கயிலாயத்துக்குள்செல்ல, சென்ற அக்காலம் பிரமன்முதலிய தேவர்கள் தரிசனஞ் செய்யுங்காலம் அல்லாமையினால் வெளியேவந்து தன்னிடம்போய்ச் சேர்வதற்குத் தனது ஊர்தியாகிய அன்னப்பறவையைப் பார்க்கும்போது, அப்பறவை கயிலைமலையின் வெள்ளிய ஒளியோடுகலந்து வேறாகக்காண்பதற் கில்லாமற் போனபடியினால் நமது பறவை எவ்விடத்தில் பறந்துபோயிற்றோவென்று ஐயங்கொண்டு சோர்வடைவன் என்பதாம்.

புறச்சமயத் தெய்வங்களாயுள்ள பிரமனாதியர் முப்புறச்சமயங்களில் நிற்கத்தக்கவரே யன்றி முப்புறத்தையுங் கடந்த அகச்சமயத்திற்சென்று சிவனைக்காண்டல் அரிதினும் அரிதே என்பதும், அப் புறச்சமயத்திற் சார்ந்தாரும் சைவசமயத்தைச் சாரின் அப்பிரகாசப்பட்டிருப்பரேயன்றி தாமொருமுதலாகத் தோன்றமாட்டா ரென்பதும் இதனால் அறிவுறுத்தப்பட்டதுமாம். (எ)

வேறு.

காதில்வெண் குழையோன் கழல்தொழ நெடியோன்
காலம்பார்த் திருந்ததும் அறியான்
சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையில்
துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு

மீதெழு பண்டைச் செஞ்சுடர் இன்று
வெண்சுடரானதென் றதன்கீழ்
ஆதியே னாய்த்தாய் இடக்கலுற் றுனென்
றதனைவந் தணைதரும் கலுழன்.

(பா - ரு.) பிரமன் சென்றதுபோல், திருச்செவிகளில் வெள்ளிய சங்கக்குழைகளை யணிந்த இறைவனது திருவடிகளை வணங்குதற்குத் திருமாலும்செல்ல, அவருக்கும் சமயம் அல்லாமற்போக, அவரும் சமயம்பார்த்துக் கொண்டிருந்தனர். அங்ஙனம் அவர் காலம் பார்த்துக்கொண்டிருப்ப, அவர் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு வெளியே யிருந்த கருடன், அதனை யறியாதவனாய் நமது தலைவராகிய மாயவர் இவ்வளவுநேரம் உள்ளிடத்திலேயே இருக்கமாட்டாரே, வெளியே வந்திருப்பரே, வந்தவர் இங்கு எப்பக்கம் போயினரென்று ஐயங்கொண்டு வெண்சோதியாய் விளங்கும் கயிலையின் சுற்றுப் பக்கங்களிற்சென்று பார்த்து வரும்போது, அங்கு அடிவாரத்தின் ஓர்முழையுள் விநாயக மூர்த்தியினது ஊர்தியாகிய மூஷிகம் வெள்ளொளிப்பிழம்பாய்ப் பிரகாசித்திருக்க, அந்தப் பிரகாசமிகுதியால் அதனை மூஷிகமென்றறியாமல் வராகமெனக்கண்டு, அந்தோ! நமது திருமாலானவர் முன்பு பிரமனொடு போர்புரிய நேர்ந்தகாலத்தில் அஃதாவது "யானே எங்குமாம் பிரமம்", "யானே எங்குமாம் பிரமம்" என்று தங்களுக்குப் பிரமபட்டத்தை நிலைபெறவித்துக்கொள்ளப் பெரும்போர் மூண்டகாலத்தில், நீவிர் இருவரும் எக்காரணத்தால் பிணங்குகின்றீர் என்று அவ்விருவரையும் விலக்குதற்குச் சிவபெருமான் செஞ்சுடராயெழுந்து இருவரையுஞ்சுட, அதனால் அவர்கள்சுடப்பட்டு அகன்று வேறாய்நிற்ப, இச்சுடர் யாது? இது இச்சமயத்தில் நம்மிருவர் நடுவில் தோன்றவேண்டிய காரணம் என்ன? என்று மேலுங்கீழுமாகப் பார்க்கும்போது மேலே ஓங்கிச்சென்றிருக்கும் முடியையும், கீழே ஆழ்ந்துசென்றிருக்கும் அடியையுங் காண்டற்கில்லாதொழிந்தாரென்றும், பின்னர் இருவரும் பிரமபாவதில் தவிரங்கொண்டிருந்த அவ்வெண்ணம் ஒழிந்தவராய், அச்சோதியினுடைய அடிமுடிகளைக் காண்பதற்குத் தவிரதரமுடையவராய்ப் பன்றியாயும் பக்ஷியாயும் கீழும் மேலும் சென்று காணாமற்போயினரென்றும், அதன்பின்னர் எவ்விடத்திலிருந்துச் சென்றனரோ அவ்விடத்திலேயே மீளவும்வந்து சேர்ந்தனரென்றும் நாம் கேட்டிருக்கின்றோமன்றோ! அத்திருமாலானவர் இன்று இங்குவந்தபோது மனமயங்கி அக்காலத்தில் நாம்கண்ட அச்செஞ்சுடர் இன்று வெண்சுடராய் இங்குகாணப்படுகின்றது; என்று எண்ணி, அன்றெடுத்த அவ்வராக அவதாரத்தையே எடுத்து இதனடியைக் காண்டற்கு முயல்கின்றனரோபோலும் என்று கருதி, அவ்வராகமூர்த்தியைப் பார்ப்பதற்கு அம்முழையின் சமீபத்தே அக்கருடன் வந்துசேரும் என்பதாம்.

ஒருவற்குச் சைவசமயம் கிடைக்கப்பெறுதொழியினும், சைவசமயத்தை நோக்கும் நோக்கமேனும் கிடைக்கப்பெறுவானாயின், அவன் அப்பொழுதே தான்முன்னிருந்த புறச்சமய நிலையையும், தமது பெருந்தன்மையையும் ஓர்பொருளாக மதியாது சைவசமயத்தையே அவாவுவானென்பார் காதில்வெள்ளோதனையுடையோன் கழல்தொழநேடியோனை காலபாதந்தருந்தனன் எனவும், புறச்சமயங்களெல்லாம் சைவசமயத்தின் முன்னர் ஒளிமழுங்கி அடங்கிக்கிடக்குந்தன்மையுடையனவேயன்றி ஓர்முதலாகத்தோன்றிப்பிரகாசிக்கும் சத்தியுடையன அன்றென்பார் சோதிவெள்ளியமலை மால்வரைமுழையில் ஆதித்தையோன் ஆதியைக்கண்டு ஆதியேனைதாய் கிடக்கலுற்றனன எனவும், சித்தாந்தசைவமயமான்றோ எல்லாச்சமயங்களையும்தனக்குவேறாக வொதுக்காது எல்லாவற்றையும் முறையானே, தனக்குள்ளடக்கி ஆளும் ஓர் பெருந்தன்மையின் உண்மையைக் காட்டுவதுபோல் கருடன் அம்முழையை அடையப்பெற்றனரென்பார் அதனை வந்தணைதருங்கலுழன் எனவும் கூறினர்.

முன்செய்யுளில் நாயகன்கழல்சேவிக்க நான்முகன், மேயகாலம் அலாமையின் மீண்டனன் என்றதனுலும், இச்செய்யுளில் நெடியோன் காலம்பார்த்திருந்தனன் என்றதனுலும், அரிபிரமர்கள் சேவகர் எனவும், இவ்விருவர்க்கும் இறைவன் சேவ்யனெனவும் அறிவுறுத்தியவாறுமென்க. (௭)

கயிலாயச்சோபானச்சிறப்பு.

அரம்பைய ராடல் முழவுடன் மருங்கில்
அருவிகள் எதிரெதிர் முழங்க
வரம்பெறுங் காதல் மனத்துடன் தெய்வ
மதுமலர் இருகையும் ஏந்தி
நிரந்தர மிடைந்த விமானசோ பான
நீடியர் வழியினால் ஏறிப்
புரந்தரன் முதலாம் சடவுளர் போற்றும்
பொருவிலாத் திருமலைப் புறம்பு.

(எ - ரு.) (அயன் அரி என்னும் இருவருள் ஒருவர் பக்ஷியைத்தேடுகின்றவராயும் ஒருவர் பக்ஷியினால் தேடப்பட்டவராயும் இருக்க) ஏனைய இந்திராதி தேவர்களெல்லாம் இரண்டுகைகளிலேயும் தேன்ததும்பித் தெய்வமணங்கமழும் மலர்களை ஏந்திக்கொண்டு, அம்மலர்களை இறைவனது அடிகளிலே யர்ச்சனைசெய்து, தாம் தாம் எண்ணியிருக்கும் அரியவரங்களைப் பெற்றுக்கொள்ளுதற் ஆசைகொண்ட மனத்துடன் வர, அங்கு ஒளிமிகுதியினால் வழிகாணுது திகைத்துப் பின்னர் வரிசைவரிசையாய் நெருங்கியிருக்கும் விமானங்களின் வரிசையைக்கண்டு, அதுதான் நாம் அனைவரும் போகும்படியான படியோடுகூடிய மார்க்கமென் றுணர்ந்து அவ்வழியாக மேலேறிச்சென்று மலர்களை இறைவன் அடிகளில்தூவித் துதித்துக்கொண்டிருப்ப, அத்தேவர்களுக்குப் பின்னே அரம்பாஸ்திரீகள் இருபக்கத்தும் நின்று நடனஞ்செய்யவும், அவர் பக்கங்களிலே அந்நடனத்துக்கேற்ப மத்தளமுழக்குவோர் மத்தளங்களைமுழங்கிக் கொண்டிருப்பவும், அவர்களுக்குப் பின்னே அவர்கள்முழங்கும் முழக்கத்திற்கு எதிரோசையாக அருவிகள் தாம் வீசும் அலைகளால் அவ்வோசையை உண்டாக்கிக்கொண்டிருப்பவுமாக வள்ளது கயிலாயத்தின் புறம்பு என்பதாம்.

இந்திராதியர் சேவ்யராயினும், அவர்கள் அன்புமேற்கொண்டு சிவார்ச்சனையை விரும்பி அதனைச்செய்யத் தலைப்படின் அவர்கள் அடியார்களோடொப்பவே யாதலால் அப்பெருமைத செய்யும் பேறும் பாக்கியமுடையவ ரென்றென்பதும், அவர்கள் அப்பாக்கியத்தைச் சோபானமுறையாகப் பெறத்தகும் பக்குவம் உடையவரேயன்றித் தீவிரதரபக்குவமுடையவரன்றென்பதும் தோன்ற புரந்தரன்முதலாம் கடவுளர் வரம்பெறுங் காதல் மனத்துடன் தெய்வமதுமலர் இருகையும் ஏந்தி சோபான நீடியர் வழியினாலேறிப்போற்று என்றார். அரம்பையராடல் ஓசையையும், முழவின் ஓசையையும் அக்கயிலையில் முழங்கும் அருவிகள் அவைகளை எதிர்த்து முழங்கும் ஆற்றலுடைத்தென்பது தோன்ற அரம்பையராடல் முழவுடன் அருவிகள் எதிரெதிர் முழங்க என்றார்.

இந்திராதியர் அன்புமேற்கொண்டு அர்ச்சனைசெய்ய விரும்பினர் தகுதி பெறுவர் என்பதற்கு:—

† "ஐயநின் னிருக்கையெல்லைக் கணியனு மளவில்தீங்கா
வெய்யஎன் பழியிலேருநு மேலைநாள் அடியேன்செய்த
மையல்வல் வினையுமாய்ந்துன் மலரடி வழுத்தி பூசை
செய்யவும் உரியனுனேன் சிறந்தபே றிதன்மேல்யாதோ".

† திருவிளையாடற்புராணம், இந்திரன் பழிதீர்த்த படலம்.

"இன்னநின் பாதம்போற்ற யிவ்வாறேயென்றும்பூசித்
துன்னடியாருள் யானும் ஒரடித் தொண்டனாவேன்
அன்னதே யடியேன்வேண்டத் தக்கதென் றடியில்வீழ்ந்த
மன்னவன் றனக்குமுக்கண் வரதனுங் கருணைபூத்து" என்றதனானும்.

சோபானமுறையான் அநுக்கிரகஞ் செய்வனென்பதை:- "இருதுவிற் சிறந்தவேனிலும் மதியாறிரண்டினிற் சிறந்தவான்றகரும்,பொருவில்தாரகையிற்சிறந்த சித்திரையுந் திதியினிற்சிறந்தபூரணையும், மருவுசித்திரையிற் சித்திரைதோறும் வந்துவந்தருச்சி" என்றதனானும், தேவர்கள் சிவார்ச்சனையைச் செய்யவிரும்பினும் இறைவன் செய்யவிடான் என்றதை:—"துறக்க நாடளைந்து சுத்தபல்போகந்துய்த்து மேன்மலபரிபாகம் பிறக்க நான்முகன் மால்முதல் பெருந்தேவர் பெரும்பதத் தாசையும் பிறவும் மறக்க நாம் வீடு வழங்குதும்" என்றதனானும் அறிக.

இந்திராதிதேவர்கள் போககாமிகளாகலான் சோபானமுறையாற் பூசிக்கும் மந்த பரிபாகிகளென்றும், இவர்கள் மந்தபரிபாகிக ளென்றதனால் மோக்ஷகாமிகள் தீவிர பக்குவமுடையவரென்றும், அடியார்கள் அன்பொன்றே வேண்டுந்தன்மைய ராகலின் அவர்கள் தீவிரதரபரிபாகிகளென்றும் அறிதற்பாற்று. (௯)

நந்திதேவர் வீற்றிருந்த பெரிய கோபுரத்தின் சிறப்பு.

மேவதநான் முகன்மால் புரந்தரன் முதலாம்
விண்ணவர் எண்ணிலார் மற்றுங்
காதலான் மிடைந்த முதற்பெருந் தடையாய்
கதிர்மணிக் கோபுரத் துள்ளார்
பூதவே தாளப் பெருங்கண நாதர்
போற்றிடப் பொதுவில் நின்றாடும்
நாதனார் ஆதி தேவனார் கோயில்
நாயகன் நந்தியெம் பெருமான்.

(எ - று.) (மேலேசொல்லிய அலங்கார வரிசைகளின் மிகச் சிறந்திருப்பதேயன்றி) பிரமன் திருமால் இந்திரன்முதலிய பெருந்தேவர்களும், மற்றைய எண்ணிறந்த தேவர்களும், இறைவனை உள்ளேசென்று தரிசிக்கவேண்டுமென்கின்ற ஆசையினால் ஒருவரோடொருவர் நெருக்குற்றுக் கிடப்பதாகிய, இரத்தினமயமாய்ப் பிரகாசிக்கும் பெரிய கோபுரத்துவாரம், பூத வேதாள முதலிய பெரியகணநாதர்கள் போற்றத் தில்லைப்பொதுவின் கணின்று நடனஞ்செய்தருளும் நடராஜமூர்த்தியாயும், யாவர்க்கும் முதற்கடவுளாகியும் இருக்கின்ற இறைவனது கோயிலைக்காக்கும் தலைமையான அதிகாரத்தைப் பெற்றுள்ள நந்தி எம்பெருமானார் தமக்குரிய ஆஸ்தானமாகக் கொண்டிருக்கப் பெற்றுள்ளது என்பதாம்.

சைவத்துறை யறியாது வேதநெறியிற் றலைபட்டிருப்பவர் எவ்வளவு மேம்பாடுடையவராயிருப்பினும், அவர்கள் சிவபெருமானைக் காணும் சன்மார்க்கத்துள் ஒரு சிறிதும் நுழையப்பெறார் என்பார் 'மேவதநான்முகன் மால்புரந்தரன் முதலாம் விண்ணவர் எண்ணிலார் மற்றுங்காதலான் மிடைந்த முதற் பெருந்தடையாம் கதிர்மணிக்கோபுரம்' எனவும், முத்திநெறியறிவிக்கும் பத்திமார்க்கத்தைக் காட்டும் சைவமார்க்கத்தில் நிற்கப்பெறும் வல்லாளரே !"நல்லசிவதன்மத்தால் நல்லசிவயோகத்தால் நல்ல சிவஞானத்தால் நான்மிழிய" அன்புசெய்ய வல்லராவர் என்பார் ஆதிதேவனார் கோயில் நாயகன் நந்தி

எம்பெருமான் கோபுரத்துள்ளான் எனவும், சர்வசங்காரகாலத்தில் இந்திராதி சகலமான தேவர்களும் சங்காரப்பட்டுப் போகப் போற்றி நிற்பவர் சிவகணங்களிற் பெரியவரேஎன் பார் பூதவேதாளப் பெருங்கணநாதர் போற்றிட எனவும், அச்சர்வசங்காரகாலத்தில் ஆன் மாக்களைக்குறித்துச் செய்யும் ஊனம் ஞானம் என்னும் இருவகை நடனத்தையும் குறிக் காது யாவர்க்கும் பொதுவாய்த் தம்மால் காக்கப்படுவதைக்காட்டும் மகாநடனம் என் பார் பொதுவில் நின்றாடும் நாதனார் எனவும் கூறினார்.

இதனால், நந்தி எம்பெருமான் கதிர்மணிக்கோபுரவாயலில் துவாரபாலகராய் நின்றரு ளால் அன்புமேற்கொண்டார் செய்யும் ஞானச்செயலெனவும், அது ஞானச்செயலென்று சிவஞானிகளெல்லாம் அறிய நான்முகன்முதலிய எண்ணிலார் அங்ஙனந் தடைபடுத்த லெனவும், ஞானச்செயலுடையார்க்கு அஞ்ஞானச்செயலுடையார் தடைப்பட்டு நிற் பரேயன்றி அவரதுசெயலைக் கடந்துபோக அறியார் எனவும், சர்வசங்காரகாலத்தில் நின் றாடும் நடனம் இதுவெனவும் பிரகாசப்படுத்தப்பட்டது. (௧)

நந்திதேவரதிகாரச்சிறப்பு.

நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அனேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாந் தலைமையாம் பணியும்
மலர்க்கையிற் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினாற் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான்.

(இ - ள்.) சிவனது உருவத்தைக் காட்டுவதாயுள்ள நெற்றியிற்கண்ணும், நான்கு பெரியதிருப்புயங்களும், மெய்யெலாம் வெண்ணீறசண்ணித்த திருமேனியும் உடைய ராய்ச் சிவசாரூபியம்பெற்றவர்கள் அனேகர்களும், இடபாரூடராகிய இறைவனுக்கு அடிமைபூண்ட அடியவர்களும், பிஞ்ஞகனாகிய இறைவனது அருள்பெறுவான் எண்ணி யிருக்கின்றவர்களும், இவரொழிந்த ஞானவான்களும் ஆகிய யாவர்க்கும் தலைமைபெற் றுள்ள அதிகாரமாகிய பணியும், மலர்போன்ற மென்மையாகிய திருக்கரங்களில் உடை வாளும் பிரம்பும், நீண்டு நிறைந்த சடைமுடியினையுடைய இறைவனது திருவருளினாற் பெற்றவராகிய நந்திபெம்பெருமானால் காக்கப்படுவது பெருமைபொருந்திய அத்திருக் கயிலாயமலை என்பதாம்.

சிவயோகிகளாய்ச் சிவசாரூப்பியம் பெற்றவர்களுக்கும், புத்திரனைப்போல் அடிமை செய்யவல்ல கிரியாவான்களுக்கும், திருவருளைவிரும்பித் திருவலகிடுதலாதி பணிசெய்ய வல்ல சரியாவான்களுக்கும், சன்மார்க்கத்தராகிய ஞானவான்களுக்கும் பெறுதற்கரியது நந்திதேவர்பெற்ற பேறென்பார் மற்றவர்க்கெல்லாம் தலைமையாம் பணியும் என்றும்; தலைமையாகிய பணியைப்பெற்றதுபோல், தலைமையாகிய ஆயுதவிசேடங்களைப்பெறுத மிகச்சிறியவற்றைப் பெற்றாரென்பார் சுரிகையும் பிரம்பும் பெற்றான் என்றும்; வாயிற் காவலாகிய தலைமையாகிய பணியும், அதற்கேற்ப உடைவாளும் பிரம்பும் வேறொரு தவ முதலியவற்றாற் கிடைப்பதன்று, இறைவ னருளொன்றினாற் கிடைப்பதே யாமென் பார் அருளால் என்றுங்கூறினார்.

பிறந்திறத்தலைமேற்கொண்ட பிரகிருதிமாயாரூபங்களை வெறுத்துப் பிறந்திறத்தலை யறியாத சிவசாரூபத்தை விரும்புவோர் சிவயோகிகளாகலான், நெற்றியிற்கண்முதலுடை யாரைச் சிவசாரூபிகள் என்றும், பிறவிக்குக் காரணமாகிய பயனில்முயற்சிகளை வெறு

த்து, "தவமேபுரிந்திலன் தண்மலரிட்டு முட்டாதிறைஞ்சேன்" "சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ் விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன் நயந்துஉருகேன்," "ஆடேறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன் பூமாலைபுனைந்தேத்தேன் புகழ்ந்துரை யேன்" என்ற திருவாசகப்படி, அவைகளைவிரும்பிச் செய்து, இறைவன் உமா சகாயனாய் விருஷபாருடனாய் காட்சிதந்தருள விரும்புவோர் கிரியாவான்களாகலான் தம்பிரானடியாரைக் கிரியையாளர்கள் என்றும், நித்த வனித்தங்களது வேறுபாடுணரவரும் உணர்வு வந்து, அழிதன்மாலையவாய இம்மைமறுமை யின்பங்களில் உவர்ப்பும் பிறவித்துன்பங்களுந் தோன்றி, வீட்டின்கண் ஆசையுண்டாய், பிறவிக்குக்காரணமாகிய பயனில்முயற்சிகளெல்லாம் நீங்கி, வீட்டிற்குக்காரணமாகிய "எளியனல் தீபம் இடமலர்கொய்தல், அளிதின் மெழுகல் அது தூர்த்தல் வாழ்த்தல், பளிமணிபற்றல் பன்மஞ்சனமாதி, தளிதொழில் செய்வ தாஞ்தான் தாசமார்க்கமே" எனவும், "வாசித்துப் பூசித்து மாமலர்கொய்திட்டும், பாசிக்குளத்தில் வீழ் கல்லாமனம் பார்க்கின், மாசற்றசோதி மணிமிடற் றண்ணலை, நேசித்திருக்க நினைவறியாரே" எனவுங்கூறிய மந்திரமொழியைக் கொண்டு அவைகளை யியற்றுவோர் சரியாவான்களாகலான் பிஞ்ஞகன் றன்னருள் பெறுவார் என்றுரைச் சரியையாளர்கள் என்றும்; இம்முறையான் ஞானசாதனங் கைவரப்பெற்றவர் "பசுபாச நீக்கிப் பதியுடன்கூட்டிக், கசியாதநெஞ்சங் கசியக்கசிவித்துக், ஒசியாதவுண்மைச் சொரூபோதயத்துற்று, அசைவானதில்லாவ் ஆனந்தன் மார்க்கமே" என்ற மந்திரமொழிப்படி மனங்கசிவித்து உண்மைச்சொரூபத்தில் நிற்பவர் ஞானவான்களாகலான் மற்றவர் ஏன்றுரை ஞானிகளென்றும் பொருள் கொள்ளக்கிடந்தன.

நந்திதேவர் இவர்களுக்கெல்லாம் தலைமையாம்பணியைப் பெற்றாரென்பது என்னையெனின்,—நந்தியெம்பெருமானார் ஆதிதேவனார் கோயில்நாயகர் எனவும்; இவரது பணி நெற்றியிற் கண்ணர்க்கும், தம்பிரானடியார்க்கும், பிஞ்ஞகன் அருள்பெறுவார்க்கும், மற்றவர்க்கும் தலைமையாம்பணியென்றும்; அப்பணி கற்றைவார்சடையான் அருளினாற் பெற்றான் என்றுங்கூறியதனால்,—நூல்வழியைநாடி அந்நூலில் விதித்தபடியே அவரவர் பக்குவத்திற்கேற்பச் சரியையாதிகளைபபற்றி, அந்தந்தமுறைப்படி யதையதைச்செய்து, அவ்வப்பலன்களை விரும்ப, அவரவர்விரும்பியபடியே சாலோகாதிகளைத் தந்தனன் இறைவன். நந்திதேவரோ "வேண்டத்தக்கதறிவோய்நீ வேண்டமுழுதுந் தருவோய் நீ, வேண்டும் அயன்மாற்கரியோய் நீ வேண்டியென்னைப் பணிகொண்டாய், வேண்டிநீயா தருள்செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால், வேண்டும்பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே," எனவும், "ஆயக்கடவேன் நானேதான் என்னதோ இங்கதிகாரம், சாயத்திடுவாய் நின்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே" எனவும் அருளியதிருவாசகப்படி அருள்வழியை நாடினவராகலின், தாம் ஒன்றும் வேண்டாது இறைவன்வேண்டுவதே தாம்வேண்டுவதாகவும், யாது செய்யவிதிக்கின்றனனோ அதுவே தான்செய்யத்தகும் செயலாகவும் இருப்ப, அவ்வன்புநெறியை இறைவனறிந்து, அவ்வெம்பெருமானார் ஞான தீக்ஷாகுருவாய் சிவஞானோபதேசகர்த்தராய் ஆன்மாக்களுடைய பக்குவாபக்குவங்களை யுணர்ந்து சிவஞானோபதேசம் செய்யவும், அவ்வுபதேசத்துக்குப் புறம்பாயுள்ள பூர்வபக்ஷிகளது பக்ஷங்களை வெட்டித்தொலைக்க ஓர் ஞானவாளையும், சிவஞானோபதேசஞ்செய்யப்பெற்றோர் அவ்வுபதேசவழியே சிவஞானமும் சிவானுபூதியுங் கைவரப்பெற்றபின்னர், அங்ஙனங் கைவரப்பெற்ற அச்சிறப்பான் "பொதுவதனில் - அத்துவிதமாதல் அகண்டமும் தெய்வமே, அத்துவிதி அன்பிற்றொழூ" எனவும், வினையால் அசத்து விளைதலான், "ஞானம் வினைதீரினன்றி விளையா - வினைதீர, ஞானத்தை நாடித்தொழவே அதுநிகழும், ஆனத்தால் அன்பிற்றொழு" எனவும், "தன்னையறிவித்துத் தான் தானாய்ச்செய்தானைப், பின்னைமறத்தல் பிழையலது - முன்னவனே, தானே தானாய்ச் செய்திடும் தெய்வமென்றும்தெவமே, மானே தொழுகைவலி" எனவும் உபதேசித்த விதிவாக்கியத்தை மறந்து வழிபாட்டைச்செய்யாது கைவிடுவராயின், "எங்

நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை - செய்நன்றி கொன்றமகற்கு" என்ற வேதமொழிப்படி அவர்கள் எக்காலத்தும் கழுவாயிலராய் ஒழிவராகலின் அவர்கள் அம் மறப்பினின்றுநீங்கி உய்யும்பொருட்டு ஆஜ்ஞாசத்திரூபமாயிருக்கின்ற ஓர் பிரம்பையும்,- தந்து அவ்விரண்டையுங்கொண்டு பூர்வபக்ஷிகளைப்போக்கும் வகைக்கும், சிவானுபூதி மான்களைத் தங்கள் வழிபாட்டினின்று மறவாது செல்லும்வகைக்கும் உடம்பினும் உணர் வினும் தாக்கும் வண்ணம் செய்வதாகிய தமதுதலைமைப்பணியைப் பரமனார் தன்னரு ளால் தாமே தந்தனராகலின், அப்பெரியதோர் சிறப்புத்தோன்ற "தலைமையாம்பணியும் மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும் கற்றைவார்சடையான் அருளினிற் பெற்றான்" என் றார். சரியைகிரியாயோகஞானிகளெல்லாம், சடையான்விதிக்கும்பணியை நாடாது, தாம் தாம்செய்தபணிக்குரிய அருளைநாடினராகலின், நீறணிமேனியரனேகர். தம்பிரானடியார் முதலாயினரைப் பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார் என்றார்.

இனி, அப்பெரும்பணியாரை "நதிமணிக்கோபுரத்துள்ளார் என்றதும், காப்பது கயிலைமால்வரைதான் என்றதும் என்னையெனின்,—மேலே வாளுக்கும் பிரம்பிற்குங் கூறிய உண்மைப்பொருள் தோன்றவேயாம். (௩௧)

திருக்கயிலாயம் அபயன் திருமனத்தோங்குஞ்சிறப்பு.

கையின்மான் மழுவர் கங்கைசூழ் சடையிற்
கதிரிளம் பிறைநறுங் கண்ணி
ஐயர்வீற் றிருக்குந் தன்மையி னாலும்
அளப்பரும் பெருமையி னாலும்
மொய்யொளி தழைக்குந் தன்மையி னாலும்
வென்றிவெண் குடையந பாயன்
செய்யகோ லபயன் திருமனத் தோங்குந்
திருக்கயி லாயநீள் சிலம்பு.

(ப - ரை.) ஊழிதோறிருக்கும் (நிலம்) செயலையேயுடைய ஸ்ரீகயிலாயபருபதமானது, வலம்இடமென்னும் திருக்கரங்களில் மானையும் பரசாயுதத்தையும், கங்கைசூழ்ந் திருக்கின்ற சடைமுடியில் இளங்கதிர்பரப்புட இளம்பிறையையும், நறுமணங்கமழும் கொன்றைமாலையினையும் உடையவராகிய இறைவனார் எழுந்தருளியிருக்கும் தகுதியி னாலும், அளவில்லாத பெருமையினாலும், வெள்ளிய ஒளிபடர்ந்திருக்கும், பரிசுத்தத்தி னாலும், வெண்கொற்றக்குடையினையுடைய செங்கோல்செலுத்தும் அநபாயச்சோழமகா ராஜாவினது திருவுள்ளம்போலச் சிறப்புற்றிருக்கும் என்பதாம்.

அநபாயன் - எனவே, தனக்குப் பயமில்லாதவன். அஃதாவது, பகைவர்களால் பய மில்லாதவன், பாவங்களாற் பயமில்லாதவன். இவ்விருவகைப்பயமும் அற்றிருத்தல் செங்கோற்செலுத்துமுறையினாலாகலான் செய்யகோலபயன் என்றார். அபயன்-பிற ரது பயத்தைப்போக்கத்தக்கவன் என்க. உலகினையாளும் அரசர் மனத்தின்கண் வேத நெறி சைவநெறி பத்திநெறி என்னுமூன்றுமே ஓங்கியிருக்கவேண்டுமாகலான், இவ் வரசரது மனத்தின்கண் அம்மூன்றும் குன்றாது ஓங்கியிருத்தலால் திருமனத்தோங்கு மென்றார். அவரதுமனம் வேதநெறியிற் குன்றாது ஓங்கியிருந்தமையால் வென்றி வெண்குடையோடு சிங்காதனத்தில் வீற்றிருக்குந் தன்மையும், சைவநெறியிற்குன்றாது ஓங்கியிருந்தமையால் அளப்பரும் பெருமையின்தன்மையும், பத்திநெறியில்குன்றாது ஓங்கியிருந்தமையால் மெய்யொளிதழைக்குந் தூய்மைத்தன்மையும் உடையவராயினர். இம்மூவகைத்தன்மையும் ஒருங்கேயமையப்பெற்ற அவ்வரசர்பெருமானாரது மனத்தின் சிறப்புத்தோன்ற அபயன்திருமனத்தோங்கும் திருக்கயிலாய நீள்சிலம்பு என்றார்.

இனித்திருக்கயிலாயம் மூவகைத்தன்மையும் உடையது எவ்வாறெனின்;—

(1) கதிரிளம் பிறைநறுங்கண்ணியராகிய இறைவன் சுரர்களுக்கு வேண்டியவனாய் அசுரர்களுக்கு வேண்டாதவனாகியும், அசுரர்களுக்கு வேண்டியவனாய் சுரர்களுக்கு வேண்டாதவனாகியும் இருப்பதின்றி யாவர்க்கும்வேண்டுவனவழங்கி, யாவரானும் வேண்டப்பட்டுக் கயிலையின்கண் நிகரற்று இருக்குந்தன்மையும் (2) அளவைப்பிரமாணங்களால் அளப்பதற்கரியனாயிருக்குந்தன்மையும் (3) தனது திருமேனி ஞானசொரூபமாய்ப் பிரகாசிக்கும் பரிசுத்தத்தன்மையுமாகிய மூவகைத்தன்மையும் உடையனாயிருக்கும் அவ்விறைவனைக் கயிலாயமானது தன்னிடத்துக்கொண்டிருத்தலால், ஐயர்வீற்றிருக்குந் தன்மையினாலும், அளப்பரும்பெருமையினாலும், மெய்யொளிதழைக்குந்தூய்மையினாலும் அபயன் திருமனத்தோங்கிய திருக்கயிலாயநீள்சிலம்பு என்றார்.

இதனால் அரசர்க்கு வேதநெறி பகையைப்போக்குமெனவும், சைவநெறி அளப்பரும்பெருமையைத்தருமெனவும், பத்திநெறி பரிசுத்தமாகிய ஞானப்பிரகாசத்தையுண்டாக்குமெனவும், இஃதேபோல் இறைவன்வேதநெறியான் வரும் சுராசுரர்களுக்குப் பகையின்றி நிக்கிரகானுக்கிரகங்களைச்செய்கின்றவனெனவும், அருளினால் ஆகமத்தேயறியலாம் என்ற சித்தாந்தவாக்கியப்படி சைவநெறியில் வருவார்க்குத் தனது அருளைத் தானேயாக்கித் தனது அளப்பரும்பெருமையை யுணர்த்துவனெனவும், பத்திநெறியில் நிற்போர்க்கு அவர்நினைத்தவடிவோடு ஞானமயமாகிய திருமேனியுடையவனாய் வந்து அருள்புரிவானெனவும்விளக்கி, வேதநெறி சைவநெறி பத்திநெறி என்னுமூன்றால் அரசன் முறையே பகையைப்போக்கி, அளப்பரும்பெருமையைப்பெற்று, ஞானப்பிரகாசமுடையவனாவனென்றும், இறைவன் வேதநெறியான் சுராசுரர்களையும், சைவநெறியால் சிவஞானிகளையும், பத்திநெறியால் அன்பரையும் ஆளுவனென்றும் அறியுமுறைமை உணர்த்தியவாறுமென்க.

“வேதநெறி சைவநெறி பத்திநெறி வழாதசெய்கை சிந்தைதான் அரனடிக்கே செலுத்தினராய்ச், சிவானுபவச்செல்வம் ஓங்கப், பந்தயாம்தொடக்கறுத்த திருத்தொண்டர்”களுடைய புராணத்தைச் சொல்லத் தம்மைத் தூண்டியது அரசர்பெருமானாகிய அநபாயச்சோழரது திருமனமேயாதலின் அவர்மனதுக்கு யாம்மாற்செய்யப்படும் கைம்மாறியாதுளது. ஆகலின், ஒன்றோடும் உவமித்துச் சொல்லவொண்ணாத திருக்கயிலாயநீள்சிலம்பை ‘செய்யகோலபயன் திருமனத்தோங்கும்’ என்று யாம்புகழ்வதேயாமென்று சேக்கிழார்பெருமானார் கூறிமகிழ்ந்தனராமென்க. (கஉ)

உபமன்னிய முநிவர்சிறப்பு.

வேறு.

அன்ன தன்றிருத் தாழ்வரை யின்னிடத்
தின்ன தன்மைய னென்றறி யாச்சிவன்
தன்னை யேயுணர்ந் தார்வந் தழைக்கின்றான்
உன்ன ருஞ்சீ ருபமன் னியமுநி.

(எ - து.) நினைத்தற்கரிய அருட்சிறப்பினை யுடைய உபமன்னியமுநிவரென்னும் மஹாசைவ முநிவரானவர், மேலேகூறிய அருஞ்சிறப்பினையுடைய ஸ்ரீகயிலாயத்தின் அடிவாரத்தில், வேதசிவாகமங்களால் இன்னதன்மையனென்று அறியவொண்ணாதசிவன் தன்னையே அவனருளால் இன்னதன்மையனென்றுணர்ந்து, அவ்விறைவன் பால் தைலதாரைபோல் நீக்கமில்லாமல் எக்காலத்தும் அன்பு தழைந்திருக்கப்பெற்றவராயுள்ளவர் என்பதாம்.

உன்னருஞ்சீர் உபமன்னியமுநி அன்னதன் திருத்தாழ்வரையின்னிடத்து ஏனக் கூட்டுக.

உபமன்னியர் சரியை கிரியாயோகமாகிய அழிவில்லாத தவங்களை இயற்றுவோர்க்குச் சாலோக சாமீப சாரூபம என்னும் பதமுத்திகளாகிய அழிவிலாப்பயன்களை அழிவில்லாமற்கொடுக்கும் பெரும்பதமாயுள்ளது ஸ்ரீகயிலாயம் எனவும், அங்குவசிப்பவர் அப்பதங்கட்கு உரியவர்களே எனவும் உணர்ந்து அங்குவசிக்கும் பெரும்பாக்கியத்தை இறைவன் அருளாற்பெற்று வாழ்கின்றவர் என்பார் - அன்னதன் திருத்தாழ்வரையின் இடத்து - என்றார். ஏனையவிசேடங்களை ஆசார்யபிரபாவம் கஉ-வதுபக்கத்தில் கூ-வது வரி முதலாகக்காண்க.

இதனால் உபமன்னியமுநிவர் பலதேவரோடு இறைவனையும் ஒருவனாகஎண்ணும் ஏனையமுநிவர்களைப்போலல்லாமல், சிவன்தன்னையே யுணர்ந்து ஆர்வந்தழைக்கின்ற உன்னருஞ்சீர் சைவமுநிவரெனவும், சிவனையே நினைக்கும் நெறியேயன்றி ஏனைய தேவர்கள் வசிக்கும் இடங்கள் எத்தகைச்சிறப்புடையனவேனும் அத்தகைச்சிறப்புகளை ஓர்பொருளாகமதியாது சிவபெருமான்வாழும் ஸ்ரீகயிலாயமே தாம் வாழும்இடமாக்கொள்ளும் நன்னெறியை உடையவரெனவுங் கூறப்பட்டன. (கரு)

யாத வன்துவ ரைக்கிறை யாகிய
மாத வன்முடி மேலடி வைத்தவன்;
பூத நாதன் பொருவருந் தொண்டினுக்
காதி அந்தம் இலாமை அடைந்தவன்;

(எ - து) யதுகுலத்தில் வளர்ந்தவரும், துவாரகாபுரிக்குத் தலைவரும் மாதவரென்னுந் திருநாமம் உடையவருமாகிய கண்ணபிரான் முடிமேல், சிவதீக்ஷாகாலத்தில் தமதுதிருவடியை வைத்தஆசிரியர் சர்வபூதபதியாய் விளங்கும் பசுபதியினது ஞான யோகக்கிரியாசரியைகளாகிய ஒப்புயர்வற்ற திருத்தொண்டினுக்கு, ஆதியந்தம் இல்லாமையையுணர்ந்து, அதனை எப்பொழுதுஞ் செய்யுங்கடப்பாடுடையவர் என்பதாம்.

விசேடம் - ஆசார்யபிரபாவம் கசா - பக்கம். கூ - வரி முதலாகக் காண்க.

இதனால் உபமன்னியமுநிவர் கிருஷ்ணமூர்த்திக்கு ஆசிரியரெனவும், தன்னையறிவித்துத் தூன்தாளுய்ச்செய்த இறைவனைப் பின்னை மறத்தல் பிழையாகலின் அப்பிழைக்கு ஆளாகாது எக்காலத்தும் அடிமைத்திறத்தை மறவாதியற்றும் ஞானசீலரெனவுங் கூறப்பட்டன. (கசா)

அத்தர் தந்த அருட்பாற் கடலுண்டு
சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன்;
பத்த ராய முநிவர்பல் லாயிரர்
சுத்த யோகிகள் சூழ இருந்துழி,

(எ - து) இறைவன்திருவுள்ளம் இரங்கிப் பாற்கடலாகிய பாலில் அருளாகிய சர்க்கரையைக் கலந்து உண்ணும்படிக் கொடுத்த அவ்வருட்பாலைத் தெவிட்ட உண்டு, பாற்குறைவற்று மனமகிழ்ந்து வளர்ந்தவராகிய உபமன்னியமுநிவர், சிவபத்தியிற் சிறந்தவர்களாகிய பல்லாயிரமுநிவர்களும், நல்லசிவயோகநெறியில்நிற்கும் சிவயோகிகளும், தம்மைச்சூழ்ந்திருக்கத் தாம் நடுவேயிருந்தசமயத்தில் என்பதாம்.

விசேடம்-ஆசார்யபிரபாவம் ககூ - வது பக்கம் கக-வரிமுதலாகக் காண்க.

இம்முநிவர் பாலுண்டசிறப்பினை "பாலுக்குப்பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்." என்ற திருப்பல்லாண்டு, சிவரகசியம் அம்சம் எ, கோயிற்புராணம் வியாக்ரபாதச்சருக்கம், காஞ்சிப்புராணம் தான்தோன்றீச்சுரப்படலம்இவைகளிற்காண்க.

இதனால் உபமன்னியமுனிவர், இறைவனருள்பெறவந்த காரணமும், அக்காரணமுணர்ந்தமுனிவரும் யோகிகளும் இறைவன் அருட்டிறத்தைத் தாம் அவர்பால் பெறுவதற்காகச் சூழவிருந்த காரணமுங் கூறப்பட்டன. (கஔ)

சுந்தரமூர்த்திகள் கயிலாயத்தை நோக்கிவரும் சிறப்பு.

அங்கண் ஓரொளி ஆயிர ஞாயிறு
பொங்கு பேரொளி போன்றுமுன் தோன்றிடத்
துங்க மாதவர் சூழ்ந்திருந் தாரெலாம்
"இங்கி தென்கொல் அதிசயம்" என்றலும்,

(எ - து) (பல்லாயிரமுனிவர்களும், சிவயோகிகளும் தம்மைச்சூழ்ந்திருப்பத் தென்திசையைநோக்கி உபமன்னியமுனிவர் இருக்கும்) அப்பொழுது, ஆயிரஞ்சூரியர்களுடைய குறையாதோங்கும்பேரொளியெலலாம் ஓரொளியாய்த்திரண்டு ஒளிர்வதுபோல் ஜோதியொன்றுமுன்தோன்ற (யாதொருதோற்றமும் அற்று, உபமன்னியமுனிவரது திருவாக்கினின்றும் வெளிவரும் சிவஞானபோதத்தோற்றத்தையே கண்டுகளிக்கும் தூய்மையுடையவராய்ச்) சூழ்ந்திருந்தமாதவமுடைய * அம்முனிவரும்யோகிகளுங்கண்டு, ஆசிரியரைநோக்கி ஐயரே! நமதுகண்கள் கூசுதலுடைய இன்று இப்பொழுது காணப்பட்ட இவ்வொளி எவ்வொளி? ஈஃது என்ன அதிசயம்? இவ்வதிசயம் என்றும் கண்டறியாத அதிசயம்! என்று கேட்கவும் என்பதாம்.

இதனால் உபமன்னியமுனிவரைச் சூழ்ந்திருந்தமுனிவர் முதலாயினோர் சுந்தரமூர்த்திகளுடைய திருமேனி அகண்டாகாரதேஜோரூபமாய்த்தோன்ற அச்சோதி இதுவாமென்றறிந்துகொள்ள ஆசிரியரைநோக்கி வினவினரெனக் கூறப்பட்டது. (சக)

அந்தி வான்மதி சூடிய அண்ணல்தாள்
சிந்தி யாஉணர்ந் தம்முனி "தென்திசை
வந்த நாவலர் கோன்புகழ் வன்தொண்டன்
எந்தை யார்அரு ளால்அணை வான்" என,

(எ-து) (இங்கு இதென்கொல் அதிசயம் என்று முனிவர்முதலாயினோர் உபமன்னியமுனிவரைக்கேட்க) அம்முனிவர் அந்திப்போதில் தோன்றும் தேய்ந்துபோதலை யறியாத ஓர்கலையையுடைய சந்திரனைச் சடைமுடியின்கண் சூடிய இறைவனது சர்வஞ்ஞதையாகிய அருட்குணத்தைச் சிந்திக்கவும், நாம் காணும் இவ்வொளி இக்கயிலையிலிருந்த ஆலாலசுந்தரர் என்னும்ஒளியாம். இவ்வொளியாகிய சுந்தரப்பெருமானுரை நம் சிவபெருமானார் ஆணைதடுப்பதற்கஞ்சி, அவ்வாணையாகிய அருள்வழியே தென்திசைநோக்கிவந்த "நாவலர்கோன்" என்று நாவினது செல்வியின் திருவருள்பெற்றவரால் நாவராப்புகழ்ப்பெற்று அத்திசைக்கண் வாழ்ந்திருந்து, இன்று தமதிருபபிடமாகிய ஸ்ரீ கயிலாய வாழ்க்கையைக்கருதிக் கயிலாயநாதனது உத்தரவை நாட, நாடியவண்ணமே, அந்நாதனும் உத்தரமளிக்க இவ்வுத்தரதிசையைநோக்கி வருகின்றார் என்றுணர்ந்து என்பதாம்.

அம்முனி அந்திவான்பிறைசூடிய அண்ணல்தாள்சிந்தியா தென்திசைவந்த * * * என உணர்ந்து எனக்கூட்டுக.

இதனால் சுந்தரமூர்த்திகளுடைய திருமேனியின்பேரொளி, துங்கமாதவருடைய கண்ணொளிகட்கு அடங்காத ஆயிரஞ்சூரியர்போன்று பிரகாசித்ததென்றும், உபமன்னியமுனிவருடைய அறிவொளிக்கு என்றும்காணப்பெறாத அகண்டாகார தேஜோரூபமாய்ப் பிரகாசித்ததென்றும், அங்ஙனமான சிவதேஜோரூபம் சிவனருளைச் சிந்தித்துணரவேண்டியதன்றி தனது ஞானசிந்தனையால் உணரக்கூடாததாகலான் அவ்

---

* இதனை "மந்திரமா முனிவரிவனாரென" எனவரும் திருநொடித்தான்மலைத் தேவாரத்திற் காண்க.

வுண்மையுணர்ந்த அம்முனிவர் அருட்சிந்தனையைக்கொண்டு அவ்வொளியைச்சிந்தித்தன ரென்றும், அவ்வருட்சிந்தனையால் அவ்வருள் ஆலாலசுந்தரவடிவங்கொண்டு தென்திசையிற்சென்று அருளாகியதன்னை உயிர்களெல்லாம் பெற்றுவாழ அன்பினைப்பிரகாசப்படுத்தித் தன்னையுடையானாகிய இறைவனை அணையவருகின்றதென்றுங் கூறப்பட்டன.

எனவே, சடத்தன்மையுடையகண்ணொளியினாற்காணப்படும் ஒளியுமன்று, சித்துத்தன்மையுடைய அறிவொளியினாற்காணப்படும்ஒளியுமன்று, சடவொளியையும் சித்தின் ஒளியையும் பிரகாசிக்கச் செய்யவல்ல அருளொளியேசுந்தரமூர்த்திகளுடைய திருமேனியினொளியென்று அறிவுறுத்தியவாறாம்.

அன்றியும் சிந்தியாவுணர்ந்து என்றதனானும் கட்புலனாற்காணப்படும்தடத்தசிவத்தினுடைய ஒளிபோன்றதன்று, ஞானசிந்தனையால்காணப்படும் சொரூபசிவத்தினுடைய ஒளியேயாமென்று அறியக்கிடக்கின்றது. (கஎ)

கைகள் கூப்பித் தொழுதெழுந் தத்திசை
மெய்யில் ஆனந்த வாரி விரவிடச்
செய்ய நீள்சடை மாமுனி செல்வுழி
ஐயம் நீங்க வினவுவோர் அந்தணர்.

(இ - ள்) (சுந்தரமூர்த்திகளாகிய ஒளியைக்கண்ட அத்தென்திசையைநோக்கி,) இருகரங்களையும் சிரமேற்கூப்பித்தொழுது, மீண்டும் அவ்வொளிப் பெருமானைக் காணும் ஆசையாலெழுந்து, என்றும் அனுபவித்தறியாத ஆனந்தவாரி தமது உடம்பெல்லாம் நிரம்பி அவர்பாலுந்தவிசைந்து செவந்த நீண்டசடையினையுடைய அம்முனிவர் செல்லும்பொழுது, ஒளிகண்டு அதிசயமுற்றிருந்த அந்தணர்கட்கெல்லாம் தென்திசைக்கண் கண்டவொளி, இன்னவொளியென்று அறியவாராமையானெழுந்த ஐயத்தோடு, இன்று இம்முனிவரிடத்துக் காணப்படும் இவ்வாசைக்கோலம் நாம் என்றுங்கண்டிலோமே என்னும் ஐயமும்மேலிட்டு, இவ்விரண்டனுள் இவர்பாலுண்டாகிய இவ்வையத்தை முன்னர் நீக்கிக்கொள்வாமெனஎண்ணி முனிவரெல்லாம் வினவுவாராயினர் என்பதாம்.

இம்மூன்றுபாடல்களுக்கும் விசேடம் - ஆசாரியபிரபாவம் ௨௨-வதுபக்கம் ௧எ-வரி.

இக்கூறல் தேஜோரூபியாகிய சுந்தரமூர்த்தி இறைவனது திருவருளுருவமென்றும் அவ்வருளுருவம் உலகில் ஆணவநிலையினின்று ஆன்மாக்களுடைய நிலையெல்லாங் காட்டியதென்றும் இறைவன் ஆன்மாக்களையாளுமுறையெல்லாம் அவர்பாற்காட்டினனென்றும் உபமன்னியர் உணர்ந்து ஆச்செயலை யானுணரப்பெற்றேனேயென்று பரவசராக முனிவர்கள் அவரது அரியசெயலைக்கண்டு ஐயத்தின்மேல் ஐயங்கொண்டு வினவத்தொடங்கினரென்றுங் கூறப்பட்டன. (கஅ)

"சம்பு வின்அடித் தாமரைப் போதலால்
எம்பி ரான்இறைஞ் சாயிதென்" எனத்
"தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇயவன்
நம்பி ஆரூரன் நாம்தொழும் தன்மையான்"

(இ - ள்) எங்கள்பிரானாகிய உபமன்னியமுனிவரே! தேவரீர் உமது அத்தனாகிய சம்புவினது திருவடித்தாமரையை வீழ்ந்து வணங்குவதல்லது மற்றொருவரது அடியை வணங்ககிலீர், அச்சிலமுடைய அடிகள் இன்று யாவருடையஅடியைக்கண்டு அடிக்கடியும் வணங்குகின்றீர்! இது என்னஅதிசயம்! இது என்றுங்கண்டறியாத அதிசயமன்றோ என்று வினவ, கடற்பாலுண்டமுனிவர், ஐயங்கொண்ட ஐயன்மார்களை நோக்கி, கண்டு காணப்பட்ட அகண்டாகாரப்பேரொளியார்தனக்குமேலொரு பிரானையறியாத தமபிரானைத் தமது உள்ளத்தால் தழுவப்பெற்றபேராளனர். ஆகலான் அவர் நம்மால் வணங்கப்படும் தெய்வத்தன்மையுடையவரே என்பதாம். (கக)

என்று கூற இறைஞ்சி இயம்புவார்:—
"வென்ற பேரொளி யார்செய் விழுத்தவம்
நன்று கேட்க விரும்பும் நசையினேம்
இன்றெ மக்குரை செய்தருள்" என்றலும்,

(எ - து) தெய்வத்தன்மையுடையவர் என்றுசொல்லவும், அவ்வந்தணர்கள், சம்புவினது திருவடியையன்றி ஏனையோரது அடியிற்படாதமுடியையுடைய முனிவரது அடியைவணங்கிச் சொல்லுவார்கள்:—சூரியர்களது ஒளியைவென்ற பெருஞ்சோதி வடிவாய்க் காணப்படும் இவர், பூவுலகின்கண் சென்றுசெய்தசெயலெல்லாம் தவச்செயலாமேயன்றி அவச்செயலாகா! ஆகலான் அந்தமேன்மையான செயலை நன்றாய்க் கேட்க விருப்பமுடையோமா யிருக்கின்றோம். அதனை இப்போது சொல்லி அருள்வீராக என்றுசொல்லவும் என்பதாம்.

இவ்விருபாடலுக்கும் விசேடம் - ஆசார்யபிரபாவம் நகூ-வது பக்கம் கஅ-வதுவரி.

சம்புவின் அடித்தாமரைப்போதலால் வணங்காத வீரப்பாடுடைய தங்கள் ஆசிரியர் நம்பியாரூரர் நாம்தொழுந்தன்மையார் என்றதற்கியல அவர் அகண்டாகாரப்பேரொளிப் பிழம்பாய்க் காணப்பெற்றமையான், இத்தன்மையுடைய இவர் பூவுலகிற்சென்று செய்யும் தவமும் ஒன்றுளதோ. அதனை நாங்கள் அறியோம். ஆகலான் அந்தவிழுத்தவத்தை நாங்கள்அறிய மிக்கஆவலுடையவராக இருக்கின்றோம் அவ்வவாவுக்கேற்ப நாளையென்னாது இப்பொழுதே அவர்செய்தவிழுத்தவம் உரையாகும் (பொருளாகும்) வண்ணம் அருளல்வேண்டுமென்று முனிவர்கள் பிரார்த்தித்தமையை இதனால் கூறப்பட்டது.(உ)

சுந்தரமூர்த்திகளது வரலாறு.

உள்ள வண்ணம் முனிவன் உரைசெய்வான்:—
"வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொரு ளாகிய
வள்ளல் சாத்து மதுமலர் மாலையும்
அள்ளு நீறும் எடுத்தணை வானுளன்:—

(எ - து) பேரொளியார்செய் விழுத்தவம் அருளென்று சொல்லவும், அதற்கிசைந்து முனிவர் நடந்தவண்ணம் சொல்லுகின்றார். முனிவர்காள்! இப்பேரொளியையுடையார், இக்கயிலாயத்தின்கண் கங்காதரனாய் சடாதரனாய் எவ்வுருவமுங்கடந்த மெய்ப்பொருளாய் எழுந்தருளியிருக்கும் வள்ளலார் திருமேனியில் சாத்துதற்குரியனவாகிய அள்ளத்தகும் திருநீற்றையும், தேன்நிறைந்த மலராற்றொடுக்கப்படும் மாலையினையும் தமதுதிருக்கரத்தில் எடுத்து அணையும் தகைமைவாய்ந்தவராய் ஒருவருளர் என்பதாம்.

விசேடம் - ஆசார்யபிரபாவம் சரு-வது பக்கம் உ0-வரி முதலாகக் காண்க.

இவ்வாறு திருப்பாட்டான் முனிவர்கள் உரையாகும் வண்ணம் சொல்லவேண்டுமென்று வேண்டினாராகலின் உபமன்னியரும் ஆரூரரது அருள்ஞானச் செயல்முழுவதும் உள்ள (நடந்த) வண்ணமாகக் கூறினரென்று கூறப்பட்டது.

உள்ளவண்ணம் முனிவர் உரைசெய்வார் எனவே ஆரூரர்பால் இறைவன் நிகழ்த்தியசெயலில் முடிந்தவுண்மை எதுவோ அதுவேதான் அவ்விறைவனது திருவுளத்திலுள்ள உள்ளவண்ணமும், அவ்விறைவனால் கூறப்பட்ட வேதசிவாகமங்களில் உள்ளவண்ணமும் ஆமென்றுகூறினரென்றலுமாம். இவ்வுண்மை சித்தாந்தசைவப்பற்றுடையராய் அவ்வழியான் அருளைப்பெற்றும் ஆற்றலுடையார்க்கே உள்ளவண்ணம் விளங்குமென்க. இவ்வண்மைதோன்றவே பேரொளியார்செய் விழுத்தவம் என்றார்.

இங்ஙனம் இவ்வாறு திருப்பாட்டான் தொகுத்தோதினவற்றையே இப்புராணத்தின் முதல் இடை கடைகளில் விரித்துக்கூறியிருக்கின்றாராகலின் அவ்விரிமுகத்தானும் விழுத்தவம் விளங்குமென்க. (உக)

அன்ன வன்பெயர் ஆலால சுந்தரன் ;
முன்னம் ஆங்கொரு நாண்முதல் வன்றனக்
கின்ன ஆமெனும் நாண்மலர் கொய்திடத்
துன்னி னான்நந் தனவனச் சூழலில்;—

(எ - து) சமீபத்தில் இருப்பவர் என்றுசொல்லிய அம்மூர்த்திகளது திருநாமம் ஆலாலசுந்தரரென்று சொல்லப்படும். அவர் இக்கயிலேயில் வாழ்ந்திருக்குநாளில் ஓர் நாள், இறைவனுக்கு இனியவாயும் ஆகமங்களில் இன்னஇன்ன மலர்கள் ஆகுமென்று சொல்லப்படுவனவாயும் உள்ள அன்றலர்ந்தமலர்களைப்பறிக்க இக்கயிலேயின்கண் உள்ள நந்தனவனத்தில் சென்றனர் என்பதாம்

விசேடம் - ஆசார்யபிரபாவம் - சசு-வதுபக்கம் அ-வதுவரி. (உஉ)

அங்கு முன்னமை ஆளுடை நாயகி
கொங்கு சேர்குழற் காமலர் கொய்திடத்
திங்கள் வாண்முகச் சேடியர் எய்தினார்;
பொங்கு கின்ற கவினுடைப் பூவைமார்:—

(எ - து) ஆலாலசுந்தரமூர்த்திகள் அந்த நந்தனவனத்திற் போவதற்குமுன்னமே, சந்திரனையொத்து ஒளிவீசும் முகத்தினையும், அதிகரித்தலேமேற்கொண்ட அழகினையும் உடையமங்கையராகியசேடியர்கள் எம்மைஆளுடைநாயகியாரது இயற்கைமணங்கமழும் கூந்தலுக்கு அணியத்தகும் மலர்களைப்பறிக்க நாடோறும் வருவதுபோல் அன்றும் வந்தனர் என்பதாம்.

அங்குமுன் திங்கள் வாண்முகம் பொங்குகின்ற கவினுடைப்பூவைமார், எமை ஆளுடைநாயகி கொங்குசேர்குழற்கு ஆமலர்கொய்திட எய்தினார் எனக்கூட்டுக.

விசேடம் - ஆசார்யபிரபாவம் சகூ-வது பக்கம் கந - வதுவரி. (உந)

அந்த மில்சீர் அநிந்திதை ஆய்குழல்
கந்த மாலைக் கமலினி என்பவர்;
கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி
வந்து வானவர் ஈசர் அருளென,

(எ - து) தேவதேவனாகிய இறைவனது அருளென்று சொல்லத்தக்க அழிவில்லாத அழகினையுடைய அநிந்திதை என்பவரும், இதுகூந்தலோ மேகமோ என்று ஆராய்தற்கு இடங்கொடுக்கும் நறுமணங்கமழும் மலர்மாலையையணிந்த கூந்தலேயுடைய கமலினி என்பவரும்வந்து, கொத்துக்கொத்தாயுள்ள அழகியமலர்களைக் கொய்துகொண்டிருந்தனர். அச்சமயத்தில் என்பதாம்.

வானவர் ஈசனருளென, அந்தமில்சீர் அநிந்திதை, ஆய்குழற் கந்தமாலைக் கமலினி என்பவர் வந்து, கொந்துகொண்ட திருமலர் கொய்வுழிஎனக் கூட்டுக. (உச)

மாத வம்செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்
போது வார்அவர் மேன்மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார்;

(எ - து.) எத்திசைகளும் செய்தற்கரிய பெரியதவத்தைச்செய்த தென்திசையானது வாழ்ந்திடவும், (அத்திசையின்கண் வாழும் மெய்யடியார்களெல்லாம் உய்யும்வண்ணம்) குற்றமற்ற திருத்தொண்டத்தொகையை அவர்கட்குக் கொடுத்தருளவும், பூவுலகிற்கு வரவேண்டிய காரணராயிருக்கின்ற ஆலாலசுந்தரர், அவ்விருமங்கையர்மேலும் மனத்தைச்செலுத்த, அம்மங்கையரும் அவரைக்கண்டு அவரது திருமேனியில் ஆசையுடையவர்களாய் அம்மூர்த்திகளையே காணுங்கண்களை யுடையவராயினர் என்பதாம்.

இவ்விரண்டுபாடலின் விசேடம் ஆசார்யபிரபாவம் ருஉ-வதுபக்கம் கഠ-வதுவரி ()

முன்னம் ஆங்கவன் மொய்ம்முகை நாண்மலர்
என்னை யாட்கொண்ட ஈசனுக் கேய்வன
பூன்ம லர்கொய்து செல்லப் பனிமலர்
அன்னம் அன்னவ ருங்கொண் டகன்றபின்,

(எ - து) அங்குமாதர்மேல் மனத்தைப்போக்கிய அவ்வாலாலசுந்தரர், மலம்போனவழியே அவர்பால் போகாமல் என்னையாளாகக்கொண்ட இறைவனுக்குப் பொருந்துவனவாகிய நெருங்கிய அரும்புகளையும் அன்றலர்ந்த பலமலர்களையும் கொய்துகொண்டு முன்செல்ல அவர்போனபின்னர் அன்னப்பறவைபோன்ற அவ்விருமங்கையரும் தமதுதேவியாருக்குரிய தேனிறைந்துளிர்ந்திருக்கும் பலமலர்களைப் பறித்துக்கொண்டு சென்றபின்னர் என்பதாம்.

ஆங்கவன் என்னையாட்கொண்ட ஈசனுக்கு எய்வனமொய்ம்முகை நாண்மலர்கொய்து முன்னம்செல்ல, அன்னமன்னவரும் பனிமலர் பன்மலரும் கொண்டு எனக்கூட்டுக.

விசேடம் - ஆசார்யபிரபாவம் ருகூ-வதுபக்கம் எ - வதுவரி. (உசு)

ஆதி மூர்த்தி அவன்திறம் நோக்கியே
"மாதர் மேன்மனம் வைத்தனை தென்புவி
மீது தோன்றியம் மெல்லிய லாருடன்
காதல் இன்பங் கலந்தணை வாய்"என,

(எ - து) ஆதிமூர்த்தியாகிய இறைவன், ஆலாலசுந்தரரது வன்திறத்தைக்கண்டு, அம்மூர்த்தியை நோக்கிச் சுந்தரா! எமதுதேவியினுடைய சேடியர்கள்மீது மனத்தை வைத்தனை, ஆகையால் நீ மனத்தை வைத்தபடியே அவர்களிடத்துண்டாகும் இன்பத்தை அவர்களுடன்கலந்து அனுபவிக்கவேண்டி யிருப்பதால் அவர்களோடு தென்திசைக்கண்சென்று அங்கு லீலாவினோதமாயிருந்து மீண்டுவருவாயாக என்று கட்டளையிட்டனர் என்பதாம்.

விசேடம் ஆசார்யபிரபாவம் ருகூ-வதுபக்கம் உக-வதுவரி. (உஎ)

சுந்தரமூர்த்திகள் தடுத்தாளவேண்டல்.

கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினன்;
"செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
மையல் மானுட மாய்மயங் கும்வழி
ஐய னேதடுத் தாண்டருள் செய்"என,

(எ - து) ஆலாலசுந்தரர் அக்கட்டளையைக் கடப்பதற்கஞ்சி இறைவன்முன்னே இருகரங்களையும் அஞ்சலியாகச் சிரமேற்குவித்துநின்று மனங்கலங்கினவராய் என்னையனே! உனது செம்மைதரும் திருவடியை நீங்கிச்செல்லும் சிறியேனாகிய யான் பிரபஞ்சமயக்கத்துட்பட்டுழலும் மானுடரைப்போல் மானுடனாய் யான் அங்குமயங்கும்பொழுது, நீ என்னைத் தடுத்து ஆண்டு அருள்செய்யவேண்டும் என்று பிரார்த்திக்க என்பதாம்.

மையல்மன் இடமாய் மயங்கும்வழி எனக்கொண்டு மயக்கத்தைச்செய்யவல்ல பூலோகமங்கையைக்கூடி (மணங்கொள்ளு)ங்காலத்து எனப்பொருள்கொள்க.

விசேடம் ஆசாரியபிரபாவம் ௬௨-வது பக்கம் ௧-வதுவரி முதலாகக் காண்க. (௨௮)

அங்க ணாளன் அதற்கருள் செய்தபின்
நங்கை மாருடன் நம்பிமற் றத்திசை
தங்கு தோற்றத்தில் இன்புற்றுச் சாரும்'' என்
றங்க வன்செய லெல்லாம் அறைந்தனன்.

(எ - து) அப்போது ஆலாலசுந்தரர் தமக்குத்தாண்டருள்செய்யவேண்டுமென்ற வேண்டுகோளுக்குக் கருணைநோக்குடைய இறைவன், சுந்தரரை நோக்கி, உனது வேண்டுகோளின்படியே செய்கின்றோமென்று அனுக்கிரகஞ்செய்தபின்னர், நம்பியாகியசுந்தரர் அநிந்திதை கமலினி என்பவரோடும் மானுடசரீரியாய்த் தென்திசையில் தங்கத்தகும் மானுடசரீரிகள் துன்பத்தை நீங்காதனுபவித்தல்போல் அனுபவிக்காமல் பேரின்பத்தைப்பொருந்தி, சிவபோகச்செல்வராய் வாழ்ந்து, இப்பொழுது யாமெல்லாங் காணச் சோதிசொரூபராய் யானைமீதெழுந்தருளி "தானெனைமுன்படைத்தான்" என்னும் திருப்பதிகத்தை நாவாரவோதிக்கொண்டு ஆனந்தபரவசத்தராய்த் தமது தோழராகிய சேரர்பெருமானோடு வருகின்றார் என்று அவரது திருவருட்செயலெல்லாம் சொல்லி முடித்தனர் என்பதாம்.

அங்கணாளன் அதற்கு அங்கு அருள்செய்தபின் எனக்கூட்டுக.

விசேடம்-ஆசாரியபிரபாவம் ௭0-வது பக்கம் ௧௪-வது வரி முதலாகக்காண்க. (௨௯)

முனிவர்கள் தென்திசையின் சிறப்பை வினாதல்.

அந்த ணாளரும் ஆங்கது கேட்டவர்
"பந்த மானுடப் பாற்படு தென்திசை
இந்த வான்திசை எட்டினும் மேம்பட
வந்த புண்ணியம் யாதெ''ன மாதவன்,

(எ - து.) (இவ்வதிசய அருட்செயலைக்கேட்டவராகிய) அரபத்தர்முதலிய அந்தணாளர்களும், இவ்வுலகிற்காணப்படும் எட்டுத்திசையும் பந்தவசப்பட்டிருக்கும் மானுடர்கள் வசிக்கும் இடமாகவேயிருப்பதன்றி தென்திசைமாத்திரமன்று அங்ஙனமிருக்க, ஆலாலசுந்தரர் ஏனைத்திசைகளைவிட்டுத் தென்திசைக்கு ஏகும்வண்ணம் இறைவன் கட்டளையிட்ட காரணம் என்னை? அத்திசைமேம்படவந்த புண்ணியம்யாது? என்றுகேட்க, அதற்கு உபமன்னியமுனிவர் (கூறுகின்றார்.) என்பதாம்.

விசேடம் - ஆசாரியபிரபாவம் ௮௨-வது பக்கம் ௨௧-வது வரி. (௩0)

உபமன்னியர் தென்திசையின் சிறப்பைக்கூறல்.

"பொருவ ரும்தவத் தாற்புலிக் காலனும்
அருமு னியெந்தை அர்ச்சித்தும் உள்ளது
பெருமை சேர்பெரும் பற்றப் புலியூரென்
றொருமை யாளர்வைப் பாம்பதி ஓங்குமால்;

(எ - து.) முனிவர்காள்! அத்தென்திசையில் ஒருநெறிய மனம்வைத்து உணரும் ஞானசம்பந்திகளாகிய பெரியோர்களுக்கு ஓர்வைப்பாயுள்ள பெரியக்ஷேத்திரமொன்று மேலோங்கிப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. அந்தக்ஷேத்திரமானது, ஒப்பற்றதவத்தினால் சிவபெருமானை யருச்சிக்கும் அர்ச்சனையே தாம்பெறும்பேறாக எண்ணி இறைவனால் புலிக்காலராகிய முனிவர்களிற்சிறந்த எமதுதந்தையினால் அர்ச்சனைசெய்யவும்

பெற்றுள்ளது. அந்தக்காரணத்தினுல் பெருமைபொருந்திய பெரும்பற்றப்புலியூரென்னும் ஓர்திருநாமமும் பெற்றுள்ளது என்பதாம்.

ஒருமையாளர் வைப்பாம்பதி ஓங்கும் பொருவருந்தவத்தால் எனக்கூட்டுக.

யோகத்தைப்பெற்று கூத்தையும், ஞானத்தைப்பெற்று அக்கூத்தில்விளையும் ஆனந்தத்தையும் முநிவரெல்லாம் காண்பவராயிருக்க, இம்முநிவர் புலிக்காலைப்பெற்று பூக்களைப்பறித்து அருச்சித்து வழிபடுதலாகிய கிரியையினுல் ஊனக்கண்ணுல் கூத்தையும், ஞானக்கண்ணுல் அக்கூத்தில் விளையும் ஆனந்தத்தையுங்கண்டு தாங்கண்டதுபோல் ஆன்மாக்களெல்லாங்கண்டுகளிக்க இறைவனை அனவரதமும் தாண்டவம்புரியச் செய்தனராகலின் புலிக்காலன் எனவும், பொருவருந்தவத்தார் எனவும், அருமுநிஎனவுங் கூறினர். புலிக்காலை பெற்றவராகிய வியாக்கிரபாதர், சிவலோகமுதலிய பெரும்பதங்களைப் பற்ற அருச்சனை வழிபாட்டைப்பற்றுது இத்திருவம்பலத்தையே பெரும்பற்றாகப் பற்றிவாழ்வதற்கே யாகலின்—பெருமைசேர் பெரும்பற்றப்பூலியூர்—என்றார். சிவசாயுஜ்யத்தைப் பெறுதற்குரிய சிவஞானத்தோடு ஒருமைபெற்ற சிவஞானிகள் தமதுநடனத்தைக் கண்டமாத்திரத்தில் தன்னேடு அநந்நியமாய்க் கலந்துவாழும் பேற்றைத்தருதலின்—ஒருமையாளர் வைப்பாம்பதி யோங்கும்—என்றார்.

ஏனையவிசேடங்களை ஆசார்யபிரபாவம் - கூவதுபக்கம், கஙி-வதுவரி (௩க)

அத்தி ருப்பதி யின்நமை ஆளுடை
மெய்த்த வக்கொடி காண விருப்புடன்
நித்த னீடிய அம்பலத் தாடுமற்
றித்தி றம்பெற லாந்திசை எத்திசை:

(இ - து) அந்தப் பெரும்பற்றப்புலியூரென்னும் திருப்பதியில், நம்மை ஆளாகவுடைய மெய்ம்மைபொருந்திய தவக்கொடியாகிய சிவகாமசுந்தரியார்காண ஆசையுடன் அம்பலத்தின்கண் எக்காலத்தும் அனவரததாண்டவம்புரிகின்றனர். ஆகலான் இவ்வகைத்தான திறத்தைப்பெறத்தக்கதாகிய திசை இத்தென்திசையன்றி வேறு எந்தத் திசையிருக்கின்றது என்பதாம்.

பஞ்சகிருத்திய காரணியாகிய பராசத்தியைத் தன்னுள் அடக்கித் தானேதானுய் ஆனந்தத்தாண்டவஞ்செய்யாது, ஆனந்தியாகியசித்து ஓர்முதலாய்நின்றகாணவும், ஆனந்தனுகியதான் ஓர்முதலாய் நின்றாடவுமாய் விளங்கும் இவ்வானந்தக்காட்சியை அகோரமாகியதுன்பஞ்செய்யவல்ல யமவாதனையைக்கடக்க அறியாது சுற்றுமுற்றும்பார்த்து அலறுகின்ற ஆன்மாக்களுக்குக்காட்டி அவர்கள் தன்னைநோக்கிஅந்தக்கோரத்தினின்றும் நீங்கித் தனது ஆனந்தநிர்த்தனத்தில் மூழ்கச்செய்யவுமாகிய திறத்தைப்பெற்றது தென்திசையேயாகலான்—கொடிகாண அம்பலத்தாடும் இத்திறம்பெறலாம் திசை எத்திசை என்றார். உமாதேவியார் ஆன்மாக்களுக்கெல்லாம் அன்னையாகிக்காக்குந்தொழிலை மேற்கொண்டிருப்பவராகலின் தாமென்றும் அசைவறநின்று முத்திக்கெல்லையாகிய குஞ்சிதபாதத்தை ஆன்மாக்கள்காண தனதுநாயகனை என்றும் அசைவித்து வருகின்றாராகலான்—நமையாளுடை மெய்த்தவக்கொடிகாண விருப்புடன் நித்தனீடிய அம்பலத்தாடும்—என்றார். அன்னையானவள் தமதுமக்களைக்காக்குந்தொழிலில் என்றும் நிற்றலே உண்மைத்தவமாகலின் - மெய்த்தவக்கொடி - என்றார். நடராஜனைப்போல் ஆன்மாக்களும் நித்தராகலான் நித்தன் அம்பலத்துநீடி ஆடும்என்றார். இதனுல் நடராஜன்என்றும் நடனஞ்செய்யுங்காரணங் கூறப்பட்டது. (௩௨)

பூதம் யாவையின் உள்அலர் போதென
வேத மூலம் வெளிப்படும் மேதினி
காதன் மங்கை இதய கமலமாம்
மாதொர் பாகனுர் ஆரூர் மலர்ந்ததால்;—

(எ - து.) எல்லாவுயிருள்ளும் மலர்ந்திருக்கும் இருதயகமலம் போல வேதமூலப் பொருளாய் வெளிப்படும் வன்மீகநாதன் தோன்றும், விருப்பத்தைத்தருகின்ற பூமிதேவி யின் இருதயகமலமாகிய தியாகேசனுடைய ஆரூரானது அத்தென்திசையில் விளங்கு கின்றது என்பதாம்.

வேதமூலம் என்றது—புற்றிடங்கொண்ட பெருமான். எனவே வேதம்—புற்று, மூலம் - அவ்வேதமாகியபுற்றை இடமாயுள்ள இறைவன் என்றும். மாதோர்பாகனூர் ஆரூர் என்றது - தியாகேசன் ஆண்டதிருவாரூர். எனவே தியாகேசனை "அமரர் நாடாளாதே ஆரூராண்ட" என்று கூறிய தேவாரத்தா னறிக.

இதனால் மாதொருபாகன் இடங்கொண்டிருக்கும் ஆன்மாக்கள் இருதயகமலம் போல் வேதமூலமாய் விளங்கும் புற்றிடங்கொண்ட பெருமான் வீற்றிருக்கும் பூதேவியின் ரயகமலமாகிய திருவாரூரை—தென்திசை உடைத் தென்று கூறப்பட்டது. (கூகூ)

எம்பி ராட்டிஇவ் வேழுல கீன்றவள்
தம்பி ரானைத் தனித்தவத் தால்எய்திக்
கம்பை யாற்றில் வழிபடு காஞ்சிஎன்
றும்பர் போற்றும் பதியும் உடையது;—.

(ப - து.) எம்பெருமானது தேவியாரும், இந்த எழுலகங்களைப் பெற்றவருமாகிய காமாக்ஷிதேவியார், அரியதவத்தினால் ஏகாம்பரநாதரென்னுந்தலைவரையடைந்து, கம்பா நதிக்கரையில் பூசித்து வழிபடும் தேவரெல்லாம்போற்றும் காஞ்சியென்னும் ஓர்திருப் பதியையும் அத்தென்திசை தன்னிடத்தில் உடைத்தாயிருக்கின்றது என்பதாம்.

சத்திகளுக்கெல்லாம் முதன்மையான பராசத்தியாகிய லளிதாதேவிஎன்பார் - எழு லகீன்றவள் - என்றும், அப்பராசத்தியால் பூசிக்கப்பட்ட பெருமான் பரசிவமேயென் பார் - தம்பிரான் - என்றும், அப்பராசத்தியே சைவதவத்தின்சிறப்பும் சிவார்ச்சனை வழிபாட்டின் சிறப்பும் தோன்ற தவகோலங்கொண்டு வந்தாள் என்பார் - தனித்தவத் தால் எய்தி கம்பையாற்றில் வழிபடும்—என்றும் கூறினார். இதனை "முதிரமங்கை தவஞ் செய்தகாலமே முன்புமங்கை தவஞ்செய்த காலமே" எனவரும் மூன்றாந்திருமுறை யானும், காஞ்சிப்புராணம் திருவேகம்பப்படலத்தானும் அறிக.

இறைவனைக் கூடுவதற்கான தவச்செயல் இதுவெனவும், இது ஒப்பற்ற தவச்செய லாதலால் இறைவனது கருணை வெள்ளமும் மிகப்பெருகி விரைந்துவருமெனவும், அவ் வெள்ளம் இறைவனை அக்கணமேகூட்டி அவனிவனாய் இவனவனாய் மகிழ்வதாகிய அத் வைதானந்தத்தை யுண்டாக்குமெனவும், அவ்வானந்தப்பெருவாழ்வு சதோதயமாயிருக்க என்றும் வழிபடுதலில் தலைப்படுத்துமெனவும் உணர்த்த அம்மையார்பூஜித்த முத்திநகர மாதலால்—காஞ்சியென்று உம்பர்போற்றும்பதி—என்றார். (கூச)

நாங்கள் நாதனும் நந்தி தவஞ்செய்து
பொங்கு பீடருள் எய்திய பொற்பது;
கங்கை வேணி மலரக் கனல்மலர்
செங்கை யாளர்ஐ யாறுந் திகழ்வது;—

(எ - து.) நமக்கெல்லாம் குருநாதராகிய திருநந்திதேவர், அரியதவத்தைச்செய்து, குறைவற்ற பேருருளைப்பெற்ற சிறப்பினையுடைத்தாயிருக்கின்றதும், கங்கையானது சடையின்கண்ணே பிரகாசிக்கவும், நெருப்பானது செவந்ததிருக்கரத்தில் பிரகாசிக்கவு மாயிருக்கின்ற இறைவனார் வீற்றிருக்கப்பெற்றதுமாகிய திருவையாறென்னும் அந்த அரிய திருப்பதியும் அத்தென்திசைக்கண் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது என்பதாம்.

அருண்ஞானம்வாய்ந்த நந்திதேவர் தம்மையொத்த கணசிரேஷ்டர்களுக்கு நாதராகலின்—நங்கள்நாதனும் நந்தி—என்றும், அவர் ஒவ்வொருமுறையும் நூறுவருடமளவாகப் பலமுறையும் தவம்புரிந்து அவ்வப்போதும் அதிரகசியமாயுள்ள வேதமந்திரங்களால் புகழ்ந்து போற்றினாராகலின்,—நந்திதவஞ்செய்து—என்றும், இறைவனது பாதகமலங்களில் தைலதாரைபோன்ற பக்தி பஸ்மருத்ராக்ஷ தாரணம், சிவலிங்கார்ச்சனம் ருத்ரஜபம் ஆகிய இவைகளில் உறுதியான ஆசையும், இவைபோன்ற சரியைகிரியாயோகஞான சம்பந்தங்களில் அன்பும் தாமே வேண்டிவேண்டிப் பெற்றும், இறைவன் இவரது தவத்தின் அருமையையும், இவர்வேண்டும் வேண்டுகோளின் சிறப்பையும், எண்ணியெண்ணி அடங்காஅருள்கொண்டு தாமேவேண்டியளிக்கும் அனுக்கிரகத்தைப் பெற்றும் உள்ளாராகலின் — பொங்குசீரருள் எய்திய — என்றும், அவ்வனுக்கிரகம் தன்கணங்களுக் கதிபதியாயுள்ள இந்திரத்துவம், தமது ஆணையெல்லாம் ஏற்றுச்செய்யும் முடிவிலாற்றலுடைய அதிகாரத்துவம், தன்முழுவுருவம் பெறுதலாகிய சிவரூபம், சம்புஎன்கிற பட்டப்பெயர், பட்டாபிஷேகம், திருமணம் முதலியவைகள். அவைகளைப் பெற்றவிடம் ஐயாறாகலின்—சீரருள் எய்தியபொற்பது—என்றுங்கூறினர்.

ஆதலால் சிவஞான குருசிகாமணியும் நங்கள் நாதருமாகிய நந்திகேஸ்வரர், என்றும் பேரானந்தப்பெருவாழ்வுற்றிருக்கத் திருமணமும், இந்திராதியரெல்லாம் அடிபணிய மகுடாபிஷேகமும், சுத்தினிபாதத்து உத்தமரெல்லாம் ஞானனுக்கிரகம்பெற்று சிவானந்தமெய்த ஞானதானவள்ளற்றன்மையும் இறைவன் செய்தருள ஐயாறு இடமாகவிருந்ததெனக் கூறப்பட்டது. (௩௫)

தேசம் எல்லாம விளக்கிய தென்திசை
ஈசர் தோணி புரத்துடன் எங்கணும்
பூச னைக்குப் பொருந்தும் இடம்பல
பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை";

(எ - று.) (மேலேசொல்லிய திருப்பதிகளேயல்லாமல்) ஆதிமுதல்வராகிய இறைவனார் வீற்றிருக்கும் திருத்தோணிபுரமென்னும் திருப்பதியையும், அதனோடு பலதிருப்பதிகளையும், அடியார்கள் செய்யும் பூசனைக்குப் பொருந்தியதாயுள்ள பலஇடங்களையும் உடையதாய், எல்லாத்தேசங்களையும் பிரகாசிக்கச்செய்யும் செயலைத் தென்திசையுடைத்தாயிருப்பதனால், திசைகளையெடுத்தாய்ந்து சொல்லுமிடத்து மற்றைத்திசைகள் அத்தென்திசைக்கு ஒப்பாகா என்பதாம்.

ஆசார்ய பிரபாவம் அ௯-வது பக்கம் ௩-வதுவரி முதலாகக்காண்க.

மூர்த்திவிசேட மாத்திரம் விளங்கும்திசையும்போலன்றி, தீர்த்தவிசேடமாத்திரம் விளக்கும் திசையும்போலன்றி, தலவிசேடமாத்திரம் விளக்கும் திசையும்போலன்றி மூன்றுவிசேடங்களையும் ஒருங்கேவிளக்கவல்லது தென்திசையே என்று எத்திசையாராலும் புகழப்படுதலால்—தேசமெல்லாம் விளக்கியதென்திசை—என்றார்.

இவ் வாறுசெய்யுளானும் ஆதவான்திசை எட்டினும் மேம்பட்டதென்திசைக்குவந்த புண்ணியம் என்னென்று முனிவர்கள்கேட்க, அதற்கு உபமன்னியமுனிவர். திருப்புலியூரையும், திருவாரூரையும், திருக்காஞ்சியையும், திருவையாற்றையும் திருத்தோணிபுரத்தையும், தன்னிடத்திற்கொண்டு விளங்குவது தென்திசையேயன்றி மற்றைத் திசைகளன்றாகலான் தென்திசையே புண்ணியமுடைத்தென்று கூறினரெனக் கூறப்பட்டது.

இவ்வைந்து திருப்பதிகளும் முறையே பஞ்சகிருத்திய தாண்டவம்புரிய இறைவனால் விரும்பப்பட்டதாகியும், அத்தாண்டவத்தின் பயனைக் கைக்கூட்டவல்ல அடியவர் திருக்கூட்டத்தை யுடையதாகியும், அத்திருக்கூட்டத்தினால் பெறப்படும் அன்பினைப்

பெற்றபின்னர் அவ்வன்பினுக்குரிய இறைவனை என்றும்மறவாது வழிபடும் பேற்றை யுடையதாகியும், அவ்வழிபாட்டினால் பெறத்தகும் சிவயோக சிவபோகங்களை யளிக்கும் இடமாகியும்; அங்ஙனமான யோகபோகம் பெற்றோர் பிரளயத்தினும் அழியாது என்றும் வாழ அருட்டோணியையுடையதாகியும் விளங்குதலான் தென்திசை மேம்பட்டதென்க.

ஈண்டுக்கூறிய ஐந்துதிருப்பதிகளையும் எடுத்துரைத்தமைக்குக்காரணம் சில எடுத் துக்கூறுவாம்.

இப்பதிகள் "குறிகளும், அடையாளமும், கோயிலும், நெறிகளும், அவர்நின்ற தோர் நேர்மையும், அறியஆரணம் ஆயிரம் ஓதினும், பொறியிலீர்! மனம்என்கொல் புகாததே" என்ற தமிழ்வேதப்படி,

1. குறிமுதலிய ஐந்தும் அறியநிற்குமுறை.

இறைவனைக் குறியாலறியுமிடம்-தில்லை. அடையாளத்தால் அறியுமிடம்-திருவாரூர். கோயிலால் அறியுமிடம் - திருக்காஞ்சி. நெறிகளால் அறியுமிடம்-திருவையாறு. நேர்மையால் அறியுமிடம் - திருத்தோணிபுரம். எங்ஙனமெனின்,—

(க) குறி - பஞ்சாக்கரத்தையும், பஞ்சகிருத்தியத்தையும், திருமேனியிலுள்ள சாங்க வுபாங்கங்களால் காட்டுதலால்—தில்லை - குறியால் அறியும் இடமாயிற்றென்க.

சாங்கம் - திருக்கரம், திருப்பாதங்கள். உபாங்கம் - டமருகம், அக்கினி, முயலகன். இதனை,-திருமந்திரம் "மருவுந்துடியுடன் மன்னியவீச்சு, மருவியவப்பு மன்னுடன்கையும், கருவின்மிதித்த கமலப்பதமும், உருவில்சிவாய நமவெனவோதே. அரன்துடிதோற் றம் அமைத்தல்திதியாம், அரனங்கிதன்னில் அறையிற்சங்காரம், அரனுற்றணைப்பில் அமருந்திரோதாயி, அரனடியென்றும் அனுக்கிரகமன்னே" உண்மைவிளக்கம் "சேர்க் குந்துடி (சி) கரம், சிக்கன (வா) வீசுகரம், ஆர்க்கும் (ய) கரம் அபயகரம், பார்க்கில் இறைக்கு - அங்கி (ந) காம் அடிக்கீழ்முயலகனார், தங்கும் (ம) கரமது தான்." என்றும், (தோற்றம்) துடியதனில் சொல்லும் (திதி) யமைப்பில், சாற்றியிடும் அங்கியிலே (சங் காரம்) ஊற்றமாம்-ஊன்றுமலர்ப்பதத்தே உற்ற(திரோதம்) (முத்தி) நான்றமலர்ப்பதத் தே நாடு என்றும் கூறியவற்றானறிக.

(உ) அடையாளம்—திருவுந்தியார்,—(சிவானுபவம்) "எங்ஙன் இருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுகேன், (அடியார்கூட்டத்தில்) அங்ஙன் இருந்தது என்று உந்தீபற, (சிவானந்தம்) அறியும் அறிவதன்று உந்தீபற" என்றும்,—

திருக்களிற்றுப்படியார்,—(சிவானுபவம் இதுவாமென்றுணர) "ஒன்றுங் குறியே குறியாதலால், (என்றும்) (சிவானந்தம் இதுவென்றுணர) அதனுக்கு ஒன்றுங் குறி யொன்றும் இலாமையினால், (என்றும்) ஒன்றோடு உவமிக்கலாவதுவுந்தானில்லை (என் றும்) (இதற்கு உவமானம் அடியார்கூட்டமே என்றுணர) ஒவ்வாத்தவமிக்காரே இதற் குச்சான்று" என்றுங்கூறியபடி - சிவானுபவத்தையும், சிவானந்தத்தையும் உணர்தற்கு அடையாளப்பொருளாக எண்ணப்பட்ட அடியார்கூட்டம் நிறைந்துள்ள தேவாசிரியத் தையுடைத்தாயிருத்தலால் - திருவாரூர்—அடையாளத்தால் அறியும் இடமாயிற்றென்க

(ஙு) கோயில்:—"அன்பரொடுமரீஇ ஆலயந்தானும் அரனெனத்தொழுமே" என்று சிவஞானபோதம்-கஉ-ஆம் சூத்திரத்திற்கூறியபடி, அன்பரொடுமருவி அன்புவரப்பெ ற்று, தொழும் இடமாகக்கூறிய அடியார், கோயில் என்னும் இரண்டனுள் அடையாளப் பொருள்களாயுள்ள அடியார்களைக்கண்டு சிவானுபவம் இத்திறமெனவும், சிவானந்தம் இத்திறமெனவும் உணர்ந்து, பின்னர் அவ்வனுபவமும் ஆனந்தமும் கைவரச் சிவத்தை யுணர ஆலயத்தை அறியவேண்டியிருத்தலால் அவ்வாலயங்கள் பலவிருப்பினும் என் றும் இருக்கவேண்டிய சிவானுபவமும், சிவானந்தமும் கண்டு அனுபவிக்கவேண்டுமா

யின் காஞ்சியொன்றேயாம். எங்ஙனமெனின்,—"ஏலவார்குழலாள் உமைநங்கை என்றும் ஏத்திவழிபடப்பெற்றுள்ளதாகிய சிவானுபவமும், "எழுந்ததிரை நதித்திவலை நனைந்த திங்கள் இளநிலாத்திகழ்கின்ற வளர்சடையனே, கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக்கோட்டி கொங்கையிணை அமர்பொருது கோலங்கொண்ட, தழும்புளவே வரைமார்பில் வெண்ணூலுண்டே சாந்தமொடு சந்தனத்தின் அளறுதங்கி, அழுந்திய செந்திருவுருவில் வெண்ணீற்றானே" என்றதேவார அருளிப்பாட்டின்படி சிவனையென்றும் தழுவி இன்புற்றிருக்கும் சிவானந்தமும் வெள்ளிடைமலைபோல் காணக்கூடும் இடமாயிருத்தலான் காஞ்சி—கோயிலால் அறியும் இடமாயிற்றென்க.

(௪) நெறி:—"சிற்பரச்செல்வர், உள்ளமுருகி உடனுவர்" என்று திருவுந்தியாரினும், "உள்ளமுதலனைத்தும் ஒன்றவுருகவரின், உள்ளம் உருகவந்து உன்னுடனும்" என்று திருக்களிற்றுப்படியாரினுங்கூறியபடி, உள்ளும்புறம்பும் செல்லுதற்கிடமாயுள்ள பொறி புலன் கரணங்களும், அகத்தே தங்குதற்கிடமாயுள்ள தற்போதமும் ஆகிய இவையனைத்தும் உருகுதற்குநெறிகளாயுள்ள, வல்வினைமெல்வினையாகக் கூறப்படும் சரியைகிரியைகளாகிய நல்லசிவதன்மநெறிகளும், ஆதார நிராதாரயோகங்களாகக் கூறப்படும் நல்லசிவயோக நெறிகளும், சிவஞான அருண்ஞானங்களாகக் கூறப்படும் நல்லசிவஞான நெறிகளும் ஆகிய இவையிற்றை நங்கள் நாதனும் நந்திகேஸ்வரர்பெற்ற இடம் பஞ்சநதமாயிருத்தலால் அந்த ஐயாறு—நெறிகளால் அறியும் இடமாயிற்றென்க.

(௫) நேர்மை:—நல்லசிவதரும முதலாகச்சொல்லப்பட்ட மூவகைநெறிகளானும் தற்போதம் அழியப்பெற்று, யாரேனுங் காணுவரன் அங்கேதலைப்பட (அந்த ஆனாகிய) "அது இதுவென்றும் அவன்நானே என்றும், அது நீயேயாகின்றாயென்றும் அதுவானேன் என்றும்" இவ்வாறு பேதமாகவும் அபேதமாகவும் பேதாபேதமாகவும் கூறும்பிணக்கொழித்து "சிவமேசிவமாக சிவமாகியேயிருக்கும் நிலைபெற்று, சிவன்முதலேயன்றி முதலில்லை என்றும், சிவனுடையது என்னறிவதென்றும், சிவனவனது என்செயலதாகின்றதென்றும், அவையிற்றைத் தன்செயலாகக்கொள்ளா"மல் நேர்படும் அருள்நிலையாகிய திருநிலையை நம்மையாளவந்தகுருமூர்த்தியாம் ஆளுடையபிள்ளையார் நேர்படக்காட்டிய இடம் தோணிபுரமாயிருத்தலால் அத்தோணிபுரம்—நேர்மையால் அறியும் இடமாயிற்று.

2. ஐந்தெழுந்து நிற்குமுறை.

எவ்வாறெனின்,—இறைவனைக் காட்டுவது பஞ்சகிருத்தியமும், அந்தகிருத்தியத்தை அனவரதமும்புரியும் இடம் சிதம்பரமாதலால் அது - சிகாரப்பொருளாயும், கண்டார் யாவராலும் விரும்பப்படும் தன்மைநோக்கத்தைப் பெற்றுவிளங்கும் அருளாளர் என்றும் வாழுமிடம் திருவாரூர் ஆதலால் அது - வகாரப்பொருளாயும், அவ்வருளாளராகிய முத்தான்மாக்கள் முத்தித்திசையினும் அடிமையாம் என்னும் உண்மையை என்றுங்காட்டும்முத்தியிடம் காஞ்சியாதலால் அது-யகாரப்பொருளாயும், அங்ஙனமான முத்தான்மாக்களுக்கு * ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் கலக்கிச்செல்லும் நெறியையும் ஈதென்றறியாவண்ணம் மயக்கி, அறிவையும் அழித்து, மேலெழுந்து அல்லல்செய்வதாகிய ஐயை (சிலேட்டுமத்தை) அவர்பால் உண்டாகாவண்ணந் தடுத்து (மறைந்து) அருளைவிளக்கி அவ்வருளாற்பெறும் பேரின்பசுகமாகிய பாக்கியத்தோடு அமரருலகத்தை அளிக்குமிடம் ஐயாறாயிருப்பதால் அது - நகாரப்பொருளாயும், அவ்வருளாளர் அமருலகம் ஆள்வதற்குச் செல்லுங்கால் மாயாமலத்தொடக்கால் வரும் துன்பமேயன்றிக் கன்மம் ஆணவம் என்னும் இவ்விருமலங்களாலும்வரும் துன்பங்களையுங்கழுவி உடன்—சித்ஸ்வரூபமாகவும், உயிர்—சிவஸ்வரூபமாகவும் ஆக்கிப் பிரமபுரத்தில் வசிக்கச்

* "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட்டு ஐமேலுந்தி" எனவரு தேவாரத்தான் அறிக.

செய்யுமிடம் தோணிபுரமாதலால் அது மகாரப்பொருளாயும் விளங்கும் உண்மையா னென்க.

3 ஐந்தொழிலைக்காட்டு முறை.

(க) பரமாகாசத்தைக் கோயிலாகக் கொண்டுவிளங்கும் இறைவன் ஆன்மாவை யீனப்படுத்துவதாகிய பாசத்தை ஊனநடனத்தால் ஊனப்படுத்தி ஆன்மாவைப்பாசத்தி னின்றும் எடுத்தல் சிருட்டி—சிதம்பரம்.

(உ) எடுத்த ஆன்மாக்கள் உள்ளத்தைப் பூங்கோயிலாகக்கொண்டு விளங்கும் சச்சி தானந்தரூபன் மாறிமாறி நன்மை தீமைப்பயனவாகிய இருவினைச்செய லெல்லாம் மிக நல்லவாம்படி காக்குஞ்செயல் திதி - திருவாரூர்.

(ங) கன்மமலச்செயல் பெருக்கெடுத் தோடாவண்ணம் சுவரும்படிச்செய்து ஆண வமலசத்தி மேலெழுந்தோடாவண்ணம் கீழ்ப்படுத்தல் சங்காரம் - திருக்காஞ்சி.

(ச) ஆன்மா ஆணவத்தோடு அதுவிதமாக நின்றகாலத்து அவ்வாணவம் அவ்வான் மாவைத்தன்னுள் திரோபவித்துத் தானே பிரகாசித்ததுபோல் ஆணவமலசத்திகெட்டு ஆன்மசத்தி சிவத்தோடு அத்து விதமானகாலத்து இறைவன் அவ்வான்மா தானே யாய்ப்பிரகாசிக்க அவ்வான்மாவைத்தன்னுள மறைத்தல், திரோபவம் - திருவையாறு.

(ரு) தானேயாய் தன்னையே நினைந்துத் தன்னையே நோக்கி நிற்பார்க்குத் தன்ன ருட்சத்தியால் வரம்பிலின்பம் அளித்தல் அனுக்கிரகம் - திருத்தோணிபுரம்.

எனவே (க) நடராஜமூர்த்தி நின்றகோலத்தராய் ஊன்றியபாதத்தால் ஆன்மா வைக்கவர்ந்து கொண்டிருக்கும் பாசத்தைக்கீழ்ப்படுத்திக் குஞ்சிதபாதத்தால் எடுத்தலா னும், (உ) தியாகராஜமூர்த்தி இருந்தகோலத்தராய் சுகதுக்கானுபவங்களை மாறி மாறி யூட்டவல்லகோள்களை ஒருமுகப்படுத்தி நோபடநிற்க நடித்தனைதலானும் (ங) காஞ்சி யில் காமாக்ஷியம்மை ஏகம்பவாணரைப்பூசிக்குங்காலத்தில் இருமுறைவந்தவெள்ளத் துள் முதல்வந்தவெள்ளத்தை பிரளயபந்தினி கைக்கபாலத்தில் சுவரவும் இரண்டாவது வந்த வெள்ளத்தை அந்தாவாகினியாகவும் போகச்செய்தமையானும், (ச) நந்திதேவ ருக்குத் தன்னுருவத்தைத் தந்து அவருருவத்தை மறைத்தமையானும் (ரு) அம்மேயப் பாவென்று தன்னை நோக்கியழுத திருஞான சம்பந்தமூர்த்திகளுக்குத் தனது சத்தியால் பாலூட்டினமையானும் அறிக.

4 மும்மலவொழிவும் முத்திமார்க்கமும் அடிகூடும் வகையும் உணர்த்துமுறை.

எவ்வுலகத்திலும் பிறக்கும் பிறவியைத்தரும் மாயாமலம் திருவாரூரிற்பிறந்தால் ஒழிவதாயும், பிறப்பினைத்தருதற்குக் கருவியாயிருக்கின்ற கருவிகரணங்களைப்பற்றிச் சேட்டைபுரியும் கன்மமலம் சிதம்பரேசனைக்கண்டால் ஒழிவதாயும், இவ்விருமலங்கட் கும் காரணமாகிய ஆணவச்செயல் கேசாந்தமுத்திதகமாகிய காஞ்சியில்வசித்து வழி பட்டால் ஒழிவதாயும், இவ்வாறு மும்மலங்களும் ஒழியப்பெற்றோர் *ஐயாறு ஐயாறு என் பாராயின் அவர்களை (ஐ+ஆறு) அழகிய முத்திமார்க்கத்தில் செலுத்துவதாயும், அங்ங னம் செல்லுங்கால் பிரமபுரம் என்பாராயின் அப்புரமே தோணியாய் இறைவனடியிற் சேர்க்கும் சிறப்புடைத்தாயும் இருத்தலினென்க.

---

* "ஐயாறேயையாறே யென்பீராகில் அல்லல்தீர்ந்து அமருலகம் ஆளலாமே" எனவும் "செருக்குவாய்ப் புடையான் பிரமபுரமென்னில்" எனவும் வருந் தேவாரங்க ளறிக.

5 பிறவிப்பெருங் கடலைக்கடந்து பரமானந்தப் பழங்கடலாம்
வீடுகூடு முறை.

அலைகடலில் ஆழ்ந்து அலமரும் ஒருவன் தோணியில் ஏறுதலும், ஏறி ஆற்றின் வழியேதுறைமுகஞ்சேருதலும், அங்ஙனஞ்சேர்வதற்குக் காட்டாநின்ற தீபவொளியைக்காண்டலும், பின்னர் அத்துறைமுகத்திலுள்ள தன்னினத்தவர்களோடு அளவளாவிக்கலக்குமுறையே கலத்தலும். அதன்பின்னர் தன்வீட்டையடைதலும் ஆகியசெயல்கள் காணக்கிடத்தல்போல்,—

(க) பிறவிக்கடலில் ஆழ்ந்து அலமுறும் ஆன்மாக்கள் கரையேறத்தோணியாயுள்ளது—தோணிபுரம்.

(உ) கீழ்மையான பிறவிக்கடலைச் சாராவண்ணம் மேலாகிய பரமானந்தக் கடலை நோக்கிச் செல்ல வழியாயுள்ளது பஞ்சநதமாகிய—ஐயாறு.

கீழ்க்கடலை நோக்கிச் செல்வது நதியும், மேற்கடலை நோக்கிச்செல்வது நதமுமாம்.

(ங) துறையைக்காணுதற்குத் தீபம்போன்று, குவளைக்கண்ணி கூறனாய், அவளும் தானும் உடனாய் ஒளிவிடும் ஜோதிலிங்கத்தையுடையது—காஞ்சி.

(ச) அத்துறையில் அளவளாவிக் கலத்தற்குரிய தன்னினத்தவர்களாகிய அடியவர் திருக்கூட்டங்களையுடைய தேவாசிரியத்தையுடையது—ஆரூர்.

(ரு) அங்ஙனம் அடியவர் நடுவுள் இருக்கப்பெற்றபின்னர் முத்திகூடும் பரமானந்தப் பெருங்கடலாம் நடராஜன் குஞ்சிதபாதமாகிய வீட்டையுடையது—சிதம்பரம்.

இவ்வைந்து திருப்பதிகளும் முத்திக்கு எல்லையாகிய இறைவனடியையும், அவ்விறைவனடியில் வாழும் அடியர் கூட்டத்தையும், அவ்வடியார்கள் ஆராக்காதலாலியற்றும் அருச்சனைவழிபாடாகிய அடிமைத்திறத்தினையும், அவ்வடிமைத்திறத்திற்கு ஆராவன்பு கொண்டு இறைவன் அளிக்கும் அன்பின்பெருக்கையும், அப்பெருக்கு என்றுமிருக்க அருளாகியதோணியையும் முறையே காட்டுவதாகலினுனும் அறிக.

தென்திசையின் சிறப்பும், உமாதேவியார்காண நடராஜமூர்த்தி நடனஞ்செய்யும் சிறப்பும் இனிவரும் திருமந்திரத்தாற்காண்க:—

"ஈறான கன்னி குமரியே காவிரி, வேறா நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழுள்
பேறான வேதாகமமே பிறத்தலான், மாறாத தென்றிசை வையகஞ்சுத்தமே.
குரானந்தரேகையாய்க்கூர்ந்தகுணமாய், சிரானந்தம்பூரித்துத் தென்றிசைசேர்ந்து
பரானந்தபோகனாய் பூவையுந்தானும், நிரானந்தமாகிநிருத்தஞ்செய்தானே.
பூதலமேருப்புறத்தான தெக்கிணம், ஓதுமிடைபிங்கலையொண்சுழுமுனையாம்
பாதிமதியோன்பயிற்றிருவம்பலம், ஏதமில்பூதாண்டத்தெல்லையினீறே." (ருகூ)

விரிநூல் இது எனக்.

என்று மாமுநி வன்றொண்டர் செய்கையை
அன்று சொன்ன படியால் அடியவர்
துன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
இன்றென் ஆதர வால்இங் கியம்புகேன்.

(எ - து.) (தென்திசைக்குப்பிறதிசை ஒவ்வாது) என்று சொல்லிய உபமன்னிய மஹாமுநிவர், அடிவர்களது சீரெல்லாம் நிறைந்துள்ள திருத்தொண்டத்தொகையைத் திருவாய்மலர்ந்தருளிய வன்றொண்டப்பெருமானாரது அருட்செயல்களை, அக்காலத்

தில் ஸ்ரீகயிலாயத்தில் அரபத்தர்முதலிய முனிவர்கட்கு ஆசையுடன் சொன்னபடியினால், இன்று யானும் இத்தில்லை நடராஜன் சந்நிதானத்தில் அப்பெருமானது அருட்செயல்களை, என்னுடைய ஆசைமிகுதியினால் விரித்துச் சொல்லுகின்றேன் என்பதாம்.

என்றுமாமுநி அடியவர் தன்றுசீர்த் திருத்தொண்டத்தொகை அருளிய வன்றொண்டர் செய்கையை அன்றுசொன்னபடியால் விரி இன்றென் ஆதரவால் இங்கியம்புகேன் எனக்கொண்டு கூட்டுக.

ஆரூரது சரித்திரம் கயிலையில்வாழும் முனிவர்களுக்கும் முனிவர்பெருமானுக்குமே, வியப்பையும் ஆதரவையும் தந்து கேட்கவும் சொல்லவும் செய்யுமாயின், இம்மண்ணுலகில்வாழும் சைவசீலர்கட்கு வியப்பும் ஆதரவும் உண்டாய் கேட்கவும் சொல்லவும் செய்வது சொல்லாமேயமையுமென்பார்-வன்றொண்டர் செய்கையை மாமுநி அன்று சொன்னபடியால், யான் ஆதரவால் (அநபாயச்சோழனார்கேட்க) இங்கு இன்று இயம்புகேன் என்றார்.

வன்றொண்டர்செய்கை அங்கும் இங்கும் வியப்பையும் ஆதரவையும் தருதற்குக் காரணம் என்னையெனின், அறுபான்மும்மை நாயன்மார்களால் செய்யப்பட்ட வன்றொண்டைப்பெற்ற வல்லாளனாகிய இறைவனை ஒருவரும்செய்தற்கிணங்காத தூது செல்லல்முதலிய செயல்களைத் தாமே வலிந்துசெய்யத் தோழராகக்கொண்ட செயலின் வன்மை நோக்கியென்க.

ஸ்ரீ கயிலாயத்தில் தொகுத்து எண்ணுவதாகிய சங்கற்பமும், தொகுத்துச் செய்வதாகியசெயலுமே இம்மண்ணுலகில் விரிவாய்ப்பரவும் இலக்கணமுடைத்தாகலின் அவ்விலக்கணத்திற்கேற்ப உபமன்னியமுநிவர் அங்கு ஆரூரதுசெயலைத் தொகுத்துச்சொன்னார் யானிங்கு விரித்துச்சொல்லத் துணிந்தேன் என்றார்.

திருத்தொண்டத்தொகை வெளிப்படுதற்கு முற்காலமாகிய அன்றும், அத்தொகை வழங்கிவரும் காலமாகிய இன்றும் இனிவருங்காலமாகிய என்றும், ஆகியகாலங்கள் மூன்றனுள்ளும் முன்உள்ளார், இப்போதிருப்பார் இனிவருவார் ஆகியதொண்டர்களுக்கெல்லாம் இப்பதிகமன்றிவேறோரிடம் இன்மை என்றறிக. ஏனெனின் வேறோரிடம் இருக்குமாயின் அவர்கள் இறைவன் திருவாக்கினுள் அறியப்பட்டுவரும் சீர்மையும், திருவையும் இலராவராகலின் அவரெல்லாம் தொண்டராகாரென்பது திண்ணம். ஆகவே தொண்டர்கட்கெல்லாம் இப்பதிகமே இடமென்றாயிற்று. இவ்வுண்மை அடியவர் தன்று சீர்த்திருத்தொண்டத் தொகைவிரி'' என்றதனாலும் அறிக. எவ்வாறெனின் தன்று சீர்த் திருத்தொண்டர் (களாகிய) விரி(ந்துகிடக்கும் அடியவர்களே இப்பதிகத்துள்) தொகை(யாகக்கூறப்பட்டுளார்) என்றும் பொருள்தருதலினானென்க. (௩௭)

முதனூலிது வெனல்.

மற்றி தற்குப் பதிகம்வன் தொண்டர்தாம்
புற்றி டத்தெம் புராணர் அருளினால்
சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகைஎனப்
பெற்ற நற்பதிகம் தொழப் பெற்றதால்.

(எ - து.) (அடியேன் சொல்லத்தொடங்கிய) இத்திருத்தொண்டர்புராணத்திற்குப் பதிகமானது, வன்றொண்டப்பெருமானாராகிய சுந்தரமூர்த்திகள், புற்றிடங்கொண்டெழுந்தருளியிருக்கும் புராதனராகிய எமது இறைவனது திருவருளினால் அருளிச்செய்த உண்மைபொருந்திய திருத்தொண்டத்தொகையென்று திருப்பெயர்பெற்ற நல்லபதிகமேயாம். அப்பதிகம் எம்மால் வணங்கப்பெற்றதாயுள்ளது என்பதாம்.

உலகின்கண் பரவிக்கிடக்கும் புராணங்களெல்லாம் மஹாபுராணங்களாகிய பதி னெண்புராணங்களில் இன்னசங்கிதையில், இன்னகண்டத்தில், இன்னஅம்சத்தில், இன்னஅத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளனவென்று வழங்கிவரும் இயல்புடைத்து. இப் புராணமோ, அவ்வியல்புடைத்தன்றென்பார்—மற்றிதற்கு பதிகம் வன்றொண்டர்தாம், புற்றிடத்து எம்புராணர் அருளினால், சொற்றமெய்த் திருத்தொண்டத்தொகை எனப் பெற்றது என்றார்.

எனவே,-பதினெண்புராணங்களும் இறைவனால் சொல்லப்பட்டனவே யாயினும் அவையெல்லாம் சிருட்டி திதி சங்காரம் திரோபவம் என்னும் நான்கினுடைய செயலுக் குட்பட்டு பந்த வசப்பட்டிருக்கும் ஆன்மாக்களைக்குறித்துச் சொன்னதேயன்றித் திரோ பவத்தினின்றும் நீங்கி அனுக்கிரகவசப்பட்டிருக்கும் முத்தான்மாக்களைக் குறித்துச் சொல்லியதன்று. ஆகவே அன்று ஆரூராருக்குத் திருத்தொண்டத்தொகையைச் சொல்லத் தொடங்கியகாலத்து. இவ்வடியார்களுடைய பெருமையும் செயலும் அருள்நிலையும் இன்ன புராணத்தில் இன்னசங்கிதையில் இன்னஅம்சத்தில் இன்னகண்டத்தில் இன்ன அத்தி யாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது என்று ஒன்றை எடுத்துக்கூறினாரில்லை என்னும் அவ்வேற்றுமைதோன்ற—மற்றிதற்குப்பதிகம் என்றார்.

மலசம்பந்திகளாகிய ஆன்மாக்கள் அம்மலத்தினின்றும் நீங்கச்செய்யத்தொடங்கிய சிருட்டிதிதிசங்காரம் திரோபவம் என்னும் நான்கினுள் வினைவசப்பட்ட திரோபவசக்தி என்னும் அருளைக்கொண்டு சொல்லாமல் அருட்சம்பந்திகளாகிய சிற்பரச்செல்வர்கள் சிவமாகியதனது அனுபவத்திலும் வரம்பிலின்பத்திலும் நீங்காதிருக்க திரோபவசத்தி யின்செயல் நீங்கப்பெற்ற சுத்த அருட்சத்தியாகிய அருளைக்கொண்டு சொல்லத்தொடங் கினரென்னும் அவ்வுண்மைதோன்ற—புற்றிடத்து எம்புராணர் (அநாதியாயுள்ளவர்) அருளினால் சொற்ற—என்றார்.

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால், தாழ்த்துவதுந் தாம் உயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டி" என்றும் "ஐயனே நீயல்லது இல்லை மற்றோர் பற்றுவஞ்சனேன், பொய்கலந்தது அல்லது இல்லை" என்றும், மெய்கலந்த அன்பர் அன்பு எனக்கும் ஆகவேண்டுமே என்றுங்கூறிய திருவாசகப்பொருளையுற்றுநோக் குழி தேவர்முதலாயினோர் அன்பர்களைப்போல் வாழ்த்தினாலும் வணங்கினாலும் மனத் தை அவன்பால்வைத்தாலும் அது பொய்கலந்ததென்றும், எனவே தற்பிரயோசனங்கரு திச்செய்ததேயன்றி அன்பு கருதிச்செய்ததன்று. அஃதாவது, தாங்கள் உள்ளத்தில் கருதியிருக்கும்போகங்களில் அன்புடையராய் அவை கைகூடும்பொருட்டுப் புறத்தே இறைவன்பால் அன்புடையராய் வாழ்த்தியதும் தாழ்த்தியதுமாம். ஆகலான் அது பொய்கலந்த தொண்டென்று வெளிப்படலால் இத் திருத்தொண்டத்தொகை வேறொரு பொருளைக்கருதாது உள்ளும்புறம்பும் இறைவன்பால் அன்பினையேகருதிய மெய்கலந்த அன்பரது அன்பின்செயல் என்னும் வேற்றுமை தோன்ற—மெய்த்திருத்தொண்டத் தொகை யெனப்பெற்றது—என்றார்.

"அத்தேவர்தேவர் அவர்தேவர்என்று இங்ஙன், பொய்த்தேவுபேசிப் புலம்புகின்ற" சிறியோரது கூட்டங்களில் முன்னிற்காது, மெய்த்தேவனாகிய தன்னையே பேசி, தன்னை யேபெற்று, தன்னடித்தொண்டேசெய்து, தன்பாலே இன்புற்றுவாழும் பெரியோரது கூட்டங்களில் முன்னிற்கப்பெற்ற இறைவனது அருமைதோன்ற—நற்பதிகம்என்றார். அப்பதிகத்தையே தாம் ஏடுத்துக்கொண்ட பெரிய புராணத்துக்குப் பெரிய பதிகமாக நடராஜமூர்த்தியை வணங்கிப் பெற்றுக்கொண்டது என்னும் அவ்வன்புதோன்ற - தொழப்பெற்றது—என்றார்.

திருத்தொண்டத்தொகையைத்தியாகேசரும், அவரதுதோழராகிய ஆரூரரும்கலந்து ஒருவாக்காக ஓதப்பட்டதாகலின்—மற்றிதற்குப்பதிகம் புற்றிடத்தெம்புராணர் அருளி

ஞல் சொற்ற-என்றும், மற்றிதற்குப்பதிகம் வன்ரெண்டர்தாம், புற்றிடத்து ஏம்புராணர் அருளினல் சொற்றஎன்றும் இருவகையாகப் பொருள் கொள்க.

இதனல் பெரியபுராணம் பதினெண்புராணங்களில் அடங்காத மஹாபுராணம் என்றும்,சகலபுராணகர்த்தாவாகிய இறைவனது திருவாக்காயுள்ள திருத்தொண்டத்தொகையே இம்மஹாபுராணத்துக்குப் பதிகமென்றும் கூறப்பட்டன. (ரு அ)

வகைநூல் இதுவெனல்.

அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்தம் நாதனும் நம்பியாண்டார் நம்பி
புந்தி ஆரப் புகன்ற வகையினல்
வந்த வாறு வழாமல் இயம்புவாம்.

(எ - து) சுந்தரமூர்த்திகளால் சொல்லப்பட்ட, மெய்ம்மைபொருந்திய திருத்தொண்டத்தொகையென்னும் அந்தத்திருப்பதிகத்தில் (தொகுத்துச்சொல்லப்பட்ட) அடியார்களை, நமது பரமாசாரியராகிய நம்பியாண்டார் நம்பிஎன்னும் திருப்பெயர்புனைந்த நம்பெரியார், நமது அறிவுக்கு அத்திருப்பதிகத்தின் பொருள் நல்கும்வகையும் புல்கும் வகையும் பொருந்தும்படி அருளிச்செய்த திருவந்தாதியின் வகையைக்கொண்டு என்னறிவில் உலகெலாம் என்றெடுத்துக்கொடுத்த அருண்மொழியால் விளங்கவந்த பொருள் முறையால் அவ்வடியவர்கள் வரலாறனைத்தையும் வழுவாமல்விரித்துச்சொல்லுவாம் என்பதாம்.

நம்பியாண்டார் நம்பிகள்அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி இப்புராணத்துக்கு வகைநூலாயிருத்தலின் அந்நம்பிகளை நந்தம் நாதனும் நம்பியாண்டார் நம்பி - என்றார்.

புராணம் சொலவேண்டுமாயின் பதி தேமரபு செயல் என்னும் இவ்வகையன்றி யமையாதாகலான் அந்நான்கும்வகைப்படுத்திக்கூறினர் அந்நம்பியாண்டாரே என்பதுதோன்ற-நம்பி புந்தியாரப்புகன்ற வகையினல்-என்றார்.

இந்தவகையை அந்தநம்பியார் அருளியது வழுக்கு (விக்னங்)களைப் போக்கவல்ல விநாயகர் கூறியருளத் தாம் கூறியருளினராகலின் தாம் சொலத்தொடங்கிய புராணத்துள் சொல்வழுவும், பொருள்வழுவும் வாராவண்ணம் காக்கும் பொருட்டு அந்த - வகை வந்தவாறு வழாமல் இயம்புவாம் - என்றார்.

எனவே - விநாயகப்பிரான் கூறியவகையையேதுணையாகக் கொண்டு கூறத்தொடங்கினேனாகலின் இப்புராணத்திற்கும் துணையாகவேயிருத்தல் அவரதுகடமையாம் என்பதுசொல்லாமே யமையுமென்னும் பொருட்டு.

பின்வரும் திருவந்தாதியால் வகைநூலிது என்பதையும், புராணசாரத்தால் விரிநூலிது என்பதையும் காண்க.

நாட்டுச்சிறப்பைக் கூறுவேனெனல்.

உலகம் உய்யவும் சைவநின் றேங்கவும்
அலகில் சீர்நம்பி ஆரூரர் பாடிய
நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறை
குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம்.

(எ - து) திருவருளுக்குரிய உயர்ந்தோரெல்லாம் சிவப்பேறெய்தவும், சைவசமயமானது நிலைபெற்றுவளர்ந்தோங்கவும், அளவில்லாத பெருஞ்சிறப்பினையுடைய நம்பியாரூரராகிய நமது பெருமானர் பாடியருளிய அடியவர் திருக்கூட்டமானது நிறைந்து விளங்கிவாழ்கின்ற குளிர்ச்சிபொருந்திய சோழநாட்டின் சிறப்பைக்கூறுவாம்என்பதாம்.

இத்திருப்பாட்டின் விசேடத்தை விறன்மிண்டநாயனர் புராணத்தில் (சு) வது திருப்பாட்டிற் காண்க.

திருக்கயிலாயச் சிறப்பு முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௫௦.

நம்பியாண்டார் நம்பிகள்

அருளிச்செய்த

திருத்தொண்டர் திருவந்தாதி.

ஆதி கவி.

பொன்னி வடகரை சேர்நாரை யூரில் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதே மரபு செயல்
பன்னவத் தொண்டத் தொகைவகை பல்கும்அந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதந் துணை துணையே.

எனவே, காவிரியின் வடகரையிலுள்ள திருநாரையூரின்கண் எழுந்தருளியிருக்கும் விநாயகக்கடவுள் திருத்தொண்டத்தொகையுள் கூறப்பட்டுள்ள அறுபான்மும்மை நாயன்மாரது பதி தே மரபு செயல் என்பவைகளைக் கூறியருள, அத்திருத்தொண்டத்தொகைக்கு வகைவிளக்கும்வண்ணம் திருவந்தாதியைக்கூறியருளிய ஆதிசைவகுலோத்பவராகிய நம்பியாண்டார் நம்பிகளது அழகிய பொன்போன்ற இரண்டுபாதங்களும் எமக்குத் துணையாகவே உள்ளன என்பதாம்.

திருவாரூரில் புற்றிடத்தெம்பெருமான் நம்பியாரூரருக்கு அருளியதுபோல் திருநாரையூரில் புழைக்கைமுகனாகிய விநாயகர் அருளியதெனபார்-நாரையூரில் புழைக்கைமுகமன்னன் அறுபத்துமூவர் பதிதேமரபுசெயல் பன்ன என்றார்.

தொகைநூலையும் விரிநூலையும் அருளியவர் தியாகராஜனும் நடராஜனுமேயாகலான் இவ்வகைநூலையும் அருளியவர் கைமுகனென்றோது புழைக்கைமுகமன்னன் என்றார்

அறுபத்துமூவர் பதிதேமரபுசெயல்களை நம்பியாண்டார் நம்பிகளுக்குப் புலப்படுமாறு விநாயகர் பன்னி (விரித்து) கூறியருளினராதலின் பன்னவென்றும், அங்ஙனம் பன்னக்கேட்டவைகளைத்தான் அந்தாதியில் வகைப்படக்கூறினமையாலும் அவ்வந்தாதியாகிய வகையில் விநாயகர் பன்னியவிரி. பொருளானது பல்பொருளாகவிரிந்து அறிவின்கண் விளங்கப்பாடினராதலின் பல்கும் அந்தாதி என்றும் கூறினார்.

தொண்டத்தொகை சொன்னமறைக்குலநம்பி (ஆரூரர்) பொற்பாதம் துணையென்றும், அறுபத்துமூவர் பதிதேமரபு செயல்பன்னவகை பல்கும் அந்தாதிதனைச்சொன்ன மறைக்குலநம்பி (நம்பியாண்டார்நம்பிகள்) பொற்பாதம் துணையே என்றும் இருவரிடத்தும் கூட்டிப்பொருள்கொள்க.

சந்தானாசாரியராகிய உமாபதிசிவம்

அருளிச்செய்த

திருத்தொண்டர் புராணசாரம்.

மல்குபுகழ் வன்றொண்டர் அருளால் ஈந்த
வளமருவு திருத்தொண்டத் தொகையின் வாய்மை
நல்கும்வகை புல்கும்வகை நம்பி யாண்டார்
நம்பிதிரு அந்தாதி நவின்ற ஆற்றால்
பல்குநெறித் தொண்டர்சீர் பரவ வல்ல
பான்மையார் எமையாளும் பரிவால் வைத்த
செல்வமிகும் திருத்தொண்டர் புராண மேவும்
திருந்துபயன் அடியேனும் செப்பல் உற்றேன்.

(எ - து.) வன்றொண்டரென்று போற்றப்படும் நம்பி ஆரூரர் அவ்வாரூரையாளும் தியாகராஜன் அருளால் திருவாய்மலர்ந்தளித்த அன்பின்வளம்பொருந்திய திருத்தொண்டத்திருப்பதிகத்தின் கண்ணுள்ள உண்மைப்பொருள் உள்ளத்தில் தோன்றும்வகையாக அச்சொல்லில்பொருந்தும் வகையாகவும் நம்பியாண்டார் நம்பிகள் திருவந்தாதியாக அருளிச்செய்தவகையினால் தொண்டர்களது சீர்பரவிய நெறிகளை விரித்துச்சொல்லவல்லவராகிய அருண்மொழித்தேவர் எம்மை அடிமைகொள்ளவேண்டுமென்னும் ஆசையால் அருளிய திருவருட்செல்வநிறைந்த திருத்தொண்டர்புராணத்துள் அமைந்துகிடக்கும் திருத்தமாகிய சாரத்தை அடியேனுஞ் சொல்லத்தொடங்கினேன் என்பதாம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநாட்டுச் சிறப்பு.

பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவில லுற்றனன்.

(எ - து) போற்றும் பெருமையிற்சிறந்த இயற்றமிழ் மொழிவழங்குகின்ற எல்லையின்கண் உள்ளதும், நீண்ட சிகரங்களையுடைய இமயமலையின் உச்சியில் தங்கள் புலிக்கொடியை நாட்டிய சோழராஜாக்களுக்குரியதுமாகிய காவிரிநதி சூழ்ந்த சோழநாட்டின் செழுமையை இங்கு யான் சொல்லத் தொடங்கினேன் என்பதாம்.

தமிழுரை என்றது நால்வர்களால் ஓதப்பட்ட தேவார திருவாசகங்களையாம். இவைதான் இயற்றமிழுக்கு - உரைச்செய்யுள், பாச்செய்யுள் என்னும் இருவகையுரையுள் பாச்செய்யுளுரையாகவுள்ளன என்னும் அச்சிறப்புத் தோன்ற - தமிழ் உரை பயின்ற - என்றார். எனவே - இயற்றமிழ் என்னும் அத்தமிழ் மொழியின் பொருள் தேவாராதிகளையாமென்று குறித்ததென்க. அஃதாவது தேவாராதிகளுக்குப் பொருளாயுள்ளவன் இறைவன். அவ்விறைவனைப் பொருளாகவுடையது இயற்றமிழ் ஆகலான் இயற்றமிழுக்கு உரை - தேவாராதிகளேயாம். இதனால் இயற்றமிழுரை என்றதைத் தமிழ் மொழி என்று கொள்ளுவதினும், இயற்றமிழ் உரை எனப்பிரித்துத் தமிழுக்கு உரை தேவாராதிகளே என்று பொருள் கொள்ளுவது சிறப்புடைத்தென்க.

அல்லதூஉம் தமிழரசர்களாகிய மூவேந்தருடைய எல்லையுள்ளே சோழராஜாவினுடைய எல்லையுள் எண்ணிறந்த சிவத்தலங்களாகலானும், அத்தலங்களெல்லாம் தேவாரங்களைப் பெற்றுள்ளதாகலானும் அச்சிறப்புத் தோன்ற - பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள் சோழர் நாட்டியல்பதனை யான் நவிலலுற்றனன் - என்றார். இச்சிறப்பை நம்பியாரூரர் பாடிய நிலவு தொண்டர்தங் கூட்டம் நிறைந்துறை, - குலவுதண்புனல் நாட்டணி கூறுவாம் — என்றதனாலும் அறிக.

மலையரையன் மகளாகிய பார்வதிதேவியார், மலயத்துவசபாண்டியன் மகளாய்த் தடாதகைப் பிராட்டியாரென இத்தமிழ் நாட்டை யாண்டனராகலான் இத்தமிழுக்கு வடக்கு எல்லை வடவேங்கடமேயன்று பனிவரையளவாமென்னும் அத்தகைச் சிறப்புத் தோன்ற - கோட்டுயர்பனிவரைக்குன்றினுச்சியில் சூட்டிய வளர்புலிச்சோழர் என்றார்.

நீர்வளத்தின் சிறப்பு.

ஆதிமா தவமுனி அகத்தியன் தரும்
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர்மண் மடந்தைபொன் மார்பில் தாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால்.

(எ - து.) ஆதியாகிய தவத்திற் பெரியாரும் முனிவர்களில் முதல் வரும் ஆகிய அகத்திய முனிவரால் கொண்டுவரப்பட்ட கமண்டலத்தினின்றும் பெருகிய பெருவெள்

ளமாகிய காவிரிநதியானது அழகிய பூமிதேவியினது பொன்மயமாகிய மார்பில் தாழ்ந்து விளங்குகின்ற குளிர்ந்தநீரிற் றோன்றிய ஒப்பற்ற முத்துமாலையை யொத்திருக்கும் என்பதாம்.

சைவசம்பத்தை யிழந்த வைதிகத்திற் கூறும் தருமத்தைக் கொள்ளாது சைவசம் பந்தமாகிய வைதிகத்திற் கூறும் ஆதியாகிய தவத்தை மேற்கொண்டவரென்பார்— ஆதிமாதவர் - என்றும், குவிந்தகையில் பரந்த கடலைக்கொண்டதும், பரந்தகையாரல் வானளாவிய விந்தமலையையடக்கியதும், பொதியமலையிலிருந்துஉத்தரதிசையைசமநிலைப் படுத்தியதும் ஆகிய அரிய செயலைச்செய்தார் இவரன்றி ஏனையமுநிவரன்றென்பார் - ஆதிமாமுநி-என்றும், கமண்டலம் உருவிற்சிறியதாயினும் அதினின்றும் பெருகிய நீரா னதுசோழநாடெங்கும் பரந்தபெருவெள்ள மென்பார் - கமண்டலம் பொழிந்த பூதநீர் - என்றும், இடையூறுகளைப் போக்கி யாவரையுங் காக்குங்கடவுளாகிய விநாயகர் காக வுருக்கொண்டு கவிழ்த்ததனாலுண்டாகிய காரணநாமம் உடையதென்பார் - காவிரி என் றும், அந்நதியினால் பலவளங்களுஞ் செழித்திருக்குந் தன்மையையுடைத்தென்பார்-மாதர் மண் - என்றும், உற்பத்திக் கிடமாயிருக்கும் பெண்களைப்போல் எப்பொருளுந் தோன் றுதற்குத் தான் இடமாயிருப்பதென்பார் - மடந்தை - என்றும், மண் பொன்னிற முடைத்தென்பார் - பொன்மார்பில்-என்றும், யானைக்கொம்புமுதலியவற்றில் தோன்று முத்துகளைக் கொள்ளாது தன்சம்பந்தமாகிய கடலின் அலைகளால் மோதப்பட்டுவரும் முத்தினையே அணியுஞ்சிறப் புடைத்தென்பார் - ஒதநீர்நித்திலத்தாமம் ஒக்குமென்றுங் கூறினார்.

இதனால் காவிரிநதியானது பூதேவியின் பொன்மார்பில் அணிந்த முத்தாரம்போல் விளங்குகின்றதென்று கூறப்பட்டது. (உ)

சையமால் வரைபயில் தலைமை சான்றது
செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்
உய்யவே சுரந்தளித் தூட்டு நீரது.

(எ - து.) (அதுவேயுமன்றி) அந்நதி சையமலையினின்றுந் தோன்றியதலைமைத்தன் மையுடையது. செம்மையுடைய பூமிதேவிக்கு நல்ல செவிலித்தாயை யொத்துளது: இவ்வுலகின்கணுள்ள எல்லாவுயிர்களும் பிழைத்திருக்க நாடோறும் நீர் சுரந்தளித்து வளர்த்தூட்டுங் குணமுடையது என்பதாம.

இதனால் இந்நதி தான்றோன்றும் இடத்தின் சிறப்பால் தலைமையும், பூமிதேவியை எக்காலத்தும் தனது வெள்ளப் பெருக்கால் வளம்படவாழச் செய்தலால் செவிலித்தா யின் தன்மையும், கார்காலத்தே யன்றி ஏனையகாலத்தும் தன் அகட்டினின்றும் ஊற் றெடுத்துப் பெருகும் நீரை எல்லாவுயிர்களுக்கும் உணவாகக்கொடுத்தும் வருந்தன்மை யால் மாறாத ஈகைக் குணத்தையும் உடையதென்று கூறப்பட்டது. (ந)

மாலினுந் திச்சுழி மலர்தன் மேல்வருஞ்
சால்பினால் பல்லுயிர் தருதன் மாண்பினால்
சோலைநற் குண்டிகை தாங்குங் கொள்கையால்
ஞாலநான் முகனையும் பொன்னி மாநதி.

(எ - து.) (அதுவேயுமன்றி) அந்நதியானது திருமாலின் உந்தியைப்போலத் தன் மேல் அலை சுழித்துவருதலாலும் அவரது நாபிக்கமலம் போலத் தாமரைமலர்கள் வரும் சிறப்பினாலும் அக்கமலத்தின்கண் வந்த பிரமன் பலவுயிர்களைப் படைத்தல் போலத் தானும் பலவுயிர்களைத் தோற்றுவிக்குங் குணத்தினாலும் பிரமன் குண்டிகையுடைத்தாதல் போலத் தானுங்குண்டிகையை யிடமாகக்கொண்டு வருதலாலும் பிரமதேவனை யொத் திருக்கும் என்பதாம்.

பொன்னிமாநதி-மாலின் உந்திச்சுழி(யும்) மலரும் தன்மேல் வரும் சாலினால் நான்முகனையும்போலும் என்று கொண்டு கூட்டுக.

இதனால் இந்நதி ஏகதேசவுவமையானன்றி பிறப்புமுதலிய எல்லாவற்றானும் பிரமனை ஒத்திருத்தலின் நான்முகனை யொத்திருக்கின்றதென்று கூறப்பட்டது. (௪)

திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியில்
பொங்குவெண் டலைநுரை பொருது போதலால்
எங்கணா யகன்முடி மிசைநின் றேயிழி
கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே.

(எ - து.) (பிரமனைப்போல் காணப்படுவதன்றி) அழிவில்லாத அக்காவிரிநதியின் வெள்ளமானது சந்திரன் தவழ்கின்ற சையமலையின் முடியின்மேல் வெண்டலையைப் போலும் பிரகாசிக்கின்ற நுரைகள் அடித்துக்கொண்டு வருந்தன்மையைப் பெற்றிருத்தலால் எங்கள் இறைவனது திருமுடியினின்றும் பெருகிவருகின்ற கங்காநதி யென்றே சொல்லலாம் என்பதாம்.

கன்னி நீத்தம் *** கங்கையேயாம் என்றுகூட்டுக.

இதனால் இந்நதி திங்கள்சூடிய இறைவனது திருமுடியில் வெண்டலையிருத்தல் போல் நிலவுதவழ்கின்றசையமலையினுச்சியில் வெள்ளியநுரைகளால் பிரகாசித்துக் கொண்டிருத்தலால் கங்கையேயாமென்று கூறப்பட்டது. (௫)

வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பே றறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது.

(எ - து.) (காவிரிநதியானது கங்கையைப்போலக் காணப்படுவதன்றி) அழகு பொருந்திய நீண்டசையமலை யானது உதிப்பிக்கவந்த மேன்மையினாலும், அளவிறந்த தருமங்களை வளர்க்கின்ற பெருங்கொடையினாலும் இறைவனது இடப் பாகத்தையாளுகின்ற இறைவியினது உள்ளத்தின்கணின்றும் கசிந்துவருகின்ற கருணைப் பிரவாகத்தை யொத்திருக்கும் என்பதாம்.

இதனால் பார்வதியைப் பர்வதராஜன் தந்தது போலும் இந்நதிசைய மலைதர வந்தனாலும் உமாதேவி இருநாழிநெல்லால் செய்தபேரறங்கள் போலும் குண்டிகையளவினின்றும் வந்தநீரால் எண்ணிறந்த தருமங்களைச்செய்தலாலும் இந்நதியின் நீர்வெள்ளமானது உமாதேவியின் கருணைவெள்ள மென்று கூறப்பட்டது. (௬)

வேறு.

வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்
தெம்பி ரானை யிறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால்.

(எ - து.) குளிர்ச்சி பொருந்திய காவிரிநதியானது - தனது அலைகளால் மோதப் படும் பொற்பொடிகள் பொருந்திய நீண்ட இருகரையிலுமுள்ள சிவாலயங்களில் வீற்றிருக்கும் எமதுபெருமானை நறுமணங்கமழும் மலர்களினாலும் நீரினாலும் வழிபட்டுவணங்குவதினால் தேவநாயகனாகிய இறைவனுக்கு அன்புபூண்டொழுகும் அடியவர்களையும் ஒத்திருக்கும் என்பதாம்.

ஈர்ம்பொன்னி செம்பொன்வார்கரை எண்ணில்சிவாலயத்து எம்பிரானை வும்பு லாமலர் நீரால் வழிபட்டு இறைஞ்சலின் உம்பர்நாயகர்க்கு அன்பரும் போக்கும் எனக் ட்டுக.

இதனால் இந்நதி தன்னை அகத்தியர் கமண்டலத்திற்கொண்டும் அவர்செய்யுஞ் சிவ பூஜைக்குத் தான் உரிமையாகா தொழிந்த குறையைநாடி அக்குறைவகற்றத் தனது இருகரையிலுமுள்ள சிவபெருமானை பூநீர்கொண்டு வழிபட்டு அன்பர்களைப்போலும் மகிழ்ந்து செல்லுஞ் சிறப்புடைத்தென்று கூறப்பட்டது. (எ)

வாச நீர்குடை மங்கையர் கொங்கையில்
பூசு குங்கும மும்புனை சாந்தமும்
வீசு தெண்டிரை மீதழித் தோடுநீர்
தேசு டைத்தெனி னும்தெளி வில்லதே.

(எ - து.) மேலோடுகின்ற காவிரியானது மிகுந்ததெளிவினை யுடைத்தாயினும் வாசனைபொருந்திய தண்ணீரில் ஸ்நானஞ்செய்கின்ற மங்கையரது தனங்களிற் பூசி யுள்ள குங்குமக்குழம்பையும் அணிந்துள்ள சந்தனக்குழம்பையும் வீசுகின்ற தெள்ளிய அலைகளினால் அழித்து தெளிவில்லாமலே யிருக்கின்றது என்பதாம்.

மீது ஓடுநீர் தேசுடைத்து எனினும் வாசநீர்குடை ** வீசுதெண்டிரையழித்து தெளிவில்லதே எனக் கூட்டுக.

அல்லதூஉம் இந்நதியில் மூழ்கவரும் மங்கையர்கள் அந்நதியினால் சரீரமும் மன மும் தெளிவினைப் பெறுகின்றாராகலின் அதற்குப்பரிசாக அவரளிக்குஞ் சந்தனக்குழம்பு முதலியவற்றைத் தானும்பூசி மகிழ்ந்து செல்வதுபோலுமா மென்றுங் கொள்க. இப் பொருளுக்கு, வீசுதெண்டிரைநீர் - தேசுடைத்தெனினும், வாசநீர்குடை மங்கையர் கொங்கையிற் பூசுகுங்குமமும் புனைசாந்தமும், மீதுஅழித்து ஓடு (தலால்) தெளி வில்லதே எனக்கொண்டுகூட்டுக. தெளிவில்லதே என்றது - ஈண்டுமகிழ்ச்சி மிகுதியைக் குறித்ததென்க.

இதனால் காவிரிநதி ஏனைய மண்முதலியவைகளால் கலக்கமுறாது தெளிந்து வருந் தம்மையுடைத்தாயினும் தானும் மங்கையாகலான் தன்னிடத்துமூழ்கும் மங்கை யர் பூசியுள்ள குங்குமசந்தனக்குழம்புகளைப் பூசிக்கொண்டு செல்லுஞ்சிறப்புடைத் தென்றுகூறப்பட்டது. (அ)

மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு
பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
வாவி யிற்பொலி நாடு வளந்தரக்
காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால்.

(எ - து) வண்டுகள் ஆரவாரித்தெழுந்து கானஞ்செய்யவும், மலைகளினின் றும் வருகின்றமலர்கள் மலர்வதனாலுண்டாகும் தேன்கள் பொங்கிவரவும், தடாகங்களி னால் பொலிவுபெற்றிருக்குஞ் சோழநாடானது பலவளங்களைக் கொடுக்கவும், காவிரி நதியானது அநேகங்கால்களாகப் பிரிக்கப்பட்டு மேலோங்கிச் செல்லும் என்பதாம்.

இதனால் இந்நதி "அறத்தினூஉங் காக்கமு மில்லை அதனை, மறத்தலி னூஉங்கில்லை கேடு" என்ற குறட்பாவின் பொருளை நாடி தனக்குமேன்மேல் ஆக்கமுண்டாகும் பொருட்டுச் சோழநாடெங்கும் பலகால்களாகச் சென்று உபகரிக்கும் அறத்தினை மேற் கொண்டதெனக் கூறப்பட்டது. (கூ)

குடிவளத்தின் சிறப்பு.

ஒண்துறைத்தலை மாமத கூடுபோய்
மண்டு நீர்வயல் உள்புக வந்தெதிர்
கொண்ட மள்ளர் குரைத்தகை ஓசைபோய்
அண்டர் வானத்தின் அப்புறஞ் சாருமால்.

(எ - து) காலின்வழியாகப் பெருக்கெடுத்துவருகின்ற காவிரிநதியானது மேலோங்கிவிளங்குகின்ற கரையின்கணுள்ள பெரிய மதகின்வழியாகச் சென்று வயல்களினுள்ளேபாய்வதினால் அதுகண்டு அந்நீரைக் கால்வழியாகக் கொண்டுபோக எதிர்வந்த வுழவர்கள் களிப்பின்மிகுதியினால் கைகொட்டுதலால் உண்டாகிய ஓசையானது தேவர்கள் வாழ்கின்ற விண்ணுலகினையுங்கடந்து மேலண்டத்தையும்நோக்கிச் செல்லும் என்பதாம்.

மண்டுநீர் ஒண்துறைத்தலை மாமதகூடுபோய் வயலுட்புக எனக்கூட்டுக.

இதனால் காவிரியின் பெருக்கினைக்கண்ட உழவர்கள் காலவேற்றுமையானு வானம்வறக்கினும் நமதுநாடு தேவர்களுக்குச் சிறப்பொடு நாஞ்செய்யத்தகும் பூசனைக்குக் குன்றுத லுண்டாகாவண்ணம் காக்கவல்ல நீர்வளத்தைக் காட்டுகின்றதல்லவா என்று தங்களுக்குஉண்டாகிய மகிழ்ச்சியை அக்கணமே அத்தேவர்களுக்கு அறிவித்தல்போலுமென்று வியந்து கூறப்பட்டது. (௧0)

மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீத நீள்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதை யார்செய் யுழுநர் ஒழுக்கமும்
காதல் செய்வதோர் காட்சி மலிந்ததே.

(எ - து) அழகுபொருந்திய நாற்றைப் பறிக்கின்றவர்களுடைய சிறப்பும், குளிர்ச்சிபொருந்திய நீருண்டுள்ள அந்தநெற்களை முடிகளாகக்கட்டிச் சேர்க்கின்றவர்களுடைய செயலும், ஒருவரையொருவர் ஓசைபடக்கூவும் முழக்கத்தினையுடைய வயல்களையுழுகின்ற மள்ளர்களின்வரிசையும் காண்கின்றவர்களுக்கு ஆசையைவிளைவிப்பதாகியகாட்சிமிகுந்திருந்தன என்பதாம்

இதனால் நாறுபறித்தல் முடிகட்டுதல் ஓசைபடக்கூவுதல் ஆகிய இவைகள் பார்க்கின்றவர்களுக்குத் தொழின்முறையென்று இழிவினைக்காட்டாது அவர்களுக்குள்ள வண்மையின் புகழினையே காட்டிப் பிரகாசித்தன வெனக்கூறப்பட்டது. (௧௧)

உழுத சான்மிக வூறித் தெளிந்தசே
றிழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்
தொழுது நாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம்.

(எ - து) உழவர்களால் உழப்பட்ட படைச்சால்களில் மிகவும் ஊறித்தெளிந்த சேற்றினால் குழம்பியிருக்கின்ற வயல்களில் இந்திரனாகிய தெய்வத்தைவணங்கி நாற்றுநடுகின்ற கடைசியர்களின் கூட்டமே குற்றமற்ற காவிரிநதிசூழ்ந்த சோழநாட்டினது பரந்தவிடங்களெல்லாம் நிறைந்திருக்கும் என்பதாம்.

இதனால் மருதநிலத்திற்கு மேகவாகனனாகிய இந்திரன் தெய்வமாதலால் கடைசியர் அவனைவணங்கியல்லது நாற்றை நடாரென்று அவரது தெய்வவணக்கத்தின் சிறப்பு கூறப்பட்டது. (௧௨)

வேறு.

மண்டு புனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்டக் களைகளையும் கடைசியர்கள்

தண்டாளம் சொரிபணிலம் இடறிஇடை தளர்ந்தசைவர்;
வண்டலையும் குழல்அலைய மடநடையின் வரம்பணைவார்.

(எ - து) நீர்மிகுந்து பரந்திருக்கின்ற வயல்களில் வளர்கின்ற நெற்பயிர்களின் சுருள்கள் விரிந்துதழைக்கின்ற பருவத்தைக்கண்டு மள்ளர்கள் களைகளையும் பருவம் இது தானென்று காட்டும்பொழுது அப்பயிர்களில் உள்ள களைகளைக் களைதற்குரியாராகிய கடைசியர்கள் குளிர்ந்தமுத்தங்களைச் சிந்துகின்ற சங்குகளால் கால்கள்இடறி அதனால் இடைதளர்ந்துவருந்தி அசைந்தவர்களாய் வண்டுகள் தேனுண்ணும் விருப்பத்தினால் மொய்க்கின்ற கூந்தல் அவிழ்ந்தலையும்படி மெல்லிய நடையினால் வயல்வரம்புகளின் எல்லையைச் சேர்வார்கள் என்பதாம்.

இதனால், கடைசியரின் இடையின் சிறப்பும் நடையின் சிறப்புங்கூறப்பட்டன. ()

செங்குவளை பறித்தணிவார் கருங்குழன்மேல் சிறைவண்டை
அங்கைமலர் களைக்கொடுகைத் தயல்வண்டும் வரவழைப்பார்
திங்கணுதல் வெயர்வரும்பச் சிறுமுறுவல் தளவரும்பப்
பொங்குமலர்க் கமலத்தின் புதுமதுவாய் மடுத்தயர்வார்.

(எ - து) கடைசியர்களிற்சிலர் செங்குவளைமலர்களைப் பறித்தெறியாது தமதுகரியகூந்தலில் தரித்துக்கொள்ளுவார்கள். சிலர் அக்கூந்தலின்மேல் விழுகின்ற சிறகினையுடைய வண்டுகளைத் தமது அழகியகையாகிய தாமரைமலர்களைக்கொண்டு ஓட்டி வேறிடங்களிலுள்ள வண்டுகளைத் தம்மிடம் வரும்படி அழைப்பார்கள். சிலர் மூன்றாம் பிறையையொத்த தமதுநெற்றியில் வேர்வையுண்டாகவும் அதனைக்கருதாது புன்னகையாகிய முல்லையரும்புகளை மலர்த்தி ஒளிவிளங்குகின்ற தாமரைமலரிலுள்ள புதியதேனைக் குடித்துச் சோர்வார்கள் என்பதாம்.

இதனால் கடைசியர் கூந்தலிலுள்ளதேனை வண்டுகள் ஒழியாதுண்ணு மென்றும் கடைசியர் மலர்களிலுள்ள மதுவை ஒழியாதுண்டு மயங்குவரென்றுங் கூறப்பட்டன.

கரும்பல்ல நெல்லென்ன கமுகல்ல கரும்பென்ன
சுரும்பல்ல குடைநீலத் துகளல்ல பகலெல்லாம்
அரும்பல்ல முலையென்ன அமுதல்ல மொழியென்ன
வரும்பல்லா யிரங்கடைசி மடந்தையர்கள் வயலெல்லாம்.

(எ - து) மருதநிலத்தின் வளப்பத்தைப் பகற்காலமுழுவதும் பார்க்கவருகின்றவர்கள் வளர்ந்திருக்கும் நெற்களைப்பார்ப்பாராயின் அவர்களுக்கு அந்நெற்கள் கரும்பஞ்சோலைபோற் றோன்ற அவை கரும்பஞ்சோலையன்று நெற்பயிரென்று சொல்லவும், அதுவொழிந்து கரும்பஞ்சோலையைப் பார்க்குங்கால் கமுகமரங்களைப்போற் றோன்ற அவை கமுகல்ல கரும்பஞ்சோலையென்று சொல்லவும், அதுவொழிந்து வண்டுகள் அகவிதழ்களைக் குடைதலாலுண்டாகிய நீலோற்பல மலரின் கரிய துகள்களைக்கண்டு இவைகள் வண்டுகளோவென்று சொல்ல அவை வண்டுகளன்று நீலோற்பல மலர்களின் துகள்களென்று சொல்லவும், கடைசியர் தனங்களைக் கண்டு தாமரையரும்புகளோவென்றுசொல்ல இவை அரும்புகளன்று தனங்களென்று சொல்லவும், அவர்கள் வாயினின்று வரும் வார்த்தைகளைக் கேட்டுத் தாமரைகளினின்றொழுகும் தேனோவென்று சொல்ல அவை தேன்முதமல்ல வார்த்தைகளென்று சொல்லவும், வருகின்ற அநேக ஆயிரம்பள்ளப்பெண்கள் வயல்களிலெல்லாம் நிறைந்திருக்கின்றார்கள் என்பதாம்.

பகலெல்லாம் சுரும்பல்ல * * சுரும்புஅல்ல அல்லிகுடை நீலத்துகள் எனக் கூட்டுக. தாமேயறியவல்ல பகற்பொழுதிலேயேகடைசியர்கள் அதுவல்ல இது என்று காட்டக் காணக்கூடுமேயன்றி தாமே அறியக்கூடுமோவென்று தன்றென்று நென்முதலியவற்றின்

சிறப்புக்கூறப்பட்டது. எனவே கரும்பளவாக நெல்லும், கமுகளவாகக் கரும்பும் வளர்ந்தினவென்றும், நீலோற்பலத்தின் தாள்கள் வண்டின் அளவாக உள்ளனவென்றும், கடைசியரது தனம் தாமரையரும்பினளவாக வுள்ளனவென்றும், அவர்களின் மொழியின் சுவை வழிந்தொழுகும் தேன்போன் றிருந்தனவென்றும் வயலின்சிறப்பும் கடைசியர்களின் சிறப்புங் கூறப்பட்டன.

இவை மூன்றுபாட்டானும் கடைசியர்களது சிறப்பும், மருதநிலவளத்தின் திண்ணியசெழுமையுங் கூறப்பட்டன. அல்லதூஉம் கடைசியர்களே இவ்வாறான சிறப்புடையராயின் அந்நாட்டில்விளங்கும் மங்கையரது சிறப்பு சொல்லொணாதென்பதையுங் குறித்ததுமாமென்க. (கசு)

கயல்பாய்பைந் தடநந்துன் கழித்தபெருங் கருங்குழிசி
வியல்வாய்வெள் வளைத்தரள மலர்வேரி உலைப்பெய்த
கயலாமை அடுப்பேற்றி அரக்காம்பல் நெருப்பூதும்
வயல்மாதர் சிறுமகளிர் விளையாட்டு வரம்பெல்லாம்.

(எ - து) கெண்டைமீன்கள் பாய்ந்துவிளையாடுகின்ற குளிர்ந்தநீரையுடைய தடாகத்திலுள்ள ஊன்கழிந்தசங்குகளைக் கருமைபொருந்திய பெரியபானைகளாகவைத்து அவைகளில் அகன்றவாயையுடைய வெண்மையாகிய அச்சங்குகளீன்ற முத்துக்களாகிய அரிசிகளை உலைநீரைப்போல் அதில்வார்த்திருக்கும் மலர்த்தேன்களிலிட்டுப் பக்கங்களிலிருக்கின்ற ஆமைகளின் ஓடாகிய அடுப்புகளின்மேலேற்றிச் செவ்வாம்பல்மலராகிய நெருப்பை அவ்வடுப்பில்வைத்தது ஊதுகின்றபள்ளஸ்திரீகளின் சிறுபெண்களுடைய விளையாட்டானது வயல்களின் பரப்பிடங்களிலெல்லாம் நிறைந்திருக்கும் என்பதாம்.

இதனால் பள்ளஸ்திரீகளின் சிறுபிள்ளைகள் சிறுசோறடும் விளையாட்டினை விதந்து கூறப்பட்டது. (கஎ)

நிலவளத்தின் சிறப்பு.

காடெல்லாம் கழைக்கரும்பு; காஎல்லாம் குழைக்கரும்பு;
மாடெல்லாம் கருங்குவளை; வயலெல்லாம் நெருங்குவளை;
கோடெல்லாம் மடஅன்னம்; குளமெல்லாம் கடல்அன்ன;
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்.

(எ - து.) அம்மருதநிலத்திலுள்ள காடுகளெல்லாம் கழையாகியகரும்புகளே, சோலைகளெல்லாம் குழையோடுகூடின அரும்புகளே, வயலின் பக்கங்களெல்லாம் நீலோற்பலமலர்களே, வயலிடங்களெல்லாம் நெருங்கியிருக்குஞ் சங்கங்களே, தடாகக்கரைகளிலெல்லாம் இளமைபொருந்திய அன்னக்கூட்டங்களே, தடாகங்களெல்லாம் ஆழ்ந்துள்ள கடல்போன்றனவே, இவ்வாறான சிறப்புடைய நலங்களையெல்லாம் உடைத்தாகலின் ஏனையநாடுகளெல்லாம் நீர்வளம்பொருந்திய இச்சோழநாட்டுக்கு ஒருவாற்றானும் ஒப்புதலை யுடையனவாகா என்பதாம்.

இதனால் ஏனையநாடுகளில் அமையவொண்ணாத பலவளப்பங்களை இச்சோழநாடு மிகவெளிமையாய் பெற்றுளதென்று இந்நாட்டின் வளப்பத்தைக் கூறப்பட்டது. (கஎ)

வேறு.

ஆலை பாய்பவர் ஆர்ப்புறும் ஒலமும்
சோலை வாய்வண் டிரைத்தெழு சும்மையும்,
ஞாலம் ஓங்கிய நான்மறை ஓதையும்,
வேலை ஓசையின் மிக்கு விரவுமால்.

(எ - து.) ஆலைகளில் கரும்புகளைப் பாய்ச்சுகின்றவர்கள் கூவும் ஆரவாரவோசையும், சோலைகளில் வண்டுகள் தேனுண்ணுங்கால் இரைத்தெழுகின்ற வோசையும், உல

ன்கண் மேன்மைபெற்றோங்கிய வேதங்களை ஓதுவதனாலுண்டாகிய ஓசையும் ஆகிய இவ்வோசைகளெல்லாம் சமுத்திரவோசையினும் மேம்பட்டுப் பேரோசையாய் முழங்கும் என்பதாம்.

இதனால் கடலில் மாறிமாறிவரும் பல அலைகளின் மிகுதியால் உண்டாகும் ஓர் ஓசையேயன்றி இதுபோலும் பலவகை ஓசையான் எழும் ஓசை அதுவுடைத்தன்றென்று கடலையிழித்துக் கூறப்பட்டது. அல்லதூஉம் கரும்பாலையி லெழும் ஓசையும் சோலையிலெழும் வண்டினோசையும் அந்தணர்வாய்வழியா யெழும் வேதவோசையும் கடலோசையினும் சிறந்தொலித்தனவென்று ஓசைகளின் சிறப்பினைக் குறித்தது மாமென்க. (கக)

அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
துன்னு மேதி படியத் துதைந்தெழும்
கன்னி வாளை கமுகின்மேல் பாய்வன
மன்னு வான்மிசை வானவில் போலுமால்.

(எ - து.) அன்னப்பறவைகள் கூடிவிளையாடுகின்ற விசாலமாகிய கரையிலையுடைய தடாகங்களில் அங்குலாவும் எருமைக்கடாக்கள் வீழ்ந்து முழுகுவதனால் நெருங்கிமே லெழும்புகின்ற இளமைபொருந்திய வாளைமீன்கள் கமுகமரத்தின்மேல் பாயுந்தோற்ற மானது ஆகாயத்திற்பொருந்திய இந்திரவில்லை யொத்திருந்தது என்பதாம்.

இதனால் எருமைக் கடாக்கள் நீரில்வீழ அந்நீரிலுள்ள வாளைமீன்கள் மேலெ ழுந்து கமுகமரத்திற்பாய்கின்றகாலத்து ஒன்றன்பின்ஒன்றாக அக்கமுகமரந்தொட்டு தடாகமளவும் வெளியிடமின்றி தொடர்ந்திருத்தலால் மேகத்திற்காணப்படும் இந்திர தனுவை ஒத்திருந்ததென்று கூறப்பட்டது. (கக)

காவி னிற்பயி லும்களி வண்டினம்
வாவி யிற்படிந் துண்ணும் மலர்மது
மேவி அத்தடம் மீதெழுப் பாய்கயல்
தாவி அப்பொழி லிற்கனி சாடுமால்.

(எ - து.) சோலைகளிற் சஞ்சரிக்கின்ற மதமயக்கத்தினையுடைய வண்டின் கூட்டங்கள் தடாகங்களிலுள்ள மலர்களில் வீழ்ந்து அவைகளிலுள்ள தேனையுண்ணும், அத் தடாகங்களிற் பொருந்தியிருக்கின்ற கண்டைமீன்கள் மேலெழுந்துபாய்ந்து அவ்வண்டுகள் வசிக்கும் அச்சோலைகளிலுள்ள பழங்களெல்லாம் சிதறும்படித் தாவும் என்பதாம்.

தடாகங்களிலுள்ள கண்டைமீன்கள் தம்மிடத்துள்ள மலர்களின்தேனை சோலையிலுள்ள வண்டுகள்வந்து உண்ணப்பெற்றதனால் அதுபொறாது அவ்வண்டுகள் வாழுஞ் சோலைகளிலுள்ள பழங்கள் சிதறத்தாவும் என்பார் தடம் *** கயல்வண்டினம் வாவியிற் படிந்து மலர்மதுவுண்ண அது கண்டு, அப்பொழிலின்கனி தாவிச்சாடும் என்றார்.

இவ்விரண்டுபாட்டானும் தடாகங்களிலுள்ள கயல்களின் சிறப்புக் கூறப்பட்டது.

வேறு.

காவிநீள் வயலின் ஓங்கித் தன்னிகர் இன்றி மிக்கு
வாலிதாம் வெண்மை உண்மைக் கருவினால் வளத்த ஆகிச்
சூல்முதிர் பசலை கொண்டு சுருள்விரித் தரனுக் கன்பர்
ஆன்ம சிந்தை போல அலர்ந்தன கதிர்கள் எல்லாம்.

(எ - து.) நெற்பயிர்கள் நீண்டவயலினிடத்தில் ஓங்கிவளர்ந்து தனக்குச்சமான மாக ஒரு பொருளுஞ் சொல்வதற்கில்லாமல் உயர்ந்து பரிசுத்தம்பொருந்திய வெண்ணிறத்தைத் தன்னுள்ளேயுள்ள கருவினாலாகின்ற வளப்பத்தினையுடையனவாகி அங்கு

முதிர்வதனாலுண்டாகும் பசலைநிறத்தையடைந்து, பின்னர் கதிர்ச்சுருளைவிரித்து சிவ பெருமானிடத்தில் அன்புசெலுத்துகின்ற அடியார்களின் விசாலமாகிய சித்தத்தைப் போலக் கதிர்களை மலரச்செய்தன என்பதாம்.

அரன்பால் அன்புடை அடியார் நாமார்க்குங் குடியல்லோம் என்றிறுமாக்குந் தன்மையுடையவராகலானும் உள்ளத்துள்ளே வாலறிவுடையவராகலானும் அவ்வறிவினால் பசுமையாகிய பத்திமுதிர்தலையுடைவராகலானும் அம்முதிர்வான் மெய்யரும்புந் தன்மையுடையவராகலானும் அவர்போல் நெற்பயிர் தன்னிகரின்றி ஓங்கிமிக்கும் வாலிதாம் உண்மைக்கருவினால் வளர்தவாகியும் சூன்முதிர் பசலைகொண்டு சுருள்விரித்தனவாகியும் காணப்படலால்—ஆனுக்கன்பர் ஆவினசிந்தைபோல வளர்ந்தன கதிர்களெல்லாம்— என்றார்.

இதனால் அன்பருள்ளம்போல் நெற்பயிர்கள் வளர்ந்தோங்கினவெனக் கூறப்பட்டது. (உக)

பத்தியின் பால ராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமில் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி எல்லாம்.

(எ - து.) பத்தியினால் வழிபட்டவர்களாகி சிவபெருமானுக்கு ஆளாயொழுகுகின்ற அன்பர் ஒருவரையொருவர் கூடுவாராயின் தத்தமக்குள்ளே தலையினால் தாழ்ந்து வணங்குவதுபோல நெற்பயிர்களெல்லாம் நெருங்கிநீண்ட வரிசையினையுடையனவாகிப் பால்முதிர்ந்த கதிராகிய தலைகளை எதிரெதிர் தாழ்த்தி மேலேசொல்லிய அடியார்களின் சிவானுபவத் தன்மையைப்போல விளைந்தன என்பதாம்.

இதனால் அடியார்கள் ஓரிடத்து ஒருங்கே கூடப்பெறுவராயின் எதிரெதிர் ஒருவரையொருவர் வணங்கிச் சிவானந்தானுபவத்தைப் பெற்று மகிழ்ந்திருத்தல்போல நெற்பயிர் வயலின்கண் ஒருங்கேதோன்றி முதிர்ந்த கதிர்களாகிய தலைகளால் ஒன்றோடொன்று எதிரெதிர் தாக்குற்று வணங்கி வாழும்இயல்பினைப் பெற்றுள்ளனவென்று கூறப்பட்டது. சாலி எல்லாம் மொய்த்தநீள் - எனக்கூட்டுக.

பத்தியின் பாலராகி பரமனுக்காளாம் அன்பர், தத்தமில் கூடினார்கள் தலையினால் வணங்குமாபோல் என்றதனால் பத்திநெறியை அறியும்வகையற்று முத்திநெறியை யறிந்தார்போன்றமூர்க்கர் தத்தமில்கூடுவராயின் வணங்காது இறுமாந்து வாய்ப்பறை சாத்தி நிற்பரென்று அவரது இழிந்தஞானத்தையும் நெற்பயிர் உவமானத்தால் விளக்கியதூஉம் ஆமென்க. (உஉ)

அரிதரு செங்நெல் சூட்டின் அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்ப்பெரும் பொருப்பு யர்ப்பார்;
விரிமலர்க் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு வைப்பார்.

(எ - து.) மள்ளர்களிற் சிலர் அரிவாளினால் அரியப்பட்ட செந்நெல்லரிகளால் ஒன்றின்மேலொன்றாக அடுக்கப்பட்ட சுமைகளை மலைபோலக் குவிப்பார்கள். சிலர் அவ்வயல்களில் பலவகை மீன்களையும் பரவிய பெரிய மலைபோலக் குவிப்பார்கள். சிலர் அவ்வயல்களில் ஆசையோடுபிடித்த தவழும் சுரிந்த சங்குகளின்ற ஒளிபொருந்திய முத்துக்களை பெரியமலைபோல வுயர்த்துவார்கள். சிலர் நறுமணங்கமழும் பலவகையான மலர்க்கூட்டங்களைத் தேனொழுகிய அருவிம்பொழிந் தோடுகின்ற மலைபோலக் குவிப்பார்கள் என்பதாம்.

இதனால் செந்நெற்பெருக்கமேயன்றி அவ்வயல்களில் மீன்களின்பெருக்கமும் முத்துக்களின்பெருக்கமும் மலர்களின்பெருக்கமும் உடையனவென்று கூறப்பட்டது. (உ௩)

சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்த்துக்
காலிரும் பகடு போக்கும் கரும்பெரும் பாண்டில் ஈட்டம்
ஆலிய முகிலின் கூட்டம் அருவரைச் சிமயச் சாரல்
மேல்வலங் கொண்டு சூழும் காட்சியின் மிக்க தன்றே.

(எ - து.) நெல்லரியின் கற்றைகள்பொருந்திய நெற்போராகிய பெரியமலையினது உச்சியைச் சாய்த்து அப்போரைமிதிக்கும்படி வலிந்தகால்களையுடைய பெரிய எருமைக் கடாக்களோடு சேர்த்து நடாத்துகின்ற கரியஎருதுகளின் பெரியகூட்டங்கள் அசைதலையுடைய மேகக்கூட்டமானது அளவிடுதற்கரிய மலையினது சிகரத்தின்மேல் வலமாகச்சூழ்ந்து வருகின்ற காட்சியினும் மிகச்சிறந்திருந்தது என்பதாம்.

இதனால் மலைபோலுயர்ந்திருக்கும் நெற்போரைச்சாய்த்து அதனைமிதிக்கும்படி எருமைக்கடாக்களோடு எருதுகளையும் ஒன்றாகப்பிணைத்துச் சுற்றிவரச்செய்யும் தோற்றமானது உயர்ந்தோங்கியிருக்கும் மலையின்சிகரத்தை மேகங்கள் சூழ்ந்துவருதலை யொக்குமெனக் கூறப்பட்டது. (உச)

வைதெரிந் தகற்றி ஆற்றி மழைப்பெயல் மானத் தூற்றிச்
செய்யபொன் குன்றும் வேறு நவமணிச் சிலம்பும் என்னக்
கைவினை மள்ளர் வானங் கரக்கஆக் கியநெற் குன்றால்
மொய்வரை உலகம் போலும் முளரிநீர் மருத வைப்பு

(எ - து) கைத்தொழிலில் வல்லவர்களாகிய உழவர்கள் (எருமைக்கடாக்களாலும் எருதுகளாலும் நெற்போர் மிதிக்கப்பட்டவுடனே) வைக்கோல்களை ஆராய்ந்து நீக்கிப் பின், அந்நெல்லின்கணுள்ள பதர்கள் நீங்கும்படி மழைத்துளிகள் துளிப்பதுபோல வாரி மேலெடுத்துத் தூற்றிச் சிவந்தபொன்மலையும் அதற்குவேறாகிய நவரத்னங்களாலாகிய மலைகளும்போல விண்ணுலகளவும் மறையும்படி யுயர்த்திய நென்மலைகளினால் தாமரைமலர்களையுடைய நீர்வளம்பொருந்திய மருதநிலமானது நெருங்கிய மலைகளையுடைய குறிஞ்சிநிலத்தையொத்திருக்கும் என்பதாம்.

கைவினைமள்ளர் வைதெரிந்து அகற்றியாற்றி என்றும், முளரிநீர் மருதவைப்பு வானங்கரக்க ஆக்கிய நெற்குன்றால் மொய்வரை யுலகம்போலும் என்றுங்கூட்டுக.

இதனால் மருதநிலத்தில் நென்மலைகளிருத்தலால் அந்நிலம் குறிஞ்சிநிலமும் ஆயிற்றென்று கூறப்பட்டது. (உரு)

குடிகள்தங்கள் கடனைச்செலுத்துமுறை.

அரசுகொள் கடன்கள் ஆற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுள் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையும் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம் நீடி மலர்ந்துள பதிகள் எங்கும்.

(எ - து) (அங்ஙனந்தொகுத்தநெற்போர்களுள்) அரசனால் கொள்ளப்படும் ஆறிலொருபங்கை அவனுக்குக்கொடுத்து மிகுந்த ஐந்துபங்கையும் தாங்கள்கொண்டு அதனாற் செய்யத்தகுவனவாகிய தருமங்களை விரும்பிச்செய்து தாம்தாம் வணங்கத்தகும் தெய்வங்களைப்பூசித்து பெரியோர்களையும் விருந்தினரையும் சம்பந்தவிசேடத்தால் வந்து கூடுவோராகிய உறவினரையும் பாதுகாத்து இம்முறையால் புகழ்பெற்று விளங்குகின்ற குடிகள் அதிகரித்து அக்குடிகள் வாசஞ்செய்தற்கு அமைந்த மலைபோன்ற மாளிகைகள் அச்சோழநாடெங்கும் உயர்ந்து விளங்கிக்கொண் டிருப்பன என்பதாம்.

இதனால் சோழநாட்டிலுள்ள இல்வாழ்க்கையுடைய குடிகள் தத்தமக்குவிதித்த அறங்களைக் கைக்கொண்டு தவறாது செய்பவரென்று அவர்களின் சிறப்புக்கூறப்பட்டது. ()

கரும்படு களமர் ஆலைக் கமழ்நறும் புகையோ மாதர்
சுரும்பெழ அகிலால் இட்ட தூபமோ யூப வேள்விப்
பெரும்பெயர்ச் சாலை தோறும் பிறங்கிய புகையோ வானின்
வரும்கரு முகிலோ சூழ்வ மாடமும் காவும் எங்கும்.

(எ - து) மாளிகைகள் சோலைகள் ஆகிய இவ்விடங்களிலெல்லாம் காணப்படும் புகையின்கூட்டம் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சுகின்ற மள்ளர்களினது ஆலையிருக்கும் இடத்திலிருந்து தோன்றிய மணம்பொருந்திய புகையோ, பெண்கள் தங்கள்கூந்தலில் மொய்த்திருக்கும் வண்டுகளெழும்படி ஊட்டும் அகிற்கட்டைகளின் புகையோ, யூபஸ்தம்பங்களைநாட்டிச் செய்கின்ற பெரிய யாகசாலைகளிலிருந்து வெளிப்பட்டுவிளங்குகின்ற புகையோ ஆகாயத்தின்கண் வரும் கறுத்தமேகமோ (இஃதின்னதென்று வேறுபாடறியக்கூடவில்லை) என்பதாம்.

இதனால் மாடங்களில் மகளிர் கூந்தலுக்கூட்டும் புகை கரும்பாலையிலெழும் புகைபோல் எழுமென்றும், யாகசாலையிலெழும் புகை வானிற்பரந்து சோலையின்கண் தவழும் மேகங்கள்போல் எழுமென்றுங் கூறப்பட்டன. அல்லதூஉம் இப்புகைகள் ஒன்று சுருங்கி ஒன்றுபெருக்கமாய்க் காணப்படாமல் ஒத்தெழுஞ் சிறப்புடையன வென அதிசயித்துக் கூறியதுமாம். (௨௭)

நாளிகே ரம்செ ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்;
கோளிசால் அம்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்;
நீள்இலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும்.

(எ - து) அச்சோழநாட்டில் எவ்வெவ்விடங்களிலும் தென்னமரங்களும் செருந்திமரங்களும் நல்லமலர்கள் நெருங்கியுள்ள நாரத்தைமரங்களும் பூவாதுகாய்க்கின்ற மரங்களும் பச்சிலைமரங்களும் குளிர்ந்தமலரையுடைய குராமரங்களும் பருத்துயர்ந்த பனைமரங்களும் சந்தனமரங்களும் குளிர்ச்சிபொருந்திய மலர்களையுடைய குங்குமமரங்களும் நீண்டிருக்கும் இலைகளுள்ள வஞ்சிமரங்களும் சொர்ணவிருக்ஷங்களும் நிறைந்தமலர்கள் பொருந்தியகோங்கமரங்களும் வேற்றுமையின்றி நிறைந்திருக்கின்றன என்பதாம். (௨௮)

சூதபா டலங்கள் எங்கும்; சூழ்வளை ஞாழல் எங்கும்;
சாதிமா லதிகள் எங்கும்; தண்டளிர் நரவம் எங்கும்;
மாதவி சரளம் எங்கும்; வகுளசண் பகங்கள் எங்கும்;
போதவிழ் கைதை எங்கும்; பூகபுன் னாகம் எங்கும்.

(எ - து) (மேற்கூறியவைகளையன்றி) எவ்வெவ் விடங்களிலும் மாமரங்களும், பாதிரிமரங்களும், சூழ்ந்திருக்கின்ற சுரபுன்னைமரங்களும், ஞாழல்களும், சிறுசண்பகங்களும், மல்லிகைகளும், குளிர்ச்சிபொருந்திய தளிர்களையுடைய அனிச்சமரங்களும், குருக்கத்திக் கொடிகளும், சாளமரங்களும், மகிழமரங்களும், சண்பகமரங்களும், மலர்கள்விரிந்த தாழைமரங்களும் கமுகமரங்களும் புன்னைமரங்களும் காணநிறைந்திருக்கின்றன என்பதாம்.

இவ்விரண்டு திருப்பாட்டாலும் சோழநாடு இன்னவிடங்களில் இன்னவிருக்ஷங்களைக்காணலாமென்பதின்றி எவ்வெவ்விடங்களிலும் விருக்ஷபேதங்களெல்லாவற்றையும் ஒருங்கேகாணப்படுஞ் சிறப்புடைத்து என்றுகூறப்பட்டது. (௨௯)

பலவகை வளங்களின் சிறப்பு.

மங்கல வினைகள் எங்கும்; மணஞ்செய்கம் பலைகள் எங்கும்;
பங்கய வதனம் எங்கும்; பண்களின் மழலை எங்கும்;

பொங்கொளிக் கலன்கள் எங்கும்; புதுமலர்ப் பந்தர் எங்கும்;
செங்கயல் பழனம் எங்கும்; திருமகள் உறையுள் எங்கும்.

(எ - து) எப்பக்கங்களினும் மங்கலத்தொழில்களும், கலியாணஞ் செய்வதனாலுண்டாகின்ற பலவாத்தியங்களின் ஓசைகளும், அவ்விடங்களில் மங்கையருடைய தாமரை போன்ற முகங்களும் அம்மங்கையருடைய பண்ணோடிசைந்த மழலைச்சொற்களும், அவர்கள் அணிந்திருக்கும் ஒளிவீசுகின்ற ஆபரணங்களும், அவர்கள் உலாவுதற்குரிய புதியமலர்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தர்களும், செவந்த கண்டைமீன்கள் பொருந்திய வயல்களும், இலக்குமிதேவி வாசஞ்செய்யத்தக்க இடங்களுமாகவே காணப்பட்டு விளங்குகின்றன என்பதாம். (௩0)

மேகமும் களிறும் எங்கும்; வேதமும் கிடையும் எங்கும்;
யாகமும் சடங்கும் எங்கும்; இன்பமும் மகிழ்வும் எங்கும்;
யோகமும் தவமும் எங்கும்; ஊசலும் மறுகும் எங்கும்;
போகமும் பொலிவும் எங்கும்; புண்ணிய முனிவர் எங்கும்.

(எ - து) (மங்கலவோசை முதலியனவேயல்லாமல்) எவ்வெவ்விடங்களிலும் மேகக் கூட்டங்களும் யானைகளும் வேதங்களும் அவ்வேதமோதுவோர் கூட்டங்களும் வேள்விகளும் அவ்வேள்விக்கு அங்கங்களாயுள்ள சடங்குகளும் இன்பமும் அவ்வின்பத்தால் உண்டாகுஞ் சந்தோஷமும் அட்டாங்கயோகமுதலிய யோகங்களும் தவங்களும் ஊஞ்சலாடுதலும் அவைகளையுடைய வீதிகளும் பலவகையாயுள்ளபோக இன்பங்களும் அவற்றாலுண்டாகிய உள்ளக்கிளர்ச்சியும் புண்ணியசொரூபிகளாகிய முனிவர்களும் நிறைந்திருக்குஞ் சிறப்புடையனவாயிருக்கும் என்பதாம்.

இதனால் மேகத்திற்கும் யானைக்கும், வேதத்திற்கும் அதனையோதுகின்றவர்க்கும், யாகத்துக்கும் யாகச்சடங்கிற்கும், இன்பத்திற்கும் மகிழ்விற்கும் யோகத்திற்கும், தவத்திற்கும், ஊசலுக்கும், மறுகிற்கும் போகத்திற்கும் பொலிவிற்கும், புண்ணியத்துக்கும் முனிவர்கட்கும் ஒற்றுமையுடைத்தாம் என்னும் உண்மையை யெடுத்துக் காட்டியவாறுமென்க. (௩௧)

பண்தரு விபஞ்சி எங்கும்; பாதசெம் பஞ்சி எங்கும்;
வண்டறை குழல்கள் எங்கும்; வளர்இசைக் குழல்கள் எங்கும்;
தொண்டர்தம் இருக்கை எங்கும்; சொல்லுவ திருக்கை எங்கும்;
தண்டலை பலவும் எங்கும்; தாதகி பலவும் எங்கும்.

(எ - து) (மேலேசொல்லிய பொலிவுகளேயல்லாமல்) எவ்வெவ்விடங்களிலும் பலவகைப்படும் பண்களைப் பாடுதற்குரிய ஓசையைத்தரும் வீணைகளும், மங்கையாது பாதங்களில் பூசியுள்ள செம்பஞ்சுக்குழம்புகளின் சுவடுகளும், வண்டுகள் முழங்குகின்ற அம்மங்கையாது கூந்தல்களும், இன்னிசைபொருந்திய புள்ளாங்குழல்களும், சிவனடியார்களின் திருமடங்களும், வேதங்களை ஓதுகின்ற இடங்களும், (இவைகளேயன்றி இடைஇடையே) பலசோலைகளும் ஆத்திமரங்களும், பலாமரங்களும் பொலிவுபெற்று விளங்கும் சிறப்புடைத்தாயிருக்கின்றன என்பதாம்.

இருக்கைச் சொல்வது எனக்கூட்டுக.

பண்தருவிபஞ்சிஎங்கும் வளர்இசைக் குழல்கள்எங்கும் என்றதனால் அவைகட்குரியார் மங்கையராகலான் பாதசெம்பஞ்சு எங்கும் வண்டறை குழல்களெங்கும் என்றும், தொண்டர்தம் இருக்கை சொல்லுவதுஇருக்கை என்றதனால் அவர்கட்குரிய இடங்கள் இவையாமென்பதும் அறிய தண்டலைபலவுமெங்கும் தாதகிபலவுமெங்கும் என்றும் (௩௨)

மாடுபோ தகங்கள் எங்கும்; வண்டுபோ தகங்கள் எங்கும்;
பாடும்அம் மனைகள் எங்கும்; பயிலும்அம் மனைகள் எங்கும்;
நீடுகே தனங்கள் எங்கும்; நிதிநிகே தனங்கள் எங்கும்;
தோடுசூழ் மாலை எங்கும்; துணைவர்சூழ் மாலை எங்கும்.

(எ - து.) (மேலேசொல்லியவைகளேயன்றி) எவ்வெப் பக்கங்களிலும் யானைக் கன்றுகளும், மலர்களில் வாசஞ்செய்யும் வண்டின்கூட்டங்களும் இசைபாடுகின்றவர்களுடைய வீடுகளும், சிறுபெண்கள் விளையாடுகின்ற அம்மனைக்காய்களும், மேல்மாளிகைகளில் கட்டப்பட்டு விளங்கும் நீண்ட கொடியாடைகளும், பொக்கிஷசாலைகளும், இதழ்களோடு பொருந்திய மலர்மாலைகளும், தத்தந் துணைவர்களோடு சூழ்ந்து வருகின்றவர்களுடைய வரிசைகளும் காணப்படுந் தன்மையுடைத்தனவா யிருக்கின்றன என்பதாம்.

இதனால் மதநீர்மணத்தைக்கருதி யானைகளோடு வண்டுக்கூட்டங்களும், பாடும்மங்கையரோடு அம்மனையாடும் பேதையர்களும், நிகேதனங்களிருக்கும் இடங்களில் நீடுகேதனங்களும், பூமாலைகள்விற்கும் இடங்களில் அதனைச் சூடுதற்குரிய காளையர் தத்தம் துணைவரோடும் எங்கும் காணவிருக்குமென்று கூறப்பட்டன. (௩௩)

வீதிகள் விழவின் ஆர்ப்பும் விருந்தினர் விருந்தின் ஆர்ப்பும்
சாதிகள் நெறியில் தப்பா தனயரும் மனையில் தப்பா
நீதிய புள்ளும் மாவும் நிலத்திருப் புள்ளும் ஆவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தாம் அஞ்சும்.

(எ - து.) வீதிகளிலெல்லாம் திருவிழாக்களால் உண்டாகும் ஓசையும், விருந்தினர்க்கு விருந்திடுவதினால் உண்டாகும் ஓசையும் நீங்காவாம். அஃதேயுமன்றி அந்தணர் முதலிய நான்குவருணத்தவரும் தத்தமக்குக் கூறியிருக்கும் ஒழுக்கத்தினின்றுந் தவறார். ஒவ்வொரு வீடுகளிலும் சிறுவர்களும் தவறார். பறவைகளும் விலங்குகளும் தத்தமில் விரோதங்களைக்கொண்டு வாழா. அந்நாட்டிலுள்ளார் சொல்வன ஐந்தெழுத்தேயாம். அதனால் யாவரிடத்தும் பொருந்தவரும் பிணிகள் அவர்களிடம் வரப் பயப்படும். வேண்டுவனவற்றைக் கொடுக்குங் காமதேனுவும் அந்நாட்டினின்று நீங்காதிருக்க நினைக்கும் என்பதாம்.

புள்ளும்மாவும் நீதிய, ஓதியஎழுத்தாம் அஞ்சும், (அதனால்) உறுபிணிவரத் தாம் அஞ்சும் ஆவும் நிலத்து இருப்பு உள்ளும் எனக்கொண்டு கூட்டுக.

இதனால் வேதநெறியையும் சைவநெறியையும் அந்நாட்டிலுள்ளார் கைவிடாது ஒழுகுஞ்சீலத்தரென்றும், அவ்விரண்டும் உடைமையான் விழவினார்ப்புக்குரிய பொருட்பேறும், எழுபிறப்புந்தீயவை தீண்டாமைக்கு மக்கட்பேறும் உடையராயினரென்றும் கூறப்பட்டன. (௩௪)

நற்றமிழ் வரைப்பின் ஓங்கு நாம்புகழ் திருநா டென்றும்
பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந் தினிது காக்கும்
கொற்றவன் அநபா யன்பொன் குடைநிழல் குளிர்வ தென்றால்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்பல் ஆமோ?

(எ - து.) நம்மால்புகழப்படும் சோழநாடாகிய திருநாடானது எக்காலத்தும் நல்ல தமிழ் மொழியை தமக்கு எல்லையாகக்கொண்டு ஓங்குந்தன்மையை யுடையது, அஃதேயுமன்றி பொன்மலைபோன்ற தனதுபுயவலியால் இவ்வுலகத்தைப் பகையொழித்து இனிதாகக் காக்கவல்ல அநபாயச் சோழமகாராஜாவினது அழகிய வெண்கொற்றக் குடைநிழற்கீழ் குளிர்ந்திருக்குந் தன்மையுடையது என்று சொன்னால் அச்சோழ

நாட்டின் பெருமையை நம்மால் அளவுபடுத்திச் சொல்லக்கூடுமோ. (ஒருவாற்றானுங் கூடாது) என்பதாம்.

எந்நிலங்களையும் தனக்கு எல்லையாகக்கொள்ளாத தனிச்சிறப்புடைய தமிழை தனக்கெல்லையாகவும், தனது புயவலியினால் பகைவரைப்போக்கி உலகினை ஐவகையா யுள்ள பயங்களினின்று நீக்கி இனிதாகக் காக்கவல்ல வெற்றிப்பாட்டையுடைய அனபா யச் சக்கரவர்த்தியினது வெண்கொற்றக் கொடையினையே தனக்கு நிழல்செய்யுங் கொ டையாகவும் பெற்றுள்ளதாயின் அச்சோழநாட்டின் பெருமையை எனது நாவொன்றி னால் சொல்லப்படும் அளவுடைத்தாமோ என்று அந்நாட்டின் அளவுப்படா வளப்பங் களையும் அந்நாட்டில் ஓயாதிருக்கும் மங்கலவிசேடங்களையும், வேதவோசைகளின் மிகு தியையும், யாகசாலைகளின் பெருக்கையும், அந்நாட்டினர் செய்யும் அறத்தின் மேம் பாட்டையும், வைதிகநெறி சைவநெறி என்னும் இவ்விரண்டுநெறிகளைக் காக்கும் வன் மையினையும், அவ்வன்மையால் பிணிமுதலிய துன்பங்களற்று மக்கட்பேறுமுதலிய பேறுகளைப் பெற்றுவாழும் சிறப்பினையும், என்னுள்ளத்தெழும் ஆசையினால் ஒருசிறிது சொன்னேனென்று ஆசிரியர் சேக்கிழார் முழுவதும் சொல்லிமுடித்தனரென்க. (ங௧)

செல்வவயற்கழனித் தென்றிருவாரூர்—எனவும், செந்நெல்வயற்கழனித் தென் றிருவாரூர்—எனவும், அள்ளலங்கழனிப்பழனத்தணியாரூர்—எனவும், சேறணிதண் கழனித்தென்றிருவாரூர்—எனவும், அள்ளல்நீர்வயல்ஆரூர்—எனவும், சேலுகளும்வயல் ஆரூர்—எனவும், தெண்டிரைநீர்வயல்புடைசூழ் திருவாரூர்—எனவும், அன்னம்வைகும் வயற்பழனத்தணியாரூர்—எனவும், இடையோடெத்திரு செங்கமலவயல்புடைசூழ் திரு வாரூர்—எனவும், குருகுபாயக்கொழுங்கரும்புசா றருகுபாயும்வயல் அந்தணாரூர்—என வும், அரும்பவிழ்தண்பொழில்சூழ் அணிஆரூர்—எனவும், பொற்பமரும் பொழில்ஆரூர் —எனவும், போதியலும் பொழிலாரூர்—எனவும் மடற்குலவுபொழில்ஆரூர்—எனவும், இந்துநுழைபொழில்ஆரூர்—எனவும், புகழ்நிலவுபொழில்ஆரூர்—எனவும், இருளியநற் பொழில்ஆரூர்—எனவும், மல்லிகைமாடநீடு மருங்கொடுநெருங்குமல்லி வெண்டியங்கு மாரூர்—எனவும், விரும்பியகமழும் புன்னைமாதவித் தொகுதியென்றும், அரும்புவாய் மலரும் ஆரூர்—எனவும், மட்டவிழ் சோலையாரூர்—எனவும், தேனேறுமலர்ச்சோலைத் திருவாரூர்—எனவும், அன்றின்முட்டாதடையுஞ் சோலையாரூர்—எனவும், செந்தண்பவ ளந்திகழுஞ்சோலை யிதுவோதிருவாரூர்—எனவும், ஆடம்பேடையாடுஞ்சோலையாரூர்— எனவும், செருந்திச்செம்பொன்மலருஞ்சோலை யிதுவோதிருவாரூர்—எனவும், சோலை சூழ்ந்ததென்றலார் மணங்கமழும்திருவாரூர்—எனவும், தெங்குலாவு சோலைநீடுதேனு லாவுசெண்பக மங்குலாவியண்டநாறுமந்தணாரூர்—எனவும், தெங்கினூடுபோகிவாழை கொத்திருத்துமாவில்மேலங்கண்மந்திமுந்தியேறு மந்தணாரூர்—எனவும், செருந்திஞா ழல் புன்னைவன்னி செண்பகஞ்செழுங்குராவரும்புசோலை வாசநாறுமந்தணாரூர்—என வும், துள்ளிவாளைபாய்வயற்சுரும்புலாவு நெய்தல்வாய் அள்ளலூறையரால் வாழுமந்தணா ரூர்—எனவும், மறித்துமண்டுவண்டல்வாரி மிண்டுநீர்வயற்செநெல் அறுத்துவாயசும்பு பாயும் அந்தணாரூர்—எனவும், தமிழ்வேதங்களில் சிறந்தெடுத்தோதியிருக்குமாயின் அச் சிறப்புத்தோன்ற—மற்றதன் பெருமை நம்மால் விளம்பலாமோ—எனக்கூறினரென்க.

திருநாட்டுச்சிறப்பு முற்றிற்று.

ஆஉ திருப்பாட்டு அகு.

திருச்சிற்றம்பலம்.

மநுநீதிகண்ட புராணம்.

திருவாரூர் நகரச்சிறப்பு.

சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னும் மாமல ராள்வழி பட்டது;
வன்னி ஆறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர்.

(இ - ள்.) முற்கூறிய சோழநாட்டில் வன்னியும் கங்கையும் சந்திரனும் பொதிந்து கிடக்கும் செவந்த சடைமுடியா ராகிய சிவபெருமான் வீற்றிருக்கும் திருவாரூர் என்னும் திருநகரமானது, பழமையினும் பழையது; அங்கு நிலைபெற்றிருக்கும் இலக்குமிதேவி வழிபாடு செய்யவும்பெற்றது என்பதாம்.

சொன்ன நாட்டிடை, வன்னியாறு மதிபொதி செஞ்சடைச் சென்னியார் திருவாரூர்த் திருநகர் தொன்மையின்மிக்கது எனக்கூட்டுக.

தொன்மையின் மிக்கது - என்றதை - "ஒருவனாய் உலகேத்த நின்றநாளோ" என்றற்றொடக்கத்தனவாகக் கூறப்படும் திருவாரூர்த் திருத்தாண்டகத்தானும், மாமலராள் வழிபட்டது என்றதனை - "திருவினாள் சேர்வதற்கு முன்னோபின்னோ" என்ற திருத்தாண்டகத்தானும், வன்னியாறு மதிபொதிசெஞ்சடைச் சென்னியார் திருவாரூர் - என்றதை - "வன்னி கொன்றை மதியொடு கூவிளம், சென்னிவைத்த பிரான் திருவாரூர்" எனவும், "விண்ட வெள்ளெருக் கலந்த வன்னிகொன்றைமத்தமும், இண்டைகொண்ட செஞ்சடைச் சிவ னிருந்தவூர், *** ஆரூர் என்பதே" எனவும், "கங்கைபொங்கு செஞ்சடைக் கரந்தகண்டர்" எனவும், "நீர்த்ததநீர் மல்குசென்னி அறவனூரும்" எனவும் "நீரைச் செஞ்சடைவைத்த நிமலனூர் *** உறையும அணியாரூர்" எனவும், "வெள்ளந் தாங்கு விரிசடை வேதியன் *** ஆரூர் எனவும், "ஆற்றினையுஞ் செஞ்சடைமேல் வைத்தார்போலும் அணியாரூர்" எனவும், "கடிகமழும் புன்சடைமேற் கங்கைவெள்ள ஆற்றானை யாரூரில் அம்மானை" எனவும், "நீரேறு சடைமுடியெந் நிமலன்" எனவும், "பனிமாமதிச் சென்னியான் - தென் திருவாரூ ரெம்மடிகள்" எனவும், "பிறையும் அரவும் புனலும் பிறங்கியசெஞ்சடைவைத்த இறைவனிருப்பதும் ஆரூர்" எனவும் வரும் திருவாரூர்த்தேவாரங்களானும், திருவாரூர் (திரு-ஆர் - ஊர்) என்றதை "திருப்பொலியாரூர்" (எனவே கண்டோரால் விரும்பப்படும் தன்மைநோக்கம் பொலிந்துப் பொருந்தியிருக்கும் ஊர்) "எனவும், "திருவுடையான் திருவாரூர்" எனவும்வரும் தேவாரங்களானும் காண்க.

சிறப்பெல்லாம் திருமகள் வசிக்கப்பெற்றதனால் உண்டாயிற்றென்று கூறுவதே உலகியற்கையாகலான் அதனைமறுத்தற்குச் சிறப்பெல்லாம் முன்னமே யுடையதென்னும் அவ்வுண்மைதோன்ற - திருவாரூர்த் திருநகர் தொன்மையின்மிக்கது—என்று முன்னரும், மன்னுமாமலராள் வழிபட்டது என்று பின்னருங் கூறினார்.

இதனால் தொன்மையின்மிக்கது என்றும், மாமலராள் வழிபட்டது என்றும், வன்னியாறு மதிபொதி செஞ்சடையென்றும் திருவாரூர் என்றும்; இம்மூதற்றிருப்பாசுரத்தானே எடுத்தாண்டது தமிழ்வேதத்தில் திருவாரூரைச் சொல்லியகாலத்து தொன்னகர் முதலிய காரணங்களை யெடுத்தோதியிருத்தலின் அம்மங்கலங்காரிதியென்க. (க)

ஓசைகளின் சிறப்பு.

வேத வோசையும் வீணையின் ஓசையும்
சோதி வானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடன் மணிமுழ ஓசையும்
கீத ஓசையு மாய்க்கிளர் உற்றதே.

(எ - து.) திருவாரூர்த் திருநகரத்தில் வேதங்களை யோதுவதனால் உண்டாகும் ஓசையும், வீணைபாடுவதனால் உண்டாகும் ஓசையும், நரைதிரைமூப்பற்று விளங்கும் ஒளி பொருந்திய தேவர்கள் தோத்திரஞ்செய்வதனால் உண்டாகும் ஓசையும், உருத்திரகணிகையர் செய்யும் நடனத்துக்கிசைய முழக்கும் அழகிய மத்தளத்தின் ஓசையும், சங்கீத கானத்தால் எழும் ஓசையும் ஒன்றாய்க்கூடி முழங்கிற்று என்பதாம்.

"கண்டாரால் விரும்பப்படும் தன்மைநோக்கம்" உடைத்தானதே திரு எனப்படும் ஆதலால் அத்திருவானது பொருந்தியிருக்குந் தன்மையுடைததானது இவ்வூர் என்னும் பொருளைக்கொண்டது திருவாரூர்த்திருநகரம் என்று அறிய முதற்றிருப்பாட்டில் கூறியபடி, கண்டாரால் விரும்பப்படுவனவாகிய தன்மைகளெல்லாம பதினொரு திருப்பாட்டான் சொல்லத்தொடங்கி, அவற்றுள் முன்னர் இரண்டுபாட்டான் பலவகை ஓசைகளின் சிறப்பும், ஐந்து பாட்டான் பரவையார் அவதாரஞ்செய்த வீதியின்சிறப்பும், ஓர் பாட்டான் - கடைவீதியின் சிறப்பும், ஓர்பாட்டான் தியாகேசன் உலாப்போதும் வீதியின் சிறப்பும், ஓர்பாட்டான் - ஆதிசைவர் முதலாயினோர் இருக்கும் இடங்களின் சிறப்பும், ஓர் திருப்பாட்டான் சிறப்பெல்லாம் ஒருங்கேயுள்ள இத்திருவாரூரானது நிலமகட்கும் மலர்மகட்கும் திலகமாகவும் பீடமாகவும் இருக்கும் சிறப்பும் விதந்துரைத்தனரென்க.

வீணையின் ஓசையும் என்றதை—"பாடுவார்தும்புருவுநாரதாதி என்றும், இயாழ் முயன்றிருக்கும் ஆரூர்என்றும், சோதிவானவர் தோத்திரவோசையும் என்றதை-"அண்டவானவர்போற்றுந்திருவாரூர்"—என்றும், "வானவர்கள் துதிசெய்தேத்தும் திக்கெலாநிறைந்தபுகழ்த்திருவாரூர்" என்றும், "பரவுவார்அமரர்களும் அமரர்கோனும்" என்றும், "வானவர்கண்முற்றுங்கூடி முடியாலுறவணங்கி முற்றம்பற்றியமுதுதிருவடிக்கே பூசைசெய்ய விருக்கின்றஞானார்போலும் ஆரூரதாமே' —என்றும், மாதராடன்மணிமுழவோசையும் கீதவோசையும் என்றதை "தடமுலைக்கண் அஞ்சொலார் பயிலும்ஆரூர்" என்றும், "நிறைத்தமாளிகைத் திருவிழோ அன்னோர்கள் வெண்ணகை அரத்தவாய் மடந்தைமார்கள் ஆடும் ஆரூர்" என்றும், கெண்டை கொண்டலர்ந்த கண்ணினார்கள் கீதவோசைபோய் அண்டர்அண்டமூடறுக்கும் அந்தணாரூர்" என்றும் தேவாரங்களில் விதந்து ஓதப்பட்டிருக்கின்றமை காண்க.

இதனால் வேதவோசை என்றதனால்—வேதமே புற்றுருவங்கொண் டிருத்தலையும், வீணையின் ஓசை என்றதனால்—திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார் தியாகேசன் ஆணையினால் தம்மருகே என்றும் வீணைவாசித்திருக்கச் செய்ததனையும், வானவர் தோத்திரவோசை என்றதனால் தேவர்கள் தியாகேசரது பிரிவாற்றாமையால் மனம்வருந்திப் பேரோசை யிடுவதையும், மணிமுழவோசை என்றதனால் தியாகேசனுடன் வந்த முழவின்சிறப்பையும், மாதர்ஆடல் கீதஓசையும் என்றதனால் அரம்பை முதலானவர் பாடல் ஆடல்களையுங் குறித்ததாமென்க. (உ)

பல்வி யங்கள் பரந்த ஒலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேரொலி
மல்லல் யானை ஒலியுடன் மாவொலி
எல்லை யின்றி எழுந்துள எங்கணும்.

(எ - து.) செல்வநிறைந்துள்ள வீதிகள் எங்கணும் பலவகையாகிய வாத்தியங்களினின்றும் பரந்தெழுந்துண்டாகும் ஒலியோடு ஓசைமிக்க மணிகள் நிறைந்துள்ள தேரின் ஒலியும், மதவளமிக்க யானைகளின் ஒலியோடு குதிரைகளின் ஒலியும் எவ்விடங்களிலும் இவ்வளவினவென்று சொல்லும் சொல்லளவின்றி ஒலித்துள்ளன என்பதாம்.

செல்வீதி எங்கணும் பல்லியங்கள்பரந்த எனக்கூட்டுக.

பல்லியங்களின் சிறப்பை—"கொக்கரைகுழல் வீணைகொடுகொட்டி என்றும், தேரொலியின் சிறப்பை, தேரூருநெடுவீதி" என்றும், தேவாரத்தில் ஓதியுள்ளமைகாண்க.

இத்திருப்பாடலால் முற்பாடலில் மேலுலகத்தினின்றும் வந்தவைகளின் சிறப்பைக்குறித்ததுபோல் நகரத்தில் அமைந்துள்ள சிறப்பையுங் குறித்ததென்க. (ரு)

பரவையார் வீதியின் சிறப்பு.

மாட மாளிகை சூளிகை மண்டபம
கூட சாலைகள் கோபுரம் தெற்றிகள்
நீடு சாளர நீடரங் கெங்கணும்
ஆடன் மாதர் அணிசிலம் பார்ப்பன.

(எ - து.) மேல்வீடுகளை யுடைய மாளிகைகளும், மண்டபங்கள் உள்ள செய்குன்றுகளும், விசாலமுள்ள கூடங்கள் பொருந்திய வீடுகளும், திண்ணைகள் உள்ள கோபுரங்களும், நீண்ட பலகணிகளையுடைய பெரிய சபைகளும் ஆகிய எல்லாவிடங்களிலும் நாட்டியஞ்செய்கின்ற மங்கையர்கள் அணிந்திருக்கின்ற சிலம்புகள் ஆரவாரிப்பன என்பதாம்.

மாடமாளிகை என்றதை "செம்செய் மணிமாடத் திருவாரூர்" "சீரேறு மணிமாடத் திருவாரூர்" என்றும், நீடரங்கு என்றதை—"பஞ்சியாரு மெல்லடிப் பணைத்தகொங்கை நண்ணிடையஞ்சொலார் அரங்கெடுக்கும் அந்தணரூர்" என்றும் தேவாரத்தில் சிறப்பித்துள்ளமைகாண்க.

மாடமில்லாமாளிகை, மண்டபமில்லாச்சூளிகை, கூடமில்லாச்சாலை, தெற்றிகளில்லாக் கோபுரம், சாளரமில்லா அரங்கம் ஆகிய இவை சிறப்புடைத்தன்றாகலின் ஒவ்வொன்றையும் விதந்து—மாடமாளிகை சூளிகைமண்டபம் கூடசாலைகள் கோபுரந்தெற்றிகள் நீடுசாளர நீடரங்கு—என்றும், இவ்வகைச்சிறப்புகளுள், சிலம்பொலி பொலிவுடைத்தாகலின் அதனையும் விதந்து—ஆடன்மாதர் அணிசிலம்பார்ப்பன என்றுங் கூறினர். (சு)

அங்கு ரைக்கென் னளவப் பதியிலார்
தங்கண் மாளிகை யின்னொன் று சம்புவின்
பங்கி னுள்திருச் சேடி பரவையாம்
மங்கை யார்அவ தாரஞ்செய் மாளிகை.

(எ - து) அத்திருவாரூரில் அவ்வீதியில் சம்புவாகிய இறைவனது இடப்பாகத்தையுடைய இறைவியாரது சிறந்தபாங்கியாராகிய பரவையாரென்னும் மங்கையார் அவதரித்தருளிய மாளிகை—ஆடன்மாதர்களாகிய உருத்திரகணிகையரது மாளிகைகளில் ஒப்பில்லாதது. அதன்சிறப்பு சொல்லும் சொல்லினளவுக்கு உட்பட்டதென்று சொல்லுவது என் என்பதாம்.

அங்கு சம்புவின் பங்கினுள் திருச்சேடி பரவையாம் மங்கையார் அவதாரஞ்செய் மாளிகை பதியிலார் தங்கள்மாளிகையில் ஒன்று, அது உரை அளவுக்கு என் எனக் கூட்டுக.

இறைவன் சுகமுடையவனாகலின்—சம்பு—என்றும், அச்சுகப்பொருளை அவன் பாலிருந்து எல்லாவுயிர்களுக்கும் பக்குவநோக்கிப் பகுத்துக்கொடுக்க அவ்விறைவனது

இடப்பாகத்தை ஆளுகின்றவளாகலின்—சம்புவின் பங்கினள்—என்றும், அப்பங்கினள் வினையாளர்க்கு சிற்றின்பத்தையூட்ட இருவினையைத் துணையாகக் கொண்டிருத்தல் போல் அருளாளருக்கு அருளின்வழியாய்ப் பேரின்பத்தையூட்டப் பரவையாராகிய கமலினியாரைத் தனக்குப் பாங்கியாராகக் கொண்டிருப்பவராகலின்—பங்கினள் திருச்சேடி பரவையார்—என்றும், அம்மங்கையார் அவதாரம் செய்தமாளிகை தனக்குமேலொரு பதியில்லாத இறைவனைத் தங்களுக்குப் பதியாகக் கொண்டிருக்கும் உருத்திரகணிகையர்வாழும் மாளிகைகளுள் ஓங்கிவிளங்கும் சிறப்புடைத்தாகலின்—அவதாரஞ்செய் மாளிகை பதியிலார் தங்கள்மாளிகையில் ஒன்று—என்றும், அந்தமாளிகையின் சிறப்பை யான்புகழ்ந்துரைக்கும் புகழின் அளவினதாகவே இருக்கும் இயல்புடைத்து என்று சொல்லுவது என், அச்சிறப்பு யான் உணர்ந்து ஓதற்கரியதாகலான்—அ - உரை அளவுக்குஎன்—என்றுங் கூறினர்.

உருத்திரகணிகையர் - உருத்திர மூர்த்தியன்றி வேறொருவரைத் தங்களுக்குநாயகராகக் கணிக்குங் கொள்கையில்லாதவர். பதி + இல்லார் - எனவே - உருத்திரமூர்த்தியினுடைய ஆலயத்தையே வீடாகக்கொண்டு வாழும் இயல்புடையவர் என்க. பதியிலார் தங்கள் மாளிகையில் ஒன்று - என்பதற்கு - "நாயகனில்லாத உருத்திரகணிகையரது மாளிகையில் ஒருமாளிகை" என்று முன் உரைக்ககாரர் கூறியுள்ளார். அதனை யாராயுங்கால்-பதியிலார் என்றதற்கு - நாயகனில்லாதவர் என்று பொருளாயிற்று. உருத்திரகணிகையர் என்றுபொருள்கொள்வதற்குப் பதமேது? அன்றி நாயகனில்லாதவர், உருத்திரகணிகையர் என அப்பதத்திற்கே இருபொருளுண்டோ? அங்ஙனமாயின் - பதியேயில்லாதவரையும், பதியையுடையவராய்ப் பின்னிழந்தவர்களையும் அங்ஙனம் அழைக்கவருமன்றே; அங்ஙனம் அழைத்தல் உலகவழக்கிலா? செய்யுள்வழக்கிலா? எவ்வழக்கில் இருப்பினும்இருக்க. அதனை நாம் அறியோம். ஆதிசைவர்கள் - எவ்வாறு பரசிவத்தினுடைய பஞ்ச முகோத்பவர்களாகிய பஞ்சருஷிகளது வம்சபரம்பரையாகச் சொல்லப்பட்டு வருகின்றனரோ, அஃதேபோல், பரவையாரது சேடியர் உருத்திரமூர்த்தியினது அடிமைத்தொழிலையே கணித்து அவ்வடிமைத்தொழிலையே செய்யும் கடப்பாடுடையவராகலான் அவர்கள் சம்பந்தமாகவே இப்பூவலகின்கண் வந்த ஆதிசைவர்கள் எப்படி சிவார்ச்சனைக்கே உரிய அதிகாரிகளாக இருக்கின்றனரோ, அஃதேபோல் அந்தருத்திர கணிகையரும் சிவாலயத்தில் உருத்திரமூர்த்தியினுடைய சம்பந்தமாயிருக்கின்ற பெரும்பணியையும் செய்யுங்கடப்பாடுடையவராய் மேன்மைபெற்றிருக்கின்றனர். அங்ஙனமான மேன்மையுடையாரை - ஆராய்ச்சியின் குறைவால் வேறுவிதமாக அவர்களை எண்ணுதல் பிழையாமென்க.

இதனால்,—பதியிலாதாராகிய உருத்திரகணிகையர் சிவசம்பந்தமாயுள்ள அஃதாவது சிவாலயசம்பந்தமாயுள்ள பலபொருள்களில் இவர்களும் ஓர் பொருளாக எண்ணப்பட்டவர் என்றறியக் கி

ஆகவே ஆதிசைவர்கள் வேறொருகுலத்தினருடைய சம்பந்தமில்லாமல் தனித்தவர்களாய் ஒருவீதியில் இருப்பார்களோ அஃதேபோல் உருத்திரகணிகையரும் இருப்பரென்க. பரவையார்—சம்புவின்பங்கினள் திருச்சேடியார் ஆகலின் மற்றொருவீதியின் கண் அவதாரஞ்செய்யாமல் அவ்வீதியிற்றானே அவதாரஞ்செய்யும்படி இறைவனது கட்டளையிருந்தவாறுமென்க. இன்னும் இதனை ஈண்டுவிரிக்கிற்பெருகும் - இவரது விசேடமெல்லாம் பரவையார் திருமணத்திற்காணலாம்.

இனி, சம்புவின் பங்கினள் திருச்சேடிபரவையாம் மங்கை என்றதனால் - பரவையார், உமாதேவியாரிருக்குங்கயிலையில் சேடியாராயிருந்த கமலினியாரே யாகலின் அவ்வொற்றுமையின் சிறப்புத்தோன்ற அங்ஙனங்குறித்ததென்க. ஆகவே மங்கை என்றதனை—கமலினியாரைக் குறித்ததெனக் கொண்டு மங்கையாராகிய பரவையாரெனப் பொருள்கொண்டுரைக்க. மங்கையாம் பரவை என்னாது பரவையாம் மங்கையார் என

றது வென்னையெனின் ஈண்டுச்சொல்லவந்தது திருவாரூர் வீதிச்சிறப்பாகலின்; அவ்வீதியின்கணுள்ள மாளிகை பரவையாரது மாளிகையாகலின் அம்மாளிகையின் சிறப்புத்தோன்ற பரவையாரென்னும் நாமத்தை முன்னரும் பரவையார் பூலோகமங்கையருள் ஒருவராக எண்ணப்பட்டவருமல்லர், ஏனைய தேவமங்கையர்களில் ஒருவராக எண்ணப்பட்டவருமல்லர் என்னும் அவரதுசிறப்புத்தோன்ற எல்லாத்தேவர்களுக்கும் மேம்பட்ட சம்புவின்பங்கினுள் திருச்சேடி மங்கையார் என்று பின்னரும் கூறினார். (௯)

படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிபார்
கிடந்த வேனமும் அன்னமுந் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால்.

(எ - து,) எப்பக்கத்தும்விரிந்து ஒளிவீசும் பலமணிகள் சிதறிக்கிடக்கும் வீதியின் பூமியிற் றோண்டிச்சென்ற திருமாலாகியபன்றியும், ஆகாயமுகட்டையளாவிச் பிரமனாகிய அன்னமும் தேடநின்ற இறைவன்—விடாது தொடர்ந்து அடிமை கொண்டவராகிய சுந்தரமூர்த்திகளுக்குத் தூதாகச்சென்று நடந்ததாகிய செவந்த தாமரைபோன்ற திருவடி மணங் கமழ்ந்துகொண்டேயிருக்கும் என்பதாம்.

இறைவன் தூதுசென்றகாலத்து அவ்வீதியில் சூரியனைப்போல் இருளைப்போக்கி மணிகள் சுடர்விட்டெறிந்தமையால்—படர்ந்தபேரொளிப பன்மணிவீதி—எனவும், அன்னத்தை (சோற்றை) ஏன (பாத்திர)த்தில் காண்டல்போல் பிரமன் திருமாலின் உந்திக்கமலத்தில் காணப்பட்டமையால் ஏனமும் அன்னமும் எனவும், இவ்விருவரும் பிணக்குற்று தேவசரீரத்தைவிட்டு விலங்குபறவை வடிவேற்று கீழும்மேலும் அலைந்து தேடநின்றவர் தனது அநாதிநிலைமையும் அந்தணத்தன்மையுங் கெடாமல் விருத்தப்பிராமண வடிவங்கொண்டு மணப்பந்தரில் வந்து அடிமையென்னும் வழக்கைத்தொடர்ந்து மீளா ஆளாகக்கொண்ட நம்பியாரூரருக்குப் பரவையார் பிணக்கொழிக்கும்பொருட்டு திருவடிநோகத் தூதாகச் சென்றமையால் ஏனமும் அன்னமுந் தேடுவார தொடர்ந்து கொண்ட வன்றொண்டர்க்குத் தூதுபோய்—எனவும், தூதுபோன அடிசெவப்பேறினமையால்—தூதுபோய் நடந்த செந்தாமரை அடி—எனவும், செவப்பேற ஒருமுறைக் கிருமுறை நடந்ததனால் புகழாகிய மணம் வீசுகின்றமையால்—நாறுமால்—எனவும் கூறினார். இடந்த வேனமும் எனவும்பாடம்.

படர்ந்த பேரொளிப் பன்மணிவீதி என்றதை "வீதிகள் * * * சோதிகள் விட்டு சுடர்மாமணிக ளொளிதோன்ற" என்றும் கிடந்தவேனமும் அன்னமும் தேடுவார் என்றதை—"நிலாத்திங்கட் டுண்டத்தாய் நின்னைத்தேடி யோருரும் ஒழியாமே யொற்றித் தெங்கும் உலகமெலாந் திரிந்துநின்னைக் காண்பான் தேருரு நெடுவீதிப பற்றிநின்று திருமாலு நான்முகனுந் தேர்ந்துங் காணாது ஆரூரா ஆரூரா என்கின்றார்கள்" என்றும் நடந்த செந்தாமரையடிநாறும் என்றதை "அணியுடைய நெடுவீதி நடப்பார்போலும் அணியாரூர்த் திருமூலத் தானனாரே" என்றும், தெய்வத்திருவாக்காகிய தேவாரங்களில் ஓதப்பட்டிருக்கின்றமை காண்க.

பத்தூர்புக்கிரந்துண்ணும் ஆடலை யேற்றுகொண்டகாலத்தில் வேறொன்றைக்கொள்ளாது மயானதிற்கிடக்கத்தக்க பிரமன்சிரமாகிய பலிபாத்திரத்தையும் இருடிபத்தினிகளிடத்தில் அன்னத்தையும் தேடிச்சென்ற இறைவர் பரவையார்பால் நம்பியாரூரது வேண்டுகோளை இரக்கநடந்தனரெனப் பொருள்கொள்ளலு மொன்று.

இதனால்—டகளிருளில் இறைவன் தூதுசென்ற வீதி—தன்னிடத்துள்ளசெம்மணிகளால் ஒளிபரப்பியதென்றும், அரிபிரமர் நாம் தாம் பிரமமெனப் பிணக்குற அடிமுடிகாட்டி அவர்களது பிணக்கை யொழிக்காது செந்தழலுருவாய் நின்றஇறைவன் ஆரூரருக்கும் பரவையாருக்கும் சங்கிலியார்பொருட்டு உண்டாகிய பிணக்கையொழிக்க அடி

முடியையுடைய அருளுருக்கொண்டு இருமுறை நடக்க அவ்வடிமலரின் நாற்றத்தை என்றும் தன்னிடத்து நீங்காதிருக்கப் பெற்றதென்றுங் கூறப்பட்டன.

அல்லதூஉம், அகண்டசோதியாய் இறைவன் பிரகாசித்தும் அவ்விருவரும் அடிமுடியைக் காணதொழிந்தனர் என்ற பழிவுரை அவர்கள்பெற்றதுபோல்பெறாமல் தன்னிடத்துள்ள மணியொளிபரப்பி இறைவனது அடிமுடியைக்கண்டு அடிமலரின் மணநாறப்பெற்றது அவ்வீதி என்ற புகழுரையைப்பெற்றது என்றலுமாம். (சு)

செங்கண் மாதர் தெருவில் தெளித்தசெங்
குங்கு மத்தின் குழம்பை அவர்குழல்
பொங்கு கோதையில் பூந்துகள் வீழ்ந்துடன்
அங்கண் மேவி அளறு புலர்த்துமால்.

(எ - ரு.) செவ்வரிபரந்த கண்களையுடைய மங்கையர் வீதியில்தெளித்த செவந்த குங்குமக்குழம்பை அம்மங்கையரின் கூந்தலில் தரித்துள்ள நறுமணங்கமழும் பூமாலையிலுள்ள மகரந்தப்பொடிகள் உடனே வீழ்ந்து அக் குழம்போடுகலந்து அச்சேற்றை உலரச்செய்யும் என்பதாம்.

இதனல்,—இறைவன் நடந்த செந்தாமரையடி நாறும் வீதியாகலான் அவ்வீதியிலுள்ள மங்கையர் அவ்வடியைப்பூசிக்குமுறைபோல் குங்குமக்குழம்பைத் தெளித்தும் பூக்களிலுள்ள மகரந்தங்களை வீழ்த்தியும் வருவார்களெனக்கூறப்பட்டது. (எ)

உள்ளம் ஆருரு காதவர் ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்.

(எ - ரு.) இடபத்தை ஊர்தியாகவுடைய தியாகேசன் வீற்றிருக்கும் திருவாரூரின் வீதியிருமருங்கும் பண்ணமைந்தவோசையோடுகூடிய தேவாரத்திருப்பதிகங்களைப் பசிய கிளிப்பிள்ளைகள் பாட அதனை நாகணவாய்ப்பறவைகள் கேட்கின்றனவாயிருக்க அவைகளைக்கண்டு உருகும் உள்ளத்தை பெறாதவர்கள் யாவரிருக்கின்றனர் என்பதாம்.

இதனல்,—மகளிர் குங்குமக்குழம்பைத் தெளித்து மகரந்தப்பொடிகளை வீழ்த்தி வழிபடும் அப்புலர்காலையில் அவ்வீதியின் இருமருங்கில் ஓர்மருங்கிலுள்ள கிளிப்பிள்ளைகள் தெள்ளும் ஓசைத் திருப்பதிகங்கள்பாட மற்றோர்மருங்கிலுள்ள நாகணவாய்ப்பறவைகள் கேட்பனவாயிருக்குமென்றும், அந்நிலைமையைக்கண்டு உருகும் உள்ளத்தை யாவரும் பெற்றுள்ளவரென்றும் கூறப்பட்டன.

மகளிர் குங்குமக்குழம்பாலும் மகரந்தப்பொடிகளாலும் வழிபடுங்காலத்து அடி செவப்பேற நடந்த அருமையைநாடி ஆரூரர் உள்ளமுருகப்பாடிய திருப்பதிகங்கள் அணியணியாய் அமைத்துள்ள பட்சிகள் தாம் துதிப்பதுபோல் உள்ளமுருகிப் பாடவுங் கேட்கவும் இருக்குஞ் செயலைக்கண்டு உள்ளம்உருகுதலை அடையாதார் ஒருவருமில்லை என்க. (அ)

கடைவீதியின் சிறப்பு.

விளக்க மிக்க கலன்கள் விரவலால்
துளக்கில் பேரொலி யால்துன்னு பண்டங்கள்
வளத்தொ டும்பல ஆறு மடுத்தலால்
அளக்கர் போன்றன ஆவண வீதிகள்.

(எ - ரு.) திருவாரூரிலுள்ள கடைவீதிகள் ஒளிமிக்க பலவகையான ஆபரணங்களைத் தம்மிடத்துக் கலந்திருப்பதாலும், எப்பொழுதும் ஒழியாத பேரோசையைப்

பெற்றிருப்பதாலும், நெருங்கியிருந்த பலவகையான பண்டங்களை வளப்பத்தோடும் பலவணிகவழிகளான் வரப்பெற்றிருப்பதாலும் கடலையொத்திருப்பன என்பதாம்.

இதனால் - கடைவீதிகள் கடல்போல் இரத்னங்களாலாகிய பலவகையான ஆபரணங்களையும், அவ்வாபரணங்களை விலைபகருங்காலத்து உண்டாகும் பேரொலியையும், பல ஆறுகளின் வழியாய் வரும் பலபண்டங்களைப் பெற்றிருப்பதுபோல் பலவழியாய்ப் பலபொருள்களையும் பெற்றிருப்பனவெனக் கூறப்பட்டது.

அல்லதூஉம்,—திருவாரூர் இலக்குமிபொருந்தியிருக்கும் ஊர் என்பதற்கேற்ப அலைவாழுங்கடலையும் உவமித்துக்கூறினர் என்றலுமாம். (௯)

பெருமான் பவனிவரும் வீதியின் சிறப்பு.

ஆர ணங்களே யல்ல மறுகிடை
வார ணங்களும் மாறி முழங்குமால்
சீர் அணங்கிய தேவர்க ளேயலால்
தோர ணங்களின் தாமமும் சூழுமால்.

(எ - து.) (வீதிவிடங்கப்பெருமான் வரும் வீதிகளில் ஓசைபடஒலிக்கும் ஓசையாவது) வேதவொலியேயன்று, அவ்வொலிக்கு மாறுபட்டு யானைகளும் வீறிட்டொலிக்கும், அஃதேபோல்—சிறப்புடைய அழகிற்சிறந்த தேவர்களுடையகூட்டங்கள் தோரணம்போல் அந்தரத்தில் அணியணியாய் நிற்பதேயல்லாமல் அவர்கள் முன்னும் பின்னும் தோரணங்களிற்கட்டிய மாலைகளும் சூழ்ந்திருக்கும் என்பதாம்.

இதனால்,—வேதவோசைபோல் யானைகள்ஒலிக்கும் ஓசையுடைத்தெனவும், தோரணவரிசைபோல் தேவர்கள் அணியணியாய் அந்தரத்தில் நிற்பரெனவுங் கூறப்பட்டன. அல்லதூஉம் - அவ்வீதி இறைவன் திருவிழாவை எப்பொழுதுங்கொண்டிருக்கும் சிறப்புடைத்தாகலின் அவ்விழாவில் இறைவன் பின்னேவரும்வேதம் பேரோசையுடன் ஒலிக்குமெனவும், முன்னேசெல்லும் யானைக்கூட்டங்கள் அதனோடு மாறுபட்டொலிக்குமெனவும், தேவேசனாகிய தியாகேசன் மேல்விதானத்தோடு வருகின்றானாகலின் அப்பெருமானைக் காண்டற்கு அந்தரத்தில் தேவர்கள் அணியணியாய் நிற்பர் எனவும், அங்ஙனம் நிற்கும் அவர்களுக்கு இறைவனது காட்சி அவர்கட்புலனுக்குக் காணாவாறு மறைத்தல்போல் அவர்களுக்குமுன் மாலையால் அலங்கரித்துள்ள தோரணங்கள் நிற்குமெனவும் வியந்து கூறப்பட்டனவுமாம். (௧௦)

திருவாரூரில் வாழ்பவரின் சிறப்பு.

தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்
வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்
வீழ்ந்த இன்பத் துறையில விரவுவார்
சூழ்ந்த பல்வே றிடத்தது தொல்நகர்.

(எ - து.) அந்தப் பழமையாகிய திருவாரூர் என்னும் திருநகரம் நீண்டசடையினையுடைய அநாதிசைவனாகிய சிவபெருமான் திருமுகத்தினின்றும் தோன்றிய ஆதிசைவர்களும், சிவசம்பந்தமாகிய சரியையாதிதவங்களை மேற்கொண்டொழுகவல்ல பெரியோர்களும், அன்பினால் வாழ்ந்திருக்கும் சித்தத்தையுடைய சைவமுனிவர்களும், மகாசைவர்களாகிய வேதியர்களும், பேரின்பத்துறையில் ஆழ்ந்துள்ள சிவானுபவச்செல்வர்களும் ஆகிய இவர்கள் சூழ்ந்துவாசஞ்செய்யத்தக்க பலவகையானஇடங்களையும் உடைத்து என்பதாம்.

பிரமதேவனுடைய முகத்தினின்றுந் தோன்றிய வேதியரைப்போல் அல்லாமல் மகாதேவனுடைய முகத்தினின்றுந் தோன்றினவர் என்னும்சிறப்புத்தோன்ற-தாழ்ந்த

வேணியர் சைவர்—எனவும், இறப்புடைய சிற்றின்பங்களைவிரும்பி, அதுபெறுமளவும் தவநெறிகளில்நின்று அத்தவங்களைச் சிறிதுகாலஞ்செய்து பின்னர் விடுகின்றவர்களைப் போல் அல்லாமல் இறப்பில்லாத பேரின்பத்தை என்றும் விரும்பி இறப்பில்லாதன வாகிய சரியையாதிதவங்களை என்றுஞ்செய்துவருகின்றவர் என்னும் அச்சிறப்புத் தோன்ற—தபோதனர்—எனவும், தம்மைப் பகைத்தவரைச் சபித்தற்கும், தம்மை உகந்தவரை அனுக்கிரகித்தற்கும் தமக்கொருதீங்கு அணுகாவண்ணங் காத்துக்கொள்ளு தற்கு திரிகாலஞ்ஞானங்களை யுணர்வதற்குமான சாதனங்களை எண்ணி எண்ணி அவை யிற்றில் தலைப்பட்டு உழல்வாரைப்போல் உழல எண்ணாமல் அவனன்றி யோரணுவும் அசையாது என்றுகூறிய ஆப்தர்மொழியையும், சிவன்செயலாலேயாதும் வரும் என் னும் அரிய மொழியும் எண்ணி எண்ணி எப்பொருளிடத்தும் சங்கற்பவிகற்பங்களைக் கொள்ளாமல் அருளையேசிந்தித்து வாழ்ந்திருக்கும் சித்தத்தையுடைய சிறப்பினராகிய சிவயோகிகள் என்னும் அச்சிறப்புத்தோன்ற—வாழ்ந்தசிந்தை முநிவர்—எனவும், வை திகநெறியானே சைவத்துறையடைந்து அத்துறையுள் நின்று ஒழுகவல்ல மறையோராகிய சைவ ரென்னும் அச்சிறப்புத்தோன்ற—மறையவர்—எனவும், "காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்து உண்மை, காண்பார்கள் நன்முத்திகாணார்கள்—காண்பானும்— காட்டுவதும் காண்பதுவும் தன்கடன்மைச் சம்பந்தன், காட்டுநெறி வாராதவர்" என்று வினாவெண்பாவிற்கூறிய சித்தாந்தப்படி காண்பான் காட்சி பொருள் என்னும் திரி புடிகளை இழுத்தலே முத்தியென்றெண்ணி முத்தியின்பத்தை யிழப்பார்போல் இழந்து போகாமல் இன்பத்தையுணர்ந்து பெறுவானாகிய ஆன்மாவும், இன்பத்தைக்காட்டிப் பெறுவிப்பானாகிய சிவனும் கூடக்கலந்து இன்புறுதற்கிடஞ்செய்யவல்ல ஞானமும் ஆகிய மூன்றும் ஒத்துநிற்கின்ற அம்முத்திநிலையில், சிவன் அறிவிக்கின்றான், ஆன்மா வாகிய நான் அறிகின்றேன் என்றும், சிவன் ஆனந்தத்தை அனுபவிக்கச்செய்கின்றான், நான் அனுபவிக்கின்றேன் என்றும் அறிவதாகிய சுட்டறிவவீழ்ந்த அத்துறையில் தானே சிவமாய், சிவமேதானாய்க் கலந்தனுபவிப்பதாகிய பேரின்பநிலையில் நிற்போர் சிவஞானி கள் என்னும் அச்சிறப்புத்தோன்ற—வீழ்ந்த இன்பத்துறையில் விரவுவார்—எனவும், பிறந்தால் முத்தியைக்கொடுப்பது என்னும் அச்சிறப்புடையது அவ்வூராகலின் அங்கு வசிப்பவரெல்லாம் இந்நிலைக்கு உரியவராவார் என்னும் அச்சிறப்புத்தோன்ற—சூழ்ந்த பல்வேறிடத்தது அத்தொன்னகர்—எனவுங்கூறினார்.

* "அருமணித் தடம் பூண்முலை யரம்பையரோ டருளிப்பாடி
உரிமையிற் றொழுவா ருருத்திர பல்கணத்தார்
விரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பாசுபதர் கபாலிகள்
தெருவினிற் பொலியுந் திருவாரூர் அம்மானே."

† "துன்ப நும்மைத் தொழாதநாள்கள் என்பாரும்
இன்ப நும்மையே யேத்துநாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப்பணியே என்பாரும்
அன்பன் ஆரூரர் ஆதிரைநாளால் அதுவண்ணம்."

‡ "விம்மா வெருவா விழியாத் தெழியா வெருட்டுவார்
தம்மாண் பிலராய்த் தரியார் தலையான் முட்டுவார்
எம்மான் ஈசன் எந்தை யென்னப்பன் என்பார்க்
கம்மான் ஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம்."

எனவரும் தேவார அருளிப்பாடல்களால் தாழ்ந்தவேணியர் என்றதை—"விரி சடைவிரதிகள்" எனவும், சைவர் என்றதை—அந்தணரொழிந்த தீக்ஷாவான்களாகிய சை

* நான்காந்திருமுறை—திருவாரூர்—பண்—சீகாமரம்—பாடல் ௫.
† ஷை ஷை குறிஞ்சி - பாடல் ௬.
‡ ஷை ஷை ஷை ௬.

வர் எனவும், "தபோதனர்" என்றதை "பாசுபதர்காபாலிகள்" எனவும், மறைய வர் என்றதை—ஆதிசைவர் மஹாசைவர்களாகிய "அந்தணர்" எனவும், வீழ்ந்த இன்பத்துறையில் விரவுவார் என்றதை—"துன்ப***என்பாரும்" "விம்மா *** என்னப்பன் என்பார்" எனவும் கொள்ளலுமொன்று.

இதனால்,-திருவாரூர்—மூர்த்திகரமாதலால் முத்திநெறியாகிய சிவார்ச்சனையிலும் சைவத்திலும், சைவநெறியிலும், சிவானந்தநிலையிலும் இற்பார்க்கெல்லாம் பெரிய இடமாயுள்ளது என்றும் ஆதிசைவர்முதலாகச் சொல்லப்பட்ட சைவர்களும், சரியை கிரியா யோகமென்னும் தவங்களில் முழுவலவராகிய சைவஅடியார்களும், அருள்நிறைந்த சித்தத்தையுடைய சிவயோகிகளும், பேரின்பத்துறையாளர்களாகிய சிவானந்தானுபவச் சிவஞானிகளும் வாழ்தற்கிடமாயுள்ளது என்றுங் கூறப்பட்டன. (கக)

நாடும் நகரமும் காணப்படுங் காட்சி.

நிலமகட்கழகு கார்திரு நீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்மகட்குவண் தாமரை போல்மலர்ந்
தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால்.

(எ - து) சோழர்கள் அரசுபுரிந்து வாழ்தற்கிடமாகிய சோழநாடானது—பூமிதேவிக்கு அழகு பொருந்திய நெற்றியில் இடப்பட்ட திலகத்தை ஒத்துள்ளது. (அந்நாட்டிலுள்ள) அளவில்லாத பெருஞ்சிறப்பினையுடைய திருவாரூரானது - இலக்குமிதேவிக்கு வளப்பத்துடன் மலர்ந்துள்ள செந்தாமரைமலர்போல் பிரகாசிப்பது என்பதாம்.

இதனால் சோழநாடானது—பூமிதேவிக்கு நெற்றியில் அணியப்பட்ட திலகம் போன்றதென்றும், திருவாரூர்த் திருநகரமானது—இலக்குமிதேவி வசிக்கும் இடமாகலான் அத்தேவிக்குப் பீடமாயுள்ள செந்தாமரைமலர்போன்றதென்றும் கூறப்பட்டன.

நகரச்சிறப்புக்கேற்ப அரசன்வாய்ந்த சிறப்பு.

அன்ன தொல்நக ருக்கர சாயினான்
துன்னு செங்கதி ரோன்வழித் தோன்றினான்
மன்னு சீர்அந பாயன் வழிமுதல்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே.

(எ - து.) அத்தகைத்தாய சிறப்பினையுடைய அநாதியாயுள்ள திருவாரூரென்னும் திருநகரத்துக்குச் சுபசந்திரணங்கள் நெருங்கியுள்ள சூரியவமிசத்தில் வந்தவரும், நிலைபெற்ற கீர்த்தியினையுடைய அநபாயச்சோழமகாராஜாவின் குலமரபிற்கு முதலாயுள்ளவரும், மின்னலைப்போலும் கணந்தோறும் கண்கூசும்படி ஒளிவிடும் இரத்தினாபரணங்களைத்தரித்துள்ள மநுவென்னும திருநாமத்தையுடையவரும் ஆகிய சோழசக்கிரவர்த்தியே யரசராயினார் என்பதாம்.

அன்னதொன்னகருக்கு *** மநுவேந்தனே அரசாயினானெனக்கூட்டுக.

இதனால் திருவாரூரோ அநாதியாயுள்ளது, அந்நகரத்துக்குவாய்த்த தெய்வமும் அநாதியாயுள்ளது, இவ்விருவகைச் சிறப்புக்கேற்ப அந்நகரம் ஆதிகாலத்தில் ஆண்ட மநுநீதியே இம்மநுநீதியென்று சொல்லப்படும் சிறப்பினைவாய்ந்த அரசர்பெருமானையே தன்னையாளும் அரசனாகப்பெற்றது என்று கூறப்பட்டது. (கஉ)

மநுநீதிச் சக்கிரவர்த்தியின் சிறப்பு.

மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாண இயற்றினான்.

(எ - து.) (அவ்வரசர்பெருமான்) இந்நிலவுலகின்கண் நிலைபெற்று வாழ்கின்ற எல்லாவுயிர்கட்கும், கண்ணாகவும் உயிராகவும் இருந்துகாக்கவல்ல காவற்றொழிலாகிய அரசத்தொழிலைக் கைக்கொண்டிருக்கும் அரசராயுள்ளவர், விண்ணுலகில் வாழ்கின்ற தேவர்கள், சந்தோஷப்பெருக்கினை யடைய அளவிறந்த யாகங்களை மிகச்சிறப்பாகச் செய்தவர் என்பதாம்.

செல்லாநெறியை விலக்கி, செல்லுநெறியைக் காட்டும் கண்போல, செங்கோன் முறையினால் வேதத்தில் விலக்கப்பட்ட தீநெறியாகிய பாவநெறிகளைக் கடிந்து, விதிக்கப்பட்ட நன்னெறியாகிய புண்ணியநெறிகளில் யாவரையும் செலுத்துதலான் அரசனை—கண்ணென்றார். "நீரின்றமையாது உலகெனின் யார் யார்க்கும், வானின்றமையா தொழுக்கு" என்றபடி எவ்வகைப்பட்ட உயிர்களுந்தும் மழையையின்றிவாழ்தல் கூடாது. அம்மழை அரசனையின்றி யமையாது என்னெனின் 'முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி, ஒல்லாது வானம் பெயல்' என்றும் "ஆ பயன்குன்றும் அறு தொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவா னெனின்" என்றுங் கூறியிருத்தலால். எனவே செங்கோன்முறை தவறுமாயின மழைபெய்தலுந் தவறும், பசுக்களுங் குன்றும், மறையவரும் வேதத்தை மறப்பரென்று வெளிப்பட்டன. படவே மழைபெய்விப்பவனும், அம்மழையால் பசுவையும் பார்ப்பாரையும் நிலைநிறுத்தி ஏனைய உயிர்களையெல்லாம் தன்னுயிர்போல் காக்குந் தன்மையை யுடைத்தானவனும் அரசனே என்றிருத்தலின்—ஆவியும் ஆம் பெருங்காவலான் எனவும், பொன்னுலகில் உள்ளார் எல்லாச் செல்வங்களையும் நீண்ட ஆயுளையும் உடையவராயிருப்பினும் மண்ணுலகிற்செய்யப்படும் யாகங்கள் குன்றுமாயின் அவர்கள் குன்றுவாராகலின் அங்ஙனம் அவர்கள் குன்றாவண்ணம் யாகங்களைச்செய்து மகிழ்விக்கும் பேறுடையவராகலின்—விண்ணுளார் மகிழ்வெய்திட வேள்விகள் எண்ணிலாதன மாணவியற்றினான் என்றுங்கூறினார்.

இதனால்,—மனுச்சக்கிரவர்த்தியானவர் உயிர்களுக்குக் கண்போலிருந்து பாவச் செயல்களைக்கடிந்து ஒழிப்பவரென்றும், உயிர்போலிருந்து புண்ணியச்செயல்களைப் பெருக்கி மறுமையில் நரகஞ்சேராவண்ணங் காப்பவரென்றும், அங்ஙனங் காக்கப்பட்ட உயிர்களுக்கு மழையினால் இம்மையிலும், புண்ணியப்பயனால் மறுமையிலும் அழியாச் சுகங்கொடுப்பவரென்றுங் கூறப்பட்டன.

எனவே திருவாரூரைத்தமதிருக்கையாகக்கொண்டாளும் அரசராகலின் அவ்வூரளிக்கத்தக்க முத்தியை தம்மாற் காக்கப்பட்டஉயிரெல்லாம் அடையுமாறு மழையினால் இம்மைச் சுகத்தையும் வேள்வியினால் மறுமைச் சுகத்தையும் அடையச்செய்து புண்ணியச் செயலால் நரகினைத்தடுத்து இனி இம்மை மறுமை நரகம் என்னு மூவிடத்துஞ் சேரத்தக்க பிறவிகளிற் சேராது முத்திநெறியைச்சேரும் வண்ணங்களைச் செய்பவரென்று கூறப்பட்டது. (௧௪)

கொற்ற ஆழி குவலயம் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைக்கடை சூழ்ந்திடச்
செற்ற நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியும் தன்பெயர் ஆக்கினான்.

(எ - து.) மேலே சொல்லிவந்தனவேயன்றி வெற்றிபொருந்திய தனது ஆஜ்ஞாசக்கரமானது உலகமுழுவதும் சூழ்ந்துவரவும், தன்னடிப்பட்டு ஆங்காங்குவாழும் அரசர்கள் கட்டுவனவாகிய பகுதிப்பணங்கள் கடைவாயிலின்கண்ணே இடமின்றிச் சூழ்ந்து கிடக்கவும், மெய்ம்மையாகிய செம்மைக்குணத்தினால் வேற்றரசர் பகைகொள்ளாவண்ணம் நீதியை மேற்கொண்டு அரசியலை நடத்தி அதனால் இவ்வரசன் ஆதியில் மநுநீதி என்னும் அரசன் உலகில் வேதநீதியைச் செலுத்தி உயர்ந்தோரால் மனுநீதியென்னும் பெயரைக்கொண்டதுபோல் தானும் அந்நீதியைச்செலுத்தி மநுநீதியென்னும் அப்பெயரைத்தன்பெயராகஆக்கினன் என்பதாம்.

உலகினை ஆளவரும் அரசரெல்லாம் தாமதாம் செலுத்தவேண்டிய செங்கோன் முறைமை ஆதிகாலத்தில் உலகினை ஆளும்படி நியமிக்கப்பட்டமனுச்சக்கரவர்த்தியினால் எந்நீதிகள் நியமிக்கப்பட்டனவோ அந்நீதியையே மேற்கொண்டு செய்தவராயிருந்தும் மநுநீதியென்னும் பெயரைப்பெற்றாரில்லை. திருவாரூரை ஆளவந்த இவ்வரசரோ அந்நீதியைச்செலுத்தி அப்பெயரையே பெற்ற வல்லாளரென்பதுதோன்ற—மெய்ம் மநுப்பெற்ற நீதியும் தன்பெயராக்கினான் என்றார்.

எனவே ஆதியில் உலகினை ஆளவந்த மநுவென்னும் அரசர் - மந்திரரூபமாகிய வேதத்தின்கண்ணே விதித்தநீதிகளைத் தவறாது செலுத்தி மநுநீதியெனப் பெற்ற அவர்பெயரைத் தாம் அந்தநீதியைச் செலுத்தி அப்பெயரைத் தாம்கொண்டு அவரைப் பிரகாசப் படுத்தினாரென்பதாம்.

இதனால் - ஆதியில் உலகமுழுதாண்ட மநுவைப்போல் திருவாரூர்த்தொன்னகருக்கு அரசனாகவந்தவர், தன்னாணையேயெங்குஞ்சூழச்செய்தாரென்றும், எங்குமுள்ள அரசரும் பகுதிப்பணங்களோடு கடைவாயிலின்கண்ணே சூழ்ந்திருக்கச்செய்தனர் என்றும், வேற்றரசரும் தம்மாட்டுப் பகைகொள்ளாமல் உறவினையேகொண்டு வாழும்படிச் செய்தனரென்றும். இங்ஙனமான விசேடத்தான் அந்தமநுச்சக்கரவர்த்தியின்பெயரைத் தாம் கொண்டு அவரது நீதியையும் பெயரையும் குன்றாவண்ணம் மேலோங்க ஆக்கினாரென்றுங் கூறப்பட்டன. (௧௫)

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்
கங்கண் வேண்டும் நிமந்தம் ஆராய்ந்துளான்;
துங்க ஆகமம் சொன்ன முறைமையால்.

(எ - து.) கல்வியாளர்கள் தாம்தாம் கற்ற கல்வியினளவைக்கொண்டு ஆராயப்புகுவாராயின் அவரறிவுக்கேற்ப மேன்மேற்பொங்கும்பொருளை யுணர்த்தவல்ல அளவிறந்த வேதவடிவமாய் விளங்கும் புற்றையிடமாகக் கொண்டவரும், அவ்வேதங்களாற் கூறியுள்ளபடியே சேதநாசேதனங்களில் வியாபகமாய் நிறைந்திருப்பவரும் ஆகிய வன்மீகநாதரென்னும் இறைவருக்குச் செய்யத்தகுவனவாகிய நித்தியநைமித்திகாதி பூசனைகட்குவேண்டுவனவாகிய நிமந்தங் (படித்தரங்)களை மேன்மையிற்சிறந்த சிவாகமங்களில் சொல்லப்பட்டிருக்கும் முறைமைகளைக்கொண்டியற்ற எப்பொழுதும் ஆராய்ச்சிசெய்து கொண்டிருப்பவர் என்பதாம்.

நிமந்தம் துங்கவாகமஞ் சொன்னமுறைமையால் ஆராய்ந்துளான் எனக்கூட்டுக.

இதனால்,—தமக்கு உலகினையாளும் பெருஞ்செல்வத்தைத் தந்து சிற்றின்பத்தை நுகர்வித்த பெரியோன்பால் பேரின்பத்தையும் பெறவேண்டி அவ்விறைவன் வேண்டும் பூசனைக்குவேண்டுவனவாகிய நிமந்தங்களைக் கூறப்பட்டிருத்தல் சிவாகமங்களாகலான் அவைகளை ஆராயும் ஆராய்ச்சியில் எப்பொழுதும் மநுச்சக்ரவர்த்தி தலைப்பட்டிருப்பரென்று கூறப்பட்டது. (௧௬)

புத்திரப்பேறு.

வேறு.

அறம்பொருள் இன்பம் ஆன அறநெறி வழாமல் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற வையகம் காக்கு நாளில்
சிறந்தநல் தவத்தால் தேவி திருமணி வயிற்று மைந்தன்
பிறந்தனன் உலகம் போற்றப் பேரரிக் குருளை அன்னான்.

(எ - து.) அறத்தைச் சிவதருமத்தின்வழியே செய்யவொட்டாமலும் பொருளைப்பிறர்க்கு ஈதல் காரணமாகத் தேடவொட்டாமலும், இன்பத்தைப் பேரின்பம் அடைதல் காரணமாக அநுபவிக்கவொட்டாமலும் தடுக்கவல்ல பாவப்பகுதிகளைத்

தனது நாட்டின்கண் வாழ்வாரிடத்து வாழவொட்டாமற் கடிந்து, அறம் பொருள் இன் பங்களை முறையே தருமநெறியில் வழுவாமல் அறத்தைச்செய்வதிலும், நல்வழிநிலைமையி னின்றும் மாறுபடாமல் பொருளைத்தேடுவதிலும், வழி (சந்ததி) எஞ்ஞான்றும் (எந் நாளும்) நிற்றலல்லது இறத்தலை யெய்தாவண்ணம் பழிக்கு அஞ்சி இல்வாழ்க்கையான் வரும் இன்பத்தை என்றும் அனுபவிப்பதிலும் வழுவுதல்வராவண்ணம் பொருந்தியிருக் கச்செய்து, அரசரென வாழ்வாரெல்லாம் தத்தம் அரசியலைவெறுத்துத் தாம்செய்யும் அரசியலைப் போற்றும்படி இவ்வுலகினை ஆண்டுவருங்காலத்தில், (எங்குமாகி யிருந்த வர் பூசனைக்கு வேண்டும் இலக்கணங்களைத், தங்கள் ஆகமம் சொன்னமுறைமையால் ஆராய் ந்து செய்துவருவதாகிய தவங்களிற்சிறந்த நல்லதவவிசேடத்தால், அரசனையானை யென னும் தமது மனைவியாரது அழகிய திருவயிற்றினின்றும், பெரிய சிங்கக்குட்டிக்குச் சமானமாகிய ஒருபுத்திரன் உலகத்தாரெல்லாம் போற்றப் பிறந்தனன் என்பதாம்.

தேவி திருமணிவயிற்று, பேரிசைக்குருளையன்னதோர் மைந்தன் உலகம்போற்ற, பிறந்தனன் எனக்கூட்டுக.

அறநெறிவழுவி அறம் பொருள் இன்பங்களை அனுபவிக்கப்பெறினும் அவை இறைவனால் நிக்கிரிக்கப்படுமாகையான்—அறம்பொருளின்பமான அறநெறி வழாமல் புல்லிஎன்றும், அங்ஙனம் அறநெறிவழுவிச் செய்யும் அறமுதலியன பாவத்தையே விளைவிக்குமாகலான் அவர்களுக்கு அரசனுக்கு ஆன்மீயமையாதசெயலாகையான்—மறங்கடிந்து—என்றும், அங்ஙனமான மறத்தலைக் கடிதலால் தன்னாணையின்வழி ஒழுக வல்ல உயிர்களெல்லாம் மறத்தன்மையைச் செய்யாமல் இம்மையின்பமும் மறுமையின்ப மும் பெற்றுவாழ்வாராகையான்—வையகம்காக்கும்—என்றும், இவ்வாறு மறங்கடிந்து அறநெறிவழாமல் அறமுதலியவற்றைப் பொருந்தச்செய்தல் ஏனைய அரசருக்கு அரிதனை ருகலான் அரசர்போற்ற—என்றும், இவ்வாறு சம்பந்தமான பதிபுண்ணியமாகிய சிவபுண்ணியத்தை இவ்வுலகில் நிலைநாட்டவும், அப்புண்ணியத்தின் உண்மை இதுவென யாவரும் அறியவும் அவதரித்த அரசர்க்குரியோன்—சிறந்தநற்றவத்தால் உலகம்போற்ற மைந்தன் பிறந்தனன் என்றும், "பெருமையனைத்தும் மனையாட்சி மற்றதன், நன்கலன் நன்மக்கட்பேறு" என்று கூறிய தெய்வத்திருமொழிப்படி இவ்வரியமகனைப் பெறுதற்கு இவரது மனைவியாரது வயிறு இடமாகியிருந்ததாகலான்—தேவி திருமணி வயிற்று என்றும், "தக்கதசமதநாளொடு தாய்படும்" என்ற அருள்மொழிப்படி கருப்ப வேதனையைத் தானும், தனது தாயும் அடையாமல் சிங்கக்குட்டிபோல் கருவினின்றும் மிகவேகமாய் வெளிப்பட்டுவந்தானாகலான் பேரிசைக்குருளையன்னதோர் என்றுங் கூறினார்.

இதனால், அரசனுக்குண்டாகிய மகப்பேற்றின் சிறப்புகூறப்பட்டது. (கசு)

அரசன்மகன் கலைபலதேர்ந்த சிறப்பு.

தவமுயன் றரிதிற்பெற்ற தனிஇளங் குமரன் நாளும்
சிவமுயன் றடையும் தெய்வக் கலைபல திருந்த ஓதிக்
கவனவெம் புரவி யானை தேர்படைத் தொழில்கள் கற்றுப்
பவமுயன் றதுவும் பேறே எனவரும் பண்பின் மிக்கான்.

(எ - து.) மநுச்சக்கிரவாத்தியானவர் அரியதவத்தைச்செய்து அருமையாகப்பெற்ற ஒப்பிலாத இளமைபொருந்திய புத்திரன், தெய்வமாகியசிவத்தை முயற்சிவகையால் அடைதற்குரிய சன்மார்க்கநெறிகளை எடுத்தோதவல்ல பலவேதசிவாகமநூல்களை நா டோறும் கசடறக்கற்று, (அவற்றோடு அரசியலுக்குரியனவாகிய) தாவிச்செல்லும் வேக த்தையுடைய குதிரைஏற்றம், யானையேற்றம், தேர் ஊர்தல், வில்வித்தைமுதலிய பல ஆயுதப்பயிற்சி முதலிய தொழிற்பயிற்சிகளையும் கற்றுணர்ந்து, அவ்வறிவினால் நாம் இந்தமானிடசரீரத்தில் இக்குலத்தில்வந்து இச்சரீரத்திற்கும் குலத்திற்கும் இவ்வம்சத் திற்கும் ஏற்றவாறு தெய்வவுணர்ச்சிக்கு ஏற்பனவாகிய கல்வியிலும் அரசியலுக்குரிய

தொழிற்பயிற்சியிலும் முயன்றதாகிய இவையெல்லாமும் ஓர்பெரிய பிரயோஜனமே என்று உணர்வருவதாகிய நற்குணங்களில் சிறந்தவனுயினன் என்பதாம்.

இதனால்,—அரசனது மகன் சிவபுண்ணியவிசேடத்தாற் பிறந்தவனாகலின் அப்புண்ணியத்திற் கேற்ப, இம்மைமறுமை வீடென்னும் மூவகையில் பெறற்பாலன இவையென்றுணர்த்த எழுந்துள்ளவேதசிவாகமநூல் ஆராய்ச்சியினும், தாம்பிறந்துள்ள குடிச்சிறப்புக்கேற்ப தனுர்வித்தை முதலியவற்றில் உண்டாகவேண்டிய வன்மையினும் வல்லாளனாய், அவ்வன்மைக்கேற்பத் தனக்குக்கிடைத்த சரீரத்தின்சிறப்பையும், அச்சிறப்புக்கியல சிவபுண்ணியங்களைத் தேடுதற்கான அரசச்செல்வத்தின் மேம்பாட்டையும் எண்ணி இவற்றாலாய பயனை நாம் இப்பிறப்பிலேயே பெறவேண்டுமேயன்றி இவ்வயிற்றைப் பாழாக்கல் கூடாதென் றெண்ணுவதாகிய நல்லெண்ணத்திலும் சிறந்தவனுயினன் என்றுகூறப்பட்டது. (கஅ)

அரசன் மகன் இளவரசுக்குரியனுய வளர்தல்.

அளவில்தொல் கலைகள் முற்றி யரும்பெறல் தந்தை மிக்க
உளமகிழ் காதல் கூர ஓங்கிய குணத்தால் நீடி
இளவர சென்னும் தன்மை யெய்துதற் கணியன் ஆகி
வளர்இளம் பரிதி போன்று வாழுநாள் ஒருநாள் மைந்தன்.

(எ - து) பெறுதற்கரிய தந்தைமனம் மிகவும் மகிழ்தற்குக் காரணமாகிய ஆசை அதிகரிக்க, மைந்தனானவன் முதனூலாகிய வேதசிவாகமங்களின்வழியாய் வந்த வழிநூல் சார்புநூல் எனப்படும் எண்ணிறந்தகலைகளை ஓதிமுடித்து, அக் கலைஞானத்தால் மேலோங்கிய நற்குணங்களால் பெருமிதம் உடையனாய், இளவரசென்று சொல்லத்தக்க தன்மையை அடைதற்குரிய பருவத்திற்குச் சமீபித்தவனாய், வளரும் பருவத்தினையுடைய உதயகாலசூரியனைப்போல வளர்ந்துவரும்நாளில் ஓர்நாள் அம்மைந்தன்.

அரும்பெறல் தந்தைமிக்க உளமகிழ்காதல்கூற மைந்தன் அளவில் தொல்கலைகள் முற்றி ஓங்கியகுணத்தால்நீடி எனக்கூட்டுக.

இதனால்,—அரசனாதுமகன் தனக்குக் கிடைத்துள்ள குலமுதலியவற்றின் சிறப்பினையுணர்ந்து இவையிற்றைப் பாழாக்கல் கூடாதென்று அடையவேண்டியபயனில் ஊக்கப்பாடுடையனாகவே, முன் ஓதிய அளவினில் நில்லாது எல்லாக்கலைகளையும் ஒருங்கேயுணர்ந்தனன் என்பதூஉம், செங்கோல்முஸறயைச் செலுத்தற்குரிய குணங்களெல்லாம் நிரம்பப்பெற்று இனி இவர் இளவரசினை எய்தற்குரியவராயினரென்றுசொல்லுதற்குரிய பருவத்தை யடைந்தானெனறும், அத்தமிக்கும பருவத்தினையுடைய சூரியனைப்போலல்லாமல் உதயகால சூரியனைப்போல வளரும்பருவமுடையவனாய் வளர்ந்தனன் என்றுங் கூறப்பட்டன. (கக)

அரசன் மகன் உலாப்போதல்.

திங்கள்வெண் கவிகை மன்னன் திருவளர் கோயில் நின்று
மங்குல்தோய் மாட வீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமம் குலவு தோளான்
பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்தான்.

(எ - து.) நறுமணங்கமழும் மலர்மாலை தாழ்ந்தசையும் மார்பினையும், குங்குமப்பூக் கலந்துள்ள சந்தனக்குழம்பு தோய்ந்துள்ள தோள்களையும் உடைய அரசகுமாரன், சந்திரனைப்போலும் ஒளிவிடும் வெண்கொற்றக் குடையினையுடைய தனதுதந்தை வீற்றிருக்கும் அதிசயிக்கத்தக்க சகலசெல்வங்களும் நிறைந்துள்ள அரண்மனையினின்றும் புறப்பட்டு மேகங்கள்தவழும் மாளிகைகள் நிறைந்துள்ள இராஜவீதியின்கண் இளமைபொருந்திய அரசகுமாரர்கள் முன்னணியாகவும், எண்ணிறந்த சேனைகள் பின்னணியாகவும் சூழ்ந்துவரத் தேரின்மேல் ஏறினவனாய் மிக்ககாட்சியுடன் சென்றனன் என்பதாம்.

கொங்கலர்மாலைதாழ்ந்து குங்குமங் குலவுதோளான் திங்கள்வெண் கவிகைமன்னன் எனக்கூட்டுக.

தனது ஆணை என்னும் சக்கரத்தினால் பாவங்களைக்கடிந்து, நீதிமுறைதவறாமல் செங்கோலைச்செலுத்தி யாவரிடத்தும் புண்ணியங்களைப்பரப்பி அவ்வழியான்சுகங்களை அனுபவிக்கும்வண்ணம் செய்யும் இயல்புடையாரென்பார்—திங்கள்வெண்கவிகை மன்னன் - என்றார். அறமில்லாரிடத்துள்ள செல்வம் தீவினைவந் துற்றகாலத்துத் தேய்ந்துபோம் கொள்கையுடைத்தாகலான் அச்செல்வத்தைக் கொள்ளாது, அருளோடும் அன்போடும் அறம் இயற்றுவோரிடத்துள்ள செல்வம் தேய்ந்துபோதற் கெண்ணாது அவர்களிடத்துப் பிரியாது வாழும் எண்ணமுடைத்தாய பல அறங்களையும் விளைவித்துப் பலசுகங்களையும் மாறாதுகொடுத்து வளரும் கொள்கையுடைத்தாகலான் அசசெல்வத்தையே கொண்டிருக்கும் அரண்மனை என்பார்—திருவளாகோயில் - என்றார்.

இளவரசுபுரியும் பருவத்தை யடைந்தவனாகிய மன் தனதுநாட்டின் செழுமையும், செங்கோன்முறைப்படி ஆங்காங்கு நடக்கும் அறங்களையும், உயிர்களெல்லாம் சுகமுற்று வாழும் இயல்பினையும், கண்டுகளிப்பானெண்ணி சந்தனக்குழம்பைப்பூசி பூமாலைபூண்டு இரதாரூடனாய்ப் பரிவாரங்களுடன் புறப்பட்டனன் என்பார்--கொங்கலர்மாலைதாழ்ந்து குங்குமம் குலவுந்தோளான், மன்னிளங் குமரர்சூழ, பொங்கியதானைசூழத், தேர்மிசைப் பொலிந்து போந்தான் என்றார் (உ0)

பரசுவந் தியர்முன் சூதர் மாகதர் ஒருபால் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை ஒருபால் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி ஒருபால் வென்றி
அரசிளங் குமரன் போதும் அணிமணி மாட வீதி.

(எ - து.) (இரதாரூடனாய்ப் புறப்பட அக்காலத்து) கீர்த்திகளைச் சொல்லிப் புகழ்வோர்களாகிய வந்தியர் (மங்கலப்பாடல்களால்) முன்னே புகழ்ந்துகொண்டே செல்லவும், அரசனுக்கு அவ்வக்காலங்களில் செய்யவேண்டிய செயல்களை அறிவிக்கும் பான்மையாகக் கட்டியங் கூறுகின்றவர்களாகிய சூதர் கட்டியங்கூறிக்கொண்டேவரவும், அவர் பக்கத்தில் அரசர்களின் வீரத்தைப் புகழ்ந்து பாடுவோராகிய மாகதர் ஓர் பக்கத்தில் வீரங்களைப் பாடிக்கொண்டேவரவும், நறுமணங்கமழுங் கூந்தலையுடைய நாடகப்பெண்கள் அணிந்திருக்கும் வெள்ளியவளையல்களை ஒருபக்கத்திற்சிந்திவரவும், பேரிகையோடு சங்கவாத்தியங்களுமாகிய ஓசைகள் ஒன்றின்மேலொன்று மிகுந்து எழுந்து ஒலித்துக் கொண்டுவரவும், அரசிளங்குமாரன் இராஜவீதியின்கண்ணே போயினன் என்பதாம்.

அழகிய இரத்னமயமாய்ப் பிரகாசிக்கின்ற நாடகப் பெண்கள் அரசன்மகனைப் பார்க்குந்தோறும் விளையும் ஆசையினால் உண்டாகும் சரீரவாட்டத்தினால் கைகளினின்று வளையல்கள்கழன்று விழுதலின்—குழலார் சிந்தும் வெள்வளை - என்றார்.(உக)

தனிப்பெருந்தருமம் தன்செயல் செயயத்தொடங்கல்.

தனிப்பெரும் தருமம் தானோர் தயாஇன்றித் தானே மன்னன்
பனிப்பில்சிந் தையினில் உண்மைப் பான்மைசோ் தித்தால் என்ன
மனித்தர்தன் வரவு காணா வண்ணம்ஓர் வண்ண நல்லான்
புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்ததம் மறுகின் ஊடே.

(எ - து.) ஒப்பற்ற பெருமைபொருந்திய தருமதேவதையானது சிறிதுந் தயவில்லாமல் தேர்முதலிய நால்வகைச்சேனைகளுடைய மநுநீதிச் சக்கரவர்த்தியினது கலங்காத மனத்திலுள்ள உண்மைத்தன்மையைச் சோதிக்க வந்ததுபோல ஓர் அழகிய நல்லபசுவின் இளங்கன்றானது மனிதர்கள் தன்வருகையை அறியாதிருக்கும்வண்ணம் அத்திருவீதியில் துள்ளி ஓடிற்று என்பதாம்.

ஓர்வண்ண நல்லான் புனிற்றிளங்கன்று, மனித்தர் தன்வரவுகாணுவண்ணம், அம்மறுகினூடே துள்ளிப்போந்தது எனக்கூட்டுக.

ஈண்டு தனிப்பெருந்தருமம் என்றது - சிவதருமம். அத்தருமம் - பாசதருமத்தோடும், பசுதருமத்தோடும் சேராமல் தனக்குத்தானே சமானமாய் தனித்துநிற்குந்தன்மையுடைத்தாகலின் தனி - என்றும், அச்சிவதருமத்தை யாராயினும்ஒருவர் சிறிதளவிசெய்யினும், அது நிலத்தைப்போல்பரவி மலையைப்போல் உயர்ந்து அவர்களுக்குப் பெரும்பயனைத்தரும் ஆற்றல் உடைத்தாகலின்—பெருந்தருமம்-என்றும், அச்சிவதருமமானது - தான்கொடுக்கவேண்டிய பயனைக் கொடுக்கத் தலைப்படுங்காலத்து முன்னர் தருமஞ்செய்தாரை அத்தருமத்தில் அவர்கள்உள்ளமானது நிலைபெற்றிருக்கும்வண்ணம் சிறிதும் இரக்கமின்றித் தருமத்திற்குமாறான செயல்களைப்புறத்தில்காட்டல்இயல்பாகலின்—தான்ஓர்தயாவின்றி-என்றும், அங்ஙனம்தயாவின்றிச்செய்யுங்கால்தருமத்தை மேற்கொண்டவன் அக்கொடுஞ்செயலில் தனதுசித்தமானது கலங்காது, "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார், திண்ணியாராகப்பெறின்" என்ற பொய்யாமொழிப்படி, தாம் எண்ணிய அறத்தில் கலங்காதசித்தம் உடையராய் திண்ணியராக இருக்கப்பெற்றாராயின் அவரே அவ்வறத்தின்பயனை எண்ணியபடியே திண்ணமாகப் பெறுவரென்பது திண்ணமாகலின்—தானைமன்னன் பணிப்பில் சிந்தையினில் உண்மைப் பான்மை சோதித்தாலென்ன என்றும், தனிப் பெருந் தருமவடிவமே பசுவின் வடிவமாகலின் ஓர் வண்ண நல்லான் என்றும், இருவினைகளையும், அவற்றின்பயனாகிய சுவர்க்க நரகங்களையும் ஒழிக்கவல்ல சிவதருமமானது "நல்லநெறிஎய்துவதோர் காலம் தன் அன்பரைக்கண்டு இன்புறுதல், உய்யுநெறி சிறிதே உண்டாக்கிப், பையவே - மட்டாய் மலராய் வருநாளில் முன்னைநாள் மொட்டாய் உருவாம் முறைபோலக், கிட்டியதோர் - நல்லபிறப்பிற் பிறப்பித்து நாம்வினை எல்லையிரண்டும் இடையொப்பில், பல்பிறவி அத்தமதில் அன்றே அளவென்று பார்த்திருந்த சத்திபதிக்கும் தரம்போற்றி" என்று உமாபதிசிவம் அருளியபடி முன்னர்ச் சிறிதே சரியையில் அவாவுண்டாக்கி அவ்வழியானே முறையே கிரியை யாதிகளில் அவாவை முதிர்விக்குமாகலின் அஃதாவது சத்திபதிவாகிய முதிர்ந்தஅருட்பதிவானது பதிவதற்குமுன் அருள்தோன்றுவதாகிய அந்தஇளம்பருவத்தில் சிவப்பிரயோசனமாகவுள்ள சிவத்திரவியங்களுக்குத் தன்னாலாவது, பிறராலாவது ஏதேனுங்கேடுவரின் அதுகண்டு தன்மனம்பொறாது அதற்குமனவாக்குக் காயங்களால் பரிகாரந்தேடுதலொழிந்து பிறரால் கேடுவருமாயின் அவர்களையும் தன்னால்வருமாயின் தன்னையும் கேடுசெய்யத்துணிவதாகிய துணிவே துள்ளும். அவ்வுண்மை உலகினர் அறிய சிவதருமவடிவாகிய முதிர்ந்த அபபசுவின் இளங்கன்றானது துள்ளிப் போனதாகலின்—புனிற்றுஇளங்கன்று துள்ளிப் போந்தது என்றும், இங்ஙனமான துணிவாகியஅருட்பதிவு பிறவிதோறும் தொடர்ந்துவரும் சிவபுண்ணியவிசேடத்தான் இனிப்பிறவாநெறி கூடுங்காலத்தில் காணக்கூடுமேயன்றி இருவினையுட்பட்டுழலவல்ல மனிதர்கள் தங்களறிவானும தாம்காணும்நூல்களானுங் காணக்கூடாதாகலான்—மனித்தர் தன்வரவுகாணுவண்ணம் என்றும், மனுநீதியார் "மாமறைப்புற்றிடங்கொண்டவர் பூசனைக்கு அங்கண்வேண்டும் நிமந்தம் தங்க ஆகமம் சொன்ன முறைமையால் ஆராய்ந்துளான் என்றுமுன்னே கூறியுள்ளாராகலின், அங்ஙனம் அவருக்குள்ள தகுதியைக் காட்டுங்கடனுடையான் அறிவறிந்தமகனேயாகலான் இறைவன் திருவுள்ளமும் அவ்வழியே வரப்பெற்றதாகலின் - அம்மறுகினூடே என்றுங்கூறினர்.

இதனால்,—"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு, ஆக்கம் எவனோ உயிர்க்கு" என்று வள்ளுவனார்கூறியுள்ளாராகலின், மக்கட்பதடியல்லாத மக்கட்பிறப்புடையான் அப்பிறப்பினால் அடையப்படுவனவாகிய வீடும் பொருளின்பங்களும் அறமன்றிவாராவென்றுவெளிப்பட்டன, படவே, அம்மூன்றையும் வேண்டுவோன் அறத்தையே ஆக்கமாக எண்ணவேண்டுமேயன்றி பொருளின்பங்களை ஆக்கமாக எண்ணுதல்

கூடாது. ஏனெனின்—"அறத்தினூஉங்கு ஆக்கமும்இல்லைஅதனை, மறத்தலினூஉங்கு இல்லைகேடு" என்றதனுலென்க. எனவே—அறத்தினது ஆக்கமே பொருளும் இன்பமும் என்றெண்ணுது அறத்தைமறந்து, பொருளின்பங்களையே ஆக்கமாக எண்ணி அவற்றைப் பாதுகாக்கத் தலைப்படுவானுயின் அவை அவனுக்குக் கேட்டைத்தந்து தாம் அவனிடத்துநில்லாதுபோய்விடுமென்பதும், அறத்தையே வீடாகவும் பொருளின்பங்களாகவும் எண்ணி பொருளின்பங்களைமறந்து அறத்தைக் காக்கத் தலைப்படுவானுயின் அது பொருளின்பங்களைத் தந்து தானும் அவனைவிட்டுப்போகாதென்பதுமாம். இவ்வுனமானநீதியை ஐயமின்றி யுணர்ந்தபெருமான் மனுநீதியாரேயாகலானும், அந்நீதியையே யாவரும் அறிந்துய்யத் தமதுசெங்கோலைச் செலுத்துகின்றவராகலானும், அவர் ஆக்கமாகக் கொண்டிருக்குந் தருமதேவதையும் அந்தநீதியாளை அறத்தில்தேடின்றி நிறுத்தி பொருளின்பங்களாகிய செல்வமும், சிறப்பாகிய வீடும் ஆகிய ஆக்கத்தைத்தரத் தான் மிகவூக்கமாக, ஓர்வண்ணநல்லஆ (பசுவா)க உருக்கொண்டுவந்து தன்கன்றை அரசன்மகனுகிய கன்றினிடத்தில் தான்செய்யவேண்டிய செயலைச் செய்யத்தலைப்பட்டதென்று கூறப்பட்டது.

இவ்வுண்மையை பின்னர்கூறப்படும் செயலாற்காணப்படுமென்க. (உஉ)

தாய்ப்பசு இரங்கல்.

அம்புனிற் றாவின் கன்றோர் அபாயத்தின் ஊடு போகிச்
செம்பொனின் தேர்க்கால் மீது விசையினுல் செல்லப் பட்டங்
கும்பரின் அடையக் கண்டங் குருகுதாய் அலமந் தோடி
வெம்பிடும் அலறும் சோரும் மெய்ந்நடுக் குற்று வீழும்.

(எ - து.) அங்ஙனந் துள்ளியோடிய அழகிய பசுவின் இளங்கன்றுனது, தப்பிப்போதற்குக் கூடாத ஓர் அபாயவழியாகச்சென்று (அங்குநிலைத்திருக்கின்றபொழுது) அக்கன்றின்மேல் செம்பொன்மயமாகிய தேர்ச்சக்கரமானது செல்லும்விசையினுற் செல்ல, அக்கன்றுனது இறந்து மேலுலகமடைய அதனை அக்கன்றின்பால் உருக்கமுடைய தாய்ப்பசுவானது கண்டு, அக்கன்று வீழ்ந்துகிடக்கும் அவ்விடத்தில் கதறியழுது ஓடி விம்மும் அலறும் சோரும் உடம்புநடுங்கிக் கீழேவிழும் என்பதாம்

துள்ளித்துள்ளிச் சென்ற பசுவின்கன்றுனது வீதிவழியாகநேராகச் செல்லாது, விசையாகச்செல்லும் இரதத்தின்சக்கரத்தின்கீழேநேராகத்துள்ளிச்சென்றதென்பார் - கன்று ஓர் அபாயத்தினூடுபோகி என்றார்.

இதனுல்—தருமதேவதையானது - அரசன்-அறத்திற்கு அபாயம் எவ்வகையானும் வராவண்ணம் காக்கும எண்ணமுடையவனேயன்றி தன்னுல்தேடப்படும் பொருள்இன்பங்களுக்குவரும் அபாயத்தை ஒருசிறிதும் எண்ணுகின்றவனல்லன் என்னும் உண்மையை வெளிப்படுத்தக் கருதியபடியே பசுவின்கன்றுனது ஓர் அபாயத்தினூடுபோகி என்று கூறப்பட்டது.

அல்லதூஉம் - அறத்திற்கு அபாயம் வராவண்ணம் காப்பதொழிந்து, பொருளின்பங்களுக்கு அபாயம் வராவண்ணம் காப்பவர் அவைகளைக் காப்பாரல்லரென்றும், அறத்திற்கு அபாயம் வராவண்ணங் காப்பவரே பொருளின்பங்களுக்கு அபாயம் வராவண்ணம் காப்பவரென்றும் தருமதேவதை உலகினருக்கு அறிவுறுத்த எண்ணியதுமாம் என்க. (உங)

அரசன் மகன் இரங்கல்.

மற்றது கண்டு மைந்தன் வந்ததிங் கபாயம் என்று
சொற்றடு மாறி நெஞ்சில் துயருழந் தறிவ ழிந்து
பெற்றமுங் கன்றும் இன்றென் உணர்வெனும் பெருமை மாளச்
செற்றனன் செய்கேன் என்று தேரினின் றிழிந்து வீழ்ந்தான்.

(எ - து.) அங்ஙனங் கன்றைக்கண்ட தாய்ப்பசுவானது வெம்பிடுவதையும், அலறுவதையும், சோர்வதையும், மெய் நடுக்குற்று வீழ்வதையும், அரசகுமாரன்கண்டு நமக்கு இங்கு அபாயம் வந்ததென்று மனதிலெண்ணி வருந்திச் சொல்லானது தடுமாற்றத்தை யடைந்து தன்அறிவும் அழிந்து, இன்று இப்பசுவும் கன்றும் எனதுசிறந்த அறிவின் பெருமையானது கெடும்படியாகச் செய்தன இதற்குயான் என்செய்யக்கடவேன் என்று தேரினின்றும் தனது நிலையறியாது கீழேவீழ்ந்தனன் என்பதாம்.

மைந்தன் மற்றதுகண்டு எனக்கூட்டுக.

இதனால்—அரசனுடைய குமாரன் தவமுயன்று அரிதிற்பெற்ற தனியிளங்குமரன் ஆகலினாலும், சிவமுயன் றடையுந் தெய்வக் கலையில் திருந்த ஒதினவன் ஆகலினாலும், பசுவினது துயரத்தைக் கண்டபொழுதே இங்கு அபாயம்வந்தது என்றெண்ணி மனத்தில் துயருழந்தொழியாது, என் உணர்வெனும் பெருமையாள இன்று இப்பெற்றமும் கன்றும் செற்ற, இதற்கு என்செய்கேன் என்று அறிவழிந்து வீழ்ந்தான் என்று கூறப்பட்டது.

எனவே—"பவமுயன் றதுவும்பேறே" என எண்ணியநமக்கு இப்பிறவி அலுமாகும்படியாக இப்பெரும்பாவம் வந்துதலைப்பட்டதே, இது உடலைவருத்தும் துன்பத்தைக்கொடுத்து அவ்வளவில் ஒழியத்தக்கதல்லவே, உணர்வை ஒழித்து விடுமே. அதுபோமாயின் நாம் நூல்களில்கண்டுணர்ந்த அறத்தையுணர்ந்து நாம அடைய வேண்டிய பொருளின்பயிர்களை யடைவதெங்ஙனே! என்றெண்ணி அறிவழிந்து நிலை மயங்கி வீழ்ந்தனனென்க. இழிந்தான் என்னாது வீழ்ந்தான் என்றதனால் - நிலையறியாது - என்றும். (உச)

> அலறுபே ராவை நோக்கி யாருயிர் பதைத்துச் சோரும்
> நிலமிசைக் கன்றை நோக்கி நெடிதுயிர்த் திரங்கி நிற்கும்
> மலர்தலை உலகங் காக்கும் மனுவினும் எங்கோ மானுக்
> குலகிலிப் பழிவந் தெய்தப் பிறந்தவா ஒருவன் என்பான்.

(எ - து.) அங்ஙனம் வீழ்ந்த அரசகுமாரன் பலவாறு அலறுகின்ற பெரியதாய்ப் பசுவைப் பார்த்துப் பொறுது தனது அரியவுயிரும் பதைக்கப் பதைத்துச் சோர்வான். பின்னர் பூமியின்மேல் இறந்துகிடக்கும் இளங்கன்றைப் பார்த்து பெருமூச்சுவிட்டு அழுதுநிற்பான். அங்ஙனம் நிற்குங்கால் இடம் பரந்த இவ்வுலகத்தைத் தாய்போற் காக்கும் மநுவென்ற எனது தந்தைக்கு இப்படிப்பட்ட பழி இவ்வுலகின்கண் வந்தடைய யானொருவன் பிள்ளையாகப் பிறந்தவண்ணம்போலும் ஆ! இது என்னவென்று சொல்வான் என்பதாம்.

இதனால்,—இன்று பெற்றமும் கன்றும் என் உணர்வெனும் பெருமைமாளச் செற்ற என்று உணர்வுகெட்டுவீழ்ந்த குமாரன், அலறுகின்ற தாய்ப்பசுவையும், இறந்து கிடக்கின்ற கன்றையும் கண்டமாத்திரத்தில் சிறிது உணர்வுதோன்ற, தோன்றிய அவ்வுணர்வு அவைகளின்வசமாய் பதைத்தும சோர்ந்தும பெருமூச்செறிந்தும் அந்தோ! என்றிரங்கியும், அம்மட்டில் அடங்காமல் என்தந்தை என்னால் புண்ணியம் வந்தெய்த என்னைப் பெற்றதேயன்றி இப்பெரும்பழிவந் தெய்தவோ பெற்றது ஆ! ஆ! என்னை அவர்பெற்றதும் நான் அவருக்குப் பிறந்ததும் நன்று! நன்று!! அவர் புண்ணியம் அப்படியிருந்ததோ! என்பாவம் இப்படியிருந்ததோ! என்று மனங்கலங்கினமை கூறப் பட்டது. (உரு)

> வந்தஇப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
> அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவ தறமே யாகில்
> எந்தைஈ தறியா முன்னம் இயற்றுவன் என்று மைந்தன்
> சிந்தைவெந் துயரம் தீர்ப்பான் திருமறை யவர்முன் சென்றான்.

(எ-து.) அங்ஙனஞ் சொல்லிப்பின்னர் அரசகுமாரன் நானறியாமலும் செய்யாமலும் வந்த இப்பழியை மாற்றுதற்குரிய பிராயச்சித்தவிதியை வேதநூலில் உண்மையுணர்ந்த வேதியர்கள் விதிக்கின்றவிதிப்படியே யான் செய்து பரிகரித்துக் கொள்வது தருமமாகவே யாகுமானல், என் தந்தை இச்செய்தி யறிவதற்கு முன் அப்பரிகாரத்தைச் செய்து கொள்வன் என்று மனத்தில் உண்டாகிய கொடியதுயரத்தைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு அறிவிற்சிறந்த பிராமணரிடத்தில் போயினன் என்பதாம்.

மைந்தன் - வந்தவிப்பழியை மாற்றுவகையினை எனக் கூட்டுக.

இதனை,—"இதம் அகிதங்கள் என்பது இயல் மனவாக்குக்காயத்தி(னல்), இதம் உயிர்க்கு உறுதிசெய்தல் அகிதம் மற்றது செய்யாமை," "என்றும்" இதம் அகிதங்கள் எல்லாம் இறைவனே ஏற்றுக்கொண்டு அங்கு இதம் அகிதத்தால் இன்பதுன்பங்கள் ஈவன்" என்றும், "இறைவன் இங்கு ஏற்பது என்னை இதம் அகிதங்கள் என்னில், நிறைபரன் உயிர்க்குவைத்த நேயத்தின் நிலைமையாகும்" என்றும், அருள்நூலிற்கூறிய வாற்றானறிக. அஃதாவது—பெருங்கருணைத் தடங்கடலாகிய இறைவன் ஆன்மாக்கள் மனவாக்குக் காயங்களால் செய்யப்படும் இதம் அகிதம் என்னும் இரண்டனுள் - இதத்தில் அனுக்கிரகமும் அகிதத்தில் நிக்கிரகமும் வைப்பனென்பதன்று என்னெனில்—உயிர்க்குவைத்தநேயத்தின் நிலைமையினலாம் எனவே,—உயிர்கள் இதஞ்செய்வாராயின் அதற்குத்தக்க இன்பமும், அகிதஞ் செய்வாராயின் அதற்குத்தக்க துன்பமும் செய்வதன்று. மற்றென்னின்,—செய்யும் இதம் சிறிதாயினும் அதற்குப் பெரிதான இன்பமும், செய்யும் அகிதம் பெரிதாயினும் அதற்குச் சிறிதான துன்பமும் செய்வனேயாம். இவ்வுண்மைதோன்றவே "அறமுலி இதஞ்செய்வோருக்கு அனுக்கிர(பெருக்)கத்தைச் செய்வன், மறமலி அகிதஞ் செய்யின் நிக்கிர(சுருக்)கத்தைச் செய்வன்" என்பதாம். இதுதான் மறைநூல் வாய்மையாகும்.

இஃதுணர்ந்தே அரசகுமாரன்—நந்தந்தை இன்றளவும் செய்வதெல்லாம் இதமேயன்றி அகிதம்மறந்தும் செய்ததின்று. இந்த அகிதமோ தந்தையின் புத்திபூர்வகத்தினலுமன்று, நமது புத்திபூர்வகத்தினலுமன்று அபுத்திபூர்வகமாயினும் இந்த அகிதச்செயலுக்கு நாமேகாரணமாயுள்ளோம் இந்த அகிதத்திற்கு நாமேதுய்க்கவேண்டிய யாதொருதுன்பமோ அதனை நமதுதந்தையறியுமுன்னமே யாம் பரிகரிக்க வேண்டுவது எண்ணிச்செய்யலாம். அதனை நாமே பரிகரித்தல் வேண்டும். நமக்கு வந்துசேரவேண்டியதாகிய அகிதமாகிய துன்பம் சிறிதளவோ பெரிதளவோ எவ்வாறாயினும் நிகழுக. இப்பொழுது நம்மால் நமது தந்தைக்குவந்த இப்பழியை மாற்றவேண்டுவது நமது கடமையாகலின் அம்முறையை அந்தணரால் ஆராய்ந்து செய்வோம் அவ்வாராய்ச்சியில் முழுவதும் ஒழியும்வகையிலதாயினும் பரிகாரம் ஏதேனும் உளதாயின் அதனை நாமேயறிந்து செய்வோம். இப்படிச்செய்துகொண்டாலன்றி நம்முடைய சிந்தையில் உண்டாகியதுயரம் நீங்குதல் அரிதென்று அறிவிற்சிறந்த அந்தணரைநோக்கிச் சென்றனன் என்று இதனல் கூறப்பட்டது.

இவ்வரசகுமாரன் "தெய்வக்கலைபல திருந்தவோதி"யவனாகவும், "அளவில்தொல்கலைகள்முற்றி"னவனாகவும் இருந்தும், பரிகாரத்தைத் தானேயறிந்து செய்யத்துணியாது அந்தணரைத் தேடிச்சென்றது என்னையெனின்,—கன்றுஇறந்தமையும், தாய்ப்பசு அலறுவதையும் இவன்கண்டபோது "சொற்றமொழி நெஞ்சில் துயருழந்து அறிவழிந்து, பெற்றமும் கன்றும் இன்று என் உணர்வெனும் பெருமையமாளச்செற்ற" என்று கூறி அறிவு கலங்கினனாகலின்—மறைநூல் வாய்மையை அந்தணரிடத்துச்சென்று அறியத்தொடங்கினனென்க.

"எந்தையீது அறியாமுன்னம் இயற்றுவன்" என்று விரைந்தது எற்றுக்கெனின்,—ஓர் புண்ணியச்செயலை ஒருவர் சொன்னலும் கேட்டாலும் புண்ணியம் அவர்க்கும் உளதாமென்று கூறப்பட்டிருத்தலால் அஃதேபோல்—இப்பாவச்செயலைச் சொன்ன

லும் கேட்டாலும் பாவம் உண்டாமென்பதில் ஐயமுண்டோ. ஆகவே—நாம் செய்த பாவம் நம்மோடொழியாது இதனை நமது தந்தை கேட்கவருமாயின் அவர்பாலுந்தொடரு மன்றோ. அங்ஙனம் அவர்பால் தொடராவண்ணம் அப்பாவத்தைப் பரிகாரத்தால் தடுப்போமென்று தீவரப்பட்டதென்க. (௨௧)

தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தஆத் தரியா தாகி
முன்னெரு நப்புயிர்த்து விம்மி முகத்தினில் கண்ணீர் வார
மன்னுயிர் காக்கும் செங்கோன் மனுவின்பொற் கோயில் வாயில்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்த தன்றே.

(இ - ள்.) அரசகுமாரன் அந்தணர் (இருக்குமிடத்தைநோக்கிச் சென்றபோது) தன்னுயிர்க் கொப்பாகிய இளங்கன்றானது இறக்க, அதனைக்கண்டு வருந்திய தாய்ப் பசுவானது சிறிதும் மனஞ்சகிக்கமாட்டாது முன்னர் நெருப்புப்பொறி நாசியினின்றும் பறக்கப் பெருமூச்சுவிட்டழுது முகத்தில் கண்ணீரானது ஒழுக அத்துயரம்நீங்குமிடம் இதுவாமென்று நாடிச்செல்வதுபோல் நிலைபெற்ற உயிர்களை நிலையாகக் காக்கின்ற செங்கோலையுடைய மநுவினது பொன்மயமாகிய கோயிலின் முன்வாசலில் கட்டப் பட்டிருக்கும் பொன்னினால் அலங்கரிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி மணியினிடஞ்சென்று அம்மணியைத் தன் கொம்பினால் அடித்தது என்பதாம்.

கன்றிழந்த பசுவானது பசுப்பிறவியையே யுடையதாயின் அவ்விடத்திற்றானே வீழ்ந்து கதறிக்கொண்டிருந்து ஒழியும். அது பசுவடிவினது தருமசொரூபமாகலின் அங்ஙனம் அழுதுஒழியாது தந்தைக்குப் பாவம்வந் தணுகாவண்ணம் பரிகாரந்தேடச் சென்ற அவனுக்குமுன் தான் விரைந்துசென்று தான்செய்யும்செயலில் தலைப்பட்டு மனுவின் பொற்கோயில வாயில்மணியைத் தனது கொம்பினால் அடித்ததென்றார்.

தருமதேவதையாகிய அப்பசு அங்ஙனம் ஏன் செய்யத் துணிந்தது எனின்,— அங்ஙனம் விளைந்த கோஹத்தியானது மகனுடைய பாவத்தினாலாவது தந்தையின் பாவத்தினாலாவது நிகழ்ந்திருப்பின் மகன் எண்ணியபடியே பரிகாரத்தால் நீங்கும். அப்பாவச்செயல் தன்னால் விளைந்ததாகலின் அப்பாவச்செயலைப் புண்ணியச் செய லாகக விரைந்து சென்றதென்க.

புண்ணியச் செயலாகச சென்றதாயின் தரியாதாகி முன் நெருப்புயிர்த்து விம்மி முகத்தினில் கண்ணீர்வாரச் செல்லலாமோ எனின்,—தரியாது தவித்தலும், பெரு மூச்சுவிடுதலும், விம்முதலும், முகத்தினில் கண்ணீர்வருதலும் புண்ணியமுடையா ரிடத்து நிகழும் செய்கையாகலினானும், அச்செயல் நிகழவரும் காலமே அவர்களது புண்ணியபயன் வெளிப்படுங்காலமாகலினானும் அத்தருமதேவதை அரசனது புண்ணி யபயனை வெளிப்படுத்தற்கு அன்புருவாய்ச்சென்றதென்க.

மணியைக் கோட்டினால் புடைத்தது என்னையெனின், அரசன் தனது செங்கோ லால் மன்னுயிரைக் காக்கும் இயல்புடையவனேயன்றி வேறொன்றான் அன்றாகலான் தருமதேவதையும் அவ்வரசனைத் தருமநெறியினின்றும் தவறாதுகாக்க தனது கொம்பி னால் புடைத்ததென்க.

பொற்கோயில்வாயில் பொன்மணி கட்டியிருப்பது என்னையெனின், அரசன் தன்னால் தன்பரிசனத்தால் பகைவரால் கள்வரால் உயிர்களால் வருவனவாகிய ஐந்து பயங்களையுந் தனது செங்கோலால் நீக்கத்தக்கவனாயினும் ஊழ்வலியான் தன்னையறி யாது பழிபாவங்கள் நேரிடுமாயின், அதனைத் தருமதேவதை தானே முன்னின்று ஒழித்தற்பொருட்டு அம் மணிவழியால் எவ்வகையினாலாவது தெரிவித்தற்கென்க.

என்னெனின், அரசனது கோயில் வாயில் தருமதேவதைநுழையும் வாயிலேயன்றி பழி பாவங்களாகிய அதர்மங்கள் நுழையும் வாயிலன்றாகலான் அத்தருமதேவதை

தான் உள்ளே செல்வதாகிய அவ்வழியில் காலவேற்றுமையால் ஓர்கால் அதர்மம்வரத் தலைப்படுமாயின் அதனை உள்ளேபுகவொட்டாது தடுத்து அரசனைக்கொண்டு அதனைப் புறம்போயோட்டுவதற்கு என்க.

இதனால்,—அரசனது செங்கோன் முறை அறியவெளிப்படுத்தற்பொருட்டும் அங்ஙனம் செங்கோல்முறையால் தேடிய புண்ணியத்தைக் காக்கும் பொருட்டும் தருமதேவதை தனது கொம்பால் மணியைப் புடைத்ததென்று கூறப்பட்டது. (௨௭)

பழிப்பறை முழங்கோ ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ வேந்தன்
வழித்திரு மைந்தன் ஆவி கொள்வரும் மறலி ஊர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்போ என்னத்தன் கடைமுன் கேளாத்
தெழித்தெழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்க போது.

(இ-ள்.) அச்சக்கரவர்த்தி தன் மாளிகையின் வாயிலின்முன் இதுகாறுங் கேட்டறியாத பேரோசையானது தன்செவியின் வழியே புகுந்தபோது அவ்வொலியைக்கேட்டு இது தன்னாட்டில் பழிவரும்போது ஒலிக்கும் பழிப் பறையினது ஓசையோ, அன்றிப் பாவமே ஒருருவெடுத்து ஆரவாரிக்கின்ற ஓசையோ, தனது மரபின் சந்ததியில் பிறந்த மகனது புத்திரனது உயிரைக் கொள்ளுமாறு வருகின்ற இயமனது ஊர்தியாகிய எருமைக்கடாவின் கழுத்திற் கட்டப்பட்ட மணியினது ஓசையோ என்னையுற்று,—

மன்னன் தன்கடைமுன் தெழித்தெழும் ஓசை செவிப்புலம் புக்கபோது கேளா பழிப்பறைமுழக்கோ எனக்கூட்டுக.

மணியை அதன் நாவினால் அசைக்குங் காலத்து இரண்டுபக்கத்தில் இரண்டோசையும், பின் நாவானது நிற்க ஓரோசையும் உண்டாதல் இயல்பாகலின் பசுவானது தனது கொம்பினால் மணியை அடித்தகாலத்தில் அரசனுக்கு மூன்றோசை கேட்டதென்க. அவற்றுள் ஓரோசை, பழி ஓசை, மற்றொன்று பாவத்தின் ஓசை மூன்றாவது ஓசை யமனுடைய கடாவின் ஓசை.

யாவரிடத்தாயினும் பழிச்செயல் வருமாயின் பாவம் மிகுமென்றும், அவ்விரண்டும் மிகுமாயின் அவரிடத்து யமன் விரைந்து வருவானாகலான் அங்ஙனம் வரும்பொழுது அவன் ஊர்ந்துவருங் கடாவின் கழுத்தணியாயுள்ள மணியின் ஓசை மேலிட்டொலிக்குமெனவும் இதனால் அறிவிக்கப்பட்டதென்க.

ஆகவே,—தருமதேவதையே பசுவாதலின் அது தனது கொம்பினால் மணியையடித்து அதிலெழுந்த முதலோசையினால் மகனால்சேர்ந்த பழியையும், இரண்டாம் ஓசையினால் அம்மகன் பாவத்தாக்குஞ்செய்கையும், மூன்றாம் ஓசையினால் அரசன் அறக்கண்ணோனாகின்ற தருமக்கண்ணோனாகிய யமனைப்போல் செய்யவேண்டிய கொடுஞ்செயலையும் அறிவுறுத்தியவாறுமென்க

இதனால்,—புகழோசையும், புண்ணியத்தின் ஓசையும், காலகாலனாகிய இறைவனது இடபவூர்தியின் கழுத்தணிமணியின் ஓசையும், கேடும்புண்ணியமுடைய அரசன் செவியில் பழிமுதலியவற்றையுணர்த்தும் பேரோசைகேட்டதென்று கூறப்பட்டது.

எனவே—புகழோசையும், புண்ணியவோசையும், தருமவோசையும் ஆகிய மூன்றோசையும் வெளிப்படுங் காலம் வரவே பழியும் பாவமும் அதர்மமும் அந்நகரத்தைவிட்டுப் போவதற்குப் புறப்பட்டு அச்செயல் அரசன் அறியுமாறு கூச்சலிட்டுச் சென்றன என்பதாம். (௨௮)

ஆங்கது கேட்ட வேந்தன் அரியணை யிழிந்து போந்து
பூங்கொடி வாயில் நண்ணக் காவலர் எதிரே போற்றி

ஈங்கிதோர் பசுவந் தெய்தி இறைவநின் கொற்ற வாயில்
தூங்கிய மணியைக் கோட்டால் துளக்கிய தென்று சொன்னார்.

(எ - து.) அரசிருக்கையாகிய சிங்காதனத்தில் வீற்றிருந்த அரசன்—பழியோ பாவமோ மறலியூர்திக் கழுத்தணிமணியினோசையோ என்று எண்ணும்படியான ஓசையைக் கேட்டமாத்திரத்தில் அக்கணமே சிங்காதனத்தினின்றும் இறங்கி நடந்து அழகிய கொடிகட்டியிருக்கும் கோபுரவாயிலை வந்தடைய, அங்குள்ள காவலாளர் அரசன் வருகையைக்கண்டு எதிரேசென்று வணங்கி எங்கள் ஆண்டவரே! தேவரீருடைய வெற்றிபொருந்திய வாயிலின்கண் கட்டித் தொங்குகின்ற ஆராய்ச்சிமணியை இப்பொழுது ஓர்பசுவானது வந்து இம்மணியைச் சமீபித்து அதனைத் தனதுகொம்பினால் அடித் தசைத்தது என்றுசொன்னார்கள் என்பதாம்.

காவலரெதிரே போற்றி இறைவ நின்கொற்றவாயில் தூங்கிய மணியை ஈங்கிதோர் பசுவந்தெய்தி கோட்டாற் றுளக்கியதென்று சொன்னார் எனக்கூட்டுக.

அரசனால் கேட்கப்படாததும் என்றுங் கேட்டறியாததுமாகிய ஓசைஎன்பார்—ஆங்கது கேட்டவேந்தன்—என்றும், அமைச்சர் காவலாளர் முதலியோர்வாயிலாளன்றித் தான் நேராயறிவதற்கே அம்மணி கட்டப்பட்டுள்ளதாகலின் அம்மணியோசையைக் கேட்டமாத்திரத்தில் இவ்வோசை உண்டாதற்குக்காரணம் யாதென்று விரைந்துகேட்க வாயிலின்கண் வந்தனன் என்பார்—அரியணை யிழிந்துபோந்து பூங்கொடிவாயில் நண்ண—என்றும், அரசனைப்போலவே அவ்வோசையைக் காவலாளருங் கேட்டறியாதவராகலான் அவர்களுந்திகைத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் அரசனும் விரைந்து வந்ததைக்கண்டு திடுக்கிட்டு எதிர்சென்று அடிபணிந்து நின்றனரென்பார்—காவலர் எதிரே போற்றி—என்றும், வாயிலின்கண் எவ்வெக்கணத்தில் எதுஎது நிகழ்கின்றனவோ அதை அதைத் தாழ்க்காது அவ்வக்கணமே அரசனுக்குத் தெரிவித்தல் நமது கடமையாயிருக்க அதனை நாம் இப்பொழுது செய்யாதபடியினாலன்றோ அரசன்வரநேர்ந்தது. இனி அரசன் கேட்டபின்னர் சொல்லுவோமென்று இருப்போமாயின் குற்றத்தின்மேல் குற்றமுடையவராவோம் என்றெண்ணிக் காவலாளர் மிகவிரைவுடன் நடந்தசெய்திகளைக் கூறினார் என்பார—வேந்தன்வாயில்நண்ணக் காவலரெதிரேபோற்றி இறைவ நின் கொற்றவாயில் தூங்கியமணியை ஈங்கிதோர் பசுவந்தெய்தி கோட்டாற் றுளக்கியது என்று சொன்னார் என்றுங்கூறினார்.

இவ்வாசர் பெருமானை "மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கெலாம் கண்ணும் ஆவியும் ஆம்பெருங்காவலான்" என்று கூறியுள்ளாராகலான் ஏனைய காவலாளரெல்லாம் கண்ணாற் கண்டபின்னர் காக்கும் காவற்றொழிலுடைய சிறுகாவலர் என்றும் அரசன் காணாதகண்ணைக் கொண்டு ஓசைப்படுதற்கு முன்னரே உயிர்களுடைய குறைபாடுகளையறிந்து அக்குறைகளை தனக்குவந்த குறைகளாகவே எண்ணி அவற்றை நீதிவழியான் தன்னறிவான் அறிந்து அவைகட்குச்செய்வனவற்றைத் துணிந்துசெய்யும் பெருங்காவலாளனாகலின் அரியணையிழிந்து காவலாளியைப்போல் தானே ஓடிவந்தனன் என்று அரசனுக்குக் காவலிடத்துள்ளவிரைவும், உயிர்களிடத்துள்ள இரக்கமிகுதியுந் தோன்ற—ஆங்கதுகேட்டவேந்தன் அரியணையிழிந்து போந்து வாயில்நண்ண—என்றாரென்க. (௨௧)

மன்னவன் அதனைக் கேளா வருந்திய பசுவை நோக்கி
என்னிதற் குற்ற தென்பால் அமைச்சரை இகழ்ந்து நோக்க
முன்னுற நிகழ்ந்த எல்லாம் அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறி அமைச்சன் மன்னன் தாளிணை தொழுது சொல்வான்.

(எ - து.) அம்மநுநீதிச்சக்ரவர்த்தி தனது காவலாளர் கூறியதைக்கேட்டு வருத்தமுற்றிருக்கும் பசுவைப் பார்த்து இதற்கு என்னிடத்தில் நேரிட்டதுன்பம் என்ன

வென்று மந்திரிமார்களை அவமதித்துப் பார்க்க அவ்வரசகுமாரனிடம் முன்னடந்த செய்திகளெல்லாம் அறிந்தவனும் முதிர்ந்த கல்விகேள்விகளை யுடையவனும் தொன்று தொட்டுள்ளவனும் ஆகிய ஓர்மந்திரி அவ்வரசன் பாதங்களைவணங்கிச் சொல்வானு யினன் என்பதாம்.

காவலாளிகள் எதிரேவந்து நிகழ்ந்தசெய்திகளைச் சொல்லத்தொடங்கியபோது அவர்களையும் அவர்கள்கூறும்வாய்மொழிகளையும் நோக்குங்கண்ணுடையவனு யிருந்து பின்னர் தன்வருத்தத்தைத் தெரிவிக்கவந்த பசுவை நோக்கின னென்பார்—மன்னவன் அனைத்தோரா வருந்திய பசுவைநோக்கி—என்றார். அரசன் - யாவும் கண்ணாற்பார்த்துக் காக்குந்தன்மையுடையவ னன்று, செவியாற்கேட்டுக் காக்குந்தன்மையுடையவன் மந்திரிகளை அப்படியன்று, கண்ணால்பார்க்க வேண்டியவற்றைக் கண்ணால் பார்த்தும், காதால்கேட்க வேண்டியவற்றைக் காதால்கேட்டுங்காக்குந்தன்மையுடையவர். ஆகலான் காவலாளிகள் பசுவினால் நிகழ்ந்தசெய்திகளைச் சொல்லியபோது அச்செய்திக்குக் காரணம் அவர்களைக் கேட்காது மந்திரிகளைக் கேட்டனன் என்பார் அமைச்சரை எண்ணிதற்கு உற்றது என்றார் தன்னிடத்தும் தனது காவலுட்பட்டாரிடத்தும் உயிர்களிடத்தும் பழி பாவங்கள் வந்தணுகாவண்ணம் தமது மந்திராலோசனையினாலும் தம்மால் செய்யப்படும் செயல்வகைகளினாலும் காத்தல் கடப்பாடுடையவர் மந்திரிகளாகலான் இவர் தாம் காக்குங்காவலையிகழ்ந்தபடியினாலன்றோ இப்பசுவிற்கு எவ்வகையானோ இடர்வந்துற்றது என்று அவர்கள் செயலை வெறுத்து முகம்சுளித்து நோக்கினன் என்பார்—அமைச்சரை இகழ்ந்துநோக்கி—என்றார். உங்களுடைய காவலில் நீங்கள் சோர்வடைந்தபடியினாலன்றோ இவ்வறிவுடையபசுவானது தன்னுடைய இடரை என்னுடையவாயிலின்கண்ணுள்ள மணியைத் தன் கொம்பால் அடித்து என்னை யிங்கு வரும்படியாகச்செய்தது, ஆகலின் இனியேனும் நீங்கள் இதன் காரணத்தை அறிந்துசொல்லுங்கள் என்பார்—எண்ணிதற்குற்றது—என்றார். 'ஓ மந்திரிகளே! இப்பசுவிற்கு வேறொருவரால் தனக்குத் துன்பம் நேரிட்டிருக்குமாயின் எனதுவாயிலின்கண்வந்து மணியைக் கொம்பினால் அடிக்காது காவலாளர்கள் அறியுமாறு பதைத்தும் சோர்ந்தும் கதறியுங்கிடக்கும் அங்ஙனம் செய்யாது தனக்குநேர்ந்த துன்பத்தை நானே அறியுமாறு தனது கொம்பால் அடித்து என்னை இங்கு வருமாறுசெய்ததாகலின் என்னாலேயே இதற்குத் துன்பம் நேர்ந்ததாகத் தெரியவருகின்றது அதனை நானறியாதிருக்கின்றேனாகலின் நீங்கள் ஏதேனும் அறிந்திருப்பீராயின் அதனை அறியும்படி மறைக்காது கூறுங்கள்' என்பார்—என்பால் எண்ணிதற்குற்றது—என்றார்.

"இளமையிற் கல்" என்றபடி தாம் கற்கவேண்டியவைகளையெல்லாம் இளம்பருவத்திற்றானே கற்றுணர்ந்து அங்ஙனங் கற்றுணர்ந்தவையெல்லாம் பருவமுதிர முதிர அனுபவத்துக்குவருமாகலான் அங்ஙனம் வரும்பொழுது அவற்றை அறிவிற்குப் புலப்படுமாறு செய்தல் யுக்தியும், அந்தயுக்தியைமுதிர்வித்தல் கேள்வியுமாகலான் பருவமுதிர்ந்தகாலத்தும் "கேள்விமுயல்" என்றபடி கேள்வியில் முதிர்ந்தவனும், இங்ஙனமான கல்விகேள்விகளால் அறியவேண்டிய அனுபவத்தைத் தொன்றுதொட்டு அறிந்திருக்கும் ஓர் பழைய அமைச்சன் என்பார—முதிர்ந்தகேள்வித் தொன்னெறி யமைச்சன்—என்றார்.

அவ்வமைச்சன் தம்மையிகழ்ந்து எண்ணிதற் குற்றது என்றுகேட்பதற்குமுன் நடந்த செய்திகளெல்லாம் அறிந்து அங்கு வந்தவ னென்பார்—முன்னுறநிகழ்ந்தவெல்லாம் அறிந்துளான்—என்றார். பசுவானது துயரப்படுதற்குக் காரணம் அரசன்மகனாகவே யிருத்தலின் அதனைச் சொல்லுதற் கஞ்சியும் சொல்லக் கேட்டபின்னர் அரசன் அதனைப் பொறுத்தற்கும் வணங்கினன் என்பார்—தொழுதுசொல்வான்—என்றார்.

இதனால், யாவராலுந் தொழப்படும் தெய்வங்களெல்லாம் தங்கட்கு இடமாகக் கொண்டிருப்பது பசுவினுடைய வடிவமுற்றுமேயாகலான் அவ்வடிவை வருத்தமுறச்

செய்தனவாமன்றே, அப்பெரும்பாவத்துக்கு எக்காலத்தும் நரகானுபவம் விடாதன்றே, என்றிவ்வாறு எண்ணுவதாகிய எண்ணத்திற் றலைப்பட்டு அரசன் அமைச்சர்களை நோக்கிக் கேட்குங்காலத்து அவர்களுள் அறிவுமுதலியவற்றுள் சிறந்த ஓரமைச்சன் நிகழ்ந்த செய்திக்கும் அரசனுணைக்கும் அஞ்சிச் சொல்லத் தொடங்கினன் என்று கூறப்பட்டது. (டO)

வளவ! நின்புதல்வன் ஆங்கோர் மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானைசூழ அரசுலாந் தெருவில் போங்கால்
இளையஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்தநித் தன்மை என்றான்.

(எ -•து.) சோழர்பெருமானே! தேவரீரது புத்திரன் மணிகணிறைந்துள்ள பெரிய ஒருதேரின்மேலேறி அளவில்லாத இரதங்களும் சேனைகளும் தன்னைச்சூழ்ந்துவர இராசவீதியிற் போகும்போது இப்பசுவின் இளங்கன்றனது அத்தேர்ச் சக்கரத்தினிடையே புகுந்து இறந்துபோக, அதனால் தளர்ந்து வீழ்கின்ற இத்தாய்ப்பசு இம்மணியருகேவந்து இதனையசைத்தது; இதுதான் இங்குநடந்த செய்தி என்றான் என்பதாம்.

இதனால்,—தேவரீருடைய புதல்வனும் இளங்குமரனே, இறந்த கன்றும் இளங்கன்றே, இளங்குமரனும் மகிழ்வுடன் தேரூர்ந்தவன். இளங்கன்றும் பயமறியாது தேர்க்காலில் புகுந்தது. அக்கன்றின் அறியாமை இப்பசுவிற்குத் துயரைவிளைவித்தது, பசுவின் அறிவுடைமை தேவரீருக்குத் துன்பை விளைவித்தது அத்துன்பமோ எங்கள் அமைச்சியலை அமையா நிலையாக்கியது என்று அறிவாளியாகிய அமைச்சன் கூறினன் என்று கூறப்பட்டது.

இத்தன்மை என்றான் என்றதனால், இனி தேவரீருடைய அறிவொன்றே எங்கள் அமைச்சியலை நிலைவித்து பசுவின் துன்பத்தைப் போக்கி இன்பத்தை விளைவிக்க வேண்டுமென்று அமைச்சன் தான் கூறிய அவ்வுரையில் குறித்தனன் என்க. (டக)

அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறு துயர மெய்தி
வெவ்விடம் தலைக்கொண் டாற்போல் வேதனை அகத்து மிக்கிவ்
வின்வினை விளைந்த ஆறென் றிடருறும் இரங்கும் ஏங்கும்
செவ்விதென் செங்கோல் என்னும் தெருமரும் தெளியும் தேறான்.

(எ - து.) அமைச்சன் சொல்லிய வார்த்தையைக் கேட்ட அரசன் அப்பசுவானது அடையுந்துன்பத்தைத் தானும் அடைந்து கொடியவிடமானது தலைக்கேறினதுபோல தன்னுள்ளத்தினிடத்தே துயரமானது அதிகரித்து இப்பாவச்செயலானது எவ்வகையால் விளைந்ததென்று துன்புறுவார். அந்தோ! என் றிரங்குவார். துன்பத்தைப் போக்கும் வகையேதென்று ஏங்குவார். எனது செங்கோலானது நன்றாயிருந்தது என்று சொல்லுவார். மீண்டும் யாதுந் தோன்றாது மயங்குவார். இது செய்யலாமென்று தெளிவார். தெளிந்தவண்ணமே நில்லாது மீளவும் மயங்குவார் என்பதாம்.

அரவி(பாம்பி)ன் செயலால் அதன்பல் விடம் உடம்பினுள்ளால் தலையில் ஏறுவதுபோல் ஆ (பசு)வின்செயலால் அரசனது அறிவினுள்ளால் அமைச்சனது சொல் விடம் ஏறினமையால் அவ்வுரை கேட்டவேந்தன் ஆவுறுதுயரம் வெவ்விடம் தலைக்கொண்டாற்போல் எய்தி என்றும், விடத்தின்வேகம் எட்டாகலான் (க) வேதனையகத்து மிக்கு(உ) இடருறும், (ங) இரங்கும், (ச) ஏங்கும் (ரு) என்செங்கோல் செவ்விது (சு) தெரிமரும் (எ) தெளியும்(அ)தேறான் என்றிவ்வாறு எண்ணலவ்வையாற் கூறினரென்க.

விடத்தின் செய்கை-அப்பூதியடிகள் புராணத்திற் காண்க.

மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தில் நீடும்
என்னெறி நன்றால் என்னும்; என்செய்தால் தீரும் என்னும்;

தன் இளம் கன்று காணுத் தாய்முகம் கண்டு சோரும்;
அந்நிலை அரசன் உற்ற துயரம்ஓர் அளவிற் றன்றால்.

(எ - து.) உடம்போடு நிலைபெற்றுவாழும் உயிர்களை இடர்ப்படாவண்ணங் காத்து தன்னுலாகப்படும உலகினை வேற்றரசரால் ஆளப்படாவண்ணம் அவர்கள் பகையைக் கடிந்து வேதவொழுக்கத்தினின் றுந்தவறாது நீடிநிற்கின்ற எனது அறநெறியானது நன்றாயிருக்கின்றதென்று சொல்லுவார் இப்பசுவினது துன்பம் எதுசெய்தால் நீங்கும் என்று சொல்லுவார் மீண்டும் தன்னிளங்கன்றைக் காணுமலிருக்கின்ற தாய்ப்பசுவின் முகத்தைப் பார்த்து சோர்வடைவார் இவைபோலும் அச்சமயத்தில் அவ்வரசர்பெருமான் அடைந்த துன்பமானது இவ்வளவிற்றன்று ஓரளவில்லைத்துச் சொல்லக்கூடா திருந்தது என்பதாம்.

மன்னுயிர் - உடம்போடுகூடியிருக்கும் உயிர். உடம்பு தன்னைவிட்டு நீங்குங் காலம் வரின் அவ்வுடம்பைவிட்டு மற்றொருடம்பை எடுத்தற்குச் செல்வதேயன்றி அவ்வுடம்போடு அழிவதன்றாகலான்—மன்னுயிர்—என்றும், உயிர்கள் இன்பத்தை விரும்புதலும், அவ்வின்பம் பொருளால் வருமென்று பொருளைவிரும்புவதுமேயன்றி அவ்விரண்டையுந் தருவது அறமென்றுணர்ந்து அறத்தை விரும்புவதின்றாகலான் அரசன் அவ்வுயிர்களை முன்னர் அறத்தினை விரும்பச்செய்து அவ்வறத்தின்வழியே பொருளைத் தேடச்செய்து அப்பொருளால் அவரவர்விரும்பும் இன்பங்களை நுகரச்செய்தலே உயிர்களைக் காக்கும் முறையாகலான்—புரந்து—என்றும், இவ்வண்ணம் உயிர்களைக் காத்துவரும் அறநெறியால் தனதுநாட்டில் பொருள்வளங்களெல்லாம் ஆக்கங்கொண் டிருக்குமாகலின் அவ்வாக்கத்தினைப் பகைவர்கொள்ளக் கருதும் எண்ணத்தைத் தனது புயவலியால் எண்ணுவண்ணம் செய்தலான்—வையம் போதுக்கடிந்து—என்றும், ஆதிமனுவினால் ஏற்படுத்தப்பட்ட அறநீதியை யான் ஆதிகாறும் ன்றாது நீடித்து வரும்வண்ணம் செய்துவந்த நன்னெறியானது இன்று வழுப்பட்டதாமென்று என்று கவலை கூர்ந்தனனாகலான்—அறத்தில் நீடும் என்னெறி நன்றால் என்னும்—என்றும், தருமதேவதையாகிய பசுவானது தனது எண்ணத்தையும் தனது சோர்வையும் அரசன் கொண்டு எங்குந் தன்மையைக்கண்டு தான் அவ்வெண்ணத்தையுஞ் சோர்வையும் விட்டு ஒருசெயலும் அற்ற அரசன்செயலைக் கண்டடர்ந்த சோர்வடைந்திருப்பதாமாலிருக்க அதனை அரசன் நோக்கி என்னெறிசென் றொழிந்த சீரெப்படியென்று, ஆருக, அத்தீமை நம்பாலது, இப்பொழுது இப்பசுவிற்கு வந்திருக்கும் தீமையை மாற்றுவது எப்படி? அதற்கு நாம் செய்யத் தகுவது யாது’ என்று சோர்வுற்றனனாகலின்—தன்னிளங்கன்று காணுத் தாய்முகம் கண்டு (அதற்கு) என்செய்தாற் றீருமென்று சோரும்—என்றும், இவ்வண்ணம் பசுவின் நிலையைக்கண்டு அதன்சோர்வையும், அதன் வழியாய்த் தனது அறநிலையின் சோர்வையும் தொன்றுதொட்டுவரும் நீதிநிலையின் சோர்வையும் எண்ணிக் கலங்கிய கலக்கம் பசுநிலையிலும் பெரிதாகலின்—அந்நிலை யரசனுற்ற துயரம் ஓரளவிற்றன்று—என்றுங் கூறினார். (௯௯)

வேறு.

மந்திரிகள் அதுகண்டு மன்னவனை அடிவணங்கிச்
“சிந்தை தளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால்.
கொந்தலர்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்” என்றார்.

(எ - து.) அரசர்பெருமான் செய்யும்வகையறியாது விசனப்படுவதை, மந்திரிகள் பார்த்து அவர் பாதத்தில் வணங்கி ‘எங்களரசே! இவ்வாறு நீர் மனந்தளர்வது இப்போது நேர்ந்த பழிக்குப் பரிகாரமாகமாட்டாது. ஆதலால் கொத்தாகிய மலர்மாலையைத்தரித்த தேவரீருடைய புத்திரனை, முன்னாளில் கோஹத்தி செய்தவர்களுக்கு

பிராயச்சித்தம் செய்யும்படியாக வேதமுணர்ந்த அந்தணர்களால் விதிக்கப்பட்டுள்ள முறைமையின்வழியே பிராயச்சித்த நெறியில் நிறுத்தி அவ்வழியான் கோஹத்தியை நீக்குவதே தருமமாகும்' என்று சொன்னார்கள் என்பதாம்.

ஆதியான்மீகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்வீகம் என்னுமூன்றான் துன்பம் வருவதென்றும், அம்மூவகைத்துன்பமும் அனுபவித்தற்குரியார் மக்கட்பிறப்பினரென்றும் நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. இதனை அரசர்பெருமானே! நீர் அறியாததன்று. ஆகவே அம்மூவகைத் துன்பங்கள் வருங்காலத்து பரிகாரங்கள் அதற்கு ஏற்றவாறு செய்வதில் நமது சித்தமானது முனைந்திருக்கச் செய்யவேண்டுமே யன்றி தளர்ந்திருக்கச்செய்தல் அறிவுடைமையுமன்று, துன்பம் தீருவகையுமன்று என்று "அறன் அறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும், திறன் அறிந்தான் தேர்ச்சித் துணை." என்றபடி மந்திரிகள் கூறுவாரென்பார—மந்திரிகள் அதுகண்டு........சிந்தை, தளர்ந்தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால்—என்றார்.

சண்பைவரியிற் சிறந்த தலைவனே! இப்போதுநேர்ந்தது—ஆதிதெய்வீகத்தால் நேர்ந்த பாவவகையாகும். இவ்வகை முன்னமும் நடந்திருப்பதனாலன்றோ அதற்குப் பரிகாரமும் நூல்களில் விதிக்கப்பட்டும் இருக்கின்றன. பரிகாரம்ஏற்பட்டிருக்கின்றதே யன்றி வேறுசெயல்கள் விதிக்கப்பட்டிருப்பனவாகத் தெரியவில்லை. நமக்கும் நமது முதியோருக்கும் நூல்கள் துணையேயன்றி வேறுதுணையுறியோம். ஆகவே அந்நூல்கள் எவைஎவைபாவமென்று சொல்லுகின்றனவோ அவைகள்தான் நமக்குப் பாவம். எவைஎவைபுண்ணியமென்று சொல்லுகின்றனவோ அவைகள்தான் நமக்குப்புண்ணியம என்று அறிவதேயன்றி நாமே இதுஇது பாவமென்றும், இதுஇது புண்ணியமென்றும் அறிவதுங் கூடாது, செய்வதுங் கூடாது. நாம் எண்ணவேண்டியவற்றிற்கு எண்ணமாயும், சொல்லவேண்டியவற்றிற்குச் சொல்லாயும், செய்யவேண்டியவற்றிற்குச் செயலாயும் உள்ளது அந்நூல்களேயாம். ஆகையின், நமது மகனால் அறியாது நேர்ந்த இந்தகோஹத்திக்கு அந்தணர்களைக்கொண்டு நூல்களிற் கூறப்பட்டிருக்கும் பரிகாரவியலை அறிந்து அந்தச்செயலில் நிறுத்தலே அறமாகும் என்பார்—முன் செய்வதை செய்தாக்குமறை அந்தணர்கள்விதித்த முறைவழி மைந்தனை நிறுத்துவது அறம்—என்றார்

இதனால்,—பசுவினால் நேர்ந்த பாவத்திற்கு இது அளவென்று அரசன் அளவு காணுதவொய் அளவிலாத் துயரத்தை அடைந்திருக்கும் நிலைமையை மந்திரிகள் கண்டு ஓர் அறத்தினளவை எடுத்துக்கூறினமை கூறப்பட்டது. (கூச)

அரசன் தருமஞ்சலிக்காத அறத்தைக்கூறல்.

"வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறும் கோஉறுநோய் மருந்தாமோ?
இழக்கின்றேன் மைந்தனைஎன் றெல்லீரும் சொல்லியஇச்
சழக்கின்று நான்இசைந்தால் தருமந்தான் சலியாதோ?

(எ - து.) மந்திரிகளே! நீங்கள் சொல்லிய பிராயச்சித்தவிதியானது உலகவழக்கமென்று நீங்கள்சொன்னால் அது தனது இளங்கன்றையிழந்து மனம் வருந்தி அலறும் இப்பசு அடைந்திருக்கும் துன்பநோய்க்கு மருந்தாகுமோ? ஆகா! நான் மைந்தனையிழந்துவிடுகிறேனென்று நீங்களெல்லோருஞ் சொல்லுகின்ற குற்றம் பொருந்திய இப்பரிகாரத்திற்கு நான் இன்று உடன்படுவேனாயின் இனி என்விஷயத்தில் தருமதேவதையானது சலிப்படையமாட்டாதா? என்பதாம்.

அதுதான் குழக்கன்றைஇழந்து வலிப்பட்டலறும் கோவுறுநோய் மருந்தாமோ எனக்கூட்டுக.

"கோவதைசெய்தார்க்கு மறையந்தணர்கள் விதித்தமுறைவழி மைந்தனை சிறுத்தல் அறம்" என்று நீர் கூறியது - மறையில்சொல்லப்பட்ட பசுதருமமாகுமேயன்றி சிவதருமமாகாது. பசுதருமமாவது - யாதெனின்! ஒருவன் தனக்கு உடற்சார்பாயும், உயிர்ச்சார்பாயும் உள்ள தாவரசங்கம பதார்த்தங்களுக்குத் துன்பங்கள் வருமாயின் அவைகளைத் தன்னுட்கொண்டு அவைகட்குரிய பரிகாரங்களைத் தேடி அவைகளை நோக்கி அவைகள் மகிழக்கண்டு தானும் மகிழ்ந்து இன்புறுதலும், தனக்கு இன்பம் வேண்டுமாயின் அவ்வின்பம் தன்சார்பற்ற தாவர சங்கமங்களால் வருவதாயிருப்பின் அதனைநன்கு யறிந்து பின்னர் அவைகள் வருந்த தனக்கு இன்பம் வருவதாயிருப்பின் அவைகளை வருத்தியே அவ்வின்பத்தைப் பெறுதலும், அவைகள் இன்புற்றிருக்கவே இன்பம் வருவதாயிருப்பின் அவைகளை வருத்தாது இன்புற்றிருக்கவே செய்து அவ்வின்பத்தைப் பெறுதலுமாம்.

இவ்வுண்மையை எல்லாப் புராணங்களிற் காணலாம். எங்ஙனமெனின், தேவர்கள் இராக்கதர்களுக்குக் கேட்டை நினைத்துத் தங்களுக்கு இன்பம் விரும்புதலும், அதைப்போல் இராக்கதர்கள் தேவர்களுக்குக் கேட்டை நினைத்துத் தங்களுக்கு இன்பம் விரும்புதலும், பரக்கக்காணக்கிடத்தலாலென்க. தேவர்களைப் போலவே விண்ணுலகிலுள்ளாரும், மண்ணுலகிலுள்ளாருமாம். இவர்கள் செய்யுந் தருமதானங்களும், யாகாதி புண்ணியங்களும், யாவும் பசுதருமமே.

சிவதருமமாவது - உடற்சார்பு முதலியவாக்க [illegible] யாவும் தமது சார்பாக நாடாது குருலிங்க சங்கமங்களையே தமது சார்பாக எண்ணித் தமதுடற்சார்பு உயிர்ச்சார்பு பொருட்சார்பாகிய மூவகைச்சார்புகளையும் அக்குருலிங்கசங்கமங்களுக்கே ஆக்கி அவர்களுடைய இன்பங்களையே தங்களுடைய இன்பமாகவும், அவர்களுடைய துன்பங்களை தங்களுடைய துன்பமாகவும் எண்ணி அக்குருலிங்க சங்கமங்களின் சார்பாகிய தமது உடலாதிகள் இன்பநிலையிலிருக்கத் தாங்கள் சுகத்தை அனுபவிக்கினும், துன்பநிலையிலிருக்க தாங்கள் துக்கத்தை அனுபவிக்கினும் அவ்வின்பதுன்பங்களைக் கருதாது அவர்களுக்கு ஆட்பட்டிருப்பதாகிய அவ்வின்பம் ஒன்றனையே கருதி வாழ்தலாம். ஆகவே ஓ மந்திரிகளே! எனது சார்புள்ள மைந்தனுக்கு இப்பரிகாரமாகிய மருந்தைக் கூறினீரேயன்றி இச்சிவதருமத்துக்குக் கூறவில்லையே. என் மகன்—வழக்கென்று நீர் மொழிந்தது, இக்கன்றின் [illegible] என்று இச்சிறந்த சொல்லி[illegible]தாகுமேயன்றி, அதுதான் வலிப்பட்டுத் தழுக்கன்று மிறத்தலையும் [illegible] மருந்தாமோ—என்றார்.

இதனால்,—பிறவுயிர்களுடைய இன்பதுன்பங்களைக் கருதி எது செய்யினும் அதுதான் அறமெனப்படும் என்றும், அதுதான் சிவதருமமெனப்படும் என்றும், தன்னுடைய சுகதுக்கங்களைக் கருதி எந்தத்தருமங்களைச்செய்யினும் அவை அவத்தை (பயனற்றனவற்றை)த்தரும் பசுதருமம் எனப்படுமென்றும் விளக்கினமை காண்க.

அல்லதூஉம்,—நான் இந்த மாநிலத்தைக் காப்பது நானும் என்னைச்சார்ந்தாரும் சுகத்தை யடைதற்கோ? மன்னுயிர்கள் சுகத்தை அடைதற்கோ? இந்த இரண்டனுள் எது அறம்? அதனை நீவிரே அறிமின்கள் என்று மந்திரிகளுக்கு அறிவுறுத்தியதுமாம். இதனை விளக்குதற்கே வருஞ்செய்யுள் எழுந்ததென்க. (டு௫)

"மாநிலங் காவல னாவான் மன்னுயிர் காக்குங் காலை
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ?

(ஏ - து.) மீளவும் அரசன் மந்திரிகளைப்பார்த்து, இந்நிலவுலகில் நிலைபெற்று வாழும் உயிர்களைக் காக்குங் காலத்தில் அவ்வுயிர்களுக்கு இடையூறாகத் தன்னாலாவது

தனபுரீசனங்களாலாவது கெடுதிவிளைவிக்கின்ற பகைவர்களாலாவது திருடர்களாலாவது பிறவுயிர்களாலாவது உண்டாய் வருவதாகிய ஐந்துபயத்தையும் நீக்கித் தருமத்தை வழுவாமல் பரிபாலனம் பண்ணுகின்றவனல்லவா பெரிய இந்நிலவுலகை யாளும் அரசனாவான் என்பதாம்.

இதனால்,—உயிர்களுக்குவரும் துன்பம் ஐந்துவகைப்படும் எனவும், அவைகளைப் போக்குவதே காத்தல் எனப்படும் எனவும், அக்காத்தலுள் ஒன்றேனுங்குன்றாது காக்கும் வல்லமையைப்பெற்றவன்றான் அரசனெனப்படுவான் எனவுங்கூறப்பட்டன.

அல்லதூஉம்,—நீங்கள் உலகவழக்கென்று கூறியது - அறிவிலா உலகினர் வழக்கென்றும், யான் இப்போது கூறியது அறிவுடைய உலகினர் வழக்கென்றும் மந்திரிகளுடைய உரைவழக்கை மறுத்தனர் அரசனென் றுங் கூறப்பட்டது.

அல்லதூஉம்,— அரசனாவான் காக்கவேண்டிய பொருள் - உயிருள்பொருள், உயிரில்பொருள் என இருவகை. அவற்றுள் - உயிருள் பொருளைக் காத்தற்கு உயிரில் பொருளைக் காத்தலேயன்றி, உயிரில்பொருளைக் காத்தற்கு உயிருள்பொருளைக் காத்தலன்று. அங்ஙனமான உயிருள்பொருளில் இப்பசு சிறந்தபொருள். எங்ஙனமெனின், ஐம்முகமுடைய சிவபெருமானுக்குப் பால் முதலிய ஐந்துபொருள்களையும், வேதத்தில் கூறப்பட்டுள்ளதாகிய திருநீற்றையும் நமக்குக் கொடுப்பது என்று அதன் உபகாரத்தையும் சிறப்பையும் புண்ணியத்தையும் பிரகாசப்படுத்திய காரணத்தாலென்க. உயிருள் பொருள் - சிவனுக்குபயோகப்படுவது. உயிரில்பொருள் - சிவனுக்குபயோகப்படாதது.

"என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயஇசைந்தேன்
அன்னியனோ ருயிர்கொன்றால் அவனைக்கொல் வேண்டுதலால்
தொன்மறுநூல் கொடைமநுவால் துடைப்புண்ட தெனும்வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர்; மந்திரிகள் வழக்"கென்றான்.

(இ - ள்.) மந்திரிகளே! நீங்கள் மந்திராலோசனைசெய்து உலகவழக்கென்று சொல்லியபடி பெரிய பரிகாரங்களை என்துபுத்திரன் செய்த இக்கொலைக்குச்செய்ய விசைந்து மேலொருவன் ஓருயிரைக் கொல்வானாயின் அதற்கு நான் பரிகாரஞ்செய்து கொள்ளும்படி விதிப்பது அவனைக் கொல்லவிதி யேனாயின் பழமையாகிய மநுநூலில் விதிக்கப்பட்ட தொன்றுதொட்டு வருகின்ற நீதிநெறியானது இப்போதுவந்த மநுவென்னும் பெயருடைய என்னால் சிறிதுமில்லாமல் துடைக்கப்பட்டுப்போயிற்று என்று சொல்லப் படும்பழிச்சொல் இவ்வுலகில் என்னால் நிலைபெற்று வழங்கச் சொன்னீர்கள் என்பதாம்.

இதனால் பரிகாரங்கூறிய மந்திரிகளைப்பார்த்து, மந்திரிகளே! நீங்கள் கண்ட பரிகாரவிதியின்படி அரசனானவன் தன்மகன் ஓர் கொலைசெய்வானாயின் அவனுக்குப் பிராயச்சித்தமும், மற்றையோராயினும் கொலைசெய்வாராயின் அவர்களைக் கொலையும் செய்யும்படி விதித்திருக்கின்றதா? அங்ஙனம் இருப்பின் அதுநீதியாமோ? நீதியென்றால் நடுவுநிலைமையின் நின்று சொல்லும் உண்மைச்சொல் அல்லவா! அதுநிற்க, இப்பொழுது நீங்கள் சொல்லியது என்னையெனின்,—தொன்மநுநூற்றொடை இப்போது புதுமநுவினால் துடைப்புண்டது என்னும் பழிப்புரையானது உலகமுள்ளளவும் யாவராலும் கூறும்படிக்கு கூறினீர்கள் என்று கூறினான் அரசனென்று கூறப்பட்டது.

அல்லதூஉம், தொன்மநு நூற்றொடை மநுவாற் றுடைப்புண்டது எனும் வார்த்தை, மன்னுலகிற் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்றான் என்றதனால் மந்திரிகளே! நீங்கள் சொல்லியவழக்கு உலகவழக்கன்று. என்மாட்டு உண்டாகக் கூடாத பழிப்புரையை உண்டாக்குவதாகிய ஓர் சொல்வழக்காகும். அன்றியும் என் மகன் செய்த பழியைப்போக்குதற்குப் பரிகாரம் சொல்லுதுபோற் சொல்லி ஒருபழியையும் இன்றளவும் பெறாதுவாழ்ந்த எனக்கு என்றும் பரிகாரத்தால் நீங்காத பெரும்

பழியை விளைவிக்கும் வகையை நன்றாய் யோசனைசெய்து துணிவுபட்டுக் கூறினீர். இப்படி யாவர்கூறுவார் என்றும், என்மகன் செய்த பாதகத்துக்குப் பரிகாரஞ்செய்து அதனைப் போக்கி அவனை உயிரோடுவாழச் செய்து, ஆதிமநுவின் காலந்தொடங்கி விடாதுவந்தநீதி என்னால் தடைப்பட்டது என்னும்பழிப்புரையாகிய முழக்கினை முழக்குவதற்கு வைத்தீர்களே இந்த அரிய ஆலோசனை யாருக்குத் தோன்றும் என்றும், ஆதிமநுவின்காலந்தொடங்கி எனக்கு முன்னிருந்தார்காலம்வரையில் நீதிகெடாதுவந்த சந்ததி என்றும், என்காலந்தொடங்கி எனக்குப் பின்வருவார்காலமளவும் நீதிகெட வந்த சந்ததி என்றுங் கூற நீங்கள் மந்திரிசபையென்று கூடியிருக்கின்றீர்களே உங்கள் கூட்டத்தை யான்பெற்றதுபோல் இனி யாவர்பெறவல்லார்கள் என்றும் இகழ்ந்து கூறினாரென்றும் கூறியதுமாம். (௩௭)

மந்திரிகள்மீண்டும் அறநெறியைக்கூறல்.

என்றரசன் இகழ்ந்துரைப்ப எதிர்நின்ற மதியமைச்சர்;
"நின்றநெறி உலகின்கண் இதுபோல்முன் நிகழ்ந்ததால்;
பொன்றுவித்தல் மரபன்று; மறைமொழிந்த அறம்புரிதல்
தொன்றுதொடு நெறிஅன்றோ? தொல்நிலங்கா வல" என்றார்.

(எ - து.) மந்திரிகள் வழக்கு என்று குறிப்புரையான் அரசன் இழித்துக்கூற, அதனை எதிரே நின்றுகேட்ட அறிவிற் சிறந்த மந்திரிகள் அதனைத் தங்களை இகழ்ந்து கூறும் இழிவுரையாக எண்ணாது அறத்தைநோக்கிக்கூறும் அறவுரையாகவே எண்ணி அரசனைநோக்கி, பழைமையாகிய உலகினைக்காத்துவருகின்ற அரசனே! நாங்கள் கூறிய இது இப்பொழுது நாங்கள் எண்ணிச்சொல்லிய பிராயச்சித்த விதியன்று. இப்பொழுது நடந்த இதுபோல் இவ்வுலகின்கண் முன் நடந்திருக்கின்றது, அங்ஙனம் நடந்தகாலத்தில் நாங்கள் சொல்லியதுபோல் அக்காலத்திலுள்ள பெரியோர்கள் நடத்தியிருக்கின்றனர், ஆகலான் இச்செயலும் புதிதன்று, நாங்கள் சொல்லியதும் புதிதானதன்று, இவ்விரண்டும் அன்றும் இன்றும் உள்ள நெறியேயாகும். ஆகவே புத்திரனைக் கொல்லுவித்தல் மரபியலன்று வேதத்தில்சொல்லியபடி பிராயச்சித்தம் செய்வதுவே மரபாகும், எனவே புத்திரனிடத்து நிகழ்ந்த இக்கொலை புத்திபூர்வகமாயின் கொலை செய்தல் முறையாம், வேதவிதியும் அப்படியே, அபுத்திபூர்வமாய் நிகழ்ந்ததாகலின் கொலைசெய்தல் மரபன்று, வேதவிதியுமன்று, அன்றாகவே, வேதமொழிந்தவாறே பிராயச்சித்தம் செய்தலே மரபாம் என்று கூறினார் என்பதாம்.

அறிவிற்சிறந்த அமைச்சர் தமது அரசன அறநெறியில் நிற்குங்கால் தமதுசொல்லை மறுத்து இகழ்ந்துரைப்பினும் அச்சொற்களை இகழுரையாகக் கொள்ளாது புகழுரையாகவேகொண்டு மேன்மேற்சொல்லவேண்டிய அறங்களை "குறிப்பு அறிந்து காலங் கருதி வெறுப்பில, வேண்டுப வேட்பச் சொலல்" என்று கூறிய நீதியுரைப்படி சொல்லும் அறிவுடையராகலின்—மதியமைச்சர்—என்றார்.

இதனால் அமைச்சராவார்—"தெரிதலும் தேர்ந்துசெயலும் ஒருதலையாச்சொல்லலும் வல்லது அமைச்சு" எனவே—ஒரு காரியச்செய்கை பலவாற்றால் தோன்றின் அவற்றுள் ஆவது ஆராய்ந்தறிதலும், அதுசெய்யுங்கால் வாய்க்குந்திறநாடிச் செய்தலும், சிலரைப் பிரித்தல் பொருத்தல் செயற்கண் அவர்க்கு இதுவே செயற்பாலது என்று துணிவுபிறக்கும்வகை சொல்லுதலும் வல்லவனே அமைச்சனாவான், என்றபடி வல்லராகிய மதியமைச்சர், தங்களுரையை இகழ்ந்துகூறிய அச்சொல்லுக்கு தாங்கள் மனமும் முகமும் கோணியதுபோற்காட்டி நீர் தொன்னிலங்காவலராயிருந்தும் இவ்வாறு உரைத்தது பழுது. அங்ஙனம் உரைத்தல் கூடாது. யாங்கள்சொல்லியது தொன்றுதொடு நெறியல்லவா? உலகின்கண் நின்றநெறியல்லவா? இதுபோல் முன் நிகழ்ந்ததல்லவா? இதுகாறும் நீர் அறம்புரிந்து வந்ததும் மறைமொழிந்த அறமல்லவா?

அங்ஙனமிருக்க மகனைப் பொன்றுவித்தல் அறமென்று நீர் கூறுவது எங்ஙனம் கூடும். ஒருவாற்றானுங் கூடாது. அறநூலுட் கூறப்படாததனை நாங்கள் கொள்ளேம். ஆகலான், மகனைப் பொன்றுவித்தல் செய்யாது பிராயச்சித்தஞ் செய்து வைத்தலே காவலாகிய அறமாகும் என்று அரசனை இடித்துச் சொல்பவரைப்போல் சொன்னார்கள் என்று கூறப்பட்டது.

அல்லதூஉம்,—யாங்கள் சொல்லியதைக்கேட்டு இது கோவுறுநோய் மருந்தாமோ என்றுசொன்னீரல்லவா? மகனைப் பொன்றுவித்தால் அது கோவுறுநோய் மருந்தாமோ? அதனை என் சிந்தைசெயாது அருளினீர்? இனிமேனும் சிந்தித்து வேதநெறிப்படியே செய்யக் கட்டளையிடுவீராக என்று வேண்டினார் என்றலுமாம். (௩௮)

அரசன் கோபித்து அமைச்சர்க்கு உண்மைத்திறத்தைக்கூறல்.

அவ்வண்ணம் தொழுதுரைத்த அமைச்சர்களை முகநோக்கி
மெய்வண்ணம் தெரிந்துணர்ந்த மனுவென்னும் விறல்வேந்தன்
"இவ்வண்ணம் பழுதுரைத்தீர்" என்றெரியி னிடைத்தோய்ந்த
செவ்வண்ணக் கமலம்போல் முகம்புலர்ந்து செயிர்த்துரைப்பான்.

(எ - து.) நீதியின் உண்மைத்தன்மையைத் தனது அறிவின் வன்மையால் உள்ளவண்ணம் ஆராய்ந்துணர்ந்த மநுவென்னும் அரசன் "பொன்றுவித்தல் மரபன்று. மறைமொழிந்த அறம்புரிதல் தொன்றுதொடு நெறி" என்று வணங்கிச் சொல்லிய மந்திரிகளின் முகத்தைப்பார்த்து கொன்மநுநூற்றுறை பழுதுபடும்படியாக இவ்வண்ணமாகக் கூறினீர் என்று நெருப்பிலாழ்ந்த செந்தாமரைபோல் முகம் வேறுபட்டு கோபித்துச் சொல்வார் என்பதாம்.

மெய்வண்ணந்தெரிந்துணர்ந்த மனுவென்னும் விறல்வேந்தன் அவ்வண்ணந்தொழுதுரைத்த அமைச்சர்களை முகநோக்கி யிவ்வண்ணம் பழுதுரைத்தீர் எனக்கூட்டுக.

"பூவண்ணம் பூவின்மணம்போல மெய்ப்போத இன்பம், ஆவண்ணம் மெய்கொண்டவன்" மெய்யாகக் கூறிய வேதத்தின் மெய்வண்ணத்தை, கற்பவை கசடறக் கற்ற கல்வி அறிவினாலும், "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே, ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்" என்ற கேள்வியின் வன்மையானும் தெளிந்து கலங்காநிலைமையைப் பெற்றுள்ள மெய்யுணர்வினன் என்பார்—மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த மநு என்னும் விறல் வேந்தன—என்றார்.

தாம் கூறிவந்த மெய்வண்ணத்தின் திறத்தை உணரும் வகையறியாது மீண்டும் வேதத்தின் மெய்வண்ணத்தை அறிந்தார்போன்று—'மறைமொழிந்த அறம்புரிதல் தொன்றுதொடு நெறியன்றே தொன்னிலங்காவல்'—என்று மந்திரிகள் சொல்லியதைக் கேட்டு தீயிற்பட்ட செந்தாமரை மலர்போல் செவ்வியமுகம் வேறுபட்டு உள்ளங் கொதித்து 'மந்திரிகளே! நீங்கள் உரைத்ததா வேதத்தின் மெய்வண்ணமாகும்? அதில் உரைத்த மெய்யுரைக்கு நீங்கள் உரைத்தது பழுதுரை என்று நன்றாய் அறிமின்கள். நான் அந்த மெய்வண்ணத்தை இனிக் கூறுகின்றேன்' என்று கூறினார் என்பார்—எரியினிடை தோய்ந்த செவ்வண்ணக் கமலம்போல் முகம்புலர்ந்து அவ்வண்ணந் தொழுதுரைத்த அமைச்சர்களை முகநோக்கி இவ்வண்ணம் பழுதுரைத்தீர் என்று செயிர்த்து உரைப்பான்—என்றார்.

இதனால்,—அமைச்சர்கள் கல்விகேள்விகளில் வல்லராகிய அரசர்பெருமானை நோக்கி, 'தொன்னிலங்காவல! இந்நிலவுலகில் தொன்றுதொட்டுவரும் நெறியாவது மறைமொழிந்த அறம்புரிதலேயாகும். அங்ஙனமிருக்க மகனைப் பொன்றுவித்தல் மரபென்று நீர்கூறுவது மரபன்று' என்று கூறவே, அரசர்பெருமான் முகம்புலர்ந்து உள்ளத்தே கோபம்மேலெழுந்து நீங்கள் உரைத்ததா வேதத்தின் மெய்வண்ணம்? அந்தோ!

அவ்வுரை மெய்வண்ணத்தைப் பொய்வண்ணமாக்கவல்ல பழுதுரையில்லையா னென்று கூறி, தாம் பழுதுபடாவுரையைக்கூறத்தொடங்கினாரென்று கூறப்பட்டது. (நக)

"அவ்வுரையில் வருநெறிகள் அவைநிற்க; அறநெறியின்
செவ்வியவுண் மைத்திறம்நீர் சிந்தைசெயா துரைக்கின்றீர்;
எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித் தாம்இடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்துவிழுந் ததுவிளம்பீர்?

(எ - து.) மந்திரிகளே! நீங்கள் சொல்லுகின்ற அந்த வேதவாக்கியங்களில் உங்களுக்குத் தோன்றுகின்ற தருமநெறிகள் எவைகளோ அவைகளெல்லாம் நிற்க, அந்த வாக்கியங்களில் தருமநெறியானது செல்லுகின்ற செம்மையாகிய உண்மைத்திறத்தை நீங்கள் சிந்தித்துச் சொல்லவேண்டிய கடமை புடையவர்களாயிருக்க அதனைக்கைவிட்டு ஒருசிறிதும் எண்ணாமல் சொல்லுகின்றீர்கள். அஃது என்ன என்பீரேல் பூர்வம் எந்த உலகில் எந்தப்பசுவானது கன்றையிழந்ததனால் உண்டாகிய இப்படிப்பட்ட துன்பத்தினால் பெருமூச்சுவிட்டு அழுது கதறி ஆராய்ச்சிமணியை யடித்துப் பூமியில் வீழ்ந்தது சொல்வீர்களாக என்பதாம்.

"கோவதை செய்தார்க்கு மறை விதித்த முறைவழி நிறுத்தல் அறமென்று" நீவிர் கூறினீர்களே யன்றி எந்தவுலகில் எந்தப்பசுவானது இந்தப்பசுவைப்போல் கன்றை யிழந்து அதனால்வருந்தி அவ்வருத்தந்தீர மணியைத் தனதுகொம்பினாலடித்து அரசனை யழைத்து அவன்முன்னர் பதைத்துக் கிடந்ததென்றும், அதற்குப்பரிகாரம் இன்னவிதமாய்நடந்ததென்றும் கூறப்பட்டிருப்பதை எடுத்துக்கூறினீர்களா? இல்லை. ஆகவே, நீங்கள் அவ்வேதவுரையில் வருகின்ற சொல்நெறிகளை வாய்மொழியாகக்கேட்டு அவ்வாய்மொழியளவையினாலேயே பிராயச்சித்தம் செய்து வருகின்றவர்களேயன்றி அந்தவாய்மொழியில் நிற்கும் அறநெறிகளின் உண்மையைச் சிந்தித்துச் செய்துவருகின்றவர்களல்லர் என்பார்—எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித்தாம் இடரால் வெவ்வுயிர்த்துக் கதறி மணியெறிந்து விழுந்தது விளம்பீர்—என்றும், அறநெறியின் செவ்விய வுண்மைத்திறம் நீர் சிந்தைசெய்யாது உரைக்கின்றீர் - என்றும் கூறினார்.

அறநெறியில் செவ்வியவுண்மைத்திறம் நீர் சிந்தைசெயாது உரைக்கின்றீர் என்று சொல்லத்தொடங்கிய மனுநீதியார் தாம் அவ்வுரையில் வருநெறிகள் அவைநிற்க என்றது என்னையோவெனின், வேதங்கூறும் அறவுரைநெறியில் சிந்திக்கவேண்டியது நான்குவகையா யிருத்தலின் அங்ஙனங் கூறியதென்க. அஃதாவது - பொருள், அதில் உண்மைத்திறம், உண்மை, அதில் உண்மைத்திறம் எனநான்குவகை. எனவே ஆன்மாக்கள் பிறப்புவீடுகளையும் அவற்றின் காரணங்களையும், உணரும்மெய்யுணர்வற்று மக்கட்பிறப்பினைமாத்திரம் உடையராய் மந்ததரம் மந்தமென இருவகையான பரிபாகமுடையவராயும், பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீதஐயங்களானன்றி உண்மையான் உணரும் மெய்யுணர்வுடைய மக்கட்பிறப்பினர் தீவிரம் தீவிரதரமென இருவகையான பரிபாக முடையவராயும் உள்ளார்.

ஆகவே, வேதத்திற்கூறப்படும அறவுரையின்படியே செங்கோன்முறைமையைச் செலுத்தவேண்டிய நீதியுடைய அரசராயுள்ளார் அவ்வேதவுரையில் மேலே சொல்லியபடி தன்கீழ்வாழும் உயிர்களை நான்குவகையாக அவரவர்களது அறிவுச்செயல்களைச் சிந்தித்துக் காத்தல் தண்டித்தல் என்னும் இருவகைச்செயல்களையும் முறையாகச் செலுத்தல்வேண்டும்.

செலுத்துமுறையாவது - மந்ததரததாரிடத்து நிகழும் அறிவுச்செயல்களைச் சிந்தித்து, பொதுவகையாகக் காக்கவேண்டினரை அவ்வகையான் காத்தும், சிறப்புவகையாகக் காக்கவேண்டுனரை அவ்வகையானே காத்தும், அஃதேபோல் - பொதுவகை

யாகத் தண்டிக்கவேண்டுனரை அவ்வகையானே தண்டித்தும், சிறப்புவகையாகத் தண்டிக்கவேண்டுவோரை அவ்வகையானே தண்டித்தும், இவ்வாறே ஏனைய மந்தம் தீவிரம் தீவிரதரம் என மூவகையாகச் சொல்லிய அவரவரது அறிவுச்செயல்களைச் சிந்தித்துச் செய்தல்வேண்டும்.

இம்முறையை - இவ்வரசர் பெருமானார் முன்னே மந்திரிகளிடத்துக் கூறிப் போந்த நீதிமுறையானே அறியக்கிடக்கின்றன.

எங்ஙனமெனின், மந்திரிகள் மன்னவனை அடிவணங்கிச் சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால், மைந்தனை முன் கோவதைசெய்தார்க்கு மறை அந்தணர்கள் செய்தமுறை வழிநிறுத்தல் அறமென்றார். இது போது. அஃதாவது:—அபுத்திபூர்வகமாய் நேர்ந்த இப்பசுக்கொலைக்கு மைந்தன் உரியவனுகான் ஆகவே மைந்தனைச் செய்ய வேண்டிய தண்டனை ஒன்றுமில்லை என்றுகூறுது, அதனைக் கோவதைசெய்தவனுகவே நியமித்து அதுசெய்தார்க்குச் செய்ததுபோல் செய்வதே முறை என்றதேயாம்.

எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித்தாம் இடரால், வெவ்வுயிர்த்துக் கதறிமணியெறிந்து விழுந்தது விளம்பீரென்றதும், வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக் குழக்கன்றை யிழந்தலறும் கோவுறுநோய் மருந்தாமோ என்றதும் போதுவில் உண்மைத்திறம். அஃதாவது - இப்பசுவைப்போலும் எப்பசுவும் செய்ததில்லை நீங்கள் வழக்கென்று சொன்னது இப்பசுவுக்கு மருந்தாகாது என்றதேயாம்

மாநிலங்காவலனவான் என்ற திருப்பாட்டிற் கூறியது - உண்மை. அஃதாவது - உயிர்களைப் பயம் உறுத்துவன (க) அரசனும், (உ) அவன் பரிசனமும் (ங) அவனது பகைவரும், (ச) கள்வரும், (ரு) மிருகங்களுமேயாம். இங்ஙனமான ஐவகைப் பயத்தையும்ஒழித்து. *"சிறப்பீனும் செல்வமுமீனும் அறத்தினூங்கு, ஆக்கம் எவனோவுயிர்க்கு" என்றபடி, மேன்மேல் உயர்த்தலாகிய ஆக்கத்தினையுடைய (க) அறத்தில் வைக்கப்பட்டினையும், † "இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான், முயல்வாருள் எல்லாந் தலை" எனவும்,—‡ "ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை, நோற்பாரின் நோன்மையுடைத்து" எனவும் கூறியபடி முயலவேண்டியவற்றினுள் தலையாயும், நோற்பாரின்நோன்மையுடைத்தாகியுமுள்ள (உ) இல்வாழ்க்கையில் தளராமையையும், §"இல்லவள் மாண்பானால் இல்லதென்" எனவும், ‖"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை யுண்டாகப் பெறின்" எனவுங் கூறியபடி அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய (ங) கற்புடையாளைத்துணையாகக்கொள்வதிலும், ¶"பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறிவறிந்த மக்கட்பேறல்லபிற" எனவும், ** "தம்பொருள் என்ப தம்மக்கள்" எனவும் கூறியபடி (ச) அறிவறிந்த மக்கட்பேற்றைப்பெறுவதிலும். இல்வாழ்க்கைத்துணையாகிய மனைவியினிடத்தும், புதல்வரிடத்தும் அன்பில்லாத வழி இல்லறம் இனிது நடத்தலும், பிறவுயிர்களின்மேல் அருள்பிறத்தலும் கூடாவாகலான் அதுகூடுமாறு தொடர்புடையார்மாட்டு (ரு) அன்பினைப்பெறுவதிலும், ஆகிய ஐவகையறத்தினும் தலைப்படுமாறுகாத்தலென்க. இனி - உண்மைத்திறத்தை இனிவரும் திருவிருத்தத்தா னுணர்க.

"போற்றிசைத்துப் புரந்தரன்மால் அயன்முதலோர் புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார் மேவிஉறை திருவாரூர்த்
தோற்றமுடை உயிர்கொன்றான் ஆதலினால் துணிபொருள்தான்
ஆற்றவுமற் றவற்கொல்லும் அதுவேயாம் எனநினைமின்."

(எ - து) இந்திரன் திருமால் பிரமன் முதலிய தேவர்கள் போற்றிப்புகழ்ந்து வணங்க வீற்றிருந்தருளிய இறைவனார் எழுந்தருளி யிருக்கின்ற திருவாரூரின்கண்ணே

* திருக்குறள் அதி - ச செ-க. † அதி - ரு செ - எ. ‡ அதி - ரு-செ. அ.
§ அதி - சு செ - ங. ‖ அதி - சு செ-ங. ¶ அதி - எ செ - க ** அதி எ - செ-ங.

பிறக்குந் தவம்புரிந்துவந்த உயிரைக் கொலைசெய்தான் ஆகையினால் அதற்கு வேதவிதியில் மிகவும் துணிந்துகொள்ள வேண்டிய பொருளானது அவனைக் கொல்லுவதேயாமென்று சிந்தித்து உணர்மின்கள் என்பதாம்.

ஆதலினால் ஆற்றவும் துணிபொருள்தான் மற்றவற்கொல்லும் அதுவேயாமென நினைமின் எனக்கூட்டுக.

"நறப்படுபூ மலர்தூபந் தீபஞ்சாலச் சுஞ்சாந்தங் கொண்டேந்திநாளும்வானோர், சிறப்போடுபூசிக்குந்திருவாரூர்" என்று ஆரூர்த்திருமுறையிலும் "திறைகொணர்ந்தீண்டித் தேவர்செம்பொனுமணியுந்தூவி, யறைகழலிறைஞ்சுமாரூரப்பன்" என்றும், "குமரன் திருமால் பிரமன் கூடியதேவர் வணங்கும் அமரனிருப்பதுமாரூர்" என்றும், ஏழாந்திருமுறையிலும் கூறியவாறு திருவாரூரில் தியாகேசன் இந்திராதியர் போற்றிப்புகழ இருக்கும் அந்த வரலாறுதோன்ற - புரந்தான் மால் அயன் முதலோர் புகழ்ந்திறைஞ்ச வீற்றிருந்த பெருமான் என்றார். அல்லது உம,—தேவருலகில் அளவிறந்த செல்வத்தோடும் பிரமதியரால் காண்டற்கரியராய் இந்திரனது பூஜாக்கிருகத்தில் இருந்ததுபோல் இத் திருவாரூரில் முசுகுந்தசக்கிரவர்த்திபூங்கோயிலில் அளவிறந்தசெல்வத்தோடு தேவோபசாரத்தினுஞ்சிறக்க இராஜோபசாரத்தைக் குறைவின்றி நடத்தி நாடோறும் வழிபட இறைவன் இருமாந்திருக்குஞ் சிறப்புதோன்ற - வீற்றிருந்த பெருமானார் என்றார். விண்ணுலகைவிட்டு மண்ணுலகிலுள்ள தென்னைகருக்குவந்த இப்பெருமானார் இனி இந்நகரத்தைவிட்டு என்றும் போகார் என்னும் அச்சிறப்புத்தோன்ற-மேவியுறைதிருவாரூர்-என்றார். அல்லதூஉம், இவர் தியாகம்(கொடுப்பதும்) முத்தி, இவரிருப்பதும்முத்தியுலகம். ஆகவேமுத்தியுலகினைவிட்டு போகவுலகத்துப்போகார் என்னும் அவ்வுண்மையும் * 'இருக்கை திருவாரூரேயுடையீர்' என்னும் அவ்வேதவுண்மையுந்தோன்ற -மேவியுறை திருவாரூர் என்றார். திருவாரூரில் பிறந்த வுயிர்களெல்லாம் இனிப் பிறவாநெறி அடைவதற்கே பிறந்தனவென்பதுதோன்ற—தோற்றமுடைவுயிர் - என்றார். பிறவாமைக்குப் பிறந்த அவ்வரிய வுயிர்கள் பிறவாநெறியில் செல்லத்தக்கனவாயிருக்க அவ்வுயிர்கள் அங்ஙனம்செல்லாவண்ணம் தடுத்தல்போல் இக்கொலைநிகழ்ந்தபடியால் இது உயிர்க்கொலையன்று, அவ்வுயிர்க்குப் பிறவாநெறியைத்தடுத்துப்பிறக்கும்நெறியைக் காட்டிய பெரும்பாவம் என்பது தோன்ற—கொன்றான் ஆதலினால் - என்றார். இப்பெரும்பாவத்திற்கு அறநூல்களிற் கூறப்பட்டுள்ள மிகப்பெரிய பரிகாரங்களெல்லாம் மிகச்சிறுமைத்தேயன்றிப் பெரிதன்றென்பதுதோன்ற—துணிபொருள்தான்—என்றார். மிகப்பெரிய பரிகாரத்தை மிகச்சிறுமையாக்கவல்ல இப்பெரியபாவம் மன்மகன் உடம்போடு வாழ்வானாயின் இப்பாவமானது அவனுயிரை விடாதுபற்றி அவனுடம்போடு வளர்ந்து என்றும் மீளாநரகத்திற்கு ஆளாக்குமாதலின் அங்ஙனம் ஆக்காவண்ணம் அவனுயிர் அவ்வுடலை விட்டுப் போகும் வண்ணம் அவனைக்கொலைசெய்வதுவே பரிகாரமாகுமன்றி வேறொரு பரிகாரம் இல்லையென்பது துணிபென்பதுதோன்ற— ஆற்றவு மற்றவற்கொல்லு மதுவேயாம்—என்றார். இங்ஙனம் யான்கூறிய இப்பொருளன்றி அறநெறியில்கூறப்படும் பொருள் வேறொன்றில்லை என்பது துணிபென்பது தோன்ற—அதுவேயாம் என நினைமின்—என்றார்.

இத்திருவிருத்தத்தால்—பரிகாரவியலுட் கூறப்படும் பரிகாரங்களெல்லாம் பிறக்கும் நெறியிற் றலைப்பட்டுழலும் பெத்தான்மக்களுக்குச் செய்யும் தீங்காகிய பாவச்செயல்களுக்குப் பரிகாரமே யன்றி, பிறக்கும் நெறியிற் றலைப்படாது பிறவாநெறியிற் றலைப்படும் முத்தான்மாக்களுக்குச் செய்யுந் தீங்காகிய பாவச்செயல்களுக்குப் பரிகாரமன்று என்று அதனுண்மைத் திறத்தையும், முத்தான்மாக்களுக்குச் செய்யும் பாவச்செயலுக்குத் துணையாயிருந்த அவ்வுடலைவிட்டு உயிர்நீங்கச்செய்வதே வேதவுரையின் துணிபொருள் என்று அதனுண்மைத் திறத்தையுங் கூறப்பட்டன. (௩௪)

* ஏழாந்திருமுறை—திருவாரூர் பண் - செந்துருத்தி செ - ௪.

அரசன்மொழிக்கு அமைச்சர் அஞ்சி அகலுதல்.

எனமொழிந்து மற்றிதனுக் கினியிதுவே செயல்இவ்வான்
மனமழியும் துயர்அகற்ற மாட்டேதேன் வருந்தும்இது
தனதுறுபேர் இடர்யானும் தாங்குவதே கருமம்என
அனகன் அரும் பொருள்துணிந்தான் அமைச்சரும் அஞ்சினர்அகன்றார்.

(எ - நு.) என்மகனால் நேரிட்ட இச்செயலுக்கு இனி யான் செய்யக்கடவதா யுள்ளது அவனைக் கொல்வதாகிய இப் பிராயச்சித்தவிதியே யாமென்றுசொல்லி மீண்டும் அப்பசுவைப்பார்த்து) இப்பசு வருந்துகின்ற வருத்தத்தை நீக்கமாட்டா திருக்கின்றயான் இப்பசு கன்றையிழந்து அடைந்திருக்கின்ற துன்பத்தைப்போல யானும் மகனையிழந்து துன்பத்தைத் தாங்குவதே தகுதியான செயலாகும் என்று கருமத்தின் அரும்பொருளை உணர்ந்து செய்யத்துணிந்தனன். அக்குறிப்பையுணர்ந்த மந்திரிமார்களும் அச்சொல்லைக் கேட்ட அவ்வளவில் அஞ்சினவர்களாய்த் தூரத்தே சென்றனர் என்பதாம்.

மற்றிதனுக் கினி யிதவேசெயல் என மொழிந்து இவ்வான் எனக்கூட்டுக.

பரிகாரஞ்செய்து மகனை இவ்வுடம்போடு வாழச்செய்தல் அறநெறியில் கூறப் படும் உண்மைத் திறமன்று கன்றினுடலைக் கொன்றதுபோலும் அவனுடலைக் கொல் வதுவே அறநெறியிற் கூறப்படும் நுண்பொருளாகிய உண்மைத்திறமென்று கூறிய படியே அச்செயலைச் செய்யத் துணிந்தன ரென்பார்—எனமொழிந்து மற்றிதனுக்கு இனி இதுவே செயல்—என்றார். கன்று இறந்ததற்கு மகனை இறக்கச்செய்தல் பரிகாரமாயிற்று இப்பசுவானது மனம் அழிந்து படுந்துன்பத்திற்கு அப்பரிகாரம் என்னாயிற்று? அந்தோ! இதற்கு நான் என்செய்யக்கடவேன் என்பார்—இவ்வான் மனம் அழியுந் துயர் அகற்றமாட்டாதேன்—என்றார். அங்ஙனம் எண்ணி வருந்துங் காலத்து அவருள்ளத்தில் இப்பசுவானது தனது ஒருகன்றையிழந்து வருந்துவதுபோல் நாமும் ஒருமகனையிழந்து வருந்தி நமது வாழ்நாளைக் கழிப்போம். இதுதான் இப்பசு வுக்காக நாம் செய்துகொள்ளவேண்டிய பரிகாரமாகும் என்று துணிந்தனர் என்பார்— அனகன் அரும்பொருள் துணிந்தார்—என்றார்.

மகனைக் கொல்வதே மகனுக்குச் செய்யத்தக்க பரிகாரமென்றும், அப்பரிகாரத்தைச் செய்து நாம் மனமழிந்து ஒழியாத் துயரத்தோடுவாழ்வதே மனமழிந்து துயருறும் இப் பசுவிற்காக நாமசெய்துகொள்ளத்தகும் பரிகாரமாகுமென்றும் உள்ளத்துள் எண்ணிச் செய்யத் துணிந்திருப்பதை மந்திரிகள் குறிப்பானுணர்ந்து அச்செயலுக்கஞ்சி அகன் றனரென்பார்—அனகன் அரும்பொருள் துணிந்தான் அமைச்சரும் அஞ்சினர் அகன்ற னர்—என்றார்.

சிந்தை தளர்ந்தருளுவது - மற்றிதற்குத் தீர்வன்று, மைந்தனைமுன் கோவதை செய்தார்க்கு மறை அந்தணர்கள் விதித்த முறைவழிநிறுத்தல் அறமென்று அவ்வறத் தில் அமைந்திருக்கும் உள்ளத்தை யுடைய அமைச்சருக்கு அரசனுள்ளத்தில் அமைந்த அறத்திறம் அமையாமையான்-அஞ்சினர் என்றும், அஞ்சினவர்களாகிய அவ்வமைச்சர் கள் அரசனுள்ளத்தில் அமைந்த அவ்வறத்தை அகற்றமுடியாமையான் அஞ்சினர் அகன் றனர்என்றுங்கூறினார். எனவே அரசன் எண்ணிய எண்ணத்தைக் கருதி அஞ்சின ரென்றும், செயலைக்கருதி அகன்றனர் என்றுங் கொள்க. (சஉ)

அரசன் அமைச்சனை ஏவ, அவன் உயிர்விடல்.

மன்னவன்தன் மைந்தனை அங் கழைத்தொருமந் திரிதன்னை
முன்இவனை அவ்வீதி முரண்தேர்க்கால் ஊர்கஎன
அன்னவனும் அதுசெய்யா தகன்றுதன் ஆருயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான்.

(எ - து.) பின்னர் அரசன் தனது புத்திரனை அங்குவரவழைத்து ஒருமந்திரியைப் பார்த்து இவனை முன்னே இப்பசுவின்கன்று இறந்த அவ்வீதியிலேயே வலியதேர்க் காலில் இட்டு தேரை நடத்தக்கடவாய் என்று கட்டளையிட அம்மந்திரியும் அரசன் கூறியவாறு செய்தற்கு மனமில்லாதவனாய் அவ்விடத்தினின்று நீங்கி அரிய தன்னுயிரைவிட்டுத் துறக்க அதனை அரசன் அறிந்து தன்வமசத்துக் குரியனாகிய புத்திரனைத் தாமேயழைத்துக்கொண்டு கன்று இறந்துகிடக்கும் வீதிக்குப்போயினார். (எ - ம்.)

அந்தணர்பால் பரிகாரந்தேடச்சென்ற தன்மகனுக்குத் தாமே பரிகாரந் தேடியுள்ளாராகலின்—தன்மைந்தனை மன்னவன் அழைத்து—என்றும், நீ விரும்பிய பரிகாரங் கூறுவோர் அந்தணரன்று, இந்த ஆனே (பசுவே) ஆகும் என்று மகனுக்கு இடங்காட்டினாராகலின்—அங்கு அழைத்து—என்றும், தன்மகன் வந்த பழியை மாற்றும் பரிகாரத்தையறிந்து அதனைச்செய்வதற்கே துணிந்தவனாயும் தந்தையாகிய தனக்குப் பழிவராமற்காத்தற்குமே எண்ணியிருப்பவனாயும் உள்ளானன்றித் தனக்குவரும்பழிக்கும் நமக்குவரும் பாவத்திற்கும் அஞ்சாது தன்னுயிர் காத்தற்கே பரிகாரஞ்செய்துகொள்ளத் துணிந்தானில்லை என்று அரசர்பெருமான் அறிந்து தன்மகன்பால் தானெண்ணியசெயலைக் கூறாது தன்னெண்ணப்படியே செய்யத் துணிந்தனராகலின் - ஒருமந்திரிதன்னை முன்னிவனை அவ்வீதி முரண்தேர்க்காலூர்க—என்றும், வந்த இப்பழியை மாற்றுதற்கு தன்னுருயிர்போன்ற மகனை உயிர்துறக்கச்செய்தல் அரசனுக்கு அறமாதல்போல் அரசமகனுயிர்க்கு நமதாருயிரைக்கொடுத்தல் அறமாமேயன்றி அரசனாணைப்படிச் செய்தல் அறமன்றாகலின்—அன்னவனும் அதுசெய்யாது அகன்று தன்னாருயிர் செகுப்ப—என்றும், அஃதறிந்த அரசன் நம்மகனால் கன்றிறந்ததேயன்றி நம்மகன் நிமித்தனாய்ப் பிறனொருவனால் நடந்திருக்குமாயின் அதுபோல் நாமும் நிமித்தனாயிருந்து நமது மந்திரியைக் கொண்டு நம்மகனைக் கொல்லல் அறமாம். அவ்வறத்தலைதயுணராது அமைச்சனுயிரைத் துறக்கச்செய்தனமன்றோ என்று தாமதறிவை அருகருத்துத் தாமே தம் மகனைத் தேர்க்காலில் செலுத்தல் நல்லறமென் றுணர்ந்து சென்றனராகலின்—தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான்—என்றுங் கூறினார்.

௨௬-வது திருப்பாட்டில் பசுவைக்கண்டு இரங்கியமகன் தான்பிறந்தது பழிக்கென்றெண்ணி அப்பழிக்குப் பரிகாரந்தேட மறையவர்பால் சென்றனனென்றும், ௨௭ - வதில் - பசுவானது அரசரிடத்தை நோக்கிச்சென்று அங்குள்ளமணியைத் தனதுகொம்பினால் புடைத்ததென்றும்; ௨௮-வதில் அங்ஙனம் புடைத்ததனால் உண்டாகிய ஓசை - அரசருக்கு மணியோசையாய்க்கேளாது - பழியோசையாகவும் பாவஓசையாகவும் மறலியூர்தியின்மணியோசையாகவும் கேட்டதென்றும், ௨௯-வதில் அவ்வோசையின் காரணத்தை வாயிற்காவலோர் கூறினரென்றும், ௩௰-௩௧-வதில் அக்காரணத்தின வரலாற்றை அமைச்சன் விளங்கக்கூறினானென்றும், ௩௨-௩௩-வதில் அரசர் அந்த ஆவின் துயரத்தைக் கண்டு துயர்க்கடலில் மூழ்கிக் கரைகாணாது அழுந்தினரென்றும், ௩௪-வதில் அரசர் அத்துயரத்தினின்றும் நீங்க அமைச்சர்கள் தாங்கள்உணர்ந்திருக்கும் அறத்தைக்கூறினாரென்றும், ௩௫-௩௬ - வதில் அவர்கள்கூறிய அறத்தைமறுத்து உயிர்களைக்காக்குமுறையை அரசர் கூறினாரென்றும், ௩௭-வதில் அமைச்சரைநோக்கி நீங்கள்கூறியது எனக்குப் பழிப்பினையுண்டாக்கும் அறமென்று இகழ்ந்துகூறினாரென்றும், ௩௮-வதில் அமைச்சர்கள் யாங்கள் கூறியது தொன்றுதொட்டுவரும் வேதநெறியென்று கூறினாரென்றும், ௩௯-௪௰-வதில் அவரைநீவிர்கூறியநெறியின் உண்மைத்திறத்தைச் சிந்தைசெயாது கூறுகின்றீர் என்று அரசர், மறுத்தனர் என்றும், ௪௧-௪௨-வதில் இப்பாவம் பசுதருமத்தார்க்குக்கூறிய பரிகாரத்தில் அடங்கியதன்று, பதிதருமத்திற்கூறியபடி மகனைக்கொல்வதே பரிகாரமென்று கூற மந்திரிகள் அஞ்சியகன்றனரென்றும், இத்திருவிருத்தத்தால் வேறொரு மந்திரியையழைத்துத் தன்மகனைத் தேர்க்காலில் வீழ்த்துவாயென்ன அவனதுசெய்யாது தன்னுயிரைத் துறந்தனனென்றும், அதனை அறிந்த அரசனார் அச்செயலைத்தாமே செய்ய அவ்வீதிக்குச் சென்றனரென்றுங்கூறப்பட்டன. (௫௩)

அரசனுந் தன்மகனைத் தேரிலூர்தல்.

ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி உறவூர்ந்தான்; மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்!

(எ - து.) மனுநீதிச் சக்கரவர்த்தி தமது குலம் வளர்தற்கு உள்ளவனாயுள்ள மகன் ஒருவன்றா னென்பதையும் நினையாமல் தருமத்தின்வழி செல்லுகையே தாஞ்செல்லும் கடனாக எண்ணித் தமது புத்திரனது மார்பின்மேல் தேர்ச்சக்கரமானது பொருந்தும்படி நடத்தினார். ஆகையால் அவ்வருமையாகிய அரசாட்சியானது அரிதென்று சொல்லுவதா? அல்லது எளிதென்று சொல்லுவதா? என்பதாம்.

தனக்கு ஒருவனாயுள்ள இம்மைந்தனை "சிறந்த நற்றவத்தால் தேவி திருமணிவயிற்றாற் பிறந்தனன்" என்றும், தவமுயன் றரிதிற்பெற்றவனென்றும் முன்னர்க் கூறியிருக்கின்றாராகலின் இம்மகன் தவத்தால்வந்தவனென்று வெளிப்பட்டது. அத்தவம் தருமத்தின்வழி தவறாது நடப்போர்க்கன்றி நிலைபெறாது. அதுநிலைபெறாதாயின் புத்திரப்பேறு பொருட்பேறு முதலிய செல்வங்கள் ஆக்கம்பெறுவதின்றிக் குன்றும். ஆகவே அவ்வரசர்பெருமான் இவ்வுண்மைகளை நன்குணர்ந்தவனாகலின் தருமங் குன்றாவழி தவங்குன்றா, அதுகுன்றாவழி தவத்தால்வந்த மகப்பேறுகுன்றா. அதுகுன்றாவழி நமதுகுலமுங் குன்றா. அதுகுன்றாவழி ஒருமைந்தனால் நமதுகுலத்துக்குண்டாகும் ஆக்கங்குன்றா ஆகலின் - தருமந்தன் வழிச்செய்கை கடனென்று துணிந்தனரென்றும், அங்ஙனந்துணிந்த பின்னர், "அமைத்தவினைக்கீடா யனுதினமுஞ் செய்வ, இமைப்பொழுதும் வீண்செயலொன்றில்லை—உமைக்குரியான்; எல்லாமறிந் தெங்கியற்றுவதுந் தன்னடிமை, வல்லார்தமக் குணர்த்துவன் என்றும், இன்னவினை யின்னதலத் தின்னபொழுது இன்னதனால் இன்னபடியாய்ப் பொருந்துமென் றமைத்தே - அன்னவினை, அன்னதலத் தன்னபொழு தன்னதனால், பின்னமறக்கூட்டும்பிரான்" என்றும் சிவபோகசாரத்திற்கூறியபடி அரசர்பெருமான் செய்தனராகலின் - தன்மைந்தன் மருமந் தன்தேராழி உறவூர்ந்தான் மனுவேந்தன்—என்றும், பெருங்கருணைத் தடங்கடலாகிய இறைவன் மேற்கூறியபடி செய்வானென்பதுபோல் இவ்வரசர் பெருமானும் தன்மகன் செய்த வினைவழியே அவனுக்கு அவ்வினையைப் பின்னமற இயற்றினராகலின்—அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ—என்றுங் கூறினார்.

ஆசிரியர் சேக்கிழார் அரிதோ மற்றெளிதோ என்றதனுண்மை யாதெனின், "உமைக்குரியான் எல்லாமறிந்து எங்கியற்றுவதுந்தன்னடிமைவல்லார்தமக்கு உணர்த்துவன்' என்று மேற்கூறியவாறு அறவாழிஅந்தணனாகிய இறைவன் உணர்த்தும் தருமத்தின்வழிச்செல்லும் அடிமையில் வல்லார்க்கு இச்செயல் அரிதானதோ? அன்று, எளிதானதே. தருமத்தின் வழிச்செல்லும் அடிமையில் வல்லரல்லார்க்கு எளிதானதோ? அன்று, அரிதானதே என்னும் இருவகையுண்மையைக் குறித்ததாமெனக.

இதனால் அரசன் பசுகருமத்தின்வழியே செல்லாது பதிதருமத்தின்வழியேசென்ற திறத்தை விதந்துகூறப்பட்டது. (௪௪)

இறைவன் காட்சிகொடுத்தல்.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார்; வானவர்பூ மழைசொரிந்தார்;
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்.

(எ - து.) உயிர்கண்மேல் வைத்த தண்ணிய அருளாகிய வெண்கொற்றக் குடையினையுடைய மநுச்சக்கரவர்த்தியினது செய்தற்கரிய செயலைப் பூவுலகிலுள்ளார்கண்டு

மனஞ் சகிக்கமாட்டாதவர்களாய்க் கண்ணீராகிய மழையைப் பொழிந்தார்கள். வானுலகி லுள்ள தேவர்கள் மலராகியமழையைப் பொழிந்தார்கள். அச்சமயத்தில் வீதிவிடங்கப் பெருமான் அம்மநுச்சக்கிரவர்த்தியின் கண்ணுக்கெதிரில் அழகிய திருவீதியில் இளமை பொருந்திய இடபவூர்தியின்மேல் தேவர்கள் சூழ்ந்துவணங்க நின்றருளினான் (எ - ம்.)

தண்ணளி வெண்குடைவேந்தன் செயல் மண்ணவர் கண்டு தரியாது கண்மழை பொழிந்தார் வானவர்பூமழைபொழிந்தார் வீதிவிடங்கப்பெருமான் அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல் விண்ணவர்கள் தொழநின்றான் எனக்கூட்டுக.

தன்செங்கோலின்வழியே வாழ்வோராகிய உயிர்களைத் தனது அறக்கருணையால் வெளிவரும் இரக்கத்தினால் வருந்தாதவாறு எப்பொழுதும் காக்கவல்ல நமது அரசன் தனது கருணைக்கும் இரக்கத்திற்கும் நிலைக்களமாயுள்ள தன்மைந்தனை இன்று கருணையுமற்று இரக்கமுமற்று வன்கண்ணுளனாய் இவ்வாறுசெய்தனனே இச்செய்கையை அறியத்தெய்வமும் இல்லையோ என்று மனம்வருந்தி ஆற்றாது மழைபோலும் கண்ணீரைப்பொழிந்தனர் என்பார்--தண்ணளி வெண்குடைவேந்தன் செயல்கண்டு தரியாது கண்மழை பொழிந்தார் மண்ணவர்கள்—என்றும், அரசன் தருமம்செல்லும் வழியேநாம்செல்லும் வழியென்று சென்ற அத்திறத்தைத்தேவர்கள்கண்டு அதிசயித்து இவர் நாம்போற்றத் தகும் தெய்வமே யாமென்று கற்பகமலர்களாற் போற்றினர் என்பார்—வானவர் பூமழை பொழிந்தார்—என்றும், மண்ணவர்கள் கண்மழையும் விண்ணவர்கள் பூமழையும் பொழிகின்ற காலத்து "மன்னன் பணியில் சிந்தையினின் உண்மைப் பான்மையை வெளியாக்கவந்த தருமவிடைமேல் அத்தருமமேகண்ணாகத் தேர்ந்துவரும் அரசன் அவ்வீதியிலேயேகாண தருமத்திற்குத் தலைவனாகிய இறைவனும் வந்தனன் என்பார் - மழவிடைமேல் அண்ணலவன் கண்ணெதிரே நின்றான்—என்றும், வீதியிலே நின்றவன் சுயம்புவாகிய சங்கரன் என்பார் - வீதிவிடங்கப்பெருமான் - என்றுங் கூறினார்.

இதனால் அரசனால்செய்யப்பட்ட பதிதருமத்தின் செயலைக்கண்ட பூவுலகினர் கண்மழைபொழிந்து அன்புடையராயினரென்றும், தேவர்கள் பூமழைபொழிந்துவாழ்த்துஞ் செயலையுடையராயினரென்றும், வீதிவிடங்கப்பெருமான் அவ்வரசர் பெருமானுக்குத் தருமவிடைமேல் காட்சிகொடுக்க வந்தனனென்றும் கூறப்பட்டன (௪௫)

சடைமருங்கில் இளம்பிறையும் தனிவிழிக்கும் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான்.

(எ - து.) நின்ற அப்பெருமானது கோலம் எத்தன்மைத்தெனின், சடையின் ஓர் பக்கத்தில் இளமையாகிய சந்திரனும், தனித்து மேலோங்கி விளங்கும் திருக்கண்ணை யுடைய திருநெற்றியும், இடதுபக்கத்தில் உமாதேவியும் மற்றெப்பக்கங்களிலும் பூதகணங்கள் நெருங்கியிருக்கின்ற பெருமையும் ஆகிய இவையிற்றை அரசர்பெருமான் தமக்கு முன்னேகண்டு புகழ்ந்துநிற்க அந்த இடபாரூடராகிய அவ்வீதி விடங்கப்பெருமானும் நீதியில் வல்ல அரசர்பெருமானுக்குத் திருவருளைச் செய்தனர் என்பதாம்.

இதனால் தருமத்தின்வழிச் செல்கை கடனென வீதியேவந்த அரசனுக்கு முன்னே அத்தருமத்தின்வழியே வரும் இயல்புடைய சிவபெருமான்வந்த அருட்கோலங் கூறப்பட்டது.

அவ் வீதியின்கண் இறந்துகிடக்கும் கன்றும், அமைச்சனும், மகனும் இறந்துபடும் பருவமடைந்த சந்திரன் தன்னைவந்தடைந்தகாலத்து இறவாது இளம்பருவத்தோடு கலைநிறையப்பெற்றதுபோல் உயிர்பெற்றெழுவார் என்பதுதோன்ற—சடைமருங்கில் இளம்பிறை யுடையனாயும், அங்குநிகழ்ந்த செயலெல்லாம் பரிகாரந் தேடுதற்குரிய பாவச்செயல்களன்று; தருமத்தின் உண்மைத்திறத்தை யாவருங் கண்ணாரக்காணுதற்

கென்பது தோன்ற - தனிவிழிக்குத் திருநுதலுடையனும், அங்ஙனமான உண்மைத் திறத்தைத்தந்து ஞானக்கண்ணுற்கண்டவர்க்கு அவருள்ளத்திடையே அருள்தோன்று மென்பதுதோன்ற - இடமருங்கில் உமையாளையுடையனும், இங்ஙனமான அருளைப் பொருந்தினவன் இம்மறுவே என்று எவ்வுலகிலுள்ளார்க்குந்தோன்ற-எம்மருங்கும் பூதகணம் புடைநெருங்கினவனும்; தருமத்தின் பெருமையுணர்ந்த இம்மறுவே இங்ஙனங் கூறிவந்த அடையாளப் பொருள்களில் அமைந்துள்ள உண்மைப்பொருளை யுணர்ந்து மகிழும்பெருமை யுடையவனென்பது தோன்ற - பெருமையுமுன் கண்டரசன்போற் றிசைப்ப என்றும், இங்ஙனமான பொருளமைந்த கோலத்தைக் காணப்பெற்றதே இறைவன் அவ்வரசனுக்குச்செய்யும் அருளென்பது தோன்ற—விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான் என்றுங் கூறினர்.

சந்திரன் தனக்குவந்த பழிக்கஞ்சாது வெற்றிகொண்டதுபோல் அரசன் தனக்கு வந்த பழிக்கஞ்சாது வெற்றிகொள்ள - சடைமருங்கில் இளம்பிறையும், நெற்றிக்கண்ணால் எரிபட்ட காமனை இரதிதேவி மீளவும்உருவமாகப் பெற்றதுபோல் தனது ஒப்பற்ற குலம்விளங்குதற்கு ஒருகண்ணுயிருந்த மகனை மீளவும் பெற - தனிவிழிக்குந் திருநுதலும், தவத்தைச்சோதிக்க இமயமலையில் கிழவனுய்ச்சென்று தான்செய்த செயலாலே தனது இடப்பாகத்தை உமாதேவிகொண்டு மணம்பெற்றதுபோல், தன்னைச் சோதிக்கவந்த தனிப்பெருந் தருமத்தின் செயலாலே அத்தருமத்தையே யிடமாகக் கொண்டு மணம்பெற - இடமருங்கில் உமையாளும் எப்பக்கத்திலுமுள்ள உலகமெல்லாம் அழிவெய்த வருங்காலத்து அழிவெய்தும் பூதங்களைப்போல் அல்லாமல் அழிவெய்தாப் பூதங்களைத் தான் எப்பக்கத்துங் கொண்டிருத்தல்போல் தன்னால் உயிர் துறந்த அமைச்சனைப்பெற்று அவனோடு ஏனைய மந்திரிகள் முதலாயினருடன் கூடி வாழும் வாழ்வைப்பெற எம்மருங்கும் பூதகணமும அரசன்காண அவ்வடையாளங்களைக்காட்டி, அஃதேபோல் அருள்செய்ய வந்தனனாதலின்—விறல்வேந்தற் கருள் கொடுத்தான் என்றார்.

இதனால் காட்சிகொடுக்கவந்த இறைவன் சாது கோலத்தானே தாம் அருள்புரியுஞ்செயலைவிளக்கின னென்பது கூறப்பட்டது. (சஅ)

பசுங்கன்றோடு இறந்தவர்கள் உயிர்பெற்றெழல்.

அங்கிலையே உயிர்பிரிந்த ஆன்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்று மந்திரியும் உடனெழலும்
இன்னபரி சானென்ன றறிந்திலன்வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ.

(எ - து.) இவ்வண்ணமாய்க் காட்சிகொடுத்த அப்பொழுதே உயிர்விட்டு இறந்து கிடக்கின்ற பசுவிற்குரிய கன்றும், அந்த மநுச்சக்கிரவர்த்தியின் அரசுரிமைக்குரிய ஒப்பற்றபுத்திரனும், அரசன் ஆணைக்கஞ்சி யிறந்தமந்திரியும் இழந்தவுயிருடனே எழுந்திருக்கவும் அவைகளைக்கண்ட மநுச்சக்கரவர்த்தியும் தாம் இன்னதன்மை யுடையவனுயிருக்கின்றோமென்றறியும் அறிவற்றவராயினர். இச்செய்கையை நோக்குங்கால் சர்வான்மாக்களுக்கும் முதல்வனும் அநாதியாயிருக்கின்ற சிவபெருமானே இதற்கு முன்னின்றருளுவாராயின் அவரால் முடியாதபொருளும் உளதோ என்பதாம்.

இதனால் சிவதருமமானது-மநுநீதிக்கு முன்னின்று ஒருவராலும் செய்யமுடியாத முடிந்தசெயலைச் செய்விக்க முன்னின்றதுபோல், அத்தருமத்தினுடைய முடியாத செயலின்பொருளை யுணர்த்துதற்கு யாவருக்கும் முன்னேனாகிய இறைவனும் முற்பட்டு மேலேசொல்லியவாறு அரசனுக்கு அருள்கொடுத்தற்குரிய அடையாளப்பொருள்களோடு வந்தனனாகலான் - உயிர்பிரிந்த ஆன்கன்றும அவ்வரசன் மன்னுரிமைத் தனிக்கன்றும் (மகனும்) மந்திரியும் உடனெழலாயிற்றென்று கூறப்பட்டது.

யாவர்க்கும் முன்னவனே முன்னின்று முடித்த இவ்வறத்தின் உண்மைப்பொருள் இன்னபரிசென்று அறியக்கூடுமாயின் அப்பொருள்வசமாய் அப்பொருளுக்காளாகிய அரசர்பெருமானும் இன்னபரிசானென்று அறியக்கூடும். ஆகவே அவ்வறத்தின் பொருளும் தன்பரிசும் அரசனுக்கு அறியக்கூடாதொழிந்ததென்க.

இதனால்—பசுவின் துயரத்தைத் தாமும்பெற்றிருக்கத் துணிந்த அரசர்பெருமான் ஆதனைப்பெறாது பசுவினால் பேரின்பத்தையே பெற இறைவன் முன்னின்று அருள் புரிந்த செயலின் திறத்தைக்கூறப்பட்டது. (௪௭)

பசுவும் அரசனும் மகிழ்தல்.

அடிபணிந்த திருமகனை ஆகமுற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயரம் நீங்கினான் நிலவேந்தன்;
மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரல்நீங் கியதன்றே.

(இ - ள்.) உயிர்பெற்றெழுந்து வருகின்ற இளங்கன்று தனது தாய்ப்பசுவின் மடியினின்றும் ஊற்றெடுத்துப் பெருகிப் பொழிகின்ற இனியபாலைக் களித்துண்டு அதனால் பூமிநனையும்படியாகச் சுரக்கும்பாலுடனே வருகின்றதாய்ப்பசுவும் கன்றிழந்த துயரத்தினின்றும் நீங்கியது பூவுலகினை ஆள்கின்றவராகிய மநுச்சக்கிரவர்த்தி அதனைக்கண்டு அளவில்லாத மகிழ்ச்சியடைந்திருக்குந் தருணத்தில் தனது பாதத்தை வணங்கிக்கிடக்கின்ற திருமகனை எடுத்துமார்பிற் பொருந்த அணைத்துத் தனக்குண்டாகிய துயரத்தினின்று நீங்கினார் என்பதாம்.

உயிர்பெற்றுவருங்கன்று தீம்பால் உண்டுமகிழ்ந்ததென்றும், (அதுகண்டு) படிநனைய வரும் பசுவும்பருவரல் நீங்கியதென்றும், (அதுகண்டு) நிலவேந்தன் நெடிதுமகிழ்ந்தனன் என்றும் (திருமகனும்எழுந்து அடிபணிந்தனன் என்றும்), அடிபணிந்த திருமகனை எடுத்து ஆகமுற அணைத்து அருந்துயரம் நீங்கினான் என்றும் கூட்டிப்பொருள்கொள்க.

இதனால் அரசனார் பேரின்பம் பெற்றமுறையின் திறங்கூறப்பட்டது. (௪௮)

பொன்தயங்கு மதில்ஆரூர்ப் பூங்கோயில் அமர்ந்தபிரான்
வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே அருள்கொடுத்துச்
சென்றருளும் பெருங்கருணைத் திறங்கண்டு தன்னடியார்க்
கென்றும்எளி வரும்பெருமை எழுலகும் எடுத்தேத்தும்.

(எ - ள்.) பொன்மயமான மதில்சூழ்ந்த திருவாரூரில் பூங்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் வீதிவிடங்கப்பெருமான் தருமநெறியை நிலைநாட்டவல்ல வெற்றியினையுடைய மநுச்சக்கரவர்த்திக்கு வீதியிலேயேசென்று அனுக்கிரகஞ்செய்தருளிய பெரிய கருணைத்திறத்தை எழுலகத்தாருங்கண்டு தன்னடியவர்களுக்கு எக்காலத்திலும் மிகஎளிமையாய் வருவதாகிய பெருமையை எடுத்துச்சொல்லிப் புகழ்வார்கள் என்பதாம்.

வீதியிலேசென்று அருள்கொடுத்தருளும் பெருங்கருணைத்திறம் எழுலகும் கண்டு, தன் அடியார்க்கு என்றும் எளிவரும் பெருமை எடுத்து ஏத்தும் என்றுகூட்டுக.

தியாகேசப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கோயில் — எப்பொழுதும் பூக்களால் பந்தரிட்டிருக்கும் சிறப்புடைத்தாகலின் - பூங்கோயில் அமர்ந்தபிரான்—என்றார். வேதம்செல்லும் தருமநெறியில் சைவதருமம்நிற்கும் நிலையைக்கண்டு அந்நிலையைக் கடைப்பிடித்து, வேதங்கூறும் தருமத்தை சைவங்கூறும் தருமத்துள்ளடக்கி ஆளவல்ல வெற்றிப்பாட்டினை யுடையவராகலின்—வென்றி மநுவேந்தன்-என்றார். வேதங்களால் அறியப்படாதவனாய், வேததருமங்களால் எவ்விடத்தும் எப்பொருளிடத்துங் காண்டற்கரியனாயிருக்கும் இயல்பும், அருளினால் ஆகமத்தே அறியப்பட்டவனாய் அவ்வாகம தருமங்களால் எவ்விடத்தும் எப்பொருளிடத்தும் காண்டற்கு மிகஎளியனாயிருக்கும் இயல்

பும் இன்னகாலம் என்பதின்றி என்றும் உடையனுகலின் — அரசன் தேரூர்ந்து நின்ற அவ்வீதியிலேயே அருள்கொடுத்துச்சென்றருளும் என்றார்.

சைவதருமத்தை நாடித்தன்மைந்தன் மருமத்தின்மேல் தேர்ஆழி ஊர்ந்த அவ்வரிய செயலுக்கு இரங்கி, அம்மகனையும், ஆன்கன்றையும், மந்திரியையும் எழச்செய்தலாகிய அக்கருணை அவ்வளவில்நில்லாது, அவன்எண்ணுத சடைமருங்கில் இளம்பிறையுடனும், தனிவிழிக்குந் திருநுதலுடனும், இடமருங்கில் உமையாளுடனும், எம்மருங்கும் எப் புடையும் பூதகணம் நெருங்கும்பெருமையுடனும், இங்ஙனமான அரியகாட்சியுடன் அரசன் மகனேடும் ஆன்கன்றோடும் மந்திரியோடும் தானும் ஒருவனுய் நின்றணுகு லின் — பெருங்கருணைத்திறம் - என்றார்.

வீதிவிடங்கப்பெருமான் உலகினர்க்குச்சொல்லிய வேதப்பிராயச்சித்த விதிவழி யை அரசனூர் கைப்பற்றி அவ்வழியே செல்லாது, சத்திநிபாதர்க்குச்சொல்லிய ஆகம விதியைக் கைப்பற்றி அவ்வழியே சென்று, பசுவின்கன்று எந்தத்தேர்க்காலில் இறந்து பட்டதோ அந்தத்தேர்க்காலிலேயே தன்மகனும் இறந்துபடும்படியாகச் செய்ய, அவ் வரியசெயலைக்கண்ட தியாகேசப்பெருமானும், ஆகமவிதியை எண்ணி அவ்விதிவழியே வந்து பசுவின்கன்றோடு அரசனது தனிச்சின்றையும், மிக எளிமையாய் அக்கணமே எழுப்பித் தாம்பூதமுதலிய பரிவாரங்களுடன் விடைமேல் எழுந்தருளியிருப்பதுபோல் அரசனையும் மந்திரியோடு அவனைப் பரிவாரங்களும் சூழ்ந்திருக்கத் தேர்மேல் இருக்கச் செய்து அங்ஙனம் கண்ணீரும் கம்பலையுமாய் இருந்த யாவரையும் மகிழ்வித்து ஆனந் தக்கண்ணீர் பொழியும்வகைசெய்து தானென்றும் அடியார்க்கு எளிவந்து செய்யும் கருணைவெள்ளத்தைக் காட்டினுணுகலான் — எழுவுகும் கண்டு தன்னடியார்க்கு என் றும் எளிவரும்பெருமை எடுத்தேத்தும் என்றார்.

இதனல்,— அரசனூர் அன்பின்வழியே சென்று தனது அன்பின் திறத்தைக்காட் டினுரென்றும், தியாகராஜனும் கருணைவழியே வந்து தனதுகருணைத்திறத்தை வெளிப் படுத்தினுனென்றும், அதனல் யாவரும் ஆகமவழியைக்கைப்பற்றி அவ்வழியில் திறத தையடைதல் வேண்டுமென்றும், அத்திறத்தையுடையராயின் இறைவன் எளிவந்து கருணைசெய்வதில் ஊக்கப்பாடுடையன் என்றும்கூறப்பட்டன.

பொன்தயங்கு மதிலாரூர் என்றதை - "இருங்கனக மதிலாரூர்" எனவும் "பொன் மதிலாரூர் மணியை" எனவும்வரும் தேவாரங்களானுமுணர்க. (௩௯)

இனையவகை அறநெறியில் எண்ணிறந்தோர்க் கருள்புரிந்து
முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்மேல்
புனையும்உரை நம்அளவில் புகலலாம் தகைமையதோ?
அனையதனுக் ககமலராம் அறவனூர் பூங்கோயில்.

(எ - து.) இவ்வண்ணமாகச் சிவதருமவழியில் அளவில்லாத அடியார்களுக்கு முற்பட்டுவந்து திருவருள்புரிந்து வருகின்றவனுகிய வீதிவிடங்கப்பெருமான் மகிழ்ச்சி யோடும் எழுந்தருளப்பெற்றதாகிய அநாதியாயுள்ள பெரியதிருவாரூரின்மேல் புகழ்ந்து சொல்லும் சொல்லைக்கொண்டு நாம்சொல்லுந் தகுதியுடையதோ? அன்று. அத்தன்மை யுடைய திருநகரத்துக்கு அறக்கடவுளாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பூங் கோயில் இருதயகமலமாம் என்பதாம்.

அறவனூர் என்றதை "தீர்த்தநீர்மல்கு சென்னியறவனூரூர் ,எனவருந் தேவாரத் தாற்காண்க. (௪௦)

திருவாரூர் நகரச்சிறப்பு முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கஉ௫

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கூட்டச் சிறப்பு.

தேவாசிரியம் இருந்தார் இடம்.

பூத நாயகர் புற்றிடம் கொண்டவர்
ஆதி தேவர் அமர்ந்த பூங்கோயிலில்
சோதி மாமணி நீள்சுடர் முன்றில்சூழ்
மூதெயில்திரு வாயின்முன் னுளது.

(இ - ள்) சர்வபூதபதியாயுள்ளவரும் புற்றுருவமாயிருக்கின்ற வேதத்தைத் தாம் வாழும் இடமாகக்கொண்டவரும் சதாசிவாதிமூர்த்திகளுக்கெல்லாம் ஆதிதேவராயுள்ளவரும் ஆகிய இறைவனார் அமர்ந்து எழுந்தருளியிருக்கின்ற பூங்கோயிலிலே, சோதிமயமாய்ப்பிரகாசிக்கும் சிறந்த மணிகளினின்றும் பரந்து சூழ்ந்து ஒளிபரப்பும் திருமுற்றத்திலே அதனைச்சூழ்ந்த பெரிய மதிலினையுடைய திருவாயிலின் முன்னேயுள்ளது. (அது யாதெனில்),—

பூவார் திசைமுகன் இந்திரன் பூமிசை
மாவாழ் அகலத்து மான்முதல் வானவர்
ஓவா தெவரும் நிறைந்துறைந் துள்ளது
தேவா சிரியன் எனுந்திருக் காவணம.

(இ - ள்.) தேவாசிரியன் என்னும் திருப்பெயர்புனைந்த திருவினையுடைய மண்டபம் (அது) - திருமால் உந்திக்கமலத்தில் பொருந்தக் காணப்படுகின்ற பிரமதேவனும் மகத்துக்கு இறைவனாகிய இந்திரனும், பூவினுக்கு அருங்கலமாகிய பொங்குதாமரையின்கண் வாழ்கின்ற இலக்குமியைத் தனதுமார்பகத்தில் வாழப்பெற்றுள்ள திருமால் முதலாகச்சொல்லப்பட்ட சகலதேவர்களும், எக்காலத்தும் நீங்காமல் நிறைந்து, வசித்திருக்குஞ் சிறப்பினையுடையது என்பதாம்.

தேவாசிரியன் என்னுந் திருக்காவணம் பூவார்திசை முகன் * * வானவர் எவரும் ஓவாது நிறைந்துறைந்து உள்ளது எனக்கூட்டுக

இறைவன் பூங்கோயிலின்கண் வாழ்கின்றவனால்— பூவின்கண் வாழ்கின்றவாழ்வும், பூமகள்வாழ்வும், பூமகளால் பெறப்படும் வாழ்வும் பிரமனாதியர் உடையராயினார் என்னும் அச்சிறப்புத்தோன்ற—பூவார்திசைமுகன் * * * முதல்வானவர் நிறைந்து உறைந்துள்ளது என்றார்.

பிரமன் மலவாசிகளாயுள்ள உயிர்களுக்குவேண்டிய தனுகரணாதிகளைச் சிருட்டித்தலாகிய அத்தொழில் தன்னைவிட்டொழியாதிருக்க அவ்வுயிர்கள் மலகாரியங்களில் முனைத்து நிற்கச்செய்கின்றவனாகலான் அப்பிரமனும், இந்திரன் இருவினையொப்புவருதற்கான பதிபுண்ணியங்களைச் செய்ய அறியாது ஏகதேசப்பட்டு மாறி மாறிவரும் இருவினையுட்பட்டு உழல்வதற்கான பசுபுண்ணியங்களைச்செய்வார்க்கு அமைக்கப்பட்டுள்ளதாகிய போகபூமி தன்னுடையதாகவும் அங்குள்ளபோகபதார்த்தங்களெல்லாம் தானொருவனே அநுபவித்தற்கு உள்ளனவாகவும், எண்ணியிறுமாந்து அப்போகங்களைவேண்டி யாகமுதலிய தவங்களைச் செய்வாராயின் அவர்களுக்கு அளவிறந்த துன்பங்களைச்செய்து தான் ஒருவனே இன்பத்தை அநுபவிக்க எண்ணியிருக்கின்றவனாகலின் அவ்விந்திரனும்,

திருமால்-பிறப்பிறப்பாகிய அல்லலையொழித்து சிவானுபவத்தையும், சிவானந்தத்தையும் தரவல்ல சிவபுண்ணியங்களிற்சிறந்த சிவார்ச்சனையைப் பன்முறைசெய்தும் சிவானுபவத்தையும் சிவானந்தத்தையும்பெற்று, பிறப்பிறப்பற்று நித்தியபுருஷனாய் வாழ்வதற்கின்றி யுகங்கள்தோறும் பிறப்பிறப்பினையடைந்து இவ்வுலக இன்பத்தினைப் பெற்று மலபரிபாகம் வரப்பெறாது, தன்னைப்போலும் மலபாகம் வரப்பெறாத ஆன்மாக்களுக்கு மலபோகத்தை விளைவிக்கவல்ல போகங்குன்ற வருமாயின் அக்குறைவைப்போக்கி அவர்களைக் காக்கின்றவனாகலின் அத்திருமாலும், ஏனையதேவர்களும்—இம்மூவருடைய இச்சையையும் அறிவினையும் செயலையுமே சார்ந்து ஒழுகுவாராகலான் அத்தேவர்களும் அத்தேவாசிரியத்தை எப்பொழுதும் விடாது வாழ்பவராயினர். எனவே-தேவாசிரியன் என்னும் திருக்காவணமானது பிரமனது சிருட்டியை வெறுத்தவர்களும், இந்திரனது போகத்தை ஒருபொருளாகமதிக்காதவர்களும், அஞ்ஞானசம்பந்தமாகிய போகங்களுக்கு வரும் இடையூறுகளுக்கு அஞ்சாது அவைகளுக்கு இடையூறு செய்யவல்லவர்களுமாயுள்ள அடியவர் திருக்கூட்டத்தை யுடையது. அஃதாவது—"கொள்ளேன் புரந்தான்மால் அயன் வாழ்வுகுடிகெடினும் நள்ளேன்" "சாவமுன்னாள் தக்கன்வேள்விதகர்தின்று நஞ்சம் அஞ்சி, ஆவ எந்தாய் என்று அவிதா விடும் நம்மவரவரே" "அத்தேவர்தேவர் அவர்தேவர் என்று இங்ஙன், பொய்த்தேவு பேசிப்புலம்புகின்றவர்" என்றிவ்வாறு பேசவல்ல மாவீரமுடைய அடியார் வாழுமிடமென்று காவணச்சிறப்புக்கூறப்பட்டது.

ஆகவே,—பிரமாதிதேவரெல்லாம் ஸ்ரீகயிலையத்தின்கண் நந்திதேவரால் உள்ளே செல்வதற்குக் கூடாமல் வெளியிலே யிருத்தற்கு மில்லாமல் அவருடைய பிரம்படியால் மொத்துண்டு அஞ்சும் இக்குமாய கூடிநின்றவராயுள்ளவர். அஃதேபோல் இம்மண்ணுலகிலுள்ள சிவசந்நிதானத்திலும் மேலேசொல்லியவாறு வீரஅடியார்கள் உள்ளேசெல்லுதற்குரிய திருவாயிலின்முன்னே இருக்கின்றவராக இருத்தலால் தேவர்கள் கயிலாயத்திலும் மிகுந்த துன்பத்தை அனுபவிப்பவராக உள்ளார் என்னும் அவர்கள்படும் அல்லல்தோன்ற—வானவர் எவரும் நிறைந்துறைந்துள்ளது—என்றார்.

இதனை "நின்னைத்தேடி ஒருரும் ஒழியாமே பொற்றித்தெங்கும் உலகமெலாந்திரிந்து நின்னைக்காணபான், தேரூருநெடுவீதிபற்றிநின்று திருமாலு நான்முகனுந்தேர்ந்துங்காணாது ஆரூரா ஆரூரா என்கின்றார்கள்" எனவும், "முழுதுலகில் வானவர்கள் முற்றுங்கூடி முடியாலுறவணங்கி முற்றம்பற்றி அழுது திருவடிக்கே பூசைசெய்யவிருக்கின்றான் ஊர்போலும் ஆரூர்தானே" எனவும் வரும் திருத்தாண்டகங்களாலும் திருவாரூரில் தேவர்கள் அல்லற்படுவதை யறிக.

இவ்வுண்மையுணராமல் பிரமாதிதேவரெல்லாம் சிவபெருமான் திருவருளைப் பெறுதற்பொருட்டு வந்து சேர்தற்கிடமாதல்பற்றித் தேவாசிரிய மண்டபமென்றாயிற்று என்றுவரைந்துள்ளார் முன்னுரைகாரர். அதுபொருளன்மையறிக. எம்மை யின்-தடுத்தாட்கொண்டபுராணத்தில் (ககூ0)வது திருவிருத்தத்தில்—"கண்ணுதல் கோயில் தேவாசிரியனும் காவணத்து, விண்ணவரொழிய மண்மேல் மிக்கசீர் அடியார் கூடி எண்ணிலார் இருந்தபோதில், என்று கூறியிருத்தலால் என்க.

மேலைத் திருவிருத்தத்தில் "திருவாயின் முன்னது" என்றதனை, இத்திருவிருத்ததால்,—தேவாசிரியன் எனுந்திருக்காவணம் தானது அறிவு இச்சை செயல் மூன்றும் முறையே மலங்கழுவுவதிலும், அன்போடு மருவுவதிலும், ஆலயந்தொழுவதிலும் செலுத்திச் சிவமாந்தன்மைபெருவாழ்வடைந்திருக்கும் ஆசிரியன்மார்கள் வீற்றிருக்கும் இடமென்று குறித்துரைத்தமை காண்க.

அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்
புரந்த அஞ்செழுத் தோசை பொலிதலால்
பரந்த ஆயிரம பாற்கடல் போல்வது.

(எ - து.) தேவாசிரியன் என்னும் அக்காவணமை ஆணவமலத்துன்பத்தைத் தீர்க்க வல்ல அடியவர் நிறைந்திருக்கும் பரிசுத்தத்தினாலும், அவர் திருமேனியின்மேல் மாயா மலம் நீங்க நிரம்பப்பூசிய திருநீற்றின் பிரகாசத்தினாலும், கன்மமலத்தைப் போக்கிப் பாதுகாக்கவல்ல திருவஞ்செழுத் தோசையானது பொலிவுபெற் றிருத்தலினாலும், விசாலமாகிய ஆயிரம் பாற்கடலை ஒத்துளது என்பதாம்.

அடியவர் நிறைதூய்மையால் மேனிமேலநிரந்த நீற்றொளியால் எனக்கூட்டுக.

முத்திக்காலத்தும் தோன்றித் துன்பஞ்செய்யவல்ல ஆணவமலத்தின் சத்தியைத் தீர்க்கவல்ல ஆற்றலுடையார் அடியவர்களேயாகலான் அர்த்தைதீர்க்கும் அடியவர் என் றும், கன்மமலத்தின் தடிப்பையும் அதன்செயலையும் வாட்டி யொழித்துக் காக்கவல்லது அஞ்செழுத் தோதுமுறையானுகலான்—புரந்த வஞ்செழுத்து என்றும், மாயாமலத்தா லாகிய உடம்பு தூய்மையாதல் திருநீற்றானன்றி அமையாவாகலான்—நிரந்த நீற்றொளி யால் நிறை தூய்மையால்—என்றுங்கூறினர். இதனால் பாற்கடலிலுள்ள பால் வெண் ணிறத்தோடும் பரிசுத்தத்தோடும் பேரோசையோடுங் கூடியிருத்தல்போல் தேவாசிரி யத்திலுள்ள அடியவர் வெண்ணிறமுள்ள விபூதியோடும் பரிசுத்தத்தோடும் பஞ்சாக்கரத் தொலியோடும் கூடியிருத்தலால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாற்கடலையொத்து அங் குள்ள அநேகம் அடியவர்கள் அநேகம் பாற்கடலையொத்துள்ளாரெனக்கூறப்பட்டது.(௩)

அகில காரணர் தாள்பணி வார்கள்தாம்
அகில லோகமும் ஆளற் குரியரென்
றகில லோகத்து ளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வ ததனிடை.

(எ - து.) சர்வகாரணராகிய சிவபெருமானது திருவடியை வணங்குகின்றவர்களே எல்லாவுலகங்களையும் ஆளுதற் குரியவர்களென்றெண்ணி எல்லா வுலகத்திலுள்ளவா களும் தேவாசிரியத்தை யடைந்திருப்பதினால் அக்காவணம் எல்லாவுலகத்தையும் ஒத் திருப்பது என்பதாம்.

அகில லோகத்துளார்கள் அதனிடை அடைதலின் அகிலலோகமும் போல்வது எனக்கூட்டுக.

எல்லாவுலகினையும் தன் வசப்படுத்திக்கொண்டு அவ்வுயிர்களுக்குத் தனது நித்திய மங்கலத்தைக் கொடுக்கும் நல்லெண்ணம் உடையவன் சிவமென யாகலான்—அகிலகார ணர்—என்றும், அங்ஙனமான சிவ என்னும் சாந்தார்த்தத்தையுணர்ந்து அச்சிவனது திரு வுருவமாயிருக்கின்ற தாளாகிய அருட்செயலில் தமதுசெயல் அடங்கியிருக்கச்செய்யுஞ் செயலுடையார் சீவன்முத்தர்களாகிய அடியவர்களேயாகலான்—தாள்பணிவார்கள்தாம் என்றும், அவ்வடியவர்கள்பால்—"துரியங்கடந்த சுடர்த் தோகையுடன் என்றும், பிரி யாதே நிற்கின்ற பெம்மான், துரியத்தைச், சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளும ஆக்கிடும் அன்பர்க்கு அவன் என்றும், "தாம் அடங்க இந்தத்தலம் அடங் கும் தாபதர்கள். தாம் உணரில் இந்தத்தலம் உணரும்—தாம்முனியில், பூமடந்தை நில் லாள் புகழ்மடந்தை போய் அகலும், நாமடந்தை தங்காள் நயந்து" என்றும் கூறியிருக் கும் சித்தாந்த வாக்கியங்களின் உண்மையை உணர்ந்தாரும், அவர்களது சொல்லளவை யொன்றுனே நிக்கிரகா னுக்கிரகங்கள் நடைபெற்றிருக்கும் உண்மையை உணர்ந்தாரும் அவ்வடியவர்களையே சரண்புக வல்லராகலின்—அகிலலோகமும் ஆளற்குரியர் என்று அகிலலோகத்து உள்ளார்கள் அடைதலின்—என்றும், இங்ஙனமான சிறப்புடையடி யார்கள் பூலோகவாசிகளாய் "எங்கும் யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம், யாவர்க் கும் மேலானோம் என்றிறுமாப்பெய்தித், திங்கள்முடியார் அடியார்அடியோம் என்றுத் திரிந்திடுவர் சிவஞானச்செய்தியுடையோரே,, என்றுகூறிய சித்தாந்த வாக்கியப்படித் திரிகின்றவர் அடியவர்களேயன்றி ஏனைய உலகினரன்று. ஆகவே எவ்வுலகினரும் ஈண்டே அடங்கிநிற்பவராகாலான்—அகிலலோகமும் போல்வது என்றுங்கூறினர்.(௪)

அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்
மெய்த் தழைத்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத்திருத் தொண்டு செய்கடப் பாட்டினார்
இத்திறத் தவர் அன்றியும் எண்ணிலார்.

௩ (இ - ள்.) போகபூமிகளாகிய அகிலலோகத்தார் வந்தடைவதாகிய அவ்விடத்தில் பிறவிதோறும் விடாது இயற்றிவந்த நற்றவத்தால் இறைவன் தாமேவிரும்பி முன் அடிமைகொள்ளப்பட்டவர்களாயும், அன்பின் மிகுதியினால் உடல்பூரித்து நடுங்குகின்ற சித்தத்தை யுடையவர்களாயும், கையினாற் செய்யும் அலகிடுதல் முதலாகச் சொல்லப்பட்ட தொண்டுகளை உறுதிப்பாடெனக் கொண்டு செய்கின்றவர்களாயும் உள்ள இத்திறத்தவர்களாகிய ஞானிகளும், இவர்களையல்லாமல் குருமுகமாய் நூன்முறைப்படி சரியை கிரியை யோகங்களின் முறைகளை யுணர்ந்து அவ்வம் முறைமைப்படியே நிற்கின்ற சரியாவான்கள் முதலிய மூவரும் எண்ணில்லாதவர்களாய் அம்மண்டபத்தில் இருக்கின்றனர் என்பதாம்.

"பண்டை நற்றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்திபண்ணும், தொண்டரைத் தானே தூயகதியினிற் றொகுப்பன்" என்றுகூறிய சித்தாந்த வசனப்படி இறைவன் அன்புகொண்டு ஆளப்பட்ட ஞானிகளாகிய அன்பர்கள் என்பார்—அத்தர் அன்பினால் வேண்டிமுன்னாண்டவர்—என்றும், அந்த ஞானிகளாகிய அன்பர்களது செயல் இத்திறமென்பார்—மெய்த்தழைத்து விதிர்ப்புறு சிந்தையார் கைத் திருத்தொண்டு செய்கடப்பாட்டினார், இத்திறத்தவர்—என்றும்" பண்டைநற்றவத்தின் வழியானன்றி அன்புநிகழ்தற்குரிய ஞானநெறியைக் கூறும் மெய்கண்ட நூலினைக் குருமுகமாய்க் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்னும் நான்கினையும் உணர்ந்து அங்ஙனம் உணர்ந்தவழியானே வீட்டினைக் காதலித்து, அங்ஙனங் காதலித்த அவ்வாசை மிகுதியான் அம்முதல்வனாகிய இறைவன்பால் அன்புடையராய் அவனருள் கைகூடுமாறு—சரியை கிரியை யோகம் என்னும் இவற்றில் ஒவ்வொரொன்றினைப்பற்றி அந்நெறிக்குரிய தொண்டினைச் செய்துவருவோர் பலரென்பார்—இத்திறத்தவர் அன்றியும் எண்ணிலார்—என்றுங் கூறினார்.

இதனால்—தேவாசிரியமண்டபத்தில் உள்ளவர்—மெய்யன்புடைய ஞானவான்களென்றும், அந்தமெய்யன்புடைய மெய்ஞானம் வருவதற்கு வகுத்துள்ள சரியைகிரியை யோகங்களில் இடைவிடாது முயல்வோராகிய சரியாவான்களும், கிரியாவான்களும், யோகவான்களும் ஆகிய மூவகையினரென்றுங் கூறப்பட்டன.

சரியை கிரியை என்னும் மார்க்கங்களில் நிற்பவரை - அன்பர்களென்றும், யோக மார்க்கத்தில் நிற்பவரை—யோகிகளென்றும், ஞானமார்க்கத்தில் நிற்பவரை—ஞானிகளென்றுங் கூறுவதேவழக்கன்றி, ஞானிகளை அன்பர்களென்று கூறுவது வழக்கின்கணில்லை. அங்ஙனமிருக்க, ஈண்டு ஞானிகளை—"பரமனைப்பத்திபண்ணும் தொண்டரென்றும், "ஞானிகளாகிய அன்பர்களென்றும்" கூறியது, என்னையோவெனின் :—

சிவஞானசித்தியார்—கஉ-ஆம் - ந-ஆம் அதிகரணம்—" திருக்கோயில் உள்ளிருக்கும்,, என்றதிருவிருத்தத்தில்—மிகும்சுரபிக்கு எங்கும உருக்காண வொண்ணாத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல் வெளிப்பட்டு அருளுவன் அன்பர்க்கே, என்று சொல்லியவிடத்து—ஞானிகட்கு, மேம்பட்ட வடிவமெங்கணும் காணப்படாதபால்—கன்றைநினைந்த புனிற்றாவின்முலையில் விம்மியொழுகுவதுபோலக் கருணைமிகுதியால் அவ்வன்பே தானாய் எப்போதும் ஆண்டுவெளிப்பட்டு அருள்செய்வன், என்று வுரை கூறியுள்ளார்; அதில் அன்பர்க்கே—என்றதற்கு—சரியையாதிகளில் நிற்போரைக்கூறாது ஞானிகளென்றும்; அன்பரென்பது—ஈண்டு—ஞானிகள்மேற்று " அன்பரொடுமரீஇ" என்புழிபோல என்றும்—ஞானவள்ளலாகிய சிவஞானயோகிகள் அருளிய அருண் மொழியின் வன்மையானென்க.

இத்திறத்தவர் என்றது - ஞானிகளையும், எண்ணிலார்-என்றது - சரியை, கிரியை யோகம் என்னும் மூவகையில்நிற்போரையுங் கூறியது-இதனை "ஞான யோகக் கிரியை சரியை நாலும் நாதன்றன்பணி ஞானி நாலினுக்கும் உரியன்" என்றும் "ஞானமிலா யோக முதல் மூன்றினுக்கும் உரியன் யோகி கிரியாவான்றான்-ஒண்கிரியையாதி ஆன இரண்டினுக்கும் உரியன், சரியையில் நின்றோன் அச்சரியைக்கே யுரியன்" என்றும் கூறிய சிவஞானசித்தியாரால் முறையே காண்க.

இதனால்-தேவாசிரியத்தில் - சரியையாகி நான்கினையும் உடையாராய் நான்கினையும் செய்யவல்ல ஞானிகளும், சரியையும் கிரியையும் யோகமுஞ் செய்யவல்ல யோகிகளும், சரியையும் கிரியையும் செய்யவல்ல கிரியையாளர்களும், சரியை ஒன்றினையே செய்ய வல்ல சரியையாளர்களும் எண்ணிறந்தவர்கள் உள்ளாரென்று கூறப்பட்டது. (௫)

மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசி னால்எத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்.

(எ - து.) குற்றமில்லாத உருத்திராக்கமணியினால் பிரகாசிக்கின்ற திருமேனியின் மேல் பூசுகின்ற வெள்ளிய திருநீற்றைப்போல் உள்ளமும் பரிசுத்தத்தை யடைந்துள்ளவர்கள். இம்மூவகையான் எந்தத் திக்குகளையும் சைவநெறியாகிய சிவசாதனங்களால் விளக்கினவர்கள். இப்படிப்பட்டவர்களென்று சொல்லொணாத பெருமையினால் பிரகாசிக்கின்றவர்கள் என்பதாம்.

மலமாசில்லாத இறைவனாகிய உருத்திரமூர்த்தியினுடைய கண்மணியினின்றுந் தோன்றிய மணியாகலான்—மாசிலாதமணி—என்றும், அந்த மணியை இன்ன இன்னகாலத்தில் எடுத்தணிதல் என்னும் நியதியின்றி எக்காலத்தும் பூண்டு அதனால் பொலிவுபெற்றிருக்குந் திருமேனியையுடையவராகலான்—மணிதிகழ்மேனி—என்றும், சந்தியாகாலம் பூஜாகாலம் முதலிய காலங்கள்தோறும் திருநீறு பூசும் நியமமுடையவராகலான்—மேனிமேல் பூசுநீறு—என்றும், பூசுவோர்களது பாவத்தை யறுத்துப் புண்ணியத்தைக்கொடுத்து உள்ளத்தைப் புனிதமாக்குந் தன்மையுடையது என்று அந்நீற்றின் தன்மையுணர்ந்த அப்பெரியார் தம்மேனிமேற்பூசி நீற்றினை மயமாக்கியதுபோல் உள்ளத்தையும் அந்நீற்றால்விளையும் புண்ணியத்தின்மயமாக்கிப் பிரகாசிக்கச்செய்பவராகலான்—நீறுபோல் உள்ளும்புனிதர்கள்—என்றும், தம்மைப்போலவே தாம்செல்லும் இடங்கள்தோறும் ஆங்காங்குள்ளாரையும்-விபூதி உருத்திராக்கங்களுக் குள்ளாக்கி அவர்களுடைய உள்ளங்கள் புண்ணியத்தால் பிரகாசிக்கும்படிச்செய்யும் தருமசீலராகலான்—தேசினால் எத்திசையும் விளக்கினார்—என்றும், இங்ஙனமாக யாவரையும் சைவசீலராக்கிய புண்ணியராக்குங்கால் அப்புண்ணியரெல்லாம் எங்களை இவ்வாறாக்கிய அப்பெரியாரது பெருமையை என்னென்று நாங்கள் எடுத்துரைப்போம் என்று சொல்லும் பெருமையையுடையவராகலான்—பேசவொண்ணாப் பெருமைபிறங்கினார்—என்றுங்கூறினார். (௬)

பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதோர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனார்.

(எ - து.) ஐம்பூதங்களும் தத்தம் நிலையினின்று மாறின காலத்திலும் உமாதேவியைப் பாகத்திலுள்ளவரது தாமரை மலர்போன்ற திருவடியை மறவாதவர்கள். ஸ்ரீ பஞ்சாக்கரத்தை எக்காலமும் ஓதிக்கொண்டிருக்கின்ற வைராக்கிய நெறியில் நிற்கின்றவர்கள். குற்றமற்ற குணங்களினால் பெரிய மலையையொத்தவர்கள் என்பதாம்.

மனத்தை - மாதோர்பாகர் மலர்த்தாளை மறவாமையினும், வாக்கை—உறைப்போடு கூடிய ஆசையினால் ஸ்ரீபஞ்சாக்கரத்தை இடைவிடாது ஓதிக்கொண் டிருப்பதினும், காயத்தை—இங்ஙனங் கூறிய கோதிலாத இரண்டுகுணங்களும் குடிகொண்டு வாழ்வதற்கு பெரிய மலைபோன்ற இடமாக இருப்பதினும், எக்காலத்துங்கலங்காநிலைமையை யுடையவராதலான் தத்தம் நிலையிற் கலங்கவ நம சங்காரகாலத்தை மேற்கொண்டிருப்பனவாகிய ஐம்பூதங்களும் இடையே காலவிசேடத்தால் கலங்குவரினும் இவர் கலங்கார் எனவே - ஐம்பூதங்களை கலங்கச்செய்து தான் கலங்காது நிற்கின்றவனாகிய மகாசங்காரக்கடவுளுக்கு ஆட்பட்டுத் தமது முக்கரணங்களும் அவன்வசமாகவுங் குணங்குன்றாதவராய்க் கலங்காநிலைமையைப் பெற்றிருத்தலினு மெனக.

இதனை :—"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையுந்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டோனமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே"
எனவருந்தேவாரத்தானும் அறிக (எ)

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

(எ - து.) அழிவும் ஆக்கமும் கெட்ட திருவினையுடையார்கள். ஓட்டையும் செம்பொன்னையும் சமமாகவே பார்க்கின்ற நோக்கினை யுடையவர்கள். தம்முள்ளத்திற் கூடிய அன்பினால் கும்பிடுவதேயல்லாமல் வீட்டின்பத்தையும் வேண்டாத உறுதியினால் விளங்குகின்றவர்கள் என்பதாம்.

"வடிவும் தனமும் மனமும் குணமும் குடியுங் குலமும் குடிபோகச் செய்வது கேடு (வறுமை.) வடிவு முதலியவற்றை யோரோர்வழியாய்த் தன்னைவிட்டுக் குடிபோகச் செய்யாது தன்னிடத்திலேயே நின்று பெருக்கத்தைத்தரும்படிச் செய்வது—ஆக்கம் (செல்வம்) கேடு ஆக்கம் என்னும் இவ்விரண்டையும் ஆக்குவன—புண்ணிய பாவங்கள். இவ்விரண்டையும் ஆக்குவன—நல்வினை தீவினைகள். இவ்விரண்டையும் விளைவிக்கும் (ஆக்கும்) வித்தா (மூலமா)யுள்ளது—கன்மமலம். இக் கன்மமலமென்னும் உறுப்பாகிய வித்தினை—ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி ஓதுகாதல் உறைப்பினெறியினால் களைந்தெறிந்தவ ராகலின்—கேடும் ஆக்கமும் கெட்ட—என்றும், மலம் (அசுத்தம்) எனப்படும் கன்மத்தை பஞ்சாக்கர உச்சரிப்பால், சுத்தமாக்கி மாதோர் பாகர் மலர்த்தாளாகிய அழியாப் பதுமநிதியை (செல்வத்தை) மறவாது போற்றுகின்றவராகலின்—திருவினார்—என்றும், இத்திருவாகிய திருவருளுடையார்க்குப் பொன்வேண்டுமாயின அவ்வருள் மண்ணாலாகிய ஓட்டையன்றி எந்தப்பொருளையும் பொன்னாக்கிக்கொடுக்கும் ஆற்றலுடைத்தாகலின்—ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்—என்றும், ஓடுமுதலிய எப்பொருளையும் பொன்னாக்கித் தரவல்ல திருவருள் அன்புகூடிக் கும்பிடுஞ் செயலொன்றினால் கூடுவதாகலான்—கூடுமன்பினில் கும்பிடலே—என்றும், பொன்னைக் கொடுக்குந் திருவருளே வீட்டையுங் கொடுக்கவேண்டுமே யன்றி வீட்டைத்தருவது வேறொன் றன்றென்னும் நுற்றுணிபு உணர்ந்தார் அருள்பெற வேண்டுவரேயன்றி அருளைமறந்து வீட்டினை வேண்டாராகலான்—அன்றிவீடும் வேண்டாவிறலின் விளங்

திருவருளுடையார்க்கு அவ்வருள் ஓடுமுதலியவற்றையும் பொன்னாக்கிக் கொடுக்கும் என்றதை - சுந்தரமூர்த்திகளுக்குச் செங்கல்லையும் புளியமரத்தில் புளியம்பழத்தையும் பொன்னாக்கித்தந்ததே சான்றாமெனக. வீடும்வேண்டாது அருளையே வேண்டுவார்

என்றதை "மருளுந் தெருளும் மறக்கும் அவன்கண் அருளை மறவாதே யென்றுந்தீபற, அதுவே இங்குள்ளதென் றுந்தீபற" என்று சித்தாந்த உந்தியாரிற் கூறியபிரமாணத்தானும், இவ்வருளாளர் கும்பிடுவதற்கு அன்பினை வேண்டுவார் என்றதை "அன்பருள்ளங் கரந்து நில்லாக் கள்வனே நின்றன் வார்கழற்கு அன்பெனக்கு நிரந்தரமாய் அருளாய் நின்னையேத்த முழுவதுமே" என்றதிருவாசகத்தானும் "இக்கணமேமுத்தியினை எய்திடினும் யான் நினைந்த, அக்கணமே ஆனந்தந்தந்திடினும்—நற்கணத்தார், நாயகற்கும் நாயகிக்கும் நானடிமை எப்பொழுதும், ஆ யிருத்தலன்றி யிலேன்யான்" என்ற திருக்களிற்றுப் படியாரானும் உணர்க. இதுபோலும் பல; விருக்கிற்பெருகும்.

இனி—ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார் என்றதனால்—அடியவர்களீ நோக்குவது—திருவருள் ஒன்றையேயன்றி மற்றொன்றையும் அன்று. திருவருளும் அந்நெறியுடையாரை யன்றி மற்றையாரையும் நோக்குவதின்று. ஆகவே அத்திருவருளுக்கு ஓட்டினால் ஓர் சேடும், செம்பொன்னினால் ஓர் ஆக்கமும் உண்டாவதாயின்—அவ்வருளுடையார்க்கும் அவ்விரண்டும் உண்டாகும். இவ்வருளுடையாரே—இருவினையும் ஒப்புவரப் பெற்று, கன்மமலமும் பரிபாகமடைந்து, சத்திநிபாதம் நிலைக்கப் பெற்றவராகலான்—ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும் ஆற்றலுடைய ராயினா ரென்பதாம்.

இத்திருவருளே—அநாதிபந்தத்தை விடச்செய்வதன்றி மற்றொன் றன்றாகலினானும் பந்தநிவர்த்தியே வீடாகலினானும், பந்தநிவர்த்திவந்து அருள்கூடப்பெற்ற வல்லாளர்க்கு அவ்வருளே வீடா யிருப்பதன்றி வேறொன் றன்றாகலினானும்—வீடும் வேண்டா விறலியர்—என்றார். இவ்வுண்மையான்—வீடுகூட்டுவது அருளென் றுணரும் வன்மையற்று, ஞானமென் றுணர்வோரே வீட்டினை வேண்டுவர் என்றும், அவர் அங்ஙனம் வேண்டினும், அவ்வீடு அருள்வசப் பட்டுள்ளதாகலின், அருளைவேண்டாது தன்னைமாத்திரம் வேண்டிய அவர்களைத் தான் வேண்டாது அவர்களை இன்பமற்ற வெளியிடத்தில் இருண்மயமாகிய பாழிடத்தி லேயே வைக்கும் என்றும் உணர்த்தியதுமாம்.

பாழிடத்திலே வைக்கும்—என்றதனை—அவிகாரம்பேசும் அகம்பிரமக்காரர் வெளியாம் இருளில்—என்று கூறியவாற்றானறிக. (அ)

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே;
பாரம் ஈசன் பணிஅல தொன்றிலார்;
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ

(எ - று.) மாலையாகப் புனைவது உருத்திராக்கங்களாலாகிய மாலைகளே. ஆடையாக வுடுப்பது கந்தையே. மிகவும் பாரமாகக் கொள்வது ஈசனுடைய பணிகளே. இவைகளன்றி வேறு ஆரமும் ஆடையும் பாரமும் இல்லாதவர்கள். எப்போதும் இரக்கத்தினால் உருகுதலைப் பெற்றிருக்கும் அன்பினை யுடையவர்கள். எதனாலும் குறைபாட்டினை யில்லாதவர்கள். இவர்களுடைய வீரத்தை என்னால் அளவிட்டுச் சொல்லும் தகுதியுடையதோ என்பதாம்.

மாயாமலத்தின் வன்மையைக் கெடுக்க—கண்டிகையையும், கந்தையையும், கன்மமலத்தின் வன்மையைக்கெடுக்க—ஈசன்பணியாகிய பாரத்தையும்; ஆணவமலத்தின் வன்மையைக் கெடுக்க—ஈர அன்பினையும் வைரமாகப்பெற்று பேரின்பத்தைச் சிற்றின்பமாக்கவல்ல மும்மலங்களின் வாசனாவசப்பட் டுழலும் சித்தத்தையும் தீயகாணங்களையும் இவையிற்றின் கூட்டங்களையும், சிவசித்திலே ஒத்திருக்கச்செய்து, உள்ளும் புறம்பும் உழலும் நினைப்பினை அங்ஙனம செல்ல வொட்டாது அறுத்து, பந்தமூலமை மூலையாவண்ணம் அழித்து, இவ்வாறு அழிழவிருக்கும் அறிவுடனின்று, அவ்வறிவாகிய வாளினை உடம்பாகிய கூட்டிலே சாத்தி, சாககிரத்திலே அதீதத்தைப்புரிதலாகிய நிலையினைப்பெற்று, பெற்றசிற்றின்பமே பேரின்பமாகி முற்றவரும் பரிசினை யுடையராகலின் - யாதுங்குறைவிலார் வீரம் என்னால் விளம்புந்தகையதோ - என்றார்.

பர்கள் வீரர் என்றுகூறவே கண்டிகையைப் பூணுதவெற்றுடம்பினையும், ஈசன் பணியைப் பாரமாகக் கொள்ளாத மனத்தினையும், ஈர அன்பினைக்கொள்ளாத வாக்கினையும் உடையராய் ஞானிகளென உழல்பவர் வீரர் அன்றென்று குறித்ததாமாம். இவர் யாவரெனின் - போலிவேதாந்திகள் என்க. இவருட் சிலர் கண்டிகையாதிகளைப் பூண்டு ஈசன்பணியையே பாரமாகமேற்கொண்டு அன்பினையுடையவராகவும் உலாவித்திரிவர். இதனை அவர்கூறும் ஞானத்தானறியலாம். அது "எல்லாம்போய்த் தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருளாகி எம்மைப் புறங்கூறி யின்புற்று, சும்மைஅவிகாரம் பேசும் அகம்பிரமக்காரர்" என்று உமாபதிசிவம் போற்றிப் பஃறொடையில் கூறியதேயாம். அஃதாவது - சித்தாந்தமாகிய வேதாந்தத்திற் கூறும் பிரபஞ்சரூபமாகக் காணப்படும் பாசம் என்பதும் பொய், பாசவசப்பட் டுழலும் ஆன்மாவாகிய பசு என்பதும் பொய், நித்த சுத்த புத்த முத்த சத்தியபரமானந்த சொரூபமாகவிளங்கும், பிரமமேமெய். அந்தச் சத்தியமாகிய பிரமந்தான் ஆன்மா, ஆன்மாவென்பது வேறில்லை; பிரமமென்பதும் வேறில்லை. இவ்வுண்மைதெளிந்து அகம்பிரஹ்மாஸ்மி என அந்நிலையில் நிற்பதுவே ஞானமெனக் கூறுவதாம். பிறர்பால் பேசுங்கால் இவ்வாறுபேசுவார். பார்வையைக் காட்டி மிருகங்களைப் பிடிப்பவர்போல் மெய்வேடத்தைப புறம்பேகாட்டிப் பொருளைப் பறிப்பார். இதனை அவர்களது அநுபவத்தாற் கண்டுதெளிக. இவர்களை ஈண்டெடுத்துக் கூறியது எற்றுக்கெனின் இவர்கள்தங்களை மெய்யடியராகக்காட்டி மெய்யடியார்களை உலகினர் அறியாவண்ணஞ் செய்கின்றன ராகலின் அத் தீ பககலவேயாம். (கூ)

வேண்டும் ஆறு விருப்புறும் வேடத்தர் ;
தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்;
நீண்ட தொல்புக ழார்தம் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகேன் என்னறிந் தேத்துகேன்.

(எ - து) தத்தமக்கு வேண்டியவாறே விரும்பிக் கொள்கின்ற திருவேடத்தையுடையவர்கள், அஜபாநடனமாகிய தாண்டவம் செய்தருளும் தியாகேசப் பெருமானது ஒப்பற்ற தொண்டர்கள், நீடித்த பழமையாகிய புகழினையுடையவர்கள், இவர்களது நிலைமையை இப்பொழுது என்னவென் றறிந்து வாழ்த்துவேன் என்பதாம்

இங்ஙனங்கூறிய அடியவரெல்லாம் - அகச்சமயமாகக் கூறப்படும் அறுவகைச் சமயங்களில் உள்ளவராகலினுனும், அவ்வறுவகைச் சைவசமயத்தரும் பலவகையான சைவவேடத்தராக இருப்பவ ராகலினுனும்—வேண்டுமாறு விருப்புறும் வேடத்தர் - என்றும், பலபல வேடத்தரா யிருப்பினும், "பலபலவேடமாகும் பரனாரிபாகன்" என்று தமிழ்வேதங்கூறியபடி அச்சிவபெருமான் ஒருவனையே தெய்வமாகக் கொள்ளும் ஒப பற்ற தொண்டர்களாகலின்—தாண்டவப் பெருமான் தனித்தொண்டர்கள் - என்றும், சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்சிறுநெறிசேராமே, பல்லாண்டென்னும் பதங்கடந் தானுக்கே பழைய அடியராயிருக்கும் அவர்கள்பால், பல்லாண்டென்னும் பதங்கடந்த அவ்விறைவன்கலந்து நின்று உலகினருக்குத் தாம் செய்யத்தக்கதாகிய நிக்கிரக அனுக்கிரகங்களை அவர்கள் வழியானேசெய்து அவர்களையே புகழ்ந்து தொழும்படிச்செய்தல் அவ்விறைவனது அனுதிநிலைமையாகலின்—நீண்டதொல்புகழார்—என்றும், அங்ஙனம் அனுதியாகவரும் புகழை யான் இன்றுஅளவுட்படுத்தி வாழ்த்த வேண்டுமென்றால் அப்புகழ் எனது சிற்றறிவினில் அடங்கப்பெற்றலன்றோ வாழ்த்திப் போற்றுவேன். அங்ஙனம் அடங்கப்பெறாதாகலின் - தம் நிலைமையை ஈண்டுவாழ்த்துகேன் என்னறிந்து ஏத்துகேன்—என்றுங் கூறினர்.

எனவே - "மாசிலாத மணிதிகழ்" என்ற விருத்தந்தொடங்கி இவ்விருத்தத்தில் "வேண்டுமாறு விருப்புறும் வேடத்தர்" என்று கூறினேனாயினும் அவர்களுடைய புகழ் அவ்வளவில் அடங்குவதன்று. ஏனெனின்—அவர்கள் தாண்டவப் பெருமான் தனித்தொண்டர்களாய், நீண்டதொல் புகழாளராயிருத்தலினால் முற்றுஞ் சொன்னேனில்லை என்பதாம்.

அல்லதூஉம், நீண்ட தொல்புகழாளராய், அறநெறிதொட்டுவாழ்பவருக்கு, இப்பொழுது வந்துள்ளேனாகிய யான் வாழ்த்தும் வாழ்த்தோ வாழ்வைத்தரும் ஆற்றலுடைத்தாகும். அஃதேபோல் - அவர்கருச் சிறப்பும் அறநெறிதொட்டே வளர்ந்து வருவதாகலின் அச்சிறப்பில் யான் இன்று எவ்வளவு அறிந்துள்ளேன். அறிந்தஅளவில் சொல்லத்துணிவேனாயின் அது என்னசிறப்பினைத்தரும். ஆதலாகலான் ஈண்டுவாழ்த்துகேன் என்னநிற்தேத்துகேன் என்றுசொல்லுவதே சிறப்புடைத்தாமென்று ஆசிரியர்கூறினாரெனக. அங்ஙனம் ஆசிரியர் கூறினாரேனும் நீண்டதொல்புகழாளராகிய இவர்களைப்போதும் அந்தமில் புகழாளராகிய பெரியோரால் சொல்லப்பட்டிருத்தலால் அவ்வண்ணம் சொல்லுகின்றேன் என்று அவாவின் மிகுதியால் பின்வரும் திருவிருத்தங்கூறுகின்றார்.

இறைவன் தொண்டர்களைத் தொழச்செய்வான் என்பதனை "தொழப்படுந்தேவர் தொழப்படுவானைத் தொழுதபின்னைத் தொழப்படுந்தேவர் தம்மாற்றொழுவிக்குந் தன்றொண்டரையே" எனவருந் தேவாரத்தாற்காண்க. (கO)

இந்த மாதவர் கூட்டத்தை யெம்பிரான்
அந்த மில்புகழ் ஆலால சுந்தரன்
சுந்த ரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரை செய்வாம்.

(எ - நு.) இத்தன்மையான மாதவத்தையுடைய அடியவர் திருக்கூட்டத்தைக் குறித்து எமது பெருமானாகிய அளவில்லாத புகழினையுடைய ஆலாலசுந்தரமூர்த்திகள் கயிலாயத்தினின்றும் இந்நிலவுலகில் வந்து அழகியதமிழினால் திருத்தொண்டத்தொகையைப் பாடியருளியுள்ளாராகலின் அவர் பாடியருளியவாறு எடுத்துச் சொல்வாம் எ - ம்.

மாதவத்தினராகிய தொண்டர்களது நீண்டதொல்புகழின் நிலைமையை - தாண்டவப்பெருமானாகிய தியாகேசனை முன்னாகவந்து தம்மால் தோழராக ஆளப்பெற்ற அளவில்லாத புகழினையுடைய ஆலாலசுந்தரராகிய எனது ஆசாரியசிகாமணிக்கு உணர்த்தி, அவ்வளவில் அமையாது முதலடியைச் சூறித்திருததொண்டத் தொகையைமுடிவு பெறச்செய்தனராகலின்—பாடியவண்ணம் உரைசெய்வாம்—என்றார்.

பாடியவண்ணம் உரைசெய்வாம் என்றதனால் - "நீண்டதொல்புகழார்தம் நிலைமையை ஈண்டுவிரிநூலால்வாழ்த்தவேண்டும், அவர்களது சிறப்பறிந்து அந்நூலால் ஏத்த வேண்டும் என்று அவாமிக்குடைய என்பொருட்டன்றே எம்பிரானாகிய ஆலாலசுந்தரர் ஈண்டும்மண்ணுலகில் சுந்தரரென்னுந்திருநாமத்தோடுவந்து, தமக்கும் தம்மிறைவனாகிய தியாகேசனுக்கும் உள்ள சம்மந்தவிசேடத்தை யாவரும் அறியும்படியாகச்செய்து அளவில்லாத புகழைப்பரப்பி, தமதுபுகழுக்கேற்ப அந்தமில்லாதபுகழினையுடைய தமிழினால் என்னுள்ளமுர், வாகரும்இனிக்கத் திருத்தொண்டத்தொகையைப் பாடியருளியது. இது வுண்மையாகலான், அத்திருத்தொண்டத்தொகையில் தொகுத்திருக்கும் உலகெலாம் உணர்ந்தோதற்கரிய சிறப்புகளை யான் உணர்ந்து எடுத்து வாழ்த்துமாறு, உலகெலாம் உணர்ந்தோதற்கரியனாகிய அம்பலத்தாடுவானும் "உலகெலாம்" என்னும் ஓர் பெருவாக் கருளினன். அவ்வருள்வாக்கைக் கொண்டு இனி எம்பெருமானருளிய திருத்தொண்டத்தொகையின் வழியே தனித்தொண்டர்களைச் சிறப்பித்து வாழ்த்துந் துணிவுடையனாயினேன் என்பார் - அந்தமில்புகழ் ஆலாலசுந்தரர் வந்துபாடிய திருத்தொண்டத் தொகையின் வண்ணம் உரைசெய்வாம் என்றார்.

இதனால் - ஆசிரியர் சேக்கிழார் - தாம் சொல்லப்புகும் இப்பெரிய புராணத்திற்கு திருத்தொண்டர்களைத் தாண்டவப்பெருமான் முன்னின்று தொகையாகச்சொல்ல தொகையாயுள்ள தில்லைவாழந்தணர்களை முன்வைத்தோதியதுபோல் ஈண்டு நடராஜப் பெருமான் விரிவாகச்சொல்ல "உலகெலாம்" என்று எடுத்தோதியருளினாகலான் அவ்வண்ணமே விரித்துக்கூறும் அருளுடையவனாயினேன் என்று கூறினாரெனக. (கக)

திருக்கூட்டச்சிறப்பு முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம—கசுச.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தடுத்தாட்கொண்ட புராணம்.

ஆரூரரது நாடு.

கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதிஇரு மருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடி நாடு.

(எ - து.) கங்கையையும் சந்திரனையும் பாம்பையும் கொன்றை மாலையையும் தமது சடாமுடியின் மீது அணிந்துள்ள இறைவன் ஆளோலைகாட்டி ஆட்கொண்ட நம்பியாரூரருக்கு நாடாயுள்ளது முகமாகிய குளிர்ந்த சந்திரனுடைய இருபக்கத்தினும் ஓடி காதிலணிந்திருக்கும் குழைகளை நாடிச்செல்லும் கயல்களாகிய கண்களையுடைய மங்கையர்கள் வாழ்கின்ற திருமுனைப்பாடி என்னும் திருநாடாகும் என்பதாம்.

வதனசீத மதி யிருமருங்குமோடி குழைகணாடுஞ் செங்கயல் மங்கையர் திருமுனைப் பாடிநாடு எனக்கூட்டுக. (௧)

ஆரூரர் ஊர்.

பெருகிய வளத்தால் மிக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவம் ஓங்க அருளினால் அவதரித்த
மருவிய தவத்தான் மிக்க வளம்பதி வாய்மை குன்றாத்
திருமறை யவர்கள்நீடும் திருநாவலூராம் அன்றே.

(எ - து.) காவிரியின் பெருக்கத்தால் பெருகிய வளங்களால் சிறந்திருக்கும் பெரிய அத் திருநாட்டில், அரிய வைதிகசைவம் உலகமெங்கும் பரவி மேன்மேலோங்க இறைவனருளினால் அவதரித்த வேதநெறிகளாலும் முறுகி வளர்வனவாய சரியை முதலிய தவங்களாலும் வளர்ந்தோங்கிய செழுமையில் மிக்க பதியாயுள்ளது வைதிக சைவமாகிய மெய்ந் நெறியினின்றும் தவறாத வைதிகசைவர்களாகிய வேதியர்கள் மிகுதியாக வாழ்ந்திருக்கப் பெற்ற திருநாவலூராகும் என்பதாம்.

இவ்விரண்டு பாடல்களுக்கும். விசேடம்—ஆசார்யபிரபாவம் ௧௦௬ - வது பக்கம் ௧௦ - வது வரி முதலாகக்காண்க. (௨)

ஆரூரர் அவதாரம்.

மாதொரு பாக னார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடைய னார்க்
கேதமில் கற்பின் வாழ்க்கை மனைஇசை ஞானி யார்பால்
தீதகன் றுலகம் உய்யத் திருவவ தாரஞ்செய்தார்.

(எ - து.) உமைபாகனாகிய சிவபெருமானுக்கு வழிவழியாய் அகத்தடிமைசெய் யும் ஆதிசைவகுலத்தில் உதித்து மேம்பட்ட சடையனாருக்கு இல்லறவொழுக்கத்தைத்

தமது கற்பியலால் குறைவின்றி நடத்தவல்ல மனைவியாராகிய இசைஞானியார்பால் (ஆலாலசுந்தரர்) ஆன்மாக்களெல்லாம் தீமையொழிந்து உய்யும்வழியறிந்து வாழ அவதாரஞ் செய்தருளினார் என்பதாம்.

விசேடம்—ஆதிசைவபிரபாவம் கoகூ-வது பக்கம் கஎ-வதுவரி முதலாகக்காண்க. (ந)

ஆரூரர் விளையாட்டு.

தம்பிரான் அருளினாலே தவத்தினால் மிக்கார் போற்றும்
நம்பியா ரூரர் என்றே நாமமுஞ் சாற்றி மிக்க
ஐம்படைச் சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொன்நாண் அரையின் மின்னத் தெருவில்தேர் உருட்டு நாளில்,

(எ - து.) தம்பிரானாராகிய சிவபெருமான் திருவருளினால் தவத்தின் மிக்காராகிய சடையனார் (ஆதலால் சுந்தரர் தமக்கு மகனாக வரப்பெற்ற அக்காரணத்திற்கேற்ப அம்மகனாருக்கு)யாவரும் போற்றத்தக்க நம்பியாரூரரென்றே நாமகரணஞ்செய்து திருமாலுக்குரிய சிறப்புமிக்க சங்கு சக்கர கதா கட்க சாரங்கம் என்னும் பஞ்சாயுதங்களை மார்பிலும் சிறுசதங்கைகளைப் பாதங்களிலுஞ் சாத்தி அழகிய இரத்தினச் சுட்டியை நெற்றியிற் றொங்கச்சிரத்தி லணிந்து செம்பொன்னாலாகிய அரைநாணை இடையில் விளங்கவணிந்து தெருவில் சிறுதேருருட்டி விளையாடுகின்ற நாளில் ஒருநாள்,—

விசேடம்—ஆசார்யபிரபாவம் ககo-வது பக்கம் கூ-வது வரி முதலாகக்காண்க. (ச)

ஆரூரர் அரசருக்குப் பிள்ளையாதல்.

நரசிங்க முனையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு
பரவரும் காதல் கூரப் பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நண்பி னாலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற் கேற்ப அன்பினால் மகன்மைக் கொண்டார்.

(எ - து.) நரசிங்கமுனையர் என்னும் அந்நாட்டையாண்டு வாழ்ந்துவரும் அரசர் பெருமான் பார்த்து அவர்பால் சொல்லொணாத மிகுந்த ஆசை அதிகரித்தலால் அவர் தந்தையாரிடம் போய் முன்னம் தமக்கும் அவருக்கும் உண்டாயிருக்கும் சிநேக மிகுதியினால் தாம் விரும்பியபடியே நம்பியாரூரரை அவர்பால் பெற்று தமது அரசவம்சத்திற் பிறந்த புத்திரனுக்கொப்ப அன்பினால் புத்திரராகக் கொண்டார் என்பதாம்.

ஆசார்யபிரபாவம்—ககஉ-வது பக்கம் ச-வது வரிமுதலாகக்காண்க. (ரு)

ஆரூரர் மணப்பருவம் அடைதல்.

பெருமைசால் அரசர் காதல் பிள்ளையாய்ப் பின்னும் தங்கள்
வருமுறை மரபின் வைகி வளர்ந்துமங் கலஞ்செய் கோலத்
தருமறை முந்நூல் சாத்தி அளவில்தொல் கலைகள் ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச் சீர்மணப்பருவம் சேர்ந்தார்.

(எ - து.) நம்பியாரூரர் மிக்க பெருமைபொருந்திய அரசரது அபிமான புத்திரரானபின்னரும் தங்கட்கு உரிமையாய்வரும் ஆதிசைவ வொழுக்கத்தை மேற்கொண்டு வளர்ந்துவரும் நாளில் மங்கலமாகிய உபநயனஞ் செய்யும் பருவம்வர, அப்பருவத்தில் அரிய வேதவிதிப்படி பூணூல் தரிக்கப்பெற்று அநாதியான வேத வேதாங்க வேதாந்த முதலிய கலைகளைக் கற்றுணர்ந்து அக்கல்விச் செல்வத்தோடு அரசச்செல்வத்தினால் உண்டாகிய மேன்மையினையும் உடையராய் வளர்ந்தோங்கி சிறப்புப்பொருந்திய கலியாணப்பருவத்தை யடைந்தனர் என்பதாம்.

விசேடம்—ஆசார்யபிரபாவம் ககரு-வது பக்கம் ரு-வது வரி முதலாகக் காண்க. (சு)

மணம் பேச விடுதல்.

தந்தையார் சடைய னாதம் தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துத் தங்கள் அரும்பெரு மரபுக் கேற்ப
வந்ததொல் சிறப்பின் புத்தூர்ச் சடங்கவி மறையோன் தன்பால்
செந்திரு அனைய கன்னி மணத்திறம் பேசி விட்டார்.

(எ - து.) தந்தையாராகிய சடையனார் தமது ஒப்பற்ற செல்வப்புதல்வர்க்கு சைவகுலத்தில் தங்கள் அரிய பெரிய கோத்திரத்திற்குப் பொருந்த பழைமையான ஒழுக்கத்திற் சிறந்துவந்த புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியாரிடத்திலுள்ள அவரது இலக்குமிபோன்ற கன்னிகையை மணஞ்செய்ய சில முதியோர்களிடம் மணத்துக்குரிய வகைகளெல்லாஞ் சொல்லி அவரிடம் அனுப்பினர் என்பதாம்.

ஆசார்யபிரபாவம்—கசஎ - வது பக்கம் உ0 - வது வரி முதலாகக்காண்க. (எ)

சடங்கவியார் மணம் இசைதல்.

குலம்முதல் அறிவு மிக்க கோத்திர முறையும் தேர்ந்தார்
நலம்மிகு முதியோர் சொல்லச் சடங்கவி நன்மை ஏற்று
மலர்தரு முகத்தன் ஆகி மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசி ஒத்த பண்பினால் அன்பு நேர்ந்தான்.

(எ - து.) குலமுதலியவற்றை ஆராய்ந்தறியும் அறிவிற்சிறந்த பெரியோர் சடங்கவியாரிடஞ்சென்று, சடையனாருடைய வேண்டுகோளைச் சொல்ல, அவர்குல மரபினையும் நூலறிவினையும் சிரேஷ்டமாகிய கோத்திரமரபினையும் அறிந்து பின்னர் அவரது வேண்டுகோளாகிய கலியாணத்தைவிரும்பி அங்கீகரித்து மலர்ந்தமுகமுடையவராகி விவாகஞ்செய்யுஞ் செயலுக்கேற்ற பல உண்மைச் செயல்களையும் சொற்களையும் கலந்து பேசி அச்செயலிலும் சொல்லிலும் ஒத்திருந்த தன்மையினால் கலியாணஞ் செய்து கொடுக்க அன்புடையராயினர் என்பதாம்.

நலமிகு முதியோர்சொல்ல சடங்கவி குலமுதல் அறிவின்மிக்க கோத்திரமுறையுந் தேர்ந்தார் நன்மையேற்று எனக்கூட்டுக.

ஆசார்யப்பிரபாவம்—கசக - வது பக்கம் க-வதுவரி முதலாகக்காண்க. (அ)

மணவோலை விடல்.

மற்றவன் இசைந்த வார்த்தை கேட்டவர் வள்ளல் தன்னைப்
பெற்றவர் தம்பால் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி எய்தி மணவினை உவந்து சாற்றிக்
கொற்றவர் திருவுக் கேற்ப குறித்துநாள் ஓலை விட்டார்.

(எ - து) சடங்கவியார் ஆசையோடும் அன்போடும் கூறிய வார்த்தையைக் கேட்ட முதியோர்கள் விடைபெற்று வள்ளலாராகிய நம்பியாரூரைப் பெறுதற் பெற்றவராகிய சடையனாரிடம்வந்து அங்ஙனம் நிகழ்ந்த செய்திகளைச் சொல்லியபின்னர் அவர் தன் சிந்தையின்கண் பொருந்திப் பெருகிய மகிழ்ச்சிமீதூர்ந்து கலியாணச் செய்தியைத் தமது பந்துக்களுக்கெல்லாம் சந்தோஷத்துடன் சொல்லி தமக்கு வாய்த்திருக்கும் அரசச்செல்வத்திற் கேற்ப முகூர்த்தநாளை நிச்சயஞ்செய்து அதனை ஓலையில்வரைந்து அம் மங்கலவோலையை அனுப்பினர் என்பதாம்.

சிந்தை உற்ற பெருகும் ஓர் மகிழ்ச்சி யெய்தி எனக்கூட்டுக. (க)

மணவோலை யேற்றல்.

மங்கலம் பொலியச் செய்த மணவினை ஓலை ஏந்தி
அங்கயற் கண்ணி னாரும் ஆடவர் பலரும் ஈண்டிக்
கொங்கலர்ச் சோலை மூதூர் குறுகினார் எதிரே வந்து
பங்கய வதனி மாரும் மைந்தரும் பணிந்து கொண்டார்.

(எ - து.) கலியாணத்துக்குரிய முகூர்த்தநாளை யாவரும் அறிய எழுதிய அந்த மணவோலையை அழகிய கயல்போன்ற கண்ணையுடைய மங்கையரும் புருடரும் ஏந்திக்கொண்டு புத்தூராகிய பெரியவூரை நெருங்கி நறுமணங் கமழும் மலர்களையுடைய சோலையைச் சேர்ந்தார்கள். அவர் வருகையறிந்த சடங்கவி சிவாசாரியரைச் சார்ந்த உறவினராகிய தாமரைமலர்போன்ற முகத்தினையுடைய மங்கையர்களும் புருடர்களும் எதிர்கொண்டுவந்து வணங்கி மணவோலையைப் பெற்றுக்கொண்டனர் (எ - ம்.)

மணவினையோலை அங்கயற் கண்ணினாரும் ஆடவர் பலரும் ஏந்தி மூதூர் ஈண்டி கொங்கலர் சோலை குறுகினார், பங்கயவதனிமாரும் மைந்தரும் எதிரேவந்து பணிந்துக் கொண்டார் எனக்கூட்டுக. (கா)

முளையிடல்.

மகிழ்ச்சியால் மணமீக் கூறி மங்கல வினைகள் எல்லாம்
புகழ்ச்சியால் பொலிந்து தோன்றப் போற்றிய தொழிலர் ஆகி
இகழ்ச்சிஒன் றானும் இன்றி ஏந்துபூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி நீள்முளை சாத்தி னார்கள்.

(எ - து.) மணவோலை பெற்றுக்கொண்டபின் அதனைக்கண்ட மகிழ்ச்சியினால் திருமணம் யாவரும் அறியும்படிச் சொல்லி அம்மங்கலவினைக்குச செய்யவேண்டிய மங்கலச் செயல்களெல்லாம் ஒருவாற்றானும் ஒருவரானும் இகழ்ச்சி செய்வதற் கிடனின்றிப் புகழ்ச்சியோடு பிரகாசித்துத் தோன்ற வேண்டுமென்னும் ஆசையுடன் செய்யுஞ் செயலுடையவர்களாய் மனக்கிளர்ச்சியுடைய ஆதிசைவர்கள் பூமாலைகளால் அலங்கரித்திருக்கும் கலியாணப் பந்தரின் கண்வந்து மந்திரகோஷஞ் செய்து முளைகளுண்டாகும்படி அங்குரார்ப்பணஞ் செய்தனர் என்பதாம்

மங்கலவினைகளெல்லாம் இகழ்ச்சி யொன்றானும் இன்றி புகழ்ச்சியாற் பொலிந்து தோன்ற போற்றிய தொழிலராக நிகழ்ச்சியின் மைந்தர் ஏந்து பூமாலைப்பந்தர் ஈண்டி நீண்முளை சாத்தினார்கள் எனக்கூட்டுக. (கக)

கங்கணம் அணிதல்.

மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தார் செய்யத்
துணர்மலர்க் கோதைத் தாமச் சுரும்பணை தோளி னானை
புணர்மணத் திருநாண் முன்னாள் பொருந்திய விதியினாலே
பணைமுர சியம்ப வாழ்த்திப் பைம்பொன்நாண் காப்புசேர்த்தார்.

(எ - து.) (அங்குரார்ப்பணஞ் செய்தபின்னர்) மற்றுங் கலியாணத்துக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைக் கன்னிகையைப்பெற்ற சடங்கவியார் நடத்த, சடையனார் முதலியோர் திருநாவலூரில் கலியாணஞ்செய்யும் நாளின் முந்நாள் வண்டுகள் மொய்க் கும்பூங்கொத்துக்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்திருக்கும் நம்பியாரூரரைப் பெரிய பேரிகைமுதலிய வாத்தியங்கள்ஒலிக்க வேதவிதிப்படியே ஆசீர்வசனங்களால் வாழ்த்தி பசும் பொன்னாலாகிய கங்கணத்தை அவரது திருக்கரத்திற் கட்டினார்கள்,—

மணம்புணர் திருநாள் முன்னுள் சுரும்பணை துணர்மலர்க்கோதைத் தாமத் தோளினனை பூணைமுநீரியம்ப பொருந்தியவிதியினுலே வாழ்த்திப் பைம்பொனுண் காப்புச் சேர்த்தார் எனக்கூட்டுக. (கஉ)

திருமண நாள்.

மாமறை விதிவ ழாமல் மணத்துறைக் கடன்கள் ஆற்றித்
தூமறை மூதூர்க் கங்குல் மங்கலம் துவன்றி ஆர்ப்பத்
தேமரு தொடையல் மார்பன் திருமணக் கோலம் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயம் செய்தான்.

(எ - து.) சுத்தத்தை விளைவிக்கும் வேதகோஷம் நீங்காத பெரிய நாவலூரில் அன்றிரவில் பெரிய வேதவிதிவழுவாமல் கலியாணத்திற்கு அப்போது செய்யவேண்டிய சடங்குகளைச்செய்து மங்கலகரமான பலவாத்தியங்கள் ஒருங்கே கோஷித்துக் கொண்டிருக்க தேன்பொருந்திய மலர்மாலையணிந்த திருமார்பினையுடைய ஆரூரது திருமணக்கோலங்காண சூரியன் ஆசைகொண்ட மனமுடையவன்போல உதித்தனன் எ-ம்.

தூமறை மூதூர்க்கங்குல் மாமறைவிதிவழாமல் மணத்துறை கடன்களாற்றி மங்கலந்துவன்றியார்ப்ப, கதிரவன் காமுறு மனத்தான்போல உதயஞ்செய்தான் எனக் கூட்டுக. (கங)

திருமஞ்சனச்சாலைபுக்கல்.

காலைசெய் வினைகள் முற்றிக் கணிதநூல் புலவர் சொன்ன
வேலைவந் தணையும் முன்னர் விதிமணக் கோலம் கொள்வான்
நூலசைந் திலங்கு மார்பின் நுணங்கிய கேள்வி மேலோன்
மாலையும் தாரும் பொங்க மஞ்சனச் சாலை புக்கான்.

(எ - து.) சூரியன் உதித்த அக்காலத்தில் செய்யவேண்டிய நித்திய கர்மானுஷ்டானங்களைமுடித்துக்கொண்டு சோதிடநூல் வல்லோர்நியமித்துள்ள முகூர்த்தகாலம்வருதற்குமுன் பூணூல் அசைந்து விளங்கு மார்பினையும், நுண்ணியகேள்வியினையும் உடைய மேலோராகிய ஆரூரர் கல்யாணத்துக்குரிய மணகோலத்தைக்கொள்ள மணிமாலையும் மலர்மாலையும் திருமார்பில் விளங்கத் திருமஞ்சனச்சாலையுள் எழுந்தருளினர் எ-ம். (கச)

வாசநெய் ஊட்டி மிக்க மலர்விரை அடுத்ததூ நீர்ப்
பாசனத் தமைந்த பாங்கர்ப் பருமணிப் பைம்பொன் திண்கால்
ஆசனத் தணிநீ ராட்டி அரிசனம் சாத்தி அன்பால்
ஈசனுக் கினியான் மேனி எழில்பெற விளக்கி னார்கள்.

(எ - து.) (மஞ்சனச்சாலையுள் ஆரூரர்புகவும் சுற்றத்தார்கள்) வாசனைபொருந்திய தைலந்தேய்த்து மிக்க நறுமணங்கமழும் மலர்களிட்டிருக்கின்ற பரிசுத்தம் பொருந்திய நீர்நிறைந்துள்ள பாத்திரத்தின் பக்கலில் அமைந்துள்ள பெரிய இரத்தினமிழைத்த பசும்பொன்னுலாகிய வலிய சிங்கங்களாலமைந்துள்ள ஆசனத்தில் எழுந்தருளச்செய்து நல்லதீர்த்தத்தால் ஸ்நானஞ்செய்வித்து மஞ்சள்கலந்த கலவையைப்பூசி அன்பினுல் சிவபெருமானுக் கினியராகிய ஆரூரது திருமேனியை அழகுபெற்றிருக்கும்படிச் செய்தார்கள் என்பதாம். (கரு)

திருமணக்கோலங் கொள்ளல்.

அகில்விரைத் தூபம் வய்ந்த அணிகொள்பட் டாடை சாத்தி
முகில்நுழை மதியம் போலக் கைவலான் முன்கைசூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித்தன் தூய செங்கை
உகிர்நுதி முறையில் போக்கி ஒளிர்நறும் சிகழி ஆர்த்தான்.

(எ - து.) அலங்கரிப்பதில் வல்லவனாகிய ஒருவன் அகிற்புகை முதலியவற்றான் வாசனையூட்டிய அழகிய பீதாம்பரத்தை யணிந்து மேகத்தில் நுழையுஞ் சந்திரன்போல் தனது முன்னங்கையில் சூழ்ந்திருக்கும் வெள்ளைவத்திரத்தைக் கொண்டு சிகையிலுள்ள ஈரத்தைப் போக்கி செங்கையிலுள்ள நகங்களால் சிக்கறுத்து ஒளிவீசும் அக்கரிய கேசத்தை முடித்தனன் என்பதாம்.

கைவலான் அகில்விரைத் தூபமேயந்த எனக்கூட்டுக. (௧௬)

தூநறும் பசுங்கர்ப் பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆனதண் பனிநீர் கூட்டி அமைத்தசந் தனச்சே றட்ட
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பான்மறை முந்நூன் மின்னப் பவித்திரம் சிறந்த கையான்.

(எ - து) (அதன் பின்னர்) பால்போன்ற வெண்ணிறமுடைய விதிப்படியணிந்த பூணூல் மார்பிற் பிரகாசிக்க அநாமிகைவிரலில் சிறந்த பவித்திரம் விளங்குகின்ற திருக்கரத்தினையுடைய ஆரூரருக்கு பரிசுத்தமாகிய நல்லகற்பூரப் பொடியும் நல்ல மலரினின்றும் உண்டாகிய பனிநீருங்கூடிய சந்தனக்குழம்பைப்பூசி மிருகமதமும் கஸ்தூரியும் தோய்ந்த கலவைச்சாந்தைச் சாத்தி,—

பான்முறை முன்னூல்மின்னப் பவித்திரம் சிறந்தகையான், தூநறும் பசுங்கர்ப்பூரம் எனக்கூட்டுக. (௧௭)

தூமலர்ப் பிணையல் மாலை துணர்இணர்க் கண்ணி கோதை
தாமமென் றினைய வேறு தகுதியால் அமையச் சாத்தி
மாமணி அணிந்த தூய வளர்ஒளி இருள்கால் சீக்கும்
நாமநீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலங் கொண்டான்.

(எ - து.) நல்லமலர்களால் பிணைக்கப்பட்ட பிணையல்மாலை, பூங்கொத்துக்களால் ஆகிய கண்ணிமாலை, பெரியபத்திமாலை என்று இத்தன்மையாகச் சொல்லப்பட்ட பல வேறுபாட்டையுடைய மலர்மாலைகளால் அழகுபெற அலங்கரிக்க அம்மலர்மாலைகளே யன்றி இருளையோட்டத்தக்க பேரொளியையுடைய சிறந்த இரத்னங்களால் இழைக்கப்பட்ட மகரகண்டி முதலாகச்சொல்லப்படும் பலபெயர்களுடைய ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு நல்லதிருமணக்கோலத்தைக் கொண்டனர் என்பதாம். (௧௮)

யோகப்புரவியின்மேல் ஆரோகணித்தல்.

மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியா ரூரர் நாதன்
தன்னடி மனத்துள் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு போந்தார்.

(எ - து.) நரசிங்க முனையரையருடைய செல்வம் மேன்மேலோங்க தான் அவதாரஞ் செய்யும் நன்மையைப்பெற்றுள்ள நாவலூரானது கலியாண மங்கலத்தைக் கொள்ள நம்பியாரூரர் இறைவனது திருவடியைத் திருவுள்ளத்திலே தியானித்துப் பூசத்தகுவதாகிய புண்ணியத் திருநீற்றை யணிந்துகொண்டு பொன்னாலும் இரத்தினங்களாலும் அமைந்த ஆபரணகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதாகிய செல்வக் குதிரையின்மேல் எழுந்தருளிச்செல்வாராயினர் என்பதாம்.

மன்னவர்க் குரியனவாகிய ரத கஜ துரக பதாதிகளும் வெண்கொற்றக் குடையும் வெற்றிமுரசும் ஆகிய இவை முன்செல்லுகின்றனவாகலின் - மன்னவர் திரு - எனவும், அரசனால் மகனாகக் கொள்ளப்பட்டவ ராயினும் அவ்வரசகோலத்தைக் கொள்ளாது வைதிகத்தைக் காட்டும் ஆடையணிகளைக் கொண்டனராகலின் - தங்கள் வைதிகத்

திருவுமெனவும், இவ்விருவகைத்திருவும் முறையே அரசர்பெருமானுக்கும் அந்தணர்களுக்கும் மேன்மேலுண்டாக இவ்விரு செல்வத்தையும் உடையராகலின்-மன்னவர்திருவும் வைதிகத்திருவும் பொங்க எனவும், மணஞ்செய்தற்குரிய புத்தூரேயன்றி அவரவர் தரித்த வூரும் அன்றுமணக்கோலத்தைக்கொண்டதாகலின்—நன்னகர்விழவுகொள்ள எனவும், தம்பாலுள்ள அருட்செல்வத்தை ஓங்கச்செய்வது திருவடியாகலான்—நாதன் தன்னடி மனத்துட்கொண்டு—எனவும், மன்னவர் தகுதியைக்காட்டுவது நால்வகைச் சேனைகளும் வைதிகர் தகுதியைக்காட்டுவது ஆடையணிகளுமாயிருத்தல்போல் சைவத்தின் தகுதியைக்காட்டுவது திருநீறேயாகலான்—தருந்திருநீறுசாத்தி—எனவும், பொன்னணி முதலியவற்றை மேற்கொண்டிருப்பது யோகமாதலின்—பொன்னணியோகப்புரவிமேல்—என்றும், ஞானமூர்த்தியாய் விளங்குஞ் சுந்தரமூர்த்தியைத் தான் மேற்கொண்டு செல்லும் யோகத்தைப் பெற்றுளதாகலின்—யோகப்புரவி—எனவும், அந்த யோகத்தைச் செலுத்துவோர் இவராகலின்—கொண்டு போந்தார்—எனவுங்கூறினர்.

வேகத்திற்சிறந்தது மனோவேகமாகலின் அம்மனம் யோகிகள் ஆதாரயோகமுறையில் மூலாதாரமுதலாகச் செல்லுங்காலத்து, அவ்வேகமற்று ஆங்காங்கு நின்று அவர்கள் செல்லுமுறையே செல்லுவதுபோல் ஆரூரர்வசப்பட்ட வேகமுள்ள குதிரையானது தனது வேகத்தைக் காட்டிச் செல்லாது அவரது மணக்கோலத்தைக் காணவிரும்பும் அவரெல்லாம் நன்றாய்க் காணுமாறு மையப்போயச் சென்றதாகலின் யோகப்புரவி என்றும், ஆரூரர் ஆதாரநிலையிற் செல்லும் யோகிகளை அவ்வழியே செலுத்திப் பின்னர் நிராதாரயோகத்திற் கொண்டுபோய், அங்கு காணப்படும் மீதானமாகிய அருளில் நிறுத்தும் அருள்மூர்த்தியாகிய குருமூர்த்தியாதலின் - யோகப்புரவிமேற்கொண்டு எனவும், கலியாணகோலங்கொண்டு யோகப்புரவிமேற் செல்லும் ஆரூரரும் தம்மை ஆட்கொள்ளவரும் ஞானமூர்த்தியாகிய இறைவனைக் காணப் போகின்றாராகலின் —யோகப்புரவிமேற்கொண்டு எனவுங் கூறினர்.

காணவினியதாகிய செல்வமும், கவினைத்தருவதாகிய செல்வமும், இறைவனது திருவடியும் திருநீறுமேயாகலான், அவ்விரண்டையும் ஆதிசைவர்கள் தாங்கள் செய்யும் அந்தர்யாகத்தி (உட்பூஜையி)லும், தங்கள் திருமேனியிலும் கொண்டும் அணிந்தும் யாவர்க்கும் திருநீற்றைக்கொடுத்து, தம்முள்ளத்துள்ள அடியாகிய திருவருளைநினைத்து அனுக்கிரகஞ் செய்வதாகிய செயலைப்பிரமாணமுகத்தானும் உலகவழக்கானும் காணப்பட்டு வருகின்றமையான் அவ்வுண்மைதோன்ற—மன்னவர் திருவும் பொங்க - ஆரூரர் நாதன் தன்னடிமனத்துட்கொண்டு தருந்திருநீறுசாத்தி - என்றும், ஆதிசைவர்களால் அணியப்பட்ட திருநீறு - வேதத்திலுள்ளதாகவும், வேதசம்பந்திகளாகிய வைதிகர்களுக்கு வைதிகபூஷணமாகவும் காணப்படுகின்றமையால் அவ்வுண்மை தோன்ற - வைதிகத்திருவும் பொங்க என்றுங்கூறினர்.

சிவனையும், சைவதருமமாகிய திருநீற்றையும் ஸ்ரீபஞ்சாக்கரத்தையுமே கொண்டு விளங்கும் வேதத்திற் கூறப்படும் தருமத்தைக்கொண்டு வழங்குவது வைதிகதருமமாகலான் திருநீற்றையும் ஸ்ரீபஞ்சாக்கரத்தையுமே தங்கள் ஒழுக்கமாகக்கொண்டு வாழும் ஆதிசைவர்களுக்கு வைதிகதருமம் இன்றியமையாதாகலின்—தங்கள் வைதிகத்திருவும்—என்றார்.

சிற்றின்பானுபவத்திற்காகச் செய்யப்படும் கலியாணத்தைச் செய்துகொள்ள குதிரையேறிச்சென்ற ஆரூரருக்கு அச்செயல் நிகழாது பேரின்பானுபவத்திற்காகச் செய்யப்படும் திருவருட்செயல் நிகழ்ந்தமையான் அச்செயலைநாடி ஆரூர் ஏறிச்சென்ற குதிரையை யோகப்புரவி என்றார்.

இதனால்,—நரசிங்கமுனையரையர் தனது செல்வமாயுள்ள சதுரங்கசேனைகளும் முன்னே செல்வதைக்கண்டு தமது உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கவும், வைதிகராகிய

அந்தணர்களெல்லாம் ஆதிசைவராகிய ஆரூரருடைய திருமேனியில் காணப்படு வைதிககோலம் குன்றாது காணப்படுங் காட்சியைக்கண்டு தமதுள்ளத்தில் ஆனந்தட பொங்கவும், நாவலூரானது வெற்றூராயிராமல் கலியாண விழாவைமேற்கொண் யாவருக்கும் களிப்பை உண்டாக்கவும் நம்பியாரூரர் மணவாளராய் தம்பிரான் திருவடி யைத் திருவுள்ளத்தில் வைத்து, திருநீற்றைத் திருமுகத்தில் வைத்து, சர்வபோகமங் களத்தோடும் விளங்குகின்ற யோகப்புரவிமேற்கொண்டு புத்தூர்த் திருவீதியின் கண் ணே உலாப்போந்தனர் என்று கூறப்பட்டது. (கக

இயம்பல துவைப்ப எங்கும் ஏத்தொலி எடுப்ப மாதர்
நயந்துபல் லாண்டு போற்ற நான்மறை யொலியின் ஓங்க
வியந்து பார் விரும்ப வநது விரவினர்க் கின்பம் செய்தே
உயர்ந்தவா கனயா னங்கள் மிசைக்கொண்டார் உழையர் ஆனோர்.

(எ - து.) (நம்பியாரூரர் யோகப்புரவிமேற் செல்லத் தொடங்கியபோது) எப்பக் கத்தும் பலவகையான வாத்தியங்கள் முழங்கவும், போற்றுபவர்களுடைய தோத் திரவோசை மேலெழுந்தோங்கவும், மங்கையர்கள் ஆசையோடு பல்லாண்டுகள் சொல் லிப் போற்றவும், ஓசைபட எடுத்தோதும் நான்குவேதங்கள் ஓசையோடு ஓங்கியொலிக்கவு மாயிருந்தன. அவ்விதமான ஆடம்பரத்தைப் வியந்து பார்க்க ஆசையோடும் வந்து கூடு கின்றவர்களுக்கு சடையனாருடைய பரிசனங்கள் இன்புறும் வகையாகச்சொல்லாலும் செயலாலும் உபசாரஞ்செய்து அவர்களுடனே சிறந்த யானைகள் மேலும் குதிரைகள் மேலும் சிவிகைகளின் மேலும் ஏறிச்சென்றனர் என்பதாம்.

வியந்துபார் விரும்ப விரவினர்க்கு உழையரானோர் இன்பஞ்செய்தே உயர்ந்த வாகன யானங்கள் மிசைக்கொண்டார் எனக்கூட்டுக. (உ0)

மங்கல கீத நாத மறையவர் குழாங்க ளோடு
தொங்கலும் விரையும் சூழ்ந்த மைந்தரும் துவன்றிச் சூதும்
பங்கய முகையும் சாய்த்துப் பணைத்தெழுந் தணியின் மிக்க
குங்கும முலையி னாரும் பரந்தெழு கொள்கைத் தாகி,—

(எ - து.) யாவரும் வாகனாரூடராயப் புறப்பட்டு வரும்பொழுது செவிக்கினிமை யாக நாதத்தோடு சங்கீதங்களைப் பாடுகின்ற பிராமணர் கூட்டத்தோடு மலர்மாலைகளை யும் வாசனைத்திரவியங்களையும் அணிந்துகொண்டிருக்கின்ற யவ்வன புருடர்களும், சூதாடு கருவியையும் தாமரையரும்பையும் தோல்வியடையும்படிச்செய்து ஈர்க்கு இடை புகாவண்ணம் நெருங்கிப் பருத்தெழுந்து குங்குமக்குழம்பினால்மிக்க அழகு பெற்றிருக் கின்ற தனங்களையுடைய மாதர்களும் அணியணியாய்ப்பரவி மேன்மேல் வருகின்ற கொள்கையினையுடையதாகி,—

மைந்தரும், சூதும் பங்கயமுகையும் சாய்த்து துவன்றிப் பணைத்தெழுந்து குங்கும அணியின்மிக்க முலையினாரும் எனக்கூட்டுக. (உக)

அருங்கடி எழுந்த போதில் ஆர்த்தவெள் வளைக ளாலும்
இருங்குழை மகரத் தாலும் இலங்கொளி மணிக ளாலும்
நெருங்கிய பீலிச் சோலை நீனிறத் தரங்கத் தாலும்
கருங்கடல் கிளர்ந்த தென்னக் காட்சியிற் பொலிந்த தன்றே.

(எ - து.) இங்ஙனமான அருமையோடுகூடி திருமணக்கோலம், இப்படி எழுந்த சமயத்தில் அது கருங்கடலானது பெருவெள்ளங்கொண்டு பெருக்கெடுத்து வருதல் போலக் காண்போர்க்குக் காட்சிபெற்றிருந்தது. எவ்வாறெனின்,—கடலின்கண் சூல் உளைந்து வருந்துகின்ற சங்குகளைப்போல் சங்குவளையல்கள் மங்கையர்களுடைய கைகளில் ஒன்றோடொன்று தாக்க முழங்கிக்கொண் டிருக்கின்றமையானும், மகரமீன்

களைப்போல் அம்மங்கையர்களுடைய காதுகளில் பெரியமகரகுண்டலங்கள் பிரகாசித்துக்கொண் டிருக்கின்றமையானும், ஒளிவிடுகின்ற முத்துமுதலிய இரத்தினாபரணங்கள் அவர்களுடைய உடம்பில் காணப்படுகின்றமையானும், கருநிறத்தையுடைய அலைகள்போல நெருங்கிய கரியமயிற்பீலிகள் வரிசைவரிசையாய் நெருங்கிவருகின்றமையாலும் என்பதாம்.

இதனால்,—மணக் கோலமானது கடலின்கண் ணுள்ள பொருள்களை யெல்லாம் உடைத்தாய்ப் பார்ப்போர்க்கு இதுவே கடலென்று எண்ணும்படியான பொலிவினையுடைத்தாய் இருந்ததென்று கூறப்பட்டது. (உஉ)

நெருங்குதூ ரியங்கள் ஏங்க நிரைத்தசா மரைகள் ஓங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப் பிணங்குபூங் கொடிக ளாட
அருங்கடி மணம்வந் தெய்த அன்றுதொட் டென்றும் அன்பில்
வருங்குல மறையோர் புத்தூர் மணம்வந்த புத்தூர் ஆமால்.

(எ - து.) நெருங்கிவருகின்ற பேரிகைமுதலியவாத்தியங்கள் ஓயாமல்முழங்கவும், வரிசையாய்ப் பிடித்து அசைத்துவருகின்ற சாமரைகள் மேலெழுந்தோங்கி அசைந்துவரவும், பெரியகுடைகள் ஒன்றின்பின் ஒன்றாக நெருங்கிச் செல்லவும், ஒன்றோடொன்று கலந்துபிணங்கி கொடிகளாடவுமாக, வருகின்ற அரிய திருமணக்கோலமானது, அப் பெருமைமேம்பட்டுவருகின்ற குலத்திற்சிறந்த ஆதிசைவப்பிராமணர்கள் வாழும் புத்தூரினகண் வரப்பெற்றமையான், அவ்வூரானது அன்றுமுதல் எந்நாளும் மணம்வந்த புத்தூரென்று பெயர்பெற்றது என்பதாம்.

அருங்கடிமணம் அன்பில் வருங்குலமறையோர்புத்தூர்வந்தெய்த அன்றுதொட்டு என்றும் மணம்வந்த புத்தூராமால் எனக்கூட்டுக.

• ஆதிசைவகுலமானது பரமசிவனையே வழிபடும் வழிபாட்டில் வழிவழியாய்த் தளர்ச்சியில்லாமல் வருஞ்சிறப்புடையதாகலான் - அன்பின் வருங்குல மறையோர் என்றார்.

இடுகுறிப்பெயராக புத்தூரென வழங்கிவரும் சிறப்புடைய அவ்வூரானது - ஆரூரரது திருமணத்தைத் தன்னிடத்தில் எய்தப்பெற்றகாரணத்தால் மணம்வந்தபுத்தூரென்னும் காரணப்பெயரையும் பெற்றதென்றும், இந்த மணத்துக்குரியராகிய நம்பியாரூரர் சாவாரைப்போல் சாவாது என்றும் மணவாளராய், என்றுந் திருமணக்கோலப் பெருமாளாய் இவ்வுலகின்கண் வாழும் வாழ்வினையுடையவராகலான், என்றும் மணம் வந்தபுத்தூரென வழங்கப்பெற்றதென்றும் கூறினார்.

அல்லதூஉம்—நம்பியாரூரருக்குச் சடையனாராலும், நரசிங்கமுனையரையராலும் வந்ததும் ஒருமணமே, அந்தமணத்தைத் தமக்கவந்த பெருஞ்சடையனாராலும் வந்ததும் இருமணமே, இவ்வண்ணம் என்றும் மணமே ஆரூரருக்கு வந்திருத்தலால், அவர்வந்த வூருக்கும் என்றும் மணமே வந்ததென்க. (உங)

நிறைகுடம் தூப தீபம் நெருங்குபா லிகைகள் ஏந்தி
நறைமலர் அறுகு சுண்ணம் நறும்பொரி பலவும் வீசி
உறைமலி கலவைச் சாந்தின் உறுபுனல் தெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளல் மணம்எதிர் கொள்ள வந்தார்.

(எ - து.) (என்றும் மணம்வந்தபுத்தூராகக், புத்தூர்வீதியின்கண்ணே மணக்கோலவைபவத்துடன் நம்பியாரூரர் எழுந்தருளி வரும்பொழுது) அவ்வள்ளலாரை எதிர்சென்று அழைத்துக்கொண்டுவர சடங்கவியார் உறவினராகிய மங்கையர்களிற்சிலர் - பூரணகும்பங்களையும் தூபதீபங்களையும் முளைகள் நெருங்கியுள்ள பாலிகைகளையும் கைகளில் ஏந்திக்கொண்டும், சிலர் - நறுமணங்கமழும்மலர்களையும் அறுகுகளையும் பொற்

சுண்ணப்பொடிகளையும் நல்லபொரிகளையும் இவைபோன்ற மற்ற மங்கலப்பொருள்களையும் வீசிக்கொண்டும், சிலர் - பச்சைக்கர்ப்பூரமுதலிய கலவைகளால் நன்றாய் அரைக்கப்பட்டு கலந்துள்ள சந்தனக்குழம்பினின்றும் தெளிந்தெடுத்த நீரை யாவர் மேலும் தெளித்துக்கொண்டும் வந்தார்கள் என்பதாம்.

வீதி (யிற்கண்ணேவரும்) வள்ளல மணம எதிர்கொள்ள மறையவர் மடவார் நிறைகுடம்......சாந்தின் உறுபுனல் தெளித்து வந்தா என்று கொண்டுகூட்டுக.

இவ்வாறு திருப்பாட்டானும் நம்பியாரூரர்—யோகப்புரவி மேற்கொண்ட கோலத்தின்சிறப்பும், அங்ஙனம் புரவியின்மேல் ஆரோகணித்தபொழுது பலவாத்தியங்களின் ஒலியும், வாழ்த்தொலியும் பல்லாண்டொலியும் வேதவொலியும் ஆகிய இவைகள் எழுந்த சிறப்பும், அச்சமயத்தில அந்தவைபவத்தைக் காணவருகின்றவர்கள் ஒருவரோடொருவர் அகமகிழ்ந்து முகமலர்ந்து இன்னுரைபகர்ந்து அளவளாவி யானைமுதலிய வாகனங்களில் ஏறிக்கொண்டு சிங்காரத்துடன் வருகின்றவர்களுடைய சிறப்பும், இவர்களைப் போலவே ஏனைய இளஞ்சாளையரும் இளமங்கையரும் ஆடையணிகளாலும், கலவைச்சாந்தினாலும்—சிறந்து உல்லாசமாய்வருகின்ற பெருக்கத்தின் சிறப்பும், இவ்வகையான சிறப்புகளுடன் பெருங்கடல்போல் பேரிகைமுதலியவற்றால் எழும்பேரோசையோடு புறப்பட்டு புத்தூருக்குவந்து அவ்வூரை என்றும் மணம்வந்த புத்தூராக்கியசிறப்பும், அம்மணத்துக்குரியராகிய சடங்கவியாருடைய உறவினர்கள நிறைகுடமுதலிய மங்கலங்களை ஏந்திக்கொண்டும் நறுமலர் முதலியவற்றை வீசிக்கொண்டும் சந்தனநீரைத்தெளித்துக்கொண்டும் ஆரூரரை எதிர்சென்றழைத்துவந்த சிறப்புங் கூறப்பட்டன. (உச)

மகளிர் ஆரூரரை வியத்தல்.

கண்கள்எண் ணிலாத வேண்டும் காளையைக் காண என்பார்;
பெண்களில் உயர நோற்றாள் சடங்கவி பேதை என்பார்;
மண்களி கூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோம் என்பார்;
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடு வார்கள்.

(எ - து.) இவ்வகையான சம்பிரமத்துடன் மங்கையர்கள் எதிர்கொண்டழைக்க வருகின்ற ஆரூரராகிய மணவாளப்பதி கணனுக்கு (அடங்காக காட்சியை) சிலமாதர்கள் கண்டு ஓபெண்காள்! இதோ யோகப்புரவிமேல் வருகின்ற இந்தமணவாளரைப் பார்த்தீர்களா? இத்தகையகாளையைப் பார்க்க நமக்குள்ள இரண்டுகண்கள்போதுமா? எண்ணிறந்த கண்கள்வேண்டும் என்று சொல்லுவார்கள். சிலர் ஓ சகிகளே! தவஞ்செய்தவர்களாகச் சிலபெண்களைச்சொல்லுகின்றார்களே அவர்களெல்லாம் என்னதவஞ்செய்தார்கள்; இந்த சடங்கவி சிவாசாரியாருடைய புத்திரியிருக்கின்றாளே அவள்தான் உயர்ந்ததவத்தைச் செய்தவள் என்று சொல்லுவார்கள். அங்ஙனம் சொல்லக்கேட்ட சிலபெண்கள் - நாமும் அரியதவத்தைச் செய்தவர்களே யாவோம். ஏனெனில் - இந்தவுலகமெல்லாம் மகிழ்ச்சியில் மூழ்கும்படியான இந்த மணக்கோலத்தைக் கண்டோமே இந்தக்கோலமானது நமது கண்களையும் கருத்துகளையும்விட்டுப்போகுமா? ஆகலான் நாமும அந்தச்சடங்கவியாரைப்போலவே இவருடன் வாழ்கின்றவர்களாவோம். ஆகவே நாமும் மணங்கண்டு வாழ்ந்தோம் என்று சொல்லுவார்கள். நாமும வாழ்ந்தோம் என்றதைக்கேட்டசிலர் - இப்பொழுது நீங்கள் சொல்லியது உண்மையே என்று மகிழ்ந்து பண்களினுடைய நிறைந்தகீதங்களைப் பாடுகின்றவர்களாயும் ஆடுகின்றவர்களாயும் இருந்தனர் என்பதாம். (உரு)

ஆண்தகை அருளின் நோக்கின் வெள்ளத்துள் அலைந்தோம் என்பார்;
தாண்டிய பரியும் நம்பால் தகுதியின் அடைந்த தென்பார்;
பூண்தயங் கிவனே காணும் புண்ணிய மூர்த்தி என்பார்;
ரடியு மடவார் கூட்டம் இன்னன இசைப்பச் சென்றார்.

(வி - ரை.) பாடுவார் ஆடுவார்களைச் சிலர்பார்த்து ஓநங்கைமார்களே! நீங்கள் பாடவும் ஆடவுமா யிருக்கின்றீர்கள், நாங்களோ நம்மையெல்லாம் தம்முடைய காட்சியொன்றினாலேயே ஆளுந்தகுதியை யுடையவராயிருக்கின்ற இவர் நம்மை நோக்குகின்ற நோக்கத்தினால் விளைகின்ற ஆசை வெள்ளத்தான் அலைந்தோம் என்று சொல்லுவார்கள். அதனைக்கேட்ட சிலர் நாம அலைவதைக்கண்ட இவர் வருகின்ற குதிரையானது நம்மைத் தாண்டிச் செல்வதைவிட்டு நமது ஆசைக்குத்தக்கபடி மெய்யப்பைய நம்மை நோக்கித் தகுதியாகவருகின்றது என்று சொல்லுவார்கள். குதிரை மெய்யப்பையத் தம்மைநோக்கி வருகின்றதைக்கண்ட சிலர் - மணவாளரைப்பார்த்து ஆபரணவிசேடங்களான் பிரகாசிக்கப்பெற்ற இவரோ புண்ணியமூர்த்தி என்று சொல்லுவார்கள். இவ்வண்ணமாக அவ்வீதியின்கண்ணே நெருங்கிய மங்கையர்கள் இன்னவாறெல்லாம் சொல்லச் சென்றனர் என்பதாம். (உசு)

தடுத்தாட்கொள்ள நேர்ந்த பெருந்தொடர்ச்சிகள்.

வரும்மணக் கோலத் தெங்கள் வள்ளலார் தெள்ளும் வாசத்
திருமணப் பந்தர் முன்பு சென்றுவெண் சங்கம் எங்கும்
பெருமழைக் குலத்தின் ஆர்ப்பப் பரிமிசை இழிந்து பேணும்
ஒருமணத் திறத்தின் அங்கு மொழிந்தது மொழிவேன் உய்ந்தேன்.

(எ - து.) இவ்வாறு மணக்கோலங்கொண்டு மடவார்கூட்டம் சொல்லும் சொற்களுக்கும், காணுங் கண்களுக்கும், எண்ணும் எண்ணங்களுக்கும் வேண்டியகாட்சியைத் தரும் வள்ளலாய் வருகின்ற எங்கள் நம்பிஆரூரர் நல்லவாசனைவீசுகின்ற திருமணப்பந்தருக்கு முன்னே எழுந்தருளியபோது வெண்ணிறமுடைய சங்கங்கள் எப்பக்கத்தும் பெரிய மேகக்கூட்டங்கள்போல் முழங்க யோகபுரவியினின்றும் இறங்கி நரசிங்கமுனையரையர் சடையனார் சடங்கவியார் என்றெண்ணப்பட்ட இவர்களாலும் ஏனையராலும் அநுதவிரும்பிச்செய்கின்ற ஒப்பற்றதாகிய அந்தத் திறமாகிய ஒருமணத்தில் நிகழ்ந்ததாகிய திருவருட்செயலை சொல்லத்தொடங்குவேன். இங்ஙனம் சொல்லத் தொடங்குவதாகிய இச்செயலால் உய்ந்தவனாயினேன் என்பதாம்.

மணக்கோலத்து வரும் எங்கள் வள்ளலார் எனக்கூட்டுக.

இம்மூன்று திருப்பாட்டானும் நம்பியாரூரரது கண்ணுக்கடங்காத பேரழகினை மங்கையரெல்லாங்கண்டு காமப்பயனழிந்தோர் கருத்தினும்சென்று, அது சென்றவழியேதோன்றும் சொற்களையெல்லாம் சொல்லி, மகிழ்ந்தமையும் பாடினமையும் ஆடினமையும் சங்கங்கள் எப்பக்கங்களிலுமுழங்க கலியாணப்பந்தரில் வந்தமையும் கூறப்பட்டன.

விசேடம்-ஆசார்யபிரபாவம் கஉஉ-வது பக்கம் ரு-வது வரி முதலாகக்காண்க. (உஎ)

இறைவன் வருதல்.

வேறு

ஆலுமறை சூழ்கயிலை யின்கண்அருள் செய்த
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற எழுந்து மிகுகின்ற அசைந்தும்
மாலும்அய னுக்கும்அரி யாரொருவர் வந்தார்.

(எ - து.) திருமால் பாதலத்துக்குக் கீழுள்ள இடமளவும் வராகவடிவங்கொண்டு தோண்டிச்சென்றும் அடிகாண்பதற்கு அரியராயும், பிரமன் மேலுள்ள அண்டமளவும் அன்னப்பறவை வடிவங்கொண்டு பறந்து சென்றும் முடிகாண்பதற்கு அரியராயும், அழல்வண்ணராய் ஆதியந்தங்கடந்து வேதங்கள் சூழ்ந்து ஐயா! ஐயா! என்று அனவர

தழும் ஓயாது ஒலமிடும் திருக்கயிலையின்கண் பஞ்சாக்கரத்தின் பொருளாகிய தடுத்து ஆண்டு அருளல் என்னும் உபதேசவாக்கியத்தை இறைவன் அனுக்கிரகஞ்செய்தனனாக லின், அங்ஙனம் அனுக்கிரகஞ்செய்த அந்தமஹாவாக்கியப்படியே நகார மகாரமாகிய இரண்டான் மறைத்தலாகிய வழியினையும் மறைப்பித்தலாகிய வழியினையும் தடுத்து வகாரமாகிய அருளான் அடிமை கொள்ளும்பொருட்டு அவ்வாரூரர் எழுந்தருளியிருக்கும் மணப்பந்தரின்கண்ணே வந்தனர் என்பதாம்.

மாலும் அயனுக்கும் மிகு கீழுற அகழ்ந்து மேலுற எழுந்தும் அரியார் ஒருவர் ஆலு மறை சூழ்கயிலையின்கண் அருள்செய்த சாலுமொழியால் வழிதடுத்து அடிமைகொள் வான் வந்தார் எனக்கூட்டுக.

"அஞ்செழுத்தே ஆகமும் அண்ணல் அருமறையும், அஞ்செழுத்தே' ஆதிபுராண மனைத்தும் - அஞ்செழுத்தே, ஆனந்தத் தாண்டவமும் ஆறாறுக் கப்பாலாம், மோனந்த மாம் முத்தியும்," என்று உண்மைவிளக்கங்கூறியபடி எல்லாப்பொருள்களுந் தன்பொரு ளேயாகத்திரண்டுகூடிய பெரும்பெயரெனப்படும் ஒருவார்த்தையாகிய, பஞ்சாக்கரத் தின் பொருளாய் விளங்குவது "தடுத்தாட்கொண்டருளல்"—என்னும் பெரியமொழி யாகலின் அதனைச் - சாலுமொழி—என்றார்.

அப்பெரியமொழியில் ஆராய்தற்குரிய பாசமே - தடுத்தற்குரிய தாகலான், அப்பாச காரியங்களையும், இறைவனால் ஆளுதற்குரியது ஆன்மாவேயாகலான் அவ்வான்மா வின் நிலையினையும், ஆன்மாவை யாண்டபின்னர் அவ்வான்மாவுக்கு அருளுவது சிவானு பவமே யாகலான், அவ்வனுபவப்பேற்றினையுமே பேரோசையோடு எடுத்துக் கோஷித் துக்கொண்டிருப்பது வேதத்தின் இயல்பாகலின் - ஆலுமறை - என்றார். வேதந்தோன் றியது சிவபெருமானிடத்தாகலின் - சூழ்கயிலை - என்றார் தடுத்தாட்கொண்டருளல் என்னும் அம்மொழியும் அக்கயிலாயத்தினிடத்திலேயும் அச்சிவபெருமானிடத்திலேயுமே எழுந்ததாகலின் - வழி - என்றார்.

டமையால் எவையும் ஆங்கே அறுதிபெறப்பெற்ற அணுவை - அறுதியே-ஆர்த்ததுயரகல அம்பிகையோடு எவ்விடத்தும் காத்தல் அவன்கடனே காண்" என்று திருக்களிற்றுப்படியாரிற் கூறியபடி காத்தலைத் தன்கடனாகக்கொண்டுள்ள இறைவன் பாசத்தைத் தடுக்குங்கால் நோக்கித் தடுப்பானாயின், அப்பாசம் தடைபடுவ தும், ஆன்மாவை ஆளப்படும் முறையில் ஆளுவானாயின் அவ்வான்மா ஆளப்படுவதும், சிவானுபவம் பெறுமுறையில் பெறச்செய்வானாயின் அவ்வான்மா அவ்வனுபவத் தைப் பெறுவதும் இயல்பேயன்றி ஆன்மாக்கள் தமது தற்போதத்தைக்கொண்டு பாசத் தைத் தடுப்பதும் தடுத்துத் தானே சிவசாரூபத்தை அறிந்து ஆட்படுவதும், ஆட்பட்டுச் சிவானுபவத்தைப் பெறுவதும் இயல்பன்றாகலான் இங்ஙனமான இயல்பினை இருவரும் உணராது தற்போதத்தில் தலைப்பட்டனராகலின்-மாலும் அயனுக்கும் அரியார் - என் றார். "உள்ளத்தினுள்ளே கருவாயிருக்கின்றவன்" என்று தாண்டகத்திற் கூறியபடி உள்ளத்தின் உள்ளாகிய நடுவிற்காணுது புறம்பாயுள்ள மேலும் கீழும் எழுந்தாலும் தோண்டினாலும் காணப்படுவனே காணப்படானாகலின் - மேலுற எழுந்தும் மிகு கீழுற அகழ்ந்தும் அரியார் - என்றார்.

வேதபுருஷனானவன் - சிலதேவரைப்புறப்புறமாகவும் சிலரைப்புறமாகவும் சில ரை அகப்புறமாகவும் கீழும்மேலுந்தள்ளி தன்னகத்திட்டுக்கொண்டு போற்றிவாழுந் தேவ னுயுள்ளவன் இருவர்க்கரியனாகிய ஒருவனேயாகலான் ஒருவர் என்றார். அந்த வொருவன் தான்தடுத்தாள்வதாகிய இயல்பினை வேதமாகிய மூலத்தால் முன்னர் எழு வாயாகஎடுத்துரைத்தும் அம்மூலத்திற்கு உரையாக ஆகமத்தை செயப்படுபொருளாக எடுத்துரைத்தும் அவ்வளவில் அமையாது அதன்பயனிலையாகத் தடுத்து ஆண்டு அருளு முறையை உணர்த்தவல்ல நீதியாத் திருத்தொண்டத்தொகையை எடுத்துரைக்கத்

திருவுளத்தெண்ணி ஆலாலசுந்தரப் பெருமானுருக்கு அக்கயிலையின்கண் அருள்செய்தனராதலின் - தடுத்தடிமைகொள்வான் வந்தார் - என்றார்.

இத்திருப்பாட்டான் - இறைவன் ஸ்ரீ கயிலாயத்தில் ஆலாலசுந்தரமூர்த்திக்கு அனுக்கிரகஞ்செய்தபடியே அச்செயலை நடத்தவந்தனரெனக் கூறப்பட்டது.

அல்லதூஉம் - வேதங்கள் சிவனிடத்துத் தோன்றினவாகலான் அவ்விறைவர் வாழுங் கயிலையைச்சூழ்ந் திருக்கின்றன என்றும், இறைவன் தந்தருளுகின்றேன என்றுகூறியமொழி மஹாவாக்கியமென்றும், அந்தவாக்கியம் வேதத்தின் உட்கிடைப் பொருளாயுள்ள ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் உட்கிடைப் பொருளென்றும், அப்பொருளை உலகினர்க்கு அனுபவமுகத்தான் உணர்த்தவல்லவன் கல்லாலநிழலின்கண் ஆசிரியனாய் எழுந்தருளியிருந்தது அவ்வொருவனன்றி மற்றவரன்றென்றும் கூறப்பட்டன. (உஅ)

இறைவன் கொண்ட கோலத்தின் சிறப்பு.

கண்ணிடை கரந்தகதிர் வெண்படம் எனச்சூழ்
புண்ணிய நுதற்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மீதே
வெண்ணரை முடித்துவிழுந் திடைசழங்க,—

(எ - து.) நெற்றிக்கண்ணைச்சூழ்ந்து மறைத்த வெண்ணிறமுடைய வஸ்திரம் போல புண்ணியசொரூபமாகிய பரிசுத்தம்பொருந்திய திருநீறானது நெற்றியின்கண் பிரகாசித்து விளங்கவும் குளிர்ச்சிபொருந்திய இளம்பிறையானது கலைமுதிர்ந்து அதனுடைய கிரணங்கள் சாய்வதுபோல தலைமுடியில் முடித்துள்ள வெண்ணிறமுடைய சடைமுடியானது அவிழ்ந்து இடையளவும் விழுந்து அசையவும்;—

நடுக்கண் - இடைக்கண் என்பதுதோன்ற - கண்ணிடைஎனவும், வெங்கதிருடைய சூரியனைப்போலும், தண்கதிருடையசந்திரனைப்போலும், நடுக்கண்ணாகிய அக்கினியும் - செங்கதிருடையது என்பதுதோன்ற - கதிர்எனவும், அவ்வக்கினிக்கண்ணுடைய நெற்றியில் பூசியவெண்ணீறு பூசியநீறாகக்கொள்வதற்கின்றி செங்கதிர் தணியப்பெறுமாயின் வெண்கதிராகவே பிரகாசிக்குந்தன்மையுடைத்தாகலின் அவ்வக்கினிக்கண் தணிந்திருக்கப்பெற்றதனால்காணப்படும் நீறேபோலுமாம் அத்திருநீறு என்பதுதோன்ற-வெண்படமெனவும், அந்தநீறு தூளனமாகவியாமல் திரிபுண்டரமாகவும், பரந்துநின்று காணப்பெற்றதுஎன்னும் அப்புண்டரத்தின் பெருமைதோன்ற-வெண்படமெனச்சூழ்எனவும், அத்திருநீறு ஆன்மாக்களால் பூசப்படுவதாய், பூசியபின்னர் அவருடைய அபரிசுத்தமாகியபாவத்தை நீறாக்கி, சிவபுண்ணியஞ்செய்தற்குரிய புண்ணியசொரூபிகளாக்குந்திறமுடைத்தாய்ப்பிரகாசிக்கும் தன்மையுடைத்தென்பதுதோன்ற-புண்ணியபுனிதநீறுபொலிவெய்தஎனவும், செஞ்சடையானது-கொண்டவிருத்தகோலத்திற்கேற்ப ஓர்கலையோடிருக்கின்றமதி நிறைந்தவெண்மதிபோலும் வெண்ணிறமுடையதாய்த் திருமுடியில் ஓர்முடியாகப் பிரகாசித்தலென்பதுதோன்ற—தண்மதி முதிர்ந்துமீதே வெண்ணரைமுடித்த எனவும், அச்சடைமுடியினின்றும் வீசும்ஒளி சந்திரகிரணம்போல் கிரணங்களைப்பரப்பி வுலாவிக்கொண்டிருந்ததென்பதுந்தோன்ற—தண்மதி முதிர்ந்து கதிர்சாய்வதெனமீதே விழுந்திடைசழங்க எனவும் கூறினார்.

இதனால் மணக்கோலங்கொண்டு சுந்தரமூர்த்தியாய் மணப்பந்தரின்கண் எழுந்தருளியிருக்கும் ஆரூரர்பால் இறைவனது யவ்வனமெல்லாம் சென்றுவிட்டபடியால் அவ்விறைவனுக்கு விருத்தவடிவம் வந்ததென்றும், அவ்வடிவம்வரவே செங்கதிரைப்பரப்பும் நெற்றிக்கண்ணாகிய அக்கினியும் வெண்ணிறமுடைத்ததென்றும் அந்தச் செந்நிறக் கண்ணோடு கலந்துபிரகாசித்திருந்த செஞ்சடைமுடியும் வெண்சடையாய்ச்சாய்ந்துவிழத் தலைப்பட்டதென்றும், அங்ஙனம் அது சாயத்தலைப்படவே அச்சடைமுடியின்கண்

ஓர்கலையுடனிருந்த சந்திரன் இனி நாம் என்னுவோமென்று கலையெல்லாம் நிரம்பக் கொண்டு அச்சடையை விடாது அத்துடன்கலந்து பிரகாசித்ததென்றுங் கூறப்பட்டன.

அல்லதூஉம்-வேதசிவாகமங்களுடைய உண்மையும், அவ்வகளின்வழியாய்த்தமது திருவுள்ளத்தின்கண் நிகழும் உண்மைக்குறிப்பும், தமது பிரதிபிம்பமாய் விளங்கும் ஆலாலசுந்தரரை இப்பூவுலகின்கண் வரும்வண்ணஞ்செய்த அவ்வண்மையும் யாவரும் மிக எளிமையாய் யாதொருகளங்கமின்றி உணர்ந்துய்ய இறைவன் திருவுளத்தெண்ணிக் கயிலையைவிட்டுப் புறப்பட்டன ரைகலின் அவ்வெண்ணத்திற்கிசைய செந்நிறமாயுங் கருநிறமாயும் உள்ள அடையாளங்களைமாற்றிச் சுத்தசாத்வீகமாய் விளங்கும் வெண்ணீற்றொளியாய் எல்லாம்பிரகாசிக்கத் திருமேனிகொண்டனன் என்றலுமாம். (௨௯)

காதில் அணி கண்டிகைக் வடிந்தகுண்டல தாழச்
சோதிமணி மார்பில் அசை நூலினொடு தோளின்
மீதுபுனை உத்தரிய வெண்துகில் நுடங்க
ஆதப மறைக்குடை அணிக்கரம் விளங்க,—

(எ - து.) திருச்செவியில் அணிந்த உருத்திராக்க மணியாலாகிய வளைந்த குண்டலமானது தாழ்ந்துதொங்கவும் உருத்திராக்கமாலைகளால்சோதிமயமாய்ப் பிரகாசிக்கும் திருமார்பில் அசைந்துகொண்டேயிருக்கும் பூணூலோடு தோளின்மேல் அணிந்திருக்கும் உத்தரீயமாகிய வெண்ணிறமுடைய வஸ்திரமானது அசையவும் சூரியவெப்பத்தை மறைக்கும் குடையானது அழகியதிருக்கரத்தில் விளங்கவும்,— (௩௦)

பண்டிசரி கோவண உடைப்பழமை கூரக்
கொண்டதோர் சழுங்கல்உடை ஆர்ந்தழகு கொள்ள
வெண்துகில் உடன்குசை முடிந்துவிடு வேணுத்
தண்டொருகை கொண்டுகழல் தள்ளுநடை கொள்ள,—

(எ - து) தமதுரிய மிக்கபழமைக்குப்பொருந்தத் திருவுதரத்தின்கீழ் சரியும்படி உடுத்த கோவணமாகிய நழுவுகின்ற ஒப்பற்ற உடையானது இடையில்பொருந்தி அழகினைக்கொண்டுவிளங்கவும் வெண்மைபொருந்திய கோவண ஆடையோடு தருப்பையும் முடிந்துவிட்டிருக்கின்ற மூங்கிற்றண்டை ஒருகையிற்பிடித்துக்கொண்டு திருவடிகள் தளர்ந்து நடக்கும் நடையினைக்கொள்ளவும்,—

பழமைகூரக்கொண்ட பண்டிசரிகோவணம் ஓர்உடை (யாகிய) சழுங்கல்உடை ஆர்ந்து அழகுகொள்ள எனக்கொண்டு கூட்டுக.

காதிலணிந்திருக்கும் உருத்திராக்ககுண்டலம் தொங்கியசைதலும், மார்பிலணிந்திருக்கும் உபவீதமும், தோளில் அணிந்திருக்கும் உத்தரீயமும், அசைந்தசைந்தாடுதலும், கையிற் குடைபிடித்திருத்தலும், கோவணமாக அணிந்திருக்கும் ஆடை வயிற்றின் கீழ்சரிந்து கிடத்தலும், நடைதள்ளு நடையாயிருத்தலும் விருத்தகோலத்துக்குரித்தானவையாகலான், அவைமுற்றும் ஒருங்கே கூறினர். செந்துகில் முடித்த தண்டை ஒருகையில் கொண்டிருத்தல் சந்நியாச ஆச்சிரமத்தைக் குறிப்பதாகலான், அதனையொழித்து, வானப்பிரஸ் தாச்ரமத்தைக் கொண்டுவந்தனரென்பது தோன்ற - வெண்துகிலுடன் தருப்பைமுடித்துள்ள மூங்கிற்றண்டு ஒருகைகொண்டு என்றார்.

வெண்துகில் என்றது - கோவணவாடை. அது ஸ்நானம் பண்ணியபின்னர் உடனே நீராடையாகிய கோவணத்தைக்களைந்து உடுக்கவேண்டியதற்கும், தருப்பை - தருப்பணஞ் செய்யுங்காலத்திற்கும் வேண்டுமாகலான் — வெண்துகிலுடன் குசை முடித்து விடுவேணுத்தண்டொருகை கொண்டென்றார். குசை - தருப்பை. வேணு— மூங்கில். சழுங்கல் - தளர்தல், நழுகல் என்க (௩௧)

மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனும் அதன்படிவ மேயோ
மெய்த்தநெறி வைதிகம் விளைத்தமுத லேயோ
இத்தகைய வேடமென ஐயமுற எய்தி,—

(எ - து.) இவ்வண்ணமான தகுதியுடைய திருவேடமானது, நெருங்கிவளர்கின்ற பேரழகு முதிர்ந்தபருவத்தையடைந்துவந்த ஒருருவமோ, மெய்ம்மைநெறி வாய்ந்துள்ள வைதிகநெறியை உண்டாக்கிய சொரூபசிவமே இவ்வுருவத்தை யடைந்துவந்ததோ, அந்த அனாதியாயுள்ள சொரூபசிவத்தினுடைய உருவத்திருமேனிகளெல்லாம் ஒருருவமாய்ப்பொருந்தி இவ்வுருக்கொண்டு வந்ததோ என்று சந்தேகிக்கும்வண்ணம் அத்திருமணப்பந்தரின்கண்ணே எழுந்தருளி,—

தனக்கென ஒருருவமும் இல்லாதிருப்பதே இறைவன் உருவமெனக்கூறி எல்லாவுருவமும் அவனுக்குக்கூறப்பட்டிருத்தலின், இவ்விடத்திற் கொண்டதிருவுருவம் அழகெல்லாம் திரண்டு ஒருருவமாக வளர்ந்து வந்த பெரியதோருருவமென்பது தோன்ற மொய்த்துவளர்பேரழகு எனவும், அவ்வழகு - அவ்வைதிகத்திலுண்டாகும் அழகன்றாய், மெய்ந்நெறி கூடுதற்கு வேதத்திற் கூறப்பட்டுள்ள வைதிகக்கோலம் இதுவாமென்பது தோன்ற - மெய்த்தநெறி வைதிகம் எனவும், அக்கோலமுடைய அவரை உற்று நோக்குவார்க்கு அக்கோலம் அந்த மெய்ந்நெறியைக்கூறிய இறைவன் இவனே என்று காட்டுகின்றது என்பது தோன்ற விளைத்த முதலெனவும், உலகத்தாரால் மதிக்கப்படும் பேரழகுக்கும் அவர்களுக்காகக்கூறிய வேதத்தில் கூறப்பட்ட வைதிகநெறிக்கும் மேம்பட்டுள்ள சைவகோலத்திற் சிறந்து என்றும் விளங்கும் பேரழகுடைய இறைவனுக்கலான் அவ்விறைவன் தன்பால் அன்று காணப்பட்ட வைதிக கோலத்தினும் சைவகோலத்தையே மிகுதிப்படக்காட்டினனென்பது தோன்ற—இத்தகைவேடமென ஐயமுற எனவுங்கூறினர்.

ஈண்டையங்கொண்டார் யாவரெனின் வைதிகரென்க. அஃதாவது வைதிகம், சைவம், வைதிகசைவம் என ஆசாரம் மூவகைப்படும். அவற்றுள் வேதத்திற் கூறப்பட்ட ஆசார கர்மத்தை மாத்திரம் கொள்வது வைதிகமெனப்படும். ஆகமத்திற் கூறப்படும் ஆசாரத்தை மாத்திரம் கொள்வது சைவமெனப்படும். இரண்டாசாரத்தையும் விடாது கொள்வது வைதிக சைவம் எனப்படும். இதனுண்மையை இனிவரும் முப்பத்தேழாவது செய்யுளுரையிற் காண்க.

இறைவன் இங்கு கொண்டுவந்த வடிவம் தள்ளும் நடைகொள்ளவந்த மூப்புவடிவம், அவ்வடிவினைக்கண்டு ஐயங்கொண்டது—மொய்த்துவளர் பேரழகு மூத்தவடிவேயோ என்றும், அத்தகையமூப்பெனும் அதன் படிவமேயோ என்றும், மெய்த்தநெறி வைதிகம் விளைத்தமுதலேயோ என்றுமாம். வடிவமானது மூப்பைக் கொள்ளுமாயின் அவ்வடிவில் யவ்வனத்திலிருந்த அழகு ஒழியத் தலைப்படுமேயன்றி அங்ஙனமே யிருக்கத்தலைப்படாது. அங்ஙனமிருக்க இவர்கொண்ட மூப்புப்பருவத்தில் அழகுமொய்த்து வளரும் பேரழகினைக்காட்டலால் இது - வடிவத்தில் மூத்து வந்த வடிவமன்று, அழகு மூத்து வந்த அழகின் வடிவமாகும் என்றும், அழகே இவ்வடிவமாய் வந்திருப்பின் நடை தள்ளுநடையினையும், சிகையாகிய சடை வெண்ணிறத்தையும் கொண்டிருத்தல் கூடுமோவெனின்,—இவர் அந்தணர்களில் சிரேஷ்டராகக் காணப்படலால், வைதிகத்தில் கூறப்பட்டிருக்கும் நடைகளில் ஒன்றையேனும் தள்ளுநடையில்லாதவரென்பதையும், அங்ஙனம் வைதிகத்தில் தள்ளாநெறியுடையவர் எப்பொழுதும் சிரசுமுதல் பாதபரியந்தம் பஸ்மோத்தூளித (திருநீறு சண்ணித்ததிருமேனிய) ராயும், பஸ்மசாயி (திருநீற்றிலேயே படுக்கை கொண்டிருப்பவராயும் இருப்பவரென்பதையும் காட்டும் அடையாளங்களாகும் என அவ்வையத்தை ஒழித்தார் என்றுமாம்.

இங்ஙனந் திருப்பாட்டினுள் [illegible] விருத்த பிராமண வடிவங்கொண்டுவந்த கோலத்தினைச் சொல்லி [illegible] திருப்பாட்டின்கண் கொண்டுவந்த கோலத்திற் காணப்படும் அடிக்கோலங்களைக் கூறியபடியாம்.

அல்லதூஉம் — [illegible] முதல் என்றதனால் ஒருவடிவாய் விளங்கும் பரசிவத்தினது ஒரு வடிவாதலைக் குறிக்க [illegible] மூத்தவடிவு என்றதனால் - நடந்து வருதலைக் குறித்தமையையும் அத்தகைய மூப்பினும் அதன் படிவமே என்றதனால் உருவாக் [illegible] குறிப்பித்தனவும் அறிக.

ஆசாரியப்பிரகாசம் 131-ஆம் பக்கம் [illegible] வரிமுதல் காண்க. (கூஉ)

[illegible]

வந்துதிரு மாமறை மணத்தொழில் தொடங்கும்
பந்தரிடை நம்பியெதிர் பன்னுசபை முன்னின்
"இந்தமொழி கேண்மின்கள் யாவர்களும்" என்றான்
முந்தைமறை ஆயிரம் மொழிந்த திருவாயான்.

(இ-ள்.) விதிகளின்படியே வைதிகவிதிப்படியே திருக்கலியாணஞ்செயலைச்செய்யத்தொடங்கும் அப்பந்தரில் [illegible] மூத்தவடிவமொன்றும் வைதிகமூத்தவடிவமொன்றும் [illegible] மூத்த வைதிகத்திலும் [illegible] நம்பியாரூரர் எதிரில் கூடியிருக்கும் [illegible] முன்னே நின்றருளி வேதங்களையெல்லாம் முன்னாளிற் சொல்லிய திருவாயினையுடைய [illegible] காணப்படும் சபையார்களாகிய நீங்களெல்லாம் [illegible] இந்த மொழியைக் கேளுங்களென்று சொல்லியருளினான் என்றவாறு.

திருமாமறை மணத்தொழில் தொடங்கும் பந்தரிடைவந்து நம்பியெதிர் சபைமுன்னின்று முந்தைமறை யாயிரம் மொழிந்த திருவாயான் யாவர்களும் இந்தமொழிகேண்மின் என்றான், எனக்கூட்டுக.

வருணாச்சிரம தருமங்கள் [illegible] சுருதியிலும் மிருதியிலும் புராணங்களிலும் விதிகள் விதிக்கப்பட்டிருப்பினும் [illegible] சுருதியே யாகலானும், அந்நூல்கள் [illegible] சொல்லப்படுதலின் அவ் வைதிகவிதியை ஆதிசைவமறையவர் ஒழுகுவதற்கு விடாதவராகலானும், அவ்வைதிக விதியையே கொண்டு அவர்கள் சைவவிதியைச் செய்யத்தொடங்கினார் என்பார் - திருமாமறை மணத்தொழில் தொடங்கும் — என்றார். வைதிகத்திற்குஞ் சைவத்திறத்திற்கும் இறைவன் தலைவனாதலால் [illegible] அவ்விடத்தில் அவ்விறைவன் வந்து முன்னிற்றலை [illegible] — பந்தரிடைவந்து - என்றார். இறைவன் வேதத்தையுஞ்சொல்லி [illegible] அவ்வேதவொழுக்க முடையார் கூடியிருக்கும் அச்சபையின் முன்னே நின்றனன் என்பார் - சபைமுன்னின்றார் - என்றார். வைதிகதருமவொழுக்கம் சைவதரும ஒழுக்கத்திற்கு மாறுபடாது அதனையே நோக்கியிருக்கும் இயல்புடைத்தாகலின் சைவதரும ஒழுக்கமுடைய ஆரூரர் எதிரில் அவ்வேதவொழுக்கமுடையார் [illegible] — நம்பியெதிர்சபை — என்றார். இறைவன் நின்றருளுதற்கு இடமாயிருக்கும் [illegible] அதன்பயனைத் தாமேயறியும் ஆற்றலின்றி [illegible] அவ்விறைவனை ஆசிரியனாய் வந்து உணர்த்தும் இயல்பு உடையனாதலின் அவ்வியல்பின்படியே அன்று தாமே சொல்லத்தொடங்கினான் என்பார் - பன்னும் இந்தமொழிகேண்மின் யாவர்களும் என்றான் என்றார். இங்ஙனம் சொல்லத்தொடங்கிய இந்த வொருமொழியே எம்மால் சொல்லப்பட்ட வேதங்களிலெல்லாம் உள்ள உண்மைமொழி என்பார் - முந்தைமறை யாயிரம் மொழிந்த திருவாயான் யாவர்களும் கேண்மின் - என்றார்.

—வைதிகத்தை விட்ட சைவதருமத்தையும் சைவத்தைவிட்ட வைதிக தருமத்தையும் கொள்ளாது வைதிகசைவமாய் விளங்கும் தருமத்தையே கொண்டு கலியாணச்செயலைத் தொடங்கினாரென்றும், அப்பந்தரின்கண் சொல்லாமல்சொல்வதாகிய சொல்லைச் சொல்லத்தொடங்கினாரென்றும், அந்தவொருசொல் ஆயிரம்வேதத்திலும் உள்ளதென்றுங் கூறப்பட்டன. (௩௩)

நம்பிமுன் நின்ற இறைவர் நம்பியை நோக்கி இந்தமொழிகேள் என்றோது, சபை எதிரில் இந்தமொழி கேண்மின்என்றது என்னை யெனின், தாம்சொல்லப்புகும் சொல்லின்பொருளை ஆராய்ந்துணர வேண்டியவர் அச்சபையின்கணுள்ள வைதிகரேயாகலானும், அவர்கள் ஆராய்ந்துணர்ந்த பின்னர் அவ்வாராய்ச்சியினளவாகவே நிற்பரன்றி ஆட்புநேர்தன்மை உடையவர் ஆகார் ஆகலினானும், முன்னர் அவர்களை நோக்கி ஒருபொருளும் அறிதற்கு இடங் கொடாத இந்த மொழிகேண்மினென வாளா கூறினரென்க. (௩௪)

என்றுரைசெய் அந்தணனை எண்ணில்மறை யோரும்
மன்றல்வினை மங்கல மடங்கல்அனை யானும்
"நன்றுமது நல்வரவு நங்கள்தவம் என்றே
நின்றதிவண் நீர்மொழிமின் நீர்மொழிவ" தென்றார்.

(எ - து.) இந்தமொழி கேண்மின் என்று திருவாய்மலர்ந்தருளிய அந்தணர்பெருமானை அச்சபையின்கண் கூடியிருந்த அளவிறந்த வேதியர்களும், மணவேள்வியைச் செய்தற்குரியராய் மணக்கோலங்கொண்டு சிங்கம்போலும் நிகரற்றிருக்கின்ற ஆரூரரும் நோக்கி, இக் கலியாணகாலத்தில் வந்ததாகிய தேவரீருடையவரவு நல்வரவன்றோ, வந்த நீர் இங்கு நின்றதும் நன்றுடையதன்றோ, தேவரீர் வந்ததும் நின்றதும் நாங்களெல்லாம்செய்த நல்லதவமன்றோ என்றுசொல்லி இனித் தேவரீர் சொல்லவேண்டியதாகத் திருவுளத்தில் நினைந்தவற்றை யாதொருதடையு மின்றிச் சொல்லியருள்வீராக என்பதாம்.

உமது நல்வரவும், இவண் நின்றதும் நன்று நங்கள்தவம் என்றே, நீர்மொழிவது நீர்மொழிமின் என்றார் எனக்கூட்டுக.

இறைவன் இந்தமொழிகேண்மின் என்று சொல்லப்போவது வேதமாகிய மூலத்துக்கு உரையாகலின் என்றுஉரைசெய் அந்தணனை என்றும், அவர்சொல்லப்போகும் அந்த உரையின்கருத்தை ஆராயும் எண்ணம் இல்லாதவராய்ப் பிரமத்தைத் தாமே எனறெண்ணி அங்ஙனம் பிரமத்துக்கு அடிமையாகும் எண்ணமில்லாதவர் வைதிகராகலின் - எண்ணில் மறையோர் என்றும், இறைவன் இனிச் சொல்லப்போகும் மொழிப் படியே அடிமையாகும் ஆற்றல் உடையவர் ஆதிசைவராகிய ஆரூரராகலின் அவரை மடங்கல் அனையானும் என்றும், இறைவன் வந்தது தாம் எண்ணியுள்ளதைச் சொல்லவும், நின்றது சொல்லியவை முடிக்கவும், சொல்லும் அச்சொல்லும் முடிக்கப்போகும் அம்முடிவும் தங்களால் அடையப்படும் பயனாகவே முடிதலின்—உமது நல்வரவும், இவண் நின்றதுவும் நன்று, நங்கள்தவம் என்றும், எங்கள்பயனாகவும் அப்பயன் எங்கள் தவத்தால் வந்ததாகவும் இருக்குமானால் அதைச் சொல்லுவதற்குத் தடையுளதாக நினைத்தல் கூடாதாகலின்—நீர்மொழிவது நீர்மொழிமின் என்றுங் கூறினார்.

வைதிகராகிய மறையோரது உணர்வு தாம்சொல்லப்புகும் வேதசாரமாகிய மொழியின்கண் அவர்கள் முனைந்து நிற்க வெண்ணி இந்தமொழி எனக் கூறியபடியே அவர்களது உணர்வும் தீவிரங்கொண்டுநின்றது என்பது தோன்ற—நீர்மொழிவது நீர்மொழிமின் என்றார். இம்மறையோர் கேட்டுணர்வதில் தீவிரங்கொண்டதுபோலும் ஆரூரர் கேட்கவும், கேட்டவழியே உணரவும், உணர்ந்தவழியே ஒழுகவும் கடப்பாடு

[illegible] இவரும் [illegible] [illegible] [illegible] அனைவரும் [illegible] [illegible] [illegible]

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] மறை [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] திருவ [illegible] [illegible] [illegible] [illegible] கூறியவாறும்.

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] செய்த [illegible] இதனையாலும் [illegible] அடையவேண்டிய [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] சொல்லுகின்றனர் [illegible] [illegible] [illegible] இது அருமையிலும் அருமை என்று [illegible] வேறியவை [illegible] [illegible]. (௩௯)

[illegible] காலை [illegible] [illegible]
[illegible] மின்னிடையும் [illegible] [illegible]
[illegible] [illegible] வழுத்தினை [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]

(௩௰ - து.) [illegible]

[illegible] இவ்வாறு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

இ[illegible] வழுத்தினை [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இவ்வெல்லி [illegible] வெளிப்படை. "[illegible]" என்னும் [illegible] [illegible] [illegible] [illegible] என்னும் உண்மையை [illegible] [illegible] "பொன்னிடையும் மின்னிடையும் [illegible]" [illegible] [illegible] [illegible] இறைவன் [illegible] [illegible] இவர் அவருக்கு [illegible] முறையும் [illegible] இயற்கையாக [illegible] [illegible] பொன்னிடையும் என்னிடையும் [illegible] என்னிடையும் [illegible] என்று [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

[illegible] தம்மைப் [illegible] பின்னுமாகக் கூறுவர். [illegible] மலமாகிய [illegible] யுடைய ஆணவமாகிய [illegible] பெயரால் புணர்ப்பைச் [illegible] ஸ்ரீகயிலாயத்தில் [illegible] திருப் [illegible] யின் அப்பாசப் பெயர்ப்பிய அவரைப் பூவுலகத்தில் [illegible] வர்க்கெட்டு [illegible] வந்து அப்பாசத்தைத் தொலைத்து ஆட்கொள்ளுதற்கு வரவேண்டியவரே யாவர். அவர் [illegible] லாகிய தமது திருமேனியையே தமது [illegible] பெற்றிருக்கும் உருவ [illegible] யாராகலின் அவரும் இவ்வுலகின் கண் [illegible] வேண்டிய தின்று. அவர் [illegible] வரும் வந்து வழக்கிட [illegible] வேண்டியதின்று. உண்மை [illegible] யிருக்க. [illegible] பாசமுடைய பசுக்களுக்[illegible] தாம் [illegible] அச்சகுறியத்தை [illegible] இவரை அசசெயலுக் குள்ளாக்கிற [illegible] தம்மை முன்னும் அவரைப் [illegible] யாகக் கூறினரென்க. அன்றியும், [illegible] இம்மகனால் என்றும் [illegible] ஸ்ரீகயிலாயத்தின் கண் இருவரும் [illegible] யிருப்பினும் [illegible] சக்கவும் [illegible] முறைமை [illegible] கன்சன்றுவிளக்கக் குறித்தது மென்க. [illegible] வியாகர் [illegible] வியா திருவுருவங்களை [illegible] திருவுருவமாக [illegible] மக்களாகவும் [illegible] இறைவனுக்க [illegible] காண்லாம் [illegible] நகைகாட்டு [illegible] வைப்பார் முதலாய [illegible] காட்டியது [illegible] குப் [illegible] கயம் [illegible] இம்மறந்திகளை [illegible] மாக்கு [illegible] முறை [illegible] செய்[illegible] [illegible] ஆறை [illegible] யாவதில [illegible] பெருந்தகை [illegible] தம் என்னும் [illegible] திருமேனி [illegible] [illegible] அமைவகதார் [illegible] திருக்[illegible] சவளி சயம் [illegible] அவனாள் [illegible] திருத்[illegible] [illegible] சயமத்[illegible] மதுரன் செய்[illegible] வகை [illegible] திருக்கண்டுத் [illegible] [illegible] மனம் [illegible] அடியெண் [illegible] கலந்து [illegible] அம்மா [illegible] [illegible] தங்குவரம் [illegible] [illegible] திருவருள் [illegible] முறையை [illegible] [illegible] வேறு அருமிய வழக்கறுகிய [illegible] திருமா [illegible] முதலாக [illegible] [illegible] ஆன்மாக [illegible] [illegible] அத்தமையன் [illegible] [illegible] ஆகிய வழக்கும் அனுரியாயுள்ள [illegible] வழக்கு—என்றார். முத்திநெறி [illegible] முக்தி [illegible] [illegible] நிறத்தை புணர்ந்து சாதனை [illegible] [illegible] யாம் என்று வழக்[illegible] இறைவன் [illegible] [illegible] மணம்புணர [illegible] வழக்கிலே [illegible] [illegible] போல் இரு [illegible] மணம்புணர்ந்து [illegible] [illegible] வழக்கினை முடித்தே [illegible] என்றார் என்றார்.

இதனுள்—[illegible] திறத்தைக் கூறவல்லவரே நாவல் நாவரென்றும். அந் [illegible]—[illegible] என்றும், அவ்வறு [illegible]—[illegible] திறத்தை வெளியாக்கவே இவ் [illegible] வந்தனென்றும் கூறப்பட்டன.

நெற்றிவிழி யான்மொழிய நின்றநிகர் இல்லை -
"உற்றதோர் வழக்கென்னிடை நீயுடைய துண்டேல்
மற்றது முடித்தலது யான்வதுவை செய்யேன்
முற்றஇது சொல்லு"கென எல்லைமுடி வில்லான்,—

(எ - து.) பந்தரின் கண்ணேநின்ற நெற்றிக்கண்ணராகிய வேதியர் இவ்வாறு கூற நிகரற்றிருக்கின்ற நம்பியாரூரர் வழக்காளியாய் வந்த வேதியரைப் பார்த்து, பழமையாகப் பொருந்திய ஓர் வழக்கு என்னிடம் நீர் உடைத்தாயிருப்பீராஞல் அதனை முடிக்காமல் யான் இக்கலியாணத்தைச் செய்யேன் ஆகலின் நீர்கூறியவழக்கினை ஒளிக்காது இப்போதே முடித்துக்கொள்ளும் வகையாக எண்ணிச் சொல்வீர் என்று வினவ அந்தமில்லாதவராகிய இறைவன்,—

எல்லைமுடிவில்லான் என்றதனை முடிவில்லாத எல்லையுடையவன் எனவும் நெற்றிவிழியான் மொழிய நின்ற என்றதனை நின்றநெற்றிவிழியான் மொழிய எனவும் மாற்றுக.

முற்செய்யுளில் இறைவனைக்குறிக்க இருவருக்கும் அரியார் ஒருவர் வந்தார் என்றும், அடுத்த செய்யுளில் கண்ணிடைகரந்த கதிர்என்றும் ஈண்டு நெற்றிவிழியான் என்றும் முடிவில்லாத எல்லையுடையவன் என்றும் கூறியதனால் தடுத்தாட்கொள்ளவந்தவர் மகாசங்காரககடவுளாகிய முதற்கடவுள் என்றுணர்தற்கென்க. என்னிடை உற்றதோர்வழக்கு நீயுடையது உண்டேல் என்றதனால் வழக்குடையவன் நானல்லேன் நீயேயாம் என்பது தோன்றக் கூறினரென்க. இவ்வுண்மை முன்னர் கூறியவாற்றானுமறிக. நீ என்பால் உற்றதாகக்கொண்ட அது என்பால் இல்லையாயினும் நீ என்பால் உற்றதாகச் செய்து அதனையே ஈண்டு விளக்கவந்தனையாகலான் உனக்கடிமையாயுள்ள யான் அது என்பால் உள்ளதாகவேகொண்டு அதனை முடிக்கும் வகையான் முடிக்குங் கடமைப்பாடுடையனாயிருத்தலே அடிமைத்திறமாம் என்பதுதோன்ற-மற்றது முடித்தலது நான் வதுவை செய்யேன் என்றார். இங்ஙனம் இறைவன் திருவுளத்துக்கொண்ட அடிமை புறத்தடிமையன்றி வேதாகமங்களுட் கூறப்படும் அகத்தடிமையாகலான் அவ்வகத்தடிமை முடித்துக்காட்ட வல்ல வல்லாளர் இந்நாவலர் பெருமானன்றி வேறொருவரன்றாகலான் அச்சிறப்புத்தோன்ற - நிகரில்லான் என்றார். நிகரில்லாராகிய இவர் இறைவனை நோக்கி என்வழியாய் வெளிப்படுத்தக்கருதிய அடிமைத்திறத்தை என்வழியாகவே முற்றுப்பெறுமாறு அருளல் வேண்டுமென்று வேண்டினரென்பது தோன்ற-முற்ற இதுசொல்லுகென என்றார்.

சிவஞானிகளாகிய அன்பர்களுடைய ஞானமும் கிரியையும் அஃதாவது அறிவும் செயலும் தற்போத வழியிற்செல்லாது அருள்வழியிற்றானே செல்லும்வண்ணம் நோக்கியிருக்கும் நடுக்கண்ணை யுடையவன் என்பார்—நெற்றிவிழியான் மொழிய-என்றும், அங்ஙனமான அருள்வழியில் மாறாது அறிவுஞ் செயலும் நிற்கும் நிலையில் வன்மையுடையார் ஆரூரரன்றி மற்றொருவரும் அல்லர் என்பார்.—நின்ற நிகரில்லான் என்றும், உனக்கு ஆன்மாக்களிடத்து அநாதியேயுள்ள இவ்வழக்கு என்னிடத்து இல்லாததாக இருக்க அது என்னிடத்தும் நீ உள்ளதாக்கி வழக்காடவந்திருக்கின்றனை, அவ்வழக்கினை முடித்தற்கே நானும் வந்திருக்கின்றேன் என்பார்- உற்றதோர் வழக்கு என்னிடை நீயுடைய துண்டேல் மற்றது முடித்து என்றும், அவ்வழக்கினை இவ்வுலகில் முடித்தல் காரணமாக அனிந்திதை, கமலினி என்பவரை மணந்து இன்பங்கலந்து வருவாயென்று முன்னமேயிட்ட கட்டளையாகலான் அதனை மறக்கேன் என்பார் - அலது நான்வதுவை செய்யேன் என்றும், இறைவனே! நீ முன்னமேயிட்ட கட்டளை இப்போது முடியும்வகையாக அருள்செய்யவேண்டுமென்பார் - முற்ற இது சொல்லுகென என்றும், இவ்வழக்காகிய எல்லையின் [illegible] முடிவில்லாத ஆற்றலுடையவன் என்பார் - எல்லைமுடிவில்லான் என்றும் [illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

மையாக வுடைய எம்மான் என்றார். அஃதே போல் நான்மொழிவது அடிமை என்ற தனால இறைவன் மொழியாயுள்ள வேதம் மொழிவதும் பிரமமாகிய பரசிவத்துக்கு ஆன்மாக்களெல்லாம் அடிமையென்றே கூறுவதாமென்று அறிவுறுத்தியதுமாம்.

வேதநெறியினை யுடையராய் வேதாந்தத்தைக் கேட்டுச் சிந்தித்துத் தெளியும் முறைமையினை யுடையவர் மறையவரேயன்றி ஆரூரன் அன்றென்பார்—மறையோர்என் றும், கேட்டுச் சிந்தித்துத் தெளிதலால் ஆவதாகிய நிட்டையின் பயன் சிவத்துக் கடி மையாய்ச் சோகமெனப் பாவித்தலாம். இங்ஙனமான பாவனையான் அடிமைநிலையாது ரம மாதலாகிய பயனற்றுப் போகின்றவர் மறையவரே என்பார்—அவரைநோக்கிக் கேண்மின் என்றும், அடிமை என்னும் விஷயத்தில் நாவின்வன்மைகொண்டு மன்று டுகின்றவன் இவனன்றி நீவிருமல்லர், வேறு யாவருமல்லர் இது உண்மை என்பார்- இந் நாவல் நகரான் என்னடியான் என்றும், என்னால் சொல்லப்பட்ட சிவாகமங்களில் எனது அபிப்பிராயமாயுள்ளது எனக்கு அடிமையென்று சொல்லப்படும் இது ஒன் றன்றி வேறில்லை என்பார்-இது நான்மொழிவது என்றும், திருமால் பிரமன் முத லாகச்சொல்லப்பட்ட இவரெல்லாம் சிவமாகி சிவமாகிய அம்முத்திநிலையில் பேரி ன்பங்கூடவும், பந்தம் மூளையாதிருக்கவும் அடிமைசெய்யும் அடிமையாளர் அல்லரா ய்ச் சிவத்தோடு ஏகமாகாது வேறாய்ப் பெத்தநிலையில் நின்று அந்நிலையில் சிற்றின் பங் கூடவும், பந்தம்மேன்மேல் மூளவும் அடிமைசெய்பவராகலான் - தேவரையும் மாலயன் முதற்றிருவின் மிக்கோர்யாவரையும் வேறு அடிமையாவுடைய எம்மான் என்றுங் கூறினர். (கள)

நம்பியாரூரர் நகைத்தல்.

வேறு.

என்றான் இறையோன் இதுகேட்டவர் எம்ம ருங்கும்
நின்றார் இருந்தார் "இவன்என்நினைந் தான்கொல்" என்று
சென்றார்; வெகுண்டார்; சிரித் தார்;திரு நாவ லூரர்
"நன்றான் மறையோன்மொழி"என்றெதிர் நோக்கி நக்கார்.

(ப - து.) இறைவன் இந்நாவல் நகரான் என்னடியான் என்றுகூற அக்கலியா ணப்பந்தரின்கண் எப்பக்கத்தும் நின்றவர் இருந்தவர் எல்லோருங்கேட்டு இந்த நம்பி யாரூரரையும் இச்சபையின்கணுள்ள நம்மனைவரையும், இப்போதிருக்குஞ் சமயத்தை யும் என்னவென்று நினைத்தானோ இது என்னகொடுமை என்று சிலர் சமீபித்தனர். சிலர் கோபித்தனர் சிலர் சிரித்தனர். அப்போது நாவலூரர் இவ்வேதியன்மொழி நன்றுநன்று என்று அவ்வேதியரைநோக்கிச் சிரித்தனர் என்பதாம்.

ஈண்டுக் கூறிய அடிமை என்னும் மொழி தடுத்தாளவரும் ஆசிரியனால் உபதே சிக்கப்படும் உபதேசமொழியாகலான் அஃதேபோல் தம்மைத்தடுத்தாளவந்த வேதி யர் "இந்நாவல் நகரூரன் என் அடியான்" என்றுகூறிய சிவபெருமானை அந்நாவலர் பெருமான்—என்றான் மறையோன்—என்றும், எனவே—ஆசிரியன் மாணவகனுக்கு உபதேசிக்கும் உபதேசவாசகமாகிய ஸ்ரீபஞ்சாக்கரத்தின் பொருளும் ஆன்மாவாகிய நீ அடிமையானாய் இருப்பவனேயன்றி நான் என்று ஓர்முதலாய் இருப்பவனன்று என்பதேயாகலான் அவ்வுண்மையை விளக்கினர் என்றும், அவ்வுண்மைப்பொருள் சிவபுண்ணிய விசேடத்தான் ஆசிரியனை அடைந்து வழிபட்டு அவ்வழிபாட்டின் ஒழுக் கத்தான் அவ்வாசிரியர்பால் உபதேசமுறையாய்க் கேட்பவர்க்கே விளங்குமேயன்றித் தற்போதத்தால் தாமே நூல்வழியான் ஆராய்ச்சியுடையராய்க் கேட்கப்புகுவார்க்கு ஒருசிறிதும் விளங்குதல் இல்லை என்பது துணிபாகலானும் அத்துணிபுக் குரியவரே அப்பந்தரின்கண் கூடியவரெல்லாம் ஆகலானும் அவர்களை-இதுகேட்டவர் என்றும்,

அன்று அளித்த சான்றுமொழிக்கு இன்று உத்தரமளிக்க வந்தவராதலின் அவ்வுத்தரத்தைத் தளரவிடாது அவ்வுத்தரத்தையே மேலுஞ்சொல்லி அதற்குரிய செயலையுஞ் செய்யத் தொடங்குகின்றேன் என்னும் அக்குறிப்பும் புலப்படுமாறு உடுத்திருந்த உத்தரியத்தைத் தளரவிடாது தாங்கிச் சென்றனரென்பார்—மிசை யுத்தரியத் துகில்தாங்கி மேற்சென்று என்றார். அங்ஙனம் செய்யத்தொடங்கிய செயலில் ஓலையினது ஆசிரிமுறைமையும் வெளிப்படுமாறு செய்யத் தொடங்கினன் என்பார் - அக்காலம் உன் தந்தை தன்தந்தை ஆளோலை யீது என்றார்.

அஃதாவது ஆதிசைவனாகிய உனக்குத் தந்தை சைவருஷிகளாகிய கவுசிகாதி பஞ்சருஷிகளில் ஒருவரல்லவா, அந்த ஐவருக்கும் தந்தையாயுள்ளவர்—சதாசிவரல்லவா, அவர் சொல்லியது சிவாகமங்களல்லவா. அவ்வாகமங்களெல்லாம் பரசிவனாகிய எனக்கு ஆளோலையல்லவா, எனவே-ஆகமங்களில் ஆன்மாக்களுக்கு இறைவன் காட்டும் உபகாரத்தையும் காணும் உபகாரத்தையும் செய்யானாயின் அவ்வான்மாக்கள் பாசநீக்கம் உண்டாய் முத்திப்பேற்றையடையாராகலானும் அங்ஙனம் செய்த பேருபகாரத்துக்கு செய்நன்றிமறவாமை இன்றியமையாத செயலாதலானும் அச்செய்கையைச் செய்யுமாறு ஞானத்திற் சரியை கிரியையோகமென வகுத்து, அவற்றுள் காட்டும் உபகாரத்திற்குச் சரியை கிரியை என்னுந் தொண்டுகளைச் செய்ய வேண்டு மென்றும், காணும் உபகாரத்திற்கு—யோகத்தொண்டைச் செய்யவேண்டு மென்றும் விதித்திருத்தலின்ஆகமங்களை - அடிமையோலைகள் என்றதென்க. (நக)

வேறு.

மாசிலா மரபில் வந்த வள்ளலே தியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியால் சிரிப்பு நீங்கி
"ஆசில்அந் தணர்கள் வேறோர் அந்தணர்க் கடிமை யாதல்
பேசஇன் றுன்னைக் கேட்டோம் பித்தனோ; மறையோன்?" என்றார்.

(இ - ள்.) குற்றமென்பதறியாத ஆதிசைவகுலத்தில் வந்த வள்ளலாராகிய ஆரூரர் கிழப்பிராமணரைப்பார்த்து நன்றுமது நல்வரவு நங்கள் தவமென்று முன்னே சித்தத்துள் நிகழ்ந்த நேசமானது "இந்நாவல் நகரூரன் என்னடியான்" என்று சொன்ன போதே தளர்ச்சியடைந்தபடியினால், சிரிப்புநீங்கி குற்றமற்ற ஆதிசைவர்களாகிய அந்தணர்கள் வைதிகர்களென்று சொல்லப்பட்ட அந்தணர்களுக்கு அடிமையாதலை இன்று உன்னிடத்தில் நானும் இக்குள்ளசபையாரும் கேட்டோம். ஓ மறையோனே! நீ பித்தனோ என்றார்.

ஏகமாயும் அத்விதியமாயும் இருப்பது பிரஹ்மம் ஒன்றேயென்றும், அப்பிரஹ்மமே அத்வைதமாயும் சாந்தமாயும் இருக்குஞ் சிவம் என்றும் கூறப்படும் வாசகலக்ஷியனாய்விளங்கும் சிவசம்பந்தம் ஒன்றேயுடையவர்களாய் சைவசமயசம்பந்தமான ஆசார்ய அபிஷேகாதி தீக்ஷாவிசேஷமுடையவர்களாய்ச் சிவன் ஒருவனையே ஆன்மார்த்த பரார்த்தக்கிரமங்களாக வழிபடும் சிவபூஜாநியமங்களை யுடையவர்களாய்ச் வேறு தேவதாந்தரங்களைச்சிவத்தோடு ஒப்பாகஎண்ணி அவனோடு சமமாகவைத்துப்பூஜித்து வழிபடுதலாகிய குற்றத்தைக்குலதருமமாகவே ஒழித்திருப்பவர்களாய் விளங்குபவராகலான் தமது குலத்தவரை - ஆசில்அந்தணர்கள் - என்றும், குலதர்மசம்பந்தமான சம்ஸ்காராதி விசேஷங்களை யுடையவர்களாய் ஆன்மார்த்த பூஜாதிகாரம் ஒன்றேயுடையவர்களாய் சகலதேவர்களையும் சிவாங்கமாகக் கொள்வதைவிட்டு சிவசமமாக எண்ணி பூஜையாதி உபசாரங்களைச்செய்துவரும் நியமத்தைக் குலதருமமாகவேகொண்டு ஒழுகிவரும் கொள்கையுடையவர்களாய் விளங்குபவராகலான் - வேறோர் அந்தணர்—என்றும், இவ்வந்தணர்களுடைய இவ்வழிபாடு வேதசம்மதமும் அன்றாகலான் - வேறோரந்தணர்களென்றும், வேறோரந்தணராகக் காணப்படும் உமக்கு - வைதிகசைவகுலத்தனாகிய என்னை அடிமை

என்று அஞ்சாது பித்துடையவனைப்போல் வழக்கிட வந்தனையாகலான் - பித்தனே மறையோன் - என்றுங் கூறினர். (சஃ)

இறைவன் வித்தகம் பேச வேண்டா மெனல்.

"பித்தனும் ஆக; பின்னும் பேயனும் ஆக; நீயின்
றெத்தனை தீங்கு சொன்னு யாதுமற் றவற்றால் நாணேன்
அத்தனைக் கென்னை ஒன்றும் அறிந்திலை யாகில் நின்று
வித்தகம் பேச வேண்டாம் பணிசெய வேண்டும்" என்றார்.

(எ - து.) நீ சொன்னபடி நான் பித்தனுனாலும் ஆகுக. பித்தனுனதே யன்றி அதன் மேலும் பேயனுனாலும் ஆகுக, நீ இப்பொழுது என்னை நோக்கி எவ்வளவு தீங்கான வார்த்தைகளைச் சொன்னாலும் நான் அந்த வார்த்தைகளால் எவ்வளவும் நாணங்கொள்ளேன். ஏனெனில் நீ சொன்ன அவ்வளவுக்கு என்னை ஒருவகையானும் இன்னவன் இவன் என்று அறிந்தாயில்லை. ஆனாலும். எனக்குநிகராக நின்று பித்தா பேயா என்று விசித்திரமான வார்த்தைகளைச் சொல்லா தொழிக. உன்னை நான் அடிமையென்று சொன்னதற்கேற்ப எனக்கு வேண்டும் பணியைச் செய்வாயாக வென்று கூறியருளினர் என்பதாம்.

இறைவன்—தம்மைப் பித்தனென்று அழைத்த நம்பியை நோக்கி, ஆரூரனே! இமய மலையில் தவஞ்செய்தஅந்தப் பிரியா நங்கையாகிய ஒருத்தி அவளது தவத்தைத் தடுக்கச் சென்ற என்னைப் பித்தனென்று முன்னமே அழைத்திருக்கின்றாள். ஆகலான், நீதான் பித்தனென்று என்னை இன்று அழைத்தவனல்லை. பித்தன் என்று அழைத்த அந்த நங்கை பின் என்னை மணவாளனாக்கிக் கொண்டாள். அவள் பித்துடையவளா! நான் பித்துடையவனா! அது நிற்க. இன்று உனது ஒருமணத்தைத் தடுக்க வந்த என்னை நீ பித்தனென்கின்றாய், நீயும் அவளைப்போலும் என்றால் இருமணத்தைக் கொள்வதற்குத்தானே! பித்தனாகிய என்னால் நீ மணத்தைக் கொள்ளுவையாயின் நீ பித்தனே! நான்பித்தனே! பித்தன் என்றழைக்கத் துணிந்த நீ—இனிப் பேயனென்று அழைக்கவும் துணிவாய். ஏனெனில்,— "இன்னன வென்றறியாதன பேய்க்கணத்தோடு, இணங்கினின்றாடினன் இன்னம்பரான்" என்று ஒரு பெரியஅன்பனும் அழைத்திருக்கின்றான். அவ்வாறழைத்த அப்பெரியான் - சமணர்களாகிய பேய்க்கூட்டங்களோடு இணங்கி நின்றாடினவன். அங்ஙனம் ஆடினவன் - என்னைப் பேய்க்கணங்களோடு ஆடுகின்றவனென்றழைக்க வந்த அக்காலத்தில் அப்பேய்க்கணங்களை விட்டு என்னையே புகழ்ந்துபாடும் புகழினைப் பெற்றான். அப்பெரியானைப் போலும் நீயும் - இவ்வுலகக் கூட்டங்களில் நீங்கி. என்னையே பாடும் புகழினைப் பெறுதற்காக உனக்கு வரப்போகும் அப்புகழினைக் குறித்து இப்போது என்னைப் பேயனென்று அழைக்கத் துணிவையாயின் உலகினர் என்னைப்பேயனென்று எண்ணத்தான் துணிவரோ! சொல்லத்தான் துணிவரோ! துணியார்!! துணியார்!! நீ இருமணத்தைப் பெறுதற்கு என்னைப் பித்தனென்றும், என்னையே பாடும் பெருமையைப் பெறுதற்குப். பேயனென்றும் அழைத்தால் அச்சொற்கள் - எனக்குத் தீங்கினையாவது, நாணத்தையாவது தருமோ (தரா) எனனுங்குறிப்புப் பொருள் தோன்ற—பித்தனுமாகப் பின்னும் பேயனுமாக, நீயின்று எத்தனைதீங்கு சொன்னு யாது மற்றவற்றால் நாணேன்—என்றார்.

என்னால்—இருமணத்தையும், பாடும்பணியையும் பெறுதற்குரியவன் நீ என்று நாணறிந்தே இன்று இம்மணத்திற்கு வந்தேன். வந்த என்னிடத்தில் நிகழ்ந்த செயல் இவ்வுலகில் காணப்படும் பித்தரைப்போல் அறிந்து என்னைப்பித்தனென்று கூறினையன்றி, அச்செயலால் என்னை அறிஞியாயுள்ள பித்தனென்று அறிந்து கூறினை

[illegible] அச்சுவிப்புத்தோன்றா—[illegible] [illegible]

[illegible] மேன்மையாகி [illegible] குச்செய்து [illegible] அந்தப்போல் [illegible] திருத்தொண்ட [illegible] இவ்வுல [illegible] பெருமை தோன்றி [illegible] ருளைத்தருளினார் [illegible] அப் [illegible] சேவிக்க [illegible]

[illegible] னைசத்தியின் செய் [illegible] செய்யுமான [illegible] த்தனென்க. (சக)

[illegible]

[illegible]

[illegible] இவனது [illegible]

[illegible]

[illegible] ருள். [illegible]

[illegible] இருமை [illegible] ப்பழம் [illegible] கண்டு [illegible] இதுவும் [illegible] ன்றார் [illegible] ன்று [illegible] டுத்தது.

[illegible] இதனை [illegible] பிறவாக்குறை [illegible] யும் கர்மையாதலை [illegible] என்று [illegible] அர்ச்சுனராய் [illegible] [illegible] கள்ளோர் [illegible] பெறுமாகை [illegible] என்றது [illegible] அத்து [illegible] காண்டு [illegible] வைக்கட்டு [illegible] [illegible] கோயு [illegible] வருகும் எய்தும்.

[illegible] இவனது [illegible] பெருமை [illegible] இவ்வாறாக நின்றும், [illegible] [illegible] இம்மையையே [illegible] சொல்லியது

[illegible] இவன் [illegible] அதனைப் பார்ப்போம் [illegible] அவ்வோ [illegible] [illegible] என்றும் [illegible] [illegible] அறிவின் [illegible] [illegible] [illegible] அருளில் [illegible] [illegible], இவன் [illegible] [illegible] என்னும் [illegible] [illegible] [illegible] வெளிப்படையால் [illegible].

இத்திருப்பாட்டால், [illegible] சொல்லிய சொல்லின் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. (...)

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(பொ - ரு.) [illegible] [illegible] [illegible] பார்த்து (அருபா!) [illegible] [illegible] இத்திருக்கு [illegible] என்று சொல்லப் [illegible] [illegible] [illegible] [illegible].

[illegible] வடிவால் [illegible] இறைவன் [illegible] [illegible].

திருமலைச் [illegible] - [illegible] [illegible] இறைவன் [illegible] பணிசெய்ய [illegible].

[illegible] - [illegible] திருமேனி [illegible] - [illegible] [illegible].

அறிவுநூல் வழக்கென்றது என்னையெனின், சிவாகமங்களில் - ஆன்மவர்க்கங்களை - விஞ்ஞானகலர் - பிரளயாகலர்-சகலாகலர் எனவும், சகலருள் - சாமுசித்தர், வைநயிகர், பிராகிருதர் எனவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இனி, அம்மூவருள் பிராகிருதராவார் - முத்திநெறியடைதற்குரிய ஆற்றலும் அறிவும் காதலும் இல்லாதவர்.

வைநயிகராவார் - யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வநிலையாமை என நிலையாமையின் வகையினை யுணர்ந்து அவ்வழியாய்க்கூடும் மந்தரம், மந்தம், தீவரம், தீவரதரம் என்னும் சத்திநிபாதமுடையவராய், அதனால் முத்திநெறியில் அவாவினை யுடையராய் ஞானாசிரியர் வழியானே கேட்டலாதி நான்கினையும் பெற்றுப் பாசநீக்கம் உண்டாய் சிவமயமேயாய் நிற்பவர்.

சாமுசித்தராவார் - பிராகிருதரைப்போல், பெயர்த்தும் செத்தும் பிறப்பதற்கே தொழிலாகி இருக்கின்ற அவரது நிலைமையுடையவருமல்லர், வைநயிகரைப்போல் - நூல்வழியான் நிலை - நிலையாமையை உணர்ந்து பிரபஞ்ச வைராக்கிய முடையாராய் ஞானாசிரியரையடைந்து அவருக்குரிய வழிபாட்டினைச் செய்து, அவ்வழிபாட்டின் முறையை யுணர்ந்து அதற்கேற்றபடி ஆசிரியர்காட்டும் நெறியினைக்கைப்பற்றி அவ்வழியொழுகி, பின் அவர்பால் கேட்கப்படும் கேள்வியின் திறத்தால் - தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தியைப் பெற்று அம்முறையே சிந்திக்குந்திறத்தால்-ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தியை உடையராய், அம்முறையே தெளியுந்திறத்தால் - சிவரூபத்தை யுணர்ந்து, உணர்ந்த முறையானே - தம் அறிவின்கண் சிவத்தைத் தரிசனஞ்செய்து, தரிசனஞ்செய்த அந்நிலையினின்றும் மாறாது அத்வைதமாய்க் கலந்திருத்தலாகிய சிவயோக நிலையினைப்பெற்று, அந்நிலையில் உண்டாகும் சிவானுபவமுடையவராய் அவ்வளவில் மகிழ்ந்திருக்கும் இயல்பினை யுடையவருமல்லர்.

மற்றென்னெனின்,— விஞ்ஞானகலரை - இருமலங்கள் தாக்காதென்பதும், பிரளயாகலரை - ஒருமலந்தாக்காதென்பதும், நூற்றுணர்பாதல்போல், சாமுசித்தரென்று எண்ணப்பட்டவரை - சகலரை மும்மலச்சார்புகளும் வந்து தாக்குதல்போல் தாக்காதென்பதும் நூற்றுணர்பேயாம்.

ஆகவே, ஆன்மாக்களுக்குச் சத்திநிபாதம் வருவிப்பதில் இச்சையுள்ள இறைவனுடைய இச்சாசத்தியும், சத்திநிபாதம் வருவதற்குத் தடையாயுள்ள மலங்களைப் பரிபாகஞ்செய்யவல்ல சிவஞானம் வருதற்கான உபாயத்தைச் செய்ய எண்ணும் ஞானசத்தியும், அந்த ஞானசத்தியால் எண்ணப்படும் உபாயங் கைகூடுமாறு கிட்டியதாகிய ஓர்பிறப்பில் பிறப்பித்து அதனையே நல்லபிறப்பாக்கி அப்பிறப்பைக்கொண்டு சரியையாதி தவங்களைப் படிமுறையாற் செய்வித்து, அத்தவமுதிர்ச்சியின் விசேடத்தான், மட்டாய் மலராய் வருநாளில் மொட்டாய் மலரும் பயனைத்தரும் மலர்போல, சிவரூபத்தைக்காணும் அளவில் அன்பினை விளைவிப்பதாகிய கிரியையில்வல்ல - கிரியாசத்தியும், ஆகிய மூவகைச் சத்திகளும், அச்சாமுசித்தர்கள்பால் தலைப்பட்டு, அவர்களுடைய இச்சாஞானக்கிரியைகளைத் தம்முட்படுத்திக்கொண்டு, முன்னர் கிரியாசத்தியானது - முனைத்து நின்று அவர்களுடைய கிரியையில் இயல்பாகவே அன்பினை அங்குரிக்கும்படிச் செய்வித்து, பின் - அது காதலாகவும் பத்தியாகவும் பரவி மேன்மேல் பெருகி வளர்தற்குச் சிவரூபத்தைக் கண்டவுடன் மனத்தின்கண் அத்திருவுருவத்தினிடத்தில் பற்றுடைமையை உண்டாக்கி அச்சிவரூபத்தை விட்டு நீங்கக்கூடாத காதலை உண்டாக்கும். ஞானசத்தியானது - அங்ஙனம் உண்டாக்கிய பற்றுடைமையான் - பிரபஞ்சத்தோற்றத்தை மறப்பித்து, சிவத்தோற்றம் ஒன்றனையே தரிசித்துக்களிக்கவும் அதற்குரிய சொற்களையெல்லாம் வாக்கின்கண் நிகழவுஞ் செய்து பத்தியைப் பரவச் செய்யும். இச்சாசத்தியானது - அப்பத்தியின் திறத்தால் - கன்மமலவாசப்பட்டுப்

பிறப்பு இறப்பென்னும் நிமைகளைப் பயப்பிப்பனவாகிய சித்தத்தையும், ஏனைய கரணாதி தத்வங்களையும், பிறப்பிறப்பிற்குரிய தொழில்களில் செல்லவொட்டாது, முன் கிரியாசத்தியின் வழித்தாய் அங்குரித்த அன்பினை - மனத்தின்கண் நிகழ்ந்த காதல்வழியானும் வாக்கின்கண் பரவிய பக்தியின்வழியானும் மீளாசச்செய்து, சிவஞான நிலையில் நிகழ்வதாகிய ஞானச்சரியையாதிகளை ஆதியந்த மில்லாமல் நிகழ்த்தி, அவ்வழியானே சிவானந்தத்தை ஆதியந்தமில்லாமல் அனுபவிக்கச் செய்யுமென்க.

இதனால், சாமுசித்தர் எனப்படுவார் - ஆணவாதி மும்மலச்சார்பினை உடையவரன்றெனவும், இறைவனது இச்சையாதி மூவகைச் சத்திகளுடைய சார்பினையுடையவரெனவும், அச்சார்பின் விசேடத்தான் நூல்வழியானன்றியே காதலானும் பக்தியானும் முகிர்ந்து வருவதாகிய சிவானந்தத்தை அனுபவிக்கும் ஆற்றலை உடையாராயிருப்பவர் எனவும் விளக்கியவாருயிற்று.

எனவே, சாமுசித்தர் - நூல்வழியை விட்டிருக்கும் பிராகிருதருமல்லர், நூல்வழியைப்பற்றிச் செல்லும் வைணைகருமல்லர், இறைவனது அருளுருவாகிய இச்சையாதி சத்திகளின் பாற்பட்டு அச்சத்திகள் - சிவானந்தானுபவம் வருவதற்குக் காட்டும் அருட்பணியைப்பற்றிச் செல்லும் நன்னெறியினையுடையவரென்பதாம்.

டறிவந்த நூல்வழக்கினையே அறிவு நூல்வழக்கென்றுமுன்னே குறித்ததாமென்க. இந்த நூல்வழக்குப்பற்றியே இறைவன் - ஆரூரரைநோக்கி நீ ஓலைகாணற்பாலையோ! பணிசெயற் பாலை என்றதென்க.

எனவே, ஆரூரர்-ஆலாலமுண்டவனது சுந்தரசொரூபமென்று முன்னமே விளக்கியிருக்கின்றபடியால், அம்மூர்த்தி - கைலையில் இறைவனது ஆணைமேற்கொண்டு விடைபெறுங்காலத்து, "செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன் - மையல் மானுடமாய் மயங்கும் வழி ஐயனே தடுத்தாண்டருள் செய்" என்று விண்ணப்பம் செய்தனரென்றும், "அதற்கு அங்கணாளன் அருள்செய்தனன்" என்றுங் கூறியிருத்தலால், அங்ஙனம் அருள்செய்த அருண்மொழிக்கேற்ப இறைவன் - தடுத்தாண்டருளவந்தனனாகலான் - காணற்பாலையல்லை, பணிசெயற்பாலை, என்றான். அஃதாவது நான் தடுத்தாண்டருள வாரா தொழிவேனாயின்-நீ ஓலைகாணற்பாலைதான்; சொன்னபடியே நான் வந்தபோது, என்னை வரவிரும்பும் வைணைகர் ஓலையை (நூலை) க் காணவிரும்பி விரைதல்போல - நீ யேன் ஓலையைக்காண விரைகின்றாய், என்று மறுத்தனனென்க.

பணிசெயற்பாலை - என்றது என்னையெனின்,— "மாதவஞ்செய்த தென்திசை வாழ்ந்திடத், தீதிலாத்திருத்தொண்டத் தொகைதரப், போதுவார் அவர் மேன்மனம் போக்கிட, காதல்மாதருங் காட்சியிற்கண்ணினார்" என்றும் கூறியிருத்தலால் திருத்தொண்டத்தொகையைத் தருதலாகிய பணியேயாம்.

இனி, ஆரூரருக்கு - இறைவன் தந்த மானுடயாக்கையின் சிறப்புத்தோன்ற - ஓலைகாணற்பாலையல்லை என்றருளியசிறப்புமொழி என்க.

என்னை;-ஆரூரரது யாக்கை - ஒருமல மிருமல மும்மலம் என்னும் மலங்களையுடையாரது யாக்கைபோலன்று. மற்றென்னெனின், மும்மலச்சார்புகளொழிந்து, சிவசத்திகளின் சார்புபட்டு சிவத்துக்கே ஆளாய், அவன் பணியிலேயே பந்தப்பட்டு, அப்பணியின்கண் விளையும் இன்பமே பேரின்பமாக்கொண்டு வாழ்தற்குப்பெற்ற சாமுசித்தரது யாக்கையைப் போலுங்கொண்ட மானுடயாக்கையேயாம். "தவமேபுரிந்திலன் தண்மலரிட்டு முட்டாது இறைஞ்சேன், அவமே பிறந்த அருவினையேன் நின்திருவடிக்காம்பவமே அருளுகண்டாய்" என்றமணிவாசகப்படியே, திருவடிக்காம்பணி செய்வதற்கு இறைவனை வேண்டிப்பெற்றுவந்த சாமுசித்தரது யாக்கையைப் போன்றதென்று குறித்ததாமென்க.

[illegible] யின் பெருமை [illegible] அனைவரும் [illegible]

இனி, [illegible] வழக்குப் பற்றியும் - [illegible] பாலேயோ - என்று [illegible] வின்,— [illegible] என்று வழக்கிடலாகாமையின், அன்னைக்கொண்டு [illegible] கேற்ப, [illegible] யார்க்கும் [illegible] யுடையவ னல்லன் என்றார். [illegible] அடியான் [illegible] என்றார்.

[illegible] உலகில் [illegible] உடையான் என்னடிமையானென்று கூறார். [illegible] இல்லை [illegible] என்று கூடார். இவ்வழக்குப்பற்றியும் பணிசெய்ய [illegible] - என்றுமொன்க.

இனி, [illegible] — [illegible] சென்றது — [illegible] [illegible] என்று, [illegible] [illegible] கொள்க.

[illegible] செய்'' என்று [illegible] [illegible] திருத்தொண்டரை [illegible] [illegible] [illegible].

ஆகவே, [illegible] செய்யாமையானது [illegible]. ஆரூரர் - [illegible] தாம் [illegible] திருந்த செயலே [illegible] [illegible] செய்ய [illegible] என்றுமொன்க.

இனி, [illegible] - என் [illegible] [illegible] [illegible] முன்னை [illegible] அதன் [illegible] தாங்கள் [illegible] இறைவனை [illegible] கொண்டிருந்தாகலான் - தொடர்ந்து [illegible] [illegible] கொள்க.

அரு[illegible] [illegible] [illegible] முன்னே [illegible] [illegible] [illegible]! [illegible] [illegible] [illegible].

இத்திருப்பாட்டால்: அருளாளர் - [illegible] யாளர் - வலிந்தாளுடையருமா[illegible] [illegible] பெருங்கருணைத் [illegible] [illegible] இறைவன் — [illegible] பாலேயோ, என்றதன் [illegible] [illegible] காரணமும் [illegible] தொடர்வதற்கு [illegible] செய்தலைப் [illegible] [illegible] வன்மை [illegible] [illegible] கூறியவாறுமென்க.

தொடர்தற் கரியானைத் தொடர்ந்து பற்றிய சிறப்பு.

ஆவணம் [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] தொடர்ந்து [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] தொடர் [illegible].

(இ - ள்.) நம்பியாரூரர் தம்மை [illegible] இறைவரை [illegible] [illegible] பற்றிக்கச் சென்று அக்காலத்துக்கு [illegible] [illegible] நின்று அவ்விடம்விட்டு [illegible] [illegible]

[illegible] திருச்செல்வ [illegible] கட்டியார் [illegible] விரைவாக [illegible] பின்றொடர்ந்து [illegible] பொறும் [illegible] திருமேனி [illegible] அவரைச் சபித்தனர். [illegible] அம்முப்புரங்களை [illegible] [illegible] அழிய [illegible] வேறு [illegible] [illegible] என்பதாம்.

[illegible] வண்ணக்காட்டு [illegible] என்பார் - [illegible] என்றும், [illegible] [illegible] [illegible] [illegible] என்றும், [illegible] - அளவினில் [illegible] [illegible] [illegible] என்பார் - [illegible] [illegible] [illegible] என்றும், [illegible] [illegible] என்பார் - [illegible] என்றும், [illegible] [illegible] என்பார் - [illegible] என்றும், [illegible] என்பார் - [illegible] என்றும், [illegible] என்பார் - [illegible] என்றுங்கூறினர்.

[illegible] என்றது - [illegible] என்றது - [illegible] [illegible] என்றது - [illegible] [illegible] என்றும், [illegible] என்றது - [illegible] என்றும், [illegible] என்றும் [illegible] என்றும் [illegible] என்றும், [illegible] என்றது - [illegible] என்றும், [illegible] என்றது - [illegible] [illegible] என்றும். புரங்கள் [illegible] என்றது - [illegible] என்றும், [illegible] [illegible] என்று கொண்ட [illegible] [illegible] இவர்களெல்லாம் [illegible] இறைவன் [illegible] [illegible] [illegible] (௪)

ஆரூரர் ஓலையைக்கிழித்தல்.

மறைகளா யின முன் போற்றி மலர்ப்பதம் பற்றி நின்ற
இறைவனைத் தொடர்ந்து பற்றி எழுதும் ஆள் ஓலை வாங்கி
அறைகழல் அண்ணல் ஆளாய் அந்தணர் செய்தல் என்ன
முறையெனக் கீறி யிட்டான்; முறையிட்டான் முடிவிலாதான்.

(இ - ள்.) வேதங்கள் நம (நமஸ்காரம்) என்று முன்னே போற்றிப் பின் மலர்போன்ற திருவடிகளைப் பாதுகைவடிவமாகப்பற்றி நிற்கின்ற இறைவனை ஆரூரர் பின்றொடர்ந்து பிடித்து அடிமையென்று எழுதப்பட்டிருக்கும் ஆளோலையைவாங்கி ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த இறைவனுக்கு ஆளாயிருக்கும் ஆதிசைவர்கள் வைதிகராகிய அந்தணர்களுக்காளாய் அவர்களுக்கான பணிசெய்தல் எந்நூலிற் சொல்லப்பட்ட முறைமையென்று (பலவாறன் இனிகழ்ந்து) கிழித்தனர். அப்பொழுது முடிவில்லாத இறைவன் இது முறையோ முறையோ என்று முறையிட்டனன் என்பதாம்

வேதங்கள் காணாது நம என்னும்பதத்தை முன்னே கூறி அவனது பொருள்சேர்ந்த புகழைப் பலமுறையும் புகழ்ந்தெடுத்துக்கூவிப் பலவிடத்தும் ஓலமிட்டுத் தேடித்தேடிப்பற்ற நின்றவனாகலின் - மறைகளாயின முன்போற்றி மலர்ப்பதம்பற்றி நின்ற இறைவனை என்றார். எனவே கடலென்னுமிடத்து கடலென்றும் நீர் என்றும் உப்பென்றும் அறியவந்த மூன்று பொருளும் ஒன்றைவிட்டொன்று வேறாகக் காணப்படுதலின்றி ஒன்றாகவே காணப்படுதல்போல் பரமசிவமாகிய கடல் நீர்போன்ற பசுக்களாகவே காணப்படுகின்றது. ஆதலால் வேதங்கள் பசுவர்க்கங்களை வேறுபிரித்துச் சொல்வதற்கின்றி நீரையே கடலாகச் சொல்வதுபோல் பசுவர்க்கங்களையே பதியாகப் போற்றியும் நீரின் தன்மையை உற்று நோக்குழி - அதன்கண் வெறுக்கத்தக்க உவர்ப்பு - வெளிப்படுதல்போல், பசுவர்க்கங்களின் தன்மையை உற்று நோக்குழி - அதன்கண் - பாசவிலக்கணம் வெளிப்படலால், அப்பசுக்களினின்றும் பதிப்பொருளை வேறுபிரித்து இது அல்லை இது அல்லை என்று அன்மைப்பொருளாகப் போற்றியும், பின்னர் - கடற்கரையின் கண்ணேயுள்ள சிற்றூறலைக்கண்டு கடலின் தன்மை அறியக்கிடத்தல்போல், வேறுபிரித்த அப்பதி தம்மை அறிவார் அறிவின்கண்ணே ஊற்றெடுக்கும் அருளின் பெருக்கத்தைக்கண்டு அவ்வருளாகிய அடியையேபற்றி அவ்வடியைப் பிரியாது கிடத்தல் வேதத்தின் இயல்பென்க.

வேதங்களால் - ஒன்றாகவும் வேறாகவும் போற்றுதற்கு உரிமையாய் நின்ற அவ்வடிவங்களில் ஓர்வடிவமாக ஆரூரர்பால் வாராது உடனாய் நிற்கு நிலையினைக் காட்டும் அறிவொளிபோல் அவர் அறிவினை விளக்க, அவர் அறிவினைவிடாத ஒளிவடிவினனாய் வெளிவந்து, அடியான் என்னுஞ் சொல்லைச் சொல்லி அவரை அச்சொல்லுக்குள்ளாக்கித் தன்னைவிடாது பின்தொடர்ந்துவந்து தன்னைப்பற்றச் செய்தனனாகலான் - இறைவனைத்தொடர்ந்துபற்றி - என்றார்.

எனவே - இறைவன் - வேதங்களுக்கு - ஒன்றாய் வேறாயிருக்கும் - திருவுருவத்தைக் காட்டினனென்றும், ஆரூரருக்கு உடனாயிருக்கும் திருவுருவத்தைக் காட்டினன் என்றும் அறிவித்ததாமென்க.

இதனால் - இறைவன் - ஒன்றாய் வேறாய் உடனாயிருக்கும் அத்துவித இலக்கணமுடையனாகலின் - பாசபதார்த்தங்களோடு ஒன்றாய் வேறாய் இருக்கும் நிலையினை - வேதங்களிடத்தும், ஆன்மாக்களிடத்து உடனாயிருக்கும் நிலையினை - ஆரூரரிடத்தும் விளக்கினமைகாண்க.

அதுவேயுமன்றி - ஆரூரரிடத்து - என்றும் உடனாயிருந்தே யாவும் செய்பவனாயிருப்பவனேயன்றி, பசுபாசங்களிடத்து வேறாயிருந்து செய்வதுபோல் செய்பவன் அன்றென்று அறிவுறுத்தினமையுமாம்.

இனி, ஆரூரர் எழுதும் ஆளோலை வாங்கிச்செய்த செயலெல்லாம், இறைவன் அவர்பால் தாம்செய்ய எண்ணிய அருள்விளையாடலாகலான், அவ்விளையாடலை அம் முறையே கூறுவாம்.

முன்யாலயன் தொடராதானை வலிந்து பின்தொடர்ந்து பற்றிய ஆரூரர்—நஞ் செயல் அற்று இந்த நான் அற்றபின் நாதன் தன்செயல் தானே என்ற சித்தாந்த வசனப்படி செயலற்றிருக்கும் தம்பால் தன்செயலைக்காட்டவந்த நாதன் திருக்கரத்திலிருந்த ஆள் (அடிமை என்று எழுதியிருக்கும்) ஓலையைவாங்கி, நீர் * "ஒடுங்காப்பெருமை உம்பர்கோனை, தஞ்சமென்றுருழுகும் தன்னடியார்தம் நெஞ்சம்பிரியா நிமலனை, கள்ளங்கைவிட்டு உள்ளமதுருகிக், கலந்துகசிந்து தன் கழலிணையவையே நினைந்திட ஆங்கேதோன்றும் நிமலனை. முன்விட்டுத் தாம் அற்று;—மாமுயல்விட்டுக் காக்கைப் பின்போம் கலவர்போலவும்.— விளக்கங்கிருப்ப மின்மினிகவரும், அளப்பரும்சிறப்பில் ஆதர்போலவும். கச்சங்கொண்டு கடுந்தொழில் முடியாக், கொச்சைத்தேவரைத் தேவரென்றெண்ணிப், பிச்சரைப்போல ஓர் ஆரியப்புத்தகப்பேய்கொண்டு புலம்புற்று, வட்டணைபேசும், மானிடரைச்" சேர்ந்த மறையவர்; நானே—"வெண்டிரைக் கருங்கடல் மேற்றுயிர் கொள்ளும் - அண்டவாணற்கு ஆழியன்றருளியும், உலகமூன்றும் ஒருங்குடன் படைத்த மலரோன்றன்னை வான்சிரம் அரிந்தும், கடியபூங்கணைக் காமனுருடலம் பொடிபடவிழித்தும். மறிகடல் உலகில் மன்னுயிர் கவரும் கூற்றுவன் தனக்கு ஓர் கூற்றுவனாகியும், கடல்படுநஞ்சம் கண்டத்தடக்கியும், பருவரை சிலையாப் பார்த்தன் நாணாத் திரிபுரமெரிய ஒருகணை துரந்தும், கூற்றெனத் தோன்றியும் கோளரி போன்றும், தோற்றியவாரணத்து ஈருரிபோர்த்தும். அறிவிலையாய அரக்கனுருடல் நெறநெற இறுதர ஒருவிரல் ஊன்றியும். பல்கதிர் உரவோன் பற்கெடப்பாய்ந்தும், தக்கன் வேள்வி தகைகெடச்சிதைத்தும். செந்தீக்கடவுள் தன் கரதலம் செத்தியும், சலந்தரன் உடலந் தான்பிளந்தடர்ந்தும். கார்மலி உருவக்கருடனைக் காய்ந்தும், இன்ன பிறவும் எங்களீசன்—கோபப்பிரசாதம் அளித்த அறைகழல் அணிந்த அண்ணலுக்கு மீளா ஆளாயிருக்கும் ஆதிசைவரைச் சேர்ந்தவன். ஆகவே, அறைகழல் அண்ணல் ஒருவனுக்கே ஆளென இருக்கும் நான்—அவ்வண்ணலால் கோபிக்கப்பட்டார்க்கெல்லாம் ஆளாயிருக்கும் அந்தணர்க்கு ஆளாய் அவர் பணிசெய்தல் எந்த நூலில் எந்த முறையில் கூறப்பட்டுள்ள முறை? திருமுறைகளை யறியாத மறையவனே! இது என்னமுறை என்று வாங்கிய ஓலையைக் கிழித்தெறிந்தனராகலான்-எழுதும் ஆளோலை வாங்கி அறைகழல் அண்ணல் ஆள் அந்தணர் ஆளாய்ச்செய்தல் என்னமுறை எனக்கிழிபிட்டான் - என்றார்.

அங்ஙனம், ஆரூரர் கிழிபிடவே, ஆன்மாக்களின் பரிபாகத்திறங்கட்கேற்றவாறு - விரிவுரையாக வகுத்து, வேதங்களென்றும், வேதாந்தங்களென்றும் ஆகமங்களென்றும், புராணங்களென்றும் முறையிட்டவனாகிய இறைவன் - அங்குள்ளார் பலருங்கேட்ப இது முறையோ முறையோ என்று தனது முறையைக் கூறினனாகலான் - முறையிட்டான் - என்றார்.

†. இனி, மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றுங் குறைவிலா அளவினாலும் கூறொணாதாகி நிற்கும் அளவில் பெருமையை உடையவனாகலின் - முடிவிலான் - என்றார்.

---

* நக்கீரர் அருளிய - கோபப் பிரசாதம்.

† "அயன் - என்றது - அவ்வேதத்திற்கு அங்கமாய் அயனாற்செய்யப்பட்ட - பதினென் புராணநூலையும், மால் - என்றது - மாயோன் அவதாரமாகிய வியாதனாற்செய்யப்பட்ட இதிகாசநூலையும், மனம் - என்றது - மனுமுதலிய இருடிகளான் மனத்தால் நினைந்து செய்யப்பட்ட மிருதிநூலையும், வாக்கு - என்றது - அவ்வேதத்தைக்

இனித் திருமால் என்றும் [illegible], விரிபொருள் முழுதாய் விரிந்தேயும், [illegible] திருத்தன்மை [illegible]யான், இசைப்படும் பெருமையில் [illegible] [illegible]யான், [illegible] பொருளாய் [illegible], [illegible] [illegible]யான், [illegible] விரிந்தேயான், [illegible] அகன்றோன் ஆகலின் [illegible] தான் என்று.

[illegible] கிடந்த [illegible] [illegible] இன்றும் [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] தன் [illegible] [illegible] பழமொழி [illegible] [illegible] [illegible] திருப்பாவை [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] வண்ணம் [illegible] [illegible] [illegible] அறிக.

[illegible] செய்முறையாய் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

[illegible] பதிகத்தின் [illegible] அருள்வான் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கருமம் [illegible] [illegible] [illegible] இருவகைப்பட்டுச் சென்று [illegible] உடைத்தென்." இவ்விருத்தியுரை [illegible] [illegible] [illegible].

* அந்த முதல் [illegible] ஆதிப்பகவன் முதற்றேயுலகு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

[illegible] ஆயவரோடு [illegible] (எ) [illegible] சொல்லுகின்றனர், அவர்க்கு [illegible] என்று சொல்லுகின்றன [illegible] சொல்லுதல். [illegible] இவை [illegible] (க) [illegible] (௰) [illegible] திருவாசகம் [illegible] - இவை [illegible] கருவிகள், [illegible]

[illegible] - இறைவன் [illegible] பின் அவ்வாறிருக்கும் [illegible] - இறைவனும் [illegible] - அன்றியிருக்கும் [illegible] பெற [illegible] - இறை [illegible] - என்பர் இறைவனை [illegible] அருக்கன் [illegible] முறைக்கு [illegible] உடையார்க்கு [illegible] இது [illegible] இல்லை [illegible] முறை [illegible] (௪௱)

அருமறை முறையிட் டின்னும் அறிவதற் கரியான் [illegible]
[illegible] விலக்கி [illegible]
பெருமுறை உலகில் இல்லை [illegible]
திருமறை [illegible] நீர் [illegible]

[illegible] - இம்முறை [illegible] இது [illegible] இறைவன் [illegible] முறையே [illegible] இருந்தார்கள் இருவினை [illegible] விலக்கி, [illegible] சொல்லுமென்று [illegible]

* "விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேதவிதியல்லர் விண்ணுநிலனும், திரிதரு வாயுவல்லர் செறிதீயும் அல்லர் தெளிநீரும் அல்லர் தெரியில், அரிதரு கண்ணியாளை ஒருபாகமாக அருள்காரணத்தில் வருவார்" என்றபடி யாவும் அல்லனாகிய, இறைவன் மங்கைபாகனாய் அருள்காரணமாய்த் தடத்தவுருவங்கொண்டு வந்தருளும் அருமையை நாடி அவன்பாதத்திற் சூடுதற்குரிய பாதுகையாயும், குஞ்சிதபாதத்தில் அணியத்தக்க வீரக்கழலாயும், அரையில் அணியத்தக்க வெண்கோவணமாயும் வேதங்கள் இருத்தலால்—அருமறை—என்றார்.—அரிதருகண்ணியாளை ஒருபாகமாக அருள்காரணத்தில் வருகின்றவனாகிய அவன் அவ்வளவில் நில்லாமல், † "தீயாகி நீராகித் திண்மையாகித் திசையாகி அத்திசைக்கோர் தெய்வமாகித், தாயாகித் தந்தையாய்ச் சார்வுமாகித் தாரகையும் ஞாயிறும் தண்மதியும் ஆகிக், காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற இரதங்கள் நுகர்வானுந் தானேயாகி, நீயாகி நானாகி நேர்மையாகி நெடுஞ்சுடராய் நிமிர்ந்து அடிகள் நின்றவாறே" என்று தமிழ்வேதம் ஓதியவாறு நின்றருளும் நிலைமையைக்கண்டு அந்த அந்தநிலையை அந்தந்த வண்ணமாகவே முறையிட்டுப் போற்றும் முறையையும் அவ்வேதங்கள் உடையனவாகலின் - அருமறை முறையிட்டு - என்றார்.

"அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன், இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான், எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட்கு என்னுரைக்கேன், எவ்வுருவோ நின்னுருவம் ஏது" என்று காரைக்கால் அம்மையார் அருளியபடி மேலே சொல்லியவாறெல்லாம் போற்றும் மேலாம் அறிவாய் விளங்கும் அவ்வேதங்கள் உலகத்துக்குப் பிரமாணமா யுள்ளதாகலின், அவ்வுலகினர் தம்மைநோக்கி - உலகிற்கு முதற்கடவுளாயுள்ளான் - "எப்படியன் எந்நிறத்தன் எவ்வண்ணத்தன் அவனை எழுதிக்காட்டுங்கள்" என்று வினவுவாராயின் அவர்களுக்கு நாங்கள் அருள்காரணமாக வருகின்ற அவனை - "மைப்படிந்த கண்ணாளும் தானுங்கச்சிமயானத்தான் வார்சடையான்" என்று அவ்வளவில் சொல்ல வல்லோமேயன்றி "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டவொண்ணாது" அதனாலன்றோ நாங்கள் எழுதாக்கிளவி என்கின்ற ஓர்பெயரையும் பெற்றுடையோம். அங்ஙனம் இருப்பினும், நாங்கள் ஒருண்மை கண்டுள்ளோம். அது என்னையெனின். அவனருள்கிடைப்பின், "அவனருளே கண்ணாகக்கொண்டு காணப்பெற்றால் - அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்" காணக்கூடும். அவ்வருட்கண்ணை யிழந்து காணத் தொடங்கின் - அவன் "ஒப்புடையனல்லன் ஒருவனல்லன் ஓரூரனல்லன் ஓருவமனில்லி" என்று அருளைக்காட்டித் தான் காட்டுதற்கின்றி நின்றவிடலால்- அருமறை முறையிட்டு இன்னம் அறிவதற்கரியான் - என்றார்.

இங்ஙனங் கூறியபடி அறிவதற்கரியான் - ஆரூரரது திருக்கரத்தைப் பற்றிக் கொண்டு ஒருமுறை முறையோ என்றது - என்னையெனின்,—

ஆரூரர் கிழித்தவோலை - ஆட்சியாகிய வேதவோலை என்க. அஃதாவது - "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்தே, எரிவினாற் சொல்லும்" அவரையும், முத்திநெறி யறியாத மூர்க்கரையும் தமக்கு அடிமைகளேயாவர் என்னும் ஒருபெரிய முறையே ஆட்சிவகையினாற் கூறும் படியோலையாயுள்ளது-அவர் கிழித்தவோலை. அந்த ஓலையாகிய வேதநெறி தழைத்தோங்காதாயின் - மிகுசைவத்துறை விளங்காது ஒழியுமாகலினானும், அது விளங்காது போமாயின் பரம்பரையாகிய ஆன்மபரம்பரைகள் அந்தந்த நெறியில் நின்று பின் சைவ நெறியாகிய ஆவணத்தைக் கைக்கொண்டு அந்நெறி வழியில் பொலிவுபெற்று உய்யு நெறியை வந்து கூடாது பாழ்பட்டுப் போம் ஆகலினானும், அக்காரணந் தோன்ற - ஆரூரரது திருக்கரத்தைப் பற்றிக் கொண்டு நீ கிழித்த ஓலை - சர்வான்மாக்களையும் பொதுவகையான் எனக்கு அடிமைகளேயாவர் என்றபடிமுறையில் வைத்துக்கூறும் ஓர்பெரிய முறையல்லவோ, இதனை நீ கிழித்தனை;

*. ச-ம் திருமுறை சிவனெனுமோசை. செ-உ. † நின்ற திருத்தாண்டகம்-செ-க.

உனக்குள்ள ஆகமத்துறையையும் அழித்தவனாயினாய் பூதபரம்பரையையும் பொன்று வித்தவனாயினாய், என்னோடு வழக்காடும் வன்மைபெற்ற நீ இவ்வழக்கினை யறியாது இறியிட்டனையே இது முறையோ என்றாரென்க.

இறைவன் - முறையோ வென்று கூறிய அந்த வொருமுறையில் மேலே சொல்லிய முறையெல்லாம் அடங்கலின் - ஒருமுறை என்றார்.

இவ்வண்ணம் - இறைவன் கூறிய குறிப்புரைகளை நியாய வாயிலென்று அங்குள்ளார் ஒருசிறிதும் அறிவதற்கியலாத உலகினராகலான் அவர் கூறியதனை - வழக்கிடுதலாக எண்ணி ஆரூரரது திருக்கரத்தைப் பற்றிக்கொண்டிருந்த இறைவனது கையை வாங்கி விலக்கி நீர் - அவரவர்களுக்கும் திருவி(அழகி)னைச் செய்ய வல்ல வேத நெறியை யுணர்ந்தவர்தானே! அங்ஙனமிருக்க, நீர் - இப்போது அடிமை என்று இந்த ஆரூரரிடத்தில் ஓர் பெரிய வழக்குக் கொண்டு மன்றாடுகின்றீரே! இது இந்த உலகில் இல்லாத நெறியாகக் காணப்படுகின்றது. இந்த நெறியல்லாத நெறியை - "கொடிறும் (முதலையும்) பேதையும் கொண்டது விடாது" என்பதுபோல உறுதியாகக் கொண்டு பிணங்குகின்றீரே. இது என்ன முறை. அந்தணர்களுக்கு - ஏனை வருணத்தவர்கள் முறையாக அடிமைகளாக இருப்பதுண்டு, அந்தணர்களுள் சமானமாகவும், அம்முறையில் ஒற்றுமையாகவும் இருப்பவரே யன்றி ஒருவருக்கொருவர் - அடிமையாயிருத்தல் உலக வழக்கில் இல்லை. இது வுண்மை.

இச்செய்தி இங்ஙனமிருக்க. நீர் இங்கு ஊரில் வாழ்ந்திருப்பவராகக் காணப்படவில்லை. நீர் வாழ்வது இந்த ஊராயின் இவ் வழக்கிட மாட்டீர். நாங்களும் இதுகாறும் இந்த வழக்கையுங் கண்டதில்லை. ஆகையால், உம்முடைய வூர் எதுவோ அதனை உண்மையாகச் சொல்லும் என்று கேட்டனராகலான் - உழை நின்றார் விலக்கி யிந்த உலகில் இல்லா நெறி(யை நீர்) பெருமுறை(யாகக்) கொண்டு பிணங்குகின்ற திருமறை முனிவரே! நீர் எங்குளீர் செப்பும் என்றார்.

இத்திருப்பாட்டான் - வேதத்தை - அருமறை என்றது - இன்ன விசேடங்களான் என்றும், அம்மறை - முறையிட்டு இன்னம் அறிவதற்கு அரியான் என்றது - இன்னகாரணத்தால் என்றும், அவ்வரியவன் - ஆரூரரது திருக்கரத்தைப் பற்றிக்கொண்டு ஒருமுறை முறையோ என்று சொன்னது - இன்னமுறை என்றும், உழை (பக்கத்தில்) நின்றவர் அவரை விலக்கி அவரை வினவியது இவையாமென்றும் விதந்து கூறியவாறு மென்க.

அறியவேண்டியவராகிய ஆரூரரையே தம்மை அறியாவண்ணம் செய்தவராகிய இறைவரை, அறியும் இயல்பினை உடையவரல்லாத உலகினர் - எங்குளீர் செப்புமென்றது ஓரதிசயம் அன்றென்பது - குறிப்பெச்சம். (சஞ)

மறையவர் இவ்வெண்ணெய்நல்லூரே எம்மூரெனல்.

என்றலும் நின்ற ஐயர் "இங்குயான் இருப்புஞ்சேய்த்த
தன்றிந்த வெண்ணெய் நல்லூர் அதுநிற்க; அறத்தாறின்றி
வன்றிறல் செய்தென் கையில் ஆவணம் வலிய வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே நிரப்பினான் அடிமை" என்றான்.

(எ - து.) அங்கு விலக்கிய மறையவர்கள் எங்குளீர் என்று வினவலும், அதைக் கேளாநின்ற சிவபெருமானாகிய வேதியர் நீங்கள் இருக்கும் ஊராகிய இந்தத்திருவெண்ணெய்நல்லூரிற்றான் நானும் இருக்கின்றேன், இங்கு நான் இருக்குமிடமும் தூரமல்ல. அது நிற்க, இங்கு நிற்கின்ற இவ்வாரூரன் - தருமநெறிக்கு விரோதமாய் வலிய சவுரியஞ் செய்து என்கையிலிருந்த அடிமைச்சீட்டை வலியவாங்கிக் கிழித்தா னல்லவா,

நீர் பித்தனோவென்றும், நீர் எங்குளீர் என்றும், போம் என்றும் வாருமென்றும் இவன்யாவன் என்றும் சொல்வதாகிய இந்தச் சங்கேத வார்த்தைகளைக் கேட்க, சங்கக் குழை மறைந்திருக்கும் காதினையுடையனாய் வந்தனனாகலின் - குழைமறை காதினனோ என்றார். அவ்வாறு கூறியதனால் - காதில் குழையை மறைத்து வந்தவனல்ல, இங்கு பார்ப்பாரது கண்களுக்கு மறைந்திருக்கும்படி வந்தவன் என்றலுமாம்.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்ற வேதமொழிப்படி, ஆரூரர் - இறைவன் ஆட்டுவிக்கின்றபடியே ஆடுகின்றவராக இருக்கின்றனரேயன்றி, தமது போதவழியே ஆடும் செயலைக் கொண்டிருப்பவர் அல்லரென்பது தோன்ற - கோதில் ஆரூரர் - என்றார்.

கோது + இல்-தற்போதமாகிய குற்றமில்லாதவர்.

இம்மறையவர் பொன்னம்பலமாகிய மன்றத்தின்கண்ணே நிலையாகநின்று பிறவி வழக்கறுக்க அனவரத தாண்டவஞ்செய்யும் நடராஜனே யாவனென்று தம்மிடத்தில் ஆடும் வழக்கினால் உணர்ந்தார் - என்பதுதோன்ற - இவன் பழையமன்றாடிபோலும் என்றார்.

இவன் பழையமன்றாடி என உணர்ந்தார் - என்பது என்னையெனின்,—

மன்றத்தின்கண்ணே ... னமிடும் நடராஜவள்ளலை-உமாபதிசிவனார் "சேமவொளி எவரும் தேரும்வகை, மாமணிசூழ் மன்றுள் நிறைந்து பிறவிவழக்கறுக்க நின்ற திருந்த நிலைபோற்றி" என்றும், "குன்றாத பல்லுயிர் வெவ்வேறு படைத்தும் அவைகாத்தும் எல்லையிளைப்பொழிய விட்டிளைத்தும், தொல்லையுறும் - அந்தர் அடி நடுவென்று எண்ண அளவிறந்து, வந்தபெரிய வழிபோற்றி" என்றும் போற்றியுள்ளார்

அஃதாவது - மன்றாடியாகிய நடராசன்—உயிர்களை அடிமைகொள்வதற்கு குரு லிங்கசங்கமம் என்னும் மூவடிவங்களில் ஓர் வடிவங்கொண்டு அவர்கள்பால் வந்து, அவர் அடிமை ஆகும் அளவும் ஏதேனும் ஓர்வழக்கினைத்தொடுத்து மன்றுதலில் முனைந்து நிற்பதுபோல் இம்மறையவனாரும் நிற்றலால் என்க.

இங்ஙனங்கூறிய உண்மையை அறிதற்கு இப்பெரியபுராணமே சான்றாம்.

இனி, இவ்வழக்காளியார்பால். ஆரூரருக்கு - பண்பன்மிக்க விழைவுற மனமும் பொங்க - என்றது - என்னையெனின். மணப்பந்தரின்கண் "மொய்த்துவளர் பேர ழகு மூத்தவடிவேயோ, அத்தகைய மூப்பெனும் அதன் படிவமேயோ, மெய்த்தநெறி வைதிகம் விளைந்த முதலேயோ, இத்தகைய வேடமென ஐயமுற" வந்த அவ்வடிவத் தினால் ஆரூரரிடத்துத் திரோதானசத்திப் பிரவேசம் ஆகும்வண்ணம் செய்து தம்வச மாய் மயக்கி அச்சத்திசம்பந்தத்தால் சொல்லவேண்டிய சொல்லையும் செய்யவேண்டிய செயலையும் சொல்லவும் செய்யவுமாகச் செய்து அத்திரோதான சத்தியை அவ்வளவில் நிறுத்தி, பின்னர் அவ்வாரூரரைத் தம்பின்தொடர்ந்து வரச்செய்து அதன்பின் அருட் சத்தியைப் பிரவேசப்படுத்தி அவர் தமதுகையைப் பிடிக்கவுமான செயலைச்செய்வித்து அஃதாவது ஓலையைக் கிழிக்கச்செய்து, அச்செய்கையான் தமது அடிமை வழக்கை நிலைபெறுவித்து, பின் தமது இடத்தை அறிவிக்கவேண்டிய முறைப்படி தமது அருட் டுறையாகிய திருவெண்ணெய் நல்லூரை அறிவித்து, அறிவித்த அவ்வழியானே அவ ரது மனத்தை அன்பின் வசப்படுத்திக் காதலை மீதூரச் செய்யும்படிச் செய்தனன் என்க.

இனி, உன்பிழைநெறி வழக்கை யாங்கே பேசநீ போதாய் என்றார் என்றது என்னையெனின்;—

(இ - து.) வேதியனாகிய இறைவன் ஆரூரர் வழக்கைப்பேச ஆங்கே நீ போதாய் என்ற அவ்வார்த்தையைக்கேட்டு, ஆரூரனே! நீ திருவெண்ணெய் நல்லூரிலே சென்றாலும் எனக்கு நல்லதேயாகும், ஏனெனில், அங்குள்ள வேதியர்களோ, பரிசுத்தமாகிய நான்குவேதங்களையும் ஓதியுணர்ந்தவர்கள் ஆகலான் அவர்களுக்கு முன்னே உன்னுடைய பெரியோர்கள் முன்னாளில் எழுதிக்கொடுத்திருக்கும் மூலசாதனத்தைக் காட்டி எனக்கு நீ அடிமை என்பதைச் சாதித்து விடுவேன் என்று சொல்லி, தான்பிடித்திருக்கும் கண்டத்தை ஊன்றிக்கொண்டு ஆரூரருக்கு முன்னாகவிரைந்த நடையுடன் திருவெண்ணெய்நல்லூருக்கு எழுந்தருளினார் என்பதாம்.

சாதிப்பனென்று. கண்டந்தாங்கி (ஆரூரருக்கு) முன்னே முன்சென்றான் எனக் கூட்டுக.

ஆரூரர் திருவெண்ணெய் நல்லூருக்கு என் பிழை மறுவழக்கைப்பேச போதாய் என்றபோது, மறையவர் - இவன்போதாய் என்று துணிவாகச் சொல்வதனால், நாம் இவனை அடிமை என்று வழக்கிடும் வழக்கு - பிழைபட்டுப் போமென்றும், அடிமை யாகேன் என்று தான் இடும் வழக்கு பிழைபடாதென்றும் எண்ணிச் சொல்லுகின்றான் போலும். இவன் நம்முடைய ஊரின் பெயரை நன்றாயறிந்தானில்லை. தோய்ந்திருக்குந் தயிரில் வெண்ணெயைக் கடைந்தெடுப்பது போலும் புனிதநான்மறையோர் முன்னே நம்முடைய வழக்கினை எடுத்துச் சொல்லி இவனைக் கடைந்தெடுக்கப் போகின்றோம். எங்ஙனமெனில் மணப்பந்தரில் இவனிடத்தில் பாலில் நெய்போல் மறையவனாய் மறைந்து தோன்றினோம் இப்போது இங்கு - பால் - தயிராய்த் தோய்ந்தது போல இவன் நம்மிடத்து பண்பின்மிக்க விழைவுறு மனமும் பொங்க விருக்கின்றான். அதனால் நாமும் இந்த அருட்டுறையில் தயிரில் - வெண்ணெய் தோன்றுவது போல் குவளைக் கண்ணியாகிய மாதொருபாகன் விடைமேற் றோன்றி இவனையும் வெண்ணெய்போ லெடுத்து அடிமை கொள்ளப்போகின்றோம். அப்போது பித்தனென்று நம்மை அழைத்த இவன்—"நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னை பேயாய்த் திரிந்து எய்த்தேன். (இப்போது) பெறலாகா அருள் பெற்றேன், ஐயா உனக்கு ஆளாய் இனி யல்லேன் எனலாமே" என்று சொல்லப்போகின்றான் என்றதைத் திருவுளத் துட் கொண்டு ஆரூரனை நோக்கி, ஆரூரா என்னை நீ போதாயென்று சொல்வதனால் நான் தோல்வியடைவேன் என்றும் நீ வெற்றியடைவாயென்றும் எண்ணினையோ, அங்ஙனம் எண்ணற்க. நான்போகும் ஊர் நல்லூர் - அவ்வூரில் - என் வழக்கு வெண்ணெய்போல் நன்றாய்த் திரண்டு வெளிப்படப்போகின்றது. ஆகையினால் - நீ அங்கு போகினும் (வந்தாலும்) எனக்கு நல்லதே என்றார். (௪௯)

ஆரூரர் இறைவன் பின் செலல்.

செல்லுமக் கோன் மறையோன் தன்பின் திரிமுகக் காந்தம் சேர்ந்த
வல்லிரும் பணையுமா போல் வள்ளலும் கடிது சென்றார்
எல்லையில் சுற்றத் தாரும் இதுவென்னாம் என்று செல்ல
நல்லவந் தணர்கள் வாழும் வெண்ணெய்நல் லூரை நண்ணி.—

(இ - து.) அவ்வாறு செல்லுகின்ற வேதியருக்குப் பின்னே வேறுபடுத்துகின்ற முகமுடைய காந்தத்தைச் சமீபித்த வலிய இரும்பு அக்காந்தத்தைச் சேர்ந்தொன்றுதல் போல ஆரூரர் விரைந்து சென்றனர். அளவற்ற பந்து ஜனங்களும் இது எப்படியாகுமோ என்றுபின்றொடர்ந்து போக முன்சென்ற விருத்த வேதியர் நல்லபிராமணர்கள் வாழும் திருவெண்ணெய் நல்லூரை விரைவாகப் போய்ச்சேர்ந்து,— (௫௦)

இறைவன் முறைப்பாட்டைக் கூறல்.

வேதபா ரகரின் மிக்கார் விளங்குபேர் அவையமுன் னென்று
நாதனும் மறையோன் சொல்லும் "நாவலூர் ஆரூ ரன்தான்
காதலென் அடியான் என்னக் காட்டிய ஓலை கீறி
மூதறி வீர்!முன் போந்தான் இதுமற்றென் முறைப்பா'' டென்றான்.

(இ - ள்.) வேதமுணர்ந்தவர்களில் சிறந்த வேதியர்கள் விளங்குகின்ற பெரிய சபையின்முன்பாகப்போய் நாதனாகிய வேதியன் சொல்லுவான். "திருநாவலூரில் வாழும் இந்தஆரூரன் தன் ஆசைபொருந்திய என்னடிமை என்று யான் இவனுக்குக் காட்டிய முறியோலையைக் கிழித்து, பேரறிவினையுடைய பிராமணர்காள்! உங்களிடம் வந்தான் இதுதான் என்னுடைய முறைப்பாடென்று சொல்லினர்.

இவ்விரண்டுதிருப்பாட்டாலும் அசைவின்றிக் கிடக்கும் இரும்பானது காந்தத்தின்முன் தலைப்படின் தன்னியல்புதிரிந்து அசைதலுஞ்செயலை அடைந்து அக்காந்தத்தை விடாது அதனையே யணைதல்போல் மணப்பந்தரில் அசைவற்றிருந்த ஆரூரர் விருத்தவேதியர்முன் தலைப்பட அப்பந்தரைக் கலியாணத்துடன் விட்டு தம்மைச் சூழ்ந்த சுற்றத்தோடும் காந்தம்போன்ற வேதியர் போம் வழியே திருவெண்ணெய்நல்லூரில் சபையாகக் கூடியிருக்கும் முதியோர்களாகிய அந்தணர்கள்முன்னே நின்றனரென்றும் அப்போது வேதியர்பெருமான் அந்தணர்களைப் பார்த்து சபையோர்களே! என்னருகே நிற்கின்ற இவன் திருநாவலூரில் உள்ளவன். இவன் நம்பியாரூரன் என்னும் பேருடையான், எனக்கு அடிமையாயுள்ளவன் இவனொருவன்றான், இது வாய்ச்சொல்லன்று, ஓலையுளது. அந்த ஆளோலையை இவனுக்குக் காட்டினேன், இவன் எனக்கு அடியான் என்பதை மறந்து என்னைப் "பித்தா பேயா" என்றும், நானே "உனக்கு அடிமை யாவேன்" என்றும் அந்த ஓலையைக்கிழித்தெறிந்து. கல்வியொழுக்கம் உடையவன் போல் உங்கள் முன்னே வந்து இப்போது நிற்கின்றான் இதுதான் நான் முறையிடும் முறைப்பாடென்றனைத்தன ரென்றும் கூறப்பட்டன. (௩௧)

அந்தணர் அவையின் மிக்கார் "மறையவர் அடிமை யாதல்
இந்தமா நிலத்தில் இல்லை; என்சொன்னாய் ஐயா'' என்ன
"வந்தவா றிசைவே அன்றோ வழக்குநான் கிழிந்த ஓலை
தந்தைதன் தந்தை நேர்ந்த'' தென்றனன் தனியாய் நின்றான்.

(இ - ள்.) அச்சபையில் கல்விகேள்விகளிற் சிறந்த முதியோராகிய பிராமணர்கள். அந்தணர்அடிமையாதல் இப்பெரியவுலகில் வழக்கமில்லை அங்ஙனமிருக்க. ஐயா நீர் என்னபொருந்தாத வழக்கைச் சொன்னீர் என்றார்கள். தனித்து நின்றவனாகிய இறைவன். யான் கொண்டுவந்த வழக்கு பொருத்தமுடையதல்லவோ! இவன் கிழித்த ஓலை இவன் பாட்டன் எழுதிக்கொடுத்தது என்றனர் என்பதாம்.

ஐயா என்சொன்னாய் என்றார், தனியாய் நின்றான் வந்தவாறிசைவே யன்றோ எனக் கூட்டிப்பொருள் கொள்க.

இத்திருப்பாட்டால் வேதியர் முறையிட்டதைக்கேட்ட முதியோர் வேதியனைப் பார்த்து ஐயரே! உம்மைப்போலும் முதியோரைக் கண்டதுமில்லை உமது வழக்கைப் போலும் கேட்டதுமில்லை யென்றார்கள் என்றும். அதுபோலவே வழக்காளியாகிய வேதியரும் இம்மாநிலத்தில் இல்லையென்பதை நீங்கள் சொல்லக் கேட்டேனேயன்றி இது வழங்கி வாராத தன்று இந்நாவலூரானும் நீங்கள் சொல்லியதுபோலவே சொன்னான். உருவத்தில் நீங்கள் முதியோர், அவன் இளையோனே யன்றிச் சொல்லில் இருவரும் ஒன்றே. நீங்கள் கேட்டறியாத வழக்கை நான் எழுத்து முன்னிலையாகக் காட்

டுவேனாயின் அது உங்கட்கு உடன்பாடுதா னன்றே அவ்வெழுத்தைக் காட்டுகின்றேன். இந்நாவலூரனுக்கும் அந்த எழுத்தைக் காட்டினேன் அவ்வெழுத்தைக் கிழித்து விட்டான், மற்றொருவோலை என்னிடத்தில் இருக்கின்றது. அது இவன்தந்தைக்குத் தந்தை எழுதிக்கொடுத்த மூலவோலை. அந்தவோலையை இந்த ஆரூரன் முன்போல் தீங்கு செய்யவொட்டாமல் என்று சொல்வீர்களானால் காட்டுகின்றேன் என்றருளினனென்றும் கூறியவாறாம். (௫௨)

சபையார் - ஆரூரர் எண்ணத்தைவினாவுதல்.

இசைவினால் எழுதும் ஓலை காட்டினான் ஆகில் இன்று
விசையினால் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றியாமோ?
தசையெலாம் ஒடுங்க மூத்தான் வழக்கினைச் சாரச் சொன்னான்
அசைவில் ஆரூரர் எண்ணம் என்" என்றார் அவையின் மிக்கார்.

(எ - து.) அதுகேட்ட அந்தணர்கள் உலகில் வழக்கமில்லா தொழிலினும் மனம் உடன்பட்டு ஒருவர் எழுதிக்கொடுத்தால் அதனை அல்லவென்று மறுப்பது நீதியாகுமா. அங்ஙனமிருக்க, இந்த நாவலூராருக்கு ஓலைகாட்டினேனென்று இவர் சொல்லுகிறபடி இன்றுகாட்டியிருப்பாராயின் அதனைக் கோபாவேசத்தோடுங் கிழித்தெறிதல் வெற்றியாகுமா? இவ்வேதியர் தசையெல்லாம் ஒடுங்கப்பெற்ற முதியோராயினும் சொல்லவேண்டிய வழக்கில் சோர்வுற்று மறந்து சொன்னாரில்லை. ஒன்றேனும் விடாமலும் மறுப்பதற்கிடமில்லாமலும் பொருந்தக் கூறினார். அசைந்தாடும் சரீரத்தை யுடைய இவ்வேதியர்போலன்றி அசைவில்லாத சரீரத்தையும் இவர் சொல்லுக்கு அஞ்சாது நிற்கும் காளையராகிய இவ்வாரூரரது எண்ணம் எவ்வண்ணமோ அதனை யறியவேண்டுமன்றோ என்று நாவலாரூரரே! உமது எண்ணம் என்னவென்றார்கள் என்பதாம். (௫௩)

ஆரூரர் என்சொல்வேனெனல்.

"அனைத்துநூல் உணர்ந்தீர் ஆதிசைவனென் றறிவீர் என்னைத்
தனக்குவே றடிமை என்றிவ் அந்தணன் சாதித்தானேல்
மனத்தினால் உணர்தற் கெட்டா மாயை;என் சொல்லுகேன்யான்
எனக்கிது தெளிய ஒண்ணா"தென்றனன் எண்ண மிக்கான்.

(எ - து.) நாவலாரூரர் தம்மைவினாவிய அவ்வேதியர்களைப் பார்த்து சுருதி ஸ்மிருதி புராணமுதலிய எல்லாநூல்களையும் அறிந்த நீவிர் அறியாத கருமம் ஒன்றுமில்லை ஆகலின் என்னை ஆதிசைவனென்று நீங்கள் நன்றாயறிவீர்கள் என்னை இவ்வந்தணர் சாமானியமாயுள்ள புறத்தடிமையாகச் சொல்லுவதுபோல் ஓர் மரியாதையுமின்றி இந்நாவலூரன் என்னடியான் என்று சொல்லுவதுமல்லாமல் அதனைச் சாதிக்கின்றார்; இவர்இப்படிச் சாதிப்பாரேயானால் நான் என்செய்யக் கடவேன். எனது குலத்தவர்கள் இப்படியும் எழுதிக் கொடுப்பரா! இதுமனத்தினால் நினைத்தற்கும் எட்டாத மாயையாயிருக்கின்றது. இந்த மாயையை என்னென்று சொல்லுகேன். இந்த வல்வழக்கினுடைய உண்மையை யான் தெளிந்து சொல்லமுடியாது என்று எல்லாவற்றையும் எண்ணித்தெளிந்து சொல்லவல்ல எண்ணத்திலே மிக்கோராகிய நம்பியாரூரர் கூறினார் என்பதாம். (௫௪)

சபையார் - அடிமையென்றதை உறுதிப்படுத்துமெனல்.

அவ்வுரை அவையின் முன்பு நம்பியா ரூரர் சொல்லச்
செவ்விய மறையோர் நின்ற திருமறை முனியை நோக்கி
இவ்வுல கின்கண் நீஇன் றிவ்வை உன் அடிமை என்ற
வெவ்வுரை எம்முன் போற்ற வேண்டுமென் றுரைத்து மீண்டும்,—

(எ - து.) மேற்கூறிய வார்த்தைகளை நம்பியாரூரர் சபையார்களாகிய அந்தணர்களுக்கு முன்னின்று கூற நல்லறிவும் நல்லிரக்கமுமுடைய சபையோர்கள் வழக்காடுவதற்கு முற்பட்டு நிற்கின்ற முனிவரைப் பார்த்து முனிவரே! இவ்வுலகின்கண் இந்நாவலூரரை உமதடிமை என்று சாதிக்கின்றீரே அக்கொடிய சொல்லை எங்கள் சபைமுன் நீர் நிலை நாட்டவேண்டும், என்ன சொல்லுகின்றீர் என்றுகேட்க மறுபடியும்,—

"ஆட்சியில் ஆவணத்தில் அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியின் மூன்றில் ஒன்று காட்டுவாய்" என்ன "முன்னே
மூட்சியில் கிழித்த ஓலை படியோலை மூலவோலை
மாட்சியில் காட்ட வைத்தேன்" என்றனன் மாயை வல்லான்

(எ - து.) ஐயரே! உலகின்கண் ஒன்றை வழக்கிட்டுச்சாதிக்கவேண்டுமானால் ஆட்சி காட்சி, ஆவணம் என மூன்றுண்டு. ஆட்சியாவது - தொன்றுதொட்டுப் பெரியோரால் ஆண்டுவருவது. காட்சியாவது - இதை நாங்கள் கண்டதுண்டு இது பொய்யல்லவென்று உண்மையாகக் கண்டவர்கள் சொல்லுவது. ஆவணமாவது - எழுத்து மூலமாய் ஓலையில எழுதிவைப்பது. இம்மூன்று வகையில் ஒன்று நீர் காட்டுவீரா! என்றனர். வேதியர் - அந்தணர்காள்! நான் முன்னே இந்த நம்பியாரூரனுக்கு நீங்கள் அறிய மூன்றனுள் ஒன்றாகிய ஆவணங் காட்டினேனென்றதை மறந்தீர்களோ அல்லது பொய்யென்று எண்ணினீர்களோ அது எப்படியானாலும் ஆகுக. நான் முன்னே இவன் கோபமூண்டு கிழித்தானென்று சொல்லியவோலை மூலவோலையைப்பார்த்து எழுதிய படியோலை. இப்போதிருப்பதென்று சொன்னவோலை மூலவோலை. அவ்வோலை சபையார்களாகிய உங்களுக்குப் பெருமையோடு காட்ட வைத்திருக்கின்றேன். காணவேண்டுமானால் காட்டவும் வல்லேன் என்று மாயாசத்தியை எண்ணியவாறெல்லாம் ஆளவல்ல வல்லாளன் கூறினன் என்பதாம். (ருசு)

ஆவணங்காட்டல்

"வல்லையேல் காட்டிங் கென்ன மறையவன் அவைமுன் செய்யாமல்
சொல்லநீ வல்லை யாகில் காட்டுவேன்" என்று சொல்லச்
செல்வநான் மறையோர் "நாங்கள் தீங்குறா வொட்டோம்" என்றார்
அல்லல்தீர்த் தாளநின்றார் ஆவணங் கொண்டு சென்றார்.

(எ - து.) வேதியரே! எங்கள் முன்னர் நீர் ஆவணங்காட்ட வல்லீராயின் இப்பொழுதே காட்டும் என்று சொன்னார்கள். சொல்லவும், ஆவணத்தைக் கொள்ளைகொடுத்த வேதியர் இந்த நம்பியாரூரன் முன்போல் பற்றியிழுத்துக் கிழித்து என் சொல்லைப் பொய்யாக்கியதுபோல் இப்பொழுது செய்யக்கூடாதென்று அவனுக்குச் சொல்ல வல்லீராயின் நான் அந்த ஆவணத்தைக் காட்டுவதற்கு ஒரு தடையும் இல்லை என்றார். சொல்வதில் மிக்காராகிய அவ்வந்தணர்கள் ஐயா வேதியரே! நாங்கள் அவ்வாறான தீங்கு நிகழும்படிச் செய்யமாட்டோம் என்றார்கள். உடனே ஆரூரர் அப்போது உள்ளத்துள்ளே அடைந்திருக்கும் அல்லலைத் தீர்த்து ஆள நின்றவராகிய இறைவனார் மூலவோலையை எடுத்துக்கொண்டு சபையாருக் கருகே சென்றார் என்பதாம். (ருஎ)

ஆவணம் வாசித்தல்.

இருள்மறை மிடற்றோன் கையில் ஓலைகண் டவையோர் ஏவ
அருள்பெறு கரணத் தானும் ஆவணம் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி விரித்தனன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ப வாசகம் செய்யு கின்றான்.

(இ - ள்.) கரியவிடத்தைக் கண்டத்தில் மறைத்தவன்கையில் ஓலையைமறைத்துக் கொண்டு வருவதைச் சபையோர்கள் கண்டு அங்குள்ள ஓர் கர்ணீகனைப்பார்த்து நீ அப் பெரியோர் கொடுக்கும் ஓலையைவாங்கி நன்றாக யாவருங்கேட்கும்படி வாசிப்பாயாக என்றார். அவ்வோலையை வாங்கி வாசிக்கத்தகும் அருள்பெற்றுடைய அவனும் அப் பெரியோரைத் தொழுது மிக்க வணக்கத்துடன் அத்திருவோலையை வாங்கி சுருளை நீக்கி விரித்து அவ்வோலை அவரைப்போல் பழமையாயிருத்தலைக்கண்டு சபையோரைப் பார்த்து ஐயன்மீர்! இவ்வோலை இப்பொழுது புதிதாய் எழுதிக்கொண்டு வந்ததாகக் காணப்படவில்லை. மிகவும் பழமையானதுதான் என்றுசொல்லி மிகவுந் தெளிந்த மனத்தையுடைய சபையோர்கள் கேட்கப் பெரியவோசைகொண்டு வாசிக்கத் தொடங் கினான் என்பதாம். (ருஅ)

ஆவணத்தின் முறைப்பாடு.

"அருமறை நாவல் ஆதி சைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானும் என்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவை என் எழுத்து."

(இ - ள்.) "அரிய வேதங்களை யுணர்ந்த, ஆதிசைவப் பிராமணனாகிய ஆரூரனென் னும் யான் எழுதிக்கொடுத்த உடன்படிக்கை என்னையெனின், பெரிய முனிசிரேஷ்ட ராகிய திருவெண்ணெய் நல்லூரில் வசிக்கும் பித்தன் என்னும் பிராமணருக்கு யானும் என்னுடைய மரபில் வருகின்ற யாவரும் வழிவழியாய் அடிமை செய்வதற்கு என்மனமும், சொல்லும், ஒற்றுமைப்பட்டு இவ்வடிமைப் பத்திரத்தை எழுதிக்கொடுத் தேன். இதற்காக இவை என்னுடைய கையெழுத்து என்று வரைந்துள்ள அவ்வோ லையை வாசித்தனன் என்பதாம்.

நல், வழக்காளியாகிய வேதியர் கொடுத்த மூல ஓலையில் எழுதியிருந்த உண் மை எழுத்தை மாறுபாடில்லாமல் சபையாரெல்லாங் கேட்கக்கருணீகன் வாசித்துச் சொன்னானென்று கூறப்பட்டது. (ருகூ)

ஆவணத்தை ஒப்புப பார்க்கச் சோலல்.

வாசகம் கேட்ட பின்னர் மற்றுமேல் எழுத்திட் டார்கள்
ஆசிலா எழுத்தை நோக்கி அவை ஒக்கும் என்ற பின்னர்
மாசிலா மறையோர் "ஐயா மற்றுங்கள் பேரனார்தம்
தேசுடை எழுத்தே யாகில் தெளியப்பார்த் தறிமின்" என்றார்.

(இ - ள்.) கருணீகன் அந்த வோலையிலுள்ள வாசகத்தைவாசிக்க அதனைக்கேட்ட அந்தணர் அதில் சாக்ஷிகள் உண்டோ என்றனர். கருணீகன் ஐயன்மீர்! சாக்ஷிகளு மிருக்கின்றன என்று அவர்கள் நாமங்களையுஞ் சொல்லிக்காட்டினான். சபையோர்கள் அப்பெயருடையாரைக் கூப்பிட்டு, ஐயா! இது உங்களுடைய கையெழுத்துத்தானா நன்றாய்ப்பார்த்துச் சொல்லுங்கள் என்றார்கள். அந்தக் கையொப்பக்காரர்கள் தங்கள் கையெழுத்தைப்பார்த்து வேறென்றுஞ் சொல்லுவதற்குக் கூடாமல் இது எங்கள் கையெழுத்துத்தான் இதில் ஐயமில்லை என்றார்கள். கையொப்பக்காரரெல்லாம் ஒப் புக்கொண்டபின்னர் நடுவுநிலைமையினின்றுந் தவறாதவர்களாகிய அந்தணர்கள் சிறி துஞ் சந்தேகமில்லாதவர்களாய் நாவலூரரைப்பார்த்து நம்பியாரூரரே! இப்பொழுது வாசித்த வாசகத்தைக் கேட்டீரா? கையெழுத்தும் பார்த்தீரா? இது உமது பேர் கொண்ட பாட்டனருடைய கையெழுத்தாகவே காணப்படுகின்றதா? வேறொருவ

ருடைய கையெழுத்தாகக் காணப்படுகின்றதா? அது உம்முடைய பாட்டனாரது உண்மையான கையெழுத்தாக இருக்குமானால் மனத்திற்குச் சந்தேகமில்லாமல் நன்றாயும் தெளிவாயும் பார்த்தறிவீராக என்றார்கள் என்பதாம். (கூ0)

அந்தணர் கூற "இன்னும் ஆளோலை இவனோ காண்பான்
தந்தைதன் தந்தை தான்வே றெழுதுகைச் சாத்துண் டாகில்
இந்தஆ வணத்தி னோடும் எழுத்துநீர் ஒப்பு நோக்கி
வந்தது மொழிமின்" என்றான் வலியஆட் கொள்ளும் வள்ளல்.

(எ - து.) சபையிலுள்ள முதியோராகிய வேதியர்கள் ஆரூரரை நோக்கி "தெளியப்பார்த்து அறிதிர்" என்று சொல்லியபொழுது வலிய ஆட்கொளவந்த வள்ளலாகிய விருத்தர் "சபையோர்களே! சாட்சியோடு கூடிய ஓலையைக் கருணீகனைக்கொண்டு வாசிக்கச் சொன்னதும் அதனை நீங்களெல்லாங் கேட்டதும் போதாதோ இன்னமும் இவன் பார்த்து அறிந்து சொல்லவேண்டுமோ. ஆஹா! இது நன்று! நன்று!! இவன் சிறுவனன்றோ! இவனுக்கு அவ்வளவு அநுபவம் உண்டா! ஆகலான் இவன் கண்டறிய வல்லனல்லன். இதுவன்றி நீங்களே இவனது பாட்டன் வேறே எழுதியிருக்கும் கைச்சாத்துக ளிருக்குமானால் அவைகளைக் கொண்டுவரச்செய்து அதிலும் யான்கொடுத்த ஓலையிலும் எழுத்தை ஒத்துப்பார்த்து, பின் எது உங்கள் மனதில் உதிக்கின்றதோ அதனை மறைக்காமல் சொல்லுங்கள்" என்றார் என்பதாம்.

அந்தணர்கூற, வலிய ஆட்கொள்ளும் வள்ளல், இன்னும் ஆளோலை இவனோகாண்பான் எழுத்து நீர் ஒப்புநோக்கி வந்தது மொழிமின் என்றான் எனக்கூட்டிப் பொருள் கொள்க. (கூக)

திரண்டமா மறையோர் தாமும் திருநாவ லூரர் கோமுன்
மருண்டது தெளிய மற்ற மறையவன் எழுத்தால் ஓலை
அரண்தரு காப்பில் வேறொன் றழைத்துடன் ஒப்பு நோக்கி
"இரண்டும் ஒத்திருந்த தென்னே இனிச்செயல் இல்லை" என்றார்.

(எ - து.)வலிய ஆட்கொள்ளும் வள்ளல், "ஆரூரன் சொல்லவேண்டியதில்லை. அந்தணர்களே! நீங்களே இன்னும் ஒத்துப்பார்த்துச் சொல்லுங்கள் என்று சொல்ல, அச்சபையில் கூடியிருந்த பெருமை பொருந்திய பிராமணர்களும் நாவலூரர் முன்பு கொண்டிருந்த மருட்சியானது தெளியும்படி, இவர் பாட்டனார் கையெழுத்தாயுள்ள வேறோர் ஆளோலை ஏதேனும் அவர் வீட்டில் காவலான இடத்தில் வைத்திருப்பாரல்லவா! அக்கைச்சாத்தினை வரவழைத்துப் பார்ப்போமென்று வரவழைத்துப்பார்க்க இரண்டும் ஒத்திருந்தது. ஒத்திருக்கவே இது என்ன ஆச்சரியம். இனி நம் செயல் ஒன்றுமில்லை" என்றார்கள் என்பதாம்.

நாமும் நம்பியாரூரரும் சொன்னது பொய்ப்பட்டுப் போயிற்றேயன்றி மெய்ப்படவில்லை. வழக்கிட வந்த வேதியர் சொல் ஒன்றேனும் பொய்ப்படவில்லை. ஆகவே, இவ்விருத்த வேதியர் செயல் சிவன் செயலாகவே காணப்படுகின்றது. இனி நாமாவது நாவலாரூரராவது யோசித்து ஆவது என்! பயனில்லை. இந்நாவலூரர் வந்த விதி அவ்வாறிருந்தது என்றார்கள் என்க. (கூஉ)

சபையோர் தீர்மானங் கூறல்.

"நான்மறை முனிவ னார்க்கு நம்பியா ரூரர்! தோற்றீர்!
பான்மையின் ஏவல் செய்தல் கடன்" என்று பண்பின்மிக்க
மேன்மையோர் விளம்ப நம்பி விதிமுறை இதுவே யாகில்
யானிதற் கிசையேன் என்றல் இசையுமோ? என்று நின்றார்

(இ - ள்.) "சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால், கோடாமை சான்றோர்க்கணி" என்ற அவ்வணியில் மிக்கோராகி விளங்கும் அந்தணர்களாகிய சான்றோர்கள் ஆரூரரைநோக்கி நம்பியாரூரரே! நீர் - நான்குவேதங்களையுணர்ந்த இம்முனிவர் இன்று இட்டவழக்கில் தோற்றுவிட்டீர். ஆகையினால் இவ்விருத்தவேதியர் திருவுள்ளத்திற்கு மாறுபடாது இசைந்து அவரால் ஏவப்படும் ஏவலைச்செய்வதே உமது கடனுமென்றுசொல்ல. அம்மொழிகேட்ட ஆரூரர் எனக்கு அன்று விதித்தவிதி இப்படியிருக்குமானால் யான் இப்போது இதற்குச் சம்மதிக்கமாட்டேனென்று சொல்வது பொருந்துமோ என்று கூறிநின்றார் என்பதாம்.

• பண்பின் மிக்க மேன்மையோர் (ஆரூரரைநோக்கி) நம்பியாரூரரே! நான்மறை முனிவனுக்கு - தோற்றீர். பான்மையில் ஏவல்செய்தல் கடனென்று விளம்ப, நம்பி விதிமுறை இதுவேயாகில் யான் இதற்கிசையேன் என்றல் இசையுமோ என்று நின்றார் என்று கொண்டு கூட்டிப்பொருள் கொள்க.

தடுத்தாட்கொள்ளும் வழக்கினை மேற்கொண்டுவந்த விருத்தவேதியன் நாவலூரருடன் திருவெண்ணெய்நல்லூரில் அந்தணர் மஹாசபையில் தம்முறைப்பாடெல்லாம் கூற, அவ்வந்தணர்கள்கேட்டு இது உலகில் இல்லாத வல்வழக்கென்று அதிசயித்துப்பின், வழக்கென்று யாவர்வரினும் அவனைச்சமன்செய்து சீர்தூக்குங்கோல்போல் சீர்தூக்கிச் சொல்லவேண்டியது நமது கடனாகலான் இவ்வழக்கினை இருவர் மாட்டும் சீர்தூக்கிப்பின் அதில் முடியும் முடிவினைப் பொதுவாய்நின்று சொல்லுவோமென்று துணிந்தவர்களாய், விருத்தவேதியரையும், நாவலூரரையும், அதன்பின் ஆவணங்களையும், ஆவணத்திலுள்ள சாக்ஷிகளையும் கேட்கவேண்டிய முறைப்படியேகேட்டும், பார்க்கவேண்டிய முறைப்படியேபார்த்தும் வழக்கின் உண்மையைத் தமது உள்ளத்தே நன்றாய்த் தெளிந்தவர்களாய்த் தாம் தெளிந்த அம்முடிவினைச் சபையிலுள்ளாரும் ஆரூரரும் அறியச்சொல்லி உம்முடைய வழக்கும் சொல்லும் பொய்ம்மையையும், வேதியருடைய வழக்கும் சொல்லும் மெய்ம்மையையும் அடைந்துவிட்டன. இக்காரணத்தால் நீர் தோற்க வேதியர் வெற்றியுடையவராயினர். இவ்வேதியர் உமது கலியாணத்தையும் வழக்கினையும் தடுத்து உம்மைத் தமக்கே ஆளாக்கிக்கொண்டார். இனி நாங்களும் நீரும் யோசிக்கவேண்டியதும்; பேசவேண்டியதும் ஒன்றுமில்லை. ஆகலான், அவருக்கே அடிமையாய் அவர் அருளுக்கு உரிமையுடையவராக வாழ்வீர். அவர் உமக்கு என்ன அடிமைசெய்ய விதிப்பாரோ. அதை நாங்கள் அறியோம் என்று சொல்ல, ஆரூரர் - இந்த ஏழை அந்தணனுக்கு அடிமையாளாக, ஆகும் இவ்விதியும் இருந்ததே இனி இவ்விதிக்கு இசைந்து செல்லவேண்டியதேயன்றி இசையேனென்று சொல்லி இருக்கமுடியுமோ என்று நின்றனர் என்று கூறியவாறும். (கூ௩)

சபையோர வேதியரை விடுவினுதல்.

திருமிகு மறையோர் நின்ற செழுமறை முனியை நோக்கி
"அருமுனி! நீமுன் காட்டும் ஆவண மதனில் எங்கள்
பெருமைசேர் பதியே ஆகப் பேசிய துமக்கிவ் வூரில்
வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டு" கென்றார்.

(இ - ள்.) நாவின் நலத்தைக்காக்கும் திருவில் மிக்க சபையார் இப்பால் ஆரூரரை யாட்கொளவந்து நிற்கின்ற வேதியரைப்பார்த்து நூன்முறைப்படி வழக்காடுவதில் அரியராகிய முனிவரே! நீர் முன்னர்காட்டிய ஆளோலையில் பெருமையில் மிக்க எங்கள் பதியாகிய இந்த வெண்ணெய் நல்லூரே உம்முடைய ஊராக எழுதியிருந்தது. நீரும் சொன்னீர். உமக்கு இந்தவூரில் பரம்பரையா யிருக்கின்ற வீடும் இல்வாழ்க்கைக் குரியாளும் இருந்திருக்கவேண்டுமே நாங்கள் இதுகாறும் கண்டறியோம். வீடெங்கே வாழ்க்கைக் குரியாளெங்கே காட்டுமென்றனர் என்பதாம். (கூச)

வேதியர் வீட்டுக்கு அழைத்துப்போதல்.

பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவர் என்னை
ஒருவரும் அறியீ ராகில் போதும்என் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்கு ழாமும் நம்பியும் பின்பு செல்லத்
திருவருள் துறையே புக்கார்; கண்டிலர் திகைத்து நின்றார்.

(எ - து.) உலகவழக்கின்கண் என்றும் வாராத வழக்கினை என்றும் உள்ள வழக்காகச் சாதனங்காட்டி வழக்கினால் வென்ற புண்ணியமூர்த்தியாகிய முனிவர் அந்தணர்காள்! நீங்கள் ஒருவரேனும் என்னையறியீரோ! நீங்கள் தானா இந்தவெண்ணெய் நல்லூரில் வாழ்கின்றவர். தயிரில் வெண்ணெய் எடுப்பது போலும் இந்த நல்லூரில் என்னைச் சுலபமாய்க் கண்டெடுக்கலாமே, அந்த வுண்மைதோன்றவன்றோ அப்பெயர் பெற்றுளது. இதுகண்கூடாக இருத்தலை யறிவதற்கின்றி என்னை வீடெங்கேயென்று கேட்கிறீர்களே வீட்டை விசாரித்துணராமல் நீங்கள் கற்றகல்வியில் எதனை விசாரித்துணர்ந்தீர்கள். அந்தோ! இவ்வளவு கற்கவந்தும் என்வீட்டை யறியும் முயற்சி யில்லாதிருந்தீரே என்று சிலேடைப்பொருளாகப்பேசி நீங்கள் அறியீராயின் என்பின்னே வாருங்களென்று சொல்லி தம்மைச் சூழ்ந்திருக்கும் அந்தணர் கூட்டமும், நம்பியாரூரரும் பின்னேவர வீடுகாட்டுவோராகிய அருளுடையார் அருட்டுறையாகிய ஆலயத்துள்ளே புகுந்தருளினர். ஒருவரேனும் வேதியரைக் கண்டாரில்லை. இல்லையாகவே அவர் எங்குற்றார்! எங்கேகினார். அவர் மனை இதுதானோ? இதுகோயிலாயிற்றே என்று அக்கோயிலின்கண்ணே திகைத்து நின்றனர் என்பதாம். (௬௫)

இறைவன் காட்சிக்கொடுத்தல்.

எம்பிரான் கோயில் நண்ண இலங்குநூல் மார்பன் எங்கள்
நம்பர்தம் கோயில் புக்க தெங்கொலோ? என்று நம்பி
தம்பெரு விருப்பி னோடு தனித்தொடர்ந் தழைப்ப மாதோ
டும்பரின் விடைமேல் தோன்றி அவர்தமக் குணர்த்த லுற்றார்.

(எ - து.) நம்பியாரூரர் அங்ஙனம் நில்லாது என்னை யடிமையாளாய் ஆட்கொள்ள அந்தணர்கள் முன்னே முப்புரிநூல் விளங்க வந்த ஐயர் நமது சிவபெருமான் கோயிலுக்குள்ளே புகுந்தது என்னகாரணம், இதுவோ அவ்வையர்வீடு, என்று தம்மையறியாதெழும் பெரிய விருப்பத்தோடு சுற்றத்தார் முதலிய யாவரையும் விட்டுத் தனியே உள்ளேசென்று என்னை யடிமைகொள்ளவந்த பெருந்தகையே! கருணைவெள்ளமே! என்னன்பின்பெருக்கே! என்னைவிட்டு எங்கொளித்தாய்! என்தெய்வமே! வெளிவருவாய்! நீ என்னையாட்கொள்ளவந்த பெருங்கருணையை எண்ணாது உன்னையிழந்தேனே! வருவாய்! உன்னருளுருவை நான் இனிக்காணப்பெறுவேனோ! வருவாய் என்றழுதழுது சுற்றுமுற்றும் பார்த்து எங்குங் காணதொழியவே ஆகாய வெளியைப் பார்த்து என்னை யடிமைகொள்ளவந்த ஐயரே! ஐயரே! என்றழைத்தனர் அழைக்கவும், மேலேபார்க்கும் நாவலர்பெருமானது கண்களுக்குப் புலப்படுமாறு இறைவனார் உமாதேவியாரோடு விடைமேற்றோன்றி தம்மேல் ஆசைகொண்டு விடாதழைக்கும் நாவலூர் பெருமானுக்கு உண்மையுணர்த்தத் தொடங்கினார் என்பதாம். (௬௬)

தாம்வந்த காரணம் அருளல்.

"முன்புநீ நமக்குத் தொண்டன்; முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது;
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்துவந்து
நன்புல மறையோர்முன்னர் நாம்தடுத் தாண்டோம்" என்றார்

(எ - து.) உமாதேவியோடும் விடைமேல் அழகனாய் வந்த இறைவன்-நாவலரைநோக்கி ஏ அன்ப! முன்பு திருக்கயிலாயத்தின்கண் நீ நமக்குத்தொண்டனாயுள்ளவன், அங்கு நமது அருளால் தேவியாரது இருமாதர் உன்னைப்பார்க்கவும் நீ அவர்களைப்பார்க்கவும் இருவருக்கும்காதல் அதிகரித்தலால் நாம்அதனையுணர்ந்து உன்னை மண்ணுலகில் வரும்படியாகக் கட்டளையிட்டோம். நீ அப்போது இவ்வுலகவாழ்க்கைக்கு அஞ்சி ஐயனே! துன்புறும் வாழ்க்கைக்கு நான் ஆளாகாவண்ணம் என்னைத் தடுத்தாண்டருள் செய்யென்று வேண்டினாய். நாம் அவ்வண்ணமே ஆகுகவென்றோம். அவ்வுடன்பாட்டை எம்மிடம்பெற்று எமது கட்டளைப்படி இம்மண்ணின்மீது வந்துதோன்றினை. தோன்றிய நீ துன்பம் வந்து தாக்கும் வாழ்க்கைக்கு ஆளாவதற்கான மணக்கோலத்தை உன்றன்னைக் கொள்ளச் செய்தனன். அப்போது நாம் கயிலையில் சொல்லியபடி அத்துன்பவாழ்க்கை உன்னைத் தொடராதபடி அம்மணத்தைத் தடுத்து உன்னையடிமையாளாய் ஆட்கொள்ள விருத்த வேதிய வடிவங்கொண்டு வந்து ஆளாகேனென்று வழக்காடிய உன்னை ஆளாகவேண்டுமென்று தொடர்ந்து மன்றாடி இத்திருவெண்ணெய் நல்லூரின்கண் அந்தணர் முன்னேவந்து நீ அடிமை என்பதை நிலைநாட்டி ஆளாகேன் என்பதைத் தடுத்து ஆண்டோம் என்று ஆகாயவாக்கால் உண்மையைக் கூறியருளினார் என்பதாம். (கூ௯)

ஆரூரர் ஆனந்த மேற்கோளல்.

என்றெழும் ஓசை கேளா ஈன்றஆன் கனைப்புக் கேட்ட
கன்றுபோல் கதறி நம்பி கரசர ணாதி யங்கம்
துன்றிய புளகம் ஆகத் தொழுதகை தலைமேல் ஆக
"மன்றுளீர்! செயலோ வந்து வலியஆட் கொண்ட" தென்றார்.

(எ - து.) நம்பியாரூரர், சிற்சுகோதயவிலாசனாய்த்தோன்றி ஆகாயவாக்காற் கூறியதைக்கேட்டு, தாய்ப்பசுவினது குரலைக்கேட்ட கன்றைப்போல் கதறி பாதாதிகேச பரியந்தமான அங்கம் புளகமாகவும், தொழுதகை தலைமேலாகவும், நான் பழையபடி என்றபடி என்னை வலியவந்து ஆட்கொண்டது மன்றத்துள்ளே நின்று பஞ்சகிருத்திய நடனஞ்செய்யும் உம்முடைய செயலோவென்று கூறினார் என்பதாம். (கூ௰)

ஆரூரருக்கு அடிமைசெய்யும் பணியையருளல்.

எண்ணிய ஓசை ஐந்தும் விசும்பிடை நிறைய எங்கும்
விண்ணவர் பொழிபூ மாரி மேதினி நிறைந்து விம்ம
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளும் முழங்கி ஆர்ப்ப
அண்ணலை ஓலை காட்டி ஆண்டவர் அருளிச் செய்வார்.

(எ-து.) அப்பொழுது * தோற்கருவி முதலிய பஞ்சவாத்தியங்களும் ஆகாயத்தின்கண் நிறைந்து முழங்க, தேவர்கள் விடாதுபொழியும் பூமாரி பூமியெங்

* ஐந்து வாத்தியங்களாவன - தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்க. இவற்றுள் தோற்கருவி-பேரிகை முதலியன. துளைக்கருவி-வீணைமுதலியன, கஞ்சக்கருவி-தாளமுதலியன, மிடற்றுக்கருவி-கண்டத்தில் ஒலி பிறைக்கப்படுவன.

கும்நிறைந்து ததும்பி மணம்வீச மண்ணுலகில் உள்ளாரெல்லாம் மகிழ்ச்சியின் மீதூர, மறைகள் மேகமுழக்கம்போல் முழங்கிப் பேரோசையிட, நமது பெருந் தகையாராகிய நம்பியாரூரரை ஓலைகாட்டியாண்ட இறைவரருளிச்செய்கின்றார்.

பாடும்பணியை யருளல்.

“ மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை : நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ; ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு ” கென்றார் தூமறை பாடும் வாயார்.

(இ - ள்.) நாவலூரனே! நீ கயிலையில் ஆலாலசுந்தரன் என்னுநாமத்தோ டிருந்தனை, இங்கு என்பால் வன்மைச்சொல்லும் வன்மைச்செயலும் வழங்கினை யாகலின் “வன்றொண்டன்” என்னும் நாமத்தை இப்போது பெற்றவனாயினாய், எனக்கு அடிமை செய்யக்கடவாய் என்று வழக்காடின அவ்வடிமைச் செய லாவது நம்மை அன்பினாற்பெருகிய சிறப்பின்மிக்க அருச்சனையினால் அருச்சிப் பதேயாகும்; அவ்வருச்சனையாவது நம்மைப்பாடுதலேயாகும். அப்பாட்டு அன் பினாலே பெருகியதும் பண்ணிசையிலே மிக்கசிறப்பினை யுடையதுமாயிருத்தல் வேண்டும். அவ்விரண்டினையும் உடையது தமிழேயாகலான் சுவையிருதியும் இலக்கணமும் நிறைந்த அத்தமிழ்ச சொல்லாலேயே பாடக்கடவாய் என்று சுத்தமாகிய வேதமோதிய திருவாக்குடையார் கூறியருளினார் என்பதாம். (எ0)

நடராஜனை நினைத்தல்.

தேடிய அயனும் மாலும் தெளிவுறா ஐந்தெ ழுத்தும்
பாடிய பொரு ளாய் உள்ளான் “ பாடுவாய் நம்மை ” என்ன
நாடிய மனத்தர் ஆகி நம்பியா ரூரர் மன்றுள்
ஆடிய செய்ய தாளை அஞ்சலி கூப்பி நின்று.

(இ - ள்.) யஜுர்வேதம் நடுவாக விளக்கும் பஞ்சாக்ஷரத்தால் சொல் லப்படும் பொருளாயுள்ளவனும், அவ்வேதத்துள்ளே ஒதுக்கத்தக்கவர்களாயுள்ள பிரம விஷ்ணுக்கள் அவ்வுண்மை யுணரும் உணர்வற்றுத் தேடுந்தன்மை வாய்க்கப்பெற்றுள்ளவனும் ஆகிய இறைவன் நம்மைப் பாடுவாயென்ற அளவில் நம்மை அடிமை என்று கொண்டபொழுதே நமது ஞானமும் கிரியையும் அவன் பாலவாய் நாம் சுதந்தர மிலியாய்ப் போயினோம். இப்பொழுது பாடுதற்குரிய பொருள் தேடும் ஞானமும், அப்பொருளை யமைத்தற்குரிய சொற்களைத் தேடும் கிரியையும் நம்பால் எங்குளது. ஞானமும் கிரியையுமில்லாமல் எப்படிப்பாடு வது என்று சிற்சபையினுள்ளே நடனஞ்செய்தருளும் இறைவனது அருளுரு வாயுள்ள செவ்விந்த குஞ்சிதபாதத்தை நாடும் மனமுடையாராய் இருகரங்களையும் சிரமேற் குவித்துநின்று.— (எக)

ஐந்தெழுத்தும்பாடிய பொருளாயுள்ளான் தேடிய அயனும் மாலுந் தெளி வுறா (துள்ளான்) நம்மைப் பாடுவாயென்ன நம்பியாரூரர் மன்றுளாடிய செய்ய தாள்நாடியமனத்தராகி அஞ்சலி கூப்பிநின்று எனக்கூட்டிப் பொருள்கொள்க.

"வேதியன் ஆகி என்னை வழக்கினால் வெல்ல வந்த
ஊதியம் அறியா தேனுக் குணர்வுதந் துய்யக் கொண்ட
கோதிலா வமுதே! இன்றுன் குணப்பெருங் கடலை நாயேன்
யாதினை அறிந்தென் சொல்லிப் பாடுகேன்" எனமொ ழிந்தார்.

(எ - து.) எம்பெருமானே! நீ வேதியர் திருக்கோலங் கொண்டுவந்து என்னை யானைபோதத்தால் நற்போதத்தை யொழித்து அடிமை என்று கொள்ளாமல் வழக்கினால் என் போதத்தை யொழித்து என்னை யடிமையென்று கொள்ளவந்த இலாபத்தை யறிதற்கில்லாத அறிவினையுடைய அடியேனுக்கு நான் இன்னவனென்றும் நீ இன்னவனென்றும் இருவருக்கும் முன்னுள்ள சம்பந்தம் இன்னதென்றும் இம்மண்ணுலகில் வந்த காரணம் இன்னதென்றும் நீ யுணர்த்த யானுணரும் உணர்வைத்தந்து நானுய்யும் வண்ணம் அடிமை என்று ஆட்கொண்டவனே, அதுவுமன்றி விடத்தை விடமாகக் கொள்ளாது அமிர்தமாகக் கொண்டதுபோல் யான் செய்த குற்றங்களைக் குற்றங்களாகக் கொள்ளாது குணமாகக்கொண்ட கோதிலாவமுதமே, இப்பொழுது என்பால் வைத்த உனது கருணைக்குணமாகிய பெருங் கடலை நாயேன் யாதினை யறிந்து என்சொல்லிப் பாடுகேன். நான் சுதந்தரமில்லாதவனாகலின் நீ எதனை யறிவிக்கின்றனையோ எதனைச் சொல்லுவிக்கின்றனையோ அதனை யறிந்து அதனைச் சொல்லி அப்படியே பாடத்தக்கவனாவேன் என்றுகூறினார் என்பதாம். (எஉ)

பித்தனென்றுபாட அருளல்.

அன்பனை அருளின் நோக்கி அங்கணர் அருளிச் செய்வார்
"முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆத லாலே
என்பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்றார் நின்ற
வன்பெருந் தொண்டர் ஆண்ட வள்ளலைப் பாட லுற்றார்.

(எ - து.) இறைவனே நீ எப்படிப் பாடச் சொல்லுகின்றனையோ அப்படியே பாடுகிறேன் என்று நம்பியாரூரர் கூறவே, அந்த அன்பரை (அறிதாவது அறிவித்தால் அறியத்தக்கவன். சொல்லுவித்தால் சொல்லத்தக்கவன், பாடுவித்தால் பாடத்தக்கவன் என்னும் அடிமைத்திற முணர்ந்து அவ்வழியே நிற்கும் தன்மை வாய்க்கப் பெற்றவரை) அருளினால் நோக்கி உனது கலியாணப் பந்தலில் "பித்தனோ மறையோய்" என்று என்னைக் கூறினையே அதுவென்னைப் பாடிய பாட்டன்றோ, ஆகலான் நீ சொல்லிய அப்பெயர்தான் என்பெயர். ஆகவே பித்தனென்னும் மொழியையே முதலாக வைத்துப் பாடத்தொடங்குவாய் என்று கூறியருளினார். அருளாலும் அவ்விறைவனது ஆணைவழியே நிற்கும் வன்மை வாய்ந்த பெரிய தொண்டரும் தம்மைத் தடுத்தாண்ட வள்ளலைப் பாடத் தொடங்கினார் என்பதாம்.

நான் சுதந்தரமில்லியாகலான் எதனை நீ அறிவிக்கின்றனையோ, எதனை நீ சொல்லுவிக்கின்றனையோ, அதனையறிந்து அதனைச் சொல்லி அதனைப் பாடத்தக்கவனாவேன் என்று கூறினாராகலான், அவர் கூறியவாறு அறியவும் சொல்லவும் பாடவுமான அருள்நோக்கத்தை வைத்து, இறைவனே! நீ முன் என்சொல்லையும் என்செயலையும் என்னறிவையுங்கண்டு "பித்தனோ மறையோய்" என்றனை அஃதுண்மையே. என்னை யெனின்— ஒன்றினைச்

செய்கை, செய்யாதொழிகை, வேறொன்று செய்கை எதுவோ அதுதான் பித்துக்குணம். அக்குணமுடையோர் யானன்றி மற்றொருவருமல்லர். நீயும் அதனையறிந்தே கூறினாய். ஆவணத்தினுங் கண்டிருக்கின்றது. ஆகலான் பித்தன் என்னும் சொல்லையே முதலாகவைத்துப் பாடுவையேயாயின், ஒன்றினைச் செய்கை, செய்யாதொழிகை, வேறொன்றினைச்செய்கை ஆகிய அவ்விறைமைக் குணத்தை நீயும் உடையனாய் என்னுடனாய்வாழ்வாய் என்றருளினார் என்றும், அடிமையான பின்னர் - அவர் செய்யும் செயலெல்லாம் தன்செயலே என்று தன்னையே கொடுத்தருளும் வள்ளலாகலான், மேலேசொல்லிய பித்தர் செய்கையை நமக்கு ஆக்குவான் என்பதில் என்ன ஐயமுளது என்று பித்தனென்று சொல்லியதை அவ்வள்ளல் சொல்லியதாகவே கொண்டு பாடத்தொடங்கினார் என்றும் கூறியவாறும். (எ௩)

வேறு.

கொத்தார்மலர்க் குழலாள்ஒரு கூறாய்அடி யவர்பால்
மெய்த்தாயினும் இனியானைஅவ் வியன்நாவலர் பெருமான்
"பித்தாபிறை சூடி" எனப் பெரிதாம்திருப் பதிகம்
இத்தாரணி முதலாம்உல கெல்லாம்உய எடுத்தார்.

(எ - து.) அறிவாளர்க்கெல்லாம் பேரறிவாளராகிய வன்றொண்டப் பெருமானார் இந்நிலவுலகேயன்றி எல்லா வுலகும் உய்ந்துபோம் வண்ணம் இசைமுதலியவற்றால் பெரிதாகிய பதிகத்தைப் பித்தனென்றே பாடுவாய் என்றெடுத்துக் கொடுத்தபடியே அப்பதத்தையே முதற்பதமாகக்கொண்டு அவனருட்டிறமும் தன் அடிமைத்திறமும் முறை முறையாய் விளங்க "பிறைசூடி" என்றற்றொடக்கத்தனவாகிய பதங்களைக் கூட்டி, கொத்தாக மலர்ந்த மலர்களையணிந்த கூந்தலையுடைய பிராட்டியாரை இடப்பாகத்தில் உடையவனாய்த் தம்மைச் சரண்புகுந்த அடியார்களிடத்துத் தாயினும் இனியனாய் உள்ள இறைவனை இந்நிலவுலக முதலிய எல்லா வுலகமும் உய்யும்வண்ணம் மேன்மையாகப் பாடத்தொடங்கினார் என்பதாம்.

அவ்வியன் நாவலர் பெருமான், கொத்தார் மலர்க்குழலாளொருகூறாய் அடியவர்பால் மெய்த்தாயினும் இனியானை, பித்தா பிறைசூடி எனப்பெரிதாம் திருப்பதிகம் எனக் கூட்டிப்பொருள்கொள்க.

கல்வி கேள்விகளில் உணரவேண்டியவற்றைக் கசடறவுணர்ந்த அறிவினையுடைய அறிவாளிக்கெல்லாம் பேரறிவாளர் என்பார் - வியனாவலர் என்றும், சொல்லாலும் பொருளாலும் அருளாலும் அன்பாலுமேயன்றி, இசையானும் பெரிதென்பார் - பெரிதாம் திருப்பதிகம் என்றும், அவ்வகல் அல்குலார்பால் ஆசை நீத்தவர்க்கே வீடுதருவமென்று அளவில்வேதம் சாற்றியவனாகிய தான், வியன் நாவலர்பெருமான்பால் பித்துடையவனாய், கழுதுகண் படுக்கும்பானாள் இரவினில் தூதுசெல்லல்முதலிய பித்துடைய செயல்களைத் துணிந்துசெய்ய எண்ணியுள்ளதற்கேற்ப ஆரூரர் பித்தா என்று அழைத்தாராகலானும், தனது கூற்றிலுள்ள கொத்தார் மலர்க்குழலாள் தவநிலையிற்சொல்லிய அருட்சொல்லாகலானும், அவ்வரிய பித்தா என்னும் பதத்தை முதலாகவுடையதென்பார்.- பெரிதாந் திருப்பதிகம் என்றும், மெய்த்தாயினும் இனியானுயிருக்கும் அவ ஆளாயிருப்பதைவிட்டு வல்வழக்குப்பேசும் திருமால் முதலிய எல்லா

வுயிர்களும் அவ்வல்வழக்கினை யொழித்து "ஆளாய் இனியல்லேனெனலாமே" என்று சொல்லும் உண்மையினை இப்பதிகத்தில் வலியுறுத்திக் கூறியுளதென்பார்-இத்தாரணிமுதலா முலகெல்லாமுய்ய எடுத்தார் என்றுங்கூறினர்.

தனக்கு அடிமையாகிய மெய்யடியார்களுக்குத் தான் ஒருவனே இனிய தாயாய் மீண்டும் பலவுடம்புகளையும் அவ்வுடம்புகட்குரிய பல தாய்களையும் ஒழித்தலால் மெய்த்தாயினும் இனியர் என்றதாம். ஈண்டு மெய் - என்றது உடம்பு. அது-பொய். அவ்வுடம்பிற்கு இனியதாய்களும் பொய். உயிர்-மெய். அதற்குரியதாயாகிய இறைவனும் மெய்யாகலான் மெய்த்தாயினும் இனியான் என்றதுமாம். இதனால் பித்தா என்பதை முதலாகவுடைய திருப்பதிகத்தின் சிறப்பு கூறப்பட்டது. (எச)

முறையால்வரு மதுரத்துடன் மொழிஇந்தள முதலில்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினால்
நிறைபாணியில் இசைகொள்புணர் நீடும்புகழ் வகையால்
இறையான்மகிழ் இசைபாடினன் எல்லாம்நிக ரில்லான்.

(இ - ள்.) தொண்டில் ஒப்பில்லாத வன்றொண்டர் எனப் பெயர்பெற்ற தேவரும் திறமான பல இசைகளைக்கொண்டு பாடுதலினும் ஒப்பில்லாதவர் என்று பெயர் பெறுதற்குரியராகிய ஆரூரர் ஸ்வரபேதத்தால் முறை முறையாய் உயர்ந்து வருகின்ற சுயப்போடு முதலிலே எடுத்துப் பாடுகின்ற இந்தளமென்னும் பண்ணையுடைய அத்திருப் பதிகத்தை எடுத்தல் படுத்தல் நலிதல் என்னும் இசைவேறுபாடு குறையாமல் பொருந்தும் உரிமையினாலும், நிறைந்த தாளத்தில் இசையின் பகுதி புணர்ந்த ... அமையும் வகையானும் தடுத்தாள வந்த பெருமான் திருவுள்ள மகிழ இசையோடு பாடியருளினார் என்பதாம். (எரு)

விசேடம் - ஆசார்யப் பிரபாவம். கசுஉ-ம் பக்கத்திற் காண்க.

கோயில்கடோறும் சென்று பாடெனல்.

சொல்லார்தமிழ் இசைபாடிய தொண்டன்றனை யின்னும்
பல்லாறுல கினில்நம்புகழ் பாடென்றுறு பரிவின்
நல்லார் வெண்ணெய் நல்லூர்அருள் துறைமேவிய நம்பன்
எல்லாவுல குய்யப்புரம் எய்தான்அருள் செய்தான்.

(எ - ள்.) சிவஞானச் செல்வர்களெல்லாரும், திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்டுறையில் எழுந்தருளியிருக்கும் திரிபுராந்தகனாகிய சிவபெருமான் சொற்றுணைவேதியனும் சொல்லியருளிய சொல்லால் நிறைந்த தமிழ்ப்பதிகத்தை இசையோடுபாடிய வன்றொண்டப் பெருமானுரை நோக்கி கருணைநோக்கால் நோக்கி இப்பொழுது என்னைப்பாடியதே யல்லாமல் இவ்வுலகின்கண் இன்னும் பலவகையாக நமதுபுகழைச் சிறப்பித்துப் பாடுவாயாக என்று எல்லாவுலகமும் உய்ய அருள்செய்தனர் என்பதாம்.

நல்லார் வெண்ணெய் நல்லூர் அருட்டுறைமேவியநம்பன், புரம் எய்தான் சொல்லார்தமிழ் இசைபாடிய தொண்டன்றனை இன்னும்பல்லாறு உலகினில் உறுபரிவில் நம்புகழ்பாடென்று, எல்லா வுலகுய்ய அருள்செய்தான் எனக் கூட்டிப் பொருள்கொள்க.

அருட்டுறையாகிய கோயில்கள் உலகமுற்றும் இருத்தலால் அத்துறை வழியே சென்று இறைவனைக்காண்பார்க்குச் சொற்றுணை வேண்டுமாதலான்- இன்னும் பல்லாறுலகினில் நம் புகழ்பாடென்றும். இவர்பாடும்பாட்டில், இறைமைக்குணங்கள் இலராயினரை உடையரெனக்கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ் பொருள்சேராமல் அவைமுற்றவும் உடைய இறைவன்புகழ் பொருள் சேர்ந்திருத்தலின் இதனை ஓதுவார்க்கு இருள்சேர் இருவினையும் சேராவாகலான் எல்லா உலகுய்ய என்றுங்கூறினர். (எக)

சடங்கவியார் மகளார் சிவலோகமடைதல்.

அயலோர் முயல்வார்பிறர் அன்றேல் மணம் அழியும்
செயலால் புத்தூர்வரு சிவவேதியன் மகளும்
உயர்நாவலர் தனிநாதனை ஒழியாதுணர் வழியில்
பெயராதுயர் சிவலோகமும் எளிதாம்வகை பெற்றாள்

(இ - ள்.) நம்பியாரூரருக்கு அருட்பாடு இத்தனையிருக்க, [illegible] ஒப்பாய் விளங்கும் புத்தூரின்கண் வாழும் சடங்கவிசிவாசாரியாருடைய மகளாரும், அன்று தொடங்கிய இம்மணச்செயல் மணம்பெறாது கெடுங்காரணம் வந்தபடியினலன்றோ நமக்கு மணம் [illegible] ஆரூரர், மேன்மேல் [illegible] உயர்ந்தோங்கிய திருவெண்ணெய்நல்லூர் இறைவனுக்கு ஆளாய் அவ்விறைவனைப் பாடும் நாவின் மணத்தைப் பெற்று பெருநாவலராயினர். அந்நாவலரோ "அந்நாளைக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே" என்று தம்மையுடைய நாயகனைப் பார்த்துச் சொல்லியதுபோல், நம்மை யாளுடைய இந்நாவலரை விட்டு இனி யாருக்கு நாம் ஆளாவது. இவருக்கு ஆளான நாம் இனி அல்லேன் எனலாமோ! அது கற்பாமோ! அறம் ஆமோ! ஆகாதாகையால் நம்மை ஆளுடைய இந்த நாவலரோ — தமது நாயகனைப் பாடிப்பாடி எப்படி அவருக்கே ஆளாயிருக்கத் துணிந்தனரோ அதுபோல நாமும் நமது நாயகராகிய நாவலரை நமது உணர்வின்கண் நினைத்தும் ஞானவழியில் [illegible] நினைத்து அந்நினைவினின்றும் பெயராது மேலாகிய சிவலோகத்தை நாம் எளிதாகப் பெறும் வகையைப் பெறுவோம் என்று தெளிந்த அறிவினையுடையவராய் [illegible] அந்நினைவின் வழியில் அருளால் [illegible] எளிதாம் வகையைப் பெற்றனர். "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்ற கற்பிலக்கணத்தை உணர்ந்தவர், யாது நினைப்பினும் நினைத்தபடியே எய்தாத அடையார் [illegible] என்றாயினர். இத்தன்மையான [illegible] லக்கணத்தை [illegible] அறிவிலிகளோ நாயகனைத் [illegible] மாக நினைத்திலை [illegible] தெய்வத்தைத் தேடி நினைத்து தூர்கதியும் பெறுவொழிவர். [illegible] பெருமொழிவாகெல்லாம் பெண்ணுருக எண்ணப்பட்டவராகார் என்பவர்.

[illegible] புத்தூர்வரு சிவவேதியன் மகளும் மணமழியும் செயலால் உயர்நாவலர் தனிநாதனை ஒழியா-துணர்வழியில் பெயராதுயர் சிவலோகமும் எளிதாம் தாம் வகைபெற்றாள், அயலோர் முயல்வார் பிறரன்றே எனக்கூட்டிப் பொருள்கொள்க.

திருநாவலூரில் திருப்பதிகம் ஓதல்.

நாவலர்கோன் ஆரூரன் தனைவெண்ணெய் நல்லூரின்
மேவுமருட் டுறையமர்ந்த வேதியர்ஆட் கொண்டதன்பின்
பூவலரும் தடம்பொய்கைத் திருநாவ லூர்ப்புகுந்து
தேவர்பிரான் தனைப்பணிந்து திருப்பதிகம் பாடினார்.

(இ-ள்.) நாவலர்கோனாகிய ஆரூரரைத் திருவெண்ணெய் நல்லூர் அருட்டுறையின்கண் வீற்றிருக்கும் வேதியர் ஆட்கொண்டபின்னர் அந்நாவலர் பெருமான் தமது பதியாகிய திருநாவலூரில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் இறைவனைக் காணும் ஆசையால் தாமரை முதலிய மலர்கள் மலர்ந்திருக்கும் பெரிய தடாகங்கள் சூழ்ந்துள்ள அவ்வூருக்குட்போய் அவ்விறைவனைத் தரிசித்துப் பணிந்து, (என்னிறைவனே! நான்முகனும் வானவர்கோனும் குற்றேவல் செய்யக்கொண்ட கோவலனாகிய நீ நாவின்வன்மையால் வெண்ணெய் நல்லூரில் என்னை வழக்கில் வைத்து ஆளாகக் கொண்டனையே என்னை ஆட்கொண்ட இடம் வெண்ணெய் நல்லூரேயாயினும் உனக்கிடம் என்னூராகிய நாவலூரேயாகும் என்னும் கருத்துடன்) "கோவலனான்முகன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். (எ-ம்).

இதனால், ஆரூரர் தாம் அவதரித்த நாவலூரில் வீற்றிருக்கும் பெருமானை அன்பின் பெருக்கால் வியந்து "வெண்ணெய் நல்லூரில் வைத்து ஆண்டுகொண்ட நாவலனார்க்கிடமாவது நந்திருநாவலூரே" என்றருளினாரென்று கூறப்பட்டது. (எஅ)

திருத்துறையூரில் தவம்வேண்டல்.

சிவனுறையும் திருத்துறையூர் சென்றணைந்து தீவினையால்
அவநெறியில் செல்லாமே தடுத்தாண்டாய் அடியேற்குத்
தவநெறிதந் தருளென்று தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகும் திருப்பதிகம் பாடினார்.

(இ - ள்.) பின்னர் திருத்துறையூருக்குச்சென்று, தமது பெருமான் முன்னே நின்று எம்பெருமானே! தீவினையால் அவமாகிய உலகநெறியின்கண்ணே யான் செல்லாவண்ணம் கயிலையில் வேண்டியபடியே தடுத்தாண்டாய். இனி அடியேனுக்குப் பவநெறிக்கு விலக்காகும் ஞானயோகச் சரியைகிரியை என்னும் தவநெறியை எனக்குக் கொடுத்தருள்வாயென்னும் வேண்டுகோளை உள்ளிட்ட "மலையாரருவி" என்றற்றொடக்கமுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினார் என்பதாம்.

சிவனுறையுந் திருத்துறையூர் சென்றணைந்து தம்பிரான் முன்னின்று தீவினையால் அவநெறியே செல்லாமே * * * தவநெறி தந்தருளென்று பவநெறிக்கு விலக்காகும் திருப்பதிகம் பாடினார் என்று கூட்டிப்பொருள் கொள்க.

இதனால், ஆரூரர் தம்மைத் தென்றிசை வாழ்ந்திட, அருளினால் அனுப்பும் வகையை யுணர்ந்தவராயிருந்தும் பிரிவாற்றாமையின் மிகுதியான் "செய்யசேவடி நீங்கும் சிறுமையேன், மையன்மானுடமாய் மயங்கும் வழி, ஐயனே தடுத்தாண்டருள் செய்" என வேண்டியபடியே, உலகினர் மயங்கும் வழிக்கு நிலைக்களமாயுள்ள ஓர் நிலையை மணமெனப் பெயரிட்டு அதில் நின்று மணம்பெறுவார்போல யான் போகாது உன்னைப்பாடும் நன்மணத்தைப் பெறும்படிச் செய்தனையே இம்மணத்துக்கேற்ற சிவமணங்கமழும் சைவதவ வேடத்தையும் எனக்குத் தந்தருளுவாயென்று திருப்பதிகம் பாடினமை கூறப்பட்டது.

தீவினையால் என்றது கலியாணச் சடங்கினைக் குறித்ததுமாமென்க. எனவே அக்கினிமுகமாகச் செய்யும் சடங்கினை மேற்கொண்ட வேள்வியாகலின். இல்லறத்தோ

ராகிய தீவினையாளர் இல்லறத்திற்கு விதித்திருக்கும் நல்ல அறநெறியைச் செய்யாது தீவினை வசப்பட்டு மயங்கி அவத்தையே செய்கின்றாராகலின்—அவநெறியே செல லாமே என்றார். இல்லறமாகிய நல்ல அறநெறி எனக்குத் தவநெறியைத்தரும் வண்ணம் தடுத்தாண்டனையாகலான், இனியாண்டதற்கேற்பத் தவநெறி தந்தருள்வாயென்று வேண்டினாரென்க. (எகூ)

புலனொன்றும் படிதவத்தில் புரிந்தநெறி கொடுத்தருள
அலர்கொண்ட நறுஞ்சோலைத் திருத்துறையூர் அமர்ந்தருளும்
நிலவும்தண் புனலும்ஒளிர் நீள்சடை யோன் திருப்பாதம்
மலர்கொண்டு போற்றிசைத்து வந்தித்தார் வன்தொண்டர்.

(எ-து.) நறுமணங் கமழும் பூக்களைக் கொண்டுள்ள சோலைசூழ்ந்த அத்திருத்துறையூரின்கண் சந்திரசேகரனாய் கங்காதரனாய், சடாதரனாய், வீற்றிருக்கின்ற சிவபெருமான் (வன்றொண்டப்பெருமான் வேண்டியபடியே ஞானக்கிரியையில்) சத்தமுதலிய ஐம்புலன்களும் வேறுபடாது பொருந்தியிருக்கும் அந்நெறியைக் கொடுத்தருள ஆரூரர் பூக்களைக்கொண்டு ஆகம முறைப்படியே திருவடியைப் பூசித்துச் சொல்லாகிய மலர்களைக்கொண்டு பாடிவணங்கினார் என்பதாம்.

அலர்கொண்ட நறுஞ்சோலைத் திருத்துறையூர் அமர்ந்தருளும் நிலவும் தண்புனலும் ஒளிர் நீள்சடையோன், புலன் ஒன்றும் படிதவத்திற் புரிந்தநெறி கொடுத்தருள, வன்றொண்டர், திருப்பாதம் மலர்கொண்டு போற்றிசைத்து வந்தித்தார் எனக்கூட்டிப் பொருள்கொள்க.

சிவனால் கொடுக்கப்பட்ட பொறிபுலன் கரணங்களைக்கொண்டு பவநெறிக்கு ஆண்டதுபோல் சிவனுக்கு அடிமையாகும் தவநெறிக்கும் ஒன்றும்படி வேண்டுபவர் சைவத் தவநெறியை விரும்புவோர் ஆகலான்-புலனொன்றும்படி தவத்திற்புரிந்தநெறி கொடுத்தருள என்றார். எனவே, சைவதவத்தை விரும்புவோர்-சிவபெருமானால் செய்யப்பட்ட செய்நன்றியை மறவாதவர் என்க. செய்நன்றியை மறந்தவர்-ஆளுடைய அரசுகள் அங்கமாலையில் அருளியபடி அங்கங்களை யெல்லாம் ஆக்காது அவைகளைத் தாங்கள் சம்பாதித்ததுபோல் எண்ணி அவைகளை வெறுத்து முத்தி சிவன் கொடுக்கவேண்டுமென்று அப்பெருமானை நோக்கித் தவம்புரிவோர் என்க.

மணிவாசக மூர்த்திகள் "சித்தம்சிவனொடும் ஆடவாடச் செங்கயற்கண் பனியாடவாட பித்தெம்பிரானொடும் ஆடவாட" என்றும், "ஞானக்கரும்பின் தெளியைப்பாகை, நாடற்கரிய நலத்தை நந்தாத், தேனைப்பழச்சுவை யாயினானைச், சித்தம்புகுந்து தித்திக்கவல்ல கோனை" என்றும், "சிந்தனை நின்றனக்கு ஆக்கி, * * * வாக்குன்மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்களார வந்தனை" என்றும் இத்தவநெறியை வேண்டியுள்ளார். இத்தவநெறிக்கு சிவன் உடைமையாயுள்ள இவையெல்லாம் இருந்தாலன்றி முத்தி நெறியும் பேரின்பமுங்கைகூடா. ஆகவே ஆரூரர் மேற்சொல்லியவாறு புலன்கள் ஒன்றிச்செய்வதாகிய தவத்தைக் கொடுத்தருள வேண்டினாரென்பதாம். (அ0)

தில்லைக்குப்போகத் திருவுளத்தெண்ணல்.

திருத்துறையூர் தனைப்பணிந்து சிவபெருமான் அமர்ந்தருளும்
பொருத்தமாம் இடம்பலவும் புக்கிறைஞ்சிப் பொற்புலியூர்
நிருத்தனார் திருக்கூத்துத் தொழுவதற்கு நினைவுற்று
வருத்தமிகு காதலினால் வழிக்கொள்வான் மனங்கொண்டார்.

(எ-து.) திருத்துறையூரை வணங்கிப் பின்னர் அதுபோலும் சிவபெருமான் தமது திருவுள்ளத்துக்குப் பாங்காக விருப்பத்துடனிருக்கும் பலதிருத்தலங்களிலும் சென்று

வழிபட்டுப்போற்றி வணங்கி அதன்பின்னர் அழகிற்சிறந்த புலியூரென்னும் தில்லையில் நடனஞ்செய்தருளும் நடராஜனது திருக்கூத்தைக் கண்டுகளித்துப் பேரானந்தத்தில் மூழ்கவெண்ணி, அக்கணமே காண்பதற்குச் சமீபமாக இல்லாதபடியினால் காணப் பெறுவது எப்போது என்று எழுந்த ஆசைமிகுதியினால் உண்டாகிய வருத்தமேற் கொண்டு விரைவாகச செல்லவேண்டுமென்னும் நினைவுடன் நடக்கத்தொடங்கினார் (எ-ம்).

“உள்ளம்போன்று உள்வழிச்செல்கற்பின், வெள்ளநீர்நீந்தல மன்னோ என்கண்” (நாயகன் உள்ள தேயத்தை நாடி என்மனம் அதிவேகமாகச் செல்வதுபோல் என்உடம்பு போக வன்மையற்றதாயின் என்கண்கள் தலைவனைக் காண்பதற்கில்லையே என்று நீர் வெள்ளத்தைப் பெருகவிடாமலிரா) என்று கூறியபடி ஆரூரர் நடராஜனிடத்துக் காதல் கொண்டனராகலான் - நிருத்தனார்திருக்கூத்துத் தொழுவதற்கு வருத்த மிகு காதலினால் வழிக்கொள்வான் மனங்கொண்டார் என்றார்.

இதனால், ஆரூரருக்கு நடராஜனிடத்துள்ள காதற்சிறப்புக் கூறப்பட்டது. (அக)

மலைவளர்சந் தகில்பீலி மலர்பரப்பி மணிகொழிக்கும்
அலைதருதண் புனல்பெண்ணை ஆறுகடந் தேறியபின்
இலகு பசும் புரவிநெடுந் தேர்இரவி மேற்கடலில்
செலஅணையும் பொழுதணையத் திருவதிகைப் புறத்தணைந்தார்.

(எ-து.) அதுபோலும் ஆரூரர் போகும்பொழுது, மலையின்கண் வளரப்பெற்றுள்ள சந்தனம் அகில்முதலிய மரங்களும் மயிற்பீலிகளும் மலர்களும் ஒன்றின்மேலொன்று புரண்டு புரண்டு பாவி வரும்படி வெள்ளங்கொண்டு கரையின் கண்ணே முத்துக் களை ஒதுக்கிவரும் குளிர்ந்த நீரையுடைய பெண்ணையாற்றைக் கடந்து கரையேறிய பின், பச்சைநிறத்தோடு விளங்கும் குதிரைபூட்டிய பெரிய தேரின்கண்வரும் சூரியன் மேற்குக்கடலிற் செல்லுங்காலமாகிய அந்திக்காலம்வர திருவதிகை வீரட்டானமென்னும் திருத்தலத்தைச் சமீபித்தனர் என்பதாம். (அஉ)

உடையஅர சுலகேத்தும் உழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்புபெரும் பதியைமிதித்
தடையுமதற் கஞ்சுவன்என் றந்நகரில் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையில் சித்தவட மடம்புகுந்தார்.

(எ-து) சமீபத்தில் எழுந்தருளி வரும்போது கிரியை யோகம் ஞானம் என்னும் முப்போகங்களையும் கொடுக்கவல்ல சரியை என்னும் நிலத்தை உழவாரப்படையால் உழுதலைச்செய்யும் வலிய ஆண்மையையுடைய உழவாரப்படையாளி என்று உலகமெல்லாம் புகழ்பெற்ற திருநாவுக்கரசுகள் சிவபிரானுடைய திருவருள் கிடைக்கப்பெறுமாறு எவ்வாறென்று சத்தினிபாதர்கள் வினவும் வினவுக்கு சரியையாதி நான்கு பாதங்கள்தான் என்று விடைகொடுக்கும் விடையின்மேல் வரும் உமைபங்கருக்குச் செய்யக்கடனவான மெய்த்தொண்டாகிய கைத்தொண்டு மனத்தொண்டு போதத் தொண்டு அறிவின்றொண்டு என்னும் நால்வகைத்தொண்டில் முதற்றொண்டாகிய கைத்தொண்டை விரும்பும் வண்ணஞ்செய்து அத்தொண்டைச் செய்யப்பெற்ற பெரும் பதி இத்திருவதிகையாகலின் அப்பதியை ஒருவகைத்தொண்டுக்கும் ஆளாகாத யான் எவ்வண்ணம் காலால்மிதித்து உள்ளே செல்லத்துணிவேன் அஞ்சுகின்றேன் என்று திருவதிகைக்குள்ளே போகாமல் நீர்மடைகளை மிகுதியாகவுடைய குளிர்ந்த மருதநிலத்திலுள்ள சித்தவடம் என்னும் ஊரின் மடத்துள்ளே போயினர் என்பதாம். (அங)

வரிவளர்பூம் சோலைசூழ் மடத்தின்கண் வன்தொண்டர்
விரிதிரைநீர்க் கெடிலவட வீரட்டா னத்திறைதாள்

புரிவுடைய மனத்தினராய்ப் புடைஎங்கு மிடைகின்ற
பரிசனமுந் துயில்கொள்ளப் பள்ளிஅமர்ந் தருளினர்.

(எ-து.) கைத்தொண்டு முதலிய நால்வகைத்தொண்டும் விடாது செய்யவல்லவர்க்கு அருள்செய்ய வல்லவராகிய இறைவன் "நீ என்னடியான்" என்று சொல்லிய அச்சொற்றொண்டக்கும் உடன்படாதிருந்த நம்மை விடாது வலியஆட்கொள்ளும் வண்ணம் செய்த வன்றொண்டப்பெருமான், வண்டுகள் மிக்கொலிக்கும் பூஞ்சோலை சூழ்ந்த சித்தவடமடத்தினுள்ளே புகுந்தபோது விரிந்த அலைகளையுடைய நீர்மிக்க கெடிலநதிக்கு வடக்கிலிருக்கும் வீரட்டானத்துள் வாழும் இறைவருடைய திருத்தாளை நாம் காணும்வகை எவ்வகையென்று அத்திருவடியையேபலமுறையும்விரும்பும் மனமுடையவராய் அம்மடத்தில் எப்பக்கத்தும் பரிசனங்கள் நெருங்கிக் கிடந்து துயில்கொள்வதைப்பார்த்துத் தாமும் ஓர்புறத்தில் சயனித்து நித்திரைசெய்தருளினர் என்பதாம்.

அம்மடத்தில் உறங்கியிருந்தா ரெல்லாம் திருப்பணிசெய்யும் ஆட்களாகக் காணப்பட்டமையான் அருவருக்காது தாமும் ஒருபுறத்தில் துயில்கொள்ளத் துணிந்தனர், என்பார் - பரிசனமுந் துயில்கொள்ளப் பள்ளியமர்ந்தருளினர் என்றார். (அச)

அதுகண்டு வீரட்டத் தமர்ந்தருளும் அங்கணரும்
முதுவடிவின் மறையவராய் முன்னொருவர் அறியாமே
பொதுமடத்தின் உட்புகுந்து பூந்தாரான் திருமுடிமேல்
பதுமமலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார் போல்பயின்றார்.

(எ-து.) வன்றொண்டர் தமதுதிருவடியை மனத்துட்கொண்டு யாவர்க்கும்பொதுவாகிய மடத்தின்கண் நித்திரைசெய்வதை வீரட்டத்தின்கண் அமர்ந்தருளும் இறைவனார் உணர்ந்துமுதிர்ந்த வடிவுடையவேதியராய் அம்மடத்தின்முன்னே இருப்பவர்ஒருவரும் அறியாதவண்ணம் உள்ளேநுழைந்து தமக்குப் பூமாலையணியும் திருப்பணியை (முன்னே)யுடைய சுந்தரரது திருமுடியின்மேல் தமது தாமரைமலரை யொத்த திருவடியைவைத்துத்தாமும்நித்திரைசெய்கிறவரைப்போல்பள்ளிகொண்டிருந்தனர்என்பதாம்.

மடத்திற்கு வெளியே உறங்காது காவலிருப்பவர் அறியாவண்ணம்சென்றனர்என்பதும் அங்ஙனம்சென்றவனுக்கு எல்லாவுயிருள்ளும் அவை அறியாமலே புகுந்திருத்தல் இயல்பென்பதுந் தோன்ற - முன்னொருவர் அறியாமே உட்புகுந்து என்றார்.(அரு)

வீரட்டானத்தீசர் திருவடிசூட்டல்.

அந்நிலைஆ ரூரன் உணர்ந் "தருமறையோய்! உன்னடி என்
சென்னியில்வைத் தனை" என்னத் "திசையறியா வகைசெய்த
தென்னுடைய மூப்புக்காண்" என்றருள அதற்கிசைந்து
தன்முடிஅப் பால்வைத்தே துயில்அமர்ந்தான் தமிழ்நாதன்.

(எ-து.) வீரட்டானத்திறைவர் கிழப் பிராமணராய் வந்து தமது கால்களைத் தலைமேல்வைத்து உறங்கும்பொழுது ஆரூரர், யாவர் நம் தலைமேல் காலைக்கூசாது வைத்து உறங்குகின்றவர் என்று விழித்துப் பார்க்கும்பொழுது கிழவராயிருக்கக் கண்டு இவர் பெரிய மறையவர்; வேறொருவருமல்லர் என்றறிந்து, ஐயா, வேதியரே! உம்முடைய கால்களை என்தலைமேல் சரியாகவைத்து உறங்குகின்றீரே என்று கேட்க, விருத்த வேதியராகவந்த இறைவன் அப்பா! நான் என்னசெய்வேன் திசையையுந் தலையையும் எனக்குத் தெரியாவகை செய்தது என்னுடைய மூப்புப்பருவமாகும். நீ கோபித்துக் கொள்ளவேண்டாம் என்று சொல்ல, தமிழ் நாதராகிய நம்பியாரூரர் இவர் சொல்லியது உண்மைதானென்று தம்முடைய முடியை வேறு பக்கத்திலில்வைத்து நித்திரை செய்தனர் என்பதாம். (அசு)

அங்கும்அவன் திருமுடிமேல் மீண்டும்அவர் தாள்நீட்டச்
செங்கயல்பாய் தடம்புடைசூழ் திருநாவ லூர்ஆளி
"இங்கென்னைப் பலகாலும் மிதித்தனைநீ யார்" என்னக்
கங்கைசடைக் கரந்தபிரான் "அறிந்திலையோ" எனக்கரந்தான்.

(எ-து.) செவ்விதாகிய கயல்மீன்கள் குதித்து விளையாடும் தடாகங்கள் சூழ்ந்துள்ள திருநாவலூரர் முன்தலைவைத்திருந்த இடத்தைவிட்டு வேறோரிடத்தில் வைத்தும் அம்மறையவர் அவ்விடத்து மீண்டும் அவர்முடிமேல் கால்களை நீட்டினர். இதுவென்ன அம்மறையவர் கால்கள் நம்தலையில் இங்கும் படுகின்றதோ, நாம் ஒதுங்கிப் படுக்கவில்லை போலுமென்றெண்ணி அவ்விடத்தைவிட்டு அப்புறம் ஒதுங்கினர்; அங்கும் அப்படியே செய்தனர். இப்படியே இவர் தலைவைப்பதும் அத்தலைமேல் அவர் காலை வைப்பதுமாகவிருக்க, சிறிதுகோபங்கொண்டு உறங்கும் இவ்விடத்தில் என் தலையை வேறு வேறிடத்தில் நான் வைத்தும் அதுபோல் நீ வேறிடத்தில் காலை வைக்காமல் என் தலைமேலேயே வைப்பதுமன்றி நான் உறக்கங்கொள்ளா வண்ணம் மிதித்தும் வருகின்றனையே, நீ முன் திசையறியாவகை செய்தது என்னுடைய மூப்புக்காண் என்ற மறையவனே அன்றோ நீயாரென்று வினவ. சடையில் கங்காதேவியை ஒளித்து வைத்திருக்கும் வீரட்டானத்திறைவர் உன்னை முன்வந்து தடுத்தாண்ட விருத்த வேதியன்றான் என்னுங் குறிப்புத்தோன்ற "அறிந்திலையோ" என்று மறைந்தருளினர். (எ-ம்.)

"மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே. நூலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்தடியேன், பாலேபுகுந்து பரிந்துருக்கும் பாவத்தான்" என்று திருத்தெள்ளேணத்தில் மணிவாசகர் அருளியபடி ஆரூரர் மனமுருகவே பலகாலும் மிதித்தனர்என்க. அஎ

வீரட்டானத் தலைவரைப் பாடல்.

"செம்மாந்திங் கியான்அறியா தென்செய்தேன்" எனத்தெளிந்து
"தம்மானை அறியாத சாதியார் உளரே" என்
றம்மானைத் திருவதிகை வீரட்டா னத்தமர்ந்த
கைம்மாவின் உரியானைக் கழல்பணிந்து பாடினர்.

(எ-து.) இறைவன் "அறிந்திலையோ" என்று மறைந்துபோகவும் ஆரூரர் என் செய்தேன் என்செய்தேன் என்று ஏங்கி விழித்தெழுந்து இவ்விடத்தில் யான் இறுமாப்படைந்து என்முடியில் அடிசூட்டவந்த எம்பெருமானைச் "சடைமேற்கொள் பிறையானென்றும், விடைமேற்கொள் விகிர்தனென்றும், திருவதிகை வீரட்டானத்தமர்ந்த கைம்மாவி னுரியானென்றும், கரிகாட்டில் ஆடலுடையானென்றும், விடையானென்றும், அறியும் அறிவிலாநாயேன்" ஆயினேன். அந்தோ என்னைப்போலும் அறியாத சாதியார் இங்கு எவருள்ளார் என்றழுதழுது அப்பொழுது மணக்கோலத்தில் அடிமையாம் பெருமையுணராது நான் அடிமையாவனோ என்று பலகாலும் வழக்கிட்டு அடிமையை வெறுத்தேன். நீ வெறுக்காது அடிமைகொண்டாய். அதுபோல் இப்பொழுதும் அந்த விருத்த வேதியனாகவே வந்து பலமுறையும் உன்னடியைச் சூட்டினாய் யான் உன்னடியைச் சூடுதற்குரிய தவக்கோலமாகிய இவ்வடிமைக் கோலத்திலும் அடியின் பெருமையுணராது வெறுத்து விலகிச்சென்றேன். நீ செல்லாது என்முடியில் அடி வைத்துக்கொண்டே வந்தனை, என்று அடிக்கு முடிகொடாதிருந்த தன்சிறுமையையும் அம்முடியையே தன்னடிக்கு இடமாக விடாதுகொண்ட அவன் பெருமையையும் எண்ணிஎண்ணி ஏக்கமுற்று எம்மானே! ஆளுடை அரசுகளுடைய கைத்தொண்டேறிய பதியில் நாம் எப்படியேறுவது என்றஞ்சி விடையேறியாகிய உன்னுடைய அடியை என்னுள்ளத்தேற்றி உறங்க, என்னுள்ளத் துள்ளானாகிய நீ நானுள்ளிய அடியை என்னுள்ளத்தேயன்றி என்முடியினும் ஏற்றினையே! 'பெருமையிற் சிறந்தவனே! வீரட்டா

னத் தமர்ந்தருளிய இறைவனே ! யானைத்தோலைப் போர்வையாகப் போர்த்தவனே ! என்ற அம்மடத்திலிருந்தவண்ணம் திருவீரட்டானேசரை வணங்கி "தம்மானையறியாத சாதியாருளரோ" என்னும் திருப்பதிகம் துதியருளினர். (எ-ம்.) (அஅ)

பொன்திரளும் மணித்திரளும் பொருகரிவெண் கோடுகளும்
மின்திரண்ட வெண்முத்தும் விரைமலரும் நறுங்குறடும்
வன்திரைக ளாற்கொணர்ந்து திருவதிகை வழிபடலால்
தென்திசையில் கங்கையெனும் திருக்கெடிலம் திளைத்தாடி.

(எ-து.) துதியபின்னர் திருவதிகையில் எழுந்தருளியிருக்கும் தமதிறைவரைக் கெடிலநதியானது பொற்கட்டிகளையும் மணித்திரள்களையும் யானையின் கொம்புகளையும் மின்னுகின்ற வெள்ளிய முத்தங்களையும் நறுமணங்கமழும் மலர்களையும் சந்தனக் கட்டைகளையும் வன்மையான அலைகளாகிய கைகளால் வாரிக்கொண்டுவந்து பூசனை செய்வாரைப்போல் வழிபடுதலால் அவ்வழிப்பாட்டை நோக்கியும், வடதிசைக் கங்கை போலும் இது தென்திசைக் கங்கையென்று சொல்லத்தகும் அச்சிறப்பு நோக்கியும், அக்கெடில நதியில் ஸ்நானஞ் செய்து.—

இதனால், கெடிலநதியை தென்திசைக்கங்கை என்று சிறப்பித்ததேயன்றி இறைவனை வழிபடும் சிறப்புடையதென்றும் கூறப்பட்டது. (அகூ)

திருமாணிக்குழி அடைதல்.

அங்கணரை அடிபோற்றி அங்ககன்று மற்றங்கப்
பொங்குநதித் தென்கரைபோய்ப் போர்வலித்தோள் மாவலிதன்
மங்கலவேள் வியில்பண்டு வாமனனாய் மண்இரந்த
செங்கணவன் வழிபட்ட திருமாணிக் குழி அடைந்தார்.

(எ-து.) வீரட்டானேசுவரர் திருவடிகளை வணங்கி அவ்விடத்தினின்றும் நீங்கி, மேல்மேல் பெருகிவரும் பெருக்கினையுடைய கெடிலநதியின் தென்கரை வழியேபோய் பூர்வத்தில் போர்விரும்பும் வலிய தோளையுடைய மாவலிச் சக்கிரவர்த்திசெய்த மங்கள கரமான யாகத்தில் வாமனராய் வந்து மூன்றடி மண்வேண்டிய திருமால் வழிபட்ட திருமாணிக்குழி என்னும் திருப்பதியை யடைந்தனர் (எ-ம்.) (கூ0)

திருத்தினைநகர் அடைதல்.

பரம்பொருளைப் பணிந்துதாள் பரவிப்போய்ப் பணிந்தவர்க்கு
வரந்தருவான் தினைநகரை வணங்கினர்வண் தமிழ்பாடி
நரம்புடையாழ் ஒலிமுழவின் நாதவொலி வேதவொலி
அரம்பையர்தம் கீதவொலி அறாத்தில்லை மருங்கணைந்தார்.

(எ-து.) திருமாணிக்குழியை அடைந்து அங்கு வீற்றிருக்கும் மாணிக்கவரதரைப் பணிந்து பாடி அங்குநின்றும் தம்மை வணங்கினார்க்கு வேண்டும் வண்ணங் கொடுக்கும் கருணைசாலியாகிய இறைவன் வீற்றிருக்கும் திருத்தினை நகரத்திற்குப் போய் சிவக்கொழுந்தீசனைத் திருப்பதிகம்பாடி வணங்கி அப்பதியைவிட்டுப் புறப்பட்டு, நரம்பினையுடைய யாழொலியும் மத்தளத்தின் நாதவொலியும் வேதத்தின் பேரொலியும் அரம்பையர்தங் கீதவொலியும் (அனவரத தாண்டவத்தோடு) நீங்காதொலித்துக்கொண்டிருக்கும் சிதம்பர க்ஷேத்திரத்திக்குச் சமீபமாக வந்தனர். (எ-ம்.) (கூக)

தில்லை எல்லை வணங்குதல்.

வேறு.

தேம லங்கலணி மாமணி மார்பில் செம்மல் அங்கயல்கள் செங்கம லத்தண்
பூம லங்கஎதிர் பாய்வன மாடே புள்ள லம்புதிரை வெள்ளை வாவித்

தாமலங்குகள் தடம்பணை சூழும் தன்மருங்குதொழு வார்கள்தம் மும்மை
மாமலங்கள் அற வீடருள் தில்லை மல்லல் அம்பதியின் எல்லை வணங்கி.

(எ-து.) தேன்சிந்தும் மலர் மாலையும் ஒளிசிந்தும் மணிமாலையும் உடையவராகிய நம்பியாரூரர், ஒலிக்கும் பறவைகளையும் வெண்சங்குகளையும் உடைத்தாகிய தடாகத்தின்கண் செந்தாமரை மலர்கள் அசையும்படி அழகிய கயல்மீன்கள் பாயும் வண்ணம், வாலங்கென்னும் மீன்கள் சூழ்ந்திருக்கின்ற விசாலமாகிய வயல்களைப் பக்கங்களில் உடைத்துள்ள அவ்வெல்லையின் பக்கத்து, வந்திப்பவருடைய ஆணவாதி பெரியபாசங்கள் நீங்க முத்திநெறியைக் கொடுக்கும் வளப்பத்தினை யுடைய சிதம்பர மென்னுந் திருப்பதியின் எல்லையைக்கண்டு நமஸ்காரம் செய்து ;

தேமலங்கல் அணிமாமணி மார்பிற் செம்மல் மாடேபுள்ளலம்பு திரை வெள்வளை வாவி செங்கமலத் தண்பு மலர்த அங்கயல்கள் எறிப்பாய்வன, தாமலங்குகள் தடம் பணைசூழுந் தன் மருங்கு எனக்கூட்டிப் பொருள்கொள்க. (௯௨)

நாக சூதவகுளஞ் சரளஞ்சூழ் நாளிகேர மிலவங்க நரந்தம்
பூக ஞாழல்குளிர் வாழை மதூகம் பொதுளும் வஞ்சிபல வெங்கு நெருங்கி
மேக சாலம்மலி சோலைகள் ஆகி மீது கோகிலம் மிடைந்து மிழற்றப்
போக பூமியினும் மிக்கு விளங்கும் பூம்புறம்பணை கடந்து புகுந்தார்.

(எ - து.) புன்னை மா மகிழம் சரளம் தென்னை இலவங்கம் நாரத்தம் கமுகு குங்குமம் குளிர்ந்தவாழை இலுப்பை வஞ்சி என்று சொல்லப்படும் மரவகைகள் எவ்விடத்தும் நெருங்கியுள்ளதாய் மேகக்கூட்டங்கள் மிகுந்திருக்கும் சோலைகள் சூழ்ந்துள்ளதாய் அச்சோலைகளின்மீது குயிற்கூட்டங்கள் கூடிக்கூவும் ஓசையுள்ளதாய்ப் போக பூமியினும் சிறந்த பொலிவினை யுடைத்தாய் விளங்கும் மருதநிலங்கடந்து அப்புறம் போயினர் என்பதாம். (௯௩)

வன்னி கொன்றைவழை சண்பக மாரம் மலர்ப்பராவமொடு செருந்தி மந்தாரம்
கன்னி காரங்குரா வம்கமழ் புன்னை கற்பு பாடலம் கூவிளம் ஓங்கித்
துன்னு சாதிமரு மாலதி மௌவல் துதைந்த நந்திநறு வீரம் மிடைந்த
பன்மலர்ப் புனித நந்தவனங்கள் பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான்.

(எ-து.) நறுமணங்கமழும் நல்ல மலர்மாலையையுடைய நம்பியாரூரர் மருத நிலத்தைக் கடந்துபோய், வன்னிகொன்றை சுரப்புன்னை சண்பகம் சந்தனம் பூக்களையுடையபாலாசெருந்தி மந்தாரம் கோங்கு குரா மணங்கமழும் புன்னை பாதிரி வில்வம் ஆகிய இம்மரங்கள் ஓங்கியுயர்ந்தும் நறுமணமுடைய முல்லை மல்லிகை இதழ்நெருங்கிய சிறு சண்பகம் அலரி ஆகிய கொடிகளும் செடிகளும் நெருங்கி அடர்ந்தும் அவைகளுடைய மலர்கள் மலர்ந்து நிறைந்துமுள்ள நந்தவனத்தைக் கண்டு ஆராவன்புகொண்டு வணங்கி அப்புறம் போயினர் என்பதாம். (௯௪)

இடமருங்குதனி நாயகி காண ஏழ்பெருப்புவனம் உய்ய வெடுத்து, நடம நவின்றருள் சிலம்பொலி போற்று நான்மறைப்பதியை நாளும் வணங்கக், கடல்வலங்கொள்வது போற்புடை சூழும் காட்சி மேவிமிகு சேட்செல வோங்கும், தடமருங்குவளர் மஞ்சிவர் இஞ்சித் தண்கிடங்கை யெதிர் கண்டு மகிழ்ந்தார்.

(எ - து.) சிவகாமியாகிய ஒப்பற்ற நாயகியார் இடப்பாகத்தில் நின்று கண்டு களிக்கவும், பெரிதாகிய எழுலகத்தவரும் உய்யவும், அருட்பாதமெடுத்து பஞ்சகிருத்திய நடனஞ்செய்யும் குஞ்சிதபாதத்தில் ஒலிக்கும் சிலம்போசையை நான்குவேதங்க

ளும் நாற்புறத்துஞ் சூழ்ந்து போற்றுகின்ற திருத்தில்லையைப் பெரும்புறக் கடலானது தான் நாள்தோறும் வலம் வந்து வணங்க நாற்புறத்தும் சூழ்ந்திருக்கும் காட்சியைப் போலும் குளிர்ந்த நீரையுடைய அகழியானது மிகவும்மேலே நெடுந்தூரம் உயர்ந்து மேகங்கள் தனக்கிடமாகக் கொண்டு வளரும் சிறப்பினையுடைய மதில்சூழ்ந்திருக்கும் அவ்வற்புதம் தமக்கு முன்னே தோன்ற அதனைப்பார்த்து மகிழ்ச்சி யடைந்தனர்.(எ-ம்)

மன்று ளாடுமது வின்நசை யாலே மறைச்சு ரும்பறை புறத்தின் மருங்கே
குன்று போலுமணி மாமதில் சூழும் குண்ட கழ்க்கமல வண்டலர் கைதை
துன்று நீறுபுனை மேனிய வாகித் தூய நீறுபுனை தொண்டர்கள் என்னச் [ருர்.
சென்றுசென்று முரல் கின்றன கண்டு சிந்தை அன்பொடு திளைத்தெதிர் சென்

(எ - து) அதன்பின்னர், பொன்னம்பலத்துள் ஆனந்த நடனஞ்செய்யும் குஞ் சிதபாதமாகிய தாமரைமலரிலுள்ள சிவானந்தத்தேனை வேதங்கள் தாம் உண்ணவேண்டு மென்னும் ஆசையினால் வண்டுருக்கொண்டு தில்லைஎல்லையைச்சூழ்ந்து முழங்காநிற் கும். அஃதேபோல் பூஞ்சோலைகளில் உலாவும் வண்டுகள் பரிசுத்தமாகிய விபூதியை யணிந்த அடியார்கள்போல அத்தில்லை எல்லையின்பக்கத்தில் மலைபோலுயர்ந்து அழகு செய்யாநின்ற பெரியமதில் சூழ்ந்திருக்கும் ஆழ்ந்த அகழியின் அருகில் மலர்ந்துள்ள தாழம்பூவில் நிறைந்திருக்கும் வெண்ணிறமுடைய மகரந்தப் பொடியில் வீழ்ந்து வெளுத்த உடம்பினை யுடையனவாய் அவ்வழியிலுள்ள தாமரைமலர்களில் போய்ப் போய் சத்தித்துக்கொண்டிருக்கும். இவ்வதிசயம் எதிரேதோன்ற அதனையுங்கண்டு தமது சிந்தையில் நடராஜப்பெருமானுடைய திருவடித் தாமரையில் அன்புமேலிடப் பரவசராய்ச் சென்றருளினர் என்பதாம் (கசு)

பார்வி ளங்கவளர் நான்மறை நாதம் பயின்ற பண்புமிக வெண்கொடி யாடும்
சீர்வி ளங்குமணி நாவொலி யாலும் திசைக ளுன்கெதிர் புலப்பட லாலும்
தார்வி ளங்குவரை மார்பின் அயன்பொற் சதுர்மு கங்களென வாயின தில்லை
ஊர்வி ளங்குதிரு வாயில்க ளான்கின் உத்த ரத்திசையின் வாயின்முன் எய்தி.

(எ - து.) தில்லைப்பதியின்கண் காணப்படும் திருவாயில்கள் வெள்ளைக்கொடி கள் அசைந்தாடும் சிறப்புடன் விளங்கும் நான்குதிசைகளுக்கு எதிரே புலப்படுதலா லும் உலகத்தார் அறிவினை யுடையராய் விளங்க வளர்கின்ற நான்கு வேதங்களில் தமக்கு ஓது முறைகள் முறையாய் அதிகரிக்க (அந்தணச் சிறுவர்கள்) தம் நாவினாற் பழகும் நாவின் ஓசை மிகுதியாலும் கண்டாமணியி னின்றெழும் பெரிய நாதவோசை யாலும் பூமாலைகளால் விளங்கும் மலைபோலும் மார்பினையுடைய பிரமனது அழகிய நான்கு முகங்களென்று சொல்லுந் தன்மையை யுடையன. அந்நான்கு வாயில்களுள் வடதிசை வாயலின் முன்னே (அன்புருவாய்ச் சென்ற ஆரூரர்) சென்று,—

தில்லை ஊர் விளங்கு திருவாயில்கள் வெண்கொடியாடும் சீர்விளங்கும் திசைக ளுன் கெதிர் புலப்படலாலும் பார்விளங்கவளர் நான்மறைபண்புமிகத் தம்நா பயின்ற (நாவொலியாலும்) மணிநாவொலியாலும் தார்விளங்கு வரைமார்பி னயன்பொற் சதுர் முகங்க ளெனவாயின; நான்கின் உத்தரத்திசையின் வாயின் முன்னெய்தி என்று கொ ண்டு கூட்டிப் பொருள் கொள்க. புறப்படலாலும் எனப் பாடம் கொள்ளின் திசைக ளுன்கெதிர் நான்மறை நாதம்புறப்படலாலும் எனக் கூட்டிப் பொருள் கொள்க.(கஎ)

அடியார் எதிர்கோள்ளல்.

வேறு.

அன்பின் வந்தெதிர் கொண்டசீர் அடியார் அவர்க ளோநம்பி யாரூரர் தாமோ
முன்பி றைஞ்சினர் யாவரென் றறியா முறைமை யாலெதிர் வணங்கி மகிழ்ந்து
பின்பு கும்பிடும் விருப்பின் நிறைந்து பெருகு நாவல்நக ரார்பெரு மானும்
பொன்பி றங்குமணி மாளிகை நீடும் பொருவில் தந்ததிரு வீதிபுகுந்தார்.

(எ - து.) தம்மைக் காணும் ஆசை அதிகரித்த அன்பினால் எதிர்கொண்டழைக்க வரும் மெய்யடியார்கள் நம்பியாரூரரை வணங்கினார்கள். அவர்களை நம்பியாரூரர் கண்டு மகிழ்ந்து வீழ்ந்து வணங்கினர். வணங்கிய இருவருள் அடியார்களோ முன் வணங்கினவர், நம்பியாரூரரோ முன்வணங்கினவர் என்று அறியக்கூடாததாயிற்று. அங்ஙனம் முன் பின் அறியக்கூடாத முறைமையினால் இருவரும் எதிரெதிர் வணங்கி மகிழ்ச்சி யடைந்து, அடியார் வணக்கம் முடிந்தபின் திருநாவலூருக்குப் பெருமானாராகிய ஆரூரர் - ஸ்ரீ நடராசப்பெருமானைக் கும்பிடவேண்டுமென்னும் அவா தமதுள்ளம் நிறையப்பெற்று அவ்வன்பு உள்ளத்தளவேயன்றி அன்பின் செயலெல்லாம் வெளியேயும் பெருகப் பெற்றவராய்ப் பொன்போல் பிரகாசிக்கும் அழகிய மாளிகைகள் நிறைந்திருக்கும் சிறந்த வீதியினுள்ளே சென்றார் என்பதாம்.

அடியவர்கள் முன்பின் அறிவதற்கின்றி வணங்கிய சிறப்பானது, வணங்காதிருக்கச்செய்ய வல்ல ஆணவமலத்தைத் தலையெடா வண்ணம் அடக்கும் பணியில் தலைப்பட்டு நிற்பவரென்னும் சிறப்பினைக் குறித்த தென்க. (கூ அ)

அங்கண் மாமறை முழங்கு மருங்கே யாட ரம்பையர் அரங்கு முழங்கும்,
மங்குல் வானின்மிசை யைந்து முழங்கும் வாச மாலைகளின் வண்டு முழங்கும்,
பொங்கும் அன்பருவி கண்பொழி தொண்டர் போற்றி சைக்கு மொலியெங்கு
முழங்கும்; திங்கள் தங்குசடை கங்கை முழங்கும் தேவ தேவர்புரி யுந்திரு

(எ - து.) இளம்பிறைவாழும் திருச்சடையில் முழங்கிக்கொண்டிருக்கும் கங்கையைத்தரித்த தேவதேவனாகிய நடராஜப்பெருமான் விரும்பித் திருவிழாக்கொண்டருளும் அத்திருவீதியின் எப்பக்கத்தும் வேதங்களுடைய முழக்கமும், ஆங்காங்குள்ள நாடகசபைகளில் தெய்வப் பெண்கள் நடனஞ்செய்கின்ற முழக்கமும், மேகங்களுலாவும் ஆகாயத்தில் தேவ வாத்தியங்களாகிய பஞ்சவாத்தியங்களுடைய முழக்கமும், நறுமணங்கமழும் பூமாலைகளில் வண்டுகள் முழங்கும் முழக்கமும், அன்பின்மிகுதியால் நீர் அரும்பும் கண்களையுடைய அடியார்கள் பாடும் பாட்டின் முழக்கமும் எக்காலத்தும் முழங்கிக்கொண்டே யிருக்கும் என்பதாம்.

திங்கள் தங்குசடை முழங்குங் கங்கை தேவதேவர் புரியும் திருவீதி மருங்கே அங்கண் மாமறை முழங்கும், அரம்பையர் ஆடும் அரங்கு முழங்கும் * * * * தொண்டர்போற்றிசைக்கும் ஒலி எங்கு முழங்கும் எனக்கூட்டிப் பொருள் கொள்க.

இதனால், முழக்கங்களுடைய பேதங்களின் சிறப்பும் இம்முழக்கங்கள் என்றும் நீங்காதிருக்கும் சிறப்பும் கூறியவாறும். (கக)

போக நீடுநிதி மன்னவன் மன்னும் புரங்கள் ஒப்பன வரம்பில ஓங்கி
மாக முன்பருகு கின்றன போலு மாளி கைக்குலமி டைத்தப தாகை
யோக சிந்தைமறை யோர்கள் வளர்க்கும் ஓம தூமமுயர் வானில் அடுப்ப
மேக பந்திகளின் மீதிடை யெங்கும் மின்னு டங்குவன என்ன விளங்கும்.

(எ - து.) யோகசிந்தையிற் சிறந்த வேதியர்கள் வீடுகள்தோறும் வளர்க்கும் ஓமப் புகையானது ஆகாயத்தில் மேகம்போல் பரவி மூடிக்கொண்டிருப்பதை நோக்குமிடத்து மேகமண்டலத்திலுள்ள மேகங்கள் சென்று நீரை உண்பதற்குமுன் அந்தநீரைத் தாம் உண்ணக்கருதிச் சென்றதுபோலும் காணப்படும். அந்தவோமப்புகையின் இடைஇடையே செல்வத்தில் மிகுந்த குபேரன்வாழும் அந்தப்புரத்தைப்போன்ற மாளிகைகளில் எண்ணிறந்தனவாய்க் கட்டியிருக்கும் நீண்ட கொடிகள் அசைந்தாடிக் கொண்டிருப்ப அதனை நோக்குமிடத்து மேகவரிசைகளின் இடைஇடையே காணப்படும் மின்னலைப்போல் விளங்கும் என்பதாம்.

யோகசிந்தை மறையோர்கள் வளர்க்கும் ஓமதூமம் உயர்வானில் அப்ப(அது)மாக முன்பருகுகின்றனபோலும், போகநீடு நிதிமன்னவன் மன்னும் புரங்களொப்பனமாளிகைக்குலம் வரம்பில வோங்கி, மிடைந்த பதாகை மேகபந்திகளின்மீது இடை எங்கும் மின்னுடங்குவன என்ன விளங்கும் எனக் கூட்டிப்பொருள் கொள்க. (கo)

ஆடு தோகைபுடை நாசிக டோறும் அரணி தந்தசுடர் ஆகுதி தோறும்
மாடு தாமம்மணி வாயில்க டோறும் மங்க லக்கலசம் வேதிகை தோறும் [றும்
சேடு கொண்டவொளி தேர்நிறை தோறும் செந்நெல் அன்னமலை சாலைக டோ
நீடு தண்புனல்கள் பந்தர் கடோறும் நிறைந்த தேவர்கணம் நீளிடை தோறும்.

(எ - து.) திருக்கோபுரநாசியின் பக்கங்களிலெல்லாம் ஆடுகின்ற மயில்களும், யாகசாலைகளி லெல்லாம் தீக்கடைக்கோலினால் உண்டாகிய அக்கினிகளும், அழகிய வாயில்களி லெல்லாம் சிறந்த மாலைகளும், வேதிகைகளி லெல்லாம் மங்கலகரமான கும்பங்களும், தேர்களுடைய வரிசைகளிலெல்லாம் பெருமைபொருந்திய ஒளிகளும், அன்ன சத்திரங்களி லெல்லாம் செந்நெல் அரிசியாலாக்கிய அன்னமலைகளும், தண்ணீர்ப்பந்தல்களிலெல்லாம் குளிர்ச்சி மிக்க நீர்களும், நீண்ட வீதிகளிலெல்லாம் தேவகணங்களும் நிறைந்துள்ளனவாய்ப் பிரகாசிக்கும் என்பதாம்.

நாசிகள் புடைதோறும் ஆடுதோகை, ஆகுதிதோறும் அரணிதந்தசுடர், மணிவாயில்கள் தோறும் மாடுதாமம், வேதிகைதோறும் மங்கலக்கலசம், தேர்நிறை தோறும் சேடு கொண்டஒளி, சாலைகள் தோறும் செந்நெல் அன்னமலை. பந்தர்கள்தோறும் நீடுதண் புனல்கள், நீளிடைதோறும் தேவர்கணம் நிறைந்த எனக்கூட்டிப்பொருள் கொள்க. ()

திருவீதியை வணங்குதல்.

எண்ணில் பேருலகனைத்தினு முள்ள எல்லையில் அழகு சொல்லிய எல்லாம்
மண்ணில் இப்பதியில் வந்தன என்ன மங்க லம்பொலி வளத்தன வாகும்
புண்ணியப்புனித அன்பர்கள் முன்பு புகழ்ந்து பாடல்புரி பொற்பின் விளங்கு
அண்ணல்ஆடுதிரு அம்பலம் சூழ்ந்த அம்பொன் வீதியினை நம்பி வணங்கி.

(எ - து.) இவ்வளவென்று அளவுபடுத்தற்குக்கூடாத எல்லாவுலகங்களினும் உள்ளனவாகச் சொல்லப்பட்டிருக்கும் அழகெல்லாம் மண்ணுலகிலுள்ள இத்தில்லைப் பதியில் வந்தனவென்று சொல்லும்படி எல்லா மங்கலங்களும் நிறைந்திருக்கும் வளங்களை யுடையதாகியும், புண்ணிய சீலர்களாகிய அன்பர்கள் முன்னாளில்விரும்பிப் புகழ்ந்துபாடிய சிறப்பினால் விளங்குவதாகியும் உள்ள நடராஜவள்ளல் ஆனந்த தாண்டவஞ் செய்தருளும் பொன்னம்பலத்தைச் சூழ்ந்த திருவீதியை ஆரூரர் வணங்கி,— (கoஉ)

திருவாயிலை வணங்குதல்.

மால யன்சத மகன்பெருந் தேவர் மற்று முள்ளவர்கண முற்றும் நெருங்கிச்
சீல மாமுநிவர் சென்றுமுன் துன்னித் திருப்பி ரம்பினடி கொண்டு திளைத்துக்
கால நேர்படுதல் பார்த்தயல் நிற்பக் காதல் அன்பர்கண நாதர் புகும்பொற்
கோல நீடுதிரு வாயில் இறைஞ்சிக் குவித்த செங்கைதலை மேற்கொடு புக்கார்.

(எ - து.) திருமால் பிரமன் இந்திரன் முதலிய பெருந்தேவர்களும், ஏனைய கருட கந்தருவ கின்னரர்கள் முதலியோரும் நெருங்கி அவர்களுக்குமுன் சீலத்திற் சிறந்த பெரியமுனிவர்களும் நெருங்கி நந்திதேவரது பிரம்படியை ஏற்றுக்கொண்டு அதனால் வருத்தமுற்று உள்ளேபோவதற்கில்லாமல் தெரிசனஞ்செய்வதற்குரிய காலம் எப்பொழுது கிடைக்குமென்று அச்சமயத்தை நோக்கி அருகேநிற்ப, அன்பின்கண் ஆசைமிக்க அடியார்களும் சிவகணநாதர்களும் தடையின்றி உள்ளேபோகும் அழகுமிகுந்த கோபுர

வாயிலை ஆரூரர் வணங்கி இரண்டு கரங்களையும் சிரசின்மேல் அஞ்சலியாகக் கூப்பிக் கொண்டு ஆலயத்துள்ளே போயினர் என்பதாம்.

மால் அயன்முதல் முனிவர் ஈருகச்சொல்லியவரெல்லாம் அவபோகங்களையும் அவயோகங்களையும் வேண்டும் புறத்தடியவர் ஆகலான் திருப்பிரம்பினடிகொண்டு திளைத்துக் காலம் நேர்படுதல் பார்த்து அயல் நிற்ப என்றும், சிவபோகங்களையும் சிவயோகங்களையுமே வேண்டி சிவனடிக்கே ஆட்படும் செல்வர்கள் அன்பர்களும் கணநாதர்களும் ஆகலான் அந்த அகத்தடியவர்கள் பிரம்படி படாமலும், காலம் நோக்காமலும் உள்ளே புகுவர் என்றும். ஆரூரர் பெருமானும் இவ்வினங்களில் சேர்ந்தவராகலான் நீடுதிருவாயில் இறைஞ்சிக்குவித்த செங்கை தலைமேற் கொடுபுக்கார் என்றுங் கூறினர்.

இவ்விரண்டு திருப்பாட்டானும் திருவீதியின் சிறப்பும், அவ்வீதியில் புண்ணியப் புனித அன்பர்கள் முன்பு புகழ்ந்து பாடும் சிறப்பும், கோபுரவாயிலின் சிறப்பும், அவ்வாயிலில் திருமால் முதலியோர் பிரம்படிபட்டு அயலில் நிற்பதும், அன்பர் கணநாதர்கள் அடிபடாது புகுவதும் ஆகிய சிறப்பும் விளக்கியவாறும். (க0௬).

வேறு.

திருவணுக்கன் திருவாயிலை வணங்குதல்.

பெருமதில் சிறந்த செம்பொன்மா ளிகைமின் பிறங்குபே ரம்பலமேரு [தார்
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர் வணங்கிய மகிழ்வொடும் புகுந்
அருமறை முதலில் நடுவினில் கடையில் அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த
திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம் பலமுன் திருவணுக் கன்திரு வாயில்.

(எ - து.) ஆலயத்தினுள்ளே புகுந்துபெரியமதிலினாலே சிறந்த செம்பொன்னாலாகியதிருமாளிகைப்பத்தியுள் (நடுவே காணப்படும்) மின்னலிடும் பேரம்பலமாகியமேருவை வலம்வரும் விதிப்படியே வலம்வந்து தண்டாகாரமாக வணங்கி அதன்பின்னர் அவ்வாறு வணங்கிய மகிழ்ச்சியோடும் உள்ளேசென்று அரியவேதங்களின் முதலிடை கடைகளிலும் அன்பர் இதயத்தினும் பிரகாசித்தொளிரும் திருவளரும் திருச்சிற்றம்பலத்தின் முன்னுள்ள திருவணுக்கன் திருவாயில் வழியேசென்று.—

சர்வவித்தையும் குறிப்பதாகிய அகர முதலிய ஐந்தெழுத்தோடும் விளங்கும் பிரணவத்தை வேதம் முதலிலே யுடைத்தா யிருக்கின்றமையால் - அருமறைமுதலில் என்றார். இது தூலபஞ்சாக்கரம் எனப்படும். இதனைத் திருமூலனர் "ஐம்பதெழுத்தே அனைத்து வேதங்களும், ஐம்பதெழுத்தே அனைத்தாகமங்களும், ஐம்பதெழுத்தின் அடைவை அறிந்தபின், ஐம்பதெழுத்தே அஞ்செழுத்தாமே" என்றும், "அகாரமுதலாக ஐம்பத்தொன்றாகி, உகார முதலாக ஓங்கி யுதித்து, மகாரம் இறுதியாய் மாய்ந்து மாய்ந்தேறி, நகார முதலாகும் நந்திதன்னாமமே" என்றும், அருளியவாற்றானறிக.

"சிவன் சத்திசீவன் செறுமலமாயை, அவஞ்சேர்ந்தபாசம் மலமைந்தகலச், சிவன் சத்திதன்னுடன் சீவனர்சேர, வலம்சேர்ந்த பாசம் அணுககிலாவே" என்றும், "சிவன் அருளாய சிவன் திருநாமம், சிவன்அருள் ஆன்மாத் திரோதமலமாயை, சிவன் முதலாகச் சிறந்து திரோதம், பவமதகன்று பரசிவனமே" என்றும், அருளிய சூக்கும பஞ்சாக்கரத்தை நடுவே வேதம் உடைத்தாயிருத்தலால் - அருமறை நடுவில் என்றார்.

"அங்கமும் ஆகமவேதம தோதினும் எங்கள் பிரான்எழுத் தொன்றி விருப்பது சங்கைகெட்டு அவ்வெழுத் தொன்றையும் சாதித்தால், அங்கரை சேர்ந்த அருங்கலமாமே" என்றும், "பழுத்தன ஐந்தும் பழமறையுள்ளே, விழித்து அங்குறங்கும் வினையறிவாரில்லை, எழுத்தறிவோ மென்று உரைப்பர்கள் ஏதர், எழுத்தை அழுத்தும் எழுத்

தடியாரே, என்றும்'', அருளியதாகிய எழுத்தை அழுத்தும் எழுத்தாகிய அதிசூக்கும பஞ்சாக்கரத்தை வேதம் இறுதியில் உடைத்தாயிருத்தலால் - அருமறைக் கடையில் என்றார்.

''குருவழியாய குணங்களில் நின்று கருவழியாய கணக்கை அறுக்க, வரும் வழி மானம் அறுக்கவல்லார்கட்கு அருள்வழி காட்டுவது அஞ்செழுத்தாமே'' என்றும், நெஞ்சு நினைந்து தம்வாயாற் பிரான் என்று, துஞ்சும்பொழுதுன் துணைத்தாள் சரண் என்று, மஞ்சுதவழும் வடவரைமீதுறை, அஞ்சில் இறைவன் அருள் பெறலாமே'' என்றும் அருளியவாறு தூலபஞ்சாக்கர ரூபமாகிய சகல வித்தைகளையும் குருமுகமா யுணர்ந்து அருள்வழிகண்டு, அதன் பின்னர், ''எளியவாது செய்வார் எங்கள் ஈசனை. ஒளியை உன்னி உருகுமனத்தராய், தெளியவோதிச் சிவாயநம எனும். குளிகையிட்ட பொன் ஆக்குவன் கூட்டையே'' என்றருளியவாறு. சூக்கும பஞ்சாக்கரத்தால் ஈசனு கிய ஒளியை உன்னி குளிகையிட்ட பொன்போலும் ஆகி, ''சிவாயநம எனச் சித்தம் ஒருக்கி, அவாயம் அறவே அடிமையதாக்கிச், சிவாய சிவ சிவ என்றென்றே சிந்தை, அவாயங்கெட நிற்க ஆனந்தமாமே'' என்றருளியவாறு(சிவாய)சிவனுக்கு(நம)அடிமை என்னும் பொருளை யுணர்ந்து சிவாய சிவ சிவ என்றென்றே சிந்தையை நிறுத்தி, மும் மலங்களானும், அவற்றின் காரியங்களானும் வரும் அபாயமனைத்தையுங் கெடும்வகை செய்து ஆனந்தமாயிருப்பதாகிய நிலையினை யுடையவர் அன்பரேயாகலான்—அன்பர் தம் சிந்தையில் அலர்ந்த—என்றார்,

''ஓங்காரமே நற்றிருவாசி உற்றதனில், நீங்கா எழுத்தே நிறை சுடராம், ஆங்காரம், அற்றார் அறிவர் அணியம்பலத்தான் ஆடலிது பெற்றார் பிறப் பற்றார் பின்,'' என்றதனுல் தூலபஞ்சாக்கரமும், ''சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவாவீசுகரம், ஆர்க்கும்யகரம் அபயகரம், பார்க்கில் இறைக்கு, அங்கிநகரம் அடிக் கீழ் முயலகனார், தங்குமகரமதுதான்,'' ''தோற்றம் துடியதனில் தோயுந் திதியமைப் பில் சாற்றியிடும் அங்கியிலே சங்காரம், ஊற்றமாம். ஊன்ற மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்முத்தி, நான்றமலர்ப்பதத்தே நாடு,'' என்றதனுல் சிகாரமுதலாகக் கூறுவதா கியசூக்கும பஞ்சாக்கரம் நிற்கும்நிலையினையும், ''சிவாயநமஎனும்,குளிகையிட்ட பொன் னுக்குவன் கூட்டையே,'' என்றபடி சிருட்டியாதி பஞ்சகிருத்தியத்தால் ஆக்கும் முறை யினையும் விளக்குதலான் சூக்கும பஞ்சாக்கரமும், ''மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம், சாய அமுக்கி அருள்தானெடுத்து-நேயத்தால், ஆனந்தவாரிதியில் ஆன்மா வைத்தான் அழுத்தல், தான் எந்தையார்பரதந்தான், சிந்தை அபாயங்கெட நிற்க ஆனந்தமாமே'' என்றபடி அதிசூக்கும பஞ்சாக்கரத்தால் குஞ்சிதபாதத்தில் அழுத்தி, அபாயத்தைக்கெடுத்து ஆனந்தமாய் நிற்கு நிலையை அம்பலத்தின்கண் நடிக்கும் நடன முறையான் விளக்குதலான் - திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம்பலம் என்றார்.

இதனுல் தூலசூக்கும அதிசூக்குமமாகக் கூறப்படும் பஞ்சாக்கரம் வேதத்தின் முத லிடை கடைகளினும் அன்பர் சிந்தையினும் விளங்கும் முறையினையும், இம் மூவகை யுண்மைகளையும் திருச்சிற்றம்பலம் காட்டும் முறைமையினையும் இனிது விளக்கிய வாறுமென்க. (கoச)

திருக்களிற்றுப் படியில் வணங்குதல்.

வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப மன்றுளே மாலயன் தேட
ஐயர்தாம் வெளியே யாடுகின் றாரை அஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக் கரணமோ கலந்தஅன் புந்தச் [கு
செய்தவம் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான் திருக்களிற் றுப்படி மருங்

(எ - து.) நடராஜப்பெருமானுகிய ஐயர் தம்மைத்திருமாலும் பிரமனும் கீழும் மேலுந் தேடிக்கொண்டிருக்கத் தாம் இம் மண்ணுலகம் எல்லாவுலகினும் மேம்பட்டு

விளங்கவும், வேதங்கள் சிலம்புருவாய்த் திருவடியில் ஒலிக்கவும், சிதாகாசமாகிய வெளியிலே கூத்தாடுகின்றவரை ஆரூரர் தெரிசனஞ்செய்வதற்குமுன் அவருள்ளத்துள்ளே கலந்திருக்கும் அன்பானது கைகளிலும் கண்களிலும் அந்தக்கரணங்களிலும் கலந்து அவைகளைத் தத்தம் தொழில்களைச் செய்யும்படி உந்திற்று; உந்தவே கைகளோ அஞ்சலியாகக் குவிந்தன. கண்களோ திளைத்தன. அந்தக்கரணமோ அன்புருவேயாய்க் கண்டகாட்சியளவேயாய் நின்றன. இவ்வாறு கைகள் குவிக்கவும், கண்கள் திளைக்கவும், அந்தக்கரணங்கள் அன்புருவாகவும் செய்யவல்ல பேரன்பைப்பெறும் பெருந்தவத்தைச்செய்த அப்பெரியோரையும் அவ்வன்பானது திருக்களிற்றுப்படி யென்னும் பஞ்சாக்கரப்படியின் சமீபத்திற்சென்று வணங்கி எழுந்திருக்கச்செய்ய, வணங்கி எழுந்தனர் என்பதாம்.

நாவலர் பெருமானார் திருவணுக்கன் திருவாயிலைக்கடந்து திருக்களிற்றுப் படி மருங்கில் எழுந்தருளியபோது அவரதுகருவி கரணங்கள் முழுவதும் ஆனந்த நிலையாய் நின்ற அவ்வதிசயத்தை இத்திருப்பாட்டாற் கூறிய தெனக. (கஏ௯)

மாறிலா மகிழ்ச்சியில் மலர்தல்.

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும் திருந்துசாத் துவிதமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

(எ - து.) நம்பியாரூரர் தம் செயலற்று அன்பின் செயலுட்பட்டு தாழ்ந்தெழுந்து பஞ்சாக்கர சொரூபராய் பஞ்சகிருத்தியாதி காரியாய்ப் பந்தமென்னும் துன்பத்தைத் தலையெடாவண்ணம் மிதித்து முத்தி என்னும் பேரின்பத்தை எடுத்தளிக்குந் தாதாவாய் ஆனந்தத் தாண்டவஞ்செய்யும் சந்திரசேகரனைக் காணும்பொழுது அவ்வீசன் பரமானந்த எல்லையின்கணின்று தம்மையே காணும் காட்சிவசப்பட்ட முத்தர்களது பொறிபுலன் கரணாதிகளெல்லாம் அக்காட்சியின் வயமாகவே நின்று திளைத்து சிவானந்தத்தில் மூழ்கும்வண்ணம் செய்தருளும் பெருங்கூத்தினின்றும் பெருகிவாராநின்ற பேரின்ப வெள்ளத்துள் மூழ்கினார். மூழ்கவும் அவ்வின்பவசப்பட்ட கண்களாலாகிய காட்சியுணர் வொன்றே சத்த பரிச ரூப ரச கந்தமெனப் பெயர்பெற்ற ஐவகை யுணர்வையுங் கொள்ளை கொண்டது. அஃதேபோல் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் கரணங்கள் நான்கும் அக்காட்சியுணர்வின் வழியே சென்று திருவுருவைச் சிந்தித்த சித்தமொன்றேயாயிற்று. அஃதேபோல், அவ்வந்தக்கரணங்களைத் தொழிற்படுத்தும் சாத்வீகம் ராஜசம் தாமசம் என்னும் முக்குணங்களும் திருவுருவைச் சிந்தித்த சித்தத்தின் வழியாய் நின்ற சாத்வீக குணமாகவே யாயிற்று. ஆகவே, புலன்களாலும் கரணங்களாலும் குணங்களாலும் மாறுபடுதலில்லாத சிவானந்தக் களிப்பினால் திருவுள்ளம் மலர்ந்திருக்கப் பெற்றனர் என்பதாம்.

ஆடும் இந்து வாழ் சடையான் ஆனந்த எல்லையில்*** திளைத்து ஐந்துபேரறிவும்*** சாத்துவிதமேயாக மாறிலாமகிழ்ச்சியின் மலர்ந்தார் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக் கைம்மலர் உச்சிமேல் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்.

(எ - து.) மலர்ந்த வுள்ளத்தோடும் கூடி தன்னுள்ளக் கமலத்தை மலரச்செய்த் நடராசமூர்த்தியாகிய சிவசூரியனை நோக்கித் தெள்ளிய நிலவானது மலர்போலும் மலர்ந்திருக்கப்பெற்ற சடையுடையானே எனக்கு இம்மண்ணுலகத்திலே வர வந்த

இந்த மானிடப் பிறவியானது துன்பத்தைத்தரும் என்று எண்ணிக் கலங்கினேன். அந்தோ! மானிடப்பிறவி யுடையார்க்குத் துன்பத்தையே செய்யவல்ல பொறிபுலனாதிக ளெல்லாம் என்மாட்டு அவையொன்றும் செய்யப்பெறாது "என்போடியைந்த தொடர்பு அன்போடியைந்த வழக்கென்ப" என்றபடி அவையெல்லாம் அன்போடியைந்தனவாய் மேலான இன்பத்தையே செய்து அக்கலக்கத்தினின்றும் என்னைத் தெளிவித்தன. ஆதலான் எனக்கு இப்பிறவியே வாலிதாம், (மேலான இன்பமாம்.) ஆகவே இப்பிறவி எனக்கு இன்பத்தையே செய்யும் வண்ணம் செய்வாய் என்று வேண்டி கண்களினின்றும் ஆனந்தநீர் பொழிய, கைகளைச் சிரமேற் குவித்துப் பண்ணிசையின்மிகுந்து அறிதற்கரிய பொருளும் அப்பொருளுக் கமைந்த கருத்தும் அமைந்துள்ள திருப்பதிகம் பாடிப் போற்றிப் பணிந்தனர் என்பதாம். (கoஎ)

தடுத்துமுன் ஆண்ட தொண்டனார் முன்பு தனிப்பெருந் தாண்டவம் புரிய
எடுத்தசே வடியார் அருளினால் தரளம் எறிபுனல் மறிதிரைப் பொன்னி
மடுத்தநீள் வண்ணப் பண்ணை "ஆரூரில் வருக நம் பால்" என வானில் [கார்.
அடுத்தபோ தினில்வந் தெழுந்ததோர் நாதம் கேட்டலும் அதுஉணர்ந் தெழுந்

(எ - து.) நம்பியாரூரர் பணிந்தபோது ஆன்மாக்கட்குச் சிற்றின்பம் பேரின்பம் என்னும் இரண்டனுள் ஒன்றன்றி இரண்டையும் ஒருங்கே யளிக்கும் தமது கருணை தோன்ற அவ்விரண்டையும் அளிக்கவல்ல பெரிய தாண்டவத்தை அனவரதமுஞ் செய்ய ஓரடியையூன்றி ஓரடியை எடுத்தவராகிய நடராஜப்பெருமான் முன்னே தடுத்து ஆட்கொள்ளப்பட்டவராகிய சுந்தரமூர்த்திகள் கேட்கும்படியாக ஆகாயத்தினின்றும் மேன்மேல் மறித்துமறித்து வருவதாகிய அலைகளென்னும் கைகளால் முத்துகளைக் கரையின்கண் எறியும் காவிரிநதி பாய்கின்ற அழகிய வயல்சூழ்ந்த திருவாரூரில் நீ நம்மிடத்து வரக்கடவாயென்று எழுந்ததாகிய ஓர் நாதத்தை கேட்டு இங்ஙனம் அருளியது என்னையோ என்று அவ்வருளை நாடிஎழுந்தனர் (எ-ம்.) (கoஅ)

ஆடுகின் றவர்பே ரருளினால் நிகழ்ந்த அப்பணி சென்னிமேல் கொண்டு
சூடுதம் கரங்கள் அஞ்சலி கொண்டு தொழுந்தொறும் புறவிடை கொண்டு
மாடுபே ரொளியின் வளரும் அம்பலத்தை வலங்கொண்டு வணங்கினர் போந்து
நீடுவான் பணிய உயர்ந்தபொன் வரைபோல் நிலைஎழு கோபுரம் கடந்து.

(எ - து.) புறப்பட்ட நம்பியாரூரர் ஸ்ரீநடராஜப் பெருமான் திருவருள் மேற்கொண்டு சொல்லிய அவ்வாணையைத் தலைமேற்கொண்டு முன் தலைமேல் குவித்திருந்த கைகளை எடுத்து மார்பின்கண் அஞ்சலியாக வைத்துக்கொண்டு திருக்களிற்றுப்படியை விட்டு வெளியே வருவதற்குப் பிரியா அன்பால் பலமுறையும் வணங்குவார். வணங்குந்தோறும் எம்பெருமானே! உன் காட்சியை நான் எங்ஙனங் காணுதொழுவேன். உனது ஆணையைக் கடந்து எங்ஙனம் நிற்கப்பெறுவேன். எனக்கு விடை தருவாய் விடை தருவாய் என்று பன்முறையும் வேண்டிக்கொண்டு வெளியே வந்து எப்பக்கமும் பொன்னொளி பரப்பும் பொன்னம்பலத்தை வலமாகப் பிரதக்ஷணம் வந்து எதிரே நின்று வணங்கி வெளியே வந்து மேகமண்டலமும் தாழும்படி உயர்ந்த பொன்மலைபோலும் ஓங்கியிருக்கும் எழு நிலைகளையுடைய தெற்குக் கோபுரத்தைக் கடந்து சென்று,— (கoக)

நின்றுகோ புரத்தை நிலம்உறப் பணிந்து நெடுந்திரு வீதியை வணங்கி
மன்றல்ஆர் செல்வ மறுகினூ டேகி மன்னிய திருப்பதி அதனில்
தென்திசை வாயில் கடந்துமுன் போந்து சேட்படு திருஎல்லை இறைஞ்சிக்
கொன்றைவார் சடையான் அருளையே நினைவார் கொள்ளிடத் திருநதிகடந்தார்.

(எ - து.) அங்குநின்று அத்திருக்கோபுரத்தைச் சாஷ்டாங்கமாக வணங்கி அதுகடந்து தேரோடும் பெரிய வீதியின்கண் வந்து அவ்வீதியையும் வணங்கி, அதனையுங்

தாண்டி பலவகை வாசனைத் திரவியங்களும் நிறையப்பெற்று நறுமணங் கமழும் கடைவழியே சென்று எக்காலத்தும் அழிவின்றி விளங்கும் அத்தில்லைப் பதியின்கண் உள்ள தெற்கு வாயிலைக் கடந்து நெடுந் தூரத்திலுள்ள தில்லை எல்லை முன் சென்று வணங்கி, கொன்றைமாலை சூடிய நீண்ட சடையினை யுடைய நடராஜப் பெருமான் "ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தில் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து, ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக, குணம் ஒரு மூன்றும் திருந்துசாத்துவிதமேயாகச்" செய்த திருவருளை மறவாமல் நினைப்பவராய்க் கொள்ளிடமென்னும் திருநதியைக்கடந்து அப்புறம் வந்தனர் என்பதாம். (கக0)

சீகாழியை யணைதல்.

வேறு.

புறந்தருவார் போற்றிசைப்பப் புரிமுந்நூல் அணிமார்பர்
அறம்பயந்தாள் திருமுலைப்பால் அமுதுண்டு வளர்ந்தவர்தாம்
பிறந்தருளும் பெரும்பேறு பெற்றதெனை முற்றுலகில்
சிறந்தபுகழ்க் கழுமலமாம் திருப்பதியைச் சென்றணைந்தார்.

(எ - து.) அப்போது ஆரா அன்பால் அடியாரெல்லாம் விடைபெற்றுச் செல்ல அறியாது போற்றி போற்றி என்று போற்றி நீற்க முப்புரி நூலாகிய உபவீதத்தை அணிந்த ஆரூரர்பெருமான் சீகாழிப்பதியை நோக்கி வரும்பொழுது இப்பதி பசுதருமம் பதிதருமமாகிய எல்லாத் தருமங்களையும் தளராது வளர்த்த மாதாவாகிய உமாதேவியார் கொடுத்தருளிய ஞானமிர்தமாகிய திருமுலைப்பாலை உண்டு வளர்ந்த சம்பந்தப்பெருமான் அவதரித்தருளும் பெரும் பாக்கியத்தைப் பெற்றுள்ளதென்று உலக முழுவதும் பரவிய சிறந்த புகழினையுடைய கழுமலமாகிய திருப்பதியைப் போய் அடைந்தருளினர் என்பதாம். (கக௧)

பிள்ளையார் திருவவதாரம் செய்த பெரும்புகலி
உள்ளுநான் மிதியேன் என் றூரெல்லைப் புறம்வணங்கி
வள்ளலார் வலமாக வரும்பொழுதின் மங்கைஇடம்
கொள்ளும்மால் விடையானும் எதிர்காட்சி கொடுத்தருள,—

(எ - து.) ஆரூரர் அங்கு எழுந்தருளியபொழுது, எம்பிரானாகிய ஞான சம்பந்தப் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தருளிய திருப்புகலியன்றோ, இப்புகலியுள்ளே புகுந்து மிதிப்பனோ. மிதித்துச் செல்லேன் என்று அப்பதியின் புறவெல்லையின் கண்ணே நின்று வணங்கிப்பின் அப்பதியைப் பிரதக்ஷணஞ் செய்து வரும்போது உமாதேவியைப் இடப்பாகத்தில் வைத்தவனும் மால்விடையை யூர்தியாகக் கொண்டவனுமாகிய இறைவன் எதிரே காட்சி கொடுத்தருள,—

இவ்விரண்டு திருப்பாட்டானும்,—வள்ளலாராகிய ஆரூரர் சிதம்பரத்தில் தம்மைப் போற்றும் அடியவர் திருக்கூட்டத்தில் பிரியா விடைபெற்று சீகாழிக்குச் சென்றனர் என்றும், அங்ஙனம் சென்றபொழுது, அப்பதியை நோக்கி இது நம்பிரானாகிய பிள்ளையாரின் சிற்றடிபட்டுள்ள பெரும்பதியன்றோ, இப்பதிக்குள் யான் புகத் தலைப்படின் பதியை மிதித்தவனாவேனோ, அவ்வடியை மிதித்தவனாவேனோ ஆகலான் இப்புகலிக்குள் புகுந்து காலால் மிதியேன். என்றஞ்சியபோது, தோணியப்பர், நம் அடியைக்கண்டு வணங்கும் அவாவினை நமது பிள்ளையின் அடியில் வைத்து அவ்வரிய பொன்னடியை உள்ளத்தே ஏற்றுச் செல்கின்றானே. அவ்வடியை நினைப்பவர்க்கு நாம் காட்சி கொடுத்தருளல் நமது கடமையன்றோ என்று பிள்ளையாருக்குக் கொடுத்த காட்சிபோலும் ஆரூரர் காணும்படி அவர் எதிரே சென்று காட்சி கொடுத்தருளினர் என்றும் கூறியவாறாகும். (கக௨)

மண்டியபே ரன்பினால் வன்தொண்டர் நின்றிறைஞ்சித்
தெண்டிரைவே லையின்மிதந்த திருத்தோணி புரத்தாரைக்
"கண்டுகொண் டேன் கயிலையினில் வீற்றிருந்த படி" என்று
பண்தரும்இன் இசைபயின்ற திருப்பதிகம் பாடினார்.

(இ - ள்.) தெள்ளிய அலைகளையுடைய கடலில் ஊழிக்காலத்தில் மூழ்கிப்போகாது தோணிபோல் மிதக்கும் தன்மைவாய்ந்த சீகாழியாகிய தோணிபுரத்தில் வீற்றிருக்கும் பெருமானார் விருஷபாரூடராய் உமாசஹாயராய்க் காட்சி கொடுத்தமாத்திரத்தில் வன்றொண்டப் பெருமானார் உள்ளமெல்லாம் நிறைந்த பேரன்பினால் நிறையப்பெற்றவராய் நின்று வணங்கி என்னைத் தடுத்தாண்டுகொண்ட இறைவனே! உன்னை நான் கைலையில் அந்நாளிற் கண்டபடியே இந்நாளிலும் இத்தோணிபுரத்திலும் உமாதேவியுடன் நீ பேருருக்கொண்டிருக்கக் கண்டுகொண்டேன் என்று பண்ணிசை பயிலும் திருப்பதிகத்தைப் பாடியருளினார் என்பதாம்.

இதனால் பிள்ளையாருக்குக் கைலையில் பால்கொடுத்தருளுவதுபோலும் இங்கு கொடுத்தருளினாய். அஃதேபோல் எனக்கும் கைலையில் காட்சி கொடுத்தருளுவது போல் காட்சி கொடுத்தருளினாய் என்று திருப்பதிகம் பாடினாரென்று கூறப்பட்டது.

திருக்கோலக்காவை வணங்கல்.

இருக்கோலம் இடும்பெருமான் எதிர்நின்றும் எழுந்தருள
வெருக்கோளுற் றதுநீங்க ஆரூர்மேல் செலவிரும்பிப்
பெருக்கோதம் சூழ்புறவப் பெரும்பதியை வணங்கிப்போய்த்
திருக்கோலக் காவணங்கிச் செந்தமிழ்மா லைகள்பாடி,—

(இ - ள்.) வேதங்களெல்லாம் நாங்கள் உன்னைக் கண்டு போற்ற நீ எதிரே நிற்குங்காலம் எக்காலமென்று ஓலமிடும் இறைவன் தாம் வேண்டுங்காலந் தோறும் எதிரே நின்று தம்மால் ஓதப்படும் ஒத்துக்களைக் கேட்டருளும் கருணையாளன் மறைந்தனன்; மறையவும், அந்தோ! காணுதொழிந்தேனே! என்செய்வினை யறுத்திடும் செம்பொனை, அம்பொனொருத்தனை, அழும்மலர்க்கண்ணினை அடியவர்க்கல்லால் அறிவரிது, அவன் திருவடியிணை இரண்டும் கழுமலவளநகர் கண்டுகொண்டேனே. அவன் எங்குற்றான் என்று சிறிதுநேரம் வெருட்சிகொண்டு அந்நேரத்திற்றானே அவ்வெருட்சியினின்றும் நீங்கி நம்மை நடராஜப்பெருமான் கட்டளையிட்டதுபோலும் நாம் அங்கு வருவதற்காகவே இத்தோணியப்பனும் அங்கு எழுந்தருளி யிருப்பான்போலும் என்று தெளிந்து திருவாரூருக்குப்போக விருப்பங்கொண்டு பெருக்கினையுடைய கடல்சூழ்ந்த சீகாழிப்பதியை வணங்கி அப்பாற் சென்று திருக்கோலக்கா வென்னும் திருப்பதியை வணங்கி அங்கு திருப்பதிகம் பாடி.—

இதனால் காமுகர்க்கு இளம்பாவையர் உரைபோலும் இறைவனுக்கு ஆரூரரது பாட்டு இனிக்கும் இயல்பினையுடைத்தாகலின், அவர் பாட்டுக்குகந்து எதிர்காட்சி கொடுத்தனன் என்பதாம். (கக௪)

திருப்புன்கூரை வணங்கல்.

தேன்ஆர்க்கும் மலர்ச்சோலைத் திருப்புன்கூர் நம்பர்பால்
ஆனாப்பே ரன்புமிக அடிபணைந்து தமிழ்பாடி
மான்ஆர்க்கும் கரதலத்தார் மகிழ்ந்தஇடம் பலவணங்கிக்
கால்ஆர்க்கும் மலர்த்தடம்சூழ் காவிரியின் கரைஅணைந்தார்.

(இ - ள்.) அதனைக் கடந்து வண்டுகள் ஒலிக்கும் மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூருக்குச் சென்று அங்கெழுந்தருளியிருக்கும் சிவலோக நாதனைக்

கண்டு அடங்காத பேரன்புமீதூர்ந்து திருவடிகளில் வீழ்ந்து வணங்கி திருப்பதிகம் பாடி, அப்பதியை விட்டு மானொலிக்கும் கரதலத்தையுடைய இறைவனார் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் திருநீரோ முதலிய பல திருத்தலங்களையும் கண்டு வணங்கி, நறுமணங்கமழும் மலர்கள் நிறைந்துள்ள தடாகங்கள் சூழ்ந்த காவிரியின் கரை என்பதாம். (ககரு)

மாயூரத்தையும் அம்பரையும் வணங்கல்.

வம்புலாம் மலர் அலைய மணிகொழித்து வந்திழியும்
பைம்பொன்வார் கரைப்பொன்னிப் பயில்தீர்த்தம் படிந்தாடித்
தம்பிரான் மயிலாடு துறைவணங்கித் தாவில்சீர்
அம்பர்மா காளத்தின் அமர்ந்தபிரான் அடிபணிந்தார்.

(இ - ள்.) நறுமணங் கமழும் மலர்கள் அலைந்து செல்ல, முத்து முதலிய மணிகளையும் பசிய பொற்கட்டிகளையும் கரையில் கொழித்துக்கொண்டு பாய்தலையுடைத்தாகிய பெரிய காவிரிக் கரையை வந்தணைந்த நம்பியாரூரர் அந்தக் காவிரித் தீர்த்தத்தில் திருமேனிபடிய மூழ்கித் திருநீறு பூசித் தமதுபெருமானாராகிய மயூரநாதர் வீற்றிருக்குந் திருமயிலாடுதுறையை வணங்கி, கெடுதலில்லாத சிறப்பினையுடைய திருவம்பர் மாகாளத்துக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் காளகண்டேசுவரரை வணங்கினார் என்பதாம் (ககசு)

திருப்புகலூரை வணங்கல்.

மின்னார்செஞ் சடைஅண்ணல் விரும்புதிருப் புகலூரை
முன்னாகப் பணிந்தேத்தி முதல்வன்தன் அருள்நினைந்து
பொன்ஆரும் உத்தரியப் புரிமுந்நூல் அணிமார்பர்
தென்நாவ லூராளி திருவாரூர் சென்றணைந்தார்.

(இ - ள்.) மின்போலும் ஒளி விடும் சிவந்த சடையினையுடைய சிவபெருமானுக்கினிய திருப்புகலூருக்குப் போய் சந்நிதானத்தின் முன்னே நின்று பணிந்து போற்றினார். போற்றிய பின்னர் பொன்னாடையையும், முப்புரி நூலையும் அணிந்துள்ள திருமார்பினையும் உடைய திருநாவலூரில் அவதரித்த ஆரூரர நடராஜப் பெருமான் அருளிய திருவாக்கை நினைந்து திருவாரூரை அடைந்தருளினார். எ-ம்.

நாவலூரார் — திருப்புகலூரைத் தெரிசித்த பின்னர் நடராஜன் திருவாரூருக்கு நம்பால் வருக என்றருளியதை மறந்து பல பதிகளுக்குச் செல்வது ஆவணையைக் கடந்திருப்பதாக அன்றோ வரும். ஆகலான் அவ்வாணையை எண்ணி அஞ்சி வேறு திருப்பதிகளுக்குச்செல்ல எண்ணாது நேரே திருவாரூருக்குச்சென்றன ரென்க. (ககஎ)

தியாகேசன் அழைக்கச்சொல்ல அடியார்கள் எதிர்கோடல்.

தேர்ஆரும் நெடுவீதித் திருவாரூர் வாழ்வாருக்
காராத காதலின்நம் ஆரூரன் நாம்அழைக்க
வாராநின் றான்அவனை மகிழ்ந்தெதிர்கொள் வீர்"என்று
நீர்ஆரும் சடைமுடிமேல் நிலவணிந்தார் அருள்செய்தார்.

(எ - து.) நாவலூரார் திருவாரூரை நோக்கிப் போனபோது, கங்கைவாழும் திருமுடிமேல் சந்திரனைத் தரித்த தியாகேசன் தேரோடும் பெரிய வீதியில் வாழ்கின்ற அடியார்கள் கனவின் கண்ணே சென்று அன்பர்காள்! நம் ஆரூரன் தில்லையின்கண் வந்தபோது நாம் நீ நம்முடைய திருவாரூருக்கு வருவா யென்று அழைக்க,

(எ - து.) பின்னர் விண்ணுலகளவும் நீண்டிருக்கும் திருவாயிலைத் தெரிசித்துப் பூமியில் திருமேனிபொருந்த பஞ்சாங்கத்தால் வணங்கி உள்ளே சென்று தேனை யுடைய கற்பகமலர்மாலைகளைத் தூக்கியிருக்கும் தேவாசிரிய மண்டபத்தைக் கண்டு வணங்கி எழுந்து ஊனையும் உயிரையும் ஒருங்கே யுருக்கவல்ல அன்பு மீதூர்தலால் சிரமேற் குவித்த இரு கரங்களோடு நறுமணங்கமழும் கொன்றைமாலை யணிந்த புற்றிடங்கொண்ட பெருமான் கோயில்கொண்டிருக்கும் மூலட்டானத்தைச் சூழ்ந்த திருமாளிகையின் வாயிலை யடைந்தருளினார் என்பதாம். (௧௨௪)

புற்றிடம் கொண்ட புராதனனைப் பூங்கோயில் மேய பிரானையார்க்கும்
பற்றிடமாய பரம்பொருளைப் பார்ப்பதி பாகனைப் பங்கயத்தாள்
அர்ச்சனை செய்ய அருள்புரிந்த அண்ணலை மண்மிசை வீழ்ந்திறைஞ்சி [றார்.
நற்றமிழ் நாவலர் கோனுடம்பால் நன்மையின் தன்மையை மெய்ம்மை பெற்

(எ - து.) திருவாயிலை அடைந்து புற்றை இடமாகக் கொண்ட காலம் இன்ன கற்பம் என்று அளவிடக்கூடாத புராணனைச் சராசரமாயிருக்கின்ற எல்லா உயிர் களும் எல்லாச்சமயிகளும் வந்து பற்றுதற்கிடமாயுள்ள பரம்பொருளை, உமாதேவி யார்க்கு ஓர் பங்குடையவனை, தாமரை மலரைக் குடிபுகுந்து செல்வமளிக்கும் இலக் குமிதேவி சரண்புகும் இடமாகக்கொண்டு அன்பினால் அருச்சனை செய்ய அத்திரு மகட்கு அருட்செல்வமளிக்கு முதல்வனைப் பூமியில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி, தமிழ்ப்பதிகம் பாடும் நாவலூரார் இறைவனாணையால் எடுத்த உடம்பினால் அடையவேண் டிய அன்பின் பயனாயுள்ள அன்பின் விளைபயனை மெய்ம்மையாகப் பெற்றனர் எ-ம்.

"ஒருவனு யுலகேத்த நின்ற நாளோ வோருருவே மூவுருவமான நாளோ, கருவ னாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ, மருவனாய் மண்ணும் விண்ணும் தெரித்த நாளோ மான் மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகர், திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே" என்றதனால் — புராணன் என்றார்.

கயிலையில், ஆதிமூர்த்தியாகிய இறையவன், இவ்வாரூரரது திறத்தை நோக்கி "மாதர்மேன் மனம் வைத்தனை, தென்புவிமீது தோன்றி அம்மெல்லியலாருடன், காதல் இன்பங் கலந்து அணைவாய்" என்றும், "மாதவஞ்செய்த தென்திசை வாழ்ந்திடத் தீதிலா திருத்தொண்டத் தொகை தரப்போதுவார்" என்றும் கூறிய மெய்ம்மொழிகள் நிகழ் வதற்குரிய இடமும் சமயமும் கூடியபடியான் - உடம்பால் நன்மையின் தன்மையை மெய்ம்மை பெற்றார் என்றார். (௧௨௫)

அன்புபெருக உருகிஉள்ளம் அலையஅட்டாங்கபஞ் சாங்கமாக
முன்பு முறைமையி னால்வணங்கி முடிவிலாக் காதல் முதிரஓங்கி
நன்புல னாகிய ஐந்தும்ஒன்றி நாயகன் சேவடி எய்தப்பெற்ற
இன்பவெள் ளத்திடை மூழ்கிநின்றே இன்னிசை வண்தமிழ் மாலைபாட,—

(எ - து.) தம்முடைய உள்ளத்தினுள்ளே அன்பானது பெருக, திரியாங்கமாகிய மனவாக்குக் காயங்கள் உருகி, புற்றிடங்கொண்ட புராணனுக்கு நாம் என்ன செய்யக் கடவோமென்று அலைந்து முன் சாஷ்டாங்கமாக வணங்கியதே யல்லாமல் மீண்டும் அஷ்டாங்க பஞ்சாங்கமாகவணங்கி அப்பெருமானிடத் துண்டாகிய ஆசையானது முற்றுப் பெறுதலை யடையாமல் மேன்மேல் வளர்ந்தோங்கி அந்த ஆசை வெள்ளத் துள் ஐம்பொறிவழியே செல்லும் ஐம்புலன்களும் ஒன்றாகக்கூடி பூங்கோயில் மேய பிரானது திருவடியை அடையப் பெற்றதனால் உண்டாகிய பேரின்ப வெள்ளத்துள் மூழ்கிநின்று இனிய இசையின் வளமையோடு கூடிய பதிகத்தை ஓதியருள,—

புற்றிடங்கொண்ட புராணனாகிய பூங்கோயின் மேயபிரானைத் தெரிசிக்குங் காலத்து, ஆரூரில் நம்பால்வருக என்றருளியது இக்காட்சியைக் கண்டு களிக்கத்தானோ என்று திருவுள்ளத்துத் தோன்ற, தோன்றிய அப்பொழுதே, அந்த நடராஜப் பெருமானைத் தெரிசனஞ் செய்தகாலத்து, அவனது ஆனந்த நடனத்தில் வந்த பேரின்ப வெள்ளத்துள் மூழ்கி நின்றதுபோல் மூழ்கப்பெற்றனராகலான் - நன்புலனாகிய ஐந்தும் ஒன்றி நாயகன் சேவடி எய்தப்பெற்ற இன்ப வெள்ளத்திடை மூழ்கி நின்றனர் என்றார். (கஉசு)

வாழிய மாமறைப் புற்றிடங்கொள் மன்னவனார் அருளால் ஓர்வாக்குத்
"தோழமை ஆக உனக்குநம்மைத் தந்தனம் நாம்முன்பு தொண்டுகொண்ட
வேள்வியில் அன்றுநீ கொண்டகோலம் என்றும் புனைந்துநின் வேட்கைதீர
வாழிமண் மேல்விளை யாடுவாய்" என் றாரூரர் கேட்க எழுந்ததன்றே.

(எ - து.) நம்பியாரூரர் அன்புமேலிட்டுத் திருப்பதிகம் ஓதிவரும்போது பெருமை பொருந்திய வேதரூபமாகிய புற்றினை யிடமாகக் கொண்டருளிய இறைவன் (ஆரூர! என்னன்ப! என்சுந்தர) உனக்கு நம்மைத் தோழமையாகத் தந்தனம் ஆகலின் நாம் முன்பு வேள்வியில் தொண்டுகொண்ட அன்று நீ கொண்டகோலம் என்றும் புனைந்து கடல்சூழ்ந்த இம்மண்ணுலகில் நின் வேட்கைதீர வாழி மண்மேல் விளையாடுவாய் என்று ஆரூரர் கேட்கும்படியாக எழுந்தது என்பதாம்.

நாம் உமையோடு கூடியிருக்கும் மணக்கோலம் என்றும் மாறா திருத்தல்போல் நீயும் என்றும் இருப்பாய், நாம் செய்யும் செயல் விளையாட்டாகவும், அச்செயலில் வினை விளைவுக்கு இடமில்லாமலும் பிறரது வினையைக்களைவதாகவும் இருத்தல் போல் நீ இவ்வுலகில் செய்யும் செயல் இருக்கும் ஆதலான் உன்னிடத்தில் நிகழவரும் மானுட சரீரத்துக்கு ஏற்ற மயக்கமான செயல்கள் இச்செயல்களைக்கண்டு நிகழத் தலைப்பட்டனவே இதற்கு நாம் என்செய்யக்கடவோமென்று மயங்குதல்ஒழிந்து வாழக் கடவாயென்று இறைவன் தனது அருட்டிறத்தை வெளிப்படுத்தினான் என்பார். வேள்வியிலன்று, நீ கொண்டகோலம் என்றும் புனைந்து நின்வேட்கை தீரவாழி மண் மேல் விளையாடுவாய்-என்றார்.

நீ விளையாடுவா யென்று கட்டளை யிட்ட இதுதான் நீ நமக்குச் செய்யும் அடிமையாகும். அன்று நம்மடியான் நீ என்று வழக்கிட்டதும் இவ்வடிமைக்கேயாம். நாம் வழக்கிட்டபடியே நீ உன்னை எமக்கு அடிமையாகத் தந்தனையாகலான் - நாம் எம்மை உனக்குத் தோழமையாகத் தந்தோம் என்பார் - நம்மைத் தந்தனம் என்றார்.

கேட்க விரும்பிவன் தொண்டரென்றுங் கேடிலா தானை இறைஞ்சிநின்றே
ஆட்கொள வந்த மறையவனே! ஆரூ ரமர்ந்த அருமணியே
வாட்கயல் கொண்டகண் மங்கைபங்கா மற்றுன் பெரிய கருணைஅன்றே
நாட்கம லப்பதம் தந்தின்று நாயினே னைப்பொரு ளாகஎன்றார்.

(எ - து.) வன்றொண்டப் பெருமானார், அசரீரிவாக்கைக் கேட்டவுடன் அநாதி நித்தியனாகிய இறைவனை நோக்கி அன்று ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்டு என்னை அடிமையாளாகக் கொண்ட நீ இன்று என்றுந் திருமணக் கோலத்துடன் நான் இருக்க, நீ எனக்குஎன்றுந் தோழனாய்என்னுடன் உல்லாசத்துடனிருக்க விரும்பிய விருப்பம் என்னையோ! இது என்ன கருணைப்பெருக்கோ! என்று ஆராக் காதலோடு வீழ்ந்து வணங்கி அன்று நாவலூரில் என்னை யாட்கொள்ள வந்த விருத்த வேதியனே! ஆரூர் அமர்ந்த அருமணியே! ஒளியுடைய கயல்போலுங் கண்களைக் கொண்ட உமாதேவி பங்கனே! என்று போற்றி அன்று என்னையும் எனது கலியாணத்தையும் ஓர் பொருளாக மதிக்காதவனாய் வழக்காடிய நீ இன்று என்னையும்

என்னுடைய கலியாணத்தையும் பெரும் பொருளாக மதித்து நீ அன்றுபோல் என்றும் மணக்கோலத்துடன் இருப்பாயென்று சொன்னது மன்றி நீ உன்னுசைதீர இம் மண்ணுலகில் விளையாடுவாய் என்றும் அருள் செய்தனையே, இது உன் பெரிய கருணையன்றே என்று அடங்காக் கருணையை நாடி நாடி அடங்கா இரக்கத்துடன் கூறியருளினார் என்பதாம்.

வன்றொண்டர் கேட்க என்றுங் கேடிலாதானை விரும்பி இறைஞ்சிநின்று... ......வாட்கயல் கண்கொண்ட மங்கை பங்கா! இன்று நாயினேனைப் பொருளாக, நாட்கமலப்பதம் தந்தது உன்பெரிய கருணையன்றேஎன்றார் எனக் கூட்டுக. (நாட்கமலப் பதம்தந்தது என்றது இறைவன் அருள் செய்தது என்னும் துணையாய் நின்றது.)

நான் வேட்கைதீர விளையாடுவதோ நான் உனக்குச் செய்யும் அடிமை என்றும், அவ்வடிமைச் செயலுக்கு நீ எனக்குத தோழனாக இருப்பது தானோ என்னைத் தடுத்தாண்டதற்கு நீ செய்யும் அருளின் திறம் என்றும், நீ ஓலைகாணற்பாலையோ என்று அன்று சொன்னபடி, "நாயேன் பல நாளும் நினைப்பின்றி மனத்துன்னைப், பேயாய்த் திரிந் தெய்த்தே" னாகிய எனக்கு அடிமையாகும் பதத்தை (அருளை) க் காட்டி ஆட்கொண்டாய், இன்று அடிமை என்னும் பொருட்டிறத்தை அறியுந் திறமற்ற எனக்கு, உன்னைத் தோழமையாகத் தரும் பதத்தை (அருளை) க் காட்டிவிளையாடுவாய்என்றாய் இங்ஙனம்இருவகையாகக் காட்டியபதமாகிய அருளுக்கு யான் உரியனோ, என்றும் இது உனக்குப் பெரிய கருணையே யன்றி வேறன்று என்றும் இத்திருப்பாடல் கூறிய வாறும். (கஉ௮)

என்று பலமுறை யால்வணங்கி எய்திய உள்ளக் களிப்பினோடும்
வென்றி அடல்விடை போல்நடந்து வீதிவி டங்கப் பெருமான்முன்பு
சென்று தொழுது துதித்துவாழ்ந்து திருமாளிகை வலம் செய்துபோந்தார்
அன்று முதல்அடி யார்கள்எல்லாம் தம்பிரான் தோழர்என் றே அழைந்தார்.

(எ - து.) (இவ்வாறு மனங்கரைந்து கூறிய பின்னர்) அடங்காத ஆசை கொண்டு ஏகாங்க திரியாங்க பஞ்சாங்க அஷ்டாங்க மென்று சொல்லப்படும் அம்முறையினாலெல்லாம் பன்முறையும் வணங்கித்தம்முள்ளத்து நிறைந்த பெருமகிழ்ச்சியோடும் அடியார்பால் இறைவனுக் கிருக்கும் கருணைத்திறம் இத்தன்மைத்தீ மென்று இனி யடியராகும் விருப்பினையுடையா ரெல்லாம் காண வெற்றிமிகுந்த சிறந்த ஏறுபோல் பெருமையுடன் நடந்து மூலட்டானத்தைக் கடந்து வீதி விடங்கப் பெருமானாகிய தியாகேசன் சந்நிதானத்துக் கெதிரே சென்று வீழ்ந்து வணங்கிப் போற்றிப் பெருவாழ்வடையப் பெற்றவராய், சூழ்ந்திருக்கும் திருமாளிகைப் பத்தியை வலமாக வந்து வெளியே வந்தனர்; அன்று முதலாக அடியார்கள் தம்பிரான் தோழரென்றே திருநாமம் வழங்கினார்கள் என்பதாம். (கஉகூ)

மைவளர் கண்டர் அருளினாலே வண்தமிழ் நாவலர் தம்பெருமான்
சைவ விடங்கின் அணிபுனைந்து சாந்தமும் மாலையும் தாரும்ஆகி
மெய்வளர் கோலம் எலாம்பொலிய மிக்க விழுத்தவ வேந்தர்என்னத்
தெய்வ மணிப் புற்று ளாரைப்பாடித் திளைத்து மகிழ்வொடும் செல்லாநின்றார்.

(எ - து.) ஆனந்தக் களிப்புடன் பாடும் வண்டமிழ் நாவலர் பெருமானாராகிய ஆரூரர் நீலகண்டனாகிய இறைவனுடைய திருவருளா (ஆணையினா)ல் திருமேனியில்கொள்ள வேண்டிய மணக்கோல மெல்லாம் பொலிவு பெற்றிருக்க ஆதிசைவப் பிராமணர்களுக் குரித்தாகிய சுந்தரவேடத்தைத் தாங்கினவராய் அதனோடு நறுமணங் கமழும் சந்தனப் பூச்சும் மாணிக்க மாலையும் மலர் மாலையும் அணிந்தவராய்

இவைகளே யல்லாமல் தமது திருமேனியின்கண் வளர்ந்து வருவதாகிய அழகனைத் தம் மிகச் சிறப்புடன் விளங்க இவர் தவங்களில் மிக்கோராகிய அவர்களினும் சிறந்த தவவேந்தரென்று யாவரும் சொல்லும்படி தெய்வமணியாகிய புற்றிடங்கொண்ட பிரானைப்பாடிக்கொண்டு மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்துக் கோயிலைவிட்டுப் போவாரா யினர் என்பதாம்.

இனிச் சைவவேடமும், சாந்த முதலியவைகளும் தத்தமக்குரிய அழகினைச் செய் வது போல் ஆரூரரது மெய்யின்கண் இயல்பாகவே வளரும் அழகும் வளர்ந்த தென் பார் - மெய்வளர் கோலமெலாம் பொலிய என்றார். (கசுய)

பரவையார் திருவவதாரம்.

வேறு.

இதற்குமுன் எல்லைஇல்லாத் திருநகர் இதனுள் வந்து
முதற்பெரும் கயிலை ஆதி முதல்வர்தம் பங்கி னாட்குப்
பொதுக்கடிந் துரிமை செய்யும் பூங்குழல் சேடி மாரில்
கதிர்த்தபூண் ஏந்து கொங்கைக் கமலினி அவத ரித்தாள்.

(எ - து.) சுந்தரவேடங்கொண்ட சுந்தரமூர்த்திகள் திருவாரூருக்கு வருவதற்கு முன்னரே தலைமைபெற்றுள்ள பெரிய திருக்கயிலாயமலையின்கண் வீற்றிருந்தருளும் ஆதிமுதல்வராகிய இறைவனது இடப்பாகத்தையுடைய பார்வதி தேவியாருக்கு அகத்தொண்டு செய்யும் பூக்களை முடித்த கூந்தலையுடைய அனிந்திதை கமலினி என்னும் இரண்டு சேடியர்களுள் ஒளிமிக்க ஆபரணங்களைத் தாங்கிய தனங்களை யுடைய கமலினியார் காலவரையறையின்றி அநாதியாய் விளங்கும் இத்திருவாரூரின் கண் வந்து அவதாரஞ் செய்தனர் என்பதாம்.

இதற்கு முன் முதற்பெருங் கயிலையாதி முதல்வர் * * * கொங்கைக் கமலினி எல்லையில்லாத் திருநகரிதனுள் வந்தவதரித்தாள் எனக்கூட்டுக. (கசுக)

நாமகரணம்.

கதிர்மணி பிறந்த தென்ன உருத்திர கணிகை மாராம்
பதியிலார் குலத்தில் தோன்றிப் பரவையார் என்னும் நாமம்
விதியுளி விளக்கத்தாலே மேதகு சான்றோர் ஆன்ற
மதிஅணி புனிதன் நல்நாள் மங்கல அணியால் சாற்றி,-

(எ-து.) யாவரிடத்து அவதாரஞ் செய்தனரென்றால், தனக்கொரு நாயகனில் லாத உருத்திரனைப்போல் இவ்வுலகில் தமக்கு நாயனைக் கொள்ளாமல் உருத்திர நாய கியை நாயகமாகக் கொண்டிருக்கும் உருத்திர கணிகைமாதர்களுடைய குலத்தில் பிரகாசிக்கும் முத்துத் தோன்றினாற்போல அவதாரஞ் செய்தனர். அவதரித்தபின் னர் மேன்மையிற் சிறந்த பெரியோர்கள் இளம்பிறையணிந்த சிவபெருமானுக் குரிமையாகிய திருவாதிரை நக்ஷத்திரங்கூடிய நல்ல நாளில் சகல மங்கலங்களுடன் வேதவிதிப்படி சிறந்த தெளிவினாலே பரவையாரென்று நாமகரணஞ்செய்து,—

பதியிலார், உருத்திர கணிகைமாராம் குலத்தில் கதிர்மணி பிறந்ததென்னத் தோன்றி, மேதகு சான்றோர் மதியணி புனிதன் நன்னாள் மங்கல அணியால் விதியுளி ஆன்ற விளக்கத்தாலே பரவையார் என்னும் நாமம் சாற்றி என்க்கூட்டிப் பொருள் காள்க. (கசுஉ)

தளர்நடைப்பருவம் சேர்தல்.

பரவினர் காப்புப் போற்றிப் பயில்பெரும் சுற்றம் திங்கள்
விரவிய பருவம் தோறும் விழாஅணி எடுப்ப மிக்கோர்

வரமலர் மங்கை இங்கு வந்தனள் என்று சிந்தை
தரவரு மகிழ்ச்சி பொங்கத் தளர்நடைப் பருவம் சேர்ந்தார்.

(எ - து.) பின்னர் அந்நகரத்தில் வசிக்கின்ற பெருமை பொருந்திய பரவை யாரது சுற்றத்தினரெல்லாம் தங்கள் தெய்வங்களைக் காக்கும்படி வேண்டிக்கொண்டு அதன் பின்னர் தாலப்பருவம், செங்கீரைப்பருவம், சப்பாணிப்பருவம் முதலாகச் சொல்லப்பட்ட பருவங்கடோறும் செய்யப்படும் மங்கல விழாக்களைச் செய்யவும், மேலோர்களெல்லாம் செங்கமலவாசினியாகிய இலக்குமிதேவியே இங்கு வந்தாளென்று தங்களுள்ளத்தில் உதிக்கும் உதிப்பினால் மகிழ்ச்சி யதிகரிக்கவும், தளர்நடைப் பருவத்தை யடைந்தனர் என்பதாம்.

பயில் பெரும் சுற்றம் காப்புப் போற்றிப் பரவினர், திங்கள் விரவிய பருவந் தோறும் எனக்கூட்டுக. (கஙஙு)

மான்இளம் பிணையோ தெய்வ வளர்இள முகையோ வாசத்
தேன்இளம் பதமோ வேலைத் திரைஇளம் பவள வல்லிக்
கான்இளம் கொடியோ திங்கள் கதிர்இளம் கொழுந்தோ காமன்
தான்இளம் பருவம் கற்கும் தனிஇளம் தனுவோ என்ன,—

(எ - து.) (அத்தளர்நடைப் பருவத்தில்) கண்டோரெல்லாம் இப்பரவை இளம் பருவத்தையுடைய ஓர் பெண்மானோ! அன்றி, தெய்வலோகத்தில் கற்பகமரத்தில் அரும்பும் இளமையான ஓரரும்போ! அதுவன்றி, அக்கற்பக மலரிலுள்ள வாசனை பொருந்திய தேனினது இளம்பதமோ! அதுவுமன்றி அலைவீசுகின்ற கடலின்கண்ணுள்ள பவளக்காட்டின் காணப்படும் ஓர் இளங்கொடியோ! அதுவேயுமன்றி, ஒளியினையுடைய சந்திரனது ஓரிளங்கலையோ! இவையாவுமன்றி மன்மதன் தான் இளம் பருவத்திற் கற்றற்கிருந்த மிகவும் இளமையாகிய ஓர் கருப்பு வில்லோ! என்று ஐயங் கொள்ள,— (கஙச)

நாடும்இன் பொற்பு வாய்ப்பு நாளும்நாள் வளர்ந்து பொங்க
ஆடும்மென் கழங்கும் பந்தும் அம்மனை ஊசல் இன்ன
பாடும்இன் இசையும் தங்கள் பனிமலை வல்லி பாதம்
கூடும்அன் புருகப் பாடும் கொள்கையோர் குறிப்புத் தோன்ற,—

(எ-து.) இவ்வாறு யாவராலும் நாடத்தகும் இனிய அழகானது நாளுக்கு நாள் வளர்ந்தோங்கவும், மென்மையாகிய கழற்காயும், பந்தும், அம்மனைக்காயும், ஊஞ்சலும், இதுமுதலியவற்றை ஆடும் வகையும், இந்த ஆட்டங்களில் அவ்வாட்டங்களுக்குரிய இன்னிசைப் பாடல்களைப் பாடும் வகையும் இவையெல்லாமல்லாமல் தங்கள் முதல்வியாகிய உமாதேவியாரது திருவடிகளைக் கூடுதற்குக் காரணமாகிய பாடல்களை அத்தேவியார் மனமுருகும்படி அன்புடன் பாடும் ஓர் கொள்கைக் குறிப்பும் அப் பரவையார்பால் தோன்றவும்,— (கஙரு)

பேதைமைப்பருவம் நீங்கல்.

பிள்ளைமைப் பருவம் மீதாம் பேதைமைப் பருவம் நீங்கி
அள்ளுதற் கமைந்த பொற்பால் அனங்கன்மெய்த் தனங்கள் ஈட்டம்
கொள்ளமிக் குயர்வ போன்று கொங்கைகோங் கரும்பை வீழ்ப்ப
உள்ளமெய்த் தன்மை முன்னை உண்மையும் தோன்ற உய்ப்பார்.

(எ - து.) அப்பரவையார்க்கு ஐந்து வயதுடைய குழந்தைப் பருவத்திற்குமேல் வருவதாகிய பேதைப்பருவம் நீங்கிற்று. பின் கோங்கின் அரும்புகள் தோல்வி யடை

யும்படித் தனங்கள் உயர்ந்தன. (அவ் வுயர்வு எதுபோல் இருந்ததெனின்) மன்மதனு டைய திரவியக் குவியல் உயர்ந்திருப்பது போன்றிருந்தன. (அவை ஏன் உயர்ந்திருந் தனவெனின் மன்மதன் தனமாகக் கொள்ளும் தனங்களிலுள்ள அழகை வேண்டிய மட்டும்) அள்ளிக் கொள்வதற்கு மிகவும் உயர்ந்திருந்தன போலுமாம். (இதுவுமன்றி) பரவை நாச்சியார் முன் பார்வதிதேவியாருக்குத் தோழியாயிருந்த அக்காலத்தில் தமக் குள்ள பருவத் தன்மையும் அறிவும் தோன்றும்படி குறிப்பிப்பாராயினர் என்பதாம்.

கொங்கை, கோங்கு அரும்பை வீழ்ப்ப ஓங்கன் மெய்த்தனங்கள் ஈட்டம் கொள்ள அமைந்த பொற்பு அள்ளுதற்கு மிக்கு உயர்வ போன்று, முன்னை உள்ள மெய்த்தன்மை(யும்) உண்மையும் தோன்ற உய்ப்பார் எனக் கூட்டுக.

இதனால் பரவையாரது பருவத்தினது தோற்றச்சிறப்பும் அறிவினது தோற்றச் சிறப்பும் கூறினாரென்க. (கருசு)

பரவையார் கோயிலுக்கு வருதல்.

பாங்கியர் மருங்கு சூழப் படர்ஒளி மருங்குசூழத்
தேங்கமழ் குழலின் வாசம் திசையெலாம் சென்றுசூழ
ஓங்கிய கோயில்உள்ளார் ஒருவரை அன்பி னோடும்
பூங்கழல் வணங்க என்றும் போதுவார் ஒருநாள் போந்தார்.

(இ - ள்.) மன்மதன தனக்கு வைப்பென்றெண்ணுமாறு தனங்களைப் பெற்றுள் ளாராகிய பரவையார் செல்வமெலாம் ஓங்கியுள்ள திருப்பூங்கோயிலுள் வீற்றிருக்கும் ஒருவரது பூங்கழலை மிக்க அன்போடும் வணங்குவதற்கு நாள்தோறும் போகும் நிய மம் உடையவராகலான் அதுபோலும் ஒரு நாள் தமக்குரிய தோழிகள் தமது உடம்பு நிழல்போல் தம்மைவிட்டு நீங்காது சூழ்ந்து வரவும், தமது தேககாந்தியானது வீதி முற்றும் சூழ்ந்துவரவும் கூந்தலிலுள்ள வாசனையானது எண்திக்குகளிலும் சூழ்ந்து வரவும், புற்றிடங்கொண்ட பெருமானைத் தாம் தொழக் கோயிலுட் சென்றனர். (எ-ம்.)

இதனால் பூங்கோயில் அமர்ந்தபிரானை நாடோறுஞ் சென்று தெரிசனஞ் செய்து வரும் பரவையாரது நியமங் கூறப்பட்டது. (கருஎ)

அணிசிலம் படிகள் பாரின் அழைப்படித் தனமென் றார்ப்ப
மணிவளர் காஞ்சி அல்குல் வரிஅர வல்லை வென்ற
துணிவுகொண் டார்ப்ப மஞ்சு சரிகுழற் சூழிய விண்ணுளோர்
பணியுமென் றினவண் டார்ப்பப் பரவையார் போதும் போதில்,

(இ - ள்.) திருக்கோயிலுக்கு வணங்கச்செல்லும் பரவையாரது பாதங்களில் அணிந்திருக்கின்ற சிலம்புகள் அப் பரவையாருடைய திருவடியின் அழகைக் கண்டு பூலோக மங்கையரை வென்று விட்டோம் என்று ஆரவாரிப்பது போலும் ஒலிக்கவும், இடையிலணிந்திருக்கும் இரத்தினமயமாகிய எண்கோவையுள்ள காஞ்சி என்னும் ஆப ரணம் அல்குல் வரிகளையுடைய நாகலோக மங்கையரை வென்றதென்று துணிவு கொண்டு ஆரவாரிக்கவும், கூந்தலிலுள்ள வண்டுகள் பரவையாரது கூந்தலை மேகங்கள் கண்டு நாண, விண்ணுலக மங்கையரை வென்றோமென்று ஆரவாரிக்கவும் பரவையார் போதும் போதில்,—

இதனால், பரவையார் பாதத்தில் அணிந்திருக்கும் சிலம்பொலியின் சிறப்பும், இடையில் அணிந்திருக்கும் காஞ்சியாபரணத்தின் ஒலிசிறப்பும், கூந்தலில் மொய்த்திரு க்கும் வண்டுகள் ஒலிக்கும் ஒலியின் சிறப்பும் கூறினாரென்க.

விசேடம் ஆசார்ய பிரபாவம் — உ0௲ - வது பக்கம் முதலாக உ0௫ - வது பக்கம் வரை காண்க. (கருஅ)

பரவையாரை நம்பிகள் காணுதல்.

புற்றிடம் விரும்பி னாரைப் போற்றினர் தொழுது செல்வார்
சுற்றிய பரிச னங்கள் சூழஆ ளுடைய நம்பி
நற்பெரும் பான்மை கூட்ட நகைபொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழை யவரைக் கண்டார்.

(எ - து.) சிரிப்பெல்லாம் புன்னுள் அடங்கியிருத்தலைக் காட்டல்போல் புன்னகையரும்பும் வாயினையும், விற்போன்ற நெற்றியினையும், வேல்போன்ற கண்களையும், பிரகாசிக்கின்ற ஆபரணங்களையும் உடையவராய்ச் செல்கின்றவராகிய பரவையாரைத் தம்பிரான் தோழமையும் மணக்கோலமும் பெற்று அடியார்கள் நெருங்கிப் புடைசூழ்ந்துவரப் புற்றிடத்தைத் தாம் விரும்பி எழுந்தருளியிருக்கும் கோயிலாகக் கொண்டெழுந்தருளியிருக்கின்ற பெருமானைப் போற்றி வணங்கிச் செல்கின்றவராய் இறைவன் தாம் கொடுத்த தோழமையும் மணக்கோலமும் பயன்படுமாறு திருவுளத்தெண்ணித் தமது இச்சாசத்தியைப் ப்ரேரேபிக்கக் கண்டனர் என்பதாம்.

நப்பாட்டான் ஆளுடைய நம்பிகள் இறைவனது இச்சாசத்தியின் பிரேரேபணையால் பரவையாரைக் கண்டனர் என்று கூறினாரென்க. (௧௩௯)

நம்பிகள் அதிசயித்தல்.

வேறு.

"கற்பகத்தின் பூங்கொம்போ! காமன்தன் பெருவாழ்வோ!
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ! புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ!
அற்புதமோ! சிவன்அருளோ! அறியேன்" என் றதிசயித்தார்.

(எ - து.) சிவனது இச்சாசத்தி பரவையாரைக் காட்டச் சுந்தரமூர்த்திகள் கண்டபோது அவரை மங்கையாகக் காணாது இது என்ன கற்பகத்தருவினது பொலிவினையுடைய ஓர் பூங்கொம்போ, அல்லது மன்மதனது பெரிய சம்பத்தோ. அல்லது பொலிவினையுடைய புண்ணியத்தினின்றுந் தோன்றிய புண்ணிய சொரூபமோ, அல்லது மேகத்தைச் சுமந்து வில்லினையும் நீலோற்பலமலரையும் பவளத்தையும் பிறமலர்களையும் சந்திரனையும் தன்னிடத்தில் கொண்டுள்ள வாசனை வீசுகின்ற ஓர் கொடியோ, இவையெல்லாம் அல்லாத உலகத்தில் அற்புதம் அற்புதம் என்று சொல்லப்படுவதொன்றோ, அல்லது எம்பெருமானுடைய திருவருளோ இவற்றுள் இன்னதென்று நான் அறியகில்லேன் என்று ஆச்சரியத்தினை யடைந்தனர் என்பதாம்.

இத்திருப்பாடலின் விசேடம் ஆசார்யபிரபாவத்தில் ௨0௬ - வது பக்கமுதல் ௨0௯ - வது பக்கம்வரை விரிவாக விளக்கியிருக்கின்றோம்; அஃதேயல்லாமல் ஈண்டும் சில விளக்குவாம்:—

இந்திரனால் அநுபவிக்கப்பட்ட சகலபோகங்களுந் தந்த தியாகேசன் விண்ணுலகினின்றும் பூவுலகில் எழுந்தருளினமையினாலால்நாமிங்கென் செய்வதென்று கற்பகவிருக்ஷம் தியாகேசனையே நாடி வந்ததுபோலும் என்பார் — கற்பகத்தின் பூங்கொம்போ எனவும்,— பிரமனுதியோரது துற்போதத்தால் உயிரிழக்கப் பெற்ற நம்மை உயிர்பெற்று வாழச்செய்த பெருமான் இங்கு வாழப்பெருது சென்றபடியால் நாம் இனி இங்கு வாழ்வது அபாரதமாம் என்றெண்ணி அங்கு தன்னால் விளைந்த தனது வாழ்வுடன் மன்மதன் இங்கு வந்தனன் என்பார்— காமன் தன் பெருவாழ்வோ எனவும்,— இந்திரன் இனிச்சண்டாளத்துவத்தை யடையப்போகிறபடியால் நாம் இனி இங்கு நீங்கவேண்டிய

காலம் வந்துவிட்டதென்றெண்ணி அசுவமேத முதலிய புண்ணியத்தின் புண்ணியம் இங்கு வந்ததென்பார், — புண்ணியத்தின் புண்ணியமோ எனவும், — அங்ஙனம் பிறப் பட்ட புண்ணியமானது நம்மால் நரனுகவிருந்து தேவனுகிய தேவேந்திரன் தேவரால் வணங்கப்பெற்று ஆண்டன்மையோ டிறுமாப்புற்றவனுக விருந்து இப்போது நரரால் அருவருக்கத்தக்க சண்டாளத் தன்மையை யடையப்போகின்றபடியால் நாம் இங்கிருத் தல் அழகன்று என்று நாணமுற்று பெண்ணுருக்கொண்டு இங்கு வந்ததுபோலும் என் பார் — புயல் சுமந்த *** விரைக்கொடியோ எனவும், — நாம் பெண்ணுருக் கொண்டா லும் இப்பூலோக மங்கையருக்கு வேறுபட்டு அவர்களுங் கண்டு மயங்கத்தக்க அதிசய வுருவத்தோடும் உலாவவேண்டுமென்றெண்ணி இவ்வற்புத வுருக்கொண்டது அப்புண் ணியமென்பார் — அற்புதமோ எனவும், — கற்பகாதி போகங்களும் அவைக்கேதுவான புண்ணியமும் தந்த அருள் சிவனுடையதாகலான் அவ்வருளும் தியாகேசன்பால் வந் தது என்பார் — சிவனருளோ எனவும் கூறினர்.

வேண்டுவார் வேண்டுவதை யீதலாகிய இவ்வள்ளற்றன்மை தியாகேசனுடை யதன்றோ, அத்தியாகேசன் இங்கில்லாவிடில் நாம் இனி வேண்டுவார் வேண்டுவ தை எங்ஙனம் நாம் தரவல்லோமென்று கற்பகமும், - குடங்கை நீரும் பச்சிலையும் கொண்டிடுவார் தமக்கு இமையாக்குஞ்சர முதலாகிய பெருவாழ்வைத் தருதலேயன்றி அது செய்யாதார்க்குத் தருதலில்லை யன்றோ, அத்தியாகேசன் இவ்விந்திரனுல் இனி அதனைப் பெறுவதற்கில்லாமல் சென்றதால் நாம் இனி இவன்பால் எங்ஙனம் வாழ வல்லோமென்று காமன்றன் பெருவாழ்வும், - அசுவமேத புண்ணியத்திற்கு முதலாயிருந்து வாழும் புண்ணியம் சிவபுண்ணியமன்றோ; அச்சிவனுகிய தியாகேசன் சக்கிரவர்த்தியின்பால் சென்றதால் நாமும் அவன்பால் செல்வோமென்று சிவபுண் ணியங்கட்கெல்லாம் தெய்வமாயிருக்கின்ற அருள் பெண்ணுருவமா யிருத்தலால் அவ் வுருவே நமக்குரித்தென்று பெண்ணுருக்கொண்ட புண்ணியத்தின் புண்ணியமும் பெருஞ்செல்வத்தோடு இந்திரனுல் அருச்சனை யேற்றுவந்த பெருமான் அதனை வெறுத்து முசுகுந்தன் அன்பே வேண்டிய சிவனது அற்புதநிலையும், ஸ்ரீகைலாயத்தில் நமக்குச் சிவபிரான் தடுத்தாட்கொள்வோமென்ற சிவனருளும் இவ்வுருக்கொண்ட தோ வென்பார், — கற்பகத்தின் பூங்கொம்போ *** என்றதிசயத்தாரென்றார்.

சிவனருளோவென்ற அவ்வமயத்திற்றனே அந்தோ! அந்தோ! இத்திருவுருவமா னது அன்று ஸ்ரீகைலாயத்தில் யான் மானுடமாய் மயங்கும்வழி தடுத்தாண்டருள வேண்டுமென்று வேண்ட அங்ஙனமே ஆகுகவென்று எனக்கருள்செய்த அருளுரு வமோ! கலியாணப் பந்தலில் என்னைத் தடுத்தாள வந்த அருளுருவமோ! என்னை அடிமையென்று நிலைபெறுத்தியபின்னர் ஆட்கொளக்காட்சிதந்த அருளுருவமோ! ஆட் கொண்ட பின்னர் பொன்னம்பலத்தின் கண் தனிப்பெருங் கூத்தில் வந்த பேரின்ப வெள்ளத்தில் மூழ்குவித்த அருளுருவமோ! இங்கு வாழிய மண்மேல் விளையாடுவாய் என்று யான்கேட்க வாக்கருளிய அருளுருவமோ! என்று வியந்தனர் என்பார் — அதி சயித்தாரென்றார். அன்றியும் சகலருக்கு அருள வரும் திருவுருவமல்லவா மணக்கோ லத்தில் வந்த வுருவமென்றும், பிரளயாகலருக்கு அருள வரும் திருவுருவமல்லவா வெ ண்ணெய் நல்லூரில் காட்சிகொடுத்த திருவுருவ மென்றும், விஞ்ஞானகலருக்கு அருள வரும் திருவுருவமல்லவா, சிற்சபையிலே நம்மறிவில் பேரின்பம் விளைவித்த உருவ மென்றும் உணர்ந்ததே யல்லாமல் அப் பேரின்ப வெள்ளத்துட்டிளைக்க நின் வேட் கை தீர வாழி மண்மேல் விளையாடுவா யென்ற அருண் மொழியை நானுணர்ந்து அனுபவிக்க வந்த இன்பத் திருவுருவமென்று உணர்ந்தனர் என்பார் — அதிசயித்தா ரென்றார்.

சகலர் முதலிய மூவரும் தெரிசனம் பெற்று மலம் நீங்கப் பெற்றனரே யன்றி அருளால் விளையாட வேண்டிய விளையாட்டைப் பெற்றாரில்லை என்பதொன்று.

கற்பகத்தின் பூங்கொம்போ என்றது— பாதாதி கேசமான உருவத்தோற்றத்தைக் கண்டும் காமன்றன் பெருவாழ்வோ என்றது —அத்தோற்றத்திற் காணப்பட்ட பொலிவைக்கண்டும், புண்ணியத்தின் புண்ணியமோ என்றது—நெற்றியிற் காணப்படும் திருநீற்றைக்கண்டும், விரைக்கொடியோ என்றது - உருவத்தி லமைந்துள்ள அங்கவிசேடங்களைக் கண்டும், அற்புதமோ என்றது — இவ்வரிய தோற்றமானது காமனால் விளையும் மயக்கத்துக்கு ஆளாக்காது சிவனால் விளையும் அருளுக்கு ஆளாக்கக் கண்டும், சிவனருளோ என்றது—தாம் தியாகேசனைத் தெரிசிக்குங் காலத்துத்தில்லையில் திருவாரூருக்கு வாவென்றருளிய வாக்கின் பொருள் என்னவென்று சிந்திக்குங்கால் தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம் எனறும் வேள்வியில் அன்று நீ கொண்ட கோலம் என்றும் புனைந்து நின் வேட்கை தீர வாழியண்மேல் விளையாடுவாய் என்று அருளிய அருள் வாக்கைக் கேட்டுப் பொருள் தோன்றாது அப்பொருளை நாடி வருகின்ற காலத்து அவ் வருண்மொழிக்குப் பொருள் விளக்க வந்த அருள் விளக்கமெனக் கண்டும், அறியேன் என் றதிசயித்தார் என்றது - அருள் விளக்கமாய்க் காணப்படும் இவ்வுருவம் இனிச்செயுஞ் செயலை நாம் அறிதல் முடியாதாயினும் இவ்வுருவம் நமக்கு விளக்கிய அருள் விளக்கத்தின் செயலைச் செய்யாமற் போகாது இதனை இங்கு நாம் காணத்தகும் அதிசயமென் றுகண்டும் அதிசய முடையவரா யிருந்தனரென்க.

எனவே, தியாகேசன் தம்மைத் தோழனாகத் தந்தமையும் தமக்கு மணக்கோலம் என்றும புனையத் தந்தமையும் வாழி மண்மேல் என்றமையும் வேட்கைதீர விளையாடுவாய் என்றமையும் ஒன்றின்மே லொன்று அதிசயமாகக் கூறியதாகலான் இம்மொழிக்கேற்ற செயலைச் செய்யுங் காலத்து அச்செயலும் ஒன்றின்மே லொன்று அதிசயமாக இருக்குமன்றோ என்று அம்மொழிக்கேற்ற செயலை அறியும் அதிசயமுடையவராயிருந்தனர் என்பதாம்.

நாம் இங்கு பெற்ற அருள், அதிசயமான அருள், இவ்வருளை இது காறும் ஒருவரும் பெற்றிரார் என்று அதிசயித்தார் என்றும். இங்ஙனமான அருளைப் பெறுதற்கு நாம் என்ன செயலைச் செய்தோம்; அதனை நாம் அறியோம் என்றும் பொருள் கொள்ளலு மொன்று. (கசO)

"ஓவியநான் முகன்எழுத ஒண்ணாமை உள்ளத்தால்
மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ !
மூஉலகின் பயனாகி முன்னின்ற" தெனநினைந்து
நாவலர்கா வலர்நின்றார்; நடுநின்றார் படைமதனார்.

(எ - து.) முன்னாளில் பிரமதேவன் தனக்குப் பெண்ணுருவைச் சிருட்டிக்கும் ஆற்றல் வாய்க்கும்படிச் சிவபெருமானால் படைக்கப்பட்ட சத்தியைத் தான் வழிபடும் பொருட்டு ஒரு படத்தில் எழுதமுடியாமையினால், மிகவும் மனவருத்த முற்றுத் தன்னுள்ளத்தில் தியான ரூபமாய் அமைத்துக் கொண்ட ஒப்பற்ற இரத்தின தீபமோ; அந்த இரத்தின தீபமானது மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும மோக்ஷவுலகிற்கும் பயன்களா யுள்ள புகழ் புண்ணிய ஞானங்களைக் கொடுத்தற்கு முற்பட்டுநிற்கின்றது என்று எண்ணி நாவலர்களுக்குத் தலைவராகிய நம்பியாரூரர் நின்றார். அத்தலைவரது உள்ளத்தின்கண் பஞ்ச பாணங்களை யுடைய மன்மதன் நின்றான் என்பதாம்.

நான்முகன் ஓவியம் எழுத ஒண்ணாமை, மேவியதன் வருத்தமுற உள்ளத்தான் விதித்தது ஒரு மணிவிளக்கோ ; (அது) மூவுலகின் ***** நின்றார் நடுபடை மதனார் நின்றார் எனக்கூட்டுக.

விசேடம் ஆசாரியபிரபாவம் உ0௯-வது பக்கத்திற்காண்க. பிரமன் முதலில் ஆண் வடிவத்தையும், பின் பெண் வடிவத்தையும் சிருட்டிக்கும் ஆற்றல் பெற்றமையைக் காஞ்சிப் புராணம் தழுவக்குழைந்த படலத்திற் காண்க. (கசக)

பரவையார் நம்பிகளைக்காணல்.

தண்தரள மணித்தோடும் தகைத்தோடும் கடைபிறழும்
கெண்டைநெடுங் கண்வியப்பக் கிளரொளிப்பூண் உரவோனை
அண்டர்பிரான் திருவருளால் அயல் அறியா மணம் விரும்பிப்
பண்டைவிதி கடைகூட்டப் பரவையாருங் கண்டார்.

(எ - து.) பூர்வம் திருக்கைலாயத்தில் இப் பரவைநாய்ச்சியாராகிய கமலினியாரும் இவ்வாரூராகிய ஆலாலசுந்தரரும் ஒருவரையொருவர் காணச்செய்த எந்தத் தேவதேவனாகிய இறைவனுடைய திருவருளோ, அத்திருவருளே இத்திருவாரூரின் கண் அங்ஙனம் காணும்படிச் செய்து அதனால் ஆகவேண்டிய பயனைக் கூட்ட ஒளிமிக்க ஆபரணங்களால் பிரகாசிக்கின்ற அறிஞர் பெருமானாகிய சுந்தரமூர்த்திகளை அயல் அறியா மணமாகிய களவுப் புணர்ச்சியை விரும்பும்வண்ணம் தண்ணிய முத்துக்களினாலும் மணிகளினாலும் இழைக்கப்பட்ட காதணிகளையும் தடுத்துச்செலலும் பிறழுஞ் செயலையுடைய கயல்போன்ற நீண்ட கண்கள் பிறழுஞ் செயலற்று அதிசயிக்க. பரவையாரும் பார்த்தனர் என்பதாம்.

அண்டர்பிரான் திருவருள் (ஆகிய) பண்டைவிதி கடைகூட்ட கிளரொளிப்பூணுரவோனை அயல் அறியா மணம் விரும்பித் தண்டரள மணித்தோடும் * * * வியப்பப் பரவையாரும் கண்டார் எனக்கூட்டிப் பொருள் கொள்க. ஆல் - அசை.

பண்டைவிதி என்றது - கயிலாயத்தில் ஆலாலசுந்தரரைப் பரவையார் காணும் படிச்செய்த அண்டர்பிரான் திருவருள் என்றும், கடைகூட்ட என்றது - அங்கு காணச் செய்ததனால் முடியவேண்டிய செயல்கள் இங்கு முற்றுப்பெற என்றும் விளக்கியவாறும்.

ஏனைய விசேடம் ஆசாரிய பிரபாவம் உகச, உகரு-பக்கங்களிற் காண்க.

அயல் அறியாமனம் விரும்ப எனப்பாடங் கொள்ளின் - திருவருளின் செயலன்றி வேறொன்றும் அறியாத மனமென்றும், அறியாமன் மனம் விரும்ப எனப்பாடங்கொள்ளின் — கயிலையில் தம்மனத்தின் செயலாலல்லாமல் திருவருட் செயலானது முன்னின்று அங்கு விரும்பச் செய்ததுபோல் இங்கும் அச்சுந்தரரை விரும்பச்செய்த தென்றும் கொள்க.

அங்கு கைலையில் சுந்தரரைப் பரவையாரும், பரவையாரைச் சுந்தரரும், கண்டதாகிய செயலும், அஃதேபோல் இங்கு ஒருவரையொருவர் கண்டதும் திருவருட் செயலேயன்றி இவ்விருவர் செயல் அன்றென்று இத்திருப்பாட்டால் கூறியதென்க.()

கண்கொள்ளாக் கவின்பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியான் எதிர்நோக்கும் மெல்லியலுக்
கெண்கொள்ளாக் காதலின்முன் பெய்தாத தொருவேட்கை
மண்கொள்ளா நாணமடம் அச்சம் பயிர்ப்பை வலிந்தெழலும்,

(எ - து.) சுந்தரமூர்த்திகளைப் பரவையார் கண்டபொழுது கண்களாற் கொள்ளுதற்குக்கூடாத அழகினைப் பொழிந்த திருமேனியானது, ஆகாய முற்றும் இடங்கொள்ளாத பேரொளியை எங்கும் விரிக்க, இப்பெரிய ஒளி எங்குநின்று விரிந்த ஒளியென்று எதிர்நோக்கும் பரவையாருக்கு அளவுபடாத ஆசையினால், முன் கைலையில் காலத்தும் உண்டாகாத ஒப்பற்ற விருப்பம் அப்பரவையாரைத் தன்வசமாக்

கிக்கொண்டு இவ்வுலகிலுள்ள கற்புடை மகளிரும் கொள்ளாத நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கினையுங் கடந்து மேலெழுதலும், — ஆல் - அசை.

முன் பெய்தாததொரு வேட்கை என்பது — சுந்தரரைக் காண்பதில் நாணமற்றுக் காண்பதிலாசையும், காண்பதனால் அறியவரும் அழகு முதலியவற்றை எண்ணி எண்ணி அறிவதில் மடமையற்று அறிவதில் ஆசையும், அறிவதனால் அவரைக்கூடவேண்டுமென நினைக்க வரும் அந்நினைவில் அச்சமற்று அவரைக் கூடுவதில் ஆசையும், கூடுவதனால் உண்டாவதாகிய பரிசசம்பந்தத்தில் அருவருப்பற்று விருப்புறும் ஆசையுமாம். — இதன் விசேடம் - ஆசார்யபிரபாவம் உகஙு - வது முதலாகக் காண்க. (கசஙு)

"முன்னேவந் ததிர்தோன் றும் முருகனோ? பெருகொளியால்
தன்னேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடைஅண்ணல் மெய்அருள்பெற் றுடையவனோ?
என்னே! என் மனந்திரித்த இவன்யாரோ?" என நினைந்தார்.

(எ - து.) நமக்கு முன்னே வந்து நாம் கண்டு களிக்கும்படி அழகிய சுந்தரத்துடன் எதிரே தோன்றுகின்ற முருகக் கடவுளோ, (முருகக் கடவுளாயின் இப்போது நமக்குண்டாகிய இக்காம வாசையை விளைவிக்கமாட்டாரே — ஆகலின்) பெருகிவளரா நின்ற பிரகாசத்தினால் தனக்கு ஒப்புசொல்லக்கூடாத மன்மதனோ, (மன்மதனாயின் அவன் நமது இறைவனால் அன்று அரூபியாயினனே அவன் இங்கு நாம் காண எவ்வாறு உருவங்கொண்டு வருவான் — ஆகலின்) நறுமணங்கமழும் மலர் மாலையினை யணிந்திருக்கும் வித்தியாதரரில் ஒருவனோ, (வித்தியாதரனாயின் போக ரூபியாகமாத்திரம் இருப்பானேயன்றி சிவனருட்கோலத்தைப் பெற்றுடையவனாய் வருவானோ — ஆகலின்) மின்னலையொத்து மின்னும் செஞ்சடையையுடைய இறைவனது மெய்மையான திருவருள் பெற்றுடைய மெய்யடியவரோ, இது என்ன காரணம், கலங்கா நிலைமையையுடைய என் மனத்தைக் கலங்கச்செய்த இவன் யாரோ என நினையாதனவெல்லாம் நினைந்தார் என்பதாம்.

தங்கள் மலைவல்லி பாதங்கூடும் அன்புருகப் பாடும் கொள்கையோர் குறிப்புத் தோன்ற எனவும், உள்ள மெய்த்தன்மை முன்னை யுண்மையுந் தோன்ற உய்ப்பார் எனவுங் கூறியிருத்தலின், அவைகட்கேற்ப, தாம் கயிலாயத்தில்அடிக்கடியும் தமக்கு முன்னே வந்து தாம் கண்டு களிக்கும்படி எதிரே தோன்றும் முருகனோ என்றார். இவர் பொய்ம்மையான போகத்தை விரும்பும் பொய்யடியாரைப் போலாது மெய்மையான அன்பையே வேண்டும் மெய்யடியராகக் காணப்படுகிறார், நாம் முன் கயிலாயத்தில் ஓரழகரைக் கண்டோம் அவரது காட்சி நமது கண்ணுக்கு இன்பஞ் செய்ததேயன்றி நமது மனத்தை மயக்கி ஆசையை விளைவித்ததின்று, இன்று இவரது காட்சி நாம் கொள்ளக்கூடாத ஆசையைக்கொடுத்து நமது மனத்தையும் மயக்கியதே, இது என்ன காரணம். இவர் மெய்யருள் பெற்றுடையவரா? அல்லவெனில் நாம் மெய்யருள்பெற் றுடையார்க்கு மயங்குவதன்றி ஏனையோர்க்கு மயங்கோமே: ஆகலான் இவர் நாம் அன்று கயிலையின்கண் கண்டவர்தானோ? வேறொருவர்தானோ? வேறொருவராயின் நமது கலங்கா நிலை எந்நிலையாயிற்று? என்று நினையாதன வெல்லாம் நினைந்தனர் என்பதாம்.

இம்முறையாய் ஆசை வலிந்தெழலும், அழகு மிகுதியாகக் காணப்பெற்றதனால் முருகனோ என்றும், மயக்குவதனால் மன்மதனோ என்றும், போக கோலத்தால் விஞ்சையனோ என்றும், சிவனருட்கோலத்தால் மெய்யருள்பெற் றுடையவனோ என்றும், என் மனத்தைத் திரித்தலால் இவ்வருட்கோலம் கயிலையில் கண்ட ஆலாலசுந்தரரது சுந்தர கோலமாகக் காணப்படலால் அவர்தானோ என்று பலவாக நினைந்தாரென்றும் இத்திருப்பாட்டாற் கூறியவாறும். (கசச

ஆரணிலவன் தன்மருங்கே அளவிறந்த காதலினல்
உண்ணிறையும் குணம்நான்கும் ஒருபுடைசாய்ந் தனஎனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தல் மடக்கொடியை வலிதாக்கிக்
கண்ணுதலைத் தொழும்அன்பே கைக்கொண்டு செலஉய்ப்ப,

(எ - து.) இவ்வாறு கண்டமாத்திரத்து நம்பியாரூரர் மாட்டுண்டாகிய அளவிறந்த ஆசையினல், அவரது உடம்பாகவும், கரணங்களாகவும், உயிராகவும், உயிரறிவாகவும் முறையே நிறைந்திருந்த நாணமுதலிய நான்கும் அவர் பாலாகவே சாய்ந்தன எனினும், அழகிய மலர்மாலையைத் தரித்த கூந்தலையுடைய பரவையாரை அவருள்ளத்தில் என்றும் நீங்காது இருந்த இறைவனைத்தொழும் அன்பானது நாணமுதலியவை சாய்ந்தவழியே அவரைச் சாயவொட்டாது தந்நிலையில் நிறுத்தித் தியாகேசனைக் கண்டு தெரிசிக்குஞ் செயலில் வன்மையையுண்டாக்கிக் கோயிலுக்குள்ளே போகச்செய்ய, —

பாங்கோடிச் சிலைவளைத்துப் படைஅனங்கன் விடுபாணம்
தாங்கோலி எம்மருங்கும் தடைசெய்ய மடவரலும்
தேங்கோதை மலர்க்குழல்மேல் சுரும்பிறைவண்டு கலந்தார்ப்பப்
பூங்கோயில் அமர்ந்தபிரான் பொற்கோயில் போய்ப்புக்காள்.

(எ - து.) அச்செயலை நாவலர் காவலர் நின்றபடைமதனர்கண்டு அவரருகே சென்று தனது கரும்புவில்லை வளைத்து விடும் மலர்ப்பாணங்கள் பரவையாரை நாற்புறத்தும் சூழ்ந்து தடைசெய்ய அவர் கூந்தலிலுள்ள வண்டுகள் கண்டு இப்பாணங்கள் இவரை இங்கு என்செய்யக் கூடும், இவன் அறிவு இருந்தவாறென்னே என்று அவனை யிகழ்ந்து அப்பரவையார்பால் அணுகவொட்டாது ஆரவாரிப்பதுபோல ஆரவாரஞ் செய்ய அப்பூக்களால் சிறிதும் பரவையார் தாக்கப் பெறாது தியாகேசன் வீற்றிருக்கும் அழகியகோயிலுள்ளே சென்றனர் என்பதாம்.

இவ்விரண்டு பாட்டானும் பரவையார் முன்னே முருகனே என்றும் பின்னே மெய்யருள் பெற்றுடையவனே என்றும் தமது முன் நிலைமை மாறாது நினைததது போல அன்பினையும் முன்னமே யுடையவராகலான் அவ்வன்பானது முற்பட்டு வந்து அவ்வம்மையார் ஆரூரர்பால் கொண்ட வேட்கையினல் தளர்ச்சி யடையாது அவரை வலிமையுடையவராக்கிக் கோயிலுக்குள்ளே போகச் செய்தது என்று அவரது அன்பின் நிலைமை இத்துணைத்தென்று கூறியவாறும். (கசசு)

பரவையாரைப்பற்றி வினவுதல்.

வன்றொண்டர் அதுகண்டு "என் மனங்கொண்ட மயிலியலின்
இன்தொண்டைச் செங்கனிவாய் இளங்கொடிதான் யார்?" என்ன
அன்றங்கு முன்நின்றார் "அவர்நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்கும் சேர்வரியார்" எனச்செப்ப,

(எ - து.) மன்மதன் திரும்பிப் பாராதோடப் பூங்கோயிலுள்ளே பரவையார் சென்றபோது, இப்பரவையாரைக் காண வெளியே நின்றவராகிய வன்றொண்டப் பெருமான் தம் முன்னே யிருந்தாரை நோக்கித் திருவெண்ணெய் நல்லூர்ப்பித்தன் என்னைத் தடுத்தாட்கொண்டு என் மனத்தினுள்ளே தன்னை வைத்தான்; அம்மனத்தை இன்று கவர்ந்துகொண்டு உள்ளே செல்லும் மயில்போலும் சாயலையும் கொவ்வைக் கனிபோன்ற அதரத்தையும் உடைய இளங்கொடி போன்று காணப்படும் இவள் யாரென்று கேட்டனர். அவர்கள் எங்கள் பெருமானே! தேவர்களுஞ் சென்று சேர்தற்கரிய பெண்களிற் சிறந்த பரவையார் என்னும் திருப்பெயருடையார் அவர் என்று கூற,—

என்மனத்தைக் கொள்ளைகொண்டவன் தியாகேசன், கொள்ளை கொண்ட அவனிடத்திற் பொருந்தி யிருக்கும் என்மனத்தை இங்கு சென்ற கற்பகத்தின் பூங்கொம்புபோல்வாள் கொள்ளைகொண்டனள், அங்ஙனங் கொள்ளும் ஆற்றல் அத்தியாகேசன் அருளுக்கு உண்டாகுமே யன்றி மங்கையருக்கு உண்டாகாது, அதனை நான் இப்போது அறிவதற் கில்லை, நீங்கள் அறிந்திருப்பீராயின் சொல்லுங்களென்று வினவினரென்றும், அதற்கு அவர்கள் அவரைப்பற்றி ஒன்றறிவோம் மற்றொன்றும் அறியோம், அறிந்தது என்னை யெனின், உம்பர்தரத்தார்க்கும் சென்று சேர்வரிய பரவையார் என்பதேயாம்—என்றுவிடையளித்தனர் என்றும் கூறியவாறும்.

"பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்கு
லார்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை,
சீர்பரவை யாயினாள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்னாசை எழுபரவை."

(எ - து) அடியார்கள் இவர் பரவையாரென்னும் திருப்பெயருடையவர் என்றுகூறவே, சுந்தர மூர்த்திகள் இவளை நான் கண்டபோதே முதலாவது—கற்பகத்தின் பூங்கொம்போ என்று ஓராசையும் இரண்டாவது-காமன்றன் பெருவாழ்வோ என்று ஓராசையும் மூன்றாவது—பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ என்று ஓராசையும் நான்காவது - விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ என்று ஓராசையும் ஐந்தாவது - அற்புதமோ என்று ஓராசையும் ஆறாவது - சிவனருளோ என்று ஓராசையும், ஏழாவது - ஓவிய நான்முகன் எழுதவொண்ணாமை யுள்ளத்தான் மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ என்று ஓராசையுமாக ஏழாசையும் ஏழுகடலை ஒத்தெழுந்திருக்கின்றன. இவ்வாறான ஆசைப்பெருக்கை இவள் பெருக்குதற்குக் காரணம் யாதென்று ஆராயின், பெண்தன்மைக்குக் கூறும் இலக்கணங்களெல்லாம் கடல்போல் மிகப் பெருக்கமாக வுடையவளாயினாள் ஆகலான், பெரிய இந்திராதி தேவர்களால் விரும்பப்பட்ட திலோத்தமை முதலியோரால் துதி செய்யத்தக்க தெய்வமாயினாள்; இவளுடைய அழகு விளங்குகின்ற முத்துக்களை யொக்கும் பற்கள் முல்லை யரும்புகளை யொத்து ஒளிவீசிக் கொண்டிருக்கப் பெற்றவளாயினாள்; இங்ஙனமான புன்னகை யுடையாளான இவள் திருவுருவத்தின் மென்மையிற் சிறந்த அழகிய கடலினிடத்துத் தங்கித் தோன்றி ஆடலிற் சிறந்த பரவை யென்னும் கூத்தினைப் புரியும் இலக்குமிதேவியாயினாள் என்பதாம்.

பேர்பரவை என்னாசை யெழுபரவை பெண்மையினில் பெரு உம்பர் அவை விரும்பு அல்குலார் பரவுஐ. அணிதிகழும்மணிமுறுவல் அரும்பர் அவை, திருவுருவின் மென்சாயல் ஏர் பரவை இடைப்பட்ட சீர்பரவை ஆயினாள், எனக் கூட்டுக. (கஅ௩)

என்றினைய பலவும்நினைந் தெம்பெருமான் அருள்வகையால்
முன்தொடர்ந்து வரும்காதல் முறைமையினால் தொடக்குண்டு
"நன்றெனையாள் கொண்டவர்பால் நண்ணுவன்" என் றுள்மகிழ்ந்து
சென்றுடைய நம்பியும்போய்த் தேவர்பிரான் கோயில்புக,

(எ - து.) (அதன்பின்னர், காதன் மிகுதியினால் நினைக்கவரும் இத்தன்மையாகிய நினைவுகளை நாம் நினைக்கும்போது இந்நினைவுகள் இங்கெழுந்தருளியிருக்கும் தியாகேசப்பெருமான் இன்று அருளிய அருள்வாக்கானும் அன்று கைலாயநாதனருளிய அருள்வாக்கானும் தொடர்ந்துவரும் நினைவுகளாகலின் நாம் என் செய்யக்கடவோம், அவை நாம் விலக்கினால் விலக்கப்படுமோ, அன்றியும் இந்நினைவுகள் அருட்செயலால் விளைந்து தொடர்ந்து வருவதாயிருத்தலினால், இவைகளை விலக்குதல் அருளை விலக்க முயல்வதாக முடியுமல்லவோ. நாம் அவ்வருளையும்

அருட்செய்லையும் விட்டு எதனோடு கூடி எதன் செயலைச் செய்வது ; அப்படிச் செய்வோமாயின் அது ஆகாமிய வினையாயும் அதுவே இருவினையாயும் அவ்விருவினை பிறவியை யறியாத நமக்குப் பிறவித்தொந்தனையை விளைவிக்கும் விளைநிலமாயும் முடியுமன்றோ ; அந்தோ ! நமக்கு இவ்வினையேன் ; இவ்வினைச்செயலேன்; நம் தியாகேசன் தனது கருணையால் "நம்மைத் தோழமையாக உனக்குத் தந்தனம்" என்னுந் திருவாக்கை நமக்களித்திருக்கும்போது நாம் அவ்வாக்கின்படியே அவ்விறைவனோடு ஏகனாகி அருளின்வழிநின்று அவன் செய்யுஞ் செயலைக் கண்டுகொண்டிருக்கும் அவ்வடிமைத் திறத்தில் தவறாதிருப்போம். இருப்போமாயின் தன்னைச் சார்ந்து தன்னடித் தொழில் செய்வாரைத் தன்போல் ஆகாமிய வினைத்தொடக்கு இலராகச் செய்தல் இறைவனது இயல்பாகலான் வினையேறாவண்ணம் நமக்குக்களைகணாய்நின்று காத்தருளுவன் தியாகேசன் என்று திருவருள் ஞானவிளக்கத்தால் அருட்செயல் பலவற்றையும் நினைந்து பரவையாரைக் காட்டிக் கண்ணுறச்செய்த அவ்வருள் முறையினாலும் அவ்வருள்வழியே தொடர்ந்துவரும் வேட்கையின் முறையினாலும் தொடக்குண்டு இத்தொடக்குட்படுத்திய நமது தலைவன்பால் சார்வோம் என்னும் துணிபுடையராய்ப் பரவையாரது காதல் நம்மை என் செய்யுமோ என்னுங் கவலையொழிந்து, இனி அருட் செயலின் திறத்தைக்காணுங் காட்சி கிடைத்ததென்று உள்ளத்துள்ளே மகிழ்ந்து நம்பியாரூரர் தம்மையுடையானாகிய தியாகேசன் கோயிலுக்குள்ளே செல்ல,

விசேடம் —ஆசார்யபிரபாவம் உ௨௩ - பக்க முதலாகக் காண்க. (௧௪௬)

பரவையாரை வேண்டிப் பரமனைப் பணிதல்.

பரவையார் வலங்கொண்டு பணிந்தேத்தி முன்னரே
புரவலனார் கோயிலினின் றொருமருங்கு புறப்பட்டார்
விரவுபெருங் காதலினால் மெல்லியலார் தமைவேண்டி
அரவின்ஆ ரம்புனைந்தார் அடிபணிந்தார் ஆரூரர்.

(எ - து) அச்சமயத்தில் சுந்தரமூர்த்திகள் வருவதற்கு முன்னரே ஆலயத்துள்ளே வந்த பரவையார் தியாகேசப் பெருமானை வலமாக வந்து பணிந்துபோற்றி சந்நிதானத்தினின்றும் புறப்பட்டு ஓர்புறமாக ஒதுங்கிச் செல்வாராயினர். ஆரூரர் பரவையாரது செல்லுகையைக் காணாதவராய் உள்ளே சென்று இறைவன்பால் முன்பே கலந்துள்ள கலப்பால் கண்டவுடன் பெருகிய பேராசையினால் பரவையார் தம்பாலராம் வண்ணம் விரும்பிய தமது வேண்டுகோளை விண்ணப்பஞ் செய்து சர்ப்பாபரண மணிந்த இறைவனது திருவடியைப்பணிந்தார் என்பதாம். (௧௪௦)

பரவையாரைத் தேடுதல்.

அவ்வாறு பணிந்தேத்தி அணிஆரூர் மணிப்புற்றின்
மைவாழும் திருமிடற்று வானவர்பா னின்றும்போந்
தெவ்வாறு சென்றாளென் இன்உயிராம் அன்னமெனச்
செவ்வாய்வெண் நகைக்கொடியைத் தேடுவார் ஆயினார்.

(எ - து.) திருவாரூரின்கண் அழகுபெற்று விளங்கும் புற்றை இடமாகக் கொண்ட விடம் வாழும் கண்டத்தினையுடைய இறைவனை மேலே சொல்லியவாறு வேண்டி வணங்கிப் போற்றி அவ்விறைவனிடத்துநின்றும் நீங்கி வெளியே வந்து பரவையாரைக் காணாது என்னுடைய இனிய வுயிரையொத்த அன்னம்போன்றவள் எவ்வழியாய்ச் சென்றாளென்று செவந்த வாயினையும் வெள்ளிய பற்களையுமுடைய பரவையாரைத் தேடுவாராயினர் என்பதாம்.

வேறு.

"பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகும்
ஆசை மேலும்ஓர் ஆசை அளிப்பதோர்
தேசின் மன்னிஎன் சிந்தை மயக்கிய
ஈச னார்அருள் எந்நெறிச் சென்றதே!"

(எ - து.) பரவைநாச்சியாரைக் காண்பதற்குமுன்னர் தியாகேசப்பெருமானிடத்து உண்டாகிய திருவாக்கென்னும் திருவருளானது - ஆன்மாக்களிடத்துள்ள பாசமாகிய வினைகளைப் பற்றறுக்க வல்லவனாகிய அத்தியாகேசனிடத்து மிக்க ஆசையை எனக்கு விளைவித்தது. தியாகேசன் சந்நிதியை விட்டு வெளியே வந்தபோது யான் இதுகாறுங் காணாத ஒப்பற்ற ஓர் ஒளி - பேரொளிப் பிழம்பாய்ப் பிரகாசித்து - அந்த நடேசனிடத்து அன்றும், இந்தத் தியாகேசனிடத்து இன்றுங்கண்ட ஆனந்தத்தினும் இன்னமும் மேலான ஆனந்தம் இருப்பதாகக்காட்டி அவ்வானந்தத்தை அனுபவிக்க வேண்டும் ஆசையையுங்கொடுத்தது, அங்ஙனங் கொடுக்க வந்ததாகிய அப்பரவை என்னும் தியாகேசனது அருள் எவ்வழியாகச் சென்றது என்பதாம்.

இதனால் சிற்றம்பலத்தினிடத்துத் திருவருள் - பேரின்பம் இத்துணைத்து என்று அதனெல்லையை உணர்த்தி அதில் ஆசையைவிளைவித்தது; இப் பூங்கோயிலில் திருவருளானது — அவ்வின்ப எல்லையில் நின்று அவ்வின்பத்தை அனுபவித்தற்கு உருவமின்றியமையாதாகலான் அவ்வின்ப உருவத்தையும் அவ்வின்பத்தை அனுபவித்தற்கான ஒரு பேராசையையுந் தந்து என் சித்தத்தை மயக்கியது என்று திருவருட்டிறத்தைக் கூறியவாறும். (கருஉ)

"உம்பர் நாயகர் தம்கழல் அல்லது
நம்பு மாறறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியின் ஒல்கிஇன்
றெம்பிரான் அருள் எந்நெறிச் சென்றதே!"

(எ - து.) எம்பிரானுடைய அத்திருவருள் ஒரு பூங்கொடியைப்போல் ஓருருக் கொண்டு பையப்பைய அசைந்தசைந்து நடந்து வந்து தேவபிரானுடைய திருவடியல்லது விரும்பும் அறிவை அறியாத என்னை அந்நிலையினின்றும் மாற்றி யான் நடுக்கத்தைப்பொருந்த வேறொன்றை நாடும் வண்ணம் எவ்வழியாய்ச் சென்றது? எ-ம்.

"பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தை ஆரவும் உன்னும் என் சிந்தையை
வந்து மால்செய்து மான் என வேவிழித்
தெந்தை யார் அருள் எந்நெறிச் சென்றதே!"

(எ - து.) அத்திருவருள் இன்னமும் என்னை எவ்வாறு செய்ததெனின்! ஆன்மாக்களுக்கு மலநீக்கத்தின் பொருட்டுத் தனுகரணாதி பந்தங்களையும், அப் பந்தப் பெருக்கால் மலபரிபாகம் உண்டாய்ப் பாசக்ஷயம் வந்தபின்னர் சிவப்பேறெய்தற்கான வீட்டுநெறியையும் தந்தருளும் இறைவனுடைய திருவடியை என் சிந்தை நீங்காது அதிற்றானே பொருந்திக் கிடக்கும் அத்தன்மையை யுடைய என் சிந்தையை அத்திருவருள் வந்து மானைப்போலும் மருண்டு மருண்டு என்னை விழித்துப்பார்த்து அந் நிலையினின்றும் மயங்கும் வண்ணஞ் செய்தது அது இப்போது எவ்வழியாய்ப் போயிற்று?

இம் மூன்று திருப்பாட்டானும், பராசத்தியாகிய அனுக்கிரக சத்திவசப்பட்டிருந்த ஆரூரரது இச்சை ஞானம் கிரியை என்னும் மூவகைச் சத்திகளும் பரவையாரிடத்து நின்று செய்த செயலின் திறம் வியந்து கூறப்பட்டது.

எங்ஙன மெனின்;—பாசமாம் வினைப்பற்றறுப்பான் மிகும் ஆசை மேலும் ஓர் ஆசை அளிப்பதோர் அருள் என்றது — இச்சாசத்தி செய்த செயலின் திறத்தையும் உம்பர்நாயகன் தன்கழலல்லது, நம்புமா றறியேனை நடுக்குறவம்புமால் செய்த அருள் என்றது — ஞானசத்தி செய்த செயலின் திறத்தையும், பந்தம் வீடு தரும் பரமன் கழல் சிந்தையாரவும் உன்னும் என் சிந்தையை, வந்துமால் செய்த அருள்என்றது — கிரியாசத்தி செய்த செயலின் திறத்தையும் விளக்கியதென்க. இம் மூவகைச் சத்திகளின் வழி ஆரூரரது இச்சாஞானக் கிரியைகள் நிற்பனவல்லது மாயாசத்திகளின் வழி நிற்க வறியாத சீல முடையனவென்பது தோன்ற—ஈசனாருள், எம்பிரானருள், எந்தையா ரருள் என்றார். (௫௪)

என்று சாலவும் ஆற்றலா என்உயிர்
நின்ற தெங்கென நித்திலப் பூண்முலை
மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின்,—

(எ - து.) என்று மிகவும் ஆற்றாதவராய் எனதுயிராகிய அத்திருவருள் என்னை விட்டு எங்கு நிற்கின்றது என்று முத்துமாலையை யணிந்த தனங்களையும், நறுமணங் கமழும் கூந்தலையும் உடைய வஞ்சிக்கொடி போன்ற பரவையாரைத் தேடுவதற்குச் சென்றவர் அருளுடைய அடியார்குழாங் கூடியிருக்கும் தேவாசிரிய மண்டபத்தைச் சேர்ந்தபின்னர்,— (௫௫)

காவி நேர்வரும் கண்ணியை நண்ணுவான்
யாவ ரோடும் உரை இயம் பாதிருந்
தாவி நல்குவர் ஆரூரை ஆண்டவர்
பூவின் மங்கையைத் தந்தெனும் போழ்தினில்,—

(எ - து.) ஆரூரர் தேவாசிரியத்தைச் சேர்ந்த பின்னர் எம்பிரானருள் எங் கொளித்திட்டதோ என்று நீலோற்பல மலர்போன்ற கண்களையுடைய பரவையாரை அடையும் பொருட்டு, அங்கிருந்த பரிசனங்கள் முதலியோரை வினவுவதைவிட்டு இந்த ஆரூரரை ஆளுகின்றவராகிய ஆண்டவர் நாம் தேடிவந்த அருளாகிய தாமரை மலரின் கண் வாழும் திருமகளை ஒத்த பரவையைத் தந்து நம் உயிரைக் கொடுத்தருளுவர் என்று சொல்லிக்கொண் டிருக்கின்ற சமையத்தில், —

நாட்டு நல்இசை நாவலூ ரன்சிந்தை
வேட்ட மின்னிடை இன்னமு தத்தினைக்
காட்டு வேன்கட லைக்கடந் தென்பபோல்
பூட்டும் ஏழ்பரித் தேரோன் கடல்புக,—

(எ-து.) சப்ததா என்னும் பெயர்பெற்ற குதிரை பூட்டிய தேரினையுடைய சூரியன் எங்கும் தமது புகழை நாட்டிய நம்பியாரூரரது சிந்தையின்கண் விரும்பிய மின்போலும் இடையினையுடைய இனிய அமுதம்போன்ற பரவையாரை - இப்பொழுது இம்மேற்கடலைக் கடந்து நாளை வந்து காட்டுவேனென்று சொல்லுவது போல கடலின்கண்ணே அஸ்தமனத்தை யடைய,— (௫௭)

எய்தும் மென்பெடையோடிரை தேர்ந்துண்டு
பொய்கை யில்பகல் போக்கிய புள்இனம்
வைகு சேக்கைகள் மேல்செல வந்தது
பையுள் மாலை தமியோர் பனிப்புற,—

(எ - து.) தம்மை விட்டுப் பிரியாதிருக்கும் மெல்லிய தன்மையுடைய பெடைகளோடு நல்ல இரைகளைத் தேடித் தேடி உண்டு தடாகத்தில் பகற்காலத்தைக் கழித்தனவாகிய பலவகையான பறவைக் கூட்டங்கள் தாம்தாம் வாழ்கின்ற கூடுகளிற் செல்லவும். பிரிவுற்றுத் தனித்தவர்களாகிய நாயகியும் நாயகனும் விரகவேதனையை அடையவும் துன்பத்தைவிளைக்கும் மாலைக்காலமானது வந்தது என்பதாம். (கடுஅ)

பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்அரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்.

(எ - து.) பஞ்சினும் மென்மை வாய்ந்த அடியினையுடைய மங்கையரது உள்ளமும். பிறரை வஞ்சிக்கும் ஒழுக்கத்தினையுடையாரது கொடிய தீவினைகளும், இறைவனது திருநாமமாகிய திருவஞ்செழுத்தினையும் உணராத அறிவிலிகளது மனமும் என்று சொல்லும்படி எங்கும் பரவியிருக்கும் ஆகாயமானது இருளையடைந்தது.(எ ம்.)

மறுவில் சிந்தைவன் தொண்டர் வருந்தினால்
இறும்ம ருங்குலார்க் கியார்பிழைப் பார்என்று
நறுமலர்க் கந்தல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவல் என்ன முகிழ்த்தது வெள்நிலா.

(எ - து.) திருவருட்பட்ட சித்தத்தினையுடைய வன்தொண்டப் பெருமானாரே ஒரு மங்கைக்கு வருந்தினாரென்றால். தனபாரத்தினால் மெலிகின்ற இடையினையுடைய மங்கையர் ஆசையினின்றும் இனி யாவர் தப்பிப் பிழைப்பார்கள் என்று நறுமணங் கமழும் மலர்முடித்திருக்கும் கூந்தலையுடைய இரவென்னும் பெண்ணானவள், தன்னுள் அடக்காது முற்பட்டுப் புன்னகை செய்ததுபோல வெள்ளிய நிலவு உதித்தது.

அரந்தை செய்வார்க் கழுங்கித்தம் ஆருயிர்
பரன்கை தீண்ட மலர்குல மாதர்போல்
பறந்த வெம்பகற் கொல்கிப் பனிமதிக்
கரங்கள் தீண்ட அலர்ந்த கயிரவம்.

(எ - து.) பிறர் பரிசத்திற்கு அருவருப்பினையடையும் இயற்கையினையுடைய மகளிரைக் கண்டு காமுகராயுள்ளார் தமது நோக்கத்தைச் செலுத்துவாராயின் அவரது குறிப்பினை யறிந்து வருந்தித் தம் உயிர்போன்ற நாயகன் தம்மைக் கைதீண்டப் பெறின் முகமலர்ச்சியை அடையும் குல மகளிரைப்போல, ஆம்பல் மலர்கள் சூரியன் பரப்பும் கிரணங்களுக்கு வருந்தி மலராது, சந்திரனுடைய குளிர்ந்த கிரணமென்னும் கைப் பரிசத்தினால் மனங் குளிர்ந்து மலர்ந்தன என்பதாம். (ககூக)

தோற்று மன்னுயிர்கட் கெல்லாம் தூய்மையே
சாற்றும் இன்பமும் தண்மையும் தந்துபோய்
ஆற்ற அண்டம்எ லாம்பரந் தண்ணல்வெள்
நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா.

(எ - து.) பிறக்கும் இயல்பினையுடைய மக்கட் பிறப்பினர்க் கெல்லாம், அப்பிறப்பென்னும் அசுத்தத்தைப்போக்கித், தண்ணிய அருளையும் பேரின்பத்தையும் தந்து வாழச்செய்யும் ஆற்றலுடையது—இறைவனது திருவெண்ணீறென்றே என்று சொல்வதுபோல, கலைகளால் நிரம்பப் பெற்ற நிலாவானது ஆகாயமுற்றும் பரவித் தனது வெள்ளிய கிரணத்தைப் பரப்பிப் பிரகாசித்தது என்பதாம்.

வெள்ளொளி பரப்பும் திருநீற்றைப்போலும் சந்திரனும் தனது வெள்ளொளியைப் பரப்பினன் என்று அதன் சிறப்பு கூறப்பட்டது.

மதி - கலைவளருந் தன்மையுடைத்தாதலான் நீள் நிலா என்றார். (கசுஉ)

வாவி புள்ஒலி மாறிய மாலையில்
நாவ லூரரும் நங்கை பரவையாம்
பாவை தந்த படர்பெரும் காதலும்
ஆவி சூழ்ந்த தனிமையும் ஆயினர்.

(எ - து.) தடாகங்களில் சத்தித்து உலாவும் பறவைகளின் ஒலியை அடக்கிய மாலைக்காலத்தில், நாவலூரராகிய நம்பியாரூரரும் தம்முயிரை நீங்காது சூழ்ந்திருக்கும் பரவையார் என்னும் பெயருடைய நங்கையாகிய பாவை கொடுத்த மிகப்பெரிய ஆசையும், தாம் தனித்திருக்கப் பெற்ற தனிமையுமே யன்றி வேறொரு துணையும் இலராயினர் என்பதாம்.

எண்ணிறந்த அடியவரோடும் கூடியிருக்கும் இயல்பினையுடைய ஆரூரர் அன்று தம்முயிரைக் கலந்து தந்த பரவையார் கொடுத்த ஆசை என்னும் ஓர் துணையையுமே கொண்டிருந்தன ரென்பதாம்.

எனவே ஆரூரர் பரவையாரிடத்து உண்டாகிய ஆசைமிகுதியினால் ஒருவரோடும் கூடியிராமல் தனித்து அப்பரவையாரையே எண்ணியிருந்தனர் என்பதாம். (கசுங)

" தந்தி ருக்கண் எரிதழ லில்பட்டு
வெந்த காமன் வெளியே உருச்செய்து
வந்தென் முன்னின்று வாளி தொடுப்பதே?
எந்தை யார்அருள் இவ்வண்ண மோ" என்பார்.

(எ - து.) தக்ஷிணமூர்த்தியாய் எழுந்தருளி யிருந்த இறைவனது நெற்றிக்கண்ணினின்றும் வெளிப்பட்ட ஓர் நெருப்புப் பொறியில் அகப்பட்டு எரிந்துபோன அநங்கன், இப்பொழுது அங்க முடையவனாய் வெளியே வந்து என்னெதிரிலே நின்று பாணங்களைத் தொடுக்கலாமா? எனக்குத் தோழமையைத் தந்த எம்பெருமானது திருவருள் இவ்வண்ணம் இருந்ததே என்று சொல்லுவாராயினர் என்பதாம்.

இதனால் என்னிறைவன் தன்னை எனக்குத் தோழமையாகத் தந்தது உருவமில்லாதவனுக்கு உருவினைத் தந்து என்னை வருத்துவதற்குத்தானோ? மன்மதன் பாணம் விட்ட அளவிலே அன்று அவனை எரித்திருக்க, அக்கொடிய பாணம் என்னை வருத்தலாமோ. இதுதானோ இறைவன் என்னிடத்துவைத்த திருவருள் என்று திருவருளை எண்ணினு ரென்று கூறியவாறும். (கசுச)

"ஆர்த்தி கண்டும்என் மேல்நின் றழல்கதிர்
தூர்ப்ப தேஎனைத் தொண்டுகொண் டாண்டவர்
நீர்த்த ரங்க நெடுங்கங்கை நீள்முடிச்
சாத்தும் வெண்மதி போன்றிலைதண்மதி!"

(எ - து.) சந்திரனை நோக்கி, நீ யான் பரவையினிடத்து வைத்த ஆசையினால் படுந் துன்பத்தைக் கண்டும், ஆகாயத்தின் மேல் நின்று அழலை வீசும் கிரணங்களை என்மேல் வீசலாமா? நீ வீசுகின்றபடியால் என்னை முன் தன் அடிமையாகக் கொண்டு இப்போது இங்கு தன்னைத் தோழமையாகத் தந்து ஆண்டுகொண்டருளிய இறைவனது பெரிய அலைகளோடு கூடிய கங்கையைத் தரித்துள்ள நீண்ட சடைமுடியின் கண் தரித்திருக்கின்ற தண்ணிய கிரணங்களை வீசும் வெள்ளிய சந்திரனைப்போல் இல்லை; நீ எங்குள்ள சந்திரன்? சொல்லுவாயாக என்பதாம்.

என்னைத் தொண்டு கொண்டாண்ட இறைவனது முடிமேலுள்ள சந்திரன் பெண்களால் உண்டாகுந் துன்பத்தை யறிந்தவன், அத் துன்பத்துக்கு ஆற்றுமலே தண்ணிய கங்கையோடு எப்பொழுதும் வாழ்கின்றவன், நீ அந்தச் சந்திரனைக் காணப் படவில்லை. ஏனெனில் ஓர் பெண்ணால் நான்வருந்தும் நிலையில் நிற்கின்றேன். என்னை நீ செங்கதிரவனைப்போல் சுட்டு வருத்துகின்றாய்; அவன் இவ்வாறு என்னைச் சுட்டு வருத்தமுறச் செய்யான் என்று சந்திரனை நோக்கி வினவினரென்க. (கசரு)

"அடுத்து மேல்மேல் அலைத்தெழும் ஆழியே!
தடுத்து முன்எனை ஆண்டவர் தாம்உணக்
கடுத்த நஞ்சுன் தரங்கக் கரங்களால்
எடுத்து நீட்டுநீ என்னை இன் றென்செயாய்?"

(எ - து.) உடனுடன் இடைவிடாது மேலெழுகின்ற அலைகளையுடைய கடலே! சிற்றின்பத்திற் கிடமாகிய சிறிய கலியாணத்தை முன்னே தடுத்து, இப்போது என்றும் உள்ள பேரின்பத்திற் கிடமாகிய பெரிய மணக்கோலத்தோடு என்றும் நானிருந்து விளையாட என்னை ஆண்டவராகிய எம்மிறைவன் உண்ணும்படியாக, கொடுமையில் மிக்க விடத்தை உன்னுடைய அலைகளாகிய கைகளால் எடுத்து நீட்டும் செயலையுடையையல்லவா. அன்பும் இரக்கமும் இல்லாத நீ, என்னை இன்று என்ன தீங்கு தான் செய்யமாட்டாய்? (எ - ம்.)

கடலோசையால் உண்டாகும் விரகதாபத்தை யாற்றாது அக்கடலின் கொடிய செயலைக் கூறுவதுபோல் அதைக் குறித்துக் கூறினரென்க. (கசசு)

"பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடை
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டணி
புறம்ப ணைத்தடம பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெங் கோதமிழ்மாருதம்."

(எ - து.) தமிழ் வழங்கும் தென்திசையினின்றும் வருகின்ற சிறு தென்றற் காற்றே! நீ பிறந்த இடம்-எங்கள் தமிழ்த்தெய்வம் வீற்றிருக்கும் பொதிய மலை; நீ சிறப்பாக வாழ்ந்திருப்பதற்கு வந்து சேர்ந்த இடம் - தெய்வ நதியாகிய காவிரிநதியினால் சூழப்பட்டுள்ள சோழ நாட்டின் புறம்பிலுள்ள மருத நிலங்களில் அழகு பெற்று விளங்கும் தடாகங்கள்; பிறந்த இடமும் வாழும் இடமும் இவ்வாறிருக்க, நீ மேன்மேல் வெம்மையையே கொடுக்கும் காற்றினை வீசப்பழகிய இடம் எவ்விடமோ? அதனை எனக்குக் கூறுவாயாக என்பதாம்.

சிறு தென்றற் காற்றே! நீ பிறந்ததும், நீ வாழ்கின்றதும் - வேதங்களைத் திருவாக்கால் அருளிய இறைவனது திருச்செவிக்கு இன்பத்தைச் செய்வதும், ஆன்மாக்களுடைய பிறவி வெப்பத்தை மாற்றுவதுமாகிய இனிய தமிழ் வழங்கும் இடங்கள். யானும் தமிழ் நிலத்திலே தோன்றி தமிழ் நாவலனாய்த் தமிழ் நாட்டிலே வழங்குகின்றவன்; வேறு நிலத்தையும், வேறு பாஷையையும் உடையவனை வருத்துவது போல் என்னை வருத்து கின்றனையே. இவ்வண்ணம் வருத்துவதாகிய வெம்மையை எங்குக் கற்றுக் கொண்டனை? என்று தமிழ் மாருதத்தை வினவினரென்க.

இப் பதினொரு திருப்பாட்டாலும், ஆரூரர் தேவாசிரியத்தின்கண் வந்து, இப் பரவையை இவ்வாரூர் இறைவர் தந்தருளுவரென்று எண்ணியிருக்குஞ் சமயத்தில், சூரியன் - இவ்வாரூரர் முன் கண்ட பரவையை இப்பொழுது காணாமையினலன்றோ வருந்துகின்றவராயினர்; இது சிறிது முன்னம் தெரிந்திருக்குமாயின் அப்பரவையைக் காட்டி யிருப்போம்; நாமோ இப்போது மேற்கடலிற் புகும் சமயம் ஆய்விட்டது; இப்போது கடலிற்புகாது பரவையைக் காட்டிப் போவோ மென்றால்

அது கூடாது; இது இறைவனது ஆணை; ஆகலான் நாம் இக் கடலிற் புகுந்து இந்நாள் போலன்றி நாளை அதி விரைவில் உதயகிரியிற்றோன்றி அப் பரவையாரைக் காட்டுவோ மென்று எண்ணி மேற்கடலிற் புகுந்தன னென்றும்,—

ஆரூரர் ஒரு வார்த்தையுமின்றித் தேவாசிரியத்தில் அடங்கியிருக்கவே, அவ் வூரில் வாழும் பறவைகளும் ஒலித்தலின்றிக் கூண்டுகளில் அடங்கவும், தமது நாயகரைப் பிரிந்த தலைவிகள் தலைவியைப் பிரிந்து வருந்துகின்ற ஆரூரரைப்போல் வருந்தவும் மாலைப் பொழுது வந்த தென்றும்.—

அது வரவே, அறிவுள மக்களையும் பேதித்துப் பேதைமையைச் செய்யவல்ல மங்கையரது மனமும், நல் லொழுக்கத்தைக்காட்டிப் பிறரை வஞ்சித்து உள்ளத்துள் கூடாவொழுக்கம் பூண்டொழுகவல்லாரது தீவினையும், இயமன் தூதரை அஞ்சச் செய்யும் அஞ்செழுத்தினை யுணராத அறிவிலாரது நெஞ்சமும் எவ்வண்ணம் இருண்டிருக்குமோ அவ்வண்ணமாக ஆகாயமானது இருளை அடைந்த தென்றும்; எனவே, அஞ்செழுத்தை உணராதாரிடத்து ஆணவமல இருளும், கூடா வொழுக்கம் உடையாரிடத்துக் கன்மமல இருளும், மங்கையரிடத்து மயக்கும் இயல்பினையுடைய மாயாமல இருளும் எவ்வாறடையுமோ அவ்வா றடைந்ததென்றும்.—

ஈசனார் அருள், எம்பிரானருள், எந்தையார் அருள் என் றெண்ணத்தக்க சிந்தையை உடையவர் ஆரூரர்; இவ்வாரூரரை அருள் நிலையில் மாறுதிருக்கச் செய்ய வந்தவர் பரவையார்; அங்ஙன மிருந்தும், அருளென நினைக்க வந்த பரவையாரைக் கற்பகத்தின் பூங்கொம்போ, காமன்றன் பெருவாழ்வோ, புயல் சுமந்து விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ என்று நினைக்க வந்ததனால் அப்பெண்ணுருவம் அவ் வாரூரரது சித்தத்தை மயங்கச் செய்த தென்றால், அருள் வசப்படாது மருள் வசப்பட்டவருள் எவர் பிழைப்பார்க ளென்று இருளென்கின்ற நங்கை அதிசயித்துப் புன்னகை செய்தது போல வெண்ணிலா உதித்தது என்றும்,—

வெண்ணீறு தன்னொளியைப் பரந்து கிடக்கும் உயிர்களிடத்துப் பரப்பித் தன்னைப் பூசுவோர்க்குச் சிவானந்தத்தையும், தண் அருளையுந் தருதல் போல உதித்த நிலவானது பின் ஆகாயமுற்றும் பரவி, பார்ப்போர்க்கு உள்ளத்தில் இன்பத்தையும், உடம்பிற்குக் குளிர்ச்சியையும் தந்த தென்றும்,—

சந்திரன் தன்னிடம் விரிந்த கலையின் ஒளியோடு தனித்துத் தனது மண்டிலத்தில் இருப்பதுபோல், ஆரூரரும் தேவாசிரிய மண்டபத்தில் தம் உயிரைச் சூழ்ந்து வளைந்தெழு பரவையாரது காதலோடு தாம் தனித்திருந்தன ரென்றும்,—

அங்ஙனந் தனித்திருக்கின்ற போது * மன்மதனதுசெயலை ஆரூரர்கண்டு இவன் நம் பெருமான் கண்ணழலிற்பட்டு அங்கம் இழக்கப் பெற்றவனன்றோ? இப்பொழுது அவனங்கம் வெளியிடத்திற் காணப்படுகின்றதே; அதுவன்றி நம் பெருமான் யோகத்திருந்த காலத்தில், இவ்வனங்கன் அங்குள்ள பறவைகளின் மேல் தனது பாணங்களை விட அவைகள் அப்பாணங்களால் துன்பமுற்றதில்லை, தமது நிலைகளுங்கலங்கியதில்லை அங்ஙனமிருக்க இப்பொழுது இவன் விடும்பாணங்கள் நம்மைவருத்துகின்றன, நமது நிலையையுங் கலங்கச் செய்கின்றன; இவ்வாற்றல் இப்பாணங்களுக்கு எப்படி வந்தது? இச்செயல் இம் மன்மதன் செயலன்று; உருவம் அற்றவனுக்கு உருவம் வந்ததும், வன்மை யிழந்த மலர்ப்பாணங்களுக்கு வன்மை வந்ததும் நமது பெருமான் அருட் செயலேயாகும். அவ்வருள் இங்ஙனம் செய்தற்குக் காரணம் என்னையோ என்று, திருவருளை நாடினா ரென்றும்.—

---

* ஆசார்ய பிரபாவம்—உஉஅ-ம் பக்கத்திற் காண்க.

அங்ஙனம் நாடிய பின்னர் - இம் மன்மதனுடைய பாணங்கள் இப்பொழுது நம்மை வருத்துவதற்குக் காரணம் இம்மதியினுடைய கிரணப்பரப்பல்லவா! என்றெண்ணி அம்மதியை நோக்கிச் சந்திரனே! உருவிழந்தவன் உருவங்கொண்டுவந்து என்னை வருத்தத் தலைப்பட்டான். நீயும் எம்பெருமானுடைய முடியின்கண்ணுள்ள வெள்ளமாகிய கங்கையோடு வாழ்கின்றவனாக விருந்தும் உன்னுடைய கிரணங்களுக்கு நெருப்பைப்போலும் அழல் வீசும் இவ்வெம்மை எவ்வாறு வந்தது? இறைவனுடைய முடியிலிருக்கும் மதிக்கும் உனக்கும் சம்பந்தம் இல்லைபோலும், உருவம் அற்றவனுக்கு உருவம் வந்ததும், தண்கிரணம் உடைய உனக்கு இந்த வெங்கிரணம் வந்ததும் எம்பெருமானுடைய திருவருளேயாகும், நீவிர் என்செய்வீர் என்று வினவினரென்றும்,—

இவ்வாறு சந்திரனைக் குறித்து வினவுகின்றபொழுது கடலோசை செவியிற் புக அஃதறிந்து திருவுள்ளம் பொறுது கடலைநோக்கிக் கடலே! மன்மதனுடைய கொடுமையும், மதியினுடைய கொடுமையும் முன் அறிந்தேனில்லை அவர்போலன்று நீ, உன்னை முன்னமே அறிந்திருக்கின்றேன், என்னையெனின், என்னை ஆள்பவருக்கு முன்னே விடத்தைக் கொடுத்த கொடிய எண்ணம் உடையை அல்லவா! நீ கொடுத்த அவ்விடத்தை நான் கையில் எற்ற அதனை எண்ணியல்லவா எனக்கு இத்தீங்கினை இப்பொழுது செய்யத் தலைப்பட்டாய்— அஃதாவது திருமால் முதலிய தேவரெல்லாம் நம்மிடத்தில் தோன்றிய விடத்தைக் கண்டு நடுங்கினார்கள்; இந்தச் சுந்தரன் அந்த விடத்தை அஞ்சாது கையிலேற்றான். இவனையாளும் அவ்விறைவன் கண்டத்தில் வைத்துக்கொண்டான். இது நமக்கு அன்றுமுதல்விளைந்த அவமானமல்லவா, அந்தஅவமானத்தைவிளைவித்தவன் இச்சுந்தரனல்லவா! அவன் தனித்து முன்போல் வரவேண்டும், வந்தால் நாம் அவனுக்குச் செய்யவேண்டிய துன்பத்தைச் செய்து அத்துன்பத்தை யாவருங் காணும்படிச் செய்யவேண்டும்; அங்ஙனங் காண்பாராயின், விடம் உண்டவனை நினைத்து அழைப்பான், அவனும் வந்து இவன் படுந் துன்பத்தைக் கண்டு வருந்துவானே அன்றி நம்மால் உண்டாகிய அத்துன்பத்தை மாற்றுஞ் செயலைச் செய்ய எந்தத் தலைவியைத் தேடுவான்? ஒருக்கால் இத்துன்பத்திற்குக் காரணம் பரவையல்லவா என்று எண்ணி அவளிடத்து ஒருக்கால் சென்றாலும், அவள் நம்பேருடையவள் ஆகலான் அவள் இணங்காள் என்று எண்ணி மிக்க தைரியங்கொண்டு என்னை யழைப்பது போலும் பேரொலி செய்கின்றாய், உன் எண்ணம்போலும் நான் தனித்திருக்க வந்தது, இனி நீ என்னை என் செயாய் என்று இரங்கிக் கூறினரென்றும்,—

கடலோசையைக் கேட்டு இரங்கிக் கூறுகின்ற அச்சமயத்தில் தென்றற் காற்றானது சிறிது அசைந்தசைந்து வர, அது கண்டு இது என்ன அதிசயமென்றெண்ணி அத்தென்றலை நோக்கி, நீ தமிழ் மாருதம் என்னும் பெயருடையாய், எனெனில்,— நீ பிறந்த இடமும் வாழும் இடமும் தமிழ் வழங்கும் இடம், பிறந்த இடம் சேர்ந்த இடம் என்னும் அவ்விரண்டிடத்திலும் இல்லாத தீச்செயலை எங்கு கற்றனை? தமிழானது பிறவி வெப்பத்தை மாற்றி உயிர்களுடைய மனவாக்குக் காயங்களுக்கு இன்பஞ் செய்யத்தக்க தல்லவா, நான் நாவலன் என்னும் பெயர்பெற்றது நாவில் வன்மை பெற்றிருத்தற்கு ஆயிற்றேயன்றி உன்னைப்போலச் செயலில் வன்மைபெற்றிருத்தற்கு இல்லாதொழிந்தது. இளைத்தவனை மேன்மேல் வருத்தமுறச் செய்வது அறமன்று என்று தென்றலை இரங்கிக் கூறினரென்றும் விதந்து ஓதியவாறும்.

மன்மதனும் கடலும் இறைவனுக்குக் குற்றம் இழைத்த காரணத்தான்— அழலிற்பட்டு வெந்த காமன் என் முன்னின்று வாளி தொடுப்பதே என்றும், ஆழியே! நஞ்சம் தரங்கக் கரங்களால்எடுத்து நீட்டும் நீ என்னை இன்று என் செயாய் என்றும் இழித்துக் கூறினரெனவும், மதியமும், மாருதமும், இறைவன் முடியினும், இறைவனுக்கு இனிய தமிழ் வழங்கு நிலத்தினும் இருக்கும் சிறப்பான் - தண்மதியை,

நீ வெண்மதிபோன்றிலை என்றும், தமிழ் மாருதமே, நீ பிறந்தது - பொதியம், அணைந்தது - புறம்பணைத்தடம் ஆகவே - பொருகழல்வீசி மறம் பயின்றது எங்கே என்று இரங்கி வினவினுளெனவும் கொள்க. (கசுஎ)

இன்ன தன்மைய பின்னும் இயம்புவான்
மன்னு காதல் ஞகிய வள்ளல்பால்
தன்அ ருட்பெறல் நெஞ்சு தயங்கப்போம்
அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம்.

(எ - து.) மன்மதன், மதி, கடல், காற்று முதலியவற்றை நோக்கி மேலே சொல்லியவாறு கூறியதே யல்லாமல், பின்னும் நாயகியைப் பிரிந்து தனிமை யுற்ருரை வருத்தும் இவைபோல்வனவாகிய குயில் முதலியனவற்றையும் நோக்கிக் கூறுகின்ற நிலைபெற்ற காதலையுடைய ஆரூரரிடத்து அன்ன நடைபோலும் நடையினையுடைய பரவையாரது பெறுதற்கரிய நெஞ்சமானது சென்று மீளாது தயங்கி நிற்கவே, அதனால் வருந்திச் சென்றவராகிய பரவையாரது செயலை இனி யெடுத்துச் சொல்லுவாம் என்பதாம்.

பரவையாரது செயல்.

வேறு

கனம்கொண்ட மணிகண்டர் கழல்வணங்கிக் கணவனைமுன் பெறுவாள் போல
இனம்கொண்ட சேடியர்கள் புடைசூழ எய்துபெருங் காத லோடும் [சென்ற
தனம்கொண்டு தளர்மருங்குல் பரவையும்வன் தொண்டர்பால் தனித்துச்
மனம்கொண்டு வரும்பெரிய மயல்கொண்டு தன்மணிமா ளிகையைச்சார்ந்தாள்.

(எ - து.) பரவையார் கோவிலுக்குள்ளே சென்று நீலகண்டனுகிய இறைவனை வணங்கி, வணங்கிய பயன் தன் கணவனைப் பெறுதல்தானென்று அக்கணவனைப் பெறுவார்போல் தன்னினத்தவராகிய சேடியர்களெல்லாம் புடைசூழ்ந்துவரத் தன்னுள்ளத்திற் பொருந்திய பெருங்காதலோடு வெறுங்கையுடன் போவதொழிந்து இருதனங்களையும் அவைகளினல் தளர்ந்த இடையையும் கொண்டு வன்றொண்டரைக் கண்ணுரக் காணும்பொழுது இவருக்கு முன்னே இவரறியாது அச்சுந்தரர்பாற் சென்ற மனமானது எல்லா அவயவ விசேஷங்களையும் அவர்பாற் கொள்ளைகொண்டு அதனல் வரும் மயக்கமீதூர்ந்தவராய்த் தமது மாளிகைக்குப் போயினர் என்பதாம்.

பரவையும் கனங்கொண்ட * * * தனம் தளர் மருங்குல் கொண்டு வன்றொண்டர் எனக்கூட்டுக.

சுந்தரமூர்த்திகளை முன் பரவையார் கண்டபொழுது, "என்னே என் மனந்திரித்த இவன் யாரோ" என்று நினைக்க, அந்நினைவைத் தியாகேசனைத் தொழும்பணியில் தலைப்பட்டுள்ள அவரது அன்பானது முற்பட்டுவந்து தடுத்து, அவர்கொண்டகாதல் வழியில் அவரைத்தளர்ந்துபோகச் செய்யாது, அவருள்ளத்தை வன்மையுடையதாக்கிக் கைக்கொண்டு தியாகேசன் முன்னே கொண்டுபோய்விட, அவ்வன்பின் துணையான் தியாகேசனைத் தெரிசித்தவுடன் முன் ஆரூரர்பால் ஆசையை உண்டாக்கிய காதலானது முன்வந்தழைக்க, அக்காதலின் பின்னேவந்து, சுந்தரமூர்த்திகளைக் காணும்பொழுது அப்பரவையாரது மனமானது உள்ளத்தையும் அவருக்குக் காவலாயுள்ள நாணமுதலியவற்றையுங் கடந்து, அச்சுந்தரமூர்த்திகள்பாற் சென்று அவரது அழகிய அங்கங்களை யெல்லாம் தன்னுள் நிறைத்துக்கொண்டு மீண்டும் பரவையாருள்ளத்தே புகுந்து, நீ கண்டு மயங்கிய சுந்தரரைக் கொண்டுவந்து விட்டேன், நீ பார்ப்பாயாக

என்று சொல்ல, பரவையார்தம் மனங்காட்டிய அவ்வுருவத்தைத் தன்னுள்ளே கண்ட வள்ளில் முன்னையினும் மயக்கமீதூர்ந்து இனி இம்மயக்கந் தெளியும் உபாயத்தைத் தேடவேண்டுமென்று தமது மாளிகைக்குப் போயினர் என்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (கசுக)

சீறடிமேல் நூபுரங்கள் அறிந்தனபோல் சிறிதளவே ஒலிப்ப முன்னர்
வேறொருவ ருடன்பேசாள் மெல்லஅடி ஒதுங்கிமா ளிகையின் மேலால்
ஏறிமர கதத்தூணத் திலங்குமணி வேதிகையில் நலங்கொள் பொன்கால்
மாறின்மலர்ச் சேக்கைமிசை மணிநிலா முன்றின்மருங் கிருந்தாள் வந்து.

(எ - து.) மாளிகைக்குப் போகும்பொழுது அவரது சிறிய அடியை நீங்காதிருக்கு நூபுரங்கள் அவருள்ளக் குறிப்பை யறிந்து இப்பொழுது நமது ஓசை அவருக்குத் துன்பஞ்செய்யுமென் றெண்ணி மெல்லென ஒலித்தல்போல் ஒலித்தன. (அஃதாவது - மாளிகைக்கு வந்தபின் விரைந்து செல்லும் நடையின்றிச் சோர்ந்த நடையினராய் உள்ளே சென்று) தம்முன்னே நிற்கின்ற ஒருவரோடும் உரையாடாது மெல்லமெல்லக் காலினைவைத்து மேல் உப்பரிகையின்மேற் சென்று குளிர்ந்த நிலவெரிக்கும் முற்றத் தருகில் மரகதத் தூணோடு பிரகாசிக்கும் இரத்தின வேதிகையின்மேல் அழகமைந்த பொற்கால்களையுடைய அன்றலர்ந்த மலர்பரப்பிய கட்டிலில் வந்து இருந்தனர். (எ-ம்)

மாளிகையின் மேலால் ஏறி மணிநிலா முன்றின் மருங்கு மரகதத் தூணத்திலங்கு மணிவேதிகையில் நலங்கொள் பொற்கால் மாறின் மலர்ச்சேக்கை மிசை வந்திருந் தாள் எனக் கூட்டிப் பொருள் கொள்க. (கஎ0)

பரவையார் நம்பிகளைப் பற்றி வினுதல்.

அவ்வளவில் அருகிருந்த சேடிதன்னை முகநோக்கி "ஆரூர் ஆண்ட
மைவிரவு கண்டரைநாம் வணங்கப்போம் மறுகெதிர்வந் தவர் ஆர்" என்ன
"இவ்வுலகில் அந்தணராய் இருவர்தே டொருவர்தாம் எதிர்நின் றாண்ட
சைவமுதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழனார் நம்பி" என்றாள்.

(எ-து.) ஆலயத்துட் சென்ற காலத்துத் தம்முடன் வந்திருந்த சேடி அருகிருப் பக் கண்டு அவளது முகத்தைப் பார்த்து, இந்த ஆரூரை ஆளும் நீலகண்டராகிய இறை வரை நாம் வணங்கப் போம் பொழுது நம்மெதிரில் ஓரழகர் வரக் கண்டோ மல்லவா, அவர் யார்? நீ அறிவையோ? என்று கேட்க, அச்சேடியர் எமது தலைவியே! நம்மால் காணப்பட்ட அப்பேரழகர் நம்மிறைவனுக்கே வழி வழியாய் அடிமை செய்யவல்ல ஆதிசைவ குலத்தில் அவதரித்தவராம். பிரமவிஷ்ணுக்களாகிய இருவரும் மேலுங் கீழுந்தேட அவ்விருவருக்குங் காணப்படாது ஒருவனாய் நின்ற பெரியோன் இவ்வுல கில் இவர் திருமணக்கோலங் கொண்டிருக்கும்போது அம்மணப்பந்தரில் யாவரும் மிக எளிதாய்க் காணப் பெருங்கிழவனாய் வந்து எதிரே நின்று தன்னடியான் என்றாண்ட தம்பிரான் தோழர் என்னுந் திருநாம முடையவர் என்று சொன்னாள் என்பதாம்.

ஆண்ட செய்தி முதலாகத் தம்பிரான் தோழர் என்னும் நாமம் பெற்றதுவரையில் நடந்த நம்பிகளது வரலாற்றைக் கூறினாள் என்பது தோன்ற-எதிர் நின்றாண்ட தம்பி ரான் றோழனார் நம்பி-என்றாள்-என்றார். (கஎக)

என்றவுரை கேட்டலுமே "எம்பிரான் தமரேயோ" என்னா முன்னம்
வன்றொண்டர் பால்வைத்த மனக்காதல் அளவின்றி வளர்ந்து பொங்க
நின்றநிறை நாண்முதலாம் குணங்களுடன் நீங்கவுயிர் ஒன்றும் தாங்கி
மின்தயங்கு நுண்ணிடையாள் வெவ்வுயிர்த்து மெல்லணைமேல் வீழ்ந்த போது,

(எ - து.) நம்பி தம்பிரான் தோழரென்று சேடி சொல்லக்கேட்ட மாத்திரத்தில் எம்பிரானுடைய தியாகேசனுடைய தோழரோ அவ்வழகர் என்று சொல்வதற்கு முன்னரே அவ்வன்றொண்டர்பால் சென்றிருந்த மனக்காதல் அளவுகடந்து வளர்ந்து மேம்பட, அதனால் அவ்வம்மையாரை விட்டுநீங்காத நிறையென்னும் குணம்நாண முதலிய நான்கு குணங்களுடன் நீங்க, மின்போல் விளங்கும் நுண்ணிய இடையினையுடையபரவையார் யாதொருதுணையுமற்று உயிரொன்றுமே தாங்கி, பெருமூச்செறிந்து அவ்வுயிருஞ் சோர்வடைய மென்மையாகிய பூவணைமேல் வீழ்ந்தபோது,— (கஎஉ)

ஆரநறும் சேறாட்டி அரும்பனிநீர் நறுந்திவலை அருகு வீசி
ஈரஇளம் தளிர்குளிரி படுத்துமட வார்செய்த இவையும் எல்லாம்
பேரழலின் நெய்சொரிந்தால் ஒத்தனமற் றவள்மீது சமிதை என்ன
மாரனுந்தன் பெரும்சிலையின் வலிகாட்டி மலர்வாளி சொரிந்தான் வந்து.

(எ - து.) அதுகண்ட சேடியர்கள் சந்தனக் குழம்பை யப்பியும் அருகிருந்து பனிநீரைத் தெளித்தும் குளிர்ந்த இளமையான தளிர்களையும் செங்குவளையையும் பரப்பினர். இவ்வண்ணம் சேடியர்கள் பலவகையால் குளிர்ச்சி யுண்டாம்வண்ணம் செய்யும் அவைகள் பெரிய தீயில் நெய் சொரிந்தாற்போ லாயின. அவ்வளவிற் போகாமல் மன்மதனும் வந்து தனது பெரிய வில்லின் வலியைக்காட்டி அந்நெருப்பின் மேல் சமித்தை யிடுவதுபோலப் புஷ்பபாணங்களைச் சொரிந்தனன் என்பதாம். (கஎஙு)

மலர் அமளித் துயில்ஆற்றாள் வரும்தென்றல் மருங்காற்றாள் மங்குல் வானில்
நிலவுமிழும் தழல்ஆற்றாள் நிறைஆற்றும் பொறைஆற்றாள் நீர்மை யோடும்
கலவமயில் எனஎழுந்து கரும்குழலின் பரம்ஆற்றாக் கையள் ஆகி [றாள்.
இலவவிதழ்ச் செந்துவர்வாய் நெகிழ்ந்தாற்றா மையின்வறிதே இன்ன சொன்

(எ - து.) இவ்வாறு சேடியரும் மன்மதனும் பரவையாரிட முண்டாகியகாமத் தீயைச சந்தனக் குழம்பாலும் பனிநீராலும் மலர்ப்பாணங்களாலும் அதிகரிக்கச் செய்யவே, புஷ்பசயன முதலியவைகளும் பரவையாருக்குத் துன்பஞ்செய்ய அதனால் புஷ்பசயனத்தில் உறங்காதவராயும், மேன்மேல் வீசும் தென்றற்காற்றுச் சகியாதவராயும், மேகங்கள் தவழும் ஆகாயத்தின்கண் சந்திரன் சொரிகின்ற நிலவாகிய நெருப்புக்கு ஆற்றாதவராயும், மனத்தின்கண் அடக்கற் பாலதாகிய காமமானது அடக்கற்கின்றி வெளிப்படுதற்கான செயலைச் செய்வதனால் உண்டாகும் பாரத்தைத் தாங்கமாட்டாதவராயும் வருந்தி இனி யாவுந் துன்பத்தையே செய்கின்றபடியினால் நாம் இதனை விட்டு வேறோரிடத்துக்குப் போவோமென்றெண்ணி மெல்லிய கலாபத்தையுடைய மயில் எழுந்திருப்பதுபோல் எழுந்திருந்து நடக்கத் தொடங்குங்கால் அளகபாரத்தை யாற்றாதவராகி இலவ இதழையல்லாமல் பவளத்தையும் ஒத்த வாயைச் சிறிதசைத்து உள்ளத்தில் நிகழும் துன்ப மிகுந்த மாறுபாடான சொற்களைக் கூறத்தொடங்கினர்.

வேறு.

“கந்தம் கமழ்மென் குழலீர்! இதுஎன்? கலைவாள் மதியம் கனல்வாய் எனைஇச்
சந்தின் தழலைப் பனிநீர் அளவித் தடவும் கொடியீர்! தவிரீர்! தவிரீர்!!
வந்திங் குலவும் நிலவும் விரையார் மலயா னிலமும் எரிவாய் வருமால்
அந்தண் புனலும் அரவும் விரவும் சடையான் அருள்பெற் றுடையார் அரு
[ளார்,”—

(எ - து.) நறுமணங் கமழும் மெல்லிய கூந்தலைப்படைத்த எனதுசேடியர்களே! என்னை இச் சந்திரன் தன்னுடைய கிரணத்தால் சுட்டெரிக்கின்றான். இது என்?

நானவனுக்கு என்ன தீங்கு செய்தேன்? அவன் அப்படியிருக்க, நீங்களும் அவனி லும் கொடியராக விருக்கின்றீர்கள். எனெனில் சந்தனக் கட்டையினின்றுந் தேய்த்த குழம்பாகிய தீயைப் பனிநீரோடு கலந்து மேலே அப்புகின்றீர்கள். இவ்வாறு செய்வ தை நீங்கள் தவிருங்கள்; நீங்கள் தவிராது இத்தீங்கு செய்வதுமல்லாமல் பொதிய மலையிற் றவழ்ந்து இங்குவந்துலவுகின்ற நறுமணங்கமழும் தென்றற் காற்றும் இன் பஞ் செய்யுங் காற்றாய் வாராமல் துன்பஞ் செய்யும் நெருப்பாய் வந்து வீசுகின்றது. பொதிய மலைச் சார்பால் நறுமணச் சார்பு உண்டானது போல், இத்தீச்சார்பு இதற்கு எங்கிருந்துண்டாயிற்றோ அறியேன். இதுகாறும் நான் சொல்லிவந்தனவெல்லாம் தீங்கே எனக்குச் செய்துவருவனபோல் கங்கையும் பாம்பும் தரித்துள்ள சடையனு ராகிய சிவபெருமானுருடைய அருள் பெற்று விளங்கும் தம்பிரான் தோழராவது தாம் பெற்றுள்ள பேரருளில் ஒருசிறிது எனக்கு அருள் செய்கின்றனரா! நானிப் போது படும் பாடெல்லாம் அவரால் உண்டானதல்லவா! அவரால் உண்டான என் பாட்டைத் தம்பிரானைத் தாம்பாடும் திருப்பாட்டால் அழிக்கப்படாதா! அதனையும் செய்தாரில்லை என்பதாம். (கஎரு)

"புலரும் படி அன்றிரவென் அளவும் பொறையும் நிறையும் இறையும் தரியா;
உலரும் தனமும் மனமும் வினையேன் ஒருவேன் அளவோ பெருவாழ்வுரையீர்;
பலரும் புரியும் துயர்தான் இதுவோ படைமன் மதனார் புடைநின் றகலார்;
அலருந் நிலவும் மலரும் முடியார் அருள்பெற் றுடையார் அவரோ அறியார்"

(எ - து.) இவ்விரவானது என் விஷயத்தில் விடியுந்தன்மை யுடைத்தன்று; என்னிடத்தில் இன்றளவும் நீங்காது வாழ்ந்திருக்கும் பொறையுடைமையோ நிறையு டைமையோ சிறிதளவும் இனித் தரித்திருப்பதற்கில்லை. இவை போலவே எனது மனமும் தனப் பெருக்கும் வாடுகின்றன. இவ்வாறான துன்பத்துக் கிடஞ்செய்யும் அடாது ஆசைப்பெருக்கை ஒழிக்கவேண்டுமாயின் என்னளவி லிருக்கின்றதோ! என்னொருத்தியினால் ஆகத்தக்கதோ! அன்று. எனெனில் பெருவாழ்வுடையீர்! இப்போது எனக் குண்டாயிருக்குந் துன்பம் - பலரும் ஓய்விலாது செய்யும் செய்கை யினாலுண்டாகிய பெருந் துன்பம். இவரெல்லாரினுஞ் சிறந்து இந்நோய்வளர்ப்பதில் தலைவராயுள்ள மன்மதனாரோ என்பக்கலில் நின்றும் நீங்கவேயில்லை. (இம் மன்மத னார் எரிவிழிப்பட்டும் இவ்வாறு செய்யும் வலியுடையரா யிருப்பின் படாதிருப்பாரா யின் இன்னமும் என்செயவல்லரோ அறியேன்.) பிறைக்கண்ணியையும் கொன்றை மலரினையும் சூடிய சடைமுடியினை யுடைய இறைவன் அருள் பெற்றுடையாராகிய தம்பிரான் தோழர்தான் யான் படுந்துன்பத்தை யறிவாரோ என்றால் அவரும் அறி யார். (எனெனில் யான் அவராசையால் படுந் துன்பத்தைப் போல் என்னாசையால் அவரும் துன்பமடைய வருமாயின் எனக்குண்டாகிய துன்பம் ஒழிந்தேவிடும். அது அவருக் குண்டாகவு மில்லை; எனக்கு இத் துன்பம் நீங்கும் வகையும் தெரியவில்லை) என்பதாம். (கஎசு)

"தேரும் கொடியும் மிடையும் மருகில் திருவா ரூரர்! நீரே அல்லால்
ஆர்என் துயரம் அறிவார்? அடிகள்! அடியேன் அயரும் படியோ இதுதான்?
நீரும் பிறையும் பொறிவாள் அரவின்நிரையும் நிரைவெண் தலையின் புடையே
ஊருஞ் சடையீர்! விடைமேல் வருவீர் உமதன் பிலர்போல் யானோ உறுவேன்?"

(எ - து.) இனித் தேரும் கொடியும் நெருங்கிவரும் திருவிழாச் சிறப்பு வாய்ந்த வீதியினையுடைய திருவாரூருடைய தியாகேசரே! நீரொருவர்தான் என் துயரத்தை யறிந்தால் அறியலாமே யல்லாமல் வேறு யாவரறிவார்? என் தெய்வமே! உனது அடியாளாகிய யான் உனது தோழரால் சோர்வடைந்திருக்கின்றேனே; இதுதானோ

நானடையத்தக்கது ? இச்சோர்வை நானடையலாமோ ! கங்கையும் பிறையும் சர்ப்ப மாலைகளும் ஆகிய இவைகள் வரிசையாகத் தரித்துள்ள வெள்ளிய சிரமாலைகளின் பக்கங்களில் உலாவிச் செல்கின்ற சடைமுடியினை யுடையீர்! நீராவது விடையினை யூர்ந்து விரைந்து என்பால் வருவீர். உம்பால் அன்பிலாதவர்போல் நான் துன்படையத்தக்கவளா ? நான் அன்பில்லாதவளுமல்லள்; துன்பப் படத்தக்கவளுமல்லள் (ஆதலின் நீர் எழுந்தருளி எனது துன்பத்தைப் போக்கியருளுவீர்) என்பதாம். (கஎஎ)

இறைவன் கனவில் அருளல்.

என்றின் னனவே பலவும் புகலும் இருளார் அளகச் சுருள்ஒ திமையும் [வார்
வன்றொண் டரையும் படிமேல் வரமுன் பருள்வான் அருளும் வகையார் நினை
சென்றும் பர்களும் பணியும் செல்வத் திருவா ரூர்வாழ் பெருமான் அடிகள்
"அன்றங் கவர்மன் றலைநீர் செயும்" என்றடியார் அறியும்படியால் அருளி,—

(எ - து.) என்றிவ்வண்ணமாக அன்பினால் பலவகையாகச் சுதந்தரங் கொண்டு பேசும் இருள்போலுங் கருத்த சுருண்ட கூந்தலையுடைய பரவையாரையும், வன்றொண்டப் பெருமானாரையும் இம்மண்ணுலகில் வரும்வண்ணமாக அருளினவன் - ஸ்ரீ கயிலையின்கண் இவ்விருவரையும் அடிமையாகவுடைய இறைவன்; ஆகையால் அப்பொழுது இருவர்காதலும் முற்றுப்பெறநினைத்து அவர்களை யனுப்பியதுபோல இப்போது அக்காதல் முற்றுப்பெறச் செய்ய முயலவேண்டியவர் அவனேயன்றி யாவரிருக்கின்றனர். ஆகலான் தேவர்கள் வந்து வணங்கும் செல்வத் திருவாரூரின்கண் வாழும் "எம்பெருமான் அவ்வூரின்கண் வாழும் எல்லா அன்பர்களுடைய கனவின்கண் அன்றிரவே சென்று நாமழைக்கவந்த தோழனுக்கும் நம்பரவையாருக்கும் நாளைக்கே நீங்களெல்லோருமிருந்து கலியாணத்தைச் செய்யக்கடவீர்கள்" என்று அவர்கள் அறிவில் அறியும்படித் திருவாய்மலர்ந்தருளி.— (கஎஅ)

மன்னும் புகழ்நா வலர்கோன் மகிழ "மங்கை பரவை தன்னைத் தந்தோம்
இன்ன வகைநம் மடியார் அறியும் படிமே உரைசெய் தனம்" என்றருளிப்
பொன்னின் புரிபுன் சடையன் விடையன் பொருமா கரியின் உரிவை புனைவான்
ரம் நடையாள் பரவைக் "கணிய தாரூ ரன்பால் மணம்" என்றருள,—

(எ - து.) அடியார்களுக் கருளியபடியே தம்மால் நிலைபெற்ற புகழுடைய நாவலர் கோனாகிய தமது தோழர் மகிழ அவரிடத்துச் சென்று, சுந்தரனே ! நீ காதல்கொண்டு நம்பால் இன்று வேண்டிய பரவையைத் தந்தோம் நமது அடியார்களுக்கும் பரவையை நாளையதினமே உனக்குக் கலியாணஞ் செய்துவைக்கும்படி கட்டளையிட்டு வந்தோம் என்றருளி பொன்னின் புரிபோன்ற சடையினரும், இடபவூர்தியரும், போர்செய்ய வந்த பெரிய யானைத்தோலை ஆடையாகத் தரித்தவருமாகிய இறைவன், அன்னத்தின் நடைபோலும் நடையினையுடைய பரவையார்பாற் சென்று நம்பால் பரவிய அன்புடையாளே ! நீ கவலை யொழிக நமது தோழன்பால் உனக்குக் கலியாணம் நாளையே வந்துவிட்டது என்றருளிச் செய்ய.— (கஎக)

பரவையார் திருமணம்.

காமத் துயரில் கவல்வார் நெஞ்சில் கரையில் இருளும் கங்குல் கழிபோம்
யாமத் திருளும் புலரக் கதிரோன் எழுகா லையில்வந் தடியார் கூடிச்
சேமத் துணையாம் அவர்பே ரருளைத் தொழுதே திருநா வலர்கோன் மகிழத்
தாமக் குழலாள் பரவை வதுவை தகுநீர் மையினால் நிகழச் செய்தார்.

(எ - து.) கனவின்கண் இவ்வாறருளிய திருவாக்கைக் கேட்டவராகிய பரவையாருடைய நெஞ்சத்தின்கண் கவலைக்கிடஞ்செய்யும் கரையில்லாத துன்பமென்னும் இருளும் அஃதேபோல் பரவையார் காரணமாக ஆரூரரிடத்துண்டாகிய காமமென்னும் இருளும். இவ்விரண்டிருளையும் விளைவித்த உலகத்திற் பரவிய பூதவிருளும் ஒழியுமாறு சூரியன் உதயஞ்செய்ய அக்காலத்தில் அருளுதயம்பெற்ற அடியார்களெல்லாங் கூடி சேமநிதியாய் விளங்கும் அழியாத துணையாயுள்ள அருளாளர் அருளிய பேரருளையெண்ணியெண்ணி அவ்வெம்பெருமானைத் தொழுது கனவின்கண் கட்டளையிட்டபடியே நாவலூராளியாகிய சுந்தரமூர்த்திகள் மணக்கவலை யொழிந்து மகிழுமாறு இம்மணம்போலும் எம்மணம் எம்பிரானால் மணம்பெற்றது என்று யாவரும் அதிசயிக்கத் தியாகராஜமூர்த்தியினுடைய தகுதிக்கு ஏற்ற சிறப்பினை யுடைத்தானதாகப் பரவையாருடைய திருக்கலியாணத்தைச் செய்தார்கள் என்பதாம். (கஅ0)

வேறு.

தென்நாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்னாருங் கொடிமருங்குல் பரவையெனும் மெல்லியல்தன்
பொன்னாரும் முலையோங்கல் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினார்.

(எ - து.) பரவையாருடன் மணக்கும் மணக்கோலங்கொண்ட நாவலூரர் தேவராஜனாகிய தியாகேசனுடைய திருவருளால் மின்னற்கொடிபோலும் இடையினையுடைய பரவையாரது போகமார்ந்த பூண்முலை என்னும் பர்வதாக்ரமே யோக பரம்பரையால் துவாதசாந்தாதீதமாகிய பரவெளியைப் போய்க் கூடுவதற்குத் தாம் பற்றும் பற்றுக்கோடாகப் பற்றி பலநாளும் பரம்பரையாய்ப் பயிலும் சிவயோகத்தை விரும்பியிருந்தனர் என்பதாம்.

சிவசுந்தர சொரூபராகிய ஆரூரர், அவரால் காணப்பட்ட அருளுருவாகிய பரவையாரோடு கூடியனுபவிக்கவேண்டிய சிவபோகத்தை அனுபவித்தற்பொருட்டு அருளாளனாகிய தியாகேசன் தன்னருளுக்குரியாராகிய அடியார்களைக்கொண்டு திருமணஞ்செய்விக்க, முன் தியாகேசன் "மண்மேல் நின் வேட்கை தீர விளையாடுவாய்" என்றருளியபடி பரவையார் வழியே சிவபோகவிளையாடலைச் செய்து அதில் விருப்புற்றிருந்தனர் என்னும் அவ்வுண்மைப் பொருள் தோன்ற ஆசிரியர் சேக்கிழார், "பரவையெனும் மெல்லியலாள் பொன்னாரும் முலையோங்கல் புணர்குவடேசார்வாகப், பன்னாளும் பயில்யோக பரம்பரையில் விரும்பினார்" என்று தமது திருவுள மகிழ்ந்து கூறியிருக்க, அவ்வுண்மையை யுணரும் சிவஞானமும் சிவபுண்ணியமும் சிறிது மில்லாத முன்னுரைக்காரர் - போகம் பரை எனத்திருத்தி - தனங்களாகிய மலைச்சிகரங்களை தமக்குச் சாரும் இடமாகப் பலநாளும் அனுபவிக்கின்ற போகத்தை முறைப்படியே விரும்பி அனுபவித்திருந்தாரென்றும், மற்றொருவர் - பாட்டைத் திருத்தாது யோக பரம்பரையில் விரும்பினார் என்றே வைத்துப் பலநாளும் பயில்கின்ற சையோக பரம்பரையில் விருப்ப முடையவராயினர் என்றும் வரைந்துள்ளார். இவ்வுரைக்காரர் பின் வரும் திருப்பாடலைக் குறித்திலர்போலும். (கஅக)

தன்னைஆ ளுடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலுஞ் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனும்
மின்னிடையா ளுடன்கூடி விளையாடிச் செல்கின்றார்.

(எ - து.) பன்னாளும் பயில்யோக பரம்பரையில் விரும்பினாராகிய தென் நாவலூர் மன்னர் அந்த யோகப்பயிற்சியில் ஓர் நாளன்றிப் பலநாளும் பற்றிய அப்பற்றின்

சம்பந்தத்தால் தம்மை அருள்வழியில் ஆளும் கடப்பாடுடையவனாகிய இறைவனது சரணாரவிந்தமலரைத் துவாத சாந்தாதீதத்திலுள்ள சஹஸ்ரார மலரிற் கண்டு அவ்வடியைத் தமது சிரத்திலும் இருதயகமலத்திலும் பிரகாசிக்கும்படியாகச் செய்து இவ்வாறான ஞானயோக சம்பந்தானுபவ சிவானந்தத்தைத் தந்து உள்ளக்கமலத்தில் வீற்றிருப்பதுபோல் கமலாலயத்தினும் வீற்றிருக்கும் இறைவனுக்குத் தமிழ்ச்சொல் என்னும் நல்ல மலர்களாற் றொடுக்கப்படும் திருப்பதிகப் பாமாலைகளைச் சாத்தி அப்பாமாலைப்பெருக்குக் கிடமாகிய பரவையாருடன்கூடித் தமது இறைவனுடைய விளையாடலில் செல்கின்றவராயிருந்தனர் என்பதாம். (௧௮௨)

ஆரூரர் பூங்கோயிலுக்கு வருதல்.

வேறு

மாதருடன் கூட வைகி மாளிகை மருங்கு சோலை
போதலர் வாவி மாடு செய்குன்றின் புடையோர் தெற்றிச்
சீதளத் தரளப் பந்தல் செழுந்தவி சிழிந்து தங்கள்
நாதர்பூங் கோயில் நண்ணிக் கும்பிடும் விருப்பால் நம்பி,—

(எ - து.) ஆரூரராகிய நம்பி (எவ்வாறு செல்கின்றவரா யிருந்தாரெனின், பரவையாருடன் கூடி அவரது இருகுன்றங்களாகிய குசங்களைச் சாரும்போதெல்லாம் சென்னியிலும் உள்ளத்தினும் இறைவனுடைய ஞானக்கிரியா சொரூபமாய்ப் பிரகாசிக்கும் அடிகளினின்றும் பெருகாநின்ற பேரானந்தப்பெருக்கைப் பரவையாருடைய) திருமாளிகைப் பக்கத்திலும் பூஞ்சோலைகளிலும் பூந்தடங்களினும் செய்குன்றுகளின் மீதிலும் சிறுமேடைகள் மீதிலும் குளிர்ச்சி பொருந்திய முத்துப்பந்தரினும் இருந்து நந்து உண்டுகளித்து அவ்விடங்களினின்று நீங்கித் தியாகேசனைக் கும்பிடவேண்டும் ஆசை மேலீட்டினால்,— (௧௮௩)

அந்தரத் தமரர் போற்றும் அணிகிளர் ஆடை சாத்திச்
சந்தனத் தளறு தோய்ந்த குங்குமக் கலவைச் சாத்திச்
சுந்தரச் சுழியம் சாத்திச் சுடர்மணிக் கலன்கள் சாத்தி
இந்திரத் திருவின்மேலாம் எழின்மிக விளங்கித் தோன்ற,—

(எ - து.) தேவலோக வாசிகளாகிய அமரரும் அதிசயிக்கும்படியான பொன்னாடை யுடுத்தும் குங்குமப்பூ முதலிய கலவைகள் கலந்த சந்தனக் குழம்பைப் பூசியும் முடியிலும் மார்பிலும் தோள்களிலும் முன்னங் கைகளிலும் விரல்களிலும் இடையிலும் ஒளிவிடும் மாணிக்கமயமா யிருக்கின்ற ஆபரணங்களுள் பூணவேண்டுவனவற்றைப் பூண்டும் அணியவேண்டுவனவற்றை அணிந்தும் இந்திர செல்வத்தின்மேல் செல்வமுடைய காட்சியிற் சிறந்து விளங்கித் தோன்ற,— (௧௮௪)

"கையினில் புனைபொன் கோலும் காதினில் இலங்கு தோடும்
மெய்யினில் துவளும் நூலும் நெற்றியின் விளங்கு நீறும்
ஐயனுக் கழகி தாம்" என் றாயிழை மகளிர் போற்றச்
சைவமெய்த் திருவின் கோலம் தழைப்பவீ திியினைச் சார்ந்தார்.

(எ - து.) அத்தோற்றத்தோடு கையில் பொற்பிரம்பும், காதுகளில் குண்டலங்களும், மார்பில் துவளும் பூணூலும், நெற்றியில் விளங்கும் திருநீறும் திருத்தமாக ஆபரணங்களை யணிந்த மங்கையர் கண்டு தம்பிரான் தோழராய்ப் பரவை நாயகராய் விளங்கும் இவருக்கு இவ்வளவுஞ் செய்யத் தகும் சிறப்புடைத்தாண்டே என்று பின்

வருமாறு போற்ற. சைவமெய்த் திருவின்கோலம் யாவருடைய கண்களிலும் உள்ளங்களிலுந் தழைத்து நிரம்புமாறு வீதியின்கண் புறப்பட்டு வந்தனர் என்பதாம். (கஅ௫)

"நாவலூர் வந்த சைவ நற்றவக் களிறே !" என்றும்
"மேவலர் புரங்கள் செற்ற விடையவர்க் கன்ப!" என்றும்
"தாவில்சீர்ப் பெருமை ஆரூர் மறையவர் தலைவ !" என்றும்
மேவினர் இரண்டு பாலும் வேறுவே றாகப் போற்ற,—

(எ - து.) இவ்வழகிய திருக்கோலத்தோடு வீதியில் வரும்போது அவரது இரு பக்கத்தும் பரவையாரது சேடியர்கள் நெருங்கி "திருநாவலூரின்கண் அவதரித்த நல்ல சைவ தவக்களிறே (யானையே !) என்றும், திரிபுரதகனஞ் செய்து மால்விடையூர்ந்தவர்க்கு அன்புருவமா யிருக்கின்றவரே ! என்றும், அழிவில்லாத சிறப்பினுற் பெருமை பெற்றுள்ள ஆரூரில் வாழ்கின்ற ஆதிசைவ குலத்தலைவராகிய ஆரூரரே ! என்றும், தனித் தனி புகழ்ந்து பாடிவர,—

இரண்டு பாலும் மேவினர் (ஆகி) நாவலூர் * * தலைவ என்றும் வேறு வேறாகப் போற்ற எனக்கூட்டிப் பொருள் கொள்க. (கஅ௬)

கைக்கடா குரங்கு கோழி சிவல்கவு தாரி பற்றிப்
பக்கமுன் போது வார்கள் பயில்மொழி பயிற்றிச் செல்ல
மிக்கபூம் பிடகை கொள்வோர் விரைஅடைப் பையோர் சூழ
மைக்கரும் கண்ணி னார்கள் மறுகநீள் மறுகில் வந்தார்.

(எ - து.) இவர்களைப் போலவே சேவகர்கள் இருபக்கத்தும் யானை குரங்கு கோழி சிவல் கவுதாரி ஆகிய இவைகளைப் பற்றிக்கொண்டு அவைகளுக்குத் தாங்கள் கற்பித்து வரும் மொழிகளை அவைகள் சொல்லும் வண்ணம் சொல்லிச் செல்ல மலர்கள் நிறைந்த பூந் தட்டுகளையும் வாசனை வீசும் தாம்பூலத் தட்டுகளையும் ஏந்திச் செல்கின்றவர் சூழ்ந்துவர மைதீட்டிய கண்களைப் படைத்த மங்கையர்கள் வீதியில் வந்தனர் எ-ம். (கஅ௭)

பொலங்கலப் புரவி பண்ணிப் போதுவார் பின்பு போத
இலங்கொளி வலயப் பொன்தோள் இடைஇடை மிடைந்து தொங்க
நலங்கிளர் நீழல் சூழ நான்மறை முனிவரோடும்
அலங்கலம் தோளி னன்வந் தணைந்தனன் அண்ணல் கோயில்.

(எ - து.) இங்ஙனமான சிறப்புகளேயன்றிப் பொன்னணிகளால் அலங்கரிக்கப் பட்டுள்ள குதிரைகளைப் பற்றிக்கொண்டு குதிரைச் சேவகர் பின்னேவரவும், விளங்குகின்ற வாகுவலயங்களை யணிந்த அழகிய தோள்களில் இடை இடையே நெருங்கி பீலிக்குஞ்சங்களின் நீழல் சூழவும், நான்கு வேதங்களிலும் வல்ல வேதியர்கள் வேதவொலியுடன் வரவும், மாலை அணி முதலியவற்றைத் தாங்குதலால் அசைதலைப் பொருந்தியதோளை யுடைய சுந்தரமூர்த்திகள் தியாகேசனது கோயிலை வந்தடைந்தனர்.

அடிமையாகும் நாள் எந்நாளெனல்.

கண்ணுதல் கோயில் தேவா சிரியனும் காவ ணத்து
விண்ணவர் ஒழிய மண்மேல் மிக்கசீர் அடியார் கூடி
எண்ணிலார் இருந்த போதில் இவர்க்கியான் அடியேன் ஆகப்
பண்ணும்நாள் எந்நாள் என்று பரமர்தாள் பரவிச் சென்றார்.

(எ - து.) அடைந்தபோது மண்டபத்தினுள்ளே விண்ணுலகில் வாழும் தேவ கூட்டங்களொழிய மண்ணுலகில் மிக்க சிறப்புடன் வாழ்கின்ற எண்ணிறந்த அடியவ

ரெல்லாம் கூடியிருக்கும்போது இவ்வடியார்களுக்கு நம்மை அடியனுகப் பண்ணுநாள் என்னாளோ என்று சிந்தித்து அது பெறுமாறு தியாகேசனது திருவடிகளை வணங்கச் செல்லத் தொடங்கினர் என்பதாம்.

விசேடம் - ஆசார்யபிரபாவம் உசரு - வது பக்கத்திற் காண்க. (கஅக)

இறைவன் தோன்றல்.

அடியவர்க் கடிய னுவேன் என்னும் ஆதரவு கூரக்
கொடிநெடுங் கொற்ற வாயில் பணிந்துகை குவித்துப் புக்கார்
கடிகொள்பூங் கொன்றை வேய்ந்தார் அவர்க்கெதிர் காணக் காட்டும்
படிஎதிர் தோன்றி நிற்கப் பாதங்கள் பணிந்து பூண்டு,—

(எ - து.) அங்ஙனந் தொடங்கும்போது அடியவர்களுக்கு யான் அடியனுவேன் என்னும் அன்பு மிக வெற்றிக் கொடிகள் கட்டிய நெடிய திருவாயிலைப் பணிந்து இருகரங்களையுங் குவித்து உள்ளே புகுந்தருளினர். புகும்போது நறுமணங்கமழுங் கொன்றைமாலையணிந்த இறைவன் தோழருக்கெதிரே தமது திருவடிகள் காண அடியார்களைக் காட்டும்படி (அவ்வடியார்களுக்கு மறைந்து ஆரூரருக்கு) எதிரே தோன்றித் (தமது கோயிலுக்குப் புறம்பே) நிற்க, அவ்வருட்கோலத்தைக் காணப்பெற்ற தோழனுர் அப்பாதங்களைப் பணிந்துதலைமேற்கொண்டு,—

விசேடம் - ஆசார்யபிரபாவம் உசஎ, உசஅ, உசக பக்கங்களிற் காண்க. (ககo)

நம்பியாரூரர் துதித்தல்.

வேறு.

"மன்பெ ருந்திரு மாமறை வண்டுசூழ்
அன்பர் சிந்தை அலர்ந்தசெந் தாமரை
நன்பெ ரும்பர மானந்த நன்மது
என்த ரத்தும் அளித்தெதிர் நின்றன."

(எ - து.) அவ்வடிகளை நோக்கிச் செந்தாமரை யொத்த இவ்வடிகள் அன்பர் சிந்தையில் மலர்ந்து பெருகா நின்ற பரமானந்த மென்னும் நல்ல தேன் வெள்ளத்தை வேதங்களென்னும் வண்டுகள் சூழ்ந்து உண்ணுநிற்கின்றனவன்றே; அந்த நல்லதேனை நானும் பருகிக் களிக்கும்படி என் எதிரே இங்ஙனம் அவை நின்றனவன்றே,—(கக௧)

"ஞாலம் உய்ய நடம்மன்றுள் ஆடின;
காலன் ஆருயிர் மாளக் கறுத்தன;
மாலை தாழ்குழல் மாமலை யாள்செங்கை
சீல மாக வருடச் சிவந்தன."

(எ - து.) (இன்னமும் இவ்வடிகளின் பெருமையை என்னென்று கூறுவேன்) இவ்வடிகள் உலகெலா முய்யப் பொன்னம்பலத்துள் நடனமாடுவன; அன்பர்கள் சித்தங்கலங்க இயமன் வருவானுயின் அவனுயிர் மாளும்வண்ணம் கோபித்தழிக்கும் கோபத்தையுடையன; நறுமணங்கமழும் பூமாலை யணியப்பெற்ற கூந்தலையுடைய உமாதேவியார் தமது கைகளால்மெல்லென்று தடவச்சிவப்பேறியுள்ளன எ-ம். (ககஉ)

"நீதி மாதவர் நெஞ்சில் பொலிந்தன
வேதி யாதவர் தம்மை வேதிப்பன;
சோதி யாய்எழும் சோதியுள் சோதிய;
ஆதி மாலயன் காணு அளவின."

(எ - து.) சைவவொழுக்கத்திற் சிறந்த மாதவர்களுடைய நெஞ்சத்துள் பிரகாசிப்பன; பரிபாகம் வரப்பெருதவரை அது வரும்வண்ணம் அவரை வருந்தச்செய்வன; ஆதியந்தங்காணு தெழுகின்ற சோதிக்குள் சோதியாய் ஒளித்திருக்குந் தன்மையுடையன; மாலும் அயனும் அகழ்ந்தும் பறந்தும் காணுத அளவினையுடையன எ-ம். (ககங)

"வேத வாரண மேற்கொண் டிருந்தன;
பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன;
ஏத மானவை தீர்க்க இசைந்தன;
பூத நாதநின் புண்டரி கப்பதம்."

(எ - து,) பூதகணங்களுக்குத் தலைவரே! தேவரீரது திருவடித் தாமரைகள் வேதங்களெல்லாம் தமது முடிமேற் கொண்டிருப்பன, பேதையேனாகிய யான் அடிமையாகேனென்று வழக்காடிய பெரிய பிழையினைப் பொறுத்து என்னையாள்வன, எனதென் றனுபவிக்கவரும் இன்பங்களை யெல்லாம் அங்ஙனம் அனுபவிக்கவொட்டாமலும் அவைகளால் வரும் ஆகாமியமாகிய குற்றங்களை என்னுடையன ஆக்காமலும் இருத்தற்கு என்னுடனாய் இசைந்திருப்பன என்பதாம்.

இந்நான்கு திருப்பாட்டிலுள்ள "நின்றன" முதல் "இசைந்தன" என்பது காறும் கூறிய பதினொரு வினைமுற்றின் குறிப்புகள் "பதினொரு பாடலாகத் திருத்தொண்டத் தொகையைப் பாடிமுடிப்பை" என இறைவன் முன்னதாகவே இவரிடமாக உணர்த்தினான் என்று கொள்ளற்பாற்று. (கக௪)

இறைவன் அடியார்திறம் உணர்த்தல்.

வேறு

இன்னவா றேத்தும் நம்பிக் கேறுசே வகனார் தாமும்
அந்நிலை யவர்தாம் வேண்டும் அதனையே அருள வேண்டி
மன்னுசீர் அடியார் தங்கள் வழித்தொண்டை உணர நல்கிப்
பின்னையும் அவர்கள் தங்கள் பெருமையை அருளிச் செய்வார்.

(எ - து.) இவ்வாறு திருவடியைப் புகழும்போது இடபாரூடராகிய இறைவரும் அடியார் நடுவுள் கலக்குமாறு அடிமைத்திறத்தை வேண்டும் நம்பியாரூரருக்கு அதனையே அருள் செய்யக்கருதி, நிலைபெற்ற புகழினையுடைய அடியார்களது வழித்தொண்டு இத்தன்மைத்தா மென்று அவருணருமாறுணர்த்தி, பின்னர் அவருண்மையை உள்ளே உணர்த்தியவண்ணம் வெளியேயும் வாக்கினாற் சொல்லும்படி திருவாக்கான் அவர்களுடைய பெருமையை அருளிச் செய்வாராயினர் என்பதாம். (கக௫)

"பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்றும் இல்லார்;
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்;
இருமையும் கடந்து நின்றார் இவரைநீ அடைவாய்" என்று,—

(எ - து.) பரவை மணவாளனே! கீளார் கோவணமும் திருநீறும் மெய்யிற் றரித்து உருத்திராக்க மணியும் தாங்கியிருக்கும் பெருமையால் தம்மைத்தாமே ஒப்பார், சோஹம் பாவனையாற் பாவிக்கும் பாவனையில் நீங்கா திருப்பவராகலான், எம்மைப் பெற்றவ ராகின்றனர். எம்மோடு ஏகமாகி நிற்கும் பணியில் வழுவாது நிற்பவராகலான், உலகை (மலமாயா கன்மங்களை) வென்றவராவர். அவற்றை வென்றாராகையினால், பிராரத்தானுபவங்கள் வந்து வாதிப்பதும் பேதிப்பது மாகிய ஊனம்பொருந்தாமலிருக்கப் பெற்றவராவர். ஊனஞ் செய்யா தொழியவே, தமது அறிவிச்சை செயல்கள் அருள்நிலையினின்றும் நீங்கா திருப்பதாகிய அருமையாம் நிலையில் நிற்பவராயிருப்பர். அந் நிலையில் நிற்கப்பெற்றதனால், இறைவனாகிய எமது அறிவிச்சை செயல்கள் அவரது அறிவிச்சை செயல்களையாண்டு, அவ் வறிவிச்சை செயல்கள் காணும் உபகாரத்தையும் காட்டும் உபகாரத்தையும் மாறாது உணரும் வகையைச் செய்து, எம்பால் அன்பினையே விளைவித்துப் பேரின்பத்தை நுகர்விக்கச் செய்ய அதனை நுகர்கின்றவரா யிருப்பவர். அந்த நுகர்ச்சியாகிய பேரின்பானுபவம் கைகூடவே, இருவினைகளையும் இன்ப துன்பங்களையும், பிறப்பிறப்புக்களையும் ஒழித்தவ ராவர். இவ்வாறான

இலக்கணத்திலும் அனுபவத்திலும் வழுவாதவர்களான இவ்வடியார்களை நீ சென்றடைவாயாக என்று,—

இத்திருப்பாட்டான் இறைவன், அடியார்கள் திருவேடத்தால் தம்மைத்தாமே ஒப்பாகும் பெருமையுடையா ரென்றும், தம்மைத் தமது உள்ளத்தின்கண்செய்யும் இடைவிடாத்தியானத்தால்-தம்மைப் பெற்றா ரென்றும், தம்மோடு ஏகமாகி யிருத்தலால்-உலகை வெல்வாரென்றும், தமது அருளாலல்லது ஒன்றையும் செய்யாமையாகிய பணியில் வழுவாது நிற்றலால் - ஊனமேலொன்று மில்லாரென்றும், மும்மலங்களையுங் களைதல் அடியாரோ டிணங்கியிருத்தல், ஆலயந்தானும் அரனெனத் தொழுதல் ஆகிய தமது அரிய செயலில் அறிவிச்சை செயல்கள் நீங்காது நிலைபெற்றிருத்தலால் - அருமையாம் நிலையினின்றாரென்றும், அங்ஙனமே தமது உபகாரத்தைக் கருதுந்தோறும் உண்டாகும் உருக்கத்தினால் எல்லாக்கருவிகளும் கரைந்து கரைந்து இரு கண்ணீர் மழை வாரத் துரியநிலைகடந்து பரவசப்பட்டிருத்தலால் - அன்பினால் இன்பமார்வார் என்றும், நாம் அன்பினால் இன்பம் ஆர்ந்திருப்பவரது ஆகாமிய வினையையும் பிராரத்தானுபவத்தையும் தம்முடையதாகவே கொண்டிருத்தலால் - இருமையுங் கடந்தா ரென்றும் ஆகலான், இவரை நீ யடைவா யென்றும் தோழருக்கு அருள் செய்தனர் என்று கூறிய வாறாம். (௧௧௬)

நாதனர் அருளிச் செய்ய நம்பிஆ ரூரர் "நான்இந்
கேதந்தீர் நெறியைப் பெற்றேன்" என்றெதிர் வணங்கிப் போற்ற
"நீதியால் அவர்கள் தம்மைப் பணிந்துநீ நிறைசொல் மாலை
கோதிலா வாய்மை யாலே பா"டென அண்ணால் கூற,—

(எ - து.) தமது இறைவனார் இவ்வாறு அருளிச்செய்ய அதனைக்கேட்ட தோழனார், எம்பெருமானே! நான் இப்பொழுது குற்றமற்ற பெரியதோர் நெறியைப் பெற்றேன். அஃதென்ன வெனின், உலகின்கண் சிற்றின்பத்திலாழ்ந்தார் பேரின்பத் துறையை அறியா திழக்கப் பெற்றவராயும், பேரின்பத் துறையில் செல்லப் பெற்றார் சிற்றின்பத்தைப் பெருந் துன்பத்துறை யெனக் கண்டொழிந்து அப்பேரின்பத்திற் சென்றவராயும் இருக்கின்றனர். யான் சிற்றின்பத்து லாழ்ந்தும் பேரின்பத்தை யறியா திழந்தே னென்பதும், பேரின்பத்தைப் பெற்றுச் சிற்றின்பம் பெருந் துன்பமெனக் கண்டொழிந்தே னென்பது மின்றி "பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசு" எனவும், "முளையாதுமாயை" எனவும், "உடம்புடைய யோகிகள் தாம் உற்ற சிற்றின்பம், அடங்கத் தம் பேரின்பத்து ஆக்கில்-தொடங்கி, முளைப்பதும் ஒன்றில்லை முடிவதும் ஒன்றில்லை இளைப்பதும் ஒன்றில்லை யிவர்" எனவும் கூறிய சித்தாந்தானுபவத்தில் என்னை நிறுத்தி, அந்நெறி இந்நெறியென உலகம் உணர்ந்துய்யுமாறும் அருளிய பெரும! யான் உனதருட் செயலை என்னென்று கூறுகேன் என்று எதிரே வணங்கிப் போற்றிய பொழுது, ஆரூரண்ணல் சுந்தரமூர்த்திகளைப் பார்த்து, நீ அவ்வடியவர் திருக்கூட்டத்தவரைப் பொதுவாகப் பணிந்துபோற்றாமல் அவர்களில் முதன்மையாக எடுத்துக் கூறவேண்டியவரை முன்னே பணிந்து எம்முடைய தன்மை முதலிய யாவும் விளங்கச் சொன்மாலையாற் பாடி எம்மை மகிழ்விப்பதுபோல், பொய்மையற்ற அவர்களது மெய்மைச் செயலெல்லாம் விளங்கச் சொன்மாலையைப் பாடி அவர்களை மகிழ்விப்பாயாக என்றருள,— (௧௧௭)

தன்னையா ளுடைய நாதன் தான்அருள் செய்யக் கேட்டுச்
சென்னியால் வணங்கி நின்ற திருமுனைப் பாடி நாடர்
"இன்னவா றின்ன பண்பென் றேத்துகேன் அதற்கு யான்ஆர்?
பன்னுபா மாலை பாடும் பரிசெனக் கருள்செய்" என்ன,—

(எ - து.) இவ்வண்ணமாகத் தன்னை யாளுடை நாயகனாகிய இறைவன் சொல்லியருள, தலையால்வணங்கி நின்றுகேட்டருளிய திருமுனைப்பாடி நாடராகிய ஆரூரர்.

எம்பிரானே! நீ என்னறிவின்கணின்று நீ அறிவிப்பதை யறியவும், சொல்வதைச் சொல்லவும்,யான்யார்? அறிபவனுயும் சொல்லுபவனுயும்நீயேஇருக்கின்றனே. இஃதுண்மையாக, அவர்கள் தம்மை "நீதியானும் கோதிலா வாய்மையானும் நீசொன் மாலையாற் பாடுவா .யென்று பணித்தது என்னையோ? அப் பெரியோருடைய வரலாறு இத்தன்மைத்தாமென்றும் அவர்களுடைய அருட்குணச் செய்கைகள் இத்தன்மைத்தாமென்றும் நானெங்ஙனம் அறியவல்லேன்? நானெப்படிப் பாடவல்லேன்? யான் ஒன்றும் அறியவல்லேனல்லேன், சொல்லவல்லேனல்லேன்; யான் சுதந்தரமற்றவனன்றே, நீ அருளியபடி நான் பாடுவது எப்படியோ, அப்படி நீயே எனக்குப் பாடும் வகையை அருளல் வேண்டுமென்ன,— (கக௯)

அரனூர் அடியெடுத்துக் கொடுத்தல்.

வேறு.

தொல்லைமால் வரைபயந்த தூயாள் திருப்பாகன்
அல்லல்தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேனென்
றெல்லையில்வண் புகழாரை எடுத்திசைப்பா மொழி"என்றார்.

(எ - து.) மலையரையன் மகளைத் தன் பாகத்தில் ஆளுகின்ற அருளாளன் ஆன்மாக்களெல்லாம் மும்மலச் சார்பாற் படுந் துன்பங்களெல்லாம் ஒழிந்து ஆன்மசுத்தியும் பாசக்ஷயமும் ஸ்ரீபாதம் அணைதலு மாகிய மூவகையும் பெற்று அயரா அன்பினையுடைய அன்பர்கூட்டத்தோடு வாழ (உண்மையை உண்மையாகக் கூறிய) வேத வாக்கால் ." தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் " என்று அளவில்லாத புகழ் படைத்தவனுகிய நடராஜமூர்த்தியை முன்னுகக் கொண்டு மூவாயிரவரென்று புகழும் மூவா (கெடாத) புகழ்பெற்ற அந்தணர்களைத் தாமெடுத்துக் கூறிய அம்மொழியோடு சுந்தரமூர்த்திகளை நோக்கி இசையோடுகூடிய பாக்களை மொழிவாய் என்றருளினுர்.

மன்னுசீர் வயல்ஆரூர் மன்னவரை வன்தொண்டர்
சென்னிஉற அடிவணங்கித் திருவருண்மேற் கொள்பொழுதின்
முன்னமால் அயன்அறியா முதல்வர்தாம் எழுந்தருள
அந்நிலைகண் டடியவர்பால் சார்வதனுக் கணைகின்றார்.

(எ - து.) மொழிவாய் என்று தியாகேசர் அருளிய அக்கணமே, நிலைபெற்ற அடியார்களது சீரைப் பாடத் திருவருள் பெற்ற நம்பியாரூரர் தமது தலையில் திருவடி பொருந்த வணங்கி " தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் " என்ற அடியையே பாட்டுக்கு முதலடியாகவும் ஏனைய அடிகளை யெடுத்துச் சொல்லி முடிப்பதற்கு அருளாகவும் கொண்டு பாடத்தொடங்கியபோது, அடியையும் முடியையுங் காணப்பெறுத மாலயனுக்கரியபெருமான் எழுந்தருள, அந்நிலையைக் கண்ட அடியார் அடிமைவேண்டிய சுந்தரமூர்த்திகள் தேவாசிரியத்திற் கூடியிருக்கும் அடியவர்பால் சார்வதற்கு நின்றவிடத்தினின்றும் பெயர்ந்து செல்வாராயினுர் எ-ம்.

எழுந்தருளினுரெனவே - சுந்தரமூர்த்திகள் எதிரே காண நின்ற பெருமான் கோயிலுக்குள்ளே எழுந்தருளினுரோ, அன்றி விறன்மிண்டர் "புறகு" என்றதனுல் அவராணை கடவாமல் கோயிலுக்குள்ளே எழுந்தருளாமல் அடியார் கூட்டத்துக்குள்ளே புகுவதற்குத் தேவாசிரியத்துள்ளே எழுந்தருளினுரோ அறியோம். ஆயினும் நம் இறைவனுர் நாவலர் பெருமானுரதுபாட்டுகேற்ந்த பெருமானுகலான் இவர் பாட்டு செல்லுமிடத்துக் கெழுந்தருளுவ தல்லது பாட்டில்லாவிடத்துக்குச் செல்லத் துணியாராகலானும் இறைவனன்றி இவர் பாடவறியார் ஆகலானும் தேவாசிரியத்தே எழுந்தருளினுரென்பதே திண்ணம். (உ00)

திருத்தொண்டத் தொகையை அருளல்.

தூரத்தே திருக்கூட்டம் பலமுறையால் தொழுதன்பு
சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றெய்தி நின்றழியா
விரத்தார் எல்லார்க்கும் தனித்தனிவே றடியேனென்
றார்வத்தால் திருத்தொண்டத் தொகைப்பதிகம் அருள்செய்தார்.

(எ - து.) சென்று அத்தேவாசிரியத்தை யணுகுவதற்குமுன் தூரத்தே நின்று அடியவர் கூட்டங்களை நோக்கிப் பல முறையும் பணிந்தார். அங்ஙனம் பணியுந் தோறும் அடியார்பாலிருக்கும் அன்பு இவர்பால் வந்துவந்து சேர்ந்தது. சேரச் சேரத் தாழ்ந்து தாழ்ந்து எழுந்துஎழுந்து சமீபத்திற் சென்று அடைந்து மனத்திண் மையிற் சிறந்த அடியார்களுக்கெல்லாம் பொதுமையாய் அடியேனென்று சொல்லா மல் அவ்வப் பெரியாருடைய பெயரால் அடியேனென்றும், அடியார்க்கும் அடியேன் என்றும் கூறும்போதெல்லாம் பெருகும் ஆர்வத்தோடு கூறி "திருத்தொண்டத் தொகை"யென்னும் திருப்பதிகத்தைப் பாடி யருள்வாராயினர் என்பதாம்.

திருக்கூட்டம் பேணு தேகுவதைக்கண்டு வெகுண்ட விறன்மிண்டர் ; வண்ணம் திருக்கூட்டத்தைத் தொழுதன ரென்பது தோன்ற - திருக்கூட்ட முறையால் தொழுது என்றும், புறசெனக் கோபித்த அம்மிண்டரது கோப மிகுதி தோன்ற-தூரத்தே * * * தொழுது என்றுங் கூறினாரென்றலு மொன்று. (உ0௪)

தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளால் திருத்தொண்டத் தொகையான திருப்பதிகம்
உம்பர்பிரான் தான்அருளும் உணர்வுபெற உலகேத்த
எம்பெருமான் வன்தொண்டர் பாடிஅவர் எதிர்பணிந்தார்.

(எ - து.) எம்பெருமானாராகிய வன்றொண்டப்பெருமான் தேவர் பெருமானு ராகிய இறைவனாரது பொருளும் திருவருளும் அத்திருவருளால் உணரவரும் ஞான மும் ஆன்மாக்களெல்லாம் பெற்று அவ்விறைவனை யேத்த, தமது பெருமான் "தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று எடுத்துக்கொடுத்த மொழியை முத லாகக்கொண்டு அவ்வடியிலும் ஏனைய அடிகளிலும் செம்பொருள் தோன்ற திருத் தொண்டத்தொகையாகிய திருப்பதிகத்தைத் தமிழ்ப் பாமாலையாகப் பாடி அங்கு வீற் றிருந்த அடியவர் திருவுள்ள மகிழுமாறு வீழ்ந்து பணிந்து அழியாப் பெருமையைப் பெற்றனர் என்பதாம். (உ0௫)

உம்பர்நா யகர்அடியார் பேர்உவகை தாம்எய்த
நம்பிஆ ரூரர்திருக் கூட்டத்தில் நடுஅணைந்தார்
தம்பிரான் தோழர்அவர் தாம்மொழிந்த தமிழ்முறையே
எம்பிரான் தமர்கள்திருத் தொண்டேத்தல் உறுகின்றேன்.

(எ - து.) இறைவனடியார்கள் மிகுந்த மகிழ்ச்சியை யடைய சுந்தரமூர்த்திகள் அவ்வடியார் திருக்கூட்டத்தின் நடுவே சென்று சேர்ந்தருளினர்; தம்பிரான் தோழரா கிய அம் மூர்த்திகள் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகை என்னும் பதி கத்தின் முறைப்படியே எமது பெருமானாகிய இறைவனுடைய அன்பர்களாகிய அடி யார்களின் திருத்தொண்டைத் துதிக்கத் தொடங்குகின்றேன் என்பதாம்.

"சிவனாரடியார் திருக்கூட்டம் பேணுதேகும் ஊரனுக்கும் பிரானுந் தன்மைப் பிறைசூடிப் பூணாரரவம் புனைந்தார்க்கும் புறகென் றுரை" த்தவிறன் மிண்டர் முத லிய அடியார்கள் மகிழ்ந்தனர் என்பது தோன்ற - உம்பர் நாயக ரடியார் பேருவகை தாமெய்த என்றார். (உ0௬)

தடுத்தாட் கொண்ட புராணம் முற்றிற்று.

நம்பியாரூரர் புராண சாரம்.

தண்கயிலை யதுநீங்கி நாவ லூர்வாழ் சைவனார் சடையனார் தனய னாராய், மண்புகழ அருட்டுறையான் ஓலை காட்டி மணம்விலக்க வன்றொண்டாய் அதிகை சேர்ந்து, நண்பினுடன் அருள்புரிய ஆரூர் மேவி நலங்கிளரும் பரவைதோள் நயந்து வைகித், திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்தும் திருத்தொண்டத் தொகை அருளால் செப்பி னாரே.

சுந்தரமூர்த்திகள் - திருக்கைலாயத்தில் வீற்றிருக்கும் இறைவன் அள்ளி அணிந்துகொள்ளும் திருநீற்றையும் மலர்மாலையையும்ஏந்தி அருகில் நிற்கும் பணிமேற்கொண்ட ஆலால சுந்தரர் என்னும் திருநாமமுடையவர். ஆன்மாக்கள் தடைப்படுந் தன்மையினின்று நீங்கி ஆட்படுந் தன்மையைப் பெற்று அருள்பெறுந் தன்மையை எளிதில் அடையும்வகை இறைவன் திருவுளத்தெண்ண, திருவருளெனச் சொல்லத்தக்க பூக்கொய்யவந்த அநிந்திதை கமலினி என்னும் தேவியாரது தோழிமார்களை நந்தவனத்தில் கண்டு அவர்பால் மனத்தைப் போக்கவும், அவர்களும் தத்தம் மனத்தை அவர்மாட்டுச் செலுத்த, பின்பு மூவரும் ஒருவாறு தம்மனத்தைத் தம் வசப்படுத்தித் தத்தம்மிடத்திற்கேக, இறைவன் இவர்களது திறங்கண்டு "தென்புவி யடைந்து விரும்பிய காதல் இன்பத்தை அனுபவித்துவரக்கடவாய"என் றருள்புரியப் பெற்றவர். தென்புவிமீது மானுடனாய்த் தோன்றி மயங்கும் வழி தடுத்தாண்டருள் செய்யவேண்டுமென விண்ணப்பம் செய்துகொள்ள அவ்வாறே அவ்வாதிமூர்த்தியால் அருள்செய்யப் பெற்றவர். அருளாகிய குளிர்ச்சியை வீசும் திருக்கைலையினின்றும் நீங்கித் திருமுனைப்பாடி வள நாட்டில் திருநாவலூர் என்னும் திருப்பதியில் புத்திரப்பேறு வேண்டித் தவம் புரியும் சடையனாரிடம் திவ்யதேஜோமூர்த்தியாய்த் தோன்றினவர். நரசிங்க முனையரையரால் தாம் திருவவதாரஞ் செய்த குலத்திற் கேற்ப வளர்க்கப் பெற்றவர். திருமணப் பருவம் வர, தமது திருக்கலியாணப் பந்தரில் ஆண்சிங்கம்போல் சிங்காரத்திருந்தவர். அக்காலத்தில் ஆதிமூர்த்தியாகிய இறைவன் பெருங் கிழவனாய் வர அவ்வரவை "உமது நல்வரவு நன்று இது எம் தவம்" என ஏற்றவர். இவ்வாறு ஏற்கப்பெற்ற பிஞ்ஞகனும் "என்னிடையும் நின்னிடையும் நின்ற இசைவால் யான் முன்னுடையதோர் பெருவழக்கினை முடித்தே நின்னுடைய வேள்வியினை நீ முயறி" என்று கூற "ஓர் வழக் கென்னுடைய துண்டேல் மற்றது முடித்தலது யான் வதுவை செய்யேன் முற்ற இது சொல்லுக" என்று றுதிமொழி கூறிவினவினவர். "என் அடியான் இந்நாவனகரூரான் இது நான் மொழிவது" என்று இறைவன் கூற நகைத்தவர். "எடா! சிரிப்பதென் உன் பாட்டன் எழுதிய ஓலை என்னிடம் இதோ இருக்கின்றது"என்ன "ஆதிசைவர்கள் வேறு அந்தணர்களுக்கு அடிமையாதல் என்கிற வார்த்தையை இன்றுதான் உம்மிடம் கேட்டனம்" என்று வியந்து "பித்தனோ" என்றவர். இறைவன் "நான் பித்தன் ஆனாலும் ஆகுக பேயன் ஆனாலும் ஆகுக நீ சொல்வதனால் நாணமடையேன்; என்னை நீ அறியவில்லை; உன்னெதிரில் நின்று வித்தகம்பேசற்க பணிசெய்யக் கடவை"என்றுகூற ஓலை காட்டென்று வினவினவர். "நீயோ ஓலை பார்க்கத்தக்கவன்" என்றிறைவன் கூற வெகுண்டு விரைந்து சென்று ஓலையை வாங்கி"ஆதிசைவர் வேறந்தணர்களுக்கு அடிமையாதல் என்ன முறை" என்று கிழித்தெறிந்தவர். பின்னர் இறைவன் முறையிட அங்குள்ளார் "உலகிலில்லாத வழக்கைக் கொண்டுவந்த நீர் எந்த வூர்" என்று கேட்க, "திருவெண்ணெய் நல்லூர்" என்று இறைவன் கூற, அவ்வூராயின் அங்குள்ள பெரியார் முன்னிலையில் உமது வழக்கைக் கூறலாமென,அவ்வாறே அங்குசென்று அங்குள்ள பெரியோர்கள்பால் முறையிட அவர்கள் "இவ்வழக்கு அதிசயமாக இருக்கிறது"என்றுகூறி "இவ்விஷயத்தில் உமது எண்ணம் என்ன" என்று தம்மைக் கேட்க, "இது மாயையா யிருக்கின்றது எனக்கு ஒன்றுந் தோற்றவில்லை" என்றவர். அவர்கள் இறைவனைப் பார்த்து "நீர் ஆட்சியில் ஆவணத்தில் காட்சியில்

காட்டுவேண்டும்'' என்று கேட்க, அங்கு மூலவோலையைக் காட்டப் பார்த்து விசாரித்து "நான்மறை முனிவனுர்க்குத் தோற்றீர் பான்மையில் ஏவல் செய்தல் கடன்" என்று சொல்ல, "விதிமுறை யிதுவேயாகில் யான் இதற்கு இசையேன் என்ன இசையுமோ" என்றவர். பின்பு சபையோர் இவ்வூரில் உமது மனையும் வாழ்க்கையும் எங்குள்ளன" என்று கேட்க, நீங்கள் அறியாதிருப்பீர்களானால் என்பின்னே வாருங்களென்று திருவருட்டுறையுள் சென்று புக, யாவரும் காணாது தயங்கி நிற்க, மிகுந்த ஆச்சரியத்தோடும் ஆனந்தத்தோடும் கோயிலுள்ளே தனியே சென்று கிழவரை அழைத்தவர். அழைத்தலும் இடபாரூடராய்க் காட்சி கொடுக்க, கன்றுபோற் கதறி மன்றுளீர் செயலோ என்று பதைபதைத்து வீழ்ந்து வணங்கினவர். பின் திருவெண்ணெய் நல்லூரினின்றும் புறப்பட்டுத் திருநாவலூர் திருத்துறையூர் என்னும் திருப்பதிகளைத்தரிசித்துப் பதிகமோதி திருவதிகையை நோக்கிச் செல்கின்ற காலத்தில் இப்பதி திருநாவுக்கரசுகளுடைய கைத்தொண்டேறியதாகலின் காலால் மிதித்து உள்ளே செல்ல அஞ்சுகின்றேனென்று அதன் எல்லையிலுள்ள சித்தவடமடத்தில் தங்கினவர். அம்மடத்தில் தங்கித் துயில்கொள்ளுங் காலத்தில் திருவீரட்டானேச்வரர் ஓர் கிழவராக வந்து தமது தலைக்குச் சரியாகப் பாதங்களை நீட்டி யுறங்குவார்போலிருக்க "பிராமணக் கிழவரே! நீர்யாரீர்" என்று கேட்டவர். அக்கிழவர் "திசையறியாவகை செய்தது என்னுடைய மூப்புக்காண்" என்றருள தமது தலையை வேறு பக்கத்தில் வைத்து உறங்க மீண்டும் அக்கிழவர் தமது தலைமீதே காலை நீட்ட "இங்கென்னைப் பலகாலுமிதித்தனை நீர் யார்" என்று கேட்டவர். "அறிந்திலையோ" என்று அக்கிழவர் மறையவும் "செம்மாந்து இங்கு யானறியாது என்செய்தேன்" என்று உருகிப் பதிகம் பாடினவர். பின்பு திருமாணிக்குழி - திருத்தினை நகர் முதலிய திருப்பதிகளை யடைந்து பதிகமோதி தில்லையம்பதியின் எல்லையைக் கண்டு வணங்கி அடியார் எதிர்கொள்ளத் தொழுது திருவீதியின் உள்ளே சென்று, தேரோடுந் திருவீதியையும் கோபுர வாயிலையும் பணிந்து சிரமேற் குவித்த கரத்தோடும் உள்ளே சென்று திருவணுக்கன் திருவாயிலை யடைந்து பரவசராய்த் திருக்களிற்றுப்படியின் பக்கலில் தாழ்ந்தெழுந்து ஒருநெறிய மனத்தோடு இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த வெல்லையில் தனிப்பெருங் கூத்தில்வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மகிழ்ச்சியில் மலர்ந்தவர். "தேவரீரது திருநடனத்தைக் கும்பிடப்பெற வந்த இப்பிறவியே எனக்கு மேலான இன்பம்" என்று மனத்தினால் புகழ்ந்தவர். கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரிந்து கைமலரை உச்சிமேற் குவித்து வாக்கினால் அரிய திருப்பதிகம் பாடினவர். அப்போது "ஆரூரில் வருக நம்பால்" என்று அசரீரி சொல்லக் கேட்டு அப்பணியை மேற்கொண்டு சீர்காழியை யடைந்து திருஞானசம்பந்தர் திருவிளையாடல் புரிந்த திருப்பதியையும் மிதியேனென்று எல்லையிலேயே வணங்கினவர். அதுகண்ட இறைவன் அவ்விடத்தே காட்சி கொடுக்க வணங்கிப்போற்றித் திருக்கோலக்கா - திருப்புன்கூர் - திருமயிலாடுதுறை - அம்பர்மாகாளம் - திருப்புகலூர் முதலான திருப்பதிகளை வணங்கித் திருவாரூரை - "நாமழைக்க வாராநின்றான் அவனை மகிழ்ந்து எதிர் கொள்வீர்" என்று தியாகேசன் அருளிய உத்தரவைப் பெற்ற அடியார் எதிர்கொள்ள அடைந்து "நம்மையும் ஆள்வரோ கேளீர்" என்று வினவுந் திருப்பதிகம் ஓதினவர். தில்லையில் எவ்வாறு ஆனந்தப் பரவசராயினரோ அவ்வாறே பரவசப்பட்டுப் பாடிநிற்க "தோழமையாக வுனக்கு நம்மைத் தந்தனம், நாம்முன்பு தொண்டுகொண்ட வேள்வியில் அன்று நீ கொண்ட கோலம் என்றும் புனைந்து நின் வேட்கைதீர வாழி மண்மேல் விளையாடுவாய்" என்று ஒரு திருவாக்கெழக் கேட்டவர். பின்பு திருமணக் கோலத்துடன் தம்பிரான் தோழன் என்னும் திருநாமம் விளங்க இருந்தவர். அக்காலத்தில் இவரைப்போலவே கயிலாயத்திலிருந்துவந்த கமலினியார் திருவாரூரில் பதியிலார்குலத்தில் அவதரித்துப் பரவையார் என்னும் திருநாமம் பெற்று, பேதைப் பருவம் நீங்கித் திருக்கோயிலுக்குப் போகும் நியதிமேற்மேற்கொண்டொழுகும்நாளில், ஓர் நாள் திருவருளானது கூட்டு

அப்பரவையாரைக் கண்டு "கற்பகத்தின் பூங்கொம்போ! காமன்தன் பெரு வாழ்வோ ! புண்ணியத்தின் புண்ணியமோ! விரைக்கொடியோ! அற்புதமோ ! சிவனருளோ!" என அதிசயித்தவர். "நான்முகன் உள்ளத்தால் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ" என நினைந்து நின்றவர். அண்டர்பிரான் திருவருளால் அயல் அறியா மனம் விரும்பிய அப்பரவையார் கண்டு "முருகனோ! மாரனோ! விஞ்சையனோ! அண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ! என்மனத்தைத்திரித்த இவன்யாரோ"எனநினைக்கத்தக்க கண்ணினுக் கடங்காத அழகினைப் பொழியுந் திருமேனிப் பிரகாசத்தையுடையவர். "இவன் யார்?" என்று வினவ "தேவர்களுஞ் சென்று சேர்தற்கரியவர் பரவை என்னும் நாமமுடையவர்" என்று சொல்லக் கேட்டவுடன் "என்னுடைய எழுபரவையோ" என்றவர்.பின்பு அவரைப்பெற இறைவனிடம் சென்று மீளுங்காலத்தில் பரவையாரைக் காணாது "அருள் எந்நெறிச் சென்றது" எனத் தேடினவர். தேடித் தேவாசிரியத்தில் தனியே தங்குங்கால் மாலைப்பொழுதும்வர சந்திரிகை கடல் - தென்றற்காற்று காம பாணம் இவைகள் வருத்தத்தைக்கொடுக்க அதனால் " இவ்வாற்றல் இவைகளுக்கு எம்பிரானருளில்லாமல் எங்ஙனம் வரும்" என்றெண்ணி யிருந்தவர். நம்பியைக் கண்ட நங்கை பரவையார் தம்மை யறியாது சென்ற மனத்தை மீளக்கொண்டு தன் மாளிகையை யடைந்து நிலாமுற்றத்தில் புஷ்ப சயனத்தில் இருந்து தோழியைப் பார்த்து "கோயிலுட் செல்லும்போது எதிர் வந்தவர்யார்?" என்றுகேட்கத் தோழி அவரது செய்திகளை யெல்லாங்கூற "நம்பிரா னருள்பெற்றவரோ" என்று கூறி மூர்ச்சிக்க, தோழிகளால் சிகிச்சை செய்யப் பெற்று "திருவாரூரர் நீரேயல்லால் ஆர் என் துயரம் அறிவார்" என்றயரத் தியாகேசன் திருவாரூரிலுள்ள அடியார் கனவிலும் தம் கனவினும் "திருமணம் நாளைக்கே" என அருளப் பெற்றவர். அவ்வாறே திருமணத்தைச் செய்ய திருவருளால் பரவையாரது திருமுலைச்சிகரமே சார்வாகத்தாம்பலநாளும் பரம்பரையில் பயிலும் சிவயோகத்தை விரும்பி ஆளுடைய பிரானது சரணாரவிந்த மலரைச் சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம் பல பாடிப் பரவையுடன் விளையாடினவர். இவ்வாறு விளையாடிக் கோயிலுக்குச் செல்லுங் காலத்தில் அங்கு தேவாசிரியத்தில் அடியார்க ளிருப்பதைக் கண்டு "இவர்க்கு யான் அடியேனாகப் பண்ணுநாள் எந்நாள்" என்று பரமர் தாளைப் பரவ உள்ளே ஒதுங்கிச் சென்றவர். விறன்மிண்டர் "தம்பிரானுடன் தம்மையும் புறகு" என்று கோபித்துக்கூற வெளிவந்து காட்சி கொடுத்த இறைவனை வணங்கிப்போற்ற, தாம் வேண்டுவதை இறைவன் அருளவேண்டி அடியார்வழித்தொண்டை மனத்திலுணர்த்தினதே யல்லாமல் அடியார் பெருமையைத் திருவாக்காலும் உணர்த்தப் பெற்றவர். "குற்றமற்ற நன்னெறியைப் பெற்றேன்" என்றெதிர் வணங்க இறைவன் "அடியார்களைப் பணிந்து கோதிலாவாய்மையாலே பாடு" என கட்டளையிடப் பெற்றவர். இவ்வாறருளியதைக் கேட்டு "அடியார்களது சரிதம் இப்படிப்பட்டது அவர்கள் செயல் இப்படிப்பட்டது என்பதை யறியாத யான் எவ்வாறு துதிப்பேன்" என்று வினவ|வேதநாயகன் உலகமானது அல்லல் தீர்ந்துய்ய "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுக்க அதனையே துணையாகக் கொண்டவர். பின்பு விறன் மிண்டர் முதலாயினரைத் தூரத்தே பல முறையும் தொழ அதனால் அவர்கள் கோபத்தை ஒழித்து அன்பைக்காட்டத் தாழ்ந்தெழுந்து அருகே சென்று நின்று அடியாரெல்லாம் பேருவகையெய்த எல்லார்க்கும் தனித்தனி அடியேன் என்று ஆர்வத்தால் திருத்தொண்டத்தொகையைப் பாடி அத்திருக் கூட்டத்தினுடே நின்றவர் என்க.*

* ஆரூரது ஏனைய சரித்திரங்க ளடங்கிய புராணசாரப் பாடலை வெள்ளானைச் சருக்கத்தி னிறுதியிற் காண்க.

ஸ்ரீ சந்த்ரசேகராயநம:

பெரியபுராணம்

தில்லைவாழந்தணர்சருக்கம்

மூலமும்

காஞ்சிபுரம்

ஸ்ரீமத் - ஏகாம்பரசிவயோகிகள்

பாதசேகரன்

ஸ்ரீ - ஆலாலசுந்தரம்பிள்ளை அவர்களால்

இயற்றிய

சித்தாந்தபோதரத்னாகரமாகிய

பொழிப்புரை - விசேடவுரையும்

வேதாகம மோக்ஷ சைவசித்தாந்தசபையி லொருவராகிய

மெஸர்ஸ் அட்டிஸன் அண்டு கம்பெனி

கா. வெங்கடாசலமுதலியார்

அவர்களால்

சென்னை:

கணேச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

1918.

All Rights Reserved. [Price Rs 2.

தேவீபாகவதம் (வசனம்.)	7	0	0
காமாக்ஷிலீலா ப்ரபாவம் (வசனம்.)	0	12	0
காஞ்சிப்புராணம் (மூலமும்-உரையும்.)	10	0	0

வி. பி. பிரத்யேகம்.

கா. ஆலாலசுந்தரம்பிள்ளை அவர்கள்

சித்தாந்தபோதரத்னாகரம்.

19 - ரெண்டால்ஸ் ரோட், சென்னை வேப்பேரி.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டத்தொகை.

திருநாமத்தின் காரணச்சிறப்பு.

இறைவன், ஆன்மாக்கள் பாசத்தினின்றும் நீங்கித் தன்னடி கூடுவதாகிய முத்திநிலை கூடுதற்குச் செய்யத்தொடங்கிய பஞ்சகிருத்தியங்களில் முதற்கண் அவ்வான்மாக்கட்குப் பந்தநிலை இதுவென்றுணர்த்த சிருஷ்டி திதி சங்கார மென்னும் முத்தொழிற்குக் காரணமாகும் பாசத்தின் பகுதியாகிய பிரபஞ்ச விவகாரத்தை வேதத்தால் பிரகாசப்படுத்தியும், பின்னர் பிரபஞ்ச வசப்பட்டு முத்தொழிலால் மொத்துண்டு இளைப்புத் தோன்றித் தமது நிலைதோன்றாது மயங்கிநிற்கும் அந்நிலையில் அவர்கட்கு அந்நிலைமை தோன்றமாறு வேதாந்தத்தாற் பிரகாசப்படுத்தியும், அந்நிலை இதுவெனப்பிரகாசமாயவழி அவர்கட்கு ஆதாரமாய் நிற்கும் பதிப்பொருள் பரமான்மாவாகிய பரசிவம் இதுவெனவும் பரசிவத்தை ஆன்மாக்கள் அடையும்வகை இவ்வகையெனவும் அவ்வகையான் அவ்வாதாரத்தில் ஆன்மாக்கள் நிற்கும்நிலை இந்நிலையெனவும் தோன்றுமாறு வேதாந்தத்தெளிவாகிய சைவசித்தாந்தத்தால் பிரகாசப்படுத்தியும், அந்நிலைக்கண் தன்னடி கூடும்வகை யறியாது தியங்கச்செய்யும் தியக்கத்தைத் திரோதானச்செயலால் நீக்கிச் சாதனமுறையால் சரியையாதிகளைப் பிரகாசப்படுத்தியும், அப்பிரகாசத்தால் சார்ந்ததன்வண்ணமாகாத சுத்தபடிகம்போல் அறிவைப் பிரகாசப்படுத்தியும், அவ்வறிவு பிரகாசமாயவழி இறுதியாயுள்ள அருட்செயலால் ஆன்மாக்கள் தன்னடிகூடுமாறு தனியடியார்களாகிய அறுபான்மும்மை நாயன்மார்களாலும் தொகையடியார்களாகிய ஒன்பதின்மர்களாலும் ஞான யோகக் கிரியா சரியைகளாகும் சைவத்திறமாகிய தொண்டால் பிரகாசப்படுத்தியுள்ளா ராகலின் இதற்கு, பிரபஞ்ச விவகாரத்தைப் பேசிய நூலை வேதமெனவும், ஆன்மப்பிரகாசத்தைப் பேசிய நூலை வேதாந்தமெனவும், ஆன்மா, பரமான்மாவாகிய ஆதாரத்தில் நிற்கும்நிலையைப் பேசியநூலைச் சித்தாந்தமெனவும் பெயரிட்டதுபோல் திருத்தொண்டத்தொகை எனப்பெயரிட்டனரென்க.

இதனால் நூல்களிற்சிறந்தது வேதமெனவும், அதனினும் சிறந்தது வேதாந்தமெனவும், அதனினும் சிறந்தது சித்தாந்தமெனவும், அதனினும் சிறந்தது இத்திருத்தொண்டத்தொகையென்னும் இந்நூலெனவும் தெள்ளிதின் அறியக்கிடக்கின்றன.

அன்றியும்-வேதநூல் ஆராய்ச்சியால் பிரபஞ்சம் இதுவெனப் பிரகாசமாய் அறியவரும் என்றும், வேதசாரமாகிய வேதாந்தநூல் ஆராய்ச்சியால் ஆன்மா இதுவெனப்பிரகாசமாய் அறியவரும் என்றும், சித்தாந்த நூலாராய்ச்சியால் பரமான்மா இதுவெனப்பிரகாசமாய் அறியவரும் என்றும், இச்சித்தாந்தசாரமாகிய இத்திருத்தொண்டத் தொகையால் அடிகூட்டுவதாகிய அருள் இதுஎனவும், அவ்வருளால் விளையும் இன்பத்தை அனுபவிக்கச் செய்யவல்ல அன்பு இதுஎனவும் பிரகாசமாய் அறியவரும் என்றும் திருவருளுணர்வால் அறியவருமென்க.

தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் ;
　　திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன் ;
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன் ;
　　இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன் ;
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன் ;
　　விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியே[ன்]
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன் ;
　　ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.!

2

அடிமைச்சிறப்பு.

ஆரூரர், தம்மை அடிமை என்று கொண்டு தோழனாக ஆண்ட இறைவனை, நம்மை மறவாது வழிபடும் தில்லைவாழந்தணர்களாகிய அடியாருள் தாமும் ஒருவனாப் ஆனந்தக் கூத்தாடி நிற்கும் பேரவாவைக்கண்டு தாமும் அடியார்நடுவுள் இருக்கும் ஆசையுடையவராய் தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்றார்.

அடியார்பால் இங்ஙனமான ஆசையுள்ள இறைவனது ஆணையின்வழி, சிற்றின்பானுபவத்தை நிறுத்தவல்லார், சின்னாளில் ஒழியும் சிற்றின்பத்துக்குரிய தமது இளமைப்பருவம் என்றும் இளமைமீதூர்ந்துநிற்கவும், அவ்விளமையான் என்றும் இளைத்தலை அறியாத அடைதற்கரிய பேரின்பத்துறையில் இழிந்து மிக எளிமையாய் அவ்வின்பசுகத்தில் வாழவும் ஆவார்கள் என்பதை, திருநீலகண்டரால் உணர்ந்து தாமும் இறைவனாணையின் வழியே நின்று அவ்வின்பவாழ்வைப்பெறும் அவாவுடையவராய் திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன் என்றார்.

இங்ஙனம், தன்னாணையின்வழி சிற்றின்பானுபவத்தை நிறுத்தவல்லார்க்கு, என்றும் இளமைப்பருவமும், என்றும் இறவாத பேரின்பமும் தாமேவலிந்து கொடுக்க வந்த இறைவனுக்கு இல்லையென்னாது கொடுத்தலாகிய ஒப்புரவுடையார்க்கு மயக்கறு மறையோலிட்டும் காண்டற்கரியனாகியும், இன்றளவும் மாலயன் தொடரநின்றும் கிடைத்தற்கரியனாகியும் இருக்கின்ற இறைவன் அடைக்கலப்பொருளாகும் எளிமையை இயற்பகை நாயனாரிடத்தில் கண்கூடாயறிந்து, தாமும் அவ்வொப்புரவுடையராய் அவ்விறைவனைத் தமது அடைக்கலப்பொருளாக என்றும்பெறும் பேரவாவுடையராய் இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன் என்றார்.

இறைவனை அடைக்கலப் பொருளாகப் பெற்றவர்-செல்வம் நிலவுதலொழிந்து,நல்குரவு அல்லலுறவரினும் அதனால் தாங்கொண்ட அன்பின் திறத்தில் இளைக்காமல் அவ்வன்பின் செயலையே மேற்கொண்டு, செல்வவறுமைகளுக் கிடனாகிய மாயாமலக்கூட்டையும், அதற்கு இடஞ்செய்யவல்ல புன்முளையாகிய கன்மமுளையின்விளைவையும், அம்முளைக்கு வித்தாயுள்ள ஆணவமலமாகிய வித்தினையும், வாரிப்பிடுங்கிப் பறித்துப் பரஞ்சோதியாய் விளங்கும் சிவசொரூபத்தைக்கண்டு இருநிதிக்கிழவன் நிதியமேந்தி மொழிவழி ஏவல்கேட்டுக் குற்றேவலாளாய் நிற்ப, பேரின்பம் ஆர்ந்திருக்கும்பெருமையினை இளையான்குடிமாறரிடத்துக்கண்டு, தாமும் தம்பால் குபேரன் குற்றேவலாளாய் நிற்ப சிவலோகத்தில் பெருஞ்செல்வராக வாழும் அடங்காத அவாவுடையராய் இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன் என்றார்.

பெருஞ்செல்வத்தோடு சிவலோகத்தில் வாழும் பெருவாழ்வுபெற்ற பேரறிவாளர், பயன்மரம் உள்ளூரில் பழுத்து யாவர்க்கும் பயன்படுமாறுபோல, தாம்பெற்ற வாழ்வு இவ்வுலகெலாம் பெறுமாறுசெய்து, அதனால் வரும்புகழைப்பெறுவதே பொய்ப்பொருளாகிய இவ்வுடம்பாற் பெறும்பயனென உணர்ந்தவர், அதற்குத் தமது உடலையும் உயிரையும் எவ்வகையாற் கொடுக்கவரினும் அச்செயல் செய்வதற்குச் சிறிதேனும் அஞ்சாது அவைகளை மிக எளிதாய்க்கொடுத்து அப்புகழைக்கொள்வதில் ஊக்கப்பாடும் உள்ளக்கிளர்ச்சியும் உடையராவார் என்னும் உண்மையை மெய்ப்பொருள் நாயனாரிடத்திற்கண்டு, அவரருளால் தாமும் அவைபெறும் அன்புடையராய் வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன் என்றார்.

அப்புகழ் எங்கும் பரவவேண்டுமாயின் எவ்விடத்திலுள்ளாரும் திருவேடமுடைய அடியார்க்கு அடிமை பூண்டாலன்றி வாராதாகலான், எத்தகைய மேம்பாடுடையராயினும் அவர்களை அத்தொண்டில் நிறுத்தும் வன்மையை, விறன்மிண்டநாயனாரிடத்திற்கண்டு, தாமும் அத்தொண்டில் மிண்டராக அவர்பால் பேரின்புடையராய் விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன் என்றார்.

திருவேடமுடைய அடியார்க்கு அடிமை பூணுதல் என்றால் அவ்வடிமையினளவு இவ்வளவினதென்று அறியவந்தாலன்றி அடிமைத்திறத்தை மேற்கொள்ளல் கூடா

தாகலின் அவ்வளவு, தான் உடைமையாக வைத்திருக்கும் எல்லாப்பொருளுமென வும், தன்னடிமையாக எண்ணியிருக்கும் மனைவியும் மகனும் அவர்களோடு தானும் எனவும் கருதி, அவ்வுண்மையை அடியவரெல்லாம் அறிய ஓர் துலையிலிட்டுக் காட்டும் பேராண்மையை அமர்நீதிநாயனார்பாற்கண்டு, தாமும் தமது குடி முழுவதும் அடிய வர்க்கே அடிமையாகி அவர்கள்வழியொழுகி அழிவில் வான்பதமாகிய சிவபுரியில்வாழும் வாழ்க்கையைக்கொள்ள அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன் என்றார்.

இவ்வண்ணம் அடியார்க்கடியேனென்று கூறிவந்த தாம், தம்மையும் தமது தலை வனையும் அன்பரிடத்து அன்பில்லாரென்றுகருதி புறகுதட்டென்றுகூறிய விறன் மிண்டநாயனருக்கு தம்மிருவருக்கும் உள்ள அன்புடைமை தோன்ற ஆரூரன் ஆளே என்னாது, ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே என்றார்.

தொகைச்சிறப்பு.

இனி, தில்லைவாழந்தணர்களை ஏனையதொகையடியாராகிய பொய்யடிமையில்லாத புலவரோடேனும் பத்தராய்ப்பணிவார்களோடேனும் அன்றி அவர்களை இவ்வந்தணர்க ளோடேனும் ஏனையதனியடியார்களோடேனும் ஓதவேண்டியிருக்க இவர்களைமுதலில் எடுத்தோதவேண்டியகாரணம் என்னையென்று ஆராயின், "தாவரசங்கமங்கள் என்று இரண்டுருவில் நின்று மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க்கு அருளைவைப்பன்" என்ற சித்தாந்த வசனத்தை வலியுறுத்தவே யாம.

எங்ஙனமெனின்,—'தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும், பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியும், சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக், (அநாதி) கோலமேயுடைய பரசிவனே தாவரவுருவமாய் விளங்கும் தில்லைவாழந்தண னாகிய நடராஜமூர்த்தியாயும், ஏனைத் தில்லைவாழந்தணர்களாகிய சங்கம மூர்த்திகளாகி யும் திருவுருக்கொண்டுள்ளான் என்பதேயாம்.

"சிவன் உருவும் அருவும் அல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன், பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன், தவமுதல் யோகம் போகம் தரிப்ப னல்லன்" என்று அவ்வளவில் நிறுத்தாது, "தானே இவைபெற இயைந்தும்" என்று சித்தாந்தங் கூறுதலால் மேலே சொல்லிய தாவரவுருவத்தையும், சங்கம வுருவத்தையும் கொண்டருளினனென்க. எனவே பரசிவத்துக்கு தாவரம் சங்கமம் என இரண் டுருவ ங்கள் உளதென்றும், அவற்றுள் தாவரவுருவமாகிய நடராஜமூர்த்தி பரசிவத்தின் சொரூப வடிவமென்றும், ஏனைய சங்கமவுருவினராகிய தில்லைவாழ் அந்தணர்கள் தடத்தவடி வங்களென்றும் அறிவுறுத்தியவாறும்.

இக்கருத்துப்பற்றியே ஆசிரியர் சேக்கிழார் 'அம்பலத்தாடுவான்' "உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்" 'அலகில் சோதியன்' என்றுகூறியதனால் நடராஜமூர்த்தியை சொரூபமென்றும், தில்லைவாழந்தணர்களை-தொல்லை வேதியர்களென்றும், முதல்வரைப் பெற்றுவாழ்வார் என்றும், இனிப்பெறும் பேறொன்றில்லார் என்றும், தம்மையே தமக் கொப்பான நிலைமையால் தலைமைசார்ந்தார் என்றும், திருத்தொண்டத்தொகை முன் பாடமுதற்பொருளானர் என்றுங்கூறியதனால் தடத்தமென்றும் கொள்ளவந்தன.

எனவே, அநாதி அந்தணனாகிய சிவன் தன்னோடு ஒன்றாய் இவர்கள் எண்ணப் பட்டாராகலின் 'தொல்லைவேதியர்' என்றும், முதல்வனாகியபரசிவனுக்கு இவர்தடத்த வடிவங்களாகலின் 'முதல்வரைப் பெற்று வாழ்வார்' என்றும், முதல்வனாது தடத்த வடிவங்களாகவே, ஆன்மாக்களா யுள்ளார் பெறும்பேற்றை இவர் பெறவேண்டியவ ரல்லராகலின், "பெறும் பேறு ஒன்றில்லார்" என்றும், தனக்கு மேலொரு பொருள் உளதென்றும் ஒப்பான பொருள் ஒன்றுளதென்றும் சொல்லுதற்கில்லாத சொருப சிவமாகிய நடராஜமூர்த்தியோடொப்பான இவர்களுக்கு ஒப்பிடும்பொருள் இல்லையா கலின் 'தம்மையே தமக்கொப்பான நிலைமையால்தலைமைசார்ந்தார்' என்றும், திருத்தொ ண்டத்தொகையை ஓத இறைவன் தாமே முதல் நாயனாராக நின்றபோதி இவர் களை ஏனைய நாயன்மார்களைப்போல் தனித்தெடுத் தோதச் செய்யாது தம்மோடொரு

பச்சேர்த்து ஓதச் செய்தன ராகலின் திருத்தொண்டத்தொகை முன்பாட முதற்பொருளானார்கள் என்றும் கூறினர்.

இனி, எண்ணிறந்த மூவகைப்பாசகாரியங்களேயும், எண்ணிறந்த மூவகை ஆன்மாக்களேயும், எண்ணிறந்த (மகத்)வடிவங் கொண்டு தன்னுள் அடக்கி வியாபகப்பொருளாய் ஒருருவாய் நிற்கும் தனது ஆற்றலுடைமை தோன்ற மூவாயிரவர் எனப் பல திருவுருக் கொண்டுள்ளவர்களைத் தன்னுள் அடக்கித் தில்லைவாழந்தணனென மகத்வடிவமாய் அம்பலவாணனாய் ஒருருக்கொண்டு நின்றருளுகின்றனன் என்றலுமொன்று.

பஞ்சகிருத்தியத்தையும், அக்கிருத்தியங்களியற்றும் பதியையும், அக்கிருத்தியங்கட்குரிய பசுக்களேயும்,அப்பசுக்கள் அக்கிருத்தியங்களில் உட்படுதற்குக் காரணமாகிய பாசத்தையும் உணர்த்தவல்ல ஸ்ரீபஞ்சாக்கரம் ஓர்பதமாய் நிற்பதாகலின், அப்பஞ்சாக்கரத்தைத் திருமேனியாகவுடைய நடராஜமூர்த்தியும் பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களேயும் ஆயிரம் ஆயிர முகமாகப் போதிக்கவல்ல மூவாயிரம் சங்கமர்களேயும் தன்னுட்கொண்டு ஒருருவாய் நின்றருளுகின்றனன் என்றலு மொன்று.

இனி, ஸ்ரீசுந்தரமூர்த்திகள் ஓதத்தொடங்கிய திருத்தொண்டத்தொகையில் இம்முதற்பாவில் தில்லைவாழந்தணர் முதலிய எழுவரை வைத்துப் போற்றுதற்குக் காரணம் ஆராயுமிடத்து சிறப்பு ஒற்றுமை என்னுங்காரணங்களேயே நோக்கி என்க.

சிறப்புக்காரணம்:—அடிமை வேண்டாத ஆரூரர்பால் இறைவன் வலிந்துவந்து தம் அடிமைவேண்டி மேன்மேல் வழக்காடி தம் அன்பை நிறப்பி வன்தொண்டன் என ஆண்டதுபோலன்றி, அடிமையையே வேண்டிய எழுவர்பால் அடிமை வேண்டாதவர் போல் இறைவன் அடிமை நீங்குஞ்செயலேயே செய்தும் அப்பெருமக்கள் தங்களன்பின் நிறைவால் இயற்றிய வன்றொண்டின் திறத்தால் அடிமை நிலைபெறும்படிச் செய்த சிறப்பேயாம். இனி அவையிற்றை வகுத்துக்கூறுவாம்:—

இறைவன் அடிமை நீங்கத்தந்த செயல்கள்.	அடியார்கள் அடிமை நிலைபெறச்செய்த செயல்கள்.
மூவாயிரவர் எண்ணளவையிற் குறைய இறையைத் தான் கடையனாய் நின்றது.	1. அங்ஙனம் நின்றவரைத் தலைவனெனவேகொண்டு தாம்அகம்படித்தொண்டரானது.
2. திருவோடு கொடுத்துவந்தார்க்குத் திருவோடளித்தது மன்றேறி திருநீலகண்டத்தாணையால் தீண்டாத மனைவியைத் தீண்டி மலர்ப்பொய்கையில் மூழ்கவே பேசி வந்து நின்றது.	2. ஒருகழியின் இருதலையையும் இருவரும்பற்றிநிற்க இறைவன் நடுவேநிற்க மனைவியின் ஆணைதவறாமலும் சிவயோகியார் வார்த்தை கடவாமலும் தமது விரதங் கெடாமலும் நீரில் மூழ்கி எழுந்தது.
3. இல்லையென்னாது கொடுக்கும் ஈகையுடையார்பால் இல்லையென மறுக்கக் கூடிய மனைவியைகேட்டது.	3. ஒப்புரவினால் மனைவியைக்கொடுக்க மானம் பொறாத சுற்றத்தினரைக்கொன்று மனைவியைக் கொண்டுபோகச்செய்தல்.
4. அடியார்க்கமுதளிக்கும் பணிபூண்டவர்க்கு வறுமையுங் கொடுத்து மழையோடு இருளில் பசியுடன் வந்தது.	4. அப்பசிமாற்ற புலத்தில் நென்முளே வாரி குழிப்பயிரைப்பறித்து இல்லத்தின் அலக்கினால் பதமாக்கி அமுதுபடைத்தது.
5. பொய்த்தவனே புத்தகக் கவளிபோலும் படையைக் கைக்கொண்டு மெய்த்தவ வேடம்பூண்டு குருவாக வரச்செய்தது.	5. மெய்க் குருவாகக்கொண்ட பொய்த்தவனால் தீங்கு நேரிட்டும், அவனுக் கது நிகழாவண்ணஞ் செய்தது.
6. ஈசன்பா லன்புடையாரை அடியர்பாலன்புண்டாக்கும் விறன்மிண்டர்முன், மிக்க சீரடியார் கூடியிருந்தபோது இவரடியார்க்கு அடியேனாகப் பண்ணு நாள் எந்நாளென ஆதரவு கூரப்பணிந்து செல்லும் ஆரூரரை அடியாரிடத்து அன்பிலார் போலத் தோன்றச்செய்தது.	6. சிவனருளால் அடியாரிடத்துப் பெருகாநின்ற அன்பாகிய பெரும்பேற்றை அன்பர் அன்புவேண்டிய சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்தும், திருவுள்ளப பாங்காகிய கோனவருளே பூணாரவம் பூண்டாரிடத்தும்பெற புறகு புறகு என்று அஞ்சாது கூறியது.
7.களவணத்துக்குநேராகஎப்பொருளேயும் எடைபெறாவண்ணஞ் செய்தது.	7. பஞ்சாக்கரத்தால் தம்மோடெப்பொரும் எடைபெறும்வண்ணஞ் செய்தது.

ஒற்றுமைக்காரணம் :—ஆரூரரை நிகழ்த்தியதுபோல் இவ்வெழுவரிடமும் (1) இறைவன்வந்து, (2) ஆவணங்காட்டி, (3) தடுத்தாண்டு, நிகழ்த்திய பெருங்கருணையேயாம்.

(1.) வந்தது.

இவ்வெழுவருக்குமுன் இறைவன் நடராஜமூர்த்தியாகவும், சிவயோகியாகவும், தூர்த்தவேதியராகவும், தபோதனராகவும், மெய்த்தவவேடனாகவும், மணவாளக்கோலத்தோடு சுந்தரமூர்த்தியாகவும், பிரமசாரியாகவும் முறையே வந்தது.

(2.) ஆவணங்காட்டியது.

தில்லைமூவாயிரவரிடத்து அவருள் தாமொருவரென்பது * ஆவணம் (உரிமை); திருநீலகண்டரிடத்து கொடுத்ததிருவோடு ஆவணம் (அடையாளம்); யாதுமொன்று என்பக்கலுண்டாகில் அன்னது எம்பிரான் அடியவருடைமை, ஐயமில்லை என்ற இயற்பகையாரிடத்து மனைவியைக்காட்டி (குறித்து)க்கேட்டது ஆவணம் (உரிமை); இளையான்குடிமாறனாரிடத்துச் செல்வமேவியநாளிலும் அல்லல் நல்குரவானபோதிலும் மெய்யினால் வல்லரென் றறிவிக்கவே வறுமைபாதம்புக தில்லைமன்னினார் உன்னியது ஆவணம்; (அறத்தைத் தடுப்பதற்குரிய வறுமை என்னும் எல்லை.); மெய்ப்பொருளாரிடத்து வாட்படையை ஆகமமாகிய புத்தகக்கவளியென்று பொய்த்தவனைக் காட்டச்செய்தது ஆவணம் (அடையாளம்,); விறன்மிண்டரிடத்து அடியவர்தந் திண்மை யொழுக்கம் வெளிப்பட சுந்தரமூர்த்தியாய் விளங்கி அன்பை யுள்ளடக்கி ஒதுங்கியது ஆவணம் (அடையாளம்); அமர்நீதியாரிடத்து இறைவன் கொடுத்த கோவணம் ஆவணம் (அடையாளம்).

(3.) தடுத்தாண்டது.

தில்லை மூவாயிரவருள் ஒருவரைத்தடுத்து தானே அவராகி ஏனையவரையும் தன்னுடனேய் வாழ ஆண்டது, திருநீலகண்டரை— ஆணையால் சிற்றின்பத்தைத் தடுத்து என்றும் இளமையோடு வாழ ஆண்டது, இயற்பகையாரை—உலகியலால் தடைபடும்பொருளில் தடைபடுஞ் செயலைத்தடுத்து "செயற்கருஞ்செய்கைசெய்த தீரனே ஓலம் ஓலம்" என்று அழைத்தாண்டது, இளையான்குடிமாறரை—அவர்கொண்ட அறிவாகிய மெய்ச்செல்வத்திற்குப் பகையாயுள்ள செல்வவறுமைகளைத் தடுத்து அன்பர்பூஜையில் மனஞ் சுருங்குதலற்ற அன்பினை நிறைவித்தாண்டது, மெய்ப்பொருளாரை—மெய்ப்பொருளுக்குப் பகையாயுள்ள உடற்சார்பு பொருட்சார்புகளைத் தடுத்து திருவேடச் சார்பினாலே ஆண்டது, விறன்மிண்டரை—அடியாரிடத்து அன்பற்று அரனிடத் தன்புள்ள அன்பினைப்போக்கி அனைவரும் அடியவரிடத்து முன்னும் அரனிடத்துப் பின்னும் அன்புடையராய்ச் செய்துவந்த அவரதுவலிந்த அன்பினைத் தமது தோழரிடத் துள்ளதெனத் தோன்றுவண்ணம் தடுத்து புறகென்று கடுமொழிகூறிய திறங்கண்டு பின் தம்மிருவர்க்கும் அடியவரிடத்துள்ள அன்பினைத் திருப்பதிகவாயிலாய்க் காட்டி ஆண்டது, அமர்நீதியாரை—தமது வேதக்கோவணத்தை எடையாகவைத்து, அவ்வெடைக்கு அவர்பொருளெல்லாம் எடை கொள்ளா வண்ணம் தடுத்துப் பின் பஞ்சாகரத்தின் எடையால் ஆண்டது

பயன்.

இதனால் - இறைவனே வந்து தடுத்தாளப்பெற்றார்க்கு வரும் பயன் இத்திறமெனவுண்டே. விதந்து எடுத்துக்கூறியவாறுமாம். என்னையெனின்:—

பரசிவப்பிரபு - தம்மை எப்பொழுதும் வழுவாதுவழிபடும் வழிபாடுடையார்க்குத் தான் மிகஎளியனாய் அவருள்புக்கு ஒருவனாய் நின்று, தமது பதியின்திறம் குன்றாது அவர்களைத் தமது பணியின்திறத்தில் நிறுத்தி ஆண்டும், அங்ஙனம் அவ்விறைவனால்

---

* ஆவணம்=உரிமை, அடையாளம், எல்லை, முறிச்சீட்டு.

ஆளப்பட்ட அவர்கள் அவன் நிறுத்திய பணியில் தமது அடிமைத்திறங்குன்றாது அவரது குஞ்சிதபாதத்துக்கு ஆட்பட்டும் வாழ்வதாகிய அத்துவிதானந்தப் புணர்ச்சி மிக எளிதாய்க் கிடைக்க வருவதாகிய பயனும்,

அங்ஙனமான * அத்வைதானந்தப் பேரின்பப் புணர்ச்சி கிடைக்கப்பெற்ற அதனால்,—பரமவைராக்கிய சீலர்களாலும், யோகிகளாலும், ஞானிகளாலும் தடுத்து விடுத்தற்கரிய சிற்றின்பப் புணர்ச்சியை மிக எளிதாய்த்தடுத்து விடுதற்கான ஆற்றலுண்டாய் வருவதாகிய பயனும்,

அதுபெற்றதனால் தாம்பெற்ற அத்வைதானந்தம் மேன்மேற் பெருகச்செய்யவல்ல திருவேடமுடையார்க்கு இல்லையென்னாது கொடுக்கும் வள்ளற்றன்மை யுண்டாய் வருவதாகிய பயனும்,

அவ்வள்ளற்றன்மையில் என்றும் இளையாதிருத்தற்கு, வறுமைவந்துழி வழிவிப் போம் பொருட்செல்வத்தை முதலாகக்கொள்ளாது, என்றுந் தன்னைவிட்டு நீங்காத அறிவாகிய மெய்ச்செல்வத்தைப் பெறவருவதாகிய பயனும்,

அஃமெய்ச்செல்வமாகிய மெய்ப்பொருளை வளர்க்கவல்ல திருவேடத்தையே மெய்ப்பொருளாகக் கொள்ளவருவதாகிய பயனும்,

அத்திருவேடமாகிய மெய்ப்பொருள் ஐம்புலவேடராற் கொள்ளை போகாவண்ணம் காக்க அடியவர்கூட்டத்தை அரணாகக் கொள்ளவருவதாகிய பயனும்,

அங்ஙனங் காக்கப்பட்ட அரிய மெய்ப்பொருளுக்குத் தமதுபொருளெல்லாம் எடையிட்டுக் கொடுத்து அம்மெய்ப்பொருளுக்குப் பயனாயுள்ள இறைவனைத் தாம் எடையிட்டுத் தம்பொருளாகக் கொள்ளவருவதாகிய பயனும் ஒருங்கேவருமென்று அறிவுறுத்தியவாறும் என்க.

இதுகாறும் கூறிவந்தசிறப்பால் திருத்தொண்டத்தொகை நாமத்தின் காரணச்சிறப்பும், அடிமைச்சிறப்பும், தொகைச்சிறப்பும், அதனால் உண்டாகும்பயனும் தெள்ளிதின் விளக்கினமை காண்க.

திருச்சிற்றம்பலம்.

---

* ஆன்மாவை இறைவன் தானாக்கிக்கொண்டகாலத்தும் தான் ஆளும் திறத்திலும், ஆன்மாக்கள் அடிமைத்திறத்திலுங் குன்றாது நிற்றலே சித்தாந்தத்திற் கூறப்படும் முத்திநிலை. இதனை "சிவமாக்கி எனையாண்ட" என்ற திருவாசகம் அச்சோப் பதிகத்திற் காண்க.

தில்லைவாழந்தணர் சருக்கத்தின் புராண அகராதி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

தில்லைவாழந்தணர் சருக்கம்.

தில்லைவாழந்தணர்புராணம்.

ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

(௧ - து.) சிருட்டிக்கடவுளாயும் திதிக்கடவுளாயும் சங்காரக்கடவுளாயும் மஹேஸ்வரராயும் சதாசிவமூர்த்தியாயும் மெய்ஞ்ஞானசொரூபராயும் உமாசஹாயராயும்இருக்கின்ற எழுவகைநிலையையும் தாம்செய்யும் நடனத்தால் ஆன்மாக்களுக்கு உணர்த்தும் வண்ணம், தில்லைப்பொதுவின்கண் நடனஞ்செய்தருளும் நடனத்துக்கு வந்தனஞ் செய்வோமாக, வந்தனஞ்செய்வோமாக என்பதாம்.

பொதுநடனஞ்செய்வோனாகிய நடராஜவள்ளல் மும்மூர்த்திகளாய் நிற்பவன் என்பார் ஆதியாய நடுவுமாகி அளவிலா அளவுமாகி எனவும், மும்மூர்த்திகளாய் நிற்கும் இவரே அம்மூவர்க்கு மேற்பட்ட மஹேஸ்வரருமாய் நிற்பவர் என்பார் சோதியாய் உணர்வுமாகி எனவும், மஹேஸ்வரராயுணரவந்த இவரே சதாசிவமூர்த்தியாயும் இருப்பவர் என்பார் தோன்றிய பொருளுமாகி எனவும், சதாசிவமூர்த்தியாகியஇவரே மூதாதையாகிய பரசிவமும் என்பார் பேதியா ஏகமாகி எனவும், அப்பரசிவம் மாதாளும்பாகத்தனாயிருப்பதுபோல் இவரும் இருப்பவர் என்பார் பெண்ணுமாய ஆணுமாகி எனவும், இவ்வுண்மைப்பொருளைத் தில்லைப்பொதுவின்கண் உணரவே நடனஞ்செய்தல் என்பார் போதியாநிற்குந் தில்லைப்பொதுநடம் எனவும், இவ்வுண்மைப்பொருளை அந்த நடனமூர்த்தியி னருளால் மனத்தால் உணர்ந்து, வாக்கால் சொல்லத்தொடங்கியதற்கு யான் பெறும்பயன் காயத்தாலேயன்றி மனத்தாலும் வாக்காலும் வணங்குதலேயாமென்பார் போற்றி போற்றி எனவுங்கூறினர்.

இல் முன் எண்ணப்படுவது சிருட்டியாதலால் அதனை ஆதி எனவும், முத்தொழிலில் இடையில் எண்ணப்படுவது திதியாதலால் அதனை நடு எனவும், கடையில் எண்ணப்படுவது சங்காரமாதலால் அதனை அளவிலா அளவுமாகி எனவும், ஆன்மாக்களுடைய கன்மமுழுதும் கழியுமுகத்தான் மலபாகம் வரச்செய்தல் சிருட்டியாதலால் அச்சிருட்டியையும், கன்மங்கழியுமாறு அதனை அனுபவிக்கச்செய்தல் திதியாதலால் அத்திதியையும், இச்சிருட்டி திதி என்னும் இரண்டானும் உண்டாவதாகிய துன்பங்கள் சிறிதேநீங்க இளைப்பாறச்செய்தல் சங்காரமாதலால் அச்சங்காரத்தையும், இம்முத்தொழில் கிரியாசத்தியன்றி ஆகாவாகலான் அக்கிரியாசத்தியையும், அக்கிரியாசத்தியால் ஆன்மாக்களுக்குக் கன்மமலபாகம் வந்தமையும், கன்மங்கழியவந்தமையும் உணரும் உணர்வாலன்றி உணரக்கூடாதாகலான் அவ்வுணர்வையும் உடையவர் மஹேஸ்வரதத்வாதிகாரி

யாய் திரோபவத்தொழிலுடைய மகேஸ்வரராதலால் அவரைச் சோதியாய் உணர்வுமாகி எனவும், சிருட்டி திதி சங்காரம் திரோபவமென்னும் நான்குதொழிலாலும் ஆன்மாக்களுக்குத் தோன்றும்பொருள் பாசநீக்கமும் சிவப்பேறுமே யாகலான் அவ்விரண்டையும் அனுக்கிரகிப்போர் சதாசிவமூர்த்தியாகலான் அவரைத் 'தோன்றியபொருளுமாகி எனவும், இங்ஙனமான ஐந்தொழில் செய்யும் பஞ்சகர்த்தாக்களிடத்தும் பரசிவப்பிரபு,வேறுதலின்றி அவ்வம் மூர்த்திகளாகவே நின்றருளும் மூதாதையாகலான் அப்பெருமானைப் பேதியா ஏகமாகி எனவும், அப்பரசிவம் சத்திசிவமாய் நின்றருளும் இயல்பினனாகலான் அவ்விறைவனைப் பெண்ணுமாய் ஆணுமாகி எனவுங் கூறினர்.

இவ்வுண்மைதோன்றவே,—"தேவர்கோ அறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்து காத்து அழிக்கும் மற்றை மூவர்கோனாய்நின்ற முதல்வன் மூர்த்தி, மூதாதை மாதாளும்பாகத்து எந்தை" என்றருளிற்று திருவாசகம்.

இனி, அளவிலா அளவுமாகி என்றதற்குச்சங்காரமென்னும் பொருள் எங்ஙனம் பொருந்துமெனின்,—சிருட்டியுந் திதியும் நடைபெறுங் காலம்வரின் நடைபெற்று, அழிவுறுங்காலம் வரின் அவ்விரண்டும் அழிவெய்தக் காண்கின்றோம். சங்காரமோ அழிவெய்துவதின்றி என்றும் உள்ளது. எனவே, சிருட்டிக்குந் திதிக்கும் உட்பட்டுள்ள சராசரங்களெல்லாம் சங்காரத்தொழிலன்றிக் காரியப்படமாட்டா. எங்ஙனமெனின்,—யாதானும் ஓர்வித்தினின்றும் தோன்றவேண்டிய விருக்ஷம் வெளிப்படவேண்டுமாயின் அவ்வித்தைப் பூமியிலிட அவ்வித்துப் பூமியிற்பொருந்தி அவ்வித்தினுருவங் கெட்டுப் பின் இலை வெடிக்கக் காண்கின்றோம். அஃதேபோல், ஒவ்வொருநாள் கழிந்தாலன்றி அவ்வித்தினின்றும் வளரவேண்டிய விருக்ஷம் வளருமாறில்லை. இதனைச் சராசரங்களாகிய எல்லாப்பொருளிடத்துங் காணலாம்.

இங்ஙனங் கூறிவந்ததனால் உருவங் கெடுதலென்பதும், நாள் கழிதலென்பதும் சங்காரமெனப் பொருள்படும். படவே, தோன்றவேண்டிய பொருளைத் தோன்றச் செய்வதும், வளரவேண்டிய பொருளை வளரச்செய்வதும் சங்காரமே என்று வெளியாயிற்று. ஆகவே சிருட்டியுந் திதியும், கால அளவையுட்பட்டவை என்றும், சங்காரம் கால அளவையுட்படாததென்றும், அழிவெய்தாந் தன்மையுடைத்தான தன்றென்றும் உணரக்கிடத்தலால் அளவிலாஅளவுமாகி என்றார்.

இத் திருப்பாட்டான், ஆதிஎன்றது சிருட்டி எனவும், நடுஎன்றது திதி எனவும், அளவிலாஅளவு என்றது சங்காரம் எனவும், சோதியாய் உணர்வுமாகி என்றது திரோபவம் எனவும், தோன்றிய பொருளுமாகி என்றது அனுக்கிரகமெனவும், பஞ்சகிருத்தியங்களை யுணர்த்தியும், அப்பஞ்சகிருத்தியங்களைப் பஞ்சகர்த்தாக்களால் ஆக்கித் தான் ஒன்றுஞ்செய்யாத சிவதத்துவத்தைப்பேதியா ஏகமாகி என்றதனால் உணர்த்தியும், அச்சிவம் உமாசகாயமாயிருக்கும் இயல்புடைமையைப் பெண்ணுமாய்ஆணுமாகிஎன்றதனால் உணர்த்தியும், இங்ஙனம் உணர்த்தினவெல்லாம் உணரப் பெண்ணுமாய் ஆணுமாகிநிற்கும் நிஷ்களபரசிவம் தில்லைப்பொதுவின்கண் நடனமூர்த்தியாய்ச் சகளவுருவங்கொண்டு அம்பலத்தில் நின்று நடித்து உணர்த்தினனெனக் கடவுள்வாழ்த்துக் கூறப்பட்டது.

அல்லதூஉம், சுந்தரமூர்த்திசுவாமிகள் ஓதியருளிய திருத்தொண்டத்தொகையிற் கூறியுள்ளபடியே முதலில் * தில்லைவாழந்தணர் புராணத்தைச் சொல்லத்தொடங்கினாராகலின் எல்லாவுயிர்களிடத்தும் கருணையுடைய வேதமானது, பெண்ணுமாய் ஆணு (சத்திசிவ) மாகி நிற்கும் பரசிவமூர்த்தி, ஆதியாய், நடுவுமாகி, அளவிலா அளவுமாகி, சோதியாய் உணர்வுமாகி, தோன்றியபொருளுமாகி, பேதியா ஏகமாகி, இருப்பதாகிய

* தில்லைவாழ் அந்தணரென்றது-நடராஜமூர்த்தியோடு எண்ணப்பட்ட மூவாயிர அந்தணரையென்க.

அத்துவிதத்தன்மை இத்தன்மைத்தாமென்பதுதோன்ற, † தில்லைப்பொதுவின்கண் நடனஞ்செய்தருளுகின்றான். அங்ஙனம் செய்தருளும் பொதுநடனத்தை யான் பன்முறையும் நமஸ்கரிக்கின்றேன் என்று சிலம்புருவாய்க் குஞ்சிதபாதத்திலிருந்து ஒலிக்கும் உண்மையைச் சிந்தித்து, அவ்வுண்மைதோன்ற தில்லைவாழந்தணர் பெருமானைச் சேக்கிழார்பெருமானும்அவ்வாறே போற்றினரென்க.

வேதங்கூறிய அத்துவிதத் தன்மையாவது - பரப்பிரமமென்பது - பராசத்தியோடு கூடியிருக்கும் பரசிவமேயாகலான் பொன்னுருவாய ஆறுமாகி எனவும், அப்பரசிவ மூர்த்தி - அளவில்லாதவுயிர்கள் பன்முறையும் ஒடுங்கித் தோன்றிநிற்ப எல்லையாய் நிற்பவனாகலான் ஆதியாய நடுவுமாகி அளவிலா அளவுமாகி எனவும், எல்லாவுயிர்களும் தன்னுள் ஒடுங்குங்காலத்துத் தான் அகண்ட சோதிசொரூபமாகியும், அவ்வுயிர்கள் தோன்றுங்காலத்து அவ்வுயிர்களுடைய வுணர்வுக்கு உணர்வாகியும், அவ்வுணர்வால் அவ்வுயிர்கள் அனுபவிக்கப்படும் எல்லாப்பொருள்களாகியும் இருப்பவனாகலான் சோதியாயுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி எனவும், இவ்வாறு உயிர்களாயும் உணர்வுகளாயும் பொருள்களாயும் ஏகமாய்க் கலந்துநிற்கும் நிலைமை வேறாகாமல் ஒன்றாகாமல் உடனாய்நிற்கும் நிலைமையாம்; அதுவேதான் அத்வைதத்தன்மை என்னும் உண்மை நிலைமை பேதியாமல் நிலைபெற நிற்பவனாகலான் பேதியா ஏகமாகி எனவும், இவ்வுண்மையே வேதமுங்கூறும் உண்மையாகலான் போதியாநிற்கும் எனவும், இவ்வுண்மையை யாவரும் உணரவே தில்லையின்கண் நடிக்கும் நடனார்த்தமாகலான் தில்லைப்பொதுநடம் எனவும், அந்நடனம் ஊனமாகிய பந்தச்செயலும், ஊனமற்ற முத்திச்செயலும் ஆகிய இருசெயலையுங் காட்டுவதாகலான் போற்றிபோற்றி எனவுங்கூறினர்.

வேதம் இறைவனது அத்வைதார்த்தத்தைக் கூறியபடி கூறிப்போற்றியதேயல்லாமல் இப்பொழுது தாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப இறைவன் தன்பால்நின்ற முறைமையை எடுத்துக்கூறிப்போற்றியதுமாம்.

எங்ஙனமெனின், தாம் கூறத்தொடங்கிய இப்பெரியபுராணத்துக்கும் தில்லைவாழந்தணர் புராணத்துக்கும் முதலாய்நிற்குங் கடவுள் இக்கடவுள்தான் என்பதுதோன்ற ஆதியாய எனவும், இக்கடவுள்தான், யான் என்னுணர்வால் உணரவேண்டுவனவெல்லாம் என்னுள்நின்று உணர்த்துபவனாய் நிற்பவனென்பது தோன்ற நடுவுமாகி எனவும், அங்ஙனம் அவன் உள் நின்று உணர்த்துவதனால் இவ்வந்தணர்முதலாகக் கூறத் தொடங்கிய அடியார்கள் அளவில்லாதவராயினும் அவர்கள்புகழ் அளவில்லனவாயினும் யான் சொல்லத்தொடங்கும் அச்சொல்லளவில்நின்று அவ்வளவும் விளங்கச்செய்வனென்பது தோன்ற அளவிலா அளவுமாகி எனவும், அச்சொற்களில் அவ்வாறு விளங்கும் வண்ணம் அம்முதல்வன் நிற்கும் இயல் இத்தன்மைத்தென்பது தோன்ற சோதியாய எனவும், அங்ஙனம் சோதியாய்நின்று சொற்களைத் தோற்றுவிப்பதுபோல அச்சொற்களில் அமைக்கப்படும் பொருளும் என்னுணர்வில்தோன்ற என்னுணர்வாய் நிற்பவன் என்பதுதோன்ற உணர்வுமாகி எனவும், என்னுணர்வாய்நின்று தோற்றுவிக்கும் பொருள்களில் அவ்வடியார்களுடைய புகழ்பொருளை உணர்வோருக்கு அவைதோன்றும் வண்ணம் அப்பொருள்வழியானே நீங்காதிருந்து உணரச்செய்வனென்பது தோன்ற தோன்றியபொருளுமாகி எனவும், அங்ஙனம் யான்சொல்லும் சொற்களினும், அச்சொற்கள் தோன்றும் என்னுணர்வினும், அச்சொற்களின் பொருளினும். அவன் கலந்திருக்

† தில்லைப்பொதுவின்பெயர்,—மன்று, அம்பலம், சத்து, உம்பர் இரண்மயகோசம், அகம், புண்டரீகம், குகை, ககனம், சுத்தம், பரம், அற்புதம், மெய்ப்பதம், ஞானசுகோதயம், சிதம்பரம், முத்தி, பரப்பிரமம், சபை, சத்திசிவாலயம் என்ப. இன்னும்பல. இதனைக்கோயிற்புராணத்திற்காண்க

குர்தன்மை ஒன்ருகாமல் ஒன்ருயிருக்குந் தன்மைபோலுமன்று, வேருகாமல் வேரு யிருக்குந் தன்மைபோலுமன்று என்னும் அவ்வரியதன்மைதோன்ற பேதியாவகமாகி எனவும், இவ்வாறு சொல்லினுள்ளும் அறிவினுள்ளும் பொருளினுள்ளும் அநந்யமாய் நின்று வெளிப்படுத்திய இவ்வுண்மையை "சேக்கிழா னமது தொண்டர்சீர்பரவ நாமகிழ்ந்து உலகமென்று நம், வாக்கினுல் அடியெடுத்துரைத்திட வரைந்து நூல்செய்து முடித்தனன், காக்கும் வேல்வளவ நீயிதைக் கடிதுகேளெனக் கனகவெளியிலே, ஊக்கமான திருவாக்கெழுந்தது திருச்சிலம்பொலியும் உடனெழு" என்றபடி யாவரும் உணரும் வண்ணம் இவ்வம்பலத்தின்கண் சத்திசிவமெனச் சகளவடிவங்கொண்டு நின்று திருச்சிலம்பொலியோடு ஆகாயவாக்காய்க் கூறினுன் எனது கருணைவள்ளல் என்பதுதோன்ற பெண்ணுமாய ஆணுமாகிப் போதியாநிற்றும் எனவும், இவ்வுண்மையாகிய அநந்யமென்னும் அத்வைதத்தன்மை எனக்குச் சொல்லளவேயன்றிப் பொருளளவாயும், ஏனையோர்க்குச் சொல்லளவாயும் உணர்த்திய பொதுநோக்குடையசெயல் உடையவன் என்பதுதோன்ற போதுநடம் எனவும், அந்நடம் தகராகாசம் எனச்சிறந்தெடுத்தோதப்படும் க்ஷேத்திரம் என்பதுதோன்ற தில்லைஎனவும், யான் "தில்லையில் வந்து வந்து எதிர் தெண்டனுக விழுந்தெழுந்து, கைத்தலம் உச்சிவைத்து உளம்உருகி நைந்து, எல்லை காண்பரிதாய பேரொளி யின்பவாரியின் மூழ்கி, அடிகளே உனதடியர்சீர் அடியேனுரைத்திட அடியெடுத்து இடர்கெடத்தருவாயெனத் திருவருளை யெண்ணியிறைஞ்ச, (நீ) அசரீரிவாக்காக உலகெலாம் என அடியெடுத்து உரைசெய்த பேரொலி ஓசைமிக்கு அடியார்செவிப்புலத்து நிறைய அனைவரும் கரம்உச்சிவைத்து உளம்உருகும்படிச் செய்த இப்பெருங்கருணைக்கு யான் என்செய்யக்கடவேன் இதுவன்றி வேறில்லைஎன்பது தோன்ற போற்றிபோற்றி எனவுங்கூறினுர். இதுபஞ்சகிருத்திய நடனஞ்செய்தருளும் நடராஜமூர்த்திவணக்கம்.

முதலாவதுபோற்றி - தமக்கு அடியெடுத்துக்கொடுத்த கருணைக்கு. இரண்டாவது போற்றி - தமக்குச்செய்த அருளைத் தாமே யாவர்க்கும் அறியச்செய்த பெருங்கருணைக்கு.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

(எ - து.) அரிய வேதசிரசின்மேலாய் விளங்கும் சிற்பர வியோமத்தின்கண், மாயையினுல் கற்பிக்கப்படும் கற்பனுவுருவங்களைக் கடந்த சோதிசொரூபமாய் நடனஞ்செய்தருளும் அகளமூர்த்தி, இத்திருச்சிற்றம்பலத்தின்கண் கருணையே ஒருருவமாகி அளவிடற்கரிய அற்புதக்கோலத்துடன் நின்று, யாங்களெல்லாங் கண்டுகளிக்கும்படி அழகுடன் ஆநந்த நிருத்தஞ்செய்தருளுகின்ற வீரகண்டையணிந்த திருவடிக்கமலங்கட்கு நமஸ்காரம் நமஸ்காரம் என்பதாம்.

அருமறைச்சிரத்தின்மேலாம், சிற்பரவியோமமாகும், கற்பனைகடந்தசோதி, திருச்சிற்றம்பலத்துள், கருணையே யுருவமாகிநின்று, அற்புதக்கோலநீடி, பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி எனக்கூட்டுக.

இனி அருமறைச்சிரம் என்றது - வேதாந்தம். மேலாம் சிற்பரவியோமமாகும் திருச்சிற்றம்பலம் என்றது - அகிலாண்டகோடிகளெல்லாம் தனதுவெளிக்குள்ளே தங்கும்படிக்கு இச்சைவைத்து உயிர்க்குயிராய் நிறைந்திருக்கும் அருளாகிய பரமப்பிரகிருதி ரூப்பமாகிய பராசக்திசொரூபம். கற்பனைகடந்தசோதி என்றது - மாயாகற்பிதமாகிய உருவம் அருவம் உருவாரூபம் என்னும் மூக்கூற்றுக் கற்பனுவுருவங்களையும் கடந்த சத்திசொரூபமாகிய ஞானச்சோதிவடிவம். கருணையே உருவம் என்றது - காசபுணுதிகளாகிய பிரகிருதி

யங்கங்களும், அவ்வுருவங்களின் வழியாய்த் தோன்றுகின்ற தொழில்கள், வாய்மைமுத லிய குணங்கள், ஆகிய சாங்கங்களும், புவனபோகங்களாகிய உபாங்கங்களும் உடை யாய்க் காணப்படும் அத்திருவுருவம் சிறிதுந் தன்பொருட்டன்றி உயிர்களுக்கு அனுக்கிர கஞ்செய்யும் அனுக்கிரகத்தின் பொருட்டாயிருத்தலான் அவ் வுபாங்க சாங்கப் பிரத்தியங் கங்களாகிய அவ்வுருவமேயாம். 'அற்புதக்கோலம்' என்றது - ஓங்காரமே நற்றிருவாசி யாகவும், அதனில் உற்றுநீங்கா எழுத்தாகிய பஞ்சாக்கரமே பாதாதிகேசாந்தமாகவுங் கொண்டு விளங்கும் அவ்வதிசய கோலம். நீடிநின்று பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் என்றது - அப்பஞ்சாக்கரத்திருமேனிகொண்டு என்றும் குன்றுதுநின்று, தம் மைக்காணும் அன்பர்களது ஐந்துபேரறிவுங் கண்களேகொள்ள, அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக, குணம் ஒருமூன்றும் திருந்து சாத்துவிதமே யாக, அழகிய ஆனந்தநடனஞ்செய்தருளும் குஞ்சிதபாதம்.

எனவே, "தற்பரமாய்ப் பரபதமாய்த் தாவில் அனுபூதியதாய், அற்புதமாய் ஆரமு தாய் ஆனந்த நிலையவெளிப், பொற்பினதாய்ப் பிறிவிலதாய்ப் பொருளாகி அருளாகும், சிற்பரமாம் அம்பரமாம் திருச்சிற்றம்பலம்" என்பார் மேலாம் சித்பரவியோமமாகும் திருச்சிற்றம்பலமென்றார். அந்தச் சித்பரவியோமம் ஆரணங்கள் முடிந்தபதத்து உளதென் பார் அருமறைச்சிரத்தின்மேலாம் என்றார். அச்சிற்பரவியோமமாகிய திருச்சிற்றம்பலத் துள் காணப்படும் திருவுருவம் முதற்காரணமாகிய மாயையையும், அம்மாயையைக் கொண்டு உருவாதிகளைக் காண்பிக்கும் நிமித்தகாரணமாகிய கடவுளையும் கொண்டு ஆன தன்றென்பார் கற்பனை கடந்தசோதி என்றார். தனது சத்தியாகிய அருளால் தான் நினைந்ததொருமேனியைத் தனதாகக்கொண்டருளுவ னென்பார் கருணையே யுருவமாகி என்றார். நாதமாத்திரையான இயல்பாற் பிறத்தலாகிய அகாரத்தோடு உகரமகரங்கள் கூடி ஓங்காரமாகிய பிரணவமே நற்றிருவாசியாகவும், அதனுள் அப்பிரணவத்தின் பொரு ளாகிய பஞ்சாக்கரத்துள், * சிகாரத்தைத் துடியாகவும், வகாரத்தை வீசியகரமாகவும், யகாரத்தை அபயகரமாகவும், நகாரத்தை-அக்னியேந்தியகரமாகவும், மகாரத்தை-ஊன்றிய பாதத்தின் கீழிருக்கும் முயலகனுகவுங் கொண்டருளுந்திருமேனியனுய்ப் பின்னர்ப்பிறத் தற்கிடமாயுள்ள தனுகரணாதிகளைத் தரும் மாயாமலத்தை - வலக்கரத்தால் உதறியும்,பிறவி நீங்காது தொடர்ந்து வருவதற் கிடஞ்செய்யும் வல்வினையாகிய கன்மமலத்தை † இடக்கரத் தில் ஏந்தியிருக்கும் அக்கினியால் சுட்டும், கன்மமலமானது பிறவிதோறும் முளைத்து முளைத்து வருவதற்கு அனாதியே முளைத்துநிற்கும் ஆணவமலத்தை ஊன்றியபாதத்தால் மெலிவுறும்படி ஊன்றிநின்றும், பஞ்சாக்கரத்தை யுணர்த்தும் அபயகரத்தால் ஆணவ மலத்தில் ஆழ்ந்துகிடக்கும் ஆன்மாக்களை எடுத்தும், அங்ஙனம் எடுத்த ஆன்மாக்களை, அவ்வான்மாக்களிடத்திலுள்ள நேயரூபமாய் விளங்கும் வீசியகரத்தால் குஞ்சிதபாதமாகிய ஆனந்தவாரிதியில் அழுந்தியிருக்கவும் ஆனந்த நிருத்தனஞ் செய்தருளும் கோலமுடையா னென்பார் அற்புதக்கோலம் என்றார். இங்ஙனமான அவ்வற்புதக்கோலத்தோடு ஞான நடனத்தை நடித்து முத்தான்மாக்களுக்கு முத்தாந்தப்பாதமலர்க்கீழ் முத்தானந்தங்கொடுப பதுபோலும், பெத்தான்மாக்களுக்குச் சிருட்டியைத் துடியாலும், திதியை அபயகரத்தா லும், சங்காரத்தை அக்னியினுலும், திரோபவத்தை ஊன்றியபாதத்தாலும் ஊனநட னத்தைநடித்து அந்நடனத்தால் பிரகிருதி புவனத்துள் இந்திரிய விஷயானந்தத்தைக் கொடுப்பவனென்பார் பொற்புடன் நடனஞ்செய்கின்ற பூங்கழல் என்றார்.

* சேர்க்குந்துடிசிகரம் சிக்கனவாவீசுகரம் யார்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கி லிறைக் கங்கிநகரம் அடிக்கீழ் முயலகனுர் தங்குமகரமதுதான்.

† மாயைதனையுதறி வல்வினையைச் சுட்டுமலம் சாயவமுக்கி அருள்தானெடுத்து - நேயத்தால் ஆனந்தவாரிதியில் ஆன்மாவைத்தானழுத்தல் தான் எந்தையார்பாதந் தான்.

இத்திருப்பாட்டான், கற்பனைகடந்தசோதியென்றது - உருவமாகிய கற்பனைக்கு முதற்காரணமாகிய மாயையைக்கடந்த ஞானவடிவம் எனவும், அந்த ஞானவடிவம் அவ்விறைவன்வடிவமேயாகலான் அவ்வடிவத்தைக் கற்பிக்க நிமித்தகாரணனாகிய கடவுள் ஒருவன் வேண்டாமையான் கற்பிக்கவேறொருகடவுளைக்கடந்த ஞானப்பிரகாச வடிவமெனவும், கருணையே யுருவாகியென்றது - அந்தஞானபபிரகாசவடிவம் ஆன்மாக்களுக்குள்ள அஞ்ஞானவிருளைப் போக்குவதற்குமிக்க அருளாற்கொண்ட திருவுருவம் எனவும், அற்புதக்கோலநீடியென்றது - ஞானக்கண்ணாற்கண்டு உணர்ந்தோதற்கரிய பிரணவத்தையும் பஞ்சாக்கரத்தையும் ஊனக்கண்ணாற்கண்டு உணர்ந்தோத அத்திருவுருவத்தில் அமைத்துக் காட்டுவது மிக்கஅதிசயக் காட்சியெனவும், அருமறைச் சிரத்தின்மேலாம் சிற்பரவியோமமாகும் திருச்சிற்றம்பலம் என்றது - பாச பசுஞானங்களைக் கடந்த பதிஞானப் பிரகாசத்தால் காணப்படும் சிற்பரவெளி எனவும், (அப்பரவெளியில்) நின்று பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் என்றது அந்த சிற்பரவெளியில் மேலேசொல்லிய கருணையுருவுடன் நின்று பெத்தான்மாக்களுக்குச் சிற்றின்பமும், முத்தான்மாக்களுக்குப் பேரின்பமும் உண்டாமாறு முறையே செய்தருளும் ஊனநடனம், ஞானநடனமெனவுங் கூறப்பட்டது.

முதற்செய்யுளால் * "எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே, நட்டம்" சித்தாந்தவாக்கியப்படி தாவர்சொரூபமாய் விளங்கும் சிவசொரூபத்தின் இலக்கணங்களெல்லாந் தோன்றுமாறு எடுத்துக்கூறி, தில்லைப் பொதுநடம் போற்றி எனவும், இரண்டாஞ்செய்யுளால் * "சிவாயநம என்னும் திருவெழுத்தஞ்சாலே, அபாயமறநின்றுவோன்" என்னும் சித்தாந்தவாக்கியப்படி, பஞ்சாக்கரத்தையே திருமேனியாகக்கொண்டு, பஞ்சாக்கரத்தினாலேயே பஞ்சகிருத்தியங்களையும் இயற்றி, ஆன்மாக்களுக்குப் பெத்தநிலையாகிய அபாயத்தைப் போக்கி, முத்திநிலையாகிய உபாயத்தைக் காட்டும் நிலைகள்தோன்றப் பொற்புடநடஞ்செய்கின்ற பூங்கழல்போற்றி எனவுங்கூறி, அருமறையின் அகத்தானையும், காண்டற்கரிய அணுரூபியாயும், யார்க்குந் தெரிவரிய தத்துவனையும், திகழ்கின்ற ஒளிரூபனையும், எல்லாப்பொருளிடத்தும் கலந்திருக்கும் பெரியனையும், பெரும்பற்றப் புலியூரனையும் இருக்கின்ற அரியான்தில்லைவாழ் அந்தணர்தஞ் சிந்தையனாய் என்றும் ஏத்தி வாழ்த்தி வணங்கி வழிபட நின்றருளுகின்றானாகலின் அத்தில்லைவாழந்தணர்களைப் "போற்றிநீள் தில்லைவாழந்தணர்திறம் புகலலுற்றேன்" என்று மூன்றாம் செய்யுள் முதலாகக் கூறத்தொடங்கினார்.

அஃதாவது,—இவ்வந்தணர்கள், ஸ்மிருதிவழி யுழன்றவர், ஆச்சிரமத்துறை அடைந்தவர், அருங்கலைகள் பலதெரிந்தவர், ஆரணங்களைப் படித்தவர், சிறப்புடைய புராணங்களுணர்ந்தவர், இம்முறையான் வேதச்சிரப்பொருளை மிகத்தெளிந்தவர், அத்தெளிவான் சைவத்திறத்தை யடைந்து அதில் சரியைகிரியா யோகங்களைச் செலுத்திப் பின் ஞானத்தால் சிவனடியை (அருளை)ச் சேர்ந்தவர் என்று அவர்களது அருட்பணித்திறமெல்லாம் எடுத்துக்கூறுவா ராயினாரென்க.

என்னையெனின்,—நமது பிறவியாகிய வெந்துயரைத் தீர்க்கும் மருந்தாகி, அத்துயரத்தைப்போக்கிப் போதந்தருவதாகிய திருநீற்றினால் நிறைந்தகோலத்தனாய், நமது பிறவி வழக்கறுக்கும் பணியையேற்கொண்டு, ஆனந்தமுடையவனாய், நிருத்தமூர்த்தியாய் நின்றருளினானாகலின் அப்பெருங்கருணைத் திறத்திற்கு நாம் செய்யக்கடவது யாது? யாது செய்தாற் கைம்மாறாகும். ஏனெனின், பிறவிவழக்கை அறுக்கவேண்டியவனும் அவனே, சிவமாக்க வேண்டியவனும் அவனே, சிவமாக்கியபின்னர் அந்தமில்லா ஆனந்தம் அளிக்கவேண்டியவனும் அவனே, இவற்றில் ஒன்றேனும் அவனன்றி நம்மால் ஆவதுண்டோ? ஒன்றும் இல்லையன்றோ? ஆகவே, இறைவன் நமதுபிறவிவழக்கை

* உண்மை விளக்கம்.

அறக்கும்பணியில் நீங்காது நிற்பதுபோலும், நாம் அவனுக்குரிய தொண்டில் மாறாது நின்று அவன்பணியெல்லாம் இயற்றுவதே, நாம் பெறும்பேறும், நாம் அடையத்தகும் பெருமைக்கு எல்லையுமாம் என்று அம்பணியையே பேணிவாழும் ஒழுக்கமுடையவராய் அவ்வொழுக்கநிலையால் பொங்கும் அன்பினால் அடித்தவம்புரிந்து வாழ்வார் இவரென்று கூறத்தொடங்கினார். (உ)

போற்றிநீள் தில்லை வாழந் தணர்திறம் புகல லுற்றேன்
நீற்றினால் நிறைந்த கோலம் நிருத்தனுக் குரிய தொண்டாம்
பேற்றினார் பெருமைக் கெல்லை ஆயினார் பேணி வாழும்
ஆற்றினார் பெருகும் அன்பால் அடித்தவம் புரிந்து வாழ்வார்.

(எ - து.) (தில்லைவாழ் அந்தணர் புராணத்தைச் சொல்லத்தொடங்கிய யான் அவ்வந்தணர் அடிகளை) முன்னர் வணங்கிச் சொல்லுகின்றேன். அவ்வந்தணர்களது திறம் எத்திறத்தது எனின், திருநீற்றினால் நிறைந்திருக்கும் திருக்கோலத்தையுடைய நிருத்தமூர்த்தியாகிய நடராஜமூர்த்திக்கு உரிமையாகிய தொண்டென்று சொல்லப்படும் பெரும் பேற்றையுடையவர்கள், புகழ் என்னும்பொருளுக்கு ஓர் எல்லையாய் உள்ளவர்கள், அப்புகழ் என்னும்பொருள் தம்மிடத்தில் நீங்காது வாழ்தற்கு வைதிகசைவ சம்பந்தமாகிய ஒழுக்கங்களை மார்க்கமாகக்கொண்டு அவ்வழியொழுகும் கடப்பாடுடையவர்கள், அவ்விரு வழியாற் பெருகிவரும் பேரன்பினால் திருவடிச்சார்பினையுடைய திருத்தொண்டை இடைவிடாதியற்றி வாழ்கின்றவர்கள் என்பதாம்.

இப்பாட்டான், மேற்கூறிப்போந்த நிஷ்களசகளத் திருமேனியுடையோனாகிய அரியானை, ஒன்றாகவும் வேறாகவும் உடனாகவும் கொண்டுவாழுந் திறமுடையவர் தில்லைவாழ் அந்தணர்களென்று சொல்லப்படும் அவர்களது பெருமையும், பேரன்பையும், அடித்தவமாகிய பெரியதவத்தையும் கூறப்பட்டது. (ங)

பொங்கிய திருவில் நீடும் பொற்புடைப் பணிகள் ஏந்தி
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளாற் றுதித்து மற்றும்
தங்களுக் கேற்ற பண்பில் தரும்பணி தலைநின் றாய்த்தே
அங்கணர் கோயில் உள்ளா அகம்படித் தொண்டு செய்வார்.

(எ - து.) காணுந்தோறும் அதிசயத்தை மேன்மேல் விளைவிக்கும் பேரழகினையுடைய திருவாபரணங்களைத் தமது கரங்களில் ஏந்திக்கொண்டு, நடராஜமூர்த்தியினிடத்திற் சென்று, அகண்டாகார சோதிமயமாய்ஒளிவிடும் அவனது பொன்மேனிமுற்றும் அந்த நவரத்தினாபரணங்களை அவ்வவ்வங்கங்கள் நன்றாய்த் தனித்தனி காணப்பட்டு கண்டு களிக்குமாறு அலங்கரித்தலாகிய அரியபணியைச்செய்து, வேதமொழிகளாற் போற்றிப் பின்னர் அன்பிற்றலைபபட்டுநின்று செய்யவேண்டுவனவாகிய நைவேத்தியாதிபணிகளைச் சிவாகமங்களிற் கூறியுள்ளபடி அவ்விதியிற் றலைப்பட்டுநின்று அன்பினைச் செலுத்தித் தாங்கள் வேண்டுமாறெல்லாம் செய்யுந்திறமறிந்து செய்துவருதலாகிய இவ்வகத்தொண்டை, கருணைநோக்குடையாரது சிற்றம்பலத்துள் செய்பவராயுள்ளவர்கள் என்பதாம்.

இப்பாட்டான், அரியானைத் தமதுசிந்தையின்கண்ணே வைத்துள்ளாராகிய தில்லைவாழந்தணர்கள், சிற்றம்பலத்துள் வீற்றிருக்குந் தங்கள்தலைவனாகிய பொன்மேனியனை நவமணிப்பூண்களால் அழகுசெய்தும், வேதங்களாற் றுதித்தும், பின்னர் தங்கள் அன்பு நிறையுமளவும் எண்ணிச்செய்வதாகிய ஆவகனாதி பூஜோபசாரங்களைச் சைவாகமவிதி குன்றாமல் செய்து வருவார்களென்று கூறப்பட்டது.

, தலைநின்றுய்த்தே - தங்களுக்கேற்றபண்பில் தரும்பணி அங்கணர்கோயிலுள்ளா அகம்படித் தொண்டுசெய்வார் எனக்கூட்டுக.

வேதவொழுக்கம் சைவவொழுக்கத்தையும், சைவவொழுக்கம் வைதிகவொழுக்கத்தை யும் உடலுயிர்போல் தழுவிநிற்கும் பண்பினை யுடைத்தென்னும் தன்மையினையுணர்ந்து வைதிகவொழுக்கத்தோடு சைவவொழுக்கத்தையும் உரிமையாகக்கொண்டு வைதிகசைவ ரென வாழும் பண்பினரென்பார் * தங்களுக்கேற்ற பண்பில் தரும்பணிதலைநின்றுய்த்து என்றார். கோயிலுள்ளாராகிய அங்கணர (நடராஜமூர்த்தியின)து திருமேனியிற் பொருந் துவதாகிய அலங்காரத்தோடு பூஜித்தலாகிய தொண்டில் கடப்பாடுடையவரென்பார் அங்கணர்கோயிலுள்ளா அகம்படித்தொண்டுசெய்வார் என்றார். அல்லதூஉம் தம்மோடு ஒத்தவராகக் கூறிய தில்லைவாழந்தணர்கள் தம்மாட்டுப் பேரன்புடையராய் "எண்ணிலாக மம் இயம்பிய இறைவர்தாம்விரும்பும், உண்மையாவது பூசனை" என இவ்வாசிரியர் பின்னே கூறியுள்ளபடி சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கும் பூஜாவிதிகளில் ஒன்றேனும் தவறாமலும் விடாமலும் ஆறுகாலங்களிலும் தமதுள்ளங் களிகூருமாறு தமதுமோதத் தோடு மெய்ப்பொறிபுலன்கரணமுற்றும் இறைவனுள்ளத்திற் பொருந்துமாறு செய்யும் தொண் டில் வலிந்த அன்பினையுடையவரென்றலுமாம்.

நிருத்தகோலங்கொண்டு நின்றருளும் இத்திருமேனி எங்களது பிறவிவழக்கறுக்க வந்த கோலமல்லவாவென்று அத்திருமேனியின் அருமையைநாடி அரிய நவரத்தினங் களாலாகிய ஆபரணங்களை அத்திருமேனி முற்றும் அணிந்து நாங்கள் பத்தராய்ப் பாடமாட்டோம், பரமனை பரமேயாகி எத்திறத்தும் பத்திசெய்கோம், ஆகலின் எங்களை நீ இகழவேண்டாம், முத்தனே, முதல்வா, தில்லைஅம்பலத்தாடுகின்ற அத்தா, அடியோங் கள் இம்மண்ணுலகில் வந்தகாரணம் உன் ஆடல்காணும் பொருட்டல்லவா என்னும் பொருளும், சிந்தையைத் திசைப்பியாதே செறிவுடை அடிமைசெய்ய, எங்கள்தந்தை யாகிய நீ அருளிச்செய்யாய், யாது நாங்கள் செய்வது என்னே, செந்தீயார் வேள்வி யோவாத் தில்லைச்சிற்றம்பலத்தே, அந்திபும்பகலும் ஆட அடியிணையலசுங்கொல்லோ என்னும் பொருளும், நெஞ்சினைத்தூய்மைசெய்து நினைக்குமா நினைப்பியாதே, வஞ்சமே செய்தியாலோ வானவர்தலைவனே நீ, பஞ்சடைசோலைத்தில்லை மல்குசிற்றம்பலத்தே, அஞ்சொலாள் காணநின்று அழகனேயாடுமாறே என்னும் பொருளும், மண்ணுண்ட மாலவனும் மலர்மிசை மன்னினானும், விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காண மாட்டார், திண்ணுண்ட திருமேமக்க தில்லைச்சிற்றம்பலத்தே, பண்ணுண்ட பாட லோடும் பரமனேயாடுமாறே. என்னும்பொருளும் அமைந்துள்ள ‡ வேதமொழிகளால் துதித்துப்போற்றுவர்.

* வைதிகவொழுக்கமுடையார்க்குச் சைவவொழுக்கம் ஏற்றபண்பினையுடைத்தான தாயும், சைவவொழுக்கமுடையார்க்கு வைதிகவொழுக்கம் ஏற்றபண்பினையுடைத்தான தாயும் இருத்தலின் தங்களுக்கேற்றபண்பின்எனவும், வைதிகவொழுக்கத்தால் செய்யத் தரும்பணி - சிவப்பேறெய்தற்கான சிவதத்வநிலையை யாராய்தலாகலான் அப்பணியி னும், சைவவொழுக்கத்தாற் செய்யத்தரும்பணி சிவானந்தம் எய்தற்கான அன்புநிலையை மெய் (உடம்பு) த்தொண்டின் வழியாய் இயற்றுவதாகலான் அப்பணியினும் தலைப்பட்டு நின்றியற்றும் வைராக்கியசீலராகலின் அப்பணியினும் தங்களுடைய இச்சாஞானக் கிரியைகளைச் செலுத்தி அவ்விருபணிகளையும் உள்ளத்தட்பொய்யாது இயற்றிவருந் தன்மையுடையவராகலின் தரும்பணி தலைநின்றுய்த்தே அகம்படித் தொண்டுசெய்வார் எனவுங்கூறினர். † திருநாவுக்கரசு சுவாமிகள் கோயில் தேவாரத்திலவருவன.

‡ சிவதத்வார்த்த பிரதிபாதகமாகிய வேதமொழிகளால் போற்றுதல் ஆத்மாக் களாகிய தாங்கள் சிவமேயாய் நிற்றற்குச் செய்யக்கடவதான தொண்டெனவும், அத்தொண்டன் சிவமேயாய் அஃதாவது, சிவனது ஞானமயமேயாய் நிற்கப்பெற்ற

வேதம் - துதிப்பதற்குத் தகுதியுடைத்தென்று அவ்வேதமொழிகளாற் றுதித்தது போல், அருச்சித்தலாகிய பூஜாங்கத்திற்கு ஆகமம் தகுதியுடைத்தென்று அவ்வாகமத்திற் கூறியுள்ளவாறு பஞ்சசுத்திகளை இயற்றி, அதன்பின்னர் சத்தியாதி சத்திபரியந்தம் செய்வதாகிய பீடபூஜையும், தண்டபங்கி, முண்டபங்கி, வக்கிரபங்கி என்று சொல்லப்படும் முறையாக நியசிக்கும் அஷ்டத்திரிம்சத் கலாநியாசங்களும், அதன்பின்னர் செய்யப்படும் வித்யாதேக நேத்திரங்களும், * ஆவாகநாதி பத்துசம்ஸ்காரங்களும், லயாங்கபோகாங்கங்களும், ஆவரண பூஜைகளும் இவையெல்லாம் செய்துமுற்றிய பின்னர் செய்யப்படுவனவாகிய தூபதீபநைவேத்திய நீராஜனையாதி உபசாராதிகளுமாகிய அகம்படித்தொண்டு செய்வார். (௮)

வருமுறை யெரிமுன் றோம்பி மன்னுயிர் அருளால் மல்கத்
தருமமே பொருளாக் கொண்டு தத்துவ நெறியிற் செல்லும்
அருமறை நான்கி னோடா றங்கமும் பயின்று வல்லார்
திருநடம் புரிவார்க் காளாந் திருவினாற் சிறந்த சீரார்.

(இ - ள்.) அநாதியாயுள்ள ஆன்மகோடிகள் இறைவனருளால் உலகில் நிறைந்து வாழ, ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி என்னும் முத்தீக்களையும், வேதத்திற் கூறப்பட்டுவரும் முறைப்படி வளர்த்து, அங்ஙனம்வளர்த்து வருதலாகிய வைதிக தருமமே அறத்தின் பொருளாகக்கொண்டு, முதனூலெனப்படும் அரிய நான்குவேதங்களோடு ஆறுசாத்திரங்களையும் முறைப்படி கற்றுவல்லவராயுள்ளவர், (அவ்வைதிகநெறியில்நின்று அவ்வறத்தைவளர்த்து வருவதேயல்லாமல்) சைவநெறியிற் கூறப்பட்டுள்ள தத்துவவழியாற் செல்லும் ஆனந்தத்தாண்டவத்தைச் செய்யவல்ல இறைவர்க்கு, அடிமையாகும் அருட்செல்வத்தினாலும் சிறந்திருக்கும் பெருந்தன்மையை யுள்ளவர் என்பதாம்.

மன்உயிர் அருளால் மல்க வருமுறை எரிமூன்று ஓம்பி தருமமே பொருளாக்கொண்டு அருமறைநான்கினோடும் ஆறங்கமும் பயின்றுவல்லார் தத்துவநெறியிற் செல்லும் திருநடம்புரிவார்க்கு ஆளாம் திருவினாற்சிறந்தசீரார் எனக்கூட்டுக.

இவ்வந்தணர்கள் தாம்பெற்றபேறு உலகெலாம் பெற்றுய்யுமாறுநினைத்தல் தருமமாகலானும், அங்ஙனம் நினைத்தவண்ணமே செய்யத்துணிதல் அதன்பொருளாகலானும், அத்தருமத்தையியற்றுதற்கான அருமறைநான்கினோடு ஆறங்கமும் வன்மையாகப் பயின்றுள்ளாராகலினானும், அத்தில்லைவாழந்தணர்கள், அநாதியே மும்மலச்சார்பால் மல்கியிருக்கும் உயிர்கள் அம்மும்மலத்தினின்றும் நீங்கிவரும் முறையாக, எனவே - இருவினையொப்பும், மலபரிபாகமும், சத்திநிபாதமும், முறைப்படிவர, இம்மூன்றும் வரவே நடனஞ்செய்தருளும் இறைவனுக்குமுன்னே மூன்றக்னிகளையும் வளர்த்தி, சிவமந்திரங்களால் மலத்திரயங்களும் சம்ஸ்காரம் ஆகும்வண்ணம் உள்ளத்துட்கருதி முறையானே ஆஹூதிகொடுத்து அது முற்றும்பருவத்தில் திருவருள்நாட்டம் உண்டாம்வண்ணம்

வன்மையான், காயமுங் கரணங்களும் இவ்விரண்டின்வழியாய் அனுபவிக்கப்படும் போகவிஷயங்களும் சிவமேயாய் அஃதாவது சிவனது கிரியாமயமேயாய் நிற்றற்குச் செய்யப்படுவதான தந்திரார்த்தப பிரதிபாதகமாகிய ஆகமமொழிகளாற் சிவன் தனது இச்சாமாத்திரமாய்க்கொண்ட திருமேனியில் செய்யப்படுந்தொண்டெனவும், திருவருளாலுணர்ந்து; தங்களுடைய அகம் (உள்ளம்) இறைவனக (உள்ள)த்தும், இறைவனது அகம் தங்கள் அகத்தும் படிந்து என்றும் வாழ்வதற்கு மேலேசொல்லிய அவ்விருவகைத் தொண்டினையும் செய்வாரென்று கூறினார்.

* ஆவாகனம், ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, அர்க்கியம், பாத்யம், ஆசமனம், புஷ்பதானம் ஆகபத்து.

பூர்ணாஹுதியாற் பூர்த்திசெய்து, அவ்வக்னி சொரூபமாய்விளங்கும் பரசிவஞ்சுடரை, தாண்டவமூர்த்தியாம் விக்கிரக ஞானத்திருமேனியில் தத்துவநெறியினாலே கலைப்பித்து, அந்த ஏக்கிய சிவசோதியைச் சிவசம்ஸ்காரத்தால் சத்திநிபாதம் வாய்க்கப்பெற்ற ஆன்மாக்கள் கண்டு ஆனாமவண்ணம் * கற்பூரச்சோதியாற்காட்டும் திருவிற்சிறந்தவரென்று கூறினார்.

இதனால் தில்லைவாழ் அந்தணர்கள் அக்னிகாரியஞ்செய்தல் ஆன்மாக்களுக்கு இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் என்னும் மூன்றும் உண்டாதற்கெனவும், அது உண்டாதற்காகவே ஞானாசாரியர் கூறும் வேள்வியைச் செய்து வருகின்றனரென்பதாம், அம்மூர்த்தியினிடத்திலுள்ள அசைவற்ற அக்னியை ஆசாரியவிதியிற் கூறியபடி தத்துவநெறியாற் கலைப்பிக்க, அக்கலையானது ஞானமூர்த்தியைக் காணுங் காட்சியினாலேயே சத்திநிபாதர்கள் சிவானந்தமடைவதற்காக கற்பூரச்சோதியைக் காட்டும் திருவிற்சிறந்தவரென்று கூறப்பட்டது.

எனவே - தில்லைவாழந்தணர்செய்யும் அக்னி சிவாக்னியாகலான அவ்வக்கினியிற் செய்யப்படுங் காரியம் ஆன்மாக்களுக்குச் சிவானந்தானுபூதியை விளைவிக்கும் சிவயோகத்திற்கு ஏதுவாமென்பதனையும், அவ்வந்தணர்கள்செய்யும் அக்னி சிவாக்கினியாகலான் அவ்வக்கினியிற்செய்யப்படுங் காரியம், ஆன்மாக்களுக்கு சிவானந்தானுபூதியை விளைவிக்கும் சிவயோகத்திற்கு ஏதுவாயுள்ளதெனவும் அறியக்கிடக்கின்றமையான், இச்செய்யுளையுமென்றுயிர் அருளாலே பெருமுறை பெரிபெண்ணுமுனர்.

ஆதலாலன், தில்லைவாழந்தணர்கள், வைதிகநெறியால் உலகினைவாழ்வித்தும், சைவநெறியால் இறைவனுக்குத் தாம் ஆளாயவாழ்ந்தும் வருவார்களென்று அவர்களது செல்வச்சிறப்புக் கூறப்பட்டது. (௫)

மாறிலா மரபின் வந்து மாறிலா ஒழுக்கம் பூண்டார்
அறுதொழில் ஆட்சியாலே அருங்கலி நீக்கி யுள்ளார்
உறுவது நீற்றின் செல்வம் எனக்கொளும் உள்ள மிக்கார்
பெறுவது சிவன்பால் அன்பாம் பேறெனப் பெருகிவாழ்வார்.

(இ - ள்.) குற்றமில்லாத வேதியர்குலத்திலே தோன்றி, தோன்றிய அப்பிறப்பொழுக்கத்தினின் மாறுபாடாத ஒழுக்கத்தை மேற்கொண்டவர், ஓதல் ஓதுவித்தலாதி அறுதொழில்களை உரிமையாகச்செய்யும் ஆண்தன்மையினால் கலிமுதலிய நீங்காக்கொடிய உலகின்துன்பங்களை நீக்கியுள்ளவர், தாம்அடைவதுள்ளது திருநீற்றால் உண்டாகும் செல்வமேயாமென்று அத்திருநீற்றையே பெருஞ்செல்வமாகக் கொண்டிருக்கும் எண்ணத்தில் மிக்கவர், தாம் பெறத்தக்க பேறு சிவபிரானிடத்துண்டாகும் அன்பாகிய பேறேயாமென்று அவ்வன்பினிடத்திலேயே ஆசைப்பெருக்கமுண்டாக வாழ்கின்றவர் என்பதாம்.

தில்லைவாழந்தணர்கள் செய்யும் அக்னிகாரியமாகிய யாகம் ஆன்மாக்களுக்கு மலமோசனத்தைச் சிவபோகத்தைக் கொடுத்தற்காயின், இம்மையில் ஆன்மாக்களுக்குப்

* கற்பூரச்சோதியைக் காட்டும்போது அதனைக்காணும் அன்பர்கள் முன்னர் உள்ளத்தினுள்ளே சிவபரஞ்சுடரைச் சிந்தித்தலும், பின்னர் வெளியே ஞானத்திருமேனியாகிய திவ்யதிருவுருவத்தைக் கண்டு தலையால் வணங்கலும் இயற்கையாகலான் கண்டு ஆளாம்வண்ணம் கற்பூரச்சோதி காட்டுவாரென்றும். எனவே,—கர்பூரச்சோதியைக் கண்டமாத்திரத்தில் சிரமேற் கைகளைக்குவித்தலும், இருதயத்தில் அஞ்சலிசெய்தலும் தாம் இறைவனுக்கு ஆளாம்வண்ணத்தைக் காட்டும் அடையாளக் குறிகளாம்.

பசிநோய்முதலியவற்றைப் போக்க அந்தயாகம் பயன்படாதோவெனின்; அஃதுணர்த்தவே இவ்வாறுஞ்செய்யுள் எழுந்ததென்க.

எங்ஙனமெனின், திருச்சிற்றம்பலத்தைக் காணப்பெற்ற மெய்ஞ்ஞானிகளாகிய மெய்யன்பர்கள் இறைவனை நோக்கி மாயையமும் கன்மமும் நீங்காது நிற்றற்கிடமாயுள்ள இப்பிறவியை இன்னமும் பாலிப்பையோ என்று பிறவிக்கஞ்சி எத்துவராயின், கற்பூரச் சோதியைக்காட்டி அலகில் சோதியனைக் காட்டும் அந்தணர்கள் அவர்களை நோக்கி அன்பர்காள்! நீங்கள் என் அஞ்சுகின்றீர்கள், உங்களுக்குப் பிறவியை நாம் போக்குவோமென்னுங் குறிப்புத்தோன்றவன்றோ நடராசன் பஞ்சாக்கரபாதத் தூக்கிய குஞ்சிதபாதத்தைக் காட்டுகின்றான். ஆகவின் நீங்கள் அப்பாதுகாக்கரப்பொருளை இடைவிடாது சிந்தனைசெய்யுங்கள். செய்து வருவீராயின் அச்சிந்தனை விசேடத்தால் நீங்கள் எடுத்த இப்பிறவி ஒழியுந்தருணத்தில் அடைபப்பெறுவது குஞ்சிதபாதமேயாமென்று அப்பாதத்தை ஓர் திருக்காத்தை நீட்டிக்காட்டுகின்றான். அச்சேபாதத்தில் உங்கட்கு நீங்கும் அளவும் பிராரத்தவினை வாதிப்பாலும் பேதிமாலுமிருக்கவும், உங்களுக்கு வேண்டும் அன்னம்பாலிக்கவும், பொன்னும்பாலிக்கவுமே உடலுக்குவேண்டிய நாங்கள் அவனது மறவிலாப்படியின்வந்து, மாறிலா வொழுக்கம் பூண்டு, ஓதலாதி அறுதொழிலைக் கைக்கொண்டு அத்தொழிலின் ஆட்சிய (சிறப்பி)னால், வடிவம் தனமும் மனமுங் குணமும் குடியுங் குலமுங் குடிபோகச்செய்யும் வறுமை, உடலோம்ப நீக்காதிருந்து வருத்தும் பசி ஆகிய இவ்விரண்டானும் வரும் கவலையை (துன்பத்தை) நீக்குவோமென்பர்.

அறுதொழில்களாவன,—ஓதலோதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதலேற்றலாம். ஏதலாவது, - இறைபணிவழுவாது நிற்றலாம், எனவே, உடம்புநாற்றங் காரிய அது கொண்ட வினைப்பயனும், அதனையநுபவித்தற்குத் துணைக்காரணமாய் உடனிற்கும் முயற்சியும் ஒருவாற்றானும் ஈங்கலோகாலையின் அவை என்னைப் பாதியாவான் அவ்வான்மாவாய் நின்றமுதலையான் அவனிடத்தில் தங்குகிற்றற்குத் தடையாகலான், அத்தடையைநீக்குதற்கு ''அவனருளாலல்லது ஒன்றையுஞ்செய்யாதுக்கு அன்றோளை கன்மம் பிரவேசியா'' என்றுஞ்சித்தாந்த அதிகரணத்தாலுணர்தலாம்.

அஃதாவது,—நாம்செய்யும் செய்திக்கு முதல்வன் செய்திலையின்றி அமையாதாகலின் நாம்செய்வனவெல்லாம் அவனருளின்வழிநின்று செய்வோமாயின் மாயையும் கன்மமும் நாம் இறைவனோடு ஒருங்கிநிற்றற்குத் தடையாகா; ஆகலான் அவை தாக்காமைப்பொருட்டுச் செய்யப்படும் உபாயமாதல் பற்றி இறைபணிவழுவாது நிற்கவேண்டும் என்று கற்றுணர்வதேயாம். இஃதுறுதற்றொழிற்.

இனி ஓதுவித்தலாவது,—இங்ஙனமானவை வெதாந்தமுதலியவாகிய சித்தாந்தநிகமணத்தை ஓதப்பெற்றபின்னர் தாம்செய்யும் செயலெல்லாம் அருளின்வழிநின்று செய்தலாகிய இறைபணிநிற்பார்க்கு''பாசமேசுவரனது பகிர் தங்கியோ அவையுமோதுணர்க்குமென்''

என்னையெனின்,—பாசத்தோடு ஏகனாகி அவையெல்லாம் அன்னவழிநின்று பாசம்பற்றொழிந்த வழி விடயத்தோற்றமுண்டாம் அறிவிச்சைசெயல்கள் அவ்வழியுமுண்டு விடயானந்தத்தை எய்தப்பெற்று சுகமுறுதல்போல், இறைவனோடு ஏகனாகி அருளுபாயம் அவ்வருட்செயலின்வழிநின்று பாசம்பற்றொழிந்தவழி சிவத்தோற்றமுண்டாம் அறிவிச்சை செயல்கள் அவ்வழியுமுண்டு சிவானந்தத்தை எய்தப்பெறுவதாயிருக்க, இவ்வுண்மையை யுணராதவாதிகள், ஏகனாகி இறைபணிநிற்பார்க்கு மேல் செய்யக்கடவதொன்றில்லை. என்னெனின், இருள்நீக்கமும் ஒளிவிளக்கமும் உடனிகழ்காண்டல்போல பாசநீக்கம் உண்டானபோதே சிவத்வவிளக்கமும் இடையீடின்றி உடனிகழ்காண்டலின் அறிவிச்சை செயல்கள் அங்ஙனம்உழல்வதனால் வரும்பயன் என்னையென்று சிவத்வவிளக்கமெனப்படும் சிவானந்தமாகிய பரமசுகத்திற்கும், இறைபணிநிற்றலாகிய அருள்விளக்

கத்திற்கும் வேற்றுமையுணராது அருள்விளக்கமே ஆனந்தவிளக்கமெனக் கருதிச் சிவத்வத்தை யிழக்கின்றனர்.

அங்ஙனம் ஆனந்தவிளக்கத்தை யிழக்கின்ற வாதிகளைநோக்கி பாசநீக்கம், சிவப்பேறு என்னும் இருவகைப்பயனில், இருள்நீக்கத்தில் ஒளிவிளக்கம்போல, பசுத்வநீக்கத்தில் அருள்விளக்கமாத்திரையேயன்றி ஆனந்தவிளக்கமெனப்படும் சிவப்பேறு உடன்நிகழா; ஆகலான் ஏகனாகி இறைபணிநிற்றலாகிய அருள்விளக்கத்தில் அறிவிச்சைசெயல்கள் அயரா அன்பில் விடயிக்குமாயின் அரன்கழல் செல்லுதலாகிய சிவப்பேறெய்தவரும் என்று ஓதுவித்தலாம். இது இரண்டாந்தொழில்.

இனிவேட்டலாவது,—அரனது ஸ்ரீபாதத்தை யன்றிய அறிவு இச்சை செயல்கள் மூன்றையும் தலைப்படச்செய்து அவ்வழி நிற்கப்பெறுதலேயாம்.

என்னையெனின், "இறைபணிநிற்க" என்றதனை ஓதப்பெற்றதனால் பாசம்நீங்கி அருள் விளங்கப்பெற்றும், அது விளங்கியவழி, அரனது ஸ்ரீபாதத்தையன்றிய இச்சை மீதூரப்பெற்று அவ்விச்சை அதிகரித்தவழி பத்தியிருள் பறவாதேக்க அறிவிச்சை செயல்கள் மூன்றையும் அவ்வழிநிறுத்துதலாகிய யாகச்செயலில் தலைப்பட்டும் இருத்தலாம். இது மூன்றாந்தொழில்.

இனி வேட்பித்தலாவது,—பசுத்வம்நீங்கி அருள்விளக்கம்பெற்று ஆனந்தவிளக்கம் எய்தப்பெறாதார்க்கு அது எட்டுமாறு அவர்களது அறிவிச்சைசெயல்களை வேட்பித்தல்.

என்னையெனின்,—பசுத்வம்நீங்கப்பெற்ற சீவன்முத்தர்க்கு சிவப்பேறுண்டாக வேண்டுவது இன்றியமையாதசெயலாகலின் அவர்கள் அச்சிவப்பேறு எய்துமாறு அவர்களது அறிவை மலங்கழுவுவதிலும், இச்சையை அன்பரொடுமருவுவதிலும், செயலைத் திருவேடத்தையும் சிவாலயத்தையும் தொழுவதிலும் வியாபரிக்குமாறு செய்யும்செயல்களாம். இது நான்காந்தொழில்.

இனி ஈதலாவது,—நிருத்தனுக்கு நிறைந்தகோலமாயுள்ள திருநீறளித்தலாம்.

என்னையெனின்,—அங்ஙனம் வியாபரிக்குமாறு செய்தபின்னர் திருநீறு உண்மையாகிய ஆணவமலத்தைக் கழுவுவதாயும், புன்மைத்தன்மையும், அவலத்தன்மையும், பாவத்தன்மையும் உடையகன்மமலத்தைத் தவிர்ப்பதாயும் அறுப்பதாயும், ஆசையைவிளைவிப்பதாகிய மாயாமலத்தைக் கெடுப்பதாயும் உள்ளதாகலின் அந்நீற்றை அம்மும்மலமுங் கழுவுவதற்குக் கொடுத்தலாம்.

அத்திருநீற்றால் சீவன்முத்தர்கள் மலத்தைக் கழுவப்பெற்றதனால் உடம்பிடர் தீர்ந்து வருத்தந்தணிந்து இன்பமுற்று பெருமைபெற்றபின்னர் அவர்களுக்குப் பத்தியாகிய போதத்தைத்தந்து அன்பரொடு மருவுவதற்கு மதியைத்தருவது அத்திருநீறேயாகலின் அதனையேகொடுத்தலாம்.

அன்பரொடு மருவியபின்னர், அவர்களுக்கு மலத்தைக்கழுவி அன்பரொடுங்கூட்டிய அத்திருநீற்றைத் தமதுமகளுரைக்கொண்டு குண்டிகைக்கையர்களோடு சாக்கியர் கூட்டம் கண்திகைக்கும்படி நிலைபெறச்செய்த கருணைவள்ளல் ஆலவாயானாகிய இறைவனன்றேயென்று அவனெழுந்தருளியிருக்கும் ஆலயத்துக்குச்சென்று அவனைக் காணும் ஆசையை என்றுங்குன்றாவண்ணம் செய்வது அத்திருநீறேயாகலின், அதனையே கொடுத்தலாம். இது ஐந்தாந்தொழில்.

இனி ஏற்றலாவது,—இவ்வாறு மலங்கழுவி, அன்பரொடுமருவி, ஆலயந்தொழும் அரநெறியைக் கடைப்பிடித்த சீவன்முத்தர்களது உடல் பொருள் ஆவிகளை நீர்வார்த்துக் கொள்ளுதலாம்.

என்னையெனின், சீவன்முத்தர்கள் அன்பரொடு இணங்குவதும், ஆலயத்தைவழிபடுவதும் இலக்கணமாகவிருக்க, அதனை மேலோங்கவொட்டாது தடுக்குங் களைகட்டா

யுள்ளதீ மும்மலங்களேயாம். அம்மும்மலங்களும் விளைதற்கு இடமாயுள்ளது உடல் பொருள் ஆவிகளேயாம். ஆகலான், ஆணவமலம் விளைதற்கிடமாயுள்ள உயிரையும், கன்மமலம் விளைதற்கிடமாயுள்ள பொருளையும், மாயாமலம் விளைதற்கிடமாயுள்ள உடலையும் களைவானெண்ணி அச்சீவன்முத்தர்கள் பத்திரபுஷ்பபலன்களைக்கொண்டு அவைகளால் நடராஜப்பெருமானை அருச்சனைபுரியவருவாராயின் அவர்கள்பால் அம்மூன்றையுமே சங்கற்பஞ்செய்து நீர்வார்த்துப் பெற்று சிவார்ப்பணஞ்செய்து, அதனால் அவர்களுக்குண்டாகும் பேரன்பைப் பெறும்பேறுகப் பெறச்செய்தலாம். இது அறுதொழில்.

இவ்வாறு தில்லைவாழந்தணர்கள் சீவன்முத்தர்களது உடல் பொருள் ஆவிகளைச் சிவார்ப்பணஞ்செய்துபின், அம்மூன்றையும் நடராஜன் ஏற்குமாறுசெய்து, அச்சீவன்முத்தர்களைநோக்கி உடலூழ் ஒழியுமளவும் அன்னமும் பாலிப்பான், பொன்னும் பாலிப்பான், அவ்வூழ் ஒழிந்தவழி இன்னமும் பிறவாவண்ணமும் செய்யான் என்று ஆசிகூறுவர்.

இவ்வுண்மைதோன்றவே—"அறுதொழில் ஆட்சியாலே அருங்கலிநீக்கியுள்ளார் எனவும், உறுவது நீற்றின்செல்வம் எனக்கொளும் உள்ளமிககார் எனவும், பெறுவது சிவன்பாலன்பாம் பேறெனபெருகிவாழ்வார் எனவுங்கூறினர். திருஞானசம்பந்தமூர்த்திகளும் "கற்று ஆங்கு எரியோம்பிக் கலியை வாராமே, செற்றார்வாழ்" என்று ஓதியருளினர்.

நடராஜன் சீவன்முத்தர்களுக்கு அன்னமும் பொன்னுமளித்து மீண்டும் பிறவாவண்ணம் செய்வானென்பதை—"அன்னம்பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம், பொன்னம்பாலிக்கும் மேலுமிப்பூமிசை, என்னன்பாலிக்குமாறுகண் டின்புற, இன்னம்பாலிக்குமோ இப்பிறவியே" என்றார் திருநாவுக்கரசுசுவாமிகள்.

இப்பாட்டான், (திருநடம்புரிவார்க்கு ஆளாய், மன்னுயிர்காக்கும் தருமமே பொருளாக்கொண்ட) தில்லைவாழந்தணர்கள் பிறப்பொழுக்கங்குன்றாத குலவொழுக்கத்திற் சிறந்தவர்களென்றும், அவ்வொழுக்கத்திற் சிறந்திருப்பதற்கேற்ப ஓதலாதிபண்டிதத் திறத்தில் ஆண்தன்மையுடையவர்களாய் கலியை நீக்கிக்கொள்ளுந் திறமுடையவர்களென்றும், அத்திறத்தால் நீற்றின்செல்வமே எல்லாத்துன்பங்களையும் போக்கும் பாக்கியமென்று போற்றும் உள்ளத்திற்சிறந்தவரென்றும், அங்ஙனமான பாக்கியங்கிடைக்கப்பெற்றதனால் சிவன்பாலன்பே பெறத்தகும் பேறெனப் பெருகிவாழ்பவர்களென்றுங் கூறப்பட்டது. (௬)

ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார்
தானமும் தவமும் வல்லார் தகுதியின் பகுதி சார்ந்தார்
ஊனமே லொன்று மில்லார் உலகெலாம் புகழ்ந்து போற்றும்
மானமும் பொறையும் தாங்கி மனையறம் புரிந்து வாழ்வார்.

(எ - து.) ஞானத்தை முதலாகவுடைய ஞானமுதலிய நான்கினையும் குற்றமற ஆராய்ந்துணர்ந்து தெளிவில் மிகுந்திருப்பவர், அத்தெளிவின் மிகுதியால் எல்லாப்பொருளையும் சிவன்பாலாக்கும் தானத்திலும், தனுகரணாதிகளைச் சிவநெறியில் நிற்கச்செய்யும் தவத்திலும் வல்லவராயிருப்பவர், (அவ்விரண்டு முடைமையால்) தகுதி எனப்படும் அன்பென்னும் பகுதியைச் சார்ந்திருப்பவர்;(அன்பின்பகுதியைச் சார்ந்திருப்பவராகவே) மும்மலச்சேட்டையின் விகுதியாகிய துன்பக்கூறுபாடுகள் ஒருசிறிதும் இல்லாதவராயினர்; அவையிலவாகவே உயர்ந்தோரெல்லாம் புகழ்ந்து போற்றத்தகும் மானத்தையும் பொறையையும் மறவாது தாங்கிக்கொண்டு இல்லறத்தை நடத்திவாழ்கின்றவரா யிருப்பவராயினர் என்பதாம்.

"உடம்பின் கண்ணதாகிய பிராரத்தவாசனை உயிர்க்குத்தாக்குவதாயுள்ள அவ்வளவு காலமும், அதனான்வரும் விருப்புவெறுப்புக்களும், அவைபற்றி அறியப்பட்டுவரும் யண்

முதலாகக்கூறப்படும் மாயைகளும், அவைபற்றிநிகழும் விபரீதவுணர்வும் ஆகிய அசத்துக்கள் நீங்கியவழியும வந்துகூடி மேம்பட்டுவருவனவாகலான் அவ்வளவிற்கெல்லாம் மூலமாகிய பிராரத்தவாசனை பற்றறக்கழிந்தாலன்றி அவ்வசத்தைக் கீழ்ப்படுத்தும் மெய்யுணர்வு மேம்படுதல்கூடாதாகலின், அவ்வாசனை பற்றறக்கழிதற்பொருட்டு, திருவேடத்தையும் சிவாலயத்தையும் நாடி வழிபடவே அவ்வினைநீங்கி மெய்யுணர்வு மேம்பட்டுநிகழும் ஆகலான் அன்பினால் அங்ஙனம்வழிபடுவாயாக" என்னுஞ்சித்தாந்தத்தில் உதாரணமாகிய இயைபுகூறுதலின் இவ்வியைபுணர்ந்த பெருமக்களே அவ்வந்தணர்களாகலின் ஞானத்திற் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கினையும் குற்றமறத்தெரிந்து மிக்காராய்த் தானத்திலும், தவத்திலும் வல்லராய்த்தகுதியின்பகுதியைச் சார்ந்தவராயினர். எனவே-அறிவிச்சைசெயல்கள் மூன்றும் பத்திவசப்பட்டு ஞானசம்பந்தமுடைய சரியை கிரியாயோகங்களின் வழியாய்ச் செய்யக்கடவனவாகிய வழிபாடுகளை அயரா(நீக்கமில்லா)மல் செய்துவந்தாலன்றி ஞானத்தாற்பெறப்படும் துரியாதீத நிலைக்கண்ணதாகிய சுவானுபூதியிலுண்டாகும் பரமசுகம் நீங்காதிருக்கப்பெறுதல் கூடாதென்பதனை சங்கேதமென்னும் நவையற நன்றாய்த்தெரிந்தவராய், அப்பரமசுகம் நீங்காதிருத்தற்பொருட்டு நடராஜமூர்த்திக்குச் சரியையின்வழியாய்ச் செய்யக்கடவதாகிய வழிபாட்டினால் விருப்பு வெறுப்புக்கிடஞ்செய்யும் புண்ணியபாவப்பயனையும், புண்ணியபாவப் பலகாரணமாயும் பொருந்துகின்ற கன்மமலச்சேட்டையைத் தடுத்தும், கிரியையின்வழியாய்ச் செய்யக் கடவதாகிய உட்பூசை புறப்பூசையாகிய வழிபாட்டினால் நிலமுதல் மோகினியீறாகக் காணப்படுகின்ற மாயாமலச்சேட்டையைத் தடுத்தும், யோகத்தின்வழியாய்ச் செய்யக்கடவதாகிய ஆதார நிராதாரமாகிய வழிபாட்டினால் ஆராதாரங்களில் அந்தந்த ஆதாரங்களுக்குரிய திவ்யரூபங்களைக் கற்பித்துக்கொண்டு தியானித்தலாகிய சுட்டறிவும், நிராதாரயோகத்தில் முன்போல் திவ்யரூபங்களைக் கற்பித்து ஆக்குவதொழிந்து சைதன்யசொரூபத்தைப் பாவாதே பார்த்திருத்தலாகிய சுட்டறிவும் ஆகிய விபரீதவுணர்வைக் கொடுக்கும் ஆணவமலச் சேட்டையைத்தடுத்தும், தங்களுடைய உடல் பொருள் ஆவிகளைத் தங்கள்பால் ஊனநடனத்தையொழித்து ஞானநடனத்தைச் செய்தருளும் ஞானநடனமூர்த்திக்குக் கொடுக்குந்தானத்திலும், இங்ஙனம் உடல்பொருள் ஆவிகளாகிய சத்தசத்துக்களின் வழியாய்ச் சேட்டிப்பதாகிய மும்மலச்சேட்டைகளை நீக்கியவழியும் இச்சேட்டைகளுக்கெல்லாம் மூலமாகிய பிரார்த்தவாசனை வந்துகூடுவதாகலான் அவ்வாசனை பற்றறக்கழிந்தாலன்றி மும்மலச்சேட்டையாகிய அவ்வசத்தைக் கீழ்ப்படுத்தும் ஞானம் (அஃதாவது, துரியாதீதநிலைக்கண்ணதாகிய சுவானுபூதியிலுண்டாகும் பரமசுகத்தைக்கொடுப்பதாகிய மெய்ஞ்ஞானம்) மேம்படுதல் கூடாதாகலின் அந்த மெய்ஞ்ஞானம் மேம்பட்டுநிகழவும், அதுநிகழ்தற்குப் பிராரத்தவாசனை வன்மைபெற்றிருத்தலால் அவ்வன்மை பற்றறக்கழிவதற்கும், திருவேடத்தையும் சிவாலயத்தையும் நாடிவழிபடுதலாகிய தவத்திலும் வல்லராய், இவ்வன்மைகுன்றுவண்ணம் அரன்கழலில் செலுத்தத்தக்க அயரா அன்பென்னும் பகுதியைத் தகுதியாகச்சார்ந்தவராய், இச்சார்பின் உறுபயன் 'தில்லை மாநகர்ச்சிற்றம்பலவனார்க்கு எல்லையில்லதோர் அடிமைபூண்டு" "புண்ணியபாவம் பொருந்தும் துக்காமியத்தான்வரும் அல்லல் என்செயும்" "மண்முதல் மாயையினால்வரும் அருவினை என்செயும்" "கண்ணிய அஞ்ஞானங்காட்டும் இவ்வாணவத்தான்வரும் தொல்லைவல்வினைத்தொண்டர்தான் என்செயும்" என்று தெளிந்தஞானத்தால் இனிமேல் எங்களுக்கு வரக்கடவனவாகிய ஊனங்கள் ஒன்றுமில்லை என்று இறுமாப்புடன் வாழ்வர்.

இவ்வாறுவாழ்கின்ற இவர்கள் சிவத்வவிளக்கமெனப்படும் சிவப்பேற்றையும், அதுகூட்டும் அருள்விளக்கமும் வேண்டாது, பாசநீக்கமேவேண்டித் தம்மையே பொருளாகப் பெறுவோர்அவாவும் துறவறத்தை அவாவாது நல்லோர்வேண்டும் இல்லறமாகிய நல்லறத்தைவேண்டி அதனை எப்பொழுதும் இனிதுடனியற்றிவாழ்வர். ஏனெனின்,—"மோப்பக்குழையும் அனிச்சம் முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து" என்ற பெரியோர்

சொற்படி முகம்வேறுபட்டுப் பார்த்தவளவில் குழைந்துபோம் மேன்மைவாய்ந்த மான மிக்கார் விருந்தினரெனப்படும் அரனடியரே யாகலினாலும், அவ்வடியார்க்கு அமுதுசெய் வித்தலினும் மண்ணினிற் பிறந்ததனாற் பெரும்பயன் வேறொன்றில்லையாகலினாலும் அப்பெரியபேறு இல்லறத்தாலல்லது அமையா தாகலினாலும், அவ்வில்லறத்தையே பேறமெனக்கொண்டு குலங்களிற்சிறந்த நான்குகுலத்தவராயினும், அக்குலங்களிற் சேராதவராயினும், உலகத்தாராற் கொள்ளப்படும் நலத்தினராயினும், நலமொழிந்த தீமை யெல்லாம் நிறைந்தவராயினும் அவர்களறிவு சங்கரிடத்துப்பொருந்திய அன்புடையது என்றுகாணப்பெறும் அடியார்களாயின் அவர்கள் யாதுவேண்டினும் அதனை இல்லை யென்னாது கொடுத்தலில் மானமும், அங்ஙனங்கொடுத்தலினால் எவ்வகைத்தான மேலுலகம் இல்லெனினும், எவ்வகைத்தான நரகலோகம் வருவதெனினும் அவைகளைத் தாங்கும் பொறையும் உடையவராய் உலகெலாம் போற்றவாழ்வாரென்று கூறப் பட்டது.

இப்பாட்டான், வைதிகநெறியால் அறத்தையும், சைவநெறியால் அன்பினையும் பெற்றுள்ள தில்லைவாழந்தணர்கள் அநுபக்ஷமாகக்கொள்ளும் சரியையாதிகளைவிட்டு சம்புபக்ஷமாகக் கொள்ளும் ஞான யோகக்கிரியை சரியைகளைத் தெரிந் துணரும் அறிவிற் சிறந்தவரென்றும், அந்நான்கும் நிலைபெறுமாறு தானத்திலும் தவத்திலும் வல்லவராயிருப்பரென்றும், அந்தவன்மையால் புலன்வழிசாராது சிவஞானத்தையே சார்ந்திருப்பவரென்றும், அச்சார்பால் அறியாமையின் பகுதி சிறிதும் இல்லாதவ ரென்றும், அவை இல்லாமையால் மேல் அன்புசெலுத்தற்குரிய இல்லறத்தை மானத்தை யும பொறையையும் துணையாகக்கொண்டு நடத்தி வாழ்வார்களென்றும் கூறப்பட்டது. ()

செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வவே தியர்க ளானோர்
மும்மையா யிரவர் தாங்கள் போற்றிட முதல்வ னாரை
இம்மையே பெற்று வாழ்வார் இனிப்பெறும் பேறொன் றில்லா
தம்மையே தமக் கொப் பான நிலைமையால் தலைமை சார்ந்தார்

(எ - து.) இவ்வண்ணம் இல்லறத்தைநடத்தும் செவ்வழியினால் சாந்தம் அடையப் பெற்ற சித்தத்தையுடைய தெய்வத்தன்மையிற்சிறந்த அந்தணர்களாயுள்ளார் மூவாயிர வர்கள்; (அவர்கள்) தாங்கள் வழிபட்டுவணங்க, யாவர்க்குந் தலைவராயுள்ள இறைவனை, இவ்வுடம்போடு கூடிவாழும் பொழுதே ஆன்மநாதராகப்பெற்றுள்ளவர், இனிப்பெறத் தரும்பேறு ஒன்றுமில்லாதவர்கள், (ஆகலான்) வேறொருவரை ஒப்பிடுவதற்கில்லாமல் அவர்களுக்கு அவர்களையே ஒப்பாகச்சொல்லப்படும் நிலைமையுடைமையால் அவர்களே தலைமையைப்பெற்றுள்ளவர்களாயினரென்பதாம்.

இங்ஙனமான விருந்தோம்பலாகிய வேளாண்மையான், பருவந்துபாழ்படுத (நல்குர வான் வருந்திக்கெடுத)லை யடையாராய், திருமகள் மனமகிழ்ந்து வாழப்பெற்று, உண வுக்குவேண்டிய வித்தை இடாமலே தானியசம்பத்தெல்லாம் உடையவராய் வாழும் செம்மையராய், எல்லாவுயிர்களிடத்தும் செந்தண்மையுடைய கடவுட்டன்மை வாய்க்கப் பெற்றவராய்ப் பூவுலகிலுள்ள ஆன்மாக்களுடைய மும்மலங்களை வேதித்து ஒழிக்க அனாதிமலமுத்தனாகிய முதல்வனைத் தங்களுக்குள் முதன்மையாய் நின்றருளும்படிப் பெற்று மூவாயிரவரென என்றும் வாழ்வாராயினர். யாவர்க்கும் முதல்வனாயுள்ள இறைவனை இவர்கள் முதன்மையாகப்பெற்றுவாழ்ந்ததன்மை எத்தன்மைத்தெனின்:— எல்லாவுயிர்களிடத்தும் உடல்உயிர், கண்ணருக்கன், அறிவொளிபோல் பிரிவறும் அத்துவிதத்தன்மையா யிருப்பதுபோ லல்லாமல், இவர்களது உடலாய் உயிராய் உண் டுறங்கிநடந்து நானுபோகங்களையுந் தானுகச்செய்து பேதமறநின்றிருக்கப்பெற்று இனிப் பெறும்பேறு ஒன்றில்லாதவராய் வாழுந்தன்மையைப் பெற்றனரென்க.

இப்பேறுபெற்றதேயன்றி, தம்மையே தமக்கொப்பான நிலைமையால் தலைமைத் தன்மையைச் சார்ந்தவராயும் இருப்பவர். அஃதாவது,—இறைவன் தனக்குமேல் ஒருவரையில்லாமைபோல் இவர்களும் இல்லாதவர், அவ்விறைவன் தனக்குச் சமானமாக ஒருவரையும் இல்லாமைபோல் இவர்களும்இல்லாதவர் மேலும் ஒப்பும் இல்லாதஅவ் விறைவன் யாவரையும் தனக்கு அடிமையாகக்கொண்டு தான்தலைமைத்தன்மையைச் சார்ந்திருத்தல்போல் இவர்களும் யாவரும் தங்களுக்கடிமைகூறத் தாம்தலைமைத் தன்மையைச் சார்ந்திருக்கின்றவராயிருக்கின்றவரென்று கூறினர்.

இப்பாட்டான், (அன்புசெலுத்துவானெண்ணி இல்லறத்தை மேற்கொண்ட அந்தணர்கள்) சாந்தசித்தத்தோடுகூடிய வேதியர்கள் என்றும், அவர்கள் மூவாயிரம்பேர்களென்றும், இவர்கள் யாவர்க்கும் முதல்வனாயிருக்கின்ற பஞ்சகிருத்திய மூர்த்தியைத் தங்கட்கே ஆன்மநாதமூர்த்தியாக இம்மையேபெற்றவரென்றும், அதனால் இவர்களுக்கு அம்மை ஒன்றுளதென்பதும் அங்குபெறும்பேறு ஒன்றுளதென்பதும் இல்லாத பெருஞ்சிறப்பினரென்றும், இத்தகைத்தான சிறப்பினால் வேறொருவர் தமக்கு ஒப்பு சொல்லுவதற்கில்லாமல் தலைமைபெற்றிருப்பவரென்றும் கூறப்பட்டது. (அ)

இன்றிவர் பெருமை யெம்மால் இயம்பலாம் எல்லைத் தாமோ
தென்தமிழ்ப் பயனா யுள்ள திருத்தொண்டத் தொகைமுன் பாட
அன்றுவன் றொண்டர் தம்மை அருளிய ஆரூர் அண்ணல்
முன்திரு வாக்கால் கோத்த முதற்பொருள் ஆனார் என்றால்.

(எ - து.) சுந்தரமூர்த்திகளை விறன்மிண்டர் "புறகு" என்றுசொல்லிய அந்நாளில், அம்மூர்த்திகளை (அடியார்கள் புறகாக்காத ஆமாறு) தமிழ் என்னும் மொழிக்குப் பொருளாயுள்ள திருத்தொண்டத்தொகையை, அம்மூர்த்திகள் அடியார்குழாங்கள் கூடியிருக்கும் தேவாசிரியத்தின் முன்னேநின்று பாடுதற்குத் தியாகேசப்பெருமானார் தமது திருவாக்கால் முதலடியாக எடுத்துத்தொடுத்தருளிய முதற்பொருள்கள் ஆயினர்என்று சொல்லப்படுமானால், இப்பொழுது இத்தில்லைவாழந்தணர்களுடைய சிறப்பை எம்மால் எடுத்துச்சொல்லத்தகும் அளவினை யுடையதாகுமோ; ஆகா என்பதாம்.

வன்றொண்டர் தம்மை அன்று தென்தமிழ்ப்பயனாயுள்ள திருத்தொண்டத்தொகை முன்பாட ஆரூரண்ணல் முன்திருவாக்கால் கோத்தருளிய முதற்பொருளானார் என்றால் இன்றிவர் பெருமையெல்லாம் இயம்பலாம் எல்லைத்தாமோ எனக்கூட்டுக.

இதனால் அவர்கள்பெற்ற தலைமைத்தன்மையைச் சிறந்தெடுத்துக்கூறியதென்க. அஃதாவது, பாஷைகளில்தலைமைபெற்றது-தமிழ். அத்தமிழில் தலைமைபெற்றதமிழ் - தென் திசையின்கண்வழங்கும் தேவாரதிருவாசகாதிகள். அவற்றுள் தலைமைபெற்றது - திருத்தொண்டத்தொகை. இதற்குமேலொரு தலைமைபெற்றது ஒன்றுமில்லை. இங்ஙனம் தலைமைபெற்ற திருத்தொண்டத்தொகையுள் "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும்அடியேன்" என்று சிறந்தெடுத்தோதியதேயாம்.

அல்லதூஉம், - இவ்வடியை எடுத்துச்சொன்னவர் ஆரூரண்ணல் (தியாகேசர்.) அடியேனென்று சொன்ன அவ்வீசரோ யாவருக்காயினும் அடிமையாய் அவரால் தாம் வேண்டும்பொருள் ஒன்றுமில்லாதவர். அத்தனைச்சிறப்புடைய அவ்விறைவர் அடியேனென்று வேண்டிக்கூறினராதலின் இவர்களே தலைமைசார்ந்தவரென்பதில் ஐயமுண்டோ!

அல்லதூஉம், - தியாகேசராகிய தம்பிரானுக்குத் தோழராகி அவரைத் தம்பொருட்டுத் தூதாகப்போம் வன்றொண்டுகொண்ட வன்றொண்டப்பெருமானும்,தம்பிரான்சொல்லியவாறே தாமும் அடிமை யென்றுசொல்ல விரும்பினராதலினானும் இவர்களே தலை

மையாயினர். ஆகலின் இவர்களன்றித் தலைமைபெற்றார் ஒருவரும் இல்லை என்றார்.

இனி, திருத்தொண்டத்தொகை முன்பாட, ஆரூரண்ணல் முன் திருவாக்கால் கோத்த முதற்பொருளானா என்றதன் அருமையாதெனின்,—

வேதாகமங்களின்சாரமாய் மெய்ஞ்ஞானத்தின் பயனாய் சிவானுபூதிச்செல்வமா யுள்ளது திருத்தொண்டேயாம். அத்தொண்டையுணராது வேதாகமங்களை யாராய் வோர் அவைகளின் சாரத்தையறியார், மெய்ஞ்ஞானிகள் பாசம் நீங்கப்பெற்றும் அதன் பயனைப்பெறார், சிவானுபூதிமான்கள் நிட்டைவரப்பெற்றும் பிராரத்தவாசனையற்றுச் சிவானந்தச்செல்வத்தை யடையார். ஆகலான், வேதாகமஆராய்ச்சிக்கும் மெய்ஞ்ஞானத் திற்கும் சிவானுபூதிக்கும் முதற்பொருளாயுள்ளது தொண்டே என்றாயிற்று. ஆகவே அம்மூன்றினுங் கோத்த முதற்பொருளெனவும், ஆராய்ச்சியும் ஞானமும் அனுபூதியும் உடைய தில்லைவாழந்தணர்கள் அத்தொண்டிற் றலைப்பட்டு வேதாகமங்களின் ஆராய்ச்சி யின் சாரத்தையும், மெய்ஞ்ஞானத்தின் பயனையும், சிவானுபூதிச் செல்வத்தையும் பெற்றாராகலின் முதற்பொருளானா ரெனவுங்கூறினர்.

இனிச் சாரமுதலிய மூன்றையும் எய்துவிக்கத்தக்க அத்தொண்டாவன,—பரமேசு வரன் ஆன்மாவாய் நின்றமுறைமையை வேதாகம ஆராய்ச்சியான் உணரப்பெற்றோர் ஆன்மாவாய்நிற்கும் அவ்விறைவனருளாலல்லது ஆன்மா ஒன்றுஞ்செய்யாதாகவே அவ னிடத் தேதகவுநிகழ்ந்து நிற்கச்செய்யுந்தொண்டு, மெய்ஞ்ஞானமாகிய சிவஞானம் வரப்பெற் றோர் தமது அறிவிச்சைசெயல்கள் பரமேசுவரனது ஸ்ரீபாதங்களையணையுமாறு செய்யுந் தொண்டு, சிவானுபூதிமான்கள் அசிந்திதனாய்நின்ற பதியைச் சிந்திதனாகக்கண்டு வழி படுந்தொண்டு இம்மூன்றுமாம்.

ஆகவே, தகவுநிகழ்ந்து நிற்கச்செய்யவல்லபொருள், ஸ்ரீபாதங்களையணையுமாறு செய்ய வல்லபொருள், பதியைச் சிந்திதனாகக்கண்டு வழிபடச்செய்யவல்ல பொருள். இம் மூன்றுமுதற்பொருளையும் கோத்துள்ளது திருத்தொண்டத்தொகை என்க. ஆகவே ஆரூ ரண்ணல் திருவாக்கால்கோத்த முதற்பொருள் என்றார்.

அல்லதூஉம், ஆரூரண்ணல் வெளியிடக்கருதிய திருத்தொண்டத் தொகையைச் சுந்தரமூர்த்திகள் ஓதியருளுமாறு அம்மூர்த்திகள் வாக்கின்கண் கோத்தாரென்றலு மொன்று.

இப்பாட்டான், யான் தில்லைவாழந்தணர்களது பெருமைமுற்றும் சொல்லலாம் என்னும் அவாவுடையனாயினும், அது முற்றும்பெறுவதாகவில்லை. ஏனெனில், தமிழுக் குப் பயனாயுள்ள திருத்தொண்டத்தொகையைப் பாடுவதற்கு முன்னிற்பவராகிய தில்லை வாழந்தணர்கள் முடிவில்லாதானை முன்னாகவுடையவராகவிருத்தலால் அவர்கள்பெருமை எங்ஙனம் முற்றுப்பெறும். இதுகாறும் இறைவன் பெருமையை முற்றுப்பெறச்செய் தார் ஒருவருமில்லை. அதுபோல், அவர்கள் பெருமையும் முற்றுப்பெறுமாறில்லை. மற் றென்னெனின், முற்றுப்பெறா தென்பதே முற்றுப்பெறக்கூறியதா மென்று கூறப் பட்டது. (கூ)

அகலிடத் துயர்ந்த தில்லை அந்தணர் அகில மெல்லாம்
புகழ்திரு மறையோர் என்றும் பொதுநடம் போற்றி வாழ்க;
நிகழ்திரு நீல கண்டக் குயவனார் நீடு வாய்மை
திகழும்அன் புடைய தொண்டர் செய்தவம் கூறலுற்றாம்.

(எ - து.) இந்நிலவுலகின்கண் எல்லாவுலகத்தவராலும் புகழ்ந்து போற்றத்தக்க மேன்மைபொருந்திய தில்லைவாழந்தணர்கள் என்னும் மூவாயிரம்வேதியர்கள், சிற்றம் பலத்தின்கண் நடனஞ்செய்தருளும் பொதுநடனத்தை எப்பொழுதும் வழிபட்டுவாழ் வாராக; இனியாம் திருநீலகண்டக்குயவனார் என்று சொல்லப்பட்ட தொண்டனார்செய்த அன்புவிளங்கும் தவச்செயலைச் சொல்லுவாம் என்பதாம்.

அகலிடத்து அகிலமெல்லாம்புகழ் உயர்ந்ததில்லை யந்தணர் மறையோர், என்றும் பொதுநடம் போற்றிவாழ்க; திருநீலகண்டக்குயவனார் (ஆகிய) தொண்டர்செய் அன்பு திகழும் தவம் கூறலுற்றாம் எனக்கூட்டுக.

இப்பாட்டான், தில்லைவாழந்தணர்களது முடிவிலாப்பெருமையை யான் முடிவுபடுத் திக் கூறல் பாவமாமென்று அதனையொழித்து யான் என்றும் வாழ்த்திக்கொண்டிருக்க அவர்கள் எப்பொழுதும் வாழ்வார்களாக. இனி திருநீலகண்டநாயனார் தவத்தைச் சொல்லுகின்றே னென்று கூறப்பட்டது. (கம)

தில்லைவாழந்தணர் புராணம் முற்றிற்று.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அரசிதாயநம:

திருத்தொண்டத்தொகை.

"தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"

தில்லைவாழ் அந்தணர் என்றதனால் நடராஜமூர்த்திக்கு முதல் அடியாராகும் சிறந்ததனால் அம்மூர்த்தியோடொன்று மெண்ணப்பட்ட ஏனைய அந்தணர்களுக்கும், அடியேன் என்றதனால் அடிமையாயுள்ளேன் என்றதாம்.

இவ்வுண்மைதோன்றவே,—"ஆதியாய் நடுவுமாகி" "கற்பனை கடந்தசோதி" என்னும் இவ்விருபாசுரத்தாலும் நடராஜமூர்த்தியை வணங்கியும் "போற்றிநீள் தில்லைவாழந்தணர் திறம்புகலலுற்றேன்" என்று ஏனைய அந்தணர் திறமெல்லாம் விதந்தெடுத்தோதி "இன்றிவர்பெருமையெம்மால் இயம்பலாம் எல்லைத்தாமோ" என்று அவர்களைப் போற்றியும் விளக்கினார்.

* திருத்தொண்டர் அந்தாதி.

செப்பத் தகுபுகழ்த் தில்லைப் பதியிற் செழுமறையோர்
ஒப்பப் புவனங்கள் மூன்றினும் உப்பரின் ஊர்ளித்த
அப்பர்க் குழுகந் திருநடக் கூத்தர் பிறையணிந்த
துப்பர்க் குரிமைத் தொழில்புரி வோர்தமைச் சொல்லுதுமே.

தில்லைப்பதியிற் செழுமறையோர் என்றதனால் ஏனைய வைதிக அந்தணருள் ஒருவராக எண்ணப்பட்டவரன்று, வைதிகசைவராகிய தீக்ஷித அந்தணர்கள் என்றும், செப்பத் தகுபுகழ்த்தில்லை என்றதனால் அத்தீக்ஷிதர்கள் வசிக்கும் இடமும் அத்தில்லைப்பதியே என்றும், பிறையணிந்த துப்பர்க்கு உரிமைத்தொழில்புரிவோர் என்றதனால் அவர்கள் செய்யும்பணி நடராஜமூர்த்திக்குரிய அம்பலத்திருப்பணியென்றும், இப்புராணத்திற்குரிய தலைவர்களையும், அவர்கள் பதியையும், அவர்கள் தொண்டையும் விதந்து இத்திருப்பாட்டாற் கூறப்பட்டதென்க.

† தில்லைவாழந்தணர் புராணசாரம்.

நல்லவா னவர்போற்றுந் தில்லை மன்றுள்
நாடகஞ்செய் பெருமானுக் கணியார் நறபொரு
தொல்லைவான் பணியெடுத்தற் குரியார் வீடும்
துறந்தநெறி யார்தொண்டத் தொகைமுன் பாட
தில்லைவாழ் அந்தணரென் றெடுத்து நாதன்
செப்பும்அருள் உடையார்முத் தீயார் பத்திக்
கெல்லைகாண் பரியாரப் புலகிற் றாமே
வியந்துளார் எமையாள வாய்ந்து ளாரே.

* நம்பியாண்டார் நம்பிகள் அருளியது. † உமாபதிசிவம் அருளியது.

(இ-ள்) தில்லைவாழந்தணர்கள் தில்லைமன்றுள் நடனஞ்செய் பெருமானுக்கு அணுக்கராயும், நற்பொற்றொல்லைவான் [illegible] ராயும், [illegible] நெறியாரயும், தொண்டத்தொகை முன் [illegible] தில்லைவாழந்தணர் [illegible] அருள் உடையராயும், [illegible] உலகில் [illegible] தன்மையத்த ஞதல், [illegible] பாகவே பசங்களினின்று [illegible] முடைமை [illegible] குள்ளாராய் [illegible] அவர்களை [illegible] தென்திசை [illegible] ணித்திறத்தை [illegible] தாம்.

[illegible] வருமாறு:—

[illegible] தில்லைவாழந்தணர்கள் [illegible] நற்குரி [illegible] ஆறுந் தன்மை [illegible] ளானவர் [illegible]

[illegible] கூறப் பட்டது.

[illegible] இறை வன் [illegible] எக்கிமர்கலத் தொழில் [illegible] தில்லைவாண்பணிமை [illegible] தகுதுயா வுட [illegible] யாவரும் எண்ணி [illegible]

[illegible] தன்மை கூறப் [illegible]

[illegible] சிவானந் தா [illegible] அம்மையனறு [illegible] செய்யவல்ல திறமுடைய [illegible] அவர்களை [illegible]

இதனால் [illegible] தன்மை கூறப்பட்டது.

‡ பெரியபுராணம் [illegible] வில் "எம்மையெல்லா வர்கள் யாரும் [illegible] என்றே. அம்மையானுமவான் அவர்களில் ஒருவன் [illegible]" என வருதலாற்காண்க.

§ திருப்பாசுரத்தாண்டகத்தில் "நாவாரநம்பனையே *** எண் தணத்துமினாயே." என்றனையாற்காண்க.

¶ திருஞானசம்பந்த மூர்த்திகள் புராணத்தில் "அண்டத்திறைவர் அருளால் நீணி தில்லை, மண்டத்திருந்து வாயிரவர்களும், தொண்டத்தகையை கணநாதராய்த் தோன்றக்கண்டு" எனவருதலாற்காண்க.

அவ்வுணர்விற்குள்ளாக்கவே, அன்பின் தொகுதியெல்லாம் உடையாராகிய தொண்டர்களுடைய தொகையை முற்றுணர் வுடையானாகிய "ஆரூரண்ணல், அன்று வன்றொண்டர் தம்மைத்திருத்தொண்டத்தொகை முன்பாட முன்திருவாக்கால்கோத்தருளத்" தகுதியுடைய தமது முற்றுணர்விற்குள்ளாக்கினன்.

இதனால் முற்றுமுணர்தல் என்னும் நான்காம் குணத்துக்குள்ளாக்கிய தன்மை கூறப்பட்டது.

அவ்வுணர்விற் குள்ளாக்கவே, அவர்கள் "முதற்பொருளானார்கள்" ஆகவே, "மன்னுயிர் அருளால்மல்க, வருமுறை யெரிமூன் றோம்பு(வதாகிய) தருமமே பொருளாக் கொண்டு" அம்முத்தீயை ஓம்புவதற்கு அவர்களைத்தமது இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதலாகிய குணத்துக் குள்ளாக்கினன்.

இதனால் இயல்பாகவே பாசங்களில் நின்று நீங்குதல் என்னும் ஐந்தாங் குணத்துக் குள்ளாக்கிய தன்மை கூறப்பட்டது.

அக்குணத்துக்குள்ளாக்கவே, * இவர் நம்மவர், பிறர் என்றெண்ணவரும் பாசஇயல்பினின்றும் நீங்கப்பெற்று யாவரையும் தம்மவராகவே எண்ணவரும் எண்ணத்துக்குள்ளாக்கி முத்தீயை வளர்த்திவரச் செய்து அவ்வளவில் நிறுத்தாது பத்திக்கு எல்லைகாண் பரியராகச் செய்யவல்ல தமது பேரருளுக்கு உள்ளாக்கினன்.

இதனால் பேரருளுடைமை என்னும் ஆறாங்குணத்துக் குள்ளாக்கிய தன்மை கூறப்பட்டது.

அவ்வருளுக்குள்ளாக்கவே, அவர்கள் "ஞானமே முதலாநான்கும் நவையறத்தெரிந்து" மிக்காராகி, தமக்குவாய்த்துள்ள எல்லைகாண்பரிய பத்தியினால் சரியை கிரியைகளைச் செய்தலாகிய தானத்தையும் தவத்தையும் தகுதியின் பகுதியாகச் சார்ந்து, அதனால் பாசக்ஷயம் உண்டாமாறு கருத, அவர் கருதியவாறே அஃதுண்டாக அவர்களைத் தமது முடிவிலாற்றலாகிய குணத்துக் குள்ளாக்கினன்.

இதனால் முடிவிலாற்றலுடைமை என்னும் ஏழாங் குணத்துக்குள்ளாக்கிய தன்மை கூறப்பட்டது.

இவ்வெழுவகைத் திறத்திற்குள்ளாக்கவே, பாசக்ஷயம் உண்டாய் அவ்வேழு குணத்துள்ளும் ஆக்கிய இறைவனது ஸ்ரீபாதங்களை யணையப்பெற்றாராயினர். ஆகவே "மானமும்பொறையுந் தாங்கி மனையறம் புரிந்து வாழ்வாராய்" அதனால் "ஊனமேலொன்றும் இல்லா" ராய் ஸ்ரீபாதங்களை யணையப்பெற்ற காரணத்தால் எட்டாவதாகிய வரம்பிலின்பமுடைமை என்னும் அக்குணத்துள்ளாராய் ஒப்பிலா வுபபுடையராய் வாழ்வாராயினர்.

இதனால் வரம்பிலின்பம் உடைமை என்னும் எட்டாங்குணத்தை யுடையராகிய தன்மைகூறப்பட்டது.

இனி இவற்றின் தொகைப்பொருள் வருமாறு:—

1. முத்தான்மாக்கள் தமது ஆன்மாவின்கண் பரமசிவன் அறிவுருவாய் அருவுருவமாய் விளங்கித் தனது ஓங்கொளியால் தமதறிவைப் பிரகாசிக்கச்செய்யும் உபகாரத்தை உணர்ந்து உள்ளம் உருகப்பெற்று, அங்ஙனம் பெற்ற விசேடத்தால் உருகும் நிலையைத் தந்தது அறிவின்கண் அறிவாய்நிற்கும் இறைவன் உருவாய்வந்தன்றோவென்று அவ்வுருவமாகிய சகளத்திருமேனியின்கண் ஆசையுடையவராய் அத்திருமேனியை அணுகுவராயின் அவ்விறைவனும் அவர்கள்பால் உருகும் உள்ளத்தனாய் தான் அவர்கள் வயத்தனாய் அவர்களைத்தன்வயத்தராக வாழச்செய்வனென்னும் உண்மையை விளக்கியவாறாம்.

2. தன்வயத்தராகவே அவர்களை அருள்வயத்தராக்கி அருளுருவாய் நிற்கச்செய்து மாயாவுருவச் செயல்களை அவரினின்றும் நீக்கித் தனது அருளுருவாகிய திருமேனிக்

* திருநாளைப் போவாரைத் தீக்ஷிதர்களைக்கொண்டே தீயைவளர்த்த அதினின்றுந் தோன்றச்செய்து தம்மோடு சேர்த்துக்கொண்ட வுண்மையாற்காண்க.

குரிய பணிகளையே செய்யச் செய்யும் தூயவுடம்பினராகச் செய்வனென்னும் உண்

3. தூயவுடம்பினராய் அருட்பணியிற் றலைப்படவே, அப்பணி சிவமா யமர்ந் திருக்கச் செய்யவல்ல அன்பையே பேறாக எண்ணி அதனையே பெறவிரும்பச்செய்யு மன்றி அவர்களை அம்மையிற்பெறும் வீட்டை வேண்டச்செய்யா; ஆகவே பந்தம்விடுதல் வீடடைதல் எனப் பசுகுண உணர்வின்செயலால் எண்ணவரும் செயற்கை உணர்வு அற்று, சிவஞானச் செயலுக் குள்ளாகும் இறைவனது இயற்கையுணர்வின ராவரென் னும் உண்மையை விளக்கியவாறும்.

4. இறைவனது இயற்கையுணர்வினராகவே, அவ்வுணர்வு ஆன்மாவாகிய தமக்கு வரப்பெற்ற அம்முத்திக்காலத்தும் தம்மை ஆன்மாவேயென்றும் நாம் சிவமானது சிவ னருளாலேயன்றி நமது போதமுற்சியாலன்றென்றும் உணர்த்தக்க உணர்ச்சியைத்தந்து நாம் சிவம் என்னும் அஞ்ஞானமாகிய மோகக்கொடியை யறுத்து என்றும் ஆன்மநிலை யையுடைய நாம் என்றும் தொண்டரே யாமென்னும் முற்றுணர்வையுடையராகச் செய் யும் உண்மையை விளக்கியவாறும்.

5. முற்றுணர்வை யுடையவராகவே, அவ்வுணர்வான் எல்லாவுயிரும் தம்முயிர் போல் வாழச்செய்வதற்கு முத்தீயை வளர்க்கும் செயலை மேற்கொள்ள எமது என்னும் பாசத்தினின்றும் நீங்கினவரென்னும் உண்மையை விளக்கியவாறும்.

6. பாசத்தினின்று நீங்கினவராகவே, அதனால் உயிர்களைப் பரிபாலித்தற்கு இறை வனது பேரருளுடைமையை யுடையவராயினர் என்னும் உண்மையை விளக்கியவாறும்.

7. பேரருளுடையவராகவே, சரியையாதிகள் ஞானமெய்தற்குச் சாதனமாயுள்ள வையென்று அவ்வளவில் விடாது அந்தஞானத்தால் நீக்கப்படும் பாசநீக்கத்திற்கும் அந் நீக்கத்தில் எய்தற்பாலதாகிய சிவப்பேற்றிற்கும் அவைகளே இன்றி அமையாவென்னும் உண்மையுணரவந்து ஞானமெய்திய பின்னரும் சிவப்பேறெய்திய பின்னரும் எல்லை யில்லாத பக்தியுடையராய் இயற்றவல்ல முடிவிலாற்ற லுடையராயினரென்னும் உண் மையை விளக்கியவாறும்.

8. முடிவிலாற்றல் கைகூடப்பெறவே, அவ்வாற்றலுக்கு ஏற்றவாறு அவர்கள் வரப் பிலின்பமுடையராதல் மிக எளிமையென்னும் அவ்வுண்மையும், அவ்வுண்மையான் இவர் களே ஒப்பிலாப் புகழுடையராய் உலகெலாம் போற்ற வாழ்வாரென்னும் உண்மையும் விளக்கியவாறும்.

தில்லைவாழந்தணர்புராணசாரம்.

முற்றிற்று.



உ

திருச்சிற்றம்பலம்.

[illegible]

திருநீலகண்ட நாயனார்புராணம்.

வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்;
மாதொரு பாக நோக்கி மன்னுசிற் றம்ப லத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்.

[illegible] நாயனார்) சிவசம்பத்தினராகிய [illegible] தில்லை [illegible] [illegible] ஆதியின்றி [illegible] இடப்பாகத்தில் [illegible] [illegible] நோக்கியாகிய [illegible] ஆதியும் முடிவுமில்லாத அற்புதமாகிய [illegible] தனிக்கூத்தைச் செய்தருளுகின்ற [illegible] திருவடிகளை [illegible] வழிபடுதலாகிய நலத்தின்மிக்கார் [illegible].

[illegible]

[illegible] ஆகிய [illegible] [illegible] இருவினைகள் [illegible] இருவினையொப்பு [illegible] மலபரிபாகம் [illegible] [illegible] ஆதியும் ஆதிசெய் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அநாதிச் சிறப் [illegible] [illegible] அறிவில்லாதவனை [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] சேதனர் [illegible] [illegible] எல்லாச் [illegible] சத்தித்தன் [illegible] இறைவனாகிய தம்முருவினை [illegible] [illegible] பஞ்ச கிருத்திய [illegible] அவ்வண்ணம் படி செய்விக்கச் [illegible] [illegible] நோக்கி எனவும், [illegible] அவாவுடைய ராகிய சிவகாமியாருக்கு [illegible] செய்யத்தொடங்கிய பஞ்ச கிருத்தியங்களை அநாதியாயுள்ள ஆன்மாக்களின் பொருட்டாகலான் ஆதியு முடிவுமில் லாத கூத்து எனவும், அக்கூத்தால் ஆன்மாக்களையெல்லாம் ஆணவபந்தத்தை யொழிக் கும் மாயாமலகாரியபந்தத்தால் தளைப்படுத்திக் கன்மமலகாரிய பந்தத்தான் இருவினை

மெய்யப்பும் மலபரிபாகமும் வரச்செய்து அது வந்தபின்னர் பலமெசாரூபத்தின் புறைந்து அருபசொரூபியாய்நின்ற தன்மையினின் மெய்யாகிய முத்தான்மாக்களாய்ச் சிவசொரூப தேமஜாந்திகளாயவா புசமெசய்தலின அற்புதக்கூத்தெனவும், அக்கூத்து, நல்லுரை வேயிருக்க பெத்தான்மாக்களுக்கு அபரமோகமும் முத்தான்மாக்களுக்குச் சிவபோகமாகிய பரபோகமும் விளைவிக்கும் அற்புதத்தைக் காட்டலான் ஆனந்தக்கூத்தெனவும், இங்ஙனமான தனிக்கூத்தின் உண்மையை யுணராதாரும், பெருகமுத்திப் பயனைக் கருதிச்செய்யும் இந்த ஆனந்தநடனத்தைத் தெரிசிக்கப்பெறுவாராயின் அவர்க்கும் வேண்டியவருள் புரிவா னென்று வீரக்கழல் ஒலித்தலான் நாதமூர்க்கழல்கள் வாழ்த்தி வழிபடு நலத்தின்மிக்கார் எனவும் கூறினார்.

வேட்கோவர் குலத்துவந்தார் என்றதனுலே அக்குலத்துக்குவரும் கன்மமுடை யார் ஆகலான் அக்கன்மந்தொலையுமாறு அக்குலத்தில் வந்தாரென்பதன்று; அக்குலத்துப் பிறந்துள்ளாரும் இனிவருவாரும் ஆகிய ஆன்மாக்களெல்லாம் உய்யுமாறு வந்தவரென் பது தோன்ற உதித்தார் பிறந்தார் என்னுது வந்தாரென்றார். சிவகாமியார் உலகினுக்கு அம்மையாராகலான் உயிர்களுக்குள்ள மலப்பிணியைப் போக்கவும், பின்னர் அவ்வான் மாக்கள் சிவசொரூப வாழ்வைப் பெறவும் செய்யத்தகுந் திருத்தியத்தில் நோக்குடையரா யிருத்தல் அவரது கடமையாகலானும், அந்நோக்கின்படியே செய்யவேண்டிய செயலில் ஈடுபாடுடையவன் அப்பெருமானாகலானும், அவ்வுண்மையைத் தோன்ற மாதைநோக்கி என்றார். ஆன்மாக்கள் எண்ணிலவாகலினாலும், அநாதியாயுள்ளனவாகலினாலும், அவ்வான்மாக் களைக் குறித்தகிருத்தியமும் என்றுமிருக்குந் தன்மைத்தாகலினாலும் அந்நிலை தோன்ற - ஆதியுமுடிவுமில்லாதகூத்தென்றார். "படைக்கலமாக உன் திருவடிக்கீழ்ச் சிறுன்றல், கிடைப்பதாய் ஆகலான், மறைநிறுத்தங் கிளர்தவம், தியானம், நிட்டை, நடபாமுடிந்து வாய்ந்த நல்லவர்க்கு அடித்தலைசான்றல் கூடும் எவர்க்கு அரிதாகும்" என்றபடி அரியதினும் அரியதாகாது எளியதினும் எளிதாய் எளிதில் காணுமாறு செய்யும் நல முடையது நடராஜனைக் கண்டு வாழ்த்தலும் வணங்கலுமாகிய வழிபாடே என்றுணர்ந்து அந்நெறியைக் கடைபபிடித்தவரென்பது தோன்ற கழல்களைவாழ்த்தி வழிபடுநலத்தின் மிக்கார் என்றார்.

இத்திருப்பாசுரத்தான் தில்லையின்சிறப்பு இதனுலேதாயென்பதும், அதன்கண்நிலை யில்வாழும் இறைவனுடைய நடனச்சிறப்பு இத்துணைத்தாமென்பதும், இவையனைத்திற் கும் காரணமாய்நின்ற நமதன்னையினது சிறப்பு இத்துணைத்தாமென்பதும், அன்னை யாரது அருட்குறிப்பும் அக்குறிப்பின் வழியே அப்பெருமானாற்றும் அருட்செயலும் இத்துணைத்தாமென்பதும், உலகம் உணர்ந்துய்யவும் வேட்கோவர் குலம் உய்யவும் வந்தவர் இந்நாயனாரெனபதும், இறைவனார்பால் இவர்கொண்ட வழிபாடு இத்துணைச் சிறப்பாம் என்பதும் கூறப்பட்டது. (அ)

பொய்கடிந் தறத்தின் வாழ்வார்; புனற்சடை முடியார்க் கன்பர்;
மெய்யடி யார்கட் கான பணிசெயும் விருப்பில் நின்றார்;
வையகம் போற்றும் செய்கை மனைஅறம் புரிந்து வாழ்வார்;
சைவமெய்த் திருவின் சார்வே பொருள்எனச் சாரும் நீரார்.

(எ - து.) பொய்மையாகிய போகங்களைத்தரும் பசுதருமங்களைச் சிறிதும்செய்ய மனத்தினுங்கருதாது மெய்ம்மையாகிய சிவபோகங்களைத்தரும் பதிதரும நெறிகளில் நிலைபெற்ற மனமுடையராய் வாழ்கின்றவர், கங்கையைத்தரித்துள்ள சடைமுடியுடை யாருக்கு அன்பராயுள்ளவர், தம்மைப்போலும் பசுதருமத்தைக் கடிந்து மெய்யான சிவ தருமத்தில் தலைப்பட்ட உண்மையடியார்களுக்கு உரித்தாயுள்ள பணியைச்செய்யும் விருப்பில் நிலைபெற்றிருப்பவர், உயர்ந்தோரால் புகழ்ந்துரைக்கப்பட்ட அறங்களை யுடைய இல்லறத்தை விடாதுசெய்து வாழ்கின்றவர், மெய்த்திருவின் சார்பினையுடைய

சைவசமயச்சார்பே தம்மால் அடையத்தகும் பொருளென்று அப்பொருளைச் சார்ந்திருக்கும் தன்மையுடையவர் என்பதாம்.

புனற்சடைமுடியார்க் கன்பராகலின் பொய்கடிந்து அறத்தின்வாழும் வாழ்வையும் மெய்யடியார்கட் கானபணிசெய்யும் விருப்பில் நிற்கும்நிலையையும் உடையராயினர். அங்ஙனம் பொய்யைக்கடிந்த அறத்தினையும், மெய்யனாகிய இறைவனது திருமேனியே இதுவெனக்காட்டவல்ல மெய்யினையுடையராகிய அடியார்கட்கு உரியபணியையும் ஒருபொழுதன்றி எப்பொழுதும் ஒழியாது செய்துவருவதற்கு இல்லறநெறி துணையாவதல்லது வேறுநெறி துணையாகாவாகலின் மனையறம்புரிந்து வாழ்வாராயினர். மனையறம் புரிந்து வாழும்நெறியைக் கடைப்பிடிக்கவே, அந்நெறி சிவச்செல்வம் நீங்காதிருக்கும் அருட்செல்வமாகிய மெய்ப்பொருளைச் சார்ந்திருக்கும் தன்மையைச்செய்யுமாகலின் அதனையே சார்ந்திருக்குந் தன்மையராயினரென்க.

புனற்சடைமுடியார்க்கு அன்பராயுள்ளார் ஊழ்வகையான் தமது குடிகெடினும், அக்குடி வாழ்வதற்குப் புரந்தரன் மால் அயன் முதலாயினாருடைய வாழ்வைவிரும்பி அதற்குரிய தருமங்களைச் செய்து அவ்வாழ்வைக் கொள்வோமென்று கருதி அப்பசு தருமத்தைக் கொள்ளாது சிவதருமத்தையே கொள்வார். ஏனெனின் அவ்வாழ்வு அறியாமையைப் பெருக்கி நானெனவரும் ஆணவத்தை யெழுப்பிப் பெருந்துன்பத்துக் கிடஞ்செய்யும் சிற்றின்பத்தைக்காட்டி அச்சிற்றின்பத்துக் குரிய பதார்த்தங்களை எனதெனப் பற்றச்செய்து பற்றற்றான் பற்றினைப் பற்றவொட்டாது அவனுக்கு வேறாக்கிச் சேவனிலையில் நிறுத்தி, எனதெனப்பற்றிய பொருள்கள் தனதல்லாதனவாய்ப் பொய்ப்பட்டுப்போகத் தன்னை என்றும் பிறப்பிறப்பிலாழ்த்தித் துன்புறச் செய்யுமாகலின், **பொய்கடிந்து** என்றார். நானென ஓங்கிவரும் ஆணவத்தையடக்கி, எனதெனப் பற்ற வரும் மமகாரப்பகைப்பை யொழித்து, இவ்விருவகைப் பற்றினையும் பற்றறத்துடைத்தற்கு இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்பற்றைப் பற்றச்செய்து, இருவகைப் பற்றாலுண்டாகிய மனக்கவலையை மாற்றிப், பொருளின்பங்களைக் கடவெனக்கூட்டி, அவற்றால் நுகரப்படுவனவெல்லாம் நுகர்வித்து, அங்ஙன நுகருங்காலத்து நுகரச்செய்த இறைவன்கருணையை நினைந்து நினைந்து அவன்றாளை வணங்கச்செய்து, பின்னர் பிறவாநெறியைக் கூட்டும் பேரின்பத்தைக்காட்டி, அவ் வரம்பிலின்பமுடையானாகிய இறைவனடிகூட்டி, அங்கு இறுமாந்திருக்கச்செய்வது சிவதருமமாகலின் **அறத்தின்வாழ்வார்** என்றார்.

நஞ்சைநிலத்தில் இடுவதாகிய பிராணதாரமெனப்படும் நெல்லைப் புல்லியபயிர்களை விளைவிக்கும் ஆற்றலுடைய புஞ்சைநிலத்தில் இட்டால் அவை தோன்றும்வகை இன்றியொழியுமாபோல், பொய்த்தேவரை யுள்ளத்தே புதைத்துவைத்து மால்கொண்டு அதனைவெளிகாட்டாது மெய்த்தேவனை யுணர்ந்தார் இவரென உணர்த்தவல்ல சிவவேடமாத்திரம் தேகத்திற்றாங்கி உண்டிப்பொருட்டாய் உலாவிவருபவரான பொய்யடியார்கட்கு ஆனபணிசெய்யின் அவற்றான்விளையும் சிவபோகம் விளையாது பாழ்பட்டுப்போமாகலின் அப் பொய்யடியார்களுக்குச் செய்யாது மெய்யடியார்களை நோக்கும் நன்னோக்கத்தில் நிற்கும் நிலையுடையவராகலின், **மெய்யடியார்கட்கான பணிசெய்யும் விருப்பில் நின்றார்** என்றார். பிறப்பிறப்பிலாழ்த்தும் சிற்றின்பானுபவத்துக்கே மனைவிமக்கள் முதலாயினோர் பலர் வேண்டுமாயின் பிறவாநெறியினிறுத்தும் பேரின்பானுபவத்துக்கு அவரெல்லாம் இல்லாதொழியின் அவ்வின்பம் எங்ஙனம் முற்றுப்பெறும்; பெறாவாகலின் அது முற்றுப்பெறுமாறு செய்விக்கும் நல்லறமுடைய இல்லறம் இன்றியமையாத பேரறமாகலின், **மனையறம்புரிந்துவாழ்வார்** என்றார். "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" எனவும், "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" எனவும், "அறத்தாற்றின் இல்வாழ்க்கையாற்றிற் புறத்தாற்றிற், போய்ப் பெறுவதெவன்" எனவும் "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப், பண்பும்

பயனுமீது" எனவும மற்றும்பலவாற்றானும் பெரியோரெல்லாம் புகழ்ந்திருத்தலின் வையகம்போற்றுஞ் செய்கை யென்றார். பெரியோரால் போற்றப்படுஞ், செயலுடையது இல்லறமாகவே அவ்வில்லறத்தின்கணின்று செய்யும் அவ்வரிய செயலைச் சைவ மெய்த்திருவின் சார்பினையுடையார்மாட்டுச் செய்யப்பெறின் அச்சார்பினையுடையார் தாம்பெறும் பொருளாக அடையப்படும் யோகஞானங்கள், தாம்பெறும் பொருளாகத் தாமேவந்து சாருமெனச் சைவமெய்த்திருவினையுடைய அடியராகிய விருந்தினரை எதிர் நோக்கிச் சார்ந்து அவர் வேண்டியதளிக்கும் பெருந்தன்மை யுடையராகலின் சைவ மெய்த் திருவின்சார்வே பொருளெனச் சாருநீரார் என்றார். சைவமெய்த்திருஎன்றது திருநீறுங் கண்டிகையுமாம், இறைவனால் கொடுக்கப்படும் பொருள்களாகிய யோக ஞானங்கள் அத்திருநீறு கண்டிகை என்னும் இரண்டையும் பொருளாகச்சாராதார்க்கு அவ்விரண்டுபொருளுஞ் சாராதாகலின் சைவமெய்த்திருவின் சார்வே பொருளெனச் சாரும் நீரரென்று அவரது சைவகோலத்தை விசேடித்துக்கூறியதுமாம்.

இத்திருப்பாசுரத்தால் நம்பெருமானார் தனிக்கூத்தாடும் நாதனார் கழல்கள்வாழ்த்தி வழிபடும் நலத்தின்மிக்கார் என்றதை விதந்துகூறியதாமெனக்க.

அஃதாவது, பொய்ம்மைபாட்டொழியும் பசுதருமத்தைக்கடிந்து பதிதருமத்தை மேற்கொண்டாரென்பார் அறத்தின்வாழ்வாரென்றார். பதியைநாடி அப்பதிதருமத்தைச் செய்தவாறே வேறொருகடவுளரைக் கனவிலும் நினையாரென்னும் அவரது நன்னெறி தோன்ற புனற்சடைமுடியார்க்கன்பரானார் என்றார். புனற்சடைமுடியார்மாட்டு அன்பு கூடுதல் அவனடியார்மாட்டு அன்புகூடினாலன்றிக் கூடாதென்பதுந்தோன்ற மெய்யடியார்கட்கான பணிசெயும் விருப்பின்மிக்கார்என்றார். இடத்தானும் பொருளானும் ஏவலானும் வேறுஎவ்வாற்றானும் அடியார்வேண்டுவன வானவற்றைக் கொடுத்தற்கு இல்லறமல்லது வேறு நல்லறமின்றென்பது தோன்ற மனையறம்புரிந்து வாழ்வாரென்றார். வையகம்போற்றும் செய்கைமனையறம்புரிந்து வாழ்வாரென்றதும், மனையறம்புரிந்து வாழ்வார்க்கு யோகஞானங்களாகிய அதிசயமுடைய அரியபொருள்கள் கைகூடாதென்று கூறுங்கூற்று வெறுங்கூற்றுமென்பதும் தோன்ற சைவமெய்த்திருவின்சார்வே பொருளெனச்சாரும் நீரரென்றார்.

இங்ஙனம் எடுத்துக் காட்டியவையெல்லாம் நலத்தின்மிக்கார் என்றதனை இன்ன இன்னவகையாலென்று வகுத்துக் காட்டியதாமெனக. (உ)

> அளவிலா மரபின் வாழ்க்கை மட்கலம் அமுதுக் காக்கி
> வளர்இளந் திங்கட் கண்ணி மன்றுளார் அடியார்க் கென்றும்
> உளமகிழ் சிறப்பின் மல்க ஓடளித் தொழுகும் நாளின்
> இளமைமீ தூர இன்பத் துறையினில் எளியர் ஆனார்.

(எ - து.) இன்ன அளவாகிய சிறப்பினையுடையது என்று அளவிட்டுக் கூறப்படும் அளவினைக்கடந்த இல்லறத்தைநடத்தும் மரபினை மேற்கொண்டுள்ள இல்வாழ்க்கையைத் தம்மரபுக் கேற்ப நடத்தற்குத் தொழிலாக ஏற்பட்டுள்ள உண்பாருண்ணும் அளவுக்கு ஏற்றவாறெல்லாம் மண்ணால் வினையப்படும் கலங்களைச்செய்து வருவதோடு, சிற்சபையின் கண்ணுள்ளாராகிய இறைவனடியார்கள் திருவமுதுண்ணற்கு உரித்தாகிய திருவோட்டினையும் வினைந்து அத்திருவோடுகளை வளருஞ்சந்திரனுக்கு வளர்ச்சியைத்தந்து, தான் இளம்பிறையாகவே தவழும் இயல்பினையுடைய பிறையை மாலையாகத்தரித்துள்ள சபேசரது அடியார்களுக்கு நாடோறும் கொடுத்துவரும்நாளில், (பேரின்பத்துறையை யுடையாராகிய நம்பெருமானாராகிய நாயனார்க்குச் சிற்றின்பானுபவத்துக்குரிய) இளமைப்பருவமானது அதிகரித்துவர, அச்சிற்றின்பத்துக்குரிய காமத்துறையில் மிக எளிமையராய் விளையாடும் ஆடலுக்குரியராயினார் என்பதாம்.

பிரமசாரி வானப்பிரஸ்தன் சந்நியாசி என்றும், களைகணுவாராற் றுறக்கப்பட்டவர் வறுமையுடையவர் ஒருவருமன்றித் தன்பால்வந்திறந்தவர் என்றும், தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் என்றும் எண்ணப்பட்டவரெல்லாம் தத்தமக்குரிய அளவில்நின்று தந்தமமைக்காத்துக்கொள்ளும் தன்மையுடையவருமன்று, ஒருவரையொருவர் காக்குந்தன்மையுடையவருமன்று. இல்வாழ்க்கை என்னும்மரபு-மேற்சொல்லிய யாவரையும் காத்துத் தன்னையுந் தானேகாத்துக் கொள்ளும் இயல்புடையதென்னுஞ் சிறப்புத்தோன்ற அளவிலாயாபின்வாழ்க்கை எனவும், இங்ஙனமான அளவினைக்கடந்த பெரிய அறத்தை மேற்கொண்ட இவ்வரிய இல்வாழ்க்கையை இப்பெருமானார் எத்தொழிலால் வரும் ஊதியத்தைக்கொண் டியற்றினரென்னும் அத்தொழிலின் சிறப்புத்தோன்ற மட்கலத்தாலாக்கி எனவும், புகழ் புண்ணியங்களுக் கேதுவாகிய அவ்வறங்களெல்லாம் அத்தொழிலாலேயே செய்வதுபோல் ஞானநெறிக் கேதுவாகிய சிவதருமத்தையும் 'அம்மட்கலத்தொழிலாலேயே செய்தாரென்னும் அச்சிறப்புத்தோன்ற மன்றுளார் அடியார்க்கு நிளைந்து எனவும், பொருட்சிறப்பென்னும் இரண்டறங்களையும், என்றும் விடாது ஊக்கப்பாட்டுடன் செய்யும் அவ்வொழுக்கத்தின் சிறப்புத்தோன்ற எற்றும் வளர்கிற்பீந்து ஒழுகுநாளில் எனவும், இவ்வாறான அறநெறியில் வன்மைபெற்றுள்ள நம்பெருமானார் தமக்கடுத்திருக்கும் இளமைப்பருவத்தைச் சார்ந்துவந்த சிற்றின்பத்துறையில் வன்மைபெற்றிலாது எளிமையா யிருந்தனரென்னும் அவ்வருமைதோன்ற இளமைமீதூர இன்பத்துறையினல் எளியரானார் என்றுங்கூறினர். அளவிலாமட்கலம் அமுதுக்கு ஆக்கி எனவும் ஓர் பாடம். அஃதாவது, இந்நாயனார் நடராஜமூர்த்திக்குத் தொண்டு மூவாயிரம் தீக்ஷிதர்கள் திருமாளிகைகளுக்கும் நிவேதனத்துக்குரிய பாத்திரங்களை நாடோறும் கொடுத்துவரும் பெருந்தொழிலாளர் எனப்புராணத்துள் கூறப்பட்டுள்ளதால் அப்பாடங் கொள்ள

பாசபத்தால் அளவிலா அளவினையுடைய இல்லறதருமத்தையும், சிவதருமத்தையும், அளவினுள் மிகச்சிறிய அளவினையுடைய சிறுதொழிலால் வரும் ஊதியத்தால் விடாதியற்றி வந்தாரென்றும், அவரது அருமையும் ஆற்றலும் இத்துணைச் சிறப்பினவென்றும், எத்தகைத் தவவிரத ஞானமுடைய முதியோரானும் தடுத்தற்கரியராய் எளியராதற்கின்றி யாழ்ந்து வேதாகமங்களிற் கூறப்படும் ஆணைகளைக்கடந்து அக்காமத்தின் வழியே போகின்றவராயிருக்க, இப்பெருமானார் அவ்வின்பத்துறையில் மனத்தைவிட்டு அதிலாழச்செய்யாது உடம்பளவில் நிறுத்தி அதனை அனுபவித்துவந்த மனவலி இத்துணைச்சிறப்புடைத்து என்றும் அறிவுறுத்தியவாறும். இவரது மனவலியை "மனத்திலுந்திண்மைடன் எனவரும் அவ்வுரையாலுந் தெளியக் கிடக்கின்றமைகாண்க. அதுநோக்கியே ஈண்டு எளியரானார் என்றார். உளபகிப் சிறப்பின்மல்க ஓடளித்து என்றதனால் எவ்வகைத்தான பதார்த்தங்களிலும் மகிழ்வுறும் விருப்பினைத் தடுக்கும் வீரராகிய அடியார்களுக்கு இவர்கொடுக்கும் சிறப்புடைய ஓட்டில் தம்பாலுள்ள அன்பு காணப்படுதலாலும் அவ்வோட்டில் தாம்கொள்ளத்தகும் அன்பும் இத்துணைத்தென காணப்படுதலாலும் அவ்வோடும் மண்ணுருவாயன்றி அன்புருவாகவே காணப்படுதலாலும் அச்சிறப்பினைப்போக்க அங்ஙனங் கூறியதென்க. (௫)

அளர்தங்கள் மனைவி யாரும் அருந்ததிக் கற்பில் மிக்கார்;
புவனங்கள உய்ய ஐயர் பொங்குநஞ் சுண்ண யாம்செய்
தவம்நின்று தடுத்த தென்னத் தகைந்துதான் தரித்த தென்று
சிவன்மருந்தது கண்டம் தன்னைத் திருநீல கண்டம் என்பார்.

(௭ து.) நம்பெருமானாராகிய அவருடைய வாழ்க்கைத்துணையெனப்படும் மனைவியாரும், அருந்ததியினுஞ்சிறந்த கற்பினையுடையவர். (இவர் இறைவனது திருவுருவத்துள்ளே திருக்கண்டத்துள் அமைந்திருக்கும் நீலக்குறியுடையவிடம் கருணைக்குறியல்லவா,

ஆகலின், அவனது கருணையைவேண்டும் நாம் அதன் நாமத்தைச்சொல்லாது வேறென் சொல்வது என்றெண்ணி) திருநீலகண்டம் திருநீலகண்டம் என்று சொல்லிவருவர். (அங்ஙனம் அம்மந்திரத்தைச் சொல்லிவரும் காரணம் யாதெனின்) (பாற்கடலினின்றும்) பொங்கியெழுந்த வலியவிடத்தை எல்லாப்புவனங்களும் உய்யும்வண்ணம் ஐயராகிய இறைவனார் உண்டனரல்லவா? அங்ஙனம் உண்டபொழுது அவ்விடத்தை உள்ளே செல்லவொட்டாது, யாம் செய்துவந்த தவமானது கண்டத்தளவிலே நின்றிருக்கச் செய்ததுபோலும் காணப்படுகின்றதல்லா? அம்மதா! கருணையிருந்தவாறென்னே என்று "சிவனெந்தை கண்டந்தன்னைத் திருநீலகண்டமென்பார்" என்றதாம்.

இதுகாறும் இல்லறத்தின்சிறப்பும் அவ்வறத்திற் றவறாதின்று நல்வாழ்க்கையை நடத்திவந்த நம்பெருமானாராகிய நாயனார்சிறப்பும் கூறிவந்தனராகலின் அச்சிறப்பு வாழ்க்கைத்துணையாகிய இல்லாளதுதன்மையன்றி யமையாதாகலான் அவ்வில்லாளது சிறப்பு இத்துணைத்தாம் என இப்பாசுரத்தால் கூறுவாராயினர்.

அஃதாவது அருந்ததிக்கற்பின்மிக்கார் என்றதும் திருநீலகண்டம் என்பார் என்றது மேயாம். கற்பினையுடைய மகளிர் கூட்டங்களில் சிறந்தவர் அருந்ததியார். இவர் கற்பிலும் கற்பிலக்கணத்திலும் கல்வியிலும் சிறந்தவர். கற்பாவது பிரிவாற்றாமை முதலாகப் பதினெண்வகையாகச்சொல்லப்படும் அவையேயாம். கற்பிலக்கணமாவது—உள்ளமகிழ்ச்சியும் ஊடலும் ஊடலுணர்தலும் ஊடலுவகையும் பிறவுமாகிய சீற்புநடையாம்.

ஈண்டு இவர் மனைவியாரோ மேற்கூறியவைகளினுஞ் சிறந்து அக்கல்வியறிவிலும், அதன் பயனாகிய வாலறிவனது நற்றாளைத்தொழுதலிலும் நீங்காதகாதலுடையவராய் முனைத்துநிற்பவராதலால் அருந்ததிக்கற்பின்மிக்கார் என்றார். இவர் கல்வியிலும் கல்வியின் பயனிலும் எவ்வாற்றால் சிறந்தவராவர் எனவரும் ஐயமகற்றவே புவனங்கள்உய்ய ஐயர் பொங்குநஞ்சுண்ண யாம்செய்தவநின்று தடுத்தது என்று உணரவந்தது கல்வியறிவின் திறமாம். சிவனெந்தை கண்டந்தன்னைத் திருநீலகண்டமென்பார் என்றது அக்கல்வியினாலாய பயனும். ஐயர் என்றது சிவபெருமான் தேவருட்சிறந்த அந்தணராகலின்என்க. "அந்தணரென்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற முதுரையின்படி புவனங்களெல்லாமுய்ய நஞ்சுண்டபெருமானாகலின் அங்ஙனங்கூறியதென்க. இந்திரபதமுதலிய பதங்களுக்கு மேற்பட்ட அளவினையுடைய புவனங்களும் உய்ந்தனவாகலான் அமரருலகமுய்யவென்னாது புவனங்களுய்யவென்றார். இறைவன் கண்டத்தில் நஞ்சு நிற்கத்தடுத்தது உமாதேவியாராக விருக்க அதனை யாம்செய்ததவநின்று தடுத்தது என்றது என்னையெனின் "பெண்ணினல்லவளாயின பெருந்தவக்கொழுந்து" என்று இவ்வாசிரியரே மற்றோரிடத்தில் கூறியிருத்தலின் அக்கருத்தே மீண்டுந்தோன்றக் கூறினாரென்க. என்னையெனின், மகளிருட்சிறந்தாரோடொப்பத் தேவியாரைப்பெண்ணி னல்லவளெனவும், அவ்வளவிலமையாது பெருந்தவக்கொழுந்து எனவுங்கூறியதனால் தமது தவமே உமாதேவியாரது திருவுருவமென்று எண்ணுஞ் சிறப்பினையுடையவர் இவ்வம்மையாரென்றறியக்கிடக்கின்றது. (௯)

ஆனதங் கேள்வர் ஆங்கோர் பரத்தைபால் அணைந்து நண்ணி
மானமுன் பொருது வந்த வூடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய வெல்லாஞ் செய்தே யுடனுறை விசையா ராகார்
தேனலர் கமலப் போதில் திருவினும் உருவ மிக்கார்.

(எ-து.) தேன் துளித்தலையுடைய தாமரைமலரில் வசிக்கும் திருமகளினும் சிறந்த திருவுருவினையுடைய திருநீலகண்டம் என்பாராகிய இவர்தம் கணவராகிய நற்பெரியோர் ஓர்நாள் தாம் வரும் வீதியின்கணுள்ள பரத்தையோடு கூடிக்கலந்து தமது வீடுவந்துசேர, (அவரது செயலைக் காணப்பெற்ற இவர், தமக்குள்ளதாகிய) மானமானது

முன்னேவந்து நிற்க, அதனால் மனம்பொறாது வந்த ஊடலினால் அவரது உடலைப் பரிசித்துக் கலந்து அவருக்குக் கொடுத்துவரும் இன்பத்தை இனி நாம் கொடுத்துவருதல் இசையாததாகும் என்று அஃதொன்றைமாத்திரம் மறுக்கவராய் அஃதொழிந்த மற்றுத் தம்மால் செய்யத்தகும் உணவுமுதலிய சுகங்கட்கு ஏதுவான செயல்களனைத்தையும் விடாது செய்வாரா யிருந்தனர் என்பதாம்.

தேனமர் கமலப்போதில் திருவினும் உருவமிக்கார் ஆனதங்கேள்வர் எனவும், உடனுறை விசையாராய் ஏனைய வெல்லாம் செய்வாராயினர் எனவும் கொண்டுகூட்டுக.

கேள்வர் எனவே-தன் உடற் சம்பந்தமுடையவர், தான் இன்பவகையால் நேசிக்கும் நேசத்திற்கு இடமாயுள்ளவர், தாம் தெய்வமாக நினைத்தற்கு மதிப்பாயுள்ளவர்என்ப. அன்றியும் பெருமை பெருந்தன்மை மரியாதை அகங்காரம் அபிமானம் அளவு என்னப் பொருந்தவரும் மானத்தை மேற்கொண்டுள்ளவர். இங்ஙனமான தங்கணவர் பரத்தையர் பால் நண்ணத் தலைப்படுவராயின் நமது மானங்குன்றவரும். அது குன்றவருமாயின் ஏறுபோற்பீடுநடை இவர்பாற் போம். அதுபோமாயின் புகழை விரும்பிய இல்லாளை இவர் இல்லாதவர் என்னுஞ் சொல் நம்பால்வரும். அதுவருமாயின் "தகைசான்ற சொல்" காவாவழிப்படுங்குற்றமும் நம்பால் உளதாம் என்று முறையே மானத்தினளவை எண்ணுதலாகிய கல்வியறிவு முன்வந்துநிற்ப, அவ்வழியே அகங்காரம் மூண்டு மேலெழுந்தது, அது எழவே இனி இவர்பால் இணைவிழைச்சு என்னும் புணர்ச்சிப்போகத்தை வெறுத்தல் * கற்பியலுமாமென்று திருவினும் உருவமிக்காராகிய இவர் நெஞ்சொடு புலத்தலாகிய செயலைத் தம்முள்ளே முன்செய்து பின் இதுசெய்வலென வரையறை செய்து கொண்டனர் என்பதுதோன்ற மனையின் வாழ்க்கை ஏனையபெல்லாஞ் செயதே உடனுறைவு இசையாரானார் என்றார்.

---

* கற்பியலில் தலைவன் தலைமகள் என்னும் இருவர் நெஞ்சும் புணர்ச்சியை விரும்பாது புலத்தலை (பிணக்கை)க் கருதுதலும் அதுகருதியவழி கருதியபடியே ஒருவரோடொருவர் பிணங்குதற்குரிய வகையைத் தேடுதலும் அங்ஙனம் தேடும் இருவரில் தலைமகள் தன்தலைவன் மாட்டுப் பிணங்குதற்குரிய காரணமில்லையாகவும் நுண்ணியதோர் காரணம் உளதாகவுட்கொண்டு அதனை அவன்மேலேற்றிப் பிணங்குதலால் புலவியைப் பாராட்டுதலும் உளதெனக்கூறியிருத்தலின் இவர் நம்பெருமானார்பால் கொண்ட ஊடலும் கற்பின்முறையே யாமென்று கண்டுதெளியற்பாலது. இக்கற்பியலுடையார்க்கு ஊடலாகிய பிணக்குத் தலைவனார்பால் ஆசையொழிந்து வந்ததன்று. ஆசையை யுடன் தழுவிவந்ததேயாமென்று தெள்ளிதினுணரவே மனையின்வாழ்க்கை ஏனையவெல்லாம் செயதேஎன்றார். இன்னமும் இவ்வம்மையாரது கற்பின்திறத்தை நோக்குழி வலியதினும்வலிதே. என்னையெனின், கணவர்மாட்டு ஊடலைக்கொள்வது தம்மாட்டுள்ள கைம்மிக்ககாதலை; அக்கணமே அனுபவிப்பதற்கேயன்றி அக்காதலைச்சாங்காறும் விடுத்தற்கன்று. அங்ஙனம் விடுக்கவரின் தம்தலைவர்மாட்டுச் செய்யவேண்டிய ஏனைய உபசாரங்களைச்சிறிதுஞ்செய்ய எண்ணவும் எண்ணார்; செய்யவும் துணியார். அப்புணர்ச்சியை வெறுத்தபொழுது ஒருகணமேனும் அவரோடு வாழவும் விரும்பார். அன்றியும் கல்வியைநாடியும் அறத்தைநாடியும் பொருளைநாடியும் பிரிதலாகிய கல்வியிற்பிரிவு பொருள்வயிற்பிரிவு முதலிய அப்பிரிவுகள் தன்தலைவனுக்கு நேர்ந்தவழி கற்பினையுடையார் பிரிவாற்றாமையும் படர் மெலிந்திரங்குதலும் கண்விதுப்பழிதலும் பசம்புறுபருவரலும் தனிப்படர் மிகுதியும் நினைந்தவர்புலம்பலும் கனவுநிலையுரைத்தலும் பொழுதுகண்டிரங்கலும் உறுப்புநலனழிதலும் நெஞ்சொடுகிளத்தலும் நிறையழிதலும் உடையவராய் வருந்தாநிற்பர். தலைவர் கூடியவழி காதல் தம்மையறியாது அதிகரித்தலால் அக்காதல் விரைந்து முற்றுப்பெறுமாறு புலத்தலும் புலவிநுணுக்கமும் சிறிதே இயற்றி உடனே ஊடலுவகையைப் பெறுவர். இவையெல்லாம் கற்பினதது சிறப்பு. அங்ஙனமாக திருவினும் உருவின்மிக்காராகிய

இத்திருப்பாசுரத்தால் நம்பெருமானார் மனைவியார் திருவினும் மிக்கஉருவம் உடையார் எனவும், பெருமை பெருந்தன்மை மரியாதை அகங்காரம் அபிமானம் என்னும் இவையெல்லாம் பாராட்டும் மானத்தை மேற்கொண்ட கற்பிற்சிறந்தவரெனவும், கற்பிற்சிறந்தவர் காமத்தினுஞ் சிறந்தவரேயாகலின் அங்ஙனஞ் சிறந்திருக்கும் காமத்தினைக் கற்பினெல்லையில் நிறுத்தி ஆளும் ஏனைக்கற்புடையார் போலல்லாமல் அக்கற்பினுஞ் சிறந்த சிவஞானையால் அக்காமத்தினையாளும் திறத்தினரெனவும் உணர்த்தியவாறும் (ரு)

ஈூண்ட அப்புலவி தீர்க்க அன்பனார் முன்பு சென்று
பூண்தயங் கிளமென் சாயல் பொற்கொடி அனையார் தம்பால்
வேண்டுவ இரந்துகூறி மெய்யுற அணையும் போதில்
தீண்டுவீர் ஆயின் எம்மைத் திருநீல கண்டம் என்றார்.

(எ - து.) (தமது அன்புக்குரிய மனைவியார்பால் உண்டாகிய புலவிநுணக்கத்தைக் குறிப்பானுணர்ந்து அந்தோ! இவர்பால் அதிகரித்து நிற்கும் அவ்வூடல் நீங்குமாறென் நீங்காதொழியின் யாம்மகிழ்தற்குரிய புணர்ச்சிமகிழ்தல் கூடுமாறென்னென்று) அதிகரித்து வெளிவந்த அப்புலவியைத் தீர்த்தற்பொருட்டு, ஆபரணங்களாற் பிரகாசிக்கின்ற இளமையான மெல்லியசாயலையுடைய பொற்கொடி போன்றவராகிய அவர்முன்னேசென்று (அவரது திருமுகத்தைநோக்கி) அவர் (விரும்பும் வகையான்) இன்சொற்களையும் இரக்க மொழிகளையும் இரக்கத்துடன்கூறி, தம்மைஅவரது உடம்பு தம்முடம்போடு பொருந்தத் தழுவத் தொடங்கும்பொழுது அவர் தாம்கொண்ட ஊடலினின்று நீங்காதவராய் எம்மை நீர் தீண்டற்க. தீண்டுவீராயின் திருநீலகண்டம் என்று ஆணையிட்டனர் என்பதாம்.

அன்பனார் ஈூண்ட அப்புலவிதீர்க்க பூண்தயங்கு இளமென்சாயல் பொற்கொடி யனையார்முன்பு சென்று என்றுகொண்டு கூட்டுக.

*திருநீலகண்டம் என்னுமொழி தாம்செய்த தவத்தினாலுண்டாகிய மந்திரமொழியாகலின் அம்மொழியையே தமதுபுலவி மிகுதியைக்காட்டும் ஆணைமொழியாகக்கூறித் தடுத்தனரென்க. இவர்கொண்ட ஊடலுக்கு அவர்பொருத உள்ளமுடையவரென்பது தோன்ற அன்பனாரென்றார். † ஈூண்ட அப்புலவிதீர்க்க என்றதைப் புலவி அதிகாரத் திற்காண்க. தலைமகனைப்பிரிந்த தலைமகளுக்கு உண்டாவதாகிய ஊடல் தம்மைப்பிரியாத இவர்பாலுண்டாகிய தென்பதுதோன்ற அனையார்தம்மையென்றார். காதன்மிகுதியால் ஊடலுண்டானகாலத்து அக்குறிப்புணர்ந்து ஊடலே உவகையாமாறு கூறுதல் தலைவர்க்குச் சிறப்பேயென்பதுதோன்ற வேண்டுவ இரந்துகூறி என்றார். தாம் இரந்துகூறிய அதனால் அக்கற்புடையார் ஊடலொழியா திருப்பரோ என்று துணிந்து பின் உவகையுண்டாமாறு அவரைச்சேரத் துணிந்தனரென்பது தோன்ற மெய்யுற அணையும்போதில் என்றார். தமதுயிருக்கு மெய்யாயிருக்குஞ் சைவநெறியிற் சிறந்த நாயனாரது உடம்பு சைவ சீலமல்லாதார் உயிருக்கு உடம்பாயிருக்கும் உடம்புடைப் பரத்தையினுடம்பைத் தீண்டப்பெற்ற அசைவத்தைநாடி அஞ்சினரென்பதுதோன்ற எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டமென்றார். நீலகண்டம் என்பது விடந்தங்கியகண்டம். தங்கியிருக்கும் விடம் அவரைக்கொல்லாது அவரருளைக்காட்டி அமரர்களை வாழ்வித்தசெயலைக்காட்டும் அதிசயத்தையுடைத்தாகலின் நீலகண்டமென்னாது - திருநீலகண்டம் என்றார். (கூ)

* மையார் தன்தலைவரது உடல் உறைவு இசையாது அவருடன் உறைவு இசைந்து காமத்தையுங்காத்து ஆணையுங்கடவாது இருக்குந்திறம் இவர்க்கல்லது எவர்க்குக்கூடும். ஆகலின் அருந்ததிக் கற்பின்மிக்கார் என்று மேலேகூறினாரென்க.

† இதனைத்திருக்குறள் புலவிநுணக்கம் ஊடலுவகை எனவரும் அதிகாரங்களிற் காண்க.

ஆதியார் நீலகண்டத் தளவுதாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணைகேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி எம்மைஎன் றதனுன் மற்றை
மாதரார் தமையுமென் றன் மனத்தினும் தீண்டேன் என்றார்.

(எ - து.) ஆணையாகக்கூறிய திருநீலகண்டமென்னுந் திருநாமத்தைக்கேட்ட நம் பெரியார், தமக்கு முதல்வராயுள்ள இறைவர்பால் அவர்வைத்துள்ள பற்றினளவு வேற்றுமைப்படாத திண்மையை யுணர்ந்து, அந்தோ என்றஞ்சினவராய் அவரிட்ட ஆணைப்படியே அவரது உடம்பைத்தொடாமல் அவ்விடத்தைவிட்டு அப்புறஞ்சென்று, அக்கணமே அவரை மிக்க சீலமுடையவராகவும் தம்மை அச்சீலமுடைமைக்கு வேறாகவும் பார்த்துப் பின் தம்மேல் சாபமொழியன்றோ ஆணையை வைத்துக்கொண்டுகூறினர். அஃதாவது திருநீலகண்டமென்று நமது ஆசையைத்தடுத்த அவர், என்னையென்னாது எம்மையென்று தம்மைப் பன்மையாகக் கூறினராகலான், இவரை உடம்பாற் றீண்டாததுபோல் இனி வேற்றுமாதர்களையும் எனதுமனத்தினாலும் தீண்டமாட்டேனென்றார் என்பதாம்.

தாம் ஆதியார்பால்கொண்ட ஆர்வம் நீலகண்டத்தளவு பேதியா ஆணைகேட்ட பெரியவர் எனக்கூட்டுக.

அல்லதூஉம், தாம்கொண்ட ஆர்வம் (திருநீலகண்டநாயனர்) தாம்தமது மனவியார்பால் கொண்டதாகிய ஆசை, பேதியா - பேதிக்கும்படி, ஆதியார் நீலகண்டத்தளவு - இறைவனர் கொண்டிருக்கும் நீலகண்டத்தை-எல்லையாகக்கொண்டு, ஆணைகேட்ட பெரியவர் - அந்த நீலகண்டமென்னும் திருநாமத்தையே ஆணைமொழியாகக் கூறக்கேட்ட பெரியோர், பெயர்ந்துநீங்கி - மனைவியாரைத் தீண்டுதற்கஞ்சினவராய் அவரிடத்தினின்றும் அப்புறம்நீங்கி என்று பொருள்படுத்தலுமாம்.

நீலகண்டமென்று கூறிய ஆணைமொழி அவருக்கு இறைவன்பாலுள்ள ஆசையைக் காட்டியதெனவும், ஆர்வம் பேதியா என்றது இறைவன்பால் ஆசையெல்லாம் உள்ளவர்பாலே என்னுசையெல்லாம் உள்ளதன்றி ஆசையைச் சிறிதளவேனும் வேறொருவர்பால் செலுத்துமவரிடத்து என்னுசை சிறிதளவும் செல்லாத அளவினை யுடைத்தென்னும் பெரியதோர் அளவினைக் காட்டியதெனவும், பெரியவர் என்றது அவர்பால் தாங்கொண்டஆர்வம் கெடவரினும் அதனையெண்ணுது தம்முடைய ஆர்வத்தைக்கெடுத்த அச்செய்கையளவால் அவருக்கு இறைவன்பாலுள்ள ஆர்வம் இத்துணைத்தெனக்கண்டு அவ்வாணைக் குட்பட்ட பெருந்தன்மையைக் காட்டியதெனவும், ஏதிலார்போல என்றது தமது ஆர்வம் அவரது உடம்பளவில் நின்ற சிறுமையைநோக்கி அவருக்குத் தம்மை வேறாகவும், அவரது ஆர்வம் நீலகண்டத்தளவுஞ்சென்ற பெருமையைநோக்கி தமக்கு அவரைவேறாகவும் கண்ட சீலத்தினளவைக் குறித்ததெனவும், எம்மைஎன்றது - தீண்டேன்என்று அவர்கொண்ட ஆர்வமாகிய சீலத்தினளவை நோக்கி அவருக்குத் தம்மை வேறாகக்கருதிய அக்குறைபாட்டை யொழித்தல் இன்றியமையாத செயலெனவெண்ணி அச்செயல் முற்றுப்பெறுமாறு உடம்பளவிற்செல்லும் அவாவுடையமனத்தை இனி எவ்வுடம்பகத்தும் செல்லாவண்ணந்தடுத்து அவர்கொண்ட நீலகண்டத்தளவும் சென்று அவ்வளவில்நிற்க என்று அம்மனத்துக்கு ஆணையிட்டதெனவும் குறித்தனவென்க.

இத்திருப்பாசுரத்தால் நீலகண்டத்தளவில் நிற்கப்பெற்றதனுல் திருநீலகண்டநாயனுர் எனவந்த பெயர்க்காரணத்தையும் இவ்வரிய திருப்பெயர்வரப்பெற்றது "பெண்ணிற்பெருந்தக்க யாவுள *கற்பென்னும் திண்மையுண்டாகப் பெறின்" என்றபடி அப்

* கற்பென்னும் கலங்காநிலையை யுண்டாகப்பெற்ற பெண்ணை ஒருவன் இல்லாளாகப்பெறுவதினும் பெறத்தக்க மேம்பட்ட பொருள்கள்யாவை. இதனைத்திருக்குறள் வாழ்க்கைத்துணைநலத்திற்காண்க.

பெரும்பாக்கியத்தை வாழ்க்கைத்துணையாற் பெற்றதென அதன் காரணத்தையும் விளக்கியமையுமன்றி அத்திருநாமத்துக்குரிய இறைவன்பால் நிலைபெற்றிருத்தற்கான ஆர்வத்தையும் விளைவித்தது அவ்வம்மையாரேயென்று அறிவுறுத்தியதுமாம்.

அல்லதூஉம் நூல்களிற்கூறும் பற்றறுதியைச் செய்யுமுறைமை இதுவெனவுணர்த்தியதுமாம். அஃதாவது, பற்று - புறப்பற்று, அகப்பற்றென இருவகை. புறப்பற்றையொழிக்கவேண்டின் அப்பற்றொழியாது; எனெனின், அப்புறப்பற்றினைப்பற்றியிருப்பது அகப்பற்றே. அவ்வகப்பற்றொழியின் புறப்பற்று அவனை விட்டொழியும். அவ்வகப்பற்று ஆனது நாமத்தைப்பற்றினலன்றி அதுவொழியாது. ஆகலின் "மற்றுப்பற்றெனக்கின்றி நின்றிருப்பாதமே மனம்பாவித்தேன்" என்றது தமிழ்வேதம். எனவே, என்மனம் நின்றிருப்பாதமே பாவிக்கப்பெற்றதனல் மற்றுபபற்ருகிய புறப்பற்று எனக்கில்லாதொழிந்தது என்றுணர்த்தியவாறும். ஆகவே நம்பெருந்தகையார் திருநீலகண்டம் என்னும் திருநாமத்தில் தம்மனத்தைப் பற்றசெய்ததுணிபால் மனத்தினுந் தீண்டேனென்ருர். இதனல் புறப்பற்ருகிய மாதரைத்தீண்டுவதற்கு மனம் வேறில்லையென்றதுமாம். (எ).

கற்புறு மனைவி யாரும் கணவனார்க் கான எல்லாம்
பொற்புற மெய்யுறுமல பொருந்துவ போற்றிச் செய்தே
இற்புறம் பொழியார் அங்கண் இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி இன்மை அயல்அறி யாமை வாழ்ந்தார்.

(எ - ரு.) திருநீலகண்டம் என்று சொல்லத்தகும் கற்பினையுடைய அவரது மனைவியாரும், தமது கணவனரது உடம்பைத்தொடுதற்கான செயல்களைமாத்திரஞ் செய்யாமல், ஏனைய உரியபணிகளையெல்லாம் அன்பும் அதிசயமும் பொருந்தப் பணிவுடன்செய்து, மனையைவிட்டு எங்கும் ஒருகணமேனும் செல்லாதவராய், அவ்விடத்திலேயே நமதுநாயனரோடும் வேருகவிருந்து, கணவர்பால் அன்பைவிளைவிக்கும் இணைவிழைச்சி யில்லாமையை வேறெருவரும் அறியாவண்ணம் வாழ்ந்திருந்தனர். இவரைப்போலவே நாயனரும் மனைவியாரோடு வேருகவிருந்து அவர்பால் தமக்கு இணைவிழைச்சு இல்லாமையை வேறெருவரும் அறியாவண்ணம் வாழ்ந்திருந்தனர் என்பதாம்.

மெய்யுறுமற் பொற்புற பொருந்துவ போற்றிச்செய்து எனக்கூட்டுக.

தமது கணவனைத் தம்மைத்தீண்டா தொழித்தமையால் அவருக்கு அதனலுண்டாகும் ஊடலுக் கிடஞ்செய்யாவண்ணம் ஏனைய உபசாரங்களை யெல்லாஞ் செய்வதில் குன்றாது மேற்கொண்ட ஆவலுடையவராய் ஆனவெல்லாஞ் செய்தமையும் புணர்ச்சியின்மை அயலார் அறியாமல் வாழ்ந்ததும் தோன்ற கற்புறு மனைவியார் என்ருர். இனியவுணவுகளைச் சமைத்தலிலும் சமைத்தவற்றை அன்போடுபடைத்தலிலும் படைக்கும்பொழுதுஇன்சொல் இடைஇடையே வழங்குவதிலும் அங்ஙனம் வழங்கும்போது இன்முகங்காட்டுவதிலும் ஒருசிறிதும் வேறுபடாதிருந்தியற்றிய இச்செயல் கற்புடையார்க்கும் அமையாதென்னும் அருமைதோன்ற கணவனர்க்கான வெல்லாம் பொற்புறபொருந்துவ போற்றிசெய்தென்ருர். இதனுள் போற்றிஎன்பது இனியவுணவுகளை அட்டல் முதலியவாகக்கூறியவற்றுள் ஒன்றேனும் கணவர்பால் ஊடலுடையார் கொள்ளும் செயலன்ருகலான் அச்செயலை இவர்காத்த அருமைதோன்ற போற்றிச்செய்தார் என்ருர். இவ்வாறு மனைவியார் போற்றிச்செய்த செயலருமைநோக்கி நாயனரும் தாம்செய்துவரும செயலால் நாயனர்தம்பால் உண்டாகிய ஊடலை ஊடலாக எண்ணுது ஊடலுவகையாகக் கொண்ட அருமைநோக்கி மனைவியாரும் ஒருவரையொருவர் பிரிவதற்கின்றி வீட்டின்கண்ணே வாழ்ந்திருந்த அரியதினும் அரிய செய்கைதோன்ற இற்புறம்பொழியார் என்ருர். இருவரும் மேலேகூறியவற்ருன் ஊடலைமறந்தாராயினும் முன்னுண்டாகிய ஊட

லின்கண்ணிகழ்ந்த ஆணையை இருவரும் மறந்து ஆணையைக்கடந்திலர் என்னும் அச்சிறப்புத்தோன்ற இருவரும் வேறு வைகி என்றார். உணவுவகையான் ஒன்றாயும் ஊடல்வகையான் வேறாயும் இருக்கப்பெற்றாராயினும் இருவருங்கொண்ட ஆணையின்கண் வேறுபடாது உடனுயிருப்பவராயிருத்தலின் இவர்களது அற்புறு புணர்ச்சியின்மையை விளைவித்த இறைவனொருவனன்றி மற்றுயாவரானும் அறியப்படுந் தன்மையுடைத்தன்றென்னும் அருமைதோன்ற அயலறியாமல் வாழ்ந்தார் என்றார்.

இத்திருப்பாசுரத்தால் உடம்புக்கோர் பிணியுற்றகாலத்து அவ்வுடம்பை வெறுத்தொழியாது அப்பிணியைப் போக்குவதற்கான மருந்து முதலியவற்றானும் வேண்டிய உணவுமுதலியவற்றானும் முன்னையினும் சிறப்பாகச்செய்து உயிரைப் பாதுகாத்துவருதல்போல் தமக்கு உடம்பாகியும் உயிராகியுமுள்ள நாயனாரிடத்துண்டாகிய ஊடலைக் கருதி உண்டிமுதலியவற்றால் உபசரித்தலை விட்டொழியாது உபசரித்துப் பாதுகாத்து வந்த கற்பின்திறத்தையும் தம்மிருவரிடத்தும் உண்டாகிய தகைசான்ற சொற்காத்தலில் சோர்விலாத்தன்மையும் இறுதிபயக்கும் சிற்றின்பமாகிய உடலின்பத்தை யொழித்து உறுதிபயக்கும் பேரின்பத்தில் ஒன்றுபட்டிருந்த அறிவின் திறத்தையும் உணர்த்தியவாறும். (அ)

இளமையின் மிக்குளார்கள் இருவரும் அறிய நின்ற
அளவில்சீர் ஆணைபோற்றி ஆண்டுகள் பலவும் செல்ல
வளமலி இளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச் சாயார்.

(இ - ள்.) (சிற்றின்பத்தை நுகர்தற்குரிய) இளமைப்பருவத்தில் சிறந்திருக்கும் நாயனாரும் அம்மையாருமாகிய இருவரும், தம்முள் அறியநின்றதாகிய சீர்மையிற்சிறந்த, திருநீலகண்டமென்னும் ஆணைமொழியைப் பாதுகாத்து, ஒவ்வொரு வருடங்களும்போக, (அவ்வருடங்களோடு இருவருடைய உடம்புகளிற் பொருந்தியிருக்கவல்ல) குன்றாத பொலிவுமிக்க இளமைப்பருவமும்போய், தளர்ந்தநடையைத்தரும் தளர்ச்சியோடு முதுமைப்பருவம் வந்து உடம்புசாயவந்தும், இறைவனாகிய தம்பிரானிடத்து வைத்த அன்பின் திறத்தில் சாயாதவரா யிருந்தனர் என்பதாம்.

இருவரும் அறியநின்ற ஆணையைப் போற்றத்தொடங்கிய காலமானது ஆணையைப் போற்றக்கூடாதகாலம் என்பதுதோன்ற இளமையின் மிக்குளார்கள் எனவும், இளமைமிக்கிருக்கும் அக்காலத்தில் கொண்டஆணை அளவில்சீரை எய்தவும் ஆண்டுகள் சீரினின்றும் போகவும், காத்தனரென்பதுதோன்ற அளவில்சீர் எனவும், ஆண்டுகள் பலவுஞ்செல்லப் போற்றி எனவும், அன்போடியைவதற்கெடுத்த வுடம்பினால் அன்பெய்தப்பெற்று அது வளரப்பெறின்,பின் அவ்வுடம்புதளர்ந்து சாயவரினும் அதனாற்கவலைக்கிடனில்லையென்னும் உண்மையுணர்ந்த பெரியோரென்பது தோன்ற வடிவுறுமூப்பு வந்து தளர்வொடுசாய்ந்தும் அன்பு தம்பிரான்திறத்துச் சாயா எனவுங்கூறினர்.

இத்திருப்பாசுரத்தால் கிடைத்தற்கரிய வுடம்பும் அதனில் வரப்பெறும் இளமைப்பருவமும் எய்தப்பெற்றவழி அப்பருவத்தில் செய்தற்கரிய செயலைச்செய்து பேரின்பத்தைப் பெறுதல் ஆற்றலுடையதேயன்றி அப்பேரின்பத்தை யெய்தப்பெறாது இளமையையொழித்தலும் இளமையிற்கிடைக்கப்பெற்ற அன்பையே தம்முடம்பாகஎண்ணி அதனில் ஊக்கமுடையராய் நில்லாதொழிதலும் சிற்றினத்தைச்சேர்ந்த சிறியோரது செய்கை என்றும் விளக்கி இப்பெரியோரது பெருமையைப் பிரகாசப்படுத்தியவாறும்.()

இந்நெறி ஒழுகும் நாளில் எரிதளிர்த் தென்ன நீண்ட
மின்ஒளிர் சடையோன் தானும் தொண்டரை விளக்கம் காண
நன்னெறி இதுவாம் என்று ஞாலத்தோர் விரும்பி உய்யும்
அந்நெறி காட்டும் ஆற்றால் அருட்சிவ யோகி ஆகி

(எ - து.) மூப்புவந்த உடம்புசாயவந்தும் அன்புநெறியினும் சைவநெறியினும் சாயாது நாயனர் நடந்துவருநாளில், தீயானது தளிர்விட்டாற்போற் சிவந்துநீண்டு மின்னலைப்போல் பிரகாசிக்கும் சடையினை யுடையோனாகிய இறைவரும், நன்னெறி எனப்படும் சன்மார்க்கநெறி இதுவாமென்று உலகினரறிந்து அதனைவிரும்பி (அவ்வழியான்) உய்யும்வகையாகிய அந்நெறி (இந்நெறியாமென்று) உணரும் வகையான், நம்பெருமானாராகிய நாயனரைப்பிரகாசப்படுத்தத் (திருவுளத்தெண்ணி) அருள்நிறைந்த ஓர்சிவயோகியைப்போல் திருவுருக்கொண்டு என்பதாம்.

நன்னெறி இதுவாமென்று ஞாலத்தோர் விரும்பியுய்யும் அந்நெறிகாட்டுமாற்றால், தொண்டரை விளக்கங்காண, அருட்சிவயோகியாகி எனக்கூட்டுக.

இத்திருப்பாசுரத்தால், ஆண்டுகள் பலவும் செல்லுமளவும், மூப்புவந்து தளர்வொடு சாயவருமளவும், இணைவிழைவை விரும்பாதுநின்ற நெறியும், ஆண்டுகள்சென்று தளர்ந்தமூப்புவந்தும், அந்நெறியே - தம்பிரானிடத்து வைத்த அன்பானது இளம்பருவம் எய்தி வருதற்கு வாயிலாகவுங் கொண்டுநின்ற நெறியுமே, நாயனருடைய ஒழுக்கநெறி என்பதூஉம், அந்நெறிநிற்கவே * "தன்னடைந்தார்க்கு இடைமருதீசன், பனிமலர்க்குழல் பாவைநல்லாரினும், இனியன்" என்றதமிழ்வேதபடி நாயனருக்கு நீலகண்டன் இனித்தானென்பதும், அந்த நீலகண்டன் இனித்த இனிப்பால் இணைவிழைவால் உண்டாகும் இன்பம் அவருக்கு இனிக்காதொழிந்த தென்பதும், அது இனிக்காதொழியவே நீலகண்டனிடத்துப் பெருகிய பேரின்பம் சாயாது அவர்பால் இளமைப்பருவம் எய்திநின்ற தன்பதும் மேலைத்திருப்பாசுரத்தால் விளக்கினாராகலின், அந்த அன்புநெறியில் சாயாது நின்றனர் என்பார் இந்நெறி யொழுகுநாளில் என்றார்.

இணைவிழைச்சென்னும் மாதரின்பத்தைக் கெடுத்தற்குப் பேரின்பம் உடையானாகிய நீலகண்டனிடத்து அன்புநாடாது, பொறிபுலன் கரணங்களோடு மன்றாடிக்கொண்டு நிற்றற்குரிய ஞானநெறிகளைக் கற்றுணர்ந்து, அங்ஙனங் கற்றுணர்ந்த வன்மையான் முன்னர் மனமாதிகரணங்களை யடக்கவும், அக்கரணங்களின் வழியாப் புலன்களை யடக்கவும், அப்புலன்களின் வழியாய்ப் பொறிகளையடக்கவும், இம்முறையான் அவனவனாதுவாய்க் காணப்படும் காமரூபாதி விஷயத்தோற்றங்கள் தோன்றாதொழியவும்முயன்று அம்முயற்சியால் அவை முற்றியபின்னர் புறநாட்டமும் புறநோக்கமும் அற்று, அகநாட்டமும் அகநோக்கமும் உண்டாமாறு முயலும்பருவத்தில், பூர்வம் பழகிய வாசனைப்பழக்கத்திலுள்ள மண்வாசனை, பொன்வாசனை, ஒருவாறு ஒழியவருமாயினும் பெண்வாசனை யொழியாது பொறிக்குவந்து, அங்ஙனம் கட்பொறிக்குவந்தமாத்திரத்தில் அக்கணமே புலன்வந்து கூட, அதுகூடிய அவ்வழியே மனமாதிகரணங்கள் தலைப்பட்டு, ஞானநெறியில் நிலைபெற்று நிற்கும் ஆன்மஅறிவைத் தம்மால் காட்டப்பட்ட பெண்வழியில் முனைத்து நிற்கச்செய்து அப்பெண்ணாகாரமேயாக்கி பிரஹ்மாகாரத்தைப் போக்கும் ஆன்மவிசார முடையோருக்கு, நாயனர் சாயாது நின்ற அந்நெறியை விளக்கி, அங்ஙனம் விளக்குமுகத்தானே அவர்கள் உய்யுமாறு, இறைவன் கருணைகூர்ந்தனன் என்பார் தொண்டரை விளக்கங்காண என்றார். அஃதாவது கட்பொறிக்குத் தோன்றப்படும் பெண்ணுருவம் இலக்குமியினும்சிறந்து ஒருகணமும் ஒழியாது தோன்றிக்கொண்டிருக்கவும், அது தோன்றுங்காலத்தே உடன் வந்து கூடத்தக்கதாகிய புலன்முதலிய கரணங்களும் உடன் நிகழ்ந்துகொண்டிருக்கவும், அவற்றால் விளையத்தகும் சித்தவிகாரத்துக்குரிய சிற்றின்பானுபவம் ஒருசிறிதும் விளைவதற் கில்லாமல் அப்பெண்ணுருவமும் அவ்வுருவத்தோடு கலந்த பொறிமுதலியவைகளும் நீலகண்டன் உருவத்துக்குள்ளாய் அவ்வுருவத்தை உள்ளுந்தோறும் நீலகண்டனாகிய அச்சிவாகாரமேயாய்ப் பேரின்பநுகர்ச்சியிற் றலைப்பட்டு, அங்ஙனம் தலைப்பட்ட விசேடத்தான் இளமைப்

* திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம்—குறுந்தொகை.

பருவத்தளவுநின்று, பின் முதுமைப்பருவத்தில் மாய்ந்துபோம் சிற்றின்பம்போலாது அவ்வின்பம் மாய்ந்துபோம் அம்முதுமைப்பருவமே இளமைப்பருவமாய்ப் பேரின்பம் விளைப்பெற்ற சீர்மையை உடைய இந்நாயனாரது உண்மையை விளக்குமுகத்தான் பேரின்பத்தைக்கூட்டாத ஞானநெறியைக் கைவிட்டு, அன்புநெறியாகிய நன்னெறி கூடுமாறு, இறைவன் அருளுருவங்கொண்டு அந்நாயனார்பால் வந்தனனென்பார் நன்னெறியிதுவாமென்று காட்டுவோர் விருப்பேயாயும் அந்நெறிகாட்டுமாற்றால் அருள் சிவயோகியாகி என்றார்.

இத்திருப்பாசுரத்தால் எக்காலத்தும் நிரதிசயானந்தமாகிய பேரின்பம் * அன்புநெறியாற் கூடுமேயன்றி அன்பற்ற ஞானநெறியாற் கூடாதென்பது உலகெலாம் அறிந்துய்ய இந்நாயனாருடைய உண்மையாகிய அன்புநெறியை விளக்க இறைவன் திருவுளத்தெண்ணி சிவயோகியாய் வந்தனனென்று கூறப்பட்டது. (௧௦)

சிவயோகியாரது கோலம்.

வேறு.

கோவணம் சாத்திக் கேடிலா
வான்விடு நீற்றொளி மலர்ந்த மேனிமேல்
தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்
நீளொளி வளர்திரு முண்ட நெற்றியும்.

(இ - ள்.) அரையிலணிந்த நல்லாற்செய்த கீளுடனே, கோவணத்தைத் தரித்து, நீக்கமின்றி எப்பொழுதும் வெண்மையாகிய ஒளிபரப்பும் திருநீற்றின் பிரகாசமானது, பிரகாசிக்கின்ற திருமேனியின்கண், தோளொடுஞ்சார்ந்து மார்பினிடத்தில் துவண்டு அசைகின்ற பூணூலுடனே, மேன்மேலோங்கி ஒளிவளர்கின்ற அக்கினிக் கண்ணின்மேல் திரிபுண்டரந்தீட்டிய நெற்றியும் என்பதாம்.

கீளும் கோவணமும் நித்தநித்தம் வேறுவேறணியும் முறைமையுடைத்தென்பது தோன்ற கீளொடு கோவணம் சாத்தி எனவும், திருநீற்றின் ஒளியானது அழிதலையறியாத பராசத்திசொரூபமென்பது தோன்ற கேடிலா வான்விடு நீற்றொளி எனவும், இறைவனது திருமேனியும் அப்பராசத்தியின சொரூபமேயாகலின் அச்சம்பந்தமுடைமைதோன்ற நீற்றொளி மலர்ந்தமேனி எனவும், பூணூலானது மலமாசறுதி அசுத்தகாலங்கள் நீங்க, ஏனைய காலங்களில் தோளின்மேலும் மார்பின்நடுவினும் நீங்காதிருத்தல் வைதிகநெறியென்பதுதோன்ற மேல்தோளொடு மார்பிடைத் துவளுநூலுடன் எனவும், சூரியனிடத்திலும், சந்திரனிடத்திலும், நீண்டுபரந்துவளர்கின்ற ஒளி-அக்கினியின் ஒளியேயன்றி வேறில்லையென்பதும், அவ்வக்கினி காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்னி, என்னும் மூன்றக்னியாய் உலகியலுக்குரிய அவ்வக் காரியங்களை வளர்க்குந் தன்மையுடைத்தென்பதும், அம் முத்தீவடிவமாயிருக்கின்ற அவ்வக்னி விரஜாக்னி என்னும் பேருடைத்தாகிய சிவாக்னியாய் மும்மலபாசங்களையும் நீறாக்கி முத்தி நிலைக்குரிய ஞானசாதனங்களை வளர்க்கும் சிறப்புடைத்தாகிய திருநீற்றை வளர்க்குந் தன்மையுமுடைத்தென்பதும் ஆகிய இவ்வொற்றுமையெல்லாம் காட்டுவது இறைவனது நெற்றியின்கண் உள்ள கண்ணென்பதுந்தோன்ற நீளொளி வளர்திருமுண்ட நெற்றியும் எனவும் கூறினார்.

---

* அன்புநெறி - அருளாற்கூடும் நெறியெனவும், அருள் கூடுவதனால் பொறிபுலாதிகள் அவ்வருளைக் கடத்தற்கு வலியற்று அவ்வருள்வழியேநிற்றற்கு ஆயிற்றெனவும், அன்பற்ற ஞானநெறியில் அருள் கூடாதெனவும், அதுகூடாதாகவே பொறிபுலாதிகள் இவனது ஞானவுணர்ச்சியின் வன்மையிலடங்காது தத்தம் போதவழியேசெல்லும் இயற்கையுடைத்தெனவும் விளக்கி, ஞானநெறியின் மென்மையையும் அன்புநெறியின் வன்மையையும் பிரகாசப்படுத்தியவாறும்.

கேடிலா வாள்விடு நீற்றொளி என்றது - பராசத்தியைத்தாய் வந்தனர்என்றதும் விசேடத்தைக் குறித்ததெனவும் கொள்க. (௯௩)

நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடுங்கதிர் முறுவல்வெண் ணிலவு மேம்பட
இடும்பலிப் பாத்திரம் ஏந்து கையராய்
நடந்துவேட் கோவர்தம் மனையில் நண்ணினார்.

(எ - து.) நீண்டசடையென்னும் தோற்றம் மறையும்படி அறல்போல் நெறித்திருக்கின்ற சடைமுடியினையுடையவராயும், வெள்ளிய நிலவினும் மேம்பட்ட பிரகாசிக்கும் பிரகாசமுடைய புன்னகையுடையவராயும், அன்பர்களிடம் பிக்ஷான்னத்தை ஏந்துதற்குரிய பாத்திரத்தைத் தாங்கியிருக்கும் திருக்கரத்தையுடையவராயும், வீதியின்கண்ணே அடிகள் நேரவே நடந்துவரும் நடையினையுடையவராயும், திருநீலகண்டநாயனருடைய வீட்டின் கண் வந்தனர் என்பதாம்.

கதிர்விடு முறுவல் எனவும், பலியிடும் பாத்திரமெனவும் கூட்டுக.

பாதமளவும் கீழ்விழுந்து பரந்திருக்கும் நீண்டசடையாயிராமல் தலையில் நெறித்து முடித்த சடையாயிருந்ததென்பது தோன்ற நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பை என்றார். என்றும் ஒருபடித்தாய்ப் பிரகாசிக்கும் பிரகாசத்தையுடைத்து புன்னகையென்பது தோன்ற வெண்ணிலவு மேம்பட கதிர்விடு முறுவல் என்றார். பலிபாத்திரமல்லது வேறொருபொருளையுந்தாங்காத சீலமுடையாரென்பதுதோன்ற இடும்பலிப்பாத்திரம் ஏந்துகையராய என்றார். யாவரையும் யாவையையும் நடத்திவைக்கும் இறைமைத் தன்மையுடைய தான், நடக்கும் ஆன்மத் தன்மையுடையவனைப் பந்தனென் என்றறிஞ்சிறப்புத்தோன்ற நடந்துநண்ணினார் என்றார்.

வெண்ணிலவினும் மேம்பட முறுவலைக்கூறியது - நிலவின்னொளி—என்றும் ஒருபடித்தாயிராமல் குறைந்துங்குறைந்தும், வளர்ந்துவளர்ந்தும், வரும் தன்மையுடைத்து. இவரது நகை ஓர்காலத்து அதிகமாயும், ஓர்காலத்துக்குறைவாயும் வெளிப்படுவதின்றி என்றும் ஒருபடித்தாகலான் அச்சிறப்புத்தோன்ற என்க. நகை புன்னகையாயினும் அது அவ்விறைவனுக்குள்ள ஓர் பெருந்தன்மையைக் காட்டுவதாகும். எங்ஙனமெனின், ஒருவனுக்கு சந்தோஷமிகுமாயின் அதிகநகையும், அது குறையுமாயின் நகை குறைந்தும், வெளிப்படுதல் இயல்பாகலான் இவன் அத்தன்மையனாகாமல் வெளிப்படுதல் வேண்டாமையற்ற நித்தியதிருப்தனென்று காட்டுவதாமென்க. நித்தியதிருப்தனாயிருக்கின்ற இவனைப்போலுமே நாயனாரும் காமத்தால் மாறுபடாமல் நித்தியதிருப்தராயிருந்தனராகலான் அவர் மனையில் நடந்து நண்ணினார் என்றார்.

குளகமாகக்கூறிய இரண்டுதிருப்பாசுரத்தானும், திருநீலகண்டநாயனார்பால் இறைவன் சிவயோகிபோல் கோலங்கொண்டு மனையின்கண் வந்தகாட்சியும், சிவயோகிகளுடைய இலக்கணம் இத்தன்மைத்தாம் என்பதுங் கூறப்பட்டன. (௯௪)

சிவயோகியாரை நாயனார் எதிர்கொண்டேத்தல்.

நண்ணிய தவச்சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காதல் அன்பர்தாம்
புண்ணியத் தொண்டராம் என்று போற்றிசெய்
தெண்ணிய வகையினால் எதிர்கொண் டேத்தினார்.

(எ - து.) (தமது இல்லத்தைநோக்கி) மெய்த்தவத்திற் சிறந்த சிவயோகநாதராய் வந்தவரை, கண்ணுறக்கண்ட அன்பர்பால் ஆசையுடைய அன்பராகிய

நாயனார், (இச்சிவயோகியார்) சிவபுண்ணியமே ஒருருக்கொண்டுவந்த திருமேனியரா மென்று (தமது உள்ளத்தில் எண்ணி) அங்ஙனம் எண்ணிய அம்முறையினால் உண்டாகிய அகமகிழ்ச்சியினால், எதிர்கொண்டுசென்று வாயாரப்புகழ்ந்து வணங்கித் துதித்தனர் என்பதாம்.

புண்ணியத் தொண்டராம் என்று, எண்ணியவகையினால் எதிர்கொண்டு போற்றி செய்து ஏத்தினார் எனக்கூட்டுக.

யோகியாய் யோகமுத்தி உதவும் இறைவனே இங்கு எழுந்தருளியதுபோலுமென்று எண்ணிய அருமைதோன்ற சிவயோகநாதர் என்றும், இத்தகைத்தான சிவயோகிகள் கொள்ளுந்தவமே சிவனைப் பொருந்துந்தவமாம் என்னும் அதன்பெருமை தோன்றவும், ஏனையோர்கொள்ளுந் தவங்களெல்லாம் அவமாம் என்னும் அதன் சிறுமைதோன்றவும், நண்ணிய தவச்சிவ யோகர் என்றும், அங்ஙனமான அவ்யோகிகளை யொழித்துச் சிவயோகிகளைக் காணுந்தோறும் பெருகும் அன்பிற் சிறந்தவர் நாயனாரென்னும் அப்பெருமைதோன்ற அன்பர்தாம் என்றும், அவ்வன்பர்க்குள்ள ஆசையும் தவச்சிவ யோகிகள்பாலே செல்லும் நெறியுடைத்தேயன்றி அவ்யோகிகள்பால் செல்லா நெறியுடைத்தென்னும் அவ்வருமைதோன்ற நண்ணுறு நேசத்தில் காதல் என்றும், அடியாராக எவரைக்காண்கினும் நாம் சிவனெனக் காண்பதுபோல் இவரை நாம் காண்ப தொழிந்து சிவயோகியாகிய இவரே தம்மைச் சிவமாக நம்மைக் காணும்படிச் செய்ததே இஃது என்னபுண்ணியமோ வென்று அவர்கண்ட காட்சியின் அருமைதோன்ற புண்ணியத்தொண்டராமென்று போற்றிசெய்து என்றும், இவ்வரிய புண்ணியத் திருமேனியுடையார் வருவதற்குமுன் நாம் சென்று பணிந்து போற்றுது தாழ்ப்போமாயின் இவன் பாவத்தில் ஆழ்ந்திருக்கின்றான் என்று அவர் எண்ணவருவதாகிய அபராதம் உண்டா மென்று எண்ணி விரைந்து சென்று பணிந்து புகழ்ந்தாரென்னும் அச்சிறப்புதோன்ற புண்ணியவகையினால் எதிர்கொண்டேத்தினார் என்றுங் கூறினார்.

இத்திருப்பாசுரத்தால், சிவனடியாரது கோலம் அதிகாரம் தாம் சிவனெனக் காணச்செய்த தென்றும், இன்று வந்த சிவயோகியினது கோலம் தம்மைச் சிவமெனக் காணச்செய்த தென்றும் வியந்து ஏற்றிப் போற்றியதைக் கூறப்பட்டது. (கரு)

பிறைவளர் சடைமுடிப் பிரானைத் தொண்டரென்
றறையுளில் அணைந்துபோ ருவகை கூர்ந்திட
முறைமையின் வழிபட மொழிந்த பூசைகள்
நிறைபெரு விருப்பொடு செய்து நின்றபின்.

(இ - ள்.) பிறைவளரும் சடைமுடியினையுடைய இறைவனைத், தொண்டராகிய அடியவரென்றெண்ணி, அவ்வடியாரைத் தமதிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சேர்த்து,(அதனால்)மகிழ்ச்சியானது மேலிட்டதிகரிக்க, (அவ்வதிகரிப்பினால்)தம்முள்ளத்துள் நிறைந்த பெரிய ஆசையோடு, அடியார்களைப் பூசிக்கும்படிச் சொல்லப்பட்டுள்ள பூசைகளின் கிரமப்படியே, அம்முறைமையினாற் பூசனைசெய்து முற்றியபின், நின்றவராய் மீண்டும் என்பதாம்.

போருவகை கூர்ந்திட, நிறைபெரு விருப்பொடு, வழிபட மொழிந்தபூசைகள் முறைமையிற் செய்து நின்றபின் எனக்கூட்டுக.

* தொண்டரைச் சடைமுடிப்பிரானாக எண்ணும் முறைமையொழிந்து, சடைமுடிப்பிரானைத் தொண்டராக எண்ணிய அந்த ஏற்றந் தோன்ற பிரானைத் தொண்டர்

* இறைவனல்லாத தொண்டரை இறைவனாக எண்ணுதல் சிறப்புடைத்து. அஃதேபோல் இறைவன் தொண்டனாகவரின் தொண்டனாக வெண்ணுவதே சிறப்புடைத்தாம். எங்ஙனமெனின் "தாவர சங்கமங்கள் என்றிரண் டுருவினின்று மாபரன்

என்றும், தமது இல்லம் தொண்டர்க்கே உரித்தாம் ஆகலான் அவரில்லத்துக்கு அவரைக் கொண்டுபோய்ச் சேர்தல் இன்றியமையாத செயலென்னும் அச்சிறப்புத் தோன்ற உறையுளில் அணைந்து என்றும், தமதிடத்தைத் தொண்டர் வீடாகத் தாம் எண்ணியது போல் அத்தொண்டரும் தமது வீடாகவே எண்ணி அவ்வீட்டில் நுழைந்து வீற்றிருக்கப்பெற்றதனால் அவருக்கு உண்டாகிய அகமகிழ்ச்சியின் மிகுதி இத்துணைத்தாமென்பது தோன்றப் பெருவகை கூர்ந்திட என்றும், அப்பெருவகையினால் இங்கெழுந்தருளி நமக்குப் பெருவகையைத்தந்த இத்தொண்டர் பெருமானுக்கு பெருவகையை விளைவிக்க நாம்செய்யும் செயல்யாது! என்றெண்ணி அத்செயலில் அடங்காத ஆசையை உடையவராயினர் என்னும், அவ ரன்பின் மிகுதிதோன்ற நிறைபெரு விருப்பொடு என்றும், "எண்ணிலாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும் உண்மையாவது பூசனை" யாகலான் அவ்விறைவரே யாகிய இவருக்கும் அப்பூசைகளை விருப்பமுடைத்தாம் என்று துணிந்து அப்பூஜாவிதிகளைக் குறைவின்றி முற்றுஞ்செய்து இறைவனை மகிழ்வித்தனரென்னும் அவராற்றல் தோன்ற வழிபடமொழிந்த பூஜைகள் முறைமையின் செய்து என்றும், சிவபூஜையை முற்றுப்பெறச் செய்யவல்ல தொண்டர் பூசையை நாம்செய்யும்படி வந்த இப்பெரியகருணைக்குக் கைம்மாறு இனி அவர்வேண்டிய தளித்தலே யாமென்று செய்நன்றி மறவாதவர் என்னும் அவரது அடிமைத்திறந் தோன்ற நின்றபின் என்றும் கூறினர்.

இத்திருப்பாசுரத்தான், இறைவனார் தொண்டராகவந்து, தாம்செய்தபூஜையை எற்று மகிழ்ந்தருளியிருக்கும் பேரருளுக்கு யாம்செய்யத்தகும் கைம்மாறு யாதுகூறுவரோ என்று அவரது வாய்மொழியை நாயனார் நோக்கிநின்றனர் என்று கூறப்பட்டது. (௧௭)

நாயனாரிடத்தில் ஓடுகொடுத்தல்.

எம்பிரான் யான்செயும் பணியெ தென்றனர்
வம்புலாம் மலர்ச்சடை வள்ளல் தொண்டனார்
உம்பர்நா யகனும் இவ்வோடுன் பால் வைத்து
நம்பிநீ தருகநாம் வேண்டும் போதென்று.

(எ-து.) நறுமணங்கமழும் மலர்கள் சூடிய சடைமுடியினையுடைய வள்ளலாகிய இறைவனது தொண்டனாராகிய திருநீலகண்டநாயனார், எங்கள் பெருமானே! அடியேன் அடிகளுக்குச் செய்யத்தக்க பணி யாதென்று கேட்டனர். சிவயோகியாய் வந்த மஹாதேவனாகிய இறைவனும் (அப்பெரியோரைநோக்கி) நம்பீ! என்னிடத்துள்ள இத்திருவோட்டை உன்னிடத்தில் கொடுக்கின்றேம், அதனை நீவைத்திருந்து நாம் கேட்கும்பொழுது நீ கொடுக்கக் கடவாயாக என்பதாம்.

வம்புலாமலர்ச்சடை வள்ளல்தொண்டனார், எம்பிரான் யான்செயும் பணியெது என்றனர், உம்பர்நாயகனும், நம்பி, இவ்வோடு உன்பால்வைத்து, நாம் வேண்டும்போது, நீதருக என்றுகூட்டுக.

செய்நன்றிமறவாமைக்கு நாம் செய்யத்தகும் பணியாதென்று எண்ணி வினவிய அப்பெரியோர் அடியார் யாதுவேண்டினும் இல்லையென்னாது அளித்தற்கு அவர் பெரிய

பூசைகொண்டு மன்னுயிர்க் கருளைவைப்பன்" என்ற சுருதியானறிக. எனவே தாவரரூபமாகக் காணப்படும் இறைவனே சங்கம உருவமும் உடையவனாகலான் தாவரரூபமாகச் சிவனைக்காணும்பொழுது சிவனாகவும், சங்கமரூபமாகக் காணும் பொழுது தொண்டராகவும் காணுதல் சிறப்புடைத்தாமென்க. ஆகவே இங்கு சங்கமராக வந்தவர் இறைவனேயாகலான் சங்கமராகவே எண்ணிய அவரது புண்ணிய அறிவின்சிறப்புத் தோன்ற சடைமுடிப்பிரானைத் தொண்டரென்று உறையுளில் அணைந்தனரென்றார்.

வன்ளற்றன்மையுடைத்தானவர் என்று அவரதுபெருந்தகைமை அறிய, வம்புலா மலர்ச் சடை வள்ளல் தொண்டனார் எனவும், வந்தசிவயோகியார் அந்நாயனாரை வள்ளலாக்கிய வள்ளலே' யாகலினானும். அவரிடத்துள்ள பொருளெல்லாம் தாம்கொடுத்த பொருளே யாகலினானும், தாம்கொடுத்த பொருளைத் தாம் மீண்டும்கேட்டல் அறமன்றாகலானும், இவர்பால் ஒருபொருளும் கேட்கவந்தவ ரன்றாகலானும், *"பாத்திரம் சிவம்என்று பணிதிரேல், மாத்திரைக்குள் அருளும் மாற்பேறர்" என்ற தமிழ் வேதமொழிப்படி தம்மைப் பாத்திரமாக ஆள்பவருள் இவரைப்போலும் தம்மை யாள்பவரில்லை என்னும் அந்த வுண்மைதோன்றவே வந்தவராகலினானும், அவர்பால் ஒன்றும் வேண்டாது தாம்வந்தவுண்மை யாவரும் அறிய இவ்வோடு உன்பால் வைத்து நாம் வேண்டும்போது நம்பி ! நீ தருக என்றார்.

இத்திருப்பாசுரத்தால், நாயனார் யான்செய்யும்பணி யாதென்றுகேட்க, நாயனாருக்கு நாயகனாகிய உம்பர்நாயகன் வேறொருபணியும் சொல்லாது நாம்கொடுக்கும் பாத்திரத்தை மீண்டும் நாம்கேட்கும்போது கொடுப்பதேயாம் என்றருளியதைக் கூறப்பட்டது.

எனவே, ‡"அன்பிலாரெல்லாந் தமக்குரியர்" என்றபடி, இறைவன்பால் அன்பில் லாத உலகினரெல்லாம் அவ்விறைவன்பாலே தாம் அனுபவிக்கப்படும் பொருள்களெல் லாம் பெற்றவராயிருந்தும், அவ்விறைவனுக்கும் அவனடியார்களுக்கும் ஒன்றேனுங் கொடுப்பதற்கு எண்ணாது ஒளிக்குந் தன்மையையுடையராயினரென்னும் அவரது கொடுமை யும், "அன்புடையார் என்பும் உரியர்பிறர்க்கு" என்றபடி, ஒழுகவல்ல இவரது நன்மை யும் வெளிப்படுத்தப் பாத்திரமொன்றைத் தான்கொடுத்து நாம்வேண்டும்போது தருக வென்று வைத்தது கூறப்பட்டது. (௧௫)

தன்னை யொப்பரியது தலத்துத் தன்னுழை
துன்னிய யாவையும் தூய்மை செய்வது
பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவ
தின்னதன் மையதிது வாங்கு நீயென.

(இ - ள்.) (நம்பீ! என்றால் கொடுக்கப்படும் பலிபாத்திரமாகிய இத்திருவோடு) இவ் வுலகின்கண் தனக்குச் சமானமாக ஒருபொருளையும் சொல்லுவதற் கில்லாமல் தானே மேம்பட்டுள்ளது, தன்னிடத்துப் பொருந்திய எல்லாப்பொருளையும் பரிசுத்தஞ் செய்ய வல்லது, இத்தன்மைத்தாகிய சிறப்பினையுடையதாகும். ஆகலின், இதனை நீ எளிதாக நினையாமல் பொன்னைப்பார்க்கிலும், இரத்தினத்தைப் பார்க்கிலும் சிறந்ததாகப் பாது காத்தல்வேண்டும். இதனை நீ வாங்குவா யென்றனர் என்பதாம்.

தலத்துத் தன்னையொப்பரியது எனக்கூட்டுக.

தனக்கு ஒருவரையும ஒப்பாக உடையவனலலாத இறைவனைப பாத்திரமாகப் பெற்றாரால் ஆளப்படும் பாத்திரம் இஃதேயன்றி இவ்வுலகின்கண் வேறில்லை என் பார். தலத்துத் தன்னையொப்பரியது என்றார். மூழ்கினாரைச் சிவத்துரோகங்களாகிய பாதகங்களினின்றும் நீக்கிப் பரிசுத்தமாக்கவல்ல தீர்த்தவிசேடம்போலும், பரிசுத்தம் அடைந்தவராய்த் தம்மைத் தெரிசிக்கவந்தாரைச் சிவமாந்தன்மையைப் பெறுவிக்கவல்ல மூர்த்திவிசேடம்போலும், தம்மிடத்தில் நிலைபெற்றுவாழும் உறுதியுடையாரைச் சிவ மாந்தன்மையை அடையவொட்டாது அலைக்கவல்ல பாசச்செயலைச் செய்யவொட்டாது அருட்பணியையே செய்விக்கவல்ல க்ஷேத்திரவிசேடம்போலும், இம்மூன்று விசேடத் தையும் தம்மை யடைந்தார்க்கு உபதேசித்து அவ்வப்பிரயோசனத்தை யடையுமாறு செய்

* திருநாவுக்கரசுகள் தேவாரம். குறுந்தொகை.
‡ திருக்குறள் அதிகாரம் - அன்புடைமை.

விக்கவல்ல சங்கயசொரூபமா யெழுந்தருளியிருக்கும் சிவயோகிகளைப்போலும், பொய் மையாளரால் விரும்பப்படும நற்குலம் இல்லாதவராயினும் மெய்மையாளரால் விரும்பப் படும் உள்ளன்புடையராயின், அவரிடம் அன்னத்தையும் சுத்தமாக்குந் தன்மையிற் சிறந்ததென்னுந் தன்மைதோன்ற தன்னுழை நன்னயபாவையுந் தூயமைசெய்வது என்றார். பொன்னை ஓடாகவும், மணியைக் கல்லாகவுங் கருதி, நாம் இவ்வோட்டைப் பாதுகாக்குந் தன்மையுடையேம், பொன்னையும் மணியையும் போற்றும் இயல்பினை யுடையார் உலகினர். ஆகலின் நீ அவர்களைப்போல் அவைகளைப் பொருளாககருதாது, இத்திருவோட்டையே நீ பாதுகாக்கப்படும் பொருளாக எண்ணிப் போற்றுவாயாக என் பார் பொன்னினும் மணியினும் போற்றுவது என்றார். பொன் மணி முதலிய வற்றினும் மேம்பாடாகப் போற்றுந்தன்மையும் உன்னிடத்து உள்ளதென்பது நீ ஓட ளிக்குந்தொண்டால் காணப்படலால் இதனை வாங்கத்தக்கவன் நீயே என்பார். இது வாங்கு நீ என்றார்.

இத்திருப்பாசுரத்தால், எத்தனைக்காலம் பரமயோகிகளையும் ஞானிகளையும் ஓரிமைப் பொழுதில் அபரிசுத்தமாக்கி வவர்களை அபாத்திரமாக்கவல்ல பெண்ணாசையை, பெண் ணுருவத்தை யுடைய தன்மனைவியினிடமேயே அப்பெண்ணாசையை நீத்தார், பெண் டைய அருள்வசப்பட்டு எம்மால் ஆளப்படும் அன்பாகாரமாய் விளங்குந் தன்மை யுவரென்று யாவருக்கும் அறிவிக்க அவரால் தந்த திருவோடாகிய பாத்திரத்தின் மைக் கூறப்பட்டது. (௧௬)

ஓட்டைக்காவலிடத்தில் வைத்து இறைவனைக்காண்டல்.

தொல்லைவேட் கோவர்தம் குலத்துள் தோன்றிய
மல்குசீர்த் தொண்டனார் வணங்கி வாங்கிக்கொண்
டெல்லையின் மனையிலோர் மருங்கு காப்புறும்
எல்லையில் வைத்துவந் திறையை எய்தினார்.

(இ-ள்.) பழமைஎனபபடும் குயவர்குலத்துள் அவதாரஞ்செய்த, நிறைந்தபுகழினை யுடைய திருநீலகண்டநாயனார், (சிவயோகியாரால் கொடுக்கப்பட்ட திருவோட்டினை) அடிபணிந்து (இருகையாலும) வாங்கிக்கொண்டு, அக்கணமே விரைவாய்த் தமது வீட்டி னுள்ளே மிக்ககாவலுள்ள ஓர் அறையில் ஓர்பக்கமாகவைத்து, உடனே சிவயோகியார் பால் வந்தடைந்தன ரென்பதாம்.

அனுலோமப் பிரதிலோமங்களைப்போல் இடையில்வந்த குலங்களைப்போ லல் லாமல் விதிமுறையாய் விதிக்கப்பட்டுள்ள குலங்களைப்போல் பழமை யுடைத்தென்பார் தொல்லைவேட்கோவர்தங் குலம் என்றார். திருநீலகண்டமென்ற ஓர் சொல்லாணையால் கடத்தற்கரிய காமத்தைத் தமது தொண்டின் திறத்தால் மிக எளிமையாய்க் கடந்த பெரும்புகழாளனார் என்பார் *மல்குசீர்த் தொண்டனார் என்றார். தன்னையொப்பரியா ராகிய சிவயோகியார் "தன்னுழை துன்னியயாவையும் தூய்மைசெய்வது" ஆகலின் இதனை நீவாங்குவாய் என்று நமதுகையிற்கொடுக்க எண்ணியதுபோலும் என்றார்

---

* மல்குசீர்என்றது - திருநீலகண்டமென்னும் ஆணைவழியில் நின்றதனால் உண் டாகிய புகழ் எனவும், மனையில் ஓர்மருங்கு என்றது - உடம்பகத்துள்ள உயிர் உணர்வு எனவும், காப்புறும் எல்லைஎன்றது - இந்திரியவிடயங்களில் செலுத்தி மயங்கச்செய்து அறிவினை மறக்கச்செய்யவல்ல மனத்தின் சார்பொழிந்து, இந்திரிய விடயங்களா லுண் டாகும் சிற்றின்பத்தைமாற்றிப் பேரின்ப சுகானுபவம் உண்டாதற்கான அருள்நெறியில் நிற்கச்செய்யவல்ல வைராக்கியாதி சீலகுணங்களெனவும், வைத்து என்றது -அக் குணங்களில் தம்முணர்வைவைத்து அவ்வுணருருவாய் அருளைமறவாது வைத்துஎனவும், இறையை எய்தினரென்றது - அவ்வருளால் சிவமேயாயின ரெனவும்பொருள்கொள்க,

நம்மை அவ்வருளுக்குள்ளாக்கித் தூய்மைசெய்வாரோ என்று அவ்வருளைப்பணிந்து அருளுருவாகிய அத்திருவோட்டினைப் பெற்றுக்கொண்டன ரென்பார் வணங்கி வாங்கிக்கொண்டென்றார். பணிந்து பெற்றுக்கொண்ட திருவோடாகிய அருளை மறக்கத்தரும் மனத்துள் வையாது திருநீலகண்டத்தின்கண் மறப்பினை யறியாத தமது உடம்பகத்துள்ள வுணர்வினுள்ளே அக்கணமே வைத்தனரென்பார் ஒல்லையில் மனையில் ஓர்மருங்குவைத்து என்றார். அவ்வுணர்வென்னும் அவ்விடம் தமது மனையாட்டியாரிட்ட ஆணையை இளமைப்பருவந்தொட்டு முதுமைப்பருவம் வந்துள்ள அப்பருவங்காறும் காத்துள்ள காவலிடமென்பார் காப்புறும் எல்லை என்றார். உனது அருளை ஓர் ஓட்டுருவாகக் கைக்கொண்டு இதனை நீ வாங்குவாயென் றளித்ததனை மீண்டும் தேவரீர் வாங்காது அவ்வருளை என்பாலேயிருத்தி அவ்வருள்வழியே உன்னை நான் வந்தணுக திருவுளத்தெண்ண வேண்டுமென்னும் எண்ணத்துடன் சிவயோகியார்பால் வந்தடைந்தன ரென்பார் இறையை வந்தெய்தினர் என்றார்.

இத்திருப்பாசுரத்தான் சிவயோகியார் கொடுத்த திருவோட்டை, நாயனார் பெற்றுக்கொண்டு, காவலுட்சிறந்த ஓர்வீட்டினுள்வைத்து, மீண்டும் சிவயோகியார்பால் வந்தார் என்பதும், திருவோடாகிய திருவருளைச் சிவனார்பாற்பெற்று காவலுட்படாத மனத்தகத்துள்வைக்காமல், உணர்வகத்துள் வைத்தாரென்பதுங் கூறப்பட்டது. (கஎ)

வைத்தபின் மறையவ ராகி வந்தருள்
நித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்
உய்த்துடன் போய்விடை கொண்டு மீண்டனர்
அத்தர்தாம் அம்பலம் அணைய மேவினார்.

(எ - து.) (திருவோட்டை ஒருவரும் போதற்கிடனில்லாத ஓர்காவலுள்ள வீட்டில்) வைத்துவிட்டுச் சிவயோகியார்பால் நாயனார் வந்தபின்னர், பிராஹ்மண வேடங்கொண்டு வந்தவராகிய இறையவனார், (நாயனார் வீட்டைவிட்டுத் தமதிடத்தை நோக்கி) நடக்க, (அவரருகே) நின்றவராகிய நாயனாரும் (பிரிவாற்றாமையான் அவர்முன்போகாது அவரை முன்னே) போகும்படிச் செய்து தாம் அவர்பின்னே விடாதுசென்று, (பின்னர் அம்மறையவனார்) விடைகொடுக்க, (அதனைத்தடுப்பதற்குக் கூடாதவராய் அவ்விடையை) மேற்கொண்டு மீண்டனர். அவரை யாட்கொள்ளவந்த அம்பலவாணரும், தமது சிற்றம்பலத்தைச் சேருவாராய் எழுந்தருளினார் என்பதாம்.

திருவோட்டை வீட்டினுள்ளேயும், அவ்வோடுருவாய் நின்ற அருளைத் தமது உள்ளத்திலேயும் வைத்துவந்தபின் என்பார் வைத்தபின் என்றார். திருவோட்டில் திருவருளையும், அந்தணர் வடிவத்தில் தமது சிவரூபத்தையும் மறைத்துவந்தனரென்பார் மறையவராகி என்றார். இவ்வாறு வந்தது இறைவனுக்குத் தம்பால் அருள்வந்து வந்ததென்பார் வந்தருள் என்றார். நாயனார் உள்ளத்தின்கண் எப்பொழுதும் நீங்காது வாழ்பவரென்பார் நித்தனார் என்றார். நாயனாருக்கும் அவரது மனைவியாருக்கும் வளர்ந்துவரும் முதுமைப்பருவம் நீங்கவும், அவ்விருவரும் கொண்டிருக்கும் ஆணை தற்போதத்தில் நின்று நீங்கவும் நீங்கினரென்பார் நீங்கிட என்றார். இறைவன் எண்ணியவாறே அவ்வருட்செயல் நிகழ நாயனார் நின்றனர் என்பார் நின்றதொண்டரென்றார். இறைவனாகிய நீ இனிகாட்டும் அருள்வழி முன்னாக, நான் பின்னாகச்செல்லும் செயலைக்காட்டி நீவரும் நாள் எந்நாளோ என்று அதனை யுணர்த்துவார்போன்று அவ்விறைவன்பின் போயினரென்பார் உய்த்துடன்போய் என்றார். இறைவனும் அஃதுணர்ந்து அவ்வாறே நாம் காட்டவருவோமாக என்று விடைகொடுக்க அவ்விடையை நாயனாரும் உட்கொண்டு "நன்றேசெய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்குநாயகம்" என்று அவனாணையைக் கூடாது வந்தனரென்பார் விடைகொண்டு மீண்டனர் என்றார். நாயனார் மீண்டபின்னர்

நாயனாரைவிட்டு மீள்அறியாத இறைவனார், நாயனார் எண்ணியபடியே அந்தபல(பிரயோஜன)த்தை அவரடைய அருளிருக்கும் இடத்தை யடைந்தனரென்பார்—அத்தர்தாம் அம்பலம் அணையப்போயினார்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான், சிவயோகியாய் நாயனார்பால்வந்த இறைவனார் அவரிடத்தில் நின்றும் நீங்கித் திருவம்பலமாகிய தில்லையை யடைந்தாரென்றும், அவ்வம்பலத் தாடியினின்றும் நாயனார் மீண்டு தமது இல்லத்தை யடைந்தாரென்றும், சிவயோகியார் திருவோட்டைக் கொடுத்ததற்கும், அதனை நாம் வாங்கிவைத்ததற்கும் உரிய பிரயோஜனத்தை நாம் என்று அடையப்பெறுவோமோ என்று எண்ணித் திரும்பினார் நாயனாரென்றும், சிவயோகியாரும் அந்தப்பிரயோஜனத்தை அவரடைவதற்கே அம்பலத்தை யடைந்தாரென்றுங்கூறப்பட்டது. அம்பலமென்றது அந்தப்பிரயோஜனம் எனப்பொருள்.(௧அ)

இறைவனார் மீளவும் வருதல்.

வேறு.

சாலநாள் கழிந்த பின்பு தலைவனார் தாமுன் வைத்த
கோலமார் ஓடு தன்னைக் குறியிடத் தகலப் போக்கி
சீலமார் கொள்கை யென்றுந் திருந்துவேட் கோவர் தம்பால்
வாலிதாம் நிலைமை காட்ட முன்புபோல் மனையில் வந்தார்.

(எ - து.) (நாயனாரைவிட்டு அம்பலத்தை யடைந்த) இறைவனார், அனேகநாள் சென்றபின்னர், (மாதரைத்தீண்டேன் என்றுகொண்ட) சீலத்தினின்றும் என்றும் மாறுபடுதலை யறியாத திருந்திய சித்தத்தையுடைய நாயனார்பால், ஆன்மசுத்தியினுடைய நிலைமையை விளக்கமாய்க்காட்ட (அந்நாயனார்பால் நாம்வேண்டும்போது தருக என்று) தாம் முன்னே கொடுத்து வைத்திருந்த, (தன்னிடத்துப் பொருந்திய எவ்வகைப்பொருளையும் தூய்மைசெய்யவல்ல கோலத்திற்சிறந்த திருவோட்டை நாயனார்) காவலாகவைத்திருந்த இடத்தினின்றும் அகன்றுபோம்படிச்செய்து, வெண்கோவணம் திருநீற்றொளி முதலியவற்றோடு எவ்வண்ணம் முன் சிவயோகியாய் வந்தனரோ, அவ்வண்ணமாகவே நாயனாரது திருமாளிகையைநோக்கி வந்தனர் என்பதாம்.

ரா. சாலநாள் கழிந்தபின்பு, சீலமார் கொள்கை, என்றுந்திருந்து வேட்கோவர் தம்பால், வாலிதாம் நிலைமை காட்ட, தாம் முன்வைத்த கோலமார் ஓடுதன்னைக், குறியிடத் தகலப்போக்கி, முன்புபோல், மனையில்வந்தார் எனக்கூட்டுக.

ஆன்மாக்களுக்குத் தனுகரண புவனபோகங்களைக் கொடுத்தகாலம் - அனாதிபெத்தக்காலம். அத்தனுவாதிகளைத் தன்னுடைமையாகக் கேட்கவருங்காலம் முத்திக்காலம். அவ்விருகாலத்தையும் அளவிடத்தொடங்கின் அது அளவிடக்கூடாதாகலின் அக்குறிப்புத்தோன்ற இத்தனைநாள் கழிந்துவந்தாரென்று கூறாது சாலநாள் கழிந்தபின்பு என்றார்.

ரல் சாலநாள் என்றது - அனாதிபெத்தக்காலமெனவும், கழிந்தபின்பு என்றது - அப்பெத்தநிலை நீங்கப்பெற்ற முத்திக்காலமெனவும், ஈண்டு சாலநாள்கழிந்த என்பதில் பெத்தமுத்தி என்னும் இரண்டுகாலமும் அடங்குதலின் தாமுன்வைத்த என்றது - எந்தக் காலத்தைக் குறித்ததோவெனின் முத்தி - சீவன்முத்தி, பரமுத்தி என இருவகையாகலின், ஈண்டு முன் என்றது - சீவன்முத்தி நிலையைக்குறித்தகாலமென்க. அஃதாவது திருவோடு கொடுத்தகாலம். மீண்டும் வந்தகாலம் - பரமுத்திநிலையைக் குறித்ததென்க. அனாதிகாலந்தொட்டு கொடுத்துவந்த தனுகரணாதிகளாகிய ஓடு மாயாமல சம்பந்தப்பட்ட ஓடு. சீவன்முத்தி நிலைக்கண்கொடுத்த இவ்வோடு - அருளுருவாகிய ஓடாகலின் கோலமார் ஓடு என்றார். எனவே - அது இருள்மயமாகிய அஞ்ஞானசம்பந்தமுடையது. ஒளிமயமாகிய ஞானசம்பந்தமுடையது என்னும் பொருளைக்குறித்ததென்க.

"தனக்கென வோர்செயலற்றுத் தானதுவாய் நிற்கில், நாதனிவன் உடல் உயிராய் உண்டுறங்கிநடந்து, நானுபோகங்களையும் தானுகச்செய்து, பேதமற நின்றவனைத் தானுக்கி விடுவன்" என்று உண்மைநெறியிற் கூறியபடி நாயனுர் சீவன்முத்தி நிலையராய் இறைவ னோடு ஏகமாகி எவ்விடத்தும் இறைவனருளன்றி ஒன்றையுஞ் செய்யாராய் வாழ்பவ ராகலின் அந்நாயனுரும், திருவோடுருவா யிருக்கின்ற அருளும், வேருயிருத்தல் எவ்வாற் ருனுங் கூடாது என்னும் அவ்வுண்மைதோன்ற திருவோடு இருந்தவிடத்திரவண்ணம் இறைவன் செய்தனனுகலின் ஓடுதன்னைத் தறியிடத்துதலப்போக்கி என்ருர்.

இறைவன் பாசக்ஷயம் வரப்பெருத சீவர்களுக்குச் செய்யுஞ் அருட்செயலைத் தான் வேருய்நின்று இருவினையின் வழியாய்ச் செய்வன். சீவன்முத்தர்களுக்குச் செய்யும் அருட்செயலைத் தான் அவர்களேயாய் அவர்கள் செய்யும் செயலெல்லாம் தன்செய லாகவேகொள்வன். ஆகலின் அந்நிலையினை யுடையராயினுர் நாயனுர் என்று குறித்தற்கு சீலமார்கொள்கை என்றுந் திருந்துவேட்கோவர் என்ருர்.

இங்ஙனமான நிலையினை யுடையார் இந்நாயனுர் என்பதை இறைவன் அறிவித்தா லன்றித் தாமே உயிர்கள் அறியாராகலான் வாலிதாம் நிலைமைகாட்ட வந்தார் என்ருர்.

சீவன்முத்திநிலைக்கண் எவ்வாறு சிவதரிசனமாமோ, அவ்வாறே பரமுத்திநிலைக் கண்ணுமாகலான் முன்புபோல்வந்தாரென்ருர்.

இத்திருப்பாசுரத்தான், சாலநாள் என்றது - அருதிகாலம் எனவும், பின்பு என்றது முத்திக்காலமெனவும், முன் என்றது சீவன்முத்திக்காலம் எனவும், கோலமாரோடு என் றது ஞானமயமாய்ப் பிரகாசிக்கும் அருளுருவெனவும், குறியிடத் தலைப்போக்கி என்றது ஒருருவாய்நின்ற அருள் அவ்வுருவாயிராது நாயனுரது அறிவுருவமாய் நின்றதெனவும், சீலமார் கொள்கை யென்றுந் திருந்துவேட்கோவர் என்றது - வேட்கோவர் அருளோடு கலக்கப் பெற்ருராகலின் இவரது செயலெல்லாம் இவர்செயலன்ருய் அருட்செயலாகத் திருந்தப்பட்டு நின்றதெனவும், வாலிதாம் நிலைமைகாட்ட வந்தார் என்றது - அருட் செயலாய்நிற்கின்ற சுத்தத்தன்மையை உயிர்களெல்லாம் அறியுமாறு அருளேமுற்பட்டுக் காட்டவந்ததுஎனவும், முன்புபோல் என்றது பாசநீக்கத்தில் தரிசனத்துக்கு வந்தசிவமே அனுபவத்திலும் எனவும், கூறப்பட்டது. (கக)

இறைவன் திருவோட்டைக் கேட்டல்.

வந்தபின் தொண்டனுரும் எதிர்வழி பாடு செய்து
சிந்தைசெய் தருளிற் றெங்கள் செய்தவம் என்று நிற்ப
முந்தைநாள் உன்பால் வைத்த மொய்யொளி விளங்கும் ஓடு
தந்துநில் என்ருன் எல்லாம் தான்வைத்து வாங்க வல்லான்.

(எ - து.) (முன் ஓடளித்த இறைவனுர்) தமது மாளிகையை நோக்கி வந்தபின்னர், நாயனுரும் அவ்விறைவனுர் எதிரேவந்து (மிக்கஆவலுடன்) நமஸ்காரஞ்செய்து, தேவ ரீர் எங்களையும் ஒருபொருளாக எண்ணி இம்மனைநோக்கிவந்தது, எங்களால் செய்யப் பட்டுள்ள தவத்தின் விசேடந்தானென்று (மிகவணக்கத்துடன்) சொல்லாநிற்க, (எல் லாங்கொடுத்து வாங்கவல்லவனுகிய இறைவனுர் அவரைநோக்கி) நீ நிற்பதொழிந்து நான் முன்னொருநாளில் உன்னிடத்தில் கொடுத்துவைத்துள்ள மிக்கபிரகாசத்தோடு விளங்கும் திருவோட்டை, என்னிடத்தில் கொண்டுவந்து கொடுத்துவிட்டு நிற்பாயாக என்ருர் என்பதாம்.

சிவதரிசனம் எதிர்ப்படுவதற்கு முன் செய்ததொண்டே, சிவதரிசனம் எதிர்ப்பட்ட பின்னரும் செய்யவேண்டும் என்பது சித்தாந்தத்துணிபாகலின் வந்தபின்தொண்ட னுரும் எதிர்வழிபாடுசெய்து என்ருர்.

"பேரருள்பெற்றும் பெருரினமுழுங்கி நெஞ்சம்நெக்குருகி" அன்புபாராட்டுதல் மெய்யன்பராது செயலாகலின் சிந்தைசெய்தருளிற்று எங்கள்செய்தவம் என்றார்.

மெய்யன்புடையராகிய நாயனாருக்கு இனி அன்புநிறைவே சிவானுபூதி எனப் படும் சிவானந்த நிறைவாகலின், அச்சிவானந்தம் அப்பெரியோருக்கு நிறையும் வகை அவர்மனங் கசிந்து, உருகப்பெற்றாலன்றிக் கூடாதாகலான், அது கூடுதற்பொருட்டு அவர்பால் முன்புவைத்துள்ள அருளை (ஓட்டை) மிகவும்விரைந்து நாடினாராகலின் முந்தைநாள் உன்பால்வைத்த மொய்யொளிவிளங்கும் ஓடுதந்து நில்லேன்றார். தன் அன்பர்கள்பால் தனது அருளைவைத்துப் பின் அவர்கள்பாலுள்ள எனதெனப்படும் எல் லாப்பொருளையும் தனதாகவாங்கும் வல்லாளனாகலின் தான்வைத்து எல்லாம் வாங்க வல்லான் என்றார்.

இத்திருப்பாசுரத்தான், பாசக்ஷபண பண்ணுவதும், அருள்விளக்கம்செய்வதும், சிவா னந்தம் விளைவிப்பதும் தொண்டேயாகலான், நாயனாரும் அதனையே கடைப்பிடித்தா ரென்பதும், இறைவனும் அந்நிலையே அவர்க்கு நீங்காதிருத்தற்குத் தமது அருட்செய லைச் செய்யத்தொடங்கினு ரென்பதும் கூறப்பட்டது.

இதனால் எனதெனப்படும் பொருளை இறைவன் தனதாக எவர்கள்பால் வாங்க வல்லனோ அவர்கள்பாலே அவனருள் உளதெனவும், அங்ஙனம் வாங்கவல்லனல்ல னெயின் அவர்கள்பால் அவனருள் இலதெனவும் அறியக்கிடக்கின்றதென்க. (௨0)

நாயனார் திருவோடுகாணுமல் சோல்லிறந்து நிற்றல்.

என்றவர் விரைந்துகூற இருந்தவர் ஈந்த ஓடு
சென்றுமுன் கொணர்வான் புக்கார் கண்டிலர் திகைத்து நோக்கி
நின்றவர் தம்மைக் கேட்டார் தேடியும் காணார் மாயை
ஒன்றுமங் கறிந்திலா தார் உரைப்பதொன் றின்றி நின்றார்.

(எ - து.) சிவயோகியாய் வந்தவர் (எனது ஓட்டை என்னிடங்கொடுத்துப் பின்னர் நிற்கக்கடவாயென்று)மிகவிரைவாய்க்கூற, (அச்சொல்லைக்கேட்டநாயனார்) அந்தப்பெரிய சிவயோகியார் தன்னிடத்தில் கொடுத்த திருவோட்டை அவர்சொல்லியபடியே சீக்கிர மாய்க் கொண்டுவந்துகொடுக்க, (அவரதுசொல்விரைவினும் விரைந்து) சென்று திரு வோட்டைவைத்த அறைக்குட்போய்த் தான்வைத்த இடத்தில் பார்க்க, அவ்வோட்டைக் காணாதவராய் மனந்திகைத்து, தம்மோடு வந்து நின்றவராகிய மனைவியாரை நோக்கி நாம் இங்குவைத்தவோடு காணுதொழிந்ததற்குக் காரணம் என்னையென்று கேட்ட னர். (அங்ஙனங் கேட்டு அதற்கு மறுமொழிவருமளவும் ஆற்றாதவராய் தம்மனைமுற்றுந் தேடினர்.) தேடியும் காணாமையால் இஃதென்னமாயை என்று தாம் எண்ணவேண்டிய அளவும் எண்ணிப்பார்த்தும் (அம்மாயை சிவனார்செய்த மாயையாகலின்) ஒரு சிறிதும் அறியாராயினர். (அறிவதற்கில்லாதொழியவே) நாயனார் இஃது நாம் அறிவதற்கில்லா தொழியினும் இனிச்சிவயோகியாருக்குச் சொல்லும்சொல் யாதென்று எண்ணிப்பார்த்த னர். எண்ணிப்பார்த்தும் ஒருசொல்லும் அறிந்திலர். சொல்லும் இல்லாதொழியவே, பேசுஞ்சொல்லும் செய்யும்செயலும் ஒன்றுமின்றி அருளையே நாடிநின்றனர் என்பதாம்.

ஆன்மாக்களுக்கு ஆணவாதிபந்தம் நீங்குதற்பொருட்டுத் தனுகரணாதிகளை வெவ்வே றாகக்கொடுத்து வைத்துவருவதிலும், அவற்றால் மலபந்தம்நீங்கி அருள்நிலைகூட வருங் காலத்து, அத்தனுவாதிகள் பாசவிஷயங்களில் உழலாது, தன்னருள்வழியில்நின்று உழல அவைகளைத் தம்முடைமை என்றுகூறி வாங்கிவருவதிலும் தீவிரமுடையவனாக லின் விரைந்துகூற என்றார். இவ்வகைத்தான தீவிரமுடையவனே ஓடுதந்துநில்லென்று னாகலின் என்றவர் என்றார்.

அழிதலையுடைய யாகமுதலிய தவவிரதாதிகளுக்கு இந்திரன்முதலியோர் கர்த்தாக்களாயிருத்தல்போல், அழிவற்ற சரியையாதி மெய்த்தவங்கட்கு இவரே கடவுளாகலான் இருந்தவரென்றார்.

அம்மெய்த்தவத்திற்கு அபாத்திரமாகாது, பாத்திரமாயுள்ள நாயனாருக்குத் திரோத சத்தியால் ஓடுருவாயிருக்கும் அருட்பாத்திரத்தைக்கொடுத்து, பின் அவர் திரோதசத்தியின்செயலினின்று நீங்கி அருட்செயலின்வழியாய் நின்றுழல, அம்மெய்த்தவத்தலைவர் ஓட்டைத்தர, அது அங்ஙனமே திரோதவுருவமாய்நின்ற ஓடுருவொழிந்து, சிவயோகியாய் வந்த இறைவனது அருளுருவேயாய் அமைந்ததைக்காட்டி அவ்வருள்வழியில் உழல மறைந்ததாகலின் ஏந்தூடு கண்டிலர் என்றார்.

"நாயிற்கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய், மாயப்பிறவி உன் வசமே வைத்திட்டிருக்கும் அதுவல்லால், ஆயக்கடவேன் நானேதான் என்னதோ இங்கு அதிகாரம், காயத்திடுவாய் நின்னுடைய கழற்கீழ்வைப்பாய் கண்ணுதலே" என்ற திருவாசகப்படி, இறைவன் அருட்பணியில் நின்று அவன் ஏவியவற்றைச் செய்வோர், சரீரத்திற்புகுதற்கேதுவாய் நிற்கும் திரோதானசத்தியின்செயலும், திருவடியின்கீழ் புகுதற்கேதுவாய் நிற்கும் அருட்சத்தியின்செயலும் இறைவன்செயலன்றி இல்லையென் றுணர்ந்து எச்செயலும் செய்வோராகலின், "இதுவாங்குநீ" என்ற காலத்தினும் வாங்கினார், "உன்பால்வைத்து, நம்பி நாம்வேண்டும்போது நீதருக" என்றபோதும் காப்பிடத்தில் வைத்துவந்து "தேவரீர் அளித்தது உட்பட்டவாறேயிருக்கின்றேன்" என்று விடை கூறி அனுப்பினார், பின்னர் "சாலநாள்கழிந்துவந்து, முந்தைநாள் உன்பால்வைத்த ஓடுதந்திநில்" என்றுசொல்லியபடியே அவர்முன்னேதில்லவாழ் உள்ளேசென்றனராகலான்—சென்றுமுன்கொணர்வான்புக்கார்—என்றார்.

அருள்வசப்பட்டார்க்கும் திரோதச்செயல் நிகழுமாகலான், அத்திரோதச்செயலில் நின்றகாலத்தும், அதுவொழிந்து அருட்செயலில் தலைப்பட்டகாலத்தும், அவ்விருசெயலையும் இறைவன் உணர்த்த உணருந்தன்மையரேயன்றி, தாமே உணரும் சுதந்தரமிழந்தவராகலின் திகைத்தார் என்றார்.

உணருஞ்சுதந்தரம் இழந்த இவர் உணர்த்துஞ்சுதந்தரமுடையவனை "கூறுநாவே முதலாகக்கூறுங்கரணம் எல்லாம்நீ, தேறும்வகைநீ திகைப்புநீ தீமைநன்மைமுழுதும்நீ, வேறோர்பரிசு இங்கு ஒன்றில்லை மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில், தேறும்வகையென் சிவலோகா திகைத்தால் தேற்றவேண்டாமோ" என்ற திருவாசகப்படி, ஒடு காணாது திகைத்தகாலத்தும் அத்திகைப்பைப்போக்கி தெளிவிக்க இறைவனை நோக்குவது அருளாள்வார்க்கு இயல்பாகலான் நோக்கி என்றார்.

அங்ஙனம்நோக்கும் நோக்குடைய அவர் ஒரோவழி பொறிபுலன் கரணவசப்பட்டு, அவைகளின் உணர்வையும் செயலையுந்நாடி நோக்கினும், அவைகள் அருட்பிரகாசம் உடையார்முன்னே பிரகாசங்கெட்டிருக்குமேயன்றி ஒருணர்வையும் ஓர் செயலையும் உடையனவாகக் காட்டாவாகலின்—மாயையொன்றும் அங்கறிந்திலார்—என்றார்.

மாயைஎல்லாம் செய்யவல்ல மாயையே செயலற்றுநின்ற காலத்து அம்மாயையால் வசப்பட்டாரும், அம்மாயாவசப்பட்டபொருள்களும் பயனற்றுப்போவாரும், பயனற்றுப் போவனவுமாயிருக்குமேயன்றி பயன்படாவாகலான்—நின்றவர்தம்மைக்கேட்டார் நேடியுங்காணார்—என்றார்.

பாசச்செயலுமற்று, பசுச்செயலுமற்றுப்போனகாலத்து பனிவாக்குகளுக்குச் செயலில்லையாகலின்—உரைப்பது ஒன்றின்றி நின்றார்—என்றார்.

இதனால், இறைவன்தம்மடியார்களைத் தன்னருள் வழிநிற்கச்செய்யும் செயலின் திறத்தையும், அஃதேபோல் அவரும் அவ்வருட்செயலில் மாறுபடாது உழலுந்திறத்தையும் உலகம் உணர்ந்து உய்யுமாறு பிரகாசமாய் உணர்த்தியவாறென்க.

இத்திருப்பாசுரத்தான் நாயனார் தமது செயலற்று இனி மேல்விளைவதாகிய அருட் செயல் தோன்றாது நின்றநிலை கூறப்பட்டது. (உக)

உள்ளேசென்றநாயனாரை யழைத்தல்.

மறையவ னாகி நின்ற மலைமகள் கேள்வன் தானும்
உறையுளிற் புக்கு நின்ற வொருபெருந் தொண்டர் கேட்ப
இறையிலிங் கெய்தப் புக்காய் தாழ்த்ததென் என்ன வந்து
கறைமறை மிடற்றி னானைக் கைதொழு துரைக்க லுற்றார்.

(எ - து.) (நாயனார், சிவயோகியாருக்கு நாம் சொல்லக்கடவது என்னென்று திகைத்து உள்ளேநிற்ப) வெளியே அந்தணச் சிவயோகியாய் வந்துநின்ற உமாநாதனாகிய இறைவனும், அங்ஙனம் உள்ளேநின்ற அந்த ஒப்பற்ற பெரியதொண்டர் கேட்கும்படி (திருவோடுகொண்டுவரச் சென்ற நாயனாரே!) நீர், ஒருகொடிப்பொழுதில் என்னிடத்தில் திருவோடுடன் வருகின்றேனென்று உள்ளேபுகுந்தீரே! அந்த கொடிப்பொழுது நெடும்பொழுதாயும் என்னிடம் வருவதொழிந்து வாராதிருப்பது என்னென்று (பெருங் குரலிட்டுக்) கூவ, (அக்குரலொலி நாயனார் செவியில் அதிவேகமாய்ப் புக்கது; புகவும், திகைத்துநின்ற அத்திகைப்பினும் பெருந்திகைப்புடையராய்) சிவயோகியார்முன்னே வந்து அந்நீலகண்டரைக் கைகளால் அஞ்சலிசெய்து விண்ணப்பஞ்செய்யத் தொடங்கினார் என்பதாம்.

தன்னுருவையும், தான் செய்யவந்திருக்குஞ் செயலையும் பிறரறியாவண்ணம் வந்து செய்யவந்தனாகலின் மறையவனாகி என்றார். உருவையும் செயலையும் மறைத்தானாயினும் தன்னைமறைக்காது தான் நின்றனனாகலின் நின்ற என்றார். இறையில் இங்கு எய்தப்புக்காய் தாழ்த்தது என்னென என்று கூவியசொல் விடம்போல் நாயனார் செவியில் புகுந்ததாயினும், அச்சொல் அவருக்கு அருளையே செய்ய விரைந்துகூவியதாகலின் கறைமறைமிடற்றினானை என்றார். எனவே, கண்டத்தின்கண் காணப்படும் கறையாகிய விடம் தனக்குரிய கருநிறத்தைப் புறத்தில் காட்டியமேனும், அதன் அகத்துள் நின்றுசெய்தது அருளே யாதல்போல், கூவியசொல் புறத்தே வன்மையைக் காட்டியதேனும், அது செய்யப்போவது அருளேயாகலின் அங்ஙனங் கூறியதென்க. அவன் அருளன்றி வேறுசெய்யா னென்று குறித்தற்கு மலைமகள் கேள்வன் என்றார். இனி "உரைக்கலுற்றா"ரென்றது தாம் உள்ளத்துட் கொண்டிருக்கும் அச்சத்தைத் தாம் வாய்விட்டுச் சொல்லாமலே சிவயோகியார் உணரும்படி காட்டிய ஓர் அடையாளக்குறியன்றி, வணங்கிக் கூறத்தொடங்கினாரென்பதன்று.

இத்திருப்பாட்டான் இறைவன் தனது அருட்செயலை நாயனார்பால் செய்வதிலுள்ள விரைவும், நாயனார் இறைவனது அருட்செயலில் ஆட்பட்டொழுகுவதிலுள்ள விரைவும் கூறப்பட்டது. (உஉ)

நாயனார் இறைவரைப் பொறுக்கவேண்டல்.

இழையணி முந்நூன் மார்பின் எந்தைநீர் தந்து போன
விழைதரும் ஓடு வைத்த வேறிடம் தேடிக் காணேன்
பழையமற் றதனின் நல்ல பாத்திரந் தருவன் கொண்டிப்
பிழையினைப் பொறுக்க வேண்டும் பெருமவென் றிறைஞ்சி நின்றார்.

(எ - து.) (கைதொழுது உரைக்கலுற்ற நாயனார் யாதுகூறத் தொடங்கினாரெனின்) நூலிழையாலாகிய முப்புரிநூலையணிந்த திருமார்பினையுடைய எமது முதல்வரே! தேவரீர் அடியேனிடத்தில் கொடுத்துப்போன விருப்பத்தை விளைவிக்கும் திருவோட்டை, அடியேன் வைத்தவிடத்திலுங் காண்கிலேன், வேறு மற்றெவ்விடத்திலுந்

தேடியுங் காண்கிலேன். ஆகலின் தேவரீருடைய அந்தத் திருவோட்டைப் பார்க்கிலும் பழைமையானதாயும் நல்லதாயுமுள்ள ஓர் திருவோட்டைக் கொடுக்கின்றேன்; அதனைப் பெற்றுக்கொண்டு, எம்பெருமானே அடியேனுக்கு இப்பொழுது நேர்ந்த இந்த குற்றத்தைப் பொறுத்தருளல் வேண்டும் என்று வேண்டி அடிபணிந்து நின்றனர் என்பதாம்.

தேவரீர் அந்தணராயிருத்தலால் எவ்வுயிர்கண்மேலும் தண்ணளியைப் பூண்டொழுகல் விரதமாகலினானும், அந்தணராயிருத்தற் கேற்பச் சிவயோகியாராயும் இருத்தலான் * கோபம் பலிக்குமிடத்து அதனையெழாமல் அருளாற் றடுத்தல் கடனாகலினானும், அவ்வொழுக்கநெறி யுடையாரே அந்தணரும் சிவயோகியும் ஆவாரென்னுங் குறிப்புத்தோன்ற பெரும, எம்பிழையினைப் பொறுக்கவேண்டும் என்றார். அந்தணராதலைக் காட்டுதல் முந்நூல் ஆகலினானும், யோகி என்பதைக்காட்டுதல் திருவோடாகலினானும்,— இழையணி முந்நூன்மார்ப, விழைதரும் ஓடு,—என்றார். விழைதரும் ஓடு எனவே, சிவயோகிகள் திருவோடொன்றை விரும்புவாரேயன்றி பொன்முதலிய வேறெப்பொருளையும் விரும்பாரென்பதுதோன்ற விழைதரும் ஓடு என்றார். அடியேன் கொடுக்கும்வோடு தேவரீர்கொடுத்த வோட்டைப்போல் பழைமையானதே, அந்தவோட்டிற்கு, "தன்னையொப்பரியது" என்றும், தன்னுழைத் துன்னிய யாவையும் தூய்மை செய்வது என்றும், சிலநன்மைகளைக் கூறினீரே அந்த நன்மைகளும் உடைத்தானதே என அவருள்ளங்களிக்குமாறு கூறினாரென்பதுதோன்ற—மற்றதனின் நல்லபாத்திரம்— என்றார். அடியேன் அடியார்களுக்குப் பழைய நல்லபாத்திரங் கொடுத்துவந்தவனேயன்றி, அவர்களிடத்தில் ஒருபாத்திரமேனும் பெற்று வைத்தவனுமல்லேன்; வைத்து அவர்களுக்கு அதை இல்லையென்று சொல்லிக் கவர்ந்தவனுமல்லேன்; இன்றுதான் நீர் கொடுக்கவும், நான் வாங்கி வைக்கவும், அதனை இல்லை யென்று சொல்லவும் ஆயினேன். ஆகலான் இச்சொல்லை அடியார்களுக்கு என்றும் சொல்லிவந்தவனாக திருவுள்ளத்திற் கொள்ளற்க என்னும் அக்குறிப்புத்தோன்ற இப்பிழையினைப் பொறுக்க வேண்டும் என்றார். மற்றதனின் நல்லபழையபாத்திரம் அடியேன் தந்தாலும், தேவரீர் அதனைப் பெற்றுக்கொண்டபோதிலும், அடியேன் இல்லையென்னுஞ் சொல்லை சிவயோகியாகிய தேவரீரிடத்தில் வழங்கினேனாகலான் அது பெரும்பிழையேயாம். ஆகவே அப்பிழை தேவரீர் பொறுத்தாலல்லது தீருதலின்று. ஆகலின் எம்பிழையினைப் பொறுத்து என்னை யுய்விக்கவேண்டும் என்று பிழைக்கஞ்சி—இப்பிழையினைப் பொறுக்க வேண்டு—மென்றலுமாம்.

பழைய மற்றதனின் நல்லபாத்திரம் என்பதற்கு நீர்கொடுத்த பாத்திரம் பழையது, நான் கொடுக்கப்போகும் பாத்திரம் புதியது என்று பொருள்கொள்வாருமுளர்.

இத்திருப்பாட்டான் அந்தணராயும் சிவயோகியாராயும் இருப்பார்க்குக் கோபத்தைத் தடுத்தலும் அருளுடையராயிருத்தலும் இன்றியமையாச் செயலென்று அறிவுறுத்திக் தம்பிழையைப் பொறுக்குமாறு கூறப்பட்டது. (உ௯)

இறைவனார் தமது ஓடு கேட்டல்.

சென்னியால் வணங்கிச் சொன்ன தொண்டரைச் செயிர்த்து நோக்கி
என்னிது மொழிந்தவா நீ யான்வைத்த மண்ணோ டன்றிப்
பொன்னினால் அமைத்துத் தந்தா யாயினுங் கொள்ளேன் போற்ற
முன்னைநான் வைத்த ஓடே கொண்டுவா என்றான் முன்னோன்.

(எ - து.) (பிழையினைப்பொறுக்கவேண்டும் என்று) தலையால்வணங்கிச்சொல்லிய நாயனாரை (சிவயோகியாய் வந்த இறைவன்) கோபித்துப்பார்த்து, நீ இது மொழிந்த

* திருக்குறள் வெகுளாமை என்னும் அதிகாரம் "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்" என்பதற்கு பரிமேலழகர் உரையிற்காண்க.

வாது [illegible] (ந், ஒல்லைவைத்தனுடம், [illegible], இத்துக்காக்கணம் என்னும் [illegible] தருகின்றேனை என்றும் சொல்லியது [illegible] கருதிச் சொன்[illegible]றனும். நீ சொல்லியபடி பொன்றுற [illegible] நருதுகருது, [illegible] ஒருநாளில் போற்[illegible] [illegible] [illegible] றைக் கைக்கொள்ளேன் ஆதலின [illegible] வென்று யாவர்க்கும் முன்னவனாகிய இறைவன் [illegible] என்றதாம்.

பெரும்பிழை செய்தார், தலையால் [illegible] றல் பெரியோராயுள்ளார் பொறுத்தல் முறைமை [illegible] [illegible] இகழ்ந்தாய் [illegible] பெருந்[illegible] [illegible] [illegible]

[illegible]

[illegible] வைத்திருக்கும்படி கொடுத்த [illegible] தேடித்தேடிப் [illegible], பார்த்தும் காணேன் [illegible] நெடுங்காலம் நீடித் திருக்கத்தக்க நல்ல ஓர் [illegible] தொடக்கினேன் என்று [illegible] பாண் தேவரிரை [illegible] சொன்னவும், [illegible] கொள்ளாது, [illegible] நான் வைத்தவோ[illegible] [illegible] முழுவதையும் ஒழித்துவிட்டது என்று சொல்லப்பட்டதாம்.

சிவயோகநிலைக்குரிய ஒழுக்கத்திற் கேடில்லாத பெரியோர் தேவரீராகலின், யான் கொடுக்கும் ஓட்டைக் கைக்கொண்டு எனதொழுக்கமும் கேடுபடாவண்ணங் காத்தல் கடனென்பார் கேடிலாப்பெரியோய என்றார். தேவரீர் கொடுத்த வோடு என்பால் வைத்துள்ள அருளுருவென்று மகிழ்ந்து கைக்கொண்டு என்பாலேவைத்தேன். அவ்வோடுருவானது கெடுதலால் உருவபதார்த்தங்களைக் காணவல்ல அறிவுடைய எனது சுட்டறிவால் அருளுருவாகிய அதனை நான் எங்ஙனங் காணவல்லே னுவேன் என்பார். என்பால்வைத்த அது கெடுதலாலே நாடியுங்காணேன் என்றார். நான் அருளுருவத்தைக் கண்டிலனாயினும் அவ்வருளை ஒடுருவாய்க் கண்டேனாகலின் அவ்வுருவைப் போல் என்பால் பலவோடுகள் உள்ளன அவ்வோடுகளுள் நல்லதும் நீடித்திருக்கும் வன்மைமுதலியவற்றை யுடையதும் ஆகிய அரிய ஓடொன்றைத் தருகின்றேன் என்பார், நல்லதோர் ஓடுநான் நீடுசெல்வதுதான் ஒன்று தருகின்றேன் என்றார். அருளுருவாகிய ஓட்டை ஆளுகின்ற நமக்கு இந்த மண்ணோட்டைத் தருகின்றேன் என்கின்றானே! அவ்வருளோடு எங்கே! இம்மண்ணோடெங்கே! இவன்கூறுவது என்னவென்று பிணக்குற்றனரோ என்பார். —ஊடிநின்றுரைத்தது—என்றார். இச் சிவயோகியார் தாம் கொண்டபிணக்கில் நிலையாக நிற்பாராயின், நாம் மேல் அறியக்கடவதும் செய்யக்கடவதும் என்னென்று அறியுஞ்செயலுமொழிந்து, செய்யுஞ்செயலுமொழிந்து சிவயோகியாரது அருளையும், அவரது அருட்செயலையும் நாடும் நாட்டமுடையவராய் வேறு சொல்லுவ தொழிந்தன ரென்பார்—என்றன் உணர்வெலாம் வொழித்தது—என்றார்.

இத்திருப்பாட்டான் அருளையும் அருளுருவையும் தமது சுட்டறிவால் காணத் தக்கதன்றென்றும், அது சிவனால் காணத்தக்கதேயன்றி வேறெவ்விதத்தாலுங் காணத் தக்கதன்றென்றும், அங்ஙனங் காணத்தக்கதன்றாயினும், அவ்வருளையே நாடியிருக்கும் அன்புடையராயிருத்தலால் அவ்வன்பென்னும் பாத்திரத்தை இறைவனார் கொடுக்கத் துணிதல் வேண்டுமென்றும், அப்பாத்திரமாகிய அன்பை இறைவன்கொள்ளானாயின் அவனருளைக் காணுமாறென் ! காணாதொழியின் அவ்வருள் இத்தன்மைத்தென்று காட்டுமாறென் ! ஆகவே, தற்போதமும், தற்போகச்செயலும் அற்று அருளையும், அதன் செயலையும்நாடி நிற்பர் சீவன் முத்தர்கள் என்று சீவன்முத்தி நிலையைக் கூறப்பட்டது. (௨௫)

இறைவனார் நாயனாரை யாவருங்காணக்கொண்டு போவேனெனல்.

ஆவதென் நின்பால் வைத்த அடைக்கலப் பொருளை வெளவிப்
பாவகம் பலவும் செய்து பழிக்குநீ ஒன்றும் நாணாய்,
யாவரும் காண உன்னை வளைத்துநான் கொண்டே அன்றிப்
போவதும் செய்யேன் என்றான் புண்ணியப் பொருளாய் நின்றான்.

(எ - து.) நாயனாரது புண்ணியங்களுக்குப் பொருளாயுள்ளவராகிய சிவயோகியார், (நாயனார் "என்றன்உணர்வெலாம் ஒழித்தது" என்று சொல்லியதைக் கேட்டு, அவரை நோக்கி நான் உன்னிடத்தில்) அடைக்கலமென்று வைத்ததாகிய பொருளைக் கவர்ந்து கொண்டு (கவராதவன்போல்) வைத்த விடத்தினுங்காணேன், வேறிடத்திலுந் தேடிக் காணேன், கேடிலாப் பெரியோய் நாடியுங் காணேன், என்றன் உணர்வெலாம் ஒழிந்தது, என்று பலபலவிதமாய்க் குழைந்துகுழைந்து சொல்லாலுஞ் செயலாலும் பல அபிநயங்களைச் செய்கின்றாய்! இனிநான் செய்யக்கடவதுயாது! நீயோ சிறிதேனும் பழிக்கு அஞ்சாய், நாணமற்றவனாயும் இருக்கின்றாய். ஆகலான், எல்லாரும் உன்தன்மை இதுவாமென்று அறியும்படி, யான் தொடுத்த இவ்வழக்கில் உன்னைத் தளைப்படுத்திக் கொண்டுபோவதல்லாமல், விட்டுப் போவதில்லை என்று வலித்து கூறினாரென்பதாம்.

புண்ணியப்பொருளாய் நின்றான், நின்பால்வைத்த அடைக்கலப்பொருளை வெளவிப், பாவகம் பலவும் செய்து, பழிக்குநீ யொன்றும் நாணாய், (அதனால்) யாவருங்காண நான் உன்னை வளைத்து எனக்கூட்டுக.

நாயனார்செய்யும் புண்ணியம் பதிபுண்ணியமென்பதும், அதற்குப்பொருளாய் நிற்பவன் சிவனே என்பதும் தோன்ற புண்ணியப் பொருளாய் நின்றான் என்றார். நாயனாருக்குத் தனுகரணாதிகளாயுள்ள எல்லாப்பொருளும் தான்வைத்த தனது உடைப்பொருளே என்பது தோன்ற நின்பால்வைத்த அடைக்கலப்பொருள் என்றார்.

என்பொருளாயுள்ள அவைகளை உன்பொருளாக எண்ணி, என்தேகம் என்கரணம் என்மனையாட்டி என்மனை என்று யாவையும் எனதெனக் கவர்ந்துகொண் டனுபவிக்கின்றவன் நீயல்லனோ என்பார் வெளவி என்றார்.

நீ அங்ஙனங் கவர்ந்துகொண்டனுபவிப்பது பிரத்தியக்ஷமாக விருக்க, கவராதவன் போலும், அப்பொருள்கள் அழிந்தனபோலும்,என்பால்வைத்தது கெடுதலாலே என்றும், நாடியுங்காணேன் என்றும், உணர்வெலாம் ஒழிந்தது என்றும் கூறுவது, உண்மையாமோ? இது நாடகமல்லவோ? என்பது தோன்ற பாவகம்பலவுஞ்செய்து என்றார்.

இங்ஙனமான நாடகத்தால் என்னை, மயக்கிவிட்டு எனதுடைமையை உன்வசமாக வைத்திருத்தல் பெரும்பழி என்பது தோன்ற பழிக்கு என்றார். உன்னிடத்திலுள்ள எல்லாப்பொருள்களும் என்னுடையனவாகவே யிருக்க, "வேறு நல்லதோர்ஓடுசால நீடுசெல்வதுதாரேனென்று நீடுகின்றேன்" என்றுசொல்லின் உனக்கென்று ஒருபொருள் உளதோ? அஃது இல்லையாக நான் தருகின்றேனென்றது நாணமற்ற தன்மையென்பது தோன்ற ஒன்றும்நாணாய என்றார்.

இங்ஙனமானவுண்மை யாவரும் அறிய அஃதாவது, ஆன்மாக்களாயுள்ளயாவரும் சிவசாதனங்களைச்செய்து சிவபோகத்தை யனுபவிப்பதற்கு இன்றியமையாத பாத்திரங்களாகத் தனுகரணாதிகளைக் கொடுத்திருப்ப, அவைகளைக்கொண்டு அச்சாதனங்களைச் செய்து சிவானுபவத்துக் காளாகாது, விஷயானுபவங்கட்குரிய சாதனங்களைச் செய்து விஷயானந்தானுபவிகளா யிருக்க, சிவன் குருவாய் வெளிவந்து எனதெனப்படுவனவெல்லாம் தனதெனக் கூறுங்காலத்து, அவற்றைக் கொடுக்கஅறியாது, கொடுப்பவர்போன்றும், அவைகளில் பற்றுடையவ ரல்லர்போன்றும், நடிப்பவர் பலராதலால், அவர்கள் இவ்வுண்மையறிய எண்ணினனென்பது தோன்ற யாவருங்காண என்றார். இவ்வுண்மையை யுணர்த்துதற்கு நீயும் ஆளாய் வந்திருப்ப, நானும் அதனைவெளிப்படுத்தற்கு இப்பொழுது வந்திருப்ப, இனி அச்செயலைச் செய்யாது போவனோ என்பதுதோன்ற போவதுஞ் செய்யேன் என்றார். இப்பாசுரத்தான், இறைவன் நாயனாரைப் பழிக்கஞ்சாய் உன்னைவிடேன் என்றதைக் கூறப்பட்டது. (௨௬)

மகனைப்பற்றி பிரமாணம் செய்யச்சொல்லல்.

வளத்தினால் மிக்க வோடு வௌவினேன் அல்லேன் ஒல்லை
உளத்தினுங் களவி லாமைக் கென்செய்கேன் உரையும் என்னக்
களத்துநஞ் சொளித்து நின்றான் காதலுன் மகனைப் பற்றிக்
குளத்தினில் மூழ்கிப் போவென் றருளினான் கொடுமை இல்லான்.

(எ - து.) ("நான் உன்னை வளைத்துக்கொண்டே யன்றிப் போவதுஞ் செய்யேன்" என்று சிவயோகியார் சொல்லியதைக்கேட்ட நாயனார்) "பொன்னினும் மணியினும் போற்றவேண்டுவ"தாகிய வளத்தினால் மிக்க தேவரீரது அரிய திருவோட்டை, நான் கவர்ந்துகொண்டவ னல்லன், கவர்ந்துகொள்ளவேண்டுமென்னுங் கள்ளத்தை என்னுள்ளத்தினும் கொண்டவ னல்லன். (அங்ஙனம் இல்லாமையை நான் தேவரீர் நம்புமாறு தெரிவித்தற்கு என்செய்யக்கடவேன், (நான்செய்யும்வகை ஏதேனும் உளதாயின்)

விரைந்து சொல்லக்கடவீராக என்று விண்ணப்பஞ்செய்ய, நீலகண்டத்தை ஒளித்து வந்துநிற்கின்ற சிவயோகியார் (நாயனாரைநோக்கி) உனதுகாதலுள்ள மகனை நீ கைப் பிடித்துக்கொண்டு இங்குள்ளகுளத்தினில் மூழ்கி, நான் இச்சிவயோகிகொடுத்த திரு வோட்டைக் களவுசெய்யவில்லை என்று சொல்லிவிட்டு, (உன்மனைக்குப்) போகலாம் என்று யாதொருகொடுமையும் இல்லாதவர் கூறினா ரென்பதாம்.

ஆன்மாக்கள் அனுபவிக்கவேண்டிய செல்வங்களையெல்லாம் உடையது அருளே என்பார் வளத்தினால் மிக்கவோடு என்றார்.

அருளுடையோன் நீ, உன்னிடத்திலுள்ள அருளை நான் அன்புடையனாயின், வௌவுந் திறமுடையவனாவேன், நான் அன்பிலி, நான் அருளை எவ்வாறுவௌவுந் திறமுடையவனாவேன் என்பார் வௌவினேன் அல்லேன் என்றார்.

நான் அன்பற்றவனாயினும் நாடகத்தால் உன்னடியார் (அன்புடையவர்) போல் நடித்து உன்னருளைக் கொள்ளைகொள்ள என்னெஞ்சத்தில் ஒருநாளும் நினைத்தவன் அல்லேன் என்பார் உளத்தினுங் களவிலாமை என்றார்.

காயத்தினாலும் வௌவினே னல்லேன் என்பதையும், * உளத்தினாலும் களவை எண்ணினே னல்லேன் என்பதையும், தேவரீர் ஒப்பாதவராகக் காண்கின்றபடியால், நீர் ஒப்பத்தக்கதாக, யான் செய்யத்தக்கது ஏதேனும் உளதேல் அதனைச் சீக்கிரமாகச் சொல்லும். அதனை இப்பொழுதே செய்து எனது காயத்தினிடத்தும், நெஞ்சத்தி னிடத்தும், வௌவுதலின்மையும் களவிலாமையையும் வெளிப்படுத்தற்கு உரியவனா வேன் என்பார் ஒல்லை என் செயகேன் உரையும் என்ன என்றார்.

" யாவரையுங் கொல்லஎழுந்த நஞ்சத்தைக் கண்டத்தில் ஒளித்து, அதன்கொடு மையை யடக்கிய நமது பேராற்றல்போல், அந்த நீலகண்டமென்னுந் திருநாமத்தைச் சொல்லி, யாவருடைய உயிரையுங் கொல்லவல்ல காமநஞ்சை நெஞ்சத்தில் அடக்கிய ஆற்றலுடையவர் இந்நாயனார் ஒருவரே என்பதை இவ்வுலகின்கண் நிலைநாட்ட நீல கண்டனே வந்தனனென்பார் காதல் உன்மகனைப்பற்றிக் குளத்தினில் மூழ்கிப்போ என்று களத்து நஞ்சொளித்து நின்றான் அருளான் என்றார்.

"உன்மகனைப்பற்றிக் குளத்தினில் மூழ்கிப்போ" என்ற அக்கொடுஞ்சொல் நாய னார்பால் வைத்த அளவிலாக் கருணையை வெளிப்படுத்தவே கூறினன் என்பார் கொடு மையில்லான் என்றார்.

இத்திருப்பாசுரத்தான், காயத்தினாலும், மனத்தினாலும், அன்புசெய்து அருளைப் பெறவேண்டுமே யன்றி, அன்புடையார்போல் நடித்து, அருளைப்பெற்றார்போல் எண்

---

* உளத்தினும் களவிலாமை என்று மனத்தைக் குறித்தமையால், ஓடுவௌவினே னல்லேனென்றது காயத்தைக்குறித்ததாமென்க. களத்து நஞ்சு ஒளித்து நின்றான் என்றது மிக்கதோ ரதிசயத்தை உணர்வதற்கேயாம். என்னையெனின், விடமானது தன்னையுண்டவனை ஒழித்து அவன்பேர் உலகில் நில்லாவண்ணஞ் செய்வது அத னியற்கை. அவ்வியற்கையை அவ்விறைவன்பால் செய்யாது, அவன் கண்டத்தில் ஒளித்துநின்று தனக்குள்ள விடத்தை யொழித்து தன்னையுண்ட இறைவனுக்குள்ள நித்தியத்தைக் காட்டியதேயாம். காதல் உன்மகனைப்பற்றி என்றது - நாயனாருக்கு ஆசை யென்னும் பற்றின்மையை வெளிப்படுத்தற்கென்க. குளத்தினில் மூழ்கிப்போ என் றது - சிற்றின்பத்தை யொழித்த நீ சிவானந்தமாகிய பேரின்பவெள்ளத்தில் மூழ்கிச் சிவலோகத்திற் சேருவாயென்று குறிப்புரையாற் குறிப்பித்தவாறு மென்க. கொடுமை யில்லான் என்றது - இறைவன் மறக்கருணையைக் காட்டுவதெல்லாம் தம்மிடத்துள்ள அறக்கருணையைக் காட்டுதற்கே யாமென்க.

ணின் அவர் அருளைப்பெறுதவரே என்பதும், எவரது அன்பு நாடகமோ எவரது அன்பு உண்மையோ அதை யதை இறைவனே வெளிப்படுத்த வருவான் என்பதும் கூறப்பட்டன. (உஎ)

மனைவியைப்பற்றிப் பிரமாணஞ் செய்யச்சொல்லல்.

ஐயர்நீர் அருளிச் செய்த வண்ணம்யான் செய்வ தற்குப்
பொய்யில்சீர்ப் புதல்வன் இல்லை என்செய்கேன் புகலும் என்ன
மையறு சிறப்பின் மிக்க மனையவள் தன்னைப் பற்றி
மொய்யலர் வாவி புக்கு மூழ்குவாய் எனமொ ழிந்தார்.

(எ - து.) சுவாமீ! தேவரீர் சொல்லியபிரகாரம் அடியேன் பிரமாணம் பண்ணுவதற்குப் பொய்மையில்லாத சிறப்பினையுடைய புத்திரனில்லை, (ஆகலான்) வேறு எந்த விதமான பிரமாணத்தைச் செய்யவேண்டுமோ (அதனைச்) சொல்லுமென்று பிரார்த்திக்க, (இறைவனார் மகன் இல்லையாயின், உனது) குற்றமற்ற சிறப்பின்மிகுந்த இல்லாளது கையைப் பிடித்துக்கொண்டு, தாமரைமுதலிய மலர்கள் நிறைந்துள்ள குளத்துள் மூழ்கிப் பிரமாணஞ்செய்வா யென்று கூறினார் என்பதாம்.

காயத்தினாலும், மனத்தினாலும், பொய்மையில்லாதவன் என்னும் சிறப்பினை யான் பெறுதற்குரிய மகப்பேறற்றவன் என்பார் புதல்வனில்லை என்றார்.

பொய்யினால்வரும் நரகத்தைப்போக்கி மெய்யினால்வரும் பேற்றைத்தருவோன் புத்திரன். அப்புத்திரன் எனக்கில்லை என்பார் பொய்யில் சீர்ப் புதல்வன் என்றார்.

புத்திரப்பேறற்றோர் செய்யத்தகும் பிரமாணம் வேறு உளதேல் அதனை யான் செய்வதற்குச் சித்தமாயுள்ளேன் என்பார் புகலும் என்ன என்றார்.

மாண்பினையுடைய மனையாள் இல்லாதொழியினன்றோ மக்கட்பேறில்லை, என்ன செய்கேன் என்று வருந்தல்வேண்டும். நீ அவளை யுடையவனாயிருத்தலால் உனக்கு இல்லாதது என்! நீ எல்லாப்பேறும் உடையவனே! ஆகலின் உனது மனையாளைக் கைப்பற்றிமூழ்கி, உனது மெய்யினையும் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந் திண்மையுண்டாகப்பெறின்" என்றுகூறும் மிக்க சிறப்பினையுடைய கற்புடைமனையாளுடைய மெய்யினையும் யாவருங்காண நிலைநாட்டுவாயாக என்பார் மையறு சிறப்பில் மிக்க மனையவள் தன்னைப்பற்றி மூழ்குவா யென்றார்.

இத்திருப்பாசுரத்தான், புத்திரப்பேறுவேண்டி இணைவிழைச்சு விரும்பப்படும் என்னும் அறநூல்மார்க்கத்தைக் கடந்து, வீட்டுநூல்வழிச் செல்லும் நன்னெறி நமக்கு வாய்க்கப்பெற்றதுபோல், அடியார் விதித்தனவற்றைச் செய்வதற்குரியன வாய்க்கப்பெறுதொழிந்தோமே என்றெண்ணிய அவரது குறைபாட்டையும், நாயனாரது மனையாட்டியை இறைவனார் மையறு சிறப்பின்மிக்க மனையவள் என்று சிறப்பித்து அவரது கைப்பற்றும்படி நாயனாருக்குச் சொன்னதும் கூறப்பட்டன. (உஅ)

வேறு.

நாயனார் மனைவியின் கைப்பற்ற இசையாது யான் மூழ்குவேனெனல்.

கங்கைநதி கரந்தசடை கரந்தருளி எதிர்நின்ற
வெங்கண்விடை யவர்அருள வேட்கோவர் உரைசெய்வார்
எங்களில்ஓர் சபதத்தால் உடன்மூழ்க இசைவில்லை
பொங்குபுனல் இயான்மூழ்கித் தருகின்றேன் போதுமென.

(எ - து.) கங்காநதியை ஒளித்துவைத்திருக்கும் சடையினையொளித்து (சிவயோகியாய்) எதிரே எழுந்தருளிநின்ற கோபக்கண்ணுடைய விருஷபாரூடர் ("நீ மனையவள்

தன்னைப்பற்றி வாவிபுக்கு மூழ்குவாய்" என்று) அருளிச்செய்ய, அதற்கு நாயனூர் கூறு கின்றார்.' (என்னை யாளவந்த பெருமானே!) எனக்கும் என்மனையாட்டிக்கும் ஓர்சபதம் உண்டு, அதனால் ஒருவர்கையை ஒருவர்பிடித்துக்கொண்டு ஒருங்கேநீரில் மூழ்கிச்சொல்ல இசையாது; யானொருவனே நீர் மிகுந்திருக்கும் தடாகத்தில்மூழ்கி (நீர்வேண்டிய) பிரமாணத்தைச் சொல்லுகின்றேன் வாரும் என்றனர் என்பதாம்.

கங்கையின் வெள்ளத்தைச் சடையில்மறைத்து உமாதேவியார் பக்கலிலே வந்து வீற்றிருந்ததுபோலும், நாயனூர்பால் உள்ள கருணைவெள்ளத்தைச் சிவயோகியாய்வந்த வடிவத்தில்மறைத்து அவரெதிரே வந்து நின்றனர் என்பார் கங்கைநதி கரந்தசடை கரந்தருளி எதிர்நின்ற என்றார்.

சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்குபாதங்களில் நடப்போர்க்குத் தனுவைச் சார்ந்தும், கரணத்தைச் சார்ந்தும், தற்போதத்தைச் சார்ந்தும், ஆணவத்தைச் சார்ந்தும் வருவனவாகிய பாசஜாலங்கள் தாக்காவண்ணம் மிக்ககோபத்தோடு நான்கு பாதத்துடன் விரைந்துவந்து வோட்டவல்ல தருமவிடையை யுடையவன் என்பார். * வெங்கண்விடையார் என்றார்.

"அற்புறு புணர்ச்சியின்மையை" "நீலகண்டம்" என்னும் ஆணைமொழியால் அன்றுமுதல் இன்றளவும் அயல்அறியாமல் காத்துவந்த அரியசெயலை, அந்தநீலகண்டம் உடையவன்பால் † வெளியாக்கினரென்பார். எங்கள்பால் பொருந்தாமை உடன்மூழ்க இசைவில்லை என்றார்.

பிரமாணஞ் செய்வோர்-பிரமாணஸ்தராயிருந்து செய்யவேண்டுமேயன்றி, அதனைக் கடந்தவர் பிரமாணஞ்செய்யின் அது பிரமாணமாகுமோ? ஆகா! ஆகவே, "எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்" என்று சொன்ன மனையாட்டியை இப்போது தீண்டில் அவ்வாணையைக் கடந்த அப்பிரமாணஸ்தராவோம் என்னுங் கருத்தை உள்ளத்துட் கொண்டு, யான் பிரமாணஸ்தன் ஆகலான், நீர்வேண்டிய பிரமாணத்தை யானே செய்கின்றேன் என்பார் யான்மூழ்கித் தருகின்றேன் போதுமென என்றார்.

இத்திருப்பாசுரத்தான், நாயனூர் தாம்கொண்டிருக்கும் சபதத்தை இறைவனளவும் காட்டினரென்பது கூறப்பட்டது. இதன் உண்மையை "ஆதியார் நீலகண்டத்தளவு தாம்கொண்ட ஆர்வம் பேதியா ஆணைகேட்ட பெரியவர்" என்று முன்னே கூறியவாற்றான் அறிக. எனவே நீலகண்டம் என்று கூறிவந்த ஆணையை நீலகண்டனே வந்த காலத்தும் பேதியாமையைக் காட்டியதாமெனக. (உ௬)

இறைவன் நாயனூரது சிந்தைவன்மைகண்டு சபைக்குப்போதல்.

தந்ததுமுன் தாராதே கொள்ளாமைக் குன்மனைவி
அந்தளிர்செங் கைப்பற்றி அலைபுனலில் மூழ்காதே
சிந்தைவலித் திருக்கின்றாய் தில்லைவாழ் அந்தணர்கள்
வந்திருந்த பேரவையின் மன்னுவன்இயான் எனச்சென்றார்.

(எ - து.) (பொங்குபுனல் யான்மூழ்கித் தருகின்றேன் போதும், என்றுசொல்லிய நாயனூரைநோக்கி நீகூறுவது மிகஅழகு! நான்முன்னே உன்னிடத்தில்) கொடுத்த

---

* இறைவன் "அறவாழியந்தணன்" ஆகலான், அவனது ஊர்தியும் அறமேயாம். அவ்வறம் சரியைமுதலிய நான்குபாதத்தோடு கூடியதாகலான் நான்குபாதமுடைய விடபரூபமாய்ச் சிவதருமம் இருப்பதென்க. அச்சிவதருமம் பாசதருமம், பசுதருமங் களைக் கடியும் இயல்புடையதாகலின் வெங்கண்ணை உடையதாயிற்று. இதனை, "கொள்ளேன்புரந்தரன் மால் அயன் வாழ்வு குடிகெடினும்" என்ற திருவாசகத்தானும், "அயன் திருமால் செல்வமும் ஒன்றோஎன்னச் செய்யுந்தேவே" என்ற சித்தியார் வசனத்தானும் அறிக. † எங்கள்நீலகண்டனன்றி வேறு வெளியாக்கவேண்டிய சமயம் எதுவரினும் வெளியாக்கோம் என்னும் அவ்வுறுதியை ஈண்டு வெளியாக்கினரென்க.

தாகிய ஓட்டைக் கொடுக்காமலும், (எடுத்துக்கொள்ளவில்லை என்றுகூறுவதாகிய) அக் கொள்ளாமைக்குப் (பிரமாணமாக) உன் மனைவியினுடைய செந்தளிர்போன்ற அழகிய கையைப் பிடித்துக்கொண்டு, அலைவீசுகின்ற நீரில் மூழ்காமலும், உன்மனத்தைச் சலிப்பில்லாமல் ஸ்திரபடுத்தி யிருக்கின்றாய், (ஆகலின்) இனி நான் தில்லைவாழ் அந்தணர்கள் வந்திருந்ததாகிய பெரியசபையின்கண் (உனது நிலையையும், எனது நிலையையும்) நிலைபெறச்செய்யப் போகின்றேன் என்றுசொல்லிச் சபைக்குப் போயினார் என்பதாம்.

முன்தந்தது தாராதே எனக்கூட்டுக.

* "அளக்குநெறியினன் அன்பர்கள் தம்மனத்து ஆய்ந்துகொள்வான், விளக்கும் அடியவர் மேல்வினைதீர்த்திடும் விண்ணவர்கோன்" என்றவேதமொழிப்படி இறைவன், அன்பர்களை அளக்குநெறியினால் அளந்து அவர்மனத்தை ஆய்ந்துகொள்பவனும், ஆய்ந்துகொண்டபின்னர், அவரது மேல்வினையைத் தீர்த்து, உலகெல்லாம் அறிய விளக்குவோனுமாகலின், அஃதே ஈண்டு நாயனார்பால் செய்யத்தொடங்கினானென்க.

எனவே, "தந்ததுமுன் தாராதே" என்றதும், "கொள்ளாமைக்கு உன்மனைவி கைப்பற்றி புனலின்மூழ்காதே" என்றதும் 'அளந்தநெறி' எனவும், "சிந்தைவலித்திருக்கின்றாய்" என்றது 'மனத்தை ஆய்ந்துகொள்ளல்' எனவும், தில்லைவாழ் அந்தணர்கள் பேரவையில் மன்னுவன்" என்றது 'அடியவர் மேல்வினைதீர்த்து விளக்கத்தந்த' எனவும் கொள்க.

மேல்வினைதீர்த்து விளக்குநெறி என்றது-நாயனார் கொண்டிருந்த ஆணைக்குமாறாக வேறொருவினையைச் செய்யச் செய்யாது, அவர்கொண்டிருந்த ஆணையை வலியுறுத்தற் கான செயலையே செய்யச்செய்து அவரது பிரபாவத்தை விளக்கங்காணத் திருவுளத் தெண்ணிய அருள்நெறி என்க.

சிந்தைவலித்திருக்கின்றாய் என்றது, நாயனாரது சிந்தை, இறைவன் தான்செய்யும் அளக்குநெறியால் அளந்தும் அருள்நெறி கடந்துபோகாது, அளக்குந்தோறும் அருள் நெறியில் வன்மைபெற்றிருந்த திறத்தைக் குறித்தபடியென்க. இவ்வுண்மைகளைப் பின் வரும் பாசுரங்களாற் காண்க.

இத் திருப்பாசுரத்தான், நாயனாரது பிரபாவத்தை இறைவன், தான் அளக்கு நெறியால் அளந்து, விளக்குமுறையான் விளக்கத் தொடங்கினானென்று கூறப்பட்டது

நாயனார் வழக்கில் காதல்மேற்கொண்டு சபைக்குச்செல்லல்.

நல்லொழுக்கந் தலைநின்றார் நான்மறையின் துறைபோனார்
தில்லைவாழ் அந்தணர்கள் வந்திருந்த திருந்தவையின்
எல்லையிலான் முன்செல்ல இருந்தொண்டர் அவர்தாமும்
மல்குபெருங் காதலினால் வழக்குமேல் இட்டணைந்தார்.

(எ - து.) (இறைவன்சொல்லியபடியே) வைதிகசைவ ஒழுக்கத்தில் தவறாது முதன்மையாக நிற்கின்றவர்களும், நான்குவேதங்களினாலுங் கூறப்படும் அறத்துறைகளை ஆராய்ந்து சென்றவர்களும் ஆகிய தில்லைவாழ் அந்தணர்கள், கூடியிருந்த திருத்தமாகிய சபையின்கண், ஓரளவையும் இல்லாதவனாகிய இறைவன் வழக்கையேற்கொண்டு முன்புசெல்ல, பெரியதொண்டனாராகிய நாயனாரும், மேன்மேற் பெருகும் ஆசையினால் (அவர்பின்னே) போயினார் என்பதாம்.

வழக்கை மேற்கொண்டு வருவோரது வழக்கினைத் தீர்ப்போர் - நூல்வழக்கினும், ஆன்றோராகிய உலகவழக்கினும், ஆராய்ச்சியுடையோராய், † "சமன்செய்து சீர்தூக்குங்

* திருநாவுக்கரசுகள் தேவாரம். திருச்சோற்றுத்துறை. செ - ௩. † திருக்குறள் - நடுவுநிலைமை. செ - அ.

கோல்போல் அமைந்து ஒருபால், கோடாமை சான்றோர்க் கணி" என்றுகூறிய இலக்கணமுடையோராய் இருப்பவரேயாவர் என்பார் நல்லொழுக்கந் தலைநின்றார் நான்மறையின் துறைபோனார் தில்லைவாழந்தணர் என்றார்.

அத்தகைச் சிறப்புடையோர் கூடிவந்திருக்கும் பெரியசபைக்கே இறைவன் போயினன் என்பார் வந்திருந்ததிருந்தவை என்றார். அவ்விறைவன் இத்தன்மையனென்று அளவிடப்படான் என்பார் எல்லையிலான் என்றார். போனவர் இருவராயிற்றே, அவ்விருவரும் போனமுறை எவ்வாறு என்பார் எல்லையிலான் முன்செல்ல என்றார். இவர்முன் என்றதனால் தொண்டனார் பின்சென்றாரென்றாயிற்று. இறைவனை எல்லை இல்லான் என்றுகூறவே, நாயனார் எல்லையுள்ளார் என்றாயிற்று. அவ்வெல்லை தமது ஆணையைக்கடக்க எவ்வழக்குவரினும் தாம் கடவாமையாகியஎல்லை. நாயனார் ஆணையில் கடவாது நிற்க வன்மையுடையவராகவே, இறைவனார் அவரது ஆணையைக் கடப்பிக்க மேற்கொண்ட வல்வழக்கில் எல்லைஇல்லாதவராயினார். எனவே, அடியாரை வல்வழக்கிட்டு ஆள்வதை மேற்கொண்டவர் என்றபடி.

வழக்கை மேற்கொண்டவர் இறைவர் ஆகலின், அவர் முன்செல்வாராயினார். நாயனார் அவர் எவ்வளவு வழக்கிடினும், அவர்மேல் நீங்காத ஆசையுடையவர் என்பார் இருந்தொண்டர் அவர்தாமும் மல்குபெருங்காதலினால் அணைந்தார் என்றார்.

இத் திருப்பாசுரத்தான், சபையாரது சிறப்பும், அச்சபையாரது வன்மைக்கேற்ப, வல்வழக்கை மேற்கொண்டுவந்த வல்லாளனது சிறப்பும், அவ்வல்வழக்கிற்கு உடன்பட்டுவந்த நாயனாரது காதற்சிறப்பும் கூறப்பட்டன. (ருக)

இறைவன் அந்தணர்முன் வழக்கைக் கூறல்.

அந்தணனும் எந்தைபிரான் அருமறையோர் முன்பகர்வான்
இந்தவேட் கோவர்பால் யான்வைத்த பாத்திரத்தை
தந்தொழியான் கெடுத்தானேல் தன்மனைவி கைப்பற்றி
வந்துமூழ்கி யுந்தாரான் வலிசெய்கின் றானென்றார்.

(எ - து.) (சபையைநோக்கி முன்சென்ற) அந்தணனாகிய எமதுபெருமானார், வேதியர்களுட்சிறந்த தில்லைவாழ் அந்தணர்களுக்கு முன்னே, (தாம் மேற்கொண்டுவந்த வழக்கைச்) சொல்லுகின்றார். (அந்தணர்காள்!) இதோ நிற்கின்ற வேட்கோவரிடத்தில், யான் பலிபாத்திரத்தைக் கொடுத்து வைத்தேன், அப்பாத்திரத்தை, (இப்பொழுது கேட்டால்) கொடுக்காமல் இருக்கின்றான். (ஏன் கொடுக்காமல் இருக்கின்றாய் என்று கேட்டால், வைத்த இடத்தில் காணேன் என்றான். அங்ஙனம்) காணாதொழிந்தானாகில், (அதனை நான் உண்மையென்று நம்புவதற்கு) தனது மனைவிகையைப் பிடித்துக் கொண்டு குளத்தில்மூழ்கியெழுந்து சொல்லுவாயென்றேன்; அந்தவண்ணமும் செய்தானில்லை; அவன் தன்மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு என்மனத்தைத் துன்பப்படுத்துகின்றான் என்று கூறினார் என்பதாம்.

சிற்றம்பலவாணன் தங்களோடு ஒருவனாகப் பழகிவரப்பெற்றும், இப்பொழுது தம்முன்வந்தவனை அம்பலவாணனென்று அறியாதை மறந்து வேறோர் அந்தணனென்றே எண்ணினாராகலான், அத் தில்லைவாழந்தணரை மறையோர் என்றார்.

தில்லைவாழந்தணர்களே! இந்தவேட்கோவன் நாள்தோறும் உங்களால் காணப்பட்டு வருபவனேயன்றி வேறொருவனல்லனென்பார் இந்தவேடகோவன் என்றார்.

இவன் உங்கட்கெல்லாம் இல்லையென்னாமல் பாத்திரங்கொடுக்கும் சத்பாத்திரனென்று நான் என்னுடைய பலிபாத்திரத்தைக் கொடுத்துவைக்க, அதனைக் கேட்டால்

அது ஒழிந்துபோயிற்று இல்லையென்றான் என்பார் யான்வைத்த பாத்திரத்தைத் தந்தொழியான் என்றார்.

யான் பாத்திரத்தை வைக்கும்பொழுது, இவன்கொடுக்கும் பாத்திரம்போல் எண்ணு தொழிதற்கு, "தன்னையொப்பரியது தலத்துத்தன்னுழை, துன்னியயாவையும் தூய்மை செய்வது, பொன்னினும் மணியினும் போற்றத்தக்கது" என்றேன். அங்ஙனம் யான் சொல்லியதை இவனுமறப்பவன், நீலகண்டத்தை மறப்பினன்றோ இதனைமறப்பான் மறக்குந்தன்மையனல்லன் என்பதைப் பின்னர் அறியப்போகின்றீர். அதனை நானே விளக்கப்போகின்றேன். அதுநிற்க, ஓடு ஒழிந்துபோயிற்று என்பது உண்மையாயின், அச்சொல்லை உன்மனைவிகைப்பற்றி நீரின்மூழ்கிச் சொல்வாயென்றேன். அதற்கு எங்களில் ஓர்சபதம் உளது; அதனால் உடன்மூழ்க இசையாது என்றான். இதனால் ஒழிந்து போயிற்று என்றதை போயிற்றென்றே கொள்வதோ! உள்ளதென்றே கொள்வதோ! நீவிரேகூறுவீர். இது என்னைவலிசெய்யுமோ! செய்யாதொழியுமோ! நீவிரே எண்ணிப் பார்ப்பீர் என்பார் கெடுத்தானேல் தன்மனைவிகைபற்றி, வந்துமூழ்கியும் தாரான்வலி செயகின்றன் என்றார்.

இத்திருப்பாசுரத்தால், நாயனாரால் உண்டாகிய உடைமைவழக்கை சபையார் முன் சிவயோகியாய்வந்து கூறியதைக் கூறப்பட்டது. (௬௨)

அந்தணர்கள் நாயனாரைநோக்கி வழக்கைநீர் சொல்லுமெனல்.

நறைகமழும் சடைமுடியும் நாற்றோளும் முக்கண்ணும்
கறைமருவும் திருமிடறும் கரந்தருளி எழுந்தருளும்
மறையவன்இத் திறமொழிய மாமறையோர் உரைசெய்வார்
நிறையுடைய வேட்கோவர் நீர்மொழியும் புகுந்ததென.

(எ - து.) நறுமணங்கமழும் சடைமுடியினையும், சதுர்ப்புஜங்களையும், திரிநேத்திரங்களையும், கறையாகப்பொருந்தியிருக்கும் அழகிய நீலகண்டத்தையும், மறைத்துக்கொண்டு வேதியராய் வந்தவர், இவ்வகையாய்ச் சொல்ல, பெருமையிற்சிறந்த தில்லைமூவாயிரவர்கள், நற்குணங்களெல்லாம் நிரம்பப்பெற்றுள்ள நாயனாரைப்பார்த்துச் சொல்லுகின்றார்கள். வேட்கோவரே! உங்கள் இருவரிடத்தும் வழக்குண்டாகிய விதத்தை நீர் சொல்வீராக என்பதாம்.

புகுந்தது நீர்மொழியும் எனக்கூட்டுக.

இறைவன்அடி அடைந்தார்க்கு அவனது அருதிங்லைமையைக் காட்டுவது சடைமுடி. சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்யம் என்னும் நான்கினையும அவன் கொடுப்பதைக் காட்டுவது நாற்றோள். பாசஞான பசுஞான பதிஞானங்களை அவன் உணர்த்துந் தன்மையைக் காட்டுவது முக்கண். அவன் ஆணவமலத்தின் கொடுமையை அடக்கி ஆளும் ஆற்றலைக்காட்டுவது கறைமருவும் திருமிடறு.

இங்ஙனமான கோலத்துடன வருவது கன்மமலமும ஆணவமலமும் உடையார்க்கு. நாயனார் * அவ்விருமலமும் அற்றவராதலால் அக்கோலத்தை மறைத்து அன்பைவிளைவிக்கும் அருட்கோலங்கொண்டு வந்தனன் என்பார் சடைமுடியும், நாற்றோளும், முக்கண்ணும், கறைமருவும் திருமிடறும் கரந்தருளும் மறையவன் என்றார்.

* கன்மமலத்தைக்காட்டுவது - மாதரின்பம. ஆணவமலம் வது-அடியார்க்கு ஆட்பட்டு அவராணைவழிநின்று அன்புபாராட்டா தொழிதல். நாயனார் மாதரின்பத்தை மறந்து மாதாளும்பாகனடியார்களுக்கு ஆட்பட்டு, ஆணவமலமொழிந்து அருட்பாத்திரராய் அவரிடம் பணியைச் செய்பவர். ஆகலான் இருமலமும் அற்றவராயினர்.

அம்பலவாணன் எத்திறம் நடிக்கின்றானோ அத்திறமே நடிப்பது அந்தணர்களது திறம் என்பார் மாமறையோர் உரைசெய்வார் என்றார். நாயனார் காமம் வெகுளி மயக்கம் என்னும் முத்தீக்குணங்களும் ஒழிந்து, அவாவின்மை, பொறையுடைமை, அறிவுடைமை என்னும் முத்திக்குணங்களை நிரம்பப்பெற்றுள்ளவர் என்பார் நிறையுடைய வேட்கோவர் என்றார். இங்ஙனமான நிறையுடையார் குறையுடைய பொய்யுரை ஆடாராகலான் புகுந்தது நீர்மொழியும் என்றார்.

இத்திருப்பாசுரத்தான், தில்லைமாமறையோர், மறையவன்கூறிய வாய்மொழிக்கு, நாயனார்வாய்மொழி ஒத்துளதோ! வேறுபட்டுளதோ என்றெண்ணி அவரை வினாவியது கூறப்பட்டது. (௩௩)

நாயனார் ஓடுகாணமற்போனதைக் கூறல்.

நீணிதியாம் இதுவென்று நின்றஇவர் தரும்ஓடு
பேணிநான் வைத்தஇடம் பெயர்ந்துகரந் ததுகாணேன்
பூண்அணிநூல் மணிமார்பீர் புகுந்தபரி சிதுவென்று
சேணிடையும் தீங்கடையாத் திருத்தொண்டர் உரைசெய்வார்.

(எ - து.) (இம்மையேயன்றி) அம்மையினும் தீமையென்பதை அடையப்பெறாதவராகிய திருநீலகண்டநாயனார் (தில்லைவாழந்தணர்கள் தம்மைநோக்கி, நடந்தவிவகாரத்தை நீர் சொல்லுமென்று கேட்டனராகையால் அவர்களைப்பார்த்து) பூணூலை அணியும் ஆபரணமாகப் பூண்டிருக்கின்ற அழகிய மார்பினையுடையவர்களே! இங்ஙனம் நிற்கின்ற சிவயோகியார், (தமது பாத்திரத்தை எடுத்து) இது பெரியநிதியாகும் என்று கொடுத்தனர். அங்ஙனம் அவரால் கொடுக்கப்பட்ட திருவோட்டை, நானும் போற்றி ஓர்காப்புள்ள இடத்தில் வைத்தேன். (இப்போது இவர்கேட்க நான் அவ்விடத்திற் சென்றுபார்த்தேன், பார்த்தபோது) அப்பாத்திரம் அவ்விடத்தில் இல்லாமல் மறைந்துபோயிற்று. (பின்னர் வேறு வேறிடத்திலும் தேடிப்பார்த்தேன்) எங்கும் அதனைக்காணேன்; இதுதான் நடந்தவிவகாரம் என்றுகூறினார் என்பதாம்.

சேணிடையும் தீங்கடையாத் திருத்தொண்டர் எனவும், பூணணிநூல் மணிமார்பீர் எனவும், நின்றஇவர், இது நீணிதியாமென்று தரும்ஓடு பேணிநான் வைத்தஇடம் பெயர்ந்துகரந்தது காணேன் எனவும், புகுந்தபரிசு இது என்று உரைசெய்வார் எனவும் கொண்டுகூட்டுக.

ஆன்மாக்களுக்கு, இம்மை மறுமை வீடு என்னும் மூன்றிடத்தும் தீங்கு அணுகுதல் உளதாகலின், அத்தீங்கு இவர்பால் இல்லையென்பார் சேணிடையுந் தீங்கணுகாத் திருத்தொண்டர் என்றார். மூவிடத்தும் வந்தணுகும் தீங்கென்னையோ எனின்,—இம்மையில் அறம் செய்யாமையால் பாவமும், மறுமையில் செல்வமிகுதியால் இறுமாப்பும், முத்திநிலையில் அடிமைத்திறத்தை மறத்தலால் வரும் ஆணவமலச்சார்புமாம். ஏனையவெல்லாம் முன்னர்க்காண்க.

இத்திருப்பாசுரத்தான், சிவயோகியார் கூறியவற்றிற்கு, நாயனார்கூறியகூற்று மாறுபடாமையைக் கூறப்பட்டது. (௩௪)

வேறு.

திருவுடை அந்த ணாளர் செப்புவார் திகழ்ந்த நீற்றின்
உருவுடை இவர்தாம் வைத்த ஓட்டினைக் கெடுத்தீர் ஆனால்
தரும்இவர் குளத்தின் மூழ்கித் தருகவென் றுரைத்தா ராகில்
மருவிய மனைவி யோடு மூழ்குதல் வழக்கே என்றார்.

(இ - ள்) (நாயனார்கூறிய வாய்மைமொழியைக் கேட்ட) திருவருட்செல்வமுடைய தில்லைமூவாயிரவர்கள், (சிவயோகியாரது வழக்குரையையும், நாயனாரது மெய்யுரையை யும், ஆராய்ந்தவராய், நாயனாரைப் பார்த்து, தருமநெறியைச் சொல்லுவாராயினர். (வேட்கோவரே! நீர்) திருநீற்றினால் பிரகாசிக்கின்ற திருமேனியை யுடைய இச்சிவ யோகியார் (உம்மிடத்திற்கொடுத்து) வைத்த திருவோட்டினை நீர் காணாதொழிந்தது மெய்மையானால்,ஓட்டினைக்கொடுத்து இழந்தஇவர்,(உம்மை)குளத்தினில்மனையாளோடு மூழ்கிச் சொல்வீரென்று அவரும்சம்மதித்துச்சொல்வாரானால், (நீர்) உமக்கியைந்துள்ள மனையாளோடுமூழ்கிச்சொல்லுதல் முறைமையே யாமென்று சொன்னார்கள் என்பதாம்.

திருவெல்லாம் உடையதில்லை வாணனைத் தம்முடைமையாக உடையரென்பார்— திருவுடையந்தணாளர்—என்றார். அறநூலாராய்ச்சி மிகவும் உடையாராகலான் அவ் வழியே சொல்லப்புகுந்தாரென்பார்—செப்புவார்—என்றார். திரு ஒட்டினையுடையார் இவர், மண்ணுடையார் நீர். இவர் திருநீற்றை ஆளுகின்ற சிவயோகியார். நீர் மனை யாட்டியையாளுகின்ற போகியார். கொடுக்குந்தன்மையுடைய போகியாகிய நீர் வாங்கி னீர். வாங்குந்தன்மையுடைய யோகியாகிய அவர் கொடுத்தனர். காக்குமுறைமை யைக் கூறவேண்டியவர் யோகியார் அதுபோல் கூறினார். கூறியபடி நடக்கவேண்டிய போகியாகிய நீர் நடவாது ஓட்டினையொழித்தீர்; ஆகலின், சிவயோகியார் கூறியபடி மனையாளைக் கைப்பற்றிமூழ்கி அவர்வேண்டியபடி செய்வதே தருமவழக்காகும் என்று தெளிந்து கூறினாரென்பார்—ஓட்டினைக்கெடுத்தீரானால், * தருகவென்றுரைத்தாராகில் மருவியமனைவியோடு மூழ்குதல் வழக்கே என்றார்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான், தில்லைமூவாயிரவர்கள் அறநூல் வழக்குப்படியே நாய னாருக்குக்கூறிய விதியைக்கூறப்பட்டது. (ருரு)

நாயனார் சிவயோகியாரோடு மனைக்குப்போதல்.

அருந்தவத் தொண்டர் தாமும் அந்தணர் மொழியக் கேட்டு
திருந்திய மனைவி யாரைத் தீண்டாமை செப்ப மாட்டார்
பொருந்திய வகையான் மூழ்கித் தருகின்றேன் போது மென்று
பெருந்தவ முனிவ ரோடும் பெயர்ந்து தம்மனையைச் சார்ந்தார்.

(எ - து.) அரிய தவத்தினையுடைய நாயனாரும், தில்லைமூவாயிரவர்கள் (சிவயோகி யார் சொல்லியபடியே செய்யவேண்டுமென்று) சொல்லியதைக்கேட்டு, (கற்புநெறியில்) திருந்தியுள்ள தன்மனையாளைத் தீண்டாதிருக்குங் காரணத்தைச் சொல்லாதவராய், (பெரியோர்களே! நீங்கள் கட்டளையிட்டதற்கு மாறுபாடில்லாமல்) அதற்குப் பொருந் தும்வகையினால் யான்மூழ்கிச் சொல்கின்றேன் (என்றுகூறிப் பின்னர் சிவயோகியாரைப் பார்த்து, என்னடிகளே என்னுடன்) வாருமென்று அச்சிவயோகியாரோடும் அங்கு நின்றும் புறப்பட்டு, தமது வீட்டை வந்துசேர்ந்தனர் என்பதாம்.

அரியதவங்களைச் செய்தார்மாட்டும் வராதஇறைவன், ஓர்வழக்கைத் தாமே உண் டாக்கிக்கொண்டு இவருடன் உழன்று திரியவந்தனராதலால்—அருந்தவத்தொண்டர்— என்றார். சிவயோகியாரைத் தன்வேண்டுகோளின்படி இசைய, வேண்டியதுபோல் மூவாயிரவர்களைவேண்டாது அவர்கள் சொல்லியதனையே கேட்டனராகலின்—அந்தணர் மொழியக்கேட்டு—என்றார். தமது கற்புநிலைமையைக் காமத்துக்காகக்காக்கும் ஏனைக்கற் புடையார்போலல்லாமல் நீலகண்டத்துக்காகத் தனது கற்பினைக்காத்த வல்லாளராக லான்—திருந்தியமனைவியார்—என்றார். தம்மனையாளைத் தாம் தீண்டாமையைக் கூறின், *தொண்டின் திறத்தையழிக்கவரும்ஆணவமலத்தைத் தீண்டவருமாகலான்—தீண்டாமை

---

* அவனருளாலல்லது ஒன்றும் செய்யாத தன்மையுடையவராகலான் செப்ப மாட்டாராயினார் என்க.

8

செப்பமாட்டார்—என்றார். இதுவும் தீண்டாமையைக்காத்த திருவருள் இன்று காவா தொழியுமோ, ஒழியா, ஏதேனும் பொருந்தியதோருபாயத்தை அஃதாவது தீண்டியதாக வும், தீண்டாமையாகவும் கொள்ளத்தக்கதோர் உபாயத்தை நமது உள்ளத்தில் பொருந்தச் செய்யும் என்று தமது சுதந்தரமொழிந்து திருவருளோடும் துணிபுடையாராகலான்—பொ ருந்தியவகையான் மூழ்கித்தருகின்றேன் போதும்—என்றார். திருவருள்வசத்தராம்தவத்த ஞர்க்கு இறைவனும் அவர்வசத்தனுய்ப் பெருந்தவத்தனுய்ச் செல்வானுகலான்—பெரும் தவமுனிவரோடும்மனையைச்சார்ந்தார்—என்றார். தாம் கைப்பற்றிமூழ்கவேண்டிய மனை யாள் வீட்டின்கண் இருத்தலான்—பெயர்ந்துதம்மனையைச்சார்ந்தார்—என்றலுமாம்.

இத்திருப்பாசுரத்தான், தாம் விரதமாகக்கொண்ட தீண்டாமையைக் காத்த திரு வருளோடி, சிவயோகியாரைத் தம் மனைக்கு அழைத்துப்போனமை கூறப்பட்டது.

தண்டின் தலையைப்பற்றி உண்மைகூறி மூழ்கல்.

மனைவியார் தம்மைக் கொண்டு மறைச்சிவ யோகி யார்முன்
சினவிடைப் பாகர் மேவும் திருப்புலீச் சரத்து முன்னர்
நனைமலர்ச் சோலை வாவி நண்ணித்தம் உண்மை காப்பார்
புனைமணி வேணுத் தண்டின் இருதலை பிடித்துப் புக்கார்.

(எ - து) (நாயனுர் வீட்டுக்குப்போய்) வீட்டுக்குரியாளை அழைத்துக்கொண்டு, கோபமுள்ள இடப ஊர்தியையுடைய வியாக்கிரபாதேஸ்வரர் வீற்றிருக்கும் திருப்புலீச்சரமென்னும் திருக்கோயிலுக்கு முன்னர், அந்தணர்வடிவோடு சிவயோகி யாய் வந்திருக்கின்ற அவரை முன்னுக இருக்கச்செய்து, (அவர்முன் இருக்கின்ற) சோலைபோல் தேன்நிறைந்துள்ள மலர்கள்நெருங்கிய தடாகக்கரைக்கு வந்து, தாம் மனையாளைத் தீண்டாமையாகிய உண்மைநிலையைக்காக்கும் உபாயத்தை உள்ளத்துட் கொண்டு, (புறம்பே) அழகினையுடைய நீண்ட ஒரு மூங்கிற்றண்டினுடைய இருதலை யை இருவரும் பிடித்துக்கொண்டு, நீரில்மூழ்குவதற்குப்போவாராயினர் என்பதாம்.

மனையாளைப் புறம்பே தீண்டாதொழியினும், அவரிட்ட ஆணைவழியால் அவளைத் தம்முள்ளத்துள் கொண்டிருத்தலின் அங்ஙனம் கையைக்கொண்டு என்பார்—மனைவி யார்தம்மைக்கொண்டு—என்றார். செய்யும்பிரமாணத்தை ஏற்றுக்கொள்ளற்குரிய பிராஹ் மணவடிவுடையவராய் வந்தனனென்பார்—மறைச்சிவயோகி—என்றார். தவமுடையா ரிடத்துக் கணத்திற்றோன்றும் வெகுளி இத்தவசீலராகிய நாயனுரிடத்து வரும்வண்ணம் தாம் எவ்வளவு செயலைச் செய்யினும் அதற்கு விடைகொடுக்கும் சிவதருமமாகிய விடை யை உடையவரென்பார்—சினவிடைப்பாகர்—என்றார். வியாக்கிரபாதமுனிவரால் பூஜிக்கப்பட்ட க்ஷேத்திரம் என்பார்—திருப்புலீச்சரம்—என்றார். மனையாளைத்தீண் டாமையாகிய உண்மையும, பாத்திரத்தைக்கள்ளாமையாகிய உண்மையும் காத்துக்கோள் ளும்பொருட்டு மூங்கிலைக் காவலாகக் கொண்டனரென்பார்—தம்முண்மைகாப்பார் வேணுத்தண்டின் இருதலைபிடித்து—என்றார். அந்நாள்காறும் பிறர் அறியாமல் காத்த தம் கொள்கையை அப்பொழுது குளத்திலிருந்து சொல்லத்துணிந்தார் என்பார்—வாவி நண்ணிப்புக்கார்—என்றார். இருதலை என்றது - தீண்டாமை, தீண்டுதல் என்னும் இருபொருட்டு. புக்கார் என்றது - துணிந்தார் என்னும்பொருட்டு. நனைமலர்ச்சோலை வாவி-என்றதனைமலர்கள் நிறைந்துள்ள சோலைசூழ்ந்த திருக்குளமெனினும்பொருந்தும்.

சிவயோகிகள் சந்நிதானமும், சிவசந்நிதானமும் பிரமாணத்துக்கு மிகச்சிறப் புடைத்தானமாகலின்—சிவயோகியார்முன், திருப்புலீச்சரத்துமுன் என்றலுமாம்.

நாயனுர் செய்யத்துணிந்த பிரமாணம் உள்ளும்புறம்பும் ஒத்தபிரமாணமாகலின் மறைச்சிவயோகியென்றும், திருப்புலீச்சரமென்றுங் கூறினர். எனவே, நாயனர் உள்ளிருப்பவர் ஈசனர். அவரால் புறம்போகாணப்பட்டவர் மறையவனர். ஆகலின் உள்ளிருப்பவரும், வெளியிருப்பவரும் ஒப்பளென்னும் பொருள்.

இத்திருப்பாசுரத்தான், நாயனர் ஈச்வரசந்நிதானத்தின்முன்னும், சிவயோகியார் முன்னும் குளக்கரையில்நின்று பிரமாணஞ்செய்யத் தொடங்கினர் என்று கூறப்பட்டது.

தண்டிரு தலையும் பற்றிப் புகுமவர் தம்மை நோக்கி
வெண்டிரு நீற்று முண்ட வேதியர் மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கீர் என்னக் கூடாமை பாரோர் கேட்கப்
பண்டுதஞ் செய்கை சொல்லி மூழ்கினுர் பழுதி லாதார்.

(எ - து.) மூங்கிற்றண்டின் இருதலையையும், நாயனரும் அவர்மனைவியாரும் பிடித்துக்கொண்டு, நீரில் மூழ்கத் தலைப்படும்போது, வெண்ணிறமுடைய பஸ்மத்திரிபுண்டரதாரணராகிய சிவயோகியார் நாயனரைப்பார்த்து, (வேட்கோவரே! உம்மை நான் உமதுமனையாட்டியைத் தீண்டி அவள்கையைப் பிடித்துக்கொண்டு மூழ்கச்சொன்னேனேயன்றி மூங்கிற்றண்டின் தலையையா பிடித்துமூழ்கச்சொன்னேன்! இச்செயல் அழகிது, இது நான் ஒப்புக்கொண்டதன்று. நான் சொன்னபடி) மூழ்கித்தருவீராக என்று கூறினர். பொய்மையை அறியாதநாயனர், அங்குச் சூழ்ந்திருந்த உலகினரெல்லாங் கேட்கும்படியாக, முன்னளில் தமக்கும் மனைவியாருக்கும் நிகழ்ந்தசெயலைச் சொல்லி, (அக்காரணத்தால் மறையவர்சொல்லியபடி, மனைவியின்கையைப் பிடித்து மூழ்குதற்குக் கூடாமையாயுள்ளேன் என்பதைவிளக்கி) நீரில்மூழ்கினர் என்பதாம்.

தண்டிருதலையும்பற்றிப் புகும்அவர் தம்மை வெண்திருநீற்று முண்டவேதியர், நோக்கி மாதைத்தீண்டிக்கொண்டுடன்மூழ்கீர் என்ன, பழுதிலாதார் பாரோர்கேட்கப் பண்டு தம்செய்கையெல்லாம் சொல்லி, கூடாமையை (விளக்கி) மூழ்கினர் என்று கொண்டுகூட்டுக.

நாயனரும் அவர்மனைவியாரும் நீலகண்டம் என்னும் நீண்ட(பெரிய)தோர் ஆணையை நீண்டகாலமாகத் தலைப்பிடித் திருந்தார்களேயன்றி, கடையானர் கைப்பற்றும் கடையாகிய காமத்தைக் கைப்பற்றினரில்லையாகலான் அவ்வுண்மைதோன்ற—தண்டிரு தலையும்பற்றினர்—என்றார். அதுகாறும் வெளிப்படுத்தாதிருந்த நாயனரது உள்ளம் பேதிக்குமாறு தாம்செய்த செயலெல்லாம் அந்நாயனர் தாம்கொண்ட ஆணையில் பேதியாது திண்ணியராய் நிற்கவேயாகலான் அவ்வுண்மை அவருக்குத்தோன்ற—வேதியர் புகுமவர்தம்மைநோக்கி—என்றார். * அங்ஙனம்நோக்கிய இறைவர் நோக்கத்தின்வழியே நிறுத்தவல்ல திருவருள் அவரது உள்ளத்தில் நீங்காதுநிற்றலால், அவ்வருளைத் தீண்டி (பற்றி) உன்செயலொழிந்து, யான்செய்யச்சொல்லும் செயலையே செய்வாயென்னும் உண்மைதோன்ற—மாதைத் தீண்டிக்கொண்டுடன்மூழ்கீரென்ன—என்றார். இறைவனர், மூவாயிரம் அந்தணர்களைக்கொண்டு இச்சபதத்தை நம்மைச்செய்யச் செய்தது மூவுலகும்அறியத் திருவுளங்கொண்டனர்போலும், திருநீலகண்டத்தாணை வழிநின்றதாம், இனிச் சிவயோகியார் ஆணைவழிச்செய்வதும் நமக்கு இன்றியமையாத செயலென்று துணிந்தனரென்பதுதோன்ற—பாரோர்கேட்ப, பண்டுதஞ்செய்கைசொல்லி

*நாயனரது உண்மையை வெளிப்படுத்தக்கருதிய இறைவன் சிவயோகியாய் வெளிவந்தபோது, தாம் கருதியபடியே அவர் இசைந்து அவ்வழியேவர, தமது அருள் அவருள்ளத்தில் நீங்காதிருந்தாலன்றிக் கூடாதாகலான் அங்ஙனங் கூறியதென்க.

மூழ்கினார்—என்றார். தாம்கொண்டிருந்த ஆணையையும் இறைவனார் கூறிய ஆணையையும், பழுதுபடாமல் முடித்தவல்லாளர் என்பதுதோன்ற—பழுதிலாதார்—என்றார்.

தண்டு என்றது - நீண்டகாலமாய்க்கொண்டிருந்த நீலகண்டத் தாணையைக்காட்டும் அடையாளக்கருவியெனவும், இருதலைபற்றி என்றது-இருவருங்கொண்ட ஆணை வெவ்வேறன்றி ஒன்றாகலான் ஒருதண்டினையே இருவரும்பற்றிய அடையாளச் செயலெனவும், வேதியர் என்றது - நாயனாரை, ஆணையைக்கடக்கப் பலவாற்றானும் இறைவன் வேதித்தானாகலால் அக்குறிப்புத்தோன்றக் கூறிய குறிப்புமொழியெனவும், "மாதைத்தீண்டி மூழ்கீர்" என்றது - உனது ஆணையைக்காத்த அருளைச்சைகவிடாது அவ்வருட்செயலில் மூழ்குவாயென்று உணர்த்திய அருள்மொழியெனவும், "பாரோர்கேட்ப" என்றது - நாயனார்தமதுசெயல்கெடாது அருட்செயலில்நின்ற செயலையும், அங்ஙனஞ்செய்தது "சார்ந்தாரைக்காத்தல் தலைவர்கடன்" என்ற சித்தாந்தவாக்கியப்படி இறைவன் பெருங்கருணைவைத்துச் செய்தசெயலையும், பெரியோர் கேட்டு உணர்ந்துய்ய எனவும், "மூழ்கினார்" என்றது-தாம்கொண்டிருந்த ஆணைவழியே அருளைநிரம்பப்பெற்றாரெனவும்,—பழுதிலாதார்—என்றது - நீலகண்டம் என்னும் ஆணையைக் கடவாமையால் சிவாபராதமும், சிவயோகியாரது ஆணையைக்கடவாமையால் சிவபத்தர் அபராதமும் உண்டாகாவண்ணம் காத்துக்கொண்டாரெனவும் உணரக்கிடக்கின்றமை காண்க.

இத்திருப்பாசுரத்தான், நாயனார் தாம்கொண்டிருந்த ஆணையைக்கடவாமல் சிவயோகியாரிட்ட ஆணையைச்செய்துமுடித்தனரென்பது கூறப்பட்டது. (௩அ)

வாவியின் மூழ்கி யேறும் கணவரும் மனைவி யாரும்
மேவிய மூப்பு நீங்கி விருப்புறும் இளமை பெற்றுத்
தேவரு முனிவர் தாமும் சிறப்பொடு பொழியுந் தெய்வப்
பூவின்மா மழையின் மீள மூழ்குவார் போன்று தோன்ற.

(எ - து.) (சிவயோகியார் இட்டஆணையைக் கடவாமல்) குளத்தினில் மூழ்கி எழுகின்றநாயனாரும், அவரதுமனைவியாரும், தாங்களடைந்திருந்த முதுமைப்பருவம் கடந்து விரும்பத்தக்க இளமைப்பருவத்தை யடைந்து, (இவ்வதிசயத்தைக்கண்ட) தேவர்களும் முனிவர்களும் பெருமையோடு சொரிகின்ற தெய்வமலராகிய கற்பகமலர்மழையில் மறுபடியும் மூழ்குகின்றவர்களைப்போலக் காணப்பட்டனர் என்பதாம்.

இருவரது இளமைப்பருவத்தை நீலகண்டமும், அப்பருவத்தில் அனுபவிக்கவேண்டிய இன்பசுகத்தை நீலகண்டத்தையுடைய இறைவனுமே ஏற்றுக்கொண்டனராகலின் அந்தஇரண்டையும், தாம் இப்போது இட்ட ஆணையைக் கடவாமல் இயற்றினாராகலான் அக்கணமே தாம் ஏற்றுக்கொண்டிருந்த இளமையையும், இன்பத்தையும் தந்தனரென்பார்—வாவியின்மூழ்கி ஏறும் கணவரும் மனைவியாரும், மேவியமூப்புநீங்கி விருப்புறும் இளமைபெற்று—என்றார். தேவர்களும் முனிவர்களும் இளமையையும், இன்பத்தையும் இவர்கள்பெற்றதுபோல் நாம் ஒருசிறிதும் பெறுதொழிந்தோமே இனியேனும் பார்வதிபரமேஸ்வரர்களைப்போல் திவ்யதேஜஸோடும் காணப்படுகின்ற இவர்களை அருச்சித்தாயினும் பெறுவோமென்று எண்ணி மலர்களைப் பொழிந்தனரென்பார்—தேவரும் முனிவர்தாமும் சிறப்பொடு பொழியுந் தெய்வப் பூவின்மாமழை—என்றார். அங்ஙனம் அவரெல்லாம் மலர்களால் அருச்சித்தது அருச்சனைபோலல்லாமல்மழைபொழிவதுபோல் ஒழிவில்லாமல் பொழிந்தனரென்பார்—பூவின்மாமழை—என்றார். இந்நிலவுலகத்து மலர்களன்றென்பார் — தெய்வப்பூ—என்றார். மலரைமழைபோற் பொழியவே அவ்விருவரும் குளத்தில் மூழ்கியபோது சிலகணக்கூடாதிருந்தமைபோல் கரையேறியும் காணப்பெறாராயினரென்பார்—மழையின்மீளமூழ்குவார்போன்று—என்றார்.

தோன்ற என்றதனல் தேவர்கள் இமையாநாட்டமுடையாரும், முனிவர்கள் தவமுடையாரும் ஆகலின் மலர்மழையில் காணப்படாதிருந்தவர் காணப்பட்டனரென்று பொருள்கொள்ளலுமொன்று.

இத்திருப்பாசுரத்தான், இறைவன் ஆணைவழிநின்று இன்பத்தை எய்தப்பெருதவர் இளமையிழந்து முதுமையடைந்து சாவில்மூழ்குகின்றனர் என்பதும், இந்நாயனர் ஆணைகடவாமையால் முதுமையையிழந்து இளமையையடைந்து இறவாத இன்பத்தில்மூழ்கி என்றும் இருப்பவராயினர் என்பதும் கூறப்பட்டன. (ருகூ)

சிவயோகியாரை விடபாரூடராய்க் காண்டல்.

அந்நிலை அவரைக் காணும் அதிசயம் கண்டார் எல்லாம்
முன்னிலை நின்ற வேத முதல்வரைக் கண்டார் இல்லை
இந்நிலை இருந்த வண்ணம் என்னென மருண்டு நின்றார்
துன்னிய விசும்பி னூடு துணையுடன் விடைமேற் கண்டார்.

(எ - து.) (மழையில் மீளமூழ்குவார் போன்று நின்ற) அந்நிலையில் அதிசயமாய்க் காணப்படுகின்ற அவர்களை, தரிசனஞ்செய்தவரெல்லாம், (பின்னர் இவர்களை மூழ்கச் செய்த சிவயோகியார்) நாமெல்லாம் காணும்படி முன்னேநின்றனரே அவரெங்கே யென்று காணும்பொழுது, வேதமுதல்வராகிய அவரை ஒருவருங்கண்டாரில்லை. (காணமற்போகவே, அவரெல்லாம், சிவயோகியார்) முன் காணநின்றவண்ணமும், இப பொழுது காணமற்போனவண்ணமுமாகிய இந்தநிலை, என்னவென்று ஐயமுற்று, (நினைக்குநினைவும் செய்யும்செயலும்) அற்று மயங்கி நின்றனர். (அங்ஙனம்நிற்கும் பொழுது) தேவர்கள்முதலாயினர் நெருங்கியிருக்கின்ற ஆகாயத்தின்கண் பார்வதிசமேதராய் இடபாரூடராயிருக்கக் கண்டனர் என்பதாம்.

இருவரும் குளத்தினில் மூழ்கி யெழுந்தபொழுது, இருவருக்கும் யாவராலும் காணப்பட்ட முதுமைப்பருவம்போய் ஆணைநிகழ்ந்த அக்காலத்து இருந்த இளமைப் பருவம் வந்து நிற்கின்ற அதிசயத்தை யாவரும்பார்த்தனரென்பார்—* அந்நிலை யவரைக் காணும் அதிசயங் கண்டாரெல்லாம்—என்றார். அங்ஙனங் கண்டவரெல்லாம் குளத்தினில் மூழ்கச்சொல்லி அவர்களது முதுமைப்பருவத்தைப் போக்கி, பின்னர் அந்நீரினின்றும் எழுந்திருக்கும்போது, அவர்களது இளமைப்பருவத்தையும் உடனெழச்செய்வதுபோல் எழுந்திருக்கச்செய்தஇறைவர் காணதொழிந்தனர்என்பார்—முன்னிலைநின்ற † வேதமுதல்வரைக் கண்டாரில்லை—என்றார். நாயனர் முதுமைப்பருவமாகிய அந்நிலையொழிந்து இளமைப்பருவமாகிய இந்நிலைமையைப்பெற்று இவ்வண்ணம் இருக்கும் பொழுது, இவர்பால் வல்வழக்கிட்டவராகிய சிவயோகியார் அந்தயோகநிலையைவிட்டு இப்பொழுது எந்தநிலையராய் எவ்வண்ணம் எங்கிருக்கின்றனரோ என்று மயங்கிநின்றனர் என்பார்—இந்நிலையிருந்தவண்ணம் என்னென மருண்டுநின்றார்—என்றார். அவர்களது மயக்கம்நீங்க, தாம் உமாதேவியோடு கூடிநிற்கின்ற நிலையினரென்றும், சிவதருமத்தை மேற்கொண்டவருக்கு அத்தருமரூபமாகிய விடையைத் தெரிசிக்கும்படிச் செய்கின்றவரென்றும், எப்போதும் சிதாகாசமாகிய சிற்றம்பலத்தில் காட்சிகொடுக்கின்றவரென்றும் அறியச்செய்தனர் என்பார்— துன்னியவிசும்பினூடு துணையுடன் விடைமேற் கண்டார்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான், நாயனர் முதுமைப்பருவத்தைப்போக்கி முன்னுள்ள இளமைப்பருவத்தைக் காட்டிய அதிசயம்போலும், இறைவனர் சிவயோகி வடிவத்தைப் போக்கி, முன்னுள்ள அருளுருவத்தைக் காட்டிய அதிசயங்கூறப்பட்டது. (சுo)

---

* அந்நிலை என்பது- இருவரும்சபதஞ்செய்துகொண்ட அக்காலம். † வேத ஆராய்ச்சி செய்வோர்க்கு முன்தோன்றுவதுபோல் தோன்றி, சொரூப ஆராய்ச்சியில் தோன்றாததுபோலத் தோன்றிமறைந்தனராகலின் வேதமுதல்வர் என்றார்.

நாயனாரும் மனைவியாரும் போற்றுதல்.

கண்டனர் கைகள் ஆரத் தொழுதனர் கலந்த காதல்
அண்டரும் ஏத்தி னார்கள் அன்பர்தம் பெருமை நோக்கி
விண்டரும் பொலிவு காட்டி விடையின்மேல் வருவார் தம்மைத்
தொண்டரும் மனைவி யாரும் தொழுதுடன் போற்றி நின்றார்.

(இ - ள்.) சொல்லுதற்கரிய காட்சியைக்காட்டி விடையின்மேல் ஆகாயத்தின்கண் வந்த இறைவனை, யாவரும் தெரிசனஞ்செய்தனர். இருகைகளும் பூமியிற்பொருந்த வீழ்ந்து வணங்கினர். நாயனாருடைய பெருமையல்லவோ இதுவென்று எண்ணி உள்ளத்தின்கண் கலந்தஆசையை யுடையவர்களாய்த் தேவர்களெல்லாம் வாயாரப் போற்றினார்கள். (இவ்வண்ணம் தேவர்முதலாயினார் வணங்கவும் போற்றவுமாயிருக்கின்ற காட்சியோடிருக்கின்ற பெருமானை) நாயனாரும் அவர் மனைவியாரும் ஒருங்குநின்று தெரிசனஞ் செய்தனர் என்பதாம்.

(அதிசயம்கண்டாரெல்லாம்) விடையின்மேல், விண்டரும் பொலிவுகாட்டி வருவார்தம்மை, கண்டனர், கைகளாரத்தொழுதனர், அண்டரும் அன்பர்தம் பெருமை நோக்கி, கலந்தகாதல் (உடையராய்) ஏத்தினார்கள், தொண்டரும் மனைவியாரும் தொழுதுடன்போற்றிநின்றார் எனக்கொண்டு கூட்டுக.

யாவரானும் காண்டற்கரிய காட்சியோடு நாயனாரையும், அவர்மனைவியாரையும் உடனாய் குளக்கரையில் நிற்கசெய்து, இறைவனாரும் தானும் தன் பெருமாட்டியுடன் ஆகாயத்தின்கண் விடையின்மேல் இருந்தகாட்சி வாக்குமனாதீதமா யிருந்ததென்பார்—விடையின்மேல்வருவார் காட்டியபொலிவு விண்டரும் என்றார். இவ்வண்ணமான காண்டற்கரிய காட்சியைக் கண்களாரக் காணவும், கைகளாரத்தொழவும் வந்தது, நாயனார் செய்த அரியசெயலாலன்றோ என்று அன்புகலந்த நெஞ்சுடையவராய்த் தேவர்களெல்லாம் போற்றினார்கள் என்பார்—கண்டனர் கைகளாரத் தொழுதனர் கலந்தகாதல் அண்டரும் ஏத்தினார்கள் அன்பர்தம்பெருமைநோக்கி—என்றார். நாயனாரது அதிசயக்காட்சியைநோக்கி இறைவனையும், இறைவரது அற்புதக்காட்சியைநோக்கி நாயனாரையும் பார்ப்போரெல்லாம் பார்த்துக்கொண்டிருப்ப, நாயனாரும் மனைவியாரும், இறைவன் முன் ஒருவனாய்வந்து, வேறுவேறிருந்த நம்மை உடனாக்கி, பின்னர் தாம் அங்ஙனம் உடனாக்கிய அருளுடனாய்த்தோன்றி, நாம் அவ்வருளேயாய் நிற்கக்காட்டிய காட்சி இக் காட்சியாமென்றுணர்ந்து, அருள்மயமாகவேநின்று போற்றினார் என்பார்—தொண்டரும் மனைவியாரும் தொழுதுடன்போற்றிநின்றார்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான், பாசத்திற்கு விடைகொடாதவரும், பாசத்திற்கு விடை கொடுத்தவரால் காணப்பட்ட விடையுடையானைக் கண்டு அன்புகலக்கப்பெற்று ஏத்தப் பெற்றதும், வேறுவேறு இருந்ததொண்டனாரும் மனைவியாரும் உடனாய் நின்று தொழுது போற்றிநின்றதுங் கூறப்பட்டன.

அல்லதூஉம், இறைவன் உயிர்களோடு வேறாயிருந்தும் வேறாயிருப்பவனும் அல்லனாயும், ஒன்றாயிருந்தும் ஒன்றாயிருப்பவனும் அல்லனாயும், உடனாயிருந்தும் உடனாயிருப்பவனும் அல்லனாயும் இருப்பதுபோல், நாயனார் இருந்தனரென்ற உண்மையை விளக்கியதுமாம். எங்ஙனமெனின்; நாயனார் மனைவியாரது உடம்பைத்தொடாது உடம்புக்கு வேறாயிருந்தும் அவரிட்ட ஆணையில் ஒன்றுபட்டு அன்போடுகலந்திருந்தனராகலான் வேறாயிருந்தவரல்லராயினர். இருவரும் வேறுவேறிடத்திராது ஓரிடத்திருந்தும் இணைவிழை(புணர்ச்சி)யில் ஒன்றுபட்டிராது வேறுபட்டிருந்தனராகலான் ஒன்றாயிருந்தும் ஒன்றாயிருந்தவரல்லராயினர். இறைவன் செயலால் உடனாயிருக்கவந்தும் முன்னுள்ள சிற்றின்பத்தில் உடனாயிராது; பேரின்பத்தில் உடனாயிருப்பதற்கு உரியராயிருத்தலால் உடனாயிருந்தும் உடனாயிருப்பவரல்லராயினர் என்க. (௬௪)

நாயனாரை மனையாளோடு தம்முடனிருக்கச்சொல்லி மறைதல்

மன்றுளே திருக்கூத் தாடி அடியவர் மனைகள் தோறும்
சென்றவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர் தாமும்
வென்றவைம் புலனான் மிக்கீர் விருப்புடன் இருக்க நம்பால்
என்றும் இவ்விளமை நீங்கா தென்றெழுந் தருளி னாரே.

(எ - து.) சிற்சபையின்கண்ணே, ஒருவராலும் மதித்தற்கரிய அற்புதக்காட்சியோடு நடனஞ்செய்து, தமது அடியவர்களுடைய வீடுகள்தோறும்சென்று, அவர்கள் கொண்டிருக்கும் தமது திருத்தொண்டில் நிலையாகநிற்கும் நிலைமையை யாவரும் அறியும் வண்ணம் செய்தருளும் மஹாதேவனாகிய இறைவனும், (தம்மைப்போற்றிநிற்கும் நாயனாரையும், அவரது நாயகியாரையும்நோக்கி) வெற்றிப்பாடுடைய ஐம்புலன்களினால் மேம்பாட்டினையடைந்தவர்களே! நம்மிடத்தில் (நீவிர் இருவரும்) எக்காலத்தும் இப்பொழுது அடைந்திருக்கும் இளமைப்பருவத்தினின்றும் நீங்காமல் விருப்பத்துடன் இருக்கக்கடவீர்களென்று அருள்செய்து திருவுருக்கரந்தனர் என்பதாம்.

நம்பால், என்றும் இவ்விளமைநீங்காது, விருப்புடன் இருக்க, என்று எழுந்தருளினார் எனக்கூட்டுக.

சிற்சபையின்கண்ணே, தாம்நின்று ஆடும்ஆட்டத்தின் பொருளும்பயனும் காட்டுவோர் அடியவர்களாக இருத்தலால் அவ்வுண்மையாவரும் உணர—மன்றுளே திருக்கூத்தாடி அடியவர் மனைகள்தோறும் சென்று—என்றார். தேவர்கள் தம்மைத் தேவரென்றெண்ணி இறுமாந்திருப்பதற்கின்றி அசுரர்கள் படுத்தும்பாட்டினால் தமது தெய்வத்தன்மையொழிந்து தம்மை அடைந்து பணிந்துபோற்ற அவரது துன்பங்களையொழித்துமீளவுந்தேவர்களாக வாழச்செய்யும் தெய்வமாக இருத்தலால் தேவர்கள் தேவர் என்றார். அறிவின்மிக்கார் யாவரும் தம்மைவெல்லக்கருத தாம் அவர்வழிப்படாது, அவர்களைத் தம் வழிப்படுத்தும் வெற்றிப்பாடுடைய ஐம்புலன்கள், நாயனார் வழிப்பட்டு அவராணை வழிநிற்கும் மேம்பாடுடையராயிருத்தலால்—வென்ற ஐம்புலனான்மிக்கீர்—என்றார். ஐம்புலன்வழிநுகரும் சிற்றின்பத்தைச் சிற்றின்பமாகவே சிதறவிட்டு, இன்றளவும் பேரின்பத்தைப் பேரின்பமாகவே மாறாது (நீங்காது) அனுபவித்துவந்தவராயிருத்தலால் "என்றும் இவ்விளமைநீங்காது விருப்புடன்" (அப்பேரின்பத்துடன்) "நம்பால்" (பேரின்பமென்னும் வரம்பிலின்பமுடையானாகிய நம்மிடத்தில் "இருக்க" (நீவிர் இருவரும் நீங்காதிருக்கக்கடவீர்களாக என்று), (அவர்களுடன்) எழுந்தருளினார் என்றார்.

இத்திருப்பாசுரத்தான், இறைவன் தமது பஞ்சகிருத்திய நடனத்திற்குச் சிற்சபையை இடமாகக்கொண்டிருத்தல்போல், பஞ்சகிருத்தியத்தின் பொருளையும், அவற்றின் பயன்களையும் விளக்குதற்கு அடியவரிடங்களை இடமாகக்கொண்டிருப்பவரென்பதும், தெய்வங்கட்குத் தெய்வத்தன்மையைக்கொடுக்குந்தெய்வமென்பதும், யாவரையும் வெற்றிகொள்ளும் ஐம்புலன்களைவெற்றிகொள்ளும் வெற்றிப்பாடுடையவராய் நாயனார் "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறிநின்றாராய்" நீடுவாழ்வாராயினார் என்பதும் கூறப்பட்டன. (௪௨)

இருவரும் இளமைபெற்று பேரின்பம் பெற்றமை கூறல்.

விறலுடைத் தொண்ட னாரும் வெண்ணகைச் செவ்வாய் மென்றோள்
அறலியற் கூந்த லாளாம் மனைவியும் அருளின் ஆர்ந்த
திறலுடைச் செய்கை செய்து சிவலோகம் அதனை யெய்திப்
பெறலரும் இளமை பெற்றுப் பேரின்பம் உற்றார் அன்றே.

(வி - ரை.) ஐம்புலன்களை ஒருங்கேவென்ற வெற்றிப்பாடுடைய நாயனாரும், வெள்ளிய தந்தவரிசைகளையும், (பவளம்போன்ற) செவந்தவாயினையும், மெல்லிய தோள்களையும், கருமுகில்போல்கூந்தலையும் உடைய மனைவியும், திருவருளினால் நிறைந்துள்ள செய்தற்கரிய செயலைச்செய்து, சிவலோகத்தை அடைந்து, பெறுதற்கரிய இளமைப் பருவத்தைப்பெற்றுப் பேரின்பத்தை என்றும் உடையராயினார் என்பதாம்.

இத்திருப்பாசுரத்தான், நாயனாரது செயலும் அவர் மனைவியாரது செயலும் செய்தற்கரிய வல்வினைச்செயல்களென்றும், அச்செயல்களில் திருவருளின்செயல் வன்மை பெற்றிருந்ததென்றும், அவர்களடைந்த திருவுருவம் இருவினைவசப்பட்டு எண்பத்து நான்குலக்ஷம் பேதமாயுள்ள சரீரங்களை எடுக்க அறியாத சரீரமாதலால் அச்சரீரத்தோடு கூடிவாழ்தற்குரிய சிவலோகத்தைப் பெற்றாரென்றும், அவ்வுலகத்தில் அவர்கள் பெற்றபேறு சில்லாண்டிற்சிதையும் சிற்றின்பத்தைப்பெறாது, பல்லாண்டென்னும் பதங்களைக்கடந்த இளம்பருவத்துக்குரிய செம்பிலின்பத்தைப்பெற்றாரென்றும் கூறப்பட்டன. (௩௯)

அயலறி யாத வண்ணம் அண்ணலார் ஆணை யுய்த்த
மயலில்சீர்த் தொண்ட னாரை யான்அறி வகையால் வாழ்த்திப்
புயல் வளர் மாடநீடும் பூம்புகார் வணிகர் பொய்யில்
செயல் இயற் பகையார் செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன்.

(இ - ள்.) திருநீலகண்டன் திருவாணையைப் பிறர் அறியாவண்ணம் பாதுகாத்த, மயக்கமற்ற சிறப்பினையுடைய தொண்டியற்றிய பெரியோரை அவரது பெருமையைக் கொண்டு யான் எனது சிற்றறிவான் அறிந்த வகையான் வாழ்த்தி, (இனி) மேகங்கள் கண்வளர்கின்ற சிறப்பினையுடைய மாளிகைகள் நிறைந்துள்ள, காவிரிப்பூம்பட்டினத்தில், வணிகர்குலத்தில் அவதாரஞ்செய்த பொய்மையில்லாத செயலுடைய இயற்பகை நாயனார் செய்த திருத்தொண்டைச் சொல்லத்தொடங்கினேன் என்பதாம்.

அண்ணலார் ஆணை, அயலறியாதவண்ணம் உய்த்த எனக்கூட்டுக.

உயிர்க் குறுதிபயப்பனவாகிய சொற்களும் செயல்களும் உறுதிப்பாடுகளும் சிவனருட்படாதார் அறியவரின் அவை பழுதுபடுமாகலின் — அண்ணலார் ஆணை அயலறியாதவண்ணம் உய்த்த—என்றார். இறைவன் பாசநீக்கத்திற்காகச்செய்யும் திரோதசத்திச்செயலிலும் மயங்காது நிலைபெற்று நின்றியற்றிப் பாசநீக்கமும் சிவப்பேறும் எய்தப்பெற்ற பெரியோராகலின்—மயலில்சீர்த்தொண்டர்—என்றார். இறைவனருளும், நாயனாருள்ளும்திரோதம், அருள் என்னும் இருசக்திகளும் நின்றியற்றிய செயல்களில் என்னறிவு உட்பட்டிருக்குமாயின், தொண்டனாரது செயல்வகையெல்லாம் சொல்லும் வன்மையுடையவனாவேன், அங்ஙனமான முறையில் உட்படாத சிற்றறிவினையுடையனாகலின் "யானறிவகையால்வாழ்த்தி" என்றார்.

இத்திருப்பாசுரத்தான், ஆசிரியர் சேக்கிழார், திருநீலகண்டநாயனாரது சரித்திரத்தைச் சொன்னேனல்லேன், ஏனெனில்; அது என்னறிவுட்படாதது. ஆகலின் யான் அவரது புகழை அறிந்தவகையால் வாழ்த்தினேன் என்றதும், அஃதேபோல் இயற்பகையாரது சரித்திரமும் என்னறிவால் உணர்ந்து சொல்லக்கூடாத இயல்புடைத்தாகலின் அவரியற்றிய தொண்டைச்சொல்லலுற்றேன் என்றதும் கூறப்பட்டன. (௪௦)

திருநீலகண்ட நாயனார் புராணம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

அநகாயநம:

திருத்தொண்டத்தொகை.



திருநீலகண்டத்துக்குயவனார்க்கடியேன்.

திருத்தொண்டரந்தாதி.

சொல்லச் சிவன்திரு ஆணைதன் தூமொழி தோள்நசையால்
ஒல்லைத் துறந்துரு மூத்ததற் பின்னுமை கோனருளால்
வில்லைப் புரைநுதலா ளொடிளமை பெற்றின்ப மிக்கான்
தில்லைத் திருநீல கண்டக் குயவனும் செய்தவனே.

"பொற்கொடியனையார்தம்மை மெய்யுற அணையப்போயினு"ராதலால், "தூமொழி தோள்நசையால்"என்றும்,அவருக்குண்டாகிய பிணக்கொழிய 'வேண்டுவ இரந்துகூறி'னு ராகலான், 'சொல்ல' என்றும், நாயனார் இரந்துகூறியும் அவ்வம்மையார் பிணக்கொழியாது எம்மைத்தீண்டுவீராகில் "திருநீலகண்டம்" என்றுகூறினாராகலான், "சிவன் திருவாணை சொல்ல" என்றும், அவ்வாணைச்சொல்லைக்கேட்ட நாயனார், அவரைவிட்டு ஒதுங்கிவந்து "ஏதிலார்போலநோக்கி எம்மை என்றதனால், மற்றைமாதரார் தமையும் என்றன் மனத் தினுந்தீண்டேன்" என்றாராகலான், "ஒல்லைத் துறந்து" என்றும், ஆணையில்நின்ற அவர் கள்,இளமையில் மிக்குளராய் அளவில்சீர் ஆணைபோற்றி ஆண்டுகள் பலவுஞ்செல்ல வளமலி இளமைநீங்கி வடிவுறு மூப்புவரப்பெற்றாராகலான், "உருமூத்ததற்பின்" என்றும், அக்காலத்தில் இறைவன் வந்து திருவோட்டைக்கொடுக்க,அதுமறைந்துபோக, அதற்குப் பிரமாணஞ் செய்யச் சொல்ல இருவரும் கோல்பிடித்துச் சொல்லி குளத்தினில் மூழ்கி எழுந்திருக்கும்போது, அவனருளால் மேவியமூப்புநீங்கி விருப்புறும் இளமைபெற்றாராகலான், "உமைகோன் அருளால் வில்லைப்புரைநுதலாளோடு இளமைபெற்று" என்றும், அங்ஙனம் இளமைபெற்றபின்னர் இறைவன் அவர்களைநோக்கி "வென்றஐம்புலனான் மிக்கீர் நம்பால் என்றும் இவ்விளமைநீங்காது விருப்புடனிருக்க" என்றருளிய படியே சிவலோகம் அதனை எய்திப் பெறவரும், இளமைபெற்றுப் பேரின்ப முற்றாராகலான், "இன்பமிக்கான்" என்றும், அவரது அருட்டிறத்தின் செயலையும், அச்செயலால் அவர்பெற்ற இன்பப்பெருக்கினையும் கூறி, "வேதியர் தில்லைமூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்" என்றபடி அவரது பதியும் அவரது திருநாமமும் அவரது குலமும் அறிய "தில்லைத் திருநீலகண்டக் குயவனும் செய்தவனே" என்றும் கூறினார்.

புராணசாரம்.

தில்லைநகர் வேட்கோவர் தூர்த்த ராகித் தீண்டில்எமைத் திருநீல கண்டம் என்று, சொல்லுமனை யாள்தனையே யன்றிமற்றுந் துடியிடையார் இடையின்பந் துறந்து மூத்தங், கெல்லையிலோ டிறைவைத்து மாற்றிநாங்கள் எடுத்திலமென் றியம்புமென இழிந்துபொய்கை, மெல்லியலாள் உடன்மூழ்கி இளமை எய்தி விளங்குபுலீச் சரத்தானை மேவினாரே.

இறை ஓடு வைத்துமாற்றி நாங்கள் எடுத்திலம் என்று இயம்பும் என மெல்லியலாள் உடன் பொய்கைஇழிந்து மூழ்கி எனக்கொண்டு கூட்டுக.

(எ - து.) தில்லைநகரின்கண் வேட்கோவர்குலத்துவந்த திருநீலகண்டநாயனார், நற்குணங்களை உள்ளடக்கி மேற்கொண்டுவரும் காமகுணத் தூட்பட்டவராய், தீண்டப் படாத பொதுமகளைத்தீண்டி, தனது மனையாட்டியைத் தீண்டவரும்பொழுது, அருந் ததிக் கற்பின் மிக்காராய்த் திருவினும் உருவின்மிக்காராய்ச் சிவனது திருநீலகண்டத் தையே சிந்தித்து அறத்தும் திருவாக்கில் மிக்காராய்ச் சிறந்திருக்கும் சிறப்புடை அம் மனையாட்டியார் அவரைநோக்கி எம்மைத் தீண்டில் "திருநீலகண்டம்" என்று ஆணையிட் டுக்கூறினர், அவ் வாணைமொழிகேட்ட பெரியார் இதுகாறும் நமது மனையாட்டி திருநீலகண்ட முடையானைத் தீண்டி நம்மையுந் தீண்டும் சீலமுடையவராயிருந்து, இன்று நாம் திருநீலகண்டமுடையானைத் தீண்டும் சீலமில்லாத ஒருத்தியைத் தீண்டி வந்தமை யுணர்ந்து தமது சீலங்கெடாவண்ணம் இவ்வாணைமொழியால் நம்மைத் தடுத்துச் சீலந்தான் பெரிதும் உடையாளாகிய நீலகண்டனைக் கூடல் பேரின்பமென வும், நம்மைக்கூடல் சிற்றின்பமெனவும் கருதி அத்திருநீலகண்டனைக் கூடினள். இனி நாம் சிற்றின்பத்தையும், அச்சிற்றின்பத்துக் கிடனாயுள்ளமாதரையும் மனத்தி னாலும் தீண்டாதொழிவேமென்று செய்துகொள்வதே நாம் செய்யத்தகும் ஆணை யென்று தெளிந்து "எம்மை என்றதனால் மற்றைமாதரார் தமையும் என்றன் மனத்தினுந் தீண்டேன்" என்று சபதமொழிகூறிச் சிற்றின்பத்தைத் துறந்து, இள மைப்பருவத்தையும் கடந்து மூப்பினையடைந்திருந்தனர். அத்தருணத்தில், சிவனார் சிவயோகியராய் அவர்பால் வந்து, ஓர் திருவோட்டினைக் கொடுத்து, "நம்பீ! இத் திருவோட்டினை உன்னை நம்பி கொடுக்கின்றேன், இதனை நாம் எப்போதுவந்து கேட் கின்றோமோ, அப்போது நீ கொடுக்கவேண்டும்" என்று கூறிச் சென்று, பின்னர் அது மறைந்துபோம்படிச்செய்து, நெடுநாள் கழித்துவந்து நாயனாரைநோக்கி "நான் கொடுத்த வோட்டைக் கொடு" என்று கேட்க, நாயனார் ஓட்டைக்காணாமல் 'ஓடில்லை'யென்று சொ ல்ல, 'அது எப்படி யில்லாமற்போகும்? நீ எடுத்துக்கொண்டனை' என்று சிவயோகியார் சொல்ல, நாயனார் "எடுக்கவில்லை" என்றுசொல்ல, யோகியார் "நீ யெடுக்கவில்லையென் பது பொய்" என்று கூற, நாயனார் சிவயோகியாரைப்பார்த்து "நான் சொல்லியது பொய்யல்ல, மெய்யே" என்றுசொல்ல, யோகியார் "அதுவுண்மையானால் நாங்கள் எடுத் திலம் என்று மனையாளைப் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கிச் சொல்லுவா"யென்று சொல்ல, அவரானை கடவாமலும் தாம் கொண்டிருந்த ஆணை விடாமலும் ஓர் மூங்கிலின் இருதலையையும் இருவரும்பிடித்துக்கொண்டு தமது சபதத்தையாவரும் அறியச்சொல்லிக் குளத்தினில் மூழ்கி எழுந்திருக்கும்போது முன்கழிந்துபோன இளமைப்பருவத்தை யுடையவராய் வியாக்கிரபுரீசுவரராகிய சிவபெருமானது சிவலோகத்தை அடைந்து என்றும் இறவாத இன்பத்துடன் வாழ்ந்திருந்தன ரென்பதாம்.

இப்புராணசாரத்தால் எண்ணரும் தவம் தானங்கள் பட்டினிகிடத்தல் யாகஞ் செய்தல் முதலிய பாசதரும முடையோரானும், பசுக்களாகிய ஆன்மாக்களைப் பதியா (தெய்வங்களா)க எண்ணி வழிபடுவதாகிய பசுதரும முடையோரானும், காமத்தை ஒரு சிறிதும் வெல்லமுடியாதென்பதும், சிவதருமத்தால் சிவனருள் பெற்று அன்புடைய ராய் அடியார்கட்கு ஆட்பட்டொழுக வல்லராயின், அவர் காமத்தால் வருந்தாமல் மிக எளிதாய் வெல்லவல்லவரென்பதும் கூறப்பட்டன.

திருநீலகண்டநாயனார் புராணசாரம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

அபீஷ்டப்ரதாயகம்

யற்பகைநாயனார்புராணம்.

நகரச்சிறப்பு.

சென்னி வெண்குடை நீடஅ பாயன் திருக்கு லம்புகழ் பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு வயல்வ ளந்தர இயல்பினி னளித்துப்
பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெ டும்பெருந் தீர்த்தமுன் னுடைய நலஞ்சி றந்தது வளம்புகார் நகரம்.

(இ - ள்) சோழர்குலத்திற் றோன்றினவரும், வெண்கொற்றக் குடையையுடையவருமாகிய அநபாயசோழமகாராஜாவினது அதிசயமிக்க அரியகுலத்தில், வந்தவரெல்லாம் புகழை அதிகரிக்கச்செய்துவந்த சிறப்பினால், அநாதியாய் நிலைபெற்று புகழினையுடைய மருதநிலஞ்சூழ்ந்த சோழநாட்டின்கண்ணுள்ள வயல்கள், தம்மாட்டு விளையப்படும் பொருள்கள் செழுமையுடன்தோன்ற, காவிரிநதியானது மாறுபாடின்றிப் பெருக்கெடுத்து, அவ்வக்காலங்களிற்பாய்ந்து, பின்னர் கடலின்கட்சென்று, அக்கடலினையும், பரிசுத்தஞ்செய்து, காவிரிச்சங்கமமென்னும் ஒப்பற்றதாகிய ஓர் நல்லதீர்த்தரூபமாய், முன்னாகவிளங்கப்பெற்றது. அந்நலத்தால் வளப்பத்தின்மிக்க பூம்புகார்நகரம், எல்லா நகரத்தினுஞ் சிறந்ததாயிற்று என்பதாம்.

நீர்வளமொன்றினால் நிலவளம் குடிவளம் முதலிய எல்லாவளப்பங்களும், குடிபுகுந்து நிரம்பப்பெற்ற நகரமென்பார் "வளம்புகார் நகரம்" எனவும், எல்லாவளப்பங்களையும் புகச்செய்த அந்நீர் காவிரிநதியென்பார் "பொன்னிநன்னதி" எனவும், அந்நதியானது தன்னால் விளையத்தகுவனவாகிய பொருள்களையெல்லாம் தனக்குரியநிலத்தின்கண் அளவில்லனவாக விளைவித்து அப்பொருள்களாலேயே அந்நகர் வளம்படச்செய்த சிறப்புடைத்தென்பார் 'மருதநீர்நாட்டு வயல்வளந்தர மிக்கநீர்பாய்ந்து இயல்பினின் அளித்து' எனவும், நிலவளந்தரும் தனக்கு நீர்வளந்தந்த கடலினுபகாரத்தை நாடி அதற்கு ஓர் சிறப்பினைச்செய்வான் கருதி அதன் உவர்ப்பைப்போக்கித் தன்னிடத்தில் எக்காலத்தும் யாவரும் நீராடுவதுபோல் அக்கடலிடத்தும் ஆடும்படி அதனிடத்துப்பாய்ந்து கலந்து ஓர்தீர்த்தமாய்விளங்கும் பெருஞ்சிறப்பினை யுடைத்தென்பார் "புணரிதன்னையும் புனிதமாக்குவதோர் நன்னெடும் பெருந்தீர்த்த முன்னுடைய" எனவும், இந்த நலமெல்லாம் உடையது காவிரியேயாயினும், அந்நதியைத்தன்மாட்டு உடைத்தாய்ச் சிறந்திருக்கும் பெருமையும் உடைத்து அந்நகரம் என்பார் "நலஞ்சிறந்தது வளம்புகார் நகரம்" எனவும், நலங்களெல்லாம் சிறந்துவளர்ந்திருப்பதற்குக்காரணம் சோழகுலத்திற்பிறந்த ஒவ்வொருஅரசர்களும் தாங்கள் செய்யத்தகுவனவாகிய புண்ணியந்தரும் அறங்களையெல்லாம் விடாதுசெய்துவந்த சிறப்பாலென்பார், 'திருக்குலம் புகழ் பெருக்கிய சிறப்பின்' எனவும், வம்சபரம்பரையும், அவ்வம்சத்தவராற் செய்யப்பட்ட நிலைபெற்றபுண்ணியங்களும் குன்றாதுவருதற்கான ஆற்றலுடைய அரியசிவபுண்ணியத்தைச்செய்த பேரரசர் [illegible]பாயரென்னும் சிறப்புப்பெயரினரென்பார் "செ[illegible]டை நீடஅபாயன்" எனவுங் கூறினர்.

செம்னி - சோழன். கரவாது உவந்தீயும்கொடையினால், வறுமையில் உயிர்கள் வருந்தாவண்ணம் நிழல்செய்யும் சிறப்பினனென்பதுதோன்ற 'வெண்குடையன்' என்றார். இம்மையில் தீவினையால்வரும் வறுமையைக் கொடையால் போக்குவதுபோல், மறுமையில் பாவச்செயலால்வரும் நரகமாகிய அபாயங்களையும் அனுபவிக்காவண்ணம் அப்பாவங்களைத் தனதுசெங்கோலால் போக்குங்கருணையாளன் என்பதுதோன்ற, 'நீடனபாயன்' என்றார். அவரது குலம்,இம்மையில்-வறுமையைப்போக்கிச் செல்வத்தால் புகழையும், மறுமையில் - நரகதுன்பத்தைப்போக்கி இந்திராதி போகத்தை யனுபவித்தற்குரிய நல்லறத்தால் புண்ணியத்தையும்,செங்கோல்முறையால் கொடுத்தல்போல்,ஞானத்தால் வீட்டில் - அழிவில்பேரின்பத்தைப் பெறப் பிறவாநெறி கைகூடுதற்குத் தீர்த்தவிசேடத்தையும், க்ஷேத்திரவிசேடத்தையும், உண்டாக்கவல்ல சிவலிங்கமூர்த்தியை எங்கும் பிரதிஷ்டைசெய்யும் சிறப்புடைத்து என்பதுதோன்ற "சிறப்பின் புகழ்பெருக்கிய திருக்குலம்" என்றார்.

சிவலிங்கப் பிரதிஷ்டையால் உண்டாகும்புகழ் உலகமும் உயிர்களும் உள்ளளவும் நிலைபெற்றிருப்பதேயன்றி அழிவெய்துதலில்லை என்பதுதோன்ற "மன்னுதொல்புகழ்" என்றார். இம்மை மறுமை வீடு என்னும் மூன்றிடத்திற்கும் வேண்டுவனவாகிய புகழ் புண்ணியஞானங்களை அரசன்கொடுத்தற்கு நீர்வளத்தால் வளம்படும் மருதநிலத்தாற் சூழப்பட்ட நாடு இன்றியமையாச் சிறப்புடையதென்பது தோன்ற "மருதநீர்நாடு" என்றார். குறிஞ்சிமுதலிய நிலங்களில்விளையும் பொருள்,நீரால்விளையுந் தன்மையுடையனவேனும் மருதநிலத்திற்றோன்றும் சிறப்புடைய நெல்முதலியவுணவுகளே சிறப்புடைய வுயிர்களை உடம்போடு வாழ்விக்கும் சிறப்புடைத்தென்பதுதோன்ற "மருதநீர்நாடு" என்றார்.

இத்திருப் பாசுரத்தான், சோழநாடு வளத்தில் மிக்கதென்றும், அதற்குக்காரணம் காவிரிநதியின் வளத்தாலென்றும், அதற்குக்காரணம் அச்சோழநாடாளவந்த அரசர்கள் இயற்றிய அறத்தின் வளத்தாலென்றும், அவ்வறத்தை நாட்டினபேரரசர் இப்புராணத்தை இவ்வுலகில் நாட்டிய அநபாயசோழ மகாராஜாவாகிய நமதுசைவ வள்ளலாரென்றும், இத்தகைய சிறப்புகள் நாட்டின்கண் இருக்கப்பெற்ற நகரம் பூம்புகார் நகரமென்றும் கூறப்பட்டன. (க)

குலச்சிறப்பும் கொடைச்சிறப்பும்.

அக்கு லப்பதிக் குடிமுதல் வணிகர் அளவில் செல்வத்து வளமையின்
அமைந்தார், செக்கர் வெண்பிறைச் சடையவ ரடிமைத் திறத்தின் மிக்கவர்
மறைச்சிலம் படியார், மிக்க சீரடி யார்கள் யாரேனும் வேண்டும் யாவையும்
இல்லையென் னாதே, இக்க டற்படி நிகழமுன் கொடுக்கும் இயல்பில் நின்றவர்
உலகியற் பகையார்.

(எ - து.) இவ்வுலகத்தின்கண் இயற்பகையார் என்னுந் திருநாமத்தை யுடையவர், அக் காவிரிப்பூம்பட்டினத்தின்கண் வாழும் குலத்தினும் குடியினும் சிறந்த வைசியருள் தலைமைபெற்றவர்; அளவில்லனவாகிய செல்வத்தாலாகிய வளப்பத்தில் நிறைந்தவர்; செக்கர்வானம்போன்ற சடையின்கண் வெள்ளியபிறையணிந்த இறைவனுடைய அடிமைத்திறத்தில் மிகுந்தவர். வேதச்சிலம்பணிந்த குஞ்சிதபாதத்தை யுடையாராகிய நடராஜமூர்த்தியினது அடியார்கள் யாவராயினும் அவர்வேண்டும்பொருள் எவையாயினும் அவையனைத்தையும் இல்லையென்றுசொல்லாமலே இந்தக்கடல்சூழ்ந்த இந்நிலவுலகில் புகழுண்டாய் உலாவக்கொடுக்குந் தன்மையில் தலைமைபெற்றுநின்றவர் என்பதாம்.

உயர்ந்தோருடைய இயல்புக்கு மாறுபடா, ஒப்புரவுடைய பெரியோர் என்பார் "உலகியற்பகையார்" என்றும் [illegible] வாழுக்கத்தை உரிமையாகக்கொண்டு ஆள்வதற்குரிய குலத்தானும் [illegible] தை எவ்வாற்றானும் இழுக்கடையாத மேன்மைபெற்றோங்கக் காத் [illegible] ம், தலைமைபெற்ற வணிகர்குலத்தில் வந்ததலை

வர்ணிப்பார் 'குலக்குடி முதல்வணிகர்' என்றும், வைசியரது குலதருமம் எவ்வெக்காலத்து எவ்வெவ்வழியில் எவ்வெப்பொருளில் பொருள்வருவாயுண்டாகுமோ, அவ்வக்காலத்து அவ்வவ்வழியால் அவ்வப்பொருளால் பொருள்வரும் வகையைச்செய்து அதனுல், வளம் பட என்றும் செல்வமுடையவராய் வாழ்ந்திருத்தல், அக்குலத்தவரது சிறப்பென்பார் 'அளவில்செல்வத்து வளமையின் அமைந்தார்" என்றும், இவர் வழிபடுந்தெய்வம் சந்திர சேகரனுகிய பெருந்தெய்வமே என்பார் "செக்கர்வெண்பிறைச் சடையவரடியர்"என்றும், அறநான்முறைப்படி இல்லையென்று சொல்லத்தகும் பொருளேயும், அடியார்பால் இல்லை யென்னுதேகொடுக்கும் பணித்திறத்தில் மிக்க வன்மையாளர்என்பார்"அடிமைத்திறத்தி னில்மிக்கவர்" என்றும், வேதச்சிலம்பு ஒலிக்கும் அடிக்கு அடிமையுடையார் எக்குலத்தவ ராயினும் அடிமைத்திறத்தில் மிகுந்திருப்பாராயின் அவர்களை அடியராகக்கொள்ளுதல் அவ ரது பேரன்பின் திறமென்பார் 'மறைச்சிலம்படியார் மிக்கசீரடியார்கள் யாரேனும்' என் றும், தம்மாட்டுள்ள பொருள்கள் எவையாயினும், அவையெல்லாம் அடியவர்களால் 'ரும்பியாளப்படும் பொருள்களேயாம் என்னும் திண்ணியஞானத்தில் நிலைபெற்று, அந்நிலைப்படியே விரைந்துகொடுக்கும் இயல்பினர் என்பார் "அடியார்கள் வேண்டும் யாவையும் இல்லையென்னுதே முன்கொடுக்கும் இயல்பினின்றவர்" என்றும், இங்ஙனம் இல்லையென்னுத நிலையில் உலகியற்பகையார் நின்ற இந்நிலையே, சிவசம்பந்தம் வேண் டும் அடியவரெல்லாம் சிவனையாளும் நிலையென்றுணர்ந்து அந்நிலையிலேயே நின்றுவாழ என்பார் "இக்கடற்படிநிகழ" என்றுங்கூறினுர்.

அன்றியும் சேதனுசேதனங்களெல்லாம் இறைவனுடைமையென்னும் உண்மை யுணரப்பெற்றவரே தம்மைஅவ்விறைவனுக்கு அடிமையென்றுணர்ந்து அவனுக்காளாய் எல்லாப்பொருளேயும் அவனுடைமையாகவே எண்ணி யாள்வரேயன்றித் தம்முடைமை யாகப் பற்றிவாழாரென்பதும், அந்நிலையில் வாழ்கின்றவர் இறைவனுடைய உடைமைப் பொருள் அவ்விறைவனடியார்க்கே உரித்தாவனவன்றித் தமக்குரித்தாவன அன்றென் பதும்உணர்ந்து, உணர்ந்த அவ்வழியே செய்யும்செயலும் உடையோரில் இவர் மிக்க திறமுடையவர் என்பதும்தோன்ற, "அடிமைத்திறத்தினில் மிக்கவர்" என்றூர். தம்மால் படைக்கப்பட்ட வுயிர்கள் தமக்கு அடிமையாயிருத்தலன்றி வேறன்மையான் அவ்வுயிர் களே வேற்றுமைகருதாது இறைவன் அடிமைகொண்டிருக்க அவர்களில் இவர் உயர்ந் தோர், இவர் தாழ்ந்தோர் என்று, தம் மனத்தாற்கருதிச் சிலரைப்பணிந்து வேண்டுவன தருதலும், சிலரைப்பணியாது வேண்டுவன கொடாதும்போதல் சிவதன்மமுறையாகா வென்பதுதோன்ற "யாரேனும்வேண்டும் யாவையுங்கொடுக்கும் இயல்பில் நின்றவர்" என்றூர். இவ்வுண்மை உயிர்களுக்கு உணர்த்தி உய்விக்கவே வந்தவரென்பது தோன்ற "இக்கடற்படி நிகழ" என்றூர்.

இத்திருப்பாசுரத்தான், இயற்பகையாராகிய நம்பெரியார் வணிகர்குலத்தில் வந்தவ ரென்றும், அக்குலத்திற்கேற்பப் பொருட்செல்வத்திலும் சிறந்திருந்தனரென்றும், குலச் சிறப்பும் செல்வச்சிறப்பும் தாமேயமையப்பெற்றூர் அவ்வளவில் மகிழ்ந்தொழிவதுபோல் ஒழியாது, அடைதற்கரிய செல்வன்கழலேத்தும் செல்வத்தைப் பெறுமாறு வெண் பிறைச்சடையவர் அடிமைத்திறத்தில் மிக்கிருந்தனரென்றும், செல்வன் கழலேத்துஞ், செல்வத்துக்கே இப்பொருட்செல்வம் வாய்க்கப்பெற்றதென்று அப்பொருளே அடியார் வேண்டியாங்கு கொடுத்து மகிழும்நிலையில் நிலைபெற்ற வள்ளலென்றுங் கூறப்பட்டன.

இல்லறத்தில் அடையும் மகிழ்ச்சி.

ஆறு சூடிய ஐயர்மெய் யடிமை அளவி லாததோர் உள்நிறை அருளால்
நீறு சேர்திரு மேனியர் மனத்து நினைத்த யான வினைப்பட முடித்து
மாறி லாதநன் னெறியினில் விளங்கு மனைய [illegible] சத்தியின் வந்த
பேறெ லாம்அவரேவின செய்யும் பெருமை[illegible]யங்காது [illegible]ாழ் நாளில்.

(இ - ள்.) கங்காதரனாகிய இறைவனுக்கு மெய்ம்மையாகிய அடிமைசெய்வதற்கு இயற்பகையாரது உள்ளத்தின்கண் அரிய திருவருளானது நிறைந்திருந்தபடியினால், திருநீறணிந்த திருமேனியராகிய அடியவர்கள் மனத்தால் நினைக்கப்பட்டவை யெல்லாம் அவர்நினைத்தவண்ணமே செய்துமுடித்து, எக்காலத்தும் மாறுபடுதலையறியாத நல்லவொழுக்கநெறியில் பிரகாசிக்கும் இல்லறத்தை நடத்தும்வகையால் உண்டாகும் மகிழ்ச்சியினால்வந்த பிரயோசனங்களெவையோ, அவையெல்லாம் அவ்வடியவர்களால் ஏவப்படும் ஏவல்களைச் செய்வதனாலுண்டாகும் பெருமையேயாகும் என்று அதனைவிரும்பி வாழ்ந்துவருகின்றநாளில் என்பதாம்.

அளவுபட்டாத வெள்ளத்தை இறைவன் தமது முடியில் அடக்கியிருப்பதுபோலும், நாயனாருள்ளத்தில் அளவுபட்டாத அருள் அடங்கியிருக்கும் அருமைதோன்ற, "ஆறு சூடிய ஐயர்மெய்யடிமைஅளவிலாதன உளநிறை அருளால்" என்றார்.

இதனால் அடியார் வேண்டும்பொருள், மனத்தாலியன்றது, வாக்காலியன்றது, காயத்தாலியன்றது என்று இன்மையை வெளிப்படுத்தக்கூறும் அச்சொல், அருள்பெறாதவர்க்கு முன்வந்து வஞ்சிக்கச்செய்யுமேயன்றி, அருள் உள்ளத்தில் நிரம்பப்பெற்றவர்க்கு எல்லாப்பொருளும் உள்ளனவென்று மனமுதலிய முக்கரணங்களும் நினைத்தற்கும், நினைந்தவண்ணமே சொல்லுவதற்கும், சொல்லியவண்ணமே செய்தற்கும் முற்பட்டு மாறுபடாது முன்வந்து நிற்குமென்று அறியக்கிடக்கின்றது.

இத்திருப்பாசுரத்தான், அளவில்லாத கங்கையை இறைவன் திருச்சடையில் அடக்கியிருப்பதுபோலும், அடியவர் தமதுள்ளத்தில் அளவில்லாத அருளை நிறைத்திருப்பவரென்றும், அருளைக் குறைவறப்பெற்றிருப்பதனால், "நீறு சேர்திருமேனியர் மனத்து நினைத்தயாவையும் முற்றுப்பெறமுடிப்பதில் மிக எளிமையாயினரென்றும், அங்ஙனம் முற்றுப்பெறச் செய்வதில் என்றும் மாறுபடாதிருத்தற்கே இல்லறநெறியில் மகிழ்ந்திருப்பவரென்றும், அம்மகிழ்ச்சியினால் உண்டாகும் சுகம் அடியார் ஏவினவற்றைச் செய்தலேயாம் என்றும், அங்ஙனம்செய்தலே அழிவிலாப்பெருமையாகக்கொண்டிருப்பவரென்றுங் கூறப்பட்டன. (௩)

இறைவனார் தூர்த்தவேதியராய் வருதல்.

ஆயு நுண்பொரு ளாகியும் வெளியே அம்ப லத்துள்நின் றாடுவார் உம்பர்
நாய கிக்கும்அஃ தறியவோ பிரியா நங்கை தானறி யாமையோ அறியோம்
தூய நீறுபொன் மேனியில் விளங்கத் தூர்த்த வேடமும் தோன்றவே தியராய்
மாய வண்ணமே கொண்டுதந் தொண்டர் மறாத வண்ணமும் காட்டுவான் வந்தார்

(எ - து) (நூலுணர்வினால் உண்டாகும் ஞானத்தினால் ஆராயத்தொடங்குவார்க்கு) ஆராய்தற்கே இடஞ்செய்யும் நுண்ணியபொருளேயாகியும், (ஆராய்வதைவிட்டு மெய்த்தவத்தினால் உண்டாகும் அருளால், அறியவல்லவர்க்கு) சிதாகாசமாகியவெளியில் நின்று நடனஞ்செய்வோரும் ஆகிய இறைவனார், தமது தொண்டராகிய இயற்பகையார், (மாயா காரியமாகிய அவன் அவள் அதுவாய்க் காணப்படும் நாமரூப பதார்த்தபேதங்கள் கோசரப்படினும், அவைகளால் அவர் நிற்கப்பெற்ற அருள்நிலையில்) மாறுபடாத ஞானத்தை (அறிவை)யும் கிரியை(செயலை)யும் உடையவர், என்னும் அவரது அருள்நோக்கத்தின் வண்ணமும், (அவ்வண்ணத்தை வெளியாக்கப்) பொன்மயமாகிய திருமேனியில், (அடியார்க்குரிய) சுத்தமாகிய திருநீறும், அதனோடுதூர்த்தராகிய காமாந்தகர்க்குரிய வேடமும், (விளங்கக்கொண்ட திருவுருவத்தின் வண்ணமும்) அருள் நோக்குடையார்க்கெல்லாம் தோன்றுமாறு மாயாவுருவத்தையே கொண்டு வேதியராய்ப்புறப்பட்டு வந்தனர். (அக்கோலமானது தம்[illegible]டுப்பிரியாத) பராசத்தியாகிய அருட்சத்திக்கும், அத்திருவுருவத்தின் [illegible] மன்று தெரியவோ, அவ்வருட்சத்தியைப்பிரியாத திரோதானசத்தி [illegible] தெரியாமலிருக்கவோ, நாம் அறியோம் என்பதாம்.

ம் நுண்பொருளாகியும், வெளியே அம்பலத்து நின்று ஆடுவாரும் (ஆகிய இறைவர்) தம்தொண்டர்மறாத (தன்மையின்) வண்ணமும், தூயநீறுபொன்மேனியில் விளங்கத்தூர்த்த வேடமும்தோன்ற, மாயைவண்ணமேகொண்டு, வேதியராய் காட்டு வான் வந்தார். அஃது உம்பர்நாயகிக்கும் அறியவோ, பிரியாநங்கைதான் அறியாமையோ, அறியோம் எனக்கொண்டு கூட்டுக.

"சொற்பதங் கடந்ததொல்லோன்" "சித்தமும் செல்லாச் சேட்சியன்" "அரியதில் அரிய அரியோன்" ஆகலின், "நூலுணர்வுணரா நுண்ணியோன்" என்ற திருவாசகத்தின் உண்மை தோன்ற, "ஆயும் நுண்பொருளாகியும் என்றார். நல்ல சிவதன்மமாகிய சரியை கிரியைகளின் வழிமுயன்ற தவமுதிர்ச்சியானும், நல்ல சிவயோகத்தின் வழிநின்ற நிலையானும் தோன்றுவதாகிய அருள்ஞானத்தால் தன்னைக்காணும் விருப்பமுடைய அன்பாளர்கள்காண பத்திவலையிற் படுவோனாகிய இறைவன் மிக எளிமையாய் வருவான் என்னும் அவ்வுண்மைதோன்ற வெளியே அம்பலத்து நின்றாடுவார் என்றார்.

இறைவன், தாம் பரிக்கிரக சத்தியாகிய மாயாசத்தி வடிவங்கொண்டு மாபாசத்தியின் செயலைச்செய்யாது அருட்சத்தி வடிவங்கொண்டு செய்யுஞ்செயலையே செய்தலை உம்பர்நாயகியாகிய ஞானசத்தி யறியாளாகையால் அதனை அந்த ஞானசத்தி யறியவோ, அருட்சத்திவடிவங்கொண்டு அவ்வடிவத்தில் மாயாசத்தி வடிவத்தை மாத்திரங்காட்டி அருட்சத்தியின்செயலையே நடத்தலை திரோதான சத்தியாகிய கிரியாசத்திஅறிவாளாயின் அச்செயலைத் தடுப்பாளாகலின் அக்கிரியாசத்தி அறியாதிருக்கவோ என்பார் "உம்பர் நாயகிக்கும் அஃதறியவோ, பிரியாநங்கைதான் அறியாமையோ" என்றார்.

ஞானசத்தி அறிவித்தால் அறியும் சத்தியாகவும், கிரியாசத்தி செய்வித்தால் செய்யுஞ் சத்தியாகவும் இருப்பின், அவனது இச்சாசத்தியின்திறத்தை நாமறியுஞ் சத்தனுவனே என்பார் அறியோம் என்றார்.

அருட்சத்தியின் வடிவத்தை விளக்கவல்ல தூயநீற்றையும், மாயாசத்தியின் வடிவத்தைத் தோன்றச்செய்யவல்ல தூர்த்த வேடத்தையும் ஒருங்கே கொண்டனன் என்பார் "தூயநீறு பொன்மேனியில் விளங்கத் தூர்த்த வேடமுந் தோன்ற" என்றார். இரண்டுவடிவத்தையும் ஒருங்கே கொள்ளினும் அவ்வடிவத்தில் பிரகாசிக்கும் செயல் அருட்செயலேயாகலான் அருள்வடிவத்தைக்காட்டும் நீற்றை "விளங்க" என்றும், மாயை செயலின்றி உருவமாத்திரங் காணும்படி யிருத்தலால் "தோன்ற" என்றுங் கூறினார். அருள்வடிவத்தைக் காட்டும் திருநீறுங் கண்டிகையும் அணிவதேயன்றி அவற்றிற்கு வேறாகிய சமயவேடங்களையும் ஒன்றுசேர்த்தணிபவர் அவைதிகமறையோர் என்பார் "வேதியராய்" என்றார். மாயாசத்தி வடிவத்தைக்கொண்டு அருட்சத்தியின் செயல் மாறாவண்ணம் தாம்காட்டியதுபோல், நாயனாரும் மறக்கும் மாயையின் செயலையொழித்து மறக்காத அன்பின் செயலையே காட்டும் தொண்டின்திறத்தைத் தொண்டர்க்குக்காட்ட இறைவன் அக்கோலங்கொண்டு வந்தனனென்பார் "மாய வண்ணமேகொண்டு தம்தொண்டர் மறாதவண்ணமும் காட்டுவான் வந்தார்" என்றார்.

அல்லதூஉம், பிரகிருதிமாயா சம்பந்தப்பட்ட பிராகிருதருக்கு பிரகிருதி மாயாவுருவ முடையனாய் அந்தப்பிரகிருதி மாயாகாரியமாகிய பிரபஞ்ச போகானுபவங்களையும், பிரகிருதிமாயா மயக்குநீங்கி முத்திநெறியை அவாவும் வைநயிகருக்கு திரோதானசத்தி வுருவுடையனாய் வந்து சிவஞான போகானுபவங்களையும், மெய்த்தவமுதிர்ச்சியினால் அன்பின்வழிவந்த சாம்சித்தருக்கு அரு[illegible] வுருவங்கொண்டுவந்து அன்பான் விளையும் சிவானந்தானுபவங்களையும் இறை[illegible] செய்வது முறைமை. அங்ஙனமிருக்க, சாம்சித்த நிலையினை யுடை[illegible] கையார் முன்னே மாயா உருவமே கொண்டுவந்தது என்னமுறைபோ[illegible] அருட்சத்தியின் வசப்பட்டார் பிரகிருதி, திரோதம் என்னும் இருசத்தியின் [illegible] யங்காது அருட்சத்தியின்

செயல்வழியே நிற்பரென்னும் அரியசெயலை யாவரும் உணர்ந்துய்ய அவ்வழியே நிற்கும் இயற்பகையாரால் அச்செயலைவிளக்குவிக்க "மாயைவண்ணமேகொண்டு தம்தொண்டர் மறாதவண்ணமும் காட்டுவான் வந்தார்" என்றார்.

இத்திருப்பாசுரத்தான், இறைவன் ஆராய்வோருக்கு நுண்ணிய பொருளாய் அரியனாயிருப்பனென்பதையும், ஆராய்தலைவிட்டுப் பத்தியிற்றலைப்படுவோருக்கு எளிமையாய் வெளிப்படுவ னென்பதையும், அப்பத்தியுடையார்க்கு வெளிப்பட்டு அனுக்கிரகஞ் செய்யுமுறையில் ஞானசத்தி கிரியாசத்திகளை ஆளும் முறைமை இத்தன்மைத் தென்பதையும், அம்முறைமைக்கேற்பக் கொள்ளும் திருமேனியின்வண்ணம் இவ்வண்ணமென்பதையும், அவ்வண்ணத்தைக் கண்ட அடியார்கள் அவ்வண்ணத்துக் கேற்பச் செய்யுந் தொண்டின் திறத்தையும் கூறப்பட்டன. (௪)

வேதியனை வழிபடுதல்.

வந்து தண் புகார் வணிகர்தம் மறுகின் மருங்கி யற்பகை யார்மனை புகுத,
எந்தை எம்பிரான் அடியவர் அணைந்தார் என்று நின்றதோர் இன்பவாதரவால்,
சிந்தை அன்பொடு சென்றெதிர் வணங்கிச் சிறப்பின் மிக்கஅர்ச் சனைகள்முன்
செய்து, முந்தை யெம்பெருந் தவத்தினா லென்கோ முனிவர் இங்கெழுந்
தருளிய தென்றார்.

(எ - து.) நீர்வளத்தால் குளிர்ச்சியினையுடைய பூம்புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினத்தில், வைசியர்களிருக்கும் வீதியின்வழியேவந்து, இயற்பகையார் வீட்டிற் குள்ளேபுக, இயற்பகையார் அவரைக்கண்டு, எமது தந்தையாகிய இறைவனுருடைய அடியவர் எழுந்தருளினாரென்று, தமது சித்தத்துள் நின்ற இன்பமயமாகிய ஒப்பற்ற ஆசையினால் அன்போடு எதிரே சென்று வணங்கி, சிறப்பினால்மிக்க அர்க்கியபாத்திய ஆசமனமுதலிய வழிபாடுகளை முன்னேசெய்து, அதன்பின்னர் முனிவராகிய தேவரீர் இங்கெழுந்தருளியது முற்பிறப்பில் யாங்கள்செய்த பெருந்தவத்தினாலென்று சொல்லுவேனா! என்றார் என்பதாம்.

தண்புகார் வணிகர்தம்மறுகில் மருங்குவந்து என்று கூட்டுக.

நாயனார் உள்ளத்தில் நிலைபெற்றுநின்ற இன்பம் அடியவர்களைக்காணும் இன்பமேயன்றி வேறு பேரின்பம் இல்லை என்பார் "நின்றதோரின்பம்" என்றார்.

இத்திருப்பாசுரத்தான், நாயனாரது உள்ளத்தில் அடியவரன்பே நிறைந்துள்ள தென்றும், அவ்வன்பால் அதிகரித்தபத்தியுடையவரென்றும், அப்பக்தி மிகுதியினால் ஒருகணமேனும் அடியாரைக்காணாதிருப்பராயின் துன்பமுடையராய் வருந்துவரென்றும், காணப்பெற்றால் யாம் காணப்பெற்றோமே என்று காணுந்தோறும் எதிர்சென்று ஆசை தீர அவரடிகளிற் பொருந்தவணங்கி, இன்பமயமாகிய ஆசையுடையவராய்க் காயத்தாற் செய்யத்தகும்பணியைச் செய்யக்கருதி அவர்களைச் சிவனெனவே பூஜைசெய்வரென்றும், இங்ஙனமான மஹேஸ்வரபூஜை செய்யப்பெற்றது யாங்கள் முற்பிறவிகளிற் செய்துவந்த பூஜையின் பயனென்றும் எண்ணும் சைவசித்தாந்த நெறியினையுடைய சிவஞானச்செல்வரென்றுங் கூறப்பட்டன. (௫)

நாயனாரைச் சம்மதி வினாதல்.

என்று கூறிய இயற்பகை யார்முன் எய்தி நின்றஅக் கைதவ மறையோர்
கொன்றை வார்சடையாரடியார்கள் குறித்துவேண்டின குணமெனக்கொண்டே
ஒன்று நீரெதிர்மறாதுவந் தளிக்கும் உண்மை கேட்டுநும் பாலொன்று வேண்டி
இன்றுநான் இங்கு வந்தன [illegible] இசைய லாமெனில் இயம்பலாம் என்றார்

(எ - து.) (முனிவர் இங்கெழுந்தருளியது, முந்தைஎம்பெருந்தவத்தினாலென்கோ) என்றுசொல்லிய இயற்பகைநாயனார்முன் எழுந்தருளிவந்துநின்ற படிற்றொழுக்க

முடைய மறையவர், (நாயனாரைநோக்கி) கொன்றைமாலையணிந்த நீண்டசடையினை யுடைய சிவபெருமான் அடியார்கள், தங்கள் தங்கள் உள்ளத்தில் குறிப்பிட்டு வேண்டும் பொருள்கள் (குணமற்றனவாயினும் அவைகளைக் குணமுள்ளனவென்றே உம்முடைய உள்ளத்திற்கொண்டு, ஒன்றேனும் அவரெதிரில் மறுக்காமல்நீர்மகிழ்ந்து கொடுக்கின்ற உண்மைநெறியைக் கேள்விப்பட்டு, உம்மிடத்தில் நான்ஒன்றைவிரும்பி உமதுவீட்டிற்கு இன்றுவந்தேன், நான் விரும்பி வந்த அந்தப்பொருளைநீர்கொடுத்தற்கு உடன்படுவதாக இருந்தால் அதனைநான் சொல்வதற்குக்கூடும் என்றருளிச்செய்தனர் என்பதாம்.

பொய் களவு வஞ்சனை சூது என்னும் படிற்றொழுக்கமற்ற தூயநாயனார்பால் தூய வெண்ணீற்று மேனியராய் வருதலேயன்றி படிற்றொழுக்கமும் தோன்றவந்தனராகலின் "கைதவமறையோர்" என்றார். வேதநடைபோல அறநூல்களுட் கூறப்படுவதல்லாமல் வேண்டுவார்வேண்டும் பொருள்களைத் தாமாகவேனும், அன்றி அவராலேனும், அறிந்து, மறுக்காது செய்யுந்தன்மைத்தாகிய ஒப்புரவறிதலை அறிந்தவர் நீர் என்பார் "அடியார்கள் குறித்து வேண்டின குணமெனக்கொண்டே, ஒன்று நீர் மறாது எதிர் உவந்து அளிக்கும் உண்மைகேட்டு நும்பால்வந்தனன்" என்றார்.

எனவே, இன்ன இன்னபொருள் கொடுக்கத்தக்கது என்று வேதமுறைப்படி அறநூல்களுள் கூறப்பட்ட பொருள்களைக்கொடுப்பதே யல்லாமல், உயர்ந்த நடையினையுடையவராகிய தகுதியாளர் (அடியார்கள்) விரும்பும் பொருள்களைத் தாமேயறிந்தும் தாமேஅறிவதற் கியையாதனவற்றை அவர் அறிவிக்க அறிந்தும், தாம் முயற்சிசெய்து சம்பாதித்த பொருள் முழுதும் உதவிபுரிவோர் எவரோ, அவரே ஒப்புரவு அறிந்தவராகலான், அவ்வொப்புரவின் இலக்கணங்களையெல்லாம் நீர் உண்மையாகவுடையவராய் அடியார்கள் குறித்து வேண்டுவனவற்றை மறுக்காமல் அகமகிழ்ந்துகொடுக்கும் உண்மையைக்கேட்டு நானொன்றுவேண்டி உமதிடம் வந்தேனென்பதாம்.

ஒப்புரவின் இலக்கணங்களாவன:— "ஊரின்கண் வாழ்வார் தண்ணீருண்ணும் குளம் நீர்நிறைந்தாற்போலும்" "யாவர்க்கும் பயன்படும் மரம் ஊர் நடுவே பழுத்தாற்போலும்" "எல்லாவுறுப்பும் நோய்களுக்கு மருந்தாகித்தப்பாது உதவியாகும் மரத்தைப் போலும்" என்று கூறப்படுவனவாம். இவற்றைத் திருக்குறள் ஒப்புரவறிதலென்னும் அதிகாரத்திற் காண்க.

இதனால், இங்ஙனமான ஒப்புரவு அறிந்தவர் அறநூல்களுள் கொடுக்கும் பொருள்களாகக் கூறப்படாதனவற்றை, உயர்ந்தோர் கொடுக்கும் பொருள்களாகக் கேட்பாராயின், அதனைக்குற்றமாகக்கொள்ளாது குணமாகவேகொண்டு, ஒப்புரவறிதலென்னும் நீதியுள் வைத்துக் கொடுக்கும்பொருள்களாகவே மகிழ்ந்து, மறுக்காமலும், ஒளிக்காமலும் எதிர்ந்துகொடுப்பராகலான் அந்நீதியறிந்து கொடுப்போர் நீரென்றும், அறநூல்களுள் கூறப்பட்டதைக்கொடுத்தல் அறமேயன்றிக் கூறப்படாததைக்கொடுத்தல் அறமாகாதென்றெண்ணி, ஒப்புரவறிதலென்னும் அறத்தைத்தக்கைவிட்டு, அதனோடு உயர்ந்தோர் வேண்டுகோளையே ஒழுக்கமாகக்கருதுவதையும் ஒழித்து, அவர்களையும் கைக்கொள்ளாது விடுவர். நீர் அவர்கள்போலன்றி, தூயநீறுபொன்மேனியில் விளங்கும் உயர்ந்தோர்கள், அறநூலுட்கூறப்பட்ட குணமுடையபொருளாயினும், கூறப்படாத குற்றமுடையபொருளாயினும், விரும்பிக்கேட்பாராயின் அதனையே கொடுக்கும் பொருளாகத் துணிந்துகொடுத்து அவர்களைக்கைக்கொள்ளும் அரியசெயலுடையீர் நீரென்றும் இங்ஙனம் யான் கூறிவந்த ஒப்புரவறிதலையுடைய நீங்கியநூல்களுட் கூறப்படாததைக் குணமாகக்கொண்டு இதுகாறும் செய்ததாகத் தெரியவில்லை அது இங்ஙனம் செய்யாதொழியின் நீர்கொண்ட ஒப்புரவிற்குக் குறையுளதாமாகலின், அக்குறையொழித்தற்கு இதுவே சமயமாகவும், குற்றமுடையதைக் கேட்கும்யானே உரியனாகவும் உமதுள்ளத்தில் நிச்சயித்து அதனைச்செய்ய இப்பொழுது இசைவீராயின் சொல்வீராக, சொல்வீரேல் யானும் துணிந்துசொல்லலா மென்றும் உணர்த்தியவாறும்.

த்திருப்பாசுரத்தான், சாயற்குச் சோர்வு பற்றிக் தலை அறிந்தனரென்றும், அறிந்தபடியே அவ்வரிதிலெசெயலைச் செய்தற்குரியார் என்றும், இவ்வுண்மையை உலகினருமறியுமாறு மறைவனா திருவுளத்தெண்ணி தூயநீறுபொன்மேனியில் விளங்கத் தூர்த்த வேடமுந் தோன்ற வேதியராய் வந்தாரென்றும், வந்து தமது வேண்டுகோளுக்கு அவரது உடன் பாட்டைக் கேட்டனரென்றும் கூறப்பட்டன. (சு)

மறையவர் மாதினைக்கேட்டல்.

என்ன அவ்வுரை கேட்டியற் பகையார் யாது மொன்றும் என் பக்கலுண் டாகில், அன்ன தெம்பிரான் அடியவ ருடைமை ஐய மில்லைநீர் அருள்செயும் என்ன, மன்னு காதலுன் மனைவியை வேண்டி வந்த திங்கென அங்கணர் மொழிந்திரே, சொன்ன போதிலும் முன்னையின் மகிழ்ந்து தூய தொண்டனார் தொழுதுரை செய்தார்.

(ஈ - து.) (ஒன்றுவேண்டி நும்பால்வந்தனன், அதனுக்கு இசையலாம் எனில் இயம்பலாம்) என்று சொல்லிய அந்த வார்த்தையை இயற்பகைநாயனார் கேட்டு, ஐயரே! நீர் என்னிடத்தில் கேட்க விரும்பியபொருள்) என்னிடத்தில் உள்ளதாயிருக்க வேண்டும், அங்ஙனம் இருக்குமானால், அது எவ்வகைத்தான சிறப்புடைத்தாயிருப்பினும், அதுபோலும் எனக்கு வேறொன்றில்லையாயினும், அப்பொருள் எமது பெருமானாகிய சிவபிரானது அடியவர்களுடைய உடைமையேயாகும்; என்னுடையதல்ல; இச்சொல்லில் சந்தேசமில்லை. (ஆசையினால் நீர்யாதொன்றை விரும்பினீரோ அதனைச் சொல்லும்'' என்று கேட்க, (மறையவர்) நான் உம்மிடத்திற்கு வந்தது, உமது ஆசையிலெபெற்றிருத்தற்குரிய மனையாளை எனக்குண்டாயிருக்கும் ஆசைதீர்த்துக் கொள்ளுதற்கு நீர் கொடுக்கவேண்டுமென்று விரும்பிவந்ததாகும் என்று அங்கணனாகிய இறைவன், அவர் மனையாளைக்கேட்டனர். அங்ஙனம் கேட்கப்படாததைக் கேட்டபோது அவர் மறையவரைக்கண்டகாலத்து உண்டாகிய மகிழ்ச்சியினும் மிக மகிழ்ச்சியடைந்து வணங்கிச்சொல்லுவாராயினர் என்பதாம்.

அடியவர்கள் தம்மிடத்துக்கு வருவதைப் பெரிதாகவும், அவர்கள் வேண்டியவற்றைத் தாம் கொடுப்பதைச் சிறிதாகவும் எண்ணும் சீலமுடைய அவரிடத்து, அடியார்கள் வேண்டியபொருளைச் சொல்லுவதொழிந்து ''இசையலாம் எனில் இயம்பலாம்'' என்னும் சொல்லை அதுகாறும் சொல்லக்கேட்டதில்லையாகலான், அன்று அச்சொல் அவர்க்கு, அதிசயத்தை விளைவித்ததென்பதுதோன்ற ''என்ன அவ்வுரை கேட்டு'' என்றார்.

உயர்ந்தபொருள் ஒன்றே யிருப்பினும் பலவிருப்பினும் அவை யான் அனுபவித்தற்கென்றும், உயர்ந்தபொருள்கள் அல்லாதன அடியவர்க்கென்றும் வைத்திருப்பேனாயின் முன் எனது இசைவுதெரிந்து, பின் சொல்லவேண்டும், யானோ உயர்ந்தபொருளாயினும், அஃதல்லாதனவாயினும், அவையெல்லாம் அனுபவித்தற்குரியார் அடியவர்களே என்று வைத்திருப்பவனே யன்றி, எனக்கென்று ஒருபொருளும் வைத்திருப்பவனன்று, இது உண்மை என்பது தோன்ற ''யாதும் ஒன்று என்பக்கல் உண்டாகில் அன்னது எம்பிரான் அடியவருடைமை ஐயமில்லை'' என்றார்.

தூயநீறு பொன்மேனியில் விளங்க, தூர்த்தவேடமுந்தோன்ற வேதியராய் வந்த தேவரீரிடத்தில், தூயநீறு பொன்மேனியைப்போற்றாது, தூர்த்தவேடத்தைக் கருதி நோக்குவேனாயின் நீர் என் இசைவுபெற்றுச் சொல்ல எண்ணி வந்ததைக் சொல்லவேண்டாம், தூர்த்தவேடத்தைக் கருதாது, தூயநீறுபொன்மேனியையே கருதுகின்றேனாகலின் நீர் ஐயமுறாது எதனை வேண்டிவந்தீரோ அதனையே யான் உய்யுமாறு விரைந்து சொல்லவேண்டும் என்னுங் குறிப்புத்தோன்ற ''நீர் அருள் செயும் என்ன'' என்றார்.

தூர்த்தவேடத்தைக் கருதுவதொழிந்து, தூயநீற்றைக் கருதுவதாகிய நாயனாரது மனத்தூய்மையும், அதற்கிணங்கக் கூறிய இழுக்குப்படாத சொல்லையும், அவர்பால் நிலை நாட்டும்பொருட்டு அவரது நிலையை அப்பொழுதுதான் கருதிச்சொல்லத் துணிந்தவர் போலுங் கருதிச்சொல்லத் தொடங்கினரென்க.

அப்பொழுது கருதியதாவது, இயற்பகையார். தூயநீற்றுப் பொன்மேனிக்குப்பகை யாகிய தூர்த்தவேடத்தையும், தூர்த்தவேடத்திற்குப்பகையாகிய தூயநீற்றுமேனியையும், ஒருங்கே யுடையோமாய் வந்த நம்மைக்கண்டபோது, இவ்வடியவர் ஒன்றுக்கொன்று மாறுபட்ட வேடமுடையவராய் வந்தனரோ இவர் யாவரென்று எண்ணவேண்டியதா யிருக்க, அதனையெண்ணமல் தூர்த்தவேடம் - பாசச்செயலைத் தடுப்பதற்குக் கொள்ளும் நிக்கிரககோலமெனவும், தூயநீற்றுக்கோலம் - சிவப்பேறளித்தற்குக் கொள்ளும் அனுக் கிரககோலமெனவும், அவ்விரண்டு கோலத்துக்கும் உரியார் இறைவனோடு ஏகனாகிநிற் கும் அடியவரெனவும், அவ்வடியவருக்குள்ளே இரண்டுகோலமும் ஒருங்கேயுடையராய் வரும் அடியவர் அரியரினும் அரியரெனவும், பாசநீக்கம் உண்டானரிடத்து அடியவர் தூயநீற்று மேனியராய் சிவப்பேறளிக்க வருவரெனவும், பாசமுடையாரிடத்துத் தூர்த்த வேடத்தராய் பாசப்பொருளைப்பறிக்க வருவரெனவும், பாசநீக்கமும் சிவப்பேறும் ஒரு ங்கே நிகழவேண்டியவரிடத்துத் தூயநீற்றுமேனியோடு தூர்த்தவேடமும் உடையவராய் வருவரெனவும், இவ்வாறு அவ்வேடங்களின் சிறப்புநோடி இவர்நமக்குப்பாசநீக்கத்தை யும் சிவப்பேற்றையும் ஒருங்கே செய்தருளுவான் வந்தனர்போலுமென்று ஆராக்காதல் கொண்டு "யாதும் ஒன்றும்" (நீர் வேண்டியபொருள் எப்படிப்பட்ட பொருளாயினும்) "என்பக்கல் உண்டாகில்" (என்னிடத்தில் இருக்குமாயின்) அவ்வரியபொருள் எமதிறை வனுடைய அடியார்களுக்கு உரிமையாயுள்ள பொருளென்று அவைகளைப் பாதுகாத்து வைத்திருக்கும் அடிமையாளாகலின், அடியாராகிய உம்முடைய பொருளை நீர் கேட்பதற் குச் சந்தேகமேன், ஆகலான் இப்பொழுது என்னிடத்திலுள்ள பொருளில் எதுவேண் டும் சொல்லுமென்று கேட்டனர் என்று சிவனாகிய அடியார் திருவுளத்தெண்ணித் துணி ந்தவராய் "மன்னுகாதல் உன்மனைவியைவேண்டி வந்தது இங்கு" என்றார்.

"ஒன்றுவேண்டி நும்பால்வந்தேன்" என்றும், "இசையலாம் எனில் இயம்பலாம்" என்றும், அஞ்சுதலுடையார் போன்று மறைபொருளாகச் சொன்னவேதியர், "யாது மொன்றும் என்பக்கலுண்டாகில், அன்னது எம்பிரான் அடியவருடைமை ஐயம் இல்லை நீர் அருள்செயும்" என்றுசொல்லிய மாத்திரத்தில் மிக்கவிரைவுடன் வெளிப்படையாக அஞ்சாது கூறினராகலான் "அங்கணர் எதிரேசொன்னபோதிலும்" என்றார்.

எனவே, "யாதும் ஒன்றும்" என்றற்றொடக்கத்தனவாய் நாயனார்கூறிய அச்சொற் கள் * "ஈரம் அளைஇப் படிறிலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச்சொல்" அஃதாவது, அன்போடுகலந்து வஞ்சனையிலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாயிற்சொற்கள் ஆகலான் அவ்வினியமொழிகளைக் கேட்டவுடன் வேதியர், இச்சொற்கள் "சிறுமையுள் நீங்கிய இன்சொல், அஃதாவது,—தாம் நாயனாரைக்கேட்கக்கருதிய அப்பொருள் அவ ருக்கு நோய்செய்யாது, இன்பத்தையே செய்வது என்னும்பொருளை ஐயமறவெளிப் படுத்திய சொல் எனக்கருதி உன்மனைவியை வேண்டிவந்தது என அஞ்சாது கூறினர் என்க.

வேதியர் மொழிந்ததைக்கேட்ட நாயனார், இவ்வேதியர், "தேராதவனுடைய தெளி வுந் துன்பந்தருதலைப்போல், தெளிந்தவன்கண் ஐயுறவுகொள்ளலும் தீராவிடும்பைதரும்" என்ற † "பொய்யாமொழிபோல் ஐயமில்லையென்று ஐயம் ஒழிவதற்கு நாம் கூறிய அம் மொழியினும் இவ்வையர் ஐயமுடையாராய் தமதுள்ளக்கருத்தை வெளிப்படக் கூறிரா

* திருக்குறள் க௧, அ—ம் இனியவைகூறல். † திருக்குறள் ௫௧, அ - ம், தெரிந்து தெளிதல். "தேரான்தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும், தீரா விடும்பை தரும்."

யின் அது மிகக்குத்திராத இன்பந்தருமாகலான் அத்தன்மைத்துக்கிடஞ்செய்யாது, நமக்கு இன்பத்தையே தர, நாம் வேண்டிக்கொண்டபடி நம்பக்கல் உள்ளபொருளையே கேட்டனராகலான், "இவரினுஞ் சிறந்தார் யாவரென்று" உளங்களிகூர்ந்து "அடியார்கள் குறித்து வேண்டுவன குணமெனக்கொண்டே, உண்மைகேட்டுவந்தனன்" என்றுசொல்லிய அப்போதுண்டாகிய மகிழ்ச்சியினும் அதிகமான சந்தோஷத்தை யடைந்தனராகலான், "முன்னையின் மகிழ்ந்து" என்றார்.

அடியரல்லாதாரிடத்து குணத்தைக்கண்டால் அதனைக்குணமாகக் கொள்ளாதொழிதலும், அடியாரானரிடத்து குற்றத்தைக் கண்டால் அதனைக் குற்றமாகக் கொள்ளாதொழிதலுமே தூய்மை. எனவே, அடியரல்லாரிடத்துக் காணப்படும் குணம் இறைவனுக்குவேண்டிய அன்பை விளைவிப்பதில்லை, அடியாரிடத்துக் காணப்படும் குற்றம் அரனுக்குவேண்டிய அன்பைக்கெடுப்பதில்லை ஆகலான் அது தூய்மையாயிற்று. ஆகவே, நாயனார் வேதியர் தூர்த்தவேடத்தோடு வந்தகாலத்திலும் மகிழ்ந்து, பின்னர் குற்றம் விளைவிப்பதைக் கேட்டகாலத்திலும் மகிழ்ந்தனர் ஆகலான், "தூயதொண்டனார்" என்றார்.

அடியாரிடத்துக் குற்றத்தைக்கண்டு குணமாகக்கொள்ளலால் வரும்பயனை அன்று அவரால் அடையப்பட்டனராகலான், "தொழுதுரைசெய்வார்" என்றார்.

இத்திருப்பாசுரத்தான், நாயனார் தமக்குள்ளனவாகிய எல்லாப்பொருளையும் அடியவருடைமையாக எண்ணியதினும், அதுபோல் அடியவர்கட்குக் கொடுப்பதினும், மிக மகிழ்ச்சியுடையவரென்றும், அதில் ஐயமில்லை என்று யாவரும் அறிந்துய்ய நாயனாருக்கு நாயகனாகிய இறைவன் அவரது நாயகியைக் கேட்டனரென்றும் கூறப்பட்டன. (எ)

மறையவரிடங்கூறியதை மனைவியிடங்கூறல்.

இது எனக்குமுன் புள்ளதே வேண்டி எம்பிரான் தந்த பேறெனக்கென்னாக்,
கதுமெனச்சென்று தம்மனை வாழ்க்கைக் கற்பின் மேம்படு காதலி யாரை, விதிம
ணக்குல மடந்தையின் றனையிம் மெய்த்த வர்க்கு நான் கொடுத்தனன் என்ன,
மதுமலர்க்குழல் மனைவியார் கலங்கி மனந்தெளிந்தபின் மற்றிது மொழிவார்.

(**எ - து.**) (வந்தவேதியர், உன் மனைவியை வேண்டிவந்தது என்று சொல்லிய போது) இவர் கேட்டதாகிய இப்பொருள் எனக்கு முன்னமே உள்ளதாயிருக்கின்ற பொருளல்லவா அதனைத்தானே இவ்வேதியரும் விரும்பினர். (இப்படி என்னிடத்துள்ள பொருளையே இவர் இச்சிக்கும்படியாகச் செய்தது) எமது பெருமானாகிய இறைவன் எனக்குக் கொடுத்த பாக்கியமல்லவா? என்று சொல்லி (உடனே அவ்விடத்தினின்றும் நீங்கி) சீக்கிரமாக வுள்ளேசென்று, தமது இல்லறவாழ்க்கைக்கு உரியவரா யமைந்துள்ள கற்பிற்சிறந்த மனைவியாரை (நோக்கி) நான் வேதவிதிப்படியே கலியாணஞ்செய்துகொண்ட நற்குலத்திற்பிறந்த பெண்ணல்லவா? உன்னை இன்றைக்கு இந்த மெய்த்தவராகிய வேதியர்க்கு நான் கொடுத்துவிட்டேன் என்று சொல்ல, தேன்பொருந்திய மலரணிந்த கூந்தலையுடைய அவர் மனைவியார்கேட்டு மனங்கலங்கிப் பின்னர் தெளிவடைந்த பின்பு இதனைச் சொல்லுவாராயினர் என்பதாம்.

வேதியரே! எம்பெருமானாகிய இறைவனிடத்து யான் நாடோறும் வேண்டும்பாக்கியம் ஒன்றுளது, அஃது உனது அடியார்கள் வேண்டும்பொருள் எதுஎதுவோ அவையெல்லாம் என்னிடத்தில் இருக்கவேண்டும்; அவர்களால் விரும்பப்படாத பொருள் ஒன்றேனும் வேண்டாம் என்பதேயாம், அப்பாக்கியத்தை எனதிறைவன் இன்று தேவரீரால் கொடுக்கப்பெற்றனன். எவ்வாறென்றால் என்னிடத்தில் இல்லாத பொருளைத் தேவரீரைக் கேட்கச்செய்யாது என்னிடத்தில் முன்னமே அமைந்துள்ள பொருளையே கேட்கச்செய்ததேயாம் என்றார். "இது எனக்குமுன்பு உள்ளதேவேண்டி, எம்பிரான் தந்தபேறு எனக்கென்று" என்றார்

தாம் எண்ணிய பாக்கியத்தை மாறுபடாது எண்ணியபடியே பெற்றபெருமகிழ்ச்சியினால் அப்பாக்கியத்தைப்பார்க்க அதிசீக்கிரமாகச்சென்றனர் என்பார் "கதுமெனச் சென்றார்" என்றார். "பெண்ணிற்பெருந்தக்க யாவுளகற்பென்னுந், திண்மையுண்டாகப் பெறின்"என்று தெய்வநூற்கூறியபாக்கியம் எதுவோ, அந்தகிடைத்தற்கரியபாக்கியத்தை விரைந்துசென்றுகண்டனரென்பார் "தம்மனைவாழ்க்கைக்கற்பின் மேம்படுகாதலியாரை" என்றார். அடியார்களுக்கு இல்லையென்னாது கொடுத்தற்குப் பதுமநிதியாயுள்ள தமது மனையாட்டியைநோக்கி, வேதமுறைப்படி என்னோடிருக்கவந்த குலப்பெண்ணல்லவா நீஎன்பார் "விதிமணக்குலமடந்தை" என்றார். நீ என்னோடிருக்கவந்த அன்றுமுதலாக உன்னை நான்பாக்கியமாகப் பெற்றுள்ளதற்குப்பயன் இன்றுதான் கண்டேன் என்பார் "இன்று" என்றார்.

அது என்னை என்பையேல், அடியார்க்கு இல்லையே என்னாத எனது தவத்தை மெய்ம்மையாக்கவந்த இவ்வேதியருக்கு உன்னை அவர்வேண்டியபடியே கொடுத்தனன். நீ இல்லையாயின் "பெண்ணிற்பெருந்தக்க யாவுள" என்னும் தெய்வச்சொல்லும் பொய்த்து, உன்னைப்பாக்கியமாகப்பெற்றதற்கு நான்பெறவேண்டியபயனும் பொய்த்து, நல்லகுலத்திற்பிறந்தநான் இலன் என்னும் எவ்வம் (இல்லையென்று சொல்லுகின்றகுற்ற)த்துக்கும் ஆளாய், "மேல் உலகம் இல்லெனினும்" (உயர்ந்த நடையினை யுடையாராகிய அடியார்க்கு) "ஈதலேநன்று" என்றகூறிய பெரிய நன்மையையும் இழந்தவனாவனல்லவா? அங்ஙனம் ஆகாவண்ணம் நான்பெற்ற பாக்கியமாகிய உன்னை இவ்வேதியருக்குக்கொடுத்து இல்லையே என்னாத தவத்தையும் பெற்றேன். அத்தவத்தாற்பெறத்தகும் பயனும் பெற்றேன். எனது குலத்துக்கு வருங்குற்றமும் ஒழித்தேன். ஈதலாகிய நன்மையும்பெற்றேன் இவையனைத்தும் நான்மிக எளிமையாய்ப்பெற உன்னைக்கொடுத்தனன் என்பார் "உனை இம்மெய்த்தவர்க்கு நான்கொடுத்தனன் என்ன" என்றார்.

இவையெல்லாங்கேட்ட அவர்மனைவியார், நமதுநாயகராகிய இவர்-பெறவேண்டிய பேறுகளுக்கெல்லாம் துணையாகவோ ஆளாகவோ விற்கவோ நாம் இருப்பதே நாம் பெறும்பேறாக அன்றே எண்ணி ஆட்பட்டிருக்க இவ்வேதியருக்கு இன்றுதானத்தந்தேனென்று கூறினார். முன்வேதியரிடத்து "யாதும் ஒன்று என்பக்கல் உண்டாகில் அன்னது எம்பிரான் அடியவருடைமை ஐயமில்லை" என்றார். இவ்விருசொல்லையும் ஆராயுமிடத்து, நாமொழிந்தவனையவெல்லாம் அடியவருடைமையாக முன்னமேவைத்தனரென்றும், இன்று அவ்வேதியர் கேட்டபடியினால் அதுநோக்கி நம்மை இன்றுதான் அடியவருடைமையாக்கினாரென்றும் தெரியவருகின்றன. முன்னமே நம்மை அடியவருடைமையாக எண்ணாததற்கு நம்பாலிருந்தகுற்றம் யாதோ என்று சிறிது கவலைகூர்ந்தனர் என்பார் "மதுமலர்க்குழல் மனைவியார்கலங்கி" என்றார்.

இதுகாறும் இவரால் குற்றம்பாராட்டியிருந்த நம்மை, இன்று இம்மெய்த்தவர் நம்மை விரும்பினும் தேவரீர் விரும்பியபொருள் குற்றமுடைய பொருள் அது உமக்கு ஆகாவெனக்கூறி நம்மைவிலக்காது, கேட்ட அவ்வேதியரது வேண்டுகோளையும், இல்லையென்னாத தமது தவத்தையுமே பெரிதாகஎண்ணி நமது குற்றத்தை அக்கணமேமறந்து இன்று நம்மை அவருக்குக்கொடுக்கத் துணிந்தனரே இது நாம்செய்த அழிவிலாப்பாக்கியமென்பார் "மனந்தெளிந்த" என்றார்.

உன்னைநான் கொடுத்தனன் என்றுதுணிந்து சொல்லிய நமது கணவனார், சொல்லத்துணிந்ததுபோல் அவர்பால் நம்மை ஒப்புவிக்கத்துணியாதது, நாம் சிறிது கலங்கிய கலக்கத்தைக் கண்டுபோலும் என்று எண்ணி, அக்கலக்கம் அவருக்கு அகலுமாறு, சொல்லத்துணிந்ததுபோலும் என்னைக் கொடுக்கத்துணியாதகாரணம் என்னையென்று அவர் துணிவதற்கானசொல்லைப்பின் சொன்னாரென்பார் "பின்மற்றிதுமொழிவார்" என்றார்.

அறிவற்ற தாவரப்பொருளாகிய பொன்மணி முதலியவற்றைச் சுதந்தரமாகக் கொடுக்கக்கூடுமேயன்றி, அறிவுடைய சங்கமப்பொருளை அதுபோலக் கொடுத்தற்கு

யாவராலும் இசையா, அங்ஙனமிருக்கத் தாவரப்பொருள்போல் மனையாட்டியைத்தானே சுதந்தரமாகக்கொடுக்கத் துணிந்ததற்குக்காரணம், சொற்றிறம்பாமையாகிய கற்பே மேன்மையான கற்பென்னும் கற்பின் திறமுடையவர் அவர்மனைவியார் என்னும் அச்சிறப்புத் தோன்ற "கற்பின் மேம்படுகாதலியார்" எனவும், தூயநீற்று மேனியோடு தூர்த்தவேடம்பூண்டுகொண்டிருந்த இச்சிறந்தஅடியார்க்கு, விதியாகக்கொண்ட சத்பாத்திரமாகிய உன்னை நான்கொடுத்தது இல்லையே என்னுத எனதுதவத்திற்கு சிறந்ததென் றெண்ணிக்கொடுத்தனன் என்பது தோன்ற "விதிமணக்குலமடந்தை உனைநான் கொடுத்தனன்" எனவும் பொருள்கொள்க.

இவ்விருபாசுரத்தான், அடியார்களுக்கு வேண்டும்பொருளை உடைத்தாயிருக்கப் பெறுதலே பாக்கியமுடைமை என்றும், அப்பாக்கியத்தை முற்றப்பெறுதற்குப் பெருந்துணை மனையாட்டி என்றும் கூறப்பட்டன. (அ)

மனைவியார் மாதவர்பால் நிற்றல்.

இன்று நீரென்னை அருள்செய்த திதுவேல் என்னு யிர்க்கொரு நாதனீர் உரைத்த, தொன்றை நான்செயும் அத்தனை அல்லால் உரிமை வேறுளதோ எனக்கென்று', தன் தனிப்பெரும் கணவரை வணங்கத் தாழ்ந்து தொண்டனார் தாம் எதிர் வணங்கச், சென்றுமாதவன் சேவடி பணிந்து திகைத்துநின்றனள் திருவினும் பெரியாள்.

(எ - ம.) எனது ஆத்மாவுக்கு ஒப்பற்ற நாதனுயுள்ளவனே, இன்றைக்கு அடிமையாகிய என்னைநோக்கி அருள்செய்தது இத்தன்மைத்தா யிருக்குமானால், நீர் கட்டளையிட்டதொன்றை அடியேன் செய்வதேயல்லாமல், எனக்கென்று செய்யத்தகும் காரியம் வேறொன்றுளதோ என்று, தனது ஒப்பற்ற நாயகரை வணங்கினர். (அவர் வணங்கிய போது, நாயனார் வேதியர்க்குரிமையாக்கிய அவரைத் தண்டாகாரமாக வீழ்ந்து வணங்கி நின்றனர். (அவர்வணங்கி நிற்பவே) இலக்குமியினும் சிறந்த அழகினையுடைய அவ்வம்மையார், (தம்மை யாளவிரும்பிய) மாதவராகிய அடியவரிடத்துத் தாமேசென்று அவர் திருவடிகளைவணங்கி, திகைப்புற்று நின்றனர் என்பதாம்.

என்னுயிர்க்கு ஒருநாத இன்று நீர் என்னை அருள்செய்தது இதுவேல் எனவும், திருவினும் பெரியாள் சென்று மாதவன் சேவடிபணிந்து எனவும் கொண்டு கூட்டுக.

உடம்பால் அடையப்படும் சிற்றின்பானுபவத்திற்கு நாயனர் நாயகராயிருந்ததேயல்லாமல் உயிரான் அடையப்படும் பேரின்பானு பவத்திற்குரிய நாயகனையும் காட்டத்தாமே நாயகராக இருந்தனரென்பதுதோன்ற 'என்னுயிர்க்கொருநாத'என்றூர். நீர்-நினைக்கும் செயலுக்குரிய கர்த்தாவாயிருப்பவர். நான் அச்செயல்வழிமாறுது நடத்தற்குரிய அடிமையாயிருப்பவள். இவ்வடிமைத்தன்மை உமக்கு ஆட்பட்ட அன்றுமுதல் உடையவள். ஆகவே, இன்று என்னை இவ்வேதியருக்கு ஆட்படுத்துவதாகிய இதுவே அடியாளைச்செய்யத்தகும் அருளாயிருக்குமாயின், அவ்வருட்பணியை அகமகிழ்ந்து அவ்வழி மாறுதொழுகும் அந்த நன்னெறியொன்றே நான்கடமையாகச்செய்யும் செயலாகக்கொண்டிருப்பதல்லாமல் எனது உரிமையாகிய கற்புநிலைக்கு வேறொருசெயல் உளதென்பது உண்டோ, இல்லை. இது பொய் மொழியன்று. வாய்மை மொழியேயாம் என்னும் அவ்வண்ணம் தோன்ற "நீர் இன்று என்னை அருள் செய்து (உரைத்தது) இதுவேல், (அவ்)வொன்றை நான் செயும் அவ்வளவேயல்லால், எனக்கு உளதோ வேறு உரிமை என்று தன் தனிப்பெருங்கணவரை வணங்க" என்றூர்.

நம்மை வணங்கிய இவரோ - இலக்குமியினும் பெரியார். இவரைக் காதல்கொண்டு வந்த வேதியரோ-பெரியரினும் பெரியார். அப்பெரியாருக்கு நம்மைவணங்கிய இவரை இசைவித்துக்கொண்டுபோய்க் கொடுப்பதாக இருப்பின் இவருடைய வணக்கத்தை நாம் ஏற்றுக்கொள்ளலாம் அங்ஙனமின்றே 'நான் இன்று இம்மெய்த்தவர்க்கு உன்னைக்கொடுத்

தனன்" என்றோம். எனவே, கொடுத்துவிட்டு உன்னைக்கொடுத்தேன் என்றுசொன்ன மேயன்றி, இனி உன்னைக் கொடுக்கப்போகின்றேன் என்றுசொன்னதில்லையே, அதனை இவர்யோசித்து வணங்கினவரல்லர். கொடுத்தேன் என்றபோது இவர் அவரடிமையாயினார். அவரடிமை யாயினாருக்கு நான் அடிமையாதல் முறையா? அவரடிமையாயினார் எனக்கு அடிமையாதல் முறையா? இதுமுறைமை அன்றே. அம்முறைமை அவ்வம்மையாருக்குத்தோன்ற "தொண்டனார் தாம் எதிர்தொழுது வணங்க" என்றார்.

அம்மையார் நாயகனாகிய நாயனார் தம்மை எதிர்வணங்கியமாத்திரத்தில் அவர்வணங்கிய எண்ணத்தை அக்கணமே அறிந்தவராய், வேதியர்பால் போவோமென்று நாயனாரிடத்திற்சொல்லாது, தாமே வேதியர்பாற்சென்று அவரடிக்காட்பட்டு வணங்கி இல்லையே என்னாதநாயனாரது விரதத்தைப் பாதுகாத்த சிறப்புத்தோன்ற "சென்றுமாதவன் சேவடிபணிந்து" என்றார். வேதியர் தம்மை அன்புடன் பணிந்த அம்மையாரை நோக்காது நாயனாரையே நோக்கி இருப்ப, அதனை அம்மையார்நோக்கி, நம்மை நோக்கிவந்த இவ்வடியவர் உள்ளத்தில் நோக்கியபடியே அவர் நோக்கத்திற்கு நாம் எதிர்ப்பட்டும் நாம் எதிர்ப்படாமைபோல் நாயனாரை நோக்குகின்றனரே நம்பால் என்ன குற்றங்கண்டனரோ! அக்குற்றம் புலப்படவில்லையே இதற்கு நாம் என்செய்யக் கடவோமென்று அறிவுகலங்கினாரென்பது தோன்ற "திகைத்துநின்றனள்" என்றார்.

இலக்குமி தம்மைப் பெற்றார்க்கு பொருட்செல்வத்தைக் கொடுக்க அறிவாளேயன்றி, அன்புவருவதற்கான் அருட்செல்வத்தைக்கொடுக்க அறியாள். இவ்வம்மையாரோ தம்மைப்பெற்ற நாயனாருக்குப்பொருளையும், அருளையும், அன்பையும் கொடுத்தனராகலின் இவரது சிறப்புத்தோன்ற "திருவினும் பெரியாள்" என்றார்.

இத்திருப்பாசுரத்தான், நாயனார் தமது இல்லாளுடைய மாண்பினால், இல்லையே என்னாத தமது விரதத்தைக் காத்துக்கொண்ட சிறப்புக்கூறப்பட்டது. (க)

நாதனாரைப் பணி வினாதல்.

மாதுதன்னைமுன் கொடுத்தமாதவர்தா மனமகிழ்ந்துபே ருவகையின்மலர்ந்து
யாது நானினிச் செய்பணி தானென்றிறைஞ்சி நின்றவர்தம்மெதிர் நோக்கிச்
சாதி வேதிய ராகிய தலைவர் தையல் தன்னையான் தனிக்கொடுபோகக்
காதல் மேவிய சுற்றமும் பதியும் கடக்க நீதுணை போதுக என்றார்.

(எ - து.) (வேதியர் தன்மனைவியாரைக்கேட்க) அம்மனைவியாரைத் (தான் கொடுத்தற்கு) முன்னேவைத்துள்ள பொருளாகக்கொடுத்த பெரியதவசீலர், மனமகிழ்ச்சியடைந்து பேரானந்தத்தினால் முகமலர்ந்து, (சுவாமிகாள்!) இனி அடியேன் செய்யத்தக்க பணியாதிருக்கின்றது (அதனைக் கட்டளையிட்டருளல்வேண்டும்) என்றுவணங்கி அவர் எதிரே நின்றனர். (அங்ஙனம் நிற்கின்ற அவரை) தேவசாதியில் வேதியராகிய இறைவனார் பார்த்து, இங்குநிற்கின்ற பெண்ணை, (யான் எப்படி) தனியே அழைத்துக்கொண்டு போக முடியும், (ஏனெனில் இங்குள்ளவர் இவளிடத்தில்) ஆசையுடைய சுற்றத்தார்களாக இருக்கின்றனர், (ஊரும்) இவளுடைய ஊராகவிருக்கின்றது, (ஆகலான்) சுற்றத்தாரையும் ஊரையும் யான்கடந்து போமளவும் நீதுணையாக வரவேண்டும் என்று கூறினர் என்பதாம்.

தவத்தில் அவாவுள்ளவர்கள், பெண் பொன் மண் முதலியவைகளையும், பொறி புலன் கரணங்களையும் தவத்துக்குப் பகைப்பொருள்களென்றும், அவைகளை விலக்க வேண்டுமென்றும், வெல்லவேண்டுமென்றும் எண்ணி எண்ணி விலக்கவும் வெல்லவும் முயல்வார்போன்று விலக்குவதுமற்று, வெல்லுவதுமற்று, அவைகளைப்பழித்தும், பகைத்தும், தங்களை யிழித்தும் வெறுத்தும், அருள்வழியறியாது தற்போத வழிப்பட்டுத்

தயக்கதை விளாவிறுக்கின்றனர். நாயனர் இறப்பில் (அழிவில்லாத) தவமாகிய சீரிலை யாதுகளில் அவாவுடையராய்ப் பொன்முதலிய எல்லாப்பொருள்களும், பொறிமுதலிய தத்துவக்கூட்டங்களை, இறைவனுல் படைக்கப்பட்டனவாய், அவனேவல் வழிநின்று செல்லுமவை யாம் என்றுணர்ந்தனரெனக் கற்போதவழி யொழித்து அருள்வழியே சென்று, அவ்வுயிர்க்கு எதிர்ப்படும் அருளாளனாகிய இறைவனுர் அடியவருருக்கொண்டு வந்து பொன் போன் முதலியவ் பொருள்களின் எதுவேட்கின்றனரோ அதனைக்கேட்பதற்கு முன்னமே அப்பொருளை ஈந்து மகிழுந் தவமுடையயார். எனவே, பற்றற்ருன் பற்றினைப் பற்றவிட்டாது தங்களவல்ல இப்பொருள்கள், அப்பற்றற்ருனுல் பற்றும் பொருளாய் அவருள் பற்றப்படுவதால் நாம் அவனைப்பற்றுவதற்குத் தடைசெய்யும் பொருள் அவள் என்னையிருக்கின்றன என்று மதித்து முற்பட்டுக்கொடுக்கும் பெருந் தவமுடையயார், அத்தவமிகேட்டுத்தான் கொடுத்தபொருளைப்பற்றிய இறைவனைத் தான் பற்றும் பொருளாகப் பற்றிப் போதலைத்தப் பெருங்கடலின் உள்ளமூழ்வார் என்பார் "மாது தன்னை முன்கொடுத்த மாதவர்தாம் அன்பென்னும் பெருங்கடலின் மலர்ந்து" என்றார்.

நீ எனனைப் பற்றுதற்குத்தக்க பொருளில்லை என்னைப் பற்றியிருந்து என்னை உன்னிடமாகச் செய்கவேண்டும் உனவசமாகவே நின்றனை இனி எனக்குப * பணி(செயல்) இல்லை அங்ஙனமாக எனக்குப்பற்றும் பொருளில்லை. அது இல்லையாகவே யான் என்று முன்னுத்தவருக்கு தறகாண அப்பொருளும் இல்லை. ஆதலால் இனி உம்மிடத்து ஏகனுகி நிற்பதல்லது - (யான் என்னைத் தன்றுந் செருக்கற்று என் உடமையை அருளாகிய ஸ்ரீபாதத்தை அணைந்திருப்பதல்லாமல்) வேறில்லை. இவ்வாறு ஏகனுக நிற்கப்பெற்ற யான் இனிச் செய்பணியாதேதல் அதனைக்கட்டளையிடுவதுருளவேண்டும் என்பார்—"நான் இனிச் செய்பணியாது என்று இறைஞ்சிநின்றனர்", என்றார்.

அங்ஙனம் யான் எனதென்பது அற்றிருத்தலாகிய ஆன்மசுத்தியைப் பெற்றபின் னர், அங்ஙனம் ஏகனுகி நிற்றற்குத் தடைசெய்யவல்ல உடற்சம்பந்தமாகிய பாசச்செயல் கள் வந்து தாக்குமாகலின் அவைகளை விட்டுச் சாய்ப்பதற்கான செயலைச் செய்ய அரு ளோத்துவேமாகப் பற்றிநின்ற போதாமிக அதுவே நான் எனதென்பதற்றநீ செய் யத்தகும்பணி என்பார் —"இன்றிவர்தம் எதிர்நீக்கிக் காதன்மேலிய சுற்றமும் பதியுங் கடக்க நீதுனைபோதுக என்றார்" —என்றார்.

இதனால், நாயனர், பசுபுண்ணியத்தைச் செய்ததல் பதிபுண்ணியத்தைச் செய்யவல்ல மா தவத்தினரென்றும், பதிபுண்ணிய முடையயாராயிருந்தமையான் பசுபுண்ணிய முடையா ரல் விடுதற்கரிதான பாசபந்தங்களை மிக எளிமையாய்விட்டு ஆன்ம சுத்தியைப் பெற்று இறைவனுேடு ஏகனுகி நிற்கப்பெற்றனரென்றும், அங்ஙனம் நிற்கப்பெற்றபின் னர் பாசக்ஷயம் பண்ணுவதிலும் வல்லமையாளராயிருேரென்றும் அறியக்கிடக்கின்ற மையகாண்க.

ஆன்மாவாகிய பசுவும் அறிவுவடிவமே, பரமான்மாவாகிய பதியும் அறிவுவடிவமே அறிவென்பதில் இரண்டும் ஒருசாதியாயினும் பரமான்மா அறிவிக்கும் சாதியும், ஆன்மா அறியும் சாதியும் ஆகலான், அறியுஞ்சாதியாகிய ஆன்மா, அறிவிக்கும் சாதியாகிய பர மான்மாவோடு ஏகனுகி நிற்பினும் ஆன்மா அறியுஞ்சாதியாகவே யிருப்பவன். பரமான்மா அறிவிக்கும் சாதியாகவே யிருக்கின்றவன் ஆகலின் "சாதிவேதியராகிய தலைவர்" என்றார். எனவே, அறிவிக்குந் தொழிலுடையவர் வேதியரெனவும், ஏனையோர் அவர் அறிவிக்க அறிகின்றவர் எனவும் தருபொருளுங் கூறப்படுதல்காண்க. அதனால் அறிவிக்குந் தொழிலை யுடைய இறைவனை "வேதியர்சாதி" என்றாரெனக. நாயனரது மனைவியார் - பாசத் திற்கு அடையாளப்பொருளாகவும், அவரைச்சேர்ந்த சுற்றத்தினரை பாசகாரியத்திற்கு

* இத்தொடக்கத்தனவெல்லாம் சிவஞானபோதம் க - ஆம் - சூம், (க)ஆம அதிகர

அடையாளப் பொருள்களாகவும் கொண்டு, பாசமாகிய மனைவியை இறைவனிடத்துச் சேர்த்தி நாயனார் பாசமற்று இறைவனோடு ஏகனாகிநின்று பெற்றதுபோல் / பாசகாரியத்தையும் ஒழித்துத் தடையற்றுச் சிவானந்தத்திற்கு ஆளாகவேண்டியவராகலான் "காதன்மேவிய சுற்றமும் பதியுங் கடக்க" என்றார்.

இத்திருப்பாசுரத்தான், "மாதவர்தாம், மாதுதனையீன்றன்கொடுத்து மனமகிழ்ந்து பேருவகையின்மலர்ந்தார்" என்றது "இறைவனோடு ஏகனாகிநிற்றல்" என்னும் முதல் அதிகரணப்பொருளைக் குறித்ததெனவும், "நானினிச் செய் பணிதான் யாது என்று இறைஞ்சிநின்றனர்" என்றது ஏகனாகிநின்ற காலத்தும் . . . . பணியுளது என்பதைக்குறித்ததெனவும், (இறைஞ்சினவர்க்கு) "காதன் மேவிய சுற்றமும் பதியுங் கடக்க நீதுணைபோதுக" என்றது "இறைபணி வழுவாது நிற்றல்" என்னும் இரண்டாம்அதிகரணப்பொருளைக் குறித்ததெனவும் கொள்க.

நாயனார் போர்க்கோலங் கொள்ளல்.

என்றவர் அருளிச் செய்ய யானேமுன் செய்குற்றேவல்
ஒன்றிது தன்னை என்னை உடையவர் அருளிச் செய்ய
நின்றது பிழையாம் என்று நினைந்துவே றிடத்துப் புக்குப்
பொன்றிகழ் அறிவை சாத்திப் பூங்கச்சுப் பொலிய வீக்கி.

(இ - ள்.) 'சுற்றமும் பதியுங் கடக்க நீதுணை போதுக' என்று வேதியர் . . . யிட, 'இது இவர் சொல்வதற்கு முன்னம் யானே அறிந்து செய்யத்தக்க சிறுபணி. இப்பணியை என்னை ஆளாகவுடையவராகிய இவர் . . . . சொல்லுமளவும்தாமதித்து நின்றது பெருங்குற்றமாம் என நினைந்து, (அங்குநின்று நீங்கி) வேறோரிடத்துக்குப் போய்ப் பொன்னுடையை உடுத்து, (அதன்மேல்) அழகிய அரைக்கச்சை இடையில் இறுகக்கட்டி என்பதாம்.

• வேதியர் வேண்டியபடியே மனைவியாரைக், ... னோம். அவளும் அப்படியே தடையின்றியாயினாள். இங்ஙனம் . . . பணி முற்றுப் பெற்றது என்று எண்ணியிருந்தோம். வேதியர் . . . . பதையும் அறிந்து தடையுளதேல் அதனை . . . . அதனையும் எண்ணாது, கொடுத்த அளவில்மகிழ்ந்து அயர்ந்து . . . . இது நமது குற்றமாமென்று எண்ணினார் என்பார்யானே முன் செய்குற்றேவல் இது தன்னைச் (செய்யாது) நின்றது பிழையாமென்று நினைந்து என்றார்.

ஒன்றிது தன்னை என்றது - வேதியர் . . . . தொன்று, இது பெரிதான தன்று என்னும்பொருளைக்குறித்தது. . . . . னும் வேதியர் பெரிதாக எண்ணினராகலான் அத்தடையை ஒழித்தல் நாம் செய்யத்தகும் பணியில் இது இன்றியமையாத செயலாமென்றெண்ணி அச்செயலைச் செய்ய அக்கணமே துணிந்தனரென்பார் வேறிடத்துப்புக்கு என்றார். புக்குப் பின்செய்த செயல்களை இனிவரும் பதின்மூன்று செய்யுளாற் காண்க.

இத்திருப்பாசுரத்தான், மூலமாகிய பாசம் இறைவன்வசப்பட்டு, ... ஏகமாகி நின்றகாலத்தும் பாசகாரியங்கள் அங்ஙனம் நிற்கவொட்டாது உடனுறைவாய்வந்து வழுப் படச் செய்யு மாகலின் அவ்வழு நீங்கற்குரிய பணியையும் செய்தல் இன்றியமையாத செயலென்று கூறப்பட்டது. (கக)

வாளொடு பலகை யேந்தி வந்தெதிர் வணங்கி நிற்க
ஆளரி யேறு போல்வார் அவரைமுன் போக்கிப் பின்னே
தோளிணை துணையே யாகப் போயினார் துணைவி யாரை
நீளிடைப் படமுன் கூடி நிலத்திடை வீழ்த்த நேர்வார்.

சிவஞானபோதம் கய - ஆம் சூத்திரத்தில் இதன்விரிவெல்லாம் காண்க.

(எ-து.) (நாயனர் இடையில் அரைக்கச்சை இறுகக்கட்டியபின்னர்) வாளாயுதத்தோடு * கேடகத்தையும் கையிற்றாங்கிக்கொண்டு வேதியருக்கு எதிரா(முன்னா)க வந்துவணங்கி, அவரை (தன்மனையாட்டியுடன் புறப்பட்டு) வீதியில் முன்னே போகும்படிச்செய்து, (அங்ஙனம் அவ்விருவரும்போகும்போது போரைக்குறித்து, எதிரேவருஞ்சுற்றத்தவர்களை) நீண்டதூரத்திலேயே கண்டு அங்ஙனே முன்சென்று (அவர்கள் வேதியரைவந்து நெருங்கா வண்ணம் தடுத்து வளைத்துத் துண்டந்துண்டமாக்கிப்) பூமியில் வீழ்த்தும்படியாக எண்ணங்கொண்டு, மிகுந்த வன்மைபொருந்திய ஆண்சிங்கம்போன்ற பராக்கிரமமுடையவராய், தன்னுடைய இரண்டு தோள்களை இரண்டுபக்கத்திலும் நெருங்கிவரும் படைத்துணையாகக் கருதி, அவ்விருவருக்கும் பின்னே போயினா ரென்பதாம்.

வாளொடு பலகையேந்தி வந்தெதிர்வணங்கி, அவரை முன்போக்கி, தன்னினுரை நீளிடைப்பட முன்கூடி நிலத்திடைவீழ்த்த நேர்வார் தோளிணைதுணையேயாக மிக்க ஆளரிபோலும் போல்வார் பின்னே போயினர் எனக்கொண்டுகூட்டுக.

தமது உள்ளப்பற்றாய் வருஞ் சார்புகளைச் சேதிப்பதற்கு வாளையும், புறப்பற்றாய் வரும் சார்புகளைத் தடுப்பதற்குக் கேடகத்தையுங் கொண்டன ரென்பார் வாளொடு பலகையேந்தி என்றார். எனக்கு உட்பற்றும், புறப்பற்றும் உன்னையன்றி வேறில்லை என்பார் எதிர்வணங்கி என்றார். கேள்வியின் வன்மை, சிந்தனையின் வன்மை என்னும் இவ்விரண்டின் துணையைக்கொண்டே உட்புறம்பாகிய பாசங்கள் வந்தணுகாவண்ணம் ஒழிக்கவேண்டுமென்பார் தோளிணைதுணையேயாக என்றார். கேட்டல் சிந்தித்தலால் இருவகைப்பற்றுக்களையும் ஒழிக்கவல்லார்க்கு, மேன்மேல் பிறத்தலுக் கிடஞ் செய்யத் துள்ளித்துள்ளி முனைத்துத் தோன்றும் ஆணவத்தின்சத்தியைத் தெளிதலால் கீழ்ப்படுத்த முயல மிகஎளிதென்பார் துன்னினுரை நீளிடைப்பட முன்கூடி நிலத்திடை வீழ்த்த நேர்வார் என்றார். தெளிதலால் ஆணவசத்தியைக் கெடுக்கவல்லார் இறைவனை நிட்டையினல் முற்படவரச் செய்வார் என்பார் அவரைமுன் போக்கி என்றார். நிட்டையினல் இறைவனை முற்படச்செய்வாரை அருள் அவர்களைத் தன்வசமாக்கி இறுமாந்திருக்கச் செய்யும் என்பார் அளரியேறுபோல்வார் என்றார்.

இத் திருப்பாசுரத்தான், நாயனர் யுத்தசோலத்தாராய்த் தமது பத்தினியுடன் வேதியரை முன்னேபோகவிட்டுத் தாம் பின்போக தம்மைவேண்டியும தமது பத்தினியாரை வேண்டியும் வரும் சுற்றத்தினரையெல்லாம் நிலத்தில் வீழ்த்தும்படி போலும் சென்றாரென்று கூறப்பட்டது.

அல்லதூஉம், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்னும் நால்வகை ஞானத்துள், உட்புறம்பாகிய பற்றுக்களை யொழித்தற்குகேட்டல் சிந்தித்தலைத் தோள்வலியைப்போல் கொண்டனரென்பதும்; தெளிதலின்வலியால் ஆணவசத்தியைக் கெடுக்கத் துணிந்தனரென்பதும், நிட்டையின்வலியால் தன்னைப் பிற்படுத்தி, இறைவனை முற்படச்செய்து, அருள்வசத்தராய்ப் பாசப்பற்றற்று ஆண்சிங்கம்போன்று உலாவத் தொடங்கின ரென்பதும் கூறப்பட்டன. (கஉ)

சுற்றத்தினர் மறையவரைச் சூழ்தல்.

மனைவியார் சுற்றத் தாரும் வள்ளலார் சுற்றத் தாரும்
இனையதொன் றியாரே செய்தார் இயற்பகை பித்த ஞனல்
புனையிழை தன்னைக் கொண்டு போவதாம் ஒருவ னென்று
துனைபெரும் பழியை மீட்பான் தொடர்வதற் கெழுந்து சூழ்வார்.

* ஆயுதவகைகளைத் தடுப்பதற்குக் கொள்ளும் விருத்தாகாரமாயுள்ள ஓர் பலகை.

(எ-து.) (வேதியரும் நாயனார் மனைவியாரும் முன்னும், அவ்விருவர் பின்னே நாயனாரும் வீதியின் கண்ணே யாவருங் காண அஞ்சாது போதலைக்கண்டு) நாயகனுக்குப் பின்னேவரவேண்டிய நமது பெண் முன்னே போகவேண்டிய காரணம் என்னையென்று மனைவியார் சுற்றத்தாரும், மனையாட்டிக்கு முன்னேபோக வேண்டிய நமதுசெட்டியார் பின்னேவரவேண்டிய காரணம் என்னையென்று நாயனார் சுற்றத்தாரும், ஆலோசனைசெய்யும்போது, (மனையாட்டியை வேதியருக்குக்கொடுத்த செய்தியைக் கேட்டு) அந்தோ! மனைவியை வேண்டுவதும், அவளைக் கொடுப்பது மாகிய இச்செய்தியை இதுகாறும் யாவர்செய்துள்ளார் (ஒருவருமில்லை) இந்த இயற்பகை பித்தன் போலும், இவன்பித்தனானாலும் ஆகுக. ஆபரணங்களைப் பூண்டிருக்கின்ற இப்பெண்ணைப்பிராமணனொருவன் கொண்டுபோவது அறமாகுமோ என்று சொல்லிப் (பின் அந்தவார்த்தைகளை விட்டு ஒருவரையொருவர் பார்த்து, பழியற்ற நமதுகுடும்பத்திற்கு இப்பொழுது பெரும்பழி வந்துவிட்டதே, இந்தப்பழியை நாம் நீக்கிக்கொள்ளவேண்டுமல்லவா என்று (மீட்பதற்குத் துணிந்தவர்களாய் இருவகை சுற்றத்தாரும் முன்னே வருகின்ற வேதியனைச்செல்லவொட்டாது) தடுக்கவேண்டுமென்று யாவரையும் அழைத்துக்கொண்டுபோர்செய்வதற் கெழுந்து சூழ்ந்துகொண்டனர் என்பதாம்.

இத் திருப்பாசுரத்தால், நாயனார் மறையவனொருவன்பின்னே தன்மனையாளைக் கூட்டியனுப்புவதைச் சுற்றத்தினரெல்லாங் கண்டு, இந்த இயற்பகை அடியார்களுக்கு இல்லையென்னாது கொடுக்கும் விரதத்தை மேற்கொண்டவனாயிருப்பினும், அவ்விரதத்துக்கு, தன்மனையாட்டியைக் கொடுப்பது பழியை விளைவிக்குமல்லவா? இந்தப் பழியைமாற்ற எந்தவிரதம் இருக்கின்றது; எந்தஅறம் இருக்கின்றது; அன்றியும், முன் அறஞ்செய்த பெரியோர் இப்படி செய்திருக்கின்றனரா; இவன்செய்தது பித்துடையார் செய்யும் அறமாகும்; இவன் பித்தனானாலும், இவன் மனையாளை அஞ்சாது கொண்டுபோகத் துணிந்தவனைப் பார்த்தாலோ வேதியனாகவும், சிவனடியாராகவும் காணப்படுகின்றான், பிறர்மனைவிழைதல் எக்காலத்தும் அழியாத பழியை விளைவிக்கின்றதல்லவா? இங்ஙனமானபழியை வேதியனாயுள்ளவனும் அடியவனாயுள்ளவனுஞ் செய்யத்துணியலாமா? இனி அந்தப்பித்தன் செய்கையும், கூடாவொழுக்கமுடைய இந்தவேதியன் செய்கையும் எண்ணிக்கொண்டிருப்போமானால் இப்போது யாவருங் காண வந்தபழிக்கு நாம் என்னசெய்ததுபோலாகும். இனிப் பேசுவதை விடுங்கள்; அந்தப்பிராமணனை எவ்வழியானும் போவதற்கிடமில்லாமல் தடுக்கவேண்டுமென்று சூழ்ந்துகொண்டனரென்று கூறப்பட்டது. (௪௫)

வேலொடு வில்லும் வாளுங் கரிகையும் எடுத்து மிக்க
காலென விசையிற் சென்று கடிநகர்ப் புறத்துப் போகிப்
பாலிரு மருங்கும் ஈண்டிப் பாந்தஆர்ப் பரவம் பொங்கி
மால்கட லனைந்த தென்ன வந்தெதிர் வளைத்துக் கொண்டார்.

(எ-து.) (வேதியரைத் தடுப்பதற் கெழுந்தவர்கள் எவ்வாறு சூழ்ந்தார்கள் என்றால்) வேலாயுதத்தோடு வில்லையும் உடைவாளையும் கத்தியையும் எடுத்துக்கொண்டு, பெருங்காற்றைப்போல விரைந்து நாற்புறமும் பரந்து சூழ்ந்து சென்று, காவலோடுகூடிய அந்நகர்ப்புறத்திலே போய் வலம்இடம் என்னும் இரண்டுபக்கத்திலும் நெருங்கிப், பரந்துகிடக்கும் பெருங்கடலானது பொங்கியெழுந்தாற்போலப் பெருங்கூச்சலிட்டு வேதியர் எதிரிலேவந்து வளைத்துக்கொண்டனர் என்பதாம்.

இத்திருப்பாசுரத்தால், வேதியரைச் சூழ்ந்துகொள்ளத் துணிந்த சுற்றத்தினரெல்லாம், வேல் வில் வாள் கத்தி என்னும் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, பெருங்காற்றைப்போல் வேகமாய் நகர்ப்புறத்தே சென்று, வேதியருடைய இரண்டுபக்கத்

* இத்திருப்பாசுரத்தான், வேம்பின்கண் வாழ்ந்தபுழு, கரும்பினை நுகராவருங்காலத்தும், முன் வேம்பினை விரும்பிய தோற்றம்தோன்றுதல் இயற்கையாமாறுபோல, பெத்தநிலைக்கண் பழகிய ஆன்மாவிற்கு, முத்திநிலைக்கண்ணும் அப்பழக்கம் தோன்றும். அஃதாவது, * "பஞ்சாய வடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு, நெஞ்சாய துயர்கூற நிற்பேன், என்றும், "கொந்துகுழற் கோல்வளையார்குவிமுலைமேல் வீழ்வேனை" என்றும், "தையலார்மையலிலே தாழ்ந்திவிடக்கடவேனை" என்றும் தோன்றுதலாம். ஆகலின், அத்தோற்றம் நாயனாருக்குந் தோன்றியதில்லை என்பதும், அவர் மனைவியாரும் அங்ஙனம் தோன்றும்நிலையில் நின்றிலரென்பதும், இருவரும் பெத்தானுபவத்தை யொழிக்கும் நிலையிலேயே நிலைபெற்றுநின்றார் என்பதும், தங்களைப் பெத்தநிலையினின்றும் நீக்கி முத்திநிலையில் கொண்டுவந்த இறைவனை நோக்கிச் சிவானந்தானுபவம் நாங்கள் பெறுவதற்கான செய்கையில் நீ தளரா திருத்தல்வேண்டுமென்று வேண்டினரென்பதும் கூறப்பட்டன.

எவ்வாறெனின் மாதானவர் மயக்குநிலையில் நிற்கின்றனரோ, மயக்கைநீக்கும் நிலையில் நிற்கின்றனரோ என்றுஉணர மாதினைப்பார்க்க என்றும், அங்ஙனமான ஐயவுணர்வு அவருக்குநீங்க, அவ்வம்மையார் இறைவனே அஞ்சவேண்டாம் இயற்பகைவெல்லும் என்றும், அஃதேபோல் நாயனாரும், மயக்கினைக் கழித்தொழிக்கும் நிலையில் நிற்கின்றேனே யன்றி, மயக்கில் மயங்கிநிற்கும் நிலையினனல்லேன் என்று உணர்த்த அடியேன் அவரையெல்லாம் தரையிடைப்படுத்துகின்றேன் என்றும், இங்ஙனம் மயங்காநிற்கும் நிலையில்நிற்பேனுக்குச் சிவானந்தானுபவத்தை நான் கூடுமாறு செய்யும்செய்கையில் நீதளரவேண்டாமென்று உணர்த்த தளர்ந்தருள்சேயயேல் என்றும் கூறியவாறும். (கசு)

சுற்றத்தாரைநோக்கி வீரமொழி கூறல்.

பொருவிற லாளி யென்னப் பிறங்கெரி சிதற நோக்கிப்
பரிபவப் பட்டு வந்த படர்பெருஞ் சுற்றத் தாரை
ஒருவரும் எதிர்நில் லாமே ஓடிப்போய்ப் பிழையும் அன்றேல்
எரிசுடர் வாளிற் கூறுய்த் துடிக்கின்றீர் என்று நேர்ந்தார்.

(எ - து.) (வேதியரை மனந்தளரவேண்டா மென்று சொல்லியபின்னர்) தங்கள் குலத்துக்கு அவமானம் வந்ததென்று மானம்பொறாது போர்செய்வதற்குச் சூழ்ந்து பரவிவந்த பெரியசுற்றத்தாரை, மிக்கவன்மையுடைய ஆண்சிங்கம்போல, கோபாக்னி சிதறும்படியாகப் பார்த்து, (நீங்கள் உயிர் பிழைத்திருக்கவேண்டுமானல்) என்னெதிரில் ஒருவரும் நில்லாமல் ஓடிப்போய்ப் பிழையுங்கள். நீங்கள் உயிர் இழக்கவேண்டுமானல், (என்கையிலிருக்கின்ற) ஒளிவீசுகின்ற இவ்வாளினால், உங்களை இருகூறாக்கிப் பூமியில் வீழ்ந்து துடிக்கும்படியாகச்செய்வேன். (நீங்கள்) துடிப்பீர்களென்று அவர்களைக் கிட்டினார் என்பதாம்.

பரிபவப்பட்டுவந்த படர்பெருஞ்சுற்றத்தாரை, பொருவிறலாளியென்னப் பிறங்கெரிசிதறநோக்கி எனக்கூட்டுக.

இத் திருப்பாசுரத்தான், "சுற்றத்தாரைத் தரையிடைப்படுத்துகின்றேன்" என்று வேதியரிடத்திற் சொன்னபடியே, வேதியரைச் சூழ்ந்துகொண்ட சுற்றத்தார்களை நோக்கி, நீங்கள் உயிரோடு வாழவேண்டில், ஓடிப்போங்கள், உயிரிழக்க வேண்டில் என்துவாளிற்கு இறையாகுங்கள் என்று அவர்களை எதிர்த்தனர் என்றுகூறப்பட்டது.

* வாதவூரடிகள் ஆசிரியராகலான் சீவன்முத்தர்களுக்கறிவுறுத்த அங்ஙனங் க

அல்லதூஉம், இறைவனாருக்குத் தமதுநிட்டையினால் உண்டாகிய ஞானத்தால் விளைந்தசிவானுபவத்தில் அவாவுடையேனையன்றி இனி விஷயானுபவத்தில் அவாவைச் சிறிதும்செல்லவிடேன், அவைகள் எதிர்ப்படின் அஞ்சேன், அவைகளை அஞ்சும்படிச் செய்வேன் என்று சிவானுபவத்தில் தமக்குள்ள தீவரதர பக்குவத்தை விளக்கியவாறுங் கூறப்பட்டது. (கஎ)

ஏடநீ என்செய் தாயால் இத்திறம் இயம்பு கின்றாய்
நாடுறு பழியும் ஒன்னார் நகையையும் நாணாய் இன்று
பாடவம் உரைப்ப துன்றன் மனைவியைப் பனவற் கீந்தோ
கூடவே மடிவ தன்றிக் கொடுக்கயாம் ஒட்டோம் என்றார்.

(எ - து.) ஏடா இயற்பகையே! நீ இங்கு என்னகாரியஞ்செய்தனை (ஒருவரும் எதிர்நில்லாமே யோடிப்போய்ப் பிழையும் அன்றேல், எரிசுடர் வாளிற்கூறாய்த் துடிக்கின்றீர், என்று) இத்திறமான வீரமொழிகளைச் சொல்லுகின்றாய், (நீசெய்யும் இக்காரியத்தால்) நாட்டில் உள்ளவரெல்லாம் பழிப்பார்களல்லவா ? அப்பழிக்கும், நமக்குப் பகையாயுள்ளவரெல்லாம் சிரிப்பார்களல்லவா ? அச்சிரிப்புக்கும் (சிறிதும்) நாணமற்றவனா யிருக்கின்றாய், உன்னுடைய மனையாளை இந்தமறையவனுக்கு நீ இன்றுகொடுத்தனையே, அதனாலோ, இந்தச்சாமர்த்தியமொழிகளைச் சொல்லுவது, (நாங்கள் உன்னைப் போலும் மானங்கெட்டவர்களல்லர். மானங்கெடவரின் உயிரை ஓர்பொருளாகமதித்து இப்பூதவுடலோடுகூடி வாழோம், இந்த உடலைவிட்டு என்றுமுள்ள புகழுடம்போடுகூடி வாழ்வோம். (ஆகலின்) உன்னுடன்போர்செய்து உன்னோடுநாங்கள் இறத்தலேயல்லாமல், (இறப்புக்கஞ்சி) இந்தமறையவனுக்கு இப்பெண்ணைக் கொடுக்கச் சம்மதிக்கமாட்டோம் என்றார் என்பதாம்.

உன்றன்மனைவியைப்பனுவற்கீந்தோ பாடவம் உரைப்பது எனக்கூட்டுக.

இத்திருப்பாட்டான், நாயனார்கூறிய வீரமொழியைச் சுற்றத்தார்கள் ஓர்பொருளாகமதிக்காமல், அவரைநோக்கி, பழிக்கும், பகைவர்சிரிப்புக்கும் அஞ்சாத உனக்கு இவ்வீரமொழிசெல்லுமா, எங்களையெல்லாம் வெல்லவல்ல வீரமுடையவனாயின், உன் மனையாளைக் கேட்ட இவ்வேதியனை வென்றிருப்பையல்லவா, சிறிதும் வீரமில்லாமல் அவன்கேட்டபடியே மனையாளைக்கொடுத்து அவன்பின்னேயும் வரத்துணிந்தனையே பிராஹ்மணனுக்கு மனையாளைக்கொடுத்த நீ சொல்லால் வீரத்தைக்காட்டினையே நாங்கள் உன்னைப்போலன்று, செய்கையால் வீரத்தைக்காட்டுவோம். அஃதாவது, உன்மனையாளை இந்தமறையவன் கொண்டுபோகவொட்டோம், இறந்தாலும் இறப்போமென்று கூறப்பட்டது.

அல்லதூஉம், * "என்புநைந்துருகி நெக்குநெக்கேங்கி, அன்பெனும் ஆறுகரையது புரள, நன்புலனொன்றி நாதவென்றரற்றி, உரைதடுமாறி உரோமஞ்சிலிர்ப்பக், கரமலர் மொட்டித்து இருதயமலரக், கண்களிகூர நுண்டுளியரும்பச், சாயாவன்பினை நாடொறுந் தழைப்ப (வரை) சகம்பேயென்று சிரிப்ப"ரென்பது ஞானநூற்றுணிபாதலின், அஃதே போல் சுற்றத்தினர் கூறினாரென்பதும் கூறப்பட்டது. (கஅ)

சுற்றத்தவரை மேலுலகேற்றி நற்றவரை ஊருக்குப் போகவிடுவேனெனல்.

மற்றவர் சொன்ன மாற்றம் கேட்டலும் மனத்தின் வந்த
செற்றமுன் பொங்க உங்கள் உடற்றுணி எங்கும் சிந்தி
முற்றுநும் உயிரை எல்லாம் முதல்விசும் பேற்றிக் கொண்டு
நற்றவர் தம்மைப் போக விடுவனென் றெழுந்தார் நல்லோர்.

* திருவாசகம் - போற்றித்திருவகவல்.

(எ - து.) நல்லோராகிய இயற்பகையார், (தமது கொள்கைக்கும் செயகைக்கும் மாருக) உறவினர் கூறிய சொல்லைக்கேட்டவுடனே, கோபமானது முற்பட்டு முன்னே உதித்து அதிகரிக்க, (அதனால் அவர்களைப்பார்த்து) முதலில் உங்களுடைய உடம்பினைத் துண்டுதுண்டாக்கி எவ்விடத்துஞ்சிந்தி, (அதன்பின்னர்) உங்கள் எல்லாருடைய உயிர் முழுவதும் விண்ணுலகடையும்படிச்செய்து, (அதன்பின்னர்) முன்போகின்ற நல்லதவத் திற்சிறந்த வேதியரை, (என்னால் கொடுக்கப்பட்ட இப்பெண்ணை யாதொருதடையில் லாமல்) அழைத்துக்கொண்டு போகும்படிச்செய்வேன் என்று போருக்கெழுந்தனர் என்பதாம்.

இத்திருப்பாட்டான், தம்மை வீரமற்றவராகவும், அவர்களை வீரமுடையவர்களாக வும் கூறிய சுற்றத்தினரைநோக்கி, உங்களுக்குள்ள வீரமெல்லாம் உங்களுடைய உட லுக்கே யாகலான் அவ்வுடலை, என்னுயிரைக்காப்பதில் வீரமுடைய நான்செலுத்தும் வீரச்செய்கையால் போக்கடித்துக்கொள்ளாமல் காத்துக்கொள்ளுங்கள். இப்பொழுதே உங்கள் உடலைத் துண்டம்துண்டமாக்கி உங்கள்உயிரை உங்கள் வசமாகவைக்காமல் மேலுலகத்தில் ஏற்றிவிடுகிறேன். பின்னர் எனது உயிர் நாதனை யாதொரு துன்பமு மின்றிப்போகச்செய்கிறேன் என்று வீரத்தோடும் எழுந்ததைக் கூறப்பட்டது.

அல்லதூஉம், "மதிக்குந் திறலுடைய வல்லரக்கன்தோள்நெரிய, மிதிக்குந்திரு வடியென்றலைமேல் வீற்றிருப்பக், கதிக்கும்பசுபாசம் ஒன்றுமிலோம், எனக்களித்து இங்கு, அதிர்க்குங் குலாத்தில்லை ஆண்டானைக்கொண்டன்றே" என்றதிருவாசகப்படி, தில்லையாண்டானைச்கொண்டு பசுபாசமற்றவர் பாசமுடைய பசுக்கள்கூறும் சொல்லுக் குக் கோபங்கொண்டு அவரை யடக்குவரென்பதும், தாங்கொண்ட கோட்பாட்டை மேலோங்கச் செய்வரென்பதுங் கூறப்பட்டன. (கக)

வேதியரைத் தடுத்தல்.

நேர்ந்தவர் எதிர்ந்த போது நிறைந்தவச் சுற்றத் தாரும்
சார்ந்தவர் தம்முன் செல்வார் தையலைக் கொண்டு பெற்றம்
ஊர்ந்தவர் படிமேற் செல்ல உற்றெதிர் உடன்று பொங்கி
ஆர்ந்தவெஞ் சினத்தான் மேற்சென் றடர்ந்தெதிர் தடுத்தார் அன்றே.

(எ - து.) (போருககெழுந்த) நாயனுர் (பகைவராய்வந்த) சுற்றத்தாரை நெருங்கிய சமயத்தில், வெற்றிடமில்லாமல் நெருங்கிய அவ்வுறவினரும், (தம்முன்னெருங்கிய) நாயனுருக்கு முன்னே போகாதவராய், இடபவூர்தியின்மேற் செல்லுகின்ற இறைவன் (நாயனுர்) மனைவியை அழைத்துக்கொண்டு பூமியின்மேற் (போவாராய்ச்) செல்ல (அங்ஙனம் செல்லுகின்ற) வேதியர்முன்னே பகைமேற்கொண்டு உள்ளத்துள்ளே நிறைந்தெழுந்த கொடியகோபத்தால் மேற்கொண்டுசென்று சமீபத்தில் நெருங்கி எதிர் த்துநின்று, போகவழிவிடாமல் நின்மின்நின்மினென்று தடுத்தார்கள் என்பதாம்.

இத்திருப்பாட்டான், நாயனுர் சுற்றத்தாரைநோக்கி, முன்னர் உங்கள் உடலைத் துண்டுசெய்து, இரண்டாவது உங்களுயிரை விண்ணுலகேற்றி, மூன்றுவது வேதிய ரைத் தையலுடன் அனுப்புகிறேன் என்று வீரமொழிகூறினுராகையால், சுற்றத்தாரும் வீரங்கொண்டு முன்வேதியரைத்தடுத்து அவனைத் தனியேவோட்டி, இரண்டாவது நமது பெண்ணை நம்வசப்படுத்திக்கொண்டு, மூன்றுவது பித்தனுகிய இயற்பகையோடு பகைத்துப் போர்செய்வோமென்று எண்ணி, எண்ணியபடியே முன்னே வேதியரைத் தடுத்தற்குத் துணிந்தார்களென்று கூறப்பட்டது.

அல்லதூஉம், இறைவன்வசப்பட்டு அவனருட்செயலின்வழியே செல்லுவோ ரிடத்தும் உடல்உளதாய்க் கழியத்தக்கனவாகிய பிராரத்தவினைதாக்கி அதுசெய்யுஞ் செயலைச் செய்யும் என்பது சித்தாந்தநூற் றுணிபாகலான், அஃதேபோல் நாயனு

நாயனார் சுற்றத்தினரை மாய்த்தல்.

சென்றவர் தடுத்த போதில் இயற்பகை யார்முன் சீறி
வன்றுணை வாளே யாகச் சாரிகை மாறி வந்து
துன்றினர் தோளுந் தாளுந் தலைகளுந் துணித்து வீழ்த்து
வென்றடு புலியே றென்ன அமர்விளை யாட்டின் மிக்கார்.

(எ - து.) (சுற்றத்தார்கள் தாங்கள் எண்ணியபடியே) வேதியர் எதிரேசென்று, அவரைப்போகவொட்டாமல் தடைசெய்தபோது, (அதனைக்கண்ட) நாயனார், (அவருள் நுழைந்து) வேதியருக்கு முன்னேநின்று, (சுற்றத்தாரைநோக்கி) அவர்களைக்கோபித்து (சுற்றத்தார் பலரோடும்தாம் ஒருவரே போர்செய்யத் துணிந்ததமக்கு) வன்மையுடைய பெருந்துணை கையிற்றாங்கியிருக்கும் வாளேயாகக்கொண்டு (அவர்களைப்பின்னே மனைவியார்பாற் போகவொட்டாது) இடம்வலமாக பன்முறை மாறிமாறிச் சுற்றிச் சுற்றிவந்து, (அப்போதைக்கப்போது) நெருங்கினவர்களது தோள்களையும் கால்களையும் தலைகளையும் வெட்டிவெட்டிப் பூமியிற்றள்ளி, எவ்வகைப்பட்ட மிருகங்களையுங் கொல்லவல்ல ஆண்புலியைப்போல, போர்செய்யும் விளையாட்டில் தளர்ச்சியில்லாதவராயினார் என்பதாம்.

பாய்ந்துபாய்ந்து போர்செய்வதில் திறமுடைமையும், அதில் தளர்ச்சியின்மையும் உடையது ஆண்புலியாகலான், அதுபோல் நாயனார் செய்தனர் என்பதுதோன்ற புலியேறு என்றார். போர்செய்வதற்கிடனில்லாமல் முன் தோள்களையும் பின் தாள்களையும் வெட்டிக்கீழே வீழ்த்தி துடிதுடிக்கச்செய்து அவர்களுக்குத் தமதுவீரத்தைக் காட்டிப் பின் தலைகளை வெட்டுவார் என்னும் அவரது வீரத்தன்மைதோன்ற தோளும் தாளும் தலைகளும் துணித்துவீழ்த் என்றார்.

இத்திருப்பாட்டான், சுற்றத்தார் நாயனாரிடத்து வருவதைவிட்டு வேதியரிடத்துச்செல்ல, அதைக்கண்டநாயனார் பொறாது பெருங்கோபங்கொண்டு அவர்களை எப்புறத்தும் போகவொட்டாது வளைத்து, அவர்களைக்கொல்வதற்குத் தக்க வலியதுணை தனதுதோள்களாகவே கொண்டு, ஆண்புலியைப்போலும் போர்செய்யத்தொடங்கினரென்று கூறப்பட்டது.

அல்லதூஉம், சீவன்முத்திநிலையுடையார் தம்மைச்சூழ்ந்துள்ள பாசக்கூட்டங்களைத் தாமேயொழிக்கவேண்டுமன்றி மற்றொருவரைத் துணையாகக்கொண் டொழித்தல் கூடாதாகலான் நாயனார் ஒருவரே போர்செய்யத்துணிந்தாரென்றும், "சார்ந்தாரைக் காத்தல் தலைவர்கடன்" என்றபழமொழிப்படி, இறைவன் தன்னோடு ஏகமாகிநிற்கும் நிலையைப்பெற்ற சீவன்முத்தர்களிடத்துத் தான் வேறாகநில்லாமல் அவர்களேயாய், அவர்கள்செய்யும் பாசநீக்கச்செயலையும் தன்செயலேயாகக்கொண்டு துணையாய்நிற்பன் என்னும் அவ்வுண்மைப்படியே, நாயனார் உடையராகலின் வன்றுணைவாளேயாக அமர் விளையாட்டின் மிக்கார் என்றுங் கூறப்பட்டன.

ஈண்டு, வன்றுணை வாளேஎன்றது - இறைவனென்னும் பொருளைக்குறித்த தென்க. எனவே இறைவன்பாசங்களைக்களைவதில் வாள்போன்றவனாகலினென்க. (உக)

மூண்டுமுன் பலராய் வந்தார் தனிவந்து முட்டி னார்கள்
வேண்டிய திசைகள் தோறும் வேறுவே றமர்செய் போதில்
ஆண்டகை வீரர் தாமே அனைவர்க்கும் அனைய ராகிக்
காண்டகு விசையிற் பாய்ந்து கலந்துமுன் துணித்து வீழ்த்தார்.

(எ - து.) (நாயனார் இடசாரி வலசாரியாக ஆண்புலியைப்போல் போர்செய்யுங் காலத்தில்) அவர்முன்னே சுற்றத்தினர் மூண்டு பலராய்க்கூடி நெருங்கிவந்தும், தனித்தனியே வந்தும் அவருக்கு இடைவெளியில்லாமல் போர்செய்வார்கள். (இவ்வாறன்றி)

பட்டுத்திசைகளிலும் (தனித்தனியாகவும், கூட்டத்தினராகவும், தங்கள்தங்களுக்கு வேண்டியபடியே வேறுவேறு வகையாகப் போர்செய்வார்கள், இவ்வாறு போர்செய்கின்றபோது, ஆண்தன்மையிற் சிறந்த வீரராகிய நாயனார், தாம் ஒருவரே ஒருவருக்கேனும் இல்லையென்று சொல்லுவதற்கில்லாமல் ஒவ்வொருவருக்கும் எதிர்நிற்பவராகி, ஒருவரானும் காணுதற்கரிய விசையோடும் பாய்ந்துபாய்ந்து அவரவரோடுங்கலந்து முன்போல்தோள்களையும் தாள்களையும் தலைகளையும் வெட்டிவெட்டிப் பூமியில் தள்ளினார் என்பதாம்.

நாயனார் ஒருவரே ஒவ்வொருவரிடத்தும் இருந்தார் என்றால் எங்ஙனம் இருத்தல் கூடும் என்னும் ஐயம்நீக்குதற்கு விசையிற்பாய்ந்து என்றார். எனவே - பாய்கின்ற அவ்வேகத்திலேயே வாளால் வீசிக்கொண்டு போவதேயன்றி நின்று போர்செய்தார் இல்லை என்று அவரது வாட்போரின் திறத்தைக் கூறினாரென்க.

இத்திருப்பாட்டான், போருக்குவந்தாரது திறத்தையும், அத்திறமுடையாரிடத்து நாயனார்செய்த போர்த்திறத்தையுங் கூறப்பட்டன.

அஃதேபோல், பாசக்கூட்டங்கள் நாயனார்பால்வந்து எதிர்த்ததிறத்தையும், அவர் அப்பாசக்கூட்டங்களை முன்போல் வன்மையுடையனவாகக் கருதாமல் இறைவன் செயலாகிய தன்செயலின்திறத்தால் வென்றதிறத்தையுங் கூறப்பட்டன. (உஉ)

சொரிந்தன குடல்கள் எங்கும் துணிந்தன உடல்கள் எங்கும்
விரிந்தன தலைகள் எங்கும் மிடைந்தன கழுகு மெங்கும்
எரிந்தன விழிகளெங்கும் எதிர்ப்பவர் ஒருவ ரின்றித்
திரிந்தனர் களனில் எங்கும் சிவன்கழல் புனைந்தவீரர்.

(எ - ரு.) (நாயனார் சுற்றத்தாரைத் தோள் முதலியவற்றை வெட்டித்தள்ளும்போது) எப்பக்கத்தும் குடல்கள் போர்ப்போராக நெருங்கிக் கிடந்தன, (அஃதேபோல்) துணிப்பட்டனவாகிய உடல்கள் எவ்விடத்தும்கிடந்தன, சிரங்கள் எவ்விடத்தினும் பரவிக்கிடந்தன, கழுகுகள் எவ்விடத்தினும் நெருங்கிக்கிடந்தன, (இவ்வாறு எதிர்ந்த சுற்றத்தினரை வெல்ல) சிவனாரது வீரகண்டையை யணிந்திருக்கும் நாயனாரது கண்களினின்றும் கோபத்தீயானது எப்பக்கத்தும் எரிந்துகொண்டிருந்தன (அக் கோபக் கண்ணோடு) தன்னை எதிர்த்துப் போர் புரிபவர் ஒருவருமில்லாமல் நாற்பக்கத்தும் திரிந்துகொண் டிருந்தனர் என்பதாம்.

இத்திருப்பாட்டான், சுற்றத்தாரெல்லாங் கூறிய வீரமொழிகளனைத்தும், சொரிந்தும், துணிந்தும், விரிந்தும்போக கழுகுகள் சொள்ளைகொண்டனவென்றும், நாயனார் கூறிய வீரமொழி சிவனது வீரகண்டையைக்கொண்டு வெற்றியுடன் எங்கும் பிரகாசித்ததென்றுங் கூறப்பட்டன. (உ௩)

மாடலை குருதி பொங்க மடிந்தசெங் களத்தில் நின்றும்
ஆடுறு செயலின் வந்த கிளைஞரோ டணைந்தார் தம்மில்
ஓடினார் உள்ளார் உய்ந்தார் ஒழிந்தவர் ஒழிந்தே மாண்டார்
நீடிய வாளும் தாமும் நின்றவர் தாமே நின்றார்.

(எ -து.) நாற்பக்கங்களினும் உதிரவெள்ளமானது பெருக்கெடுத்து அலைமோதிக் கொண்டு செல்லும் போர்க்களத்தில், போர்செய்யும் செயலை மேற்கொண்டு வந்தவரோடுகூடிவந்தவர்களில் அக்களத்தினின்றும் நில்லாது ஓடினவர்கள் எவர்களோ அவர்களே உயிரோடு பிழைத்திருப்பவராயினர், ஓடாது இருந்தவரெல்லாம் இறந்தே போயினர், (இவ்வாறு சுற்றத்தாருள் இருந்தவர் இறக்க, போனவர் இருக்க, போர்க் களத்தில்) ஒருவருமின்றி நாயனார் ஒருவரே நீண்டவாளும் தாமுமாக நின்றனர்

இத்திருப்பாட்டான் மறையவரைப்போக்கி, மாதினைக்கைக்கொண்டு, நாயனாரோடு போர்செய்யலாம் என்று எண்ணிநின்றாரெல்லாம் நில்லாதொழிய, மாதினை மறையவரோடு கூட்டிச் செல்லவிடுவேன் என்று வீரங்கொண்டு நின்றவரே, இறைவனோடு நின்றனரென்று கூறப்பட்டது.

அஃதேபோல், ஒழிக்கவேண்டிய பாசங்களையெல்லாம் பற்றறப்போக்கி, இயல்பாகவே பற்றற்ற ஒருவனைப் பற்றி நின்மலசொருபராய்ப் பிரகாசித்தன ரென்றுங் கூறப்பட்டது. (உ௪)

திருவுடை மனைவி யாரைக் கொடுத்திடைச் செறுத்து முன்பு
வருபெருஞ் சுற்ற மெல்லாம் வாளினால் துணித்து மாற்றி
அருமறை முனியை நோக்கி அடிகள்நீர் அஞ்சா வண்ணம்
பொருவருங் கானம் நீங்க விடுவனென் றுடனே போந்தார்.

(எ - து.) திருவருட்செல்வமுடைய தமது இல்லறத்தாளை வேதியருக்குக்கொடுத்து (தீதியிற்போகவிடும்போது அதுகாரணமாய்) அவ்விடைவழியில் கோபித்துத் தமக்குமுன் எதிர்த்துவரும் அளவில்லாத சுற்றத்தினரெல்லாம், மாண்டுபோம்படி வாட்படையினால் வெட்டி உயிரைப்போக்கி (பின்னர்) சிறந்த வேதியரைப்பார்த்து, சுவாமிகாள்! (அஞ்சும்படியாக வந்தவரெல்லாரும் எனது வாளினால் மாண்டார்கள் இன்னமும்) நீர் அஞ்சாவண்ணம், காடுகளில் பொருங்காடாயுள்ள இந்தக்காட்டை (நீங்களிருவரும்) கடந்து போமளவும், (நான் துணையாய்வந்து) அங்குவிடுகிறேன் என்றுசொல்லி அவருடன் நாயனார்போயினார் என்பதாம்.

தமக்குச் சுற்றத்தாரெல்லா மாண்டாரென்று தெரியவரினும், வேதியருக்கு இன்னமும் யாவர்வருவரோவென்று ஐயந்தோன்றுமாகலின், அவ்வையமொழிய "அடிகள் நீர் அஞ்சாவண்ணம் கானம்நீங்க விடுவன்" என்றார். எனவே, இன்னமும் யாவர்வரினும் அவர்களையும் வாளினால்வெட்டி இத்திருவுடையாளை நீர் கொண்டுபோம்படிச் செய்வேனென்பதாம்.

தனக்குப் பற்றாயிருந்த பாசபற்றுக்களைத் தான் பதியாகப்பற்றியிருந்த நாயகனால் பற்றறத்துடைத்து, அந்நாயகனால் பற்றியிருந்த பதியைப் பின்பற்றி அத்திருவாளனாகிய இறைவனால் பற்றப்பட்டாராகலின் திருவுடைமனைவியார் என்றார்.

இத்திருப்பாட்டான், வேண்டுதலும் வேண்டாமையும் அற்ற இறைவன், "மன்னு காதல் உன்மனைவியை வேண்டி வந்தனன்" என்றுகூறி வேண்டும்படிநின்ற திருவுடையராகிய தமதுமனையாட்டியை வேண்டிய அவ்விறைவர்பின் தொடர்ந்து செல்லும்படிவிட்டு, தம்மைச் சூழவந்த பாசங்களையெல்லாம் ஞானமயமாகிய வாளினால்வெட்டிக் கழித்தன ரென்பதும், தாம்கழித்த அப்பாசங்களில் மீண்டும் செல்லுவனோ என்னும் ஐயத்தால் உண்டாகத்தக்க அச்சமானது தம்மையாட்கொண்ட இறைவனுக்கு உண்டாமாகலின் அவ்வச்சம் அவருக்குநீங்க அடிகள் நீர் அஞ்சவேண்டாம் என்பதும், பாசாடவிக்குளே வாழ்கின்ற என்னுடன் நீ வேறாகாது உடனாயிருந்தும் உன்னையறியாதிருந்த எனக்கு உன்னையறிவித்தும், நான் உன்னுடனாய் வரச்செய்தனை யாகலின், இனி, பாசங்கடந்த பரவெளியாகிய அருளிடத்தைக் கூடாது, பாசநீக்கமே அடையும்பேறெனக் கருதி இங்கு உன்னைவிட்டுப் பிரிவேனாயின் அவ்வருளிடத்தை யான் யார்துணையாக வந்துகூடுவேன். ஆகலின், யான்கூடும் இடமாகிய அருளிடத்தில் உன்னை விடுவேனாயின் அஃதாவது அவ்வருளிடத்தில் என்போதவாசனையால் உன்னைச் சுட்டியறியும் அச்செயலையும் விடுவேனாயின் நீ என்னைவிட்டிடீராய் ஆகலான் கானம்நீங்க விடுவன் என்று உடனே போந்தனரென்பதுங் கூறப்பட்டன. (உ௫)

நாயனரைப் போகச் சொல்லல்.

இருவரால் அறிய வொண்ணு ஒருவர்பின் செல்லும் ஏழை
பொருதிறல் வீரர் பின்பு போதமுன் போகும் போதில்
அருமறை முனிவர் சாய்க்கா டதன்மருங் கணைய மேவித்
திருமலி தோளி னனை மீளெனச் செப்பி னரே.

(எ - து) பிரம விஷ்ணுக்களால் மேலுங்கீழும் தேடியுங் காணக்கூடாத பெரியோன் பின்னே, (முடியையும் அடியையுங்கண்டு செல்லுகின்ற) அம்மையார் பின்னர், போர்த்திறத்தில் வல்ல வீரராகிய நாயனர்போக, (அம்மையாருக்கு) முன்னே அரிய மறைமுனிவராகிய வேதியர் போகும்போது, திருச்சாய்க்காடென்னுந் தலத்தின் சமீபத்தை யடைந்து அங்குநின்று, விஜயலக்ஷுமி பொருந்தியிருக்கும் தோளையுடைய நாயனரைப் பார்த்து, (நீர்) உமதுவீட்டிற்குத் திரும்பலாம் என்றுகூறினர் என்பதாம்.

இருவரால் அறியவொண்ணு ஒருவர்பின் ஏழைசெல்லும் எனவும், (அவர்) பின்பு பொருதிறல் வீரர்போத எனவும், (அவ்விருவர்முன்) அருமறைமுனிவர் போகும்போதில் எனவுங் கொண்டுகூட்டுக.

அறியவொண்ணுமற்போன பிரமவிஷ்ணுக்கள் இருவரும் தேவரினும் பெரியோர். அப்பெரியோர்களுக்கெட்டாத பெரியோன் ஏழைபங்காளனுகலின் அம்மையாராகிய ஏழைக்கும் எளியரானரென்பார் ஏழைபின்செல்ல எனவும், சுற்றத்தாரைமாய்த்து முன்போல் பின்வந்தனரென்பார் - வீரர்பின் போத எனவும், நாம்மீளவும் அழைக்கும் போதுவருவாயென்னுங் குறிப்புத்தோன்ற மீளெனச்செப்பினர் எனவுங் கூறினர்.

இத்திருப்பாசுரத்தான், ஆன்மாக்களுக்கு ஆணவபாசம் நீங்க, மாயா பாசகாரியங்களாகிய தனுகரண புவனபோகங்களை இறைவன் கொடுத்த உண்மையுணர்ந்தவர், உணர்ந்த அவ்வுண்மைவழியே ஆணவபாசமற்று, அருள்வழிப்பட்டு மாயாபாசங்களையெல்லாம் அவன்வழிப்படுத்தி இறைவனைக் காணப்பெறுவாராகலின், இறைவன் முன்னேபோக, அவர்பின்னே மனையாட்டியார்போக, அவர்பின்னே நாயனர் போயினரென்பதும், பாசமாகிய காடுசாய்ந்தஇடமே இறைவன் நிற்கும் இடமாகலின் அக்குறிப்புத்தோன்ற சாய்க்கா டதன்மருங்கணைந்தா ரென்பதும், மாயாபாசத்தானும், அப்பாசக்கூட்டத்தானும், ஆணவபாசத்தின் வலியைச்சாராது, ஆணவபாசத்தின் வலியைக்கொண்டே, கன்மபாசங்களை வெட்டியெறிந்து அருள்வலியைப் பெற்றவல்லாளர் "எத்தனுவில்நின்றும் இறைபணியார்க் கில்லைவினை" என்ற சிவஞானபோதவசனப்படி இறைபணியில் நிற்பரேயன்றி, தனுவின்பணியில் சிறிதேனும் தாக்குற்று வருந்தாராகலான் அவ்வனுபவவுண்மைதோன்ற திருமலிதோளினரை மீளெனச்செப்பினரென்பதும் கூறப்பட்டது. (உசு)

தவமுனி தன்னை மீளச் சொன்ன பின்தலை யாலார
அவன்மலர்ப் பதங்கள் சூடி யஞ்சலி கூப்பி நின்று
புவனமூன் றுய்ய வந்த பூசுரன் தன்னை யேத்தி
இவனருள் பெறப் பெற்றேனென் றியற்பகை யாரு மீண்டார்.

(எ - து.) இறைவனர், தவமுனிவராகிய நாயனரைப் பார்த்து நீ திரும்புவாயென்று சொல்லியபின்னர், அம்முனிவரது மலர்போன்ற பாதங்களைத் தமதுமுடியிற் பொருந்தும்படியாகச் சூடி, (பின்) இருகரங்களையுங் குவித்துநின்று, மூன்றுலகமும் உய்யவந்த அந்தவேதியரைப்போற்றி, (நான் - வந்த இடையூறுகளெல்லாம் ஒழியப் பெற்று) இம்முனிவரது அருளைப் பெறும்படியாகப் பெற்றேன் என்று இயற்பகையாரும் திரும்பினரென்பதாம்.

தவவேடத்தோடு தூர்த்தவேடமும் உடையவராய் வந்து காதலுன்மனையை வேண்டி வந்தனனென்று கேட்க, கேட்டவாறே நாயனார்கொடுக்க, மனைவியாரும் தன்பின் தொடர்ந்து, கணவனைநோக்காது தம்மையே நோக்கிவரவும், அவர்பால் காதலைக்கருதாது முனிவருக்குரிய கருணையே கருதினாராதலால் தவமுனி என்றார். நாயனார் அம்முனிவர் அடியைச்சூடுவதற்குக் கீழேவீழ்ந்து வணங்கவும், அவரடி தமதுதலையிற் படாது சிறிதுதூரத்திலிருப்ப அதுபொறாது அவ்வடி தலையிற்படும்படி தலையின்முயற்சியினாலே தீண்டிமகிழ்ந்தனரென்பார் தலையால் அவன்மலர்ப்பதங்கள்சூடி என்றார். முடியில் திருவடிபடச் சரீரமகிழ்ச்சியை யடைந்ததுபோலும், நமதுமனைவியாரைக் கொண்டுபோக வந்தவரெல்லாம் ஒழிந்து மனைவி பின்போக அவர்சவலையற்று நம்மைத் திரும்பிப்போகலாமென்று கூறினாரே இதுவன்றோ நாம்பெறும்பேறு என்று உள்ளமும் மகிழ்ச்சியடைந்தனரென்பார் இவனருள் பெறும்பேறுபெற்றேன் என்றார். இவ்வாறு சூடப் பெற்றோமென்று காயமகிழ்ச்சியும், மனையாளை அவர்கொள்ளப்பெற்றோமென்று மனமகிழ்ச்சியும், இவ்விருமகிழ்ச்சியும் வாயினால் எடுத்துக்கூறி வாக்கின்மகிழ்ச்சியும் உடையராய்த் திரும்பினரென்பார் - இயற்பகையாரும் மீண்டார் என்றார்.

இத்திருப்பாசுரத்தால் நாயனார், மனைவியையும் சுற்றத்தாரையும் இழக்கவந்தோமே, என்று மயக்கச்செய்யவல்ல மாயையின்செயலற்று, அடியார் வேண்டியவற்றை இல்லையெனச் சொல்லவரும் மாயாபாசச்சார்புகளும் மடியப்பெற்று, அடியார் யாது வேண்டினும் இல்லையென்னாதே கொடுக்கும்பேறு இன்று நிலைபெறப்பெற்றோம் என்று அவர் மகிழ்ந்தமை கூறப்பட்டது. (௨௭)

நாயனாரை மீள அழைத்தல்.

செய்வதற் கரிய செய்கை செய்தநற் றொண்டர் போக
மைதிகழ் கண்டன் எண்டோண் மறையவன் மகிழ்ந்து நோக்கிப்
பொய்தரும் உள்ளமில்லான் பார்க்கிலன் போனான் என்று
மெய்தரு சிந்தை யாரை மீளவும் அழைக்க லுற்றார்.

(எ - து.) யாவரானும் செய்தற்கரிய செய்கையைச் செய்த நல்லதொண்டனாராகிய நாயனார் தமது மனைவியாரையும் சிவனடியாரையும் திரும்பிப்பாராது, தமது வீட்டைநோக்கிப் போக, நீலகண்டத்தையும் எட்டுத் தோளையும் உடையசிவவேதியர், சந்தோஷித்துப்பார்த்து, பொய்யைவிளைவிக்கும் மனமில்லாதவனாகலின், நம்மைத் திரும்பிப்பாராது போகின்றானென்று, மெய்யைவிளைவிக்கும் சிந்தையுடைய அவரை, திரும்பவும் அழைக்கத்தொடங்கினர் என்பதாம்.

ஆன்மாக்கள், பிறவிக்கு வரத்தலைப்பட்ட நாள்முதல் இன்றளவும் விடாது மாறி மாறிப் பிறவிகளையெடுத்துவருகின்ற காரணம் பாசபதார்த்தங்களாகிய பெண் பொன் முதலியவைகளில் உண்டாய்வரும் பற்றேயாம். அவ்வப்பிறவிகளிலும் புத்திபூர்வகமாகவும், அபுத்திபூர்வகமாகவும் செய்யப்பட்டுவரும் தவவிரதமுதலிய யாவும் பாசபதார்த்தங்கள் தம்முடைமையாயிருத்தற்கேயாம். இவ்வாறு பிறவிதோறும் வன்மைபெற்று வந்துள்ள பாசப்பற்றைச் சேதிப்பதற்கே, பரிபாகம் வரப்பெற்றோர் கேட்டுச்சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடுவதாகும், அங்ஙனம் நிட்டைகூடினும் "அம்மம்ம மனமாயை வெல்லவெளிதோ" என்று அப்பாசங்களோடு போராடிப்போராடி ஓய்ந்துபோகின்றனர். இப்போராட்டமொழிந்து, பற்றற்றான் பற்றினைப்பற்றிப் பாசமொழிந்து நிற்குநாள் எந்நாளோஎன்று ஏங்குகின்றனர். இவ்வாறு ஏங்குகின்ற ஞானிகளாலும் செய்தற்கரிய பாசச்சேதத்தை ஓரடியார்பொருட்டாக வாளொடுபலகையேந்தி, தோளிணை துணையேயாக தம்மைச்சூழ்ந்து வளைந்து கொண்ட பாசத்தாராகிய சுற்றத்தினரையெல்லாம் துணித்து வீழ்த்தி, அகப்பற்றையும் புறப்பற்றையும் மிகஎளிதாய்ப்போக்கிய வல்லாளர் என்பார் செய்வதற்கரியசெய்கை செய்தநற்றொண்டர் என்றார்.

தேவர்களுடைய சம்பந்தத்தால்வந்த விடத்தால் கேட்டையடையாது பிரகாசித்ததுபோலும் நாயனார்சம்பந்தத்தால் வந்தசுற்றத்தாரால் தாமொருகேட்டையும் அடையாது பிரகாசித்தனராகலானும், நாயனருக்குத்தனது எண்டோளையும் அவரறியாவண்ணம் துணையாகக்கொடுத்து எண்டிக்குகளிலும் சூழ்ந்துவந்த சுற்றங்களையெல்லாம் களைந்தனனுகலினானும், மைந்திகழ்கண்டன் எண்டோண்மறையவன் என்றார்.

தனது தோளிணையால் எண்ணிறந்த சுற்றத்தாரையெல்லாம் வென்றவராயிருந்தும், அவ்வெற்றியைத் தனதுதோள்வலியாலென் றெண்ணாமல் இது எண்டோளனுடைய வலியாலென்றுணர்ந்து மகிழ்ந்தனராகலின், அம்மகிழ்ச்சியை இறைவன் கண்டு மகிழ்ந்தனனென்பார் மகிழ்ந்துநோக்கி என்றார்.

நீங்காப்பாசங்கள் நீங்கவந்தகாலத்து அப்பாசங்களில் நெடுங்காலமாய்ப் பழகிவந்த உள்ளமானது விளக்கு அணையும் பருவத்தைப்பார்க்கும் இருளைப்போல, அறிவற்றம் பார்க்குந் தன்மைத்தாகலின், அவ்வுள்ளம் இவர்பாலிருக்குமாயின் நம்மைப் பிரியாநங்கையாகிய நமது மனையாட்டி இன்று மறையவர்பால் எவ்வாறு வாழத்துணிவாள், நமது ஆணைக்கஞ்சி ஒருவாறு வாழத்துணிந்தாலும் அவளது கற்பு அவளைத்தடுக்குமே, அத்தடையை அவ்வேதியர் எவ்வாறு போக்கவல்லவராவர், ஆகலின் அவர்பின்னே போகின்ற நமதுமனையாட்டி நாம் அவளைப்பிரிந்துவரத் துணிந்ததுபோலும், நம்மைப் பிரிந்துபோவதில் துணிவுடையவளாய்ப் போகின்றனளா ! மனங்கலங்கிப் போகின்றனளா ! அக்குறிப்பைச் சற்றுநின்று திரும்பிப்பார்ப்போமென்று எண்ணுவனவாயிருக்கின்ற பாச எண்ணங்களை எண்ணும்படியாகச் செய்யும். அவருள்ளம் வேதியராய்வந்த சங்கரன்பால் ஆகி ஆசைநிறைந்த தன்மையால் சவிகற்பவழிப்படாது நிர்விகற்பநிலையராய்ப்போன தன்மையைக் கண்டனரென்பார் பொயதரும் உள்ளமில்லான் பார்க்கிலன் போனன் என்றார்.

"உள்ளமுதல் அனைத்தும் ஒன்ற உருகவரின், உள்ளம் உருகவந்து உன்னுடனும்" என்று திருக்களிற்றுப்படியாரிற் கூறியபடி, உள்ளமுதலனைத்தும் ஒன்ற உருகவருவதாகிய நிர்விகற்பநிலையராய்ச் செல்கின்ற அந்நாயனரை, இறைவன் தமது உள்ளம் அவர்பால் உருகி உடனுயிருக்கத் துணிவரேயன்றி, வேறுபிரிந்திருக்கத் துணிவரோ, துணியார் என்பார் மெய்தருசிந்தையாரை மீளவும் அழைக்கலுற்றார் என்றார்.

பொய்தரும் உள்ளம் - பாசபதார்த்தங்களைப் பற்றுதற்கான ஆசையை விளைவிக்கும் தன்மையுடைத்தெனவும், மெய்தருசிந்தை அவ்வாசையை அரன்பாலாக்கி அவ்வரன்பால் அன்பைவிளைவித்துத் தன்னறிவு அழிந்திருக்கச்செய்யும் தன்மையுடைத்தெனவும் அறிக.

இத்திருப்பாசுரத்தான், இயல்பாகவே பாசங்களில் நின்றும் நீங்கியிருக்கும் இறைவன், இயல்பாகவே தன்னைவிட்டு நீங்காதபாசத்தைப் பகைத்தநாயனரது பாசபதார்த்தங்களைத் தன்னுடைமையாக்கித் தன்வசப்படுத்திக்கொள்ளவும்; அவரைத்தான் ஏவும் ஏவல்வழிநிற்கும் அடிமையானாகவும் ஆண்டருளவந்த காலத்து, அங்ஙனமே பாசபதார்த்தங்களை அவனுடைமையாக்கும் செயலிலும், தான் அவன்ஏவும் ஏவல்வழி மாறாது நிற்கும் அடிமைத்திறத்தில் திறம்பாத அரியசெயலிலும் நின்ற நற்றொண்டரென்பதும், தன்னுடைமையும், தன்னடிமையும் எவற்றாலும் தடைபடாது தன்பாலாக்கிய அச்செயலால் இறைவன்மகிழ்ந்து நோக்கினன் என்பதும், தாம் மகிழ்ந்துநோக்கிய அக்கருணைநோக்கிலேயே நாயனரது நோக்கம் மாறாதிருத்தற்கு இறைவன் மீளவும் அழைத்தானென்பதுங் கூறப்பட்டன. (உ௮)

இயற்பகை முனிவா ஓலம் ஈண்டுநீ வருவாய் ஓலம்
அயர்ப்பிலா தானே ஓலம் அன்பனே ஓலம் ஓலம்
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம் என்றான்
மயக்கறு மறைபோ விட்டு மாலயன் தேட நின்றான்.

(எ. - து.) ஆன்மாக்களுடைய அறியாமையை அறுக்கவல்ல வேதங்கள் ஐயா ஐயா வென்றோலமிட்டலறியும், அரிபிரமர்கள் கீழும்மேலும் தேடியும் அறியப்படாது நிற்கின்றவனாகிய இறைவன், இயற்பகைமுனிவனே! நான் உன்னடைக்கலம், நானிருக்கும் இந்த இடத்திற்குச் சீக்கிரமாகவருவாய் நான் உன்னடைக்கலம், அடியார்களுக்கு வேண்டியவற்றைச் செய்வதில் சோர்வில்லாதவனே நான் உன்னடைக்கலம். என்பால் அளவிலா அன்புடையவனே நான் உன்னடைக்கலம், செய்தற்கரிதாகிய செயலை மிக எளிதாய்ச் செய்த தீரபுருஷனே! நான் உன்னடைக்கலம் அடைக்கலம் என்று பேரோசையிட்டுக் கூவினார் என்பதாம்.

"மன்னுகாதல் உன்மனைவியைவேண்டி வந்தது இங்கு" என்று நான் சொல்லி உன்மனைபுகுந்தகாலத்தில் நீ என்னைக்கண்டு "முந்தை யெம்பெருந்தவத்தினால் என்கோ முனிவர் இங்குஎழுந்தருளியது' என்று மகிழ்ந்தமகிழ்ச்சியினும், பெருமகிழ்ச்சி யடைந்தனையேயன்றி, மனைவியைக் கேட்டானே என்று முனியாதொழிந்த முனிசிரேஷ்டனே உன்னையன்றி எனக்குத்துணை யாவருள்ளார் என்பார் இயற்பகைமுனிவா வோலம் என்றார்.

மனையாட்டியைக் கொடுக்காப்பொருளாகக் கருதாது, கொடுக்கும் பொருளாகவே கருதி, "இது எனக்கு முன்புள்ளதே வேண்டி எம்பிரான்தந்த பேறு எனக்கென்று உன்காதலிபாற் கதுமெனச் சென்ற"னையே உன்னைப்போலும் எனக்கு வேண்டியதை விரைந்துகொடுப்பவர் யாவருள்ளர் ஈண்டுநீ வருவாயோலம் என்றார்.

உன்னுடைய, "தையல்தன்னை யான் தனிக்கொடுபோகக், காதன்மேவிய சுற்றமும் பதியும் கடக்க நீ துணைபோதுக" என்று நான்சொல்லியபோது, "யானே முன் செய்குற்றேவல்ஒன்று, இதுதன்னை என்னையுடையவர் அருளிச்செய்யநின்றது பிழையாம் என்று நினைந்து, பூங்கச்சுப் பொலியவீக்கி, வாளொடுபலகையேந்தி, தோளிணை துணையேயாக, வருபெருஞ்சுற்றமெல்லாம் வாளினால் துணித்துமாற்றி" (என்னை நோக்கி) அடிகள் நீர் அஞ்சாவண்ணம், பொருவருங்கானம்நீங்க விடுவேனென்று (என்னுடனே வந்தவனே) உன்னைப்போலும் சோர்வில்லாமல் பாதுகாக்கும் திறமுடையவர் யாவருள்ளார் என்பார் அயர்ப்பிலாதானே ஓலம் என்றார்.

திருமலிதோளனாகிய உன்னை நான் "மீளெனச்செப்" பியபொழுது, "பொய்தரும் உள்ளத்"தின்வசப்பட்டு மனையாட்டியை ஆசையால் திரும்பிப்பார்ப்பதும் ஒழிந்து, பாராதவனாய்ப் போயினையே, அவ்வாறுபோனது என்பால் நீவைத்த "மெய்தரு சிந்தை"யினாலல்லவா, உன்போல் என்பால் அன்புள்ளாரை நான் எங்ஙனங் காண்பேன் இல்லை இல்லை என்பார் அன்பனேஓலம்ஓலம் என்றார்.

உன்னை நான் மீளெனச்செப்ப, நீ மீண்டபொழுது, மெய்தரும் சிந்தைவசப்பட்டு, எனது மலர்ப்பாதத்தைப் பிரிவதற்கஞ்சி ஆராக் காதல்கொண்டு அப்பதத்தை உனதுசிரம்பொருந்தும்படிச் சூடி, அஞ்சலிகூப்பிநின்று ஏத்தி, இவனருள் பெறப்பெற்றேனென் றேகினையே, உன்னைப்போலும் இவ்வரிய செய்கையைச் செய்ததீரர் யாவர். அங்ஙனமான அரியசெய்கையைச் செய்த உன்னை நான் எங்ஙனம்பிரிந்திருப்பேன் என்பார் செயற்கருஞ் செய்கைசெய்ததீரனே ஓலம் என்றார்.

இவ்வாறு, நாயனாரது * அறுவகைச்செயலையும் எடுத்துக்கூறியதே யல்லாமல் அங்ஙனங்கூறுந்தோறும் ஓலம்ஓலம்என்று ஓலமிட்டவன் யாவன் எனில்,—மறைகளெல்லாம் பன்முறை ஓலம் ஓலம்என்று கூறிஅழைப்பினும் வாராதவனும், அரிபிரமர்கள் பன்னெடுங்காலம் காண்பதற்குத் தேடினும், காணப்படாது நின்றவனுமாகிய ஐஸ்வர்யாதி ஷட்குணசம்பன்னனாகிய இறைவன் என்பார்—, மறையோலிட்டு மாலயன் தேடநின்றான் என்றார்.

* திரும்பிப்பாராது போனமை ஓர்செயலாகவும், அவ்வாறுபோனது ஆசை சங்கரன்பால் வைத்தமை ஓர் செயலாகக்கொண்டு அறுவகை என்றாம்.

இத்திருப்பாசுரத்தான், தீர்ந்தஅன்புடையாராகிய நாயனாரது அன்பின்திறத்தை இறைவன்பாராட்டி, அவர்பால் அவரினும் அன்பனாய் ஓலமிட்ட அன்பின்திறத்தைக் கூறப்பட்டது. (௨௯)

நாயனார் வர இறைவன் மறைதல்.

அழைத்தபேர் ஓசை கேளா அடியனேன் வந்தேன் வந்தேன்
பிழைத்தவர் உளரேல் இன்னும் பெருவலித் தடக்கை வாளின்
இழைத்தவர் ஆகின் றாரென் றியற்பகை யார்வந்தெய்தக்
குழைப் பொலி காதினானும் மறைந்தனன் கோலங் கொள்வான்.

(எ - .) இயற்பகையாரானவர், தம்மை ஓலம்ஓலம் என்று அழைத்ததாகிய பேரோசையைக்கேட்டு, அடியேன் இதோ வந்துவிட்டேன், வந்துவிட்டேன் என்று எதிரோசைகாட்டி, முன்செய்தபோரில் தப்பிப்போனவர் இன்னமும் தேவரீரைத் தடைசெய்வதற்கு ஒளித்திருந்து இப்போது உளராகவருவாரானால், மிக்க வலியினை யுடைய எனது நீண்ட கையினிடத்திருக்கும் வாளினால் செய்யப்படும் கொலைத் தொழிலுக்கு ஆளாகின்றார் என்று வீரமொழி கூறிவந்து சமீபித்தபோது, சங்கக்குண்டலமணிந்திருக்கும் இறைவனும் தமது தெய்வவுருவத்தைக் கொள்ளும்பொருட்டுத் திருவுருக்கரந்தன ரென்பதாம்.

இத்திருப்பாசுரத்தான், பாசப்பற்றற்றானாகிய தனது பற்றினைப்பற்றி பாசப்பற்றற்றவர் நாயனார் என்னும் அவ்வுண்மை யாவரும்உணர ஓலம்ஓலம் என்று பேரோசையிட்டழைக்க, ஐம்புலஓசை யடைக்கிய நாயனார் அவ்வோசைவழியே மீண்டு, என்னை மீளாவடிமைகொண்டமெய்யனே வந்தேன் வந்தேனென்று வந்ததும், வந்து பாசக்கூட்டத்தையுங் காணாது, பாசக்கூட்டத்தைக் களைவதற்குத் தடஸ்தப்பட்ட தடத்தவடிவையுங்காணாது, தனியராய் (அசத்துமாகாது, சத்துமாகாது) நின்றகாலத்து இறைவன் நாயனாரை சொரூபவடிவத்தைக் காணுமாறு மறைந்ததுங் கூறப்பட்டன. (௩௰)

இறைவனை விடைமேற் காண்டல்.

சென்றவர் முனியைக் காணார் சேயிழை தன்னைக் கண்டார்
பொன்திகழ் குன்று வெள்ளிப் பொருப்பின்மேற் பொலிந்த தென்னத்
தன்துணை யுடனே வானில் தலைவனை விடைமேற் கண்டார்
நின்றிலர் தொழுது வீழ்ந்தார் நிலத்தினின் றெழுந்தார் நேர்ந்தார்

(எ - து.) இன்னமும் பகைவர் உளரென வருவாராயின் அவர்களை எனது கையிலுள்ள வீரவாளுக்கு இரையாக்குகின்றேன் என்று சொல்லிக்கொண்டே போனவராகிய இயற்பகைமுனிவர், (இயற்பகைமுனிவா வோலம் என்றுதம்மையழைத்த) பெரிய முனிவரைக்காணாமல், தனது மனைவியாரைமாத்திரங் கண்டனர், (நம்மையழைத்த முனிவர் எங்கே யென்று சுற்றுமுற்றும் பார்த்து மேலேபார்க்கும்போது) வெளியிடத்தில் பொன்மலையானது வெள்ளிமலையின்மேல் பிரகாசிப்பதுபோல, வெள்ளிய விடப்வூர்தியின்மேல் தனது துணையாகிய உமாதேவியாரோடு இறைவனிருக்கக் கண்டனர். (கண்டமாத்திரத்தில் நின்றிருந்தவர்) நிற்கப்பெறாதவராய், பூமியில்வீழ்ந்து வணங்கி மீண்டும் எழுந்து இறைவனைக் கண்ணாரக் காணப்பெற்றார் என்பதாம்.

வானில் விடைமேல், தன்துணையுடனே தலைவனைக் கண்டார் எனவும், நின்றிலர் வீழ்ந்தார் தொழுது எனவும் கூட்டுக.

பொன்றிகழ்பொருப்பு - சிவபெருமான், வெள்ளிப்பொருப்பு - விடபவூர்தி என்க.

"இத்திருப்பாசுரத்தான், மலசத்தியினின்றும் ஆன்மாக்கள் நீங்கத் தலைப்பட்டு நின்ற திரோதானசத்தியானது, அம்மலசத்தியைக் கெடுத்தபின்னர், அம்மலத்தோடு சாராது தனித்து நிற்றல்போல் தனித்துநிற்கும் தனது மனையாட்டியைக் கண்டாரென்

பதும், திரோதானசத்தியைக் காணப்பெற்றார்க்கு அருட்சத்திதெரிசனமும், அவ்வருட்சத்தியுக்தமாய் விளங்கும் சிவதரிசனமும் கிடைத்தல் அக்கணமே என்பதுபோல் தன் மனையாட்டியைக் கண்டபொழுதே, தன் துணையுடனே வானில் தலைவனை விடைமேற் கண்டாரென்பதும், விடாதிருந்த பாசத்திற்கு விடையால் விடைகொடுத்த தலைவனைக் கண்டவர் அவன்றாளே தாரகமாய் அவ்வருளில் வீழ்ந்துகிடப்பாரென்பதுபோல் நின்றிலர் தொழுது வீழ்ந்தார் என்பதும், அருள்வசப்பட்டார் அருளுடையானைக் காண்டல் வாழ்த்தல் முதலிய அருட்பணியில் தலைப்பட்டொழுகுவா ரென்பதுபோல் தொழுது வீழ்ந்தவர் மீளவும் எழுந்து வாழ்த்துவதற்கு நேர்ந்தாரென்பதுங் கூறப்பட்டன. (ருக)

இறைவனைப் போற்றல்.

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி யென்ன.

(எ - து.) இறைவனே! நீஎன்பால் மறைமுனிவனாய் வந்து இயற்றிய திருவிளையாடலையும், இப்போது விடையின்மேல் கொடுக்கும் இக்காட்சியினையும் இத்தன்மைத் தென்று அறியுந் தரமுடையவனுவனே ஆகேன். அது அறியாதொழியினும், என்னைத் தன்வசப்படுத்திய இத்திருவுருவக்காட்சி நீடூழிவாழ்கடவது, இச் சிறியேன்பொருட்டாய்க் கொண்ட இப்பெரிய தோற்றத்திற்கு யான் வந்தனஞ்செய்கின்றேன், நான் உன்னைக் காணப்பெறாது பிறந்திறந்து வருந்தாவண்ணம் இப்பிறவியிலேயே உன்னைக் காணும்படி நீயே விரைந்துவந்து என்னை வழியடியனாகத் தொண்டுகொண்டனையே அப் பெருங்கருணைக்கு வந்தனஞ்செய்கின்றேன். இங்ஙனம் அடிமைகொண்ட இச் சிறிய அடிமையில் அளவுபடுத்தவொண்ணாத பேரின்பவெள்ளத்தை என்னுள்ளாக்கினையே அக்கருணைப்பெருக்குக்கு வந்தனஞ்செய்கின்றேன். தில்லையம்பலத்துள் நின்று நடனஞ்செய்தருளும் பொன்போன்ற திருவடிகளுக்கு வந்தனஞ்செய்கின்றேன் என்பதாம்.

இத்திருப்பாசுரத்தான், தில்லையம்பலத்துள் ஆடும் சேவடியுடைய நீ, ஆடுந்தோற்றத்தினாலே என்னை யடிமைகொள்ள நினையாமல் என்னைப்போலும் சங்கம வடிவமாகிய தோற்றங்கொண்டுவந்து எனது இச்சை உன்வழிசார்ந்துநிற்க, எனது இச்சாரூபமாகிய மனையாட்டியை உனது இச்சாரூபமாக்கிக்கொண்டும், எனது கிரியாரூபமாகிய செயலை உனது கிரியாசத்தியுட்படுத்தி பாசச்சேதம்செய்யும் வன்மையுடையதாகவும், எனது ஞானரூபமாகிய அறிவை உனது ஞானசத்தியுட்படுத்தி, விடையின் மேல் வருவதாகிய இந்த ஞானசொரூபத்தைக் கண்டுகளிக்கவும் செய்தனையே இம் முறையை எடுத்துச்சொல்லி உன்னை நான்வாழ்த்துவேனா? எனது இச்சாஞானக் கிரியைகளை வழிவழியாய் உனது இச்சா ஞானக் கிரியைக்குட்படுத்திக் கொண்டதேயல்லாமல் எனது தேகேந்திரியப் பிராணாதிகளேயும், வணங்கவும் வாழ்த்தவும் காணவும் களிக்கவுமாகிய வழித்தொண்டில் ஈடுபடும்படி ஆளாக்கிக்கொண்டனையே! இவ்வதிசயத்தைச் சொல்லி வாழ்த்துவேனா, எனது தேகேந்திரியாதிகளும், இச்சையாதிகளும் தோன்றாவிடத்துத் தோன்றுவதாகிய எல்லையில் இன்பமாகிய பேரின்பத்தை, தேகாதிகளும் இச்சையாதிகளும் குன்றாது தோன்றியிருக்கும் இவ்விடத்தில் தோன்றச்செய்து என்னைக் களிக்கச்செய்தனையே இவ்வருட்டிறத்தை எடுத்துச்சொல்லிவாழ்த்துவேனா? நீ என்னை உனது திருவாக்கினால்,—இயற்பகைமுனிவா எனவும், அயர்ப்பிலாதானே எனவும், அன்பனே எனவும், செயற்கருஞ்செய்கைசெய்த தீரனேஎனவுங் கூறியதேயல்லாமல் உனக்கு அடைக்கலமா யிருக்கின்ற என்பால் நீ அடைக்கலமென்று ஆறுமுறைகூறினையே அதனை நான் எண்ணுந்தோறும் என்னெஞ்சம் ஆறவில்லையே! அவ்வருமையை எடுத்துச்சொல்லி வாழ்த்துவேனா அங்ஙனிருந்ததை நான் எங்ஙனிருந்ததென்றெவ் வாஞ்சொல்லுகேன், இவ்வண்ணம் நீ எனக்குச்செய்த செய்தற்கரிய செயல்களை

நான் என்னென்று சொல்லஅறிவேன்; அறியேன்! அறியேன். அறியேனாயினும், இப்போது யான்கண்ட மாதினுடன் என்றும் நீ வாழ்ந்திருக்க வாழ்த்துகின்றேன், நீ அங்ஙனமே வாழ்ந்திருக்க நான் இங்ஙனமே உன்னைத் துதித்துக்கொண்டிருக்கப் போற்றுகின்றேன் என்றுகூறப்பட்டன. (கூஉ)

இறைவன் இருவரையும் அழைத்தல்.

விண்ணிடை நின்ற வெள்ளை விடையவர் அடியார் தம்மை
எண்ணிய உலகு தன்னில் இப்படி நம்பால் அன்பு
பண்ணிய பரிவு கண்டு மகிழ்ந்தனம் பழுதி லாதாய்
நண்ணிய மனைவி யோடு நம்முடன் போது கென்று.

(எ - து.) ஆகாயத்தின்கண் வெள்ளை விடபவூர்தியனாய் நின்றருளும் இறைவன் நாயனாரைப்(பார்த்து)இருவினை யீட்டதற்கும், இருவினை நீக்குதற்குமான கருமங்களைச் செய்தற்குரிய இடம் இக்கருமபூமியென் றெண்ணப்பட்ட இந்நிலத்தில், நம்மிடத்தில் இப்படி நீ செய்த பரிவான அன்பினைக்கண்டு மகிழ்வடைந்தோம். நீ செய்த அன்பின் செய்கையில் * முக்கரணங்களாலும் வரப்படும் குற்றமில்லாதவனே, நம்வசமாகநின்ற உனதுமனைவியோடும் நம்முடன் வருவாயாக என்று அருளிச்செய்து என்பதாம்.

இத்திருப்பாசுரத்தான், இறைவன் நாயனாரைநோக்கி சொல்லுவதறியேன் என்ற அவ்வளவில் நீ நில்லாமல், நான் மாதினுடன் என்றும் வாழ்ந்திருக்கவேண்டும் என்றும் அங்ஙனம் வாழ்ந்திருக்கும் என்னை நீ என்றும் துதித்துக்கொண்டிருக்க வேண்டுமென் றும் வாழ்த்திப் போற்றினையாகலான், நீ வேண்டியபடியே, உன்மனையாளுடன் நீ நம் முடன் வருவாயாக என்று கூறப்பட்டது. (கூகூ)

இறைவன் அம்பலம் ஏகல்.

திருவளர் சிறப்பின் மிக்க திருத்தொண்டர் தமக்குந் தேற்றம்
மருவிய தெய்வக் கற்பின் மனைவியார் தமக்குந் தக்க
பெருகிய அருளின்நீடு பேறளித் திமையோ ரேத்தப்
பொருவிடைப் பாகர் மன்னும் பொற்பொது அதனுட் புக்கார்.

(எ - து.) போர்செய்யுந் திறமுடைய இடபவூர்தியையுடைய இறைவர் (பிறக் இறத்தலாகிய வறுமையை யொழித்து, பிறவாநெறியாகிய பெருஞ்செல்வத்தைந் கொடுக்கும் (சிறப்பினால் மேம்பட்ட திருத்தொண்டினை யுடையாராகிய நாயனாருக்கும், கற்பினிலை இதுவெனத்தெளியும் தெளிவினையுடையராய்த் தெய்வவழிப்பட்ட அவரது மனைவியாருக்கும் தகுதியாகிய பேற்றைத் தமதுள்ளத்தில் ஊற்றெடுக்கும் பேரருளி னால் கொடுத்து, தேவர்களெல்லாந் துதிக்க, எக்காலத்தும் அழிவில்லாத † பொன்னம் பலமாகிய பொதுவினுள்ளே புகுந்தருளினர் என்பதாம்.

இத்திருப்பாசுரத்தான், திருவளர் சிறப்பின்மிக்க திருத்தொண்டராகிய நாயனா ரைப்போலும், தெய்வசம்பந்தமுள்ள கற்பினையுடைய அவரது மனைவியாரைப்போலும், இவ்வுலகுதன்னில் இப்படி இறைவன்பால் அன்புசெய்தார் ஒருவரும் இல்லை ஆக

* இராஜச, தாமச குணவிருத்திகளோடு சார்ந்து தனதியல்கெட்டு அவற்றோடு ஒன்றாயும், அவைகளின்செயலைச் செய்து பின் அவற்றின்வேறாய்த் தன்விருத்திக்குரிய செயலைச்செய்தும் உழல்வதாகிய சாத்வீககுணத்தோடு சாராது, திருந்திய சாத்வீக குணமுடைவரென்னும் அருமைதோன்ற - பழுதிலாதாய் என்றார்.

† கயிலாயத்தை யடைந்தார் என்னாது, பொற்பொது அதனுட் புக்கார் என்றது - இறைவனோடு அத்துவிதமாவதாகிய சொரூப சாயுஜ்ஜிய முத்தி - இறைவனைக் காணப் பெற்ற அவ்வவ்விடங்களிலேயே கூடுமென்னும் அவ்வுண்மைதோன்ற என்க. இத னைக் காஞ்சிபுராணம் தலவிசேடப்படலத்தில் - யாம், பரவெளிப் பரப்பின்வைகும் பண பினேம், உலகமெங்கும் விரவியே நிறைந்துநிற்பேம், விளங்கும் எம் நாலாம்பாதம் 'தனைமுதல் உலகாம் மூன்றுபாதம் வான்றலத்துமேவும். எனவருதலாற் காண்க.

லான், அவர்கள் பண்ணிய பரிவினை இறைவன் கண்டு மகிழ்ந்து, அவர்கள்செய்த பேரன்புக்குத் தக்கபடி பேரருள்கொண்டு, உனது மனைவியுடன் நீ நம்முடன் வருவாயாக என்கிற பெரியபேற்றை அனுக்கிரகஞ்செய்து பொன்னம்பலத்தின்கண் எழுந்தருளினமை கூறப்பட்டது.

இதனால், சிவஞானம் எய்தற்குச் சாதனமாகக்கூறும் சரியை கிரியை யோகங்களைச் செய்வோர் அடைவனவாகிய சாலோக சாமீப சாரூபங்களாகிய அபரமுத்திகளை அடையப்பெறுதல், இறைவன் தடத்தவுருவங்கொண் டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீகயிலாயத்தின்கண் ணன்றி வேறிடத்தில்லை என்பதும், சிவஞானம் வரப்பெற்று, சிவனருள் வருதற்குச் சாதனமுறையாக மேற்கொண்டு சரியையாதிகளைச் செய்வோர் அடையத்தகும் சிவசாயுஜ்யமுத்தியாகிய பரமுத்தி, அங்கு இங்கு என்னுதபடி எவ்வுலகத்தும் சிற்பிரகாசமாய் நிறைந்து பிரகாசிக்கும் சொரூபசிவத்தின்கண்ணதாகலின், மனைவியோடு நம்முடன் போதுகென்று, பெருகிய அருளினீடு பேறளித்து, மன்னும் பொற்பொது அதனுட்புக்கார், என்று இங்ஙனமே சொரூபஐக்கிய அத்வைதானந்தமுத்தியைத் தந்தனரென்பதும் அறியக்கிடக்கின்றமைகாண்க.

இங்ஙனமான முத்திநிலை யறியாதபலர், நாயன்மார்கள் சரியையாதி தவங்களைச் செய்தவரென்றும், அவரவர் தவத்திற்கேற்றபடி இறைவனும் அபரமுத்தி எனப்படும் பதமுத்திகளைக் கொடுத்தனரென்றுங் கூறி, தாமும் இடர்ப்பட்டுப் பிறரையும் இடர்ப்படுத்துகின்றனர். சரியையாதிகளையும் வழுவாதுசெய்து,சிவனையுங்கண்ட நாயன்மார்கள் அடைந்த முத்தி அபரமுத்தியென்று கண்டுபிடித்த இவரெல்லாம் அடையப்போவது தான் பரமுத்திபோலும். சரியையாதிகளை ஒருசிறிதும் ஒருநாளும் செய்யாதவராகியும், இறைவனைக் காணவேண்டுமென்னும் எண்ணமும் அற்ற இவர்கள்தான்போலும் பரமுத்தியடைதற்குரியார். அந்தோ இங்ஙனம் இவர் கூறவந்த பாவமொழியைப்போலும், அங்ஙனம் சொல்லவெண்ணிய பாவத்தைப்போலும், மொழியும் எண்ணமும் வேறுண்டோ. ஆகலின் இப்பாவக்கூற்று மொழிகளைச் செவியுட்புகுத்தாது உய்வாரெல்லாம் உய்ந்துபோவார்களாக.

இவ்விடயத்தை ஈண்டுவிரிக்கிற் பெருகும். முத்திவிடயம் ஆங்காங்கு வருமாகலின், ஆங்காங்கும் பூர்வபக்ஷ சித்தாந்தங்களை இனிது எடுத்துக்கூறுவாம். (௬௪)

நாயனார் பேரின்பம் பெற்றுவாழ்தல்.

வான்வர் பூவின் மாரி பொழியமா மறைக ளார்ப்ப
ஞானமா முனிவர் போற்ற நலமிகு சிவலோ கத்தில்
ஊனமில் தொண்டர் கும்பிட் டுடனுறை பெருமை பெற்றார்
ஏனைய சுற்றத் தாரும் வானிடை இன்பம் பெற்றார்.

(எ - து.) தேவர்களெல்லாம் கற்பகமலர்மாரியைப்பொழிய, வேதங்களெல்லாம் ஆரவாரித்துப் போற்ற, பாசஞான பசுஞான முடையோரெல்லாந் தோத்திரஞ்செய்ய, சிவமாந்தன்மையைக்கொடுக்கும் நன்மைமிகுந்த * சிவலோகத்தில் தொண்டின்திறத்தில் ஊனமில்லாமல் சிவபெருமானைக் கும்பிட்டுக்கொண்டு அச்சிவபெருமானுடன் அத்வைதமாயிருக்கும் பெருமையைப் பெற்றனர். இவருடைய சுற்றத்தாரெல்லாம் சுவர்க்கலோகத்தின்கண் இன்பம்பெற்று சுகித்திருந்தனர் என்பதாம்.

இத்திருப்பாசுரத்தான், ஒருவரும் தனக்கு மனையாட்டியாய் இப்பிறப்பில் இருப்பவளை எப்பிறப்பிலும் தனக்கே மனையாட்டியாயும் பிறப்பொழிந்த முத்தியினும் வரும் வினையைச் செய்தாரில்லை. அஃதேபோல் தேவரும் தத்தம் மனையாட்டிகள் தம்மைப் பிரியாதிருக்கப்பெற்றதுமில்லை. இறைவனும் அத்தன்மையான வரந் தந்ததுமில்லை.

* சொரூப சிவமாந்தன்மையைப் பெற்றவர் - அச்சிவம் எந்த எந்த இடத்தில் இருப்பினும் அந்தந்த இடங்களில் அவனாணைப்படி அந்தந்த வுருவங்கொண்டிருப்பரென்னும் உண்மையை ஈண்டுணர்த்தியவாறுமென்க.

ஆகலான், நாயனார்பெற்ற அவ்வதிசயம்நோக்கி வானவர் பூவின்மாரி பொழிந்தனரென்பதும். இறைவனைக்கும்பிட்டு அவனுடனுறையும் பெருமைபொருந்திய சித்தாந்தமுத்தியைப்பெறாது, பசுஞானத்தால் தம்மையே பதியாகநினைத்துப் பதிதராய்ப்போன பசுஞானிகளாகிய முனிவர்கள், அவர்பெற்ற பதிஞானமுத்தியைத் தாமெல்லாம் பெறப் போற்றினாரென்பதும், சிவஞானிகளால் தண்டிக்கப்பட்டார் தீவினையாளராயினும் அவர்கள் நரகத்தையடையாது சுவர்க்கத்தையே யடைவாரென்பதும் கூறப்பட்டன. ()

இன்புறுந் தாரந் தன்னை ஈசனுக் கன்ப ரென்றே
துன்புறா துதவுந் தொண்டர் பெருமையைத் தொழுது வாழ்த்தி
அன்புறு மனத்தால் நாதன் அடியவர்க் கன்பு நீடும்
மன்புகழ் இளைசை மாறன் வளத்தினை வழுத்த லுற்றேன்.

(எ - து.) சிவபெருமானுக்கு அன்பரென்றே எண்ணி, தனது இன்பத்துக்கு உறைவிடமாயிருந்த மனைவியாரை, அவ்வன்பருக்குத் தனதுசுற்றத்தாரால் சிறிதுந் துன்பம்வராவண்ணம் அவர்களைப்போக்கிக் கொடுக்கும் இயற்பகைநாயனாருடைய பெருமையைப் போற்றி வணங்கி,ப்புகழ்ந்து அன்பார்ந்த மனத்தினால் சிவனடியார்களுக்கு அன்புமிகும், நிலைபெற்ற புகழினையுடைய இளையான்குடிமாறநாயனாருடைய தொண்டின் வளத்தினைத் துதிக்கத்தொடங்கினேன் என்பதாம்.

ஈசனுக்கு அன்பரென்றே, இன்புறுந் தாரந்தன்னை, துன்புறாது உதவும் தொண்டர் எனக்கூட்டுக.

ஈசனுக்கினியராகிய அன்பர்க்கு, தமக்குஇனியராயிருந்த மனையாட்டியைக் கொடுப்பதும், அதனை மாற்றவந்த பாசக்கூட்டங்களை வெட்டியொழித்ததுமாகிய செயல் சங்கற்பமாத்திரத்தால் பஞ்சகிருத்தியங்களையும் ஒருகணத்துக்குள் செய்யவல்ல இறைவனே செய்தற்கரிய செயலென்றுமதித்து அவரைப் பலவாற்றான் புகழ்ந்து ஓலம் ஓலமென்று அழைக்கும் பெருமையுடையாரை யான் வணங்கி வாழ்த்துவதன்றி அவரது பெருமைமுழுவதும் யான்சொல்லவல்லனோ. வல்லன் அல்லேன் அல்லேன். அஃதேபோல், இளையான்குடிமாற நாயனாரது அன்பின்வளத்தையும் போற்றத்தொடங்கினேன் என்று ஆசிரியர்சேக்கிழார் இத்திருப்பாட்டாற் கூறினாரென்க.

எனவே, பிறபொருட் காதல்கொண்ட மனத்தால் அடியவர்க்கு அன்புநீடும் புகழினை யடையாது பிறபொருட் காதல்கொள்ளாத அன்புறுமனத்தால் அடியவர்க்கு அன்புநீடும் மன்புகழ் பெற்றவர் என்னும் அருமைதோன்ற அன்புறு * * * மன்புகழ் இளசைமாறன் என்றார். இயற்பகையார் யாதும் ஒன்றும் என்பக்கல் உண்டாகில் அது அடியவருடைமை இதிலையமில்லை யென்று மனைவியாரைக் கொடுத்து, சுற்றத்தினரை வெட்டித்தொலைத்தது தொண்டாயிற்று. இளசைமாறரோ, தம்மிடத்துள்ள செல்வம் மறைய, கடன் கொடுப்பாரும் அற்றிருக்குஞ்சமயத்தில், சிறிதும் மனந்தளராது, தம்மிடத்து எல்லாம் உள்ளதுபோல் அடியார்க்கு அமுதுபடைக்கவேண்டுமென்று எண்ணிய ஆசையைத் தன்மனத்துள் வளர்ந்துவரும் அன்பின் மிகுதியினால் தன் வறுமையைப்போக்க வயலிலிட்ட வித்தினையும்வாரி, நிழல்தரும் குடிசையிலுள்ள கொம்புகளையும் பிடுங்கி, குறும்பயிரைத் தடவிப்பறித்து, அமுதமைத்தது அன்பின் வளத்தினாலன்றிச் செல்வத்தின் வளத்தினாலன்றாகலான் *"இயற்பகையார் செய்த திருத்தொண்டு செப்பலுற்றேன்" என்றதுபோல் ஈண்டும் இளசைமாறன் தொண்டு செப்பலுற்றேன் என்னாது வளத்தினை வழுத்தலுற்றேன் என்றார். அன்புநிலையுள்ளதாகலான் அதனால் வரும் புகழும் நிலையுள்ளதென்பார் அன்புநீடும் மன்புகழ் என்றார்.

இயற்பகைநாயனார் புராணம் முற்றிற்று.



* திருநீலகண்டநாயனார்புராணம் - செய்யுள் - ௬௨.

அலங்கிருதாயைநம:

திருத்தொண்டத்தொகை.

"இல்லையேயென்னாத இயற்பகைக்கும் அடியேன்"

இல்லையே என்னாத என்றதனால் - உலகதருமத்தைக்கருதி மனையாட்டியைக் கொடுப்பதில்லை என்று கூறாது, சிவதருமத்தைக்கருதி மனையாட்டியை இல்லையென்னாதே கொடுத்த என்றும், இயற்பகைக்கும் என்றதனால் - சிவதருமவியலைப் பகைக்கவந்தவர் சுற்றத்தவரேயாயினும் அவரைச் சுற்றத்தினராகக் கருதாது பகைவராகவே கருதி பகைக்குந்திறத்தில் நின்றவராகிய நாயனாருக்கும் என்றும், அடியேன் என்றதனால் - நீலகண்டனாகிய இறைவனுடைய ஆணையில்தளராது யான்நிற்க திருநீலகண்டநாயனாருக்கு ஆட்பட்டதுபோல் அடியார் வேண்டுவனவற்றை இல்லையென்னாது கொடுக்கவல்ல வள்ளற்றிறம் எனக்குண்டாகும்பொருட்டு அடியேனாகின்றேன் என்றும் கூறியவாறும்.

செய்தவர் வேண்டிய தியாதும் கொடுப்பச் சிவன்தவனாய்க்
கைதவம் பேசிநின் காதலி யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை ஈந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட்டி னத்துள் இயற்பகையே.

மிக்கசீரடியார்கள் யாரேனும் வேண்டும் யாவையும் இல்லையென்னாதே முன் கொடுப்பவராகலான் செய்தவர் வேண்டியது யாதுங் கொடுப்ப என்றும், அங்ஙனங் கொடுப்பவராகிய நாயனாரிடத்துத் தூயநீறு பொன்மேனியில் விளங்கத் தூர்த்த வேடமுந் தோன்ற வேதியராய், வந்தனராகலான் சிவன்தவனாய(வந்தார்)என்றும், சிவனடியாராகத் திருக்கோலங்கொண்டு வந்தவர் அக்கோலத்துக் கேற்பனவற்றைக் கூறாது அதற்கு மாறாக, மன்னுகாதல் உன்மனைவியை வேண்டி இங்குவந்தது என்றாராகலான் நின்காதலியைத்தருகென்று கைதவம்பேசி என்றும், சொன்னமாத்திரத்தில் முன்னையின்மகிழ்ந்து "இது எனக்கு முன்புள்ளதே என்று கதுமெனச்சென்று தம் மனைவாழ்க்கைக்கற்பின் மேம்படுகாதலியாரைக் கொடுத்தனராகலான் என்றலுமே மைதிகழ் கண்ணியை ஈந்தவன் என்றும், கொன்றைவார் சடையார் அடியார்கள் குறித்து வேண்டின குணமெனக் கொண்டே ஒன்று நீர் மறாது உவந்து அளிக்கும் உண்மைகேட்டு நம்பால் இங்கு வந்தனன் என்றும், அயர்ப்பிலாதானே ஓலம், செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம் என்றும் பெருங்கடவுளாகிய இறைவனால் புகழ்ந்துரைக்கப்படும் பொருளமைந்த பெரிய புகழானது தன்பாலேவந்து பொருந்தியிருக்கப்பெற்றவராகலான் பெரும்புகழ்வாய்ந்த என்றும், பொன்னிநன்னதி மிக்க நீர்பாய்ந்து புணரி தன்னையும் புனிதமாக்குவதோர் நன்னெடும்பெருந்தீர்த்த முன்னுடைய நலஞ்சிறந்த வளப்பம்புகுந்த பூம்புகார்நகரம் நாயனார் அவதாரஞ்செய்த நகரமாகலின் காவிரிப்பூம், பட்டினத்துள் என்றும், அடியார்க்கு இல்லை என்று சொல்லும் சொல்லைப் பகைத்து நீறுசேர் திருமேனியர்மனத்து நினைத்த யாவையும் வினைப்பட முடித்து வேண்டிய இயலில் பகையாராகலான் இயற்பகையே என்றும் கூறினர்.

இதனால், இல்லையென்னாது கொடுத்தலே தவமென்றும், அத்தவத்துக்கு நின் காதலியைத் தருகென்று பெற்றதே இறைவன் செய்யும் அநுக்கிரகமென்றும், அவ்வனுக்கிரகத்தால் இயற்பகையார் என்று பெயர்பெற்றதே பெரும்புகழென்றும், அப்புகழ்வாய்ந்த அவரது நகரம் பூம்புகார் என்றும், அவரது நகரத்தையும் திருநாமத்தையும் பேற்றையும் தவத்தையும் வகுத்துச் சிறப்பித்தமைகாண்க.

புராணசாரம்.

எழிலாரும் காவிரிப்பூம் பட்டினத்துள் இயல்வணிகர் இயற்பகையார் இருவர்தேட, அழலாய பிரான்தூர்த்த மறையோனாகி ஆயிழையைத் தரவேண்டி அணைய ஐயன், கழல்ஆரப் பணிந்துமனைக் கற்பின் மேன்மைக் காதலியைக் கொடுத்தமர்செய் கருத்தால் வந்த, பிழையாருஞ் சுற்றமெலாந் துணித்துமீளப் பிஞ்ஞகனார் அழைத்தருளப் பெற்றுளாரே.

(எ - து.) "இயற்பகைநாயனார்" நீர்வளமிக்க காவிரிநதியினால், நிலவளம், குடிவளமுதலிய எல்லாவளப்பங்களும் நிறைந்து அழகுபெற்றிருக்கும் பூம்புகார் நகரமென்னு நகரத்துள், பிறர்பொருளையும் தம்பொருள்போலப் பாதுகாத்துக்கொடுக்கும் இயல்பினும், தமக்குப்பின்வரும் சந்ததியார்க்கு உதவியாகாது அழிந்துபோம் இயல்பினையுடைத்தாகிய நடுவுநிலைமையற்றவழியான் வருஞ்செல்வத்தை விரும்பாது, சந்ததிதோறும் அழிவின்றி உதவவல்ல நடுவுநிலைமையுட்பட்டுவரும் செல்வத்தை மாத்திரம் விரும்பும் இயல்பினும், சிறந்தவர்கள்குலமாகிய வணிகர்குலத்தில் அவதரித்தவர். அவர், நீறுசேர்திருமேனியராகிய அடியவர் தூர்த்தவேடமுடையராயினும், மற்றெவ்விதவேடமுடையராயினும் அவர்வேண்டுவனவாகிய பொருள் எவையாயினும், இல்லையென்னாது கொடுக்கும் ஒப்புரவுடையோராகிய பெரியோரியல்பைப் பகையாத இயல்பினையுடையவர். சிவனடியார்கள் வேண்டுவனவற்றை இல்லையென்னாது கொடுத்தலாகிய செயற்கரிய செயலைச் செய்யும் இயல்பினைப் பகையாராகிய அப்பெரியாரது இயல் இவ்வுலகின்கண் விளங்கவும், அவ்விளக்கத்தான், செயற்கரிய செய்கையைச் செய்யலாகாதாராகிய உலகினரைநோக்கிக் கூறியுள்ளதாகிய "வேதநடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்று, அடியார்கள் வேண்டுவனவற்றை இல்லையென்னாது கொடுத்தலாகிய செயற்கரிய அச்செய்கை, இதுதாமே அறிந்துசெய்யுந்தன்மைத்து" என்றுணரவும், உலகிற்குத் தனிமுதற்கடவுளாகியும், அரிபிரமர்கள்தேட அருளுருவங்கொண்டுவராது அழலுருவாய் நின்றவனாகியும் நூலுணர்ச்சியால் ஆராய்வோர்க்கு நுண்ணியனாகியும், அருளால் அடையவல்லார்க்குப் பொன்னம்பலத்தில் பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு நடனஞ் செய்பவனாகியும் உள்ள இறைவன், வைதிகமறையவர் வடிவங்கொள்ளாது, தாம் எண்ணியுள்ள செயலுக் கேற்பச் சொல்லும் சொல்லுக்குரிய தூர்த்தமறையவர் வடிவங்கொண்டு நாயனார் தன்மனைவியாரைத் தனக்குக் கொடுக்கவிரும்பி அந்நாயனார் வீட்டுக்குவர, நாயனார் அவர் கோலத்தையும் கண்டு, அவர் வேண்டிச்சொல்லிய சொல்லையுங்கேட்டு, முனிவு, (கோபம்) கொள்ளாத முனிவராய் மிகமகிழ்ந்து, அவரது திருவடிகளைத் தமதுடம்போடு மனம்பொருந்த வணங்கி, தமது காதலுக்குரிய கற்பிற்சிறந்த மனையாட்டியை அவர் வேண்டியபடியே கொடுத்தவர். கொடுத்த மனையாட்டியை அம்மறையவர் கைக்கொள்ளாது விட்டுப்போகச் சுற்றத்தாரெல்லாம் போர்செய்யவேண்டுமென்னும் எண்ணத்தினால் சூழ அக் கொடிய சுற்றத்தாரையெல்லாம் தமது தோள்வலித்துணைவழியேவந்து கூடிய அருட்பினையால் வாள் கொண்டு துண்டந்துண்டமாக்கி மண்ணிற் கிடத்தினவர். தாம் மண்ணினிற்பிறந்ததனாற் பெறவேண்டிய பயனைப்பெற்று வீட்டைநோக்கித்திரும்பினவர். திரும்பியபோது, மறையவராகிய பிஞ்ஞகனார், உனக்கு இயல்பாயுள்ள சுற்றத்தி

னரை என்பொருட்டுப் பகைவராகக்கொண்ட முனிவாவோலம் என்று முதன்முறையும், இரண்டாம்முறை நீ வீட்டுக்குப்போகாமல் இங்கு நீ வருவாய் ஓலம் என்றும், மூன்றாம் முறை போர்த்திறத்தில் அயர்ப்பிலா தானே ஓலம் என்றும், நான்காம்முறை அன்பனே ஓலம் என்றும், ஐந்தாம்முறை பொய்தரும் உள்ளம் இல்லாதவனாய் மெய்தரும் உள்ளம் உடையவனாய் உனது நிலையைக் காத்துக்கொண்டவனே ஓலம் என்றும், ஆறாம்முறை செயற்கருஞ்செய்கை செய்த தீரனே ஓலம் என்றும் அழைக்க ஓலம் என்னும் ஓசையை அறுமுறையுங்கேட்டவர். அத்தகைய நாயனார் மீளவும் திரும்பி அழைத்தவர்பால்வர, அப்பாலுக்கப்பாலனாகிய இறைவன் மறையவர்வேடத்தைவிட்டு அப்பாலாய், உமாதேவியோடு விடபாரூடனாய் ஆகாயத்தின்கண்தோன்ற அவ்வருட்கோலத்தைக்கண்டு வணங்கி வாழ்த்திநின்றவர். நின்ற நாயனாரை மன்றுளாடியாகிய இறைவன்நோக்கி,' நீ மண்ணினிற் பிறந்ததனால் எனது சிருட்டித்தொழில் பயன்பெற்றது. நீறுசேர் திருமேனியர் மனத்து நினைத்த யாவையும் மறாது கொடுத்துவந்ததனால் எனது திதித்தொழில்பயன்பெற்றது. நான் வேண்டியபடியே தையலைத்தந்து சுற்றத்தினரையெல்லாம் சங்கரித்ததனால் எனது சங்காரத்தொழில் பயன்பெற்றது. நான் போவென்றுசொல்ல, அவ்வளவில் போயினையேயன்றி, நீ போகும்போது உனது மனையாளைக்கண்டு சிறிதும் மயங்காது சென்றனையே, அதனால் எனது திரோபவத்தொழில் பயன்பெற்றது. மீளவும் நான் ஓலம் ஓலமென்று அழைத்தபோது வந்தேன் வந்தேன் இன்னும் பணியுளதேல் அப்பணியைச்செய்ய ஆவலும் வன்மையும் உள்ளவனாயிருக்கின்றேன் என்று விரைந்து வந்ததனால் எனது அனுக்கிரகத்தொழிலும் பயன்பெற்றது. இவ்வகையாய் எனது ஐவகைத்தொழிலும் பயன்படுமாறு செய்த உனது செய்தற்கரிய செயலுக்கு யாம் மகிழ்ந்தோம். நீதான் எமது ஐந்தொழிலாலும் அடையப்படும் பயனைப் பழுதிலாது பெற்றவன் என்று சொல்லப்பெற்றவர். பின்னர் அவ்விறைவன் நீ உனது மனைவியோடு பரமுத்திபெற்றார் வாழும் எவ்வுலகுக்கும் அப்பாலாகிய வுலகத்திலிருந்து என்னையே கும்பிட்டு என்னுடன் என்றும் வாழ்ந்திருப்பாயாக என்றருள அவ் வாழ்வினைப் பெற்று அங்கு வாழ்ந்திருக்கப்பெற்றவரென்பதாம்.

இதனால், அகப்பற்று புறப்பற்றாயுள்ள பாசப்பற்றுக்களை விடவல்ல ஆன்மாக்களே இறைவனைக்கூட வல்லாரே அன்றி அப்பற்றுக்களைவிட அறியாதார் இறைவனைக்கூட வல்லரல்லரென்பதையும், அஃதேபோல் இறைவனும் பற்றுடையாரைத் தன்னை அணுகுமாறு அழையானென்பதையும் அறிவுறித்தியவாறாம்.

அஃதாவது,—* ஆன்மாக்களுக்கு இறைவனால் கொடுத்திருக்கப்பட்ட தனுகரண முதலியனவெல்லாம் மாயாமலசம்பந்தமாயும், கன்மமல சம்பந்தமாயும் உள்ளன. இவற்றை யேன்கொடுத்தா னென்னில், ஆணவமலம் ஒழியவேயாம். மலம், மலத்தைப் போக்குமோ எனில், அழுக்குடைய மெல்லிய ஆடையின் அழுக்கை உவர்மண் முதலிய அழுக்கைக்கொண்டு முழுவதும் நீக்குதல்செய்யும் வண்ணான்போல் மாயேயமாகிய தநுவாதிமலத்தினை மருந்தாகக்கொண்டு, ஏனை ஆணவாதிமலங்களைப் போக்கற்கென்க. இவ்வுண்மையுணர்ந்து இருவகைப்பற்றுக்களையும், இறைவனைப் பற்றுவதற்கு அமைக்கப்பட்டுள்ள பொருள்களாகக் கருதி அவனைப்பற்றி, அங்ஙனம்பற்றுவதை, அப்பற்றுக்கள் தடுக்கமுயலின் அவை எவையாயினும் அவைகளை யொழிப்பதில் ஊக்கமுடையராயின், இறைவனும் அப்பற்றுப் பொருள்களாலேயே அவர்களைத் தானும் பற்றுவன். தடுக்கும்பொருள்களைத் தடுக்காராயின் அப்பொருள்களோடு அவர்களையும் பற்றான் என்பதாம்.

இயற்பகைநாயனார் புராணசாரம் முற்றிற்று.

---

* சிவஞானசித்தியார் உ-ம், சூ-ம், செய்யுள் -ருஉ.

திருச்சிற்றம்பலம்.

ஆதார்சோத்பவாயநம:

இளையான் குடிமாறநாயனார் புராணம்.

வேறு.

தலச்சிறப்பு.

அம்பொன் நீடிய அம்ப லத்தினில் ஆடு வார்அடி சூடுவார்
தம்பி ரான்அடி மைத்தி றத்துயர் சால்பின் மேன்மை தரித்துளார்
நம்பு வாய்மையின் நீடு சூத்திர நற்கு லஞ்செய் தவத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கினார் இளை யான்கு டிப்பதி மாறனார்.

(இ - ள்.) மாற்றுயர்ந்து அழகினைச்செய்யும் பொன்னம்பலத்தின்கண், ஆனந்த நடனஞ் செய்தருளும் ஆனந்தநடராஜனது பொன்னடிகளைத் தமது முடியில் மலராகச் சூடுவர், அவ் வெம்பிரானது சிறந்த அடிமைத்திறத்தில் ஊக்கமுடையவராய் அதனால் வரும் மேம்பாட்டைத் தரித்துள்ளவர், இத்தகைச் சிறப்புடைய இளையான் குடிமாற ரென்னும் நாயனார், நம்புதலும் உண்மையிலும் மிக்க சூத்திரரென்னும் நல்ல வேளாள குலஞ்செய்த தவவிசேடத்தால் (அவதாரஞ்செய்து) இந் நிலவுலகத்தில் அந்த வேளாள குல நலமும் சைவநலமும் பிரகாசப்படுத்தினா ரென்பதாம்.

இளையான்குடிப்பதிமாறனார், நம்புவாய்மையி னீடுசூத்திர நற்குலஞ்செய் தவத்தினால், இம்பர்ஞாலம் விளக்கினார் எனக்கூட்டுக.

நிறத்தினும் ஒளியினும் மாற்றினும் மிக்க சாம்பூநதமென்னும் பொன் என்பார் நீடிய அம்பொன் எனவும், பொன் உலகினருக்குச் சிற்றின்பத்தைத் தருதல்போல் அப் பொன்னாலாகிய பொன்னம்பலம் பேரின்பசுகத்தைத் தரும் தகுதியுடைத்தென் பார் நீடியஅம்பலம் எனவும், ஆடுகின்றிலை கூத்துடையான் கழற் கன்பிலை யென்புரு கிப், பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர், சூடுகின்றிலை சூட்டு கின்றது மிலை துணையிலி பிணநெஞ்சே, தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை செய்வ தொன் றறியேனே" என்று தேடும் சிற்பரச்செல்வர்க்குத் தேடும் அப்பணியெல் லாம் கைகூட ஆடுகின்றவரென்பார் ஆடுவார் எனவும், அங்ஙனமான ஆடலைக் கண்டு ஆடல் பாடல் முதலியன துணையாகப்பெற்றுப் பேரன்பால் அச்செயல்களைச் செய்து அவற்றின் பயனாகக் குஞ்சிதபாதத்தை முடியிற் கொள்வாரென்பார் அடி சூடுவார் எனவும், மண்ணினிற்பிறந்தார் பெரும்பயன் மதிசூடும் அண்ணலார் அடி யார்தமை அமுதுசெய்வித்தலாகலான் அப்பணியில் தளராத உரமுள்ள உள்ளமுடை யவரென்பார் தம்பிரான் அடிமைத்திறத்துயர் சால்பின்மேன்மை தரித்துளார் எனவும், அத்தகைய மேன்மையுடைய நம்பெரியார் வந்து அவதாரஞ்செய்தற்கு வேளாளர் குலம் தவஞ்செய்ததென்பார் சூத்திரநற்குலஞ் செய்தவத்தினால் எனவும், கடவுளை நம்புவதாகிய நம்பிக்கையிலும், பொய்மையில்லாது வாழ்வதாகிய வாழ்க்கையிலும் சிறந்த குலமென்பார் நம்புவாய்மையில் நீடுசூத்திரநற்குல மெனவும், † புகழ், பொறை,

* கண்ணடியில் உற்பவமானவர்.

† வானமும் திசையும் பொங்கும் புகழ்மையும் வானம்பேணும், ஞானமும் [illegible] யும் குன்றா நன்றியும் ஊக்கப்பாடும், தானமும் கொடையும் அன்பும் வரிசையும் தகை சால் நண்பும், மானமும் தவஞ்செய்தீன்ற மகவுபோல் வளர்க்கலுற்றார்.

எனத் திருவிளையாடற்புராணம் நகரப்படலத்தில் வருதல்காண்க.

குன்றாநன்றி ஒழுக்கப்பாடு தானம் கொடை நண்பு மானம் என்னும் குலவொழுக்கமும், ஞானம் அன்பு வரிசை என்னும் சைவவொழுக்கமும் இவ்வுலகின்கண் பிரகாசிக்கச்செய்தனரென்பார் இப்பாடலில் விளங்கினர் எனவுங் கூறினர்.

இத்திருப்பாட்டான் இளையான்குடிமாற நாயனார், அம்பலத்தான் அடியாகிய அருளை மேற்கொண்டு அருட்பணியில் முட்டுப்படாத உரம் உடையவரென்பதும், நற்குலமாகிய வேளாளர்குலத்தில் அவதாரஞ்செய்தவர் என்பதும், அவதாரஞ்செய்த அக்குலத்தின் மேன்மையும், அடியார்க் கமுதளிக்கும் அடிமைத்திறமும் உலகினர்க்கு விளங்க விளக்கின ரென்பதுமாகிய அவரது பெருமையை முன்மொழிந்துகொண்டா ரென்பது கூறப்பட்டது. (௩)

நாயனார் இருவகைச் செல்வத்தின் பயன்கோள்பவ ரேனல்.

ஏரின் மல்கு வளத்தி னால்வரும் எல்லை இல்லதோர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யாரடி யார்தி றத்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடு பயன்கொள்வார்.

(எ - ள்.) பல ஏரினால் உழுதலைச்செய்யும் உழவின் வளத்தினால் விளைந்துவரும் அளவில்லனவாகிய ஒப்பற்ற தானியச்செல்வமும், நீர்வளமிக்க கங்கையைத் தரித்திருக்கின்ற சடையுடையாராகிய சிவபிரானது அடியார்திறத்தில் (கூட்டங்களில்) குறைவில்லாமல் ஒழுங்குபட நிறைந்த சிறப்பில் மேம்பட்ட அன்பின்திறமெல்லாம் திருத்தமாக அமைந்துள்ள சிந்தையும், இவ்வுலகின்கண் நிரம்ப அவ்விரண்டையும் அடையப்பெற்றதனால் அடையப்படும் பிரயோசனத்தை விரும்பிக்கொள்வாராயினர் என்பதாம்.

மற்றவைபெற்ற நீடுபயன் விரும்பிக் கொள்வார் எனக்கூட்டுக.

எல்லையில்லதோர் செல்வம் - ஏனைய தொழில்முறைகளால் வராதென்பார் ஏரின் மல்கு வளத்தினால் வரும் என்றார். எனவே,— * "பலகுடைநீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர், அலகுடைநீழலவர்" என்று பெருநாவலர் கூறியவாற்றானறிக. அஃதாவது:— உழுதற்றொழிலான் நெல்லினை யுடையாராகிய தண்ணளியுடையோர் தாமிருக்கும் நாட்டினையாளும் அரசர் குடைக்கீழே பலவேந்தர் குடைநிழலின்கண்ணுள்ள மண் முழுதினையும் வாழும்படிச் செய்வர். இதனால் உழுதற்றொழிலுடைய வேளாளரை ஓர் அரசன் அடைந்திருப்பானாயின், அவர் அவ்வரசனுடைய ஆளுகையில் ஏனைய அரசர் வசமாயிருக்கும் பூமிமுழுவதும் வந்து சேரும்படிச் செய்வர் என்று கூறியதென்க.

இங்ஙனங் கூறியதனால் போந்தபொருள் யாதெனின்! எல்லாப்பொருளும் விளைவது பூமிஎன்பதும், அப்பூமியில் அவ்வப்பொருள்களைக் காலமறிந்து விளைவிப்போர் உழுதற்றொழிலையுடைய வேளாளர்கள் என்பதும், அவ்வேளாளரை ஓரரசன் ஒருபொருளையுந் தேடாது, அவர்களையே தான்தேடும்பொருளாக எண்ணித் தேடி அவர்களைப் பாதுகாப்பானாயின் அவர்கள் எல்லாப்பொருளையும் அவனுக்குள்ள பூமியில் உழுதலைச் செய்து விளைவிப்பாரென்பதும், அங்ஙனம் விளையும்பொருளை எந்நிலத்தவருங் கொள்ளத் தங்கள்தங்களுக்குள்ள பொருள்களைக் கொடுப்பதோடு நிலங்களையும் இவர்வசமாக்குவா ரென்பதுமாம்.

அங்ஙனமான அளவில்பெருமையுடைய வேளாளர்குலத்தில் அவதரித்தன ராகலான், அவரது செல்வத்தின் அளவு அளவுபடாததென்னும் அச்சிறப்புத்தோன்ற ஏரின்மல்கு வளத்தினல்வரும் எல்லையில்லதோர் செல்வமுமென்றார்.

* திருக்குறள்: அதி - உழவு. செ - ௪.

வேதங்களிற் கூறப்படும் அறநெறிகளைக் காக்குங் கடப்பாடுடையார் அந்தணரென்றும், அவ்வறநெறியின் வழியே ஆஜ்ஞாரூபமாகிய செங்கோலைச் செலுத்தி உலகினரைக் காக்குங் கடப்பாடுடையார் அரசரென்றும், உலகினரால் தேடப்படும் பொருளைத் தம்பொருள்போ லெண்ணி அதனைப் பெருக்கும் வழியே பெருக்கி அப்பொருளை அவர்பாலாக்கி அவர்களைக் காத்தலைத் தம்மைக் காத்துக்கொள்ளும் கடப்பா டுடையார் வைசியரென்றும், வைதிகசம்பந்தமான தருமநூல்களிற் கூறப்பட்டிருத்தல்போல் சைவசம்பந்தமான தருமநூல்களில் கூறப்பட்டுள்ள சரியைகிரியை யோகம் ஞானம் என்னும் இறைவனது மெய்ப்பணியைச் செய்வோராகிய மெய்யடியார்கள் - என்றும் அப்பணியைக் குன்றாது நடத்திவர, அவர்களை எதிர்கொண் டழைத்தலும், அவரடிமுடியிற்பட வணங்குதலும், ஆசனத்திருத்தி அருச்சித்தலும், அறுசுவையோடுகூடிய நால்வகை உண்டிகளை இடையிடையே செவியிலூட்டத்தகும் இனியசொற்சுவைகளோடு உண்பித்தலு மாகிய சிவபணியில் சிந்தையை மாறுபடாது நிலைபெறுவித்து அதனை இயற்றுவதில் கடப்பாடுடையார் வேளாளர் என்று கூறப்பட்டிருந்தலால் அக்குலதருமத்தை இயற்றுவதில் குன்றாத சிந்தையுடையவரென்னும் சிறப்புத்தோன்ற அடியார்திறத்து நிறைந்ததோர் சீர்ன்மல்கிய அன்பின்மேன்மை திருந்தமன்னிய சிந்தையும் என்றார்.

எல்லையில்லதோர் செல்வமும், அடியார்திறத்து மன்னியசிந்தையும் ஒருங்கே எய்தப்பெற்றதனால் அடையப்படும் பிரயோஜனம் தாம்கொண்டிருக்கும் அச்சிவதருமத்தை உலகினரெல்லாங் கொண்டு அதனால் அடையப்படும் பிரயோஜனத்தை யடையும்படிச் செய்வதாகலான் அவ்வேளாண்தன்மையில் விருப்பமுடையவ ரென்னும் சிறப்புத்தோன்ற - மற்றவை பெற்ற நீடுபயன்கொள்வார் பாரின் மல்க என்றார்.

இத்திருப்பாசுரத்தான், நாயனார் - எல்லையில்லதோர் செல்வமுடையாரென்றும், அடியார்திறத்து திருந்தமன்னிய சிந்தை யுடையாரென்றும், அவ்விரண்டையும் உலகினர்க்கெல்லாம் உபகரிக்கும் வேளாண்தன்மை உடையாரென்றும், அங்ஙனம் உபகரித்தலே தாம்கொள்ளும் பயனா விரும்பி உள்ளாரென்றுங் கூறப்பட்டன. (உ)

அடியவர் பூஜைமுறை கூறல்.

ஆரம் என்பு புனைந்த வையர்தம் அன்ப ரென்பதோர் தன்மையான்
நேர வந்தவர் யாவ ராயினும் நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்
தீர மென்மது ரப்ப தம்பரி வெய்த முன்னுரை செய்தபின்.

(எ - து.) தம்மிடத்து நேரும் (எதிர்ப்படும்) படிவந்த அடியார்கள், எக்குலத்தவராயினும் எந்நெறி யுடையவராயினும், என்பினை ஆரமாகப்பூண்ட இறைவரது அன்பர்கள் என்று எண்ணவரும் அந்த வொப்பற்ற தன்மையினால், தம்மிடத்து என்றுமுள்ள அடியார் பத்தியானது, முற்பட்டுவந்து எதிர்கொண்டுசென்று, அவர்கள் எதிரே கைகுவித்துநின்று, அவர்கள் திருச்செவியிலே புகும்படியாக, குளிர்ந்த மென்மையாகிய மதுரமொழிகளை, இன்பங்கூற முன்னே கூறி, அதன்பின்னர் என்பதாம்.

பஞ்சபூதமயமாகிய உலகம் - கடவுள் ஒருவன் உண்டென்பதனை உணரவிரும்புவார்க்கு அதனை உணரும் வகையாகக் காணப்பட்டுள்ள அரியபொருள். அஃதாவது,- தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலை என்றும் உடைத்தாய் இவ்வுலகு காணப்படலால் இச்செயல் செய்வான் ஒருவனுளனாதல்வேண்டுமென் றுணரவருவதேயாம்.

" அஃதேபோல்,—ஐயறிவோடுகூடி தோற்றமுதலிய முத்தொழிற்படும் அறிவுடைய உயிர்கள் - ஆணவாதி மலங்கள் உண்டென்பதனை உணரவிரும்புவார்க்கு அவற்றின் இயல் எல்லாம் உணரும்வகையாக உணரநிற்கும் அரியபொருள்கள். அஃதாவது:—உயிர்

கள் - அவனவனதுவாய் எதிர்ப்பட்டு முன்னிலையாய் நிற்கவரும் உருவங்களிடத்து முனைத்துவந்து அவைகளைப்பற்றவரும் அவ்வவ்வறிவிடத்து ஆணவமலத்தையும், அவ்வுயிர்களுருவங்களைச் சுட்டிப் பற்றியபின்னர் அவ்வழியாய் வேண்டுதல் வேண்டாமை அந்நிகழ்ச்சியில் முனைத்துவந்து சுகதுக்கானுபவங்களைப் பற்றவரும் அவ்வச்செயல்களிடத்துக் கன்மமலத்தையும், அவ்வனுபவங்கட்கு உட்பட்டபின்னர் அவைகட்கு இடங்கொடுப்பதாகிய அவ்வத்தனுகரணங்களிடத்து மாயாமலத்தையும் உணரநிற்பனவாம்.

அல்லதூஉம் - மாயாமல சம்பந்தமுள்ள தனுவாதிகளோடும், கன்மமல சம்பந்தமுள்ள செயலோடும், ஆணவமல சம்பந்தமுள்ள அறிவோடும் கூடியிருக்கின்ற அவ்வுயிர்கள்-உயிர்க்குயிராய் உள்ளிருக்கும் சிவனுருவத்தை உணரவிரும்புவார்க்கு அவ்வுருவத்தினியலை உணரும்வகையாக உணரநிற்பனதாம் அடையாளப் பொருள்களுமாம்.

சிவவுருவத்தின் இயல் யாதெனின்,—அன்பெனப்படுவதாம். அன்பு என்பது யாதோவெனின்,—மெய்யரும்புதல், விதிர்விதிர்த்தல், கைகளைத் தலைமேல்வைத்துத் தடுக்க அறியாத கண்ணீர்ததும்பல், வெதும்பல், உள்ளம் பொய்தவிர்ந்துப் போற்றல், என்பு நெக்குருகல் முதலியபலவாம். இங்ஙனமான வழியான் மனவாக்குக் காயங்கள் உருக வருமாயின் அவ்வுயிர்களையே சிவன் தன்னுருவமாகக்கொண்டு வாழ்கின்றவனும். ஆகலின், அவ்வன்பை உணர்தற்குநிற்பது உடம்போடுகூடிய உயிர்கள் என்க. இனி இங்ஙனமான அன்பினை உடம்போடு கூடியிருக்கின்ற உயிர்கள் காட்டாவாயின் அவை உயிர்களன்றாம். ஆனல், தோலாற் போர்த்திருக்கப்பட்ட என்பினலாகிய உடம்பென்னும் சுமையைச் சுமக்குஞ் சுமையாட்களாம். அவர்கள் வாழ்கின்றனரேயெனின், அவ்வாழ்க்கை*வற்றல் மரம் தளிர்த்தற்று. எனவே,—வலிய பாலநிலத்தின்கண் வற்றல் மரம் தளிர்த்தாற்போலுமாம். வற்றன்மரம்போல் என்றதனால், என்பில்லாத வுடம்பை வெயில் காய்ந்தாற்போல, மரம்போன்ற அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் காயும்.

அறக்கடவுள்காயும் வற்றல்மரம் என்றுசொன்னல் அவர்கள் இடத்தானும், செல்வபபொருளானும், ஏவல்செய்வோரானும், மற்றவைகளானும் கூடியிருக்கப்பட்டவராகக் காணப்படுகின்றார்களே எனின், அவற்றான் பெறப்படும் பயன் அவர்களுக்கின்றாம். மற்றென்னெனின் "அரிசனம்பூசி மாலை அணிந்து பொன்ஆடை சாத்திப், பரிசனம் பின்புசெல்லப் பாரகர் பரிக்கக்கொட்ட, வரிசின்னம் ஊதத்தொங்கல் வந்திடவுணர்வு மாண்டு,பெரியவர் பேச்சும் இன்றிக் கிடத்தலாற் பிணத்தோடொப்பர்" என்று சிவஞானசித்தியிற்கூறியபடி பயன்படுமாறு இல்லை என்க.

இதுகாறும், அசேதனமாகிய உலகம் - கடவுளை ஒருவன் உளன் என்பதைக்காட்டும் ஓர் அடையாளப்பொருளெனவும், சேதனமாகிய உயிர் - அசத்தாகிய பாசத்தின் இயல்களையும், சத்தாகிய சிவத்தினது உருவமாய் முத்திசாதனமாய் விளங்கும் அன்பினையும், உணர்தற்கான ஓர் அடையாளப்பொருளெனவும், அன்பின் உருவம் இத்தன்மைத்து எனவும், அன்புடையாரே உயிர்களெனவும், அன்பிலாதார் என்பைப் போர்த்திருக்கும் உடம்புகளெனவும், அன்போடு பொருந்துவதற்கு வந்தது உடம்பென்றுணராது, புறத்துறுப்புக்களை யுடையவராயிருப்பவர் அவ்வுறுப்புக்களாற் பெறும்பயனைச் சிறிதும் பெறாரெனவும் கூறிப்போந்த உண்மைகளை யெல்லாம் நன்குணர்ந்த பெரியோர் இந்நாயனார் ஆகலின், அன்பு உடையரல்லாதாரை உயிர்களெனவும், அவ்வுயிர்கள் கூடியிருக்கும் உடம்பை உடம்பெனவும், அவர்கள் கொண்டிருக்கும் இடம் பொருள் ஏவல்கள் பயனுடையன எனவும் எண்ணாதவராய், அன்பினை உடையவரே உயிர்கள் எனவும், அவர்களுடைய உடம்பே உடம்பெனவும், அவர்களுடைய இடம் பொருள் ஏவல்களே

* "கூடிக்கூடி உன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா, வாடிவாடி வழியற்றேன் வற்றல்மரம்போல் நிற்பேனே" எனவரும் திருவாசகத்தானறிக.

பயனுடையன எனவும் எண்ணி, மெய்யரும்பல் கண்ணீர் அரும்பல் முதலிய மெய்யன் பின்தன்மை எவரிடத்திற் காண்கின்றனரோ, அவர்களே சாதித்தன்மை குலத்தின் தன்மை பிறப்பின்தன்மை ஒருங்கே எய்தப்பெற்ற சைவசீலர்கள் எனவும், 'இச்சீலர் களைத்தான் தமதுடைப்பாகச் சிவன்கொண்டிருப்பான் எனவும் தெளிந்து, அவர்களுக்கே தாம் எக்காலத்தும் மறவாது கொண்டிருக்கும் பத்தியைச்செலுத்தும் நியதியுடையராய் முற்பட்டுவரும் தன்மையரென்பார் ஆரா் அன்பு ! நிறைந்த ஐயர்தம் அன்பர் என்பதோர் தன்மையால் நேரவந்தவர் யாவராயினும் நித்தமாகிய பத்திமுன் கூரவந்து என்றார்.

ஆணவமலத்தின் தன்மையைக் கெடுத்தவர் என்பார் எதிர்கொண்டு என்றார். கன்மமலத்தின் செயலைத் தடுத்தனர் என்பார் கைகள் குவித்துநின்று செவிப்புலத்து ஈரம் மென் மதுரப்பதம் பரிவெய்த முன் உரை செய்து என்றார்.

இதனால் ஆணவத்தின் தன்மைகெடுக்க அறியாதார் - அடியாரையும் அறியார், அவரையும் எதிர்கொள்ளார் என்பதும், கன்மமலத்தின் செயலைத்தடுக்க அறியாதார் கைகுவித்து நிற்றல்முதலிய செயல்களைச்செய்ய அறியார் என்பதும் அறிவுறுத்தினமை காண்க.

அன்பின்தன்மை அன்பரிடத்து அறிவது ஒழிந்து, அறம்வளராதார்க்கும், பாவந் தேயாதார்க்கும், அறியாமைநீங்காதார்க்கும், அழிதன்மாலையவாய இம்மைமறுமை இன் பங்களில் உவர்ப்புத் தோன்றாதார்க்கும், பிறவித்துன்பங்கள் தோன்றாதார்க்கும், வீட் டின்கண் ஆசையுண்டாகாதார்க்கும், பிறவிக்குக் காரணமாகிய பயனில் முயற்சிகளை யுடையார்க்கும், யோகமுயற்சி இல்லாதார்க்கும், மெய்யுணர்வு பெறாதார்க்கும், அகப் பற்றும் புறப்பற்றுமாகிய இருவகைப்பற்றும் விடாதார்க்கும் கூறியுள்ளனவாகிய சாதி யொழுக்கம் குலவொழுக்கம் பிறப்பொழுக்கங்களை அறிதல் சிவதருமநெறியில் நிற்போ ராகிய அடியார்களுக்குக் கூடாவாதலான் நேரவந்தவர் யாவராயினும் ஐயர்தம் அன் பர் என்பதோர் தன்மை அறிவாரென்று அறிவுறுத்தியதென்க.

இதனை, "சாதிகுலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதம(அன்பு)இலி நாயேனை" எனவும், 'பேதைகுணம் பிறர் உருவம் யான் எனதென் று உரைமாற்றி' என வும், கூறிய திருவாசகத்தான் உணர்க.

என்பை ஆரமாகப்புனைந்ததை "நங்காய் இதென்ன தவம் நரம்போடெலும்பு அணி து, கங்காளந் தோள்மேல் காதலித்தான் காணேடீ, கங்காளமாமாகேள் காலாந்தரத்து இருவர், தங்காலஞ்செய்யத் தரித்தனன்காண் சாழலோ" எனவரும் திருவாசகத்தான் உணர்க.

இதனால்,அன்போடு இயைவதற்குத்தந்த என்பைக்கொண்டு அரிபிரமர்கள் அன் போடு பொருந்தாதொழிந்தமையான் தன்னடியிற்கூட்டி ஐயிக்கியநிலையில் நிறுத்தாது, அவர்கள் அன்பற்றநிலையை யாவருங்காண தமது அங்கத்தில் என்பாகிய அங்கத்தை ரென்க. (௫)

கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத் திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்துளார்.

(எ - து.) தம்முடைய வீட்டின்கண்ணே, அவ்வடியார்களை அழைத்துக்கொண்டு வந்து, உள்ளேநுழைந்து, தாமரைமலர்போலும் பிரகாசிக்கின்ற அவர்கள் பாதங்களை நீராற்கழுவி, அதன்பின்னர் உள்ளத்துள் நிறைந்துவரும் ஆசையினால் அரிய ஆசனத்

தில் எழுந்தருளி யிருக்கும்படிச்செய்து, மலர்களைக்கொண்டு அருச்சனையாதி பூஜைகளைச்செய்து, அதன்பின்னர் உண்பன தின்பன நக்குவன குடிப்பனவாகிய நால்வகை உணவுகளையும், கைப்பு தித்திப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு என்றெண்ணப்பட்ட அறுசுவைப் பதார்த்தங்களையும் திறமாகச்செய்யுந் திறத்தினால் செய்யப்பட்ட அவைகளைப் பரிகலத்திற்படைத்து, மஹாதேவனுடைய ஒப்பில்லாத அவ்வடியார்கள் இச்சையின்படியே திருவமுதுகொள்ளும்படி செய்துவருவாராயுள்ளவர் என்பதாம்.

எப்படும் மமகாரத்தைத் தன்னில் நின்றும் நீக்கினர் என்பார்—கொண்டு வந்து மனைப்புகுந்து எனவும், இருவினைகளையும் பற்றறக் கழுவினர் என்பார்—குலவு பாதம் விளக்கியே எனவும், இருவினையின்வழி உழன்றுதிரியும் மனத்தை ஒருநெறிப் படுத்தினர் என்பார்—மண்டு காதலின் ஆதனத்திடை வைத்து எனவும், அதுகாறும் மனத்தினால் விளைந்திருந்த சங்கற்பகோடிகளெல்லாம் பிறவிக்கு இடம் செய்யாவண்ணம் அவரடிக்கீழ்ப்படுத்தினரென்பார்—அருச்சனை செய்து என்றும், தம்மை உண்பனவாகிய விடயத்தோற்றங்களையும், அத்தோற்றத்தின் வழியாய்த் தம்அறிவைத் தின்பனவாகிய சுகதுக்கங்களையும், அச்சுகதுக்க அனுபவங்களில் வைப்புத்தோன்றாது அவைகளில் மாறிமாறி உழன்று உழன்று நக்கச்செய்யவல்ல ஆசையினையும், அவ்வாசை வழியே தம்மை முற்றுங் குடிப்பனவாகிய சிற்றின்பத்தையும் நால்வகை உணவாக உண்பித்தனர் என்பார் பின் உண்டி நால்வகைத்திறத்தில் எனவும், சிற்றின்ப நுகர்ச்சியின்கண், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றுச் சுவைப்பதாகிய ஐவகைச்சுவையும், இவ்வைவகைச் சுவைகளையும் தனித்தனி அறிந்து சுவைப்பதாகிய ஒர்சுவையும், ஆகிய அறுவகை அறிவின் சுவைகளையும் அறுசுவையாக உண்பித்தனர் என்பார் - ஆறு சுவைத்திறத்தினில் அமுதுசெய்ய அளித்துளார் எனவுங் கூறினர்.

தேவரில் ஒருவனாகவும், மூவரில் ஒருவனாகவும் கூறப்படினும், அஃதேபோல் அவன் நிற்கப்பெறினும், போகிகளாகிய தேவர்கள் தங்கட்குரிய போகம் அவன்கொள்ளும் போகவடிவத்தாலன்றி அமையப்பெறுமையான் தேவரில் ஒருவனாகாமையும், அரிக்கும் அயனுக்கும் அடியும் முடியும் அறியப்படாமையான் மூவரில் ஒருவனாகாமையும் வெளிப்படலால் ஒப்பிலா அண்டர்நாயகர் என்றார்.

தேவரில் ஒருவனாகாதவனுமாய், மூவரில் ஒருவனாகாதவனுமாய் நிற்கும் ஒப்பிலா அண்டர்நாயகன் தம்மோடொன்றாயெண்ணப்பட்டும், ஒப்பாய் உடனிருக்கப் பெற்றும் உள்ளார் தொண்டராகலின் அப்பெரியோர்கள் தம்மால் படைக்கப்படும் நால்வகையுண்டியிலும், அறுசுவைத்திறத்திலும் இச்சைமீதூர்ந்து உட்கொள்ளச்செய்தல் பெரிய ஆற்றல் என்பார் - தொண்டர் இச்சையில் அமுதுசெய்ய அளித்துளார் என்றார்.

ஆணவத்தின் தன்மையைக் கெடுத்ததுபோலும், கன்மமலத்தின் செயலைத் தடுத்ததுபோலும் தொண்டர் இச்சையில் அமுதுசெய்விக்கும் திறமுடையவர் என்றதனால் மாயாமலத்தின் மயக்கினையுங் கடந்தாரென்று அறிவுறுத்தியவாறும் ஆயிற்று.

இதனால்,—மாயாமலத்தின் மயக்கைக்கடக்க அறியாதார், அடியார்க்கு இவ்வாறான அமுதுசெய்யவல்லரல்லர் என்பதும் கூறப்பட்டது.

இரண்டு திருப்பாசுரத்தானும், நாயனார் அன்பின்தன்மை உணர்ந்தவரென்பதும், அவருக்கு நேரவருகின்ற அடியார்களும் அன்பின்தன்மை உடையவர்களே என்பதும், அவ்வன்பர்கள் மும்மலங்களையும் கழுவினவராகலின், அவர்கள் வழியானே மும்மலப்பற்றுக்களையுங் களைந்து சுத்தராமவண்ணம், அவர்களை எதிர்கொண்டழைத்துவந்து மனையுட்புகுந்து, பின்னர் ஆசனத்திருத்தி அருச்சித்து அதன்பின்னர் அவர்கள் இச்சைகொண்டு உண்ணும்படி அமுதளித்தனர் என்பதும் கூறப்பட்டன. (௫)

அடியவர் பூஜையால்வரும் செல்வத்தின் பெருமை கூறல்.

ஆளு நாயகர் அன்ப ரானவர் அளவி லாருள மகிழவே
நாளு நாளுநி றைந்து வந்து நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளு மாநிதி யின்ப ரப்பு நெருங்கு செல்வ நிலாவியெண்
தோளி னார்அள கைக் கிருத்திய தோழ னாரென வாழுநாள்.

(எ - து.) தம்மைஆளும் நாயகராகிய சிவபிரானுடைய எண்ணிறந்த அடியார்கள், நாள்தோறும் கூட்டம் கூட்டமாகவந்து, உள்ளமகிழும்படியாகத திருவமுது உண்டு வந்த சிறப்பினால் உண்டாகிய சிவபுண்ணிய மிகுதியினால், பொன் மணி முதலிய பெரியசெல்வங்களின் தொகுதி எங்குங்காண விளங்கிற்று. அதனால், எண்தோளனாகிய இறைவன் அளகாபுரிக்கு அதிபதியாகவைத்த குபேரனென்று சொல்லும்படி வாழ்ந் திருந்தனர். அங்ஙனம் வாழ்ந்திருக்குநாளில் என்பதாம்.

இத்திருப்பாசுரத்தான், தம்மைநோக்கி வருகின்ற அன்பர்களை நாடோறும் காத்து வருகின்றவரது வாழ்க்கை நல்குரவான் வருந்திக் கெடுமாறில்லை. எனவே, அதனாற் பொருள் தொலையாது மேன்மேல் கிளைக்குமெனவும், முகம் இனியனாய்த் தக்கஅன்பி னரை உபசரிப்பவனது இல்லத்தின்கண் திருமகள்மனமகிழ்ந்து வாழாநிற்கும் எனவும், முன்னே அன்பினரை உண்பித்துப் பின் மிக்கதனைத் தான்உண்பவனது விளைநிலத் திற்கு வித்திடுதலும் வேண்டுமோ வேண்டா எனவும் கூறியுள்ள * மெய்யுரைப்படி நாயனார் அளவிலாத அன்பர்கள் மகிழுமாறு தமதில்லத்தின்கண் நாடோறும் விருந் தோம்பி வந்தனரெனவும், அந்நெறியின் நன்மையால் பொன் மணி முதலிய நிதியின் பரப்புகளெல்லாம் நெருங்கிநிறைந்தன எனவும், அச்செல்வவிசேடத்தால் இறைவனது தோழனாகிய குபேரனைப்போல் வாழ்ந்திருந்தனரெனவும் கூறப்பட்டன.

அல்லதூஉம், செல்வமிகுதி வேண்டுவோர் அன்பர்கள் அளவில்லராய் தம்மில்லத் தின்கண்வந்து நால்வகையுணவோடு அறுசுவைத்திறங்களால் உண்டருளல்வேண்டும் என்னும் நல்லெண்ணத்தை யுடையராதல் வேண்டும் என்றுங்கூறப்பட்டது. (ரு)

செல்வ மேவிய நாளில் இச்செயல் செய்வ தன்றியு மெய்யினால்
அல்லல் நல்குர வான போதினும் வல்ல ரென்றறி விக்கவே
மல்லல் நீடிய செல்வ மெல்ல மறைந்து நாடொறு மாறிவந்
தொல்லை யில்வறு மைப்ப தம்புக உன்னினார் தில்லை மன்னினார்.

(எ - து.) தில்லையின்கண் நீங்காதிருக்கின்ற இறைவனார், (நாயனார்) செல்வமெல் லாம் நிறைந்திருக்கப் பெற்றகாலத்தில் அடியார்களுக்கு அமுதளித்துப் பூஜித்தலாகிய அருட்பணியைச் செய்வதேயல்லாமல், துன்பத்தைவிளைவிக்கும் வறுமைவந்து பொருந் தியகாலத்திலும், தமக்குள்ள உண்மை என்னும் நிதியினால் அவ்வடியார் பூஜையைச் செய்ய வன்மையுடையவரென்று(அன்பர்களுக்கெல்லாம்)அறிவிக்கும்பொருட்டாகவே, வளப்பத்தில் மிகுந்த செல்வங்களெல்லாம் நாள்தோறும் சிறிது சிறிதாக மறைந்து, அறிவின் நிலைமையைத் திரிந்துபோதலைச் செய்யவல்லதும், விரைந்துவருந் தன்மை யுடையதுமான வறுமை அவர்பால் பதமாகவரத் திருவுளத்தில் எண்ணினாரென்பதாம்.

தில்லைமன்னினார், செல்வமேவியநாளில், இச்செயல்செய்வது அன்றியும், அல்லல் நல்குரவானபோதினும், மெய்யினால் வல்லர் என்று அறிவிக்கவே, மல்லல் நீடிய செல் வம், நாடொறும் மெல்லமறைந்து ஒல்லையில் வறுமை மாறிவந்து பதம்புக உன்னினார் எனக்கொண்டு கூட்டுக.

* திருக்குறள்—விருந்தோம்பல்.

செல்வம் நல்குரவு என்பன - ஈண்டு அறிவினது உண்மை யின்மைகளைக் குறித்து நின்றன. எனவே,—பொருளுடைமை - செல்வமுடைமை என்றும், அப் பொருளின்மை - வறுமை என்றும் குறித்தனவன்று. நுண்ணிய அறிவுடைமையே - செல்வமுடைமை என்றும், நுண்ணிய அறிவின்மையே - வறுமை என்றும், குறித்தமையாம். இப் பொருள்தோன்றவே - * "அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார், என்னுடைரேனும் இலர்" என்று கூறப்பட்டிருக்கின்றமை காண்க.

ஆகவே, நாயனர் அழிவிலாமையும், மாறுபடாமையும் உடைய மெய்ச்செல்வமாகிய எல்லாம் உடைய அறிவுடைமையை உடையவரென்பார் - செல்வமேவிய நாளில் இச் செயல் செய்வதன்றியும், அல்லல் நல்கூர்ந்து ஆனபோதிலும், மெய்யினில் வல்லர் என்றார்.

இவ்வுண்மையை அறியும் நுண்ணிய அறிவிலார்க்கும், அரன்பால் அன்புடைய அறிவுடையார்க்கும், அவ்வுண்மையை அறிவித்துய்விக்க, இறைவன் எண்ணினர் என்பார் - அறிவிக்க என்றார். எனவே, நாயனர்செய்யும் அடியவர்பூசை தமக்குள்ள செல்வத்தைநோக்கிச் செய்பவராயின் வறுமைவந்தகாலத்து அப்பூசையும் வறுமைப்பட்டொழியும். வறுமையினுஞ் செல்வத்தினுங் குன்றாது என்றும் ஒருநிலையதாயிருக்கும் அறிவுடைமையாற் செய்பவர் என்று அறிவிக்க என்க.

அளவிலா அன்பர்கள் அமுதுண்டு மகிழ்ந்த மகிழ்ச்சியினுல் அதிகரித்துவந்த பெருஞ்செல்வமன்றி, நல்வினையான் வந்த செல்வமன்றாகலான், அச்செல்வத்தினை மறைக்கத் தீவினைநினைந்ததில்லை, இறைவனே நினைந்தார் என்பார் † தில்லைமன்னினர் உன்னினர் என்றார்.

சிவானுக்கிரகத்தான் வருஞ் செல்வத்தை அடியார்மாற்ற எண்ணுவாராயின் அச்செல்வம் அக்கணமே அழியுந்தன்மையுடைத்து. அடியவர் தமதுள்ளமகிழ்ச்சியினுல் வந்த செல்வத்தை இறைவனுலும் மாற்றல் அரிதென்பார் - மல்லல்நீடிய செல்வம் மறைந்து என்றார். அச்செல்வம் மறையவேண்டுமென்று இறைவன் எண்ணினராயினும் அது உடனே மறைந்துபோதற்குத் துணியவில்லையென்பார் நாடோறும் மெல்ல மறைந்து என்றார்.

செல்வம்நீங்க வருங்காலத்து விரைந்துவரத்தக்க வறுமையானது,நாயனர்பாலுள்ள செல்வம் உடனே போதலொழிந்து நாடொறும் மெல்லமறைந்து போகும் காரணம் என்னையோவென்று தானும் அச்சமுற்று ‡ "இன்மை யெனவொருபாவி மறுமையும் இம்மையும் இன்றி வரும்" என்றாற்போல நாம் அவரது இன்பநிலையைக்கெடுக்கும் பாவியாகாது அவரிடத்துப் போதலைமாத்திரம் எண்ணிப் போவோமென்று அவர்பால் மாறிப் பதமாய்ப் போனதென்பார்-ஒல்லையில் வறுமை மாறி வந்து பதப்பு என்றார்.

இத்திருப்பாசுரத்தான், நீரிற் சுருட்டு நெடுந் திரைபோன்ற செல்வத்தைக் கொண்டு நாயனர் அடியவர்பூஜை செய்தவரன்று, நல்வினை தீவினை என்னும் இருவினையுட்படாத தமது மெய்யறிவென்னும் அழிவில் செல்வத்தாற் செய்தவரென்றும், அவர் பெற்றுள்ள செல்வம் அடியவர் பூஜையால் வந்த செல்வமாகலின், நல்வினையால் வரும் செல்வத்தை மாற்ற விரைந்துவரும் இயல்பினையுடைய வறுமை அவர்பாலுள்ள செல்வத்தை மாற்றஅஞ்சி, பதமாய் மாற்றவந்ததென்றும், அங்ஙனம் வரும் வறுமைக்கு அஞ்சி அவரதுசெல்வம் விரைந்து போனதில்லை என்றும், நிலையாயிருக்கவேண்டிய செல்வம் மெல்லமெல்லப் போகவும், விரைந்துவரத்தக்க வறுமை பதமாய்வரவும் தில்லைவாணன் நினைத்ததனுலேயன்றி அவைகளே அச்செயல் செய்வன அன்றென்றும், இங்ஙனமான செயலைச்செய்ய இறைவன் நினைத்தது நாயனருக்காகவன்று, அறிவுடையார் இவ்வுண்மையை யுணர்ந்து வறுமையால் வருந்தாது, மெய்ச்செல்வமாகிய

* திருக்குறள். அதி - அறிவுடைமை. செ - கா.
† திருக்குறள். அதி - நல்குரவு செ - உ.

மெய்யறிவுடையாராய், செல்வ வறுமைகளால் தட்டுப்பட்டுழலாத் என்றும் அடியவர் பூஜையைச்செய்து அளவில் செல்வத்தைப்பெற்று வாழவே யாமென்றும் கூறப் பட்டன.

மெய்யினால் என்றதற்கு - நுண்ணிய உணர்வாகிய செல்வமென்றும், செல்வம் நாடொறும் மெல்லமறைந்து என்றதற்கு - அச்செல்வம் அறிவுடை அடியார்களால் வந்த தாகலின், அடியாராகிய அவரைவிட்டுத் துணிந்து மறைவதற் கில்லாமல் மெல்ல மெல்ல மறைந்தென்றும், இதனுள் மறைந்து என்னும்சொல்லுக்கு - செல்வம், இவரை விட்டுப் போதல் என்பது இல்லாமல் இவரிடத்திலேயே மறைந்திருக்கச் செய்தனரென் றும் பொருள்கொண்டாம். நல்குரவு என்றது - அல்லல் நல்குரவு என்றது அதன் கொடுமை தோன்ற. எனவே, * "இன்மையின் இன்னாதது இயாதெனின் இன் மையின் இன்மையே இன்னாதது" அஃதாவது,—ஒருவனுக்கு வறுமைபோல் கொடி தானது யாதென்று கேட்டால், வறுமைபோலக் கொடிதானது வேறொன்றில்லை. என்ற குறட்பாவானறிக. (௩)

செல்வம்சுருங்கியும் பணி சுருங்கியதில்லையெனல்.

இன்ன வாறு வளஞ்சு ருங்கவும் எம்பி ரான்இளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குதல் இன்றி யுள்ளன மாறியுந்
தன்னை மாறியி றுக்க வுள்ள கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறில் திருப்ப ணிக்கண் முதிர்ந்த செய்கைய ராயினார்.

(இ - ள்.) இவ்வகையாகச் செல்வங்களும் செல்வத்தாலுண்டான வளப்பங்களும் சிவபிரானால் நாளுக்குநாள் மறைந்துவரவும், இளையான்குடிமாறர் என்னும் எமது பெருமானாகிய தலைவனார், தமது மனம் அன்பினில்நின்றுஞ் சுருங்குதலில்லாதவராய், தம் மிடத்திலுள்ள பொருள்களையெல்லாம் விற்றும், தம்மை விற்றும் கொடுக்கத்தக்க தகுதி யான கடன்களை வாங்கிக்கொண்டும், முன்செய்துவந்த அடியார்பூஜையாகிய திருப்பணி யில் ஒருசிறிதும் மாறுபடுதலில்லாமல் அவர்களுக்குச் செய்யவேண்டிய உண்டி விட யத்தில் ஊக்கப்பாடுடைய முயற்சியுடையவராய் பின்னரும் செய்துவருவா ராயினார் என்பதாம்.

இறைவனது சங்கற்பத்தால், விரைந்துவரத்தக்க வறுமையானது விரைந்துவரா மலும், அடியார் பூஜையில் அவர் கொண்டிருக்கும் இன்பத்தைக் கெடுக்க எண்ணாம லும், பதமாய்ப் புகப்புக வறுமைவரின் போவதாகிய பெருஞ்செல்வமானது போகா மல் நாடோறும் மறைந்துவருதலுமான செயலில் செல்வ வறுமைகள் நின்றன என்பார் இன்னவாறு எனவும், மறைந்துபோகும் செயலிலே முனைத்துநின்ற செல்வமானது மறையத் தலைப்பட்டமையான், பதமாய்ப் புகத் தலைப்பட்ட வறுமையானது புகும் முயற்சியில் முனைத்துநின்று புகப்பெற்றமையான் செல்வத்தினால் உண்டாயிருந்த ...ங்களெல்லாம் குறுகிப்போயின என்பார் வளம் சுருங்கவும் எனவும், † "இலன் என்னு- எவ்வம் உரையாமை ஈதல், குலனுடையான் கண்ணே யுள" அஃதாவது - யான் வ...ியன் என்று வறுமையான் சொல்லவரும் இழிவான சொல்லை, தான் பிற ரிடத்துச் ...சொல்லாமையும், அந்த இழிவான சொல்லைத் தன்னிடத்துச் சொன்னவர்க் குத் தான் ...டையின்றிக் கொடுத்தலும் இவையிரண்டும் நல்லகுடியிற்பிறந்தவனிடத்தே உண்டாவன ...வாம் என்று கூறியபடி இளைக்கும்படியான வறுமைவந்தகாலத்தும் ஈத லில் இளைக்...த நல்லகுடியிற்பிறந்த தலைவரிற் சிறந்தவர் இவர் என்பார் இளையான் குடிமன்னன் ம...றன் எனவும், இந்நூலாசிரியர் யானும் அத்தன்மையுடைய வேளாண் குலத்திலே பிற...ந்து இப்புராணத்தைச் சொல்லவரும் புண்ணியம் உடையனானேன் என்பார் எம்பி...ரான் எனவும், குடிவகையினாலே வறுமைவந்தகாலத்தும் இல்லை என்று

* திருக்குறள். ...ல்குரவு. செ - க. † திருக்குறள். அதி - ஈகை. செ - ரு.

சொல்லும் இழிவான சொல்லைச்சொல்ல அறியாதவர், அறிவுடைமை என்னும் பெருஞ் செல்வமும் உடையராய் இருக்கின்றமையான், இவர் மனஞ்சுருங்கி இல்லை என்பதைத் தான் சொல்லத்துணியாரேயன்றி, ஈதலுக்கான செயல் எத்திறத்தனவாயினும் அவை யெல்லாம் செய்வதில் மிகத் துணிவும் மனவிரைவும் உடையவர் என்பார் - மனஞ் சுருங் குதல் இன்றி உள்ளனமாறியும், தன்னைமாறி யிருக்கவுள்ள கடன்கள் தக்கன கொண்டு எனவும், தம்மிடத்துள்ள பொருளை மாற்றியும் தன்னை அரசதண்டனைக்கு உட்படுத் தவுமான கடன்களைக்கொண்டது, முன் செல்வமுடைமையிற் கொண்டிருந்த மஹேசு வரபூஜை செல்வம்சுருங்கிய பிற்காலத்தும், அப்பூஜைகள் மாறுதலில்லாமல் செய்யவே என்பார் - முன்னைத் திருப்பணியின் மாறில் (செய்யவும்) எனவும், அவர் அறிவு சிற்றறிவாயும், சிற்றின்பத்திற் கேதுவாகிய பொருட்செல்வத்தில் முனைத்துநிற்கும் இயல்புடையதாயும் இருப்பின் செல்வஞ்சுருங்கியகாலத்து அவர்செய்யும்பணி குன்றும்; அவர் அறிவு - பேரறிவாயும், பேரின்பத்திற் கேதுவாகிய அருட்செல்வத்தில் முனைத்து நிற்கும் இயல்புடையதாயும் இருத்தலின், அவர் பெற்றுள்ள அறிவும் சுருங்குதலின்றி அவர்பணியும் மாறுபாடுதலின்றி பெருகுந்தன்மையில் தளராது அதிகரித்தன என்பார் - முதிர்ந்தசெய்கையராயினர் எனவுங் கூறினர்.

இத்திருப்பாட்டான், இவ்வுலகின்கண் * இம்மானிடப்பிறவியும், இப்பிறவிக்கே ற்ற செயல்களும், அச்செயல்களான் வரும் பொன் மணி முதலிய பல பொருள்களும், சங்கம ஆராதனை செய்வதற்கு இறைவன் கொடுத்ததேயன்றி, ஊழ்வகையான் வரும் செல்வ வறுமைகளுக்கேற்ற செயல்களைச் செய்வதற் கன்றென்பதைத் தெள்ளிதின் உணர்ந்த பெரியோராதலின், வறுமையான் வரும் துன்பத்திற்குத் தன்னைவைத்திருக்க எண்ணாது, தன்னையும் மாறியிருக்கவுள்ள தக்க கடன்கள்கொண்டு, தமக்குக் குன்றாத மகிழ்ச்சியைக் கொடுக்கவல்ல மஹேசுவரபூஜையில் மகத்தான முயற்சியை யுடையவ ராய்த் தம்மை யிருக்க வைத்தனர் என்று கூறப்பட்டது. (எ)

இறைவன் தபோதனராய் வருதல்.

மற்ற வன்செயல் இன்ன தன்மைய தாக மாலய னுனவக்
கொற்ற ஏனமும் அன்ன மும்தெரி யாத கொள்கையர் ஆயினார்
பெற்றம் ஊர்வதும் இன்றி நீடிய பேதை யாளுடன் இன்றியோர்
நற்ற வத்தவர் வேடமே கொடு ஞால முய்ந்திட நண்ணினார்.

(எ - து.) செல்வஞ்சுருங்கி கடன்கள் மேலிட்டும், அவை மேலிடுந்தோறும் அன்பு மேலிட்டும், அன்பு மேலிடுந்தோறும் அடியார்பூஜை மேலிட்டும் வருவதாகிய செய்கை யில் ஊக்கமுடைய நாயனார்தன்மை இங்ஙனமாகவிருக்க, திருமால் பிரமனுகிய அந்த வெற்றிப்பாடுடைய வராகமும் அன்னப்பட்சியும், அடியும் முடியும் தெரிந்துகொள்வ தற்குக் கூடாத கொள்கையை உடையவராய்நின்ற அவ்விறைவனார், இடபத்தின்மேல் ஊர்ந்துவருவது மில்லாமல், பேதைத்தன்மையை ஒருநாளும் மறவாத உமாதேவி உட னிருப்பதும் இல்லாமல், ஒப்புசொல்வதற்குக் கூடாத நல்ல தவத்தினையுடைய அடி யார் வேடத்தையே கொண்டு, இவ்வுலகெல்லாம் உய்யும்பொருட்டு நாயனாரது வீட் டிற்கு எழுந்தருளினர் என்பதாம்.

நாயனாருக்கு இயல்பான குடியின்வண்மையான் முன் அமைந்துள்ள செல்வ னது அன்பென்னும் முளையை வெளிப்படுத்தி நாளுக்குநாள் முதிர்வித்துத் தழைவி அருள் என்னுங் கனியைத் தோற்றுவித்து, கனிவிக்க அடியார்பூஜை என்னும் பிளை எங்கும் அரும்பச்செய்தது. பின், அணுயவந்த வறுமையானது அவ்வரும்ப

* "மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயத்து, ஆனிடத்து ஐந்துமாடும் அரன்பணிக்காக வன்றோ" எனச் சிவஞானசித்தியாரில் அருளின்மைகாண்க.

மலர்வித்து பிஞ்சாய்க் காயாய்க் கனியாய் வளரச்செய்தது; இவையன்றி வேறு பழி பாவங்களுக் கிடஞ்செய்து புகழ் அறங்களைக் கெடுத்ததில்லை என்பார் - மற்றவன் செயல் இன்னதன்மையராக என்றார்.

மெய்யுணர்வினையுடையா (வாலறிவ) ன் என்றும், அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர்நினைந்த வடிவோடு விரைந்து சேருகின்றவன் என்றும், ஒரு பொருளையும் விரும்புதலும் வெறுத்தலும் இல்லாதவன் என்றும், மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை என்னும் இரண்டுவினைகளும்சேராதவன் என்றும், கூறப்படு வனவாகிய இறைமைக்குணங்களை இயல்பாகவுடைய இறைவன் வேறொருவன் உளன் என்னும் உண்மையுணராது, அவைமுற்றவும் தாமே உடையரென அரிபிரமர்கள் கருத, அக்கருத்தினால் அவர்களைப் பன்றியாயும் பட்சியாயும் போகச்செய்து, எழுத்துக்களெல் லாம் அகரத்தை முதலாக உடையனபோல் உலகங்களெல்லாம் பகவானாகிய தன்னை முதலாக உடையன என்னுங் கொள்கையைத்தெரியாவகைசெய்த அரிய கொள்கை உடையவரென்பார்-கோற்ற ஏனமும் அன்னமுந்தெரியாதகோலமுடையாரீர் என்றார்.

ஆதிபகவானாகிய அவ்விறைவன், அறங்களெல்லாவற்றையும் தனக்கு வடிவாக வுடைய அறவாழி யந்தணனாகலின், நாயனாரது அறத்தின் மிகுதியைக்கண்டு விரைந்து அருள்செய்யக் கருதி, தனக்கு இன்றியமையாத துணையாயுள்ள தேவியையும், எழுந் தருளுவதற்கு இன்றியமையாத ஊர்தியையும் மறந்து புறப்பட்டு வந்தனரென்பார், பெற்றம் ஊர்வதும் இன்றி, நீடிய பேதையாள் உடனின்றி நண்ணினார் என்றார்.

நாயனார் - திருவேடத்தையே கண்டு சிவனெனமகிழும் இயல்புடையராகலினா னும், அவ் வேடமுடையாரே சிவத்தினரென எண்ணும் திண்ணிய அறிவுடைய ராகலினானும், அவ்வேடத்தையே தாமும் மகிழ்கூர்ந்து கொண்டனரென்பார் - நற் றவத்தவர் வேடமேகொடு என்றார்.

கண்டு தருமரூபமாகிய விடையை - விடை என்னாது பெற்றம் (பசு) என்றது - தருமதேவதை நாயனார்பால் மிக்க இரக்கங்கொண்டதென்னுங் குறிப்புத்தோன்றவும், வறுமை என்னும் அசுத்தம் அவரைச் சாரவண்ணம் சுத்தஞ் செய்யவேண்டுமென்று எண்ணியதென்னும் குறிப்புத்தோன்றவும், அஃதேபோல், அம்பிகையை, தேவி என் னாது - பேதையாள் என்றது - நாயனார்பால் தாய்போல் அன்புடையளாயினள் என் னும் குறிப்புத் தோன்றவும், அவர்பால் வறுமையென்னும் ஒருபாவி வந்து விட்டனனே அவன் அவரை என்னபாடுபடுத்துவானோ என்று மனங்கலங்கினாள் என்னும் அக்குறிப் புத்தோன்றவும் கூறியவாறுமென்க.

திருமால் வராகவடிவங்கொண்டு அடியைக் காணாதவராயினும், பிரமன்போல் பொய்யுரைகூறாது காணாத உண்மையைக்கூறி, பொய்யை வெற்றிகொண்டனராகலா னும், இறைவனும் வெளிப்பட்டகாலத்து அவரடிபணிந்து அவ்விறைவனால் இவ்வுல கில் திருக்கோயிலும் பூஜையும் யாவரானும் வழிபடுந் தலைமையும் பெற்றனராகலானும், கோற்ற ஏனம் என்றார். கொற்றம் - வெற்றி, தலைமை.

டத்த செல்வ வறுமைகளிற்பட்டு நீங்காதுழலும் அவ்வுழப்பு நீங்கி, அறிவுடைமை நத்தான் -என்னும் பெருஞ்செல்வமுடையராய் அடியார் பூஜையை எக்காலத்தும் நீங்காதவராய் டண்டாவல ந்துபோம்வகையை உலகினர் உணரத் திருவுளத்து எண்ணினார் என்பார் - ஞாலம் யில் இளைத்திட என்றார்.

நடிமன்னன்
குலத்திலே ட முற்றுணர்வுடையான் தனது கணவன் ஒருவனே யென்று வேதாகமங்களெல் என்பார் எட் கூறுதலால், அத்தகைய சொல், தான் பேதமையுடையவள்போல் என்றும் ... சாலன்றி நிலைபெறுதாகலி னும், அங்ஙனம் அச்சொல் நிலைபெறும்படிச் செய்
* ஊாக்குறு

யானாயின் * "தகைசான்ற சொற்காத்து" என்று சொல்லப்படும் கற்பிலக்கணம் தன் மாட்டு நிலைபெறு தாகலினானும், அச்சிலமுடைமை உணர்வார் உணர, சிவசந்நிதானத்தில் அங்ஙனம் இருப்பவர் என்பார் - நீடியபேதையாள் என்றார்.

நாயனார்பால் வறுமைவந்தபோது அது அவரது அழிவிலா அறத்தைக் கெடுக்குமாகலின் அவ்வறங் கெடாவண்ணம் நடத்த அறக்கடவுளாகிய விடை அக்கணமே சென்றதென்னும் பொருள்தோன்ற பெய்யும் அங்கில்லாது போயிற்றென்றும், அவ்வறுமை அவருள்ளத்தில் துன்பஞ்செய்யத் தலைப்படுமாகலின் அது தலைப்படாவண்ணம் அருளுருவாகிய அம்பிகை அவருள்ளத்தில் அக்கணமே புகுந்தாளென்னும் அவ்வருமைதோன்ற பேதையும் அங்கிலாது போயினாள் என்றும் பொருள்படுமாறு காண்க.

இத்திருப்பாசுரத்தான், "செல்வமென்னும் அல்லலிற் படாமலும், நல்குரவென்னும் தொல்விடம் எறுமலும் பிழைத்து, தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி, அத்தெய்வத்தின்பால் அன்புடையராய் அடியவர்பூஜையை பசுமரத்தாணி யறைந்தாற்போலக் கைக்கொண்ட நாயனாரது அரிய செயலால் இறைவன் ஊர்ந்துவரும் இடபத்தையும் விட்டு, பிரியாநங்கையாகிய உமாதேவியையும் விட்டு, தவவேடங்கொண்டு அவர்பால் மிக்க ஆவலுடன் வந்தாரென்றும், அவரினும் விரைவாய் தருமரூபமாகிய விடபமூர்த்தியும், அருளுருவாகிய அம்பிகையும் சென்றனரென்றுங் கூறப்பட்டன. (அ)

வேறு.

நாயனார் எதிர்கோள்ளல்.

மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்ல மடைத்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன்.

(எ - து.) (தவவேடத்தனாய் இறைவன்வந்தது எந்தக்கால மென்றால்) மழைக்காலத்தில் ஓர்நாள் இராப்பொழுதில், பொறுத்திருப்பதற்குக் கூடாத பசியானது மேற்கொண்டு வருத்த, அதனை அடக்கிக்கொண்டு, புறத்து வாசக்கதவைத் தாளால் அடைத்து உறக்கமற்று நாயனார் இருந்தகாலத்தில், (மேலேசொல்லிய தவவேடத்தர் அடைத்த கதவினைத் தட்ட) தேன்சிந்தும் மாலையையணிந்த அந்நாயனார், (கதவைத்தட்டிய ஓசையைக்கேட்டு யாரோ விருந்தினர் வந்தார் என்று) மிக்கஆவலுடனும் விரைவுடனும் வந்து கதவைத்திறந்து எதிர்கொண்டு உள்ளே எழுந்தருளவேண்டும் எழுந்தருளவேண்டுமென்று அழைத்துக்கொண்டு போயினர் என்பதாம்.

இத்திருப்பாசுரத்தான், ஊர்ந்துவரும் விடையுமின்றி, பாங்கில்வரும் பார்வதியாருமின்றித் தனியாய்த் தவத்தினராய் இறைவன் வந்தகாலம் மழைக்காலத்தில் ஓர்நாள் இரவில் என்றும், அவ்விரவில் நாயனார் உணவின்றிப் பசியினால் மிகவருந்தி புறக்கதவைத் தாளிட்டு, உறக்கமுமின்றி இருக்கும் சமயமென்றும், அச்சமயத்தில் தாளிட்டிருந்த கதவை இறைவன் தட்டினாரென்றும், தட்டியவோசையைக்கேட்டு நாயனார் அடியார் யாரோவந்தாரென்று விரைந்துவந்து கதவினைத் திறந்து அடியவரைக்கண்டு அகமகிழ்ந்து, எல்லாம் உடையார்போல் எதிர்கொண்டு உள்ளே அழைத்துக்கொண்டு வீட்டுக்குள்ளே வந்தாரென்றுங் கூறப்பட்டன.

மாரிக்காலம் என்றது - நாயனாருக்குக் கருணைமழை பொழியவந்தகாலம் எனவும் இரவுஎன்றது—†"தெருளிடத்து அடியார்சிந்தையுட் புகுந்தசெல்வமே சிவபெருமானே இருளிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்" என்றருளியபடி இறைவனைப்பிடிக்

* திருக்குறள். அதி - வாழ்க்கைத்துணைநலம். செ - சு. † திருவாசகம் பிடித்தபத்து-சு.

குழ் அவ்விரவெனவும், வைகி என்றது - * பாசகாரியங்களுக்குச் செயலின்றி அருணாகிய சந்திரோதயப் பிரகாசத்தில் தங்கிஇருக்கும் பொழுதில் எனவும், தூரிப்பிணிப் பசி தலைக்கொள்வது:என்றது † "பத்திலனேனும் பணிந்திலனேனும் உன் உயர்ந்த பைங்கழல் காணப், பித்திலனேனும் பிதற்றிலனேனும் பிறப்பறுப்பாய் எம்பெருமானே, முத்தனையானே மணியனையானே முதல்வனே முறையோ என்று, எத்தனையானும் யான்தொடர்ந்து உன்னை இனிப்பிரிந்து ஆற்றேனே" என்றும், "உரியேன் அல்லேன் உனக்கடிமை உன்னைப்பிரிந்து இங்கு ஒருபொழுதும், தரியேன் நாயேன்" என்றும், இறைவன் அருள்கூடஎண்ணி வருந்துவதாகிய அப்பசி தலைக்கொண்டது எனவும், பாரித்து இல்லம் அடைந்தபின் என்றது—"காணுமதொழிந்தேன் நின்திருப்பாதம் கண்டு கண்களிகூரப், பேணுமது ஒழிந்தேன் பிதற்றும் அது ஒழிந்தேன் பின்னை எம்பெருமானே, தாணுவே அழிந்தேன் நின் நினைந்து உருகும் தன்மை என்புன்மைகளால், காணுமது ஒழிந்தேன் நீ இனிவரினும் காணவும் நாணுவனே" என்று இங்ஙனம் கூறிவந்த முறைப்படி சிவனது உருவங்களாகிய அடியார்கூட்டங்களை மிகப்பெருக்கமாக வரக்கண்டு அவர்கள்பாதங்களையும் கண்டு களிப்பதுமுதலிய செயல்களுக்கு அமைந்துள்ள செல்வம்சுருங்கப்பெற்ற நான் நீ என்பால் யாதுகாரணத்தாலோ கொண்ட கருணைவிசேடத்தான் இச்சமயம் வரப்பெறினும் உன்னை எவ்வாறுகாண்பேன்,எனவே அடியார்கள் வழிபாடுசெய்யப் பெறின் உன்னைக் காணப்பெறுவேன். அது சுருங்கியபடியினால் காணப்பெறேன், என்று கதவைத் தாளிட்டனரெனவும், விரைந்து எதிர்கொண்டனன் என்றது ‡ "மோருந்து ஒரொருகால் நினையாதிருந்தாலும், வேறுவந்து என்னுள்ளம் புகவல்ல மெய்ப்பொருளே" என்று தேவாரத்தில் அருளியபடி, நாயனார் கதவடைத்து அடியார்க்கமுதளித்தலாகிய பணி கைகூடாதிருப்பதை எண்ணிஎண்ணி ஏங்கிய ஏக்கம் அகல இறைவன் அடியராய்வந்து கதவைத்தட்ட, அடியவர் வந்தாரென்று அக்கணமே ஏக்கமெல்லாம் ஒழிந்தவராய், மிக்க ஊக்கங்கொண்டு கதவைத்திறந்து, எதிர்கொண்டனரெனவும் பொருள்கொள்ளக் கிடக்கின்றன.

பண்புற - என்றது. ஆவலும், விரைவுமாம். எதிர்கொண்டனன் என்றது - தூரத்தே வருகின்றவரைப்போலும் எண்ணி வருக, வருகவென்றழைத்தலுமாம். (க)

மனைவியைப் பசிதீர்க்க வினவுதல்.

ஈர மேனியை நீக்கி இடங்கொடுத்
தார வின்னமு தூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென்னென.

(எ - து) (உள்ளே அழைத்துக்கொண்டு போனபின்னர்,) மழையினால் நனைந்திருக்கும் அவ்வடியாரது திருமேனியை வஸ்திரங்கொண்டு துடைத்து, அவர் குளிரால் வருந்துதற்கில்லாத ஒருநல்லிடத்தைக் கொடுத்து, (பின்னர் அவர் கொண்டிருக்கும் ஆராப்பசியைக் கண்டு அந்தோ! பசித்திருக்கின்றனரே இதற்குநாம் என்செய்யக்கடவோமென் றேங்கி அவருக்குற்ற பசியை) நல்ல அமுதூட்டிப் போக்கவேண்டும் என்னும் ஆசையைமேற் கொண்டவராய் அமுதூட்டுவதற்கு, தனது மனையாளைப் பார்த்து, நம்பால்வந்த இத் தவச்சிரேஷ்டர், அடங்காப் பசியுடையவராக விருக்கின்றார். (இவரது பசியைக் கண்டு நாம் சும்மாவிருப்பது நலமாகுமா?) இதற்கு நாம் செய்யத்தகும் செயலெது? நீ சொல்லுவாய் என்று வினவினர் என்பதாம்.

இன்று ஒருசிவனடியாரைக் காணப்பெறாது ஒழிந்தோமே என்று மனத்தின் கண் கொண்டிருந்த கவலையை ஒழித்தவரது திருமேனி மழையினால் நனையப்பெற்று நடுக்க

* பாசகாரியங்கள் - ஓய்ந்து ஒடுங்குங்காலம். திருவாசகம். † திருவாசகம் எண்ணப்பதிகம் ‡ சுந்தரமூர்த்திகள் தேவாரம்.

முடையதா யிருக்க, நாம் காணலாமோவென்று தம்மிடத்துள்ள ஆடையாற் போக்கினு ரென்பார் - ஈரமேனிநீக்கி எனவும், அன்பென்னும் நீர்நிறைந்த நிலைவென்னும் தடா கத்தில் மலர்ந்திருக்கும் தமது இருதயகமலத்தில் அடியார் அடிகளை இருந்துவாழ இடங்கொடுத்திருப்பவர் அன்று அவ்வடியார்க்குத் தமதுள்ளமேயன்றி, புறத்திலுள்ள வீட்டிடத்தையுந் தந்தனரென்பார் - இடங்கொடுத்து எனவும், * "அப்பனே எனக்குஅமு தனே ஆனந்தனே அகம்நெக உள்ளுறுதேன், ஒப்பனே, (எனக்கூறும்) உனக்குரிய அன்பரில் உரியனாய் (யான்) உனைப்பருக நின்றதோர் துப்பனே" நீ பசித்திருக்கின் றனையே, என்னை நீ உண்ணும் உணவாகக் கொள்ளுதற்கு உரிமையாவனோ, நான் எங்ஙனம ஆவேன்! ஆகேன் என்று அவர் திருமுக நோக்கிக்கூறிப் பின் அவரது ஆறாப் பசியையாற்ற இனிய ஆகாரத்தை ஆசையால் ஊட்ட எண்ணினு ரென்பார்- ஆசையால் ஆர இன்னமுது ஊட்டுதற்கு எனவும், அவர் ஊட்டஎண்ணிய அமுது தன்மனையாளை யன்றி அமையா தாகலான் அதுநோக்கி மனையாளை விரைந்துபார்த்தனர் என்பார் - தூய பாதனைநோக்கி எனவும், நாயனார் மிகவிரைவுடன் தம்மைநோக்கிய நோக்கின் குறிப் புணர்ந்த மனைவியாரிடத்து, தாம் அமுதூட்டஎண்ணிய ஆசையைக் குறிப்பான் உணர் த்த, என் அன்புடையாளே! இங்குவந்த இப்பெரியோர், பசியினல்வாடி யிருக்கத்தக்கவ ரன்றே? இவரைப்போலும் தவத்தின்மிக்கார் ஒருவருமிரார், இங்ஙனமான அரியபெரி யோரை நாம் காணப்பெறுவோமோ! காணப்பெற்ற புண்ணியமுடைய நாம் இவரது பசியைத் தீர்க்க வேண்டும்: அதற்கேற்றசெயல் இப்போது எதுசெய்யத்தக்கதோ அதனை நீ எண்ணிச் சொல்வாயாக என்பார் - தபோதனர் தீரவேபசித்தார் செய்வது என்னோ எனவுங்கூறினார்.

இத்திருப்பாசுரத்தான், மழையில் தமது வீட்டைநோக்கிவந்த அடியவரை உள்ளே அழைத்துக்கொண்டு வந்தபின்னர், அவரது திருமேனி நீரால் நனைந்திருப்பதைக்கண்டு, மனம்சகியாது ஆடையால்துடைத்து, உள்ளே ஓரிடத்தில் இருக்கச்செய்து, பின் அவருக்கு அமுதூட்ட ஆசைகொண்டு, அவ்வாசை முற்றுப்பெறுமாறு, தமது இல்லா ளைப்பார்த்து இத் தபோதனர்க்கு அமுதூட்டவேண்டும்; இதற்கு இப்போது என்ன செய்யலாமென்று வினவியதைக் கூறப்பட்டது. (௩0)

நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாமின் னடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ங னேயணங் கேயென.

(எ - து.) (அங்ஙனம் வினவியதன்றி மீண்டும்) தெய்வத்தன்மைவாய்ந்த நங்கையே நமது வீட்டில் உணவென்பது நமக்கு முன்னமே இல்லை. (அத்தன்மைத்தான வறு மை நம்மிடத்தில் குடிகொண்டதாயினும், இவ்வடியவர் இமயமலையரையன் குலத் துதித்த பூங்கொடிபோன்ற உமாதேவியை ஓர்பாகத்திலுடைய சிவபெருமானுக்கு மிக வும் இனிமையாயுள்ளவர். (சிவபிரானுக் கினியராகிய இவ்வடியருக்கு) நாம் இனிமை யாகிய உணவைத் தகுதியாகச் சமைக்கும்வகை எப்படி என்று கேட்டனர் என்பதாம்.

நாயனார்,—"தபோதனர் தீரவேபசித்தார் செய்வது என்னை" என்று மனைவி யாரைக் கேட்டபோது, அவர் தமது நாயகர் தமக்குற்றிருக்கும் வறுமையை மறந்தவரா யிருக்கின்றா ரென்றும், அதற்குக் காரணம் தபோதனரைக் காணப்பெற்ற அருமையால் என்றும், அவ்வருமையால் இன்றுகாறும் அடியார்கள் தம்மிடத்தில் உண்டு களித்தி ருக்க, அவர்களைக்கண்டு களிக்கும் புண்ணியமுடைய நாம், இன்று இவ்வரிய தபோத னர் பசித்திருக்கக் காண்போமாயின் இளையான்குடிமாறன் என்னும் நமது பெயர்

* திருவாசகம் சதகம். செ ௩அ.

என்றுமென்றும், எண்ணிய ஏக்கத்தால் அவர்பசியை மாற்றும்வகை தமது அறிவில் தோன்றாமல் நம்மைக்கேட்டனர் என்று நினைக்கின்றாரென்றும் பின்னர் †"இல்லவள் மாண்பானால் (நற்குண நற்செய்கைகளை உடையவளா யிருந்தால்) இல்லாதது ஒருபொருளும் இல்லை" என்று கூறப்பட்டிருத்தலால், "செய்வது என்னென" என்று அவர் நம்மைக் கேட்டனரே, அதற்கு நாம் செய்வதைச் சொல்வதா! செய்வதற்கு என்ன இருக்கின்றது ஒன்றுமில்லை என்று சொல்வதா! என்செய்ய எப்பொருள் இருக்கின்றது? என்று சொல்லுவோமாயின், † பெண்ணிற் பெருந்தக்கயாவுள, என்னும் மெய்யுரை நம்பால் பொய்யுரையாமன்றோ என்று எண்ணுகின்றாள் என்றும், மனைவியாரது குறிப்புணர்ந்து முன்பு இங்கு நாக்கு உணவில்லை என்பதை யான் மறந்தேனல்லேன் என்றும், அல்லனாயினும், நம்மை வாட்டுகின்ற பசி அவரை வாட்ட அதனால் மிகவும் அவர் வாடுகின்றாரே! அவர் நம்மைப்போன்றவராயின் நம்மைப்போல அவரும் பசியினால் வருந்தலாம். இவ்வடியவர் இமக்குலக் கொடியாாகிய பார்வதிபாகரே மிக்க இனியவராகக் காணப்படுகின்றார். ஆகலான் அவர்க்கு எவ்வகையினாலாவது நாம் இனிய அமுதூட்டவேண்டுவது அவசியம், அதற்கேற்ற உபாயத்தை†"மனைத்தக்க மாண்பு உடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத்துணை" என்றதனாலும் நீ அணங்காதலானும் இப்போதுள்ள அளவுக்குத்தக்கபடி அமுதளித்தற்கு ஏற்ற உபாயம் உனக்குத் தோன்றும், அவ்வுபாயத்தை சிறிது எண்ணிச் சொல்வாயென்று மீளவும் கேட்டனரென்று இப்பாசுரத்தாற் கூறப்பட்டன. (௧௧)

மனைவியார் இன்மைகூறி உபாயங்கூறல்.

மாது கூறுவள் மற்றொன்றும் காண்கிலேன்
ஏதி லாரும் இனித்தரு வாரில்லை
போது வைகிற்று போமிடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயலென்று.

(௱ -) (சமைக்கும்வகை எப்படியென்று நாயனார் மனைவியாரைக்கேட்டபோது) அவ்வம்மையார் நாயனாரைநோக்கிச் சொல்லுகின்றார். அடியாருக்கு அமுதுபடைப்பதற்கான பொருள் ஒன்றேனும் நம்மிடத்தில் இருப்பதாக யான் கண்டேனில்லை. (நம்மிடத்தில் இல்லாதொழியினும்) கடன்கொடுக்கவாவது யாராவது உண்டோவென்று எண்ணிப்பார்த்தால் இனி ஒருவருமில்லை. (யாவருங் கடன்கொடுத்தவர்களே) வேறு யாராவது உண்டோவென்று பார்க்கவேண்டுமானாலும் நல்ல நடுராத்திரியாயிற்று, (அதனால்) இச்சமயத்தில் போகத்தக்க இடம் ஒன்றேனும் இல்லை. (இவ்வாறு) இல்லையென்று சொல்லும் கொடிய தீவினையுடைய எனக்கு உம்முடைய வேண்டுகோளின்படி செய்வதற்கான செயல் யாதிருக்கின்றது என்று கூறி என்பதாம்.

"தபோதனர் தீரவேபசித்தார் செய்வது என்னென" என்றும், "இமக்குலக் கொடிப்பாகர்க்கு இனியவர் தமக்கு, இன்னடிசில் தகவுற அமைக்குமாறு எங்ஙன்" என்றும் இரண்டுமுறை வினவிய வினாவிற்குத் தாம்-மற்றொன்றுங் காண்கிலேன் என்றும், இனித் தருவாரில்லை என்றும், போமிடம் வேறில்லை என்றும் மும்முறை இல்லையென்று சொல்லும் பாவமுடையவளாயினனே, இனி இன்னசெயல் உளதென்று சொல்லும் அணங்காகும் புண்ணியமுடையவளாவனோ என்று உள்ளம் வருந்தினாரென்பார் - தீதுசெய்வினையேற்கு என்செயல் என்றார்.

இத்திருப்பாசுரத்தான், அம்மையார் - தமது நாயகரைநோக்கி, ஒருமுறைக்கு இருமுறை "செய்வது என் அமைக்குமாறு என்" என்று அடியாரைக் கேட்டபோதினும், "செய்வதற்கும், அமைப்பதற்கும்" நம்மிடத்தில் ஒருபொருளுமில்லை, இதுகாறும்

† திருக்குறள். அறி - வாழ்க்கைத்துணைநலம். செ - ௫. ௬. ௧.

கடன்கொடுத்தவர் இனிக்கொடுப்பது மில்லை, புதிதாய் கடன்கொடுப்பாருமில்லை. ஆகலான் நம்மிடத்தில் இல்லை என்பதுதான் உள்ளது; உள்ளதென்பது இல்லை ஆகவே தீவினையேற்குச் சொல்லும் சொல்லும், செய்யும் செயலும் என்னையுள என்று கூறுரென்று கூறப்பட்டன. (கஉ)

செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலும் ஆகுமற்
றல்ல தொன்றறி யேனென் றயர்வுற.

(எ - து.) (எனக்கென்ன செயலிருக்கின்றது என்று சொல்லிய மனைவியானவர் மறுபடியுங் கூறுகின்றார்.) நமதுபசித்துன்பம் நீங்கும்பொருட்டு, இன்றுபகல் நாற்றிடுவதற்கு சம்பாநெல் விதைத்திருக்கின்றோ மல்லவா, அந்நெல், தண்ணீரில் ஊறி முளை தோன்றியிருக்கும். அந்த வளப்பம்பொருந்திய நெல்முளையை ஓர் கூடையில் வாரிக் கொண்டுவந்தால், அதனை எனக்குத் தெரிந்தஅளவில் சமைக்கவும் ஆகும். இந்தவகையன்றிப் பிறிதொரு வகையை யான் அறியமாட்டேன் என்று கூறித் துன்பப்பட்ட பொழுது என்பதாம்.

உளதென்றுகூறும் அணங்கு நல்லள் இலதென்றுகூறும் தீதுசெய்வினையேன் என்று கூறிய கடுமொழியைக் கேட்டநாயனார், வறுமையான் வந்தடுக்கும் பசி நம்மோடொழியாது, இமக்குலக்கொடிபாகர்க் கினியவராகிய இத்தபோதனரிடத்தும்சென்று வருத்துகின்றதே, நம்மிடத்தும் அவரிடத்தும் வந்து வருந்தச்செய்யவல்ல பசி, எவ்வகையான் மாற்றவேண்டுமோ அவ்வகையான வுபாயங்களெல்லாம் இயல்பாகவே யறியவல்ல மனையாளிடத்தும் எனக்கு என்செயலிருக்கின்றதென்பதும், இல்லையென்பதுமாகிய கடுமொழிகளும் வந்துவிட்டனவே, இனி நாம் என்செய்யக்கடவோம். * "படமாடக்கோயில் பகவற்கு ஒன்றீயில், நடமாடக்கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா, நடமாடக்கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில், படமாடக்கோயில் பகவற்கு அது ஆமே" என்றபடி நடமாடக்கோயிலாக வுள்ள இத் தபோதனர் ஒருவர்க்கு நாம் அன்னம் படைப்போமாயின் அது இவர்க்குமாகி, எங்குமாயிருக்கின்ற சிவனுருக்கும் ஆகுமே, எனவே - இவருக்கு அமுதூட்டுவதாகிய இம் மகேசுவரபூஜை யான் சிவபூஜையும் ஒருங்கே செய்ததாக ஆகுமல்லவா? அவ்விருபூஜையும் இன்று நாம் இழக்கப்பெற்றோமோ என்றும்,—

* "தண்டறுசிந்தை தபோதனர் தாமகிழ்ந்து, உண்டது மூன்றுபுவனமும் உண்டது" என்றபடி இவ்வொருவருக்கு அமுதுபடைப்போமாயின் வறுமையால் மகேசுவரபூஜை குன்றியதென் றெண்ணியவருத்தம்போய், மூன்றுலகத்தார்க்கும் படைத்தோம் என்று பெருமகிழ்ச்சியை அடைவோமல்லவா? அப்பெருமகிழ்ச்சியையும் அடையாதொழிந்தோமே என்றும், சிந்தித்து,ஒன்றும் சொல்லஅறியாது நிற்கும் சமயத்தில், வினையேற்கு என்ற அம்மையாருக்கு அவரது சிந்தாகுலம் ஒழியுமாறும், இனிப் பிறக்கும்பிறவியல்லல் ஒழியுமாறும் திருவருளால் ஓர்செயல்தோன்றியதென்பார் - செல்லல்நீங்க என்றார்.

அங்ஙனந் தோன்றிய அச்செயல் நாயனாரால் ஆகவேண்டிய தாகலான், அவரை நோக்கி, இனிக் கவலைவிடுமின்கள், என்று தாமெண்ணிய உபாயச்செயல்களை ஒருங்கே சொல்லத்தொடங்கினாரென்பார் - பகல் (இன்று) வித்திய செந்நெல் மல்லல் நீர்முளை வாரிக்கொடுவந்தால் வல்லவாறு அமுதாக்கலும் (எனக்கு) ஆகும் என்றார்.

இச்செயல்தான் தபோதனர்பசிதீர்வதற்கும், இம்மகேசுவரபூஜை இன்று செய்வதற்கு இல்லாதொழிந்தோமே என்று தேவரீருக்கெழுந்த கவலைதீர்வதற்கும், கற்பழி

* திருமந்திரம். மயேசுரபூசை. செ - க. உ.

வுக்கிடமாகிய இல்லை என்னும் சொல்லை இன்றுசொல்லவந்த எனதுகுற்றம் ஒழிவதற்கும் இச்செயலன்றி வேறொன்றில்லை என்பார் - மற்றல்லது ஒன்றறியேன் என்றார்.

நாயனார் கவலைதீரச்சொல்லிய அச்செயலில் தனது அன்பார்ந்த கணவரது செயல் மிகுதியாயும், முற்பட்டும் இருத்தலால் அச்செயலின் வருத்தநோக்கிச் சிறிதுகவலை கூர்ந்தனரென்பார் அயர்வுறு என்றார். எனவே - நாயனாருக்குச் செயலற்று யாவும் தன் செயலாகவே முடிவதாகயிருக்குமாயின் அயர்வுறாரென்பதாம்.

இத்திருப்பாசுரத்தான், நாயனார் வேண்டியபடியே அடியார்க்கு அமுதளிக்கும் அப்பணி அவருக்குக் கைகூடுமாறு அதற்குரிய செயலைச் சொல்லி * "இல்லவள் மாண்பானல் இல்லது என்" என்றுகூறியசொல்லைத் தனக்கு மெய்யாக்கிக்கொண்டனர் என்று கூறப்பட்டது. (௧௩)

நாயனார் வயலுக்குச்செல்லல்.

மற்ற மாற்றம் மனைவியார் கூறமுன்
பெற்ற செல்வம் எனப்பெரி தும்மகிழ்ந்
துற்ற காதலி னலொருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார்.

(எ - து.) நென்முளையை வாரிக்கொண்டு வந்தால் சமைக்கலாமென்று மனைவியார் கூற அச்சொல்லைக்கேட்ட நாயனார் அச்சொல்லைத் தாம் முன்னேபெற்ற செல்வம் கிடைத்ததுபோல எண்ணி மிகவும் உள்ளமகிழ்ந்து, அம்மகிழ்ச்சியினாற் பொருந்திய ஆசையினால் மனைவியார் சொன்னதுபோல் செய்வதற்கு மனம் ஒருப்பட்டவராய், நீர் சூழ்ந்த வயலின்கண் போவதற்குப் புறப்படுவோராயினர் என்பதாம்.

† "இருநோக்கு இவள் உண் (மையுண்ட) கண் உள்ளது ஒருநோக்கு, நோய் நோக்கு ஒன்று அந்நோய்மருந்து" என்றபடி, இவள் சிற்றின்பத்திற்கு இரண்டுநோக்கு உடையாள்போல், இப்பேரின்பத்துக்கும் உடையளா யிருக்கின்றாள். இது அதிசயம் அதிசயம் என்று உள்ளத்துள் பெரிதான மகிழ்ச்சியடைந்தனரென்பார் - பெரிது உண் மகிழ்ந்து என்றார்.

அடியார்க்கு அமுதளித்தற்கான செயல் என்னிடத்தில் என்னஇருக்கின்றது என்கிற சொல்லைச் சொல்லி நமதுநெஞ்சத்தில் முற்கணத்தில் நோயுண்டாக்கிய இவளே, பிற்கணத்தில் அந்நோய் தீருமாறு, "பகல் வித்திய செந்நெல்முளை வாரிக்கொண்டு வந்தால், வல்வாறு அமுதாக்கலும் ஆகும்" என்கின்ற சொல்லைச் சொல்லி நமது மனநோயைத் தீர்த்தனளே, இச்செவிச் செல்வம், "பெண்ணிற் பெருந்தக்கயாவுள"என்றபடி முன்னமே இவளைப்பெற்ற செல்வத்தினலன்றோ என்று எண்ணினரென்பார் - மற்றுஅம்மாற்றம் மனைவியர்கூற முன்பெற்ற செல்வம் என்றார்.

மனைவியார்கூறிய அச்சொற் செல்வத்தால் தாம் செய்யஎண்ணிய மகேஸ்வர பூஜை முற்றுப்பெறும் என்னும் நிச்சயத்தான் ஆசைமீதூர்ந்து அக்கணமே அச்செயல் செய்யத்துணிந்தனரென்பார் - உற்றகாதலினல் ஒருப்பட்டு செல்லத் தொடங்குவார் என்றார் (௧௪)

வயலுக்குச்சென்றகாலத்தின்சிறப்பு.

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்
தருகு நாப்பண் அறிவரும் கங்குல்தான்
கருகு மையிருளின் கனங் கட்டுவிட்
டொருகு கின்றது போன்ற துலகெலாம்.

* திருக்குறள். அதி - வாழ்க்கைத்துணைநலம். செ - ௩
† திருக்குறள். அதி - குறிப்பறிதல். செ - ௧.

(எ - து.) (நாயனார் வயலுக்குப்போகப் புறப்பட்டபோது) மேகக்கூட்டங்கள் நெருங்கி எங்கும் நீர்மயமாய் விளங்க, விடாது மழைபொழிந்தது, (அதுவல்லாமல்) வியலினது கரையும் அதனடவும் அறிவதற்கில்லாமல் இருளும் அடர்ந்திருந்தது. (அவ்விருள் எத்தன்மைத்தாக இருந்ததோவெனின்) கருமையாகிய இருளின்கூட்டங்கள், நெக்குவிட்டு உலகமுழுவதும் உருகிப் பாய்ந்ததுபோலும் பரவியிருந்தது என்பதாம்.

வரம்பிலின்பம் உடையானாகிய இறைவன், நாயனாருக்கு அதனைக்கொடுக்க எண்ணினாராகலின், அப்பேரின்பத்திற்கேற்பப் பேரருளுஞ்செய்யத் துணிந்தனரென்னும் அவருள்ளக்குறிப்பை அன்றுண்டாகிய இருளால் அறியக்கிடக்கின்றமைகாண்க.

இதனால், முன் இன்பந்தரும் முயற்சி பின் துன்பந்தரும் எனவும், முன் துன்பந்தருமுயற்சி பின் இன்பந்தரும் எனவும் அறிக. எனவே - முன்இன்பந்தருவது - சிற்றின்பம். முன் துன்பந்தருவது - பேரின்பம். (கரு)

எண்ணும் இவ்வுல கத்தவர் யாவரும்
துண்ணெ னும்படி தோன்றமுன் தோன்றிடில்
வண்ண நீடிய மைக்குழம் பாமென்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து.

(எ - து.) (இன்னமும் அவ்விருள் எத்தன்மைத்தாயிருந்ததோ வெனின்) இவ்வுலகின்கண் அஞ்சாத அறிவுடையாரென்று மதிக்கத்தக்க யாவரும் அஞ்சும்படி இருளானது தோன்ற, அவ்விருளின் முன்னே (அஞ்சாது) செல்வாராயின், அந்தோ! இவ்விருளானது இருளன்று கருநிறமிக்க மையின்குழம்பாமென்று, அவ்விருளில் செல்வதற்குத் (துணியார்) அத்தன்மைத்தான இருளையுடைய நடுச்சாமத்தில் என்பதாம்.

இவைமூன்று திருப்பாட்டானும், நாயனார் - நீர்நிறைந்திருக்கும் வயலைநோக்கிச் செல்லத்தொடங்கினாரென்றும், அக்காலத்து, பெய்யாது கெடுப்பதாகிய மழை மற்றாங்கே எடுப்பதற்குப் பெய்துகெடுக்கத் தலைப்பட்டது என்று அதன்பெருமையும் எடுத்துக் கூறப்பட்டன.

அஃதாவது * "மடுத்தவாயெல்லாம் பகடன்னான் உற்ற இடுக்கண் இடுக்கட் படும்" என்றபடி எவ்வகைத்தான துன்பம்வரினும் அதனாலெல்லாம் துன்பமுறாது முயற்சியில் ஊக்கமுடையாரும், அஞ்சுமாறு இருட்கூட்டமானது, கட்டுவிட்டு மைக் குழம்பாய் உருகிப் பெய்வதுபோலும் இருந்ததன்றி நீராக இருந்ததன்று என்க. (கசு)

நாயனார் வயலையடைந்தது.

உள்ளம் அன்புகொண் டூக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினார்
வள்ள லாரிளை யான்குடி மாறனார்.

(எ - து.) (அத்தன்மைத்தான நடுராத்திரியில்) இளையான் குடிமாறநாயனாராகிய வள்ளலாரது உள்ளத்தில் அன்பானது பந்தித்துக்கொண்டு செலுத்த, பெரிய ஒரு கூடையை எடுத்துத் தமது தலைமறையும்படி மூடிக்கொண்டு, தாம் முன்னேசென்று சென்றிருக்கின்ற பழக்கத்தினால் பழகிய மனக்குறிப்பின் வழியாகப் பறவைகள் உறங்கும் (தமது) வயலிடத்துப் போகப்போயினார் என்பதாம்.

வள்ளலார் இளையான்குடிமாறநாயனார், உள்ளம் அன்புகொண்டு ஊக்கக்கூட்டுக.(கஎ)

* திருக்குறள். அதி - இடுக்கணழியாமை. செ - ௪.

நாயனார் நெல்முளைவாரி வருதல்.

காலி னால்தட விச்சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி யிடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர்.

(எ - து.) (நாயனார் மனக்குறிப்பினால் வழியை அறிந்தவராயினும்,) இது நாம் செல்லும் வழிதானோ அல்லவோ வென்று) காலினால் தடவித்தடவி வயலிற்சென்று, நீர்வெள்ளத்தின் வழியே ஒதுங்கிப் போயிருக்கின்ற சம்பாநெல்லின் வெள்ளிய முளைகளைச் கைகளாற்சேர்த்து வாரி, மேலே கவிழ்த்துக்கொண்டுவந்த பெரியகூடையில் நிறைத்து அக்கூடையைத் தலைமேல்வைத்துச் சுமந்துகொண்டு (நேரமாய்விட்டதே என்று) அதிசீக்கிரமாக வீட்டுக்குத்திரும்பினார் என்பதாம்.

நீர்வழிச் சார்ந்தன(வாகிய) சாலி வெண்முளை, கைகளால் கோலிவாரி இடாநிறை யக் கொண்டு எனக்கொண்டு கூட்டுக. (கஅ)

வேறு.

விறகுகோடுத்தல்.

வந்தபின் மனைவி யாரும் வாய்தலில் நின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பி யூற்றி
வெந்தழல் அடுப்பின் மாட்ட விறகில்லை யென்ன மேலோர்
அந்தமில் மனையில் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார்.

(எ - து.) நாயனார் வீடுவந்து சேர்ந்தபின்னர், இவர் வருகையைப் பார்த்துக் கொண்டு வீட்டின்முகப்பிலே நிற்கின்ற மனைவியார் (அவரது சிரமத்தைக்கண்டு மனம் பொறுது) தலையிலிருந்த கூடையை வாங்கிக்கொண்டு, நாம் எண்ணியதுபோலும் நெல் முளை கிடைத்ததே என்று) சிந்தையில் மகிழ்ந்து மிக்கஆசையுடன் சேற்றுமயமாய்க் கிடந்த அந்தநென்முளையை நீரினால் அலம்பியூற்றி, அந்நென்முளையைப் பக்குவமாக்கிச் சமைப்பதற்கு, அடுப்பிலே தீமூட்டுவதற்கு விறகில்லையே இதற்கென்செய்வதென்று நாயனாரைக்கேட்க, அப்பெரியோர், பழையகூரையாயிருக்கும் தமதுவீட்டினுள்ள அலகினை (கொம்புகளை) அறுத்துத்தள்ளினார் என்பதாம்.

* "உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே, இடுக்கண் களைவதாம் நட்பு" அஃதாவது,—ஓர்சபையில் நின்றவனுக்கு இடையிலுடுத்த ஆடை நழுவின், அப்போதே அவனது கைசென்று அவ்வாடையை எடுத்துடுத்து, அவனது அவமானத்தைப் போக்குதல்போல், தனது நட்பாளனுக்கு ஓர்துன்பம் வருமாயின் அப்பொழுதே அதனை யொழித்தல் வேண்டுமென்பதாம். ஆகலின், வீட்டினுள்ளே யிருக்கும் நட்பாளருக்கு உண்டாயிருக்கும் பசித்துன்பத்தைத அக்கணமேபோக்க அறியாதகாம் உள்ளே செல்வதனால் பயனென்னை! என்றும், அவரது துன்பத்தைப்போக்க நமதுநாயனார் இருட்பெருக்கங்கொண்டு பெய்யும் இம்மழையிற்சென்றனரே அவரது செயல் எவ்வாறாகுமோ என்கிற ஏக்கத்தின்மிகுதியான் இது புறம்பென்றும், இவ்விடத்தில் தனித்து நிற்பது பழுதென்றும் எண்ணும் எண்ணமற்று நின்றனமரனும் அவ்வுண்மைதோன்ற மனைவியாரும் வாய்தலில் நின்று என்றார். தனது துன்பமும் அடியார்க்குற்ற பசியின் துன்பமும் ஒருங்கேயொழியுமாறு நென்முளை வாரிக்கொண்டுவந்தனரே இதுநமது பாக்கியமன்றோ என்று அதனைவற்றுக்கொண்டனரென்பதுதோன்ற - சிந்தையில் விரும்பி வாங்கி என்றார். (கக)

* திருக்குறள். அதி - நட்பு. செ - அ.

கறிக்குச் சாகமின்றெனல்.

முறித்தவை அடுப்பில் மாட்டி முளைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் அரிசி ஆக்கி ஆக்கிய உலையில் பெய்து
வெறுப்பிலின் அடிசில் ஆக்கி மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கினி என்செய் கோமென் றிறைஞ்சினார் கணவ னாரை.

(எ - து.) கற்பினிலையிலேயிருந்தமேம்பாடுடைய அவர்மனைவியார், நாயனார் வெட்டித்தள்ளிய கொம்புகளை ஒடித்து அடுப்பில் பெருந்தீயுண்டாகும்படி மூட்டி, முளைத்திருக்கும் நெல் விரையானது அரிசியாகும் பதத்தை முன்னே கொள்ளும்படியாக வறுத்து, வறுத்தபின்னர் அதனைக்குத்தி அரிசியாக்கி, நீர்வார்த்திருக்கும் உலையில் அவ்வரிசியை இட்டு, விரும்பத்தக்க இனிய திருவமுதாகச்செய்து; (அங்ஙனம் அமுதாக்கிய பின்னர்) இனி இவ்வுணவுக்கேற்ற கறிவகைகளுக்கு ஒன்றுமில்லையே இதற்கென்செய்வது என்று நாயனாரைப் பணிந்தனர் என்பதாம்.

கற்பின்மிக்கார், முறித்தவை அடுப்பில்மாட்டி எனக்கொண்டு கூட்டுக.

முன் அடியார் பசியைப்போக்க, அரிசியில்லையே என்றும், அதன்பின்னர் எரிப்பதற்கு விறகில்லையே என்றும் துன்பமுற்றோம். அவ்விருதுன்பமும் நீங்க - நென்முளையும் கூரைவீடும் இருந்தது. இன்னமும் இல்லையென்னும் துன்பம் நம்மைவிட்டுப்போகவில்லையே என்று வருந்தித்தளர்ந்தனரென்பார் கறிக்குஇனி என்செய்கோம் என்று கணவனாரை இறைஞ்சினாரென்றார். (உ0)

குழிப்பயிரைக் கோடுத்தல்.

வழிவரும் இளைப்பி னோடும் வருந்திய பசியி னாலே
அழிவுறும் ஐயன் என்னும் அன்பினில் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார்போலப் பறித்தவை கறிக்கு நல்க.

(எ - து.) (மனைவியார், கறிவேண்டி, நாயனாரைப் பணிந்தபோது, அந்நாயனார் இன்னமும் சமையல் வேலைமுடியவில்லையே) நமதுசுவாமிகள் வழிநடந்து வந்ததனாலுண்டாகிய இளைப்பினோடு, வருந்துகின்ற பசிப்பிணியினாலே ஒன்றுந்தோன்றாது மனம்நொந்து வருந்துவாரே என்று எண்ணுவதாகிய அன்பினால் (தம்மைவாட்டும் பசிப்பிணி முதலியவற்றால் பொலிவிழந் திருத்தலின்றி) மிக்கதெளிவுடையவராய் வீட்டின் புறக்கடையிற்சென்று; குழியினின்றும் வெளிவராத புன்செய்களிலிருக்கும் சிறியபயிர்களைக் கையினால் தடவித்தடவி, பழியாகிய குற்றங்களை விளைவிக்கும் பாசமுதலைப் பறிப்பவர்போல; அப்புன்பயிர்களைப் பறித்துக் கறியமுதாக்கக் கொடுத்தனரென்பதாம்.

என்செய்கோம் இல்லைஎன்னும் இக்கடுஞ்சொல் நென்முளையோடும் கொம்போடும் ஒழிந்தன என்றிருந்தோமோ, இன்னமும் இருக்கின்றனவே என்றுவருந்தி, அன்பினால் அடியவரது இளைப்பையும், பசியையும் எண்ணி மனமாற்றாது மிக்கவிரைவுடன்குழியின்கண்ணுள்ள குறிய இலைக்கறிகளைப்பறித்து கொடுத்தனரென்று அமுதுபடைப்பதிலுள்ள ஆசையை இதனால் விளக்கியவாறும். (உக)

கைத்திறத்தால் அமுதமைத்தல்.

மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிக ளாய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினில் வேறு வேறு கறியமு தாக்கிப் பண்டை
நினைவினால் குறையை நேர்ந்து திருவமு தமைத்து நின்று.

(எ - து.) நாயனர், மனமகிழுமாறு கொடுத்த கறிவகைகளை மனைவியார் வாங்கிக் கொண்டு, அவைகளைச் செய்யும்வகையெண்ணி நீரினற் சுத்தமாம்படிகழுவி, பரிசுத்த மாகிய தகுதியான பாத்திரத்திலிட்டுத் தமது கைப்பாகத்தின் திறத்தால் எண்ணியபடி வேறுவேறு விதமான கறிகளாகச்செய்து(அந்தோ! பலகறிகளைக் கொண்டு பலபலவகை யாகச் செய்வதொழிந்து, ஒருகறியையே பலவகையாகச் செய்யவும்வந்ததே இப்படியும் இருந்ததோ என்று) முன்னுள்ள செல்வத்தை நினைந்து. மனத்தில் குறையைக்கொண்டு திருவமுதைச் செய்துமுடித்து நின்றனர் என்பதாம்.

கொழுநர், மனமகிழ், தந்தகறிகள், மனைவியார், ஆய்ந்து எனக்கூட்டுக.

மனைவியார் - அவ்வபொழுது தாமவேண்டும்பொருள்களைத் தலைடகூருது கொடு த்துவந்த அருமையைநோக்கி மனககளிப்படைந்தனர் என்பார் மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் என்ருர். அவரிடத்துள்ள செல்வப்பொருள்களுக்கெல்லாம வந்தவறுமை அவரது ஆசாரசீலத்துக்கும், அவரது கைப்பாகத்துக்கும் வந்ததில்லை என்பார் - கறிக ளாயந்து புனலினைக்கழுவி தகபுன்தபாத்திரத்து கைவினைவினையினுல் வேறுவேறு கறியமுதாக்கி என்ருர்.

இதுகாறும் வந்த அடியார்களுக்கெல்லாம் அமுதுபடைப்பதில் ஆசாரமும் கைப பாகமும் குன்ருதிருந்தமைபோல் வறுமையுற்றிருக்கும் இன்றும் அவ்விரண்டும நம்மிட த்தில் குன்ருதிருக்கக்கண்டோம், முன்னிருந்த செல்வம் ஒன்றுதான் குன்றக்கண்டோம் இது என்னகுறையோ இத்தமேதனரின் பொருட்டேனும் அக்குறை நம்பால் இல்லா திருக்கலாகாதா ! என்று சிறுது குறைபாட்டை எண்ணினர் என்பார - "பண்டை நினை வினுற் குறையைநேர்ந்து என்ருர்.

வடிவுந்தனமும் மனமும் குணமும் குலமும குடியும் குடிபோகத்தக்க நம்பா லுள்ள இவ்வறுமையில் இக்கடுவிருளில் இம்மழையில் இங்ஙனமான அமுதமைக்க வந்தது அதிசயமே என்று அக்குறையகன்று மனத்தை அலையவிடாதிருந்தனர் என்பார் திருவமுதமைத்து நின்று என்ருர். (௨௨)

அடியவரைத் துயிலொழித்தல்.

கணவனர் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
இணையிலா தவரையீண்ட அமுதுசெய் விப்போம் என்ன
உணர்வினுல் உணர ஒண்ணு ஒருவரை உணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்றங் கவர் துயில் அகற்ற லுற்ருர்.

(எ - து) (அமுதாக்கிய மனைவியார்) தமது கணவனராகிய நாயனரைப்பார்த்து, (தேவரீர் ஆசைப்பட்டபடியே அடியவருக்கு வேண்டிய உணவுகளெல்லாம் ஆய்விட் டன) அவ்வுணவின் வகைகளையெல்லாம் வந்துபாருமென்று காட்டி, இவ்வமுதினை ஒப்பற்ற அடியவரைச்சீக்கிரமாக அமுதுகொள்ளும்படிச் செய்விப்போமென்று, உயிர் உணர்வினுல் சுட்டியறியக்கூடாத இறைவரைத் திருவமுது ஆனசெய்தி அறியும் வண்ணம் செய்யவிரும்பி, அவரிருக்கும் இடத்திற்சென்று சமீபித்து அவர் முன்னே நின்று, அவர்கொண்டிருக்கும் நித்திரையை நீக்கத்தொடங்கினர் என்பதாம்.

அடியவர் பசித்திருக்கக் காணப்பெற்ருேமே இதுவன்ருே பாவம்என்று வருந்திய கணவனரது துன்பமும், தீதுசெய் வினையேற்கு என்செயல் என்று சொல்லவந்த தன்ருே பாவம்என்று வருந்திய தமது துன்பமும் ஒருங்கேயொழிய உணவைச்செய்து முடித்தனராகலின் அம்மகிழ்ச்சி மிகுதியினுல் தமது கணவனரைநோக்கி நமதுவறுமை யும் ஒழிந்தது, * "அகரம் ஆயிரம் அந்தணர்க்கீயிலென், சிகரம் ஆயிரம் செய்து முடிக்கி லென், பகருஞானி பகல் ஊண்பலத்துக்கு, நிகரிலை யென்பது நிச்சயந்தானே" என்ற பிரமாணப்படி, பரமஞானியாகிய இம்மஹேசுவரரை உண்பிப்பதற்கான அமுதை

* திருமந்திரம் - மஹேசுவரபூஜை.

அமைத்து வைப்பதற்கான ஒப்பில்லாத சிவபுண்ணியம் நம்பால்வந்துவிட்டது. இனிநாம் பெறும்பேறு வேறென்னை யிருக்கின்றது, இனி அடியவரைச் சீக்கிரமாக உண்பிப்போ மென்று இன்மொழிகூறினர் என்பார் "காவலரு் தம்மைநோக்கிக் கறியமுதான காட்டி, இணையிலாதவரை யீண்ட அமுதுசெயவிப்போம் என்றார்.

"மா பரனாகிய மஹேஸ்வரர் மன்னுயிர்க்கு அருளவைப்பான், தாபர சங்கமங்கள் என்று இரண்டுருவில் நின்று பூஜைகொள்வான், என்ற சித்தாந்தங்கூறும் உண்மையில் நின்றுணரப்பெறாது, தாவரரூபத்தை மாத்திரம் சிவமாகவும், சங்கமர்களாகிய அடியவர் களை மானிடரேயாகவும் எண்ணவரும் அறிவினால் அறியக்கூடாத இறைவன் என்பார் - உணர்வினால் உணரவோண்ணு * ஒருவரை என்றார்.

இதனால், தாவரவுருவத்தைக் காண்கின்றகாலத்து அவ்வுருவத்தைச் சிவனெனவே காண்பதுபோலும், சங்கம உருவத்தைக் காண்கின்றகாலத்தும் அவ்வுருவினரைச் சிவ னெனவே காணவல்லார்க்கு உணரும்படியாயுள்ளவன் என்றுணரக்கிடக்கின்றது.

இங்ஙனமான உணர்ச்சியை இயல்பாகவே உடையாராகலின் சங்கமஉருவினராய் வந்த இறைவனுக்குத் தம்மால் முடிந்தசெயலை அணுக்கராய்நின்று அறிவித்தல் மிகஎளி தென்பார்-உணர்ந்தவே ரடி முன்சென்று அணைய என்றார். சங்கமரைச் சிவனெனவே காணுதாரிடத்து உறங்குவதுபோலும், எங்கள்பால் உறங்குவது தகுமோ! நீர்வந்து உறங்குந்தன்மையே நாங்கள் உடையோமாயின் நீர் இங்கு எழுந்தருளுவீரோ! எழுந் தருளிவந்த கருணையைப்போல், இனி அமுதுண்டருளும் கருணையுஞ் செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தலாகிய பிரார்த்தனை மொழிகளைக்கூறி அடியவரது உறக்கத்தை நீக்கத்தொடங்கினர் என்பார் "நின்று அடிக அவர்துயில் அகற்றல் உற்றார் என்றார்.

செல்லமேவியநாளில் என்பது முதல், கணவனார் தம்மைநோக்கி என்பதுஈறாகிய பதினெட்டுச் செய்யுளானும், இறைவன் நாயனார்பால் தனது அருட்சத்தியைத் திரோ தான சத்தியாய் நிகழ்த்த, நாயனார் அத்திரோதசத்தியின் வலிந்த செயல்வழியாகவே திரோதச்செயல்களின், அன்பின் திறத்தால் அருட்சத்திவசத்தராய் இறைவனைக் காணுந் தன்மையில் நின்ற முறைமை கூறிவந்தமைகாண்க

எங்ஙனமெனின்:—மறையுந்தன்மை யுடைத்தான தல்லாத செல்வத்தை மறை யச் செய்ததும், அவர்பால வருப தன்மை யுடைத்தான தல்லாத வறுமையை வரச் செய்ததும், அவ்வறுமையால் உள்ளபொருள்களை ஒற்றிவைக்கச் செய்ததும், தன்னை மாறியிறுக்கவுள்ள கடன்களைக் கொள்ளச்செய்ததும், ஓர் தாரிப்பின்றிப் பசி தலைக் கொள்ளச்செய்ததும், அவர்மனைவியார் மற்றென்றுங் காண்கிலேன், எதிலாரும் இனித்தருவார் இல்லை, போதுவைகிற்று, போம்இடம் வேறிலை, தீதுசெய்வினை யேற்கு என்செயல் ஒன்றறியேன் என்று அயர்ந்துசொல்லச் செய்ததும், வயலுக்குச் செல்லுங்காலத்து - உலகத்தவர் யாவரும் துஞ்சென்று திடுக்கும்படி மைக்குழம் பைப்போலும் இருளுண்டாகச் செய்ததுமாகிய இவை - அருட்சத்தி திரோதசத்தி யாய்ச் செய்தசெயல்களாம்.

அச்செயல்களை, பலவகையான் கடன்கள் மேலிட்டகாலத்தும், முன்னையினும் மாறில்லாமல் திருப்பணிகளில் முதிர்ந்தசெய்கையரானதும், நள்ளிருளில் கதவைத் தட்டிய அடியவரைத் தன்பசிவருத்தம் நோக்காது விருந்து வந்ததென்று எதிர்கொண்டு ஈரமேனியை நீக்கி நடுக்கமில்லாவிடத்திருத்தி, அவர்பசிக்கு மனம்வருந்தி மனைவி யாரை நோக்கி நமக்கு முன்பு இங்குஉணவில்லை யாயினும், இமக்குலக் கொடிபாகர்க் கினியவர்தமக்கு இனிய அமுது தருதிவாக அமைக்குமாறு என்னென்றுகேட்டதும்,

* தாவரவுருவத்தி னிடத்திருக்கும் சிவனே சங்கமவுருவத்தினிடத்தும் ஞகலின் ஒருவரை என்றார்.

அதற்கவர் பகல்வித்திய செந்நெல் நீர்முளை வாரிக்கொடுவந்தால் வல்லவாறு அமுதாக் கலும் ஆகும் என்றதும், அதுகேட்டு, அவர் முன்பெற்ற செல்வமெனப் பெரிதுண் மகிழ்ந்து, ஆசையினால் இருட்பெருக்கத்தையும் மழைப்பெருக்கத்தையும் போகும்வழி தெரியாத துன்பத்தையும் நாடாது, வயலில் நென்முளை வாரிக்கொண்டுவந்து மனைவி யிடத்துக் கொடுத்ததும், அடுபெரிக்கக் கூறைவீட்டைப் பிடுங்கியதும், கறிக்குக் குழிப்பயிரைபபறித்ததும், திரோதானச்செயல் அகற்றிய தாம். அவைகளைக்கொண்டு தமது கைத்திறத்தால் நல்லமுதும் நல்லபலகறிகளும் அமைத்ததும், அங்ஙனம் அமைத் தும் இவைதானே இப்பெரியோருக்குச் செய்வது என்று மனக்குறை கொண்டதும், பின்னர் இருவரும் இணையிலாதவரைச் சீக்கிரத்தில் அமுதுசெய்விப்போமென்றதும் அன்பின்திறமாம். அடியவர்முன் சென்று அவர்துயில் அகற்றி அவரெழுந்து அமு துண்ணவேண்டுமென்று அவாவுடன் நின்றதே அருட்சத்தி வசத்த ராணமென்பதாம். இனி இறைவன் நாயனார் திரோதானசத்தியால் நிகழ்ந்த அச்செயல்களினை யெல்லாம் அருட்செயலே மேவிடப்பெற்று அன்புடைமையில் திண்ணிய ராயினபின்னர் செய்த சிவானந்தச் செயல்களை மூன்று திருப்பாசுரத்தாற் கூறுகின்றார். (உரு)

சோதிவடிவங்கண்டு திகைத்தல்.

அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்ட அமுதுசெய் தருள்க என்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந் தொண்டருந் திகைத்து நின்றார்.

(எ - து.) (அடியவரை உறக்கத்தினின்றும் எழுப்பநின்ற அடியவர்,) அடியார்க் கமுதளிக்கப்பெறாத துன்பத்தில் அழுந்திக்கிடக்கும் அடியேன் அத்துன்பத்தினின்று நீங்கி உய்யும்வண்ணம் அடியேனை நோக்கி எழுந்தருளிவந்த பெரியோய், (அமுது செய்தாய்விட்டது, பசிதீரும்வண்ணம்) உண்டருளவேண்டும். (துயிலொழிந்து எழுந் திருத்தல் வேண்டும்) என்றுதொண்டனார் சொல்லியபொழுது, இறைவன் சோதி சொரூபமாய் மேலோங்கி எழுந்துதோன்றினன், அங்ஙனந் தோன்றியபொழுது, மங் கலகுணங்கள் நிறைந்துள்ள மனைவியாரும் நாயனாரும, இது என்ன அதிசயமென்று திகைத்து நின்றார்கள் என்பதாம்.

சோதியாய் எழுந்துதோன்ற, மனைவியாரும் தொண்டரும் திகைத்துநின்றார் எனவே,—மழையில் நனைந்துவந்து கதவைத்தட்டவும், ஈரத்தை ஆடையாற் போக்கவும் இவ்வறையிற்றங்கி உறங்கவுமாகக் கண்ட திருமேனி அமுதுண்ணவேண்டிய சமயத்தில் அத்திருமேனியாகவே யிருந்துண்ணாமல் சோதிவடிவமாய்த் தோன்றிற்றே இதுஎன்ன அதிசயமென்று இருவரும் ஒன்றுந்தோன்றாது திகைத்தனர் எனவும், நாம்துன்பத்தில் ஆழும்படிப் பசியோடுவந்த திருமேனி இப்போது சமைக்கப்பட்டுள்ள அமுதையுண்டு நாங்கள்களித்து உய்யும்வண்ணம் செய்தருளவேண்டும் பெரியோய் என்று வேண்டிய காலத்தில் உண்பதற்கான திருவுருவமா யெழுந்தருளப்பெறாது, முன்கொற்றவனமும் அன்னமும் அடியும் முடியுங் காணமற் போகும்படி எழுந்தசோதியைப்போல் தோன் றிற்றே, நாம் கண்ட அவ்வுருவத்தை இனி கண்டு அமுதுபடைக்கும்வகை எப்படி என்று நின்றனர் எனவும், நாயனாரது உண்மையை விளக்கியவாறும்.

அஃதாவது,—"இலங்காலம் செல்லாநாள் என்று நெஞ்சத்து இடையாதே யாவர்க் கும் பிச்சையிட்டு, விலங்காதே நெறிநின்று அங்குஅறிவேமிக்கு மெய்யன்பு புகப்பெய்து பொய்யைநீக்கித், துலங்காமெய் வானவரைக்காத்து நஞ்சம் உண்டபிரான் அடியிணைக்கே சித்தம் வைத்துக், கலங்காதே தொழும்அடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறி யைக் காணலாமே" என்று தாண்டகவேந்து, அருளியபடி, அத்திருவாக்கின் உண்மை

அனுபவத்தைக்காணச் சான்றாய் நிற்பவர் - இந்நாயனார் ஆகலான், சிவசொரூபத்தை எளிதாய்க்காணவரும் அடியார் வடிவத்தைக்கண்டு அமுதளித்து அகமகிழ்வதைவிட்டு, "புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம்புக்கும் புகன்மிருதி வழியுழன்றும் புகலும் ஆச்சிரம, அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும் அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும், சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதச் சிறப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால்" அடையத்தக்க சைவத்திறத்தால் உணர் வார்க்கும் உணர்வரிய, இச்சோதியைக்கண்டோமே, இச்சோதிவடிவம் அயன்அரிகளை மயக்கி அவர்களை யாவரும் சிற்றறிவினரென்றும், இவரைப்போலும் சிவபெருமானைக் காணாதவர் ஒருவரும் இல்லையென்றும் சொல்லும்படிச்செய்ததன்றோ! இவ்வுருவம் சிவ பெருமானை எளியனென்றும், தாமேஎன்றும், தேவரில் ஒருவனென்றும் எண்ணுவா ரது அகங்காரத்தையும், அறியாமையையும் அகற்றுதற்குத் தோன்றும் தோற்றமன்றோ! நாம் அங்ஙனமான எண்ணத்தை என்றும் எண்ணாதவராயிற்றே, இவ்வுருவத்தில் அமு தூட்டும்வகை எப்படி ? இருவரை அன்று பரம் அறிவதற்கின்றி மயக்கியதுபோலும், இன்று நம்மிருவரும் அமுதூட்டும் வகையை அறிவதற்கின்றி மயங்கும்படி வந்ததே என்று திகைத்துநின்றனர் என்பதாம்

இத்திருப் பாசுரத்தான், இந்நாயனார் சிவசொருபத்தினியலை உணரவேண்டிய முறைப்படியே யுணர்ந்து, பின்னர் அச்சிவசொரூபத்தால் அடையப்படும் ஆனந்தத்தை யடைய அடியார்க்கமுதளித்து ஆனந்திக்கும் இயல்புடையரென்றும், அவ்வியல்புக் கேற்ப இவர்பால் இறைவன் அடியவராய் வந்தனரென்றும், அதுகண்டு தாம் வறுமை யால் அடைந்திருந்த துன்பமெல்லாம் மறந்து, இந்நன்மையில் என்றுங் காணாத பேரின் பம் இன்று மிகஎளிதாய்ப் பெறவந்ததே என்று அரியதினும் அரியதாய் அமுதாக்கினை ரென்றும், அதனை உண்பிக்கவந்தபோது, சிவசொரூபத்தினியலை உணரவேண்டினார்க் குத்தோன்றும் சோதிவடிவமாயினனே என்று திகைத்துநின்றார் என்றுங்கூறப்பட்ட

இறைவன் இடபாரூடராய்த் தோன்றல்.

மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னே டிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி.

(எ - து.) திருமால் பிரமன் என்னும் இருவர்க்கும் காண்டற்கரியனாகி வன், ஒருசோதிவடிவமாய்த் தோன்றிநிற்க, (அவ்வுருவத்தைக்கண்டு, அடியராய் வந்த வர் கண்கூசும்படிச் சோதிவடிவமாயினரேஎன்று ஒன்றும் அறிவதற்கின்றி) மிகவும் மயங் கிக்கிடக்கும் அவ்விருவர்க்கும் சங்கரனாகிய இறைவன் மகிழ்கூர்ந்து, நறுமணங்கமழும் கூந்தலையுடைய உமாதேவியாரோடு இடபாரூடராய்த் தோன்றி, சித்தசுத்தியோடு அடி யார்பூஜையைக் குறைவுபடாது செய்துவந்த அடியாரைப்பார்த்து என்பதாம்.

அமுதுண்ணற்குரிய பசியோடுங்கூடிவந்த அடியார்வடிவமே மால் அயற்கு அரிய நாதன் வடிவமென்று எண்ணியிருக்கும் நம்பால் அவ்வடிவம்-பசியும் அறியாத, அமுதை யும் வேண்டாத சோதிவடிவமாயிற்றே, நாம் அமுதூட்டும் புண்ணியம் ஒழிந்தோமே என்று மயங்கிநின்றனர் என்பார் - வடிவொரு சோதியாகச் சாலவேமயங்குவார்க்கு என்றார் அங்ஙனம் திருவுருவங்காணாது மயங்குவார்க்குத் தமது தெய்வ வுருவத்தைக் காட்டினர் என்பார் - ஏலவார்குழலாள் தன்னோடு இடபவாகனனாய்த்தோன்றி என்றார். அசுத்தமாகிய பாசப்பொருள்களில் ஏதேனும்வேண்டி அப்பொருள்களை விரும்பிப் பூஜைசெய்யாது, பற்றற்ற சுத்தமாகிய அன்பினையேவேண்டி பற்றற்ற அடியார்பூஜை யைச்செய்த ஆசாரமுடையவரென்பார் "சீலமார்பூஜைசெய்த திருத்தொண்டர்" என்றார்.

இத்திருப்பாசுரத்தான்,—அறிவைக் கொள்ளைகொள்ளும் சோதிவடிவத்தினும், அன்பினைக் கொள்ளைகொள்ளும் சங்கமவடிவத்தில் நீங்கா அன்புள்ள தமது அன்புக் கேற்றபடி தோன்றிய சங்கமவுருவங் காணப்பெறாது மயங்குவார்க்கு இறைவன் தெய்வ வுருவத்தைக் காட்டிய அருமைகூறப்பட்டது. (உகு)

நாயனாருக்குச் சிவலோகம் அளித்தல்.

அன்பனே அன்பர் பூசை யளித்தநீ அணங்கி னோடும்
என்பெருந் தலத்தை எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பெரு நிதிய மேந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க என்றே அருள்செய்தான் எவர்க்கும் மிக்கான்.

(எ - து.) யாவர்க்கும் மேலோனாகிய இறைவன், அன்பனே! அடியார்களுடைய பூசையைச் செய்துவந்த நீ, உன்மனையாளோடும் எனது பெரியசிவலோகத்தை யடைந்து, (அங்கு) நின்முன் குபேரனே சங்கநிதி பதுமநிதியாகிய பெரியநிதிகளை யேந்திக் கொண்டு, உன்னுடைய சொல்லின்வழியே எந்தவேலையைச் செய்யவேண்டுமோ அந்த வேலையைச் செய்வதற்குக் கேட்டுக்கொண்டிருப்ப, நீ பேரின்பத்தில் ஆழ்ந்திருக்கக் கடவாய் என்று அருள்செய்தனன் என்பதாம்.

எவர்க்கு மிக்கான் அன்பனே அன்பர்பூசை யளித்தநீ எனக்கொண்டுகூட்டுக.

நீ - எவரேனுந்தாம் ஆக (எக்குலத்தவராயினும் ஆகுக, அவர்) இலாடத்து இட்ட திருநீறும் சாதனமும் (உடையவராயிருக்கக்) கண்டால் உள்கி, உவராதே யவரவரைக் கண்டபோது உகந்து அடிமைத்திறம் நினைந்து உருகி உவந்துநோக்கி, இவர்தேவர் அவர்தேவர் என்றுசொல்லி இரண்டாட்டாது ஈச(னாகிய எனது) திறமேபேணிக், கவராதே தொழும் அன்பின் திறமுடைய அன்பன் நீ என்பார்-அன்பனேஎன்றும், அவ்வன்பினை யான் கண்ணாரக்கண்டு களிக்க அடியவர் வேடங்கொண்டுவந்தேன், அங்ஙனம்வந்த என்னை, உனது கையால் ஈரம்போக்கி, அன்பருள்ளம்போன்றிருக்கும் ஒரு உள்ளிடத்தில் நான் இன்புற்றிருக்கவைத்தனை பின்னர் "இலங்காலம்" என்றபடி நான் காலமல்லாத நள்ளிருட்காலத்தில்வந்தும், நீ அக்காலத்தை வரத்தக்க நல்லபொழுதென்றே எண்ணியும், "செல்லாநாள்" என்றபடி, இவ்வடியவர் மிகப்பசித்திருக்கின்றாரேஎன்று எனது பசியைக்கண்டு, நமக்கு இப்பொழுது ஒருசெயலும் செல்லாத நாளாயிருக்கின்றதே என்று எண்ணி ஏங்குவதொழிந்து, எனது பசியை எண்ணிஎண்ணி உணவுக்கென்ன செய்யலாம் என்று எல்லாம் உடையவன்போல் பரிவுடையவனாய் மனையாளுடன்கலந்து அவளால் எல்லாம் உடையனாய் அமுதினும் இனிய அமுதமைத்து என்பால் வந்து என் துயிலொழித்து எனக்கமுதூட்டும் மஹேஶ்வரபூஜையைச் செய்யவந்தனையே, நீ வந்தபோதே நான் உன் அன்புருவமாய் அன்பருள்ளத்திருக்கும் சோதிவடிவாய்த் தோன்றினேன், நீ அச்சோதி வுருவத்தை இருவரால் அறியவொண்ணாச் சோதிவடிவாக நினைத்து அமுதூட்டுவதற் கில்லாதொழிந்தோமேஎன்று வருந்தித்திகைத்தனை, அத்திகைப்பு நீங்க இத்தெய்வ வுருவங்கொண்டு இப்பரமாகாசத்திற் றோன்றினேம்.

இதுகாறும் நான் சொல்லிவந்ததனால் நீ கொண்ட வருத்தம்நீங்கித் தெளியவேண்டியதொன்று. அது யாதெனின்:—திருநீற்றுடையாரைக் கண்டால் அவர் அடியாரென்றும், அவருக்கு நான் வேறென்றும் இரண்டாட்டாது எனது சொரூபத்திறத்தையே பேணி அமுதளித்துவந்தனையாகலான், அவ்வமுதெல்லாம் நாடோறும் உண்டுவந்தவன் நானன்றோ, நீ என்னை வேறாக்கி; அடியருக்கு அமுதளித்திருப்பையாயின் நான் இப்பொழுது உன்னால் ஆக்கப்பட்டிருக்கும் உணவை உண்ணவேண்டியவனே, இவ்வுண்மையால் நான் உன்பால் உண்ணவில்லை என்னும் கவலையையொழிக; யான் உண்டேன் உண்டேன் என்பார் அன்பர்பூசையளித்தநீ என்றும், அங்ஙனம் உண்டவன் நானனை

படியினால் என்னையே அடியவராக நீ கண்டபடியினால், அடியவனாய்வந்த நானே அவருள்ளத்தில் நடுநிறியைப் போன்றிருக்கும் சோதிவடிவத்தை நீ எளிதாய்க் காணக்காட்டினேன். இனி, அன்பர்பூசையின் திறமுணர்ந்து செய்துவந்தநீ எனக்கு அமுதமைத்த தெய்வநங்கையோடும் அடியார்க்கு வேண்டிய செல்வமெல்லாம் நிறைந்துள்ள எனது பெரியக்ஷேத்திரத்தில் வந்திருக்கக்கடவாய் என்பார் 'நீ அணங்கினோடும் என்பெருந்தலத்தையெய்தி' என்றும், அங்கிருட்டையாயின் முன் என்றால் மறைந்திருக்கும்படிச்செய்த செல்வங்களெல்லாம் அங்கிருக்கின்றன; அவைகளை அச்செல்வங்கட்குரியவனாகிய குபேரனே நீவேண்டும்பொழுதெல்லாம் உன்சொல்வழியே உன்னிடம் கொடுக்கும்படியான ஏவலாளியாக வைக்கிறேன் என்பார் - இருநிதிக்கிழவன் முன்பெருநிதியமேந்தி மொழிவழி ஏவல்கேட்ப என்றும், நீ படைத்திருந்த செல்வமெல்லாம் மகேஶ்வரபூஜையால்வந்த செல்வமாகலின் அதனால் அடையப்படும் பேரின்பத்தில் திளைத்திருப்பாய் என்பார் இன்பமார்ந்திருக்க என்றும், இங்ஙனமான பொருளைப்புரிந்தவன் எல்லா அடியார்க்கும் முன்னிற்கும் பெரியோனாகிய தில்லைவாழந்தணன் என்பார் எவர்க்குமிக்கான் அருள்செய்தான் என்றார்.

இத்திருப்பாசுரத்தால், சிவலிங்கமாகிய தாவரமூர்த்தியைக்காணும்போது சங்கமமூர்த்தம் வேறொன்றுண்டு என்றெண்ண வராததுபோல் சங்கம மூர்த்தியைக்காணும்போது சிவபெருமான்வேறு ஒருவனுண்டென்று எண்ணவராத பேரன்புடையவன் நீ என்றும், அங்ஙனமான அன்பால் அடியார்களுக்கு நீ ஊட்டி வந்ததாகிய அமுதை நான் உண்டுவந்தவனேயாதலால் இப்போது நான் உண்ணவில்லையென்கிற ஏக்கத்தை விடுவாயென்றும், முன் உன் செல்வங்களெல்லாம் அங்கில்லாமல் மறைந்து சிவலோகத்தில் வந்திருத்தலால் அவைகளை உனது குறிப்பறிந்து எடுத்துதவக் குபேரனை வைக்கிறேனென்றும், நீ அநுபவிக்கவேண்டிய பேரின்பத்தை நான்கொடுக்கிறேன் என்றும் இறைவனருளியதைக் கூறப்பட்டன. (உசு)

இப்பரி சிவர்க்குத் தக்க வகையினா லின்ப நல்கி
முப்புரஞ் செற்றார் அன்பர் முன்பெழுந் தருளிப் போனார்
அப்பெரி யவர்தந் தூய அடியிணை தலைமேற் கொண்டு
மெய்ப்பொருட் சேதி வேந்தன் செயலினை விளம்பல் உற்றேன்.

(எ - து.) இவ்வாறு இந்நாயனாருக்குத் தக்கவகையினால் சிவலோகத்தில் செல்வத்துக்கு நாயகராயிருக்கும் அதிகார இன்பத்தைக்கொடுத்து, அவ்வன்பருக்கு முன்னே திரிபுரத்தை யெரித்தவராகிய இறைவர் திருவுருக்கரந்தனர். அந்தப் பெரியவருடைய சுத்தமாகிய திருவடிகளை எனது தலைமேற் சூடிக்கொண்டு, சேதிநாட்டரசராகிய மெய்ப்பொருள் நாயனாருடைய திருத்தொண்டைச் சொல்லத்தொடங்கினேன் என்பதாம்.

நாயனார்பெற்றிருந்த பொருட்செல்வம் அருட்செல்வமன்றி இவ்வுலகத்தில்தேடப்படும் செல்வம் அன்றாகலான், சிவலோகத்திலும் அச்செல்வத்துடனிருந்து, தம்மால் கொடுக்கப்படும் பேரின்பத்தையும் அநுபவிக்கச்செய்தது சிறந்தமேம்பாடாகலின் தக்கவகை என்றும்; இவ்வகைத்தான தகுதியமைந்த இன்பத்தை இறைவன்கொடுத்தது எவ்வுலகத்தினும் வாய்க்கப்பெறாத மகேஶ்வர (அடியவர்) பூஜையை இம்மண்ணுலகில் இவர் வகையாகச் செய்தனராகலான், அவ்வகைக்கேற்பத் தகுதியாக, இறைவன் கொடுத்த பரிசாகலின் இவர்க்கு இப்பரிசு இன்பம் நல்கி என்றும், சோதிவடிவத்தால்

வமலத்தையும், தெய்வவடிவத்தால் கன்மமலத்தையும், அடியவர்வேடத்தால் மாயாமலத்தையும். முப்புரத்தை எரித்ததுபோலும் எரித்தாராகலின் முப்புரஞ்செற்றார் என்றும், முப்புரத்தையெரித்து அம்முப்புரத்தாரை அன்பர்களாக ஆண்டதுபோல் இவரை ஆண்டனராகலின் அன்பர் எனவும், தாவரவடிவத்தினிடத்தும், சங்கமவடிவத்தினிடத்தும் நின்றருளும் சிவத்தை சோதிவடிவமாய்க் கண்டபெரியோராகலின் அப்பெரியவர் என்றும், இரண்டுகாலினையுடையார் எங்குசெல்லினும், அவ்விரண்டுகாலுடன் செல்வரேயன்றி, ஒருகாலுடன் ஓரிடத்தும், இரண்டுகாலுடன் ஓரிடத்தும் செல்வதில்லை,

அஃதேபோல், நாயனார் இவ்வுலகத்தில் பொருட்செல்வத்தோடு அருட்செல்வத்தையும் ஒருங்கே யுடையாராய் இன்புற்றிருந்தமைபோல், சிவலோகத்திலும் அருட்செல்வத்தோடு பொருட்செல்வமும் உடையாராய் இன்புற்றிருக்கப் பெற்றனராகலின், அவரடியிணையை நாம் தலைமேற் கொண்டிருக்கப் பெறுவோமாயின் நாமும் அவர்போல் அவ்விருசெல்வமும் கொண்டிருக்கப் பெறுவோம் என்னும் ஆசையுடையவ ராயினு ராகலின் அவர்தந் தூய அடியிணை தலைமேற்கொண்டு என்றும், இனி சொல்லப்படும் நாயனாரது செயல் இவரது அடியிணையைத்தாங்கினாலன்றிச் சொல்லும்வன்மை எனக்கு உண்டாகாதாகலின் அடியிணை தலைமேற்கொண்டு சேந்தியேந்தச் செயலினை விளம்பலுற்றேன் என்றுங்கூறினார்.

இத்திருப்பாசுரத்தால், நாயனார் தாம் செய்துவந்த செயலுக்குத் தக்கபடி, அழியுஞ் செல்வம் பொருட்செல்வம், அழியாச்செல்வம் அருட்செல்வம் என்பதின்றி இரண்டு செல்வமும், இரண்டுபாதமும் ஒருங்கே ஒத்திருந்து நடப்பதுபோல் தாம்கொண்டு நடக்கத் தகுதியான பேற்றை இறைவனால் பெற்றவரது அடியிணையைத் தலைமேற்கொண்டு மெய்ப்பொருளை, மெய்யா (உடம்பா)ல் மெய்ம்மையாக விளக்கியசேதிவேந்தரது செய்கையின் திறத்தைச் சொல்லத் தொடங்கினேனென்று ஆசிரியர் சேக்கிழார் கூறினாரென்க. (உஎ)

இளையான்குடிமாறநாயனார் புராணம் முற்றிற்று.

ஆதிசைவ குல திலகாயநம:

திருத்தொண்டத் தொகை.

"இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்."

இளையான்றன்குடி என்றதனால் - பிறர்பாற் சென்று இளைத்து அவரியல் பறிந்து செய்யுஞ் செயலால் வருஞ்செல்வத்தை வேண்டாது அவ்விளைப்பினை யறியாத தமது இயல்பாற்செய்யும் உழவின்செயலால் வரும் எல்லையில்லாத செல்வத்தை வேண்டும் குடிகளாகிய வேளாளரிருக்கும் இளையான்குடியின் கண்ணே அவதரித்த என்றும், மாறன் என்றதனால் - அச்செல்வமெல்லாமுடையராய் அச்செல்வத்திறத்திற் கேற்ப அடியார்திறத்து நிறைந்துள்ள சிந்தையில் குன்றாத அறிவுடையவராய்க் கற்பகம்போல் ஒருகணமும் ஒழியாது எண்ணிறந்த அடியவர்கட்கு வேண்டிய வேண்டியாங்கு அமுதளித்துச் சிவனருளாளும் அரசரென்றும், அடியார்க்கும் என்றதனால் - இல்லையென்னாது கொடுக்கும் வள்ளற்றிறம் எனக்குண்டாக அவ்வியற்கைநாயனாருக்கு ஆட்பட்டது போல், செல்வஞ் சுருங்கவருங்காலத்தும் அவ்வள்ளற்றிறம் குன்றாது அடியார்க்கு ஒல்லும் வகையாலெல்லாம் செய்யவல்ல அறிவின்றிறம் எனக்குண்டாகும்பொருட்டு மாறனாகிய அடியார்க்கும் என்றும், அடியேன் என்றதனால் - இவ்வரசருக் காட்பட்டதேயன்றி அவரடிப்பட்டு அவர்போல் ஒழுகவல்ல அருளாளருக்கும் அடியனாயிருக்கும் ஆசையுடையவனா யிருக்கின்றேன் என்றும் கூறியவாறாம்.

திருவந்தாதி.

இயலா விடைச்சென்ற மாதவர்க் கின்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்து வாரி மனையலக் கால்வறுத்துச்
செயலார் பயில்விழுத் தீங்கறி யாக்கு மவன்செழுநீர்க்
கயலா ரிளையான் குடியுடை மாறனெங் கற்பகமே.

நாயனார் வளம்படச்செய்யும் மஹேஸ்வர பூஜைக்குரிய செல்வம் சுருங்கியகாலத்தென்பதும், மாரிக்காலத் தென்பதும், அதனினுங் கொடிய நள்ளிருட்காலத்தென்பதும்தோன்ற இயலாவிடை என்றும், இறைவனார் இடபம் ஊர்வதுமின்றி, பேதையாள் (உமாதேவியார்) உடனின்றி, ஓர் நற்றவத்தவர் வேடங்கொண்டு நாயனார்பால் சென்ற

னர் என்பது தோன்ற - செய்யமாதவர் என்றும், அம்மாதவர்க்கு - நாயனார் மனைவியாருடன் அமுது படைக்க, அரிசியின்றி, நெல்லுமின்றி, இவ்விரண்டிலொன்று வாங்குவதற்குப் பொருளுமின்றி, கடன் கொடுப்பாருமின்றி, பிறரிடத்துச் சென்று கடன் கேட்பதற்குரிய காலமுமின்றி வருந்தி, அன்று வயலில் விதைத்த நெல்லொன்று இருக்க அதனை நினைத்து, அவ்வயலிற் சென்று முளைத்திருக்கும் அவ்வித்தினை வாரிக்கொண்டுவந்து, பின்னர் வீட்டுக் கூறையிலுள்ள மூங்கிலைப் பிடுங்கி அடுப்பிலிட்டு அம்முளைவித்தை வறுத்து அமுதுக்குரிய அரிசியாக்கி அதனை இனிய அமுதாகச் சமைத்து, சமைத்த அன்னத்துக் கேற்ப அமைக்கவேண்டிய கறிவகைகளுக்குக், குழிநிரம்பாத புன்செயில் விளையத்தக்க குறும்பயிர்களைத் தடவித்தடவிப் பறித்துக்கொண்டுவந்து, அவைகளை நீராற் சுத்தஞ்செய்து தமது கைப்பாகத்தினால் வேறு வேறு இனிய கறிவகைகளாகச் செய்து அவைகளை இறைவன் உண்ணும் படியாகச் செய்யும் வல்லாளன் என்பது தோன்ற - இன்னமுதாக, விதைத்தவயல் ஆர் முளை வித்து வாரி, மனை அடைந்து வறுத்து, செயல் அரிசியாக்கி, விழுத் தீங்கறி யாக்குமவன் என்றும், இங்ஙனம் நன்செயில் விளையும் நெற்பயிரையும், புன்செயில் விளையுங் குறும் பயிரையுங்கொண்டு இனிய அமுதாக்கி இளைக்காமல் அமுதூட்டவல்ல வன்மை மீன்கள் துள்ளும் நீர்வளமிக்க விளைநிலங்களையுடைய வேளாண்குடியில் அமைந்துள்ள இன்றியமையாத செயலென்பது தோன்ற - செழுநீர்க்கயலார் இளையான் குடியுளை என்றும், இந்திரன் தேவர்களுக்காசனாய் கற்பகச்சோலையிலிருந்து வேண்டியதளித்தல்போல, இருநிதிக்கிறைவன்றனே நிதிய மேந்தி மொழிவழி யேவல் கேட்ப அடியார்களாகிய எங்கட்செல்லாம் வேண்டியதாகிய பொருட்செல்வத்தோடு பேரின்பத்தையும் எப்பொழுதும் வழங்கும் பேரரசர் என்பது தோன்ற - மாறன் எங் கற்பகமே என்றுங் கூறினார்.

எங்கற்பகமே என்ற இதனால் அன்பரைப் பூசிப்பதாகிய மஹேஸ்வரபூஜை நிலை பெறாதசெல்வத்தை நிலைபெறுவிக்குமென்றும், நிலைபேறுடைய மெய்ம்மைச் செல்வத்தை விளைவிக்குமென்றும், ஓர்கால் வறுமை புகவருமாயின் அதனால் பழிபாவங்களை விளையவொட்டாமலும், புகழ் அறங்களைப்போக்க வொட்டாமலும் தடுத்து, சிவபுண்ணியத்தை மேன்மேல் முதிர்வித்து நடைபெறச் செய்யுமென்றும், அங்ஙனமான சிவபுண்ணியமுதிர்ச்சியினால் தோன்றாத் துணையாயிருக்கும் இறைவனை அருள்முதிர்ந்த சங்கம வடிவமாகவும், ஞானப்பிழம்பாகிய சோதிவடிவமாகவும், அருள்வழங்கும் கருணையுருவாகவும் தோன்றிவரச்செய்யுமென்றும், சங்கமவடிவத்தை அனுபவித்தற்குரிய முதிர்ந்த அன்பினையும், சோதிவடிவைக் காண்டற்குரிய நின்மலஞானநோக்கினையும், கருணைப் பிரவாகத்தைப் பெறுதற்குரிய குன்றாத் அடிமை நிலையினையும் முறையே உதிப்பிக்குமென்றும், அவ்வடிமை நிலைமை என்றுங் குன்றாவாறு சிவலோகத்தில் என்றும் வாழ்ந்திருக்கச் செய்யுமென்றும், அம்மஹேஸ்வரபூஜையின் சிறப்பு கற்பகம் போன்றதென்றும் இந்நாயனார் பிரகாசப்படுத்தினாராகலான் அப்பெரியோரையே கற்பகமென்று இத்திருவந்தாதியான் போற்றினமைகாண்க.

இதனால் திருவருள்பெற முயல்வார்க்கு மும்மலங்களையுங் களையுமுறை இம்முறையெனவும், அங்ஙனங்களையவருங்காலம் அருண்மாரி பொழியவருங்காலமெனவும், அம்மாரிக்காலத்தில் வாசனாவசத்தால் சிறிதும் மாறாதவராய் ஆணவத்தை விரைந்து வாருவதிலும் கன்மமலத்தைப் பரவாமற்பரிப்பதிலும் மாயாமலத்தைக் குடிசையாயிராமற் பிடுங்குவதிலும் இளையாதவராய் அச்செயலில் முயலவேண்டுமெனவும்,அவ்வரிய செயலே பின் கற்பகமாய் நின்று வேண்டியபடி சிவானந்த போதப்பெருக்கைக் கொடுக்குமெனவும் வகுத்துக்கூறியதேயன்றி; நென்முளை முதலியவைகளைக்கொண்டு மாதவர்க்கின்னமுதாகவும் தீங்கறியாகவும் ஆக்கியதே அவரது தவமாகவும்,அத்தவத்திற்குப் பொருளோடு அருள்வாழ்வைப் பெறச்செய்ததே பேறாகவும், இளையான்குடியென்றதே அவரது திருப்பதியாகவும் மாறன்என்றதே அவரது திருநாமமாகவும் சிறப்பித்தமைகாண்க.

புராணசாரம்.

மன்னியசைவ ளாண்டொன்மை இளையான்குடி மாறர் வறுமையால் உணவுமிக மறந்து வைகி, உன்னருநள் ளிருண்மழையில் உண்டிவேண்டி உம்பர்பிரான் அணையவயல் உழுது வித்தும், செந்நெல்முளை அமுதுமனை அலக்கா லாக்கிச் சிறுபயிரின் கறியமுது திருந்தச் செய்து, பன்னலரும் உணவருந்தற் கெழுந்த சோதிப் பரலோக முழுதாண்ட பான்மை யாரே.

இளையான்குடிமாற நாயனார்,—உழுதலால்வரும் மெய்வருத்தம் நோக்கிப் பிறதொழில்களைச் செய்து திரிந்து மனம்வருந்திப் பின் கைக்கொள்ளும் தலையாய தொழிலாயும், பிறதொழில்களையே செய்ய அவாவுடையார்க் கெல்லாம் தேருக்குரிய அச்சாணியைப் போன்றதாயுமுள்ள உழவுத்தொழில் உடையவராயும், அத்தொழிலா லுண்டாகும் உணவுக்குரிய அரிசியையும் கறிவகைகளையுங் கொண்டு பாற்கடலில் உதித்த அமுதினும் இனிய அமுதாக்கி "கனியினும் கட்டிபட்ட கரும்பினும், பனிமலர்க்குழற் பாவைநல்லாரினும், தனிமுடிகவித் தாளும் அரசினும்" இனியபொருளாகிய சிவக்கனியை உண்டுகளிக்கும் இனிய அடியார்களுக்கு உண்பித்து உண்மகிழும் மகிழ்ச்சியில் நிலைபெற்ற தொன்மையாயுள்ள வேளாண்குலத்தில் அவதரித்தவர். அவதரித்த அக்குலத்துக் கேற்ப வாழ்க்கைத் துணை எனப்படும் மனையாளோடு கூடி "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்றற் றொடக்கத்தன வாய்க் கூறியுள்ளபடி இல்லறத்தில் இருக்கப்பெற்றவர்.

இல்லறமானது,—மனைவியோடும் வனத்திற்செல்லாது வீட்டின்கணிருந்து, தானியம், தனம் என்றற் றொடக்கத்தனவாகக் கூறப்படும் சம்பத்சொரூபமாகிய எல்லாப் பொருள்களையும் போற்றிவாழும் செயலையே மேற்கொண்டு விருந்தினராகிய அடியார்களைப் பேணி அவர்கட்கு உபசாரஞ்செய்தலாகிய அறத்தைத் தலைமையாகக்கொண்டிருப்பது. அவ்விருந்தினரே தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று இல்லறத்திற்கு அகத்துறுப்பாகக் கூறிய ஐந்தறங்களுள் நடுநிற்பவராகக் காணப்படுகின்றனர். நடுநிற்கின்ற இவர்களையே இல்லறத்தார் முன்போற்றத்தக்கதென்று, இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம், புதல்வரைப்பெறுதல், அன்புடைமை என்னும் நான்கதிகாரங்களையும் முறையே கூறி அதன்பின்னர் ஐந்தாம் அதிகாரமாக விருந்தோம்பலைக் கூறியுள்ளார் நாயனார்.

இத்தகைத்தான சிறப்புடைய விருந்தோம்பலாகிய அறத்தையே செய்ய இல்லறத்தைக் கைக்கொண்டு நடத்தினவர். இவர் யாரை அடியராகக்கொண்டார், அவர்களை எவ்வாறு வழிபட்டுவந்தார் எனின், தம்மை எதிர்ப்படுவோர்-என்பை ஆரமாகப்புனைந்த ஐயர்தம் அன்பர்என்னும் தன்மை யொன்று புலப்படுமாயின், அவர் யாவராயினும் அவர்களையே அடியராகக் கொள்பவர், அனிச்சப்பூ மோந்துழி யன்றிக் குழையாது, அவ்வடியரோ முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர். ஆகவே, இவரினும் மெல்லியாரில்லை. இங்ஙனமான மென்மை யுடையவரைத் தாம் செய்யும் வழிபாட்டினால் வன்மையுடையவராகச் செய்பவர். எவ்வாறெனின், அவர்களைத் தூரத்திற் கண்டபொழுதே தம் முளத்தில் நித்தமாக நிறைந்துள்ள பக்தியினால் எதிர்கொண்டு சென்று கைகுவித்து நின்று இன்முகத்தைக் காட்டி அவர்கள் அதனைக் கண்டு தம்மைச் சமீபிக்க, சமீபித்தவழி அவர்கள் செவியில் ஈரமென் மதுரப் பதமாகிய இனிய சொல்லைப் பரிவெய்தக் கூறி அங்ஙனங் கூறிய இன்சொல்லால் தமக்குடன்பட, உடன்பட்டவழி கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே, மண்டுகாதலின் ஆதனத்திடைவைத்து அருச்சித்து அமுதுகொள்ளும்படிச் செய்து தமக்கு வேண்டுவனவெல்லாம் ஐயமின்றிக் கேட்கும் வன்மை யாளராக்கித் தம்மை வழியடிமையாய் ஆளும்படிச்செய்பவர். இங்ஙனமான நவபுண்ணியச் சிறப்பான் நவநிதிகளும் அதிகரித்துத் தனது இடமுற்றும் பரவிநெருங்கி எண்டிசையிலுள்ளாரும் மதிக்கப்பட்டு நிதிபதியாயினவர்.

இவர் படைத்தநிதி உயிர்களிடத்து அருளும் அன்புமற்ற பூரியார்கண்ணும் உண்டாவதாகியசெல்வமன்று; சிவனருள்நிறைந்தஉள்ளமும் அன்புநிறைந்தஉயிரும் உடைய அறிவுடைச் சான்றோரிடத்து வரும் திருவருட் செல்வமாம். அவ்வுண்மையை உயர்ந்தோரெல்லாம் உணர்ந்து அடியாரல்லாத பூரியார் கண்ணே யல்லது, இல்லதாகிய செல்வத்தை வேண்டாது உயர்ந்தார் கண்ணேயல்லது இல்லாத அருட்செல்வத்தை வேண்ட அவர்பாலுள்ள செல்வத்தை மறைந்திருக்கச்செய்து வறுமையையறியாத அவர்பால் வறுமையாகியபாவியை இறைவனார் வரச்செய்தனர். அவர்பால்வந்தவறுமை தவமிலிகள்பாற்சென்று பொருட்செல்வத்தைக்கெடுத்து இம்மை மறுமைப்பயன்களைப் போக்கச்செய்வதுபோல் அடியார்பூசையை இல்லையாகும்படிச்செய்ய, பலவகையானும் கடன்களை மிகுதிப்படுத்திப் பசியால் உடலும்வருந்தும்படிச்செய்தது. நாயனார்பெற்றிருக்கும் அறிவினாற்பெற்றசெல்வம் வறுமையாற் போக்கும் செல்வமன்றாகலான் அச்செல்வத்தான் அடியார்பூசையில் முதிர்ந்த செய்கையராகவே யிருந்தவர்.

இவ்வரிய செய்கையைக் கண்ட இறைவனோ அவர்பால் தாங்கவொண்ணாத அருளுடையவராய் அவரால் விரும்பப்படும் அடியவர் வேடமே கொண்டு வருவாராயினர். விடையும் உமையுமின்றிவருகின்றவர் நடுராத்திரியில் அருண்மழையைமுன்னே பெருக்கெடுத்தோடச்செய்து தாமும் நனைந்து தீராப்பசியுடையவராய் அவர் வீட்டிற்குவந்து தாளிட்டிருக்கும் கதவைத் தட்டினார். பசியின் பெருக்கால் உறக்கமின்றிச் சயனித்திருக்கும்நாயனார், பெயுறங்கும் நடுராத்திரியில் நன்மழையில் நல்லடியர் யாரோ ஒருவர் நல்லபசியால் அழைப்பதற்கும் சக்தியின்றிக் கதவைத் தட்டினரென்று தன் பசியைக் கருதாது விரைந்துவந்து கதவைத்திறந்து அவரை நோக்கி நடுக்கமுற்று ஈரத்தால் நடுக்கமுற்றிருக்கும் அவரதுதிருமேனியைத் துகிலாடை யாற்போக்கி அவரது பசியை நோக்கி இவர் இப்பசி பொறுக்கலாகாது உண்டிவேண்டி வந்தனர்போலும். அந்தோ! பசியைப்போலும் துன்பஞ்செய்வது வேறொன்றுண்டோ? அதன் கொடுமையை நாமிப்போது அநுபவிக்கின்றோமே நம்மைப்போலும் பசியைத் தாங்கும் வன்மையாளராகக் காணப்படவில்லையே; இவர் இடைக்குலக்கொடிப்பாகர்க்கினியராகக் காணப்படுகின்றாரே என்று வறுமையினுங்குன்றாத அறிவுகலங்கி அமுதமைக்கும் உபாயத்தைத் தன்மனையாட்டியாரால்கேட்க, அவர் இவரது அன்பும் அவாவும், நிரப்புமாறு அச்சமயத்துக் கேற்ற உபாயத்தைக் கூறினர். கூறிய பொழுதே அடியாரது பசியைப்போக்கினார்போல் இருளுக்கும் அஞ்சாது, ஒழியாது பெய்யும் மழையையும் எண்ணாது, வழிகாண்டற்கு அரிதென்பதையும் குறிக்காது, மழையில் நனைந்து, மின்னலிற் கண்கூசியும், வழியைக் காலாற்றடவியும், நீர் நிறைந்திருக்கும் வயலிற்சென்று, முளைத்திருக்கும் செந்நெல்லை பெருங்கூடையில் வாரிக்கொண்டுவந்து, மனைக்கூறையிலுள்ள அலக்கினால் பாகப்படுத்தி அன்னமாக்கிப் புஞ்சைப்பயிரினால் கறிவகைகளெல்லாம் ஆசாரத்துடன் இன்சுவையோடுஞ் செய்து சொல்லுதற்கரிய அவ்வினிய அரியவமுதை அடியார்க்கு உண்பிக்க அவர்பாற்சென்று அவர் பேருறக்கங்கொண்டிருத்தலைக் கண்டு அத்துயிலை இனிய மொழிகளாற் போக்கி எழுந்திருக்கச் செய்யும்போது, அடியார் நித்திரையொழிந்து சோதியாய்த் தோன்றினர். தோன்றிய அச்சோதியார் அமுதுபடைப்பதில் இளையாமல் நிற்கும் பேரன்பினைக்கண்டு, அன்ப! நீ இங்கு பொருளையும், அருளையும், அடியரையும், எம்மையும் பெற்றனை, இனிப் பரலோகமுழுதும் பரவிக்கிடக்கும் பரமானந்தமாகிய பேரின்பத்தையும் பெற்று வாழக்கடவாயென்றருளினர். அவரது ஆணைப்படியே இவ்வுலகத்தைப் பொருள் முதலியவற்றால் ஆண்டதுபோல் அப் பரலோகத்தையும் பேரின்பத்தோடு முழுவதும் ஆளும்படியான பெருமையைப் பெற்றவரென்பதாம்.

சோதிப்பரலோகமுழுதாண்ட பான்மையார் என்றதனால், பரலோகத்தையாளப் பெற்ற நாயனாரது தன்மையே பெரும்பான்மையாகப் போற்றத்தக்கதன்றி ஏனைய

உலகங்களை ஆளப்பெற்றாரது தன்மை அதுபோலும் போற்றத்தக்கதன்றென்று அவரது சிறப்புக் கூறப்பட்டது.

அஃதாவது,—பரலோகம் - பிரகிருதிசம்பந்தப்பட்ட உலகங்களுக்கும் சுத்தாசுத்த சம்பந்தப்பட்ட மாயாவுலகங்களுக்கும் சுத்த மாயாசம்பந்தப்பட்ட உலகங்களுக்கும் அப்பாற்பட்டது. அவ்வுலகங்களிலுள்ள போகங்கள் - விடயானுபவத்திற்குரிய போகப் பெருக்கம், மந்திராதிகாரப் போகப்பெருக்கம், பஞ்சக் கிருத்தியாதி காரத்துட்பட்ட போகப்பெருக்கங்களாம். அங்குள்ளார் முறையே மும்மலத்தார் இருமலத்தார் ஒருமலத் தார். பரலோகத்திலுள்ளவர் பரசிவம். அங்குள்ள போகம் சிவபோகம். அங்குள்ளவர் விடையானுபவ போகப்பெருக்க முதலியன வேண்டாது நின்மலசிவானுபவப் பெருக் கைவிரும்பும் சிற்பரச்செல்வர்கள். அச் சிற்பரச்செல்வர் இந்நாயனாராகலின் பரலோக முழுதாளும் பான்மையராயினர்.

முழுதாண்டபான்மையார் என்றதனால் சிறுபான்மை ஆள்வாரும் உளர் என்றாயிற்று. எனவே, முன்சொல்லப்பட்ட அவ்வவ்வுலகங்களில் உள்ளவர் அவ்வவ் வுலகங்களையும் அவ்வவ் வதிகார போகங்களையும் அனுபவித்து ஆள்பவராயிருப்பதன்றி முழுதும் ஆளும்பான்மையுடையவராகார்; ஆகலின் அவரெல்லாம் சிறுபான்மையாளும் பான்மையுடையவரேயாவர். நாயனார் முழுதாண்டபான்மை எங்ஙனமெனின், உலகமென்னுஞ் சொல் அசேதனமாகிய வுலகத்தின்மேல் நிற்பதல்லாமல் சேதனமாகிய வுயிர்கண் மேலும் நிற்பதுபோலும் பரலோகம் என்பதும் பரலோகமேயல்லாமல் ஈண்டு பரசிவத் தின்மேனின்றதெனக ஆகவே, பரசிவத்தை முழுதாண்டபான்மையைப் பரலோகமுழு தாண்ட பான்மையார் என்றார்.

அல்லதூஉம் எண்பத்துநான்கு லக்ஷம்பேதமாயுள்ள சரீரமுழுவதும் ஆளச்செய்ய வல்ல ஆணவாதி மும்மலங்களையும் அகற்றினவராகலான் பரலோகமுழுதாளும் பான் மையரானாரென்றலுமாம். அஃதாவது மேன்மேல் பிறவியை விளைவிக்கவல்ல ஆணவ மலம் அற்றவரென்பதனை விளைவுக்கிடமாகிய நென்முளையை வாரியதனாலும், அவ் விளைவுக் கேற்றவாறு புண்ணியபாவங்களைக் குன்றாது பரப்பவல்ல கன்மமலத்தைப் பறித்தவரெனபதனை குழிப்பயிரைப் பறித்ததனாலும், புண்ணியபாவங்கள் படர்தற்குக் கொழுகொம்பாயுள்ளமயாமலம் அற்றவரென்பதனை மனையில்நீடும் அலக்கினையறுத்து வீழ்த்தியதனாலும் அறிவித்தனர். மும்மலவழியில் உழன்ற தற்போதத்தை அவற்றி னின்றும் வேறுபடுத்தி முன் அவற்றோடு முளைப்பதிலும் படர்வதிலும் கொழுகொம் பாவதிலும் முனைத்துநின்றதுபோல் பின் முளையாதிருத்தற்கும், படராதிருத்தற்கும், கொழுகொம்பாகாதிருத்தற்கும்,முனைத்துநிற்கச்செய்து ஆணவத்தை இறைவனுக்குஉண வாக்கியும், பலபலபுண்ணிய பாவரூபமாயுள்ள கன்மமலத்தைப் பலபல கறிவகைகளாக்கி யும் இக்கன்மமலம் படர்தற்கேற்ற மாயாமலத்தைப் படர்தற் கிடனின்றி நெருப்பிலிட் டுங்காட்டி, அதன்பின்னர் இங்ஙனம் முனைத்துநின்ற அத்தற்போதத்தை, முன் மும்மல விளைவாகிய போகபதார்த்தங்களைத் தான் இன்புற்று அனுபவிக்கவிருந்ததுபோல் இப் பொழுது மும்மலநாசத்தாலாகிய போகத்தை (உணவை)இறைவன் இன்புற்றனுபவிக்க அவனையே நோக்கிநிற்கச் செய்தனராகலான், தத்பதப்பொருளாகிய பரசிவன் துவம் என்னும் பதத்துக்குப்பொருளாகிய அவரை அசி(ஆனாய்)என்னும் பதப்பொருள்படியே நீ என்னை ஆளுந்தன்மையனாயினாய் என்னும் தத்வமசி மஹாவாக்கியப் பொருளை இவர்பாற் காணச்செய்ததுமாம்.

இதனால் இளையான்குடிமாறனார் ஆகலான் தன்குடிமுழுவதும் (தான் இளையாது குடிபுகுந்திருக்கும் ஆணவாதிக ளனைத்தையும்) ஆண்ட (மும்மலமாகிய அவ்வுடைமை யோடு அடிமையாகியதன்னையும் ஆட்கொண்ட) இறைவனுக்குமாற்றி, அவனுடைமை யாகிய அருளையும் அவனாகிய சிவசொரூபத்தையும் கொண்டனரென்று கூறப்பட்டது.

இளையான்குடிமாற நாயனார் புராணசாரம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

உபவீததாரணாயநம:

மெய்ப்பொருள் நாயனார் புராணம்.

நாயனார் வம்சச்சிறப்பு

சேதிநன் னாட்டு நீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாக ரன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலா லீசர்க் கன்பர் கருத்தறிந் தேவல் செய்வார்.

(இ-ள்.) பெருமையின்மிக்க சேதிநாட்டின்கண் ணுள்ள திருக்கோவலூரில் நிலைபெற்றிருந்து, பார்வதிபாகராகிய இறைவனது அன்பின்வழி வருகின்ற மலையாளர்களுக்கு அரசர், வேதத்திற் கூறப்படும் நல்ல தருமநெறியின் உண்மை யாவரிடத்தும் பிரகாசமாய்ப் பிரகாசிக்க, அத் தருமநெறியில் தாம் தவராது ஒழுகும் மேன்மையுடையவராய், சிவபெருமானிடத்து அன்புள்ள அன்பர்களிடத்து ஆசையுடையவராய் அவ்வன்பர்களுடைய உள்ளக்குறிப்புணர்ந்து அப்பணியைச் செய்கின்றவர் என்பதாம்.

இந்நாயனாரிடத்துள்ள அன்பு - அவரது வம்சத்தில் வழிவழியாய்வரும் அன்பென்பது தோன்ற - "அன்பின் வழிவரும் மலாடர்கோமான்" எனவும், ஆசையுடையவராய் ஈசர்க்கன்பர் கருத்தறிந் தேவல்செய்வதே வேதத்திற் கூறப்படும் உண்மையாகிய நல்ல நெறியென்று யாவரும் அறியச் செய்தனரென்பார் - "வேதநன்னெறியின் வாய்மை விளங்கிட ஈசர்க்கன்பர் கருத்தறிந் தேவல்செய்வார்" எனவும், அவர் கருத்தின்படியே அவரது ஆளுகையில் உள்ளாரெல்லாம் அடியார்க் கேவல்செய்யும் பணியை மேற்கொண்டொழுகி இவரைப் போற்றினரென்பார் - "மேன்மை பூண்டு" எனவும் கூறினார்.

வேதநெறியின் துறையாய் விளங்குவது சைவமாதலால், வேத நன்னெறியின் வாய்மை அன்பர் பணியென்று குறித்ததென்க.

இத்திருப்பாசுரத்தான் - நாயனாரது நாடு - சேதிநாடென்றும், ஊர் - திருக்கோவலூர் என்றும், வம்சபரம்பரை - இறைவன்பால் அன்புள்ள பரம்பரை என்றும், அவர் செங்கோல் முறையால் நடத்திய அறச்செய்கை - ஈசர்க்கு அன்பர் கருத்தறிந்து ஏவல் செய்வதென்றும், அவரடைந்த மேன்மை - தாம் செய்துவந்த அன்பர் பணியே வேத நன்னெறியின் வாய்மையாமென்று யாவரையும் அவ்வழிப்படுத்திய சிறப்பென்றும் கூறப்பட்டன. (க)

அரசியலின் சிறப்பு.

அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமற் காத்து
வரைநெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகண் மாற்றி
உரைதிறம் பாத நீதி யோங்குநீர் மையினின் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்வார்.

(இ-ள்.) வேதநெறியின்வழியே அரசியலை நடத்தும் அந்த நன்னெறியின் வழியே விதித்துவந்த தருமங்களைத் தவறாமற்காத்து, பெரியமலைபோலும் படைத்துள்ள

தனது தோள்வலியால் பகைவரது படைமுனையை அழித்து வெற்றிகொண்டு, யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்கள் இல்லையாகலான், அந்த வாய்மைச்சொல்லினின்றும் மாறுபடாத நீதியிற்சிறந்த குணங்களால் மிக்குயர்ந்தவர். அலையுடைய கங்கையை அணிந்திருக்கும் சடையுடையானாகிய இறைவன் அன்பர்களுடைய சிவவேடத்தையே (தாம் அறியப்படுவதாயும் அடையப்படுவதாயு முள்ள மெய்ப்பொருளாகச்) சிந்தைசெய்பவர் என்பதாம்.

அறநெறி - அரசியலன்றி நடைபெறா தாகலானும், அரசியல் - அறநெறியே யாகலானும், † அறநெறி குன்றாது நடத்தலே செங்கோல் ஆகலானும், அறங்குன்ற நடத்தலே கொடுங்கோ லாகலானும், கொடுங்கோல் உடையனாயின் "ஆபயன்குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர் ஆகலானும், நாடோறும் நாடுகெடுமாகலானும், முன் தேடிய பொருளையும், பின் தேடுதற்கு ஏதுவாகிய குடிகளையும் சேர இழக்கும் ஆகலானும், "அரசியல்நெறியின்வந்த அறநெறிவழாதுகாத்து" எனவும், அங்ஙனங் காத்தற்கு வேண்டும்பொருள்கள் வரும்வழிகளை மேன்மேலுளவாக்க வேண்டுமாகலானும், உளவாய் வந்தவற்றை ஒருவழித் தொகுக்கவேண்டு மாகலானும், தொகுத்தவற்றைப் பிறர்கொள்ளாமற் காக்கவேண்டு மாகலானும், காத்தவற்றை அறம்பொருள் இன்பங்களின் பொருட்டு விடுக்கவேண்டுமாகலானும், அஃதாவது:—கடவுளர் அந்தணர் வறியோர் என்றிவர்க்கும், புகழ்ற்தும் கொடுத்தலாகிய அறப்பொருட்டாகவும், யானை குதிரை படை நாடு அரண் என்றிவற்றிற்குக் கொடுத்தலாகிய பொருட் பொருட்டாகவும், மண்டபம் வாவி செய்குன்று இளமரச்சோலை முதலிய செய்தற்கும், ஐம்புலன்களால் நுகர்வனவற்றிற்கும் கொடுத்தலாகிய இன்பப்பொருட்டாகவும், விடுவிக்க வேண்டுமென்க. அம்முறையால் காத்தலாதிகளைச் செய்ய முயலுங்காலத்துப் பகையுண்டாம் ஆகலினானும், அப்பகைகளை வெல்லக் கருதுங்காலத்து எத்துணைப் படைத்துணைக ளிருப்பினும் அவைகளும் அழியவரு மாகலானும் அங்குத் தோள்வலியிருப்பின் பகைவனையும், அவன்சேனைகளையும் வெற்றிகொள்ளலா மாகலானும் "தோளால் வென்று மாற்றலர் முனைகள்மாற்றி" எனவும், வன்மைபெற்றதோள் பொருத்தன்றி சிறத்திருப்பின் சிறப்புடைத் தன்றாகலான் "வரைநெடுந்தோள்" எனவும், பலகுடிகளால் பலபொருள் வாய்ப்பெற்றுச் சுகமொன்றே அனுபவிப்பவன் அரசன், அரசனிடத்திற் சொல்லொன்றே பெற்று, பலஇன்பத்துன்பங்களை அனுபவிப்பவர்குடிகள், அஃதாவது:—அரசனது சொல் நீதிதவறி யிருக்குமாயின் துன்பத்தைக்கொடுக்கும், நீதிதவறா திருக்குமாயின் இன்பத்தைக்கொடுக்கும் ஆகலான் ‡ "நீதிபிறழாத உண்மையோங்கு நீர்மையினின்மீக்கார்" எனவும், உலகில் தன்னாணையைச் செலுத்தவல்லோர் தன்னால் கொடுக்கப்பட்ட வேடத்தைத்தாங்கிப் போவதுப், அவ்வேடத்தைக் கண்டவர்கள் தானெனவேகண்டு அஞ்சி அவரேவல்வழி நிற்பதுமேயன்றி, வேடத்தைக் கண்டு தானென்றெண்ணாமலும், அஞ்சாமலும், அவரநுகுலம் அறிவு செய்கைகளையுணர்ந்தபின்னர் அஞ்சுவது இல்லையாகலான் அதுபோலத் தாம், சடையான் அன்பர் வேடமே சிந்தைசெயவார் எனவும், சடையின் சம்பந்தத்தால் கங்கை சிறந்தசுத்தமும் சிறப்பும் எய்தப்பெற்றமைபோல் திருவேடத்தின் சம்பந்தத்தால், சிறந்தசுத்தமும் சிறப்பும் உடையவர் அடியவராகலான் - "திரைசெய்நீர்ச் சடையான் அன்பர்" எனவும் கூறினர்.

---

† திருக்குறள். செங்கோன்மை கொடுங்கோன்மை என்னும் இரண்டதிகாரங்களில் இவற்றின் உண்மைகளை அறிக.

‡ ஆக்கமுங்கேடும் அதனால்வருதலானும், அறனும், பொருளும் அதனினூஉங்கு இல்லையாகலினானும், சொல்லின்கட் சோர்வு(உண்டாகாமல்)காத்து ஓம்பி, திறனறிந்து சொல்லவேண்டுமெதி அரசர்கடனென்க. இதனை, திருக்குறள் நாவலமென்னும் அதிகாரத்திற் காண்க.

இத்திருப்பாசுரத்தான், இவரது அரசியல் - அறநெறியைச்சேர்ந்த தென்றும், பகைமை வெல்வது படைகளின் வலியாலன்று, தனது தோள்வலியாலே என்றும், யாங்கலத்துள்ளதூஉம் அன்றாகிய (பிறநலம் எல்லாவற்றுள்ளும் அடங்குவதன்றி மிக்க தாகிய) நாநலம் என்னும் நலன் உடைமையில் மிக்கார் என்றும், தனது அடையாள மாகிய வேடத்தை உலகங்கண்டு அஞ்சுவதுபோல், இறைவனது வேடத்தைக்கண்டு தான் அஞ்சுந்திறம் உடையவர் என்றும் கூறப்பட்டன. (உ)

சிவபுண்ணியபரிபாலனச்சிறப்பு.

மங்கையைப் பாக மாக உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி ஏழிசைப் பாட லாடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கணா யகருக் கன்பர் தாளலால் சார்பொன் றில்லார்.

(இ - ள்.) உமாதேவியை ஒருபாகத்திலுடையவர் நிலைபெற்று வாழும் திருக்கோயில்கள் எவ்விடத்தும் அறுகாலமும் விசேடபூஜைகளும், ஏழிசையோடு கூடிய பாடல்களுடன் ஆடல்களும் அளவில்லனவாய் அமைந்துள்ள திருவிழாச்சிறப்புகளும், எப்பொழுதும் குறைவின்றி நடந்துவரும்படியாகப் பரிபாலித்து வாழ்கின்றவர், தங்கள் நாயகராகிய சிவபிரானுக்கு அன்பராகிய அடியார்களது திருவடிச்சார்பல்லது மற்றொருசார்பும் இல்லாதவர் என்பதாம்.

இறைவன் தன்பொருட்டன்றி உயிர்களுக்குப் போகத்தைப்புரியவே - உமாதேவியோடுகூடிப்போகியா யிருப்பவனென்பதுதோன்ற மங்கையைப் பாகமாக வுடையவர் என்றார். பூஜையின்பயனைக் கொடுக்குங் கோயில் இம் மண்ணுலகத்திலன்றி மற்றொரு உலகத்திலும் இல்லையென்பதும், நித்தியம், நைமித்திகம், காமியம் என்னும் சிறப்புவிதிகளெல்லாம் இம் மண்ணுலகிலன்றி ஏனையவுலகங்களில் இல்லையென்பதுந் தோன்ற மன்னுங்கோயில் என்றார். இந்திராதிதேவர்களுடைய அரசியல் தங்கள் தங்களுக்குரிய போகநலங்களைப் பாதுகாத்துக்கொள்ளுந் தன்மை யுடைத்தாய் நிற்பனவேயன்றி, சிவதன்ம பரிபாலனங்கட் குரிமையுடைய தன்றென்பதும், மண்ணுலகத்தாரது அரசியல் யோகபோக ஞானங்கட்குரிய சாதனச்செயல்களைப் பாதுகாக்குந் தன்மையுடைத்தான தென்பதுந் தோன்ற - எங்கணும் பூசை நீடி ஏழிசைப்பாடல் ஆடல் பொங்கிய சிறப்பின்மல்கப் போற்றுதல் புரிந்துவாழ்வார் என்றார். இத்தகைத்தான சிறப்புடன் நடத்தும் அரசியலுக்குத் தான் பெரும்பேறு சிவனடியாரது திருவடிச்சார்பன்றி மற்றொன்றில்லையென்பது தோன்ற தங்கள் நாயகருக் கன்பர் தாளலால் சார்பொன்றில்லார் என்றார்.

இத்திருப்பாசுரத்தான், போகயோக ஞானப் பிரயோஜனங்கள் சாதனங்களன்றியமையாவாகலான் அச் சாதனங்கட்குரிய உலகம் இம்மண்ணுலகன்றி வேறில்லை என்றும், போகாதிகளுக்குரிய பிரயோஜனங்களைக் கொடுக்கும் இறைவனுக்கு இடம் இம் மண்ணுலகிலிருக்கும் கோயில்களன்றி வேறில்லை என்றும், போகாதி சாதனங்கட்கும், இறைவனுக்கும் இடமாயுள்ள இம் மண்ணுலகை ஆளும் அரசியலைப்பெற்ற அரசனன்றி இறைவனுக்குரிய சிறப்புகளெல்லாம் செய்யுங் கடப்பாடுடையவர் வேறொருவரன்று என்றும், அங்ஙனஞ்செய்யப்படும் சிறப்புகளால் அரசன் அடையப்படும் சிறந்த பிரயோஜனம் அடியாரடிச்சார்பன்றி வேறில்லை என்றுங் கூறப்பட்டன. (ங)

அன்பர்தானச் சிறப்பு.

தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க் காவன ஆகு மென்று
நாடிய மனத்தி னோடு நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்.

(எ - து.) தாம் அரசியல்வழியாய்த் தேடிய திரவியங்களும், அவ்வழியாய்ப் பெருகிய வினைச்செல்வங்களும், தில்லையம்பலத்தின்கண் நடனஞ்செய்தருளும் சிற்பெருமானது அன்பர்களுக்கே உரிமையானவைகளாம் என்று விரும்பிய எண்ணத்தோடு இருப்பவராதலால் அடியார் தம்மிடத்துக்கு எழுந்தருளும்போது, தமதுள்ளத்திற் பொருந்திய மகிழ்ச்சியானது மேலிட, அவ்வடியார்களுக்கு மறுபடியும் ஓர்குறையை யெண்ணி வேறோரிடம் குறித்துப் போகவொட்டாமல் வேண்டும்பொருளைக் கொடுத்து வருவாராயுள்ளவர் என்பதாம்.

அறநெறியே செலுத்தும் அரசியலால் தேடிய செல்வமென்பார் தேடிய மாடு என்றும், இறைவனடியார் அடிச்சார்பால் வந்தசெல்வமென்பார் நீடுசெல்வமென்றும், இவ்வகைத்தான செல்வம் அன்பொழிந்த என்புதோல் போர்த்திருக்கும் உடம்புடையார்க்கு ஆகாதென்றும், ஏனெனின், அவர்கள் தாம்தேடியபொருளையே ஈத்துவக்கும் இன்பம் அறியாது வைத்திழக்கும் வன்கண்ணராகலின் அவரை யொழித்து செல்வன் கழலேத்தும் செல்வராகிய அன்பர்களுக்கே ஆகத்தக்கதென்றும் எண்ணும் எண்ண முடையவரென்பார் ஆடியபெருமான் அன்பர்க்கு ஆவனவாகும் என்ற நாடியமனம் உடையவரென்றும், அவ்வன்பர்கள் யாவரேனுவாராயின் தம்முடைய செல்வம் பயன் பெற்றதென்று மிக்கமகிழ்ச்சியுடன் மீண்டும் அவர்கள் ஒருவர்பால் போகாவண்ணம் ஒருவாற்றானுங் குறைவின்றிக் கொடுத்துவரும் பெருங்கொடையாளர் என்பார் - அம் மனத்தினோடு நாயன்மார் அணைந்தபோது கூடிய மகிழ்ச்சிபொங்கத் தறைவறக் கொடுத்து வந்தார் என்றுங் கூறினார்.

அல்லதூஉம், உயிர்க்குயிராயிருந்து உபகரிக்கும் இறைவன்பாற் சார்ந்திருக்கும் அன்பறியாது உடற்பற்றைச்சார்ந்து வருவார்மாட்டுச் செல்லும் அன்பு பாசமாமேயன்றி அன்பு அன்றென்பது தோன்ற மன்றுள் ஆடிய பெருமான் அன்பர் என்றார். அவ்வன்புடையாரே தம்மையாளும் தலைவர் என்று எண்ணும் எண்ணமுடையார் என்பது தோன்ற நாயன்மார் (என்று) நாடியமனத்தின் என்றார். நாயகன் வரப்பெற்ற நாயகிக்கு மகிழ்ச்சிமேலிட்டு அவனைக் கூடத் தன்னைக் கொடுத்துக் களிப்புறுமாறுபோல வரும் களிப்பினையுடையவர் என்பது தோன்ற நாயன்மார் அணைந்தபோது தறைவறக் கொடுத்துவந்தார் என்றார்.

இத்திருப்பாசுரத்தான், நாயனார் ஆடுஞ்சேவடியார் அன்பர்பாலே அன்புடையாரென்றும் அவர் குறைவகற்றவே தாமதேடும்பொருளென்று அவர்க்கேகொடுக்கும் செல்வரென்றும் கூறப்பட்டன. (௪)

முத்தநாதன்பன்முறைதோல்வியடைதல்.

இன்னவா றொழுகு நாளில் இகற்றிறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால் அமர்மேற் கொண்டு
பொன்னணி ஓடை யானை பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப் பரிபவம் பட்டுப் போனான்.

(எ - து.) (திருவேடமே மெய்ப்பொருளாக எண்ணும் மெய்ம்மையினை யுடைய மெய்ப்பொருள்நாயனார்) ஆலயங்கள்தோறும் நடைபெற்றுவரவேண்டிய நித்திய நைமித்திகாதி பூஜைகளைக் குறைவற நடத்தியும், அடியார்களுக்கு வேண்டியவற்றைக் குறைவறக்கொடுத்தும் வருநாளில், ஓர்அரசன் அவரோடு பகைத்துநின்று, அவரைக்கொல்ல வேண்டுமென்கிற ஆசையினால், அவரோடு போர்செய்வதை மேற்கொண்டு பொன்னாற் செய்த நெற்றிப்பட்டத்தை யுடைய யானைகளையும், போரில்வல்ல குதிரைப்படைகளையும் காலாட்படைகளையும் மற்றுள்ளனவாகிய படைகளையும் ஒருங்கே சேர்த்துக் கொண்டுவந்து போர் செய்துசெய்து அனைகளையெல்லாம் இழந்துஇழந்து போவான். இவ்வாறு ஒருமுறையன்று பன்முறையிழந்து தோற்று, அவமானம் அடைந்து போவானாயினன் என்பதாம்.

ஓர்மன்னன் இகல்திறம்புரிந்து எனக்கூட்டுக. மற்றும் என்றது தேரும்வீரரும். வைர்நெடுந்தோளால் வென்று மாற்றலர் முனைகள்மாற்றி என்றுகூறியதனை ஈண்டறிக. அனவே - பகைவன் யானைமுதலிய படைகளை யுடையவனாயிருந்தும் தோள்வலி குன்றினவனாகலின் அவன் தோல்வியடைந்தானென்றும், நாயனார் படைவலியேயன்றி தோள்வலியில் வன்மைபெற்றிருந்தவராகலின் வெற்றிபெற்றாரென்றும் அறியக்கிடக்கின்றமை காண்க. ஓர்மன்னன் என்றதனால் பகைபாயுள்ளவன் இந்த ஒருவனன்றி மற்றொருவரும் இல்லை என்க.

இத்திருப்பாசுரத்தான், பகைவனைப்பலமுறையும் தோற்கும்படிச் செய்வதேயன்றித் தான் ஒருமுறையேனும் தோல்வியுற்றதில்லையென்று அரசரது போர்த்திறங் கூறப்பட்டது. (௫)

முத்தநாதன் திருவேடங்கொண்டு வருதல்.

இப்படி இழந்த மாற்றான் இகலினால் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சீல மறிந்து வெண்ணீறு சாத்தும்
அப்பெரு வேடங் கொண்டே அற்றத்தில் வெல்வா னாகச்
செப்பரு நிலைமை எண்ணித் திருக்கோவ லூரிற் சேர்வான்.

(எ - து.) இவ்வாறு பன்முறையுந் தோல்வியடைந்து யானைமுதலிய பலபடைகளையும் இழந்துபோதலை யுடைய அப்பகையரசன் பகைகொண்டு போரினால் வெல்ல வலியில்லாதவனாகி, மெய்ப்பொருள் என்னும் அரசர் திருவேடத்தில் வைத்திருக்கும் சீலத்தையுணர்ந்து, (தானும் அவ்வேடத்தினால் எளிதாய் வென்று விடலாமென்கிற எண்ணங்கொண்டு) சரீரமுற்றும் நீறுபூசும் முனிவர்வேடமாகிய அப்பெரிய சிவயோகி வடிவங்கொண்டு அரசன் தனித்திருக்கும் சமயத்தில் வெற்றிகொள்ளக் கொலைசெய்ய வேண்டுமென்கிற எண்ணத்தை யுடையவனாய் சொல்லக்கூடாத செயலை யெண்ணினவனாய் அவ்வரசர்வாழும் திருக்கோவலூரிற் செல்வானாயினன் என்பதாம்.

போர்த்திறத்தில் வெற்றிவேண்டும் வீரத்தன்மையைவிட்டு எவ்வகையினாலாவது கொலையை வேண்டும் கொலையாளிகள்போல் அத்தொழிலை மேற்கொண்டனன் என்பார் அற்றத்தில் வெல்வானாக என்றார். கொலைசெய்யுங்காலம் வாய்க்கப்பெறினும் அக்காலத்திலும் அவரைவெல்லல் அரிதென்று அவர்வீரத்தைக்கருதி, * "பெற்றம் (பசு) வலியில்நிலைமையான் வல்லுருவம (ஆகிய) புலியின்தோல் போர்த்து மேய்ந்தற்று" என்றதுபோலும் நீறுபூசிய உடம்புடைய னாயினனென்பார் வெண்ணீறுசாத்தும் அப்பெருவேடங்கொண்டே என்றார். பகைவனுக்கு வெண்ணீறு பொய்ப்பொருளாயினும், அவனுக்குப் பகைவராகிய நாயனாருக்கு மெய்ப்பொருள் வெண்ணீறன்றி வேறில்லை என்னும் உண்மையை உண்மையாக அறிந்தவன் என்பார் வேந்தன் மெய்ப்பொருள் சீலமறிந்து என்றார். அன்பர்வேடமே சிந்தைசெய்யுந் திறமுடையராய் சிந்தனைக்கும் அரியானாகிய சிவனைச் சிந்திதனைக்காணும் சொல்லுதற்கரிய நிலையுடையவரேயன்றி, திருவேடத்தைவிட்டுச் சிவனைக்காணும் புல்லிய அறிவினை யுடையரல்லரென்னும் அவரது சிந்தனையின் துணிவை இவன் நன்றாய்ச்சிந்தித்தனன் என்பார் செப்பருநிலைமை எண்ணி என்றார். அவரது சிந்தனையின்திறத்தை நன்றாயறிந்த திண்மையினால் பகையினால் வெல்லக்கருதாது வேடத்தால் மிக எளிதாய்வெல்லக்கருதி போர்க்களத்தை நாடாது அவரிருப்பிடத்தையே நோக்கிச்சென்றனன் என்பார் இகலினால் வெல்லமாட்டான் திருக்கோவலூரிற் சேர்வான் என்றார்.

இத்திருப்பாசுரத்தான், பகைவன் - தனது பகைவராகிய நாயனார் வெண்ணீற்றின் வேடங்கொண்டவரே மெய்ப்பொருளென்றும், நீற்றின் வேடங்கொண்ட அவர்பால் வேறுசெயலையும் குணத்தையுங்கண்டு அம்மெய்ப்பொருள் பாவனை மாறுபடுதல் இலம்

* திருக்குறள் அதி. கூடாவொழுக்கம் - ௨.

அன்றென்று எண்ணுதலே சிலமென்றும், தெளிந்த செப்பரும் நிலைமையுடையவரா யிருக்க, இவரை இவ்வழியான் வெற்றிகொண்டு வாழ்வதொழிந்து வினையேற்றிடத்துக் கொள்ளும் பகைமைபோல் இவரிடத்தில் கொண்டு பலகாலும் பலபடைகளையிழந்து தோல்வியடைந்து வந்தோமோ, அந்தோ! இதுகாறும் இவ்வுபாயத்தை எண்ணுதொழிந் தோமே என்று சற்று கவலையுற்றவனாய்ப் பின்னர் அக்கவலைவிட்டு வெண்ணீற்றின் வேடத்தைக் கொள்வதற்குத் துணிந்தனன் என்றும், அங்ஙனந் துணிந்தானாயினும், மீண்டும் நம்மைப பலமுறையும் அங்குள்ளார பலரும் அறிந்திருப்பாராகலான் ஒருவ ரும் அறியாவண்ணம் யாவரும் உறக்கங்கொள்ளும் காலத்தில் செல்வோமாயின் நமது எண்ணம் முற்றுப்பெறும் அதில் ஐயமில்லை என்றும் அவர் இருக்கும் திருக்கோவ லூருக்குச்சென்றனன் என்றுங் கூறப்பட்டன.

செப்பரும்நிலைமை எண்ணிஎன்றதனை, நாயனாரது மெய்ம்மை எண்ணத்திற்கும், பகைவனது பகைமை எண்ணத்திற்கும் பொருள் படமொறுகாணக. (சு)

மெய்யெலா நீறு பூசி வேணிகண் முடித்துக் கட்டி
கையினிற் படை கரந்த புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்.

(எ - து.) முத்தநாதன் என்னும் அப்பகையரசன், தனது உடம்புமுழுவதும் திரு நீற்றை நிறையப்பூசி, விரிந்திருக்கும் சடைகளை ஒன்றாகச் சேர்த்துக்கட்டி, தன்கையி னிடத்தில் சேதித்தற்குரிய ஆயுதங்களை உள்ளேவைத்து மறைத்த புத்தகக்கவளியைத் தாங்கிக்கொண்டு, கரியபுகையைத் தன்னுள்ளே வைத்திருக்குந்தீபம்போல மனத்தி னுள் தீமையாகிய கறுப்பைவைத்து, தவவேடத்தைப் பொய்மையாகக்கொண்டு சென்றனன் என்பதாம்.

அன்பர்கள் - மாயாமலத்தை நீறாக்கினவர் என்னும் அவ்வுண்மையைக்காண மெய் யெலாம் நீறுபூசியும், இறத்தல் பிறத்தல்களுக்கு ஏதுவாகிய கன்மமலம் முற்றுப்பெற்ற வர், எனவே - இனி பிறப்பதற்குக் கன்மமில்லாதவர் என்னும் அவ்வுண்மைவிளங்க விரிந்திருக்கும் சடையை முடித்துக்கட்டியும், * ஆணவமலத்தின் சத்தியைக்கெடுத்து அருட்சத்தியின் வழிநிற்பவரென்னும் அவ்வுண்மையுணரக்கையினில் புத்தகக்கவளியைக் கொண்டும் இருத்தலே தவவேடமாதலால், அம்மெய்த்தவவேடத்தை இக்கைதவன் பொய்மையாகக் கொண்டான் என்பார், மெய்யெலாநீறுபூசி வேணிகண்முடித்துக்கட்டி கையினில் புத்தகக்கவளியேந்தி, * பொய்த்தவவேடங்கொண்டு என்றார் மெய்த்தவ வேடத்துக்கு நீறும் சடைமுடியும், புத்தகக்கவளியும் கூறியதுபோல், பொய்த்தவ வேடத்துக்குப் படைகரந்த புத்தகத்தையும், மைபொதி விளக்கேயென்ன கறுப்புவைத்த மனத்தையும் அடையாளமாகக் கூறினார். அபவித்திர ஸ்தானத்தில் தோன்றும் புண் பவித்திரம் எனவும், அதத்வவாதிகள் தத்துவவாதிகள் எனவும் பெயர்பெற்றதுபோலும் முத்திக்குக் கடையனாகிய இவன் முத்தநாதன் எனப் பெயர்பெற்றனனென்க.

இத்திருப்பாசுரத்தான், இருளுக்கிடமல்லாத சுடரொளி, இருளுக்கிடமாகிய தீப சம்பந்தப்பட்டதுபோல், மெய்த்தவத்திற்குரிய திருவேடம் பொய்த்தவன்பால் சம் பந்தப்பட்டதென்றும் "படைக்கலமாக வுன்னுமத் தெழுத்தைஞ்சு என்றனுவிற்கொண் டேன்" என்றதுபோல் பாசமறுக்கும் படையாகிய புத்தகங்கள் கவளியில் படைகளா கவே புகுந்தனவென்றும், முத்தநாதன் என்னும் திருநாமம் பிறவிநாதன்பால் சென்ற தென்றுங் கூறப்பட்டன. பாடபேதத்தால் புத்திநாதன் என்பாருமுளர். (எ)

* வேடம்பொய்த்து, அவங்கொண்டு எனவும் மாற்றிப் பொருள் கொள்க.

முத்தனுதன் அரசன்வாயிலை யணுகல்.

மாதவ வேடங் கொண்ட வன்கணன் மாடந் தோறும்
கோதைசூழ் அளக பாரக் குழைக்கொடி யாட மீது
சோதிவெண் கொடிக ளாடுஞ் சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான்.

(எ - து.) பெருமையினையுடைய தவவேடத்தைக் கொண்ட வன்னெஞ்சுடைய முத்தநாதன் மேல்மாளிகைதோறும் மலர்மாலைசூழ்ந்த கூந்தலையுடைய குழைந்த கொடி போன்ற மகளிர்கூத்தாட, ஒளியினையுடைய வெள்ளியகொடிகள் அசைந்தாடும் பிர காசம்பொருந்திய பெரியவீதியிற்சென்று, சேதிநாட்டரசராகிய நாயனுரது அழகிய இரத்தினங்க ளழுத்திய அரண்மனைவாயலின்கண் சேர்ந்தனன் என்பதாம்.

இத்திருப்பாசுரத்தான்,வன்னெஞ்சுடையார் மாதவவேடங்கொள்ளினும் வன்கண் ணரே என்றும், அரசர்பெருமான் இருக்கும்வீதியில் அளகபாரக் குழைக்கொடிகள் மேல்மாளிகையினும், சோதிவெண்கொடிகள் மேல்வெளியிடத்தினும் ஒப்ப அசைந்து ஆடிக்கொண் டிருக்குமென்றும், அங்ஙனமான பிரகாசத்தோடும் விளங்குகின்ற அரச னுடைய வாயிலை முத்தநாதன் போயடைந்தான்என்றுங்கூறப்பட்டன.

மங்கையர்—அளகபாரத்தை யுடையராயினும், கொடிபோன்றதன்மையை, மே லோங்கியிருக்கும் கொடிகளிடத்தில் கற்றனரென்றும், கொடிகள் அசைந்தாடுந்தன் மையை நடனஞ்செய்யும் மங்கையரிடத்துக் கற்றனவென்றும் அவ்வலங்காரந்தோன்ற மாடமீது தோறும் குழைக்கொடியாட, வெண்கொடிகளாடும் என்றார். (அ)

தடையிலாது வந்தவனைத் தத்தன் தடுத்தல்.

கடையுடைக் காவ லாளர் கைதொழு தேற நின்றே
உடையவர் தாமே வந்தார் உள்ளெழுந் தருளும் என்னத்
தடைபல புக்க பின்பு தனித்தடை நின்ற தத்தன்
இடைதெரிந் தருள வேண்டுந் துயில்கொளும் இறைவன் என்றான்.

(எ - து.)கடைவாயலில் காவல்கொண்டிருக்கின்ற காவலாளர்கள், (அந்த வஞ்ச வேடத்தானைக் கண்டமாத்திரத்தில், நம்மை ஆளாகவுடைய அடியார் திருவுளங்கூர்ந்து வலிய எழுந்தருளினுரென்று, கைகுவித்து வணங்கி தூரத்தில்நின்று, உள்ளே எழுந்த ருளலாமென்று சொல்ல, (அந்த முதற்றடையைக் கடந்து அஃதேபோல் ஒவ்வொரு வாயிற்காவலாளர்கள் சொல்லத்) தடைகளெல்லாங் கடந்து உள்ளேசென்றபோது, அரசர்பெருமானுக்கு உயிர்க்காவலாய் நின்றதத்தன் என்பவன், அரசரது சமயந் தெரிந்து உள்ளே தேவரீர் எழுந்தருளவேண்டும், இபபோது அரசனுர் நித்திரைசெய்யும் சமயமா யிருக்கின்றது என்றான் என்பதாம்.

கடையுடைக்காவலாளர், உடையவர் தாமேவந்தார் (என்று) கைதொழுது ஏற நின்றே, உள்ளெழுந் தருளுமென்ன எனக்கொண்டு கூட்டுக.

இத்திருப்பாசுரத்தான் கடைக்காவல்முதல் தனிக்காவல் இறுதியாகத் தடைபட வேண்டிய முத்திநாதன் தடைபடாது சென்றமைக்குக் காரணம் அவன்கொண்டுவந்த திருவேடத்தாலென்றும், தனித் தடையாயுள்ள தத்தன், தடைபடுத்தாது உள்ளே செல்லவிடுந்தன்மைற்றி சிறந்தவனுயினும், அவ்விடம் அரசன் தன்மனைவியோடு தனித்திருக்கும் இடமாயிருத்தலினுனும், துயில்கொள்ளும் சமயமாயிருத்தலினுலும், இடைதெரிந்து அருளவேண்டுமென்று சொன்னனென்றுங் கூறப்பட்டன.

காவலாளர்கள் தமதுகாவலுக்கு இடமாயிருக்குங் வாயிலின்கண் யாவர்வரினும் முன் தடைபடுத்தி, சமயமறிந்து பின்விடவேண்டியதுமுறையும், அரசனுணையுமாயிருக்க முத்தநாதன்பால் அவ்விரண்டையும் செய்யாதுவிட்டு, உடையவர் தாமேவந்தார் என்று

எண்ணத்தால் எண்ணியதும், கைகள் தலைமேலேற்றிக் காயத்தால் தொழுததும், உள்ளெழுந்தருளுமென்று வாக்கால் இன்சொல் வழங்கியதும், அரசனாணையால் நடந்தன வன்றி அவர்கள்தாமே நடத்தினவரன்றாகலான் அவர்கள் அவனைத் தடைபடுத்தாது விட்டதும், தொழுததும் முறையேயாயிற்றென்க.

இதனால், அரசர் பெருமான் தான் அரசராயினும் மெய்த்தவமுடையார் ஆணையின் வழி தான் நிற்கவேண்டுமென்னும் அவாவுடையவரேயன்றி, அவர்கள் தன் ஆணையின் வழி நிற்கவேண்டுமென்னும் அகங்காரமுடையவரன்றென்றும் அவர் திருவேடமே மெய்ப்பொருளெனக் கொண்டிருக்குந்திறத்தில் திண்ணியரென்றுங் கூறப்பட்டன.(க)

தனித்தடைதடுத்து பள்ளியறைக்குள் செல்லல்.

என்றவன் கூறக் கேட்டே யானிவற் குறுதி கூற
நின்றிடு நீயு மென்றே அவனையு நீக்கிப் புக்குப்
பொன்றிகழ் பள்ளிக் கட்டில் புரவலன் துயில மாடே
மன்றலங் குழல்மென் சாயன் மாதேவி இருப்பக் கண்டான்.

(எ - து.) மெய்க்காவற்காரனாகிய தத்தன், அரசர் உறங்குகின்றார் என்றுசொல்ல, அதனைக்கேட்டே (ஏதத்தா இதுவரையில் ஆங்காங்குள்ள காவலாளிகள் எப்படி தடைசெய்யாமல் விட்டனரோ, அப்படியே நீயும் தடைசெய்யாமல் என்னை உள்ளேவிட்டு இங்ஙனம் நிற்பாயாக, ஏனெனில்) யான் இவ்வரசனுக்கு உறுதியான உபதேசமொழிகளை உபதேசிக்க (இப்போது வந்துள்ளேன், அதற்கு இதுதான் சமயம்) நீயும் இங்ஙனமே நிற்பாயாக என்று அந்தத்தத்தனையும் தடைசெய்யாவண்ணம் விலக்கி உள்ளே சென்று, பொன்னாற் பிரகாசிக்கின்ற சயனக்கட்டிலில் நாயனார் நித்திரைசெய்துகொண்டிருக்க, அந்நாயனார் அருகில், நறுமணங்கமழும் கூந்தலையும், மெல்லிய சாயலையுமுடைய பத்தினியாகிய மாதேவி யிருக்கப் பார்த்தனன் என்பதாம்.

எங்கும் தடையென்னும் சொல்லைக் கேளாதவன் அச்சொல்லைத் தத்தனால் கேட்டனன் என்பார் கேட்டு என்னாது என்று அவன் கூறக்கேட்டே என்றார். உனது அரசன் மனையாளோடுகூடிச் சிற்றின்பத்தை அனுபவித்தற்குரிய சிறியோனன்று, அருளோடு கூடிப் பேரின்பத்தை அனுபவித்தற்குரிய பெரியோனாகலின் அப்பேரின்பம் விலக்கணங்கூறும் நூலை உபதேசிக்கவந்த என்னை நீ தடுத்தல் அரசனுக்கான செயலன்று என்றுகூறி அவனும் உள்ளே வாராவண்ணம் தடுக்க எண்ணினான் என்பார் நீயு நின்றிடு என்றான் என்றார் சிற்றின்பானுபவத்துக்கேற்ப நறுமணங்கமழும் கூந்தலையும், மயில்போலுஞ் சாயலையும் உடையவளாயிருந்தும், அரசன் உறக்கத்தைத்தவிர்க்க எண்ணாது அவன் உறக்கத்திற்கேற்ப வேண்டும் உபசாரங்களைச்செய்து நின்றனள் என்பார் புரவலன் துயில மாடே மாதேவி இருப்ப என்றார்.

மாதேவியாகிய உமாதேவி தனது நாயகனாகிய மாதேவன் ஒருசெயலுஞ்செய்யாது உறங்குகின்றவன்போல் சும்மாவிருக்கத் தான் பஞ்சகிருத்தியங்களையும் செய்ய உறங்காதிருந்து உயிர்களுக்கேற்றதொழில்களை அவ்வப்பொழுது அம்மஹாதேவனைக்கொண்டே செய்தலால் மஹாதேவி எனப்பட்டார், அஃதேபோல் அரசனாது மனைவியார் அரசன் உறங்குதல்செய்ய இப்பொழுது என்செயவருமோ அச்செயலைச் செய்விக்கவேண்டுமென்று விழித்திருந்தனராதலால் மாதேவி என்றார்.

இத்திருப்பாசுரத்தான், வாயில்கள்தோறும் தடையொன்று உளதென்று கூறக்கேளாதுவந்த பொய்த்தவன், அங்கு தத்தனால் இடைதெரிந்தருள வேண்டுமென்னும் ஒருதடையான சொல்லைக்கேட்டனன் என்றும், தத்தனது தடை தடுக்கக்கூடாத தனித்தடையாகலின் அத்தடையுந்தடுக்க யான் இவற்கு உறுதிகூற வந்தனன் என்றும், அச்சொல்லான் தத்தன் மயங்கியதைப் பொய்த்தவன் குறிப்பானுணர்ந்து, துணிந்தவனாய் நீயும் என்னுடன் உள்வாராமல் இவ்விடத்திற்றானே நின்றிடுஎன்றும், திருவேடத்தை

யும், இவற்கு உறுதிகூற என்றுசொல்லிய சொல்லுக்கேற்பப் புத்தகக்கவளியை யுடைய வனுயும்காணப்படலால் தத்தன் அவனுணேயைக் கடத்தற்கஞ்சிநிற்ப, அவனேயும் நீக்கிப் புக்கானென்றும், புகுந்த அவன் அரசனார் உறங்கியிருத்தலேயும் மனைவியார் விழித்திருத்தலேயும் கண்டனன் என்றுங் கூறப்பட்டன. (கம)

தேவிதுயிலுணர்த்த நாயனார் பொய்த்தவனை வணங்கல்.

கண்டுசென் றணையும் போது கதுமென எழுந்து தேவி
வண்டலர் மாலை யானை யெழுப்பிட உணர்ந்து மன்னன்
அண்டர்நா யகனார் தொண்ட ராமெனக் குவித்த செங்கை
கொண்டெழுந் தெதிரே சென்று கொள்கையின் வணங்கி நின்று.

(இ - ள்.) பத்தினியார் அருகே யிருப்பதைக்கண்டு (அஞ்சாது) அரசனைச் சமீபித்துச்செல்லும்பொழுது, தேவியானவள் விரைந்து பதறியெழுந்து, வண்டுகள் ஒலிக்கின்ற மாலையையுடைய அரசரையெழுப்ப அரசனும் துயில்விட்டெழுந்து எதிரேநிற்கின்ற வஞ்சவேடத்தானைக்கண்டு, இவர் தேவர்கள் தலைவனாகிய சிவபிரான் அடியவராமென்று எண்ணி, செவ்விய இரண்டுகைகளையும் அஞ்சலியாயகக் குவித்துக்கொண் டெழுந்து எதிரேசென்று வணங்கவேண்டிய முறைப்படி வணங்கிநின்று என்பதாம்.

தேவி கதுமெனஎழுந்து என்றும், மன்னன் அண்டர்நாயகனார் தொண்டராமென உணர்ந்து என்றும் கூட்டுக.

பொய்த்தவனாகிய பாதகன் அரசனார் உறங்குவதைக்கண்டு மனைவி விழித்திருப்பதைக்காணாது தான் எண்ணிவந்த செயல் முற்றுப்பெறுவதற்கு நல்லசமயம் வாய்த்ததென்றெண்ணி அப்பொழுதே அச்செயலைச் செய்ய அரசர்பெருமானைச் சமீபித்தனனென்பார் கண்டுசென்றணையும்போது என்றார். புண்ணியசீலியாகிய அம்மனைவியார், அவன்விரைந்துவந்த செயலால் அவனெண்ணத்தைக்காணாது அவன்வேடத்தைக்கண்டு அஞ்சினவராய் அவன் விரைவினும் விரைந்தெழுந்தனர் என்பார் தேவி கதுமென எழுந்து என்றார். உலகநெறிகூறும் நூற்படி துயிலொழித்தலால் பாதகம் வருவது நிச்சயமாயினும் சிவதருமங்கூறும் நூற்படி அப்பாதகம் புண்ணியமேயாகும் என்றும் இறைவனடியவராகிய இவருக்கு நமதிறைவனன்றோ உபசரித்து வேண்டியவற்றைக் கொடுத்தனுப்பவேண்டியவர் என்றும் துணிந்து துயிலொழித்தனரென்பார் வண்டலர் மாலையானை எழுப்பிட என்றார்.

எழுந்த அரசனும், தன்முன் திருவேடத்தனாய்க் கண்ணிரம்பநிற்கும் கள்வனைக் கண்டு அந்தோ! இவர் தேவதேவனாகிய இறைவனடியாரென்று அறிந்தனர் என்பார் மன்னன் அண்டர்நாயகனார் தொண்டராமென உணர்ந்து என்றார். அப்பொய்த்தவவேடத்தான்வந்தகாலத்தையும், வந்துநின்ற இடத்தையும் சிறிதுமெண்ணி, இவன்யாவன் என்று ஐயுறாது மெய்த்தவவேடத்தனே என்று நிச்சயித்து அதற்கேற்ப அடியார்களைக் கண்டவுடன் செய்யத்தக்க உபசாரங்களெல்லாம் விதிப்படி யாவும் முறையே செய்தனரென்பார்—செங்கை குவித்துக் கொண்டெழுந்து எதிரேசென்று கொள்கையின் வணங்கிநின்று என்றார்.

அடியார்கள் தூரத்தே வரக்காணுங்காலத்து எதிர்கொண்டுசெல்வதே யன்றி, சமீபத்தில் வருங்காலத்தும், மிகநெருங்கிய காலத்தும், நான்கடியேனும் மூன்றடியேனும் இரண்டடியேனும் ஓரடியேனும் எதிர்கொள்ளவேண்டுமென்பது விதியென்க. எனவே அடியாரைப் பூஜிப்பதாகிய * நவபுண்ணியத்துள் இஃதொன்றென்க. ஆகலின் அரசன் கட்டிலைவிட்டிறங்கி ஓரடிவைத்ததும் எதிர்கொண்டதாயிற்று. (கக)

* நவபுண்ணியம்:—எதிர்கொளல், பணிதல், ஆசனத்திருத்தல், தாள்கழுவல், அருச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங்காட்டல், புகழ்தல், அமுதமேந்தல் என்பன.

முத்தநாதன் ஆகமம் கொணர்ந்தேனெனல்:

மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ என்று கூற
உங்கள்நா யகனார் முன்னம் உரைத்தஆ கமநூன் மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப என்றான்.

(எ - து.) அடியேனுக்குச் சைவமங்கலம் மேன்மேல்வளருமாறு, என்னுடைய வாழ்வானது ஒருருக்கொண்டு வந்ததென்று சொல்லுமபடி, தேவரீர் இங்கெழுந்தருளப் பெற்றதாகும். யாதுகாரணங் கருதிவந்ததோ என்று வினவ, (அப்பாதகன்) உங்களுடைய இறைவன் அனாதியிற்சொன்ன சிவாகம நூல்களுக்குள்ளே, இவ்வுலகில் எவவிடத்திலுங் கிடைத்தற்கரிய ஒருஅரியநூலை உனக் குபதேசிக்கும்படியாகக் கொண்டு வந்தேன் என்று சொன்னான் என்பதாம்.

தம்மைநோக்கிவரும் அடியார்களைத் தமதுவாழ்வென்றும், அவ்வாழ்வானது தமக்கு அவ்வப்பொழுது வேண்டும் மங்கலங்களைக் கொடுத்தற்கு ஒருபொழுதன்றி பலபொழுதும் வருவதென்று எண்ணும் புண்ணிய அறிவுடையவரென்பார் என்வாழ்வு, மங்கலம் பெருக வந்து அணைந்தது என்றார். பெருஞ்சீலத்தராகிய தேவரீர், பள்ளிகொள்ளும் இடத்தையுங்கருதாது, அடியேன் உறங்கும் சமயத்தையும் நோக்காது வந்தது யாது கருதியோ, அதனை விரைந்து கட்டளையிடவேண்டு மென்பார் - இங்கெழுந்தருளப்பெற்றது என்கொலோ என்றார். நீகூறியபடி இவ்விடத்தையும் உனதுசமயத்தையும் நோக்காது வந்தது என்பொருட்டன்று உன்பொருட்டேயாம. அது யாதெனின்:—ஆன்மாக்கள் மூலம்நீக்கிப் பேரின்பம் அடையும் முத்தியிலக்கணத்தை உங்கள் இறைவனார் ஆகமங்களிற் கூறியிருக்கின்றாராகலின், அவ்வாகமத்தை உனக்கு உபதேசிக்க என்பார் - உங்கள்நாயகனார் உரைத்த ஆகமநூல் இயம்ப என்றார். அந்நூல் புதிதாய் உண்டானதன்று; அனாதி என்பார் முன்னம் உரைத்த என்றார். அந்நூல் உலகத்தில் யாவரானும் கண்டறியாததொன்று என்பார் - மண்மேல் எங்கும் இல்லாதது ஒன்று என்றார்.

இவையிரண்டு திருப்பாசுரத்தானும் கள்ளவேடத்தனைத் துயில்நீங்கி எழுந்த போதே மெய்யடியராகக் கண்ட அக்கொள்கைக் கேற்ப, எதிர்கொள்ளல் தொழுதல் முதலிய வழிபாடுகளெல்லாம் முறைதிறம்பாது அரசனார் செய்தனரென்றும், பின்னர், வந்த அவனது வேண்டுகோள் யாதோ அதனைமுடித்தல் இப்போது இன்றியமையாத செயலென்று அதனைவிரைந்துகேட்டனரென்றும், அவன் கொண்டகோலத்துக்கேற்பக் கூறவேண்டிய சொற்களைப் பொருந்தக்கூறினானென்றுங் கூறப்பட்டன. (கஉ)

முத்தநாதன் தனித்திருக்க வேண்டுமெனல்.

பேறெனக் கிதன்மே லுண்டோ பிரானருள் செய்த இந்த
மாறிலா கமத்தை வாசித் தருள்செய்ய வேண்டு மென்ன
நாறுபூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருக்க வேண்டும் என்றவன் விளம்ப வேந்தன்.

(எ - து.) (அவ்வஞ்சகன் ஆகமநூலை உபதேசிக்கவந்தனன் என்று சொல்லியமாத்திரத்தில் என்னையனே!) அடியேன் அடையவேண்டிய பேறுகளுள் இதன்மேல் அடையவேண்டியபேறு வேறொன்றுண்டோ, எமதுபெருமான் அருளிச்செய்த தேவரீரிடத்திலுள்ள சித்தாந்தமாகிய ஆகமத்தை வாசித்து அதன்பொருளை அடியேனுக்கு விளங்க அருளிச்செய்ய வேண்டும் என்றுகேட்க, அதற்கு அக்கொடியோன் நறுமணங்கமழும் பூமாலை சூடியுள்ள கூந்தலையுடைய தேவி இங்கு இருத்தல்கூடுமோ! (ஆகலான்)அவளில்லாமல் நானும் நீயும் தனியிடத் திருக்கவேண்டுமென்றுகூற அரசனார் என்பதாம்.

சிவஞானம் உணரப்பெற்றவரால் அடையப்படும்பேறு ஆன்மசுத்தி என்றும், அதன்மேற் பெறும்பேறு பாசக்ஷயம் என்றும், அதன்மேற் பெறும்பேறு இறைவனது

ஸ்ரீபாதத்தை யணையப்பெறுதல் என்றும் அதன்மேற்பெறும்பேறு திருவேடமே மெய்ப் பொருளென்றும் மாறுபாடில்லாமற் கூறுவது ஆகமமேயாகலான் மாறில் ஆகமம் என்ரூர். அவ்வாகமத்தைத் தேவரீரால் உபதேசம் செய்யப்பெறின் அதனினும் அடியேன் பெறத்தக்கபேறு வேறொன்றுண்டோ இல்லை ஆகலான் - பேறெனக்கு இதன்மேல் உண்டோ என்ரூர். இதனை உபதேசம் செய்வதில் தேவரீரைப்போல் கருணையுடையார் ஒருவரும்இல்லை என்பதை இவ்விடத்தில் இச்சமயத்தில் வந்ததனாலேயே தெரிந்து கொண்டேனாகலான், தேவரீர் எண்ணியபடியே அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென் பார்- வாசித்தருள்செய்யவேண்டுமென்ன என்ரூர். அங்ஙனம் சொல்லியபோது பொய்த் தவன் அரசனைநோக்கி, 'இது ஞானோபதேசமாதலால், இதற்கு உபதேசிக்கத்தக்க நானும், உபதேசம் பெறத்தக்க நீயும் வேண்டுமேயன்றி உபதேசத்தானமாகிய இங்கு மனைவியும் இருத்தல் முறைமையன்று'' என்று கூறினான் என்பார் - மாதுதவிர நானும் நீயும் வேறிடத்திருக்கவேண்டுமென்று அவன் விளம்பஎன்ரூர்.

இத்திருப்பாசுரத்தான், செய்வினையைக்காட்டும் இவ்வுலகம் செய்வோன் ஒருவன் உளன்' எனக் காட்டுவதால் அப்பதியையும், அப்பதி அறிவோனைவிட்டு இல்லையாகலான் அறிவோனாகிய பசுவையும், அறிவோனாயிருந்தும் அப்பதியை அறியாமலே விடத்தலால் அங்ஙனம் அறியாமையைச் செய்வதாகிய பாசத்தையும், பிரமாணமுகத் தானும் இலக்கணமுகத்தானும் உணர்த்தவல்லதும், பின்னர் அறியாமையைச் செய்வதாகிய பாசத்தைப்போக்கி, அறிவாகிய ஆன்மாவைச் சிவஞானத்தினால் பிரகாசிப்பித்து, பிரகாசிப்பித்த அந்தஞானமே கண்ணாய் சிவசொரூபத்தைக் கண்டு பேரின்பப் பேற் றை யடையச்செய்வதுமாகிய ஆகமோபதேசம் தேவரீர்செய்ய அதனை யுான் பெறு வதைப்பார்க்கிலும் எனக்குப்பேறு இதன்மேல் இல்லைஎன்றும், அத்தகைச் சிறப் புடைய ஆகமம் சிவபிரான் அருளியதாகலான் அதனைத் திருவேடத்தராகிய நீர்தான் உபதேசிக்கத்தக்க நல்லாசிரியர் என்று அரசனார் கூறினாரென்றும், அப்பொய்த்தவன் அரசர் பெருமான் வேண்டியபடியே நல்லாசிரியனைப்போலும், தனித்திருக்க வேண்டிய முறைமையைக் கூறினானென்றுங் கூறப்பட்டன. (கக)

மனைவியை அந்தப்புரத்துக்குப் போகக்கூறல்.

திருமக ளென்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
புரிவுடன் விரைய அந்தப் புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத் தவிசின்மே லிருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி இனியருள் செய்யும் என்ரூர்.

(எ - து.) (அரசர்கோமான்) தமதருகே இலக்குமிதேவியைப்போல நிற்கின்ற தேவியாரை இனியவிருப்பத்தோடு பார்த்து, நீ சீக்கிரமாக உனதுஅந்தப்புரத்தில் செல் லக்கடவாய் என்று போகச்செய்து, தனக்கு மெய்ப்பொருளைத் தரவந்த தவவேடமுடை யானை அங்குள்ள ஆசனத்தின்மேல் இருக்கச்செய்து, தாமும் ஆசனமின்றி பூமியி லிருந்து துதித்து (யான் தனித்திருக்கின்றேனாகையால்) இனி ஆகமத்தை அருள் செய்யுமென்று கூறினார் என்பதாம்.

திருமாலை எக்காலத்தும் நீங்காத இயல்பினையுடைய இலக்குமியைப்போலத் தன்னைவிட்டுநீங்காத மனையாட்டி என்பார்—திருமகளென்னநின்ற தேவியார் என்ரூர். செல்வத்தலைவியாய் நிற்கின்ற தேவியை இவ்விடத்தில் நில்லாமற்போ என்றுசொன் னால் தம்மிடத்திருக்கும் செல்வத்தைப் போவென்றுசொல்வதனோ டொக்குமாகவின், அக்கமொழிகூறத் துணியாது, இவ்விடத்தினும் அரியகாவலிடத்தில் என்னால் விரும் பப்படும் அரிய பொருள்போன்ற நீ வேறிடத்தில் போகாது அங்ஙனே போயிருத்தல் வேண்டும் என்று மிக்கபரிவுடன் கூறினார் என்பார் தம்மைநோக்கிப், புரிவுடன் விரைய அந்தப்புரத்திடைப் போகஏவி என்ரூர். தவவேடத்தில் இச்சையையும், ஆகமசாஸ்

திரத்தை உணரத்தக்க ஞானத்தையும், அதனைக் கேட்பதில் விரைந்தமுயற்சியை (கிரியை) யும், ஒருங்கேதரவல்ல சிவவேடம் உடையவன் என்பார் - தருதவவேடத்தானே என்றார். பொருட்செல்வியை அந்தப்புரத்திடைப் போகச்செய்து ஞானச்செல்வி தனதுஉள்ளமாகிய அந்தப்புரத்தில் அமர்ந்திருக்க ஆசனந்தந்தனர் என்பார்—தூபிசின் மேலிருத்தினென்றார். ஞானச்செல்விக்குத் தமது உள்ளத்தை ஆசனமாக்கி அதில் இருத்தியபின்னர் அந்தஞானச் செல்வியால் ஆக்கப்பட்டு ஊட்டப்படும் செவியுணவை உண்பதற்கும், உண்டு பசிதீர்வதற்கும், கேட்டல் சிந்தித்தல்களுக்கு இடங்கொடுத்திருந்தனர் என்பார் தாழும்இருநிலத்திருந்து என்றார். யான் கேட்டுச் சிந்தித்த பொருள்களைக் காக்குந் தன்மையுடையேன் என்பார் போற்றி என்றும், நீர் உபதேசிக்கும் பொருள் பாழ்பட்டுப் போகாவண்ணம் காக்குந்தன்மை யுடையனுயிருத்தலின் இனி ஐயுறாது உபதேசிக்கலா மென்பார் இனி அருள்செய்யும் என்றார்.

இத்திருப்பாசுரத்தான், பொருட்செல்வியாகியதேவியை அந்தப்புரத்திலும் ஞானச்செல்வியைத் தனது உள்ளத்திலும் இருக்கச்செய்து, கேட்டலாதி ஞானச்செயலில் முயற்சி யுடையவராயினு ரென்றுகூறப்பட்டது. (௧௪)

நாயனரது வெற்றித்திறங்கூறல்.

கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்தஅப் பரிசே செய்ய
மெய்த்தவ வேட மேமெய்ப் பொருளெனத் தொழுது வென்றார்.

(எ - து.) (இனி அருள்செய்ய வேண்டுமென்று நாயனர் கூறவும், அவ்வஞ்சவேடத்தன்) தனது கைத்தலத்திலிருந்த வஞ்சகமாகிய புத்தகக் கவளிகையைத் தனது மடியின்மேல் வைத்து, கவளிகையை அவிழ்த்து அதனுள்ளிருக்கும் புத்தகத்தை எடுப்பவனைப்போல, (அபிநயச்செய்கையைக் காட்டினன். காட்டும்போது) அரசன் நீங்காத அன்புடன் அவன்காலில் வீழ்ந்துவணங்கினர், அங்ஙனம் வணங்கும்போது, அப்பாதகன் கவளிக்குள் இருந்த உடைவாளையெடுத்து, தான் முன்எண்ணிவந்த எண்ணப்படியே செய்தனன். (அரசனர் அவன்செய்கையையும், அச்செய்கையான் அவன் தன் பகைஞன் என்பதையும் உணர்ந்தவராய், அவனது வஞ்சச்செயலையும் அவனையும் பொருளாகக்கருதாது,) அவன்கொண்ட மெய்த்தவவேடத்தையே மெய்ப்பொருளெனத் தெளிந்து அவ்வேடத்தைத் தொழுது அவனைவென்றனர் என்பதாம்.

அவர் வணங்கும்போதில், கைத்தலத்திருந்த வஞ்சக்கவளிகை மடிமேல் வைத்து, புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்து, பத்திரம்வாங்கி எனக்கொண்டுகூட்டுக.

உபதேசம்பெறுவதில் அவரது தீவிர முடைமைதோன்ற வணங்கினரென்றும், வணங்கி யெழுந்திருப்பாராயின் தனதுஎண்ணம் முற்றுப்பெறுதல் அரிதென்றெண்ணித் தீவிரமுற்று அதற்குரியசெயலைத் தொடங்கினன் என்பதுதோன்ற வஞ்சக்கவளிகை மடிமேல்வைத்து, புத்தகம் அவிழ்ப்பான்போன்றுபுரிந்து, பத்திரம்வாங்கி என்றும், கவளிகையினின்றும் வாளை வாங்கியதுபோல் அவர்உயிரையும் தான்முன் எண்ணியது போல் வாங்கத் துணிந்தனன என்பதுதோன்ற தான்முன் நினைந்த அப்பரிசேசெய்ய என்றும், அப்பாதகன் தான் முன்நினைத்தபடி செய்ததுபோலும், அந்நாயனரும் அவனதுவேடத்தை மெய்ப்பொருளெனத்தான்முன் எண்ணியதுபோலும் வணங்கினரென்பது தோன்ற மெய்த்தவவேடமே மெய்ப்பொருளெனத் தொழுது என்றும், பொய்த்தவன் மெய்த்தவ வேடத்தைக்கொள்ளாது தம்முன்வந்து தம்மிடத்து அவன் செய்யவெண்ணியதைச் செய்திருப்பானுயின் வெற்றி அவனுடையதே, அங்ஙனமின்றி அரசனர் மெய்ப்பொருளாகக் கொண்டிருக்கும் மெய்த்தவ வேடங்கொண்டுவந்து அவனெண்ணியதைச் செய்தனனுதலின் அச்செயலால் வந்த வெற்றி மெய்த்தவவேடத்ததே என்பதுதோன்ற வென்றார் என்றுங்கூறினர். (௧௫)

மறைத்தவன் புகுந்த போதே மனம்அங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கட் கூடி வாளினால் எறிய லுற்றான்
நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையால்
தரைப்படும் அளவில் தத்தா நமரெனத் தடுத்து வீழ்ந்தார்.

(எ - து.) மெய்த்தவத்தால் பொய்த்தவத்தை மறைத்துவந்த முத்தநாதன் அரசனார் படுக்கையறையில் புகுந்தபோதே, தனதுமனத்தை அவ்வுள்ளிடத்தில் வைத்த தத்தன் என்னும் மெய்க்காவற்காரன் (அவ்வஞ்சகன்செய்த அச்செய்தியைக்கண்ட அக்கணமே (துணுக்கென) உள்ளேசென்று தனது வாட்படையால் அவ் வஞ்சகனை வெட்டத் தொடங்கினான். (அப்பொழுது) பொங்கிவருகின்ற உதிரவெள்ளமானது சரீர முற்றும் பரந்து வழிய நிலத்தில்வீழ்கின்ற நாயனார், அங்ஙனம் வீழ்கின்ற அந்தச்சமயத்தில் தமது நீண்டகையினால் தத்தா! அவரை நீ வெட்டவேண்டாம், நமது சுற்றத்தாராகிய அடியவர் என்று தடுத்துப் பூமியில் வீழ்ந்தனர் என்பதாம்.

நிறைத்த செங்குருதிசோர வீழ்கின்றார் தரைப்படும் அளவில் நீண்டகையால் தத்தா நமன் தமர் எனத்தடுத்து வீழ்ந்தார் எனக் கொண்டு கூட்டுக.

தனது தீய எண்ணத்தைத் திருவேடத்தால் மறைத்துவந்தனன் என்பார் - மறைத்தவன் என்றார். தத்தன் மெய்க்காவற்காரனாகலின் அத்தீயோன் கொண்ட வேடத்தின் மெய்ம்மையினையும், அவன் யாதுசெய்ய இச்சமயம் வந்து உள்ளே புகுந்தான் என்று அதன் மெய்ம்மையினையும், பள்ளியறையில் அவனது மெய்வேடத்தைக்கண்டு நமதரசன் செய்யப்போகும் செயல் யாதென்று அச்செயலின் மெய்ம்மையினையும், காணத் தன் மனத்தை வேறு செயலின்கண் போகவிடாது, பொய்யனிடத்தும், அரசர்பெருமானாகிய மெய்யரிடத்தும், இருவரிடத்தும் நிகழப்போவதாகிய செய்கையினிடத்தும் நிலைபெறவைத்தனன் என்பார் - மனம் அங்குவைத்த தத்தன் என்றார். இருவர் மெய்ச்செய்தியும் அங்குவைத்த மனத்தால் அறிந்து தான் செய்யவேண்டிய மெய்ச்செய்தியை அக்கணமே செய்யத் துணிந்தனன் என்பார் - இறைப்பொழுதின்கண் கூடி வாளினால் எறியலுற்றான் என்றார். மெய்வேடங்கொண்டவனது மெய்ச்செய்கையினையும், மெய்க்காவற்காரனது மெய்ச்செய்கையினையும், கண்டறிந்த அரசர்பெருமான் மெய்வேடத்தில் தாம் வைத்திருக்கும் மெய்ம்மைச் செயலையும், மெய்ம்மையாகச் செய்தனன் என்பார் - குருதிசோர வீழ்கின்றார் தரைப்படும் அளவில், (தமது) நீண்ட கையால் தத்தா (இவர்) நமரெனத் தடுத்து வீழ்ந்தார் என்றார். (கக)

வேதனை யெய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனாந் தத்தன் றானும் தலையினால் வணங்கித் தாங்கி
யாதுநான் செய்கேன் என்ன எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம் கொண்டுபோய் விடுநீ என்றார்.

(எ - து.) (அப்பாதகனால்) வேதனைப்பட்டு பூமியில் வீழ்ந்த அரசர்பெருமானால் தடுக்கப்பட்டுநின்ற சேவகனாகிய தத்தனும் (தனது செயலைத்தடுத்த அரசரது எண்ணத்தையறியப்பெற்று அவரைத்) தலையினால் வணங்கி, பின்னர் நாயனாரது சிரத்தைத் தனது கரத்தால் தாங்கி, இனி யான் செய்யவேண்டிய பணி யாது அதனைக் கட்டளையிடவேண்டும் என்று கேட்க, மெய்ப்பொருளார், எமது பெருமானடியாராகிய இவர் இனி வெளியே போவாரல்லவா! அவர் போகும்போது நீயும் அவருடன்போய் இடை இடையே அங்கங்குள்ள காவலாளிகள் இவரைத் தடைபடுத்தும் தடைகளையெல்லாம் விலக்கி இவர் போகுமிடத்திற் கொண்டுபோய் நீவிடுவாயாக என்று கூறினார் என்பதாம்.

வஞ்சகன்செய்த வஞ்சச்செயலால் மெய்வருத்தமுற்றனர் என்பது தோன்ற - வேதனை எய்திவீழ்ந்த வேந்தர் என்றார். உடம்பாகிய மெய்யிற்குத் துன்பம் வரக் கண்டதுபோல், தாம் கொண்டிருக்கும் மெய்ப்பொருளுக்குத் துன்பம் வரக் காணமல் இன்பம் வரக்கண்டமையால் இன்பம் வரச்செய்தவனைத் துன்பமுறச் செய்தல் மெய்ப்பொருள் கொண்டார்க்கு முறையன்றென்பது தோன்ற - வேந்தரால் விலக்கப்பட்ட என்றார். சொன்னதைச்சொல்லும் கிளிப்பிள்ளைபோலும், செய்யென்றதைச் செய்யும் நெறியுடையான் தத்தன் என்பது தோன்ற தாதனுந் தத்தன் என்றார். தனது அரசர்பெருமானர் மெய்யில் வேதனை யெய்திப் பூமியில் வீழுந்தருணத்திலும், தாம் கொண்ட மெய்ப்பொருளை வீழ்த்தாது தன்னைத் தடுத்த பேராற்றலை எண்ணி அஞ்சினனென்பது தோன்ற - தலையினல் வணங்கி என்றார். மெய்ப்பொருளை வீழ்த்தாது தாங்கிய தனதுஅரசன் மெய்யைத்தாங்குதலே நாம் பெறும் பேறும், காம் செய்யத்தகும் சேவகமும் ஆம் என்பது தோன்ற - தாங்கி என்றார். தேவரீர் திருவுள்ளக்குறிப்புணராது மெய்வேடங்கொண்டாரைத் தீங்குசெய்யத் துணிந்தேனகலான் அப்பிழை நீங்குமாறு யான்செய்யத்தகும் பணியாதோ என்றுவினவினன் என்பதுதோன்ற - யாதுநான் செய்கேன் என்ன என்றார். அம் மெய்வேடத்தார் இங்கு வந்தபோது அடியராகக்கண்டது போலவே, அவரெண்ணியதை என்பால் செய்து முடித்தபின்னரும் அடியவராகவே காண்கின்றேன். ஏனெனில், இம் மெய்வேடத்தார் இங்கு எழுந்தருளியபோது நான் இவரை யாதுவேண்டி என்பால்வந்தது என்று கேளாமல் இங்குவந்தது என் என்று கேட்டனனன்றே, அச்சொல் ஏன் இங்குவந்தீர் என்னும் பொருளைத் தருகின்றதன்றே, அப்பொருளைத் தரும் கடுஞ்சொல்லைச் சொன்னஎனது குற்றத்தைக்கண்டு இயமனல் செய்யப்படும் தண்டனைக்கு என்னை ஆட்படுத்தாமல் அவரிடத்துள்ள பெருங்கருணையினல் என்னை வாளினல் வெட்டி எனது குற்றத்தை இப்பொழுதே போக்கினராகலின் இப்பொழுதும் எம்மிறைவன் அடியவர் இவர் என்பதில் ஐயுறவேயில்லை. நான் அடியர்பால் சொல்லவேண்டிய இன்சொல்முறை யறியாதிருந்த எனது குற்றத்தைப் போக்கவந்த இவரதுசெயல் முற்றுப்பெற்றபடியினல், இனி இவர் போகும் குறிப்புடையவராகக் காண்கின்றேன். யான் அவர்பின்சென்று வழிவிடும் பணிக்கு உரிமையாகா தொழிந்தேனகலின் அப்பணியை நீ தவராமற் செய்வாயாக என்பது தோன்ற அடியார் போகக் கொண்டுபோய் விடுநீ என்று என்றார். யான் சொல்லியபடி நீ கொண்டுபோய்விடும் பணியில் என்போல் நீ குற்றத்தை விளைவித்துக்கொள்ளாமல் நீ செய்யுந் தொழிலாகிய காவற்றொழிலை, இவர்பால் சிறிதுந் தவராமற் செய்வாயாக என்பது தோன்ற மீது இடைவிலக்காவண்ணம் என்றார். எனவே எனக்கு நன்மைசெய்த இவரைத் தீங்குசெய்தவராக எண்ணி இவரைத் தீங்குசெய்யக் காவலாளிகள் உன்னை விலக்கவருவராயின் அவர்களைத் தடுத்துச் செல்வாயென்பது தோன்ற மீதிடை விலக்காவண்ணம் என்றார். (கஎ)

தத்தன் பொய்த்தவனைக் கொண்டுபோதல்.

அத்திறம் அறிந்தார் எல்லாம் அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்வோம் எனப்புடை சூழ்ந்த போது
தத்தனும் அவரைஎல்லாம் தடுத்துடன் கொண்டு போவான்
இத்தவன் போகப் பெற்ற திறைவன தாணை என்றான்.

(எ - து.) (நாயனர்செய்தி யிங்ஙனமிருக்க,) முத்தநாதன்செய்த வஞ்சகத் திறத்தையெல்லாம் யாவரும் அறிந்தவர்களாய் அவரெல்லாம், நமதுஅரசனை இவ்வகைத்தான தீங்குசெய்த பொய்த்தவனைக் கொல்வோமென்று நெருங்கிச் சூழ்ந்தனர். சூழ்ந்தபோது அவர்களையெல்லாம் தத்தனனவன் தடுத்துத் தன்னுடன் கொண்டுபோவா னயினன். (அங்ஙனங் கொண்டுபோகும்போது, தடுத்தவரையெல்லாம் பார்த்து) இப்பொய்த்தவனகிய இவன் யாதொரு துன்பத்துக் கிடனில்லாமல் போகப்பெற்றது நமது அரசனுடைய ஆணையாகும் என்று கூறினன் என்பதாம்.

தத்தன் அரசன் ஆணையை மேற்கொண்டு முத்தனுதனை அழைத்துவர, அம் முத்தனுதன் எப்பொழுதுவருவான் வருவானென்று எதிர்பார்த்திருந்தவரெல்லாம் அரசனுணையை அறியாது அவனைச் சூழ்வதற்குவர, அவர்கள் வந்தகுறிப்பை தத்தன் அறிந்து அவர்களைப்பார்த்து, இத்தவன் பொய்த்தவனன்று நமது அரசனுடைய தவத்தை அவமாக்காது மெய்த்தவமாக்கிய மெய்த்தவன். ஆகலின் முன்னர் இவனை நீங்கள் உள்ளேபோவதற்கு வழிவிட்டதுபோலும், இப்பொழுது நமது அரசன் ஆணைப்படி அவனுடன் நான்போக வழிவிடுவீர்களென்று அரசனுணையை யாவர்க்கும் உணர்த்தித் தனக்கிட்ட ஆணையை எவ்விதத்துங் காத்துச்சென்றனன் என்பார் (தத்தனும் அவரை யெல்லாம் தடுத்துடன் கொண்டுபோவான்) என்றார். (௧௮)

தத்தன் பொய்த்தவனை விட்டேகுதல்.

அவ்வழி யவர்கள் எல்லாம் அஞ்சியே அகல நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன் திருநகர் கடந்து போந்து
வெவ்வடி நெடுவாள் ஏந்தி ஆளுறுக் கானம் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை விட்டவன் மீண்டு போந்தான்.

(எ - து.) தத்தன்வார்த்தையைக்கேட்ட அவ்வளவில், சூழ்ந்தவரெல்லாம் அச்சமுடையவர்களாய் அங்கு நின்றும் தூரமாய் நீங்கிப்போயினர். தத்தன் அக்கைதவனை ராஜவீதியின்வழியே அழைத்துக்கொண்டுபோய் நகரத்தைக்கடந்துசென்று தனது கைவாளைக் கையிலேந்திக்கொண்டு ஒருவரும் அணுகாவண்ணம் கடுங்காவலோடு ஆள்கள் சஞ்சாரமில்லாத காட்டுவழியாய்ப்போய் (அவ்விடத்தில்நின்று) கொடிய தீவினையாளனுகிய அப்பெரும்பாவியை அங்குவிட்டு (இனிஒருவரும் உன்னிடம்வரமாட்டார்கள் நீ போகலாமென்று) திரும்பி நகரைநோக்கி வந்தான் என்பதாம்.

அரசன், இப்பொய்த்தவனைக் கண்ட முற்காலத்தும், கொலைசெய்யக்கண்ட பிற்காலத்தும் மெய்த்தவனுகவே கண்டதுபோலும், அவ்வரசர்பெருமானது மெய்த்தவத்தைக் காக்கும் வல்லாளராகிய காவலாளிகள் முதலிய யாவரும் முன்வந்தபோது இவர் மெய்த்தவர் என்றுகண்டு அஞ்சி அன்றதுபோலும், காவலுடன் பின்வந்த அப்போதும் கண்டு அஞ்சி அகன்றன ரென்பதுதோன்ற அவ்வழி அவர்களெல்லாம் அஞ்சியே யகல நீங்க என்றார். அரசர்பெருமான் கொண்ட மெய்ப்பொருள் நெறியே, நகரத்துள்ளார் யாவருங் கொண்டனராகலின், இனி அரசனது ஆணைநெறியை மேற்கொண்டு நாம்செல்வதில் (நமக்கென்ன அச்சமிருக்கின்றது.) அஞ்சாதுசெல்வோமென்று தத்தன் துணிந்து இராஜவீதியின்வழியே சென்றனன் என்பதுதோன்ற - செவ்வியநெறியில் தத்தன் திருநகர்கடந்துபோந்து என்றார். அரசனுடன் செல்லுங்காலத்து எந்தமுறையாய் வாளையேந்திக் கொண்டுசெல்வானே அம்முறையாய் பொய்த்தவ அரசனேடு தத்தன் வாளேந்திச் சென்றனன் என்பதுதோன்ற கைவடி நெடுவாளேந்தி என்றார். வீதியெல்லாங்கடந்து நகரஎல்லையுங்கடந்து, அரசனது ஆட்கள் போதல்வருதலையற்ற ஆரணியத்தில் போய்ச்சேர்ந்தனன் என்பதுதோன்ற அளுறுக்கானஞ்சேர என்றார். அக்கானகத்தினும் கொடியோன் இவன், எனவே அது மரக்கானகம், இவன் வினைக்கானகம் என்பதுதோன்ற வெவ்வினைக் கொடியோன்தன்னை - என்றார். தீவினைக்காடாகிய இவனேடு, மரக்காடாகிய இந்நெறியின்கண்ணே விடாதுபோகும்படி அரசனுணை நமக்கில்லை, நமக்கிட்ட ஆணை இவன்போக "இடைவிலக்காவண்ணம் கொண்டுபோய் விடு" என்பதே யாகலான், இவ்வினைக்காடனை இக்காட்டகத்தே விட்டு நாம் அரசனிடம் போகத்திரும்புவோம் என்று எண்ணினன் என்பதுதோன்ற - விட்டவன்மீண்டு போந்தான் - என்றார்:

* அவ்வழிஎன்றது ஈண்டுஅரசன் எண்ணிட்டத்தியதுபோல என்னும்பொருட்டு.

அரசர்பெருமான், மீதிடை விலக்காவண்ணம் கொண்டுபோய் விட்டு நீ வருவாய் என்ருது, விடுநீ என்றது என்னையோ வெனின், எதுபரியந்தம் தடுக்கவருகின்றார்க ளோ அதுபரியந்தம் நீ உடன்போவ தென்பதல்ல இம்மெய்த்தவர் எவ்விடத்தில் சென் ருல் கவலையற்றுச் செல்வரோ அவ்விடங்காறும் போதல் உனதுகடமை என்பதொன் றே அவரெண்ணத்தில் முனைத்துநின்றதனுல் வருவாயென்றதனைக் கூருதொழிந்தன ரென்க. இதனை தத்தன் உணர்ந்தவனுய், இவனுக்கு பயம்வருவதற்கில்லாத இடத் தைக்கண்டு அங்குவிட்டு மீண்டுபோந்தான் என்ருர். (கக)

மற்றவன் கொண்டுபோன வஞ்சனை வேடத்தான்மேற்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறம் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்ருன் கோமகன் குறிப்பில் நின்ருன்.

(எ - து.) (சேவகன் செய்தி யிங்ஙனமிருக்க) நாயனுர், தத்தன் அழைத்துக் கொண்டுபோன வஞ்சனை வேடத்தவன்மேல் எதிர்த்தவர்களை விலக்கி, யாதொரு தீங் கும் யாவராலும் வராதமார்க்கத்தில் அவனைவிட்டதாகிய சொற்றிறத்தைக்கேட்க விரும் பிச்சோர்வடைகின்ற தமது உயிரைச் சோர்ந்துபோகாவண்ணம் தாங்கிக்கொண்டிருக் கின்ற அரசன்முன்னே, அரசன் குறிப்பின்வழியே சென்றுவந்து நின்ருனுகிய தத்தன் சென்ருன் என்பதாம்.

சோர்கின்ற ஆவிதாங்கும் கொற்றவன்முன்பு, (அக்) கோமகன்குறிப்பில் நின்ருன் சென்ருன் எனக் கூட்டுக.

நம்மைப்போர்திறத்தில் வெற்றிக்கொள்ளல் அரிது, மெய்த்தவவேடத்தால் வெற்றி கொள்ளல் எளிது என்னும் அவ்வுண்மையுணர்ந்து, மெய்த்தவ வேடங் கொள்வதற்கும், தடைகளெல்லாம் தடுத்தற்கும், ஒருவரும் வரக்கூடாத பள்ளியறையில் வருதற்கும் துணிந்த இவர், தமது எண்ணத்தையும் கேட்கத் துணிந்திருப்பாராயின் வெற்றியுடன் போகச் செய்திருப்போமே அந்தோ! அதனை வீணுக்கி வஞ்சகன், பொய்த்தவன், என்று யாவரும் சொல்லப்போயினரே, நாம் உடல் பொருள் ஆவிகளை வைத்திருப்பது திருவேடத்தாருக்குக் கொடுப்பதற்காகவன்ருே, வேடத்தால் மெல்லலாமென்னும் உண்மை யுணர்ந்ததுபோல், உடலையுங் கேட்டால் கொடுப்பான் என்னும் உண்மையை உணராதொழிந்தனரே என்று இத்திறமெல்லாம் எண்ணி எண்ணிப் பின்னர் நம்முயி ரைக் கொன்று தம்முயிர்வாழ எண்ணினுரே அதுவேனும் முற்றுப்பெறுமாயின் அவ ருக்கு நாம் வெற்றிகொடுத்தவராவோம். அது தத்தனுல் தெரியவேண்டியிருத்தலால் அவன் வருகையை எதிர்பார்த்திருந்தனர் என்பார் மற்றவன் தீதிலாநெறியில் விட்ட சொற்றிறங் கேட்கவேண்டி ஆவிதாங்கும் கொற்றவன் - என்ருர். வஞ்சகன் உயிர்வாழ வேண்டும் என்றுஎண்ணும் சமயம் தம் உயிர் சோரும் அத்தருணமென்பார் - சோர்கின்ற ஆவி - என்ருர். அரசர்பெருமான் தனது வருகையை எண்ணியிருப்பா ரென்னும் அவ ருள்ளக்குறிப்பை தத்தன், உணர்ந்து கொடியோன் தன்னை விட்டு அக்கணமே அரசன் முன் வந்துநின்ருன் என்பார் - கோமகன் குறிப்பில் நின்ருன் கொற்றவன் முன்பு சென்ருன்-என்ருர். (உ௦)

தத்தன்மீது அரசன் கருணைகூர்தல்.

சென்றடி வணங்கி நின்று செய்தவ வேடங் கொண்டு
வென்றவர்க் கிடையூ றின்றி விட்டனன் என்று கூற
இன்றெனக் கையன் செய்த தியார் செய்ய வல்லா ரென்று
ன்றவன் தன்னை நோக்கி நிறைபெருங் கருணை கூர்ந்தார்.

(எ - து.) தத்தன் அரசன் சமீபத்திற்சென்று அடிபணிந்துநின்று, தவஞ் செய்தற்குரிய வேடத்தைக்கொண்டு தான் எண்ணிய காரியத்தைச் செய்து தேவரீரை வெற்றிகொண்டவனுக்கு வழியில் யாதொரு துன்பமுமின்றி அவன் போகுமிடத்தில் விட்டனன் என்று சொல்ல, (அரசன் அந்த வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து) எனக்கு இன்று என்னிறைவன் செய்தது எவர் செய்ய வல்லராவர், என்று கூறித் தன்முன் நிற்கின்ற தத்தனைப்பார்த்து தம்முள் நிறைந்த பெருங்கருணையைச் செய்தனர் என்பதாம்.

அரசன்முன் சென்ற தத்தன் - சென்ற திருவேடத்தார் சோர்ந்து சென்றனரோ நன்று சென்றனரோ என்று சோர்வடைந்து அதனைக் கேட்பதற்கு எதிர்பார்த்திருக்கும் அவரது குறிப்புணர்ந்து அச்சோர்வு அவருக்கு நீங்குமாறு வஞ்சகனைத் தான் விட்டு வந்த செய்தியை மிக்க பணிவுடன் செவியில் இனிமையாய்ப் புகச்செய்தனன் என்பார்- சென்றடி வணங்கிநின்று அவர்க்கு இடையூறின்றி விட்டனன் - என்றார். நம்மால் யாதொரு இடையூறும் வாராவண்ணம் செய்ததனால் அவருக்கு மகிழ்ச்சி யுண்டானதேயன்றித் தவஞ்செய்யும் வேடத்தைக்கொண்டு அவஞ்செய்த அச் செயலைப் பஞ்சபாதகங்களுட் சிறந்த அதகச்செயலென்றும் தோல்வியுள் மிக்க தோல்வியென்றும் கவலைப்பட்டுச் செல்வார்போல் செல்வதொழிந்து, வெற்றிவருதற்கான செயலை நல்ல யூகத்துடன் செய்தோமென்றும், அச்செயலால் நாம் நல்ல வெற்றியைப் பெற்றோமென்றும் இறுமாந்து வெற்றிபெற்ற எண்ணத்துடன் செல்கின்றனர் என்று அறிவித்தானென்பார் - மெய்த்தவ வேடங்கொண்டு வென்றவர்க்கு - என்றார். அவன் மகிழ்ச்சியுடனும் வெற்றிகொண்ட எண்ணத்துடனும் போகவேண்டுமென்பதே தாம் திருவேடத்தை மெய்ப்பொருளாக எண்ணி வாழ்ந்ததற்குப் பயன் என்று எண்ணியிருந்தபடியே சென்றானென்று கேட்டபடியால் இச்செயல் நம்மையன்றி யார்செய்ய வல்லார் என்று எண்ணினாரென்பார் - இன்றெனக்கு ஐயன் செய்தது யார் செய்யவல்லார் - என்றார். இறைவன் கருணைத்திறத்தை எண்ணியபின்னர் நமது தாசனாகிய தத்தன் நம்முன் வந்தவுடன் நமது உடற்குறிப்பையும், நமது எண்ணக்குறிப்பையும் தானே யுணர்ந்து நமக்குச் சோர்வுநீக்கிக் களிப்பைக் கொடுத்தனனே இவன் தாசனா! அன்று அமைச்சனே யாவன் இவனுக்கு இப்பொழுது எதுசெய்தால் சன்மானமாகும் என்று அடங்காக் கருணையைக் கொண்டன ரென்பார் - நின்றவன் தன்னைநோக்கி நிறைபெருங் கருணை கூர்ந்தார் - என்றார். (உ௪)

நாயனார் திருநீற்றன்பு பாதுகாக்க விதித்தல்.

அரசியல் ஆயத் தார்க்கும் அழிவுறுங் காத லார்க்கும்
விரவிய செய்கை தன்னை விளம்புவார் விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீ ரென்று
புரவலன் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தான்.

(எ - து.) அரசர்பெருமான் (தமது சொற்கடவாத தத்தன்மேற் பெருங்கருணையைக் காட்டியபின்னர்) தமது அரசியலை ஆளுதற்குரிய புத்திரர் முதலாயினவர்களுக்கும், தமது துன்பத்தைக் கண்டு நெஞ்சம் அழிகின்ற மந்திரி முதலானவர்களுக்கும், தமது உள்ளமெல்லாம் கலந்திருக்கின்ற செய்கையை விதிமுகமாகக் கூறுவாராயினார். (அஃதாவது) எவ்வுலகத்தினிடத்தும் பரவியிருக்கின்ற திருநீற்றின்கண் அன்புபாராட்டி பாதுகாத்து உய்வீர்களாக என்று கூறிப்பின்னர் பொன்னம்பலத்தின்கண் நடனஞ்செய்தருளும் வீரகண்டையணிந்த திருவடிகளைச் சிந்தனை செய்தனர்என்பதாம்

செய்கைதன்னை விதியினால் விளம்புவார் எனக் கூட்டுக.

பொய்த்தவவேடத்தனால் அரசர்பெருமானது மெய்யிற்கு நேர்ந்த செயலெல்லாம் புத்திர மித்திர களத்திராதிகளெல்லாம் உணர்ந்து மெய்பதைத்து வருந்தி வந்து சூழ்ந்தனரென்பார் - ஆயத்தார் காதலார் - என்றார். அனைக்கும், தன்னால் தேடப்படும்பொருட்

கும் உட்பட்டவர் புத்திரர் முதலிய சுற்றத்தினராதலால்-அவரை அரசியல் ஆயத்தார் என்றும், "கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் ஆகிய இவற்றை நன்குணர்ந்து, வன்கண்குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையென்னும் இவைகளில் திறமுடையவராய் அரசியலைக் காப்பதில் ஆசையுடையவர் மந்திரிகளாதலால் அவரைக்காதலர் என்றும், தாம் நடத்திவந்த அரசியலில் நடத்தியது திருவேடமே மெய்ப்பொருள் என்று யாவரும் எண்ணி வழிபடுதலாகிய செயலேயாகலான் அச்செயல் இனி என்றும் நடைபெற்றுவர அவர்களுக்கு விதிமுகமாய் விதிக்கத் தலைப்பட்டனர் என்பார் - விரவிய செய்கைதன்னை விதியினாலே விளம்புவார் - என்றார். தாம் எண்ணியபடியே அவர்களை நோக்கி நீங்கள் எம்மால் நமது அரசாக்ஷியில் பரவிவந்ததாகிய திருநீற்றன்பினை எம்மைப்போல் பாதுகாத்து வரல்வேண்டும். அங்ஙனம் வருவீராயின் சிவனருள்பெற்று உய்வீர்கள். உங்கள் உடல்பொருள் ஆவிகளெல்லாம் திருநீற்றுடையார்க்கென்றே பாதுகாத்துவைத்து அவர்கள் எதனைக் கேட்கின்றார்களோ அதனைக் கொடுத்துவாருங்கள் இதுவன்றி நாம் உய்ந்துபோம் வகை வேறில்லை. இதுவே என்னால் விதிக்கப்பட்ட விதியாம் என்று ஆணையிட்டனர் என்பார் - பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துய்வீர் - என்றார். தமது அரசியலை அமைச்சர்வசமாக்கித் தம்மைத் திருநீற்றின் வசமாக்கிய திருச்சிற்றம்பலத்தான் வசமாக்க அருளை நினைத்தனரென்பார் - புரவலன் மன்றுளாடும் பூங்கழல் சிந்தைசெய்தான் - என்றார்.

"அரசியல்நெறியில் வந்த அறநெறிவழாமற்காத்து, உரைதிறம்பாதநீதி யோங்கு நீர்மையினில்மிக்கார்" என்றதனால் வேதநெறியும், "மங்கையைப் பாகமாகவுடையவர் மன்னுங்கோயில், எங்கணும் பூசைநீடியேழிசைப் பாடலாடல், பொங்கியசிறப்பின் மல்கப்போற்றுதல் புரிந்துவாழ்வார்" என்றதனால் ஆகமநெறியையும் நடைபெற்றோங்கச்செய்து, திருவேடமே மெய்ப்பொருளென நிற்பதாகிய சித்தாந்தநெறியில் தாம்நின்றனர் என்றும், செல்வப்பெருக்கமுடையார் நோயின்றி உடம்புவளர்வதற்கு எப்பொழுதும் பசுவின்பாலை உண்பதில் ஆசையிருத்தல்போல, திருவேடமே மெய்ப்பொருளென நிற்கும் இவர்க்கு அருள்நிலையினின்றும். மாறுதுநிலைபெறுவிக்கவல்ல நெறிகளைச் சாதனநெறியாலன்றி விதிமுகமாகக்கூறும் சித்தாந்தமாகிய ஆகமசாஸ்திரங்களில் நீங்காத ஆசையையுடையவராதலால், பொய்த்தவவேடங்கொண்டுவந்தவன் "உங்கள் நாயகனார் உரைத்தஆகமநூல் ஒன்றுகொடுவந்தேன் என்றபோது, பேறெனக்கிதன்மேலுண்டோ" என்று, அந்நூலில் மிக்கஆசைகொண்டனரென்றும், அவ்வஞ்சகன் "மண்மேல் எங்கும் இல்லாதது" என்றுகூறவே, மெய்ப்பொருளார், எங்கும் இல்லாததாகிய அவ்வாகமநூற்பொருளை "சற்குருவின் தன்வசனமாத்திரத்தால்" உணரவேண்டுமேயன்றி நம்முணர்வால் உணரத்தக்கனவாமோ; ஆகாவாகலான் இத்திருவேடத்தாரைப் போலும் யாவர்கிடைக்கப்போகின்றார்கள் இங்ஙனம் எளிமையாக நம்மைஆளவந்த இவரையே நல்லாசிரியராகக்கொண்டு அவ்வாகமத்திலுள்ள பொருளைமெய்ம்மையாகவுணரவேண்டுமென்னும் தீவிரதரங்கொண்டு தவவேடத்தானைத்தவிசின்மேல்" ஆசிரியகோலமாகவிருக்க "இருந்தித் தாமும் இருநிலத்திருந்துபோற்றி இனியருள்செய்யுமென்று"அரசனார் பிரார்த்திக்க அப்பாதகன் இணங்கினவன்போல் மடைக்கலக்கவளிகையைப் புத்தகக்கவளிகையை அவிழ்ப்பான்போல் மடிமேல்வைத்து அவிழ்க்கத் தொடங்கியபோதுதொழவேண்டியமுறைப்படி சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்தனரென்றும்,அங்ஙனஞ்செய்யும்போது எவற்றினிடத்தும் மெய்ப்பொருளையே காணும் அவர்க்குப் பொய்யன்கொண்ட வேடம் மெய்ப்பொருளாய், அவரைத்தன்வசமாக்கிக்கொண்டதுபோல், அவன் உபதேசம்செய்யவந்தேன் என்றும், கையிலுள்ளது ஆகமம்என்றும் சொன்ன அவைகளும் தன்வசமாக்கிக்கொண்டு அவருக்குவெற்றியைத்தந்தன என்றும், அஃதாவது "ஞானவாளேந்தும்ஐயன்" என்ற திருவாசகப்படி ஆசிரியனால் உபதேசிக்கப்படும் ஞானோபதேசமொழிகளெல்லாம் ஞானவாளாய் மும்மலச்செருக்கைச் சேதிக்குந்தன்மை

யுடைத்தாகலான், அபபாதகன்-பத்திரம்வாங்கித் தான்முன்னினைந்த அப்பரிசேசெய்ய-அப்பரிசால், பத்திரம் ஞானவாளாக அவ்வாளால் அவன்செய்த செய்கை ஆசிரியன் செயலாய்முடிந்து அவருக்கு வெற்றியைத்தந்தது என்றும், அவ்வெற்றியை யாவரும் அறியச்செய்வார்போல் "நீண்டகையால் நமரெனத்தடுத்துவீழ்ந்தார்" என்றும், அங்ஙனம் தடுக்கப்பட்ட தத்தன் "யாதுநான்செய்கேன்" என்றுகேட்டபோது, "எம்பிரான் அடியார்போக மிதிடை விலக்காவண்ணம் கொண்டுபோய்விடுகி" என்றும், அஃதேபோல் அவன் யாவரானும் யாதொரு தீங்கின்றிப் போன செய்தியைச்கேட்கும் விருப்பமுடையவராய்ச் சோர்விலாதிருந்தனரென்றும், அங்ஙனம் இருக்கும்போது தன்னுணை கடவாது விட்டுவந்த தத்தன் தன்னிடத்து வந்து "செய்தவவேடங்கொண்டு வென்றவற்கிடையூறின்றி விட்டனன் என்று கூற, இன்று எனக்கு ஐயன் செய்தது யார்செய்ய வல்லார் என்று அடங்காமகிழ்ச்சியடைந்தார்" என்றும், அம்மகிழ்ச்சிக்குக் காரணமாய் நின்ற "தத்தனைநோக்கிப் பெருங்கருணைகூர்ந்தார்" என்றும், அம்மட்டிலே விடாமல் "ஆயத்தார்க்கும், காதலார்க்குமே" திருவேடமே மெய்ப்பொருளாகத் தாம் பாதுகாத்து வந்த உண்மையாகிய "செய்கைதன்னை, விதியினாலே விளம்புவார், பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துய்வீர்" என்றும் கூறினார்.

"கைத்தலத்திருந்த" என்பதுமுதல், "அரசியல் ஆயத்தார்க்கும்" என்பது ஈறாகிய இவ்வெட்டுத் திருப்பாசுரத்தானும், பொய்த்தவவேடத்தன், "பத்திரம் வாங்கித் தான் முன்னினைந்த அப்பரிசே செய்ய, இவர் மெய்ப் பொருள்வேடமே மெய்ப்பொருளெனத் தொழுது வென்றார்" என்ற உண்மையைப் பிரகாசப்படுத்தியவாறும்.

எங்ஙனமெனின்,— பொய்த்தவன் மெய்த்தவ வேடங்கொள்ளாது புறக்காவலையுங் கடந்து, அகக்காவலாளாகிய தத்தனையுங் கடந்து, தன் வன்மையினால் பள்ளிக்குள் சென்று ஆகமத்தை உபதேசிக்க வந்தேனென்று சொல்லாமல் வாளினால் தானெண்ணியபடி அரசர்பெருமானைச் செய்து பின்னர் தத்தனைத் தன் சேவகனாகக்கொண்டு, தன்னைத் தடுக்கவந்தாரையெல்லாந் தானே தன்னடிக்கீழ்படுத்தித் தனது வெற்றிக் கொடியை நாட்டிச்சென்றிருப்பானாயின், வெற்றிப்பாடு அப் பொய்த்தவனுடையதேயாம். அங்ஙனமின்றி நாயனார் மெய்ப்பொருளாகக் கொண்டிருக்கும் திருவேடமே எவ்வாற்றானும் யாவும் செய்ததாகலின் அரசர்பெருமானே வெற்றியுடையவராயினர். அவன்பால் நின்றது - அரசர்பெருமான் என்செய்வாரோவென்ற பயம். நாயனார் பால் நின்றது அவனை எவ்விதத்துங் காத்ததாகிய அபயம். இதுகாறும் திருவேடத்தை மெய்ப்பொருளாகக் கொள்ளாதவனுக்குப் பயத்தைப்போக்கி அபயத்தைக்கொடுத்த திறத்தை வலியுறுத்தி, இனி மெய்ப்பொருளைத் திருவேடத்திலே கண்டு அத் திருவேடத்துக்கே தனது மெய்யைக்கொடுத்தவர்க்கு இறைவன் தனது மெய்ப்பொருளுருவாகிய சங்கமவடிவத்தைக்காட்டி மெய்ம்மையானந்தத்தை விளைவிக்கும் மெய்ப் பணித்திறத்தையருளி, தமது உபயபாதம் என்றுங் கும்பிட்டிருக்கச்செய்த திறம் இற்றென இனி வருந்திருப்பாசுரத்தான் வலியுறுத்துகின்றார். (உ௨)

கும்பிடும் முத்தியைக் கொடுத்தல்.

தொண்டனார்க் கிமயப் பாவை துணைவனார் அவர்முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா அருட்கழல் நீழல் சேரக்
கொண்டவர் இடை யறாமல் கும்பிடும் கொள்கை ஈந்தார்.

(எ - து.) தமது திருவடியைநினைந்த நாயனாருக்கு மலையரையன் மகளாருக்குத் துணைவனாராகிய இறைவர் தம்மை நினைத்த அன்றல்லாமல், என்றும் தம்மைக்கண்டவராகிய அவர் எதிரேநின்று, அவர் நினைத்தவடிவோடும் காட்சிகொடுத்து, மேன்மை

பொருந்திய தேவர்களுக்கு எட்டாத திருவடிநிழலைச் சேர்ந்து நீழ்குடிட ஆண்டு கொண்டு எப்பொழுதும் நீங்காமல் கும்பிட்டிருக்குங் கொள்கையைக் கொடுத்தனர் என்பதாம்.

நாயனார் மன்றுளாடியாரை நினைந்தமாத்திரத்தில் அச்சிற்றம்பலத்தார், தனது துணைவியோடும், இடபாரூடராய் அவரெதிரேவராது, அவர் நாடோறும் மெய்ப்பொருளாகக் கண்டுகளிக்கும் திருவேடமுடைய அடியவராகவே அவர்காண எதிரே வந்தனரென்பார் - "தொண்டனார்க்கு, அவர் முன்தம்மைக் கண்டவாறு எதிரேநின்று காட்சி தந்தருளி" என்றார். இதற்குமேல் இது இதற்குமேல்இது என்றெண்ணவரும் உலகங்களில் வசிக்கப்பட்ட மேலோர்களுக்கெல்லாம் எட்டாததாகிய திருவடிநீழலில் ஆட்பட்டிருக்க ஆளாக்கிக்கொண்டனரென்பார் -"அண்டவானவர்கட் கெட்டா அருட்கழல் நீழல்சேரக் கொண்டு"-என்றார். அங்ஙனங் கொண்டபின்னர் இறைபணியில் வழுவாது என்றும் நிற்றலாகிய அடிமைத்திறத்தைத் தந்தனர் என்பார் "அவர் இடையறாமல் கும்பிடும்கொள்கை ஈந்தார் - என்றார்.

அநாதியெனப்பெற்ற ஆணவை, அநாதியே ஆர்த்த துயரகல அம்பிகையோடு எவ்விடத்தும், காத்தலாகிய கடனுடையவர் பரசிவனார். அவர் கடனாகக்கொண்ட காத்தற்றொழிலை எவ்வாறு செலுத்துகின்றாரென்னில், ஆன்மாக்கள் இருவினையுட்பட்டுழலுங் காலத்து, அவர்களுக்கு அங்ஙனம் உழல்வதே பயனாக ஆககாது, அவ்வினையான் இன்பத்துன்பங்களை மாறிமாறிக்காட்டி அவற்றான் அலமறச்செய்து இவ்வின்பத்துன்பங்கள் மாறிமாறி வருவதற்குக் காரணம் வினையல்லவோ என்று கன்மத்தை வருந்திநினைக்கச் செய்வதுவே அங்ஙனம் காத்தலாகிய காத்தற்றொழில், அத்தொழிலால் வரும் பயன் - இருவினையொப்பு. அங்ஙனமாவால் இன்பத்துன்பங்கட்குக் காரணம் கன்மம்என்று தோன்றியபின்னர் இன்பத்துன்பங்களை அநுபவிக்குங் காலந்தோறும் கன்மத்தையே நாடும்படிச்செய்வதுதான் அங்ஙனம் செய்யுங் காத்தற்றொழிலாகும். இச்சுகதுக்கங்கள் நான்என்னும் ஓரகங்காரம் நம்மிடத்திலேதோன்ற அது எனதென்று சிலபொருள்களைப் பற்றச்செய்வதனாலன்றோ வென்று உதிக்கச்செய்வதுவே அங்ஙனங்காத்தலாகிய காத்தற்றொழில். அதனால்வரும் பயன் - மலபரிபாகம்.

இவ்விருபயனையும் சிவம் சத்தியென இரண்டுருவாய் நின்று உண்டாக்கிய பின்னர் ஆசிரிய வடிவங்கொண்டு வருவர். இவர்செய்யுங் காத்தற்றொழில் எவ்வாறெனின், கேட்டல் சிந்தித்தல் என்னும் இருவழியான மெய்ஞ்ஞானத்தினை யுணருமாறுசெய்து, அங்ஙனம் உணர்ந்தமுறையான் முனைப்பெல்லாமறழுந்து, பின் எனதெனப்பற்றுஞ் செயலொழிந்து * "உன்னை மெய்யன்பையாக வார்த்தனுமைக்கில், கூறுநாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ தேறும்வகைத் திகைப்புநீ தீமைநன்மை முழுதுமநீ, வேறு ஓர்பரிசு இங்கு ஒன்றில்லை, (ஆகலின்) தேறும்வகையென் சிவலோகா திகைத்தால் தேற்றம்வேண்டாவோ" என்று திருவருட்செயலை நாடி வேண்டியிருக்கச் செய்வதுவேயாம். அஃதே அங்ஙனங் காத்த லாகிய காத்தற்றொழில். அதனால் வரும்பயன் - சத்திநிபாதம்.

அதுவந்தபின்னர், அருள்மேலிட்டு சங்கமவுருவங்கொண்டு வருவர். இவர்செய்யுங் காத்தற்றொழில் எவ்வாறெனின்,—"நாயிற்கடையாம நாயேனை நயந்துநீயே ஆட்கொண்டாய், மாயப்பிறவி உன்வசமே வைத்திட்டிருக்கும் அதுவல்லால், ஆயக்கடவேன் நானேதான் என்னதோ இங்கு அதிகாரம், காயத்திடுவாய் நின்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே" என்றுதெளியச்செய்து அந்நிலைகெடாவாறு திருவேடங்கண்டுழியெல்லாம் மெய்ப்பொருளாகக் காணச்செய்வதாகிய நிட்டையில் நிலைபெறச்செய்வதுவேயாம். அஃதே அங்ஙனங் காத்தலாகிய காத்தற்றொழில். அதனால்வரும்பயன் பெறுவானும் பேறுங்கெடாது அநுபவிப்பதாகிய சிவப்பேறு. இந்நாயனார் இருவினை

* திருவாசகம் - குழைத்தபத்து - ௯.

யொப்பும், மலபரிபாகமும் வருவிக்கும் இமயப்பாவை துணைவனாரை முன்னர் மெய்ப்பொருளாகக் கண்டும், தருதவவேடத்தானைத் தவிசின்மேல் இருத்தித் தாமும், இருநிலத்திருந்து போற்றி இனி அருள்செய்யும் என்று சத்திநிபாதம் வருவிக்கும் ஆசிரியராகப் பின்னர் கண்டும், மெய்த்தவ வேடங்கொண்டு, வென்றவர்க்கு இடையூறின்றி விட்டனன் என்று தத்தன்கூற, இன்றெனக்கு ஐயன் செய்தது யார்செயவல்லார் என்றும், விதியினாலே, பரவிய திருநீற்றன்பு பாதுகாத் துய்ப்பீரென்றும் கூறி, திருவேடத்தில் நிலையாகநின்று யாவரையும் அந்நிலையில் நிறுத்தி அதன்பின்னர்தாம் திருவடிநிலையாகிய பூங்கழல் சிந்தைசெய்ய அவர்நினைந்தவாறே நடராஜமூர்த்தி, சிவசத்தியாக விடையின் மேல் வராது, குருவடிவத்தோ டெண்ணப்பட்ட சங்கம வடிவினராய்க்காட்சிதந்தனராகலின்—முன் தம்மைக்கண்டவாறு எதிரேநின்று காட்சிதந்தருளி—என்றார்.

அக்காட்சியைக் கண்ட நாயனார் பொய்த்தவவேடத்தனால் எனது தவத்தை மெய்த்தவமாக்காது மெய்த்தவமாக்கிய மெய்ப்பொருள் வடிவே, என்னைத் திருவடிக் கீழ்ப்படுத்திய அடிகளே என்ற ஆனந்த பரவசத்தராய் திருவடியின்கண்ணே வீழ்ந்து எழுந்திருக்கும் அளவையறியாது கிடந்தனராகலின் அருட்கழல் நீழல்சேர, இடையறாமற் கும்பிடுங்கொள்கை மீந்தார் என்றார்.

இத்திருப்பாசுரத்தான், சிவசத்திசொரூபமாய்ப் பரசிவன் ஆன்மாக்களுக்குத் தோன்றாத துணையாயிருந்து இருவினையொப்பும், மலபரிபாகமும் வருவிப்பானென்றும், மல பரிபாகத்தின் பின்வரும் சத்திநிபாதத்தில் குருவடிவாய்வந்து ஞானத்தினை புணர்த்தி அருள் நாட்டத்தில் நிறுத்துவனென்றும், அந்நிலையில் சங்கமவடிவாய் வந்து அருளுருவாகிய திருவடியைக்காட்டி என்றுங் கும்பிடும் கொள்கையில் மாறாதிருக்கச் செய்வனென்றுங் கூறப்பட்டன. (௨௬)

விறன்மிண்டரது தொண்டைக்கூறத் தொடங்கல்.

இன்னுயிர் செகுக்கக் கண்டும் எம்பிரான் அன்பர் என்றே
நன்னெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னில்
என்னுரை செய்தே னாக இகல்விறன் மிண்டர் பொற்றாள்
சென்னிவைத் தவர்முன் செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன்.

(எ - து.) (முத்தநாதனாகிய பகைவன்) தமது இனிய உயிரை வாளால் குத்தக் கண்டும், அவனை) எமதுபெருமான் அன்பரேயென்று, கொல்லவந்தவனைக் கொல்ல விடாது தடுத்து, (திருவேடமே மெய்ப்பொருளென்று தாம்கொண்ட) நன்னெறியைப் பாதுகாத்த சேதிநாட்டதிபராகிய நாயனாரது (எண்ணப்படாத) பெருமையில் (யான்) என்ன எடுத்துச்சொன்னேன் (ஒருசிறிதுஞ் சொன்னவனல்லேன்) இனி வன்றொண்டனுடைய விறன்மிண்ட நாயனாருடைய பொன்போன்ற திருவடிகளை, எனது தலைமேல் வைத்துக் கொண்டு அவர் முன்னே செய்த திருத்தொண்டினைச் சொல்லத்தொடங்கினேன் என்பதாம்.

திருவேடத்தில் இன்புற்றிருக்கும் உயிர் என்பார்-இன்னுயிர்-என்றும், * "பொன்பட்டொழுகப் பொருந்தொளிசெய்யும் அப்பொய்ப்பொருந்தா, அன்பர்க்கணியனகாண்க ஐயாறன் அடித்தலமே" என்ற வேதமொழிப்படி திருவேடத்தில் எந்த அன்பு மேவிட்டிருந்ததோ அந்த அன்பை மேம்பாங்கச்செய்த அந்த அன்பால் அந்தவேடத்திற் கண்ட மெய்ப்பொருளின் அடித்தலத்தை யான் காணுமாறு செடிச்சேர் உடலத்தைச் சிதைத்து, அண்டர்நாயகர்கட்கும் எட்டா அருட்கழல் நீழல்சேர இடையறாமல் கும்பிடுங்கொள்கையாகிய நன்னெறியை எனக்களிக்கவந்த நடராஜமூர்த்தியினது அன்பரேயன்றி என்னைக் கொல்லவந்தவரன்று என்பார்—செகுக்கக்கண்டும் எம்பிரான் அன்பர்என்றே நன்னெறிகாத்த—என்றார். உடலைச்செகுத்தது உயிர் துன்புறப்போம் தீநெறிஎன்றெண்ணாது நன்னெறியென்றெண்ணிய அவரது அடங்காப்பெருமையை யான் என்ன

* நான்காந்திருமுறை திருவையாறு. செ - ௬.

அடக்கிக் கூறினேனென்பார் - சேதிநாதனுர் பெருமைதன்னில் என்னுரைசெய்தே னாகு—என்றார். அல்லதூஉம், என்னுடைய அவாமிகுதியினால் இன்னமும் சொல்ல வேண்டுமென்று எண்ணினேனாயினும், என்னுரை அஞ்சிநிற்கின்றபடியால் நானும் அவ்வளவில் நிறுத்தினேனென்றலுமாம்.

இனி இவர்க்கு அப்பால் உள்ளவராகிய நாயனாரது தொண்டைச் சொல்லத் தொடங்குவோமென்று எண்ணினாலோ அவர் விறன்மிண்டராயிற்றே என்று என் னெஞ்சம் மிகவும் நடுங்குகின்றது. என்னையெனின்:—இதுவரையில் சொல்லிவந்தா ரெல்லாம் இறைவனிடத்திலுள்ள அன்பை அவ்விறைவன்பால் அன்புள்ள அடியார் பாற் செலுத்தினவர். இவ்விறன்மிண்டரோ, அடியாரபால் உள்ள அன்பை - அவ்வடி யவரால் அன்புபாராட்டும் இறைவனைப புறமென்றுசொல்லி அவரை முதலடியவராக் கிப்பின் அவ்விறைவன்பால் அன்பு செலுத்தினவர்.

அதுவேயுமன்றி, அடியவரிடத்து அன்பிலாதாரை சைவசுதந்தரனாகிய இறைவன் ஆள்வானாயின் அவ்விறைவனைப் புறமென்றும், அவ்விறைவனுக்கு ஆட்பட்டவர் - நாம் இறைவனுக்கு ஆட்பட்டிருக்கும் பேரருளுடையோமாயினோமென்று அவ்வளவில் மகிழ்ந்து அன்பரன்பைப் பெறத் தீவிரமில்லாதிருப்பாராயின் அவரையும் புறமென்று கூறும்வன்மையில் மிக்கமிண்டர் என்று நெஞ்சம் அஞ்சுகின்றபடியினால் நான் அவரது உபயபாதங்களைத் தலைமேலிருத்திக் கொண்டு நான் சொல்லுவதில் உண்டாகும் குற் றங்களைப் பொறுத்தருளல்வேண்டுமென்று பிரார்த்தித்து அப்பெரியோர் முன்வாதித்த தொண்டினைச் சொல்லத்தொடங்கினேன் என்பார் - இகல் விறன்மிண்டர் பொற்றாள் சென்னியில் வைத்து அவர்முன்செய்த திருத்தொண்டு செப்பலுற்றேன் என்றார்.

" இத்திருப்பாசுரத்தான், தீக்குணமுடைய தீயோனும், தீத்தொழிற் கருவிகளும் தீச்செயலும், தம்மைத் தீமையேசெய்ய, அச்செயல் நற்செயலாய் அருட்கழல் நீழலில் வாழ்ந்திருக்க அவர்கண்ட மெய்ப்பொருள் செய்திருக்குமாயின் அபபொருளின் திறம் எத்திறத்ததோ அதனை நான் அறியவல்லேனோ, அதனால் அதனைக்கூறஅறியாது அவர் செய்தியைமாத்திரம் சொன்னேனாகலின் என்னுரைசெய்தேனென்றும், அஃதேபோல் இறைமைத்தன்மை முழுவதும், உடைய இறைவனையும் அருளாளும் தன்மைமுழுவ தும் உடைய சுந்தரமூர்த்திகளையும் திருவேடமுடையார்க்கு அடியேனென்றும், அவ் வளவிற்போகாது, அடியார்க்கும் அடியேன் என்றும் சொல்லச்செய்த வெற்றிப்பாடு எப்பாடோ அப்பாடு யான் சொல்லப்புகும் பாட்டில் அடங்குமோ? அடங்கா; ஆகலான், அம்மிண்டருடைய செயலைமாத்திரங் கூறுகின்றேனென்றுங் கூறப்பட்டன.

விறல் என்றால் - பெருமை வலி வீரம் வெற்றி எனவும், மிண்டர் என்றால் - திண்ணியர் நெருங்குந் தன்மையுடையவர் கிளப்புமோர் கருவிபோன்றவர் எனவும் பொருள். அதற்கேற்ப - தம்பிரான்தோழரெனப் பெருமைவாய்ந்த பெரியோரைப்புறகு என்றுதடுத்ததனால் பெருமையிலும், திரிபுரதகனத்தில் வைதிகத்தேரைக் காற்பெரு விரலால் ஊன்றி அச்சுமுறித்த வன்மையுடையாரைப் புறகென்றுகூறி அவர் இருந்த நிலையை விட்டுவந்து நிற்கச்செய்ததனால் வலிமையிலும், மன்மதனை ஓர் கண்ணால் நோக்கி எரித்தவீரமுடையார் தன்முன் வருதற்கஞ்சி மறைந்துநிற்கச் செய்ததனால் வீரத்திலும், ஆரூர்நாயகரும் ஆரூரரும்சேர்ந்து வேறொன்றுஞ்செய்ய அறியாது "தில்லை வாழந்தணர்தம் அடியார்க்குமடியேன்" என்று அடிமைத்திறத்தை ஓதிக்கொண்டுவரச் செய்ததனால் வெற்றியிலும், முன் அடியவரையும் பின்சிவபிரானையும் பணியவேண்டும் என்னுந்தமது கொள்கை எங்குமுள்ள அடியருங்கைக்கொண்டு நடக்கவேண்டுமென்று நடக்கச்செய்ததனால் திண்ணியர், தீதிலாத் திருத்தொண்டத்தொகைதர ஆரூரர் வந்தவ ராயிருந்தும் அதனைவோதியருள இவர்கிளப்புங் கருவியாகயிருந்தவர், இத்திருத்தொண் டுக்கே திருவாரூரை நெருங்கிவந்தவர். (உச)

மெய்ப்பொருள்நாயனார் புராணம் முற்றிற்று.

உ

கமலா காந்தாயநம:

தொண்டத்தொகை.

"வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக் கடியேன்"

ஆன்மாக்களையெல்லாம் வெற்றிகொள்வதில் மிக்கவன்மையுடைய மும்மலங்களையும், திருவேடமேமெய்ப்பொருளாகக்கண்ட மெய்த்திறத்தால் மிக எளிமையாய் வெல்லும் ஆற்றில் (வகையில்) மிகுந்தவன்மையாளராகிய மெய்ப்பொருள் நாயனாருக்கு; (செல்வஞ்சுருங்கியகாலத்தும் வள்ளற்றிறம் குன்றாத அறிவின்றிறம் உண்டாக இளையான்குடிமாறநாயனாருக்கு ஆட்பட்டதுபோல), திருவேடத்தில் மெய்ப்பொருளைக் காணும் திறம் எனக்குண்டாகும்பொருட்டு அடியேனாகின்றேன் என்று கூறியவாறும்.

வெல்லுமா - என்றதனால் திருவேடத்தில் மெய்ப்பொருளைக் காணும் இவ்வொன்றல்லது, மற்றெதுவும் வெல்லுமா றன்றும், மிகவல்ல என்றதனால் - இவ்வொன்று தான் மிக்கவன்மையுடையது என்றும், வெல்லும் ஆ—ஆன்மாக்கள் மெய்ப்பொருளைத் திருவேடத்தில் காணவல்லாராயின் வெல்லும் - மும்மலங்களையும் வெல்லும் வன்மையுடையவராவரெனப் பொருள்கொள்க.

இதனால், திருவேடத்தில் மெய்ப்பொருளைக் காணவல்லவரே, மும்மலங்களையும் மிகவன்மையாகக் கெடுக்கவல்லவராவரென்றும், அங்ஙனங் காணப்பெறாதார் கெடுக்கவல்லவராகாரென்று கூறப்பட்டதென்க.

கற்றநன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்தாற்
செற்றவன் தன்னை அவனைச் செறப்புக லுந்திருவாய்
மற்றவன் தத்தா நமரே எனச்சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதியன் மெய்ப்பொரு ளாமென்று பேசுவரே.

முத்தநாதன் "மெய்ப்பொருள்வேந்தன் சீலமறிந்து வெண்ணீறுபூசும் அப்பெருவேடங்கொண்டு புத்தகக்கவளி யேந்திவந்து உங்கள்நாயகனார் முன்னமுரைத்த ஆகமந்தான் மண்மேல் எங்குமில்லாததொன்று கொடுவந்தேன் இயம்ப" என்றுகூறக் கற்றானாகலான் - "கற்ற"- என்றும், மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக்கட்டிக் கையினிற்படைகரந்த புத்தகக்கவளியேந்தி, மனத்தினுட் கறுப்புவைத்து பொய்த்தவவேடங் கொண்டான்" ஆகலான்-"நன்மெய்த்தவன் போல் ஒருபொய்த்தவன்" என்றும், "பன்முறையிழந்து தோற்றுப் பரிபவப்பட்ட சினத்தால் புத்தகம் அவிழ்ப்பான்போன்று புரிந்து அவர் வணங்கும்போதில் பத்திரம்வாங்கித் தான்முன் னினைந்த அப்பரிசே செய்தான்" ஆகலான் - "காய்சினத்தால் தன்னைச் செற்றவன்" - என்றும், "மனம் அங்குவைத்த தத்தன் இடைப்பொழுதின்கண் கூட வாளினால் எறியலுற்றான்" - ஆகலான் "அவனைச் செறப்புகலும் - என்றும், செங்குருதிசோர வீழ்கின்றார் நீண்ட கையால் தரைப்படுமளவில் தத்தாநமர் எனத் தடுத்தார்" ஆகலான்— "திருவாய் மற்றவன் தத்தா நமரெனச் சொல்லி"—என்றும், "தொண்டனார்க்கு இமயப்பாவை துணை

வனார் அவர்முன் தம்மைக்கண்டவாறு எதிரேநின்று காட்சிதந்தருளி வானவர்க்கெட்டா அருட்கழல்நீழல்சேரக் கொண்டவர் இடையறாமல் கும்பிடும் கொள்கை மீந்தார்" ஆக லான் - "வானுலகம் பெற்றவன்" - என்றும், சேதிநன்னாட்டு நீடு திருக்கோவலூரின் மன்னி மாதொருபாகன்பின் வழிவரு மலாடர்கோமான்" ஆகலான் "சேதியன்" என்றும், திருவேடமே மெய்ப்பொருளெனப்பேசி அவ்வேடத்தில் மெய்ப்பொருளைக் கொள்ளாதார்போலன்றி மெய்த்தவவேடமே மெய்ப்பொருளெனத் தொழுதுவென்றா ராகலான் "மெய்ப்பொருளாமென்று பேசுவரே" என்றும் அவரது திருநகரத்தையும் திருத்தொண்டையும் திருநாமத்தையும் விளக்கினார்

புராணசாரம்.

சேதியர்நற் கோவலூர் மலாடமன்னர் திருவேட மெய்ப்பொருளாத் தெளிந்தசிந்தை, நீதியினார் உடன்பொருது தோற்றமாற்றான் நெடுஞ்சினமுங் கொடும்படையு நிகழாவண்ணம், மாதவன்போல் ஒருமுறைகொண் டணுகி வாளால் வன்மைபுரிந் திடமருண்டு வந்ததத்தன், காதலுற நமர்த்தாவென்று நோக்கிக் கடிதகல்வித் திறைவனடி கைக்கொண்டாரே.

மெய்ப்பொருணாயனார், சேதிநாட்டில் திருக்கோவலூரில் உமாநாதரது பக்தி நிலையில் நிலைபெற்ற சந்ததியில் மலையாளர்களுக் கரசராயுள்ளவர். சிவனடியார் கருத் தறிந்து ஏவல்செய்வதே வேதநெறியென்றும், சிவாலயத்தில் விதிப்படி பூசிப்பதே ஆகமநெறியென்றும் உணர்ந்து அந்நெறிவழுவாது தன்னாளுகையுட்பட்டாரையும் நடக் கும்படிக்காத்த மேன்மையான அரசுபுரிந்து வந்ததேயன்றித் தானும் சடையான் அன் பர்வேடமே மெய் (உண்மையான)பொருள் (பரம்பொருள்) என்றுசிந்தித்து அவர்கள் திருவடிபேசார்பாகச் சார்ந்து சிறிதும் மயக்கமின்றித் தெளிந்திருக்கும் தன்மையில் மிக்கவர். அன்னவர்தம்மை - வெல்லும் ஆசையால் ஓர்மன்னன் போரை மேற்கொண்டு யானை குதிரை காலாள் முற்றும் பன்முறையிழந்து தோற்றுப் பரிபவப்பட்டு (இகழ்ச்சி யடைந்து) பின்னர் அவரைப் பகைமேற்கொண்டு வெல்லமாட்டாமல், வேந்தன் நிலையறிந்து, வெண்ணீறுசாத்திய அப்பெருவேடங்கொண்டு, அரசனார் தனித்திருக்கும் சமயமறிந்து, வெல்லும் செயபரும்நிலைமை எண்ணித் திருக்கோவலூரிற் சேர்ந்து, மெய்யெலாநீறுபூசி வேணிகள் முடித்துக்கட்டி, கையினிற் படைகரந்த புத்தகக்கவளி யேந்தி, பொய்த்தவ வேடங்கொண்டு அரசனது அரண்மனையடைந்து கடையுடைக் காவலாளர் கைதொழுது ஏற நின்று உடையவர் தாமேவந்தார் உள்ளெழுந்தருளும் என்னத் தடையில புக்கபின்பு தனித்தடைநின்ற தத்தனையுங் கடந்து பள்ளியறையிற் புகுந்து, அரசனார் நித்திரைசெய்திருக்கக்கண்டு தடைபடாது தான்எண்ணிய எண்ணத் தைச் செய்துமுடிக்கத் தொடங்கும்போது, அரசனாரது தேவியார், கடிதெனஎழுந்து மன்னனை எழுப்பிட, மன்னனார் எழுந்து பொய்த்தவனைக்கண்டு, அண்டர்நாயகனார் தொண்டராம் எனச் செங்கை குவித்துக்கொண் டெழுந்து எதிரேசென்று வணங்கி நின்று, என் வாழ்வுவந்து அணைந்ததென்றுபோற்றி, 'இங்கு எழுந்தருளப்பெற்றது என்கொலோ?' என்றுவினவ அவன் 'உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகம நூல் ஒன்றுகொண்டுவந்தேன்; அது மண்மேல் எங்கும் இலாதது' என்றுசொல்ல, அச் சொல்லைக்கேட்ட அரசனார் 'பேறு எனக்கு இதன்மேலுண்டோ? எம்பிரான் அருள் செய்த இந்த ஆகமத்தை வாசித்து அருள்செய்யவேண்டும்' என்று கேட்க, அப்பொய்த் தவன் 'உன் மாதுதவிர நானும்நீயும் வேறிடத்திருக்கவேண்டும்' என்று கூறினான். வேந்தனார், தேவியார் தமமைநோக்கி அந்தப்புரத்திடைப் போக ஏவி, தருதவவேடத் தானைத் தவிசின்மேலிருத்தித் தாமும், நிலத்திருந்து போற்றி, 'இனிஅருள்செய்யும்' என்று கேட்டனர். அந்த பொய்த்தவன், கைத்தலத்திருந்த வஞ்சக்கவளிகை மடிமேல்

வைத்து, புத்தகம் அவிழ்ப்பான்போன்று அவிழ்க்க, அதுகண்டு அரசனார் வணங்கும்போது அவன் கவளியினின்றும் வாளையெடுத்துத் தன் உள்ளத்துள் கோபத்தை நிறைத்து வாளால் வன்மையேபுரிய மெய்த்தவவேடமே மெய்ப்பொருளெனத்தொழுது வென்றவர்.

அதுகண்ட தனிக்காவலாளியாகிய தத்தன் பருண்டு வாளினால் பொய்த்தவனைக் கொல்லவர, பொய்த்தவன்மேல் ஆசையுடையவராய்த் தத்தாநமர் என்று தடுத்தவர். அவ்வாறு தடுக்கப்பட்ட தத்தன் யாதுநான்செய்யவேண்டுமென்ன இவ்வடியரை யாரும் விலக்காவண்ணம் கொண்டுபோய்விட்டு வாவென்று ஆக்ஞாபித்தவர். அவன் அவ்வாறே கொண்டுபோய்விட்டு வருதலாகிய சொற்றிறம்கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவிதாங்கும் கொற்றவர். இடையூறின்றிவிட்டனன் என்றுகூற, இன்று எனக்கு ஐயன்செய்தது யார்செய்ய வல்லாரென்று நின்ற தத்தனைநோக்கி நிறைபெருங்கருணைகூர்ந்தவர். ஆயத்தார்க்கும் காதலார்க்கும் விதியினாலே * மாயப்படைவாராமே, நீற்றுக்கவசம் அடையப் புகுமின்கள், நாம் வானவூர் கொள்வோம்" ஆகலின் நீங்கள் திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீரென்று விளம்பினவர். இப்பயபாவை தினைவரைச் சங்கமாக முன் கண்டவாறு கலங்காமல் காட்சிதந்தருளப்பெற்றவர் யாவருக்கும் எட்டாத அருட்கழனிழல் சேர்ந்து அவ்வடியை எப்போதும் கும்பிடுங் கொள்கையைக் கைக்கொண்டவர் என்பதாம்.

இதனால்இந்திரனும் இராமபிரானும் பிறரும் தத்தம் மனைவியாரைக் காணாதபோது அவர்கள்பூண்டிருந்த ஆபரணவிசேடங்களைக் காணவருங்காலத்தில் அவர்களைக் காணப்பெற்றதுபோலும் ஆசையும் அன்பும் உடையவராய் அவசமுற்றதன்மை கேட்டிருத்தல்போல் † "சேலுங்கயலுந் திளைக்குங்கண்ணார் இளங்கொள்கையிற் செங்குபம்பேரினும் பொடியணிமார்பிலங்குமென்று புண்ணியர்போற்றிசைப்ப" என்றபடி, மெய்ப்பொருள் கண்ட புண்ணியர் அம்மெய்ப்பொருட்குரிய அடையாளங்கள் காணவருமாயின் மெய்ப்பொருளைக் கண்டகாலத்துத் தோன்றும் ஆசையும் அன்புந்தோன்றித் தன்வசமொழிந்து அதன்வசமாகவேயிருப்பர். அஃதேபோல் மெய்ப்பொருளார் மெய்ப்பொருளுக்குரிய அடையாளங்களைக் கண்டகாலத்தே ஆசையும் அன்பும் உடையராகின்றாராகலின் மெய்ப்பொருளைக் கண்டவரேயாவர் மனைவியைக் கண்டு களிக்கப்பெறாதவர் ஆபரணத்தைக் கண்டகாலத்துக் களிக்கப்பெறார். அஃதேபோல்,— மெய்ப்பொருளைக் காணப்பெறாதவர். அதற்குரிய அடையாளங்களை கண்டகாலத்துக் களிக்கப்பெறார் என்பதாகும்.

இம் மெய்ப்பொருளுண்மையும் திருவேடத்தின் சிறப்பும் உணர்ந்து அவ்வழியில் தமதுடல்முதலியவற்றை நிறுத்தப்பெறாத பலர் திருவேடத்தையே மெய்ப்பொருளாகக் காணும் சாதனநெறியில்நின்றவர் இந்நாயனார் என்று மனத்தாலுங் கூசாது எண்ணி வாக்காலும் தாம்மெய்ப்பொருளைக் கண்ட திறத்தைக் கூறுவர். அந்தோ! இது பாவம்! பாவம்!! இதுபோலும் வேறின்றென்க. ஆகவே மெய்ப்பொருள் உணரவேண்டுவோரெல்லாம் அங்ஙனம் எண்ணாமலும் நினையாமலும் உய்வார்களாக.

மெய்ப்பொருள்நாயனார் புராணசாரம் முற்றிற்று.

* திருவாசகம் திருப்படையெழுச்சி - ௧. † திருப்பல்லாண்டு - ௨.

திருச்சிற்றம்பலம்.

ஶ்ரீரசாகப்ரியாயைநம:

விறன்மிண்ட நாயனார் புராணம்.

நாட்டுச்சிறப்பு.

விரைசெய் நறும்பூந் தொடையிதழி வேணி யார்தம் கழல்பரவிப்
பரசு பெறுமா தவமுனிவன் பரசி ராமன் பெறுநாடு
திரைசெய் கடலின் பெருவளமும் திருந்து நிலனின் செழுவளனும்
வரையின் வளனும் உடன்பெருகி மல்கு நாடு மலைநாடு.

(எ - து.) நறுமணங்கமழும் நல்ல கொன்றைமலர்மாலையை யணிந்த சடைமுடியினையுடைய இறைவனது திருவடியைப் போற்றிப் பரசாயுதத்தைப்பெற்ற தவச்சிரேஷ்டராகிய பரசிராமமுனிவர் வருணனிடத்தில் பெற்ற நாடாகியும், அலைவீசுகின்ற கடலின்கண் உண்டாகும் முத்துபவளமுதலிய வளங்களும், திருத்தமாகிய நிலத்தின்கண் விளையும் செந்நெல்முதலிய வளங்களும், மலையின்கண் விளையும் சந்தனம் அகில் யானைக்கோடு முதலிய வளங்களும் ஒன்றுசேர்ந்து நிறைந்திருக்கும் நாடாகியும் உள்ளது மலைநாடென்பதாம்.

"இறைவன் சூடியிருக்கும் கொன்றைமலர்மாலை ஏனைய மலர்கள்போலாது எப்பொழுதும் பிரணவமென்னும் மந்திரமணத்தைச் செய்துகொண்டிருக்கும் சிறப்பியலுடைத்தென்பார் - "விரைசெய நறும்பூந்தொடையிதழி" எனவும், "எனக்கு நீ யடிமையெய்திக் கழிபெருமகிழ்ச்சிகூர்வாய் உனக்கு நான் களைகணுவேன் மொழிவதுசரதம்" என்று "சீரியல் கோக்கொலைசெய்புலையன்" போல்வந்த இறைவனால் கூறப்பட்டிருக்கும் தவத்தன் பரசிராமன் என்பார் - வேணியார்தங்கழல் பரவிப் பரசுபெறுமாதவ முனிவன்பரசிராமன்-எனவும், அந்நாடு மலைநாடாகலின் அந்நாட்டுக்குரிய மலைவளத்தை மாத்திரம் உடைத்தாயிருப்பதன்றி கடலிற் படுபொருளையும், நிலத்திற் படுபொருளையும் உடைத்தாய்ச் சிறந்திருக்கும் சிறப்புடைத்தென்பார் - "மலைநாடு வரையின்வளனும் கடலின்பெருவளனும், நிலனின்வளனும் உடன்பெருகி மல்குநாடு" எனவுங்கூறினர்.

கடல்வளம் - முத்து, பவளம் முதலியன. நிலத்தின்வளம் - செந்நெல், பயறு முதலியன. மலைவளம் - சந்தனக்கட்டை, யானைக்கொம்பு முதலியன.

இத்திருப்பாசுரத்தான், அடியார்க் கடியரல்லாதாரைத் துடைக்கவந்தவரதுநாடு - க்ஷத்திரியகுலத்தைத் துடைக்கவந்த பரசிராமனால் உண்டாக்கப்பட்ட நாடென்பதும், அந்தநாடு மலைநாடென்பதும், அந்தநாட்டில் அதன்வளம் காணப்படுவதன்றி வேறு நிலங்களின் பொருள்வளங்களும் காணப்பட்டுள்ளது என்பதும் கூறப்பட்டன. (க)

ஊர்ச்சிறப்பு.

வாரிசொரியும் கதிர்முத்தும் வயன்மென் கரும்பின் படுமுத்தும்
வேரல் விளையும் குளிர்முத்தும் வேழ மருப்பில் ஒளிர்முத்தும்
மூரல் எனச்சொல் வெண்முத்த நகையார் தெரிந்து முறைகோக்கும்
சேரர் திருநாட் டூர்களின்முன் சிறந்த மூதூர் செங்குன்றூர்.

காஞ்சிப்புராணம் பரசிராமீச்சரப்படலம். செ - கூ0

(எ - ு.) கடலால் கரையில் ஒதுக்கப்படும் ஒளிவீசுகின்ற முத்தங்களும், கரும்பினின்று சிந்தும் முத்தங்களும், மூங்கில்களில் விளைந்து உதிருகின்ற குளிர்ந்தமுத்தங்களும், யானைக் கொம்பினின்றும் வீழ்கின்ற பிரகாசமுடைய முத்தங்களும், ஆகிய முத்தங்களைப் பற்களெனப்படும் முத்தங்களையுடைய பெண்கள் வேறுவேறு எடுத்து முறையாகக் கோர்க்கும் சிறப்பினைவாய்ந்த சேரருடைய திருநாடுகளிலுள்ள ஊர்களில் செங்குன்றூர் என்னும் பெயரிய வூரானது மிகவுஞ் சிறந்து விளங்கும் ஊர் என்பதாம்.

சேரர்திருநாட்டு ஊர்களின் முன்சிறந்த செங்குன்றூர் மூதூர் எனக்கூட்டுக.

கடல்படுபொருளும், நிலபடுபொருளும் மலைநாடு உடைத்தென்று முற்செய்யுளிற்கூறியவற்றுள் மிகுதியாகவுடைய வளம் முத்துவளமென்பார்—வாரிசொரியும் கதிர் முத்தும், கரும்பின்படுமுத்தும் வேரல்விளையும் குளிர்முத்தும், வேழமருப்பின் ஒளிர் முத்தும்—என்றார். இம்முத்தங்களின் பிறப்புணர்ந்து அவ்வவற்றிற்குரிய விலைகளையும் அறுதியிட்டு மாலையாகக் கோர்த்து விலைபகர்வோர் அந்நாட்டு மங்கையரென்பார்—தெரிந்து முறைகோக்கும் வெண்முத்தநகையார்—என்றார். மங்கையர் முத்துக்களுடைய விலைபகர்வதற்குக்காரணம் இதுவென்பார்—மூரலெனச் சொல் வெண்முத்த நகையார்—என்றார். எனவே, அந்நாட்டு மங்கையர் தங்களுடைய பற்களுக்கு ஒப்பாக முத்தங்களைச் சொல்லுகின்றபடியால் அவைகளைப் பார்ப்போமென்று முத்துவகைகளையெல்லாம் வருவிப்பாரென்பதும், வருவித்து அவைகள் தங்கள் தந்தங்களுக்கு ஒப்பாகாமையைக் கண்டு இவ்வேற்றுமையை முத்தினை ஒப்பன நம்முடையபற்கள் என்றுகூறுவார்க்குக் காட்டுவோமென்று அம்முத்தங்களை வெவ்வேறாகக் கோவைபடக்கோர்த்து விலைகூறுவார்போன்ற தங்களுடைய பற்களின் ஒளியைக் காணுமாறுசெய்து இனி இம்முத்தங்களுக்கு எங்களுடைய தந்தங்களைக் கண்டு வெண்முத்தநகையார் என்று கூறுமொழியை விடுமின்என்று அறிவுறுத்தவென்க.

இத்தகைத்தான வளமுடைய மலைநாடு சேரர்மரபினராகிய அரசரால் காக்கப்பட்ட தென்பார—சேரர் திருநாடு—என்றார். அந்நாட்டின்கண்ணுள்ள ஊர்களில் தொண்டர் காவலராகிய விறன்மிண்டரது பெரியவூர் இதுஎன்பார்—முன்சிறந்தமூதூர் செங்குன்றூர்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான் ,மலைநாட்டில் முற்கூறிய வளங்களேயன்றிச் சிறப்புடை மகளிருடைய சிறப்பு மிகச்சிறப்புடைத்தென்பதும், அந்நாட்டில் சிற்றூர்கள் மிகவுள ளனஎன்பதும், அச்சிற்றூர்களில் பேரூர் செங்குன்றூர் என்பதுங் கூறப்பட்டன. (௨)

குலச்சிறப்பு.

என்னும் பெயரின் விளங்கிஉலகேறும் பெருமை உடையதுதான்
அன்னம் பயிலும் வயலுழவின் அமைந்த வளத்தால் ஆய்ந்தமறை
சொன்ன நெறியின் வழியொழுகும் தூய குடிமைத் தலைநின்றார்
மன்னும் குலத்தின் மாமறைநூல் மரபிற் பெரியோர் வாழ்பதியாம்.

(எ - து.) (செங்குன்றூர்) என்னும் திருநாமத்தால் யாவரானும் அறியப்படும் சிறப்பினையடைந்து, நாளுக்குநாள் குறையாது வளர்ந்துவரும் வளப்பத்தான் வளர்ந்தேறும் பெருமையினையுடையது. பெரிய வேதமெனப்படும் நூலை ஓது மரபினையுடையாராகிய வேதியர்கள் வாழ்கின்ற வாழ்வினையுடையது. அத்தகைய பெருமையுடைத்தான அப்பதி, (எத்தகைய ஏறும்வளத்தான் ஏறும் பெருமைபெற்றதோவெனின்) அன்னப்பறவைகள் உலாவும் வயல்களில் உழுதலைச்செய்யும் உழவுத்தொழிலால் (குன்றாது) அமைந்த பயிர்வளத்தினால் (பெற்றதாம்.) (அவ்வுழவுத்தொழில் செய்வோர் யாவரெனின்) எப்பொருள்களையும் தெளிந்து ஆராய்ந்த வேதங்களால் சொல்லப்பட்ட நன்னெறியின்வழியே தவராது நடக்கும் பரிசுத்தமுடைய உயர்ந்த குடிமையின் தன்மையில் நிலைபெற்று நின்றாராகிய வேளாண்குலத்தினராம் என்பதாம்.

(செங்குன்றூர்) என்னும் பெயரின் விளங்கி உலகேறும் பெருமையுடையது, (அது) தான், மாமறைநூன் மரபின் பெரியோர் வாழ்பதி, (ஏறும்பெருமை) அன்னம் பயிலும் வயல்உழவின் அமைந்தவளத்தால் (ஆம் உழவினராவார்) ஆய்ந்த மறை சொன்ன நெறியின் வழியொழுகும், தூய குடிமை மன்னுங்குலத்தின் தலைநின்றாராம். எனக்கொண்டு கூட்டுக.

மலைநாட்டைவிளக்காதது ஏனையசிற்றூர்கள், குன்றூரென்பது மலைநாட்டைவிளக்குவது ஆகலான். "சிறந்தமூதூர் செங்குன்றூர்"—என்னும் பெயரின்விளங்கி—என்றார். * 'துப்பார்க்குத்துப்பாய துப்பாக்கித்துப்பார்க்குத், துப்பாய தூஉமழை" என்னும் சிறப்பினையுடையமழை - பெய்யாது பொய்த்தலின்றி, உழவர்களை ஏரான் உழுதலைச்செய்யச்செய்து, எக்காலத்துங் கெடுப்பதென்பது இன்றி, எப்போதும் எடுத்தலையே செய்து, தேவர்களுக்கெல்லாம் செய்யப்படுவனவாகிய பூசனை முறைகளெல்லாம் சிறப்புடன் செய்யச்செய்து. அந்நாடுமுழுவதும் தானமும் தவமுமாகிய இரண்டறமும் தங்கும்படிச்செய்து வருதலால் அந்நாடு பொருளினும் இன்பத்தினும் குன்றுதலறியாது குன்றுபோல் உயர்ந்தோங்குஞ் சிறப்புடைத்தாய் விளங்குதலான்—'உலகேறும் பெருமையுடையது—என்றார்.

அந்நாடு - கடல்படுவளத்தினும், மலைபடுவளத்தினும், நிலம்படுவளத்தில் மேம்பட்டு விளங்குதலான்—அன்னம் பயிலும் வயல்வளத்தால்—என்றார். † பலகுடைநீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர், அலகுடைநீழலவர்" என்றுகூறும் சிறப்பினையுடைய அலகினுற்செய்யும் உழவுத்தொழிலால் வயல்கள் வளம்பட விளங்கப்பெற்றன ஆகலான்—வயல் உழவின் அமைந்த வளத்தால்—என்றார். அவ்வுழவுத்தொழிலுக் குரிமைபூண்டொழுகுவார் உயர்ந்தகுலத்தில் நிலைபெற்று என்றும் குடிமைக்குணங்களில் தலையாய் நிற்போராகிய வேளாண்மரபினரே யாகலான்—தூயகுடிமை மன்னும்குலத்தின் தலைநின்றார்—என்றார்.

இம்மரபினர் - தலையாய்நின் றொழுகவல்ல குடிமைக்குணங்கள் இறைவனது ஆணைமொழியாயுள்ள வேதங்களாற் சொல்லப்பட்டவையாகலான்—ஆய்ந்தமறை சொன்னநெறி—என்றார்.

அவையாவன:—செப்பம், ஒழுக்கம், வாய்மை, நாண், நகை, ஈகை, இன்சொல், இகழாமை என்றுசொல்லப்பட்ட எண்குணங்களாம். செப்பமாவது - கருத்தும் சொல்லும் செயலும் தம்முள் மாறுகாமை. ஒழுக்கமாவது - புகழும் புண்ணியமும் ஞானமும் வருதற்குக் கூறப்பட்டுள்ள நன்னெறிகள். வாய்மையாவது—பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் கொடுக்காத சொற்களைச் சொல்லல். நாணமாவது - பழிபாவங்களில் மடங்குதல். நகையாவது - வறுமையாளர் வருவாராயின் முகமலர்ச்சியுடையரா யிருத்தல். ஈகையாவது—தமக்குள்ளபொருள்களைக் கொடுத்தல். இன்சொல்லாவது—மனத்தின் கண்ணுள்ள உவகையை வெளிப்படுத்துவனவாகிய இனியசொற்களைச் சொல்லுதல். இகழாமையாவது—பிறரது எளிமைகண்டு அவமதிக்காமை.

இவ் வெண்வகைக்குணங்களையும் தாங்கள் செல்லும் நெறியாகக்கொண்டு வழுவாது ஒழுகவல்லவராகலான்—ஆய்ந்தமறை சொன்னநெறியின் வழியொழுகும்—என்றார். ஏனையோர்கள் முதலில் தலைப்பட்டுநின்று இடையில்விடுவோரும், இடையில் தலைப்பட்டு கடையில் விடுவோருமாவர். இவரோ, முத லிடை கடை என்னும் மூக்காலத்தும் குன்றாது முதன்மையாகவே நிற்குஞ் சிறப்புடையவராகலான்—தலைநின்றார்—என்றார். இத்தகைய வேளாண்மரபினரால் அந்நாட்டுமறையவர் வாழும் வாழ்வுடையாராகலான்—மன்னுங்குலத்தின் மாமறைநூல் மரபிற்பெரியோர் வாழ்—என்றார்.

---

* திருக்குறள் - வான்சிறப்பு செ - உ. † திருக்குறள் உழவு. செ - ச.

இத்திருப்பாசுரத்தான், உலகத்தில் மேன்மேல் ஏறும்பெருமையைத்தருவது மழை வளத்தாலென்றும், அவ்வளம் மழைவளத்தைக்கொண்டு செய்யப்படும் உழவுத்தொழிலின் வன்மையாலென்றும், அத்தொழிலுக்குரியார் செப்பமுதலாகச் சொல்லப்பட்ட எண்வகைக்குணங்களில் தலைநிற்பவராகிய வேளாண்மரபினரே யாவரென்றும், அவர்களால் வாழும் வாழ்க்கையுடையவர் அந்நாட்டுமறையவரென்றுங் கூறப்பட்டன. (௫)

திருநாமச்சிறப்பு.

அப்பொற் பதியி னிடை வேளாண் குலத்தை விளக்க அவதரித்தார்
செப்பற் கரிய பெருஞ் சீர்த்திச் சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற் றினையும் அறஎறிவார் எல்லை தெரிய ஒண்ணாதார்
மெய்ப்பத் தர்கள்பால பரிவுடையார் எம்பி ரானார் விறன்மிண்டர்.

(இ - ள்.) எமது பெருமானாராகிய விறன்மிண்டநாயனார் "உலகேறும் பெருமையுடையதாகிய அந்த அழகிய ஊரின்கண், வேளாண்மையையுடைய குலத்தைப் பிரகாசப்படுத்த அவதாரஞ்செய்தவர். சொல்லுதற்கரிய பெரிய சிறப்பினையுடைய சிவபெருமானது சிவந்த திருவடிகளைப் பற்றிப்பற்றெனப்படும் எவ்வகைப் பற்றுக்களையும் பற்றறவீசுப வீரமுடையவர், (எவ்வகைமேம்பாடுடையோரானும்) இவ்வளவென்று அளவுபடுத்திச் சொல்லுவதற்கு முடியாத மேம்பாடுடைய பெருமையுடையவர், மெய்ம்மையாகிய பத்தியுடையவர்களிடத்து மெய்ம்மையாகிய பரிவுடையவர் என்பதாம்.

எம்பிரானார் விறன்மிண்டர் அப்பொற்பதியினிடை வேளாண்குலத்தை விளக்க அவதரித்தார் எனக்கொண்டு கூட்டுக.

சீரைத்தேடுதற்கு ஏதுவாகிய நற்குலத்தினரால் வளம்படவோங்குதலின்—பொற்பதி—என்றும், வேளாண்குலம் ஏனையகுலங்கள்போற்ற மேம்பட்டு விளங்குவதோடு அடியவர்களாலும் புகழ்ந்துரைக்க அக்குலத்தில் வந்தவராகலின்,—வேளாண் குலத்தை விளக்க அவதரித்தாரென்றும்—சொல்லுதற்கரிய பொருள்சேர்ந்த புகழுடையோன் சிவனொருவனே ஆகலின்—செப்பற்கரிய பெருஞ்சீர்த்திச் சிவனார்—என்றும், அச்சிவனாரது அடி, சுவர்க்கபற்றினையும், நரகபற்றினையும், இம்மண்ணுலகப்பற்றினையும் பற்றற அடியோடு துடைக்கும் பெருமையுடைமைகொண்டு அவ்வடியை மறவாது உள்ளும்புறம்பும் பற்றியிருப்பவராகலின்—எப்பற்றினையும் அறவெறிவார் சிவனார் கழல்பற்றி' என்றும், பிறவிக்கெல்லையாகிய பற்றுக்களை எல்லையில்லாத புகழினையுடைய செய்ய திருவடியால் எறிவாராகவே, இவரதுபுகழும் அத்திருவடிப்புகழுட்பட்டு எல்லையில்லாததாயிருத்தலான்—எல்லைதெரியவொண்ணாதார்—என்றும், இவரால் பற்றப்பட்ட அத்திருவடிக்குப் பற்றுயுள்ளவர் மெய்யடியார்களேயன்றி வேறொருவரில்லை என்னும் உண்மையுணர்ந்து அவர்கள்பாலே அன்பெல்லாம் உடையவராகலான்—மெய்ப்பத்தர்கள்பாற் பரிவுடையார்—என்றும், அம்மெய்ப்பத்தர்களை அடிபணிந்து அவருக்கு ஆட்பட்டொழுக அறியாதவர்கள்யாவராயினும் அவர்களைஅப்புறப்படுத்துவதில் மிகவும் வெற்றிப்பாடுடையவராதலான்—விறன்மிண்டர்—என்றும், அடியருக்கு ஆட்படும் அவாவுடைய ஆசிரியர் சேக்கிழார் பெருமான் செய்யத்தொடங்கிய இப்புராணத்துக்கு முதனூலாயுள்ள திருத்தொண்டத்தொகை வெளிவருவதற்கு முதலாசிரியராய்நின்றவர் அவராகலின்,—எம்பிரானார்—என்றுங்கூறினார்.

இத்திருப்பாசுரத்தான், நாயனார் அவதாரஞ்செய்த அரியகுலம் உபகாரத்தையே மேற்கொண்ட குலமென்பதும், அவர் இறைவனால் பற்றப்படாத பற்றுக்களைப் பற்றற அடியோடு களைந்து எறிவதற்குப் பற்றியகருவி அவ்விறைவனடி என்பதும், அவர் தேடியபுகழ் எல்லையுட்படாத திருவருட்புகழைத் தன்புகழாகக்கொண்ட புகழ் என்பதும், அவர் பரிவெல்லாம் மெய்ப்பத்தர்கள்பாலதென்பதும் கூறப்பட்டன.

அல்லதூஉம், * பற்றுக்கள் நான்கு என்பார்—எப்பற்றினையும்—எனவும், அப்பற்றுக்களைப் பற்றுதற் கிடனில்லாமல் தடுத்தல் - பற்றற்றான் பற்றினைப் பற்றினாலன்றி கூடாதென்பார்—அறவெறிந்தார்—எனவும், இந்நாயனார் எல்லையில்லாததாகிய பற்றற்றான் பற்றினை யுடையவரென்பார்—எல்லைதெரிய வொண்ணாதார்—எனவும், மேற்கூறிய பற்றினைப்பற்றி—எப்பற்றினையும் அற வெறிவார் மெய்ப்பத்தர்கள்பாற் பரிவுடையார்—எனவும்,எப்பற்றினையும் அறவெறியும் வன்மையில்லாதார் எவ்வளவு மேம்பாடுடையவராயினும் அவர்களைப் பொருளாகமதிக்காத வலியையும், அதனால் வீரத்தையும், அதனால் வெற்றியையும், அதனால் பெருமையும், உடையவராயும், திண்ணியராயும், நாவலூராரை நெருங்கப்போகின்றவராயும், நாமுய்யத் திருத்தொண்டத்தொகையைக் கிளப்பும்ஓர் கருவியாளராயும், உள்ளவர்என்னும் பொருளமைந்ததிருநாமம் உடையவரென்பார்—எம்பிரானார் விறன்மிண்டர்— எனவும் கூறினாரென்பதாம். (ச)

தொண்டின் சிறப்பு.

நதியும் மதியும் புனைந்தசடை நம்பர்விரும்பி நலஞ்சிறந்த
பதிகள் எங்கும் கும்பிட்டுப் படருங் காதல் வழிச்செல்வார்
முதிரும் அன்பிற் பெருந்தொண்டர் முறைமை நீடு திருக்கூட்டந்
தெதிர்முன்பரவும் அருள்பெற்றே இறைவர் பாதந் தொழப்பெற்றார்.

(எ - து.) கங்கை இளம்பிறை என்னும் இரண்டினையும் அணிந்த சடைமுடியினையுடைய இறைவனார், கருணைகொண்டு எழுந்தருளியிருக்கும் நன்மைமிகுந்த திருத்தலங்கள் எங்கெங்கிருக்கின்றனவோ அங்கெல்லாம் சென்றுவணங்கி வழிபட்டு, அங்கங்கு மேலோங்கிவரும் ஆசையின் வழியே செல்கின்றவர். (அங்ஙனம் செல்லுமிடங்களதோறும்) முறைமையான் முதிர்ந்த அன்பினால் பெரியோராகிய பெரிய திருக்கூட்டத்தவர்கள் முன்சென்று, அவர்கள் எதிர்நின்று போற்றி அவர்கள் அருள்பெற்று, (பின்னர்) சிவபெருமானுடைய திருவடிகளை வணங்குந்தன்மையைப் பெற்றவர் என்பதாம்.

அன்பின்முறைமை முதிரும் பெருந்தொண்டர் நீடுதிருக்கூட்டத்து எனக்கூட்டுக.

† அன்பிலே பெருக்குடையாரையும், மலப்பற்றை அறவே யொழித்தாரையும் இறைவன் தன்பால் உடையவரென்பது தோன்ற—நதியும் மதியும் புனைந்தசடை— என்றார். மலநீக்கமும் அன்பின்பெருக்கமும்தம்மைவழிபட்டாலன்றி அவ்விருநலங்களும் ஆன்மாக்களுக்குக் கூடாவாகலான் அவைகூடுமாறு திருவுளத்தெண்ணித் திருப்பதிகள்தோறும் இலிங்கவடிவமாய் எழுந்தருளியிருக்கின்றவனென்பதும்தோன்ற,—நம்பர் விரும்பி நலம்சிறந்த பதிகளெங்கும—என்றார். மலநீக்கமும் பெருக்கமிக்க அன்பும் தமமாளவாமாறு அவாமிக்குடையராய் அவ்வவாவே மார்க்கமாககொண்டு பதிகள்தோறும் சென்று கும்பிடும்நன்னெறியினை யுடையார் நாயனார் என்பதும்தோன்ற—பதிகளெங்கு கும்பிட்டுப் படருங்காதல் வழிச்செல்வார்—என்றார். அன்பின்முறையில் பத்தியும், அ

* பொறிபுலன்களாலும், காணங்களாலும், தற்போதத்தாலும், ஆன்மாவாலு பற்றுவன. இவற்றுள் பற்றுந்தலைமையுடையது ஆன்மவறிவே. அதனாற்பற்று பொருளோ பொறிகளுக்கு வெளியேயுள்ளன. ஆகலின், ஆன்மா பகிர்முகப்படுங்கால் துத் தற்போதமும் காணங்களும் புலன்களும் ஒன்றுகூடிப் பொறி என்கின்ற வாயிலி கண்ணே வந்துநிற்கும். நின்றவுடன் புறப்பற்றுக்களைப் பொறிகள்காணும். காணு பற்று உண்டாகவே புலன்களுக்கு அவைகளை இது இதுவென அறியும்பற் றுண்ட கும். அஃதுண்டாகவே காணங்களுக்கு அவைகளைச்சிந்திக்கும் பற்றுண்டாகும். சிந்தி வரவே தற்போதமானது வேண்டுதல் வேண்டாமை என்னும் இரண்டனுட்பட்டு ஒ றினைப்பற்றுகின்றது, அதுபற்றியதொன்றை ஆன்மவறிவுபற்றுகின்றது.

† அன்பின் பெருக்கத்திற்கு - கங்கையையும், மலத்தேய்விற்கு மதியையும் உவமையாக வைத்துக்கூறியதென்க.

பத்திமுறையில் காதலும், முறையே முதிரும்படி செய்யவல்ல பெரியதொண்டின் திறத்தை யுடையவரென்பதுதோன்ற அன்பின்முறைமை முதிரும்பெருந்தொண்டர் என்றார். அத்தொண்டின்திறம் குன்றாது ஒழுகச்செய்வோர் அடியவர் திருக்கூட்டத்தவரே என்பதுதோன்ற நீடுந்திருக்கூட்டம் என்றார். அத்திருக்கூட்டத்துள் அன்பு முதலிய மூன்றும் கடல்போல்நிறைந்திருத்தலின் அவை தமமுள்ளத்துள் பரவ முற்பட்டு எதிர்படுவோரென்பதுதோன்ற எதிர்முன்பரவும் என்றார். இவர் எண்ணியவாறே உள்ளத்துள் காதலும் எதிர்ப்பட்டு இறைவனடி கூடுதற்கான அருளும் கிடைக்கப்பெற்று அடியுங்கூடப்பெற்றவ ரென்பதுதோன்ற—அருளின்பின்பே இறைவர்பாதந் தொழப்பெற்றார்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான்,* சிவக்ஷேத்திரங்களெல்லாம் இறைவன் கருணைகூர்ந்திருக்கின்ற இடங்களெனவும், நாயனார் இறைவன் கருணைக்குரியவராதலால் அக்கருணைப் பெருக்கை மாறாது பருக அத்தலங்கள்தோறுஞ் செல்வாரெனவும், அதனைப்பருகுதலால் அன்புமுதிருந் தன்மையினைப் பெற்றாரெனவும், அன்பன்றி அருளும், அருளன்றி அடியும் கூடாதாகலான் முன்னர் அன்புடையாரைப் பணிந்து அருள்பெற்று, பின்னர் இறைவனடி தொழுவாரெனவுங் கூறப்பட்டன.

* "இவ்வண்ணம் தானங்கள் பலவகுத்தது எற்றுக்கேல் இயம்பக்கேளாய், மைவண்ண இருண்மலத்தில் இருவினையாற் பிணிப்புண்டு மருளின்மூழ்கி, உய்வண்ணம் அறியாத பசுக்கள்தமை அம்மலத்தில் உறாதகாமே, மெய்வண்ணத் தன்மையினால் விடுவிக்க வேண்டுமாற்றால்" என்ற காஞ்சிப்புராணவசனத்தால் இருவினையாற் கட்டுண்டு ஆணவமலத்தில் ஆழ்ந்துகிடக்கும் ஆன்மாக்கள் அதனின்றும் விடுபட்டு உய்வண்ணமாகிய நன்மையைப்பெற நதிமதிபுனைந்த சடையானாகிய இறைவன் பெருங்கருணைத்திறத்தால் தானே விரும்பி திருக்கோயில்கொண் டிருப்பவனென்பது வெளிப்படலால் அவ்வுண்மைதோன்ற,--நதியம்மதியும் புனைந்தசடைநம்பர்விரும்பி நலம்சிறந்த பதிகள்--எனவும், பிரமன் உலகங்களைப் படைக்கும்போது படைக்கப்பட்ட க்ஷேத்திரங்களும், காமியமாகவும் நிஷ்காமியமாகவும் பூசிப்போர்க்கு அனுக்கிரகிக்கு நிமித்தம் கோயில் கொள்ளும் க்ஷேத்திரங்களும், "காசி கேதாரம் புஷ்காம குருக்ஷேத்திரம் நைமிசங்களினும், ஓசைகொள்காஞ்சி அதிகமென் றுரைப்பதா உமைபிரமாணம் ஒன்றன்றால், ஈசனே நீயும் உமையுமே யல்லால் இங்கர் படைத்தவரில்லை. மீசுறமனை கண்ணுறக்கண்டு தெளிந்ததாம் எந்தவூழியினும்" என்ற மேற்படி புராணவசனத்தால் இறைவனே படைத்த க்ஷேத்திரங்களும் பலவுள்ளன என்பதுதோன்ற,—பதிகளெங்கும்—எனவும், இந் நாயனார் உய்வார்கள் உய்யும்வகையாக உள்ளன ஆலயங்களென் றுணர்ந்த பெரியோராகலின், உணர்ந்தவண்ணமே ஒழுகவல்லராய் எந்நாளும் க்ஷேத்திரயாத்திரை செய்யும் ஆசையில் குன்றாதவரென்பதுதோன்ற,--படருங்காதல் வழிச்செல்வார்--எனவும், இறைவனைக் கண்டபொழுது தோன்றுமகடையன்புடையார்போ லல்லாமல் எக்காலத்தும் தைலதாரைபோல் நீங்காது வளர்ந்திருக்கும் தலையன்பினை யுடையவரென்பதுதோன்ற,—முதிரும் அன்பிற் பெருந்தொண்டர்—எனவும், தாம் செல்லும் க்ஷேத்திரங்கள் தோறும் அடியவர்கள் கூடியிருக்கும் பெரியசபைக்கெதிரே செல்லும் முறைமையினை யவரென்பது தோன்ற,—நீடுதிருக் கூட்டத்தெதிர் (செல்லும்) முறைமை யுடையவர்—எனவும், "அடியவர்க்கன்பில்லார் ஈசனுக்கன்பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கு அன்பில்வார்" என்ற சித்தாந்தவசனத்தால ஈசனுக்குவேண்டிய அன்பு அடியவருள்ளத்தே யன்றி வேறிடத்தில்லை யென்பதும், அன்பன்பதே வேறிடத்தில்லை என்பதும் வெளிப்படலால் அன்புநிலையைப் பெறுதற்குமுன்னர் அடியவர் திருக்கூட்டத்தை வணங்குதலும் "அன்பேசிவமாவது" என்றபடி சிவதவத்தைப் பெறுதற்குச் சிவனைப பின்னுமாக வணங்குதலுமாகிய முறைமைபபாடுடையவர் என்பதுதோன்ற,—* முன்பரவும் அருள்பெற்றே இறைவன் பாதந்தொழப்பெற்றார்—எனவுங் கூறினார். (௫)

திருவாரூர்ப்பணிதல்.

பொன்தாழ் அருவி மலைநாடு கடந்து கடல்சூழ் புவியெங்கும்
சென்று ளுடையார் அடியவர்தந் திண்மை ஒழுக்கம் நடைசெலுத்தி
வன்தாள் மேருச் சிலைவளைத்துப் புரங்கள் செற்ற வைதிகத்தேர்
நின்றார் இருந்த திருவாரூர் பணிந்தார் நிகரொன் றில்லாதார்.

(இ - ள்.) தனக்கு ஒப்பாக ஒருவரையும் இல்லாதவராகிய நாயனார் - பொற்கட்டிகளோடுகலந்து விழுகின்ற அருவிகளை யுடைய மலைகள் நிறைந்துள்ள சேரநாட்டைக் கடந்து, கடல்சூழ்ந்த பூவுலக மற்றும் சென்று, யாவரையும் ஆளாகவுடைய இறைவன் அடியார்களை அடிபணிதலாகிய சகல வன்மைமிக்க † ஒழுக்கநடையை ஆங்காங்கும் நடத்தி, பூமியை நிலைநிறுத்தும் வன்மையுடைய பொன்மலையை வில்லாகவளைத்து, முப்புரங்களை வேதமாகியதேரில் ஏறிநின்று வென்றவராகிய இறைவர் எழுந்தருளியிருந்த திருவாரூருக்குப்போய் அந்த க்ஷேத்திரத்தை வணங்கினாரென்பதாம்.

நிகரொன் றில்லாதார் பொன்தாழருவி மலைநாடு கடந்து எனக் கூட்டுக.

"சகமிலாது அடிமையில்லை" என்றவேதமொழிப்படி நாரணன்முதலிய யாவரையும் தம்மைவழிபடும் வழிபாட்டினை மேற்கொண்டிருக்கும் ஆளாகவுடையவரென்பார் --ஆளுடையார்- என்றார். யாவரையும் ஆளாகவுடைய அவ்விறைவனருளை ஆளும் முதல்வர் அன்பரேயென்பார் -அடியவர்--என்றார். அருளைவேண்டினோர், அருளை ஆளப்பெற்றாரால் ஆண்டாலன்றி அருளுடைய இறைவனால் ஆளப்பெறாரென்பது நிச்சயமாகலின், அந்நிச்சயத்தில் திண்ணியநிலையுடைய இந்நாயனார் முன்னர் அடியார்களைவணங்கி அவரால் அருள்பெற்றுப்பின்னர் அவ்வருளுக்கிடமாகியஇறைவனடிபணிந்த இன்புறும்தமது ஒழுக்கத்தையே அடியாரெல்லாம் உறுதியாகப்பிடித்து அவ்வழியே மாறாது நடக்க எவ்விடத்துஞ் செய்தனரென்பார்—தந்திண்மையொழுக்க நடைசெலுத்தி—என்றார். பூமி

* அருள்பெற்றார்க்கே அடியாரை முன்வணங்கும் முறைமை தோன்றுமேயன்றி, அருள்பெறாதார்க்கு அம்முறைதோன்றாதென்க இவ்வுண்மை தோன்றவே, மெய்கண்டசிவனாரும் "அன்பரொடு மரீஇ * * * ஆலயந்தொழுமே" என்றார்.

† வருணவொழுக்கம் ஆச்சிரமவொழுக்கம் வினைவசப்பட்டான் அநுட்டிக்கப்பட்டதாகலின் வினை - மாறிமாறி வருதல்போல் அவ்விருவழியே இருவகையொழுக்கமும் மாறி மாறிவருந் தன்மையுடைத்து. இவர் அருள்வசப்பட்டவராகலின் இவரது ஒழுக்கம் சைவவொழுக்கமென்க. அது எக்காலத்தும் மாறுபடாது வன்மைபெற்றிருக்குந்தன்மையுடைத்து. இதனால் அடியார்கள் இருவினையுட்பட்டவொழுக்கத்தைக்கொண்டு அதன் வழியே செல்லாரெனவும், அருள்வசப்பட்ட சைவவொழுக்கத்தையே கைக்கொண்டு செலுத்துவாரெனவுங்கொள்க. பொன்மலை பூமிக்கு ஆதாரமாய்ப் பாதலம்வரையில் ஊடுருவிநிற்கும் நிலையுடைத்தாகலின்,—வன்றாண்மேருச்சிலை—எனவும், வேதமும் வேதனும் வேதத்திற்கூறப்பட்ட யாவருமே தேராகவும் தேரோட்டுபவனாகவும் தேரையிழுக்கும் குதிரைகளாகவும் ஆனார்களாகலின்—வைதிகத்தேர்--எனவும், முப்புரம் வெந்தவிய வைதிகத்தேரேறிய ஏறுசேவகன் ஆகலின்—புரங்கள்செற்ற வைதிகத்தேர் நின்றார்—எனவும், வேதத்தில் உள்ளும்புறம்பும எங்கும் நிற்பவராகலின் நிற்பவரெனவும், அங்ஙனம் நிற்கின்ற இறைவனை ஆகமங்களாற் கூறப்படும் ஆவாகனம் ஸ்தாபநம் சந்நிதானம் சந்நிரோதனமாதி முத்திரைகளோடுகூடிய மந்திரங்களால் அங்கங்கும் இருக்கச்செய்ய ஆலயங்களில் இருப்பவராகலின்—திருவாரூரில் இருந்தார்—எனவும், சிவனருள்பெற்று அடியரைவணங்கும் அன்பைப்பெறாவிடில் அவர்களை மதிக்காத விறலுடையராகலின்—நிகரொன்றில்லார்—எனவுங் கூறினார்.

நிலையாக நிற்பது தம்மாலன்றி பொன்மலையா லன்றென்று எளிதில் எளியரும் அறிய இறைவன் அம்மலையைப் பேர்த்து வில்லாகவளைத்தன ரென்பார்--வன்றாள்மேருச் சிலை வளைத்து--என்றார். வெல்லக்கூடாத பகையை வெல்லவிரும்புவோர் வேதங்களில் விதிக்கப்பட்ட விதிவழியே நிற்கவல்லராயின் அப்பகையை மிக எளிதில் வெல்லவல்லவராவர் என்னும் உண்மை உலகினாக்குணர்த்த—மருளாரிடங்கொண்டு முப்புரம் வெந்தவிய வைதிகத்தேரேறிய வேறுசேவகன்—அச்செயல் புரிந்தன ரென்பார்—வைதிகத்தேர் நின்றார் புரங்கள்செற்றார்—என்றார். திரிபுரதகனஞ்செய்தற்கு முன்னமே இருந்த அநாதி க்ஷேத்திரம் திருவாரூரென்பார்--இருந்ததிருவாரூர்--என்றார். முன்னர் அடியார் அடிபணிந்து அருள்பெறாது இறைவனது அருள்பெறுவார் அருள்வழியில் நிற்கும் வன்மையைப் பெறாரென்பதும், அடியாரடிபணிந்து அருள்பெற்றவரே இறைவனால் பெறப்பட்ட அருளின் வழிநிற்கும் வன்மை யுடையவராவ ரென்பதும் ஆகிய அன்பினைச்சார்ந்த அருள்நெறியை இவர்போலும் நிலைநாட்டினர் ஒருவரும் இல்லையென்பார்—நிகரொன்றில்லாதார்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான், தேவர்முதலாயினார் சிற்றின்பமாகிய போகத்தில் விருப்புடையவராதலால் அப்போகம் பெறுதற்கான வழிபாட்டில் சிறத்தவரேயன்றித் தமது அருள்நெறிக்கு ஆளாக்காரென்னும் உண்மையும், அடியார்கள் "போகம்வேண்டி வேண்டிலேன் புரந்தராதியின்பமும், ஏகநின்கழலிணை யலாது இலேன் என் எம்பிரான். ஆகம்விண்டு கம்பம்வந்து குஞ்சியஞ்சலிக்கணாக என்கண்கள் தாரை தாரையாக ஐயனே" என்ற * திருவாசகப்படி பேரின்பந்தரும் அன்பில் விருப்புடையவராதலால் அவர்களைத் தமது அருளையாளும் நெறியில் முதல்வராக்குவா ரென்னும் உண்மையும், "நெறிசெய்தருளித் தன்சீரடியார் பொன்னடிக்கே, குறி செய்துகொண்டென்னை யாண்டபிரான் குணம்பரவி" என்ற ! திருவாசகப்படி இறைவனும், தன்னடிக்கு ஆட்பட்டவரை அவ்வளவில் நிறுத்தாது, அவர்கள் 'தன்சீரடியார் பொன்னடிக்கே, ஆளாகும்வண்ணம் 'குறிசெய்துகொண்டு' அதற்கான 'நெறிசெய்தருள' ஆள்பவன் என்னும் உண்மையும், சிவனருளை உண்மையாகப் பெற்றாரும் அவ்வளவில் நில்லாது 'உன் அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய்' என்றும், 'தொண்டருக்குத் தொண்டராம் புண்ணியம் உண்டாங்கொலோ' என்றும், 'உன் அடியார்க்கடியேன் ஆவேனே' என்றும் வேண்டியிருத்தலால் சிவனருளைப் பெறவிருப்புவோரை முன்னர் அடியார் அருளைப் பெறுமாறு அடியார்களை வணங்கச்செய்யும் திருத்தொண்டில் திண்ணிய மனமுடையவரென்னும் உண்மையுங் கூறப்பட்டன. (௬)

திருவார் பெருமை திகழ்கின்ற தேவா சிரியன் இடைப் பொலிந்து
மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையா
தொருவா றொதுங்கும் வன்றொண்டர் புறகென் றுரைப்பச் சிவனருளாற்
பெருகா நின்ற பெரும்பேறு பெற்றார் மற்றும் பெறநின்றார்.

(எ - து.) (எக்காலத்துங் குன்றுதலடையாத பெருமையினையுடைய அருட்செல்வம் நிறைந்து பிரகாசிக்கின்ற, ‡ தேவாசிரியன் என்னும் திருநாமமுடைய மண்டபத்

* திருச்சதகம். செ - ௭௨. ! திருப்பூவல்லி. செ - (அ)

‡ கல்விச்செல்வத்தினும் பொருட்செல்வத்தினும் சிறந்த அருட்செல்வமுடையார் வாழும் சிறப்புடைத்தாகலினாலும் அவ்விருசெல்வ முடையாராலும் வணங்குஞ்சிறப்புடைத்தாகலின் திருவார்பெருஞ்செல்வ முடையாரும் கல்விச்செல்வ முடையாரும் சூரியப்பிரகாசத்தின்முன் நக்ஷத்திரமுதலியன பிரகாசிக்குஞ்செயலற்றிருப்ப ,சூரியன் பிரகாசமே மேலிட்டிருப்பதுபோல் அருட்செல்வமுடைய அடியார்கள் பிரகாசிக்குமிடமாகவும், தேவாக்கும் தன்மையுடைய இடமாகவும், கிரியையாதி நெறியினைக்காட்டும் ஆசிரியர் இருக்குமிடமாகவும் இருத்தலால் தேவாசிரியன் என்ப.

தின்கண், மிக்க பிரகாசத்தோடுகூடி நீங்காது எழுந்தருளியிருக்கின்ற சிவனடியார்களை வணங்க அவர்களைச்சமீபித்து அவர்களோடுபொருந்தி அவரருளைபபெருது, ஓர்பக்கமாக ஒதுங்கிச்செல்லும் வன்றொண்டப் பெருமானுரைப் புறகென்றுசொல்ல, இறைவனருளால் பொருச்செடுத்து வருகின்ற பெரியபேற்றைப்பெற்ற அங்ஙனமான அருட்பேறு பெற்றதுபோல் அருட்பயனுகிய மற்றொருபேற்றையும் பெறும்படி நின்றவர் என்பதாம்.

ஒருவர் நல்வினை வசப்படுங்காலத்து அவரோடு பொருந்திநின்று, பின் வசப்படுங்காலத்து அவரைவிட்டுப் போகின்ற பொருட்செல்வம்போல் விட்டுப்போதலின்றி, பொருந்துவதற்கும் போவதற்கும் காரணமாயுள்ள இருவினையாகிய இடர்களைக்களைந்து சிவமாந்தன்மைப் பெருவாழ்வளித்துப் பிரகாசிக்கச் செய்யவல்ல திருவருட்செல்வம் வாழும் இடமாகலின் - திருவார்பெருமை திகழ்கின்ற தேவாசிரியன்-என்றார். அங்கு வாழ்கின்றவர், அருளைவிட்டு நீங்காது அதனிடையே வாழ்தற்குரிய அன்பினைப்பொருந்தி அடித்தொண்டியற்றும் பெரியோராகலின்---இடைப்பொலிந்து மருவாநின்ற சிவனடியார்—என்றார். * "யாவராயினும் அன்பரன்றி யறியொணுமலர்ச் சோதியான்" என்றபடி அருள் அன்பு என்னும் இருகண்களை அடியவரால் அடையப் பெற்றார்க்கே புறப்படங்கொண்ட பெருமான் காணப்படுவனன்றி,வினை எத்திறத்து வன்மையாளர்க்கும் காணப்படான் என்னும் உண்மையுணர்ந்து அம்மண்டபத்தின்கண்வந்து அருளும் அன்பும் உடைய அடியார்பால் அவ்விரண்டையும் வேண்டிப் பின் இறைவனைக் காணப்போவது அத்தலத்து முறைப்பாடாக அமைந்துள்ளதாகலின் அம்முறைமை யுணர்ந்தவரும் அம்முறையை ஆங்காங்கும் செலுத்திவருகின்றவருமாகிய விறன்மிண்டர் அம்மண்டபத்தில் நின்றிருக்க, அத்தருணத்தில் இறைவன்பால் தோழமைமுறைமையுடைய வன்றொண்டர் நாடோறும் தான்செல்லும் முறைப்படிசெல்ல அதுகண்டு, மனம் பொருது தம்முறையை அஞ்சாதசெலுத்தத் துணிந்தனராகலின்—அடியார் தம்மைத் தொழுது வந்தனைசெயாது ஒருவாறொதுங்கும் வன்றொண்டர் புறகென்றுரைப்ப—என்றார். அருள்விளைதற்கு இடமாயுள்ள அடியவரை வழிபடாதார் சிவபெருமானுக்குப் புறம்பென்னும் உண்மையுணர்ந்து, அடியார்வழிபாட்டை மேற்கொண்டு சிவனருளால் பெருரும்பேறெல்லாம் உடையவராயினாராதலின்—சிவனருளாற் பெருகாநின்ற பெரும் பேறுபெற்றார்—என்றார். எனவே, சிவனருள்என்பது சிவனடியாரை முன்வணங்கும் அவாவேஎன்பதும், பெரும்பேறு என்பது அவ்வவாவே இறைவனருளாற் பெறத் தகும் பெரியபேறெனவும் விளக்கியவாறும்.

இதனால் இந்நாயனார், சிவபெருமானிடத்தில் எது அருளாயுள்ளதோ அதனையே பெற்ற விறலாளர் என்பதும், அங்ஙனம் அதனைபபெற்ற வன்மையைக்கொண்டு, வினையவகையால் அருள்பெற்றுடையாரை அருள்பெற்றவராக எண்ணாத மிண்டனுரென்பதும், உணர்த்தினமைகாண்க. அவர்பெற்ற அப்பெரிய பேற்றை இறைவனும் யாவர்க்கும் விளக்கும்வகையான செயலைச்செய்யத் திருவுளத்து எண்ணியிருக்கின்றுனுகலின் மற்றும் பெறநின்றார் என்றார். எனவே,—சுந்தரமூர்த்திகளைப் புறகு எனச் சொல்லும்பேற்றைப் பெற்றதேயன்றி, அம்மூர்த்திகளுக்குப் பிராணுகிய தன்னையும் புறகு என்று சொல்லும் பேற்றையும் பெறுதற்கு நிற்கின்றவரென்பதாம்.

இத்திருப்பாசுரத்தான்,மெய்த்தேவராகத் திரிவோரைப் பொய்த்தேவராக்கி அவர்களைத் தொண்டுகொண்டருளும் இறைவனையாளவல்ல வன்றொண்டரைப் புறகென்று சொல்லவல்ல பெரும்பேறுபெற்ற மிண்டராகிய நாயனாது பேற்றைக்கூறப் பட்டது.

(எ)

---

* திருவாசகம் சென்னிப்பத்து செ - க.

சேணார் மேருச் சிலைவளைத்த சிவனார் அடியார் திருக்கூட்டம்
பேணா தேகும் ஊரனுக்கும் பிரானாம் தன்மைப் பிறைசூடிப்
பூணார் அரவம் புனைந்தார்க்கும் புறகென் றுரைக்க மற்றவர்பால்
கோணா அருளைப் பெற்றார்மற் றினியார் பெருமை கூறுவார்.

(எ - து.) ஆகாயத்தை அளாவியிருக்கும் மேருமலையை வில்லாகவளைத்த சிவனார் அடியவர் * திருக்கூட்டத்தைப் போற்றாதுபோகும் இந்த நம்பியாரூரருக்கும் பிரானாந் தன்மையையுடையாராயின், சந்திரசேகரரும், ஒலித்தலைச்செய்யும் சர்ப்பத்தை ஆபரணமாகப்பூண்டவருமாகிய அச்சிவனாரும் புறகேயாவர் என்றுகூற, (அதனால் அவர் சிவாபராதியாகாமல்) அச்சிவபிரானுக்கு உகந்தவராய் அவ்விறையவர்பால் எக்காலத்தும் மாறுபடாத திருவருளைப் பெற்றவராயினர். அங்ஙனம்பெற்ற அவரது பெருமையை, இனி யாவர் இத்தன்மைத்தென்று கூறவல்லவராவர் என்பதாம்.

ஆர்க்கும் அரவம்பூண்புனைந்தவர் எனக்கூட்டுக. தேவர்களுக்குப் பகையாயிருந்த திரிபுரத்தை எரிக்கப்பொன்மலையை வில்லாகவளைத்தாரென்பார் சேணார்மேருச் சிலைவளைத்த சிவனார் என்றார். தேவர்களது பகையைப்போக்க வளைக்கப்படாத மலையை வளைத்தவர், அடியவர்க்குப் பகையாயிருக்கின்ற இந்தஆரூரருக்கு இவர்தோழராய்ப்பிரானானகாரணம் என்னையோ என்பார்- அடியார் திருக்கூட்டம் பேணாதேகும் ஊரனுக்கும்பிரானாந்தன்மைஎன — என்றார். அக்காரணம் எக்காரணமாயிருக்கினும் இருக்க, எமக்கு நம்பியாரூர் புறகானதுபோல் இந்த ஆரூர் இறைவரும் புறகேயாவர் என்பார் —பிறைசூடி புறகென் றுரைக்க—என்றார். தம்மையும் தமதுதோழரையும் புறகென்று சொல்லிய அவர்க்கு இறைவன் மறக்கருணையைச் செய்யாது அறக்கருணையைச்செய்யும் அப்பெரும்பேற்றைப் பெற்றவரென்பார் மற்றவர்பாற் கோணாவருளைப்பெற்றார் என்றார். சிவபரஞ்சுடரைப் புறகென்ற இவர், அருளுக்குப் புறம்பாக வேண்டியவராயிருக்க அங்ஙனமாகாது அருளுக்கே யுரியராகிய அவரது சிறப்பு என்னுவிலடங்குமோ என் நினைவிலடங்குமோ! நாமேயன்றி இனி எவருடைய மனவாக்குகளிற்றான் அடங்குந் தன்மையதோ ஒருசிறிதும் அடங்காதென்பார்,—மற்று இனி யார்பெருமை கூறுவார் என்றார்.

கோணாவருள்-காத்தலாகிய நல்லருள். அஃதாவது நிக்கிரகமற்ற அனுக்கிரகம் என்க.

இத்திருப்பாசுரத்தான், சிவனைப் புறகென்றுகூறி அவருக்கு அகத்தராய் அவரகத்துள்ள கோணாவருளக்குரியராய் மாதவஞ்செய்த தென்திசைவாழ்ந்திடத், தீதிலாத் திருத்தொண்டத் தொகை தருதற்குக் காரணராய் விளங்கிய விறன்மிண்டர்பெற்ற அருட்சிறப்புக் கூறப்பட்டது. (அ)

அடியார் பெருமைவியத்தல்.

ஞாலம் உய்ய நாமுய்ய நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பாடச் செழுமறைகள்
ஓலம் இடவும் உணர்வரியார் அடியார் உடனாம் உளதென்றால்
ஆலம் அமுது செய்தபிரான் அடியார் பெருமை அறிந்தாரார்.

* முன்னுரைக்காரர்—பேணாதெகும் ஊரனுக்கும், பூணார் அரவம்புனைந்தார்க்கும் திருக்கூட்டமானது புறகுஎன்று வரைந்துள்ளார். அஃது ஈண்டு உரையன்மையறிக. என்னையெனின்,— திருக்கூட்டத்திற்கு இருவரும் புறகுஎன்று நாயனார் கூறினரேயன்றி இவர்களுக்குத் திருக்கூட்டத்தவர் புறகென்று சொல்லியதில்லை. இவ்வுண்மையை "அவ்வாரூரனையும், பிரானவனும் ஈசன்றனையும் புறகு தட்டென்றவன்" என வரும் நம்பியாண்டார் அந்தாதியானும், "தொண்டரடி வணங்காதேகும் வன்றொண்டன் புறகு, அவனை வலிய ஆண்ட தளங்குசடை முடியோனும் புறகு என்றவன்" எனவரும் உமாபதிசிவனார் - புராணசாரத்தானும் அறிக.

(எ - து.) உலகினர் விதிவழியில் ஒழுகவும், அடியவர்களாகிய நாமெல்லாம் பிழைக்கவும், சிவசம்பந்தமாகிய சைவசன்மார்க்கநெறியின் சீலம் சிறந்தோங்கவும், நம்பியாரூரர் திருத்தொண்டத்தொகையைப் பாட, அதில் வளமுடைய வேதங்கள்முறையிட்டும் அரியராகிய இறைவனார், முதலடியராய் அடியருடனிருக்குஞ் சீர்மையைப்பெற்றுளது என்றால், விடத்தை அமுதமாகவுண்டருளிய சிவனடியார்களது பெருமையை அறிந்தவர் யாவர் என்பதாம்.

நம்பி திருத்தொண்டத்தொகை முன்பாட எனக் கூட்டுக.

இருவினை வசப்பட்டுழலும் வினையாளராகிய உலகினர் அவ்வினைக்குரிய போகங்கள் அநுபவிக்குமாறு செய்யவல்லது வேதநெறியாகலான் அதற்குரியார் தழைத்தோங்க வேண்டுமென்பார் ஞாலமுய்ய என்றார். பரிபாகம் வருவிக்கவல்ல சிவதருமத்தை இயற்றுபவராகிய நாம் பற்றற்றானைப்பற்றுமாறு செய்யவல்லது ஆகமநெறியாகிய பக்திநெறியாகலான் அது வளர்ந்தோங்கவு மென்பார் நாமுய்ய என்றார். வேதநெறி இதுவெனவும் சைவநெறி இதுவெனவுங்காட்டி அவைகட்குரியசீலங்களையும் உணருமாறு செய்யவல்லது சைவசித்தாந்தத்திற் கூறப்படும் நன்னெறிகளாகலான் அவை நிலைபெறவேண்டு மென்பார்—சைவநன்னெறியின் சீலமுய்ய—என்றார். வேதநெறி இது, பக்திநெறி இது என அறிவிப்பதும், அந்நெறிகளிற் செல்லுமுறை இம்முறைகளெனக் காட்டுவதும் அந்நெறிகளிற்சென்றால் அடையப்படும் பயன்கள் இவையென விளக்குவதும் திருத்தொண்டத்தொகை என்க. அதனைப்பாடுதற்கு வேதங்களெல்லாம் முறையோ முறையோ என்று முறையிடினும் இதோவந்தேனென்று வருதலையறியாத இறைவன் அடியெடுத்துக்கொடுக்க முற்பட்டு வந்தானென்பார்—செழுமறைகள் ஓலமிட உணரரியார் திருத்தொண்டத்தொகை முன்பாட—என்றார். அங்ஙனம் முற்பட்டுவந்ததேயன்றி மேலோர்க்கு மேலோர்க்கு மேலோனாகிய அப்பெருந்தகையாளன் அத்தொண்டத்தொகையில் தானும் ஒருவனாய்முற்பட்டு உடனாய் நிற்கின்றவனென்பார்.—அடியருடனாமுளது—என்றார். இறைவன் அவ்வாறு நிற்கின்றவனானால் அவ்வடியார் பெருமை அறிந்தார் எப்புவனத்தினும் இல்லையென்பார்—ஆலம் அமுது செய்தபிரான் அடியார்பெருமை அறிந்தார் ஆர் என்றார்.

இதனால் வேதநெறிக்குரியார் ஞாலத்தினரென்றும், சைவநெறியாகிய பக்திநெறிக்குரியார் சரியையாதிகளில் நிற்கும் நாம் என்றும், சைவநன்னெறியின் சீலமுடையார் அடியார்களென்றும், இறைவன்—''சீலந்தான் பெரிதும் உடையான்''—ஆகலான் அச்சீலமுடைய அடியாரோடு கூடியிருத்தலில் மிகவும் விருப்பமுடையவனென்றும் விளக்கினமை காண்க.

இத்திருப்பாசுரத்தான், திருத்தொண்டத்தொகையின் சிறப்புக்கூறப்பட்டது. எங்ஙனமெனின் ஆன்மாக்கள் தங்கள்தங்கள் அநுபவத்தின்பொருட்டு வேண்டும் போகத்தையும், யோகத்தையும், ஞானத்தையும், பலவிதமாய் அநுக்கிரகஞ்செய்த இறைமைத்தன்மை விளங்கவும், சிவபரத்வம் விளங்காதார்க்கு அதுவிளங்கவுமாக வந்தவை சிவநாமங்களென்க. நாமங்கள்மாத்திரம் வழங்கப்படுவனவேயன்றி அவர்களோடு ஒன்றாயெண்ணப் பட்டவருமன்று, அவர்களோடிருந்து வாழ்ந்தவருமன்று, திருத்தொண்டத்தொகையில் வரப்பட்ட நாமங்களோ, முத்தான்மாக்களாகவும், இறைவன் வேண்டுவனசெய்யவும், அவன் வேண்டுவன கொடுக்கவும், அவர்களுடைய கரணங்கள், புலன்கள் பொறிகள், உடல்களாகிய இவையெல்லாம் இறைவன்வசப்பட்டு அவன் பணிசெய்யவும், ஆசையெல்லாம் அவ்விறைவன் பாலேயாகவும் செய்யவல்லன. இவ்வுண்மையன்றியும், தில்லைவாழந்தணர்கள், திருநீலகண்டர் முதலாகச்சொல்லப்பட்டாரது சரித்திரங்களை விசாரிக்குங்காலத்தில் இறைவன் அவர்கள் அரியசெயலுக்கேற்ப அவர்களுக்கு வேறொருவர் பதங்களைக்கொடுக்காது, தான்வாழும் உலகினையும், தன்

னையும், தன்னையநுபவிப்பதாகிய போகத்தையும், தன்னின்பத்தையும் தானே வலிந்து கொடுத்ததாகத் தெரியவருகின்றன.

இதனால் அவர்கள் சிவபெருமான் உலகினையும், அவரையும், அவரனுபவத்தையும், அவரின்பத்தையும், பெற்றுவாழ்கின்றவர்களாகத் தெரியவருகின்றனர்.

ஆகலான் அவர்களால் செய்யப்பட்ட செய்கைகளின் உண்மை திருத்தொண்டத்தொகையான் உணர்ந்து, செயற்கரிய செய்கைகளைச்செய்து, அடைதற்கரிய சிவலோகாதிகளைப்பெற்று வாழ்தலே உய்வகையாதலால் ஞாலமுய்ய, நாமுய்ய, சைவநன்னெறியின் சீலமுய்யத் திருத்தொண்டத்தொகைமுன்பாட என்று கூறியதென்க.

சிவனே பரம் என உலகினர்க்கு உணர்த்துவது வேதநெறியாகலான்,—ஞாலமுய்யஎனவும், வினையோரையொழித்து, சிவனேபரமெனக்கூறிய வேதநெறியினையுணர்ந்த சத்திநிபாதர்க்கு அச்சிவனருள் எய்துமுறைமையினை உணர்த்துவது ஆகமமாகிய சைவநெறியாகலான் நாமுய்யஎனவும், சிவனருளை எய்தப்பெற்றவர்க்குச் சிவமாய் அவனடிப்பட்டொழுகுமுறைமையினை உணர்த்துவது நன்னெறியாகிய பத்திநெறியாகலான் சைவநன்னெறியின் சீலமுய்ய எனவுங்கூறினர். இதனால் வேதநெறியால்சிவனே பரமென வாக்கைச்செலுத்து முறைமையினையும், சைவநெறியால் அருள்வருமாறு காயத்தைச்செலுத்துமுறைமையினையும், பத்திநெறியால் சிவனடிப்பட்டொழுகுமாறு சிந்தையைச் செலுத்து முறைமையினையும் உள்ளங்கைநெல்லிக்கனிபோல் காட்டவல்லது இத்திருத்தொண்டத்தொகையென் றுணர்த்திபவாறுமென்க. இதனை,—"தந்தைதாளோடும் பிறவித்தாளெறிந்து நிருத்தர் இருதாளைச்சேர்ந்த, மைந்தர்தான்வேதநெறி சைவநெறிபத்திநெறி வழாது வாய் மெய், சிந்தைதான் அந்நெறிக்கே செலுத்தினராய்ச் சிவானுபவச்செல்வம் ஓங்கிப், பந்தமாந்தொடக்கறுத்த திருத்தொண்டர்" எனத் திருவிளையாடற்புராணத்திற் கூறியவாற்றானறிக. (௬)

நாயனார் கணநாதராதல்.

ஒக்க நெடுநாள் இவ்வுலகில் உயர்ந்த சைவப் பெருந்தன்மை
தொக்க தலைமை நெறிபோற்றித் தொண்டு பெற்ற விறன்மிண்டர்
தக்க வகையால் தம்பெருமான் அருளி னாலே தாள்நிழற்கீழ்
மிக்க கணநா யகராகும் தன்மை பெற்று விளங்கினார்.

(எ - து.) குன்றுபோ லுயர்ந்துள்ள சைவத்தினது பெரிய தன்மையெல்லாம் ஒருங்கே கூடியுள்ளதாகிய தலைமைத்தன்மை பெற்றுள்ள (திருத்தொண்டத்தொகையில் கூறப்பட்டுள்ள) நெறியானது, இவ்வுலகில் பொருந்த அநேகநாளாய்ப் பாதுகாத்துவரும் திருத்தொண்டினைப்பெற்ற விறன்மிண்டநாயனார், தமது பெருமான் திருவருளினால் அவரது திருவடிநிழலின்கீழ், கணநாயகருக்குள் மேலான கணநாயகராயிருக்குந் தலைமைத்தன்மையைத் தகுதியானவகையினாற் பெற்றுப் பிரகாசித்தனர் என்பதாம்.

உயர்ந்தசைவப் பெருந்தன்மை தொக்கதலைமை நெறி, இவ்வுலகில் ஒக்க நெடுநாள் போற்றித் தொண்டுபெற்ற விறன்மிண்டர் தம்பெருமான் அருளினாலே தாள்நிழற்கீழ் மிக்க கணநாயகராகும் தன்மையைத்தக்க வகையாற்பெற்று விளங்கினார் எனக் கொண்டு கூட்டுக.

சூரியோதயத்துக்குமுன் நக்ஷத்திரக்கூட்டங்களும் அவைகளுட்சிறந்த சந்திரனும் தலைமைபெற்றும் பிரகாசிக்கப்பெற்றும் இருப்பனவாகக் காணப்படினும், சூரியன் உதயமானபின்னர் அவையெல்லாம் முன்போ லிருப்பினும் தாமொருமுதலாகப் பிரகாசப்படாமலும், சந்திரனும் பிரகாசிக்கின்றான், நக்ஷத்திரங்களும் பிரகாசிக்கின்றன என்று ஒருவராலும் சொல்லப்படாமலும், அவைகளிருக்கச் சூரியனே பிரகாசித்தல்போல, எவ்வெச்சமயத்தில் எவரெவர் இருப்பினும் அவைகளையும் அவர்களையும் பூர்வபக்ஷமாக்கி

அவைகளையும் வைத்துச் சித்தாந்தமாய்க் களங்கமற்றுப்பிரகாசிப்பது சைவமேயாகலான் —உயர்ந்த சைவப்பெருந்தன்மை—என்றும், அங்ஙனமான சித்தாந்த சைவசமயத்தில் வாழப்பெற்றார் - அச்சித்தாந்தத்தில் அடையப்படும்பயன் இதுவேயாமென்று எளிதில் உணர்ந்துய்ய அருளிய திருத்தொண்டத்தொகையுள் கூறப்பட்டுள்ள தலையான நன்னெறிகளெல்லாம் கண்டுணர்ந்து அந்நெறிகளில் திண்ணியராய் அடியரன்புடையராய் நிகரற்றுலாவ இந்நாயனார் நெடுங்காலமாய் எங்கெங்குஞ்சென்று எங்கெங்கும் நிலைநாட்டினராகலின்—இவ்வுலகில் ஒக்கநெடுநாள் தொக்கதலைமை நெறிபோற்றி—என்றும், திருத்தொண்டத் தொகையின் உண்மை உலகில் உணர்வதற்கின்றிக் குன்றுமாயின் அன்புகுன்றியும், அன்பு குன்றுமாயின் அருள்குன்றியும், அருள் குன்றுமாயின் மும்மலத்தொடக்கு மேலிட்டுப் பிறவித்தொடர்நீங்கா யொழியாது நிலைபெற்று சிவப்பேறும் சிவானந்தமும் சித்தாந்தஞானிகட்கெல்லாம் இன்றாயொழியுமாகலான் அங்ஙனம் ஒழிந்துபோகாவண்ணம் செய்வதே இறைவன் அகம்படித்தொண்டென்று அத்தொண்டைக் கைக்கொண்டன ராகலின்—தொண்டுபெற்ற—என்றும், பெற்றதற்கேற்ப அத்தொண்டைப்பரிபாலித்து வருங்காலத்தில் அதற்கு மாறுபாடாக எத்தகைய வல்லாளர் வரினும், இறைவனே வரினும் அவர்கள் நிலைமையைநோக்காது தனது தொண்டின் நிலைமையே நோக்கி அதனைச் செலுத்திவருவதில் இவரைப்போலும் வல்லாளர் ஒருவரும் இல்லையாகலின்—விறன்மிண்டர்—என்றும், அங்ஙனம் அத்தொண்டில் மிண்டராயிருத்தல் இறைவன் திருவுளத்துக்கு மாறுபாடன்மையான் அவர்மிண்டாடிச் செய்யும் அவரது தொண்டுக்கு இறைவன் மகிழ்ந்தவராய்த் தன்னருட்செயலில் இவர் செயல் வேறன்றாய் உடனிகழநிறுத்தி, அவர் மிக்க ஆவலுடனும் ஊக்கமுடனும் செய்துவருந் தொண்டினையே சிவலோகத்திலும் கணநாதராய்ச் செய்துவர அருள்செய்ய, அவ்வருள்பெற்றுத் தமது தொண்டினையே நடத்திவந்தனராகலின்—தக்கவகையால் தம்பெருமான் அருளினாலே தாள்நிழற்கீழ் மிக்ககணநாயகராகும் தன்மைபெற்று விளங்கினார்—என்றும் கூறினார்.

இத்திருப்பாசுரத்தான், நாயனார் உயர்ந்த சைவசித்தாந்தப பெருந்தன்மையாகிய நெறியை எங்கும் நிலைநாட்டுவதாகிய தொண்டில் மிண்டராய் வெற்றியுடையவரென்றும், இச்செயல் இறைவன் திருவுளத்திற்கிசைந்ததென்றும், அதனால் இங்குசெய்த அத்தொண்டையே சிவலோகத்திலுஞ்செய்து மகிழ்ந்துவாழக் கணநாதரா யிருக்கச்செய்தனரென்றுங் கூறப்பட்டன. (௧0)

அமர்நீதிநாயனார் தொண்டுகூறுகின்றே னெனல்.

வேறு பிறிதென் திருத்தொண்டத் தொகையால் உலகு விளங்கவரும்
பேறு தனக்குக் காரணராம் பிரானார் விறன்மிண் டரின்பெருமை
கூறும் அளவென் னளவிற்றே அவர்தாள் சென்னி மேற்கொண்டே
ஆறை வணிகர் அமர்நீதி அன்பர் திருத்தொண் டறைகுவாம்.

(எ - து.) விறன்மிண்ட நாயனாருடைய பெருமையானது திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகத்தால் உயர்ந்தோரெல்லாம் நின்மலரூபராய் விளங்கவரும் பெரிய பேற்றிற்குக் காரணராயிருக்கும் தலைவனார் என்னும் சிறப்புடைத்தா யிருக்குமானால் இதனினும் மேலான பெருமையைக் கொடுக்கத்தக்கது வேறு என்ன இருக்கின்றது. ஒன்று உளதென்று நான் எண்ணிச் சொல்லத்தொடங்குவேனானால், அது என்ன பெருமையினை உடைத்தானதாகும். ஆகலின், அவர்பெருமையினைத் திருத்தொண்டத் தொகையுடன் நிறுத்தி, அவரது திருவடிகளை எனது தலைமேற்கொண்டு, பழையாறை என்னும் திருப்பதியிலிருந்த வைசியர் குலதிலகராகிய அமர்நீதிநாயனாரது திருத்தொண்டைச் சொல்லுவாம் என்பதாம்.

விறன்மிண்டரின்பெருமை திருத்தொண்டத்தொகையால் உலகுவிளங்க வரும் பேறு தனக்குக்காரணராம் பிரானார் (என்றால்) வேறுபிறிதென் கூறும் அளவு என்னளவிற்றே—எனக்கொண்டு கூட்டுக.

உயர்ந்தோரெல்லாம் திருத்தொண்டத்தொகையை நாடோறும் ஓதியோதி அதன் பொருளுணர்ந்து உண்மைச் சிவானுபவிகளாய் யாவராலும் போற்றப்படுதல் கண்கூடாய்க் காணப்படலான்—திருத்தொண்டத்தொகையால் உலகுவிளங்க வரும்பேறு—என்றும், அத்திருத்தொண்டத்தொகை வெளிவருதற்குக் காரணம், இந்த விறன்மிண்டரே என்று அன்றுமுதல் சொல்லப்பட்டு வருமாதலால், இதனினும் ஒருவர் பெறத்தக்கபேறு இல்லையாகலான்—வேறுபிறிது என்—என்றும், யாவரேயினும் மற்றெவராயினும், இதனினும் சிறந்த பெருமையொன்றுளது என்று எண்ணிச்சொல்லப்புகின் அதற்குப் பிரமாணம் என்னஇருக்கின்றது, பிரமாணத்தைக் கொள்ளாதது சிறுமையே ஆகலான்—கூறும்அளவு என்னளவிற்று—என்றுங் கூறினார்.

இத்திருப்பாசுரத்தான், விறன்மிண்டநாயனாரைப் போலுப் பெருமைபெற்றார் ஒருவரும் இல்லையென்றும், திருத்தொண்டத்தொகைபோல் பெருமைகொடுக்கத்தக்கது மற்றொன்றில்லை என்றும், இதுபிரமாணத்தோடு கூடியதென்றும், ஏனையவையெல்லாம் பிரமாணமற்றதென்றும் அஃதாவது:—பிரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்டாரால் புகழப்பட்டதென்றும், ஏனையவையெல்லாம் அவர்களால் இகழப்பட்டதென்றும், விறன்மிண்டரது பெருமையைக்கூறி மேல் அமர்நீதிநாயனாருடைய திருத்தொண்டைக் கூறுவாமென்றும் கூறப்பட்டன. (கக)

விறன்மிண்டநாயனார்புராணம் முற்றிற்று.

கஜமுகாய நம:

திருத்தொண்டத்தொகை.

"விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்"

விரிபொழில்சூழ் குன்றையார்—என்றதனால் விரிந்து சூழ்ந்திருக்கும் சோலையையுடைத்தாய் விளங்கும் திருச்செங்குன்றூரில் அவதரித்தவர். எனவே சோலையைப்போலும் விரிந்துகிடக்கும் தமிழ்நாடெங்கும் அருள்பெறுதற்குரிய அடியார்புகழே தழைத்தோங்கச் சைவநிழலைச் செய்தவரெனவும் அப்பொழில்நடுவில் செங்குன்றூர் விளங்குவதுபோலும் கைலாய மென்னும் குன்றுடைய பவளமணியான் அன்பை உண்டாக்க வந்தவரெனவும்—விறன்மிண்டர்க்கு—என்றதனால் தன் அடிமையென்று இறைவன் வழக்கிட்டு வன்றொண்டராக்கிய என்னைப் புன்றொண்டனாகக் கருதிப் புறகென்றுசொன்னதேயல்லாமல் என்னைத்தொண்டனாக ஆளாது தோழனாக ஆண்டவனையும் புறகென்று கூறி என்னை மீண்டும் வன்றொண்டனாகக் கொண்டமிண்டர்க்கு எனவும், அடியேன்—என்றதனால் அவ்வாறு புறகென்றுகூறியவர் புறகேயாக்காது அடியன் ஆம் தன்மையைப்பெற்று அவருள் ஒருவனாய் உள்ளோம் என்னுஞ் சீர்மையைப் பெற அவருக் கடியேனாகின்றேன் எனவுங்கூறியவாறாம்.

இதனால்,-திருவேடமே மெய்ப்பொருளெனத் துணிந்து, அந்நிலையில் தாம் நின்று தாம்நின்றதுபோலும் தமது அரசியலுக்கு உட்பட்ட ஆயத்தாரும் காதலாரும் நின்று பாதுகாத்து உய்யவேண்டுமென்று மெய்ப்பொருளநாயனார் விதித்ததாகிய அவ்விதியின் சிறப்பைப்போல், விரிபொழில்சூழ் குன்றையாரும் எண்ணி, அவ்விதியில் தம்மை உட்படுத்தித் தமதுமனத்தை அதில் திண்ணியதாக்கியும், மெய்ப்பொருள்நாயனார் தமது அர

சியல்முறையில் நடத்தியதுபோலும், தாம்அம்மெய்ப்பொருள் வேட்முடைய மெய்யடியார்களே மெய்த்தெய்வமெனப் பேணிவழிபடவேண்டுமென்னும் அவாமிக்குடையராய், அவ்வவா வுட்பட்ட அவ்வெண்ணம் தமிழ்நாடெங்கும் பரவி நிலைபெற்றோங்குவதற்கு வேண்டிய விறலையும், அவ்விறலுக்குறிய மிண்டுதலாகிய கருவிச்செய்கையையும் உடையவராய் அவ்விரண்டுமே விளங்க—விறன்மிண்டர்—எனத் திருநாமங்கொண்டு, அந்த விறன்மிண்டத் தன்மையை,—மிக்கசீர் அடியார்க்கு அடியேனாகப் பண்ணுநாள் எந்நாளோ—என்று எண்ணியிருந்த என்பாற்காட்டி அந்நாளிலேயே என்னை அடியார்க் கடியனுக்கினாராகலின் அவ்விறன்மிண்டருக்கு நான் மென்தொண்டனாயிராமல் வன்தொண்டனாய் அடியவனாகின்றேன் என்றுகூறியவாறும்.

பேசும் பெருமையவ் வாரூ ரனையும் பிரானவனும்
மீசன் தனையும் புறகுதட் டென்றவன் ஈசனுக்கே
நேசன் எனக்கும் பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்
வீசும் பொழிற்றிருச் செங்குன்ற மேய விறன்மிண்டனே.

"ஆராதகாதலில் நம்ஆரூரன் நாம் அழைக்க வாராநின்றான் அவனை மகிழ்ந்து எதிர்கொள்வீரென்று, நீராரும் சடைமுடிமேல் நிலவணிந்தார்" பேசும் பெருமையினையும், அங்ஙனமான பெருமைபொருந்திய பேச்சைக்கேட்ட பெரியோரெல்லாம் "எம்பிரானார் அருள்தான் இருந்தபரிசு இதுவானால், அவர் நம்பிரான் ஆவாரன்றே" என்று, பேசும் பெருமையினையும் உடையவராகலான்—பேசும்பெருமை அவ்வாரூரனையும்—எனவும், "முன்னவன் எங்கள்பிரான் முதல் காண்பரிதாயபிரான், சென்னியில் எங்கள்பிரான் திருநீலமிடற் றெம்பிரான், மன்னிய எங்கள்பிரான் மறைநான்கும் கல்லால் நிழற்கீழ்ப்பன்னிய எங்கள்பிரான்" என்று பன்முறையும் வேதத்தாற்கூறப்படும் இறைவனாகலின்—பிரானவனும் ஈசன்தனையும்—எனவும், ஆரூரராகிய பெரியோரையும், ஆரூராண்டவனாகிய ஈசனாரையும், புறகாகச் செய்யவேண்டுமென்ற பெரியோர் சிவபெருமானை ஓரிடத்தன்றிப் பலவிடத்துங் கண்டு களித்தும் அடங்காத பேரன்புடையராகலான்-புறகுதட்டென்றவன் ஈசனுக்கே நேசன் எனவும், வலி, வீரம், வெற்றி, பெருமை என்னும் நான்கினையும், திண்மை, நெருங்கல், தோண்டுங்கருவிஎன்னும் மூன்றினையும் சொல்வகையானேயன்றிச் செயல்வகையானுங் காட்டவல்ல வன்மையாளராகலான்—விறன்மிண்டனே—எனவும், புவியெங்கும் சென்று ஆளுடையார் அடியவர்தம் திண்மை ஒழுக்கநடை எங்கும் சோலைபோல் தழைத்தோங்கச் செய்து, தென்திசைக் கோனாகிய இயமனால் ஏவப்படும் கடுங்காற்றாகிய மரணக்காற்றை மாற்றித் தென்திசையில் வாழ்வாரெல்லாம் வடதிசையின்கண்சென்று சிவலோகத்தில் வாழத் திருத்தொண்டத்தொகை என்னும் தென்தமிழ்க்காற்றை வீசச் செய்விக்கவல்ல அவரது ஊரும் தென்றற்காற்றுலாவும் பொழில்சூழ்ந்த திருச்செங்குன்றூர் ஆகலான்—நீடுதென்றல் வீசும் பொழில் திருச்செங்குன்ற மேய—எனவும், செப்பற்கு அரிய பெருஞ்சீர்த்திச் சிவனார் செய்யகழல்பற்றி எப்பற்றினையும் அறஎறிவாரும், எல்லைதெரிய வொண்ணாத பெரிய பெருமையினை யுடையாருமாகிய இவரது பற்று எனக்குண்டாயின் நான் பற்றெலாம் அற்று அடியாரோடுகூடும் பெருமைபெற்ற மோக்ஷவீட்டில் மிக எளிதாய்ப் புகவல்லவனாவேனாகலான்—"மனைக்கேபுக எனக்கும்பிரான்"—எனவும்கூறினார்.

இதனால், விறன்மிண்டநாயனார்-தமக்குரிய திருநாமத்திற்கேற்ப,—இருள்சேர் இருவினையுஞ்சேரா இறைவன், பொருள்சேர் புகழையே—பாடவல்லாராகிய பெரியோரால் புகழப்பட்ட நம்பியாரூரரையும், பாடல்மறையுந் தேராப்பரமனாகிய பிரானாரையும் புறகென்றுசொல்லிய அவரது திண்மையே திண்மைஎன்றும், இறைவனைப் புறகென்று சொல்லி "யாவராயினும் அன்பரன்றி யறியொணா மலர்ச்சோதியான்" என்ற உண்மை

வாசகத்தின்படியே அன்பர்கள்பால் * பேரன்புவைத்து அவ்வன்பின்வழியானே ஈசனிடத்திலே வைத்தஅவரது நேசமே நேசமென்றும், அந்தநேசத்தால் யானும் என்போன்றாரும் முத்தியாகிய வீட்டிற்புக திருத்தொண்டத்தொகை வெளிவருவதற்குப் பிராணாகநின்றனரே அதுவே பிராணுந்தன்மை என்றும் அவரது திண்மையும் நேசமும் பிராணுந் தன்மையும் எடுத்துக்கூறிப் பின்னர்—நீடுதொன்றல் வீசும்பொழில் திருச்செங்குன்றூர்—என்று அவரது ஊர்ச்சிறப்பையும் சிறப்பித்தமைகாண்க.

இவ்வுண்மையை, நம்பியாரூரர் - வெளிப்படுத்தவந்தவரும், ஆரூரர் - வெளிப்படுத்தும்படி விட்டவரும் ஆகலின், தம்மைப புறகென்று நாயனார் கூறவே, இருவரும் நாம் திருத்தொண்டத்தொகையை வெளிப்படுத்தவந்தும் அதனை நாம் செய்யாதிருக்கின்றோமன்றோ. அங்ஙனம் செய்யா திருப்போமாயின் இவ்வுலகின்கண் அன்பு இத்தன்மைத்தென்றும், அருள் இத்தன்மைத்தென்றும், அவ்விரண்டும் ஊடுருவிநிற்கும் இயல் இத்தன்மைத்தென்றும் யாவர் அறியவல்லார். அறியாதிருத்தற்குக் காரணம் நாமேயாய் முடிகின்றோம். ஆகலான் அருள்செயும் அன்பிற்கு நாமும், அருள்பெறும் அன்பிற்கு நீயும் புறகேயாயினோம். என்று எண்ணிப் புறகென்ற நாயனார்பால் நம்பி ஆரூரர் அன்பும், ஆரூரர் அருளும் உடையவர்களாய் அக்கணமே திருத்தொண்டத்தொகையைப்பாடி, அத்தொகையின் வழியாய் அருள்செயும் அன்பின்வழியையும், அருள்பெறும் அன்பின்வழியையும் ஆன்மாக்கள் விரித்துணர அருள்செய்தனரென்க.

புராணசாரம்.

விளங்குதிருச் செங்குன்றூர் வேளாண் தொன்மை விறன்மிண்டர் திருவாரூர் மேவு நாளில், வளங்குலவு தொண்டரடி வணங்கா தேகும் வன்றொண்டன் புறகவனை வலிய வாண்ட, துளங்குசடை முடியோனும் புறகென்றன்பாற் சொல்லுதலும் அவர்தொண்டத் தொகைமுன் பாட, உளங்குளிர உளதென்றூர் அதனால் அண்ணல் உவகைதர உயர்கணத்துள் ஓங்கி னாரே.

(எ - து.) விறன்மிண்டர் மாதவராகிய பரசிராமன் பரமசிவன்பால் பரசாயுதம் பெற்று அதனால் அளவிடப்பட்ட பூமியை அந்தணர்களுக்குக் கொடுத்துத் தானும் வசித்ததும், கடலின்வளனும் நிலனின்வளனும் மலையின்வளனும் பெருகி விளங்குவதுமாகிய மலைநாட்டில், சேரர்களது நாட்டிலுள்ள ஊர்களில் முன் சிறந்துவிளங்கும் திருச்செங்குன்றூரில், உலகேறும் பெருமையுடைய வயலுழவின் வளமமைந்த தொன்

* அருள்செயும் அன்பு, அருள்பெறும் அன்பு என அன்பு இருவகை. அருள்செயும் அன்புடையான் இறைவன். அருள்பெறும் அன்புடையார் அடியவர்கள். இதனால் இருவரும் அன்புடையவர் என்று வெளிப்பட்டது. படவே அருள்பெறுதற்கான அன்பை அன்பரிடத்துப் பெறவேண்டுமென்றும், அங்ஙனம் பெற்றபின்னர் அருள்செயும் அன்பை இறைவனிடத்துப் பெறவேண்டுமென்றும் வெளியாயிற்று. ஏனெனின்,—அருள்பெறுதற்கான அன்பை அன்பரிடத்துப் பெறாராயின் இறைவன் அருள்செயும் அன்பை அவர்களுக்குச் செய்யான். ஆகவே,—இறைவன் அருள்செயும் அன்பைத் தான் செய்வதற்கு, அருள்பெறும் அன்பை அன்பர்கள்பால் பெற்றனராவென்று எதிர்பார்ப்பான். அஃதேபோல்,—அன்பர்கள் இவர்களுக்கு அருள்செயும் அன்பு இறைவனிடத்திருக்கின்றதா என்று எதிர்பார்ப்பார்கள். இவ்வகையாய் இருவரும்பார்த்தல் இயற்கையும் முறைமையுமாம். ஏனெனின். அன்புண்டான இடத்தில் அருளும், அருளுண்டான இடத்தில் அன்பும் ஊடுருவிநிற்கும் இயல்புடைத்து. ஊடுருவுதல் என்பது - நுழைதல், பீறுதல், புதைதல் என்னும் பொருளுடைத்து. ஆகவே, அடியார்களிடத்தில் அன்புபுதைந்திருக்குமாயின் இறைவனது அருள் அவருள்நுழைந்து பீறிடும். இவ்வுண்மைதோன்றவே திருவாசகம் சென்னிப்பத்து முதற் செய்யுளில் "தேவதேவன் மெய்ச்சேவகன், தேவராயினும் மூவராயினும் (மற்று) யாவராயினும் (அன்பரிடத்து அன்புபாராட்டி அவர்கள்பால் அன்பு பெற்றாலன்றி) அறியொணு மலர்ச்சோதியான், (அன்பர்கள்பால் அன்பினைப் பெற்றால்), தூயமாமலர்ச்சேவடிக்கண் நம் சென்னிமன்னிச் சுடருமே" என்று கூறிற்று.

மையாகிய வேளாண்குலத்தில் அக்குலத்தைவிளக்க அவதரித்தவர். 'பற்றற்றான் கழல் பற்றி ஏப்பற்றினையும் அறவெறிந்து பதிகளெங்கும் கும்பிட்டுப் படருங் காதல்வழிச் செல்பவர். மெய்ப்பத்தர்கள்பாற் பரிவுடையராய் பெருந்தொண்டர் திருக்கூட்டத் தெதிர் முன்பாவி அவரருள்பெற்றே பின் இறைவர்பாதந் தொழும் நெறியுடையவர். இத்தன்மையுடைமையால் பெருமையின் எல்லைகாணரிய நிகரொன்றில்லாத இவர் திருவாரூரை யடைந்திருக்கும் நாளில் ஓர்நாள் தேவாசிரியமண்டபத்தில் அருள்பெறும் அன்பை அளிக்கும் அன்பு பொலிவுபெற்றுவிளங்கும் மிக்க சீரடியார்கூடி எண்ணிலா ரிருந்தபோதில் இவர்க்குயான் அடிமைபெறுநட்பண்ணுநாள் எந்நாளென்று மனத்தாற் கசிந்து தொழுது காயத்தாற் றொழுது வந்தணையாது ஒருவாறு ஒதுங்கிச் செல்லும் வன்றொண்டப் பெருமானுரை மிண்டி (நெருங்கி)ப் புறகென்றுரைக்கும் பெரும்பேற் றைப் பெற்ற (விறல்) (வலி) உடையவர். அவ்வன்றொண்டரை வலிய ஆண்டவரும் பிரானுந்தன்மை யாவரும்அறியப் பிறைசூடிப்பூணரவம் புனைந்தசடைமுடி யுடையாரு மாகிய தம்பிரானும் புறகென்று அன்பாற்சொல்லும் விறல் (வீரம்.) உடையவர். அவ் வாறு சொல்லுதலும், அன்பர் யாதுசொல்லினும் அவரன்பினையே பாராட்டும் ஆரூர் நாயகரும் தம்மிடம் விட்டுப் புறகேநின்று ஆரூரரைநோக்கித் தம்மைப்புறகென்ற விறன்மிண்டரால் போற்றப்பெற்ற அடியவர் * "பெருமையால் தம்மையொப்பார்" என்றற் றொடக்கத்தனவாகிய சிறப்பெல்லாங்கூறி அல்லல்தீர்ந்துலகுய்ய மறையளித்த திருவாக்கால் 'தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுத்து ஞாலமுய்ய நாமுய்ய நம்பிசைவ நன்னெறியின் சீலமுய்யத் திருத்தொண்டத் தொகை பாடுதற்கு ஓர் விறன்மிண்டரா (வெற்றிக்கருவியா) யுள்ளவர். அவர்பாடிய பின் தாம் உளங்குளிர்ந்து ஆரூர் நாயகரிடத்தும் நம்பியாரூரரிடத்தும் கோணாத அருளைப்பெற்றவர். அங்ஙனங்கூறிய திருத்தொண்டத்தொகையால் செழுமறைகள் ஓலமிட்டும் உணர்வரியார் அடியார்க்குப் புறனாகாது அடியரென்று அன்புபாராட்டியத னாலும் நம்பியாரூரர் "திருநாவலூர்க்கோன் அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட்டுவப் பார்" என்றதனாலும் இருவருக்கும் அடியவர்கள்பால் அன்புளதென்று உளங்குளிர்ந்து மற்றவ்விருவர்பாற் கோணாத அருளைப்பெற்ற விறல் (பெருமை) உடையவர். இறைவ னாகிய தம்மிடத்தும் அடிமையைக்கண்டு உளங்குளிர்ந்த அதனால் தமதுள்ளங்குளிர்ந்து தம்மைப்புறகென்றும் பின்னர்நாம் அடியாருடன் உள்ளவனென்றும் கூறிய மிண்டருக்கு உவகையுண்டாகும்பொருட்டு தாணிழற்கீ ழிருக்கும் அடியவர்களாகிய உயர்கணத்துள் தலைமைத்தன்மையைத்தர அதனைப்பெற்று ஓங்கி விளங்கினவர் என்பதாம்.

இதனால், மெய்ப்பொருள்நாயனார் திருவேடத்தையே மெய்ப்பொருளாகக் காணும் அன்பினை மேற்கொண்டதுபோல் வேடமுடையாரையே மெய்த்தெய்வமாகக் காணும் அன்பினை மேற்கொண்டு பின்னர் ஈசனுக்கே நேசம்பூண்டவரென்றும், இங்ஙனம் இருவருங்கொண்டவுண்மையை ஆராயுங்கால், திருவேடத்தையும், திருவேடமுடையா ரையும் அன்புபாராட்டி அவரை முன்வழிபட எண்ணாதார்க்கு இறைவன் புறகேஅன்றி அகத்தான் ஆகான் என்றும, அந்தஇரண்டிடத்தும் வழிபட்டுப் பின் தம்மைவழிபடு வோர்க்குப் புறகாகாது அகத்தனாகும் என்றும் அறிவுறுத்தியவாறும்.

எனவே,—ஒன்றும் வேண்டாது மிக்கஅன்பே வேண்டுவோரை வேண்டுகின்ற இறைவன்—அன்பேவேண்டுகின்ற அவர்களை உய்விக்க வேண்டுவோனாயின் † "அடி யார் தங்கள் அருட்குழாம்புகவிட்டு, நல்லுறவுசெய்து உய்யக்கொண்டபிரான், தன் உண்மைப் பெருக்கமாம் திறமைகாட்டிய சேவடிகள்" என்றபடி, அவர்களை அடியவ ரோடுகூட்டிய அவர்களோடு வேற்றுமையின்றி உறவாக்கிப் பின் அவர்கள் உய்யும்வண் ணம் தான் ஆட்கொள்வன் என்றும், அம்முறையாக இறைவன் செய்வதே பெருக்க மான உண்மைக் கருத்தென்றும், அதுவேதான் அருட்டிறமென்றும் விளக்கியவாறும்.

விறன்மிண்டநாயனார் புராணசாரமுற்றிற்று.

---

† திருவாசகம் சென்னிப்பத்து—எ.

உ

திருச்சிற்றம்பலம்.

காமிநேநம:

அமர்நீதி நாயனார் புராணம்.

நகரச்சிறப்பு.

சீரில் நீடிய செம்பியர் பொன்னிநன் னாட்டுக்
காரின் மேவிய களியளி மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர் பதிபழை யாறை.

(எ - து.) மேன்மையிற்சிறந்த சோழர்கள் இருந்து ஆளுதற்குரிய நல்லகாவிரி நதியை யுடையநாட்டில் தேனுண்டு களிப்பினையடையும் வண்டுகள்வாழும் மலர்கள் நிறைந்து மேகமண்டலமளவும் ஓங்கியுள்ள சோலைகளால் சூழப்பட்டு, சிறந்தரத்னமய மாய்விளங்கும் தேர்கள் உலாவ்ப்பெற்றவீதிகள் சிறப்படைந்து விளங்குவதனால் உலகத்தில் மேம்பட்டபெருமையோடுகூடிய பழையாறையென்னும் ஓர்நகரமுளது என்பதாம்.

* திண்ணமரும் பைம்பொழிலும்வயலும் சூழ்ந்த—எனவும்,—தேன்தோயும் பைம்பொழிலின் வண்டுபாடும்—எனவும்,—தேனமரும்பைம்பொழிலின் வண்டுபாடும்—எனவும், †—தேர்மருவு நெடுவீதிக் கொடிகளாடும்—எனவும், புகழ்ந்தோதப்பட்டதென்பார் - காரின்மேவிய களியளிமலர்ப்பொழில்சூழ்ந்து தேரின்மேவிய செழுமணிவீதிகள் சிறந்து என்றார்.

இத்திருப்பாட்டான், இந்நாயனாருடைய நகரம் - பழையாறை என்னும் திருப்பெய ருள்ளதென்றும், அந்நகரம் - சிறப்பை மிகுதியாகத் தருதற்குரிய ஏருடையார்க்கு நீர்வளந்தரும் காவிரிநதி பரந்துகிடக்கும் சோழநாட்டி லுள்ளதென்றும், அந்த நீர்வளத்தால் நகர்ப்புறத்தில் மேகமண்டலத்தை யளாவிய பூஞ்சோலைகள் சூழ்ந்திருக்குமென்றும், அப்பூக்களில் தேனுண்ணுங் களிப்புடன் வண்டுகள் மொய்த்திருக்குமென்றும், நகரகத்திலுள்ள வீதிகளில் இரத்னமயமாகிய ரதங்கள் போதல்வருதலை யுடைத்தாய்ச் சிறந்திருக்குமென்றுங் கூறப்பட்டன. (க)

வர்த்தகச் சிறப்பு,

மன்னும் அப்பதி வணிகர்தங் குலத்தினில் வந்தார்
பொன்னு முத்துநன் மணிகளும் பூந்துகில் முதலா
எந்நி லத்தினும் உள்ளன வருவளத் தியல்பாம்
அந்நி லைக்கண்மிக்க அமர்நீதியா ரென்பார்.

(எ - து.) அமர்நீதி நாயனார் என்னும் பெரியார், பழையாறை என்னும் நிலை பெற்ற நகரத்தில், வைசியர்குலத்தில் அவதரித்தவர். எத்தேசத்தினும் விளைகின்ற பொன், முத்து முதலிய உயர்ந்த மணிகள், மென்மையுள்ள ஆடைகள் முதலானவை யெல்லாம் தம்மிடத்தே விற்பனைக்கு வரும் வளம்பொருந்திய அவ்வியாபார முறைமையில் மேம்பாட்டையுடையவர் என்பதாம்.

---

* உ-ம் திருமுறை - திருநல்லூர் - க. † உ-ம் திருமுறை - திருநெல்லூர் - க.

இத்திருப்பாட்டான், மேற்கூறிய நகரத்தில், அமர்நீதியார் வைசியகுலத்தில் வந்தவரென்றும், அந்தக்குலத்திற்கேற்ப பொன் முத்து மணி பூந்துகில் முதலிய விலையுயர்ந்த பொருள்களெல்லாம் எத்தேசத்தினின்றும் வருவிக்கும் பெரிய வியாபாரமுடையவரென்றுங் கூறப்பட்டன. (உ)

சிவதருமச்சிறப்பு.

சிந்தை செய்வது சிவன்கழல் அல்லதொன் றில்லார்
அந்தி வண்ணர்தம் அடியவர்க் கமுதுசெய் வித்துக்
கந்தை கீளுடை கோவணங் கருத்தறிந் துதவி
வந்த செல்வத்தின் வளத்தினால் வரும்பயன் கொள்வார்.

(எ - து.) இவர் சிந்திக்கும் பொருள் இறைவன் திருவடியல்லது வேறொன்றில்லாதவர்; (அச் சிந்தனைவிசேடத்தால்) தமக்கு வந்துள்ள செல்வ மிகுதியைக்கொண்டு செவ்வானத் திருமேனியனாகிய இறைவன் அடியவர்களுக்குத் திருவமுது செய்வித்து, கந்தையும், கீளும், உடையும், கோவணமும், அவரவர் வேண்டியவைகளை அறிந்து கொடுத்து, அவற்றால் வரும் பிரயோசனத்தைக் கொள்பவர் என்பதாம்.

வந்த செல்வத்தின் வளத்தினால் அந்தி வண்ணர்தம் அடியவர்க்கு கருத்தறிந்து உதவி, வரும் பயன் கொள்வார்—எனக் கொண்டுகூட்டுக.

நாம் அனுபவித்துக்கொண்டிருப்பனவும், இனி அனுபவிக்க வருவனவும் நமது சிந்தைவழியாய்க் காணப்படாமையால் அவைகளைச்சிந்தித்து விருப்பு வெறுப்படைந்து சஞ்சிதமாக்கிப் பிராரத்தானுபவத்துக்கு வரும் வழியைத் தேடுவதைப்பார்க்கினும், காலதத்துவத்தானும் நியதிதத்துவத்தானும் யாவும் நமக்கு வரும் வகையாகச் செய்பவன் சிவனே என்று அவனருளையே நினைப்பவர் என்பார்—சிந்தை செய்வது சிவன்கழல் அல்லது ஒன்றில்லார்—எனவும், அவன் அவள் அது என்னும் நாமரூபங்களைப்பற்றித் தேடும் பொருள்களை உயிருள்ளளவும் அவர்களுக்கேயாக்கி உயிர் போம்போது வந்து உதவுவார் ஒருவரும் இல்லாதவராய் அவர்களால் முனியப்பட்ட பண்டமாய்ச் சுடலையைச் சேர்ந்து தீயால் சுடுபட்டுப்போகாமல், மெய்ப்பொருளைக்காட்டும் திருவேடமுடையாரைப்பற்றித்—தருமந்தான் தவந்தான் தவத்தால் வரும் கருமந்தான் கருமாமறிக்கையின் ஞானக்கருதுவார் ஆகிய இவர்க்கு ஆவனவெல்லாம் செய்வனவேயாமென்று அப்பணியில் தளராது, தமக்குள்ள செல்வத்தைச் செலுத்தி நிற்பவரென்பார்—வந்த செல்வத்தின் வளத்தினால் அந்திவண்ணர்தம் அடியவர்க்கு, அமுதுசெய்வித்துக் கந்தைகீளுடை கோவணங் கருத்தறிந்து உதவி—என்றார். அங்ஙனம் உதவிய செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந் தெடுக்கப்பட்ட செல்வமாகிய அருட்செல்வத்தைக் கைக்கொள்வரென்பார்—வரும்பயன்கொள்வார்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான், நாயனார் - தமதுசித்தத்தைச் சிவன் திருவடியினும், தமது செல்வங்களைச் சிரடியாரிடத்தினும் ஆக்கி, அதற்குப் பயனாக அவரிடத்துள்ள அழிவிலாச் செல்வமாகிய அருளைப்பெறுவரென்றுங்கூறப்பட்டது. (௩)

திருநல்லூரில் திருமடம் அமைத்தல்.

முக்க ணக்கரா முதல்வனார் அவர்திரு நல்லூர்
மிக்க சீர்வளர் திருவிழா விருப்புடன் வணங்கித்
தக்க அன்பர்தம் அமுதுசெய் திருமடம் சமைத்தார்
தொக்க சுற்றமும் தாமும்வந் தணைந்தனர் தூயோர்.

(எ - து.) (அடியவர்களுக்குத் திருவமுதும், கந்தைமுதலியனவும் உதவி அதனால் வரும்பயனைக் கொள்ளும்) தூயோராகிய நாயனார், தம்மைச் சேர்ந்தவர்களாகிய சுற்

தந்தாரும், தாமும் முக்கண்ணுடையராய்த் திகம்பாராய் விளங்கும் முதல்வனாராகிய சிவபெருமானது திருநல்லூரென்னும் க்ஷேத்திரத்தில் வந்துசேர்ந்து, அத்திருப்பதியில் நாளுக்குநாள் மிகச்சிறப்புடன் நடந்துவரும் திருவிழாவின் வைபவத்தைக்கண்டு மிக்க ஆசையோடுவணங்கி, (அங்குகூடிய சிறந்த அடியார்கூட்டங்களைக் கண்டு அவர்களை அமுதுசெய்விக்க வேண்டுமென்றெழுந்த அவாவால்) அவர்களை அமுதுசெய்விக்க சிறந்த மடாலயம் ஒன்றை ஏற்படுத்தினார் என்பதாம்.

தூயோர், தொக்கசுற்றமும் தாமும், முக்கண் நக்கராம் முதல்வனார் அவர்திருநல்லூர் வந்தணைந்தனர் மிக்கசீர் * * * திருமடஞ்சமைத்தனர் எனக்கொண்டுகூட்டுக.

தமக்கமைந்துள்ள பொருட்செல்வத்தைச் சின்னாளில் அனுபவித்தொழித்து வறுமையென்னும் அசுத்தத்தை அடையாது, சுத்தராகிய அடியார்களுக்காக்கி அருட்செல்வத்தைப்பெற்றனராகலின்—தூயோர்என்றார். * தேற்றப்படத்திருநல்லூரகத்தே சிவனிருந்தான், தோற்றப்படச்சென்று கண்டுகொள்ளார் தொண்டர் துன்மதியால் ஆற்றிற்கெடுத்து குளத்தினில் தேடிய ஆதரைப்போல், காற்றிற் கெடுத்து உலகெலாந் திரிந்தவர் காண்பதற்கே—என்றதனால் துன்மதியார்போலாது தூயோராகிய இந் நாயனார் நல்லூரையடைந்து பெருமானது திருவிழாவை வணங்கியும் அடியார்களை உண்டி உண்டகளால் வழிபட்டும் வந்தாரென்பார—நல்லூர் விழாவணங்கித் தக்க அன்பர் அமுதுசெய் மடஞ்சமைத்தார்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான்—நாயனார் நல்லடியார்களுக்கு நல்லமுதுபடைப்பதில் நல்லாசை யுடையவராதலால், திருநல்லூரில் நல்லார்க்கு நல்லனாய் நடம்பயின்றாடும் நல்லூர்ப்பெருமானுக்கு நல்விழாநடப்பதால் அவ்விழாவை † "முட்டின் றிருபோதும் முனியாதெழுந்து அன்புபட்ட மனத்த"ராய்க் கண்டு களிக்கவும், அங்கு அடியார்கள் அளவில்லவராகக் கூடுவராகலான் அவர்களுக்கெல்லாம் அமுதளித்து அகங்களிக்கவுங் கருதி, தமது சுற்றத்தாருடன் சென்று, அங்கு திருமடம் சமைத்து அதிலிருந்தனரென்று கூறப்பட்டது. (௬)

அடியார்கள் அமுதுண்ணக் களித்தல்.

மருவும் அன்பொடு வணங்கினர் மணிகண்டர் நல்லூர்த்
திருவி ழாவணி சேவித்துத் திருமடத் தடியார்
பெருகும் இன்பமோ டமுதுசெய் திடவருள் பேணி
உருகு சிந்தையின் மகிழ்ந்துறை நாளிடை யொருநாள்.

(எ - து.) திருநல்லூரில் (திருமடத்தை ஏற்படுத்திய பின்னர்) நீலகண்டருடைய திருவிழாவின் சிறப்பை மனத்திற் பொருந்திய அன்போடு காலங்கள்தோறும் தெரிசித்து வணங்கி, (பின்னர் அங்கு சூழ்ந்திருக்கும் அடியார்களைக் கண்டு) திருமடத்தில் யாவரும்வந்து பெருகிவரும் இன்பத்தோடு உண்டருளும்படியாக அவர்கள் அருளைப் பிரார்த்திக்க, அதற்கு அவர்கள் இசைந்தவர்களாய் உண்டு களிகூர்வதைக்கண்டு உருகிய சிந்தையுடையவராய் மகிழ்ந்து வசித்துவரும் நாள்களுள் ஒருநாள் என்பதாம்.

நல்லூர்மணிகண்டர் திருவிழாவணி மருவும் அன்பொடு சேவித்து வணங்கி, திருமடத்து அடியார் பெருகும் இன்பமோடு அமுதுசெய்திட எனக்கொண்டு கூட்டுக.

இத்திருப்பாசுரத்தான்—நாயனார் மண்ணினிற் பிறந்ததனாற் பெறுந்தகும் பயனை நாம் எளிதிற் பெறப்பெற்றோம்—என்று மனங் களிகூர்ந்தமை கூறப்பட்டது. அஃதாவது,—திருநல்லூர்ப் பெருமானது நல்விழாவைச் சேவித்து வணங்கப்பெற்றதும், திருமடத்தில் அடியார்கள் பெருகும் இன்பமோடு அமுதுசெய்யப்பெற்றதுமேயாமென்க.

---

* நான்காந்திருமுறை - திருநல்லூர் - ௬. † முதல்திருமுறை - திருநல்லூர் - செ - ௩.

இதனை—மண்ணினிற்பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை யமுதுசெய்வித்தல், கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்—என்று திருஞான சம்பந்தமூர்த்திகள் புராணத்துள் வருதலானறிக. (இ)

இறைவன் பிரமசாரியாக வருதல்.

பிறைத்த ளிர்ச்சடைப் பெருந்தகை பெருந்திரு நல்லூர்க்
கறைக்க ளத்திறை கோவணப் பெருமைமுன் காட்டி
நிறைத்த அன்புடைத் தொண்டர்க்கு நீடருள் கொடுப்பான்
மறைக்கு லத்தொரு பிரமசா ரியின்வடி வாகி.

(எ - து.) திருநல்லூரென்னும் பெரிய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற சடைமுடியின்கண் பிறையாகிய தளிரைத்தரித்த பெருந் தகுதியையுடைய நீலகண்டத்திறைவனார், நிறைந்த அன்பினையுடைய நாயனாருக்குக் கோவணப்பெருமையை முன்னே காண்பித்துப் பின் பெரிய திருவருள் கொடுக்கும்படி பிராமணகுலப் பிரமசாரியைப்போல் ஒரு வடிவினை யுடையவராகி என்பதாம்.

பெருந்திருநல்லூர் பிறைத்தளிர்ச்சடைப் பெருந்தகை கறைக்களத்திறை நிறைந்த அன்புடைத் தொண்டர்க்கு கோவணப்பெருமை முன்காட்டி நீடருள்கொடுப்பான் எனக் கொண்டு கூட்டுக.

* பிறைமல்கு செஞ்சடைதாழ நின்றுமுடியபிஞ்ஞகர்—என்றதனால் பிறைத்தளிர்ச் சடைப்பெருந்தகை எனவும், † —வடபாற்கயிலையும் தென்பால் நல்லூரும் தம் வாழ் பதியே—என்றதனால் பெருந்திருநல்லூர் எனவும், ‡—நஞ்சணிகண்ட நல்லூருறைநம்பர்—என்றதனால் நல்லூர்க்கறைக்களத்திறை எனவுங்கூறினார்

இத்திருப்பாசுரமுதல் "கண்டவர்க்கு" என்னும் திருப்பாசுரம் வரையில் பேரருஞ் செய்துவந்த பெரியோர்க்குக் கோவணப்பெருமையைக்காட்டிப் பேரருள்செய்ய இறைவன் கருதியதை ஆசிரியர் கூறத்தொடங்கி, இத் திருப்பாசுரத்தால் பிரமசாரியாய்வரக் கருதினனென்று கூறினார். (சு)

செய்ய புன்சடை கரந்ததோர் திருமுடிச் சிகையும்
சைவ வெண்டிரு நீற்றுமுண் டகத்தொளித் தழைப்பும்
மெய்யில் வெண்புரி நூலுடன் விளங்குமான் தோலும்
கையின் மன்னிய பவித்திர மரகதக் கதிரும்.

(எ - து.) :செந்நிறத்தையும் மென்மையையும் உடைய சடையைத் திருமுடிக்கண் சிறப்புடைச் சிகையாக முடித்த சிகையும், சைவகோலத்தின் சிறப்பைக்காட்டும் வெள்ளிய திருநீற்றின் திரிபுண்டரத்தின் ஒளிப்பரப்பும், திருமேனியில் வெண்ணிறமுடைய முப்புரிநூலோடு காணப்படும் மான்தோலும், அணிவிரலிற் பொருந்திய மரகதம்போலும் பசிய ஒளி பரப்பும் பவித்திரமும் என்பதாம்.

விரிந்திருந்த சடையை முடித்த சிகையாகக் கொண்டதனாற் சடை கரந்ததோர் திருமுடிச்சிகை என்றார். சிவனையும், அவரது சமயத்தையும் யாவரும் அறியும்வண்ணம் செய்வது திருநீறே யாகலான்—சைவ வெண்திருநீறு—என்றார். (எ)

முஞ்சி நாணுற முடிந்தது சாத்திய அரையில்
தஞ்ச மாமறைக் கோவண ஆடையின் தசைவும்
வஞ்ச வல்வினைக் கறுப்பறு மனத்தடி யார்கள்
நெஞ்சில் நீங்கிடா அடிமலர் நீணிலம் பொலிய.

---

* நான்காந்திருமுறை - திருநல்லூர் - செ - அ. † நான்காந்திருமுறை - திருநல்லூர் - செ - ௩. ‡ நான்காந்திருமுறை - திருநல்லூர் - செ - ௬.
...னும்) தூய

(எ - து.) முஞ்சியென்னுந் தருப்பையை அரைநாணாக முடித்து அதனைக் கட்டிய அரையில், (அறிஞர்க்குப்) பற்றுக்கோடாகவுள்ள வேதமாகிய கோவண ஆடையின் பிடிப்பும் உடையராய், வஞ்சமாகிய வலிய வினையின் களங்கத்தை அறுத்த மனத்தை யுடைய அடியார்கள் நெஞ்சத்தைவிட்டு நீங்காத திருவடியாகிய மலர், பூமியிற் பொருந்தி விளங்க என்பதாம்.

வேதமானது,—என்னப்பனும் எல்லார்க்குந் தான் ஈசனுமாகிய சிவபெருமானே சத்தனாகிய புருஷன், அவனொழிந்த திருமால்முதலிய ஆன்மாக்களெல்லாம் சத்திகளாகிய ஸ்திரீகள் என்பதனை அரையிற்பிணிக்கும் கோவணஆடையாய் ஆயிற்றென்பார்—அரையில் தஞ்சமாமறைக் கோவணஆடையின் தசைவும்—என்றார். சுத்தமாகிய நீர்நிறைந்துள்ள தடாகம்போலும் அடியவரதுநெஞ்சம் அன்பென்னும் நீர்நிறைந்துள்ளதென்பார்—வஞ்சவல்வினைக்கறுப்பறு மனத்து அடியார்கள்—என்றார். நீர்நிறைந்திருக்கும் தடாகத்தில் தாமரைமலர் இருத்தல்போல, அடியாரது— * கண்ணுளும் நெஞ்சகத்துளும் உளகழற்சேவடி—இருப்பதென்பார்—நெஞ்சில் நீங்கிடா அடிமலர்—என்றார்.

திருமால்முதலியோர் சத்திகளென்பதனை "அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்றவேதமொழியானும், புருடநாமம்புனைந்தம் ஆயினும், அத்த நிற் குறிப்பிற் சத்திகள்யாமே, புருடனைச் சத்தியிற் புணர்த்தனை அன்னதற்கு, ஒருகாட்டென்ப புருடோத்தமனே,—என்ற ஆன்றோர் மொழியானும் அறிக. (அ)

வர்க்குறு காதலின் மனங்கரைந் துருக
தொண்டர் அன்பெனும் தூநெறி வெளிப்படுப் பாராய்த்
தண்டின் மீதிரு கோவண நீற்றுப்பை தருப்பை
கொண்டு வந்தமர் நீதியார் திருமடங் குறுக.

(எ - து.) தமது திருவுருவத்தைக் கண்டவர்களுக்கு உண்டாகும் ஆசையினால் மனங்கரைந் துருகும்படியாக, நாயனாருடைய அன்பென்கின்ற நல்ல சுத்தமான நெறியை, யாவரும் அறியும்படி வெளிப்படுத்துகின்றவராய், (தாம் தாங்கியிருக்கும்) தண்டின்மேல் இரண்டு கோவணமும், பெரிய விபூதிப்பையும், தருப்பையும் கட்டிக்கொண்டு அமர்நீதியார் திருமடத்துக்குச் சமீபமாக எழுந்தருளிவர என்பதாம்.

ஈண்டுக் காதல் என்பது காமத்தின் மேற்றன்று— * நல்லூரகத்தே பறைமல்கு பாடலனாடலனாகத் தம்பரிசழிப்பான்—என்றபடி தன்னன்பர் பரிசழிக்குந்தன்மையைக் குறித்ததென்க. † —நீத்தநெறியானும் நீங்காத்தவத்தானும் நாத்தநெறியானும் நல்ல நெறியானும் (ஆகிய) நல்லூர்ப்பெருமான்—தொண்டர் அன்பெனும் தூநெறி வெளிப்படுப்பாராய்த் திருமடங்குறுக—என்றார்.

இவை நான்கு திருப்பாசுரத்தானும்,—பிரமசரிய நிலை இந்நிலை எனக் கூறியதென்க. அஃதாவது - முடித்தசிகையும், வெண்ணீறுபூசிய திருமேனியும், மான்றோலோடு கூடிய உபவீதமும், கையில் தர்ப்பைப் பவித்திரமும், முஞ்சி நாணோடு வெண்கோவணமும், இரண்டுகோவணம் கட்டியுள்ள தண்டும், திருநீற்றுப்பையும், தருப்பையும் ஆக எண்வகை உறுப்புக்களோடுகூடியது பிரமசரியநிலையெனக் கூறப்பட்டது. (கூ)

பிரமசாரியார் வரவை வியந்து கூறல்.

வடிவு காண்டலும் மனத்தினு முகமிக மலர்ந்து
கடிது வந்தெதிர் வணங்கியிம் மடத்தினிற் காணும்
படியி லாதநீர் அணையுமுன் பயில்தவம் என்னோ
அடிய னேன்செய்த தென்றனர் அமர்நீதி யன்பர்.

* ச - திருமுறை - திருநல்லூர் - ஒ - அ. † க - திருமுறை - திருநல்லூர் - ஓ - கூ.

(எ - து.) அமர்நீதியார் அவரது திருவுருவத்தைக்காணவும், மனத்தைப்பார்க்கினும், முகமானது மிகவும் மலர்ச்சியடைந்து விரைவாகவந்து அவர்முன்னே வணங்கி இம் மடத்தில் தேவரீரைக் காணக்கூடுமோ அங்ஙனங் காணும்படி வாராதநீர் இன்று இங்கு எழுந்தருள, அடியனேன் முற்பிறவியில் செய்து பழகிய தவம் யாதோ என்று கூறினார் என்பதாம்.

அமர்நீதியன்பர், வடிவுகாண்டலும் அடியனேன் முன்செய்த பயில்தவம் என்னோ - எனக்கொண்டுகூட்டுக.

நாயனாருக்கு அடியவரிடத்து மனம்வேறுபட்டு முகமாத்திரம் மலர்ந்து காட்டும் இயல்பின்றி, மனமும் முகமும் ஒருதன்மைத்தாய் மலர்ந்திருக்குந் தன்மையுடையவராயிருந்தும், அன்றுவந்த பிரமசாரியாரிடத்தில் காணப்பெற்ற அழகில் கட்புலன் மிகவும் சிமிழ்ப்புண்டதனால் அப்புலன்வழியே அறியத்தக்க மனம் அவரழகைக் கணித்தற்கு இல்லாதொழிந்த தென்பார்—வடிவுகாண்டலும் மனத்தினும் முகமிகமலர்ந்து—என்றார். கண் காட்சியிற் சிறக்கக் காணப்பெற்றஇவர் எங்குச்செல்வரோ என்று விரைந்தனர் என்பார்—கடிதுவந்து எதிர்வணங்கி—என்றார். பிரமசரிய ஒழுக்கத்திற் சிறந்த நீர் - இல்லறவொழுக்கத்திற் சிறந்த அந்தணர்களிடத்தில் பிக்ஷைக்குப் போவீரேயன்றி என்னால் அமைக்கப்படும் இம்மடத்தில் பிக்ஷைக்குவர நினையீரென்பார்—இம்மடத்தினிற் காணும்படியிலாதநீர்—என்றார். மடத்தைநோக்கிவாராத நீர், நோக்கிவந்தது ஒருவனுக்கு ஊழில்இல்லாத தொன்று தவமென்னும் முயற்சியொன்றிருப்பின் உளதாகச் செய்யும் என்னும்பிரமாணப்படி நான் முன்செய்த தவத்தினாலென் றறிந்தேன், அங்ஙனமாயினும் அத்தவம் யாதோ அதனை நான் அறிந்தே னல்லேன். அத்தவம் எத்தவமோ அதனை அடியேன்* செய்திருப்பனோ என்பார்—அனைய முன்பயில் தவம் என்னோ அடியனேன செய்தது—என்றார்.

இத்திருப்பாசுரத்தான், பிரமசாரியார் வருகைக்கு தான் செய்ததவம் எத்தவமோ என்று முன்காட்சியில் முகமலர்ந்து கண்டதுபோலும், அகமலர்ந்து இன்சொல் வழங்கினாரென்று கூறப்பட்டது. (கO)

பேணும் அன்பரை நோக்கிநீர் பெருகிய வடியார்க்
கூணு மேன்மையி லூட்டிநற் கந்தைக ளுடைகீள்
யாணர் வெண்கிழிக் கோவணம் ஈதல்கேட் டும்மைக்
காண வந்தனம் என்றனன் கண்ணுதல் கரந்தோன்.

(எ - து) நெற்றிக்கண்ணை மறைத்து வந்தவராகிய பிரமசாரியார், தம்மை முகமலர்ச்சியானும் இனிய சொல்லானும் உபசரிக்கின்ற அன்பரைப்பார்த்து, நீர் அளவிலாத அடியார்களுக்குவேண்டிய உணவும் மிகச்சிறப்பாகவூட்டி, நல்லகந்தையும், கீளும், ஆடைகளும், புதிதாகிய வெண்ணிறமுடைய கிழித்தகோவணமும் கொடுத்து வருவதை நான்கேட்டு, உம்மைக்காணும் அவாவுடன் வந்தனம் என்றுகூறினார் என்பதாம்.

*—சித்தத்துருகி சிவன் எம்பிரானென்று சிந்தையுள்ளே பித்துப்பெருகப்பிதற்றுகின்ற அடியவர்க்கு ஊண்முதலியன ஈபவரென்பார்—பெருகிய அடியார்க்கு என்றார். ஆணவமலத்திமிரமுடையாரை அடக்கியாளுகைக்குக்காட்டும் நெற்றிக்கண்ணை, அன்பரிடத்துக்காட்டும் முறைமையுடையன் அன்றென்பார்-கண்ணுதற்கரந்தோன்—என்றார்.

இத் திருப்பாசுரத்தான், நாயனாரது அறத்தைப்புகழ்ந்து மகிழ்ந்து இறைவன் காணவந்தமை கூறப்பட்டது. (கக)

என்று தம்பிரான் அருள்செய இத்திரு மடத்தே
நன்று நான்மறை நற்றவா அமுதுசெய் தருளத்
துன்று வேதியர் தூய்மையின் அமைப்பதும் உளதால்
இன்று நீருமிங் கமுதுசெய் தருளுமென் றிறைஞ்ச.

* நான்காந் திருமுறை - பசுபதி - 4

(எ - று.) (உம்மைக்காணவந்தேன்) என்று, தம்பிரானாகிய பிரமசாரியார் அருள் செய்ய, (நாயனார், சுவாமிகாள்!) இத்திருமடத்தின்கண், நான்குவேதங்களையுமுணர்ந்த பெரியதவமுடைய வேதியர்கள் நன்றாய் அமுதுசெய்தருளுவதற்கு, அனேகம் பிராம்ம மணர்கள், ஆசாரக்குறைவின்றிச் சுத்தமாகச் சமைத்திருக்கும் அன்னமுதலியவைகளும் உள்ளன., (ஆகலின்) இற்றைத்தினம் தேவரீரும் இம்மடத்தில் அமுதுசெய் தருள வேண்டுமென்று வணங்கினர் என்பதாம்.

எல்லாவுயிர்களுக்கும் சிறப்பினைத்தரும் ஒழுக்கத்தினைச் சிறந்தெடுத்தோதுதலைத் தலைமையாகக்கொண்டுள்ள நன்மையுடைத்து வேதங்களென்பதுதோன்ற—நன்று நான் மறை—என்றார். அங்ஙனங்கூறும் ஒழுக்கத்தினை ஒன்றானும் அழிவுபடாமல் வருந் திக்காக்கவல்லவர் அந்தணரென்பது, தோன்ற—பெருந்தவர்—என்றார். அத்தகைய வேதியர்களும் இம்மடத்தின்கண் அமுதுகொள்வதற்கு அனேகர் வந்திருக்கின்றனர் என்பது தோன்ற—அமுதுசெய்தருளத் துன்றும் வேதியர்—என்றார். செய்தற் கரிய வைதிக ஒழுக்கத்திற் சுருங்காத மனவலி யுடையராகிய அவர்களுக் கேற்றவாறு தனித்து வேறாக் மிகவும் பரிசுத்தமாக உணவுகள் அமைக்கப்பட்டும் உள்ளது. இங்கு என்பது தோன்ற—தூய்மையின் அமைப்பதும் உளதால்—என்றார். இத்தகைய ஒழுக் கச்சிறப்புகளெல்லாம் தேவரீரைப்போன்ற ஒழுக்கத்தினருக்குக் குறைவுவாராவண்ணம் அமைக்கப்பட்டிருத்தலின் யாதொரு சந்தேகமுங் கொள்ளாமல் இற்றையத்தினம் எனது வேண்டுகோளின்படி சுவாமிகள் இங்கிருந்து பிக்ஷைகொள்ளவேண்டும் அதுவே யான் தேவரீரால் பெறத்தகும் பேரருள் என்று வேண்டி வணங்கினார் என்பது தோன்ற—இன்று நீரும் இங்கு அமுதுசெய்தருளும் என்றிறைஞ்ச—என்றார்.

இத்திருப்பாசுரத்தான்,—நான்குவருணத்திலும் ஒழுக்க மிக்குடையார்க்கே இம் மடத்தில் சமைக்கப்பட்டுத் தனித்தனி அமைக்கப்பட்டும் இருக்கின்றது என்றும், அஃ தேபோல், அவர்களினும் ஒழுக்கமுடைமையேயன்றி கல்வி கேள்விகளிலும் சிறந்தி ருக்கும் தேவரீரைப்போன்றவர்க்கும் வேறாகச் சமைக்கப்பட்டிருக்கிறதென்றும், ஆக லின் தேவரீரும் இன்று இங்கிருந்து அமுதுசெய்தருளும் என்று அடிபணிந்தனரென் றுங் கூறப்பட்டன. (கஉ)

வணங்கும் அன்பரை நோக்கியம் மறையவர் இசைந்தே
அணங்கு நீர்ப்பொன்னி ஆடிநான் வரமழை வரினும்
உணங்கு கோவணம் வைத்துநீர் தாருமென் றொருவெண்
குணங்கொள் கோவணம் தண்டினில் அவிழ்த்தது கொடுப்பார்.

(எ - று.) (அமுதுசெய்தருளவேண்டுமென்று) வணங்கிய அன்பரைப்பார்த்து (அவர் வேண்டுகோளின்படியே) அந்தப் பிரமசாரியார் திருவுள்ளமிசைந்து, தெய்வீக நதியாகிய காவிரிநதியில் நான் ஸ்நானஞ்செய்து வருகின்றேன். வருகின்றபொ ழுது ஒருசமயம் மழை வரும்போற் காணப்படுகின்றது.) அப்படி மழைவரினும், எனக்கு வேறொரு கோவணம் வேண்டுமல்லவா ; அதற்காக, உலர்ந்திருப்பதாகிய இந்தக் கோவணத்தைத் தருகின்றேன். இதனை நீர் வைத்திருந்து கொடுமென்று, தண் டினிற் கட்டியிருந்த இரண்டுகோவணத்துள் வெண்ணிறங்கொண்ட கோவணமொன் றை அவிழ்த்து அதனை அவரிடத்தில் கொடுப்பாராயினர் என்பதாம்.

தண்டினில், ஒரு வெண்குணங்கொள் கோவணம் அவிழ்த்து அது கொடுப்பா ரென்று கொண்டு கூட்டுக.

இறைவன் அன்புடைத் தொண்டர்க்குப் பேரருள் கொடுப்பான் பிரமசாரி யின் வடிவாகிவந்தவன் கண்ணுதற் கரந்தோனாகலின்—மறையவர்—என்றும், இந்தி ரன் சோழிப்பதியில்வைத்த நந்தனவனம் நீரின்றி வற்றிப்போக, அதுகண்டு வருந்திய

அவனது துன்பத்தைப்போக்கவந்த தெய்வநதியாகலின்—அணங்குநீர்ப்பொன்னி—என்றும், இறைவனுக்குரிய தொண்டியற்றி அவர்பால் கருணைபெறுவது எப்பொழுதும் அத்தொண்டை இயற்றுதற்கேயன்றி கருணையைப்பெற்றுத் தொண்டைவிடுவதற்கன்றாகலின்—மழைவரினும் கோவணம்வைத்து நீர்தாரும்—என்றும், இறைவனைக் காணுதற்கு முன் செய்யுந்தொண்டு அருளைப்பெற்றுச்செய்வதும், இறைவனைக் கண்டபின் செய்யுந் தொண்டு அன்பினைப் பெற்றுச் செய்வதும் ஆகலான்—ஒரு வெண்குணங்கொள் கோவணம் தண்டினில் அவிழ்த்து அது கொடுப்பார்—என்றும் கூறினார்.

எனவே - கோவணங்கொடுக்கும் தொண்டராகவே அவரிருக்க, இவர் நினைந்துவருவராயின் அவர் கொடுக்கும் கோவணத்தை இவருக்குக் கொடுக்கமாட்டாரா? அங்ஙனமிருக்க மறையவர் தண்டினில் ஒரு கோவணத்தை அவிழ்த்து அவரிடத்தில்கொடுத்து, இதனை நீர் எனக்குத்தாரும் என்றதனை ஆராயும் அளவில், முன் அடியார்களுக்கு அவர் கொடுத்துவந்த கோவணம் இவர் கொடுத்த கோவணங்களேயாமென்று அறியவேயாம்.

அஃதாவது,—நாயனார் கொடுத்துவந்த கோவணம் * அன்புருவம், மறையவர் நாயனார்பால் கொடுத்த கோவணம் அருளுருவம். ஆகவே அருள் அவனன்றி வாராதென்பது எப்படி நிச்சயமோ அப்படியே அன்பும் அவனன்றிவாரா. இவ்வுண்மை தோன்றவே—அருளென்னும் அன்பீன்குழவி—என்றார் நாயனார். அருள் அன்பீன்ற குழவியாயின் அருள் இறைவன்பால் உள்ளதன்றே. ஆகலான் அவர் கொடுத்த கோவணங்களும் இறைவன் கொடுத்ததே என்பதில் தட்டில்லை.

இத்திருப்பாசுரத்தான்,—செம்பொருள்கண்டார் வாய்ச்சொல்லாகிய இனியசொல்லைக் கண்டநாயனார்பால் அச் செம்பொருளுருவாய் ஒளிவிடும் ஞானக்கண்ணாகிய நெற்றிக்கண்ணை மறைத்துவந்தாராகலின்-மறையவரென்றும், இந்திரனாகிய தேவனது துன்பத்தைப் போக்கிய தெய்வநீராகலின் - அணங்குநீர்ப்பொன்னி என்றும், இறைவன், நீ என்பால் பெறவேண்டிய கருணை - மழைபோல் பிரவாகமாய்ப் பெறவரினும், நீ அடியார்க்குக் கந்தை கீளொடு கோவணமுதலியவற்றைக் கொடுத்துவருதலாகிய தொண்டினை விடாது செய்துவருதலே கருணைபெற்றாரது இயல்பாகலின் - கோவணம் வைத்து நீர் தாருமென்று என்றும், நீர் அன்பினைக் கோவணமாகக் கொடுத்து வந்தீராதலால், நானும் களங்கமற்ற கருணையைக் கோவணமாகக்கொடுத்தல் முறையாகலான் தண்டினில் கோவணம் அவிழ்த்து அதுகொடுப்பாரென்றுங் கூறப்பட்டன.

இறைவன் கொடுத்த கோவணத்தை உணங்கு கோவணமெனவும், வெண்குணங்கொள் கோவணமெனவும், கூறியது என்னையெனின்,—அது அருளுருவாகலான் மலசம்பந்தமாகிய தற்போதத்தை வாட்டி, நின்மலமாகிய அன்பினைத்தந்து என்றும் உருகும்வண்ணமாகவே நிற்கச்செய்யும் தன்மைத்து என்று அதன் இலக்கணங் கூறியவாறாம் என்க. உணங்குதல் - வாட்டுதல். வெண்குணம் வெண்மையாகிய குணம் - அஃதாவது - நின்மலமாகிய அருள்.

இங்ஙனங் கூறிவந்த அன்பு அருள் என்னும் இரண்டின் திறத்தை இனிவரும் முப்பத்தொருசெய்யுளான் உணர்த்துகின்றார். அஃதாவது,நாயனாரிடத்தும், இறைவனிடத்தும் அன்பும், அருளும், நின்ற திறமும், அங்ஙனம் நின்றதிறத்திற் கேற்ப இருவரும் செய்த செயலின்திறமும் எடுத்துக் கூறுவதாமென்க.

---

* உள்ளத்தில் அன்புநிறையப் பெற்றாரே தொண்டுசெய்வ ரென்பதனை - இயற்பகைநாயனார் புராணத்தில் அளவிலாததோர் உளநிறையருளால், நீறுசேர் திருமேனியர் மனத்து நினைத்த யாவையும் வினைப்படமுடித்து, என்றதனாலும், அன்பு இறைவனைக் கண்டபின் என்றதனை திருவாசகத்தில், "ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்பு உனக்கு என் ஊடகத்தே நின்றுருகத்தந்தருள்" என்றதனாலும் அறிக.

பிரமசாரியார் நீராடுதற்குப் போதல்.

ஓங்கு கோவணப் பெருமையை உள்ளவா றுமக்கே
ஈங்கு நான்சொல வேண்டுவ தில்லைநீர் இதனை
வாங்கி நான்வரும் அளவும்உம் மிடத்திக ழாதே
ஆங்கு வைத்துநீர் தாருமென் றவர்கையில் கொடுத்தார்.

(எ - து.) (கோவணங் கொடுப்பாராகிய பிரமசாரியர், நாயனாரைப்பார்த்து) பிரம சாரிகளுக்குச் சிறப்புடைத்தாகிய இக்கோவணத்தின் பெருமையை, உமக்கு இப்பொ ழுது நான் சொல்லவேண்டுவதேயில்லை. (ஏனெனில்: அக்கோவணத்தின் பெருமை யெல்லாம் உண்மையாக நீரே அறிந்திருக்கின்றீர், ஆகலின் நான்கொடுக்கும்) இக் கோவணத்தை நீர் வாங்கி, இது கோவணந்தானே என்று இகழ்ச்சிசெய்யாது, காவ லுள்ள அந்த இடத்தில் நான் வருமளவும் காவலாகவைத்து, (நான் வந்தபின்னர்) நீர் எம்மிடத்தில் கொடுமென்று நாயனார்கையிற் கொடுத்தனர் என்பதாம்.

நீர் கொடுப்பது பருத்தியினாலாகியது, நான் கொடுத்தது வேதஅருத்தத்தினாலாகிய கோவணம் என்பார்—ஓங்குகோவணம்—என்றார். அடியார்களுக்கு எப்படி கோவணஞ் சிறப்புடைத்தோ அப்படியே பிரமசாரிகளுக்கும் சிறப்புடைத்து என்னும் உண்மையை நீயே அறிந்திருக்கும் அறிவாளிஎன்பார்—பெருமையை உள்ளவாறு உமக்குநான்சொல்ல வேண்டுவதில்லை—என்றார். நான்கொடுக்கும் வேதநூலாகிய கோவணம், நீர்கொடுக்கும் பருத்திநூல்போல் காணப்படலால் உம்மிடத்திருக்கும் நூற்கோவணத்தோடு இப் பொருட்கோவணத்தை ஒன்றாகவைக்காமல், செல்வப்பொருளை வேறு வைத்தல்போல் இதனை வேறுவைத்துப் பாதுகாக்கவேண்டும் என்பார்—நீர்இதனை இகழாதே ஆங்கு வைத்து—என்றார். தான் கொடுக்குங் கோவணத்தைத் தானே மாயஞ்செய்து, நாயனா ரிடம் வழக்கிட எண்ணிவந்திருக்கின்றாராகலின் அதற்கேற்ப வழக்கினை வலியுறுத்த ஏது தேடினார் என்பார்—நீர் இதனை வாங்கி நீர்தாரும் என்று அவர் கையிற்கொடுத் தார்—என்றார்.

ஓமென வோங்கி வொலிக்கும் பிரணவத்தை முதலாகவுடைய வேதகோவணமாத லினாலும், நாயனாருடைய பொருளனைத்தும் ஓங்கிய பொருளெனக் காட்டவந்த கோவ ணமாகலினாலும் ஓங்குகோவண மெனப்பட்டது.

இத்திருப்பாசுரத்தான்,—இறைவன் தாம் செய்யப்போகும் வழக்கிற்கு ஏதுவாக அக்கோவணத்தைத் தமது நாயனார்பாற் கொடுத்தனர் என்று கூறப்பட்டது. (௧௪)

கொடுத்த கோவணம் கைக்கொண்டு கோதிலா அன்பர்
கடுப்பில் இங்கெழுந் தருளுநீர் குளித்தெனக் கங்கை
மடுத்த தும்பிய வளர்சடை மறைத்தவர் மறையோர்
அடுத்த தெண்டிரைப் பொன்னிநீர் ஆடவென் றகன்றார்

(எ - து.) கோவணத்தைக்கொடுத்த (பிரமசாரியாரது)வஞ்சத்தையறியாத நாயனார் அதனைக் கையேற்று வாங்கிக்கொண்டு, (தேவரீர் கட்டளைப்படியே இக்கோவணத் தைப் பத்திரப்படுத்திவைத்துக் கொடுக்கின்றேன்) சுவாமிகள் காவிரிநதியில் ஸ்நானாதி கடன்களை முடித்துக்கொண்டு விரைவில் இம்மடத்தில் எழுந்தருளவேண்டும் என்று சொல்ல, நீண்டசடையின்கண் அலைமடுத்துத் தள்ளும் கங்கையை மறைத்துவந்த பிரமசாரியாகிய மறையோர் சமீபத்திலுள்ள தெள்ளிய அலையையுடைய காவிரிநதியில் நீராடிவருகின்றேனென்று சென்றனர் என்பதாம்.

நீர்குளித்து, கடுப்பில் இங்கெழுந்தருளும் என எனவும், வளர்சடை மடுத்த தும் பியகங்கை மறைத்தவர் மறையோர் எனவும் கொண்டுகூட்டுக.

திருவேடமுடைய அடியாரது காயத்தைச் சிவரூபமாகவே காண்பதுபோல், அவரது வாக்கைச் சிவவாக்காகவும், அவரது உள்ளத்தைச் சிவனது திருவுள்ளமாகவும், எண்ணுவதன்றிப் பாச சம்பந்தப்பட்டுள்ள வாக்காகவும், மனமாகவும் எண்ணும் குற்றமுடையவர் அன்றென்பதுதோன்ற—கோதிலா அன்பர்—என்றார். நான் வருமளவும் கோவணத்தைக் காவலில்வைத்து நான் வந்தபின்னர் நீர்தாரும் என்றதனால், நாயனார் இப்பிரமசாரியார் இன்னம் எங்குசெல்ல விருக்கின்றாரோ எப்போது வருவாரோ என்று ஐயமுற்று, ஐயரைநோக்கி தேவரீர் சொல்லியதுபோல எத்தனைநாளானாலும் கோவணத்தைப் பாதுகாத்துக்கொடுப்பதில் தடையில்லை, நீர் விரைவில் அமுதுண்டருளவேண்டு மென்னும் அவாவுடையனா யிருக்கின்றேன் அவ்வவாவின்படியே விரைவில் வரல்வேண்டுமென்னுங் குறிப்புத்தோன்ற—நீர்குளித்து கடுப்பில் இங்கெழுந்தருளும்—என்றார். கங்கையாகிய நீரை நீங்காது தலையில்வைத்திருக்கின்ற இறைவர் நீர் குளித்துவருகின்றே னென்று சொல்லவந்ததும், நீர்குளித்து வாருமென்று நாயனார் சொல்ல வந்ததும், கங்கையைத் தோன்றாவண்ணம் மறைத்துவந்ததனால் என்பதுதோன்ற—கங்கைமறைத்த அம்மறையோர்—என்றார். தனது அருட்செயலையும், நாயனாரது அன்பின் செயலையும் விரித்து யாவருங்காண ஆடப்போகின்றார் என்பது தோன்ற—பொன்னி நீராடுதற்கு அகன்றார்—என்றார்.

இத்திருப்பாசுரத்தால்,—நாயனார்—அடியார்களுடைய மன வாக்குக் காயங்களிடத்தில் எவ்விதத்தும் யாதொருகுற்றமும் கருதாத அன்பரென்றும், அன்பர்களுக்கு அமுதளிப்பதில் மிக்கதீவிரமுடைய ரென்றும், அஃதேபோல் இறைவன் அன்பான்பினை உலகினரறிய விரிப்பதில் அதிதீவிர முடையவரென்றும், அதற்கே காவிரிநதிக்குச் சென்றாரென்றுங் கூறப்பட்டன. (கரு)

கோவணத்தைக் காப்பிடத்தில் வைத்தல்.

தந்த கோவணம் வாங்கிய தனிப்பெருந் தொண்டர்
முந்தை அந்தணர் மொழிகொண்டு முன்புதாம் கொடுக்குங்
கந்தை கீளுடை கோவணம் அன்றியோர் காப்புச்
சிந்தை செய்துவே றிடத்தொரு சேமத்தின் வைத்தார்.

(எ - து.) பிரமசாரியார் கொடுத்தகோவணத்தை வாங்கிக்கொண்ட ஒப்பற்ற பெருமையினையுடைய தொண்டனார், அந்தப் பிரமசாரியார் முன்சொல்லிய வார்த்தையைச் சிரத்தையுடன் மனத்துட்கொண்டு, தாம் முன்னே அடியார்களுக்குக் கொடுத்துவரும் கந்தை, கீள், உடை, கோவணம், ஆகிய இவைகளை வைத்திருக்கும் இடத்தில் அல்லாமல், வேறோரிடமாகிய காவலிற்சிறந்த ஓரிடத்தைச்சிந்தித்து அத் தனியிடத்தில் அக் கோவணத்தை வைத்தனர் என்பதாம்.

அருட் கோவணமாதலால், அதனை முன்னர் சிந்தனையாற் சிந்தித்துப் பின்னர் அச்சிந்தனையிற் றெளிந்த தெளிதலிலேவைத்தல் முறையாதலால்—சிந்தைசெய்து வேறிடத் தொரு சேமத்தின் வைத்தார்—என்றார். அருட்கோவணத்தை வாங்குந்தகுதியாளரானதால்—தனிப்பெருந்தொண்டர்—என்றார். அருட்கோவணத்தைக் காக்கவேண்டிய முறையெல்லாம் விடாது சிரவணஞ் செய்தவராகலான்—முந்தை அந்தணர்மொழி கொண்டு—என்றார்.

இதனால்,—மொழிகொண்டு என்றது சிரவணமெனவும், காப்புச்சிந்தை செய்தது என்றது—சிந்தனையெனவும், ஒருசேமமென்றது நிதித்தியாசனம் (தெளிதல்) எனவும் பொருள்கொண்டு, இறைவன்கொடுத்த அருளைக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தவர் நாயனார் என்று கூறப்பட்டது.

இத்திருப்பாசுரத்தால், பிரமசாரியாரது கட்டளைப்படியே, தனியிடத்தில் அவர் கொடுத்தகோவணத்தை வைத்தனரென்று கூறப்பட்டது. (கசு)

பிரமசாரியார் நனைந்துவருதல்.

போன வேதியர் வைத்தகோ வணத்தினைப் போக்கிப்
பான லந்துறைப் பொன்னிநீர் படிந்துவந் தாரோ
தூந றுஞ்சடைக் கங்கைநீர் தோய்ந்துவந் தாரோ
வான நீர்மழை பொழிந்திட நனைந்துவந் தணைந்தார்

(எ - து) நீராடுதற்குப்போன பிரமசாரியார், தாம் போனதுபோல் நாயனார் காவலிடத்தில்வைத்த அந்தக்கோவணத்தையும் போக்கி, குவளைமலர்கள் மலர்ந்திருக்கும் துறையுடைய காவிரிதீர்த்தத்தில்மூழ்கித் தான் வந்தனரோ, (அல்லது) நறுமணங்கமழும் சடையிலுள்ள புனிதமாகியகங்காதீர்த்தத்தில் படிந்துதான்வந்தனரோ, (நாம்இவ்விரண்டையும் அறியுந் தரமுடையோமல்லோம்.) ஆகாயத்தினின்றும் மேகமானது மழைபொழிய அம்மழையில்நனைந்து மடத்தைவந்து சேர்ந்தனர் என்பதாம்.

இறைவனார் தாம் காவிரிநதியில் மூழ்கவந்ததுபோல் தமதருளையும் நாயனாருடைய அன்பில் மூழ்கப்போக்கினாரென்பார்—போனவேதியர் வைத்தகோவணத்தினைப் போக்கி—என்றார். வேத தருமமாகிய யாகாதிகளைக் கண்டு பெய்வதாகிய மேகவருஷத்தில் நனைந்து வந்தவரென்பார்—வானநீர்மழை பொழிந்திட நனைந்துவந் தணைந்தார்—என்றார். தன்னிடத்தில்வந்து மூழ்குகின்றவர்களுக் கெல்லாம் பாவத்தைப் போக்கிப் புண்ணியத்தைக் கொடுக்கும் அப்புண்ணியத்துக்குப் * பயன்கொடுப்பதற்கு நதியில் மூழ்கினாரென்பார்—பொன்னிநீர் படிந்து வந்தாரோ—என்றார். தனது திருமேனியிற்கலந்து இன்புறும் உமாதேவியைப்போல் தன்னைக்கலந்து அனுபவிக்கப்பெறாது சடையிற் சிக்குண்டு வருந்துகின்ற கங்காதேவியினது துன்பம் நீங்க அத்தேவியைப் பெருக்கிவரச்செய்து அவ்வெள்ளத்தில் பொருந்த மூழ்கிவந்தார் என்பார்—தூநறுஞ்சடைக் கங்கைநீர் தோய்ந்து வந்தாரோ—என்றார். தமது அருளை அன்பர்பால் போக்கியது உண்மையாகலின் போக்கி எனத் துணிவுப் பொருளிலும், அஷ்டமூர்த்தங்களில் ஒன்றாயெண்ணப்பட்ட நீர் தாமாகவேயிருக்க நதியில் மூழ்குதலும் தமது இடப்பாகத்தை உமாதேவிக்கும். சடையைக் கங்கைக்கும் இடமாகக்கொடுத்து அவ்விருதேவியாலும் கலகமற்று வாழ்ந்திருப்பவர் - அன்று கங்கையில் மூழ்குதலும் எங்ஙனம்கூடும்; கூடாதாகலின் வந்தாரோவந்தாரோ, என ஐயப்பொருளிலும் கூறினாரென்க.

இத்திருப்பாசுரத்தான், அட்டபுலிங்கமாகவே யிருக்கின்றவர் - அப்புவில் மூழ்கவேண்டிய தில்லையாகவேயிருக்க, மூழ்கிவந்தவரைப்போல் காணச்செய்தன ராகலான், பொன்னிநீர், கங்கைநீர், மழைநீர் என்னும் மூவகைநீரில் எந்தநீரில் மூழ்கிவந்தனரோ அவர்மாயத்தை நாம்கூறமுடியாதென்று கூறப்பட்டது. (கஎ)

பிரமசாரியாரை எதிர்கொண்டு வணங்கல்.

கதிரி ளம்பிறைக் கண்ணியர் நண்ணிய பொழுதின்
முதிரும் அன்புடைத் தொண்டர்தாம் முறைமையின் முன்னே
அதிக நன்மையின் அறுசுவைத் திருவமு தாக்கி
எதிரெ ழுந்துசென் றிறைஞ்சிட நிறைந்த நூன்மார்பர்

(எ - து.) கிரணங்களைப்பரப்பும் இளம்பிறை மாலையினையுடைய சிவபிரானாகிய பிரமசாரியார், மடத்தைவந்து சேர்ந்தபொழுதில், ஒருகணத்திற்கு ஒரு கணம் வளரும்

* நதிகள் தங்களிடத்தில் பாவிகள் மூழ்குவதனால் அவரினின்றும் நீங்குவதாகிய பாவங்களை யுடைத்தாயிருக்குமென்றும், அப்பாவங்கள் ஈஸ்வரபக்தியுடையார் செய்யும் ஸ்நானதெரிசன பரிசனங்களால் ஒழியுமென்றும் தேவீபாகவதம் கூவது ஸ்கந்தத்தில் கூறியிருத்தலால் தன் வேடத்துக்கேற்பப்பயன்கொடுக்கச் சென்றாரென்றார்.

அன்பினையுடைய நாயனுர், அந்தப்பிரமசாரியார் வருவதற்கு முன்னரே, ஆசாரமுறைப் படி மிக்க நல்லசுவையோடு அறுவகைக்கறிகளுடன் திருவமுதுசமைக்கச்செய்து, எழுந் தெதிரேசென்று வணங்கிட, பூனூல் நிறைந்தமார்பினையுடைய பிரமசாரியார் என் பதாம்.

தொண்டர்தாம் முன்னே, முறைமையின் அதிகநன்மையின் அறுசுவைத் திருவமு தாக்கி எனக்கொண்டு கூட்டுக.

நாயனுரிடத்துள்ள அன்பு—இறைவன்போக்கிய அருளிற்கலந்து முன்னையினும் மேலிட்டிருந்த தென்பார்—முதிரும் அன்புடை—என்றார். பசுவினிடத்தில் உண் டாகும் பால்முதலிய ஐந்தினையும் சுவைப்பதுபோல் அத்துடன் முதிர்ந்திருக்கும் தனது அன்பினையும் இறைவன் சுவைக்குமாறு அறுசுவையோடு திருவமுதமைத்தன ரென்பார்—அதிக நன்மையின் அறுசுவைத் திருவமுதாக்கி என்றார். ஒருபொழுதி லேயே பலமுறை அடியரைக் காணவரினும் அம்முறைதோறும் புதிதாகக் காணவந்தது போலும் வணங்குதல் முறைமை என்பார்—எதிரெழுந்து சென்று இறைஞ்சிட என்றார். மூன்றுவேதமாகிய நூல் ஆகமத்தின் உட்பொருளாகிய முப்பொருளுண்மை நிறைந்த அடையாளப் பொருளென்றுணரப் பூணூலைத் தரித்தனரென்பார்—நிறைந்த நூன்மார்பர்—என்றார். தமதுசடையிலிருக்கும் பிறையில் ஓர்கலையைக்காட்டி வானத்தி லிருக்கும் பிறையில் யாவரும் அறியப பதினறுகலையும் நிறைந்திருக்கக் காட்டுவது போல் தம்மிடத்தில் சிறிதருளைக்காட்டி, நாயனுர்பால் நிறைந்த அருளை யாவரும் அறி யக் காட்டுதல் அடியார்பால்வைத்த அன்பின் திறமென்பார்— கதிரிளம் பிறைக் கண்ணி யர் நண்ணியபொழுது—என்றார்.

இத்திருப்பாசுரத்தான் - நாயனுர்பால் இறைவன் தமதருட்கலையை நிறையச்செய் தனரென்றும், இறைவன்பால் நாயனுர் தமது அன்பினிலையை முதிரச்செய்தன ரென் றும், இறைவன் தமது அருட்சுவையில் தம்மைச் சுவைக்கச்செய்ததுபோல், நாயனுர் தமது அன்பின் சுவையை இறைவன் சுவைக்குமாறு அறுசுவையுணவை அமைத்தன ரென்றும், அதனைப் பிரமசாரியாருண்ண வணங்கினரென்றும் கூறப்பட்டன. (கஅ)

பிரமசாரியார்கொடுத்த கோவணத்தைக் கேட்டல்.

தொண்ட ரன்பெனுந் தூயநீ ராடுதல் வேண்டி
மண்டு தண்புனன் மூழ்கிய ஈரத்தை மாற்றத்
தண்டின் மேலுள நீரஃநான் றந்தகோ வணத்தைக்
கொண்டு வாருமென் றுரைத்தனர் கோவணக் கள்வர்

(எ - து.) (மழைநீராடிவந்த பிரமசாரியார்) நாயனுருடைய அன்பென்னும் சுத்த மாகிய நீரில்மூழ்குதலை விரும்பி (அன்பரைப்பார்த்து) வெள்ளமாகியமழையில் நனைந்து வந்த ஈரத்தை மாற்றிக்கொள்ள, (முன்னர் கோவணம் வேண்டியிருப்பதால் கோவண மோ வேறில்லை) இப் பலாசத்தண்டின்மேலுள்ள கோவணமும் (என்னைப்போல்) நனைந் துள்ளதே, (ஆகையால்) நான் உம்மிடம் முன்கொடுத்த கோவணத்தைச் சீக்கிரமாகக் கொண்டுவாரும் என்று, கோவணத்தைக் களவாடிய கள்வர் கூறியருளினுர் என்பதாம்.

கோவணத்தைக் கொண்டுவாருமென்று கோவணக்கள்வர் உரைத்தனர் என்று கூட்டுக.

நாயனுருடைய அன்பினைப்போலும் எமக்குச் சுத்தங்கொடுப்பது — காவிரிநீரு மன்று கங்கைநீருமன்று மேகநீருமன்று என்னும் அவ்வுண்மை தோன்ற—தொண் டர் அன்பெனும் தூயநீராடுதல் வேண்டி—என்றார். அன்பர்கள்பால் தன்னருளைவைப் பது அவர்களைத் தன்வசமாக்கிக் கொள்வதற்கேயன்றி அவர்களைத்தன்னைவிட்டு வேறு வைப்பதற் கன்றென்பதுதோன்ற—நான் தந்த கோவணத்தைக் கொண்டுவாருமென் றுரைத்தனர்—என்றார். உனதன்பின் வசப்பட்ட எனதருள் உன்னிடத்தினின்றும்

வெளிப்பட்டாலன்றி உன்பால் நான்வைத்துள்ள திரோதசத்தியின் செயலினைத் தும் மாற்றமுடியாதென்பது தோன்ற—ஈரத்தைமாற்ற—என்றூர். தம்மைச்சார்ந்தவரிடத்துஞ் சாராதாரிடத்தும் * தலைமை பெற்றிருக்கும் தற்போதத்தின் வண்ணத்தைக்காட்டாவண்ணம் அதன் வண்ணத்தைக் களவாடும் செயலுடையவன் என்பது தோன்ற—கோவணக்கள்வர்—என்றூர்.

இத் திருப்பாசுரத்தான்,—புண்ணிய தீர்த்தங்களினும் சிறந்த புண்ணிய தீர்த்தம் தொண்டர் அன்பென்னும் தீர்த்தமென்றும், அருட்செயல் மேலிடத் தலைப்படின் திரோதச்செயல் மாறுமென்றும், அது மாறவருங்காலத்துத் தற்போதச்செயலின் வண்ணமும் மாறத் தற்போதத்தை இறைவனுகியகள்வன் கவர்வனென்றும், அதைக்கவர்ந் தபின் தனது அருட்செயலை வெளிப்படுத்த அவர் அறிவைத் தன்னளவில் நிறுத்துவனென்றுங் கூறப்பட்டன. (கக)

நாயனூர் கோவணந் தேடுதல்.

ஐயர் கைதவம் அறிவுறு தவர்கடி தணுகி
எய்த முன்சென்று கோவணம் இருந்த வேறிடத்தின்
மையில் சிந்தையர் கண்டிலர் வைத்தகோ வணமுன்
செய்த தென்னென்று திகைத்தனர் தேடுவா ராஞர்.

(எ - து.) நாயனூர் பிரமசாரியார் கூறிய பந்தயவார்த்தையை அறியாமல் முன் தாப்பிடத்தில் வைத்திருந்த ஐயர் கோவணத்தைக் காணும்பொருட்டு மிகவும் சீக்கிரமாகச்சென்றுபார்க்க, யாதொரு களங்கமும் இல்லாத சித்தத்தையுடைய அவர் முன் வைத்த கோவணத்தைக் காணுதவராகி நாம் செய்தது என்ன, நம்மைக் கோவணஞ் செய்தது என்ன! என்று மனந்திகைத்தவராய் மீண்டுந் தேடுவராயிஞர் என்பதாம்.

அவர், ஐயர் கைதவம் அறிவுறுது முன் வேறிடத்து வைத்திருந்த கோவணம் (காணக்)கடிது அணுகிச்சென்று எய்த, முன்கோவணம் மையில் சிந்தையர் கண்டிலர். செய்தது என்னென்று திகைத்தனர் தேடுவார் ஆஞர் எனக்கொண்டுகூட்டுக.

நாயனூர் உயிர்க்கு அகத்துறுப்பாகிய அன்பினைப்பெற்றன ராகலின், அவ்வன்பினைப் பிரியாத அருளும் உடையராயினர் ஆகவே அவருயிரைவிடாதது அன்பு; அன்பினைவிடாதது அருள். விடாததன்மையை அன்பும் அருளும் பெற்றிருக்குமாயின், அருளாகிய கோவணம் எங்ஙனம் இவர்வைத்தவிடத்தில் வேருகஇருக்கும்? ஆகலான் அருளானது கோவண வுருவொழிந்து நாயனூரது அன்புருவானதால், கோவணம் இருந்தவிடத்திலும் வேறிடத்திலும் இல்லாமற் போனதென்பார்—கோவணம் இருந்தவேறிடத்திற் கண்டிலர்—என்றூர். அன்பும் அருளும் தம்மோடு கலக்கப்பெற்றவர் சுட்டியறியும் சுட்டறிவையும் தம்மையும் அறியாது அன்பிஞல் உள்ளமுருகி அருளுருவாகவேயிருப்பரன்றி வேறுபிரிந்து இது அருளென்று ஒருவருக்கும் காட்டஅறியா ரென்பார்—மையில் சிந்தையர் கண்டிலர்— என்றூர்.

தற்போதச் செயலற்று அருள்வசப்பட்டாரை—இறைவன் அவர்கள் அவ்வருளைச் சுதந்தரமாய் எங்கெங்குங் கண்டு ஆளுமாறு செய்வதில் தீவரமும், அவர்களும் அருளை ஆங்காங்கும் கண்டு ஆளுவதில் தீவரமும் உடையராதலால், அவர்கோவணம் கொண்டு வாவென்ற அக்கணமே அவ்வருட்கோவணத்தைக் கண்டு அவ்வருளுடையானை வந்து சேரச் சென்றனரென்பார்—அவர்கடிது அணுக எய்திநோக்குற—என்றூர். அருளானது தன்னை ஆளவரும் அன்புடையாருக்கு †—ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என்உள்ளமும் போய் நான் கெட்டவா—என்றபடி, உடம்பின் செயலையும், உயிரின்

* கோ—தற்போதம். வண்ணம்—அப்போதத்தின் செயல். † திருவாசகம். திருத்தெள்ளேணம்—செ - கஅ.

செயலையும், உயிர் உணர்வின் செயலையுங்கெடுத்து, உடம்பின் வகையானும், உயிரின் வகையானும், உணர்வின் வகையானும் செயப்படும் செயல்வகைகளை எண்ணும் உள்ளத்தின் செயலினையும் போக்கி, இவ்வாறு செயற்படுவனவெல்லாம் செயலற்றுப் போக உடம்புமுதல் உள்ளம்வரையிலும் நின்று அதனதன் செயலை இயக்கிவந்த நான் என்றெழும் ஆணவ அகங்காரத்தின் செயலையுங் கெடுத்து அதனைத் திகைத்து நிற்கச்செய்யும் என்பார்—வைத்தகோவணம் செய்தது என்னென்று திகைத்தனர்—என்றார். செயலெல்லாம் ஒழியினும் அச்செயல்களில் பழகிவந்த ஆன்ம அறிவின்கண் அவ்வாசனை 'இங்குளிவாங்குங் கலம்போலத்' தங்கியிருக்குமாகலின், முன்போல் உடம்புமுதலியன தோன்ற அவைகளில் அவ்வறிவு செல்லும் இயல்புடையதென்பார்—முன்தேடுவாரானார்—என்றார். இங்ஙனமான சித்தாந்த உண்மையை அறியும் வன்மையில்லார் யாங்கள் ஞானிகளாயினோம், அருளுடையராயினோம் என்றுகூறும் அவர்களது பந்தயங்களெல்லாம்போலப்பந்தயமாய்ப் போயொழிய இறைவன் தான்பந்தயங்கட்டிக்கொண்டு அப்பந்தயத்தை அருள்பெற்றநாயனார்பால் காட்டினாலன்றி பிரகாசிக்கா ஆகலான் அது பிரகாசிக்குமாறு கோவணங் கொண்டுவாவென்றுகூறுவதை அவர் அறியாரென்பார்—ஐயர் கைதவம் அறிவுறாது என்றார்.

இத்திருப்பாசுரத்தான்,—இறைவன்தனக்கு ஆட்பட்டாரைத் தான் அருளால் ஆளுமுறைமையினை, அவர்களுக்குமுன் உணர்த்தான்என்னும் உண்மைதோன்ற—ஐயர் கைதவம் அறிவுறாது—எனவும், இறைவனால் ஆளப்பட்டார் தம்மை இறைவன் நன்றே செய்யச்செய்யினும், பிழையே செய்யச்செய்யினும் அதையதைச் செய்வதேயன்றி, அச்செயலில்வரும் நன்மையையும் பிழையையும் எண்ணார் என்னும் உண்மைதோன்ற—இறைவனார்கோவணம் கொண்டுவாருமென்று உரைத்த அளவில் கோவணம் இருந்த இடத்திலும் வேறிடத்திலும் எய்திநோக்கினார்—எனவும்—கண்டிலர் எனவும், தமக்குவரும் நன்மையையும், பிழையையும் கருதாராயினும், தம்மால் அடியார்களுக்கு, ஏதேனும் நன்றாவது பிழையாவது விளைவதாயின் அதனை எண்ணிச்செய்வது அன்பரதுகடமை என்னும் உண்மைதோன்ற—தேடுவாரானார்—எனவும், தேடியும் கண்டிலராகவே மையில் சிந்தையராகிய நாயனார் இச்செயல் யார்செய்யவல்லார் என்று சிந்தித்துப் பின்னர் நஞ்செயலற்று நான் என்பதும் அற்று. நாதன் தன்செயல் நோக்கும் நமக்கு, திருவருட்செயலன்றி வேறு எச்செயலிருக்கின்றது என்று அவசமுற்று எண்ணுவதுமற்று செய்வதுமற்று நின்றனர் என்னும் அவ்வுண்மைதோன்ற—கோவணம் செய்தது என்னென்று திகைத்தனர்—எனவுங் கூறப்பட்டன. (௨௦)

பொங்கு வெண்கிழிக் கோவணம் போயின நெறிமேற்
சங்கை இன்றியே தப்பின தென்றுதம் சரக்கில்
எங்கு நாடியும் கண்டிலர் என்செய்வார் நின்றார்
அங்கண் வேதியர் பெருந்துடக் கினில்அகப் பட்டார்

(எ - து.) பிரமசாரியாரால் கொடுக்கப்பட்ட வெண்ணிறமிக்க கிழித்தகோவணமானது மறைந்து போனவகையை எண்ணவேண்டிய அளவில் எண்ணிப்பார்த்தும், (புலப்படாமையான்) அக்கோவணம் எவ்வழியானோ தப்பிப்போயிற்று இனிமேல் சங்கையில்லை என்று தெளிந்து, (மறுபடியும் நாம்வைத்திருக்கும் கோவணச் சிப்பங்களில் பார்ப்போமென்று எண்ணி) கோவணச்சரக்கில் ஒவ்வொரு மூட்டைகளிலும் ஆராய்ந்துபார்த்தனர். பார்த்தும் அச்சரக்குகளிலும் காணப்படாமையால் அவருக்கு எண்ணும் எண்ணமும், செய்யும் செயலும் என்ன இருக்கின்றது. ஒன்றும் செய்ய அறியாதவராய் நின்றனர். (அங்ஙனம் நின்றாராயினும்) பிரமசாரியார் (எண்ணிவந்த) பெருவழக்கு (அவரை விடாதாகலான்) அவர் வழக்காகிய பெரியதொடக்கினில் அகப்பட்டுக் கொண்டனர் என்பதாம்.

மேலைச்செய்யுளில் "இங்குளிவாங்கும் கலம்போல," என்று எடுத்துக்கூறியது போல் முன் வாசனைவசத்தான் கருவிகரணச் சம்பந்தப்பட்டு கோவணத்தை எங்கெங்கும் தேடத்தலைப்பட்டும் அது காணுதொழிந்தது. அதனோடு தேடத்தலைப்பட்ட கருவிகரணங்களும் மேன்மேல் முனைத்துத் தோன்றுதலொழிந்தன. ஏனெனில்:—அக்கினியானது தன்னைச் சுடாதிருப்பதற்கு அக்கினிஸ்தம்பன மென்னும் நல்ல தவத்தைச் செய்தவர் அக்கினியிற்கிடப்பினும் அதனால் வேகாது தமது நிறத்திலேயே நிற்பது போலும், குதிரை ஊர்வதற்குரிய பாகநூல் கற்றுவல்லார் அக்குதிரையின் வேகத்துட் படினும் தவறிவிழுந்து கலங்காது தமது நிறத்தில் நீங்காது நிலைபெற்றிருப்பது போலும், தேடியுங் காணாமையால் அவ்வளவில் தாம்தேடுஞ் செயலையும்விட்டு அச்செயலுக்குரிய கருவிகரணங்களையும் விட்டுத் தான் முன்னிருந்த அருட்செயலையே நோக்கி அந்நிலையிலேயே நின்றனர் என்னும் அவ்வுண்மைதோன்ற—கோவணம் எங்கும் நாடியும் கண்டிலர் என்செய்வார் நின்றார்—என்றார். இறைவனால் செய்யப்படும் அருள் தொடக்கு—அருட்செயல்வசப்பட்டார் தன்னோடு ஏகனாகிநிற்றற்கும், அங்ஙனம் அவர் நின்றபின்னர், அவர்களை ஓர்விடயங்களையும் அறியச்செய்யாது, அவைகளையெல்லாம் தானே அறிவதற்கும், அங்ஙனம் தான் அறிந்தபின்னர் தன்னையின்றி அவர்கள் ஓர் விடயத்தையும் விடயியாமைக்கும் தொடங்கும் தொடக்கு பெரிதென்னும் அவ்வுண்மைதோன்ற—வேதியர்பெருந்தொடக்கு—என்றார். இங்ஙனமான அருள்தொடக்கில் நாயனார் தொடக்குறுதற்கு இறைவன் அருள்நோக்கு இல்லையாயின் அத்தொடக்குக் கூடாதென்னும் அவ்வுண்மைதோன்ற—அங்கண் (ணினில்) அகப்பட்டார்—என்றார். மேல்நெறியான அத்தொடக்கில் இவர் யாதொரு தடையுமின்றி அகப்படவே அவர் தேடியபொருள்களும், தம்மிடத்துப் பற்றை விளைவிக்குஞ் செயலை அவர்க்குச் செய்யாதொழிந்தன. அதில் ஐயமில்லை என்னும் அவ்வுண்மைதோன்ற—தன்சரக்கு(கள்) சங்கையின்றியே தப்பின—என்றார். தாம் தேடியபொருளில் நீக்கமுண்டாகவே மேல்நெறியாகிய அருள்நோக்கத்தின்வழியே வேதியர் தொடக்கினில் அகப்படுதற்குச் செல்வாராயினர் என்னும் அவ்வுண்மைதோன்ற—மேல்நெறிபோய்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான்—வேதியர் செய்யத்தொடங்கிய தொடக்கு நாயனார் தன்னருட்செயலில் அகப்படுமாறு செய்யத்தொடங்கிய தொடக்காதலான் அதனைப் பெருந்தொடக்கென்றும்,—அப்பெருந்தொடக்கில் அகப்படுதற்கான பேரன்பை நாயனார் உடையவராகலான் அவரை—அகப்பட்டார்—என்றும், அங்ஙனம் அகப்படவேண்டிய அவர்க்கு, அவர் தேடிவைத்துள்ள சரக்குகளில் கோவணங் கிடைத்திருக்குமாயின் அவர் அகப்படவேண்டிய அருட்டொடக்குக்கு முரணும் ஆகலின் அம்முரண் உண்டாகாவாறு—தன்சரக்கில் எங்குநாடியுங் கண்டிலர்—என்றும், அன்றியும் அவர்சரக்கில் வேதியர் கோவணம் கிடைத்திருக்குமாயின் அக்கோவணமாத்திரம் அவர்பொருளென்று கொடுத்துவிட்டுத் தன்பொருளெல்லாம் தன்பொருளாகவே பற்றிநிற்க வருமாகலான் அப்பற்றுநீங்கி எல்லாம் அவர்பொருளாகவே ஆமாறு—கோவணம் சங்கையின்றியே தப்பின—என்று எண்ணினர் என்றும், பொருட்பற்று அவரைவிட்டு நீங்கி, அருட்பற்று அவரைத் தொடரவருமாயின். அவர் தாம் செய்யும் செயலற்று அருட்செயலில் நிற்கவேண்டியவரே யன்றி வேறுசெயல் இல்லையாகலான்—என்செய்வார் நின்றார்—என்றும், இவையெல்லாம் இறைவன் அருள்நோக்கன்றி கூடாவாகலான்—அங்கண்வேதியர் என்றுங் கூறப்பட்டன. (உக)

வேறுகோவணம் கொண்டுவருதல்.

மனைவி யாரொடு மன்னிய கிளைஞரும் தாமும்
இனைய தொன்றுவந் தெய்திய தெனஇடர் கூர்ந்து
நினைவ தொன்றிலர் வருந்தினர் நிற்கவு மாட்டார்
புனைய வேறொரு கோவணங் கொடுபுறப் பட்டார்.

(எ - து.) (எவ்வாறு அகப்பட்டாரெனின் கோவணங்கிடைக்காதொழியவே தமக்குண்டாய மனவருத்தத்தை யாற்றுவான்பொருட்டு) தம் இல்லாளோடு தமக்குரிய சுற்றத்தாரையும் அழைத்து, அவர்களோடு தாமும் கலந்தவராய், எனக்கு இப்போது நேர்ந்துள்ள கவலையை நீங்கள் யாவரும் அறிவீரன்றோ? இத்தன்மைத்தான தீங்கொன்று வந்துவிட்டதே! இச்சமயத்தில் இத்தீங்கு நமக்கு வரலாமா? என்று தமக்குண்டாகிய மனக்கவலையை எடுத்துக்கூற, அவர்களும் கவலை கூர்ந்தவர்களாய், ஒன்றுஞ்சொல்லவறியாது நிற்ப, பின்னர் நாயனூர் மிகவும் கவலைகூர்ந்து தம்முள்தாமே நினைக்கும் நினைவும் பிறரிடத்துக்கூறும் நினைவும் இல்லாதவராய், அவர் பொருளை அவருக்குக் கொடுப்பதற்கில்லாமற்போயிற்றே என்கிற வருத்தமொன்றே உடையராய் வருந்தி மனைவிமுதலிய சுற்றத்தாரோடும் நிற்கவும்மாட்டாதவராய், (ஒருவகையான எண்ணங்கொண்டு) அந்தப்பிரமசாரியார் உடுப்பதற்குத் தம்மிடத்திலுள்ள ஒரு கோவணத்தை எடுத்துக்கொண்டு பிரமசாரியரிடம்போகப் புறப்பட்டனர் என்பதாம்.

மனைவியாரும் சுற்றத்தினரும் பிரமசாரியார் புசிப்பதற்கின்றி இடைவில் கோவணவழக்கு வந்து விட்டதென்று நாயனூரைப்போல் ஒன்றுந் தோன்றாது வருந்தினரென்பது தோன்ற —மனைவியாரொடு மன்னிய கிளைஞருந் தாமும், இனையதொன்று வந்து எய்தியது என இடர்கூர்ந்து— என்றார். உலக இயலில் தமது நினைவை மேன்மேலும் நினைவிக்கவல்ல சுற்றத்தினரும் நினைவிக்கும் செயலற்று நிற்கவே, நாயனூர் நினைவு மறந்து நின்றனர் என்பதுதோன்ற—நினைவது ஒன்றிலர்—என்றார். நினைவது ஒன்றிலராகவே அவருள்ளத்தில் நிறைந்திருந்த அன்பினால் "சிவனே! நல்லூர் நம்பரனே! எம்பெருமானே! எம்மானே! இப்பிரமசாரியாராகிய வேதியரது அருளை நான் இன்று எவ்வாறு பெறவல்லேன்" என்று வருந்தினர் என்பதுதோன்ற—வருந்தினர்—என்றார். அன்புமீதூரவே, அவ்வன்பு அருளைக்கூடும் முயற்சியைத் தோற்றுவிக்கும் இயல்புடைத்தென்பதுதோன்ற—நிற்கவுமாட்டார் புனைய வேறொருகோவணம் கொடு புறப்பட்டார்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான் - அன்பின்பயனாகிய அருள்பெறுதற்குரிய நாயனூர் அருளுக்குரிய அன்பினை இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியினிடத்தும், புதல்வரிடத்தும், ஏனைச் சுற்றத்தாரிடத்தும் செலுத்திவந்ததனால் வேதியராகிய விருந்தினர் பொருட்டுத் தாம்வருந்தும்பொழுது அம்மனைவிமுதலாயினாரும் தம்முடன்வருந்தி அன்புபாராட்டி நாயனூருக்கு மேன்மேல் அருள்நாட்டத்தை உண்டாக்கித் தம்மிடத்து அவர்வைத்த அன்பின்பயனை அவருக்குத் தந்தனரென்றும், தம்மாலும் தம்மைச்சார்ந்தாராலும் அன்பு நிறையப்பெறவே அருள்பெறுதற்குரிய நன்முயற்சி அக்கணமேதோன்றக கோவணங்கொண்டு புறப்பட்டாரென்றுங் கூறப்பட்டன. (உ௪)

கோவணங்காணாத அதிசயங்கூறல்.

அத்தர் முன்புசென் றடிகணீர் தந்தகோ வணத்தை
வைத்தி டத்துநான் கண்டிலேன் மற்றும்ஓர் இடத்தில்
உய்த்தொ ளித்தனர் இல்லைநான் ஒளித்தவா றறியேன்
இத்த கைத்தவே றதிசயம் கண்டிலேன் என்று.

(எ - து.) பிரமசாரியாரிடம் வந்து 'சுவாமிகாள்! தேவரீர்கொடுத்த கோவணத்தை நான் வைத்திருந்த காவலுள்ள வீட்டில் காணப் பெற்றேனில்லை. நான் காணாதிருக்கும்படி வேறிடத்தில் ஒளித்து வைக்கத்தக்கவரும் இல்லை. அக்கோவணம் எவ்வகையாய் மறைந்துபோயிற்றோ அதனை நான் அறியேன்; அது மறைந்துபோன வகையை எவ்வகையாய் எண்ணிப்பார்த்தும் அறிய முடியவில்லை. (இது பெரிய அதிசயமாகவிருக்கின்றது.) இவ்வகைத்தான அதிசயத்தை நான் எப்பொழுதுங் கண்டதில்லை' என்று கூறினரென்பதாம்.

இத்திருப்பாசுரத்தான்—நாயனார்—கோவணக் கள்வரிடத்தில் சென்று, சுவாமி காள்! தேவரீர் என்னிடம் கோவணத்தைக் கொடுத்தபோது நானும் அறிந்தேவாங்கி காப்பிடத்தில்வைத்தேன். அதனை என்னைச்சார்ந்தயாவரும் அறிவார். என்னுலும் யாவராலும் அறியப்பட்ட அக்கோவணம் இப்பொழுது ஒருவராலும் காண்டற்கு அறியப்படவில்லை. அது என்ன கண்மாயமோ! அந்த கண்மாயத்தை இருகண்ணுடையரால் அறியத்தக்கதன்று, முக்கண்ணுடையானே அறிவான். கோவணமோ ஒன்று, அது செய்தவண்ணமோ இவ்வண்ணமென்று அறியமுடியவில்லை. மைப்படிந்தகண்ணளையுடையாளுகிய மாவடியானது—படியும், அவனது நிறமும், வண்ணமும், அவனருளாகிய கண்ணைக்கொண்டு கண்டால் அல்லாமல், இப்படிஎன்றும், இந்நிறமென்றும், இவ்வண்ணமென்றும் எவ்வாறு காணமுடியாதோ, அஃதேபோல்—தேவரீரால் கொடுக்கப்பட்ட கோவணம்—நான்வைத்த இடத்தில் இல்லாமல் எப்படியாய்ப் போயிற்றே, என்னிடத்திலுள்ள எந்தக்குணத்தை வெளிப்படுத்த என்னகுணங்கொண்டுபோயிற்றே, என்னிடத்திலுள்ள எந்தவாசனையைக்காட்ட எவ்வண்ணமாய்ப் போயிற்றே அப்படியையும், அக்குணத்தையும், அவ்வண்ணத்தையும் நற்றவர்சேர் திருவடியை என்றலைமேல் வைப்பவராகிய இந்நல்லூர்ப் பெருமான்றான் உணர்த்தவேண்டும். ஏனெனில்,—அவ்விறைவன்றான் * உலகத்து உற்றலைவதாகிய எழுமைப் பிணியையும் வைத்தவர், பிணியில் உயிரையும் வைத்தவர், உயிர் செல்லும் கதிகள் வைத்தவர், மற்று அமரர் கணம் வைத்தவர், அமரர்காணு மறைவைத்தவர், தீமைமதியம் வளரவைத்தவர், செற்றமலி ஆர்வமொடு காமலோபம் சிறவாத நெறிவைத்தவர், துறவி வைத்தவர்—என்று சொல்லப்பட் டிருக்கின்றதாகலான் அவரன்றி இக்கோவணத்தை யார் எடுத்து எவ்விடத்தில் வைக்கவல்லவர். ஆகவே அவர் அருள்வைத்து வைத்த இடத்தைக் காட்டுவாராயின் இனி யான் காணமுடியும், ஆகலின் இனி அவர்காட்டும் அதிசயத்தைக் காண, நினைந்துருகும் உள்ளத்தனுயிருக்கின்றேன் என்று கூறினரென்று கூறப்பட்டது. (உசு)

கோவணங்கோடுத்துப் பிழைபொறுக்க வேண்டல்.

வேறு நல்லதோர் கோவணம் விரும்பிமுன் கொணர்ந்தேன்
கீறு கோவணம் அன்றுநெய் தமைத்தது கிளர்கொள்
நீறு சாத்திய நெற்றியீர் மற்றது களைந்து
மாறு சாத்திஎன் பிழைபொறுப் பீரென வணங்க.

(எ - து.) (சுவாமிகாள்! தேவரீர்கொடுத்தகோவணம் காணுதொழிந்தமையால்) என்னிடத்திலுள்ள நல்லதோர்கோவணத்தை இதோகொண்டுவந்தேன். (அதுவிரும்புந் தன்மையுடையது. ஆகலின் அதனை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளல்வேண்டும், ஏனெனில் நான்கொண்டுவந்தகோவணம்ஓர்ஆடையினின்றும்) கிழித்ததன்று, (ஆடையைப்போலும்) வேருககோவணமாகவே நெய்யப்பட்டுவைத்திருப்பது. பிரகாசிக்கும் திருவெண்ணீற்றைஅணிந்திருக்கும் நெற்றியையுடையவரே! (தேவரீர்) தரித்திருக்கும் கோவணத்தைக் களைந்துவிட்டு, அதற்கு மாருக இக்கோவணத்தை அணிந்துகொண்டு எனது குற்றத்தைப் பொறுத்தருள்வீரென்று வணங்க என்பதாம்.

பிரமன்முதலிய பலதேவரும் தத்தமக்கும் பரம் உள்ளது உள்ளது என்று கிழித்தெடுத்து ஆளத்தக்க வேதம் இறைவன்கொடுத்த கோவணம் என்பார்—கீறுகோவணம்,—என்ருர். பிரமன்முதலிய பலரையும் பரமல்ல என்று கிழித்தெறிந்து அவர்களைப் பூர்வபக்ஷமாக வேறுவைத்து சிவனே பரமென்று சித்தாந்தப் படுத்தவல்ல ஆகம சம்பந்தம்உள்ளது நாயனார் கொடுத்த கோவணம் என்பார்,—வேறுநல்லதோர் கோவணம்—என்ருர். பூர்வபக்ஷப் பயிற்சிவிபத்தால் உண்டாகும் உணர்ச்சிவிசேடத்தான் சிவன் ஒருவன்தான் பரம், ஏனையோர் அன்னர் அல்லர் என்றுகூறும் துணிவி

* க - வது திருமுறை திருநல்லூர் செ—சு.

ழந்து, பூர்வபக்ஷ தெய்வங்களோடொப்பப் பரசிவத்துக்கும் பரங்கூறுவதுபோலன்றி, குறிகளானும், குணங்களானும், அடையாளங்களானும், அவரவரையும் ஆராய்ந்து ஆராய்ந்து, இவர் பரமாகார் இவர்பரமாகாரென்று கழித்து, சித்தாந்த உணர்ச்சிவிசேடத்தான் பரசிவத்துக்கே தனிப்பரம் அமைத்துக்கூறும் சிறப்புடைத்து ஆகமஞானம் என்பார்—கீறுகோவணம் அன்று நெய்தமைத்தது என்றும். திருநீறணியும் சைவ நலமுடைய வேதியராகியதேவரீர் பொதுப்பரங்கூறும் பொது உணர்ச்சியைக் களைந்து தனிப்பரங் கூறும் உணர்ச்சியை மேற்கொள்ளல் கடன் எனபார் — நீறுசாத்திய நெற்றியீர் மற்றது களைந்து மாறுசாத்தி என்றும், திருநீறுசாத்தித் தனிப்பரசிவத்துக்குத் தனியடியாராகிய பெரியோரிடத்துப் பெற்ற சிவஞானத்தைப் போற்றி, அவரேவிய பணியில் பிழைபடச்செய்தல் பெரியதோர் குற்றம்என்பார்— என்பிழை பொறுப்பீர் என்றும், தனிப்பரசிவத்துக்குப் பொதுப்பரங்கூறும் பிழையும், தனிப்பர முணர்ந்த தனியடியார்களுக்குச் செய்யும் பிழையும் பெரும்பிழையெனக் கருதாதார் போலன்றிப் பிழையெனக்கருதி வணங்கின் அதுவே அப்பிழைக்குக் கழுவாயாகும் என்பார்,—வணங்கி—என் றுங்கூறினார்.

இததிருப்பாசுரத்தான், இருகோவணத்தினியலும் அதனுள் களைவதைக் களைந்து கொள்வதைக் கொள்ளும் இயலும் தன் பிழையியலுங்கூறி நாயனார் வணங்கிய திறங் கூறப்பட்டது. (உச)

பிரமசாரியார் கோபித்தல்.

நின்ற வேதியர் வெகுண்டமர் நீதியார் நிலைமை
நன்று சாலவும் நாளிடை கழிந்ததும் அன்றால்
இன்று நான்வைத்த கோவணங் கொண்டதற் கெதிர்வே
றொன்று கொள்கென வுரைப்பதே நீரென வுரையா.

(எ - து.) அங்கு நின்றவண்ணமாகவே நிற்கின்ற பிரமசாரியார் (வேறுகோவணந் தருகின்றேன் என்று நாயனார் சொல்லியதைச்கேட்டுக்) கோபங்கொண்டவராய், (நீர் தானோ) அமர்ந்தநீதியுடையவர், உம்முடையநீதி மிகவும் நன்றாயிருக்கின்றது, (அந்தோ!) நான்கொடுத்து நாள்கழிந்ததும் இல்லையே, இப்பொழுதுதானே கொடுத்து விட்டுப் போயினேன். (அங்ஙனம்) நான் அடைக்கலமாக வைத்தகோவணத்தைக் கொள்ளைகொண்டு, அதற்கீடாக மற்றொருகோவணத்தை நான் தருகின்றேன், அதனை நீர் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று நீர் சொல்லலாமா! என் றுகூறினார் என்பதாம்.

வேதவுள்ளுரையாய் நிற்பவர் சிவபெருமானே யாகலான்— நின்றவேதியர்—என்றார். வேதசிவாகமங்கட்குத் தாமே தலைவராயிருக்க, அவற்றுள் ஒன்றுகளைதல் ஒன்று கொள்ளல் கூடாதாகலான்—வெகுண்டார்—என்றார். இறைவனை அசிந்தனுகக்கண்டு சித்தத்துள்ளே சிந்திக்கு முறை கூறும் வேதார்த்தத்தையும், அசிந்திதனுய்நின்ற பதியைச் சிந்திதனுகக்கண்டு வழிபடுமுறைமை கூறும் ஆகமார்த்தத்தையும் நாயனார் நீதியாய் உணர்ந்து, உணர்ந்தமுறைப்படியே வேதார்த்தத்தைத் தன்னுட்கொண்டு ஆகமார்த்தத்தை இறைவனிடத்துக் கண்டு தம்பொருளாயுள்ள கோவணத்தைக் கொடுக்க வந்தாராகலான்— அமர்நீதியார்நிலைமை சாலவும் நன்று—என்றார். சித்தத்துள் சிந்திக்கும் சிந்தனைமுறையினும், சிந்தித்தமுறைப்படியே வழிபடும் வழிபாட்டின் முறைமையினும் நாயனாரது நாள் கழிந்ததன்றி, இடைவிட்டிருந்தநாள் ஒருநாளும் இல்லையாகலான்—நாளிடை கழிந்தது அன்றால்—என்றார். இங்ஙனமான சிந்தனையின் வண்ணமும், வழிபடும்வண்ணமும் நாயனார் கொண்டது இறைவன் அன்றுவைத்த அருள்வண்ணத்தால் ஆகலான்— இன்று நான்வைத்த கோவணங்கொண்டு—என்றார். சிந்தனையும் வழிபாடும் ஒன்றுபட்டொழுகவல்ல நாயனார், தன்னதென்று சொல்லப்பட்ட எல்லாப் பொருளோடு தன்னையுங் கொடுக்கவேண்டியவரா யிருக்க, அதற்குமாறாக ஒரு கோவ

ணத்தைக் கொண்டுவந்து கொடுத்து இதனைக் கொள்ளவேண்டுமென்று கூறியது நாயனார்கூறும் கூற்றன்றாகலான்—அதற்கு எதிர்வேறு ஒன்று கொள்க என நீர் உவரப்படுதே எனஉரையா—என்றார்.

இத்திருப்பாசுரத்தான், இறைவன், நின்றுதங்குமிடம் வேதம் என்றும், வேதசிவாகமங்களும், அதன்பொருள்களும் ஒன்றென்றுகொள்வதே இறைவன் திருவுள்ளப்பாங்கென்றும், இறைவன் திருவுள்ளப்பாங்கின்படியே அவ்விரண்டொழுக்கங்களையும் நீதியாகக்கொண்டு நடந்து இறைவனை மகிழச்செய்தவர் நாயனார் என்றும், வேதசிவாகமங்களை நாயனார் கற்பதிலும், அவைகளின் பொருள்களை யுணர்வதிலும் நாளைப்போக்கினவரென்றும், அவ்விருசெயலையும் தமது நுண்ணுணர்வால் மிகவிரைவாய்ச் சிலபொழுதில் முடித்தவரென்றும், ஓதியுணர்ந்த முறைப்படியே அவ்வழியொழுக சிறிதே நாயனார் இறைவன்முன்னிலையில் தலைப்பட்டன ரென்றும், இறைவன் அவர்பால் வைத்த பேரருளால் அவர்சிறிதேகொண்ட ஒழுக்கநெறியானே அவரை முழுவதுங் கொள்ளைகொள்ளத் துணிந்தனரென்றுங் கூறப்பட்டன. (உ௫)

நல்ல கோவணங் கொடுப்பனென் றுலகின்மேல் நாளும்
சொல்லு வித்ததென் கோவணம் கொள்வது துணிந்தோ
ஒல்லை யீங்குறு வாணிபம் அழகிதே உமக்கென்
றெல்லை இல்லவன் எரிதுள்ளி ளுலென வெகுண்டான்.

(எ - ள்.) (பிரமசாரியார் நீர்சொல்லலாமா என்று சொல்லியதேயன்றி இன்றுஎனது கோவணத்தை மோசவழியால் கொள்வதற்குத் துணிந்துதானே) நாயனாரே நீர் இவ்வுலகத்தில் அடியார்களுக்கு நல்லகோவணத்தைக் கொடுப்பேனென்று, நாள்தோறும் யாவரும் அறியும்படியாக யாவராலும் சொல்லிவித்தது, (ஆஹா) நீர் இவ்விடத்தில் ஒருகணமேனும் ஓயாது விரைந்து விரைந்துசெய்கின்ற வாணியத்தொழில் உமக்குமிக அழகிது என்று, எல்லையில்லாதவனாகிய இறைவனார், நெருப்பானது துள்ளித்துள்ளிச் சுடர்விட் டெறிவதுபோல, கோபித்துக்கொண்டனர் என்பதாம்.

அடியார்களுக்குக் கொடுக்கும்கோவணம் நெய்தகோவணம் என்பார்,— நல்லகோவணம்—என்றார். பிறர்க்குக் கொடுத்தலாகிய ஈகையை யாவரும் அறியச்செய்தல் புகழ் புண்ணியங்களைப் பெறுதற்கேயன்றி அவரிடத்தில் உள்ளபொருளைக் களவினால் கொள்ளை கொள்வதற்கன்று என்பார்—கோவணங் கொடுப்பனென்று, உலகின்மேல் நாளும் சொல்லுவித்தது கோவணங்கொள்வது துணிந்தோ—என்றார். புகழும் புண்ணியமும் தேடுதற்குரிய நல்லூரின்கண்வந்து, அவைகளைத் தேடுவதைவிட்டு, தாய்தந்தைமுதலாயினரை விட்டுப் பிரமசரிய நிலையில் நிற்கும் என்பொருளை இப்படிக்கொள்ளைகொண்டால் இதனால் பழியும்பாவமும் உண்டாகுமல்லவா, இந்தப் புண்ணியக்ஷேத்திரத்தில் இப்படிச்செய்யலாமா? புண்ணியக்ஷேத்திரத்தில் நீர் தேடிவைத்துள்ள பொருளைக் கொடுப்பதைவிட்டு, பிறர்பொருளைக் கொள்ளத்துணிந்தது என்னதருமம். இப்போது நீர்செய்தது வர்த்தகதருமமுமன்றே என்பார்,—ஈங்குறு வாணிபம் அழகிதே உமக்கு—என்றார். இவ்வகையான வார்த்தைகளை மேன்மேல் பற்றித்துள்ளிஎழும் தீயைப்போலக் கோபமானது மேன்மேல் பொங்கியெழக் கூறினார் என்பார்—எரிதுள்ளினால் என வெகுண்டான்—என்றார். இங்ஙனம் வெகுண்டுகூறிய இறைவன் நாயனார்பால் அளவுபடாத அருளையுடையவன் என்பார்—எல்லையில்லவன்—என்றார்.

இத்திருப்பாசுரத்தான்,—எல்லைஇல்லவன் என்றதனால் நாயனார்பால் தனக்குள்ள மிகுந்தகருணையைக் காட்டவந்தவனென்றும்,—எரிதுள்ளினால் என வெகுண்டான் என்றதனால் அருளானது இறைவனுள் அடங்காது மேன்மேல் பொங்கிஎழுந்தது என்றும்,—ஒல்லை ஈங்குறு வாணிபம் அழகிது உமக்கு என்றதனால்—இந்த நல்லூர் என்னும் அரிய சிவக்ஷேத்திரத்தில் நீர் அடியார்களுக்கு அறுசுவையுடன் அன்னம் அளிப்பதும்,

கந்தை, கீள்கோவணம் இவைகளைக் கொடுப்பதும் மிகஅழகு இதுபோலும் யாவர் செய் தாரென்று அவர்செய்யும் அறத்தைப் புகழ்ந்ததென்றும்—நல்லகோவணம் கொடுப்பன் என்று உலகின்மேல் சொல்லுவித்தது என்கோவணம் கொள்வது துணிந்தோ என்றத னல்,—இறைவன் அடியார்களுக்கு நல்லகோவணத்தைக் கொடுத்து அவர்களை மகிழச் செய்து அவர்களால் அப்புண்ணியத்தை சொல்லுவித்தாலல்லாமல் அவ்விறைவன் செய்யவேண்டிய அருளைச்செய்யான் என்னும் அவ்வுண்மையைத் துணிந்து, அது போற்செய்து கோவணத்தைக் கொண்டாரென்று அவர்கொண்டதிறத்தைக் கூறினு ரென்றும் கூறப்பட்டன. கோ—தலைமையாயினுரது, வண்ணம்—தன்மை. எனவே,— நாயனுர் கொடுத்துவந்த கோவணம்—தலையான அன்பின்வண்ணம் எனவும், இறைவன் கொடுத்த கோவணம்—தலையான அருளின்வண்ணம் எனவும் பொருள்கொள்க. (உசு)

நாயனுர் கோபந்தணிய வேண்டல்.

மறிக ரந்து தண்டேந்திய மறையவர் வெகுளப்
பொறிக லங்கிய வுணர்வின ராய்முகம் புலர்ந்து
சிறியஎன் பெரும் பிழைபொறுத் தருளுவீர் அடியேன்
அறிய வந்ததொன் றன்றென அடிபணிந் தயர்வார்.

(எ - து.) (தாம் எப்பொழுதுந் தாங்கியிருக்கும்) மானையொளித்து, (பிரமசாரி களுக்குரிய) தண்டினைத்தாங்கி வந்தவேதியர், (நெருப்புதள்ளினுற்போலும்) கோபிக்க, (நாயனுர் அதுகண்டு) தமது அறிவுநிலைபெறுது ஐம்பொறிகளுங் கலங்கிய வுணர்வின ராய் முகம்வாடி, அவரடியில் வீழ்ந்து வணங்கி (இப்பிழை) அடியேனுடைய புத்திபூர் வகமாய் அறிய வந்ததல்ல (ஆகலின்) சிறியேனுகிய என்னுல் செய்யப்பட்ட பெரும் பிழையாகிய இவ்வொருபிழையைப் பொறுத்தருளல் வேண்டுமென்று வருந்துவாராயி னுர் என்பதாம்.

முகம்புலர்ந்து, அடிபணிந்து, அடியேன் அறியவந்ததன்று, (ஆகலின்) சிறிய என் பெரும்பிழையொன்று பொறுத்து, அருளுவீரென. அயர்வார்எனக் கொண்டுகூட்டுக.

மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல் என்னும் நியாயப்படி கரத்திலேந்தியிருக் கும் மானைமறைத்து மானுடராகிய நாயனுரைப்போல் மாணிடவடிவங்கொண்டும், நாய னுர் செய்துவந்த அறச்செயலில் அவரை நிறுத்தத் தண்டேந்தியும் வந்தனரென்பது தோன்ற—மறிகரந்து தண்டேந்திய மறையவர்—என்ருர். தண்டாகிய செங்கோலை ஏந்தி சிவதருமத்தில் நாயனுரை நிலைபெறச் செய்யவந்த குறிப்பை ஐம்பொறிகளும் கண்டு, சிவபெருமானையும் சிவனடியார்களையும், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிதலாகிய பணியில் நாம் என்னபிழை செய்திருக்கின்ருேமோ அப்பிழைகட்கு என்னதண்டனை செய்வாரோ என்று கலங்கின என்பது தோன்ற—வெகுளப் பொறி கலங்கிய,—என்ருர். தமது அறிவைப் புலன்வழிச்செலுத்தாது, தமது அறிவின்வழிப் புலன்களைச் செலுத்தி ஆண்ட பேரறிவாளர் என்பது தோன்ற—உணர்வினராய் - என் ருர். தற்போதமும் மலங்களின் செருக்குமற்றுச் சிறுத்து, அருட்போதத்தை நாடியிருக் கும் நிலைமை யுடையவர் என்பது தோன்ற—புலர்ந்து சிறிய என்,—என்ருர். நம்மு டையதென் றெண்ணியிருக்கும் தேகேந்திரியப் பிராணுதிகள் யாவும் இறைவனுல் கொ டுக்கப்பட்டனவே யன்றி ஒன்றேனும் நம்முடைய பொருளன்றே. அங்ஙனமிருக்க, அவைகளை நாம் இறைவனுக்கு இதுகாறுங் கொடுத்ததுண்டோ, அந்த வுண்மையை நாம் உணருமாறு இவர் கொடுத்த கோவணம் மறைந்ததுபோலும், என் றுணர்ந்தவ ராய் இப்பெரும்பிழையை நாம் எவ்வகையாய்த் தீர்ப்பது, நமது உடல் பொருள் ஆவி களையும், அவையிற்றின் சார்புகளையும் நாம் இறைவனுக்குக்கொடுக்கும் நாள் எந்தநாள். அவன் ஏற்கும்நாள் எந்தநாள், இப்பொழுதும் இந்தவேதியர் கொடுத்த கோவணத் தைக் கொடுப்பதற்கின்றி இப்பிழைக்கும் ஆளாயினேமே இப்பிழை இவர் பொறுப்

பரோ என்று மிகவும் அஞ்சிக்கூறினர் என்பது தோன்ற—என் பிழைபொறுத்தருளு வீர்—என்றார். இக்கோவணமாலை யொன்றினால் இப்பிழை ஒன்றுதான் நான் அறிய வந்ததன்று, இதுகாறும் சிவனால் கொடுத்துவந்தனவெல்லாம் மாயாவசப்பட்டுப்போ யிற்று என்கிற பல நாட்பிழைகளை நன்றாய் அறிந்தவனாயினன் என்று வருந்தினரென் பதுதோன்ற—அடியேன் அறியவந்தது ஒன்றன்று என்றுஅடிபணிந்து அயர்வார்,— என்றார்.

மறிகரந்து - என்றதனால்,—திருக்கரத்திலுள்ள மானைமறைத்து, நாயனார் என் னும் புமானைப்பிடிக்க மானிடவடிவங்கொண்டு வந்தனரென்றும், தண்டேந்தி - என் றதனால்-நாயனார் எனதெனப்படும் பொருளெல்லாம் தனதேயாக்கிக்கொண்டு அவரைக் குற்றத்தினின்றும் நீக்கி அவரது குணங்கொண்டன ரென்றும், மறையவர் என்றத னால்-நாயனார்பால் செய்யவந்த அருட்செயலைத் திரோதானச்செயலில் மறைத்துச் செய் யவந்தனரென்றும், வெருளப்பொறிகலங்கி என்றதனால்—நாயனாரைப் பொருந்திநின்ற பொறிபுலன் கரணங்களுடைய செயலெல்லாம் அவரைவிட்டு ஓடுமாறு தமது அருள் நோக்கால் நோக்கிக் கலக்கினரென்றும் —உணர்வினராய் என்றதனால்—ஆன்மாக்களைக் கலக்கும் பொறிகள் நாயனார்பால் கலங்கவரவே அவரறிவு அறிவாகியசிவமேயாய் நின்ற தென்றும், புலர்ந்து—என்றதனால் சிவமாகிய நாயனார் அறிவின்கண்ணே அருளுதயந் தோன்றிற்றென்றும், சிறிய என்பிழை பொறுத்தருளுவீர் என்றதனால்—மெய்யர் வெறி யார் மலர்ப்பாதம் மேவக்கண்டும் கேட்டிருந்தும்; (அதுபோல்) செய்வதறியாச் சிறுநாய் போல் ஆயினேன், ஆகலின் அப் பெரும்பிழை பொறுத்தருளல்வேண்டுமென்று வேண் டினரென்றும், அடியேன் அறியவந்தது ஒன்றன்று என்றதனால்—இப்போது நீர் என் னைப்போலும் வந்து நான் செய்யும் செயலைப்போல் கோவணத்தின் வழியாகச் செய்து எனது பொறிகலக்கி, என்னுணர்வைச் சிவமாக்கி என்பிழைபொறுத் தருளல்வேண்டு மென்று வேண்ட வந்த இதுவொன்றும் என்செயலால் வந்ததன்றே இதுவும் உன்செய லாலே என்றும், என அடிபணிந்து என்றதனால்—உலவாக்காலந்தவம் எய்தி உறுப்பும் வெறுத்து இங்கு உனைக்காண்பான், பலமா முனிவர் நனிவாட இப் பாவியேனைப் பணி கொண்டாய், மலமாக் குரம்பை யிதுமாய்க்கமாட்டேன் மணியே யுனைக்காண்பான், அலவாநிற்கும் அன்பிலேன் (நான்) என்கொண்டு ஒழுகப்பெறுவேன் என்று திரு வருளைநாடி வணங்கினரென்றும், அயர்வார் என்றதனால்—புன்மையேனைக் கோவணங் கொண்டாளவந்த ஐயா நீபுறமேபோக விடில், என்னை நோக்குவார் யாரே, நான் என் செய்கேன் என்று சோர்வடைவாரென்றும், பொருள்கொண்டு இறைவனது அருட் செயல் உணரக் கிடக்கின்றமைகாண்க.

இத்திருப்பாசுரத்தான்,— மறிகரந்து தண்டேந்தி மறையவனாய்வந்து, பொறிகலங் கும்படி வெகுண்டது திரோதச்செயலென்றும், அச்செயலால் மாயச்செயலையொழித்து நாயனார் உணர்வினராய், முகப்புலர்ந்து சிறிய என்பிழைபொறுத்து அருளுவீர் அடி யேன் அறியவந்தது ஒன்றன்று என்று அடிபணிந்து அயரச்செய்தது அருட்செயலென் றும் கூறப்பட்டன.

இதனால், முத்தான்மாக்களிடத்து இறைவன் செய்யும் திரோதச்செயலெல்லாம் மாயச்செயலைப்போக்கி, அருட்செயலை மேலிடச்செய்யவுமாம் எனவும், பெத்தான்மாக்க ளிடத்துச் செய்யுந்திரோதச் செயலெல்லாம் மாயச்செயலை வெளிப்படுத்தி அச்செயல் வழியான் ஆணவமலத்தைப் பரிபாகப்படுத்தவுமாம் எனவும் உய்த்துணர்க. (உஎ)

செயத்த கும்பணி செய்வணிக் கோவணம் அன்றி
நயத்த குந்தனம் நல்லபட் டாடைகண் மணிகள்
உயர்த்த கோடிகொண் டருளுமென் றுடம்பினில் அடங்காப்
பயத்தொ டுங்குலைந் தடியிசைப் பல்முறை பணிந்தார்.

(எ - து.) (இப்பிரமசாரியார் நாம்செய்யும் பணியால் மனமகிழவேண்டுமென்று எண்ணியிருந்த நமக்கு அவர் கோபிக்கும்படியான அபராதத்தைச் செய்யவந்ததே என்று மனம் வருந்தினவராய், அவ்வேதியரைப்பார்த்து, யான்செய்த பிழைக்குத் தீர்வாக) யான் செய்யத்தகும் பணியாயுள்ளவற்றில் எதனைத்தேவரீர் திருவுளத்தில் எண்ணுகின்றீரோ அப்பணியை (யாதொரு தடையின்றிச்) செய்வேன், (அடியேன் இப்போது கொண்டுவந்த கோவணமல்லாமல், விரும்பத்தக்கனவாகிய, நல்லபட்டாடைகள் வேண்டுமானாலும், இரத்தினங்கள் வேண்டுமானாலும் அவைகளைக் கோடிகோடியாகக் கொடுக்கின்றேன் அந்த உயர்ந்தனவாகிய பட்டாடை முதலியவைகளை ஏற்றுக்கொண்டருளும் என்று தமது உடம்பினில் அடங்காத அச்சத்தோடும் பதைபதைப் புடையவராய் அவ்வேதியருடைய திருவடிகளில் பலமுறையும வீழ்ந்து வணங்கினாரென்பதாம்.

பொன் மணி முதலியவைகள் ஏனையோர்க்கு உயர்ந்தனவேயன்றிப் பிரமசரிய நிலையுடையோர்க்கு உயர்ந்தனவன்றாகலானும்; அவர்கள் விரும்புவது கோவணம் ஒன்றேயாகலானும், அவ்வொருநிலையுடையார் நமது பிழையை நீக்கத் தாம்மற்றொருபொருளைவிரும்பும் பிழையிற்படுவாரா! படாரேஎன்றும் நியாயத்தை நன்று யுணர்ந்தவ ராகலான் ! உடம்பினில் அடங்காப்பயத்தொடும் குலைந்து அடிமிசைப் பலமுறைப் பணிந்தார் — என்றார்.

அல்லதூஉம், —"பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந், தெரிந்தோம்பித் தேரினும் அஃதேதுணை" என்றும், ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம்படுபாக் கறிந்து" என்றும், ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின், எய்துவர் எய்தாப் பழி" என்றும் கூறியுள்ள தருமநெறியை நன்றாயறிந்தவர் பிரமசாரியார், அந்நெறியை நாமும் அறிந்திருக்கின்றோம். ஆகவே பிரமசரிய நிலையுடையார் முதலியோரிடத்து உண்டாகும் குறைகளை கிரகஸ்தநிலையுடையவர் நீக்கவேண்டுமேயன்றி இவர்கள் அவர்களுக்கோர் குறையுண்டாக்கல் அவர்களுக்கு இழுக்காகும். பிரமசரிய நிலையுடையார் தாம்வேண்டப்படாத பொருளை வேண்டல் அவருக்கு இழுக்காகும். இவ்வுண்மையால், இருவருடைய ஒழுக்கமும் குன்றாவாறு நடத்தவல்ல ஒழுக்கம் இதுவென்று நாம் அறிந்தோமில்லையே என்று அடங்காப்பயத்தொடும் குலைந்தனரென்றலுமாம். மிகவும் பயந்தனராகலின், பிரமசாரியாரைநோக்கி, வருணாச்சிரம ஒழுக்கங்களையும், அவைகளில் தவறுண்டானால் அதற்கேற்ற கழுவாய் (பரிகாரங்)களையும் தேவரீர் நன்றாய் அறிந்திருப்பீர் ஆகலான் இப்பொழுது சொல்லியருளல் வேண்டுமென்று பணிந்தாரென்க.

இத்திருப்பாசுரத்தான்,—நாயனார் பிரமசாரியாரிடத்தில் தமக்குண்டாகிய கோவணப்பிழையை மாற்றிக்கொள்வதற்கான செயல் எச்செயலோ அதனைச் செய்யவே அவாவுள்ளவராய், வேறெச்செயலிலும் எப்பொருளிலும் அவாவற்றவராய் அப்பிரமசாரியரை நோக்கி, தேவரீர் என்னிடத்தில் கொடுத்த கோவணம் பிழைபட்டுப் போனபடியினால், அப்பிழையை யான் நீக்கிக்கொள்ள, விரும்பத்தக்க தனங்கள், நல்லபட்டாடைகள், மணிமுதலானவைகள் என்னிடத்தில் உள்ளன. அவைகளில் எது எது உயர்ந்தனவோ அவைகளில் தேவரீருக்கு எவ்வளவுவேண்டுமோ அவ்வளவுந் தருகின்றேன். அவைகளை ஏற்றுக்கொண்டு என்பிழை பொறுத்தருளல்வேண்டுமென்று பன்முறையும் பணிந்தனரென்று கூறப்பட்டது. (உ௮)

கோவண எடைக்குப் பொருள் கேட்டல்.

பணியும் அன்பரை நோக்கியப் பரம்பொருள் ஆனார்
தணியும் உள்ளத்தர் ஆயினர் போன்றுநீர் தந்த
மணியும் பொன்னுநல் ஆடையும் மற்றும்என் செய்ய
அணியும் கோவணம் நேர்தர அமையும் என்றருள.

(ஏ - து.) பலமுறையும்வணங்கும் நாயனாரைப் பரம்பொருளெனப்படும் பரசிவனாகிய அப்பிரமசாரியார்பார்த்து தமதுள்ளத்தில் உண்டாகிய கோபந்தணியப் பெற்றவர்போல நீர்கொடுப்பதாக வொப்பிய இரத்தினமும் பொன்னும் வஸ்திரமும் மற்றுள்ள பொருள்களும் எனக்கு என்ன பயனைத்தரும்? அங்ஙனமிருக்க நானுடுத்திருக்கும் கோவணத்தின் எடைக்கு ஒத்திருக்கக் கொடுப்பீராகில் (அதுவே எனக்குப் போதுமென்று அருள்செய்ய என்பதாம்.

அன்பரல்லாதார் — இறைவனைப்பணிதல் - அவ்விறைவன்பால் தாம வேண்டும் பொருள்கொள்ள. அன்புடையார் பணிதல் தாம் பெற்றுள்ள பொருளெல்லாம் அவன் கொள்ள. ஆகலின் பிரமசாரியார், நாயனார்பால் அன்புநின்ற நிலையும், பணிதல் என்னும் செயலுக்குரிய செயல்வகையும் கண்டனரென்பது தோன்ற — பணியும் அன்பரை நோக்கி என்றார். முன் எரிதுள்ளினால் என வெகுண்டது மெய்ம்மையாயின், இப்போது தணியும் உள்ளத்தினராயின ரென்பதும் உண்மையாகும், முன் வெகுண்டதாகக்காட்டியதும் போலியே, இப்போது தணிந்ததாகக் காட்டியதும் போலியே என்பது தோன்ற—தணியும் உள்ளத்தராயினர் போன்று—என்றார். வேண்டுதல் என்னும் குணமுடையோர்க்கு மேன்மேலும் விருப்பத்தைக் கொடுக்கத்தக்க பொன்மணி முதலியனவெல்லாம் வேண்டியதே, அவை அவர்களுக்குச் சாதல் பிறத்தலாகிய பயனைச்செய்யும். வேண்டுதல் வேண்டாமையும், சாதல் பிறத்தலையும் அற்ற இறைவனாகிய எனக்கு என்செய்யும் என்பது தோன்ற—நீர் தந்தமணியும் பொன்னும் நல்லாடையும் மற்றும் என்செய்ய—என்றார். நான் பற்றற்றவன் என்பதனை எனது கோவணத்தாற் காட்டுகின்றேன். அஃதேபோல்—பொன் மணி முதலியவற்றில் நீர் பற்றற்றிருக்கும் தன்மையைக் காட்டவல்லராயின் நாம் ஒத்துக்கொள்ளுகிறோம் இதில் ஐயமில்லை என்பது தோன்ற—அணியும் கோவணம் நேர்தர அமையும் என்றருள என்றார். தமது அன்பர்களது பற்றற்ற தன்மையைப் பிரகாசப்படுத்தலே பரம்பொருட்டன்மையென்பது தோன்ற—பரம்பொருளானார்—என்றார்.

இத் திருப்பாசுரத்தான் தாம்—இயல்பாகவே பாசங்களில் நின்றும் நீங்கியிருக்கும் அநாதிமுத்தத்தன்மையாகிய பரம்பொருட்டன்மையும், அஃதேபோல், நாயனார் அன்பரோமெருவி மருவி பாசங்களில் நின்றும் நீங்கியிருக்கும் சீவன்முத்தத்தன்மையும் இவையாமென்று கூறப்பட்டன. (௨௧)

எடைபோடுதற்கு வகைகேட்டல்.

மலர்ந்த சிந்தையர் ஆகிய வணிகரே றனையார்
அலர்ந்த வெண்ணிறக் கோவணம் அதற்குநேர் ஆக
இலங்கு பூந்துகில் கொள்வதற் கிசைந்தருள் செய்தீர்
நலங்கொள் கோவணம் தரும்பரி சியாதென நம்பர்.

(எ - து.) (மணியும் பொன்னும் ஆடையும் மற்றும், கோவணம் நேர்தரக் கொடுத்தால்—என்று பிரமசாரியார் சொல்லியமாத்திரத்தில், வாட்டம் நீங்கிய சிந்தையுடையவராகிய வணிகருட் சிறந்த நாயனார் 'நீர்அணிந்திருக்கும் கோவணத்திற்கு ஒப்பாக நான் கொடுக்கவிருக்கும் ஒளிவீசும் பொன்னுடை முதலியவற்றைத் தேவரீர் கொள்வதற்கு வேறு வெண்மையாகிய நல்ல கோவணமொன்று தேவரீர் இப்போது கொடுக்கவேண்டுமே, அக்கோவணம் கொடுக்கும் வகை ஏதேனும் இருக்கின்றதா? அஃதெப்படி அதனைச் சொல்லாதிருக்கின்றீர்? அதனைச் சொல்லும்' என்று கேட்க, இறைவனாகிய பிரமசாரியார்—

அலர்ந்த வெண்ணிறக்கோவணம் அதற்கு நேராக, இலங்கொள் பூந்துகில் கொள்வதற்கு நலங்கொள் கோவணம் தரும்பரிசயாது? இசைந்தருள்செய்தீர், என நம்பர் எனக் கொண்டு கூட்டுக.

இத்திருப்பாசுரத்தான்,—நாயனார் தம்பொருளெல்லாம் பற்றற்றாராகிய பிரமசாரியார் கொள்வதற்கான திறத்தை அவரையே வினவினாரென்று கூறப்பட்டது. (௬௦)

எடை இடுதற்குக் கோவணங் கொடுத்தல்.

உடுத்த கோவண மொழியநாம் உங்கையில் தரநீர்
கெடுத்த தாகமுன் சொல்லுமக் கிழிந்தகோ வணநேர்
அடுத்த கோவணம் இதுஎன்று தண்டினில் அவிழா
எடுத்து மற்றிதன் எடைஇடும் கோவணம் என்றார்.

(எ - து.) (நாயனாரைநோக்கி) நாம் இப்பொழுது உடுத்திருக்கும் கோவணமல்லாமல், நீர் கொடுக்கும்படியாக உமது கையில் ஓர் கோவணத்தைக் கொடுத்தேனல்லவா? அதனை நீர் காணாமற்போனதாக முன்சொன்னீரே, அந்தக்கிழிந்த கோவணத்திற்குச் சமமாகச் சொல்லப்பட்ட கோவணம் இதுவாகும் என்று கோலில் முடித்துள்ள கோவணத்தை அவிழ்த்தெடுத்து, இந்தக் கோவணத்தின் இடைக்கு ஒப்பாக நீர் கையில் வைத்திருக்கும் கோவணத்தை வையும் என்று கூறினார் என்பதாம்.

இத்திருப்பாசுரத்தான், — பிரமசாரியார் — நாயனாரைநோக்கி நாம் உம்மிடத்தில் கொடுத்த கோவணத்துக்கு ஒப்பானது இந்தக் கோவணம் என்று தண்டினில் கட்டியிருந்த கோவணத்தை அவிழ்த்து, இக்கோவண எடைக்கு எந்தக் கோவணத்தை நீர் வைக்கின்றீரோ அதனை வையும் என்று கூறினார் என்று கூறப்பட்டது. (௬௧)

எடைக்கெடையிட்ட கோவணம் சமமாகாதொழிதல்.

நன்று சாலவென் றன்பர்தாம் ஒருதுலை நாட்டக்
குன்ற வில்லியார் கோவணம் ஒருதட்டில் இட்டார்
நின்ற தொண்டரும் கையினில் நெய்தகோ வணந்தட்
டொன்றி லேயிட நிறைநிலா தொழிந்தமை கண்டார்.

(எ - து.) எடையிடுவதற்குக் கோவணத்தைப் பிரமசாரியார் காட்டியபின்,) அன்பராகிய நாயனார், இது மிக நல்லதாயிற்றென்று, (உள்ளத்துள்ளே சந்தோஷித்தவராய்) ஒரு பெரிய தராசைக் கொண்டுவந்து நாட்டினார்; நாட்டவும், பொன்மலையைக் கையில் வில்லாகவுடையவர், (அந்தத்தராசில்) ஒருதட்டில் தான் அவிழ்த்தகோவணத்தை வைத்தனர். (பிரமசாரியார் வைக்கும் கோவணத்துக்குச் சமமாகக் கொடுக்கத் துணிந்து) நிற்கின்றவராகிய நாயனாரும் தனது கையிலிருக்கும் நெய்த கோவணத்தை மற்றொரு தட்டினில் இட்டனர், (இட்டபோது) அக்கோவண எடைக்குச் சமமாக இருப்பதொழிந்தமையைக் கண்டனர் என்பதாம்.

இவ்வளவு எடையுள்ளதென்று எடையிடக் கூடாத பொன்மலையை அணுவுபோலாக்கினவர் ஓரெடையிலும் எண்ணப்படாத கோவணத்தை 'பொன்னாகிய அம்மேருவின் எடைகொள்ளவைத்த அதிசயந்தோன்ற—குன்ற வில்லியார் கோவணம் ஒருதட்டில் இட்டார்—என்றார். கையினாற் கிழித்த கோவணத்துக்கு கையினால் நெய்த கோவணம் எடையுள்ளதென்று எண்ணி அதனைவைத்தனர் என்பதுதோன்ற—நின்ற தொண்டரும் கையினில் நெய்த கோவணம் தட்டு ஒன்றிலே இட—என்றார். இருவரும் ஒற்றுமைப்பட்டு இரண்டு கோவணத்தை வைத்தும், கோவணத்தை ஏற்றுக் கொண்ட அவ்விருதட்டும் ஒற்றுமைப்பட்டுக் காட்டாமல் ஒப்பிலாதவனது கோவணம் ஒப்பாக வராமலே இருந்தாங்கு இருந்தபடியைக் கண்டனர் என்பது தோன்ற—நிறைநிலா தொழிந்தமை கண்டார்—என்றார்.

அன்பரன்பே - மேலாகக் காட்டுவது அருளுக்கு இலக்கணமாகலின், அருள் ஆட்டு கீழாகவேயிருந்து அன்பின்தட்டை மேலாகக் காட்டிற்று. இறைவன் - அருளைச் சிறிது காட்டினும், அன்பர்கள் - தங்கள் அன்பைச் சிறிதுகாட்டாமல் முழுதுங்காட்டல் இலக்கணமாகலின், அவ் விலக்கணந்தோன்ற - இறைவன் ஒரு கோவணத்தால் சிறிது அருளைக்காட்ட, நாயனார் தமது அன்பை முழுவதும் காட்டினார். அங்ஙனங்காட்டினும் அன்பர் அன்பினையே மேலாகக் காட்டும் எண்ணமுடைய அருட்கோவணத்தட்டு சமமாக மேலெழுந்திராமல் தாழ்ந்தே இருந்ததென்க. (கூஉ)

பலகோவணமிட்டு அதிசயப்படல்.

நாடும் அன்பொடு நாயன்மார்க் களிக்கமுன் வைத்த
நீடு கோவணம் அடையநே ராகவொன் றொன்றாக்
கோடு தட்டின்மீ திடஇடக் கொண்டெழுந் ததுகண்
டாடு சேவடிக் கடியரும் அற்புதம் எய்தி.

(எ - து.) (பிரமசாரியார் வைத்த கோவணத்துக்குத் தான்வைத்த கோவணம் சமமாகாமையைக்கண்டு) கோவணத்தட்டையே நாடுகின்ற அன்புடைய நாயனார், அடியார்கள் மகிழும்படியாக அவர்களுக்குக் கொடுக்க முன்னே அன்போடு வைத்துள்ளதாகிய கோவணங்களெல்லாவற்றையும் (பிரமசாரியாரிட்ட கோவணத்தின் எடைக்குச்) சமமாகும்படி ஒவ்வொன்றாகத் தராசுதட்டின்மேல் இட்டும், இடஇட அக்கோவணங்களையெல்லாம் அத்தட்டானது வாங்கிக்கொண்டு சமமாக நில்லாமல் மேலெழுந்திருப்பதைப்பார்த்து, நடனஞ்செய்தருளும் திருவடிக்கு அன்புபூண்டவராகிய நாயனாரும் ஆச்சரியமடைந்து என்பதாம்.

பிரமசாரியார் கோவணவழக்கு நீங்கி அமுதுண்ணவேண்டும் என்னும் அன்பினை மேற்கொண்டிருப்பவராதலால்—அன்பொடுநாடும்,—என்றார். அடியார்களெல்லாம் தாமாகவே இருக்கின்ற இறைவருக்கு ஒருகோவணம் போதாதாகலான்,—நாயன்மார்க்கு அளிக்க முன்வைத்த நீடுகோவணம் அடைய நேராக ஒன்றொன்றாக் கோடுதட்டின் மேல் இடஇடக்கொண்டு,—என்றார். பலகோவணங்களை இடப்பெற்ற தட்டினை ஒரு கோவணத்தோடிருக்கும் தட்டானது கண்டு மேலெழுந்திருக்கவேண்டியது முறையாயிருக்க, அம்முறைபிறழ்ந்து, ஒரு கோவணத்தட்டினைப் பலகோவணத்தட்டு கண்டு மேன்மேல் எழுந்திருந்தது, அதிசயிக்கத்தக்க அதிசயமாகலான்,—எழுந்தது கண்டு அற்புதம் எய்தி—என்றார். ஒருகாலை ஊன்றியும், ஒருகாலை எடுத்தும் ஆடுகின்ற அருளாடலைக் காண்கின்ற நாயனாருக்கு ஒரு கோவணத்தட்டைக் கீழிருத்தியும், பலகோவணத்தட்டை மேலெடுத்துக் காட்டும் இம்மாய ஆடலையுங் காட்டத் தொடங்கினாராகலான்—ஆடுசேவடி—என்றார். (கூகூ)

பட்டுப்பொதி துகிற்பொதி முதலியவைகளை இடல்.

உலகில் இல்லதோர் மாயையிக் கோவணம் ஒன்றாக்
கலகில் கோவணம் ஒத்தில என்றதி சயித்துப்
பலவு மென்றுகில் பட்டுடன் இட்டிடவுயர
இலகு பூந்துகில் பொதிகளை எடுத்துமே லிட்டார்.

மானத்தைப்

...கோவணத்திற்கு

(எ - து.) அற்புதமெய்திய நாயனார் பிரமசாரியார் இட்ட கோவ இனிச் சொல்ல அளவில்லாத கோவணத்தை நாம்வைத்தும் இடைகொள்ளாமற் றாகிலும், எங்கள் என்ன உலகின்கண் இல்லாததோர் மாயமாயிருக்கின்றது. என்ன அ இங்கு நாம்இனி ஆச்சரியமடைந்து, இனிச்சமமாகப் பார்க்கவேண்டிய காரணமொழி (கூஎ)
தைப்பார்த்து ஆவதென் என்று கோவணமுட்டைகளைப் பார்க்கு

ஒன்றும் இல்லாமையால், மென்மையாகிய நூலாடைகளோடு பட்டுகளையும், ஒன்றொன்றாக இட்டனர்; இட இட மேலெழுந்தது, (அதனைக்கண்டு) நல்ல உயர்ந்த ஆடைப் பொதிகளை எடுத்து அந்தத் தட்டின் மேலிட்டனர் என்பதாம்.

சுத்தமாயாபுவனத்தில் உள்ளவர்க்கும், சுத்தாசுத்த மாயாபுவனத்தில் உள்ளவர்க்கும் அசுத்தமாயாபுவனத்தில் உள்ளவர்க்கும் இவ்வருண்மாயை இறைவன் காணச்செய்த தில்லை என்பது தோன்ற—உலகில் இல்லதோர் மாயை—என்றார். (௬௪)

முட்டில் அன்பர்தம் அன்பிடும் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்றதட் டருளொடும் தாழ்வுறும் வழக்கால்
பட்டொ டுந்துகில் அநேககோ டிகளிடப் பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத் தட்டு.

(எ - து.) அன்பிற் குறைபடுதலை யறியாத நாயனார் (தமது அன்பினால்) கோவண முதலாக இடும் தட்டானது, அன்பினையே இடும் தட்டாகும், எனவே இவர் இட்டதட்டு அன்பினை வாங்கிக்கொள்ளும் தட்டெனப்படும் (அந்த அன்பென்னும்) தட்டுக்கு, இறைவனாகிய பிரமசாரியார் இட்டகோவணத்தட்டு, அருள்மட்டோடும் நின்றதட்டாகும், எனவே, அன்புமேலிடுந்தோறும் அவ்வன்பின் திறத்தை யெல்லாம் தான் ஆதாரமாய் நின்றுஎற்றுக்கொள்ளும் முறைமையை யுடைத்தாகும், அம்முறைமையினால், பத்தராகிய நாயனாருடைய தட்டானது அன்பென்னும் தட்டாகலான், அதில் அவ்வன்பர் பட்டாடைகளோடு நூலாடைகளையும் கோடி கோடியாக இடஇட மேலெழும் முறைமையை உடைத்தாயிருந்தது. பிரமசாரியார் இட்ட ஒருகோவணத்தட்டு தாழ்ந்திருக்கும் முறைமையை யுடைத்தாயிருந்தது என்பதாம்.

நாயனார் ஆடைமுதலியவற்றைத் தட்டில் இடுந்தோறும் அன்பானதுமுன்வைத்த ஒருகோவணத்தோடு நில்லாது மேன்மேல் வளர்வதனாலும், அஃதேபோல், இறைவர் தன்னருளைத் தான்வைத்த ஒருகோவணத்தளவில் அல்லாமல், அவ்வொருகோவணத்திலேயே தன்னருளெல்லாம் இறுத்தலால், இறைவர் கோவணத்தட்டு மேலெழுவதற்கில்லாமற்கிடந்தது. அன்பர்தட்டானது, இறைவர்தட்டு தன்னைக்கண்டு அருளால் அழுந்துதலால் அதனைக் காணுந்தோறும் அன்பேமேலிட்டு கீழ் அழுந்துவதற்கில்லாமல் மேல் எழுவதில் இருந்தது. ஆகலான்,—முதல்வர் இட்டகோவணத்தட்டு தாழ்ந்து, பட்டொடுந்துகில் அனேககோடிகள் இட்ட அன்பர்தம் தட்டு தாழாது மேலிட்டதென்க (௬௫)

ஆன தன்மைகண் டடியவர் அஞ்சியந் தணர்முன்
றூந றுந்துகில் வர்க்கநூல் வர்க்கமே முதலாம்
மானம் இல்லன குவிக்கவும் தட்டின்மட் டிதுவால்
ஏனை என்தனம் இடப்பெற வேண்டுமென் றிறைஞ்ச.

(எ - து.) பிரமசாரியார் இட்ட கோவணத்தட்டுத் தாழ்ந்திருக்கும் நிலையிலேயும், தாம் மூட்டை மூட்டையாக இடுந்தட்டு மேலெழுந்திருக்கும் நிலையிலேயும் இருப்ப ஒருதிட்டின்மையை நாயனார்கண்டு [illegible] அஞ்சினவராய், பிரமசாரியார் முன்னேவந்து கோவணம் எனக்கச்சி [illegible], நூல்வர்க்கங்களுமாகிய எல்லாமும் இவ்வளதொண்டரும் கை [illegible] தட்டில்குவித்தேன், குவித்தும், இந்தத்தட்டும் ஒற்றுமைப்பட [illegible] அக்கோவண எடைக்கு ஒப்பாகப் போவதில்லை. இதுகொண்ட அவ்விட [illegible]ல்லை, ஆகலான் இனி என்பாலுள்ளன பொன்மணி முதலியஒப்பாக வராமலே [illegible]வுகளைத்தான் இனித்தட்டில் வைக்கவேண்டும். அதற்குத் தேவரீர் திறைநிலா தொழிந்தவேண்டுமென்று வணங்க ஏன்பதாம்.

பிரமசாரியார்—கொடுவென்று கொடுத்தகோவணமும் நம்மைமாயஞ்செய்தது. எடையிடு என்று தட்டில் வைத்த இக்கோவணமும் அதனிலும் பெரியமாயஞ்செய்கின்றது. இங்ஙனமான மாயக்கோவணங்களை எங்கு சம்பாதித்தனரோ நானறியகில்லேன். முன் மாயஞ்செய்த கோவணத்தை என்கையில் இப்பிரமசாரியார் கொடுக்கும்போது " ஒக்கு கோவணப் பெருமை உள்ளவாறு உமக்கே, ஈங்கு நான்சொலவேண்டுவதில்லை, என்று சொன்னது இப்பொழுது வெளியாயிற்று. அஃதாவது,—இங்ஙனம் செய்வதாகிய மாயத்தின் உண்மையை நான்சொல்ல வேண்டுவதில்லை, நீயே அறியப்போகின்றாயென்று சொன்னது போலாயிற்று. இது என்னமாயமென்று அஞ்சினாரென்பார்,—ஆனதன்மைகண்டு அடியவர் அஞ்சி,—என்றார். "எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப், பொய்யாவிளக்கே விளக்கு" என்ற பொய்யாமொழிப்படி, எப்பொருள்வைத்தாயினும், எடையொப்பு செய்யவேண்டியது உமதுவாய்மையன்றோ, ஆகலான்கோவணவர்க்கம் போயினும், நூல்வர்க்கம் போயினும், துகில்வர்க்கம் போயினும்,நமது சொல்வர்க்கம்போதல் முறையன்று. இனி. தனவர்க்கங்களை இட்டாயினும் எடையொப்புச் செய்யவேண்டுமென்று உள்ளத்துள்ளே எண்ணி, பிரமசாரியார், அவ்வெண்ணத்துக் கிசையவேண்டினாரென்பார்—ஏனையென்தனம் இடப்பெறவேண்டும் என்று இறைஞ்ச—என்றார். (௬௬)

பொன் வெள்ளி நவமணி முதலியவை இடல்.

மங்கை பாகரா மறையவர் மற்றதற் கிசைந்தே
இங்கு நாமினி வேறொன்று சொல்லுவ தென்கொல்
அங்கு மற்றுங்கள் தனங்களின் ஆகிலும் இடுவீர்
எங்கள் கோவணம் நேர்நிற்க வேண்டுவ தென்றார்.

(எ - து.) உமைபங்களாகிய பிரமசாரியார், இனிப் பொன்முதலிய திரவியங்களை இடுவதற்குக் கட்டளைசெய்யவேண்டும் என்று நாயனார் செய்தபிரார்த்தனைக் கிசைந்தவராய், (அவரைப் பார்த்து,) இங்கு இவ்விஷயத்தில் இனி நாம்வேறொன்றும் சொல்லவேண்டிய அவசியம் என்ன இருக்கின்றது. நீர் இடுவதாகிய அந்தத்தட்டில் பொன், மணி முதலியவைகளினாலாகிலும், வேறு எந்தப்பொருளினாலாகிலும் எடை ஒப்பாகும்வரையில் இடவேண்டிய கடமை உம்முடையது. ஆகலின் எதனையேனும் இடுவீர், எங்கள் கோவணத்திற்கு நேராக நிற்கவேண்டுவ தொன்றுதான் எங்களுக்கு வேண்டுவதென்று கூறினார் என்பதாம்.

இறைவன் பிரமசாரியாய் மறைந்துவரினும் நாயனார்பால் வைத்த அருளை மறவாதவர் என்பார்,—மங்கைபாகராம் மறையவர்,—என்றார். மானம் (அளவு) இல்லாமல் எடையொப்பாக நூலுந் துகிலும் கொடுத்தும், சொல் (மானம்) அளவு நிரம்பாமையால் அந்தமான குற்றத்தை நீக்கிக் கொள்ள துகிலோடு போகாமல் பொன் மணிமுதலியவற்றையுங் கொடுக்கத் துணிந்த குணத்தை நாயனார் கொள்ளவே, அக்குணத்துக்கேற்பத் தாமும் ஒப்புக்கொள்ளும் குணத்தைக் கொண்டன ரென்பார்—மற்றதற்கு இசைந்தே,—என்றார். சொல்மானத்தைப் பெரிதாக எண்ணாமல் பொருள்மானத்தைப் பெரிதாக எண்ணுகின்றவரிடத்து அப்போ தப்போதும் பலசொல்லைச் சொல்லவேண்டுமேயன்றிப் பொருள்மானத்தைப் பெரிதாக எண்ணாமல், சொல்மானத்தைப் பெரிதாக எண்ணும் உம்மிடத்தில் நீர் இடும்கோவணம் என்னுடைய கோவணத்திற்கு நேர்நிற்கவேண்டு மென்று முன் சொல்லிய அச்சொல் அல்லாமல் இனிச் சொல்ல வேண்டிய சொல் வேறில்லை என்பார்—அங்கு மற்றுங்கள் தனங்களி னாகிலும், எங்கள் கோவணம் நேர்நிற்க இடுவீர் (என்று) வேண்டுவது (அல்லது) இங்கு நாம்இனி வேறொன்று சொல்லுவது என்கொல்—என்றார். (௬எ)

நல்ல பொன்னொடும் வெள்ளியும் நவமணித் திரளும்.
பல்வ கைத்திறத் துலோகமும் புணர்ச்சிகள் பலவும்.
எல்லை யில்பொருள் சுமந்தவர் இடஇடக்கொண்டே
மல்கு தட்டுமீ தெழுந்தது வியந்தனர் மண்ணோர்.

(எ - து.) (நீர் எதையேனும் இடும் எங்கள் கோவண எடைக்கு ஒப்பாகவேண்டிய தொன்றுதான் என்றுசொல்லிய மாத்திரத்தில் நாயனார்) மாற்றுயர்ந்த பொன்னொடு வெள்ளியும் நவரத்தினங்களும் தாம்பிரமுதலிய பலவகையான உலோகங்களும், அவற்றைக் கலந்த வெண்கலமுதலிய பலவும், ஆகிய எல்லாப்பொருள்களையும், சுமந்து சுமந்து வந்து நாயனார்தட்டில் இடஇட அவைகளையெல்லாம் நிரம்பக்கொண்ட அத் தட்டானது தாங்கிக்கொண்டு, தாழாது முன்னையினும் மேலெழுந்தது, உலகினரெல்லாம் அதிசயத்தை யடைந்தனர் என்பதாம்.

மண்ணோர் வியந்தனர் எனக்கூட்டுக.

நாயனார் - அதிசயிப்பதைவிட்டு, "எங்கள் கோவணம் நேர்நிற்கவேண்டுவது" என்று பிரமசாரியார்கூறிய சொல்லில் ஊக்கமுடையவரா யிருந்தனரென்பார்—எல்லையில்பொருள் சுமந்து வந்து இடஇட - என்றார். எல்லாப்பொருளையும் வாங்கித் தாங்கும் தட்டு இறங்குவதொழிந்து, மேலெழுந் திருப்பதையும், ஒருபொருளையும் தாங்காது ஒருகோவணத்தையே தாங்கித் தாழ்ந்தே யிருப்பதையும் திருவிழாவுக்குக் . கூடியபல தேசத்தினரும் எங்குங் கண்டறியாத அதிசயமென்று அதிசயித்தனரென்பார்,—மண்ணோர் வியந்தனர் - என்றார். (கூஅ)

தவநி றைந்தநான் மறைப்பொருள் நூல்களால்,சமைந்த
சிவன்வி ரும்பிய கோவணம் இடும்செழுந் தட்டுக்
கவனி மேலமர் நீதியார் தனமெலாம் அன்றிப்
புவனம் யாவையும் நேர்நிலா என்பது புகழோ.

(எ - து.) சிவபெருமானால் விரும்பப்பட்ட புண்ணியங்களெல்லாம் நிறைந்துள்ள நான்குவேதங்களின் பொருளாகிய நூல்களால் செய்யப்பட்ட கோவணத்தை இட்ட செழுமையாகிய தட்டினுக்கு, இவ்வுலகில் அமர் நீதியாரென்பவர், தமது தனங்களே யல்லாமல், புவனங்களை யெல்லாம் எடுத்தெடுத்து வைத்தாலும், சமமாக நில்லாதென்பது ஓர்புகழாகுமா என்பதாம்.

சிவன்வைத்த கோவணம் அவ்விறைவனால் விரும்பப்பட்ட மெய்ப்பொருளாகிய அழிவிலாப்பொருளுடைய மறைக்கோவணமாகலின் அதனை யேந்தியதட்டு பெரும் பாரமுடைத்தாயும், நாயனாரிட்ட பொருளெல்லாம் பொய்ப்பொருளாகிய அழிவுடைப் பொருளாகலின் அதனையேந்தியதட்டு பாரமில்லாததாயும் ஆயிற்று. அல்லதூஉம் மெய்ப்பொருள் - பொய்ப்பொருளுக்குச் சமானமாக எழுந்திராதென்பதும், பொய்ப் பொருள் எவ்வளவாயினும் - மெய்ப்பொருளொன்றுக்குச் சாமானமாக நில்லாதென்பதும் தோன்ற,—சிவன் விரும்பிய கோவணம் இடும்தட்டுக்கு, தனமெலாம் அன்றிப் புவனம் யாவையும் நேர்நிலா என்பது புகழோ,—என்றார். (கூகூ)

தானும் தன்மனைவியும் மகனும் துலையிலேற வேண்டல்.

நிலைமை மற்றிது நோக்கிய நிகரிலார் நேர்நின்
றுலைவில் பல்தனம் ஒன்றொழி யாமையுந் தொழிந்தேன்
தலைவ யானுமென் மனைவியும் சிறுவனும் தகுமேல்
துலையில் ஏறிடப் பெறுவதுன் அருளெனத் தொழுதார்.

(எ - து.) மேலெழுந் தோங்குவதாகிய நிலையிலே நிற்பதாகிய இதனைப் பார்த்திருந்த நாயனார், பிரமசாரியார் எதிரே போய்நின்று இதுகாறும் குறைவில்லாமல் வளர்ந்துவந்த பலவகைப்பட்ட திரவியங்களெல்லாம் ஒன்றேனும் விடாமல் இத்தட்டில் வைத்து இன்று ஒன்றும் இல்லையாயினேன். எனது இறைவனே! இனி இருப்பன யானொருவன்; எனது மனைவியொருத்தி; என்மகனொருவன்; எங்களையும் எடையாக இடுவதற்குத் திருவுள்ளம் இசையும் பக்ஷத்தில், இந்தத் தராசுதட்டில் ஏறுவோம்: அங்ஙனம் ஏறிடப் பெறுவது உனது அருளாகும் என்று வணங்கினார் என்பதாம்.

பொன்முதலிய பொருள்களைப் பொருளாகக் கருதாது, நிறைமொழி மாந்தராகிய பிரமசாரியாரது மறைமொழியை நிறப்புதலே, பொருளாகக்கருதி அப் பொன்முதலிய பொருள்களை நிறையில் நிறுக்கத் துணிந்தனராகலின்,—நிகரிலார்,—என்றார். வேதப்பொருளாகிய நூற்பொருளே நிலையுடைப் பொருளென்றும், உலகப்பொருளாகிய செல்வப்பொருள் நிலையிலாப் பொருளென்றும், நேராகநின்று காட்டுகின்றவராகிய இறைவன்முன் - இருவினையும் நேர்நிற்கப் பெற்றவராகிய நாயனாரும் இருவினைச் செயலற்றுத் தன்னைக்கொடுக்கத் தலைப்பட்டு நேர்நின்றனர் என்பார் - நேர்நின்று - என்றார். எமதிறைவனே! தேவரீர் நேராகவந்து என்னைப்பற்றியிருந்த மும்மலப்பற்றையும் ஒழித்தருளினீர். அஃதேபோல் நானும் அறவேயொழிந்தேன் என்பார்- தலைவில்பஃறணம் ஒன்றொழியாமை யுய்த்தொழிந்தேன் - என்றார். அம்மூன்றையும் ஒழித்த உமக்கு என்னையும், என்மனையாட்டியையும், என்மகனையும் கொடுக்கத் துணிந்திருக்கின்றேன். ஆகலின் என்னால் கொடுக்கப்பட்ட அசரப்பொருள்களை இத்தட்டின் வழியாக ஏற்றுக்கொண்டது போல், சரப் பொருள்களாகிய எங்களையும் ஏற்றுக்கொண்டருளல்வேண்டுமென்பார் - யானும், என்மனையும் சிறுவனும் துலையில் ஏறிடத்தகுமேல், ஏறுகின்றோம். தேவரீர் எங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனதுவேண்டுகோளின்படி தேவரீர் பெறுவது உன்னருள் எனத் தொழுதார் - என்றார். (௬௦)

பிரமசாரியார் மூவருந்துலையிலேற இசைதல்.

பொச்ச மில்லடி மைத்திறம் புரிந்தவ ரெதிர்நின்
றச்ச முன்புற வுரைத்தலும் அங்கண ரருளால்
நிச்ச யித்தவர் நிலையினைத் துலையெனுஞ் சலத்தால்
இச்ச ழக்கினின் றேற்றுவார் ஏறுதற் கிசைந்தார்.

(எ - து.) பொய்மையில்லாத அடிமைத்திறத்தை எப்பொழுதும் செய்தவராகிய நாயனார் தாம் இறைவனுடைய திருவருளால், நாங்கள்மூவர்தாம் உள்ளேம் துலையிலேறுதற்கு, திருவுள்ளம் இசைதல்வேண்டும் என்று பிரமசாரியார் எதிரேநின்று அச்சத்துடன் சொல்லவும, அப்பிரமசாரியார், நாயனாரது அவ்வுண்மைநிலையைத் துலையென்னும் ஓர்வியாஜத்தினால் இந்தநிலையில்லாத உலகவாழ்வினின்றுமேலேற்றும் கருத்துடையராய் (அவர் செயலுக்கிசைந்தனர் நாயனாரும்) ஏறுதற் கிசைந்தனர் என்பதாம்.

பொச்சமில் அடிமைத்திறம் புரிந்தவர், அருளால் நிச்சயித்(ததனை) அங்கணர் எதிர்நின்று, அச்சமுன்புற உரைத்தலும், அவர் (நாயனாரது) நிலையினைத் துலையெனும் சலத்தால், இச்சழக்கினின்று ஏற்றுவார் (இசைந்தார், நாயனார்) ஏறுதற்கிசைந்தார் எனக் கொண்டு கூட்டுக. இசைந்தார் என்றதனை - இறைவனாரிடத்தும், நாயனாரிடத்தும் கொள்க.

அடிமையைப் பொய்ப்படுத்தவல்லன மும்மலங்களாயிருக்க, அம்மும்மலங்களானும் பொய்ம்மைப்படாமல் தனது அடிமையைத் திறமாகச்செய்தன ரென்பார்,—பொச்சமில் அடிமைத்திறம் புரிந்தவர்,—என்றார், மனையாட்டியுடனும், மகனுடனும் துலையேறத் துணிந்தநாயனார் - பிரமசாரியார் இட்டகோவணமோ ஒன்று. அதற்கு

நாம் இட்டபொருள்களோ பல. எவ்வளவு பொருள்களும் எடைகொள்ளாமல் போன மைக்குக் காரணம் யாதென்று ஆராய்ந்து அதனுண்மை யுணர்ந்து நிச்சயித்தனர் என்பார் - நிச்சயித்து - என்றார். அந்த நிச்சயமாவது - "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம், நாம்தேடிய பொருளாக்கம்" என்று துணிந்ததேயாம். அஃதாவது - அந்த ஒருகோவணம் அருளோடும் அன்போடும் கூடியுள்ளவரால் இடப்பட்டது. ஆகவே அது நற்பொருளாய் மலைபோல் பாரங்கொண்டது. அவ்வொன்றுக்கு நாம் இட்டஇவ்வளவு பொருளும் அருள் அன்பு என்னும் நன்றியில்லாத பொருள். ஆகவே - பாரங்கொள்ளாமல் பஞ்சிப்பொதிபோலாயிற்று என்றுணர வந்ததேயாம்.

அங்ஙனம் உணரவந்தமையான் - பாரமுடைய இவ்வளவு பொருளையும் பஞ்சிப் பொதிபோ லாக்கியது பாவமன்றோ? அப்பாவத்தை யுடையோம் நாமன்றோ? பெரும்பாவமுடைய நாம் இத்துலையில் ஏறின் நாமும் பஞ்சிப்பொதிபோல் ஆவோமென்பதில் ஐயமில்லை. அங்ஙனமாயின் பின்னர் நாம்செய்யுஞ்செயல் என்னையோ வென்னும் அச்சத்துடன் தமதெண்ணத்தைக் கூறினரென்பார் - எதிர்நின்று அச்ச முன்புற உரைத்தலும் - என்றார். உள்குவார் உள்ளத்துள் இருக்கும் இறைவன் நாயனார் உள்ளுவதெல்லாம் உணர்ந்து மிக்ககருணையுடையவராய் அவரது உண்மைநிலையினை உணர்த்தவந்த தமது உண்மை அருள்நிலைமையினை வெளியாக்க, நாயனார் வேண்டியவாறே இசைந்தனர் என்பார் - அங்கணர் அருளால் அவர் நிலையினைத் துலையெனும் சலத்தால் இச்சழக்கின்நின்று ஏற்றுவார் இசைந்தார் - என்றார். சாரசரங்களை யெல்லாம் உடைமையாக வுடையவர் தம்மையும் உடைமையாகக் கொள்ள இசையவே, நாயனார் கவலையற்றவராய்த் தாம் எண்ணிச்சொல்லியபடியே துலையில் ஏறுதற் கிசைந்தனரென்பார் - ஏறுதற்கிசைந்தார் - என்றார். (௬௧)

மூவரும் துலையை வலம் வருதல்.

மனம கிழ்ந்தவர் மலர்க்கழல் சென்னியால் வணங்கிப்
புனைம லர்க்குழன் மனைவியார் தம்மொடு புதல்வன்
தனையு டன்கொடு தனித்துலை வலங்கொடு தகவால்
இனைய செய்கையில் ஏறுவார் கூறுவார் எடுத்து.

(௭ - ள்.) மலர்முடித்த கூந்தலையுடைய மனைவியாரோடுதம்புதல்வனையும், தம்முடன் கொண்டுமனமகிழ்ச்சியோடு, பிரமசாரியாருடைய திருவடிகளைத் தலையால் வணங்கிப், (பின்னர்) ஒப்பில்லாத துலாக்கோலைப் பிரதக்ஷணமாகவந்து, தகுதியுடன் இவ்வண்ணமான செய்கையினாலே தராசுத்தட்டில் ஏறுவாராகிய நாயனார், (இஃதொன்று) எடுத்துக்கூறுவார் ஆயினார் என்பதாம்.

புனைமலர்க்குழன்மனைவியார் தம்மொடுபுதல்வன்தனை யுடன்கொடு,மனமகிழ்ந்து, அவர்மலர்க்கழல் சென்னியால் வணங்கி, (பின்னர்) தனித் துலைவலங்கொடு தகவால், இனையசெய்கையில் ஏறுவார் எனக்கொண்டு கூட்டுக.

ஞானாசிரியர்—ஒருசொல்லால் நன்மாணாக்கனது உடல்பொருள் ஆவிகளை ஒருங்கே கொள்வதுபோல், இப்பிரமசாரியார் ஒருகோவணத்தால் நம்முடைய உடல் பொருள் ஆவிகளை ஒருங்கே கொள்ளவந்தனரே இது நமது புண்ணியத்தின் மிகுதியினாலோ இறைவனருளின் மிகுதியினாலோ என உள்ளமகிழ்ந்து அடிபணிந்தனர் என்பார்— புனைமலர்க்குழல் மனைவியார் தம்மொடு புதல்வன்தனையுடன்கொடு மனமகிழ்ந்து அவர் மலர்க்கழல் சென்னியால் வணங்கி—என்றார், துலாக்கோல் தன்னுடையதாயிருந்தும் தானிடம் பொருளைப் பாரமாகக்காட்டாது, பிரமசாரியார் கோவணம் ஒன்றைப் பாரமாகக்காட்டி அவர் பரமே ஆய்விட்டபடியால், அத்துலையையும், பிரமசாரியாரையும் வணங்கிப் பிரார்த்தித்ததுபோலும் இனி எங்களையேனும் பாரமாகக்கொண்டு

கோவணத்தட்டுக்குச் சமமாக நிற்கக்கடவாய் என்று பிரார்த்தித்தன ரென்பார்—தகவால் தனித்துலை வலங்கொடு—என்றார். பிரமசாரியாரைப் பிழைபொறுக்கும் பொருட்டு வணங்கியும், துலாக்கோலைப் பாரமாகக் கொள்ளும்பொருட்டு அதனை வலம்வந்து பிரார்த்தித்தும், பின்னர் தமது உண்மையைக்கூறித் தெய்வத்தையும் பிரார்த்திக்கக் கருதினாரென்பார்—இனையசெய்கையில் ஏறுவார் எடுத்துக் கூறுவார்—என்றார். (சஉ)

தங்களுண்மையைக்கூறி அஞ்செழுத்தோதிதுலையில் ஏறுதல்.

இழைத்த அன்பினில் இறைதிரு நீற்றுமெய் அடிமை
பிழைத்தி லோமெனில் பெருந்துலைநேர் நிற்க என்று
மழைத்த டம்பொழில் திருநல்லூர் இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத் தோதினார் ஏறினார் தட்டில்.

(எ-து.) (எடுத்துக் கூறவந்தது யாதெனின்) நாங்கள் அன்பினாலே செய்து வந்த இறைவனது திருநீற்றின் மெய்யடிமையினின்று (இதுகாறும், தவறில்லாமல் இருந்தோமாகில், இப்பெரிய துலையின் தட்டானது ஏற்றத்தாழ்வில்லாமல் நிற்கக் கடவதென்று கூறி, மேகங்கள் தவழும் விசாலமாகிய பொழில்கள்சூழ்ந்த திருநல்லூர்ப் பெருமானைவணங்கி, தமதுள்ளத்தில் நிறைந்துள்ள ஸ்ரீபஞ்சாக்கரத்தைச் சொல்லி தராசுதட்டில் ஏறினார் என்பதாம்.

இறைவனைக்காட்டும் பிரமாணப்பொருளாயுள்ளது நீறு என்பது தோன்ற—இறைதிருநீறு—என்றும், அத்திருநீறு உடையாரியாரோ, அவருக்கு என்னை யடிமை யாக ஆக்குவதிலும், என்னுடைமையை அவருடைமையாக ஆக்குவதிலும், பொய்யுமை யில்லை என்பதும், அன்புடைமையுள்ளது என்பதில் பிழையில்லை என்பதும் தோன்ற - திருநீற்று மெய்யடிமை பிழைத்திலோம்—என்றும், என்னால் இத்துலையில் இட்ட பொருளெல்லாம் இடைகாட்டாது பொய்மையா யொழியினும், யான் இப்போது சொல்லியது வாய்மையேயாயின் அது எடைகாணாது இடர்ப்படும் எனக்கு எடைநிற்க வேண்டுமென்பது தோன்ற - எனில் பெருந்துலை நேர்நிற்க - என்றும், எனது வாய்மையினுள்ளும் என்னுள்ளும் இருப்பவன் நல்லூர் இறைவன் ஆகலின் அவனும் உடன் நிற்கவேண்டுமென்பது தோன்ற - நல்லூர் இறைவரை வணங்கி - என்றும், எனது மெய்யடிமை நிலைபெறவும், துலை நேர் நிற்கவும், இறைவன் உடன் நிற்கவும் செய்யவல்லது பஞ்சாக்கரமென்பது தோன்ற - அஞ்செழுத்தோதினார் - என்றும் கூறப்பட்டன. (சங)

மண்டு காதலின் மற்றவர் மகிழ்ந்துட னேற
அண்டர் தம்பிரான் திருவரைக்கோவணம் அதுவும்
கொண்ட அன்பினில் குறைபடா அடியவர் அடிமைத்
தொண்டும் ஒத்தலால் ஒத்துநேர் நின்றதத் துலைதான்.

(எ-து.) (நாயனார்-தட்டில் ஏறும்பொழுது) அவரது மனைவியாரும் புதல்வனும் (அவரைப்போலுமே) மகிழ்ச்சி யுடையவராய் அவருடன் ஏறினார்கள். (ஏறவும்) தேவர்கள் முதல் வணங்கிய பிரமசாரியார் அரையில் உடுக்கும் கோவணத்தைவைத்த அருளாகிய தட்டும் நாயனார் தாம்கொண்ட அடியவரது அடிமைத் தொண்டின்திறத்தில் குறைபடாத அன்பும் ஒத்தபடியினாலே, (நாயனாரது அன்பாகியதட்டும்) சமப்பட்டு அத்துலையானது எடையொத்து நின்றது என்பதாம்.

அடியவர், கொண்ட அடிமைத்தொண்டும் அன்பினிற் குறைபடாது ஒத்தலால், அத்துலைதான் ஒத்துநேர்நின்றது எனக்கொண்டுகூட்டுக.

அருளின் அளவைக்காட்டுவது-அன்பும், அன்பின் அளவைக்காட்டுவது அருளும் ஆகலான்—கோவணம் அதுவும், அன்பினிற் குறைபடா அடியவரடிமைத்தொண்டும் ஒத்தலால் ஒத்துநேர்நின்றது அத்துலைதான் என்றார். எனவே அன்பை விளைவிப்பது அருளும், அருளை வருவிப்பது-அன்பும் ஆகலின் என்க. அஃதாவது, அருளில்லையாயின் அன்புவிளையாது, அன்பு விளையாதாயின்-அருள்வராது என்பதாம்.

நாயனாரும், அவர்மனைவியாரும் மகனும் ஒத்த அன்பினரே; அவரால் தேடப் பட்டபொருள்களும் ஒத்த அன்புருவே என்று வெளிப்பட்டபடியான் அத்துலை ஒத்து நேர் நின்றது என்பதுமாம்.

நன்றுசால என்னுந் திருப்பாசுரமுதல் இத் திருப்பாசுரம்வரை பதின்மூன்று பாசுரங்களான் முறையே;-(௧௨) குன்றவில்லியார் கோவணம் ஒருதட்டில் இட்டார் என்றதனால்—தனது இறைவன் அருளை நாயனாரை ஆளுந்திறத்தில் வைத்தன ரென்றும், தொண்டரும் நெய்தகோவணம் தட்டில்இட என்றதனால்—தனது அன்பை. நாயனார் அருளை ஆளுந்திறத்தில் வைத்தன ரென்றும், (௧௩) ஒன்றொன்றாகக் கோடு தட்டின்மீது இடஇடக் கொண்டெழுந்தது என்றதனால்,-நாயனார் ஒன்றொன்றாய் அனுபவிக்கவேண்டிய சுகதுக்கங்களெல்லாம் அவரைத் தாக்காவண்ணம் அவையனைத் தையும் தான்தாங்கிக்கொண்டுமேலெழுந்தது என்றும், இவ்வாறு மேல் எழஎழ நாயனாருக்குஆட்படுந்திறத்தில் அன்புமேலிட்டெழுந்த தென்றும், (௧௪-௧௫-௧௬) மென்றுகில் பலவும் பட்டுடன் இட இட, என்றதனாலும், துகில் பொதிகளை எடுத்து மேலிட என்றதனாலும், பட்டொடுந்துகில் அனேககோடிகள் இடஇடப் பத்தர்தட்டுமேற்பட என்றதனாலும் துகில்வர்க்கம் நூல்வர்க்கம் மானமில்லன குவிக்கவும் உயர என்றதனாலும், —மேலேகூறிய சுகதுக்கங்களுக்குக் காரணமாகிய புண்ணியத்திரள் பாவத்திரள் புண்ணியபாவமிச்சிரத்திரளெல்லாம் நாயனாரைத் தாக்காவண்ணம் அவையனைத்தையும் தான்தாங்கிக் கொண்டு மேலெழுந்த தென்றும், (௧௭-௧௮) உங்கள்தனங்களினுலாகிலும் என்றதனாலும், பொன்னொடும்வெள்ளியும் நவமணித்திரளும் பலவகைத்திறத்து உலோகமும் புணர்ச்சிகள் பலவும் இடஇட தட்டுமீதெழுந்தது என்றதனாலும்—மேற்கூறிய புண்ணியம் பாவம் மிச்சிரம் என்னும் மூவகைக் கன்மங்களுக்கும் காரணமாகிய நல்வினை தீவினையாகிய இருவினைகள் நாயனாரைத் தாக்காவண்ணம் அவைகளைத் தான் தாங்கிக்கொண்டு மேலெழுந்ததென்றும், (௧௯) சிவன் விரும்பியகோவணம் இடும் செழுந்தட்டுக்கு அமர்நீதியார் தனமெலாம் அன்றிப், புவனம்யாவையும்நேர்நிலா என்றதனால்,—கோவணம் இட்டதட்டு நாயனாரைத்தட்டாகத்தாங்கவந்த இறைவன் அருளாகலான் அவ்வருள் நாயனாரைச் சமமாக (நேராக)க்கொள்ளுமேயன்றி, மேலெழுந் தன்மையுடைய வினைகளையும், அவைகட்கு மேலெழுந்தன்மையுடைய புண்ணிய பாவங்களையும், அவைகட்கு மேலெழுந் தன்மையுடைய சுகதுக்கங்களையும், நேராகக் கொள்ளுமோ, கொள்ளாவாகலான் அவைகளையெல்லாம் தனக்கு நேராக நிற்கச்செய்யாமல் மேலெழுந்தோடச்செய்ததென்றும், (௨௰) நிகரிலார் நேர்நின்று உலகில் பல்தனம், ஒன்றொழியாமை உய்த்தொழிந்தேன் தலைவ யானும் என்மனைவியும் சிறுவனும், துலையில் ஏறிடப்பெறுவது உன்னருள் என்றதனால்—சுகதுக்கங்கட்கும், புண்ணியபாவங்கட்கும், இருவினைகட்கும், இடஞ்செய்யத்தக்க எல்லாப்பொருள்களும் என்னின் நின்றும் நீங்கித் தன்னையடையுமாறுசெய்ய யானும் அவற்றினின்றும் வேறாயினேன். அங்ஙனம் செய்த அருளுக்கு நாங்கள் மூவரும் ஆளாகவேண்டியதேயன்றி வேறொருசெயலில்லை. அஃதாவது, நாங்கள் மூவருந்தான் உள்ளோம், எல்லாப்பொருளையும் துலையில் ஏற்றியதுபோல் நாங்கள் மூவருந்தான் இனி அத்துலையில் ஏறவேண்டும் என்பதாம், இங்ஙனம் நாங்கள் ஏறப்பெறுவதும் உன்னருளாலேயாம் என்றும், (௨௧) அங்கணர் அருளால் மூவர் நிலையினைத்துலையெனும் சலத்தால் சழக்கினின்று ஏற்றுவார் ஏறுதற்கு இசைந்தார்-என்றதனால்—நாயனார்பால் இறைவன் கருணைநோக்குடன் வந்தனனாகலான் வந்த

அக்கருணைக்கேற்ப அதுகாறும் செய்து வந்தனவும், நாயனார் வேண்டியபடியே அவரைத் துலையிலேற்றித் தனதருளும், அவ்வருளுக்கேற்ப மாறுதியற்றும் அவரது அன்பும், எடையிட்டு அதனை யாவரும் அறியும்வண்ணம், அஃதாவது தன்னைச் சார்ந்தாருடைமையெல்லாந் தனதாகக்கோடலே அருள் என்பதும், அங்ஙனம் கொள்ளும்படி யாவையும் கொடுத்துத் தன்னையுங்கொடுத்தலே அன்பென்பதும் எளிதில் உணரும்வண்ணம் செய்வதாம். ஆகவே, நாயனார் துலையில் ஏறுவதற்கு இறைவனார் இசைந்தார் என்றும் (௬௨ - ௬௩.) அவர்மலர்க்கழல் சென்னியால்வணங்கி, மனைவியார், புதல்வன் உடன் கொடு துலைவலங்கொடு ஏறுவார் எடுத்துக் கூறுவார், என்றதனாலும் இழைத்த அன்பினில் இறைதிருநீற்று மெய்யடிமை பிழைத்திலோமெனில் பெருந்துலை நேர்நிற்க என்று திருநல்லூர் இறைவரைவணங்கி அஞ்செழுத்தோதி தட்டில் ஏறினார்- என்றதனாலும்-எல்லாவுலகும் எடுப்புண்டு எடுப்புண்டு ஏறும் என்னை இத்துலையிலேற்றி இனி எவ்வுலகும் நான் ஏறுவண்ணம் † என் என்பெலாம் உருக நீ எளிவந்து உன்னை என்பால்வைத்து-(அஃதாவது-உனது கோவணத்தை என்னிடத்தில்வைத்து) முன்னை என்பாசமுழுவதும் அகல (அஃதாவது - என்னிடத்தில் அனாதியாயுள்ள மும்மலசம்பந்தமாகிய எல்லாம் பொருளும் என்னைவிட்டு நீங்க) இப்பொழுது உன் பாதபங்கயத்தைப்பணியச் செய்தனையே என்று அவரடி வணங்கி, துலையிலிட்ட ஏனைப் பொருள்கள்போல மனைவியும், புதல்வனும் தம்முடைய பொருளாகலான் அவர்களை விடாது அவர்களுடன் துலையினருகேவந்து, என்னுடையபொருளை எடையிடுவதற்கு வேறுதுலாக்கோலை நான்தேடாவண்ணம் எல்லாப் பொருளையும் உன்னுள் அடக்கிக் கொண்டதுபோல் எங்கள் மூவரையும் நீயே அடக்கிக்கொள்ளவேண்டுமென்று அதனைச்சூழ்ந்துவந்து வேண்டித் தம்முள்ளத்துள் புதைப்பொருளாயிருந்த தமது உண்மையை யாவருங்கேட்க ஓசைபட எடுத்துக்கூறத் தொடங்கினாரென்றும், அஃதாவது, இந்த நல்லூர் இறைவன்பால் அன்புவேண்டி செய்துவந்த அன்பும், அவ்வன்பு அமையுமாறு திருநீறுடையார்க்கு அடிமைப்பட்டுவந்த அடிமைத்திறமும், எடைகொள்ளப் பெறாத இப்பொருள்கள்போல் அல்லாமல் எடைகொள்ளப்பெற்ற பொருளாக இருக்குமாறால், அந்த அன்பிலும், அடிமைத் திறத்திலும் சிறிதும் பிழைபடாது எனது அறிவினாலும் செயலாலும் நடத்திவந்திருப்பேனாமல், அன்பு செய்தற்குரிய என்னையும், அடிமை செய்தற்குரிய என் மனையாட்டியையும், என் அறிவு செயல்களுக்குரிய மகனையுமே எடைகொண்ட பொருளாக வைக்கின்றேன். இப்போது யான் கூறியபடி என் அன்புக்கும், என் அடிமைக்கும், என்னறிவு செயல்களுக்கும் எடைகொடுக்கவேண்டியது அஞ்செழுத்தன்றி எனக்குவேறெழுத் தில்லையாகலான் அவ்வெழுத்தை என்னுள்ளத்திருத்தி ஏறுகின்றேன் என்று ஏறினார் என்றும், (௬௪) அவர் மண்டு காதலின் மகிழ்ந்து உடனேற, தம்பிரான் அரைக்கோவணம் அதுவும், கொண்டஅன்பினிலும், அடியவர் அடிமைத் தொண்டிலும் குறைபடாது ஒத்தலால் அத்துலை நேர்நின்றது என்றதனால் - தம்மிடத்தில் எடைகொள்ளும்படி நாயனார் ஓதிய திருவஞ்செழுத்தே வேதத்திடையில் (நடுவில்) எடையாக (கனத்தபொருளாக) இருப்பதாகலான் தாழ்ந்திருந்த கோவணத்தட்டானது நாயனார் ஏறிய தட்டுக்கு நேராகநின்றது. அங்ஙனம் நின்ற தன்மையை அதுகாறும் நேர் நிலாமையைக்கண்ட யாவருங்காண துலாக்கோல் காட்டியது என்றுங் கூறப்பட்டன. (௬௪)

மதிவி ளங்கிய தொண்டர்தம் பெருமையை மண்ணோர்
துதிசெய் தெங்கணும் அதிசய முறஎதிர் தொழுதார்
கதிர்வி சும்பிடை காந்திட நிறைந்தகற் பகத்தின்
புதிய பூமழை இமையவர் மகிழ்வுடன் பொழிந்தார்.

† கருவூர்த்தேவர் - திருவிசைப்பா, செய்யுள் - அ.

(எ - து.) சிவனருளால் சிவஞானப்பிரகாசமுடைய நாயனாருடைய பெருமையை எவ்விடத்திலும் உள்ள உலகினர் யாவருங்கண்டு அதிசயமுடையவராய் எதிரே நின்று தோத்திரஞ்செய்து வணங்கினார்கள். தேவர்கள், ஒளிவிளங்குகின்ற ஆகாயமெல்லாம் மறையும்படி, கற்பகவிருக்ஷத்தில் கொத்துக்கொத்தாயுள்ள புதியமலர்களைக்கொண்டு மழைபோல் மகிழ்ச்சியுடன் பொழிந்தார்கள் என்பதாம்.

மதிவிளங்கிய தொண்டர்தம் பெருமையை, எங்கணும் மண்ணோர் அதிசயமுற எதிர்துதிசெய்து தொழுதார், இமையவர் கதிர்விசும்பிடை எனக் கொண்டுகூட்டுக.

அறிவை மறைக்கத்தக்க பொன்னும் பெண்ணும் மற்றைப்பொருள்களும் நாயனார் அறிவை மறைக்காது விளக்க விளங்கிய பேரறிவுடையவராகலான் - மதி விளங்கிய தொண்டர் - என்றார். எனவே, பொன்முதலியவற்றையும் மனையாட்டியையும் அறிவுகலங்காது துலையிலேற்றியதனால், விளங்கிய மதியாயிற்று "* அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித்தமராக் கொளல்" அஃதாவது, பெரியவர்களை - அவர் உவப்பன அறிந்துசெய்து தமக்குச்சிறந்தாராகக் கொள்ளுதல், தான் பெற்றிருக்கும் பெரிய பேறுகளெல்லாவற்றுள்ளும் அரிது, என்ற வேதமொழிப்படி நாயனார் - தான்பெற்றிருந்த அரியபொருள்களெல்லாம் பிரமசாரியாகிய அப்பெரியோருக்குக் கொடுத்து அவரை அரியபொருளாகக் கொண்ட அருமையைக்கருதி-மண்ணோர் தொண்டர்தம் பெருமையைத் துதிசெய்து என்றார். நாங்களெல்லாம் சிறியபொருள்களாகிய பொன் மணிமுதலியவற்றை அரியபொருளாகக்கொண்டு, அரியபொருளாகிய பெரியாரைச்சிறியபொருளாகக்கருதிப் பெரியாரைஇழந்து துன்பத்துக்காளாகின்றோம் ஆகலான்-அதிசயமுற எதிர்தொழுதார்-என்றார். இமையாநாட்டமுடைய தேவரும் இமைகொட்டத்தக்க அரிய செயலைக்கண்டு மகிழ்ந்தனராகலான் இமையவர் புதிய பூமழை மகிழ்வுடன் பொழிந்தார்-என்றார்.

இத்திருப்பாசுரத்தான்,—விளங்கிய மதியில்லார் அறிவற்ற பொன்மணிமுதலிய பொருள்களை அரியபொருளாகக் கொள்வரென்பதும், விளங்கிய மதியுடையார் அறிவுடைய பெரியோரையே அரிய பொருளாகக் கொள்வரென்பதும், அவர்களை † மண்ணுலகும் விண்ணுலகும் வாழ்த்திவணங்கிப் போற்றுமென்பதுங் கூறப்பட்டன.(௬௫)

அண்டர் பூமழை பொழியமற் றதனிடை ஒளித்த
முண்ட வேதியர் ஒருவழி யான்முதல் நல்லூர்ப்
பண்டு தாம்பயில் கோலமே விசும்பினில் பாகம்
கொண்ட பேதையும் தாமுமாய்க் காட்சிமுன் கொடுத்தார்.

(எ - து.) தேவர்களெல்லாம் கற்பகமலர்மாரியைப் பொழியும்போது, அம்மழையினிடையில் திரிபுண்டரதாரியாய்ப் பிராஹ்மண பிரமசாரியாய் ஒளித்துவந்தவராகிய திருநல்லூர் முதல்வராகிய சிவபெருமான் இடப்பாகத்தைக்கொண்ட உமாதேவியும், தாமுமாய் அனுதியாய்ப் பழகும் கோலத்தையேகொண்டு, ஆகாயத்தின்கண் ஓர்வழியாய் முன்னே தெரிசனமாகும் படியாகக் காட்சிகொடுத்தனர் என்பதாம்.

அண்டர் பூமழைபொழிய மற்றதனிடை, முண்டவேதியராயொளித்த, நல்லூர் முதல்வர், பாகங்கொண்ட பேதையும் தாமுமாய்ப்,பண்டுதாம் பயில்கோலமே(கொண்டு) விசும்பினில் ஒரு வழியான் காட்சிமுன் கொடுத்தார் எனக்கொண்டு கூட்டுக.

---

* திருக்குறள் அதி. பெரியாரைத்துணைக்கோடல்—செய்யுள் ௧.

† "நாட்கொண்ட தாமரைப் பூந்தடஞ்சூழ்ந்த நல்லூரகத்தே
நீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் குறிபடுத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடு மங்கோர் வணிகனை
யாட்கொண்ட வார்த்தையுரைக்கு மன்றோஇவ் வகலிடமே."

திரிபுண்டர மணிந்த பிரமசாரி என்பார்-முண்டவேதியர் என்றார். நல்லூர் இறைவர்என்பார்.—நல்லூர்முதல்-என்றார். பிரமசாரி வடிவமாறி ஆகாயத்திற்சென்றதை ஒருவரும் அறிவதற்கில்லாமல் பூமழைபொழிந்தனர் என்பார் — அண்டர் பூமழை பொழிய மற்றதனிடை ஒருவழியான் ஒளித்த என்றார். பூமியில்நின்ற பிரமசாரி வடிவத்தை ஒழித்து அந்தரத்தில் உமையோடு கூடிய அழகனாய் நாயனார்காண அவர் முன் தெரிசனந்தந்தனர் என்பார் - பாகங்கொண்டபேதையும் தாமுமாய் விசும்பினில் காட்சிமுன் கொடுத்தனர் - என்றார். இறைவன் பலவகையான வடிவங்கொள்ளினும் அவையெல்லாம் அவ்வவ் வவசரபேதங்களைக் குறித்ததெனவும், உமையோடு கூடியிருக்கும் கோலமே அநாதியாய் என்றுமுள்ள கோலமெனவும் அறியவேண்டுமென்பார் -பண்டுதாம்பயில் கோலம் - என்றார்.

இத்திருப்பாசுரத்தான், பூமாரியின் சிறப்புத்தோன்ற அதனிடையொளித்த என்றும், பிரமசாரியின் சிறப்புத்தோன்ற நல்லூர் முதல்வரென்றும், உமாசகாயமாகிய அருட்டிருமேனியின் சிறப்புத்தோன்ற - பண்டுதாம்பயில் கோலம் என்றும், பிரமசாரியாய் வந்து உண்டாக்கிய கவலையையொழித்து ஆனந்தமுண்டாக்கிய சிறப்புத், தோன்ற பேதையும் தாமுமாய்க் காட்சி முன்கொடுத்தார் என்றும் கூறப்பட்டன. ()

தொழுது போற்றியத் துலைமிசை நின்றுநேர் துதிக்கும்
வழுவில் அன்பரும் மைந்தரும் மனைவியார் தாமும்
முழுதும் இன்னருள் பெற்றுத்தம் முன்றொழு திருக்கும்
அழிவில் வான்பதம் கொடுத்தெழுந் தருளினார் ஐயர்.

(எ - து.) தமது கோலத்தின் காட்சியைக்கண்டு வணங்கித் தோத்திரஞ்செய்து, அந்தத் தராசின் தட்டின்மேலிருந்து நேராகப் புகழ்கின்ற தமது தொண்டில் மாறுபடுதலில்லாத நாயனாரும், அவர் புத்திரரும், அவர் மனைவியாரும், (பெறவேண்டிய) இனிய அருள் முழுவதும் பெற்று, தமக்குமுன்னே என்றுந் தொழுதிருப்பதாகிய அழிவில்லாத பரமுத்திப் பதத்தையுங் கொடுத்து இறைவனார் எழுந்தருளினா ரென்பதாம்.

அந்தரத்தில் நின்று காட்சிகொடுத்த இறைவரை அந்தரத்தில் நின்றதுலையின்கண் இருந்தவண்ணமாகவே கண்டுபோற்றின ரென்பார் - அத்துலை மிசை நின்று தொழுது போற்றி நேர் துதிக்கும் - என்றார். நாயனார் தனது மனையாட்டிமுதல் முழுவதுங்கொடுத்து இறைவனுடைய இனிய முழுஅருளும் பெற்றனரென்பார் - அன்பரும் மைந்தரும் மனைவியர் தாமும் முழுதும் இன்னருள்பெற்று - என்றார். முழுவதும் கொடுத்து, முழுவருளும் பெற்றவர்க்குக் கொடுக்கும்பதம் தம்மைவிட்டு நீங்காதிருந்து எப்பொழுதும் கும்பிட்டிருத்தலாகிய நித்தமாகிய உயர்ந்தநிலை என்பார் - தம்முன் தொழுதிருக்கும் அழிவில் வான்பதம் கொடுத்தருளினார் - என்றார். அவரவர்க்கு ஏற்றவாறு கொடுப்பதில் தலைவர் என்பார் - ஐயர் - என்றார்.

இத்திருப்பாசுரத்தான்,—இறைவனுக்கு முழுவதுங்கொடுத்து முழுவருள் பெற்றவர் இந்நாயனாரென்று கூறப்பட்டது. (௪௭)

நாதர் தந்திரு வருளினால் நற்பெருந் துலையே
மீது கொண்டெழு விமானம தாகிமேற் செல்லக்
கோதில் அன்பரும் குடும்பமும் குறையறக் கொடுத்த
ஆதி மூர்த்தியா ருடன்சிவ புரியினை அணைந்தார்.

(எ - து.) இறைவனுடைய திருவருளால், நல்ல பெரிய துலாக்கோலே தெய்வ விமானமாகி ஆகாயமார்க்கமாகச்செல்ல, ஆணவாதிகுற்றமொழிந்த நாயனாரும், அவரது குடும்பமாகிய மனைவியாரும் புத்திரனும், யாதொரு குறைவில்லாமல் கொடுத்த திரு

வருளைப்பெற்று உமாசகாயனும் வந்த இறைவனுடன் சிவலோகத்தையடைந்தனர் என்பதாம்.

இத்திருப்பாசுரத்தான்,—நாயனாரிட்டதுலையே, அவரைச் சிவலோகத்தில் இருத்துவதற்கும் விமானமாகிய சிறப்புத்தோன்ற நற்பெறுந் துலையே மீதுகொண்டெழு விமானமதாகி மேற்செல்ல என்றும், * முன்தொழுது இருக்கும். அழிவில் வான்பதம் கொடுத்த சிறப்புத்தோன்ற குறைவறக் கொடுத்தனென்றும், அப்பதம் நாயனார் முதலிய மூவர்க்குங் கொடுத்தனரென்னும் சிறப்புத்தோன்ற அன்பரும் குடும்பமும் என்றும், இறைவனோடு அத்துவிதமாயிருக்கும் முத்தியைப் பெற்றனரென்னும் சிறப்புத்தோன்ற ஆதிமூர்த்தியாருடன் என்றுங் கூறப்பட்டன. (சஅ)

சுந்தரமூர்த்திகள் துதி.

வேறு.

மலர்மிசை அயனும் மாலும் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூர் ஆவணப் பழமை காட்டி
உலகுய்ய ஆண்டு கொள்ளப் பெற்றவர் பாத முன்னித்
தலைமிசை வைத்து வாழுந் தலைமைநந் தலைமை யாகும்.

(எ - து.) தாமரை மலரின்கண் வாழும் பிரமனும் திருமாலும் காண்டற்கரியனாகிய இறைவன், யாவராலும் புகழப்படுகின்ற திருவெண்ணெய் நல்லூரின்கண் பழைய மூலவோலையைக்காட்டி உலகெல்லாம் உய்யும் வண்ணமாக ஆண்டுகொள்ளப்பெற்றவராகிய எம்பெருமானது ஸ்ரீபாதங்களை உள்ளத்தின்கண் தியானித்து, முடியின்கண்ணும்வைத்து வாழ்வதாகிய தலைமைத்தன்மையே, நாம் அடையப்படும் தலைமைத்தன்மையாம் என்பதாம்.

'தொழுதும் வணங்கியும் மூன்தேடருஞ் சோதி' என்பார், "மலர்மிசை அயனும் மாலும் காணுதற்கரிய வள்ளல்" என்றார். "சென்றூங் கெழுந்தமிழ்ப்பழ ஆவணங் காட்டி" என்பார், 'பலர் புகழ்வெண்ணெய்நல்லூர் ஆவணப்பழமைகாட்டி' என்றார் 'எனக்குன் குடிமுடிமுழுதும் அடிமை வந்தாட்செய் எனப்பெற்றவன்' என்பார், "உலகுய்ய ஆண்டுகொள்ளப்பெற்றவர்" என்றார். ஆட்கொள்ளப்பெற்ற அப்பெருமான் (வண்டுகள்) முரல் தேன் ஒழுகுமலரின் நற்றார் (அணிந்த) நம்பியாரூர (னாகிய) எம்பெருமானாகலின் 'அவனது பாதம் உன்னித்தலைமிசைவைத்துவாழும் தலைமை நம் தலைமையாகும்' என்றார்.

அமர்நீதிநாயனார் புராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

காருண்யாய நம:

திருத்தொண்டத்தொகை.

அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்

அல்லிமென்முல்லையந்தார்— என்றதனால் - கற்புங்காதலுமுடைய கற்பின்மகளிரும், வேதவேதாந்தங்களில் பண்டிதர்களாகிய அந்தணர்களும், வள்ளற்றன்மையில் மிக்க அரசர்களும், தத்தம் உள்ளத்தில் உள்ள பெருந்தன்மைகள் பிறருக்குக்காட்ட அகவிதழுடைய முல்லைமாலையை அணிதல்போல்,— இவ்வமர்நீதியார் இறைவனால் கொடுக்கப்பட்ட தனுகரண புவன யோகங்களையெல்லாம் தம்முடையனவாகக் கருதி அவனடியார்களுக்குக் கொடுக்க அறியாத உலககாமிகளாகிய பகைவரெல்லாம் நாணப்படவும், அன்புநெறி-திருவேடமுடையார் யாதுவேண்டினும் மறாதுகொடுக்கத்துணியும் அறிவே ஞானமென் றறியாத ஞானிகளாகிய புறச்சமயிகளெல்லாம் தமது ஞானம் பாசஞானம்

* சத்தாகிய சிவத்தின்முன் இருப்பதால் ஆணவ மலத்தின் செயல்அழிந்தும், அங்கு தொழுதலால் கன்மமலத்தின் செயல் அழிந்தும், அங்கு இருத்தலால் மாயாமலத்தின் செயல் அழிந்தும் போதலால், அது அழிவில்வான்பத மாயிற்று.

பசுஞானம் என்றுணர்ந்து தாம்ஞானிகள் என்று வெளியாகாது அடங்கவும், இறைவன் பால் அன்பே வேண்டியவர் அவ்வன்பினை இறைவன்பால் பெறுதற்குத் தம்பொருளெல் லாம் அவ்விறைவனுக்கே கொடுக்கும் ஆசையுடையோராவர் என்று எண்ணும் தமதுநட் பினராகிய அகச்சமயிகளெல்லாம் அகங் களிதூங்கவும் தமது வணிகர்குலச் செய்கைக் கேற்பத் துலையை நாட்டி, தம்மைக்கோவணத்தால் கொள்ளைகொண்டு ஆளவந்த இறை வன் திருவுள்ளப்படியே ஓர்தட்டில் அப்பெருமானைக்கோவணம் வைக்கச்செய்து, மற் றோர்தட்டில் முன்னர் தமது அசையாப்பொருள் அசையும்பொருள்களையெல்லாம்ஏற்றி, பின்னர் இறைவன் அருளோடு தமது திருநீற்றடிமையைச் சமன்செய்து காட்டவல்ல ஸ்ரீபஞ்சாக்கரத்தைச் சாதனமுறையில் வைத்து ஓதாது, நிற்குமுறையில்வைத்து ஓதிக் கொண்டே மேலெழுந்து இருந்தவண்ணமாகவே இருந்த தட்டில் தாமும்ஏறத் தாழ்ந் திருந்தவண்ணமாகவே இருந்த தட்டானது அக்கணமே மேலெழுந்து தமதுதட்டுக்குச் சமனாகநிற்க, இறைவனது இனிய அருள்முழுவதும்பெற்று அவ்வருளாளன் திருமுன் என்றும் நீங்காதிருக்கும் வெற்றிப்பாட்டினை யாவரும்காணப் பெற்றவர்என்றும், அமர் நீதி— என்றதனால் சிவன்முத்திநிலையில் சிவன் அருளுடன் ஆன்மாவோடு அமர்ந்திருக் கும்நிலையும், ஆன்மா பரமுத்திநிலையில் பாசத்துடன் சிவனோடு அமர்ந்திருக்குநிலையும் காட்டவல்ல ஸ்ரீபஞ்சாக்கரத்தை நிற்குமுறையில் ஓதி, சித்தாந்தத்திற் கூறியுள்ள நீதிப் படி இருமுத்தி நிலையில் அமர்ந்திருக்கும்நிலையினர் என்றும், அடியேன் என்றதனால்— அருட்கலப்பால் சிவன்முத்தியும், அன்பின்கலப்பால் பரமுத்திநிலையும், அவ்விரண்டு நிலை யினும் அடிமைகுலையாதுநிற்கும் நிலையும்ஆகிய மூவகைநிலையினையும் ஸ்ரீபஞ்சாக்கரத் தாற்காட்டிய அப்பெருமானுக்கு யான் அடிமைகுலையாதுநிற்றல் எனது கடைமைப் பாடாம் என்றுங் கூறியவாறும்.

இதனால் விறன்மிண்டநாயனூர் தமிழ்நாடெங்கும் பரவச்செய்த தொண்டரது அடிமைத்திறம் இவ்வளவினதென்று உலகினர் அறியுமாறு தொண்டர் நாயகனாகிய இறைவன் தானே ஓர் துலையிலிட்டுக்காட்ட எண்ணி இதற்குரியார் அமர்நீதியார் என்று துணிந்து அவர்பால்வந்து, தமக்குக்கோவணமாக இருக்கும் வேதத்தை எடை காட்டும் ஓர் அளவைக்கருவியாக ஓர் தட்டில் வைக்க, நாயனூர் அவ்விறைவனெண்ணப் படியே அந்த வேதஅளவையால் - உலகினர் பெரியபொருளாக எண்ணும் பொன்மணி முதலிய எல்லாச்செல்வப்பொருள்களையும் இறைவன் ஓர் பொருளாகக்கொள்ளும் பொ ருள்களன்றென்றும், பேரன்புடைய அன்புடையாரையே அவன் கொள்ளத்தகும பெரிய பொருளாகக்கொள்ளும் பொருள்களாமென்றும் காட்டினூராகலான் என்னையும் அன் புடைப்பொருளாகக்கொண்டு எமது இறைவனுக்காக்க அந்நாயனூருக்கு அடியனாகின் றேன் என்று கூறியவாறும்.

மிண்டும் பொழிற்பழை யாறை அமர்நீதிவெண்பொடியின்
முண்டந் தரித்தபிரார்க்கு நல்லூரின்முன்கோ வணநேர்
கொண்டிங் கருளென்று தன்பெருஞ் செல்வமும் தன்னையுந் தன்
துண்ட மதிநுத லாளையும் ஈந்த தொழி லினனே.

மேகவாகனனாகிய இந்திரன் சிகாழிப்பதியில் தன்னால் வைக்கப்பட்ட நந்தனவனத் திற்கு நீரில்லாதொழிய அதனால்வாடி தவங்கிடந்து ஈசனருளாற்பெற்ற காவிரியின்வளப பத்தால் ஏனைநாடுகளினும் சிறந்து பொழில்களால் நெருங்கிச் சூழப்பட்டுள்ளது பழை யாறை என்னும் திருப்பதியாகலான்—மிண்டும் பொழிற்பழையாறை—எனவும், அப்ப தியில் எந்நிலத்தினுமுள்ள பொன் மணி துகில் முதலிய எல்லாப பொருளும் நீதிவழி யால் தாம்செய்யும் வாணிபமுறையால் தம்பொருளாகப் பொருந்திக்கிடக்கச் செய்தவரா கலான்—அமர்நீதி—எனவும், அந்நீதியார் திருநீற்றடிமையில் பிழைத்தலை அறியாத அன்

பினைச் சாட்ட இறைவனார் திருநீறு சண்ணித்தமேனியாராய் வந்தவராகலான்—வெண்
பொடியின்முண்டந்தரித்த பிரான்து எனவும், இறைவனது உபகாரத்தை நினைந்து நெஞ்
சம் உருகவும், நில்லாமே தீவினைகள்நீங்கவும் எண்ணும் அன்புடை அடியார் முடியில்
தனது அடியைச்சூட்டுதற்கு நேராத்தானமாய்க்கொண்டிருக்கும் ஊராகலின்-நல்லூர்-
எனவும், நாயனார்க்கும் இறைவன் முன்கொடுத்த கோவணம்—தம்மை அகோசரமாய்க்
காணக்கொடுத்த இருக்குவேதமாகிய கோவணம், தட்டில்வைத்த கோவணம்—தம்
மைக் கோசரமாய்க் காணச்செய்யவல்ல ஸ்ரீபஞ்சாக்கரத்தைத் தனது இருதயத்தில்
கொண்டுள்ள யஜுர் வேதமாகிய கோவணம், உடுத்திருந்த கோவணம்—தம்மைக்
கோசராகோசரமாய்க் கண்டுணர்ந்தார் தம்முடைய இன்புற்றுநிற்கும் நிலையைப் புகழ்ந்
தெடுத்தோதும் சாமவேதமாகிய கோவணம், ஆகலான், நாயனார் பாசப்பொருளோடு
கலந்துள்ளாராகலின், பாசப்பொருளைத் தமமுடைமையாகவே வைத்திருப்பார்க்கு
இறைவன் அகோசரமென்னும் அவ்வுண்மையை உணர்த்த, அவருக்கு முன்கொடுத்த
ருக்வேதமாகிய கோவணம் அகோசரமாய்ப்போயிற்று.

அவ்வுண்மையை நாயனார் உணர்ந்து அகோசரமாய் நிற்கின்ற இறைவனை தமக்குக்
கோசரமாம் வண்ணம், புறம்புறமாயுள்ள பொன் மணிமுதலிய பாசப்பொருள்களையும்,
புறமாயுள்ள பாசப்பொருளாகிய மனையாட்டியையும், அகப்புறமாயுள்ள மகனையும் அம்முப்
பாசங்களையும் உடைய தம்மையும், யஜுர்வேதமாகிய கோவணம் இருக்குந் தட்டில் வை
க்க, அவ்வேதம் நாயனாருக்கு இறைவனைக் கோசரமாக்க வல்ல ஸ்ரீபஞ்சாக்காரத்தைக்
காட்டி அதன் பொருளையும் உணர்த்தி உணர்த்தியவழியே இறைவனருளையே நோக்கி
அவனவாய் நிற்கச்செய்து தானும் நின்றது.

இறைவன் உடுத்திருக்கும் சாமவேதமாகிய கோவணம்—கோசராகோசரமாய் நிற்
கும் இறைவனை அருள்வசப்படுத்தி நாயனாரை அன்புருவாக்கிக்க சிந்துருகி என்றும்
புகழ்ந்தெடுத்தோதும் பேரின்பானுபவத்தில் நிற்கச்செய்தது.

இவ்வண்ணம் மூன்றுவேதமும் முறையே உணர்த்தவும், காட்டவும், நிற்கவுமான
செயலைச் செய்ய அதற்கேற்ற செயலைமாறாது செய்தனராகலின்—தன்பெருஞ் செல்வ
மும், தன்துண்டமதி நுதலாளையும், தன்னையும் ஈந்த தொழிலினன்—எனவுங் கூறினர்.

இதனால் நாயனாரது ஊரும் பேரும் தொண்டும் பேறும் கூறபபட்டன.

புராணசாரம்

பழையாறை வண்சாமர் நீதியார்பாற்பரவுசிறு முனிவடிவாய்ப் பயில்வுகல்
இலர்க், குழைகாதர் வந்தொருகோ வணத்தைவைத்துக்கொடுத்ததனை எடுத்
தொளித்துக் குளித்துவந்து, தொழிலாரும் அதுவேண்டி வெகுண்டுநீரித்
துலை [illegible] கோவணநேர் தூக்குமென்ன, எழிலாரும் பொன்மனைவி இளஞ்
சேயுட [illegible] நினர்வானுலகு தொழு ஏறினரே.

(௭ ௩. அமர்நீதியார் பழமையாயுள்ள காவிரிஆற்றினால் நிலவளம் நீர்வளம் குடி
வளமுதலிய சம்பங்கள் நிறைந்த பழையாறை என்னும் திருப்பதியின்கண் பொன்
மணிமுதலிய பூஷணமணிகளும், தென்மணிமுதலிய உசைவின்மணிகளும், ஆடைமுத
லிய உடையணிகளும் ஆகிய எல்லாப்பொருள்களையும், தமதேபோல் பிறர்பொருளையும் எக
ணக்காத்தலால்வரும் பெருமையுந் துறவுசமாக்கவல்ல வாணிபமுடைய வணிகர்குலத்தி
லவதரித்தவர். சிவன்கழலைச் சிந்திக்குஞ்சிந்தனைச்செயலில் மனத்தையும், செவியுணவை
யூட்டவல்ல அந்திவண்ணர் தம்அடியவர்க்கு அமுதுசெய்விக்கும்போது அவருள்ளங்களி
கூறுமாறு இன்மொழிகூறும் செயலில் வாக்கையும், பஸ்ம ருத்திராக்ஷங்களையே ஆடை
யாகவும் அணிகலன்களாகவுங் கொண்டுள்ள திருவேடமுடையார்க்கு அவர்கருத்தறிந்து
கந்தை கீள் உடை கோவணம் முதலியவற்றைக் கொடுக்குஞ்செயலில் காயத்தையும்
சைவநீதிவழியாய் அமர்ந்திருக்கச்செய்யுந் [illegible] ர்மை உடையவராகலின் அமர்நீதியார்

என்னுந் திருநாமமுடையவர். திருநல்லூர் என்னும் திருப்பதியில் வீற்றிருக்கும் முக்கண் அக்காரம் முதல்வனாது திருவிழாக்கோலத்தை நாடோறும் கண்டுகளிக்கவும் எண்ணிறந்த அடியார்களுக்கு அமுதுபடைக்கவும் எண்ணி, அந்நல்லூரில் ஓர் திருமடம் அமைத்து அதில் தன்னுடைய மனைவி மகன் ஏனையசுற்றத்தாருடன் குடியிருந்து, எண்ணிவந்தபடியே நல்லூர்ப்பெருமான் திருவிழா அணியைச்சேவித்தும், மடத்தில் அடியார்கட்கெல்லாம் இன்பமாகிய அமுதளித்தும், அவர்களுக்குவேண்டிய கந்தை கீள் உடை கோவணம் முதலியவைகளைக் கொடுத்தும்வருநாளில் ஓர்நாள் நீலகண்டமும் குழைக்காதுமுடைய நல்லூர் இறைவன் அமர்நீதியார்க்கு அவர்கொடுத்துவரும் கோவணப் பெருமையை முன்னே காட்டிப் பின்னர் நிறைந்த பேரருளைக்காட்டி ஆட்கொள்ளத் திருவுளத்தெண்ணி யாவராலும் போற்றப்படும் பிரமசாரியாய் சிறிய முனிவடிவினையுடையராய் எத்தராகவந்து தமதுமடம் புகும் பாக்கியம் பெற்றவர். அம்முனிவரைக் கண்ட அளவில் உள்ளமும் மலர்ந்து, முகமிகமலர்ந்து மிக்கவிரைவுடன் எதிரேசென்று எம்பெருமானே! தேவரீரது திருவுருவம் என்னால் காணுந்தரத்ததன்று இவ்வரிய திருவுருவத்தைக்காண அடியேன் செய்தவந்ததவம் யாதோ என்று போற்றும் பொழுது, பிரமசாரியார்-நீர் பெருகிய அடியார்க்கு நல்லுணவும், நல்ல ஆடைமுதலியனவும் அன்புடன் மாறாது கொடுத்துவரும் அருமையைக் கேட்டு உம்மைக் காணவந்தேன் என்று அவரால் புகழப்பெற்றவர்.

நாயனார் "இங்கு நல்லொழுக்கமுடைய வைதிகப்பிராமணர்களால் மிகவும் பரிசுத்தமாய் திருவமுது அமைக்கப்பட்டிருக்கின்றதாகலின் தேவரீர் இன்று அமுது கொண்டருளவே வேண்டும்" என்று பணிந்து வேண்ட பிரமசாரியார் இசைந்தவராய் யான் காவிரிக்குச் சென்று நீராடி நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு வருவதற்குள் மழைவரும்போல் காணப்படுகின்றதாகலின் இக்கோவணத்தை வைத்திரும் என்று தாம் தாங்கியிருக்கும் தண்டத்திலுள்ள ஓர் கோவணத்தை அவிழ்த்துக்கொடுத்து "நீர் கோவணப் பெருமை நன்றாய் அறிந்திருப்பவராதலால் நான் ஒருவிசேடமும் எடுத்துச்சொல்லவேண்டியதில்லை; இதனைக்காவலுள்ள இடத்தில் வைத்திருந்து நான் வந்த பின்னர்கொடும்" என்றுகூற வாங்கப்பெற்றவர். பிரமசாரியார் சொல்லியபடியே ஓர் தனியிடத்தில் மிக்ககாவலுடன் நாயனார் வைக்க, அதனை அடியார் உள்ளங்கவர்கள்வனாகிய கங்காதரன் அவ்விடத்தில் இல்லாமற்போக்கி மழையை வரவழைத்து அதனால் நனைந்து மடத்தைவந்து சேர்ந்தனர், வந்துசேர்வதற்குமுன் நாயனார் மிக்கபக்குவத்தோடு அறுசுவைத்திருவமுதாக்கிப் பிரமசாரியார் வருகையைநோக்கி இருப்பவராதலால் அவர்வந்து சேர்ந்தவுடன் அவர் அமுது கொள்ளும் பொருட்டாக அவரடிபணிந்து நிற்ப அவரைநோக்கி யான் நனைந்துவந்தேனாகையால் நான்முன்னே கொடுத்த கோவணத்தைக் கொண்டுவாருமென்று சொல்ல அவர் தொடக்கிலகப்பட்டவர் - நாயனார் - அதிசீக்கிரமாகவுள்ளே சென்று கோவணம் வைத்த இடத்திற்பார்க்க, அதனைக் காணாது தான் வைக்காத வேறுவேறு பலவிடங்களிலும் தேடித்தேடிப்பார்த்தும் தம்மை சார்ந்தாரைப் பார்த்ததுண்டோ என்று கேட்டும் அவரும் காணாதவராகையால் இ ரைப்போலவே அவர்களும் காணாமையைக்கூற இஃதென்ன மாயமென்று மயங்கின தற்கு நாம் என்செய்வது என்று எண்ணாதெல்லாம் எண்ணினவர். பின்னர் அஃதில்லை தாழியினும் நம்மிடத்திலுள்ள ஓர் கோவணத்தைக் கொண்டுபோய்க் கொடுப்பே மென்று துணிந்து ஓர்கோவணத்தை எடுத்துக்கொண்டு பிரமசாரியிடஞ்சென்று இதே கோவணம் கொண்டுவந்தேனென்று அக்கோவணத்தை அவர் கையிற்கொடுக்காமல் கோவணம் தேவரீர்கொடுத்ததன்று, அதனை வைத்த இடத்திற் காண்கிலேன் இ மாயத்தையும் அதிசயத்தையும் நான்எப்பொழுதும் கண்டதில்லை, இது என்னிட லுள்ள நல்லகோவணம் கிழித்தகோவணமன்று, நெய்தகோவணம் என்பிழைபொறு இதனையுடுக்கவேண்டுமென்று வணங்கினவர்.

நாயனார்சொல்லியதைக்கேட்ட பிரமசாரியார் அடங்காக்கோபங்கொண்டு "ஆஹா! இதுஎன்ன அதிசயம் நான் நீராடிவருவதற்குள் நான் கொடுத்தகோவணம் மாயமாய்ப் போயிற்றென்று கூறுகின்றீரே! நீர்கூறுவது மாயமா! அதுபோனதுமாயமா! நான் கொடுத்ததுமாயமா! இந்தமாயத்தை நான் எங்குங்கண்டதில்லை. வணிகர்குலத்திற் பிறந்து அக்குலத்திலில்லாத வாணிபத்தைச்செய்ய எங்ஙனங்கற்றீர். நீர்கற்றுக் கொண்ட வாணிபத்தைப்பிரமசாரியாயும் ஏழையாயும் இருக்கின்ற என்னிடத்திற் றானோ காட்டவேண்டும். என்னிடத்திலேயோ காட்டத்துணிந்தீர் மற்றையாரிடத்தில் காட்ட அஞ்சியிருப்பீரோ! இவ்வேடமிட்டத்திலுள்ள பொருளெல்லாம் இவ்வழியாகச் சேர்ந்தபொருள்தான் போலும். உம்முடைய வாணிபம் மிகநன்றன்று. இப்படியன்றோ பொருள்தேடவேண்டும், உம்மைப்போலும் வாணிபஞ்செய்து பொருள்தேடுவாரைக் கண்டதில்லை. எத்தனைபேர் இப்படி தங்கள்பொருளெல்லாங் கொடுத்துப் போயினரோ அதனைநான் அறியாதொழிந்தனனே. அவர்களைப்போல் நான் போகத்தக்கவனன்று. நீர் பெருஞ்செல்வமுடையவர். உம்முடைய அத்தனை முறைக்கு நான்யாதொன்றுஞ்செய்கின்றிலேன். யான்செய்யும் செயலால என்கோவணந்தான்வருமோ! நீருந்தான்வருவீரோ! அது பின்னை அறிவோம். என்ன சொல்லுகின்றீர்" என்று வெகுண்டனர். அவ்விதத்துள்ளிருந்த எரிவதுபோலும் துள்ளிப்பேச. நாயனார் அதனைச்செவிக்கேட்டு பொறியும் அறிவுங்கலங்கி, மனந்தழுதழுத்து, பிரமசாரியாரை வணங்கி "என்பிழை பொறுத்தருளுவீர். யான் பிறர்பொருளைவஞ்சித்துக்கொள்ளும் வாணிபனல்லன். பிறர் பொருளைத் தம்பொருள்போற் காத்துக்கொடுக்கும் நல்வாணிபன் என்வாணிபம் அங்ஙனமிருக்க நீர் உம்முடைய பொருளுக்கு நான் செய்யவேண்டியவழி எதுவோ அதனைச்சொல்லும் செய்கின்றேன் என்றும் உம்முடைய ஒருகோவணத்துக்கு என்னிடத்திலுள்ள நல்லபட்டாடைகள், மணிகள் இவைகளை அநேகமாக வைக்கின்றேன் எவ்வளவுவேண்டுமோ அவ்வளவும் எடுத்துக்கொண்டு என்வாணிபத்தையும் என்னையும் இகழவேண்டாம்" என்று வேண்டினர். பிரமசாரியார் "ஐயா! வாணிபரே! நான் உமது பொருளைக் கொள்ளையாடச்சு வந்தவனன்று. என்னுடையபொருள் காணாதே வந்தாற்போதும். முன்கொடுத்த கோவணம் போயினும் இதோ என்தண்டிலிருக்கின்ற கோவணத்துக்குத்தக கொடுக்கின்றேன் அது எவ்வளவு எடை இருக்கின்றதோ அவ்வளவு எடையுள்ளதாக எதனைக்கொடுக்கின்றீரோ அதனை நான் பெற்றுக்கொள்ளுகின்றேன்" என்ன நாயனார் அதுகேட்டு "ஐயா! இவ்வளவுதானே சொன்னீர் நமக்கு நன்மையிட்டது. இந்த ஒருகோவணம் என்ன எடையிருக்கப்போகின்றது ஆனால் அவர் சொல்லுகின்றபடி அதனை நாம் மறுத்தல்கூடாது. ஒருக்கால் மறுப்போமாயின் இவர் பெரிய தொடர்வழக்காளியாய்க் காணப்படுகின்றார். இவர் வழக்கினில் நாம் அகப்படக்கூடாது" என்றெண்ணி ஒருதுலாக்கோலைக் கொண்டுவந்து நாட்டி "சுவாமிகாள்! தேவரீர்வைக்க வேண்டிய கோவணத்தை இந்தத் தட்டில்வையும், அதற்கு நான் வைக்கவேண்டியகோவணத்தை வைக்கின்றேன் எடையொத்தபின் அதனை எடுத்துக்கொண்டு சாக்கோவணத்தைத்தந்தடுத்து அமுதுகொண்டருளல்வேண்டும்" என்று கூறினர். பிரமசாரியார் "அமர்நீதியாரே! என் அவசரப்படுகின்றீர்! எனக்கு நீர் அன்னம்படைத்து என்னை உண்ணச்செய்வீரோ! என்னை நீர் உண்பீரோ! எனக்கு யோசனையாக இருக்கின்றது" என்று ஒருகோவணத்தை ஒருதட்டிலிட்டு 'நீர் வைப்பதை அந்தத்தட்டில் வையும்' என்றனர். நாயனார் நெய்தகோவணமொன்றை வைத்தனர். பிரமசாரியார் கோவணத்தட்டு எழுந்திருக்கவேண்டியதிருக்க அது எழுந்திராது நாயனார் கோவணத்தட்டு எழுந்தது. நாயனார் அதுகண்டு அஞ்சி, ஒவ்வொருகோவணமாக வைத்தனர், பின்னர் ஒன்றியமுடு கோவணம் வைப்பதொழிந்து மூட்டையாக நூல்வர்க்கமெல்லாம் வைத்தனர். எது எது வைத்தும் மேன்மேலெழுந்ததேயன்றித் தாழ்ந்ததில்லை. அவ்வதிசயத்தைக்கண்டு இதுஉலகில் இல்லதோர்மாயமென்றஞ்சி. மீண்டும் பிரமசாரியாரை வணங்கி ஐயரே! உமதுகோவணம் ஒருகோவணமா! அதுஉருவத்தால் கோவணமாகக்காட்டினும்,

அக்கோவணத்தால் எடைகொள்ளத்தக்கதாகக் காணப்படவில்லை. இனி பொன் மணி முதலியன யாவும் வைக்கின்றேன் என்றுகூறி அவையாவும் வைக்க அவைகளும் எடைகொள்ளாதொழிய இனி எடைவைக்கும்பொருள் ஒன்றுமில்லாமையைக்கண்டு இது அதிசயத்திலும் அதிசயமென்று ஒருவகையானகளிப்பும், பிரமசாரியார் வழக்கு ஒழிவதற்கில்லையே என்கிற ஓர் துக்கமும் உடையவராயிருக்க, அவரை நோக்கி என்னுடைப் பொருளெல்லாம் எடையிட்டும் எடைகொள்ளவில்லை. யானும் என்மனைவியும் என் மகனுமுள்ளோம். எடையாக அத்தட்டில் ஏறுகிறோம் இனியேனும் எடைகொள்ளா பாயனுமெய்த தும்பால் செய்யாது எடைகொள்ளும் அருளைத் திருவுள்ளங்கொள்ளவேண்டும் என்று தொழுதுபோற்றிப் பணிந்து துலாக்கோலை வலம்வந்து திருநீற்றுமெய்யடிமை பிழைத்திலோமெனில் இப்பெருந்துலை நேர்நிற்க வேண்டுமென்று நல்லூர்ப் பெருமானை வணங்கி எல்லாப்பொருளையும் எல்லாவுயிரையும் எடைகொள்ளவல்ல திருவஞ்செழுத்தையோதி எழுந்திருந்து தட்டில் ஏறினார். அவ்வளவில் அண்டர்தம்பிரான் திருவரைக்கோவணம்வைத்த தட்டும் அடியவரடிமைத்தொண்டெலாம் வைத்த தட்டும் அன்பினிற் குறைபடாது நேர்நிற்க, அப்பொழுது பரசிவனும் பரசிவையும் நாயனாரும் மனைவியாரும் காண நேராகக் காட்சி கொடுக்கப்பெற்றனர். இவ்வதிசயத்தைக் கண்ணுற்றாரும் விண்ணுளோரும் கண்டு விண்மாரியும் பூமாரியும் பொழிந்து, ஆனந்தபரவசத்தராய்க் கூத்தாடினர். பின்னர் அத்துலையே விமானமாய் நாயனாரும் அவர்குடும்பமும் குறைவறக்கொடுத்த அருட்செல்வத்தோடு ஆகாயத்திடையே. சிவபுரமணைந்து சாரூபத்தின்முன் என்றும் தொழுதிருக்கும் பேரின்பமுத்திநலம்பெற்றனர்.

இதனால், திருவருள் இறைவன் வைதிகப்பிரமசாரி வடிவாய் நின்று அடியார்பால் சென்று பலபொருளிருப்பப் பாதுகைக்கு அன்புறுகையினால் அவ்வடியவரை அவ்வன்பின் கருதி, பின் அவன் இறைவன் கலந்து பேரின்பத்தைப்பெறுவிக்கும், அவனன்பரைத் தன்னின்வழிநிற்கும் அடியவரை தகாச்செய்கையால் வந்த அருட்டிறத்தினையும் எடையாகக்கூறியவாறாம்.

அமர்நீதிநாயனார் புராணசாரம் முற்றிற்று.

--

காருண்யபரம்

திருத்தொண்டத்தொகை.

ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

ஆரூரன்—என்றதனால், என்னை ஆளவந்த இறைவன் ஆவணத்திற்காட்டிய அடிமை என் ஆரூரன் என்பெயரையே கொண்ட ஆரூரனாகியயான் என்றும், ஆரூரில் அம்மானுக்கு—என்றதனால் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் தாயாகிய உமாதேவியை யுடைய தந்தைக்கு எனவும், ஆளே—என்றதனால், ஆரூரில் அம்மானுக்கு வன்றொண்டனாகிய நான் அடியார்களுக்கும் இன்றொண்டனுமானேன் என்றும் கூறியவாறாம்.

சுந்தரமூர்த்திகள் துதி.

திருவந்தாதி.

தொழுதும் வணங்கியும் மாலயன் தேடரும் சோதிசென்றாங்
கெழுதுந் தமிழ்ப்பழ ஆவணங் காட்டி எனக்குன்குடி
முழுதும் அடிமைவந் தாட்செய் எனப்பெற்ற வன்முரல்தேன்
ஒழுகு மலரினற் றாரெம் பிரான்நம்பி யாரூரனே.

திருமால்—"பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்கு அப்பால்"—என்னும் வேதசாரவுண்மை யுணராது வராகவடிவங்கொண்டு பூமியைக் கீழ்க் கீழ்த் தோண்டித் தொழுதும், அயன்—"சோதி மணிமுடி சொல்லில் சொல்லிறந்துநின்ற தொன்மை"—என்னும் சுருதிசாரவாசகத்தை யுணராது, அன்னப்பட்சி வடிவங்கொண்டு இருபக்கம்

(இறகு)களையும் வணக்கிவணக்கி அசைந்தசைந்து வணங்கியும், அடிமுடியைக் காணுதற்கரியனாய்ச் சேணோங்கிய சோதிசொரூபன், தம்மைச் சிறிதுந் தேடாதவன் நீர் என்று ஊன்றாது பூர்வத்தே போந்தருளி அந்தணனாய், தனது அடிமுடிகளை மிக எளிதாய் எல்லாருங்காண மணப்பந்தரின்கண்ணே வந்து எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தாமும் ஆட்கொள்ளத் தன்னாடிநின்று ஒருவராலுந் தள்ளக்கூடாத அடிமைவழக்கை ஒருவராலும் எள்ளக்கூடாத அறுதியாயுள்ள தமிழால் எழுதப்பட்டுள்ள அடிமைப்பத்திரத்தைக் காட்டி அதைக்கூவி "இப்பத்திரப்படி சுந்தரா! எனக்கு உனது தாதை மூதாதை முதலிய யாவரும் அடிமையாகும். ஆகலின் நீயும் வழிவழியாய் வந்த எனதடிமையாகும். ஆகவே நீ இந்தமணப்பந்தரை விட்டு என்பின்னே வந்து நான் இடும்பணி எதுவோ அதனை எனது ஆளாகச்செய்துவருவாய்" என்று வழக்கிட்டு ஆளப்பெற்றவர், தேன்வண்டுகள் தேனுண்டொலிக்கின்ற நறுமணங்கமழும் மலர்மாலைசூடிய நம்பியாரூரன் என்னும் நாமமுடைய எம்பெருமானாகிய தேவரீரன்றோ? என்று இத்திருப்பாசுரத்தால் கூறப்பட்டது.

தேவர்களிற் பெரியோராகிய அரிபிரமர்களால் பலகாலுந் தேடியுங் காண்டற்கரிய பெரியோனாகிய இறைவன் தம்மாட்டு மிக எளிமையாய் வலிந்துவந்து வழக்கிடும் ஆண்தன்மையுடைவர் என்பதுதோன்ற—மூரல்தேன் ஒழுகும் மலரின் நற்றார் எம்பிரான் நம்பியாரூரனே—என்றுகூறலுமாம்.

ஆவணங்காட்டிக் குடிமுழுவதும் வந்தாட்செய் எனப்பெற்றவன் என்றதனால் தில்லைவாழந்தணர்முதலாகச் சொல்லபபட்ட எழுவரையும் ஆவணங்காட்டியே இறைவன் ஆண்டஅருமை வெளிப்படுகின்றது. இதனுண்மையின் விரிவை இச்சருக்கத்தின் முதற்பக்கத்திற் காண்க.

இச் சருக்கமுதலில் தில்லைவாழந்தணராகிய நடராஜமூர்த்தியையும், இறுதியில் அமர்நீதியாரையும் வைத்து ஓதியது திருத்தொண்டத்தொகையின் சிறப்பைப் பிரகாசப்படுத்தி மாதவரெல்லாம் பிறவிப்பிணி நீங்கி உய்வதற்கேயாம்.

என்னையெனின், முதலில் உள்ள நடராஜமூர்த்தி, பிறவிப்பெருங்கடலாகிய பெருந்துன்பத்தில் ஆழ்த்தும் பாசப்பெருநோய்க்கு அமிர்தசஞ்சீவினி மருந்தாயுள்ள மஹாமந்திரமாகிய பஞ்சாக்கரசொரூபியாய் பிறவிநோய் ஊனமடைய ஊனநடனமும், பேரின்பவாழ் வுண்டாக ஞானநடனமும் செய்தருளும் அருள்மூர்த்தியா யுள்ளவன். இறுதியிலுள்ள அமர்நீதியார், மண்ணினிற் பிறந்ததனாற் பெறவேண்டிய பெரியபயனைப் பெறுதற்கு திருநல்லூரின்கண் வந்து மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்துப் பாசநிலையைப்போக்கி, மதிசூடும் அவ்வண்ணலாரது நல்விழாப் பொலிவு கண்ணினாற்கண்டு பசுநிலையைக்கடந்து அருள்வசத்தராய் அன்புநிலையில் நின்று பிறவிப்பெரும்பிணிக்கு அருமருந்தாகிய பஞ்சாக்கரமருந்தை உண்ணுமுறையே யுண்டு நோயைப் போக்குமுறையே போக்கி வாழுமுறையே வாழ்ந்து அழியாப்பேரின்பநிலையில் பெயராது நின்றவர்.

ஆகவே, பிறவிப்பிணியாளர்க்கு இத்திருத்தொண்டத்தொகையன்றி மருந்து வேறொன்றுண்டோ. மாதவஞ்செய்து முற்றுப்பெற்றோர்க்குக் கைதவத்தையும், புல்லறிவையும், கற்பனையையும், மையலையுந்தீர்த்து அத்துவிதானந்த அகண்டபரிபூரணத்தில் நித்தியமாய் வாழ்வதாகிய பெருவாழ்வினைத்தருவது இதனினும் வேறொன்றுண்டோ.

ஆகலின் பிறவித் தொகையுட்பட்டு உழல்வாரெல்லாம் இத்திருத்தொண்டத்தொகையின் சிறப்பினையுணர்ந்து பிறவித்தொகை யொழியுமாறு வைத்தருளி மெய்யன்பால் என்றும் விளம்பி மண்ணினிற்பிறந்த பயனைப் பெற் றுய்வார்களாக.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழ்ந்தணர் சருக்க முற்றிற்று.